# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

**FIFTY-SIXTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.**

*6th, 7th, 8th, 9th, 12th, 13th and 15th November 1979.*

VOLUME CLXIV (Nos. 1 to 7)

©

GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

*Price Rupee 1*

121.32.N80
N80.164;1
121997

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-SIXTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLXIV (Nos. 1 to 7).

*6th, 7th, 8th, 9th, 12th, 13th and 15th November* 1979.

## TABLE OF CONTENTS.

*Tuesday, the the 6th November* 1979.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. .. | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. .. .. .. .. | ix–xii |
| 1 Questions and Answers .. .. .. .. .. | 1–62 |
| 2 Adjournment motion *re* Polytechnic Teachers' agitation. | 62–65 |
| 3 Information *re* adjournment motion given notice of .. | 65–67 |
| 4 Announcements– | |
| (1) Message from the Governor .. .. .. | 67 |
| (2) Message from the Assembly .. .. .. | 67–68 |
| 5 Call Attention Notices – | |
| (1) Non-fixation of pay to Graduate Assistants working in Higher Secondary Schools as per F.R. 22-B .. .. .. .. .. .. | 68–71 |
| (2) Non-regularisation of services of Graduate Assistants appointed in Government Schools .. | -73 |

*Tuesday, the 6th November 1979—cont.*


| | PAGES. |
|---|---|
| 6 Government Bills— | |
| (1) The Tamil Nadu Appropriation (No. 6) Bill, 1979 (L.A. Bill No. 59 of 1979) .. .. .. | 73—80 |
| (2) The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 47 of 1979) .. .. .. | 80—118 |
| (3) The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 46 of 1979) .. .. .. .. .. .. | 118—125 |
| (4) The Tamil Nadu Cultivating Tenants (Protection and Payment of Fair Rent) Amendment Bill, 1979 (L.A. Bill No. 44 of 1979) .. .. .. | 125—126 |
| 7 Papers laid on the table of the House .. .. .. | 127—129 |


*Wednesday, the 7th November 1979.*


| | |
|---|---|
| 1 Questions and Answers .. .. .. .. .. | 163—216 |
| 2 Information *re* adjournment motions .. .. .. | 217—220 |
| 3 Call Attention Notices— | |
| (1) Failure to carry out proper repairs to tanks in Kanyakumari district which breached due to heavy rains .. .. .. .. .. .. | 220—223 |
| (2) Cancellation of rebate on the wholesale deal of handloom cloth by Co-operative Societies and consequent accumulation of stock in Ramanathapuram district .. .. .. .. .. | 224—225 |
| 4 Private Member's Resolution— | |
| (1) Constitution of a Committee to enquire into the working of Higher Secondary Schools .. .. | 225—241 |
| (2) Taking over of Private Schools and Colleges and Local Body and Corporation Schools by the Government .. .. .. .. .. | 241—256 |
| 5 Papers laid on the table of the House .. .. | 257—259 |




*Thursday, the 8th November 1979.*


| | PAGES. |
|---|---|
| 1 Questions and Answers .. .. .. .. .. | 297—354 |
| 2 Adjournment motions— | |
| (1) Difficulties experienced by the public due to non-availability of kerosene and diesel .. .. | 354—361 |
| (2) Spread of Eye-disease in Madras .. .. | 361 |
| (3) Fast by 15 Physical Education Directors against their retrenchment from service .. .. .. | 361—366 |
| (4) Fast by Convenor of College Teachers Joint Action Committee, protesting against non-implementation of promise of Education Minister .. .. | 366—370 |
| 3 Privilege Issue *re* answer given by Minister for Local Administration to a question .. .. .. .. | 370—371 |
| 4 Announcements— | |
| (1) Message from the Governor .. .. .. | 372 |
| (2) Message from the Assembly .. .. .. | 372 |
| (3) Decision of the Business Advisory Committee .. | 373 |
| 5 Information *re*— | |
| (1) Half-hour discussion *re* Police firing at Vagaikulam. | 373—374 |
| (2) Adjournment motion .. .. .. .. | 374 |
| 6 Call Attention Notices— | |
| (1) Amendment to give more powers to Tribunals appointed under the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 .. .. | 374—376 |
| (2) Strike and fast by the teachers and students of S.P.K. Arts College, Aruppukkottai .. .. | 377—379 |
| 7 Government Resolution— | |
| Change in the order of business .. .. .. | 379—380 |

*Thursday, the 8th November 1979—cont.*


| | PAGES |
|---|---|
| 8 Government Bill— The Tamil Nadu Horse Race (Abolition of Turf Agencies) Bill, 1979 (L.A. Bill No. 63 of 1979) .. | 380—399 |
| 9 Papers laid on the table of the House .. .. .. | 399 |


*Friday, the 9th November 1979.*


| | |
|---|---|
| 1 Questions and Answers .. .. .. .. .. | 411—445 |
| 2 Adjournment motions— | |
| (1) Hardship caused to Police Constables in Madurai and Ramanathapuram districts due to non-payment of salary .. .. .. .. .. | 445-447 |
| (2) Fast by Tamil Pandits of Dharmapuri district protesting against the irregularities of the Chief Educational Officer in the appointment of Teachers .. .. .. .. .. .. | 447-449 |
| 3 Call Attention Notice — Sufferings of the agriculturists of Namakkal taluk due to irregular supply of electricity .. .. .. | 449—452 |
| 4 Government Resolution— Draft Amendments to the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920) .. | 452—45[illegible] |
| 5 Government Bills— | |
| (1) The Madras City Police (Amendment) Bill, 1979 (L. A. Bill No. 43 of 1979) .. .. .. .. | 455—472 |
| (2) The Madras City Police (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 51 of 1979) .. .. | 472—487 |
| (3) The Andhra Land Revenue Assessments (Standardisation) Repeal Bill, 1979 (L. A. Bill No. 45 of 1979) .. .. .. .. .. .. .. | 488—493 |
| (4) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1979 (L. A. Bill No. 48 of 1979) .. .. .. | 493—499 |




*Monday, the 12th November 197*


| | PAGES. |
|---|---|
| 1 Questions and Answers .. .. .. .. .. | 503—531 |
| 2 Announcement *re*— Message from the Assembly .. .. .. .. | 532—533 |
| 3 Call Attention Notice— Refusal to sponsor the names of the Secondary Grade Teachers working in Primary Schools for appointment as Tamil Pandits in Government Schools in Dharmapuri district .. .. .. .. .. | 533—534 |
| 4 Government Bills— | |
| (1) The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 48 of 1979) .. .. .. .. | 535—558 |
| (2) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1979 (L. A. Bill No. 49 of 1979) .. .. | 559—567 |
| (3) The Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979 (L.A. Bill No. 66 of 1979). | 567—585 |
| (4) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 64 of 1979) .. .. .. .. | 626—63 |
| (5) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1979 (L.A. Bill No. 60 of 1979) | 639—668 |
| (6) The Tamil Nadu Cinemas (Regulation) Amendment Bill, 1979 (L.A. Bill No. 61 of 1979) .. | 669—68[illegible] |
| 5 Half-hour discussion *re*— Closure and lock-out in factories .. .. .. | 586—602 |
| 6 Papers laid on the table of the House .. .. | 681—683 |

*Tuesday, the 13th November 1979.*


| | PAGES. |
|---|---|
| 1 Dispensation with Question-hour .. .. .. | 703 |
| 2 Privilege Issue *re*— | |
| (1) Reply of the Minister for Local Administration *to a supplementary question* .. .. .. | 703—704 |
| (2) News about the remarks of the Minister for Education in the Council about Text-Books on 'Economics' in 'Daily Thanthi' .. .. | 705—706 |
| (3) Statement made by the Minister for Education on the floor of the House *re* agitation by Teachers. | 706—710 |
| 3 Call Attention Notices— | |
| (1) Delay and defects in the distribution of cement in Tamil Nadu .. .. .. .. .. | 710—712 |
| (2) Sufferings of the leprosy patients in Kumbakonam, Nannilam and Papanasam taluks due to absence of medical aid .. .. .. .. .. .. | 712—713 |
| 4 Government Bills— | |
| (1) The Tamil Nadu Prize Schemes (Prohibition) Bill, 1979 (L.A. Bill No. 65 of 1979) .. .. .. | 713—731 |
| (2) The Indian Fisheries (Tamil Nadu Amendment) Bill, 1979 (L.A. Bill No. 75 of 1979) .. .. | 732—742 |
| (3) The Tamil Nadu Buildings (Lease and Rent Control Amendment) Bill, 1979 (L.A. Bill No. 50 of 1979) .. .. .. .. .. .. .. | 743—746 |
| (4) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 73 of 1979) | 746—769 |
| (5) The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill, 1979 (L.A. Bill No. 62 of 1979) | 770—777<br>778—811 |
| (6) The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 71 of 1979) .. .. .. | 811—812 |




*Tuesday, the 13th November 1979—cont.*


| | PAGES. |
|---|---|
| 4 Government Bills—*cont.* | |
| (7) The Tamil Nadu Co-operative Societies (Fourth Amendment) Bill, 1979 (L.A. Bill No. 72 of 1979) .. | 812—813 |
| (8) The Perarignar Anna University of Technology (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 69 of 1979) .. .. .. | 814—883 |
| (9) The Tamil Nadu Recognised Private Schools (Regulation) (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 70 of 1979) .. | 884—885 |
| (10) The Madras University and Madurai - Kamaraj University (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 76 of 1979) .. .. .. .. .. | 885—917 |
| (11) The Tamil Nadu Preservation of Private Forests (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 67 of 1979) .. .. .. .. .. .. | 888—917 |
| (12) The Tamil Nadu Hill Stations (Preservation of Trees) (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 68 1979) .. .. .. .. .. .. .. | 918—921 |
| 5 Change in the Business of the House .. .. .. | 731,<br>769—770 |
| 6 Announcement *re*— | |
| Meeting of the Legislative Council .. .. .. | 777—778 |


*Thursday, the 15th November 1979.*


| | |
|---|---|
| 1 Adjournment motion *re*— | |
| Damage in Southern districts of the State due to rains | 957—963 |
| 2 Personal Explanation— | |
| (1) Certain remarks of the Minister for Co-operation in his speech in the Council on 13—11—1979 in reply to the debate on Co-operative Societies (Third Amendment) Bill, 1979. .. .. .. .. | 963—970 |
| (2) Personal Explanation of Minister for Revenue on Adjournment motion .. .. .. .. .. | 970 |

*Thursday, the 15th November* 1979—cont.


| | PAGES |
|---|---|
| 3 Information *re*— | |
| Allegations against the Registrar of Madras University .. .. .. .. .. .. .. | 970—97: |
| 4 Privilege issue *re*— | |
| Speech of Thiru S. Muthuswamy, M.L.C. .. .. | 974—975 |
| 5 Government Bills— | |
| (1) The Madras City Municipal Corporation (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 52 of 1979) .. | 976—1067 |
| (2) The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Bill, 1979 (L.A. Bill No. 53 of 1979) | 1067—1072 |
| (3) The Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 54 of 1979) .. .. .. | 1072—1073 |
| (4) The Coimbatore Municipal Council (Appointment of Special Officer) Second Amendment Bill, 1979 (L.A. Bill No. 55 of 1979) .. .. .. .. | 1073—1074 |
| (5) The Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Third Amendment Bill, 1979 (L.A. Bill No. 56 of 1979) .. .. | 1074—1075 |
| (6) The Tamil Nadu Panchayats (Third Amendment) Bill, 1979 (L.A. Bill No. 57 of 1979) .. .. | 1076—1077 |
| 6 Papers laid on the table of the House .. .. | 1077—1084 |
| Index .. .. .. .. .. .. .. | 1085—1168 |


# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU PRABHUDAS PATWARI.

### Members of the Council of Ministers.

1. The Hon. THIRU M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals and Textiles.

2. The Hon. THIRU K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning and Legislature, Public Works (Buildings), Establishment Works relating to Public Works Department.

3. The Hon. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel Control.

4. The Hon. THIRU K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The Hon. THIRU S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes, Excise and Census.

6. The Hon. THIRU G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. The Hon. THIRU R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. THIRU K. NARAYANASWAMY, Minister in-charge of Law Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. THIRU C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The Hon. THIRU K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayat and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. The Hon. THIRU S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Hon. THIRU P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Paper Control, Hill Tribes and Bonded Labour.

13. The Hon. THIRU C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14 The Hon. THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies and Irrigation including Minor Irrigation, Agro-Engineering.

15. The Hon. THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industries, Milk and Dairy Development and Wakfs.

16. The Hon. THIRU P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The Hon. THIRUMATHI SUBBULAKSHMI JEGADEESAN, Minister in-charge of Handloom-Yarn and Khadi, Yarn

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர் :

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொதுநிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர், மதுவிலக்கு, சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, ஜவுளி, இலஞ்ச ஒழிப்பு, தொழில்நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்,

2. மாண்புமிகு திரு. க. மனோகரன் (நிதித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்).

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிகவரிகள், ஆயத்துறை, ஜனத்தொகைக் கணிப்பு.

6. மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் (உணவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :

உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக்கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், அறநிலையத்துறை, சின்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம்-கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், அக்ரோ பொறியியல் பிரிவு.



15. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (கிராமத் தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் (கைத்தறித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கைத்தறி நூல், கதர் நூல்.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

**மேலவைத் தலைவர்**

மாண்புமிகு நீதி. ம. பொ. சிவஞானம்

**மேலவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. டாக்டர் இரா. சனார்த்தனம்
2. திரு. பி. எல்லமந்தா
3. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி

**மேலவைச் செயலாளர்**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**சார்புச் செயலாளர்**

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்

**தலைமை நிருபர்**

திரு. ச. சுவாமிநாதன்

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

**மேலவைத் தலைவர்**

மாண்புமிகு ருதி. ம. பொ. சிவஞானம்

**மேலவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. டாக்டர் இரா. சனார்த்தனம்
2. திரு. பி. எல்லமந்தா
3. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்
4. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி

**மேலவைச் செயலாளர்**

திரு. ஒ. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**சார்புச் செயலாளர்**

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்**

3. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்

**தலைமை நிருபர்**

திரு. ச. சுவாமிநாதன்

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 17. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 18. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 19. சுந்தரேசத் தேவர், திரு. என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 20. சுவாமிநாதன், திரு. ஜி., பி.பார்ம். (மாண்புமிகு துணைத் தலைவர்). | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 21. சோமசுந்தரம், திரு. எஸ். டி. (வருவாய்த் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22. டி'மாண்டி, திரு. டி. வி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23. தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 24. தங்கவேலு, திரு. ஏ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 25. தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 26. தாமஸ், திரு. பா. ரா. .. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 27. நாமோதரன், திரு. ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 28. திராவிடமணி, திரு. ஆ... | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 9. நல்லசிவன், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 30. நாராயணசாமி, திரு. கே. (சட்டத் துறை அமைசசர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை |
| 31. நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2. பாலசுப்பிரமணியம், திரு. கு. மா. | நியமனம். |
| 3. பாலசுப்பிரமணியம், திரு. ஆ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| புலவர் புலமைப்பித்தன் .. | நியமனம். |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 35. பெரியண்ணன், திரு. வீ. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 36. மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 38. மாணிக்கம், திரு. ப. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40. மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆசிரியர்கள் தொகுதி. |
| 41. முத்துசாமி, திரு. செ. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 42. முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 43. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 44. வசந்த பை, திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 45. வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 46. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலைய அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 47. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 48. ஹண்டே, டாக்டர் எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 49. வெற்றிடம் .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் .. .. | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 52. வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53. வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57. வெற்றிடம் .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61. வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63. வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1979 நவம்பர் 6.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Big Industries*

* 60-A *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU . SANTOSHAM): Will the Hon. the Chief Minister be pleased state the number of Industries started in the State during 1976 and 1977 in (i) the Public, (ii) Joint and (iii) Private Sectors, with a capital investment of more than Rupees Ten Lakhs?

### பெரிய தொழிற்சாலைகள்.

திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் 1976 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் மூலதன முதலீடு செய்து தொடங்கப்பட்டுள்ள, (i) பொதுத்துறை, (ii) கூட்டுத்துறை, (iii) தனியார் துறை தொழிற்சாலைகள் எத்தனை?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதல் அமைச்சர் சார்பில்): நமது மாநிலத்தில் ரூபாய் 10 இலட்சத்திற்கும் அதிகமாக முதலீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 1976-ம் ஆண்டில் கூட்டுத்துறையில் ஒன்றும், தனியார் துறையில் ஒன்பது தொழிற்சாலைகளும், 1977-ம் ஆண்டில் கூட்டுத்துறையில் மூன்று தொழிற்சாலைகளும் தனியார் துறையில் பதினாறு தொழிற்சாலைகளும் துவக்கப்பட்டன.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, 1977-78 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கூட்டுத் துறைத் தொழில்களில் ஏதாவது தொழில்கள் பின் தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் துவக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் அது எந்த முதலீட்டில் துவக்கப்பட்டிருக்கிறது?

[1979 நவம்பர் 6

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கேள்வி 1976 மற்றும் 1977 ஆம் வருடங்கள் சம்பந்தப்பட்டது. 1977 ஆம் ஆண்டில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரத்தில் 2 தொழில்கள் தனியாரால் ஆரம்பிக்கப்பட்டன. அதேபோல புதுக்கோட்டையில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** 10 லட்சம் ரூபாய்க்கு மேல் முதலீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் 1976 ஆம் ஆண்டில் கூட்டுத் துறையில் ஒன்று என்றும், 1977 ஆம் ஆண்டில் மூன்று தொழிற்சாலைகள் என்றும் மாண்புமிகு அமைச்ச ரவர்கள் பதில் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டில் பொதுத் துறையில் தொழிற்சாலைகள் ஒன்றும் தொடங்கப்படவில்லை. கூட்டுத் துறையில் எந்தெந்த மாவட்டங்களில் எத்தனை எத்தனை விதம் தொடங்கப் பட்டுள்ளன ? பொதுத் துறையில் 1977 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படாததற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** பொதுத் துறைத் தொழிற் சாலைகள் இலாபகரமாக நடப்பதில் பல பிரச்சினைகள் எழுந்ததால், முந்திய அரசு செய்த முடிவின்படி, தனியார் 49 சதவீதமும் அரசு 51 சதவீதமும் முதலீடு செய்து, கூட்டுத்துறையில் தொழிற்சாலைகள் நடப்பதை வழக்கப்படுத்தி வருகிறோம். அப்படி தொழிற்சாலைகள் கூட்டுத் துறையில் தொடங்கப்பட்டதற்குப் பிறகு அவை பயனுள்ளவையாகவும், இலாபகரமாகவும் நடப்பதால், கூட்டுத் துறைக்கு நாம் உற்சாகம் தருகிறோம். மேலும் அவை அரசின் நிர்வாகக் கண்காணிப்பின் கீழ் இருப்பதால், அரசு கூட்டுத் துறைத் தொழிற் சாலைகளை நல்லமுறையில் செயல்படுத்தி வருகிறது. 1977 ஆம் ஆண்டில் தனியார் துறையில் பதினாறு தொழிற் சாலைகள் ஆரம்பிக்கப்பட்டதாக நான் சொல்லியிருக்கிறேன். அதே போல 1977 ஆம் ஆண்டு கூட்டுத் துறையில் 3 தொழிற் சாலைகள் துவக்கப் பட்டிருப் பதாகச் சொல்லியிருக்கிறேன். என்னிடம் இருக்கின்ற பட்டியல் நீண்டதாக இருக்கிறது. மூன்று தொழிற்சாலைகளின் பெயர்களைச் சொல்லி விடுகிறேன்.

1. அரக்கோணம் கேஸ்டிங்ஸ் மற்றும் போர்ஜிங்ஸ்.
2. டைனாவிஷன்,
3. சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்.

**திரு. க. இராமமூர்த்தி :** கூட்டுத் துறையில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற் சாலைகளின் நிர்வாகத் தலைமைக்கு யார் யார் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள்? எந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்களிடம் அந்தப் பொறுப்பு கொடுக்கப் படுகிறது ?



1979 நவம்பர் 6]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பொதுவாக கூட்டுத் துறை நிர்வாகத்தில் 'மானேஜிங் டைரக்டர்' என்றும் 'எக்சிகியூட்டிவ் டைரக்டர்' என்றும் பெரிய பதவிகளை வைத்திருக்கிறோம். மானேஜிங் டைரக்டர் என்பவர் அரசு சார்பில் நியமிக்கப்படுகிற அதிகாரி. தனியாரால் முதலீடு செய்திருக்கிறவர்கள் சார்பில் எக்சிகியூட்டிவ் டைரக்டர் நியமிக்கப்படுகிறார். அவர் தான் எல்லாவற்றையும் கண்காணிக்கிறார். பொதுக் கொள்கைகளை உருவாக்குவது போன்ற பணிகள் குறித்து மானேஜிங் டைரக்டர் இறுதி முடிவு எடுக்கிறார்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** கூட்டுத் துறையில் ஆரம்பிக்கிற தொழிற் சாலைகளுக்கு தனியார் எவ்வளவு சதவீதம் முதலீடு செய்ய வேண்டும், அரசு எவ்வளவு சதவிகிதம் முதலீடு செய்ய வேண்டும், எந்தெந்த அடிப்படையில் முதலீடு செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரிட மிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தனியார் சார்பில் 49 சதவிகிதமும் அரசு சார்பில் 51 சதவிகிதமும் முதலீடு செய்கிறோம். சில நேரங்களில் தனியார் அவ்வாறு முதலீடு செய்யாவிட்டால், அரசு சார்பாக 51 சதவிகிதத் திற்குக் கூடுதலாக, அதாவது 60 சதவிகிதம் வரை முதலீடு செய்கிறோம். அது தொழிற்சாலையின் தேவை, நிரம்ப வேலை வாய்ப்பு, தமிழகத்தில் அது போல தொழிற்சாலை இல்லை என்ற நிலையில் அரசு 60 சதவிகிதம் வரை பங்கு போடுவதும் உண்டு.

**திரு. ம. சங்கரலிங்கம் :** கூட்டுறவுத் துறையில் ஆரம்பிக்கிற பெரிய நிறுவனங்களில் நியமன போர்டு நியமிக்கப்படுகிறதா, இல்லை தேர்ந்தெடுக்கப் படுகிற போர்டா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** கூட்டுத் துறையில் நியமன முறை இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறையின் மூலம் ஆரம்பிக்கிறபோது தான், 3 ஆண்டுகள் அரசே தேர்ந்தெடுக்கிறது. அதன் பிறகு தான் தேர்தல் நடைபெறுகிறது. சில தொழிற்சாலைகளுக்கு இது குறித்து கால நிர்ணயம் கூட வைத்திருக்கிறோம். உதாரணமாக நீலகிரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் வைத்திருக்கிறார்கள். 18 ஆண்டு காலம் அரசுதான் போர்டை நியமிக்க வேண்டும் என்ற முறையில் அவர்கள் சட்ட விதிகள் வைத்திருக்கிறார்கள். நிர்வாகக் குழுவிலும் அதை நிறைவேற்றி யிருக்கிறார்கள். கூட்டுத் துறையைப் பொறுத்தவரை, அந்தக் கேள்வி எழவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : இந்த நிறுவனங்களில் தனியார் துறையி னுடைய பிரதிநிதிகளாக டைரக்டர்கள் நியமிக்கும்போது, பெரும்பாலும் அந்தத் தொழிலின் புரமோட்டர்களை அரசு மானேஜிங் டைரக்டராக நியமிக்கிறதா, இல்லை அந்தத் தொழிற்சாலை அமைப்பதில் சற்றும் சம்பந்த மில்லாதவர்கள் நிர்வாக இயக்குநர்களாக நியமிக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : முதலிலே தொழிற்சாலைகளை புரமோட்டர்களாக வருகிறவர்கள்தான் நிர்வகிக்கிறார்கள். நிர்வாகக் குழு 5 பேரைக் கொண்டது என்றால், 2 பேர் அரசு சார்பிலும் 3 பேர் தனியார் சார்பிலும் நியமிக்கப்படுகிறார்கள். அரசு சார்பில் உள்ள முதலீடு அதிக மாக இருக்கிற நிலையில், அரசு பங்கு அதிகமாகப் போடுகிறது என்கிற வகையில், தனியார் துறையில் உள்ளவர்களைக் கேட்டு அவர்கள் யாரை நியமிக்க வேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்களைத்தான் அரசு நியமிக்கிறது. அவர்கள் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

## *Banking Accounts of Public Undertakings.*

* 61 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the names of the State-owned Corporations and Industrial Units, which do not have their banking accounts either in the Nationalised Banks or in the Co-operative Banks ; and

(*b*) the amount of their financial transactions ?

## பொது நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது கூட்டுறவு வங்கிகளிலோ தங்களுடைய வங்கிக் கணக்குகளை வைத்திராத அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், தொழிற் பிரிவுகள் ஆகியவற்றின் பெயர்கள் யாவை ?

(ஆ) அவை பற்று வரவு செய்து வரும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் அல்லது கூட்டுறவு வங்கிகளில் வங்கிக் கணக்குகள் வைத்துள்ளன. அவற்றில் சில நிறுவனங்கள் நாட்டுடைமை யாக்கப்படாத வணிக வங்கிகளிலும் கணக்கு வைத்துள்ளன.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

---





திரு. க. இராமமூர்த்தி : நாட்டுடைமையாக்கப்படாத வணிக வங்கிகளில் கணக்குகளை வைத்திருக்கிற நிறுவனங்கள் எவை எவை ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:

Tamil Nadu Pallavan Transport Corporation,
Tamil Nadu Fisheries Development Corporation,
Dharmapuri District Development Corporation,
SIPCOT,
TIDCO,
Tamil Nadu Handloom Finance and Trading Corporation,
Tamil Nadu Agro-Industries Corporation,
Chozhan Roadways Corporation,
Tamil Nadu Textile Corporation,
SIDCO,
Tamil Nadu Industrial Investment Corporation,
Tamil Nadu Handicrafts Development Corporation.

முதலிய நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படாத ஷெட்யூல்ட் வங்கிகளில் கணக்குகளை வைத்துள்ளன.

திரு. க. இராமமூர்த்தி : பொதுவாகவே அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கணக்குகளை வைக்க வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அப்படி இல்லையென்றால், கூட்டுறவுத் துறையை உற்சாகப்படுத்த கணக்குகளை கூட்டுறவு வங்கிகளில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் வைக்க வேண்டும். பெரிய அளவில் பலகோடி ரூபாய் புழக்கத்தில் இருக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல் நடத்து கின்ற இந்த நிறுவனங்கள் நாட்டுடைமையாக்கப்படாத ஷெட்யூல்ட் வங்கி களில் கணக்கை வைத்துக்கொள்வதற்கு தனிக் காரணம் ஏதாவது உண்டா ? அப்படி இல்லையென்றால், இந்த நிலைமையை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : அரசினுடைய திட்டங்களுக்கு மக்களுக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எந்த அளவுக்கு உதவிகள் செய்கின்றனவோ அதே போல் நாட்டுடைமையாக்கப்படாத வங்கிகளும் உதவி செய்கின்றன. சில நேரங்களில் அரசு திரட்டுகின்ற கடனை நாட் டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழங்குகின்றன. அது போலவே அரசுக்குக் கடன் வழங்க நாட்டுடைமையாக்கப்படாத ஷெட்யூல்ட் வங்கிகளும் முன் னணியில் நிற்கின்றன. நாட்டுடைமையாக்கப்படாத வங்கிகளின் ஈடுபாட்டைப்

பொறுத்தும் சில நேரங்களில் கணக்குகளை வைத்திருக்கிறோம். ஆனால் அரசின் முன் அனுமதியைப் பெற்றுத்தான் அத்தகைய கணக்குகளை வைத்துக்கொள்ள அனுமதிக்கிறோம்.

(பிற்பகல் 4-10)

திரு. க. இராமமூர்த்தி: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் சில வரைமுறைகளுக்கு உட்பட்டுத்தான் கணக்குகளை வைக்க முடியும். அல்லது சில சமயங்களில் சில விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லாமல் கணக்கு வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படும். அந்தமாதிரி நிலைமைகளைத் தவிர்க்க, இதுபோன்ற வங்கிகளிலே கணக்கு வைத்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் உருவாகாமலிருப்பதற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் மட்டுமே அரசு கணக்கு வைக்க முன் வருமா? நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளையும், கூட்டுறவு வங்கிகளையும் உற்சாகப்படுத்தி முன்னேறச் செய்ய வேண்டியது அரசின் கடமை என்ற வகையில், அரசாங்கத்தினுடைய கணக்குகளை இதுபோன்ற வங்கிகளில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி, அரசும், அரசுத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் கணக்குகளை வைக்கவில்லை என்பது போல் இருக்கிறது. முழுவதுமாக இல்லாவிட்டாலும், 90 சதவிகிதத்திற்குக் கூடுதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் தான் கணக்கு வைத்திருக்கிறோம். ஆனால், மற்ற வங்கிகளையும் உற்சாகப் படுத்த வேண்டும் என்பதற்காக மிகக் குறைந்த அளவிலே வைப்புக் கணக்குகளை அங்கே வைத்திருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : Sir, in view of the fact that even Scheduled Banks which are not nationalised come strictly within the control of the Reserve Bank of India and in view of the fact that there is no loss to the Government in banking with such institutions, may I know why it is necessary for the Government to show a decided partiality only to nationalised Banks or to Co-operative Bank when other Banks also are doing public service?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்குப் பெருதவி புரிந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட எல்லா வங்கிகளிலேயும் கணக்கு வைப்பதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை ... டைமையாக்கப்பட்ட வங்கி



களிலே நாங்கள் அதிகமாகக் கணக்கு வைத்திருப்பதற்குக் காரணம், அவர்கள் அதிக எண்ணிக்கையில் கிளைகள் வைத்திருப்பது. உதாரணமாக, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா-வை எடுத்துக்கொண்டால், தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே அவர்கள் அதிகமான கிளைகள் வைத்திருக்கிறார்கள். கனரா பாங்கும் அவ்வாறு அதிகமான அளவிலே கிளைகள் வைத்திருக்கிறது. இந்த பாங்குகளிலே கணக்கு வைப்பதன் மூலமாக ஆங்காங்கே அரசின் திட்டங்களை நிறைவேற்ற நல்ல வாய்ப்பு இருக்கிறது. மற்ற வங்கிகள் குறைந்த அளவிலே கிளைகள் வைத்திருக்கின்றன. அந்த அளவிலே, குறைந்த அ கணக்குகளை அங்கே வைத்திருக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம்: தொழிற்சாலைகள், அல்லது அரசின் பே பார்வையில் இருக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் தங்களுடைய கணக் களை 'ஷெட்யூல்ட் வங்கிகளிலே' வைத்துக்கொள்ள அனுமதி இருக்கிறது ஆனால் கல்லூரி மற்றும் கல்வி ஸ்தாபனங்கள் எல்லாம் தங்களுடைய கணக் களை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலோ, கூட்டுறவு வங்கிகளிலோ தா வைக்க வேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடமிருந்து ஆணி ... சுற்றறிக்கை வருவதும் அதை மீறினால் கிராண்ட் தரப்படமாட்டாது என்ற நிபந்தனையும் இருக்கும்போது இந்தத் தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் ஏன் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது? அங்கே அவர்கள் பெறும் வட்டிவீதம் கூடுதலாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: வட்டிவீதத்தைவிட அவர்கள் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கூடுதலாகப் பங்கேற்கிறார்கள். கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரையில், வளர்ச்சிப் பணிகள் குறைவு, தொழில் துறையிலே, வணிகத் துறையிலே எல்லாம் ஆங்காங்கே வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக, சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், பால்பண்ணையைப் பெருக்கும் திட்டம் போன்ற திட்டங்களில் எல்லா வங்கிகளும் ஈடுபட்டு கடனுதவி கொடுத்து மக்களை உற்சாகப்படுத்துகின்றன. ஆகவே, அவைகளையும் உற்சாகப்படுத்த வேண்டும் என்றுதான் நாம் இந்த உதவியைச் செய்கிறோம்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு. தாமோதரன் அவர்களுக்குப் பதில் சொல்லும்போது, 'நான்-நேஷனலைஸ்ட்' வங்கிகள் அதிகக் கிளைகள் வைத்திருக்கின்றன, ஆகவே, அவைகளில் அதிகமான வைப்புத் தொகை கணக்குகளை அவற்றில் வைத்திருக்கிறோம் என்று சொன் னார்கள். வங்கிகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்

படையில்தான் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அதிகமான கணக்குகளை வைத்திருக்கிறோம் என்று சொல்லவில்லை. வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை. ஆகவே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கணக்கு வைத்து அவைகளை என்கரேஜ் பண்ணக்கூடாதா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** நான் சொன்ன பதிலை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குத்தான் அதிகக் கிளைகள் இருக்கின்றன. அதனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேதான் அதிக வைப்புத்தொகை வைக்க வேண்டும் என்பது அரசின் உத்தரவு. தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு அரசு ஆதரவு தருகிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. இதுதான் அரசின் கொள்கை. தேசியமயமாக்கப்படாத சில வங்கிகள்கூட அரசின் திட்டங்களுக்கு உதவியாக இருப்பதால், அவைகளையும் உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு குறைந்த அளவிலே அங்கேயும் நாம் கணக்குகளை வைத்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர்களை நான் ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மொத்தம் 22 கேள்விகள் இருக்கின்றன. இரண்டு கேள்விகளுக்கே 15 நிமிடங்கள் ஆனால் பாக்கிக் கேள்விகளை எப்படி நாம் முடிப்பது? பாக்கிக் கேள்விகளையும் முடித்து, சட்ட முன்வடிவுகளையும் முடிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் மிக விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் என்னோடு ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே கிளைகள் இல்லாத கூட்டுறவு வங்கிகளே கிடையாது. தமிழகம் முழுவதும் கிளைகள் இருக்கின்றன. கிளைகள் இல்லாத காரணத்தால், 'ஷெட்யூல்ட்' வங்கிகளிலே கணக்கு வைத்திருக்கிறோம் என்கின்ற நிலையைத் தவிர்க்கவும், கூட்டுறவுத் துறையின் மூலம் அரசாங்கத்தினுடைய திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதாலும், எங்கெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் இல்லையோ அங்கெல்லாம் கூட்டுறவுத் துறையை உற்சாகப்படுத்துகின்ற முறையிலே கூட்டுறவு வங்கிகளிலே கணக்கு வைக்க அரசு முன்வருமா? தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைப் பொறுத்தவரையில், ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக அரசு அவைகளை தேசியமயமாக்கியது. அந்தக் குறிக்கோளை உற்சாகப்படுத்தும் வகையில், அந்த வங்கிகளிலே கணக்கு வைப்பதை விட்டுவிட்டு, ஷெட்யூல்ட் வங்கிகளிலே கணக்கு வைப்பது அந்தக் கொள்கைக்கு முரண்பாடானது என்பதை அரசு உணருகிறதா?





**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இதிலே முரண்பாடு எதுவும் இல்லையென்று அரசு கருதுகிறது. திரும்பவும் நான் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டும். அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களில் அனைத்து வங்கிகளும் பங்கேற்கின்றன. அவற்றை உற்சாகப்படுத்த வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் 90 சதவீதத்திற்கு மேல் கணக்கு வைத்திருக்கிறோம். கூட்டுறவு வங்கிகளிலே குறைந்த பட்சம் 50 சதவீதம் வைப்புக் கணக்கு வைக்க வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. மிகக் குறைந்த அளவிலே, உதாரணமாக பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் தன்னுடைய கணக்கை ஐ.ஓ.பி.யில் தான் வைத்திருக்கிறது என்றாலும், மிகக் குறைந்த அளவிலே தான் 'சிந்து' பாங்கிலே வைத்திருக்கிறது. 2.6 இலட்சம் ரூபாய்தான் சிந்து வங்கியிலே வைத்திருக்கிறது. கோடிக்கணக்கிலே வரவு செலவு செய்யக்கூடிய பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் இவ்வளவுதான் அங்கே கணக்கு வைத்திருக்கிறது. அவர்களையும் உற்சாகப்படுத்த வேண்டும் என்று அடிப்படையிலேதான் வைத்திருக்கிறோம்.

## Reimbursement of Cost of Books.

* 62 *Q.*—THIRU S. MUTHUSAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the concession of reimbursement of an equal amount spent by the Government Servants drawing a basic pay below Rs. 200 per month on the purchase of books for their children sanctioned in G.O. Ms. No. 761, Finance (Allowances-I), dated 29th July 1978, is applicable to all the Teachers of non-Government institutions; and

(*b*) if not, whether action will be taken by the Government to extend this concession to these Teachers?

## புத்தகங்கள் வாங்கும் செலவை ஈடுசெய்தல்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நிதித் துறையின் (படிகள்-1) 29—7—1978 ஆம் நாளிட்ட அரசாணை எண் 761-ன்படி, மாதம் ரூபாய் 200-க்கும் குறைவாக அடிப்படைச் சம்பளம் பெறும் அரசு ஊழியர்கள், தங்களுடைய குழந்தைகளுக்குப்

[1979 நவம்பர் 6

புத்தகங்கள் வாங்குவதற்காகச் செலவிடும் தொகையை ஈடுசெய்துகொள்ள வழங்கப்பட்டுள்ள சலுகை, அரசுப் பணியல்லாத அனைத்து நிருவாக ஆசிரியர்களுக்குப் பொருந்துமா ?

(இ) இல்லையெனில், அந்த ஆசிரியர்களுக்கு இச்சலுகையை நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : (அ) இல்லை.**

(இ) இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** இந்தச் சலுகையை ஏற்கெனவே அரசுத் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்கள் கேட்டு அவர்களுக்கு அது வழங்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களிலே குறைந்த சம்பளம் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சலுகை அதே அளவு குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அது கொடுக்கப்படமாட்டாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதுவரை சொல்லாமல் இருந்தாலும், குறைந்த வருமானம் வாங்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், பள்ளிகளிலே ஆசிரியர் அல்லாத இதர ஊழியர்களுக்கும் பணியாற்றக்கூடிய அவர்களுடைய குழந்தைகள் பயில இந்தச் சலுகையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அரசு முன்வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Refund of ADADA*

* 63 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have ordered for the premature refund of the Annuity Deposit of Additional Dearness Allowance to the Government School Teachers and Government Servants in the Districts which were affected by cyclone and flood during October-November 1977 ; and

(*b*) if so, whether it was fully implemented in the Districts concerned ?



1979 நவம்பர் 6]

### கட்டாய சேமிப்புத் தொகையைத் திருப்பித் தருதல்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பரில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் கட்டாய சேமிப்புத் தொகையை (ADADA) முன்கூட்டியே திருப்பித்தர அரசு ஆணை பிறப்பித்திருந்ததா ?

**(இ) ஆம் எனில், அவ்வாணை தொடர்புடைய பகுதிகளில் முழுதுமாக** அமல்படுத்தப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) :** (அ) ஆம். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் உள்ள பணியாளர்களுக்கு மட்டும்.

(இ) கடைசி தேதிக்கு முன்னர் வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** வெள்ள பாதிப்புப் பகுதி என்று கன்னியாகுமரி மாவட்டத்தையும், முகவை மாவட்டத்தையும் அரசு அறிவித்திருக்கிறது. அந்தப் பகுதிகளில் உள்ள அரசு ஊழியர்களுக்கு கட்டாயச் சேமிப்புத் தொகை முழுவதும் திரும்ப வழங்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசுக் கடிதம் எண் எஃப், 4-3 பிடி-1979, நாள் 17—10—1979, 19—10—1979-ல் கட்டாயச் சேமிப்புத் தொகையை திருப்பி வழங்க ஆணையிட்டிருக்கிறது. இருந்தாலும், மாநில அரசு மத்திய அரசுக் கடிதத்தின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்காததால், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் முகவை மாவட்டம் ஆகியவற்றில் உள்ள ஆசிரியர்களுக்கு இந்தத் தொகை திருப்பி அளிக்கப்படவில்லை. அவர்களுக்கும் இந்தத் தொகையைத் திருப்பி அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அரசு இதைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கும்.

## *Co-operative Activity*

* 64 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the extent and method of Co-operative activity in areas adopted by the Nationalised Banks?

### கூட்டுறவு நடவடிக்கை.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பொறுப்பேற்றுக் கொண்ட பகுதிகளில் கூட்டுறவு நடவடிக்கைகள் எந்த அளவுக்கு எம்முறைகளில் நிறைவேற்றப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தேசிய மயமாக்கப்பட்டுள்ள வங்கிகள் பொறுப்பேற்றுள்ள பகுதிகளுக்கு மட்டுமின்றி கூட்டுறவுச் சங்கங்களின் செயல்முறைகள் மாநிலம் முழுதும் பாவியுள்ளன. அவ்வாறு பொறுப்**பேற்றுள்ள பகுதிகளிலும் கூட்டுறவுக் கடன் வழங்குவதற்கு எந்தத் தடையு**மில்லை.**

**திரு. க. இராமமூர்த்தி :** 'Adopted village' **கிராமங்களை ஏற்பது** என்ற அளவிலே அந்தப் பகுதிகளிலே பல கடன்களை கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பெற முடியாது என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். அது அரசினுடைய கவனத்திற்கு வந்ததா ? அப்படியிருக்குமானால் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்த என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** வணிக வங்கிகள் 'கிராம ஏற்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தை ஒரு வணிக வங்கியின் கிராமப்புறக் கிளையுடன் இணைத்து அந்தக் கிளையின் மூலம் அந்தக் கிராமத்தின் எல்லாவிதமான கடனளிப்புத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. இத் திட்டத்தினால், ஒரே இடத்தில் பல வங்கிகள் தேவைக்கு அதிகமாகக் கிளைகள் திறப்பதைத் தடுக்கவும், அந்தக் குறிப்பிட்ட கிராமத்தின் வளர்ச்சியில் அதிக அளவு சிரத்தை எடுக்கவும் ஏதுவாகிறது. இத் திட்டம் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது. உறுப்பினர் அவர்கள் ஏதாவது விவரம் இருந்து சொன்னால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

### *Panchayat Union Staff Co-operative Credit Societies.*

* 65 *Q.*—THIRU S. MUTHUSAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Panchayat Union Staff Co-operative Credit Societies that are functioning in Tamil Nadu;

(*b*) whether they are economically viable; and

(*c*) if not, the reason therefor?



### ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் இயங்குகின்ற ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் எத்தனை ?

(இ) இவைகள் பொருளாதார ரீதியாக திருப்தியாக இயங்குகின்றனவா?

**(உ) இல்லையெனில், காரணம் என்ன ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) 196.

(இ) பொருளாக திருப்திகரமாக இயங்குகின்றன.

**(உ) கேள்விக்கு இடமில்லை.**

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி :** தமிழகத்தில் மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இவைகளில் 196 இடங்களில் மட்டும்தான் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே எஞ்சியிருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு இருக்கும் சங்கடங்களை நீக்கவும் அவர்களுக்கும் கடன் வசதி செய்து தரவும் புதிய கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களை அந்த ஊழியர்களுக்கு ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களிலேகூட 126 சங்கங்கள்தான் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 66 சங்கங்கள் நட்டத்திலேதான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** கிராமப்புறங்களில் பல பகுதிகளில் விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் நிரம்ப செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. எங்கெங்கே ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்கு உதவியாக ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இல்லையோ அங்கெல்லாம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டு வரும் விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கடன் வசதி பெறுவதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வசதி செய்து தருவார்களா ?

கூட்டுறவு நடவடிக்கை.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவ கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் பொறுப்பேற்றுக் கொண்ட பகு களில் கூட்டுறவு நடவடிக்கைகள் எந்த அளவுக்கு எம்முறைகளில் நிறை வேற்றப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தேசிய மயமாக்கப்பட்டுள்ள வங்கிகள் பொறுப்பேற்றுள்ள பகுதிகளுக்கு மட்டுமின்றி கூட்டுறவுச் சங்கங் களின் செயல்முறைகள் மாநிலம் முழுதும் பாவியுள்ளன.** அவ்வாறு பொறுப் பேற்றுள்ள பகுதிகளிலும் கூட்டுறவுக் கடன் வழங்குவதற்கு எந்தத் தடையு **மில்லை.**

**திரு. க. இராமமூர்த்தி :** 'Adopted village' **கிராமங்களை ஏற்பது** என்ற அளவிலே அந்தப் பகுதிகளிலே பல கடன்களை கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பெற முடியாது என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். அது அரசினுடைய கவனத்திற்கு வந்ததா ? அப்படியிருக்குமானால் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்த என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுக்க இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** வணிக வங்கிகள் 'கிராம ஏற்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஒரு கிராமத்தை ஒரு வணிக வங்கியின் கிராமப்புறக் கிளையுடன் இணைத்து அந்தக் கிளையின் மூலம் அந்தக் கிராமத்தின் எல்லாவிதமான கடனளிப்புத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன. இத் திட்டத்தினால், ஒரே இடத்தில் பல வங்கிகள் தேவைக்கு அதிகமாகக் கிளைகள் திறப்பதைத் தடுக்கவும், அந்தக் குறிப்பிட்ட கிராமத்தின் வளர்ச்சியில் அதிக அளவு சிரத்தை எடுக்கவும் ஏதுவாகிறது. இத் திட்டம் கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் பொருந்தாது. உறுப்பினர் அவர்கள் ஏதாவது விவரம் இருந்து சொன்னால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

*Panchayat Union Staff Co-operative Credit Societies.*

* 65 Q.—THIRU S. MUTHUSAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of Panchayat Union Staff Co-operative Credit Societies that are functioning in Tamil Nadu ;

(*b*) whether they are economically viable ; and

(*c*) if not, the reason therefor ?



**ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.**

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் இயங்குகின்ற ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் எத்தனை ?

(இ) இவைகள் பொருளாதார ரீதியாக திருப்தியாக இயங்குகின்றனவா?

**(உ) இல்லையெனில், காரணம் என்ன ?**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) 196.

(இ) பொதுவாக திருப்திகரமாக இயங்குகின்றன.

**(உ) கேள்விக்கு இடமில்லை.**

(பிற்பகல் 4-20)

**திரு. செ. முத்துசாமி :** தமிழகத்தில் மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங் கள் இருக்கின்றன. இவைகளில் 196 இடங்களில் மட்டும்தான் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே எஞ்சியிருக்கிற ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஊழிய களுக்கு இருக்கும் சங்கடங்களை நீக்கவும் அவர்களுக்கும் கடன் வசதி செய்து தரவும் புதிய கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களை அந்த ஊழியர்களுக்கு ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களிலேகூட 126 சங்கங்கள்தான் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக் கின்றன. 66 சங்கங்கள் நட்டத்திலேதான் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை இந்த அரசு அனுதாபத்தோடு பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** கிராமப்புறங்களில் பல பகுதிகளில் விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் நிரம்ப செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. எங்கெங்கே ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்குக் கடன் வசதி அளிப்பதற்கு உதவியாக ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இல்லையோ அங்கெல்லாம் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டு வரும் விவசாயக் கடன் வழங்கு சங்கங்கள் மூலமாக ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கடன் வசதி பெறுவதற்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வசதி செய்து தருவார்களா ?

[1979 நவம்பர் 6

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குகிற இந்த நிறுவனங்கள் அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தவணை தவறாமல் பெற்ற கடனைத் திருப்பியளிக்க உறுதி அளிக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, 126 சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டுக் கொண் டிருப்பதாகவும் 66 கடன் வழங்கு சங்கங்கள் நட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்குக் கடன் வழங்குகிற கூட்டுறவுச் சங்கங்கள் இந்தச் சங்கங்கள் என்பதை நாம் அறிவோம். ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்குக் கடன் கொடுத்துவிட்டு, பிறகு அவர்களுடைய ஊதியத்திலிருந்து இந்தக் கடன் தொகை திரும்ப வசூல் செய்யப்படுகிறது. அப்படி ஊழியர்களின் சம்பளத்திலிருந்து திரும்ப கடன் தொகை திரும்ப வசூல் செய்யப்படுவதால், கடன் வழங்கு சங்கங்களில் இந்தக் நட்டம் வருவதற்கு என்ன காரணம் இருக்க முடியும் என்று புரியவில்லை. அத்தகைய கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களில், ஊழல் நடைபெற்றால் தான் நட்டம் உண்டாக வாய்ப்பிருக்கும். வேறு காரணத்தால் இருக்க முடியாது என்று எண்ணுகிறேன். எனவே அப்படிப்பட்ட சங்கங்களின்மீது அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா? ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்படும் நட்டத்திற்கு என்ன காரணம் என்பதை விளக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஒரு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் நட்டத்தில் செயல்படுவதற்கு ஊழல் மட்டும்தான் காரணம் என்ப தில்லை. வேறு பல காரணங்களும் இருக்கின்றன. கடன், லேவாதேவி போன்றவை அதிகரிக்காமல் இருப்பது, தவணை கடந்த கடன் தொகை அதிக மாக இருப்பது, சிப்பந்திகள் செலவினங்கள் அதிகமாக இருப்பது போன்ற வேறு பல காரணங்களும் இருக்கின்றன. ஆக இத்தகைய காரணங்களாலும் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நட்டத்தில் செயல்படுகின்றன என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** ஊராட்சி ஒன்றிய ஊழியர்களின் கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களைப் பொறுத்தவரையில், ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை, அவர்களுடைய சம்பளத்திலேயே பெற்று விடுகிற நிலைமை இருக்கும்போது, தவணை தவறிய கடன் என்பது எப்படி வருகிறது என்பது எனக்குப் புரியவில்லை. ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் அல்லது அதற்கான பொறுப்பில் இருப்பவர்கள் ஊழியர்களிட



1979 நவம்பர் 6]

மிருந்து சம்பளம் வழங்கப்படும்போதே கடன் தொகையை வசூல் செய்து விடுகிறார்கள். ஆனால் அதற்கான ரசீது போடப்படாமல் பணம் புரட்டப் படுகிறது. அதன் காரணமாகத்தான் இத்தகைய நஷ்டம் ஏற்படுகிறது என்று எண்ணுகிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரையிலாவது, அவர்களுக்கு பொருள் உற்பத்தியாகவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் கடன் தொகையைத் திரும்பத் தருவதில் தவணை கடந்த நிலை ஏற்பட்டுவிடலாம். ஆனால் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய சம்பளத்திலேயே கடன் தொகை திரும்ப வசூலிக்கப்படுகிற காரணத்தால், தவணை தவறுகிற நிலை ஏற்படுவது என்பது சரியில்லை, எனவே இத் தகைய நிலை ஏற்படாமலிருக்கத் தக்க வகையில் உரிய பாதுகாப்புகளை ஏற் படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை அரசு நிச்சயமாக அனுதாபத்தோடு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether these co-operative credit societies are only giving credit to the staff members or whether they are also buying and selling certain consumer articles which are given on credit to staff members?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் விவரம் என்னிடம் இல்லை. அருள்கூர்ந்து தனிக் கேள்வி போடுமாறு நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தற்போது கடன் தொகையை ஊழியர்களிட மிருந்து நேரடியாக வசூலிக்கக்கூடிய நடைமுறை இருந்து வருகிறது. அதன் காரணமாகத்தான் இத்தகைய சங்கடங்கள் உருவாகின்றன என்று எண்ணு கிறேன். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அங்கே பணி யாற்றும் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத்திலேயே சம்பளம் வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. ஏற்கெனவே ஒரு நடைமுறை இருந்து வந்தது. அதன் மூலம் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் கடன் தொகையை சம்பளத்திலேயே பிடித்துக்கொண்டு, அத்தகைய கடன் தொகைக் கான 'செக்' கடன் வழங்கு சங்கத்திற்கு அனுப்பப்பட்டு வந்தது. அந்த நடைமுறை தற்போது மாற்றப்பட்டு கடன் வழங்கு சங்கத்திலிருப்பவர் களான பொறுப்பாளர்களிடமே கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்க லாம் என்ற நிலை இருப்பதால், அவர்கள் ஊழியர்களிடமிருந்து கடன் தொகையைத் திரும்பப் பெறும் நிலை இருக்கிறது. எனவே முன்பிருந்த முறையை மீண்டும் கொண்டு வருவதன் மூலம் சம்பளத்திலேயே கடன்

தொகை பிடித்தம் செய்யப்பட்டு 'செக்' மூலமாக சங்கத்திலுடைய 'அக்கவுண்ட்டுக்கு' அனுப்பப்படும் ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் கொண்டுவர முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** உறுப்பினர் அவர்களின ஆலோசனை நிச்சயமாக அரசால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### *Encroachment of Forest Lands*

* 66 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state the extent of the forest lands encroached upon in Gudalur Taluk as on 1st November 1978?

### வன நில ஆக்கிரமிப்பு.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்— நவம்பர் 1, 1978 ஆம் நாள் நிலவரப்படி, கூடலூர் வட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வன நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** கூடலூர் தாலுகாவில் வனத்துறையின் நிலங்களில் மொத்தம் 599.20 ஹெக்டேர் நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்கெனவே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள வனப் பகுதியை மீட்கவும், வனப் பாதுகாப்புச் சட்டத்தை கடுமையான முறையில் அமுல்படுத்தப்போவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பை முழுமைப்படுத்தவும், அரசு தற்போது என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? இனி என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காகத்தான் கடந்த ஆண்டின் இறுதியில் வருவாய்த்துறை, வனத்துறை, காவல்துறை ஆகியவை மூன்றும் இணைந்து சில முயற்சிகளை மேற்கொண்டன. அவ்வாறு அவைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றுகிற முயற்சியில் ஈடுபட்டபோது, சில எதிர்பாராத நிகழ்ச்சிகள் ஏற்பட்டதையொட்டி, அந்த முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே அரசு மீண்டும் மிகுந்த அக்கறையோடும் கவனத்தோடும் இதைப் பரிசீலித்து சில முயற்சிகளை இப்போது எடுக்க இருக்கிறது. அந்த முயற்சிகளை இங்கே



பொது நலன் கருதி வெளியிடாமலிருப்பது ஏற்கெனவே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உறுதுணையாக இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** வன இலாக்காவிற்குச் சொந்தமான 599.2 ஹெக்டேர் நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிலப் பரப்பை மொத்தம் எத்தனை பேர் ஆக்கிரமித்திருக்கிறார்கள்? அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தவர்களில் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அப்படிப்பட்ட விவரங்களைச் சொல்லும் வகையில் விரிவான அறிக்கை என்னிடமில்லை. தினந்தோறும் சிறுகச் சிறுக ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. கடந்த ஆண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றும் முயற்சிகளை மேற்கொண்ட பிறகும், வெள்ளம்போல் மீண்டும் ஆக்கிரமிப்பு நடைபெற்றிருக்கிறது. ஆகவே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்பு விவரத்திற்குள் நுழைந்தால், மிக அபாயகரமான பல நிலைமைகளை வெளியே சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். எனவே அரசு மிகுந்த கவனத்தோடும், மிகுந்த எச்சரிக்கையோடும் அணுக வேண்டிய ஒரு கடுமையான விஷயமாக இதைக் கருதி நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister has said that about 599 hectares of land have been encroached by outsiders. May I know what the subordinates of the Forest Department were doing while these encroachments were going on? Did they disappear into another forest?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு விடையளிப்பதன் மூலம் வனத் துறையில் இருக்கும் ஒரு பரிதாபகரமான நிலையை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல எனக்குக் கிடைத்த வாய்ப்பாக இதைக் கருதுகிறேன். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவுள்ள காடுகளுக்கு, மனிதன் நுழைய முடியாத, நுழைய வாய்ப்பும் வசதியுமில்லாத காடுகளுக்கு ஒரு ரேஞ்சர், ஒரு ஃபாரஸ்டர், ஒரு கார்டு என்ற அடிப்படையில் அதிகாரிகள் இருக்கிறார்கள். இப்படிப் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பரப்பளவுள்ள காடுகளுக்கு ஒரே ஒரு அதிகாரி பொறுப்பாக உள்ள நிலைமை இருக்கிறது. அவர்களெல்லாம் அந்தக் காட்டுப் பகுதிக்குள் உள்ளேகூட நுழைய முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக கூடலூர் போன்ற மலைச் சரிவுகள் அதிகமுள்ள காட்டுப் பகுதிகளில்

என்ன செய்ய முடியும் என்பதை நாமெல்லாம் சிந்தி
இத்தகைய அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டும். இங்கே எனக்குத் தரப்
மனிதாபிமானத்தோடு அரசிற்குச் சொந்தமான வனத் துறை நிலங்களில்
பட்டிருக்கிற கணக்கேகூட ஆக்கிரமிப்பு பற்றியது மட்டும்தான். இவைகள் தவிர,
செய்யப்பட்டுள்ள சொந்தமான காட்டுப்பகுதிகளிலும் ஏறத்தாழ பல ஆயிரக்
தனியார்களுக்குச் நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது.
கணக்கான ஏக்கர் கணக்கு அரசிடம் இல்லை. எனவேதான் இந்த
அதுபற்றிய சரியான பொறுத்தவரையில், மிகக் கடுமையான, மிக அபாய
ஆக்கிரமிப்புகளைப் மிகுந்த எச்சரிக்கையோடு நடவடிக்கை எடுக்க
கரமான விஷயமாகவும், அரசு இதைக் கருதி, நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டிய விஷயமாகவும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது வனத் துறை
இருக்கிறது எச்சரிக்கையோடும் அந்த ஆக்கிரமிப்பாளர்களை
மிகுந்த கண்டிப்போடும், இட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறது. தக்க நேரத்தில்
அகற்றுவதற்கான எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
உரிய நடவடிக்கை

திரு. வி. ஆர். பெரியண்ணன் : வன இலாக்காவிலுள்ள நிலங்களில்
செய்யப்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க கடுமையான சட்டம் இருக்கிறது.
ஆனால் அதே நேரத்தில் ஊராட்சி மன்றங்களால் அவற்றின் சார்பில்
பராமரிக்கப்படும் வனங்களைப் பாதுகாப்பதற்கோ, அவற்றில் செய்யப்படும்
ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கோ எந்தச் சட்டமும் தற்போது இல்லை
ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் அதிகாரம் ஊராட்சி மன்றங்களுக்கு இல்லை
என்ற நிலை இருப்பதால், ஊராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வனங்களி
மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் விசேஷமாக ஒ
கடுமையான சட்டத்தை இந்த அரசு கொண்டு வருமா?

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : பொதுவாகவே தமிழ்நாட்டில்
வனங்கள் வனத் துறையில் இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றங்களின்
பொறுப்பிலே இருந்தாலும் சரி, செவின்யூ துறையின் பொறுப்பிலே
இருந்தாலும் சரி, அவைகள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆக்கிரமிப்புகளைத்
தடுக்க அரசு எடுத்திருக்கிற முயற்சிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
பல்வேறு முறையாகக் கேள்விகளைக் கேட்கிறார்கள். இந்த மோசமான
ஆக்கிரமிப்புகளைத் தடுக்க அரசு முயற்சிகளை எடுத்தபோது, அனைத்துக்
கட்சியினர் என்ற பெயராலே சிலர் அரசியலோடு வந்தார்கள் என்பதை
மாத்திரம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள்
சொல்லுகிற முயற்சிகளில் ஈடுபடுகிறபோதும், தம்முடைய அரசியல் கட்சிகளின்
பிரதிநிதிகள் உடனடியாக மனுக்களோடு எங்களிடத்தில் வருகிறார்கள்
என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



டாக்டர் இரா. சனார்த்தனம் : இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களைக்
கவனிக்க வனத் துறையினருக்கு ஹெலிகாப்டரை வாங்கிக் கொடுக்க அரசு
ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர்
சனார்த்தனம் அவர்கள் ஹெலிகாப்டர் வாங்க வேண்டுமென்று சொன்னது
விளையாட்டாகக் கருதுகிற விஷயமல்ல. கூடலூர் வனப் பகுதியில் உள்ள
ஆக்கிரமிப்புகளைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால்
ஹெலிகாப்டர் இல்லாமல் முடியாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களே அந்தப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது கூறியிருக்
கிறார்கள். அங்கே மனிதர்கள் நடந்தோ, வாகனங்களின் மூலமோ உள்ளே
நுழைய முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மிகச் சிறந்த முறையில்
செழிப்பாகக் காடுகள் வளர்ந்துள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களை நாம்
அங்கே பெற்றிருக்கிறோம். அவைகள் அழிக்கப்படுவதை நாம் கண்டும்
காணமுடியாதவர்களாக இருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : ஆக்கிரமிக்கப்பட்டுள்ள கூடலூர் பகுதியில்
குடியிருப்பையொட்டிய பகுதிகள்தான் அநேகமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்
கின்றன என்பது உண்மையா? அப்படியிருக்குமானால், அதைத் தவிர்க்க
அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது? பல ஆக்கிரமிப்புகள்
நேரடியாக நடந்திருக்கலாம். சிலர் கிரயம் கொடுத்து பெற்று வந்திருக்கலாம்.
அதைப் போன்ற சட்டத்திற்குப் புறம்பான ஆக்கிரமிப்புகளை சட்டப்படி
செல்லாததாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : குடியிருப்புகளுக்காக நகரத்தை,
கிராமத்தைத் தொடர்ந்திருக்கிற ஆக்கிரமிப்புகள் என்பது அபாயகரமானவை
யல்ல. கூடலூர் ஜன்மம் காடுகளைப் பொறுத்தவரையில், மிகப்பெரிய
'சோலா ஃபாரஸ்ட்' காடுகள் என்று அழைக்கப்படுகிற இயற்கையான
காடுகளுக்குள்ளே நுழைந்து அங்கே கூடாரங்களை அமைத்துக் கொண்டு
மரங்களை வெட்டுவதும், அவற்றைக் கரியாக்கி ஏற்றுமதி செய்வதும், அங்கே
உள்ள காடுகள் முழுவதையும் அழித்துவிட்டு இஞ்சி போன்ற பயிர்களைப்
பயிர் செய்வதுமாகிய இப்படிப்பட்ட பல நடவடிக்கைகளை அவர்கள்
நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சட்டபூர்வமான ஆக்கிரமிப்பு
என்பதே கிடையாது. ஆக்கிரமிப்பு என்றாலே சட்டத்தை மீறுவது என்று
தான் பொருள். அதுகுறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று
சொல்லும்போது, சட்டபூர்வமான நடவடிக்கை, உண்மையிலேயே இடம்
இல்லாமல் ஏழை மக்கள் ஆக்கிரமிப்புச் செய்திருந்தால், அவர்களுக்குத்
தொல்லை தராமல் பாதுகாப்புக் கொடுக்கிற வகையில், உரிய எல்லா
நடவடிக்கைகளையும் எடுக்க அரசு கருதியிருக்கிறது என்று பொதுவ

திரு. வே. தங்கபாண்டியன் : வண்டலூருக்கு மிருகக் காட்சி சாலை மாற்றப்படும்போது, அதற்குரிய போக்குவரத்து வசதிகளைச் செய்வது குறித்து அரசு ஏதாவது பரிசீலனை செய்திருக்கிறதா ? கல்விச் சுற்றுலாவை மாணவர்கள் மேற்கொள்ளும் பொருட்டு போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்குரிய செயற்குறிப்பை அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: இந்தத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கிறபோது, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் எண்ணித்தான் தேர்ந்தெடுத்தார்கள். எல்லாப் போக்குவரத்து வசதிகளையும் பெற்றிருக்கிறது. சென்னையிலிருந்து மின்சார இரயில் வண்டலூர் வரையில் போகிறது. தேசிய நெடுஞ்சாலையும் அதன் ஓரத்தில் செல்கிறது. அதைத் தவிர, போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் மிக அதிகமான எண்ணிக்கையில் அவ்வழியாகப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே எந்தவிதமான வசதிக் குறைவும் இல்லாமல் மாணவர்கள் உட்பட எல்லாப் பயணிகளும் அங்கே போய்ப் பார்க்கலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, while the proposal to shift the Zoo to Vandalur is a splendid idea, there are reports that by the time the Zoo is shifted to Vandalur, all the animals in the present Zoo will die out. May I know what precautions the Government will take to ensure that the present inhabitants of the Zoo are alive by the time the Zoo is shifted to Vandalur?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துத்தான் வேறு இடத்திற்கு தற்காலிகமாக மாற்றலாம் என்று கருதியிருக்கிறோம். செத்துக்கொண்டிருக்கிற மிருகங்களைச் சாகாமல் காப்பாற்ற உடனடியாக வண்டலூரிலேயே ஒரு தற்காலிக இடத்திற்கு மாற்ற திட்டம் வைத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சிங்கங்கள் இருக்கக்கூடிய இடத்தையும் இயற்கையாகப் பார்க்கக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐதராபாத்தில் பார்வையாளர்களை வேன் மூலமாக அழைத்துச் சென்று காட்டுகிறார்கள். அது மாதிரி வேனிலே போகக்கூடிய ஏற்பாட்டை இந்த அரசும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அதைத்தான் நான் முன்பே சொன்னேன். சிங்கங்கள் போன்ற வன விலங்குகள் இயற்கையாக உலாவிக் கொண்டிருக்கும். நாம் கூண்டுக்குள் இருந்து பார்ப்போம். அதற்கு லையன் சஃபாரி என்று பெயர். சிங்கங்கள் சுற்றிக்கொண்டிருக்கும்; நாம் வேன்களிலே போய் பக்கத்திலே இருந்து பார்த்துவிட்டு வரலாம்.



(பிற்பகல் 4-40)

THIRU J. M. MIAKHAN : As the hon. Member Thiru Damodaran said, the animals in the present zoo are affected by the smoke from the nearby Railway station and get diseases like T.B. May I know whether the Government have any proposal to shift the zoo temporarily to the Guindy Park near Raj Bhavan ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்த வினாவிற்கு ஏற்கெனவே விடை அளித்துவிட்டேன். இங்கேயிருந்து ராஜ் பவனத்திலேயிருக்கின்ற கிண்டி பாரஸ்ட்டுக்கு மாற்றி, அதற்குப் பிறகு வண்டலூருக்கு மாற்ற ஏற்பாடு செய்வதிலே பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்கின்ற அவசியம் இருக்கிறது. நேரடியாகவே வண்டலூருக்கு உடனடியாக தற்காலிகமாக மாற்றுகின்ற முயற்சியை அரசு எடுத்துக்கொள்கிறது.

*First Class Magistrate's Courts.*

* 68 *Q*.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM). Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether it is a fact that almost all the offences under the Tamil Nadu Prohibition Act, which were previously classified second class offences have now been made non-bailable first class offences ;

(*b*) whether this has resulted in increase in the number of cases in First Class Magistrate's Courts far above the manageable limit and a considerable decrease in the number of cases in Second Class Magistrate's Courts ; and

(*c*) if so, whether there is any proposal to upgrade all Second Class Magistrate's Courts as First Class Magistrate's Courts to meet this new situation ?

முதல்வகுப்புக் குற்றவியல் நீதிமன்றங்கள்.

திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு சட்டமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் வருகின்ற, இதற்குமுன்பு இரண்டாம் வகுப்புக் குற்றங்களாக வகைப்படுத்தப்பட்ட குற்றங்கள் ஏறத்தாழ அனைத்தும், பொறுப்பில் விட முடியாத முதல் வகுப்புக் குற்றங்களாகத் தற்போது ஆக்கப்பட்டுள்ளன என்பது உண்மையா ?

(இ) இவ்வாறு செய்ததன் விளைவாக, முதல் வகுப்புக் குற்றவியல்
நீதி மன்றங்களில் வழக்குகளின் எண்ணிக்கை சமாளிக்கக்கூடிய வரை
யறையைக் காட்டிலும் அதிகமாகியும், இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதி
மன்றங்களில் வழக்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் குறைந்தும்
உள்ளதா ?

(உ) ஆமெனில், இந்தப் புதிய சூழ்நிலையினைச் சமாளிக்கும்
பொருட்டு, இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்தையும்,
முதல் வகுப்புக் குற்றவியல் நீதி மன்றங்களாகத் தரம் உயர்த்துவதற்கான
செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) Yes.
(b) Yes.

(c) The Government have already under consideration a
proposal for integration of District Munsifs and Judicial Magis-
trates and that integration will take care of this aspect as well.

* 69 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the
Minister for Law be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of
the Government to reduce the workload of the First Class Magis-
trate's Courts, as a result of the new laws, introduced by the
Government of Tamil Nadu; and

(b) if so, the details thereof ?

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்
கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் புதிய சட்டங்களின் விளைவாக, முதல் வகுப்புக்
குற்றவியல் நீதி மன்றங்களுக்கு ஏற்பட்டுள்ள பணிச் சுமையைக்
குறைப்பதற்கான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a- and (b).—To
reduce the workload in the Judicial First Class Magistrate's Courts
consequent on the implementation of the Prohibition Act, the
Government are considering the proposal of vesting Judicial
Magistrates of the Second Class with First Class powers to try the
Prohibition cases.



திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய பதிலிலிருந்து இன்னொன்று கேட்க விரும்புகிறேன். ஜாமீனில்
விடுவதற்கும் மற்றவைகளுக்கும் முதல்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்களுக்கு
இருக்கின்ற அதிகாரத்தை உடனடியாக இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு
களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ? அமைச்சர் அவர்கள் முறையான
நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக
விரைவுபடுத்த, அவர்களுக்கு ஜாமீன் வழங்குகின்ற அதிகாரத்தைத் தர அரசு
முன்வருமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY : The case are tried
by Magistrates who have got the relevance and the necessary jurisdic-
tion to try and there is no exclusive power for granting bail alone
if the cases themselves do not come up before the competent Magis-
trates. It is so even in Prohibition cases. Under section 11(3) of
the Criminal Procedure Code, the Government have no power to
invest the Second Class Magistrates with First Class powers. Only
the High Court has got the power.

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : புது மதுவிலக்குச் சட்டத்தின் கீழ்
அதிகாரங்கள் மாற்றப்பட்டிருந்தாலும்கூட சமீபத்திலே மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல, மதுவிலக்குக் குற்றங்களைச்
செய்தவர்களை விடுதலை செய்யச் சொல்லி, அதன்படி விடுதலை செய்திருக்
கிறார்கள். இப்போது புதிய சட்டம், மதுவிலக்குச் சட்டம் அமுலில்
இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி நான் தெரிந்துகொள்ள
விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY: This question does
not arise from the main question.

திரு. க. இராமமூர்த்தி : கிரிமினல் புரோசிஜர் கோடை மாற்ற அதிகாரம்
இல்லையென்றாலும் . . .

The Hon. Thiru K. NARAYANASWAMY: I am sorry. We
have the power.

திரு. க. இராமமூர்த்தி : மதுவிலக்குச் சட்டத்தில் ஜாமீனில் விடுகின்ற
அதிகாரம், தண்டனை அளிக்கின்ற அதிகாரம், இப்படிப்பட்ட நிலைகள்
முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு வருகின்ற அளவிலே சில திருத்தங்களை
நாமே நிறைவேற்றினோம். அந்த அனுபவத்தின் அடிப்படையில் அந்தச்
சட்டத்தை மாற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா ?

The Hon. Thiru K. NARAYANASWAMY: Frankly, I do not understand this question.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அரசு செகண்ட் கிளாஸ் கோர்ட்டுகளை முதல் வகுப்பு கோர்ட்டுகளாக ஆக்கிவிடலாம். இ.பு.கோ. 11 (3)-ன்படி ஹைகோர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு எல்லா கீழ் கோர்ட்டுகளுக்கும் சீக்கிரமே முதல் வகுப்பு அதிகாரத்தைக் கொடுத்து, எல்லாக் கேஸ்களையும் துரிதமாக முடிவு செய்து தீர்ப்பளிக்க அரசு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : The Government are acutely and keenly conscious of the impending and imperative need for dissolving the pendency now prevailing in various Courts. Government are acutely aware of that. But only the High Court has got to invest the Second Class Magistrates with First Class powers. This Government have persuaded the High Court to accept the view that under section 11 (3), they have got the competence to do it and the High Court also has accepted that legal position. But the High Court has further suggested certain adaptation of laws in respect of State laws and Central laws. Central laws are beyond the purview of the State Government.

*Prisoners involved in Accidents.*

* 70 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Law be pleased to state—

(a) the number of prisoners who have met with accidents in various industrial units including the Press in Central Prison, Madras, from 21st December 1978 to 23rd December 1978 ; and

(b) the hospital in which they were treated?

விபத்திற்காளான சிறைக் கைதிகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மத்திய சிறையில், 21—12—1978 முதல் 23—12—1978 முடிய, அங்குள்ள அச்சுக்கூடம் உள்ளிட்ட பல்வேறு தொழிற் பிரிவுகளில் விபத்திற்கான சிறைக் கைதிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு எந்த மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது?



THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) One prisoner.

(b) He was treated in the Government General Hospital, Madras.

திரு. க. இராமமூர்த்தி : சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகள் இதுபோன்ற விபத்துக்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான பாதுகாப்பு வசதிகள் சரியாக இல்லை என்ற அளவிலேதான் நிலைமைகள் இருக்கின்றன. அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது? இந்த குறிப்பிட்ட நபருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை கொடுக்கவில்லை என்றும், சில மணி நேரம் அவகாசம் எடுத்துக்கொண்ட பிறகுதான் அவருக்கு சிகிச்சை கிடைத்ததாகவும் சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அது உண்மையானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Specific instructions were given so often to this prisoner that nothing should be removed from the machine without stopping it. But he did not care to follow the instructions and removed the paper when the machine was in operation. This negligence on his part resulted in the accident. He was given first aid at the Press itself. Pressure-bandage with a splint was applied at the Central Prison Hospital itself. As per the advice of the Prison doctor he was referred to the General Hospital, Madras, for further treatment. He was discharged from the General Hospital, Madras, on 9th March 1979. The Superintendent, Central Prison, is taking action for payment of compensation if any, payable to the prisoner.

திரு. க. இராமமூர்த்தி : இந்த மத்திய சிறைச்சாலையிலே இதற்கு முன்னதாக சில சமயங்களில் இதுபோன்ற பல கவனக்குறைவுகளின் விளைவாக, இறந்துபோன கைதிகளுடைய அடையாளமே மாற்றப் பட்டதாகவும், எனவே அங்குள்ள கண்காணிப்பு முறைகள் சரியில்லை என்பதை அரசு உணருகிறதா? அதைத் தடுக்க அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது?

THE HON. THIRU K. NARAYANASWAMY : If there is a mistaken identity and if the question pertains to that aspect of the matter, this question does not arise from the main question.

The Hon. Thiru K. NARAYANASWAMY: Frankly, I do understand this question.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அரசு செகண்ட் கிளாஸ் கோர்ட்டுக
முதல் வகுப்பு கோர்ட்டுக்ளாக ஆக்கிவிடலாம். இ.பு.கோ. 11 (3)-ன்படி
ஹைகோர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது என்று அமைச்
அவர்கள் சொன்னார்கள். உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு எல்லா
கோர்ட்டுகளுக்கும் சீக்கிரமே முதல் வகுப்பு அதிகாரத்தைக் கொடுத்து,
எல்லாக் கேஸ்களையும் துரிதமாக முடிவு செய்து தீர்ப்பளிக்க அரசு ஏற்பாடு
செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : The Government are acutely and keenly conscious of the impending and imperative need for dissolving the pendency now prevailing in various Courts. Government are acutely aware of that. But only the High Court has got to invest the Second Class Magistrates with First Class powers. This Government have persuaded the High Court to accept the view that under section 11 (3), they have got the competence to do it and the High Court also has accepted that legal position. But the High Court has further suggested certain adaptation of laws in respect of State laws and Central laws. Central laws are beyond the purview of the State Government.

*Prisoners involved in Accidents.*

*70 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) the number of prisoners who have met with accidents in various industrial units including the Press in Central Prison, Madras, from 21st December 1978 to 23rd December 1978 ; and

(*b*) the hospital in which they were treated ?

விபத்திற்காளான சிறைக் கைதிகள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்
கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மத்திய சிறையில், 21—12—1978 முதல் 23—12—1978
முடிய, அங்குள்ள அச்சுக்கூடம் உள்ளிட்ட பல்வேறு தொழிற் பிரிவுகளில்
விபத்திற்கான சிறைக் கைதிகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுக்கு எந்த மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்
பட்டது ?



THE HON. THIRU K. NARAYANASWAMY : (*a*) One prisoner.

(*b*) He was treated in the Government General Hospital, Madras.

திரு. க. இராமமூர்த்தி : சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகள்
இதுபோன்ற விபத்துக்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்கான பாதுகாப்பு
வசதிகள் சரியாக இல்லை என்ற அளவிலேதான் நிலைமைகள் இருக்கின்றன.
அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது ? இந்த
குறிப்பிட்ட நபருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை கொடுக்கவில்லை
என்றும், சில மணி நேரம் அவகாசம் எடுத்துக்கொண்ட பிறகுதான் அவருக்கு
சிகிச்சை கிடைத்ததாகவும் சொல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா ?
அது உண்மையானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை
எடுத்தது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Specific instructions were given so often to this prisoner that nothing should be removed from the machine without stopping it. But he did not care to follow the instructions and removed the paper when the machine was in operation. This negligence on his part resulted in the accident. He was given first aid at the Central Prison Hospital itself. Pressure-bandage with a splint was applied at the Central Prison Hospital itself. As per the advice of the Prison doctor he was referred to the General Hospital, Madras, for further treatment. He was discharged from the General Hospital, Madras, on 9th March 1979. The Superintendent, Central Prison, is taking action for payment of compensation if any, payable to the prisoner.

திரு. க. இராமமூர்த்தி : இந்த மத்திய சிறைச்சாலையிலே இதற்கு முன்ன
தாக சில சமயங்களில் இதுபோன்ற பல கவனக்குறைவுகளின் விளைவாக,
இறந்துபோன கைதிகளுடைய அடையாளமே மாற்றப் பட்டதாகவும், எனவே
அங்குள்ள கண்காணிப்பு முறைகள் சரியில்லை என்பதை அரசு உணரு
கிறதா? அதைத் தடுக்க அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : If there is a mistaken identity and if the question pertains to that aspect of the matter, this question does not arise from the main question.

## Appointment of Headmasters.

* 71 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that Headmasters of 'A' Wing Government High Schools, were appointed as Headmasters of 'B' Wing, before the issue of the Government Orders indicating clearly about the merger of 'A' Wing and 'B' Wing in Government High Schools; and

(b) if so, the reason therefor?

### தலைமை ஆசிரியர்கள் நியமனம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு இணைப்பு பற்றி தெளிவான வரையறை அடங்கிய அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முன், அரசு உயர்நிலைப் பள்ளி 'ஏ' பிரிவு தலைமை ஆசிரியர்கள், 'பி' பிரிவு பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இவ்வாணை பிறப்பிக்கப் பட்ட 2—11—1978-க்கு முன்னர் அரசு உயர்நிலைப் பள்ளி 'ஏ' பிரிவு தலைமையாசிரியர்கள் எவரும் 'பி' பிரிவு பள்ளித் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது, அதில் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு இணைந்த ஒரு சீனியாரிட்டி பட்டியல் தயாராகவில்லை. 'ஏ' பிரிவு 'பி' பிரிவு இணைக்கப்பட்ட பிறகு, அவைகளை இணைத்தது சரி என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பும் அளித்திருக்கின்றது. அப்படி அளித்த பிறகும், 'ஏ' பிரிவும் 'பி' பிரிவும் இணைந்த ஒரு சீனியாரிட்டி பட்டியல் இன்னும் வராமல் இருக்கிறது. இதனால் தலைமையாசிரியர்கள் நியமனம் என்று வரும்போது, ஜூனியர்கள் தலைமையாசிரியர்களாக வருவதும், சீனியர் களுக்கு அப்பதவி உயர்வு வராமல் இருக்கும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க முன்னாள் 'ஏ' பிரிவு முன்னாள் 'பி' பிரிவு இணைந்த ஒரு சீனியாரிட்டி பட்டியலை அரசு உடனடியாக வெளியிடுமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இணைக்கின்றபோதுதான் பட்டியல் தயாரித்து அளிக்கப்படும். அதன்படிதான் இந்தப் பதவி நியமனங்கள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** இணைப்பதற்கு அவர்களுக்கு வைத்திருக்கக் கூடிய ஜீ.ஓ. விப்படி 2:3 என்று விகிதாசாரம் இருக்கிறது. அதாவது 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கு 2 தலைமையாசிரியர்கள் என்றால், அடுத்துள்ள 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு 3 என்று வைத்திருக்கிறார்கள். ஸ்டேட்வைட் சீனி யாரிட்டி பட்டியல் தயாரித்தால்தான், மேல் பதவி உயர்வு பெறுகின்றவர் களுக்கு, அது பயனுடையதாக இருக்கும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு அதைப் பரிசீலிக்கும்.

**திரு. செ. முத்துசாமி:** பதவி உயர்வு என்பதில் தலைமையாசிரியர் பதவி உயர்வு என்பது மட்டுமல்ல, இப்போது இருக்கக்கூடிய நிலையில் இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் இவர்களுடைய சீனி யாரிட்டி, பதவி உயர்வு எல்லாம் தடைப்படுகிறது. அப்படி பதவி உயர்வு கொடுக்கும்போது, அந்த சீனியாரிட்டிப்படி கொடுக்க முடியும். அந்த லிஸ்டை வெளியிட்டால் திருத்திக்கொள்ளலாம். இன்னும் கல்வித் துறை அதைச் செய்யாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த இரண்டு லிஸ்டையும் ஆராய்ந்து முழுமையான லிஸ்ட் தயாரித்து வெளியிட அரசு முன்வருமா? பொருத்தி, மீண்டும் திருத்தி வெளியிட கருத்து இருக்கிறதா? அதை

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

**புலவர் புலமைப்பித்தன்:** 'பி' பிரிவுப் பள்ளிகளிலே பணியாற்றிக் கொண்டிருந்த காரணத்தினாலேயும், கல்லூரிகளிலே பணியாற்றிக் கொண் டிருக்கின்ற காரணத்தாலும் பல பேர்களுக்கு 6 அல்லது 7 ஆண்டுகளாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு இல்லாமல் இருப்பதாகத் தெரிகிறது. அதற்குப் பரிகாரம் அளிக்கும் வகையில் அந்த 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்து பட்டியல் வெளியிட்ட பின்னராவது அவர்களுக்குப் பதவி உயர்வு தருவதிலே அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்தக் கேள்வி பின்னாலே வரு கிறது என்றாலும், இப்போது அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இணைப்பிற்கு முன்பாக அரசுப் பள்ளி களில், குறிப்பாக 'பி' பிரிவு அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பல தலைமை ஆசிரியர்களுக்கு இன்றுவரை ஊதிய நிர்ணயம் செய்யப்படாமல், அவர்கள் தங்களது ஆரம்ப ஊதியத்திலேயே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அப்படிப்பட்ட அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மிக விரைவாக ஊதிய நிர்ணயம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இணைப்பு உறுதியாகிவிட்டதால், இனி அதில் தாமதம் ஏற்படாதென்று கருதுகிறேன்.

## *Specialist Teachers*

* 72 Q.—THIRU P. R. THOMAS. Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that, a large number of specialist teachers in 'B' Wing Schools in Madurai and Ramanathapuram Districts, who have acquired the necessary qualifications to be appointed as Tamil Pandits are awaiting for many years, to be absorbed;

(b) if so, the number of such persons; and

(c) the action proposed to be taken thereon?

### சிறப்பு ஆசிரியர்கள்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 'பி' பிரிவு பள்ளிகளில், தமிழாசிரியர்களாக நியமிக்கத் தேவையான தகுதிகள் பெற்றுள்ள சிறப்பு ஆசிரியர்கள் பலர், அவ்வாறு நியமனம் பெறுவதற்குப் பல்லாண்டுகளாகக் காத்திருக்கின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அத்தகைய நபர்கள் எத்தனை பேர்?

(உ) அதையொட்டி, என்ன நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (இ) 8 சிறப்பு ஆசிரியர்கள் மட்டுமே தமிழாசிரியர் பதவிக்கு தகுதிபெற்று, பதவி உயர்வுக்காகக் காத்திருக்கிறார்கள்:

மதுரை மாவட்டம்—1

இராமநாதபுரம் மாவட்டம்—7.



(உ) தமிழாசிரியர் தகுதி பெற்றுள்ள சிறப்பு ஆசிரியர்கள் 'பி' பிரிவினைச் சார்ந்தவர்கள், 'பி' பிரிவு பணியிடங்களில் தமிழாசிரியர் பதவிகள் காலி ஏற்படும்போது முன்னுரிமைப்படி இச்சிறப்பாசிரியர்கள் தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

திரு. பா. ரா. தாமஸ்: ஏற்கெனவே மதுரை, முகவை மாவட்டங்களில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டு, தமிழாசிரியர்களாகத் தகுதி பெற்றிருக்கிறவர்கள் மட்டுமே பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய விகிதத்தைப் பெறக்கூடிய சிறப்பு ஆசிரியர்களுக்குப் பணி மூப்பு இருந்தால்கூட, அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும்போது, பணி மூப்பு கொடுக்கப்படவில்லை. எனவே பதவி உயர்வு அடிப்படையிலே, சிறப்பு ஆசிரியர்களும், தமிழாசிரியர்களாக நியமிக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இணைப்பு பற்றிய வழக்கு வழக்குமன்றத்திலே இருந்ததால், இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. இப்போது வழக்கு முடிந்துவிட்ட காரணத்தாலே, மேல் நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, இவர்களைப் பற்றியும் பரிசீலிக்கப்படும்.

## *Service of Teachers.*

* 73 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government will take steps to extend the benefit of the Government Order for regularising the services of the Graduate Teachers of Government Schools who have served for one year as on 31st March 1977 through the Tamil Nadu Public Service Commission to all teachers who have served up to 31st March 1978 also?

### ஆசிரியர்களின் பணிகள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

31—3—1977 ஆம் நாளன்று அரசுப் பள்ளிகளில் ஓராண்டு பணி புரிந்த பட்டதாரி ஆசிரியர்களின் பணி, அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலமாக நிரந்தரப்படுத்தப்படும் என்ற அரசு ஆணையின் பலனை, 31—3—1978 வரை பணிபுரிந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் விரிவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்குத் தேவை எதுமில்லை.

திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் : 31—3—1977 அன்று ஓராண்டு பணி புரிந்த பட்டதாரி ஆசிரியர்களின் பணியை வரன்முறை செய்வதற்காக, அதே ஆண்டு டிசம்பர் மாதம் ஆணை வெளியிடப்பட்டது. அதை இன்னும் செயல் படுத்தாத நிலையில், மேலும் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அதன்பின் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது. எனவே 31—3—1977-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணியையும் வரன்முறை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த நேரடித் தேர்வுகளில் தற்காலிகமாகப் பணி புரிந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு இயன்றவரையில் தேர்வாணைக் குழு முக்கியத்துவம் கொடுத்து தேர்வு செய்துள்ளனர். ஆகையினால் அரசாணையின் பலனை 31—3—1978 வரை பணி புரிந்த தாற்காலிகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்த அவசியம் எதுமில்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன் : 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆணை வெளியிடப்பட்டது. அந்த சூழ்நிலைக்குப் பொருத்தமானது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த ஆணையையே செயல்படுத்தாமல் இருக்கும்போது, புதிதாக வந்திருக்கின்ற தாற்காலிக ஆசிரியர்களின் பிரச்சினையும் அத்துடன் சேர்ந்துவிட்டது. எனவே முன்பு வெளியிட்ட அரசு ஆணையுடன் இதை இணைக்காவிட்டாலும், தனியாக வேறு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அடுத்து வருகிற தேர்வாணைக் குழு தேர்வுகளில் அவர்கள் பங்கெடுக்கலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : அரசு ஆணையை 31—3—1978 வரை பணி புரிந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் விரிவு படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். அரசு, பட்டதாரி ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்த எவ்வாறு அரசாணை வெளியிட்டிருக்கிறதோ அதுபோல பட்டதாரி ஆசிரியர்களல்லாத மற்ற ஆசிரியர்களுக்கும் அந்தச் சலுகையை அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இங்கே பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றித்தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது.



திரு. செ. முத்துசாமி : 31—3—1977-ல் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டுமென்ற அடிப்படையில் அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. டெம்ப ரரியாக, 10 (ஏ) (1) விதியின் கீழ் பணியாற்றுகிறவர்களுக்கு முழுமையாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனினும் அதை அமுல்படுத்தாததால், அந்தப் பிரச்சினை மீண்டும் இரண்டு ஆண்டுகளாக இருக்கிறது. அரசின் நோக்கம் டெம்பரரியாக பணியாற்றும் ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்த வேண்டுமென்பதுதான். இரண்டு ஆண்டுகளாகியும் அரசு ஆணையை அமல்படுத்தவில்லை. எனவே ஏற்கெனவே வழங்கியுள்ள அந்தச் சலுகை இவர்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்படிப்பட்ட யோசனைகள், தேர்வாணைக் குழு தேவையில்லை என்ற எண்ணத்தை உண்டாக்கிவிடும்.

## Teachers Promoted to Government Colleges.

* 74 Q.—THIRU S. MUTHUSAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that, after implementing the U.G.C. scales of pay, the teachers who were working in the 'B' Wing Government Schools and who were promoted to Government Colleges on their securing M.A., M.Sc., Degrees, are paid only the minimum in their scale of pay without any increments; and

(*b*) if so, the steps taken to pay the increments?

அரசு கல்லூரிகளுக்கு பதவி உயர்வு தரப்பட்ட ஆசிரியர்கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 'பி' பிரிவு அரசு பள்ளிகளில் வேலை செய்து, எம்.ஏ., எம்.எஸ்சி. பட்டம் பெற்று, அரசு கல்லூரிகளுக்கு பதவி உயர்வு தரப்பட்ட ஆசிரியர்களுக்கு யு. ஜி. சி. (U.G.C.) சம்பள விதங்கள் அமுலான பின்னர், ஊதிய உயர்வு தரப்படாமல் ஆரம்பச் சம்பளமே வழங்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், ஊதிய உயர்வுகள் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) இவ்வாசிரியர்களின் பணியினை வரன்முறைப்படுத்த இயலாத காரணத்தால், இவர்களின் ஊதியத்தை அவரவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட நாள் முதல்

[1979 நவம்பர்

நிதித்துறை வெளியிட்டுள்ள பொதுவான ஆணைக்கேற்ப அடிப்படை வி
22 (பி)-ன்படி முதலில் பழைய ஊதிய விகிதத்திலும் பின்பு, பல்கலைக் கழ
மானியக் குழுவின் ஊதிய விகிதத்திலும் அதற்கேற்ப வெளியிடப்பட்டுள்
ஆணையின்படி, ஊதியம் நிர்ணயிக்கவும் அண்மையில் ஆணை வெளியிடப்ப
டுள்ளது. ஊதிய நிர்ணயம் செய்தபின்பே, வருடாந்தர ஊதிய உயர்
வழங்க முடியும்.

திரு. செ. முத்துசாமி : ஒரு பதவிக்குத் தேவையான கல்வித் தகு
உடையவர்களென்ற அடிப்படையில் அவர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள்
அவர்களுடைய முழுக் கல்வித் தகுதியையும் கல்வித் துறை ஏற்று, இந்த
தகுதி உடையவர்களை இதற்கு நியமனம் செய்கிறோமென்று சொல்
கிறார்கள். அவர்களுக்கு ஒரு சான்றிதழ் கல்வித் துறை கொடுக்க
வேண்டும். அந்தச் சான்றிதழ் கொடுக்கப்படாததால், அவர்கள் பணி ரெகுல
ரைஸ் செய்யப்படாமல் இருக்கிறது. அந்தச் சான்றிதழைத் தர கல்வித்
துறைக்கு என்ன சங்கடம் இருக்கிறது? ஆதலால், சான்றிதழ் கொடுக்கப்
படாமல் இருக்கும் காலத் தாழ்வை நீக்கி, அவர்களை உடனே 'ரெகுலரைஸ்'
செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இந்தப் பிரச்சினைக்குக் காரணம்,
'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என்ற அடிப்படைதான். 'ஏ' பிரிவில் இருந்த ஆசிரி
யர்கள் அந்தப் பயனை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். 'பி' பிரிவை
இணைப்பது உறுதியாகிவிட்டதால், அவர்களுடைய பிரச்சினையும் தீர்ந்து
விடும்.

## *Unemployed Graduates and Non-Graduates.*

* 75 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Education be pleased to state the number of unemployed (i) Graduates and (ii) non-Graduates who have registered in the Employment Exchanges as on 31st December 1978 District-wise?

## வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் & பட்டம் பெறாதவர்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், மாவட்ட வாரியாக பதிவு செய்து கொண்டு வேலைவாய்ப்பற்ற (i) பட்டதாரிகள், (ii) பட்டம் பெறாதவர்கள், ஆகியோரின் எண்ணிக்கை 31—12—1978 நாளன்றுள்ளவாறு எவ்வளவு?



1979 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 31—12—1978 அன்றைய
நிலவரப்படியான விவரம் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி: வேலை வாய்ப்பற்ற பட்டம் பெறாதவர்கள்
8,74,541 என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு, கட்டாய
வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அரசு இதுவரை எவ்வளவு
செலவு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களைப் பதிவு செய்கின்ற
வேலைதான் என்னுடைய துறையின் வேலை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : படித்து, பட்டம் பெற்று, வேலையில்லாமல்
இருக்கிறவர்களுக்கு கேரள மாநிலத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை 200
ரூபாய் ஊதியம் அளிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல்,
இங்கேயும் படித்து பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு
உதவித் தொகை அளிக்க அரசு முன்வருமா? அதுகுறித்து கல்வி அமைச்சா
வர்கள், நிதி அமைச்சரவர்களுக்குப் பரிந்துரை செய்வார்களா?

திரு. செ. அரங்கநாயகம்: அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான்
வேலை உத்தரவாதத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. வேலையில்லாத
வர்களுக்குப் பணம் தருவதென்பது நம்முடைய சமுதாய நிலைமைக்கு ஒத்து
வராது. கேரளா பற்றிச் சொல்லலாம், ஆனால் அவர்கள் மதுவிலக்கை
ஏற்று நடத்தவில்லை.

திரு. ஆ. திராவிடமணி: இளைஞர் அணியில் பணியாற்றிய பட்டதாரிகள்
வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் தேர்வாணைக் குழு மூலமாகத்
தேர்ந்தெடுக்கப்பட்டால், வேலை தரப்படுமென்று சொல்லப்பட்டது.
அவர்கள் தேர்வாணைக் குழுவின் தேர்வை எழுதி, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்
கிறார்கள். சுமார் 6,000 பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்
களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா? அதன்
விவரமென்ன?

மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்): கேள்வி நேரம்
நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 5-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் அந்தத் துறையைச்
சார்ந்த அமைச்சரிடம் இருக்கும்.

@ 131 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 6

திரு. செ. முத்துசாமி : மதுவிலக்கு இல்லாததனால் வருமானம் வருகிறது, அவர்கள் சலுகைகளைச் செய்யலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு மதுவிலக்கைப் பொறுத்த வரை, எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறது? இங்கே அதைத் தளர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது எல்லோரும் அறிந்தது தான். அந்தப் பணம் எங்களுக்கு வருவதில்லை.

## *Harijan Welfare School Teachers.*

* 76 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware that several teachers working in Harijan Welfare Schools in Tiruchirappalli District are transferred many times every month continuously from June, 1978; and

(*b*) if so, the action taken by the Government on the concerned persons?

## அரிசன நலத்துறைப் பள்ளி ஆசிரியர்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட, அரிசன நலத்துறை பள்ளி ஆசிரி பர்கள் பலர் 1978, ஜூன் முதல் தொடர்ந்து ஒவ்வொரு மாதத்திலும் பலமுறை மாற்றல் செய்யப்படுகின்றனர் என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், உரியவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை மேற் கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) 1978 ஆம் ஆண்டு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் திங்களில் திருச்சி மாவட்டத்தில் அரிசன நலத்துறைப்பள்ளி ஆசிரியர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(இ) திருச்சி மாவட்டத்தில் ஏறக்குறைய 994 ஆசிரியர்கள் பணி ரிந்து வருவதால் மாற்றங்களை ஒருமித்து செய்ய இயலாமல் படிப்படியாகச் செய்யப்பட்டது. மாற்றங்களை ஒவ்வொரு ஆண்டிலும் மே 31-ம் தேதிக்குள் டிக்க வேண்டும் என்று 8—1—1979-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



1979 நவம்பர் 6]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தக் கேள்வி 1978 ஆம் ஆண்டு தொடக்கத் திலே கேட்கப்பட்டது. விடை 1979-லே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் கூடுமானவரை விடை அந்தந்த நேரத்திலேயே வந்தால், எங்களுக்கு இங்கே விளக்கங்களைக் கேட்க வாய்ப்பாக இருக்கும். அங்கே மாதந்தோறும் நடைபெற்ற அந்த மாறுதலைப்பற்றி அவ்வப்போது அரசுக்கு இங்கே புகார் செய்யப்பட்டிருந்தும் கூட, 8—1—1979-லேதான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இனியாவது 8—1—1979-லே போடப் பட்ட ஆணையைச் சரியாக அமுல்படுத்த அரசு முன்வருமா?

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குப் புகார் வந்த உடனேயே 1978 ஆம் ஆண்டிலேயே இரண்டு முறை இதுபோன்ற மாறுதல்களைச் செய்யக்கூடாது என்று கடிதம் அனுப்பப்பட்டு அதற்குப் பிறகு தான் 8—1—1979-ல் அரசு ஆணை வெளி விட்டிருக்கிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் சார்ந்த திருச்சியிலேயே இந்த கதி ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு மாறுதல்கள் செய்யக் கூடாது என்று திருச்சி மாவட்டத்திற்கு ஒரு தாக்கிது, குறிப்பிட்ட ஒரு தேதியில் அனுப்பியதாக மாண்புமிகு அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். ஆனால், நடப்பு ஆண்டில் ஜூன், ஜூலை மாதங் களில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் ஆயிரம் அரிசன நலத் துறைப் பள்ளி ஆசிரியர்களைக் காரணம் இல்லாமல், புகார் ஏதும் இல்லாமல் மாற்றி யிருக்கிறார்கள். அதுபற்றி விசாரணை வைத்து தவறு செய்தவர்களைத் தண்டிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது இடப்பட்டிருக் கின்ற ஆணை திருச்சிக்கு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதற்கும் முழுவதும் பொருந்தும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை, அரசுக்குத் தகவல் வந்துள்ளதன் அடிப் படையில் இப்பொழுது விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடன், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Appointments in Harijan Welfare Schools.*

* 77 Q.—THIRU K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Education Department rules such as Teacher-pupil ratio, qualification, appointment through Employment Exchanges were followed in the appointments of teachers in Harijan Welfare Schools, Tiruchirappalli District in November, 1978 ; and

(*b*) whether such appointments were made with the prior permission of the Harijan Welfare Department ;

(*c*) whether the vacancies were filled up as per the Government rules and on the basis of Community ratio, so as to give opportunity for all classes ; and

(*d*) if not, the action taken by the Government thereon ?

**அரிசன நலத்துறை பள்ளிகளில் நியமனங்கள்.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1978 நவம்பர் மாதத்தில், திருச்சி மாவட்ட அரிசன நலத்துறைப் பள்ளிகளில் நடைபெற்ற ஆசிரியர்கள் நியமனங்களில், ஆசிரியர் மாணவர் விகிதம், தகுதி, வேலை வாய்ப்பு நிறுவனம் வழி நியமனம் ஆகியன போன்ற கல்வித்துறை விதிகள் பின்பற்றப்பட்டனவா ?

(இ) அரிசன நலத்துறையின் முன் அனுமதியோடு அந்த நியமனங்கள் நடைபெற்றனவா ?

(உ) நியமனம் செய்யப்பட்ட இடங்கள் அரசு விதிகளின்படி, அனைத்து வகுப்பினருக்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையில் சாதி, விகிதாசார அடிப் படையில் நிரப்பப்பட்டனவா ?

(எ) இல்லை எனில், அவற்றின்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** (அ) ஆம். 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்ட அரிசன நலத்துறைப் பள்ளிகளில் நடைபெற்ற ஆசிரியர்கள் நியமனங்களில் ஆசிரியர்-மாணவர் விகிதம், தகுதி, வேலைவாய்ப்பு நிறுவனம் வழி நியமனம் போன்ற விதிகள் பின்பற்றப்பட்டன.

(இ) நியமனம் செய்யப்பட்ட காலியிடங்கள் அனைத்தும், மரணம், ஓய்வு பெறுதல், பதவி உயர்வு அளித்தல், புதிய விடுதிகள் திறத்தல் போன்ற அனுமதிக்கப்பட்ட அளவிற்குள் இருந்ததால் நியமனத்திற்கு அரிசன நலத் துறையின் முன் அனுமதி பெறத்தேவை இல்லை.



(உ) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதி 22-ல் கண்டுள்ள வகுப்புவாரி சுழற்சி நியமனம் இப்பணிக்குப்பொருந்தாது. தமிழ் நாடு அரிசன நல சார்நிலைப்பணி அமைப்புத் தனி விதியில் அரிசன நலத் துறைப்பள்ளி ஆசிரியர் நியமனங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு முன்னுரிமை தரப்படவேண்டும் என உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து ஆசிரியர்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

(எ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரிசன நலத் துறைப் பள்ளிகளில் தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு ஆணை யிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னு ரிமை வழங்கலாம். ஆனால் நியமிக்கப்படுகின்ற அத்தனை ஆசிரியர்களும் தாழ்த்தப்பட்டவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏதாவது ஆணை யிருக்கிறதா ? மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்க வாய்ப்பு இல்லையா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** 1963 ஆம் ஆண்டிலேயே தனி விதியைத் தொகுக்கும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய முன்னுரிமைபற்றி விதி 9-ல் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. இதன்படி அரிசன நலத் துறைப் பள்ளிகளில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை தரப்பட வேண்டும் :—

1. அரிசன வகுப்பை சேர்ந்தவர்கள்.

2. அரிசன வகுப்பைச் சார்ந்தவர்களைத் தவிர, தமிழ் நாடு அரசு மற்றும் சார்நிலைப் பணியாளர் விதி பகுதி 1 அட்டவணை 2-ல் குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள வேட்பாளர்கள்.

3. அரிசன வகுப்பிலிருந்து கிருஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள்.

4. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

இந்த முறை தான் பின்பற்றப்படுகிறது.

## *Thanthai Periyar Transport Corporation Buses*

* 78 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that most of the buses running in Thanthai Periyar Transport Corporation are in worst condition ; and

(*b*) if so, the steps proposed to be taken by the Government to alleviate this state of affairs ?

[1979 நவம்பர் 6

**தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.**

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு
கிறேன்—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் மிக மோசமான
நிலைமையிலுள்ள பேருந்துகளே அதிகமாக ஓடுகின்றன என்பது உண்
மையா ?

(இ) ஆம் எனில், இக்குறைபாட்டைப் போக்க அரசு என்ன நட
வடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) & (இ) தகுதிச் சான்றிதழ்
ஒன்றை சாலைப் போக்குவரத்து அதிகாரியிடமிருந்து பெற்ற பின்னரே
பேருந்துகள் செலுத்தப்படுகின்றன. மிக மோசமான நிலையில் உள்ள
பேருந்து எதுவும் ஓட்டப்படுவதில்லை, இருப்பினும் இக்கழகத்தில் பழைய
பேருந்துகள் பல உள்ளன என்பது உண்மையே. பழைய பேருந்துகளுக்குப்
பதிலாக படிப்படியாக புதிய பேருந்துகள் விடப்படுகின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தந்தை பெரியாரின் நூற்றாண்டு
விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி நிறைவு விழாவையும் கொண்டாடி
அவருக்கு நினைவு அஞ்சலியும் செலுத்திய இந்தக் காலத்தில் அவருடைய
பெயரால் ஓடுகின்ற, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து
கள் பல பழுதடைந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
ஒப்புக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
தந்தை பெரியார் அவர்களுடைய பெயருக்கு இழுக்கு தருகின்ற வகையிலே,
பொதுமக்கள் கேலி செய்கின்ற வகையிலே, அங்கே பல பேருந்துகள் ஓடிக்
கொண்டிருக்கின்றன. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.
தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய இந்த
ஆண்டிலேயே தென்னாற்காடு மாவட்டத்திலேயும், வட ஆற்காடு மாவட்டத்தி
லேயும் ஓடுகின்ற பழைய பேருந்துகளை மாற்றி, புது பேருந்துகளை விட
வேண்டும். அங்குள்ள பொதுமக்களுக்கும் தந்தை பெரியார் அவர்களுடைய
புகழுக்கும் அதன் மூலம் ஒரு நன்மையைச் செய்ய மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த
பிறகு திடீரென பழைய பேருந்துகளை வாங்கி விடவில்லை. மாறாக இந்த
ஆட்சி பொறுப்புக்கு வருகின்ற நேரத்திலே 8 வயதுக்கு மேற்பட்ட 112 பழைய
பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. அதனால் தான் பல வழித் தடங்களில்



1979 நவம்பர் 6]

பிரேக் டவுன் ஏற்பட்ட எண்ணம் இருந்தது. அதை உடனடியாகத் தடுக்க
வேண்டுமென்ற அடிப்படையில் 63 புதிய பேருந்துகளை வாங்கி முதல் ஆண்டு
விட்டோம். 85 பேருந்துகளை அடுத்த ஆண்டில் விடுவதற்கான நடவடிக்கை
களை மேற்கொண்டிருக்கிறோம். இன்னும் 8 வயதுக்கு மேற்பட்ட 53 பேருந்
துகளை மாற்றி புதிய பேருந்துகளை விட வேண்டியிருக்கிறது. வரும்
ஆண்டில் அவைகளையும் மாற்றி விடுவோம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அரசாங்க சார்பில் ஓடுகின்ற பேருந்து
கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு 'கன்டெம்' செய்யப்படுகின்றன ?
'கன்டெம்' செய்யப்படுகின்ற பேருந்துகள் எப்படி விற்கப்படுகின்றன ?
ஏலத்தின் மூலமா இல்லை வேறு முறையிலா ? நம்முடைய மாநிலத்திலா
இல்லை வேறு மாநிலத்திலா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 1977 ஆம் ஆண்டு வரை 12 வயது
வரை உள்ள பழைய பேருந்துகள் ஓட்டப்பட்டன. 12 ஆண்டுகளுக்குப்
பிறகு உள்ள பேருந்துகளை விற்கலாம் என்ற நியதி இருந்த போதிலும்,
அவைகளும் ஓட்டப்பட்டன. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, 8 வயதுக்கு
மேற்பட்டு 12, 14 வருடத்திற்கும் மேல் ஓடிய பழைய பேருந்துகளை எல்லாம்
கணக்கெடுத்து உடனடியாக ஒரு உத்தரவு போட்டு 8 வயதுக்கு மேற்பட்ட
பேருந்துகளை ஏலத்தில் விட வேண்டுமென்று முடிவெடுத்து இந்த முடிவை
நடைமுறைப் படுத்திக்கொண்டு வருகிறோம். 8 வயதுக்கு மேற்பட்ட
பேருந்துகளை 'ஓபன் டெண்டர்' மூலம் ஆக்ஷன் விடுகிறோம். சில சமயம்
8 பேர், 10 பேர் முன்னிலையில் ஓப்பன் டெண்டர் அடிப்படையில் ஏலத்தில்
விடுகின்ற முறையும் நடைமுறையில் இருந்து வருகிறது.

(பிற்பகல் 5-10)

**திரு. ஆ. திராவிடமணி :** பேருந்துக்கு வயது என்பது எந்த அடிப்படை
யிலே நிர்ணயிக்கப்படுகிறது ? ஒன்றாவது வயது என்பது எப்போதிலிருந்து
ஆரம்பிக்கிறது ? (சிரிப்பு) போக்க வயது என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சாலையைப் பயன்படுத்துவோரைக்
கொல்லக்கூடிய அளவுக்கு, ஒரு பேருந்தின் நிலை அது 20 ஆண்டை எட்டி
விட்டால் மோசமாக ஆகிவிடுகிறது. 20 ஆண்டு வயதுடைய பேருந்து
களைக் கூட முன்னர் அனுமதித்துக்கொண்டிருந்தார்கள். 10, 15, 20 ஆண்டு
கள் வயது உள்ளதைக் கூட நல்லமுறையில் இருந்தால் ஓட்டலாம். ஆனால்
15 ஆண்டுகளைத் தாண்டி விட்டால், "சேசிஸ் கண்டிசன்" மிகவும் பழுத
டைந்து விடுகிறது. 15 ஆண்டுகளுக்குக் கீழே உள்ள பேருந்துகளைத்
தான் சாலையில் விடவேண்டும் என்ற நடைமுறையைத்தான் நாம் கடைப்
பிடித்து வருகிறோம். அதே நேரத்தில், நஷ்டம் ஏற்படுத்தாமல், லாபமாக

[1979 நவம்பர் 6

ஆப்பரேஷன் எபிசியன்சி, எக்ஸ்ட்ரா மைலேஜ் கொடுக்கும் அளவுக்கு ஒரு
பேருந்து ஓட வேண்டுமென்றால், 8 ஆண்டுகளுக்கு உட்பட்டிருந்தால்தான்,
முடியும் என்ற அடிப்படையில், இப்போது 8 ஆண்டுகள் என்று வரையறுத்
திருக்கிறோம்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பழைய பேருந்துகளை ஓட்டுவது
தவிர்க்க முடியாதது என்றாலும் கூட, அவற்றுக்கு வேகக் கட்டுப்பாடு விதிக்
கும் எண்ணம் அரசுக்கு உண்டா? அதை மீறி ஓட்டினால் அந்த ஓட்டுநர்களை
தண்டிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உயிர்களைக் கொல்வதை எடுத்துக்
கொண்டால், பழைய பேருந்துகளும், புதிய பேருந்துகளும் உயிர்களைக்
கொல்லும் என்பதால், அனைத்துப் பேருந்துகளுக்கும் வேகக் கட்டுப்பாடு
விதிக்க இருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வரு
கின்றன.

திரு. க. இராமமூர்த்தி : பழைய பேருந்துகள் நிறைய ஓடுவது தந்தை
பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே தான் என்கின்ற குறை இருக்கிறது.
இந்தப் பேருந்துகள் வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில்
மட்டுமே இருக்கின்ற காரணத்தால் இந்த மாவட்டங்களுக்கு ஒரு தனியான
சலுகை செய்வதைப்போல இப்போது அங்கிருக்கும் பழைய பேருந்துகளி
னுடைய எண்ணிக்கையைக் குறைக்க அரசு முன்வருமா? ஏற்கெனவே பின்
தங்கிய இந்தப் பகுதிகளில் பேருந்துகளும் பின்தங்கியனவாக இருக்காத
நிலையை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
உணர்கின்ற குறைகள் எல்லாம் கடந்தகாலக் குறைகள். இந்த ஆட்சி,
பொறுப்புக்கு வந்த பிறகு கொணவட்டம், கிருஷ்ணாநகர், கடலூர், வேலூர்,
போன்ற இடங்களில் பணிக்களரிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். பணி மனை
கள் இல்லாமல் இருந்தால், தேவையான இன்ஸ்ட்ருமெண்ட் இல்லாமல் இருந்
தால், ரீ-கண்டிஷன் பண்ணவேண்டிய இன்ஃப்ராஸ்ட்டிரக்சர் இல்லாதிருந்
தால், மூன்றாண்டுகள், நான்காண்டுகள் வயதான பேருந்துகளைக் கூட
செம்மையாகப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே, 'மெயின்
டினன்ஸ் ஆஸ்பெக்ட்' மிகவும் முக்கியம் என்பதால், டெக்னிக்கல் பிரிவுக்கு
அதிக முக்கியத்துவம் கொடுத்து பணிக்களரிகளை ஏற்படுத்துகிறோம்.
புதுச்சேரி, விருத்தாசலம், விழுப்புரம், திண்டிவனம், சென்னையிலே தந்தை
பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பிரிவு இருக்கும் இடம் ஆகிய
அனைத்து இடங்களிலும் டெக்னிக்கல் பிரிவுக்கு முக்கியத்துவம் கொடுத்து
'ஆட்டோமொபைல் எஞ்சினியரிங் க்வாலிஃபைட் டெக்னோகிராட்' களை



1979 நவம்பர் 6]

பணியில் அமர்த்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து, அனைத்துப் போக்கு
வரத்துக் கழகங்களையும் விட மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும்
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கும், சோழன் போக்குவரத்துக்
கழகத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு, சென்ற
ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

திரு. செ. முத்துசாமி : வயது 8 என்று வரம்பு இருப்பதாக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த 8 வயதுக்கு மேற்பட்டிருக்கக்
கூடிய பேருந்துகளை ஏலம் விட்டுவிடுகிறார்கள். அப்படி ஏலம் விடும்
பேருந்துகளை எடுத்துக்கொண்டு போய் பிரைவேட் ஆப்பரேட்டர்கள் மீண்டும்
அவைகளை சாலையிலே விடுகிறார்கள். இப்படிப்பட்ட பழைய பஸ்களும்,
லாரிகளும் ரோடுகளிலே செல்கின்றன. இந்த வாகனங்கள் ஒரு பாக்டரி
விடும் புகை அளவுக்கு புகை விடுகின்றன. அதனாலே மக்களுடைய சுகா
தாரம் பயங்கரமாகக் கெடுகிறது. சென்னையிலே தான் இந்தக் கெடுதி
அதிகம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய தலை
மையிடத்திலேயே மிகவும் பயங்கரமாக ஒரு பெரிய பாக்டரிபோல் புகை
விட்டுக்கொண்டு இந்த வாகனங்கள் செல்கின்றன. இந்த நிலைமைக்கு ஒரு
முடிவு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வாகனங்களில் இருந்து வரும்
புகையால் ஏற்படும் 'ஏர்-பொல்யுஷன்' குறைக்கப்பட வேண்டும் என்பதிலே
அக்கறை கொண்டு, தினந்தோறும் கிட்டத்தட்ட 100-க்குக் குறையாத வாக
னங்கள் மீது வழக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.
ஆனால் தற்போது, கடந்த ஓராண்டு காலமாக வாகனங்கள் சற்று அதிகமாகப்
புகை விடுவதற்குக் காரணம், டீசல் பற்றாக்குறையினால் டீசலுக்குப் பதிலாக
மண்ணெண்ணெய் உபயோகப்படுத்துவதேயாகும். மண்ணெண்ணெய் உபயோ
கப்படுத்துவதனால், எஞ்சினின் தரம் குறைந்து அதனால் அதிகமான அள
வுக்குப் புகை வருகிறது. அதற்குக்கூட தற்போது நடவடிக்கை எடுத்து
வருகிறோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அதிகமாகப் பயணிகள் செல்லக்கூடிய
அல்லது அதிகமாக வசூலாகக் கூடிய வழித்தடங்களில் தந்தை பெரியார்
போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த பேருந்துகள் பெரும்பாலும் விடப்படு
வதில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : விரைவாகக் கேளுங்கள்,
அப்போதுதான் விரைவாகப் பதில் வரும், விரைவாக முடிக்கவும் இயலும்.

[1979 நவம்பர் 6

**திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் :** இவ்வாறு வருலாகக் கூடிய வழித்தடங் களில் விடப்படாததால், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்துக்கு வருமான இழப்பு ஏற்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால், இந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் மட்டுமல்ல, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் நெரிசல் அதிகமாக இருக்கின்ற வழித்தடங் களில் பேருந்துகளை விட வேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில்தான் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த ஆட்சி, பொறுப்புக்கு வருவதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக 300 பேருந்துகள் தான் விடப்பட்டன. 1977—78-ல் நாம் 900 பேருந்துகளையும், 1978—79 ஆம் ஆண்டில் 1200 பேருந்துகளையும் விட்டிருக்கிறோம். அரசினுடைய நிதி நிலை போதுமான தாக இல்லாததால், வெளியிலிருந்து கடன் வாங்கிக்கூட விட்டிருக்கிறோம். இந்தப் பணியை இன்னும் தீவிரப்படுத்தியிருக்கிறோம். வருமாண்டுகளில் இந்தக் குறைபாடுகளைக் குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பழைய, புதிய பேருந்துகளுக்கு வேகக் கட்டுப்பாடு உண்டு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மின்னல்வேகப் பேருந்துகளுக்கு வேகக் கட்டுப்பாடு உண்டா? அப்படிக் கட்டுப்பாடு உண்டு என்றால், அதிகபட்சம் எத்தனை கிலோமீட்டர் வேகத்தில் போகலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** 100 கிலோமீட்டர் வேகத்தில் செல்லலாம் என்று அனுமதிக்கப்பட்டிருந்த மின்னல் வேகப் பேருந்துகளை யெல்லாம் தற்போது விரைவுப் பேருந்தாக மாற்றி, 70 கிலோமீட்டருக்கு மேல் போகக் கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறோம். விபத்துக்களைத் தவிர்ப் பதற்காக இவ்வாறு செய்திருக்கிறோம்.

## *Accidents*

* 79 *Q*.—THIRU M. SANKARALINGAM . Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of persons who lost their lives during 1977 in bus, luxury bus and lorry accidents ;

(*b*) the number of (i) Government buses, (ii) private buses, (iii) lorries and (iv) luxury buses involved in the accidents ;



(*c*) the number of (i) drivers, (ii) conductors, (iii) passengers and (iv) pedestrians who lost their lives ; and

(*d*) the loss incurred by the Government due to these accidents ?

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977 ஆம் ஆண்டில் பேருந்து, மகிழ்வூந்து, பாரவூந்து, ஆகியவை களில் விபத்துக்கு உள்ளாகி இறந்தவர்கள் எத்தனை பேர்?

(இ) விபத்துக்குள்ளான வாகனங்களில் (i) அரசினர் பேருந்து, (ii) தனியார் பேருந்து, (iii) பாரவூந்து, (iv) மகிழ்வூந்து எத்தனை?

(உ) இறந்தவர்களில் (i) ஓட்டுநர்கள், (ii) நடத்துனர்கள், (iii) பயணிகள், (iv) நடந்து சென்றவர்கள் எத்தனை பேர்?

(எ) இவ்விபத்துக்களினால், அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக் கையிலிருந்து 1977 ஆம் ஆண்டில் மட்டும் விபத்துக்கள் ஏற்பட்டு, 1818 பேர்கள் இறந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. விபத்துக்கு உள்ளான பேருந்துகள், அரசுத் துறைக்கும், தனியார் துறைக்கும் சேர்த்து 900-க்கும் மேற்பட்டவைகள் என்றும், லாரிகள் 800-க்கு மேற்பட்டவைகள் என்றும் தெரிகிறது. ஆகவே, லாரிகள், பேருந்துகள் மூலமாகத்தான் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது தெளிவாகிறது. விபத்தில் இறந்தவர் களின் எண்ணிக்கையைப் பார்த்தால் விபத்துக்குச் சம்பந்தம் இல்லாமல் ரோட்டில் போய்க்கொண்டிருந்தவர்கள்தான் ஏறக்குறைய 1,400 பேர்கள் இறந்திருக்கிறார்கள். அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு என்ன என்ப தற்கு எந்தவிதமான புள்ளிவிவரமும் இல்லை. தகவல் இல்லை என்று இருக்கிறது. இந்தத் தகவலைச் சேகரிக்க அரசு முன்வருமா? விபத்துக்குச் சம்பந்தம் இல்லாமல் சாகிறவர்களுக்கு அதிக அளவு உதவி கொடுக்க அரசு முன்வருமா? இத்தகைய விபத்துக்களைக் குறைக்க என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அரசுக்கு ஏற்பட்ட இழப்பு என்பது, அரசுப் பேருந்துகள், அரசுக்குச் சொந்தமான ஊர்திகள் விபத்துக்கு உள்ளாகி சேதத்திற்கு உட்பட்டிருந்தால், அதனால் இழப்பு ஏற்படுகிறது. அரசுக்குச்

@ 131-134 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 6

சொந்தமான பேருந்துகள் விபத்துக்கு உள்ளாகின்றபோது,
நாம் தொகையைத் தருகின்றபோது, அதன் மூலமும் இழப்பு ஏற்படுகிறது. நஷ்டஈடாக
அந்த அளவுக்குக் கிடைத்த தகவலைத் தந்திருக்கிறேன்.
தடைந்த காரணத்தால், ரோடு விபத்துக்களில் அரசுப் பேருந்துகள் வாகனங்கள் பழு
மன்றி மோட்டார் வெகிக்கிள்ஸ் மெய்ன்டினன்ஸ் ஆர்கனைசேஷன் மட்டு
சொல்லப்படுகின்ற எம்.வி.எம்.ஓ.-க்கு உட்படுத்தப்பட்டிருக்கின்ற என்று
6,000 வாகனங்களில் எந்தெந்த வாகனங்கள் விபத்துகளுக்கு உட்பட்டன ஏறத்தாழ
தகவல் இல்லை. சேகரித்துத் தருகிறேன். என்ற
பொதுமக்கள் 1389 பேர் விபத்துக்கு உள்ளாகி சாலையைப் பயன்படுத்திய
மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இறந்திருக்கிறார்கள் என்று
நிலை. ஆனால், இதற்குப் பொறுப்பு சொன்னார்கள். அது உண்மை
கனைப் பொறுத்தவரையில், விபத்துக்குப் பல வாகனங்கள் மட்டுமல்ல. வாகனங்
ஓட்டுநர்கள் முறையாக சாலை விதிகளை காரணங்கள் இருக்கின்றன.
துக்கள் ஏற்படுகின்றன. அனுசரித்து ஓட்டாததால் விபத்
வரையில், இரண்டு ஓட்டுநர்களை தொலைதூர சரக்கு வாகனங்களைப் பொறுத்த
ஓட்டலாம். நியமித்தால்தான், செம்மையான முறையிலே
துக்கள் ஏற்படுகின்றன. இல்லையேல் உறக்கத்தின் காரணமாக பல நேரங்களிலே விபத்
தூர சரக்கு வாகனங்களில் இம்மாதிரி ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க தொலை
வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். இரண்டு ஓட்டுநர்களைக் கண்டிப்பாக அமர்த்த
எடுக்கிறோம். மீறினால் கடுமையான நடவடிக்கை
காரணத்தால், பல சரக்கு வாகனங்களில் ஓட்டுநர்கள் குடித்துவிட்டுச் சென்ற
ஆல்க்ஹால் விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காகத்தான் 'ப்ரீத்
சோதனை அனலைசர்' என்ற ஒரு இன்ஸ்ட்ருமென்ட் மூலம் அவ்வப்போது
எடுத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஓராண்டு காலமாக நடவடிக்கை
விதிமுறைகளைச் வருகிறோம். அதோடு, பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு சாலை
படுத்தும்போது, சொல்வதன் மூலம், குழந்தைகள் சாலையைப் பயன்
மனோநிலை எச்சரிக்கையாக இருக்க வழிவகை செய்திருக்கிறோம்.
களைப் பதியவைக்க இளம் வயதிலேயே, இளம் உள்ளத்திலே இந்த விதி
கொடுக்க வேண்டும், பள்ளிகளிலே குழந்தைகளுக்குச் சொல்லிக்
முறையில் வேண்டும் என்னும் உத்தரவைப் போட்டு, அதுவும் தற்போது நடை
படுகின்ற இருக்கிறது, அதற்கு மேலாக, 'டெக்னோகிராஃப்' என்று சொல்லப்
பயன்படுத்தப்பட்டு இன்ஸ்ட்ருமென்ட் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தற்போது
நர்கள் செல்கிறார்கள் வருகிறது. எந்த அளவுக்கு அதிகமான வேகத்தில் ஓட்டு
எடுக்க வசதியாக என்பதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை
காலமாக தமிழ் இருக்கும் என்ற அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுக்
படுத்தி நாட்டிலே சேரன் போக்குவரத்துக் கழகம் இதைப் பயன்
பாட்டை வருகிறது. இருந்தும், இதன் மூலமாக ஒரு செம்மையான கட்டுப்
அளவிலே இன்னும் கொண்டுவர முடியாத நிலை இருக்கிறது. அரசு இந்த
தற்போது நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



1979 நவம்பர் 6]

(பிற்பகல் 5-20)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சென்னை நகரத்தைவிட மிகப் பெரிய நகரங்களான பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் சாலை விபத்துக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதாகவும், சென்னை நகரத்தில் மட்டும் 40 சதவிகிதத்திற்கும் அதிகமான சாலை விபத்துக்கள் நடைபெறுவதாகவும் சில பத்திரிகைகளில்—குறிப்பாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்—எழுதப் பட்டிருந்தது. எனவே சென்னை நகரில் மட்டும் சாலை விபத்துக்கள் அதிகரிக்க ஏதேனும் காரணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இந்த விவரம் கிடைத்தது என்று எனக்குப் புரியவில்லை. என்றாலும், சென்னை நகரைப் பொறுத்தவரையில், அதிகமான சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஒரு காரணம், இங்குள்ள சாலைகள் மிகக் குறுகலாக இருப்பதுமாகும். அடுத்து, 'Peak hours' என்று சொல்லப்படுகிற போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்களில்—அதாவது காலை, மாலை நேரங்களில் அலுவலகங்களுக்குச் செல்லும்போது—அனைத்துப் பணியாளர்களுமே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பணிக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புவதாலும், அதைப் போலவே ஒரு குறிப்பிட்ட நேரத்திலேயே திரும்ப வேண்டுமென்று விரும்புவதாலும், கிட்டத்தட்ட 1300 பேருந்து காலை நேரத்தில் குறிப்பாக காலை 9 மணி முதல் 10-30 மணி வரையிலும், மாலையில் 4 மணி முதல் 5-30 மணி வரையிலும் இயக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்றவையும், டாக்சிகளும் மற்ற வாகனங்களும் அந்த நேரத்தில்தான் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளின் காரணமாகவும் அதிகமான விபத்துக்கள் சென்னையில் ஏற்படு கின்றன. எனவேதான் பணி நேரங்களை ஓரளவு 'ஸ்டேகரிங்' செய்வதன் மூலம் சாலை விபத்துக்களைத் தவிர்க்க முயற்சிக்கிறோம். பம்பாயில் இருப் பதைப்போல் காலை 8, 9, 10, 10-30 மணி என்று பல்வேறு அலுவலகங்கள் செயல்படும் நேரங்கள் மாற்றியமைக்கப்படுமானால், பெருமளவுக்குத் தற்போது ஏற்படுகிற சாலை விபத்துக்களைக் குறைக்க முடியுமென்று நம்புகிறோம். அரசு அதற்கான முயற்சிகளைத்தான் மேற்கொண்டிருக்கிறது.

**திரு. ம. சங்காலிங்கம் :** போக்குவரத்து வாகனங்களின் ஓட்டுநர்கள் பல நேரங்களில் மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது ஓரளவுக்கு உண்மை. குறிப்பாக லாரிப் போக்குவரத்தில் மிக அதிக மான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் இரவு நேரங்களில் தொடர்ந்து வாகனங்களை ஓட்டுவதுதான். எனவே இரவு நேரத்தில் ஒரு

குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு லாரிகளை ஓட்டுவதற்குத் தடை விதிக்கலாம். அல்லது லாரிகளின் வேகக் கட்டுப்பாட்டை உறுதி செய்யலாம். அதாவது மணிக்கு 60 கிலோமீட்டருக்கு மேல் போகாத வண்ணம் அந்த மோட்டாரின் வேகத்தை 'அரெஸ்ட்' செய்ய அரசு முன்வருமா? பம்பாய், டெல்லி போன்ற நகரங்களில் மதுவிலக்கு அமுலில் இல்லாமலிருந்தும்கூட, அங்கெல்லாம் இந்த அளவுக்குச் சாலை விபத்துக்கள் ஏற்படுவதில்லை என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் விளக்கமாகப் புள்ளிவிவரம் கொடுத்து அண்மையில் வெளியிட்டிருந்தார்கள். ஆக, அங்கெல்லாம் மதுவிலக்குக் கட்டுப்பாடு இல்லாமல் இருக்கும்போதே, அங்கேயுள்ளவர்கள் மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டுகிற சூழ்நிலை இருந்தும், சாலை விபத்துக்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு பரிசீலிக்குமா? அங்கெல்லாம் வேகக் கட்டுப்பாட்டை அமுல்படுத்துகிறார்கள் என்று எண்ணுகிறேன். எனவே அத்தகைய முறையினை இங்கே அமுல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஒரு குறிப்பிட்ட வேகத்திற்குள்தான் போக்குவரத்து வாகனங்களை ஓட்ட வேண்டுமென்று கட்டுப்பாடு இந்தியாவில் எல்லா இடங்களிலும் இருக்கிறது. என்றாலும் ஒரு குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் போக்குவரத்து வாகனம் ஓட்டப்படாமல், தானாகவே தடுக்கக்கூடிய இன்ஸ்ட்ருமெண்ட் எங்கேயும் பொருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அண்மையில் நடந்த மாநாட்டில் கூடம் இந்தமுறை பற்றி பேசப்பட்டது என்று அறிகிறேன். அவர்கள் அதில் எந்த அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. மணிக்கு 60 அல்லது 70 கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் ஓடாத அளவுக்கு இன்ஸ்ட்ருமெண்ட் உதவியாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல், நாமும் அதை நல்ல முறையில் கொண்டுவந்து பார்க்கலாம். ஆனால் அங்கே அது எந்த அளவுக்கு வெற்றிகரமாக இருக்கிறது என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அந்த ஆய்வுக்குப் பிறகு நாம் அதைப்பற்றி முடிவு செய்யலாம்.

**திரு. பா. ரா. தாமன் :** நெடுஞ்சாலையிலுள்ள சாலைகள் வளைவுகள் இன்றி நேராக்கப்படுவதால்தான் நெடுஞ்சாலைகளில் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. மேல்நாடுகளில் சாலை விபத்துக்களைத் தடுக்க நெடுஞ்சாலைகளில் வளைவுகளை ஏற்படுத்தி வைப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? இதன் காரணமாகப் போக்குவரத்து வாகனங்கள் வேகமாகச் செல்வது தடுக்கப்படுகிறது என்பது உண்மையா? இந்தக் காரணத்தினை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நெடுஞ்சாலைப் பிரிவைச் சார்ந்த சாலைகள் நேராக்கப்படும்போது, வாகனங்களை வேகமாக ஓட்டிச் செல்லலாம் என்ற உணர்வு ஓட்டுநர்களுக்கு ஏற்படுகிற காரணத்தால், ஒருவேளை சாலை விபத்துக்கள் அதிகரிக்கலாம் என்று எண்ணுகிறேன். மேல்நாடுகளில்கூட சாலைகள் நேராகத்தான் இருக்கின்றன. ஆனால் நேராக இருக்கும் சாலைகளைவிட வளைந்து செல்லுகிற சாலைகளில்தான் அதிகமாக விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதுதான் நடைமுறையிலுள்ள உண்மையாகும்.

**திரு. ஈ. எஸ். வேங்கடேசன் :** ஓட்டுநர்கள் சரியான பயிற்சியில்லாமல் இருப்பதும், சரியான லைசென்ஸ இல்லாமல் இருப்பதும் போன்ற காரணங்களால்தான் சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்று சொல்லப்படுகிறதே, அதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஓட்டுநர்களுக்குச் சரியான பயிற்சி இருக்க வேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. எனவே தான் குறைந்தபட்சம் 8-வது வகுப்புவரை படித்தவர்களுக்குத்தான் ஓட்டுநர் உரிமம் வழங்க வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்குக்கூட கட்டாயமாக மூன்று மாத காலப் பயிற்சி தர வேண்டும்; அவர்களுக்குச் சாலை விதிமுறைகளைப்பற்றியும், விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றியும் செம்மையாகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு ஏற்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம். தற்போது அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆட்டோ ரிக்ஷா, மற்றும் டாக்சி ஓட்டுநர்களும்கூட எங்களுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ரோடு டிரான்ஸ்போர்ட்டு என்பதன் மூலமாக பயிற்சி எடுத்துக்கொள்ள முன்வந்திருக்கிறார்கள். படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் இந்த முறை செயல்படுத்தப்படும்போது, சரியான பலன் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்து, திரு. க. இராமமூர்த்தி, வினாவைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** சாலை விபத்துக்களில் அதிகமான எண்ணிக்கையில் இறந்தவர்கள் பெரும்பாலும் தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். அதற்குக் காரணம் சென்னையை நோக்கி வரும் பேருந்துகள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் மிக அதிகமாகச் செல்லும் நெடுஞ்சாலை தென்னாற்காடு மாவட்டத்தில் இருப்பதும், தென்னாற்காடு மாவட்டம் சென்னையை ஒட்டி அமைந்திருப்பதுமேயாகும். தமிழகத்திலிருக்கிற அத்தனை பேருந்துகளும், லாரிகளும், சென்னையை நோக்கி வரும்போது, பெரும்

[1979 நவம்பர் 6

பாலும் இந்தப் பகுதிகள் வழியாகத்தான் வந்து சேருகிற நிலை இருக்கிறது. இதன் காரணமாகவே அதிகமான சாலை விபத்துக்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக தென் னாற்காடு மாவட்டத்திலுள்ள நெடுஞ்சாலையை 'Danger Zone' என்று அறிவித்து அந்தப் பகுதியில் கடுமையான போக்குவரத்துக் கண்காணிப்பைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா? அடுத்து, லாரிகள் நெடுஞ்சாலை களில் ஓரங்களில் குவிந்து நிறுத்தப்படுவதன் காரணமாக அங்கெல்லாம் சாராயக் கடைகள் மற்றும் பிற கடைகள் ஏற்படுகின்ற நிலைமையும் இருக் கின்றது. எனவே இதனையும் அகற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 'Danger Zone' என்று ஒரு குறிப்பிட்ட சாலையை ஆக்குவது என்பது ஆய்ந்து எடுக்கப்பட வேண்டிய ஒரு முடிவாகும். நெடுஞ்சாலை வழித்தடங்களில் அதிகமான எண்ணிக்கையில் சில குறிப்பிட்ட இடங்களில் லாரிகள் நிறுத்தப்படுவதன் காரணமாகவும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற தகவல் அரசுக்குக் கிட்டியிருக்கிறது. 'ஆல் இண்டியா டிரான்ஸ்போர்ட்டு டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' கூட்டத் தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைகளில் சிறு சிறு தங்குமிடங்கள் அமைத்து அங்கேதான் வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. தமிழகத்தில்கூட நாம் அதை அமுல் படுத்த இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் நிறைவேறும் என்று தெரிவித்துக்கொள் ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: முன்னேற்றம். அடைந்துள்ள வெளிநாடு களில் இரட்டைப் பாதை முறை—அதாவது போக்குவரத்து வாகனங்கள் போவதற்கு என்று ஒரு பாதையும், வருவதற்கு என்று ஒரு பாதையும் இருப் பதன் காரணமாக, அங்கெல்லாம் மிகக் குறைவான சாலை விபத்துக்கள் ஏற் படுவதாகச் சொல்லப்படுகிறதே. அப்படிப்பட்ட முறையை தமிழகத்திலும் கடைப்பிடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழகத்தில் மட்டுமல்ல, நான் அறிந்த வரையில், அனைத்து மாநிலங்களிலுமே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகிற அளவுக்கு செம்மையான தனிவழிச் சாலை ஏற்பட வேண்டுமென்ற எண்ணம்தான் இருக்கிறது. எனினும் தற்போதைய நிதிநிலை அதற்கு இடம் தராத காரணத்தால், படிப்படியாக அதை நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்பது அனைவருடைய எண்ணமாகும்.

புலவர் புலமைப்பித்தன்: சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு ஊக்க போனஸ் வழங்கும் முறை இருப் பதன் காரணமாக, ஒரு பேருந்தை இன்னொரு பேருந்து முந்திக் கொண்டு



1979 நவம்பர் 6]

சென்று அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் ஊழியர்களிடையே இருப்பதும் சாலை விபத்துக்கள் அதிகமாக நடைபெறக் காரணமாக இருக்கிறது. இந்த வகையில் ஊக்க போனஸ் அளிப்பதேகூட பயணிகளின் உயிரைப் போக்கக் காரணமாக அமைகிறது என்பதால், இந்த முறை இருக்க வேண்டுமா என்று அரசு எண்ணிப் பார்க்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சாலை விபத்துக்களுக்கு ஊக்க போனஸ் அளிப்பதும் ஒரு காரணம் என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. காரணம், ஒரு ஓட்டுநர் யாரேனும் உயிரிழக்கக்கூடிய அளவுக்கு ஒரு விபத் துக்குக் காரணமாக இருந்தால், அவரை நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. கடந்த 1½ ஆண்டுக் காலமாக அதை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே ஊக்க போனசைவிட, விபத்தின் காரணமாக பணி நீக்கம் ஏற்படுகிறது என்ற பயம், ஓட்டுநர்களுக்கு இருக்கிறது. பயணிகளுக்குப் பலன் உள்ள வகையிலும், பொது மக்களுக்குப் பலன் தருகிற வகையிலும் ஊக்க போனஸ் முறை நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## *Bus Concession to Physically Handicapped Students.*

*80 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to give free bus pass facility to the physically handicapped students, in Madras City; and

(*b*) if so, whether there is any proposal to extend the same to such students in other places also?

## உடலூனமுற்ற மாணவர்களுக்கு பேருந்துச் சலுகை.

திரு. பா.ரா. தாமஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள உடலூனமுற்ற மாணவர்களுக்கு இலவச பேருந்துப் பயண அனுமதிச் சீட்டு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த வசதியினை, பிற இடங்களில் உள்ள அத்தகைய மாணவர்களுக்கும் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(பிற்பகல் 5-30)

**திரு. பா. ரா. தாயஸ்:** சென்னை மாநகரையொட்டிச் செல்கின்ற பஸ்களில் உடல் ஊனமுற்ற மாணவர்கள் பயணம் செய்ய இலவசப் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படுவதைப் போல, பிற மாவட்டங்களில் உள்ள உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும் இலவச பயணச் சீட்டுக்களை வழங்க மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து ஆணையை வெளியிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** சென்னை நகர் நீங்கலாக தமிழகத்தின் மற்றப் பகுதிகளில் உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குச சலுகை வழங்கும் செயற்குறிப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகிற அளவிற்கு மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் இந்தச் சலுகையை வழங்கலாமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யலாம்.

**திரு. செ. முத்துசாமி:** சென்ற முறை மே திங்களில், கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளி மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல கட்டணச் சலுகை வழங்கப்படுமென்று அறிவித்தார்கள். அது இப்போது நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கிறதா? கிராமங்களில் செல்லக்கூடிய அரசு பஸ்களின் எண்ணிக்கை குறைவு. ஆகவே தனியார் பஸ்களிலும் இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிட முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேருந்துக் கட்டணச் சலுகை பட்டணத்து மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு, கிராமப்புற மாணவர்களுக்கு அளிக்கப்படாமல் இருந்து வந்தது. அந்தக் குறை நீக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு அந்தத் திட்டத்தை கிராமப் புறத்திலும் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். மாவட்ட அளவில் அரசுப் பேருந்துகளில் செல்லுகிற மாணவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. தனியார் பேருந்துகளிலும் இந்தச் சலுகை நடைமுறைக்கு வரவேண்டுமென்பதற்காக மோட்டார் வாகன விதிமுறைகளை மாற்ற உத்தரவிட்டிருக்கிறோம்.

(குறுகிய கால வினா.)

*Teachers of Agricultural University*

* 1 Q.—Dr. T. R. JANARTHANAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that the Teachers of the Agricultural University have demanded higher pay; and

(*b*) if so, the action taken thereon?



விவசாயப் பல்கலைக் கழக ஆசிரியர்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விவசாயப் பல்கலைக் கழக ஆசிரியர்கள், சம்பள உயர்வு கோரியுள்ளனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சம்பள உயர்வு (increase in pay scales) கேட்டு, கோரிக்கை எதும் அரசிடம் இல்லை. ஆனால், அவர்களது சம்பள விகித முறையில் அறுதியிடல் (நிர்ணயம் செயல் fixation) வேண்டி கோரிக்கைகள் பெறப்பட்டு, அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** உதவிப் பேராசிரியர்கள் தங்களுடைய சம்பளத்தை ரூபாய் 1,100 என்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும், உதவிப் பேராசிரியர்கள் பத்தாண்டுகள் பணியாற்றியிருந்தால், இந்த ஊதியத்தை அவர்களுக்கு நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய நீண்டகாலக் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை அரசு ஏற்று விரைவிலே ஆணையை வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அந்தக் கோரிக்கைகளும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன.

உடுக்குறியிடாத வினாக்கள்

*Moratorium on Payment of Lease Arrears due to Temple Lands.*

1. Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the Advisory Committee of the Hindu Religious and Charitable Endowments Department has requested the Government to exempt temple lands from the moratorium on payment of lease arrears;

(*b*) the stand of the Government in the matter; and

(*c*) the total amount of lease arrears due to the temples under the control of the Hindu Religious and Charitable Endowments Department, till March, 1977?

ப.—

(அ) ஆம்.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

(உ) 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரை நிலுவையில்
இருக்கும் மொத்த குத்தகை பாக்கி ரூ. 14,72,89,992 ஆகும். 1978 ஆம் ஆண்டு
ஜூன் திங்கள் 30 ஆம் நாள் வரை (பசலி 1387 முடிய) நிலுவை
ரூ. 19,15,64,521 ஆகும்.

கைதிகட்கு வழங்கப்படும் உணவுப் பொருள்கள்.

2. கே.—திரு. க. அறிவழகன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்
கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி போன்ற ஊர்களில்
உள்ள மத்திய சிறைகளில் கைதிகட்கு என்னவிதமான உணவுப் பொருள்கள்
வழங்கப்படுகின்றன?

(இ) மேற்படி உணவுப் பொருள்கள் தயாரிக்கத் தேவையான
பொருள்கள் எவ்வாறு வாங்கப்படுகின்றன?

(உ) 1978-79-ல் 20—11—1978 வரை வாங்கப்பட்ட ஒவ்வொரு
பொருளுக்கும், தனித்தனியாக நிர்ணயிக்கப்பட்ட விலை என்ன?

ப.—

விபரங்கள் அடங்கிய அறிக்கை@ ஒன்று மேலவை முன் வைக்கப்
பட்டுள்ளது.

*Committal Cases.*

3. *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister
for Law be pleased to state:

(*a*) the total number of committal cases (under section 209,
Cr. P.C.) pending in the various Magistrates' Courts as on 1st
February 1979;

(*b*) the number of cases that are pending (i) for over 1 year,
(ii) for over 6 months and (iii) for over 2 months;

(*c*) the number of the accused involved in each category;
and

(*d*) the number, among them, who are in jail in each cate-
gory?

@ 135-150 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



ப.—

(அ) 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1 ஆம் நாள் அன்று பல்வேறு
குற்றவியல் நீதிமன்றங்களில் (குற்றவியல் நடைமுறை சட்டத் தொகுப்பின்
பிரிவு 209-ன் கீழ்) மேல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிலுவையி 301
லிருக்கும் வழக்குகளின் மொத்த எண்ணிக்கை

(இ) மேல் விசாரணைக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருக்கும்
வழக்குகளின் எண்ணிக்கை:— 54

(i) ஓராண்டிற்கு மேல் 41

(ii) ஆறு மாதங்களுக்கு மேல் 116

(iii) இரு மாதங்களுக்கு மேல்

(உ) நிலுவையிலிருக்கும் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின்
எண்ணிக்கை:— 554

(i) ஓராண்டிற்கு மேல் 210

(ii) ஆறு மாதங்களுக்கு மேல் 819

(iii) இரு மாதங்களுக்கு மேல்

(எ) நிலுவையில் இருக்கும் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டு சிறை
யில் இருப்பவர்களின் எண்ணிக்கை:— 1

(i) ஓராண்டிற்கு மேல் 9

(ii) ஆறு மாதங்களுக்கு மேல் 73

(iii) இரு மாதங்களுக்கு மேல்

*Sessions Cases.*

4. *Q.*—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister
for Law be pleased to state:

(*a*) the number of Sessions Cases pending for over (i) one
year, (ii) six months and (iii) two months in the Sessions and
Assistant Sessions Courts in Madras City and in the Districts;
and

(*b*) the number of the accused involved who are in jail in each
category?

ப.—

(அ) & (இ) ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 151 ஆம் பக்கத்தில் இணைப்புIV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

### *Unearthing of Valuable Idols.*

5. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that valuable idols were unearthed during the month of February, 1978, at Muthupet, Thanjavur district;

(*b*) if so, the number of idols, their description, value and the period to which they belong; and

(*c*) whether they will be placed at the local temple for worship by the residents?

ப.—

(அ) ஆம்.

(இ) & (உ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, முத்துப்பேட்டை டவுன் (136 தெற்கு காடு கிராமம்) கல்கேணி தெருவில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் குடிநீர் வழங்குவதற்கு குழாய்களைப் பதிப்பதற்கு மேற்படி தெருவில் பள்ளம் வெட்டும்போது புல எண் 108/20, வீதி புறம்போக்கில் பள்ளம் வெட்டிய கூலி ஆட்கள் கடந்த 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் தேதியன்று கீழே குறிப்பிடப்பட்ட பொருள்களைப் புதைப்பொருளாகக் கண்டெடுத்தனர் :—

| வரிசை எண். (1) | புதை பொருள் விபரம். (2) | உயரம். (3) | எடை கி. கிராம். (4) | உலோக மதிப்பு. (5) ரூ. பை. |
|---|---|---|---|---|
| 1 | திருவாட்சியுடன் நடராசர் | 3'11" | 142.000 | 2,556.00 |
| 2 | நடராசர் சிலையின் பீடம் | 0.10" 1' 7" | 64.000 | 1,152.00 |
| 3 | சிவகாமி அம்மன் சிலை நெ. 1 | 3' 1" | 53.500 | 963.00 |
| 4 | சிவகாமி அம்மன் சிலை நெ. 2 | 3' 0" | 46.500 | 837.00 |
| 5 | சிவகாமி அம்மன் சிலை சிறியது நெ. 1 | 1'11" | 16.000 | 238.00 |



| வரிசை எண். (1) | புதைபொருள் விவரம் (2) | உயரம் (3) | எடை கி, கிராம் (4) | உலோக மதிப்பு (5) ரூ. பை |
|---|---|---|---|---|
| 6 | சிவகாமி அம்மன், சிலை சிறியது நெ. 2 | 1"10" | 12.500 | 225.00 |
| 7 | ஒரே பீடத்தில் சோமாஸ்-கந்தருடன் சிவன்—பார்வதி சிலை | 2' 3" | 91.000 | 1638.00 |
| 8 | பிரதோஷநாதன் (சிவன்—பார்வதி நிற்கும் நிலையில்) | 1' 3" | 11·000 | 198.00 |
| 9 | கால்கள் உடைந்த சண்டிகேஸ்வரர் (பாதங்கள் இல்லை) | 1" 7" | 15.500 | 279·00 |
| 10 | நிற்கும் நிலையில் உள்ள ஒரு வினாயகர் | "1 6" | 20.000 | 360.00 |
| 11 | சூலமும் கொடியும் ஏற்றி நிறுத்தக் கூடிய சிறிய பீடம் | 0' 9" | 3.500 | 6[illegible].00 |
| 12 | பிக்ஷாடனர் | 1"11" | 19.000 | 342.00 |
| 13 | திருவாட்சி நெ. 1 | 1' 9" | 4.500 | 81.00 |
| 14 | திருவாட்சி நெ. 2 | 1" 7" | 2.500 | 45.00 |
| 15 | நடராசர் சிலையிலிருந்து உடைந்த நாகத்தின் தலை (எடையும் மதிப்பும் ஒன்றாவது இனத்துடன் சேர்க்கப்பட்டது) | 0" 4" | .. | .. |
| 16 | கடல் நுரையினால் செய்யப்பட்ட சிறிய வினாயகர் | .. | மதிப்பு இல்லை | .. |
| 17 | கருப்பு கடப்பை கல்லினால் செய்யப் பட்ட நிற்கும் நிலையில் உள்ள வினாயகர் | 1' 5" | .. | 5.00 |
| | மொத்தம் | .. | 601.500 | 9032.00 |

புதைபொருட்கள் சட்டம் 1878 பிரிவு 5 (ஏ)-ன்படி புதை பொருள் களின் உரிமை குறித்து விசாரணை செய்யப்பட்டு, புதை பொருள் சட்டப் பிரிவு 9-ன் படி புதை பொருள்கள் யாருக்கும் உரிமை இல்லாத சொத்து ஏனக் கருத 25—1—1979-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்போ தைக்கு இவைகளை உள்ளூர் கோயிலில் வைப்பதற்கான கருத்துரு ஏதும் இல்லை. இப்புதை பொருள்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கோ அல்லது தஞ்சை கலைக் கூடத்திற்கோ தேவைப்பட்டால், புதை பொருட்கள் சட்டம் 16-ன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவு செய்யப்படும். இப் புதை பொருள்கள் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தன என்பது தெரியவில்லை. ஆனால், பலநூறு வருடங்களுக்கு முன்பு புதைக்கப்பட்டிருக்கலாம் என்பது விசாரணையில் தெரியவருகிறது. மேற்படி புதை பொருள்கள் தற்போது திருத்துறைப்பூண்டி வட்டாட்சியின் அலுவலகத்தில் பாதுகாப்பில் உள்ளன.

### உயர்நிலைப் பள்ளி பதிவெழுத்தர்கள்.

6. கே.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதவிபெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தகுதி பெற்ற பதிவு எழுத்தர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த உயர் கல்வித் தகுதிக்கான ஊக்க ஊதியம், அரசாணை ஓ.மு.. 220730/டி4/74-ல், நாள் 6—11—1974-ன் படி திருத்தப்பட்டு, அவர்கள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

(உ) பிடித்தம் காரணமாக அந்த பதிவு எழுத்தர்களுக்கு ஏற்பட்டிருக் கிற பொருளாதார இன்னலைத் தவிர்க்க அரசு முன்வருமா ?

ப.—

(அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பதிவெழுத்தர்கள் 'பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு' தகுதியிருப்பின் அவர்களுக்கு மட்டும் அடிப்படைச் சம்பளம் ரூ. 146 கொடுக்கலாம். அதன்படி யாவருக்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால், பள்ளி நூலக, ஆய்வுக்கூட சிற்றெழுத்தர் களுக்கு (அட்டெண்டர்ஸ்) இந்த உயர்வு ஊதியம் பொருந்தாது. தவறுதலாக ரூ. 146 விகிதத்தில் ஊதியம் பெற்றவர்களிடமிருந்து கூடுதலாக அவர்கள் பெற்ற தொகையை பிடித்தம் செய்யப்படுகிறது.

(உ) தமிழ்நாடு தனியார் பள்ளி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் அல்லாப் பணியாளர் சங்கத்திடமிருந்து இது தொடர்பாக வந்துள்ள கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



### Seniority of Teachers

7. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the for Education be pleased to state :

(a) whether the seniority in service or the seniority in the acquiring of a Post-graduate qualification is the criterion for the appointment of teachers to handle Higher Secondary Classes ;

(b) whether the same has already been decided on a policy level; and

(c) if not, the reason therefor?

ப.—

(அ) முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்களின் பணிமூப்பு அடிப்படையாகக் கொண்டு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யப் படுகிறது.

(இ) & (உ) அரசின் பரிசீலனையிலுள்ளது.

### அப்பிரண்டிஸ் ஆசிரியர்கள்

8. கே.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அப்பிரண்டிஸ் ஆசிரியர்களுக்கு தேர்வு மற்றும் சிறப்பு நிலைகள் வழங்கப்படும்போது, அவர்களது அப்பிரண்டிஸ் பணிக்காலத்தையும் சேர்த்து கணக்கிடப்படுமா ?

(இ) ஆமெனில், அதற்கான உத்திரவு எப்போது இடப்படும் ?

ப.—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### பனை ஓலை கைவினைப் பொருள்கள்

9. கே.—திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை ஓலைகள் மூலம் தயார் செய்யப்படும் கைவினைப் பொருள் உற்பத்திக்கான பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், எத்தனை இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(உ) ஆண்டுதோறும் எத்தனை பேர்களுக்கு பயிற்சி அளிக்கப்படு கின்றது ?

(எ) பயிற்சியில் சேர்வதற்கு என்ன அடிப்படை தகுதிகள் வரை யறுக்கப்பட்டுள்ளன ?

(ஐ) எந்த அமைப்பின்மூலம் பயிற்சியாளர்கள் தேர்வு நடைபெறுகிறது?

ப.—

(அ) ஆம்.

(இ) 55 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(உ) 1977-78 ஆம் ஆண்டில் 630 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டது. 1978-79 ஆம் ஆண்டிலிருந்து 842 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

(எ) பயிற்சி நிலையங்களில் சேர்க்க எந்தக் கல்வித் தகுதியும் தேவை இல்லை. இருப்பினும் முன்னுரிமை, விதவைகள், கணவரால் கைவிடப்பட் வர்கள், அரிசனங்கள், உடல் ஊனமுற்றவர்கள், பிற்பட்ட வகுப்பினர்க ஆகியோருக்கு அளிக்கப்படுகிறது.

(ஐ) இராமநாதபுரம்-மதுரை மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவ சம்மேளனத் தனி அலுவலரும், சம்பந்தப்பட்ட பகுதிகளின் வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

*Modernisation of Bullock-cart.*

10. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether any steps have been taken by the Government for modernisation of the bullock-cart; and

(*b*) if so, the details thereof?

ப.—

(அ) & (இ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம், கோவையி லுள்ள பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியுடன் கலந்தாலோசித்து இது குறித்துப் பரிசீலித்து வருகிறது.



*Summer Crops*

11. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) the progress made in the cultivation of summer crops in Thanjavur District;

(*b*) the crops recommended and the amount allotted for the above purpose;

(*c*) whether any special incentives are being offered ; and

(*d*) if so, the details thereof?

ப.—

ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*Sheep Breeding Co-operative Societies Minister.*

12. *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the names of the villages in Tindinvanam Taluk wherein Sheep Breeding Co-operative Societies are functioning as on 1-4-1979?

ப.—

ஏப்ரல் 1, 1979 நாள் அன்று, திண்டிவனம் தாலுகாவில் வட சிறுவா ரூரில், ஒரு ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் இயங்கிக் கொண்டு வருகிறது.

**கோழிகள், ஆடுகள் விநியோகம்.**

13. கே.—திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) திண்டிவனம் வட்டத்தில் மைலம், மரக்காணம், வானூர், ஒலக்கூர் ஆகிய ஒன்றியங்களில் தனித்தனியே எத்தனை கிராமங்கள் கோழி, ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் பயன் அடைந்துள்ளன ?

(இ) இந்தக் கிராமங்களில் கால்நடை பராமரிப்புத் துறையினால் விநியோகிக்கப்பட்டுள்ள கோழிகள், ஆடுகள், ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு ?

@ 152-153ம் பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 6

ப.—

(அ) ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*), அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தொழில் நுட்பப் பயிலக ஆசிரியர்களின் போராட்டம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம், பாலிடெக்னிக் ஆசிரியர்கள் போராட்டம் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக் ஆசிரியர்கள் நீண்ட காலமாகவே தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள். பாலிடெக்னிக் ஆசிரியர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதால், அரசுக்கு மிகுந்த செலவு வந்துவிட முடியாது. போராட்டத்திற்கு முன்னதாகவே அவர்களை அழைத்துப் பேசி, வேறு வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்திருந்தால் இப்பிரச்சினையில் தீர்வு காண முடிந்திருக்கலாம். அது மட்டுமல்லாமல், மற்றொரு ஆபத்தும் வந்திருக்கிறது பாலிடெக்னிக் ஆசிரியர்கள் இப்போது நடைபெறுகிற தேர்வினைப் புறக்கணிக்கிறார்கள். மாணவர்களும் அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். மொத்தமுள்ள 30 பாலிடெக்னிக்குகளில் பத்து பாலிடெக்னிக்குகள், அதாவது குறிப்பாக

1. அரசினர் தொழில்நுட்பப் பயிலகம், தூத்துக்குடி,
2. அரசினர் தொழில்நுட்பப் பயிலகம், திருச்சி,
3. சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சி,

@ 153-154 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 நவம்பர் 6] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

4. ராமசாமிராஜா தொழில்நுட்பப் பயிலகம், இராஜபாளையம்,
5. அரசினர் தொழில்நுட்பப் பயிலகம், காரைக்குடி,
6. அரசினர் தொழில்நுட்பப் பயிலகம், கோயமுத்தூர்.
7. அரசினர் தொழில்நுட்பப் பயிலகம், நாகர்கோவில்.
8. பி.எஸ்.ஜி. தொழில் நுட்பப் பயிலகம், கோயமுத்தூர்,
9. அரசு வணிகவியல் தொழில்நுட்பப் பயிலகம், சென்னை,
10. நாச்சிமுத்து பாலிடெக்னிக் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எப்படி விதிகளுக்குட்பட்டு வருகிறதென்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் சொல்லக்கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இந்த பத்து பாலிடெக்னிக்குகளில் மாணவர்கள் தேர்வைப் புறக்கணிக்கிற நிலை தொடர்கிறது. இது நம்முடைய நாட்டின் கல்வி நிலைக்குச் சரியல்ல. இது தொடர்பாக அந்த இடங்களில் பதட்ட நிலை இருப்பதால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆசிரியர்களை அழைத்துப் பேசி சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்ப்பார்களா என்று அறிந்துகொள்வதற்காக இதை எடுத்துக் கொண்டு விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் நுட்பத் தேர்வு வாரியத்தால் தேர்வுகள் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதமும், அக்டோபர்/நவம்பர் மாதமும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தேர்வுகள் 36 தொழில்நுட்பப் பயிலகங்களில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகின்றன. அக்டோபர்/நவம்பர், 1979 தேர்வுகள் நடத்த எல்லாவிதமான ஏற்பாடுகளும் முன்னேற்பாடாக ஒவ்வொரு தொழில் நுட்பப் பயிலகத்திலும் செய்யப்பட்டன.

தமிழ்நாடு தொழில் நுட்ப ஆசிரியர்கள் தாங்கள் கொடுத்துள்ள கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், தேர்வுகள் நடத்துவதற்கு உள்ள பொறுப்பினை ஏற்கமாட்டோம் என்று அந்தத் தொழில் நுட்பப் பயிலக முதல்வர்களுக்கு எழுத்து மூலம் 6 நாட்களுக்கு முன்பாகத் தெரிவித்தனர். பயிலக முதல்வர்களும் ஆசிரியர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்று எடுத்துக் கூறினர். ஆசிரியர்கள் தேர்வுப் பணிக்கு வராவிட்டாலும், தேர்வுகளை எப்பொழுதும் போல் ஏற்கெனவே மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட நாட்களில் நடத்த தேர்வு வாரியமும் முன்னேற்பாட்டுடன் செயல்பட்டது. அவ்வறிவுரைக்கு ஏற்ப, 36 தொழில் நுட்பப் பயிலகங்களில் 7 தொழில்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 நவம்பர் 6

நுட்பப் பயிலகங்களைத் தவிர, 29 தொழில் நுட்பப் பயிலகங்களில் தேர்வுகள்
23—10—1979 முதல் செவ்வனே நடத்தப்பட்டன. தேர்வுகள் நடக்காத
7 தொழில் நுட்பப் பயிலகங்கள் பின்வருமாறு :—

1. சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, திருச்சி.
2. அரசினர் தொழில் நுட்பப் பயிலகம், திருச்சி.
3. அரசினர் தொழில் நுட்பப் பயிலகம், தூத்துக்குடி.
4. அழகப்பா அரசினர் தொழில் நுட்பப் பயிலகம், காரைக்குடி.
5. ராமசாமிராஜா தொழில் நுட்பப் பயிலகம், இராஜபாளையம்.
6. அரசினர் தொழில் நுட்பப் பயிலகம் (ஆண்கள்), கோயமுத்தூர்.
7. அரசினர் தொழில் நுட்பப் பயிலகம், நாகர்கோவில்.

மேற்சொன்ன பயிலகங்களில் 4, 5, 6, 7-ல் குறிப்பிட்ட பயிலகங்களில்
23—10—1979 அன்று தேர்வுகள் நடந்தன. 24—10—1979 முதல் அந்த
நான்கு பயிலகங்களில் தேர்வு நடைபெறவில்லை. தேர்வு நடக்காத அரசினர்
தொழில் நுட்பப் பயிலகங்களில் முதல்வர்கள் பெற்றோர்களுக்குக் கடிதம்
எழுதி அவர்களுடைய பிள்ளைகளைத் தேர்வுக்கு வர வேண்டுகோள்
விடுத்தனர். அப்படியிருந்தும் மேற்குறிப்பிட்ட 7 பயிலகங்களில் மாணவர்கள்
தேர்வுக்கு வரவில்லை. இந்நிலையினை அம்மாணவர்களின் பெற்றோர்கள்
நன்கு அறிவர். தேர்வுகள் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்
கின்றன. பயிலகங்களில் மாணவர்கள் தேர்வுக்கு வந்தால், இனிமேல் நடத்தப்
படவேண்டிய தேர்வுகளை நடத்த பயிலக முதல்வர்களும் தயாராக உள்ளனர்.
மாணவர்களின் பெற்றோர்களும் தக்க அறிவுரை கூறி, தேர்வு எழுத
மாணவர்களைப் போகச் சொல்லலாம்.

ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு
அனுதாபத்துடன் அரசு பரிசீலித்து வருகின்றது. 31—8—1979-ல் வெளி
யிடப்பட்ட அரசாணை 1626-இல் சென்ட்ரல் பாலிடெக்னிக் முதல்வர், இதர
பாலிடெக்னிக் முதல்வர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், கூட்டு
விரிவுரையாளர்கள் முதலியோர்களுடைய சம்பள விகிதங்கள் திருத்தி
அமைக்கப்பட்டன. மற்ற அலுவலர்களின் கோரிக்கைகள் அரசின் ஆய்வில்
உள்ளன. கூடிய விரைவில் முடிவெடுத்து தகுந்த ஆணைகள் வெளியிடப்
படும். இந்நிலையில் ஆசிரியர்கள் தேர்வுப் பணியை புறக்கணித்தது அவசிய
மற்றது. எனவே இந்தப் பொருள் பற்றி விவாதிக்க அவையின் நடவடிக்கை
களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ளு
கிறேன்.



1979 நவம்பர் 6]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இப்பொருள் குறித்து விவாதிக்க
இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்கத் தேவையில்லை
யென்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

### 3. தகவல் கோரல்.

### ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்பு குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, உடற் கல்வி
இயக்குநர்கள் போராட்டம் பற்றி . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் எந்தப் பிரச்சினை என்று சொல்ல வேண்டியதில்லை. மற்ற ஒத்தி
வைப்புத் தீர்மானங்கள் ஆய்வில் உள்ளன. அதுபற்றி நாளைய தினம் முடிவு
சொல்லப்படும்.

**திரு. கோ. சி. மணி :** துணைத் தலைவர் அவர்களே, நான் 26 ஆம் தேதி
யன்று ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்
திருக்கிறேன். இன்றைக்கு ஒன்று கொடுத்திருக்கிறேன். அந்த இரண்டுமே
வரவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எல்லா ஒத்தி வைப்பு
தீர்மானங்களும் ஆய்வில் உள்ளன.

**திரு. கோ. சி. மணி :** ஒத்தி வைப்புத் தீர்மானங்களை ஒத்தி வைத்துக்
கொண்டே போனால், அதன் பொருள் என்ன? மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்கள் குறிப்பிடுவதைப் போல, "ஒத்துவரவில்லை" என்றால் "அவசர
அதிமுக்கியத்துவம் வாய்ந்த பொருள்" என்பதன் அர்த்தம் என்ன?

**மாண்புமிகு மேல்வைத் துணைத் தலைவர் :** முக்கியத்துவம் வாய்ந்த
பிரச்சினை என்பதால்தான், தீர ஆய்ந்து அதற்குப் பதில் சொல்லலாம் என்ற
முடிவை எடுத்திருக்கிறார்கள். நாளைய தினம் உரிய முடிவு அறிவிக்கப்
படும். (திரு. வீராசாமி இருக்கையிலிருந்து எழுந்தார்) திரு. மணி அவர்கள்
பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசட்டும். பிறகு உறுப்பினர்
அவர்கள் பேசலாம்.

**திரு. கோ. சி. மணி :** அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்படி, இந்த
மாதம் 9 ஆம் தேதி வரையில் அவையை நடத்தவிருக்கிறோம். ஆனால்
26 ஆம் தேதி கொடுக்கப்பட்ட தீர்மானம் இன்றுவரை எடுக்கப்படவில்லை.

இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள்? அவற்றை எடுத்துக்கொள்ளப்
போகிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. ஏற்றுக்கொள்ள முடிய
வில்லையென்றால், அதற்கான காரணத்தையாவது சொல்லலாம் அல்லவா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பின
அவர்கள் சென்ற மாதம் 26 ஆம் தேதியன்று முன்னறிவிப்பு கொடுத்திருக்கி
றார்கள். இதற்கிடையில் அவையின் கூட்டம் நடைபெறவில்லை. பிறகு
முன்னறிவிப்பு கொடுத்திருக்கிற தீர்மானங்களும் வந்திருக்கின்றன. அதைப்
பற்றியெல்லாம் ஆய்வு செய்து நாளைய தினம் முடிவு சொல்லப்படும்.

திரு. கோ. சி. மணி: இப்போது கொடுத்திருக்கிற தீர்மானம் வந்திருக்
கிறது. அப்படியானால் ஏற்கெனவே கொடுத்திருக்கிற தீர்மானம் இன்னும்
வராமலிருக்கக் காரணம் என்ன? அது ஒரு மிகப் பெரிய பிரச்சினை.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கொடுத்த தீர்மானத்திற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள்
அனுமதியை மறுத்திருக்கிறார்கள். அதை ஏற்கெனவே அவையிலே அறிவித்
திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்படு
வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை
யென்றால், அதைப்பற்றிய அறிவிப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வருமே,
அது ஏன் இப்போது வருவதில்லை?

(பிற்பகல் 5-40)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அந்த ஒத்தி வைப்புத்
தீர்மானத்தைப்பற்றி அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவைகளைப்
பற்றி நாளைய தினம் முடிவு சொல்லப்படும்.

திரு கோ. சி. மணி: நம்முடைய விதிமுறைகளின்படி, அங்கத்தினர்
களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும் அல்லது இந்த அவையிலேயே
அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானங்
கள் ஆய்விலே இருக்கின்றன. அவைகள் பற்றி முடிவுகள் இன்னும் எடுக்கப்
பட வேண்டும். அவைகளைப்பற்றி அதற்கிடையிலேயே எதையும் சொல்லி
விட முடியாது. நாளைய தினம் முடிவுகள் சொல்லப்படும் என்பதைத் தெரி
...க்கொள்கிறேன்.





திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இதற்கு
முன்னாலே இருந்த அரசு காலதாமதமில்லாமல் இந்த மாதிரி ஒத்தி வைப்புத்
தீர்மானங்களுக்கு, பிரச்சினைகளுக்கு எல்லாம் விவரங்களைக் கொடுத்து
வந்தது. இந்த மந்திரி சபை, இந்த மன்றத்தினுடைய மாண்பைக் காப்பாற்ற
வேண்டும். பொதுவாக சட்டமன்றம், மேலவை இவைகளில் எல்லாம் முன்
னறிவிப்பு கொடுத்த அன்றைக்கேகூட எடுத்துக்கொள்வது வழக்கம். அரசாங்
கத்திற்கு 24 மணி நேரம் அவகாசம் இருக்கிறது. ஒரு மணி நேர அவகாசத்
தில்கூட பதில் சொல்லப் பழக்கப்பட்ட தமிழகத்தில், இன்றைய தினம்,
நாளைய தினம் என்று ஒத்தி வைப்புத் தீர்மானத்தையே ஒத்தி வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். எதிர்கட்சியினர் ஒத்தி வைப்புத் தீர்மானம் எதுவும்
கொடுக்கக்கூடாது என்று அரசினர் நினைக்கிறார்களா என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இதைப் பற்றியெல்லாம்
நாளைய தினம் பேசலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(1) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் தமிழ்
நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவை ஆய்விற்கு
எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(2) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பேரவையால் நிறைவேற்றப்
பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத்
தலைவரால் தீர்மானிக்கப்பட்டு அவரது கையொப்பத்துடன் இம்மேலவையின்
பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு
நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரிடம் இருந்து
பெறப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத்
தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட
முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

1. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளி
யேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச்
சட்டமுன்வடிவு.

[மேலவைத் துணைத் தலைவர்] [1979 நவம்பர்

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக
நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு.

3 தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு
நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு.

4. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட
முன்வடிவு.

5. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த)
சட்டமுன்வடிவு.

6. ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தாப்படுத்துதல்)
ரத்துச் சட்ட முன்வடிவு.

7. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச
வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு.

8. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாது
காப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

9. 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த)
சட்ட முன்வடிவு.

5. கவன ஈர்ப்பு.

(1) மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய
நிர்ணயம் செய்யாதது குறித்தும், பதவி உயர்வின் மூலமாக நியமிக்கப்
பட்டுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எப்.ஆர். 22-பி
விதியின்படி ஊதியம் நிர்ணயம் செய்யாமல் இருப்பது குறித்தும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர்கள்
திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், சி. ரா. லெட்சுமிகாந்தன், செ. முத்துசாமி
ஆகியோர் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.
திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அமைச்சர் அவர்களின் கவனத்தை
ஈர்ப்பார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, "மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்
களுக்கு அடிப்படை விதிகள் 22-பி படி ஊதிய நிர்ணயம் செய்யாததால் மேல்



மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு
ஊதிய நிர்ணயம் செய்யாதது குறித்தும், பதவி உயர்வின்
மூலமாக நியமிக்கப்பட்டுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்
களுக்கு எப்.ஆர். 22-பி விதிப்படி ஊதியம் நிர்ணயம்
செய்யாமல் இருப்பது குறித்தும்

1979 நவம்பர் 6] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பொருளிழப்பிற்கு ஆளாகி அவதிப்
படும் நிலை குறித்தும், மேல்நிலைப் பள்ளிகளில் பதவி உயர்வின் மூலமாக
நியமிக்கப்பட்டுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு எப். ஆர். 22 பி
விதியின்படி ஊதிய நிர்ணயம் செய்யாமல் இருப்பதால் அத்தகைய ஆசிரியர்
களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய இழப்புப் போன்ற காரணங்களினால் அவர்
களிடையே நிலவும் அதிருப்தி, விரகதி குறித்தும்" மாண்புமிகு கல்வி
அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள
பட்டதாரி ஆசிரியர்களில் முதுகலைப்பட்டம் பெற்றவர்கள் தேவைக்கேற்ப
மேல்நிலைப் பள்ளிகளில் பணி செய்ய நியமிக்கப் பட்டுள்ளார்கள். மேல்
நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கான விதிகள் ஏற்படுத்
தப்பட்ட பின்னர்தான் அவர் பதவி உயர்வு என்ற வகையிலும் மற்றும் அடிப்
படை 22-பி விதிகளின் படி ஊதிய நிர்ணயம் செய்ய இயலும்.

மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்ட மொழி மற்றும் இதர பாட
ஆசிரியர் பதவிகளுக்கு மட்டும் விதிகள் வெளியிடும் வகையில் தமிழ்நாடு
சார்நிலைக் கல்விப் பணி தனி விதிகளுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் வரைவு
திருத்தங்கள் அனுப்பினார். மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்
மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் ஆகிய எல்லாப் பதவிகளுக்கும் வரைவு
விதிகள் வெளியிட, எல்லாப் பதவிகளையும் தமிழ்நாடு கல்விப் பணி தனி
விதிகளில் இணைக்கும் வகையில் வரைவு திருத்தங்கள் அனுப்புமாறும் பள்ளிக்
கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவ்வரைவுத்
திருத்தங்களை விரைவில் பெற்று மேல்நிலைப் பள்ளியிலுள்ள எல்லாப்
பதவிகளுக்கும் தக்க விதிகள் வெளியிடப்படும். விதிகள் வெளியிடப்பட்ட
வுடன் அவர்களது ஊதியம், விதிகளுக்கு ஏற்ப நிர்ணயிக்க நடவடிக்கை
எடுக்கப்படும். தக்க விதிகள் வெளியிட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்
டுள்ள பதவிகளுக்கான விதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர்தான் அவர்களுக்கு
பதவி உயர்வு என்ற வகையில் அடிப்படை 22-பி விதியின்படி ஊதிய நிர்ணயம்
செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்தார்கள். அப்படி
ஏற்படுத்தப்போவது எப்போது என்று அறிய விரும்புகிறேன். அதோடு,

## மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யாதது குறித்தும், பதவி உயர்வின் மூலமாக நியமிக்கப்பட்டுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் களுக்கு எப்.ஆர். 22-பி விதிப்படி ஊதியம் நிர்ணயம் செய்யாமல் இருப்பது குறித்தும்

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 நவம்பர் 6

இந்த வரைவுத் திருத்தங்களை அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநரைக் கேட்டது எப்போது? அது காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்? அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கேட்டுக்கொள்ளப்பட்ட தேதி குறித்து இங்கே தகவல் இல்லை. ஆனால் விரைவிலேயே அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விதி 22-பி யில் மிகத் தெளிவாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு ஊதிய உயர்வு நிர்ணயம்பற்றி விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு, நான் மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலம், கொண்டு வர விரும்புகிறேன். இவ்வளவு தெளிவாக எப். ஆர். 22-பி விதியின் நிர்ணயிக்கப்பட்டிருந்தும், இன்னும் சில விதி முறைகள் வந்த பிறகுதான் நிறைவேற்றப்படும் என்று சொல்வது சரிதானா? இந்த எப். ஆர். 22-பி யின்படி ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது மேல்நிலைப் பள்ளி களில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் பணி செய்ய நியமிக்கப்பட்டுள்ளார் கள். மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கான விதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர்தான், அவர்களுக்குப் பதவி உயர்வு என்ற வகையிலும் மற்றும் அடிப்படை 22-பி விதியின்படியும் ஊதிய நிர்ணயம் செய்ய இயலும். இதுதான் என்னிடத்தில் தரப்பட்டுள்ள விவரங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளி களிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் இன்னும் விதிகள் வகுக்கப்படவில்லை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். சென்ற கூட்டத் தொடரில்கூட அதைப்பற்றிக் கேட்டபோது, இதற்கான வரைவுத் திருத்தங்கள் கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கின்றன என்று சொன் னார்கள். வரைவுத் திருத்தங்கள் வந்தால்தான் எல்லாப் பதவிகளுக்கும் தக்க விதிகள் வெளியிடப்படும் என்று சொல்கிறார்கள். இதுவரையில் இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் விதிகள் வகுக்கப்படவில்லை.



மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யாதது குறித்தும், பதவி உயர்வின் மூலமாக நியமிக்கப்பட்டுள்ள முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் களுக்கு எப்.ஆர். 22-பி விதிப்படி ஊதியம் நிர்ணயம் செய்யாமல் இருப்பது குறித்தும்

1979 நவம்பர் 6] [திரு. செ. முத்துசாமி]

இப்போதும் கேட்கப்பட்டிருக்கிறது என்றுதான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கல்வித் துறையிலிருந்து விரைவில் அதைப் பெற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தக்க நடவடிக்கைகள், துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. செ. முத்துசாமி :** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த கவன ஈர்ப்பில் ஒரு கேள்விதான் ஒரு உறுப்பினருக்கு. ஒரு உறுப்பினர் முன்னறிவிப்பு கொடுத் தால் இரண்டு கேள்விகள் கேட்கலாம். இப்போது 3 உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்து, ஒவ்வொருவரும் 2 கேள்விகள் என்று கேட்டால், இதில் 6 கேள்விகள் கேட்கின்ற நிலைமைகள் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட சில பட்டதாரி ஆசிரியர்களை பணிவரன்முறை செய்யாததால், அவர்கள் விடுப்பு வசதிகள், ஆண்டு ஊதிய உயர்வு போன்ற உரிமைகளை இழந்திருப்பதால், நேரடி நடவடிக்கையில் இறங்க முடிவு செய்திருப்பது குறித்து.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, "1—4—1970-க்குப் பிறகும் 3—3—1973-க்கு முன்பும் அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 5 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் சுமார் 1,000 பேர்களை இன்றுவரை பணிவரன்முறை செய்யா மல் இருப்பதால் அத்தகைய ஆசிரியர்கள் விடுப்பு வசதிகள், ஆண்டு ஊதிய உயர்வு போன்ற பல முக்கிய உரிமைகளை இழந்து மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாவது குறித்தும் அத்தகைய ஆசிரியர்கள் தங்கள் பிரச்சினை தீர நேரடி நடவடிக்கையில் இறங்குவதாக முடிவு செய்திருப்பது குறித்தும் அதனால் எழக்கூடிய நிலைமைகள் குறித்தும்" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 நவம்பர் 6

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அதற்கான விவர அறிக்கை@
அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது. அதைப் படித்ததாக ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் பொருளைப்
பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் பல முறை இந்த மன்றத்திலேயே
வந்திருக்கின்றன. அண்மையிலே பிப்ரவரி மாதத்திலேகூட இதே பொருளில்
ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் வந்தபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்கள் தற்காலிக ஊழியர்களுக்கு உரிய விடுப்பு வசதிகள் 1—4—1970-க்குப்
பின்னர் வந்த ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என்ற வாக்குறுதியைத் தந்
தார்கள். அதை அமுல்படுத்த வேண்டுமென்று ஆணையும் அந்தத் துறையி
லிருந்து வந்தது. அப்படி வந்த ஒரு வாரத்திற்குள் அந்த விடுப்பு வசதிகள்
நிறுத்தப்பட்டு வேறு ஆணை வந்திருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்களிடம் அந்த ஆதாரபூர்வமான ஆணைகளின் நகல்களை, மேலவைத்
துணைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் கொடுக்கிறேன். மாண்புமிகு
கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே கொடுக்கின்ற வாக்குறுதிகளை
நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் தற்காலிக ஊழியர்களுக்கு
விடுப்பு வசதிகள்கூட இல்லை. நீதித்துறை ஆணை 41-ன்படி தொடர்ந்து
ஆண்டு ஊதியம் தரலாம். அதற்கும் வழிவகை அரசே செய்திருக்கிறது.
நீதித் துறை ஆணை 41-ன்படி இந்தத் தற்காலிக ஊழியர்களுக்கும் ஆண்டு
ஊதியம் என்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கல்வித்
துறையில் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்
பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிறப்பு நியமனத்திற்கான
ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது நடந்த பிறகுதான் அந்தப்
பிரச்சினைகளே எழ இடமிருக்கிறது.

(பிற்பகல் 5-50)

**திரு. செ. முத்துசாமி :** துணைத் தலைவரவர்களே, வேறு ஒரு பிரச்
சினை. சென்ற கூட்டத் தொடரின்போது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு

@ 154-155 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



வந்து, இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமல், இப்போதும் நடவடிக்கை
எடுக்கப்பட இருக்கிறதென்ற நிலை கல்வித் துறையிலே இருப்பதால், அதைக்
கண்டிக்கும் வகையில் நான் வெளியேறுகிறேன்.

(உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் அவையிலிருந்து
வெளியேறினார்.)

### 6. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1979.)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,
"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண் 59/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு
எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்
மானம்—
" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 59/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட வேண்டும்".

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கே முன் வைத்திருக்கிற நிதி ஒதுக்கச்
சட்டமுன்வடிவின் மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
மிகவும் முக்கியமான பிரச்சினை என்பதால், அதை அரசின் கவனத்திற்குக்
கொண்டு வருவதன் மூலம், அதற்குப் பரிகாரம் கிட்டுமென்ற காரணத்தால்,
சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

@ 155-158 ஆம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 நவம்பர் (

இந்த அவையிலும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அரசாங்கத்தைச் சேர்ந்த
வர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மீறி, இன்றையதினம் விவசாயிகள்மீது
ஜப்தி நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டிருக்கிறார்கள்.
இந்த அவையிலும், சட்டப் பேரவையிலும் முதலமைச்சரவர்களும், குறிப்பாக
அமைச்சர்களும், எந்தக் காரியத்தை முன்னிட்டும், விவசாயிகள்மீது, பல்வேறு
வுக் கடன்களுக்காக அல்லது ரெவின்யூ கடன்களுக்காக நிச்சயமாக கூட்டுற
நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டோமென்று பன்முறை வலியுறுத்திச் சொல்லி ஜப்தி
யும், ராமநாதபுரம் மாவட்டத்தில், அருப்புக்கோட்டை தாலுக்காவில்—பெயர்
வேண்டுமானாலும் சொல்கிறேன், பட்டியல் இருக்கிறது, சொல்லத் தயாராக
இருக்கிறேன்—ஜப்தி நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டிருக்கிறார்
கள். நிதி அமைச்சரவர்கள் அதுமாதிரி நடவடிக்கைகள் இராதென்று உறுதி
மொழி கொடுத்திருந்தும், விவசாயிகளிடமிருந்து கடன்களை வசூலிப்பதற்காக
நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இன்றைய தினம் பல்வேறு கூட்டுறவுச்
சங்கங்களில் நிதி ஆதாரங்களில்லை. அவைகளுக்கு நிதி கொடுப்பது தவிர்க்
கப்பட்டிருக்கிறது என்ற நிலையில், ஏற்கெனவே வாங்கிய கடன்களுக்காக
விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயி
கள் ஊக்குவிக்கப்படுவதற்குப் பதிலாக, இன்றைக்கு அவர்கள் கரங்கள்
கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைத்
திரும்பச் சொல்லக் காரணம், அரசாங்கத்தின் சார்பில் வாக்குறுதி கொடுத்
தாலும், அதற்கு மாறாக அதிகாரிகள் இன்றையதினம் இராமநாதபுரம்
மாவட்டத்தில் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இன்னொரு பிரச்சினையையும் சொல்ல விரும்புகிறேன். பருவ காலம்
தொடங்கியிருக்கிறது. எல்லா நீர்ப்பாசனக் குளங்களும், ஏரிகளும் நிரம்பி
யிருக்கின்றன என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இராம
நாதபுரம் மாவட்டத்தில் இன்னும் நூற்றுக்குத் தொண்ணூறு நீர்ப்பாசன
ஏரிகள், குளங்கள் நிரம்பவில்லை. அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்
கிறது. சென்ற ஆண்டு புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட அந்த
மாவட்டத்தில் இந்த ஆண்டு இன்னும் விவசாயத்திற்கான நீர்ப்பாசன ஏரி
களில், குளங்களில் தண்ணீர் இல்லாததால், விவசாயிகள் விவசாய வேலையில்
ஈடுபடாமல் இருக்கிறார்கள். அங்கே வறட்சி தொடங்கும் நிலை இருக்கிறது.
இப்படிப்பட்ட நிலையில் 40 கோடி ரூபாய் விவசாயிகளுக்குச் சலுகை அளித்
திருக்கிறோமென்று விளம்பரப்படுத்தி, சிறிய விவசாயிகள் மீது—நான் புள்ளி
விவரங்கள் வைத்திருக்கிறேன், அதன்படி 2½ ஏக்கருக்கும் குறைவாக



1979 நவம்பர் 6] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

வைத்துள்ள விவசாயிகள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் அப்படிப்பட்ட நிலை இராதென்ற உறுதி மொழி கொடுத்தால் போதும், அதை நான் வரவேற்பேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. ராஜபாளையம் பக்கத்தில் ஆலங் குளத்தில் சிமெண்ட் ஆலை ஒன்று இருக்கிறது. அந்த சிமெண்ட் ஆலை 'டஸ்ட்-ப்ரூஃப்' செய்யப்படாததால், இன்றைக்கு அந்தப் பகுதியிலே சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. பத்து மைல்கள் சுற்றளவிற்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பக்கத்திலுள்ள தனியார் தொழிற்சாலை 'டஸ்ட்-ப்ரூஃப்' செய்யப்பட்டிருக்கிறது. ஆலங்குளம் தொழிற்சாலை 'டஸ்ட்-ப்ரூஃப்' செய்யப்படாததால், அந்தப் பகுதியில் மக்கள் வாழ முடிய வில்லை. இது பல முறை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறது. பொது நிறுவனமாக இருப்பதால், இதில் அக்கறை காட்ட வில்லை. எனவே மிகப் பெரிய கேடு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, 'ஃபுட் பார் ஒர்க் ஸ்கீம்' பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் வேண்டுமானால்; தாங்கள் சொல்வது சரியென்று நினைத்துக் கொண்டிருக்க முடியும். ஊராட்சி ஒன்றியங்களில் அந்த வேலை எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எது எதற்கோ குழுக்களை அரசு போடுகிறது. இதற்கும் ஒரு குழு போட வேண்டும். காரியாப்பட்டி ஒன்றியத்திற்கு ஒரு குழு போடுங்கள். எப்படி வேலைகள் நடைபெறு கின்றன என்பதை அந்தக் குழு பார்க்கட்டும். சாலைகளுக்கு 'கிராவல்' போடுகிறார்கள். அங்கே வேலை செய்பவர்களுக்கு அரிசி கொடுக்கலாம். ஆனால் லாரிகளுக்கு, டிராக்டர்களுக்கு அரிசி கொடுக்கிறார்கள். காண்ட்ராக் டர்கள் அந்த அரிசியை மொத்தமாக விற்பனை செய்துவிட்டு, தொழிலாளர் களுக்குப் பணம் கொடுக்கும் தன்மை இருப்பதால், இந்தத் திட்டம் தோற்கடிக் கப்படுகிறது. The purpose has been defeated மத்திய அரசு நல்ல திட்டம் கொண்டு வந்திருக்கிறது. மாநில அரசும் அதை நல்ல முறையில் நிறைவேற்று கிறது. அதை 'ட்ரூ' ஸ்பிரிட்டில் நிறைவேற்ற வேண்டும். அதிகாரிகள் கொடுக்கும் புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, இத்தனை ஒன்றியங்களில் இத்தனை லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துவிட்டோம் என்று சொல்வது, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். எனவே இதுபோன்ற பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்தி, வேண்டாத காரியங்களுக்கு வேகம் காட்டுவதைவிட, வேண்டிய காரியங்களுக்கு உரிய நேரத்தில் உத்தரவு போட்டு, விவசாயிகளுக்கு நல்ல ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய வேண்டும்.

இன்றைக்குக் கூட்டுறவுக் கடன்கள் கிடையாது. எல்லா சொசைட்டிகளும் டூவர்-டியூவாக இருக்கின்றன. கூட்டுறவுக் கடன்கள் வழங்கப்படுவதில்லை. நிலவள வங்கிகளில் கடன்கள் கொடுப்பதில்லை. இதையெல்லாம் மறுபரிசிலனை செய்ய வேண்டும். மேலும் இடைக்காலத்தில், ஏதாவது ஒரு முறையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியுமா என்றும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. திராவிடமணி அவர்கள், உ)ப்பினரவர்கள் மிக விரைவாக (முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி :** துணைத் தலைவரவர்களே, ஒரே ஒரு விளக்கம் தான். சொல்லவில்லை என்றால், பின்னால் நிதி அமைச்சரவர்கள் வருத்தப் படுவார்கள். (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** எதற்காக?

**திரு. ஆ. திராவிடமணி :** பிரச்சினையைச் சொல்லாமல் விட்டுவிட்டால்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** இல்லை, இல்லை. நான் வருத்தப் பட மாட்டேன். (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் :** உறுப்பினரவர்கள் கையில் இருக்கும் தாள்களைப் பார்த்தால், நிறைய இருக்கும்போல் இருக்கிறதே ?

**திரு. ஆ. திராவிடமணி :** துணைத் தலைவரவர்களே, மருங்காபுரி ஒன்றியத்திலே, வெள்ளத்தால் ஏரிகள், குளங்கள் உடைந்துவிட்டன என்ற தகவலை, 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் தேதி கோட்டப் பொறியாளருக்கு அறிவித்திருக்கிறார்கள். மருங்காபுரி ஒன்றியத்திலுள்ள ஏரிகள், குளங்கள் எந்த முறையில் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இதுவரை நிதி ஒதுக்கீடு செய்ய வில்லை என்று அந்த ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த மனு என்னிடம் இருக்கிறது. அதை நிதி அமைச்சரவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். செவல்பட்டி தலைவர் பெரியசாமி, காரைப்பட்டி தலைவர் முத்துசாமி, அம்மாசமுத்திரம் தலைவர் கண்ணுசாமி, நெத்தூர் தலைவர் அய்யாக்காளை, உசிலம்பட்டி தலைவர் பழனிச்சாமி, இக்கரை கோசுகுறிச்சி தலைவர் அழகன், நல்லூர் தலைவர் அழகன் அம்பலம், புனையபாளையம் ஊராட்சித் தலைவர், எம். இடையப்பட்டி ஊராட்சித்





தலைவர், அதிகாரம் தலைவர் லிங்கன் செட்டியார், அடைக்கலம்பட்டி தலைவர் ராமசாமி நாயுடு ஆகியோர் கையெழுத்திட்டு அந்த மனுவைத் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மனுவைக் கொடுத்துவிட்டால், போதும். அமைச்சரவர்களே பெயர்களைப் படித்துக்கொள்வார்கள்.

**திரு. ஆ. திராவிடமணி :** அவ்வளவு சிரமம் அவர்களுக்கு வேண்டா மென்பதற்காகத்தான் நானே படிக்கிறேன். (சிரிப்பு) தலைவரவர்கள் மூலமாக, அந்த மனுவை மாண்புமிகு நிதி அமைச்சரவர்களிடம் கொடுக்கிறேன். அவர்களுக்கு நிவாரணம் செய்திட வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** துணைத் தலைவரவர்களே, மன்ற உறுப்பினர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'Appropriation Bill' என்று வருகிறபோது வழக்கமாக யாரும் பேசுவதில்லை. அதுமட்டுமல்ல. துணைமானியக் கோரிக்கை வரும்போதும் பெரும்பாலும் பேசுவதில்லை. ஆனால் இந்தத் தடவை துணை மானியக் கோரிக்கை வந்தபோது, இரண்டு நாட்கள் தேவைப்படுமென்று சொல்லி, அதற்கான காரணங்களைச் சொன்னார்கள். விரிவாகப் பேசினார்கள், விளக்கமாகச் சொன்னார்கள். நானும் கொஞ்சம் விளக்கமாகப் பதில் சொன்னேன் என்று நம்புகிறேன். இன்றைக்கு ஒரு நிமிடத்திற்குள் நிறை வேற்றப்பட வேண்டிய ஒன்றில், நமது அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், நான் கொஞ்சம் பேசி நிறுத்திக் கொள்கிறேன் என்று சொன்னார்கள். அவர் சொன்னதைப் போல, சில

(பிற்பகல் 6-00)

குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி மட்டும் பேசி நிறுத்தியமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நான் பேசுவதில்லை என்று ஒத்துழைப்புத் தந்தார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதையொட்டி எனக்கு ஒத்துழைப்புத் தந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சிறு விவசாயிகள் சம்பந்தமாக ஒரு பிரச்சினை இங்கே கிளப்பப்பட்டது. ஜப்தி நடவடிக்கை களில் இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். சிறு இதுபற்றித் தெளிவான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளைத் தொல்லைப்படுத்தவோ, அவர்களது பொருள்களை வீட்டிலே சென்று எடுத்து வரவோ. ஜப்தி செய்வது போன்ற நடவடிக்கைகளில்

ஈடுபடவோ கூடாது என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சில
இடங்களில் சில பேர் அந்தக் காரியங்களில் ஈடுபடுவதாக அரசுக்குச் செய்திகள்
வந்த வண்ணம் இருக்கின்றன. எந்த நோக்கோடு அந்த அதிகாரிகள்
அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள் என்பதையும் அரசு கூர்ந்து
கவனித்துக்கொண்டிருக்கிறது. அரசுக்கு ஒரு கெட்ட பெயர் உருவாக்க
வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அவர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபடக்
கூடும். அவர்கள் விஷயத்தில் எல்லாம் தாங்கள் ஜாக்கிரதையாக இருக்கிறோம்.
வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற வாய்ப்பும் வசதியும் உள்ள
நிலக்கிழார்கள் அதனைத் திருப்பிக் கட்டாமல் அதற்குப் பாதுகாப்பாக
அவர்கள் ஏழை எளிய விவசாயிகளை பலிக் கடாக்களாக ஆக்கிக்
கொண்டிருக்கிறார்கள். அரசு தன்னுடைய கொள்கையைத் தெளிவாகத்
தெரிவித்திருக்கிறது. நிலக்கிழார்கள் 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம்
ரூபாய் வரை கடனாகப் பெற்று அதை அவர்கள் திருப்பித் தர முடியும் என்ற
நிலை இருந்ததற்குப் பிறகும், அதை திருப்பித் தர மறுத்துக் கொண்டிருக்
கிறார்கள். கடனைத் திருப்பிக் கேட்டால் ஏழை எளிய விவசாயிகளுடைய
வயிற்றில் அடிக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களைத் தூரத்தும் முறையில்
அவர்கள் நீண்ட காலத்திற்கு தமிழகத்தில் இயங்க முடியாது என்பதை
அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள்
விஷயத்தில் இந்த அரசு அனுதாபம் காட்டாது.

அடுத்தபடியாக, 'ஃபுட் ஃபார் ஒர்க்' விஷயத்தில் காண்டிராக்டர்கள்
சரியாக இயங்கவில்லை, அதனாலே அரிசியை வாங்கி பல சந்தர்ப்பங்களில்
விற்று விடுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன்
அவர்கள் சொன்னார்கள். உதாரணத்திற்கு காரியாப்பட்டி பற்றிக் குறிப்
பிட்டார்கள். சில இடங்களிலிருந்து இப்படிப்பட்ட குறைகள் வந்திருக்
கின்றன. அந்தக் குறைகளைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்
கிறது. அடுத்த முறை திரு. தங்கப்பாண்டியன் இங்கே பேசும்போது,
குறைகள் நீக்கப்பட்டு நிறை வருகின்ற அளவிற்கு அங்கே மக்கள் வாழ்கி
றார்கள் என்கின்ற நல்ல தகவலை இங்கே அவைக்குத் தருவார்கள் என்கிற
நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன். வேறு யாரும் எந்தப் பிரச்சினையையும் முறையிடவில்லை.

அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள்
ஒரு பிரச்சினையைக் கிளப்பி, பிரச்சினைக்குரிய காகிதங்கள் அனைத்தும்
அடங்கிய ஒரு நீட்டோலையை என்னிடம் தந்திருக்கிறார்கள். என்னிடம்
அந்த ஓலை பத்திரமாக இருக்கிறது. நான் அதைப் படிக்க மாட்டேன்
என்று கருதி இங்கே அவர் அதைப் படிக்க முற்பட்டார். திரு. திராவிட



மணி அவர்களுக்குச் சொல்கிறேன், தயவுசெய்து அப்படியானால் என்னிடம்
நீங்கள் தந்திருக்கக்கூடாது. (சிரிப்பு). அதை நான் படித்துப் பார்த்து
அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் என்பது திரு. திராவிடமணி
அவர்களுக்கே நன்றாகத் தெரியும். பல விஷயங்களில் என்னிடம் அவர் வந்
திருக்கிறார். (சிரிப்பு) அவைகளையெல்லாம் நான் செய்து கொடுத்திருக்
கிறேன் மகிழ்ச்சியோடு (சிரிப்பு). அவர் பேச முற்பட்டபோது, மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்கள் உறுப்பினரின் கையில் வைத்திருந்த காகிதங்
களைப் பார்த்து அஞ்சினார்கள். அவை என்னிடம் வரும்போது நான் அஞ்ச
வில்லை. அன்பாக அவர் தருகின்ற அனைத்தையும் வாங்கி நிறையாகச்
செய்து கொடுத்திருக்கிறேன் என்பதைச் சொல்லி இப்பொழுதும் அவர் தந்
திருக்கின்ற கோரிக்கைகளை நிச்சயம் கவனிப்பேன் என்கின்ற உறுதியினை
மன்றத்திற்கு வழங்குகின்றேன்.

அடுத்தபடியாக, 'அடாடா (ADADA) பற்றிச் சொன்னார்கள். ஏற்
கெனவே அவை முன்னவர் அவர்கள் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார் என்று
நான் கேள்விப்பட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
அதை வலியுறுத்தி, அதைப்பற்றி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்
டார்கள். அதைப்பற்றி அரசு ஆராய்ந்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத்
தயங்காது என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்
களுக்குத் தேவை அதுதான். அந்த உத்தரவாதத்தை நான் அவர்களுக்கு
வழங்குகிறேன். மற்றபடி ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றியைச்
சொல்லி மேலவைத் துணைத் தலைவர் அவர்களே சட்ட முன்வடிவு திருப்பி
அனுப்பப்பட வேண்டுமென்று கோரி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள
பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 59/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

[1979 நவம்பர் 6

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** துணைத் தலைவர் அவர்களே—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 59/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள
பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட
முன்வடிவு எண் 59/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(2) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளி
யேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் துணைத் தலைவ
ரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாது
காத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட
வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட
தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979-ம்
ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது
காத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண் 47/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட
வேண்டும்."

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவுகள் எண்
47/1979, 46/1979 மற்றும் 44/1979 ஆகிய மூன்றும் பயிரிடும் குத்தகை
தாரர்கள் குறித்த சட்ட முன்வடிவுகள். ஆகவே உறுப்பினர்கள் பேசுகிற

@ 158ஆம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 நவம்பர் 6] [மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்]

பொழுது, இந்த மூன்று சட்டமுன்வடிவுகளின் மீதும் ஒட்டு மொத்தமாக
தங்கள் கருத்துக்களைப் பேசிவிட்டால், அமைச்சர் அவர்கள் ஒவ்வொன்றாக
சட்ட முன்வடிவுகளை முன்மொழியும்போது அமென்ட்மென்ட் கொடுக்க
விரும்பும் உறுப்பினர்கள் 'கிளாஸ் பை கிளாஸ்' கருத்துக்களை எடுத்துச்
சொல்லி சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றலாம் என்கின்ற கருத்தை
வெளியிட விரும்புகிறேன்.

THIRU K. RAMAMOORTHY : What about the amendments ?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் மூன்று சட்ட
முன்வடிவுகளின் மீதும் பொதுவாகப் பேசி விட்ட பிறகு சட்ட முன்வடிவு
களை ஒவ்வொன்றாக நிறைவேற்றும்போது, அமென்ட்மென்ட் கொடுக்க
விருப்பம் உள்ள உறுப்பினர்கள் அமென்ட்மென்ட் கொடுத்து 'கிளாஸ் பை
கிளாஸ்' பேசலாம். மூன்று சட்ட முன்வடிவுகள் பற்றியும் பேசுகிறபோது,
மொத்தமாகப் பேசிவிட்டு அப்புறம் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்ற
எடுத்துக்கொள்ளும்போது உறுப்பினர்கள் தங்கள் திருத்தங்களை வலியுறுத்து
வதில் தடையேதுமில்லை.

THIRH A. R. DAMODARAN . Sir, there will be one difficulty,
While those present in the House can understand all this, the records
are likely to be hopelessly different unless all the three Bills are
introduced separately. If they introduce one Bill and I speak about,
say, the Bill on Cyclone and Flood Relief, it would have no rele-
vance when the written record is seen. This is one difficulty which
we may come across and I want to mention it.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களின் கருத்து
அதுவானால், தனித் தனியாக எடுத்துக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN : I think we can speak on one
Bill. But the Bills will have to be moved separately.

MR. DEPUTY CHAIRMAN : The Bills are being moved
separately. What I suggested was that when the hon. Members
spoke, they might speak after a particular Bill was moved, so that
they could express their views. But the difficulty expressed by the
hon. Member Thiru Damodaran will always be there. It was only
because of the time factor that I made the suggestion earlier. We
have got nine Bills. If the House is prepared, I will agree to what

[1979 நவம்பர் 6 (Mr. Deputy Chairman)

the hon. Member Thiru Damodaran suggested. Does the hon. Member Thiru Damodaran want the Bills to be moved separately and the hon. Members also to speak separately on each Bill?

THIRU A. R. DAMODARAN : I have no desire to help the Government because this process has been brought about by themselves. I feel that the Bills should be moved separately and that we should consider them separately.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் சொல்கிறபடி சட்ட முன்வடிவுகள் ஒவ்வொன்றாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். உறுப்பினர்கள் ஒவ்வொரு சட்ட முன்வடிவு மீதும் தனித் தனியாகப் பேசலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, some amendments are being moved.

(திரு. கோ. சி. மணி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மூன்று சட்ட முன்வடிவு களின் மீதும் பேசி முடித்த பிறகு, ஒவ்வொன்றாக நிறைவேற்ற எடுத்துக் கொள்ளும்போது, 'கிளாஸ் பை கிளாஸ்' அமென்ட்மென்ட் கொடுத்து, திருத் தத்தை வலியுறுத்தி, விருப்பமுள்ள உறுப்பினர்கள் பேசலாம். திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களை நான் பேசுமாறு அழைக்கிறேன். திரு. தாமோதரன் அவர்கள் பேசி முடித்த பிறகு, திரு. மணி அவர்கள் பேசலாம்.

**திரு. கோ. சி. மணி:** மூன்று சட்ட முன்வடிவுகளும் பயிரிடும் குத்தகை தாரர்கள் குறித்த பில்களாக இருப்பதாலும், மூன்றும் ஒன்றாகவே வருவ தாலும், உறுப்பினர்கள் பேசுகிறபோழுது மொத்தமாகப் பேசிவிட்டு, அமென்ட்மென்ட் கொடுக்க விருப்பமுள்ளவர்கள், 'கிளாஸ் பை கிளாஸ்' திருத்தம் கொடுத்துப் பேசலாம் என்கின்ற கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-10.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் வலியுறுத்திச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு சட்ட முன்வடிவைப் பொறுத்தும் கருத்துக்களை வெவ்வேறு விதமாகச் சொல்லவேண்டிய



1979 நவம்பர் 6] [மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்]

அவசியம் ஏற்படும் என்றும், அப்படிச் சொல்கின்றபோது பதிவேட்டிலே பதிவு செய்யும்போது வேறொரு மாதிரி தொனிக்கும் என்றும், தனித்தனியாகப் பேசுவது நல்லது என்றும் அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். அதுபோல செய்யலாம் என்ற முடிவை நான் எடுக்கிறேன்.

THIRU A. R. DAMODARAN . Mr. Deputy Chairman, Sir, I hope that the Hon. the Minister for Revenue has been declared medically fit and non-infectious. . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இவ்வளவு சட்ட முன்வடிவுகள் இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது ஒவ் வொருவரும் 5 நிமிடங்களுக்கு மேலாகப் பேசாமல் இருந்தால் நல்லது. நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, இவைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்திலே கொண்டு குறைந்த காலத்திலே பேசி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி:** கடந்த தொடரின்போது மாண்புமிகு தலைவர் அவர்கள் ஒரு வாக்குறுதியைத் தந்தார்கள். 'ஒரு நாளில் நான்கு சட்ட முன்வடிவுகளுக்கு அதிகமாக நிச்சயமாக அடுத்த தொடரிலிருந்து எடுக்க மாட்டோம்' என்று உறுதி தந்தார்கள். சென்ற முறை ஒரே நாளிலே 7, 8, 9 என்று சட்ட முன்வடிவுகளைப் பரிசீலனை செய்யும்போது, எங்களுக்கு இருந்த சங்கடங்களை எடுத்துச் சொன்னபோது, அடுத்த முறை 4 சட்ட முன்வடிவுகளுக்கு அதிகமாக எடுக்கமாட்டோம் என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதியைத் தாங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, I will be very brief in my remarks on L.A. Bill No. 47 of 1979. There is nothing much that I have to say on this Bill excepting that I would like to stress what I had stated in the past, namely, that the postponement of a debt is only likely to increase the burden on a cultivating tenant. We would have wished that during the four months that he had the Hon. Minister would have been able to come up with some sort of a permanent measure, seeking either write-off of the interest or write-off of the total rent. In whatever form the Government wanted it to be done, we would have appreciated it if a permanent relief measure could have been brought

(Thiru A. R. Damodaran) [1979 நவம்பர் 6

forth. A Bill was introduced in 1976 and it gave relief to cultivating tenants from payment of arrears of rent for Faslis prior to the period corresponding to June 1976. The period between 1976 and 1977 was the only year in which rent could be collected by owners. Now, we have another Bill which is coming up later, called the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Second Amendment Bill, whereby cultivating tenants are not bound to pay their arrears of rent.

(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் தலைமை.)

Time has been granted every time in the past 4 or 4-1|2 years and by these Temporary Relief Bills, as they are called, the dates have been sought to be extended by six months in every session of the Legislature. While I have no objection to the date being altered from July 15th to January 15th, I am quite clear in my mind that even on January 15th we cannot expect a permanent measure to bring relief to the cultivating tenants for two reasons. First, the time is very awkward because it is just after the Parliamentary Elections and before the elections to Panchayats. Secondly, it is Pongal time when these arrears can certainly not be collected. I do not see why even now the Hon. Minister could not have stated that the Government will postpone the collections till the 15th July 1980, instead of bringing in measures of this kind. I feel that the Ordinance-making powers are also being abused to a certain extent because this is not a Bill which is releasing any secrets which are likely to benefit somebody. Both the Houses of the Legislature met on the 30th April 1979 in Madras and I think it was well within the knowledge of the Revenue Department. They need not have waited till the 13th July to invoke the Ordinance making powers. It could have been considered in the normal fashion in the previous session of the Legislature and we could have extended the periods. While I recognise that Ordinance-making powers have to be given to Government in certain measures like the reduction of ceiling or some such measures which should necessarily come up as an Ordinance, I would plead with the Hon. Minister that it would be better to bring in measures like in the normal course of legislative business rather than invoke the Ordinance-powers in this regard.



1979 நவம்பர் 6] (Thiru A. R. Damodaran)

I would only like to state in this connection that any measure which seeks to bring permanent relief to cultivating tenants can be implemented only if a financial agency, either in the co-operative sector or in the Government sector or some other sector, is set apart and some massive funds are given to enable tenants to purchase lands from their owners. Thiru G. Swaminathan has mentioned this in the past and I have also mentioned that there are, literally speaking, thousands of small landowners in Thanjavur district and perhaps even in other districts, who are now in grave distress because of these moratorium measures and who are quite willing to part with their lands to their tenants if some provision could be made to compensate them for the lands to be handed over to the tenants. According to the 1971 Census, we have 4.6 million cultivators and 4.5 million landless labourers and I agree that some measure of relief is required for cultivating tenants. But all these piecemeal legislative measures are not going to bring any degree of happiness to the cultivating tenants unless we are able to assure them that they will be able to buy lands which will run into lakhs of acres in many districts, from their owners. The land ceiling measures of Government have not released even 2 lakhs acres for distribution to landless labourers and other classes of landless cultivators. The World Bank and other financial agencies have lectured to us often that the agrarian problems of India can be cured only by land reform measures and I would like this to be achieved in as peaceful a manner as possible. There are literally tens of thousands of small owners owning anything between 2 to 10 acres of land who would willingly part with their land to their cultivating tenants if the Government are able to create a financial agenci such as a Co-operative Tenancy Bank. Or, if they do not believe in the field of co-operation, they can have some other agency—I do not mind any financial agency—whereby they can compensate the owner and hand over the lands to the tenant and recover the cost in instalments. In fact, in the field of small-scale industries, the World Bank has given loans whereby capital is given to small-scale industrialists at 1 per cent interest and seed capital can be given up to Rs. 2 lakhs to a small-scale industrialist to start a venture. If we consider the problem of tenants to be so very important, as it undoubtedly is, I do not see any reason why we cannot create a financial agency which will buy the lands from the owners and give them to tenants and charge 1 per cent interest per annum as it is a measure that is required to bring permanent relief to the tenants. I only wanted

to mention this and I hope that the Hon. Minister who is anxious to help the tenants—as all of us realise and all of us will only expect—will consider a revolutionary proposal such as a financial agency which has not yet been introduced in any other State. The World Bank agencies and other financial agencies who give us advance should be approached and we should, if necessary, get Rs. 500 crores from international agencies to provide this relief which, I believe, is one way by which we can relieve the social and agrarian tensions not only in Tamil Nadu but in other densely populated areas of India.

Thank you.

**திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற, அவசரச் சட்டத்தின் பெயரால் சட்டமாக்கப்பட்டு வந்திருக்கின்ற, இரண்டு மூன்று பிரிவுகள் அடங்கிய, இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிந்த துணைத் தலைவர் அவர்கள் ஒன்றாக விவாதிக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். பொதுவாகப் பேசியவர்கள் அதிலே சில சட்டப்பிரச்சினைகள் இருப்பதால், தனித்தனியாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், 47, 46, 43 என்ற இந்த மூன்று சட்டமுன்வடிவுகளும் ஒரு தன்மைக்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனித்தனியாக பதில் சொல்வார்கள் என்று நம்பி, இந்த மூன்று சட்டமுன்வடிவுகளின் மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

(பிற்பகல் 6-20)

நியாய வாரச் சட்டத்திலே ஒரு திருத்தம். பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல் சட்டத்திலே ஒரு திருத்தம். இப்படி இரண்டு வகையான திருத்தம் ஒரே அடிப்படையில் தற்போது வந்திருக்கிறது. ஏறத்தாழ 1970 ஆம் ஆண்டில் ஆரம்பித்து, அதற்குப் பிறகு ஒரு மூன்றாண்டுக்கால தவணைக்குப் பிறகு, 1974 ஆம் ஆண்டில் இப்போது போலவே ஒரு அவசரச் சட்டம் போடும் அவசியம் ஏற்பட்டு, 1974 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஒரு 3 மாதம், 6 மாதம் என்று இதை ஒத்தி வைத்துக் கொண்டே வந்திருக்கிறோம். அதற்கான சட்டத் திருத்தத்தை ஒரு இரண்டு வரியில் போட்டிருக்கிறோம். சட்டமன்றம் கூடாத நேரத்தில் இதற்கான அவசரச் சட்டத்தைப் போட்டிருக்கிறோம். அவசரச் சட்டம்





சட்டம் அனுமதித்தபோதும், அந்த 6 மாத காலத்திற்கு நாம் அமைதியாக இருந்துவிட்டு, நாளைய தினம் கெடு முடிவடைகிறது என்ற நிலையில் இன்றைக்கு ஒரு அவசரச் சட்டம் போடுவது என்று ஒரு அவசரச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினோம். அதற்குப் பிறகு மீண்டும் சட்டமன்றம் கூடும்போது, அதற்கான முறையான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தோம். இப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே தெரிவித்ததைப் போல் சுமார் 4½ ஆண்டுக்காலத்தில் இதை 8 முறை ஒத்தி வைத்துக் கொண்டே வந்திருக்கிறோம.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், இப்போது ஒத்தி வைக்கிற 'கெடு காலம்' இருக்கிறதே, அது கேவலமாக இருக்கிறது. அதைச் சொல்வதற்கே வெட்கமாக இருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களால் கடன் சுமையைத் தாங்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது அந்த விவசாயிகளுக்குக் கடன் சுமையைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்ததற்குப் பிறகுதானே, அரசாங்கம் ஒரு சட்டத்தை—அது அவசரச் சட்டமாக இருந்தாலும் சரி, அல்லது நிரந்தரமான சட்டமாக இருந்தாலும் சரி—கொண்டுவர வேண்டும். இப்போது அவசரமாகச் சட்டம் கொண்டு வரும்போதுகூட, நாம் என்ன செய்கிறோம் என்றால், 1979 ஜூலை 15 வரை பயிரிடுவோர்களுக்கு இருக்கிற பாதுகாப்பை 1980 ஜனவரி 15 ஆம் தேதி வரை நீட்டிக்கிறோம் என்று ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வருகிறோம்.

1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி என்று கால கெடு நிர்ணயிக்கும்போதுகூட, நாம் அதை ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாகத் தான் கொண்டு வந்தோம். அதுகூட ஒரே ஒரு வரியிலான திருத்தம். விவசாயிகள் மீது குத்தகை பாக்கிக்காக வழக்கு மன்றத்திற்குப் போயிருந்தாலும் அல்லது போவதாக இருந்தாலும், விவசாயிகள் மீது வழக்குத் தொடர்ந்திருந்தாலும், தொடரப்பட்ட வழக்கில் முடிவு செய்யப்பட்டு 'டிகிரி' ஆகியிருந்தாலும், அது சிவில் கோர்ட்டாக இருந்தாலும், ரெவின்யூ கோர்ட்டாக இருந்தாலும், அந்தத் தீர்ப்பை யாரும் அமுல்படுத்தக் கூடாது. அப்படிப்பட்ட தீர்ப்புகளை அமுல்படுத்துவதன் காரணமாக 'பேரண்ட்' ஆக்டில் உள்ள நியாயவாரச் சட்டத்திலிருக்கிற 'நில வெளியேற்றச் சட்ட விதியை' வைத்துக்கொண்டு, அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது. இதைத்தான் செய்தோம். இதற்கு 4 வருஷ

யிருக்கிறது. இதற்கிடையில் இயற்கையின் கோளாறு வந்து வந்து போய்க் கொண்டிருக்கிறது. எது வந்தாலும் சரி, எது போனாலும் சரி என்று சொல்லிக் கொண்டே நாமும் இரண்டு வரியில் இத்தகைய திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். சட்டமன்றப் பேரவையிலும் சரி, சட்டமன்ற மேலவையிலும் சரி, இதே வேலைதான் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கிறது. நாமும் சும்மா இருக்கவில்லை. இயற்கையும் சும்மா இருக்கவில்லை. 1977 ஆம் ஆண்டு இதே நவம்பர் மாதத்தில் 3, 4 முறை 11, 13, 15 ஆகிய தேதிகளில் பெருமழை பெய்தது. பெரும்புயல் காரணமாகவும், பெருமழை காரணமாகவும் அப்போது தமிழகம் முழுவதும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பெருமளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று இந்த அவையிலேயேகூட நாம் பேசி விவாதித்து முடிவெடுத்திருக்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே அவையில் புயல் வெள்ளச் சேதத்தைப்பற்றிய ஒரு அறிக்கையைக்கூட சமர்ப்பித்தார்கள். வெள்ள நிவாரண அறிக்கை என்று சொல்லப்பட்ட அறிக்கையைப்பற்றி நாம் விவாதித்தோம். அந்த அறிக்கையில் அப்போது ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக, அரசுத் துறையில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது, தனியார் துறையில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது, என்ற புள்ளிவிவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசு சார்புடைய இலாக்காக்களுக்கு எவ்வளவு நஷ்டம், நேரடியாக அரசு இலாக்காக்களுக்கு எவ்வளவு நஷ்டம், தனியார் துறைக்கு எவ்வளவு நஷ்டம் என்ற கணக்கை அந்த அறிக்கையில் கொடுத்திருந்தார்கள். 1977 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சொத்துச் சேதத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதம்தான் மிக அதிகம் என்றும் அப்போது சொல்லப்பட்டது.

அதிலேகூட விவசாயிகளின் ஆடு செத்தது, மாடு செத்தது, கோழி செத்தது எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு, நிலம் மண்மேடிட்டது, பயிர் மண்மேடிட்டது, கிணறு தூர்ந்து போனது எல்லாவற்றையும் தனித் தனியாகச் சொல்லிவிட்ட பிறகு, நட்ட பயிர் அழிந்தது மட்டும்—நட்டு அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர், நாற்று நட்டு நல்ல பயிராக இருந்த போது அதற்கு ஏற்பட்ட அழிவு மட்டும் இவ்வளவு என்ற கணக்கும் கொடுக்கப்பட்டது. அரசாங்க அறிக்கையிலே சொன்னதை மட்டும் நான் இங்கே சொல்லுகிறேன். அந்த அறிக்கையை உண்மை என்று நான் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. எங்கேயோ, யாரோ உட்கார்ந்து கொண்டு எப்போதோ எழுதியது இந்த அறிக்கை, இந்தக்



கணக்கு. அப்படி அந்த அறிக்கையில் குறிப்பிட்டதைவிட அதிகமான அளவுக்குச் சேதம் இருந்திருக்குமே தவிர குறைவாக இருக்காது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அந்த அவையில் இருக்கிற மற்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இது மிக நன்றாகத் தெரியும். தனியார்க்கு ஏற்படும் நஷ்டத்தைப்பற்றி அதிகமாக யாரும் புள்ளிவிவரம் தரமாட்டார்கள். இது அவையில் இருக்கிற ஆளும் கட்சிக்காரர்கள், மற்றும் எதிர்க் கட்சிக் காரர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். யார் ஆளும் கட்சியில் இருந்தாலும், இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களைத் தருவது என்பதுதான் மரபு. இந்த முறை நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அந்த வகையில் அரசாங்கம் தனது அறிக்கையில் கொடுத்திருக்கிற புள்ளிவிவரப்படி, 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மட்டும் சேதம் ஏற்பட்டிருக்கிற சொத்துக்களின் மதிப்பு ரூ. 41,81,00,000. இது 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 3 நாட்களுக்குப் பெய்த பெருமழை வெள்ளத்தால், புயலால் ஏற்பட்ட சேத விவரம். அதற்குப் பிறகு சென்ற ஆண்டும் பெருமழை புயல் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கிற்குள் தான் நிலச் சொந்தக்காரர்களும் அடங்கியிருக்கிறார்கள், குத்தகைதாரர்களும் அடங்கியிருக்கிறார்கள். பயிர்களுக்கு மட்டும் ஏற்பட்ட சேதம் ரூ. 41,80,00,000. இந்தப் பயிர் எப்படி ஏற்பட்டது? ஊரில் இருப்பவர்களிடம் கடன் வாங்கி, கூட்டுறவுச் சங்கத்தில் கடன் வாங்கி, தன்னிடம் இருக்கிற முதலைப் போட்டு பயிரை நட்டு, அந்தப் பயிர் அழிந்துவிட்டது. அப்படியானால் அதற்குப் பிறகு அந்த விவசாயிக்கு வேறு முதலுக்கு என்ன வழி இருக்கிறது? அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா? ஆடு செத்தது, மாடு செத்தது, கோழி செத்தது என்ற மற்ற விவரங்களைப்பற்றிய இனவாரிக் கணக்கைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். விவசாயி வைத்த பயிருக்கு ஏற்பட்ட சேதம் மட்டும் ரூ. 41,80,00,000. அரசாங்கம் அதை ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த நஷ்டம் முழுவதும் தனியார் துறைக்கும், விவசாயத் துறைக்கும்தானே? அதைப்பற்றி நாம் பரிசீலிக்க வேண்டாமா? அப்படி ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டாமா? அழிந்து போன பயிர் திரும்ப வந்துவிடுமா? நான் கேட்கிறேன், ஒருமுறை அழிந்து போன பயிர்ச் சேதம் முழுவதும் அடுத்த பசலியில் விவசாயிக்கு வந்துவிடுமா? 41 கோடி ரூபாய் இழப்பை ஈடுகட்டும் அளவுக்கு அடுத்த மகசூலில் விவசாயிக்கு வருவாய் வந்துவிடுமா? அதற்குத் தகுந்த அளவுக்கு விவசாயிக்கு நிகர லாபம் கிடைக்குமா? விவசாயிக்கு ஏற்பட்ட பயிர் சேதத்தை, இந்த ஆண்டுப் பயிர்ச் செலவு போக தனக்கு வரும் வருவாயில் விவசாயியால் ஈடுகட்ட முடியுமா

என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? விவசாயி தன்னுடைய செலவு போக மிகுதியாக இந்தப் பசலியில் கிடைக்கும் தொகையைக் கொண்டு தன்னுடைய கடனை அடைக்கிற சக்தி அவனுக்கு வந்திருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்த ஆராய்ச்சிக்குப் பிறகுதானே நாம் சட்டம் போட வேண்டும். இதுதானே தற்போது தேவையானது? இப்போது நாம் ஒரு கால கெடு நிர்ணயிக்கும்போது, விவசாயிகளுக்கு இப்போது அத்தகைய வாய்ப்பும் வசதியும் வந்திருக்கிறது, ஆகவே கடனைத் திருப்பிச் செலுத்தும் கால கெடுவை 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்லி சட்டம் கொண்டுவருவதுதானே முறை? அப்படிப்பட்ட நிலை இன்றைக்கு விவசாயிக்கு இருக்கிறதா? இதை நாம் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், 1979 ஜூலை 15 என்றிருப்பதை 1980 ஆம் ஆண்டு ஜனவரி 15 என்று மாற்றிவிடுகிறோம் என்று சட்டத் திருத்தம் கொண்டு வருவது என்றால், என்ன அர்த்தம்? இங்கே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி விடுகிறார்கள். இது பேப்பரிலும் வந்துவிடும். இது போதுமா? ஒவ்வொரு முறையும் இதுதானே நடக்கிறது. ஒவ்வொரு முறை எலெக்‌ஷனுக்கு முன்னாலேயும் இந்த முறைதானே கடைப்பிடிக்கப்படுகிறது? இந்த நாட்டு விவசாயிகளுக்கும் தங்களுடைய நிலைமை புரியவில்லை, ஆட்சியில் இருப்பவர்களும் நன்றாகப் பேசி மயக்கிவிடுகிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன், இதே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரே பிரச்சினையில் 3 தினுசாகப் பேசினார்கள். நான் அவர்மீது குற்றம் சொல்வதற்காக இங்கே குறிப்பிட விரும்பவில்லை. அவர் இன்றைய தினம் அரசியல் 'பண்ணுகிறார்'. அப்படி அரசியல் பண்ணித்தான் ஆக வேண்டும். என்ன சொன்னார் அவர்?

"நெல் விலையை உயர்த்த முடியாது. நாங்கள் நெல் விலையை உயர்த்தினால், மத்திய அரசாங்கம் எங்களுக்குத் தருகிற ரூ. 140 கோடி மானியத்தை நிறுத்திவிடும்." மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் சொன்னார்கள். என்னிடத்திலே பத்திரிகைக் குறிப்பு இருக்கிறது. இங்கேயே வைத்திருக்கிறேன். தஞ்சாவூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கான கட்டிடத்திற்குக் கால்கோள் விழா நடத்தும்போது, இதைக் குறிப்பிட்டார்கள் அதற்குப் பிறகு ஒரு மாதத்தில் தஞ்சையில் பாராளுமன்றத்திற்கு இடைத் தேர்தல் வந்தது. அதையொட்டி நாகப்பட்டினத்தில் பேசிய இதே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் என்ன பேசினார் தெரியுமா? நெல் விலை





உயர்த்தப்பட வேண்டும் என்பதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறது. விவசாயிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அனுதாபத்தோடு பரிசீலனை செய்து விரைவில் நெல் விலையை உயர்த்தி அறிவிப்பார்கள் என்று பேசினார்கள். இவைகளெல்லாம் உண்மையிலேயே விவசாயிகளிடத்தில் அமைச்சர்களுக்கு இருக்கிற அக்கறை காரணமாக, விவசாயிக்கு உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது, அவனுக்குத் தற்போது வழங்கப்படும் கொள்முதல் விலை கட்டுப்படியாகவில்லை என்பதை உணர்ந்து பேசப்பட்ட பேச்சுக்களா? இல்லை! நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகவும் திட்டமிட்டு அவருக்கே உரிய பாணியில் . . .

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு சில வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், செய்ய வேண்டியவைகளைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அவைகளைக் காலாகாலத்தில் செய்துகொண்டிருக்கிறோம் என்பதையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் அறிவித்ததைப்போல்தான் இன்று நெல் விலையும் கரும்பு விலையும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** ஆளும் கட்சியைச் சார்ந்தவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படி தமது கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறாரோ அப்படியே எதிர்க் கட்சியில் இருக்கும் நானும் எனது கருத்தை இங்கே எடுத்துச் சொல்ல உரிமை உடையவன். அதைத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நான் சொன்னதெல்லாம் ஒரே அமைச்சர் ஒரே பிரச்சினையில் 1½ மாதத்திற்குள்ளாக இரண்டு தினுசான பேச்சைப் பேசியிருக்கிறார் என்பதுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்களே இங்கே பதில் சொல்லப் போகிறார். எலெக்‌ஷனுக்கு முன்னாலே நெல் விலையை உயர்த்தினால் மத்திய அரசாங்கம் நமக்குக் கொடுக்கும் மான்யத்தை நிறுத்தி விடும் என்று சொன்னவர் எலெக்‌ஷன் வந்ததற்குப் பின்னாலே "நெல் விலையை உயர்த்த வேண்டியது நியாயம்தான். உயர்த்துவோம்" என்று சொல்கிறார். இதைத்தான் நான் சொல்லுகிறேன். இதைச் சொல்லக்கூடாது என்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் என்னைத் தடுக்க முடியாது, தடுக்கக்

கூடாது. இதற்கான காரணங்கள் இன்னின்னவை என்று வேண்டுமானால்
நீங்கள் பதில் சொல்லலாம். நான் பிரச்சினையின் உள்ளே போக
விரும்பவில்லை. இறுதியாக நெல் விலையை உயர்த்தினார்கள்.

நியாய வார சட்டத்திருத்தத்தைப்பற்றிப் பேசுகிறபோது, நெல்
விலையைப்பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும். இரண்டும் ஒன்றுதான்.
அதனால்தான் சொல்லுகிறேன், இந்தச் சட்டத்தை ஒரு அவசரச் சட்டமாகக்
கொண்டு வரவேண்டிய அவசியமில்லை. 41 கோடி ரூபாய் நஷ்டம் விவசாயிக்கு
ஏற்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்துவிட்டது.
இந்த அரசாங்கம்தான் அதைக்கூட அறிவித்தது. விளைந்த பயிர் அழிந்து
விட்டது என்று அறிவித்துவிட்ட பிறகு, அதற்கு மேல் விளைய வழியில்லை
என்று தெரிந்த பிறகு, விவசாயிக்கு 'ரீ-பேயிங் கெபாசிடி' இல்லை என்று
தெரிந்த பிறகு, இன்னமும் இப்படி அவசரச் சட்டத்தின் மூலமாகவே இந்தப்
பிரச்சினையை வளர்த்துவானேன் என்றுதான் நான் கேட்கிறேன்.
பிரச்சினையை வளர்த்துக்கொண்டு போவதிலே என்ன நியாயம் இருக்கிறது?
இந்த நிலைமையை மாற்ற ஒரு நிரந்தரமான சட்டம் கொண்டுவர
வேண்டாமா? நான்கு வருஷ காலமாக இதே நிலைமைதான் இருக்க
வேண்டுமா? அதைத்தான் நான் கேட்கிறேன். ரெவின்யூ இலாக்கா பொறுப்பை

(பிற்பகல் 6-30)

எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஏற்றுக்கொண்டு முதல் அறிவிப்பாகச்
சொன்னார். "இன்றைக்கு ஒத்தி வைத்திருக்கிறோம். 1978-79 ஆம்
ஆண்டுக்குரிய குத்தகைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை" என்று
சொன்னார். 1978 ஆம் ஆண்டில் பயிர் விளைச்சலில் நஷ்டம் ஏற்பட்டு
விட்டதால், அதற்கு முந்தைய வருஷத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட
கடனை அவர்கள் திருப்பிச் செலுத்தும் சூழ்நிலையில் இல்லை. தஞ்சை
மாவட்டத்திலே ஏராளமான விவசாயிகள், சொந்தக்காரர்களாக இருந்தாலும்,
குத்தகைதாரர்களாக இருந்தாலும், கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் பெற்று
சாகுபடி செய்து பயிரிட்டு வந்தார்கள். சென்ற ஆண்டுகளிலும், இந்த
ஆண்டும் கூட்டுறவு வங்கிகளில் எவ்வளவு கடன் கொடுத்தார்கள் என்று
பார்க்க வேண்டும். கும்பகோணம் கூட்டுறவு வங்கியில் முந்தைய ஆண்டுகளில்
13 கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு
இரண்டரை கோடி ரூபாய்க்குக் குறைவாகத்தான் கடன் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இடையிலே இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. முன்பு



13 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்த வங்கி இப்போது இரண்டரை கோடி
ரூபாய் அளவுக்கு வந்துவிட்டதென்றால், என்ன பொருள்? அந்த வங்கி
செயலிழந்துவிட்டது என்றுதானே பொருள்? ஒரு மளிகைக் கடைக்காரன்
எந்தவித மளிகைப் பொருள்களையும் விற்காமல் கடையை மட்டும் திறந்து
வைத்துக்கொண்டு, தான் பழைய பாக்கியைப் பெறுவதற்காகக் கடையைத்
திறந்து வைத்திருப்பதாகச் சொன்னால் அதற்கு என்ன பொருள்? அந்தக்
கடை செத்துவிட்டது என்றுதானே பொருள்? அதைப் போலவேதான்
கூட்டுறவு வங்கிகளிலும் நடப்பு ஆண்டிற்கு வேண்டிய கடனை வழங்காமல்
பாக்கியை மட்டும் வசூலிப்பதற்காக வங்கியைத் திறந்து வைத்திருந்தால்,
வங்கி நடைபெறுகிறதென்று பொருளா? கடனும் கொடுத்து, ஏற்கெனவே
கொடுத்த கடன் பாக்கியையும் வசூலித்தால், வங்கி நடைபெறுகிறது என்று
நான் ஒத்துக்கொள்கிறேன்.

சென்னை மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கும்பகோணம் கூட்டுறவு
வங்கிக்கு 24/79 என்ற எண்ணுள்ள அறிக்கையொன்று 1—9—1979 அன்று
அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே, "மத்திய வங்கிகளின் நிதி நிலையை
யொட்டி அங்கத்தினர்களுக்குப் புதிய கடன்கள் பொருளாகவோ,
பண்டமாகவோ கொடுக்க இயலாது என்பதால், அவர்களுக்குரிய கடன்களைக்
கொடுக்காதீர்கள், நிறுத்தி வையுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.
இதைவிடக் கேவலம் என்ன இருக்கிறது? கடன் பாக்கியைக் கொடுக்க
முடியாதவர்களிடம் கடனைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள்.
பழைய கடனைத் திருப்பிக் கொடுத்தால் புதிய கடனைக் கொடுக்க வேண்டும்.
அதற்கும் மறுப்புத் தெரிவிக்கிறார்கள். இப்படிப்பட்ட மாபு இதற்கு முன்
உண்டா? இப்படியொரு அறிக்கையை அனுப்பி கடன் கொடுப்பதை நிறுத்தி
யாகிவிட்டது. அப்படியானால் விவசாயிகள் எப்படிப் பயிர் செய்வார்கள்?

ஜப்தி செய்யக்கூடாதென்று அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். ஜப்தி
செய்கிறவர்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் அமைச்சர்கள்
சொல்லுகிறார்கள். ஜப்தி செய்ததைப்பற்றி செம்பனார்கோவில் போலீஸ்
ஸ்டேஷனில் ஒரு வழக்குப் பதிவாகியிருக்கிறது. திருப்பனந்தாள் போலீஸ்
ஸ்டேஷனில் ஒரு வழக்குப் பதிவாகியிருக்கிறது. இந்த வழக்குகள் எல்லாம்
பதிவாகி பல மாதங்கள் ஆகிவிட்டன. அது குறித்து என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டது? அங்கே உண்மையிலே ஜப்தி நடந்ததா? அல்லது வேறு
கலவரம் நடந்ததா? அல்லது வேறு வீண் வம்பு தும்புகள் நடந்ததா
என்பதையெல்லாம் விசாரித்தார்களா? அதிகாரிகளைப் பார்த்துக்

கொண்டிருந்தால், ஊரில் உள்ளவன் என்ன பண்ணுவான்? இதில் காரிய சாத்தியம் என்ன? இதுபற்றி என்ன காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, வங்கிகளுடைய கடன்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டு போனால், நான் அதற்கு எப்படி பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. காரணம், அது என்னுடைய இலாக்காவல்ல. இப்போது நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொண்டிருப்பது குத்தகைதாரர்கள் பற்றிய சட்டம். வங்கிக் கடன்களைப்பற்றிப் பேசுவார்கள் என்று தெரிந்திருந்தால், அதற்குரிய குறிப்புகளைக் கொண்டு வந்திருப்பேன்.

**திரு. கோ. சி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களை இதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கட்டாயப் படுத்துகிற நிலையில் நான் இல்லை. அவர்களால் இதற்குப் பதில் சொல்ல முடியாது என்பதையும், அவர்களுக்குத் தெரியாது என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளுகிற நிலையிலும் இல்லை. புதியதாக சட்டத்தைப் படித்துக் கொண்டு வந்து சொல்ல வேண்டுமென்று நான் விரும்பவில்லை. இருக்கின்ற நடைமுறையை நான் சொல்லுகிறேன். வங்கியினுடைய நிதிநிலை சரியில்லை, ஆகவே கடன் கொடுக்கவில்லை, கடன் பாக்கி திருப்பிச் செலுத்தாததால் மேலும் கடன்களைக் கொடுக்க முடியாமல் இருக்கிறோம். கடன் வாங்கியவர்களும் நில வரியைச் செலுத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, எதை வேண்டுமானாலும் தொடர்பு வைத்துப் பேசிக் காட்ட முடியும். வங்கிக் கடன் என்பது வேறு, அதை ஒத்தி வைப்பது என்பது வேறு. குத்தகைப் பாக்கிக்காக குத்தகைதாரர்களை வெளியேற்றக் கூடாதென்று சட்டம் இருக்கிறது. ஆகவே எல்லாவற்றையும் தொடர்புபடுத்திக் காட்ட வேண்டுமென்றால், தொடர்புபடுத்திக் காட்டலாம். ஒன்றுக்கொன்று பின்னியிருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் இப்போதைக்கு கூட்டுறவுத் துறைக்கும் விவசாயத்திற்கும் ஏறத்தாழ 70 சதவீதம் தொடர்பாவது இருக்குமென்ற நம்பிக்கையில்தான், அது சம்பந்தப்பட்ட பிரச்சினை வந்திருக்கிறபோது, அதையும் சேர்த்துச் சொல்லுகிறேன், எவ்வளவு பலவீனமாக விவசாயிகள் இருக்கிறார்கள்?



குத்தகைதாரர்கள், சொந்தக்காரர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே 1980 ஆம் ஆண்டு சனவரி 15 ஆம் தேதி வரை என்று நிர்ணயித்திருப்பது பொருத்தமா, நியாயமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இதற்கிடையில் 9 மாதங்களுக்கு முன்பு சட்டமன்றம் நடந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குறுவை, தாளடி அறுவடையில் 75 : 25 என்ற விகிதத்தில் வாரம் இருக்க வேண்டுமென்று சொன்னார். முதலமைச்சர் அவர்கள் சொன்னால் அதுவே ஒரு சட்டம். அதுவும் சட்டமன்றத்திற்குள்ளே அறிவித்திருக்கிறார்கள். அந்த 75 : 25 வாரம் என்னவாயிற்று? ரெவின்யூ அமைச்சர், இந்தக் குறுவை பசலிக்கல்ல என்று மறுபடியும் விளக்கம் தருகிறார். இந்தக் குறுவைக்கு அல்ல என்றால், எதற்காக இவ்வளவு அவசரமாக அறிவித்தார்கள்? எப்போதுமே 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' கொடுத்துத்தான் சட்டம் வரும். அறிவித்ததற்குப் பிறகு, மேலும் 6 மாதங்கள் கழித்து, அமுலுக்கு வரும் என்றால், எதற்காக முன்கூட்டியே அறிவிக்கிறார்கள்? அந்த வாக்குறுதியை அளிக்க வேண்டிய அவசியமே இல்லையே. இப்படி அறிவித்ததற்குப் பிறகு, குத்தகை பாதிக்கப்படக்கூடாது. நிலச் சுவாந்தார்கள் வழக்குமன்றத்திற்குச் சென்றால், எந்த அடிப்படையிலே செல்வார்கள்? 60 : 40 என்ற அடிப்படையிலேதான் வழக்குமன்றத்திற்குப் போக முடியும். அதுதான் சட்டப்படி செல்லும். முதலமைச்சர் அவர்கள் வாயால் சொன்னதை பத்திரிகையிலே போட்டார்கள். அதை விவசாயிகள் எல்லாம் படித்துவிட்டார்கள். இதனால் ஊரிலே சண்டை வருகிறது. விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும், அல்லது உபத்திரவமாவது பண்ணாமல் இருக்க வேண்டும். மிராசுதாரர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையில் 5 : 25 வாரம் என்ற முறையில் இப்போது தகராறு ஏற்பட்டு சுமுகமாகத் ர்க்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஒன்பது மாதங்களுக்கு முன்பு 75 : 25 வாரம் என்று அறிவித்ததை ஏன் இன்று வரையிலும் அமுல்படுத்தவில்லை என்று இப்போது கேட்கிறேன். இதற்கும் ரெவின்யூ அமைச்சருக்கும் சம்பந்தம் இல்லையா? பயிரிடும் குத்தகைதாரர்கள் சட்டத் திருத்தத்தின் மீது பேசும்போது, இதைக் கேட்கக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருக்கக் கூடாதா? அப்படிப் பேசக்கூடாதா? 75 : 25 வாரம் இன்னும் அமுலுக்கு வராமலிருப்பதற்கு என்ன காரணம்? இப்படி அறிவித்தது வோட்டுகளை வாங்குவதற்காக என்று நாங்கள் சொன்னால், ஏன் கோபம் வருகிறது? அது கூட சொல்லாமல் எதிர்க் கட்சியிலே எங்களுக்கு என்ன வேலை? பயிரிடும் குத்தகைதாரர்கள்

[திரு. கோ. சி. மணி] [1979 நவம்பர் 6

பாதுகாப்புச் சட்டத்திருத்தத்தின் மீது பேசும்போது, கூட்டுறவுத் துறை பற்றிப் பேசுவது நியாயமா என்று கேட்கிறார் ரெவின்யூ அமைச்சர். அப்படி யானால் 75 :25 வாரம்கூட சம்பந்தம் இல்லையா? இதுபற்றி ஏன் சட்டத் திருத்தம் இங்கே வரவில்லை? ஆளும் கட்சிக்கு ஒரு நியதி, எங்களுக்கு ஒரு நியதியா?

(பிற்பகல் 6.40)

நிலக்கிழார்கள் யார் என்பதை 'நோட்டிஃபை' பண்ணுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இத்தனை ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள்தான் நிலக்கிழார்கள் என்று சொல்லட்டும். இதிலே கூட ஏன் குழப்பம்? யார் நிலக்கிழார்கள், யார் ஏழை விவசாயிகள் என்பதைக்கூட ஏன் மறைக்கி றார்கள்? அதற்கான நடவடிக்கையை எடுங்கள் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். அதை விட்டுவிட்டு இரண்டரை ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர் களின் மீது ஜப்தி நடவடிக்கை எடுத்தால் எப்படி? ஜப்தி நடவடிக்கை எடுத்த அந்த அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? எத்தனை மகஜர் கள் நாங்கள் கொடுத்திருக்கிறோம்? இதற்கிடையிலே எவ்வளவு சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன? பயிருக்குப் பயிர் தனித்தனியாக வியாதி வருகிறது. ஏரியாவுக்கு ஏரியா தனித்தனியாக வியாதி வருகிறது. விவசாய இலாக்காவை நான் குறை சொல்ல வரவில்லை. மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஒரு மருந்தைக் கண்டு பிடிப்பதற்குள் மற்றொரு புது நோய் வந்துவிடுகிறது. அதற்குப் பிறகு பரிசீலனை செய்து ஒரு மருந்தைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறார்கள். வைத்தீஸ்வரன் கோயில் ஏரியாவிலே, சீர்காழி தாலுகா பூராவும் தற்சமயம் இது சம்பந்தப்பட்டதாகத்தான் இருக் கிறது. இதையாவது அரசு கவனித்து ஏதாவது செய்யவேண்டும். நட வடிக்கை எடுக்க வேண்டும். இதிலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களும் நிறைய பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காகவும் தான் சொல்கிறேன். அவர்களும் அமைச்சரிடம் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். சீர்காழி தாலுக்காவிலே, வைத்தீஸ்வரன், புங்கனூர், கற்கோயில், தொழுதூர் எல்லாம் குறுவைப் பயிரிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. நான் சொல்வது இரண்டு மூன்று ஊர்கள்தான். பாக்கி 27, 28 ஊர்கள், அதைச் சுற்றியிருக் கின்ற ஏரியாக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கே நாற்று நட்டு 30 நாட் களுக்குள் ஒரு ஆரஞ்சு கலர், பிறகு மஞ்சள் கலர் வருகிறது. அதற்கு மேலே அதற்குப் பச்சையே கொள்ளவில்லை. அது கருகிப் போகவும் இல்லை.



1979 நவம்பர் 6] [திரு. கோ. சி. மணி]

வைக்கோலாகவும் ஆகவில்லை. அது மஞ்சள் நாற்றுப் போலவே இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தாண்டி வரப்பு இருந்த வயல்களிலேயும், வர ஆரம்பித்துவிட்டது. சம்பாப் பயிர்களிலேயே அது பரவ ஆரம்பித்து விட்டது. இதுவரையிலும் 3 விதமான மருந்துகள் அறிவிக்கப்பட்டாகி விட்டது. அப்படி அறிவிக்கப்பட்டு, ஒரு ஏக்கருக்கு ரூபாய் 64 செலவு செய்து மருந்து அடித்துப் பார்த்தும், அந்த நோய் தீரவில்லை. அது விரைவாக வெகுவாகப் பரவும்போல் இருக்கிறது. ஆகையால், நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், அவை நடக்கின்ற நாட்கள் 4 நாட்கள். அதைப்பற்றி, இதைப்பற்றி என்று பேசுவதற்கு நேரம் இல்லை. ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு நேரம் இல்லை, உங்களுக்கும் நேரம் இல்லை என்கிறீர்கள். எங்களுக்கும் நேரம் இல்லை. என்ன காரணம்? ஒத்தி வைப்புத் தீர்மானத்தையே ஒத்தி வைப்பது என்பதுதான் இந்த ஆட்சியில் இருக்கிறது. அதுதான் நடக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, அது அந்த விதிக்குள் அடங்குகிறது, எடுத்துக்கொள்ளப்படும் அல்லது அதற்குத் தகுதியில்லை என்று சொல்லிவிட்டால், அன்றைக்கே அந்தப் பிரச்சினை தீருமே தவிர, அப்படியில்லாமல், ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை ஒத்தி வைத்துக் கொண்டே போவது சரியல்ல. அன்றைக்காவது ஒரு நாளைக்கு இரண்டு பேரும் ஒத்துக்கொண்டு ஒத்திவைப்பது தான் வழக்கம். இதை நான் 26 ஆம் தேதியே கொடுத்தேன். இந்தப் பிரச்சினையை ஒத்தி வைப்புப் பிரச்சினையாகக் கொடுத்தேன். அதிலே அரசு தகவலைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் என்ற நல்லெண்ணத்தோடுதான் கொடுத்தேன். அதுகூட திருப்பி வந்தது. ஜப்தி என்பது கூட்டுறவுக் கடன்களுக்காகவா, நிலவரிக்காகவா என்று கேட்டு திருப்பி வந்தது. ஏதோ ரொம்ப பொறுப்போடு கேட்கிறார்கள் போல் இருக்கிறது, ரொம்ப பொறுப்புணர்ச்சியோடு இருப்பார்கள், உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நிலவரி மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் கடன்கள் என்று இரண்டும் சேர்ந்த காரணம் என்று திருப்பி எழுதிக் கொண்டு வந்து நேரடியாகக் கொடுத்தேன். இதுவரையில் ஒன்றுமே நடக்க வில்லை. என்ன ஆயிற்று? இந்த மாதிரி நேரத்திலே சொல்கிறேன். இந்த 1978 ஆம் ஆண்டுக்கு ஒட்டுமொத்தமாக அரசு போட்டிருக்கின்ற இந்த திருத்தத்தைத் தயவுசெய்து மாற்றவேண்டும். திருத்திக்கொள்ள வேண்டும். அதற்குத் தவணை கொடுக்க வேண்டும். எல்லாவற்றையும் ரத்து பண்ண வேண்டாம். அதற்கு முன்னாலே இருப்பதை வேண்டுமானால் ரத்து செய்து விட்டு, அந்த ஒரு பசலிக்காவது தவணை கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தப் பசலிக்குக்கூட ரெவின்யூ கோர்ட்டிலே நிற்கக்கூடிய சூழ்நிலைதான்

வரும். பழைய பாக்கிக்காரர்களும், அதில் மூக்கால்வாசிப் பேர்கள், இந்த ஒரு பசலிக்கும்கூட செவின்யூ கோர்ட்டிலே, வழக்கு மன்றத்திலே வந்து நிற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அதைத் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்லிக்கொள்கிறேன். மத்திய அரசுக்கு, மாநில அரசுக்கு உட்பட்ட கழகங்கள், அதைப் போல் பல்கலைக்கழகங்கள் இவைகளுக்குச் சொந்தமான நிலங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தி வராது என்று அரசு மொத்தமாகப் போட்டிருப்பது, என்னைப் பொறுத்த வரையில், நல்லதல்ல. அதையே வெறுவிதமாக 'கிளாசிபை' பண்ண வேண்டும். என்னென்ன நிலங்கள் என்று 'கிளாசிபை' பண்ண வேண்டும். ஒரு நிலம் வாங்குகிறார்கள். அந்த நிலத்தை அரசாங்கம் ஒரு பர்பசுக்காக வாங்கியிருக்கிறது. அந்த நிலம் வேறு ஒரு பர்பசுக்காக இருக்கிறது. அந்த நிலத்தையும் வருடா வருடம் குத்தகை, லீசுக்கு விடுகிறார்கள். அரசாங்கத்திற்கு எப்போது அந்த நிலம் தேவையோ, அவர்கள் பணிக்கு அந்த நிலம் எப்போது தேவைப் படுகிறதோ அப்போது உடனடியாக எடுத்துக்கொள்வார்கள். அதற்கு என்று நோட்டீஸ் கொடுப்பார்கள், எடுத்துக்கொள்வார்கள். அதிலே போய் நாம் குறுக்கிடக்கூடாது. அந்தப் பல்கலைக் கழகங்கள் வாங்குகின்ற விளைநிலங்கள் இருக்கின்றன. அவையும் லீசுக்கு விடுகிறார்கள், குத்தகைக்கு விடுகிறார்கள். அந்த நிலங்களைக் குத்தகை எடுக்கின்றவர்களிலே, நீ வேறு அவன் வேறு என்று சொல்லக்கூடாது. மாடு கட்டி உழுகிறான். ஒருவன் டிராக்டர் வைத்து உழுகிறான். அவன் விதைக்கிறான். பயிரிடுகிறான். அதற்கு வாரம் கொடுக்கிறான். அதை அறுவடை செய்து சாப்பிடுகிறான். அவனுக்கு எந்த நிலமாக இருந்தால் என்ன? இந்த நிலைமையில், அதற்கு வேறு சட்டம், இதற்கு வேறு சட்டம் என்று ஏன் வேண்டும்? அதற்கு என்ன தேவை இருக்கிறது?

இப்போது 'சத்திரம் லேண்ட்ஸ்' என்று இருக்கின்றன. தஞ்சாவூர் தாலுகாவில் இருக்கின்றன. கலெக்டர் கண்ட்ரோலில், கவர்ன்மெண்ட் கண்ட்ரோலில் இந்த சத்திரம் லேண்ட்ஸ் இருக்கின்றன. அதை லீசுக்குக் கொடுத்து அவர்கள் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். இன்றைய தேதி வரையிலே அப்படி நடந்துகொண்டிருக்கிறது. குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ், அதற்குட்பட்டுத்தான் கொடுக்கப்படுகிறது. அந்த நிலங்களும் அதற்குள்ளே சேருமோ என்று ஒரு அச்சம் எனக்கு ஏற்படுகிறது. அந்த நிலங்கள் டிரஸ்ட் நிலங்களும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இதில் டிரஸ்ட் நிலம் அல்லாத நிலங்களும் இருக்கின்றன. அந்த இலாகாவிலே இருப்பவர்களும் அதில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி எதுவும் வராமலிருந்தால், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். அது போன்ற நிலங்கள், அரசுக்குத் தேவையாக இருக்கின்ற நிலம் தவிர்த்து, சாகுபடிக்குத் தகுதியாக இருக்கின்ற நிலம் தவிர, வேறு பயனுக்கு இல்லை என்ற நிலை வருகின்ற நிலங்களைத்தான் இதிலே குறிப்பிடலாமே தவிர, அரசாங்கத் திற்குச் சொந்தமான அனைத்து நிலங்களும் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்வதை நான் விரும்பவில்லை. கூடுமானவரையில் இந்தச் சட்டத் திருத்தங்களை அரசு அவசர அவசரமாகக் கொண்டு வருகிறது. அனாவசியமாகக் கொண்டு வருகிறது. இந்த அரசாங்கத்திலேதான் இதற்கு அவசரம், அதி முக்கியத்துவம் என்று அனாவசியமான பெயர்களை வைத்து இப்படிக் கொண்டு வருகிறார்கள். இதுவும் ரொம்ப அயர்ந்துபோய் இருக்கிறது. இது தேர்தல் வேளைகளுக்காகப் பயன்படுகிறது. எப்போது தேவைப்படுகிறதோ, அப்போது பயன்படுத்திக்கொள்ள சிலவற்றை ரிசர்வ் பண்ணி வைத்துக்கொள்கிறார்கள். அதிலேயும் குறிப்பாக விவசாயிகளை எப்போது வேண்டுமானாலும் ஏமாற்றலாம் என்ற எண்ணத்திலேயே இதை யெல்லாம் ரிசர்வ் பண்ணி வைத்துக்கொண்டு எப்போதெப்போது தேவைப் படுகிறதோ, அப்போது பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்று இருக்கும் நிலைமைகளை, எண்ணத்தை மாற்ற வேண்டும். அதற்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் தேடுவதற்கான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ரூபாய் 41 கோடி அளவுக்கு பயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்த அரசு, அந்த ரூ. 41 கோடி அளவுக்காவது கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். ஒரு வருடத்திற்கு அரசால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு இப்படிப்பட்ட ஒரு நிலையை அரசு உருவாக்க வேண்டும். இதை வளர்த்துக்கொண்டே போவதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 ஆம் ஆண்டிற்குக்கூட, இந்த பசலிக்குக்கூட, அரசு விதிவிலக்குக் கொடுத்து இன்னொரு திருத்தத்தையும் அரசு ஏற்று, சில தவணைகளில் கொடுக்க வசதி அளிக்க வேண்டும். ஒரு ஆண்டிலேயே கடந்த ஆண்டினுடைய குத்தகையைக் கொடுக்கக்கூடிய சக்தி அந்த குத்தகை நிலம் வைத்திருப்பவர்களுக்கு இல்லை என்றால், அந்தக் கடனை அந்த ஆண்டிலேயே கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை இல்லாமல் இருந்து,

அதற்கு ஒரு தவணை முறை கொடுக்க வேண்டும். வேண்டுமானால் இந்த பசலியிலிருந்து, உண்மையாகவே, அவனிடமிருந்து எவ்வளவு குத்தகை பெற வேண்டுமென்று சொல்ல வேண்டும். 75:25 என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவையிலேயே அறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அவையிலே அறிவித்தால், அத்தனையும் அவர்கள் நாவிலிருந்து வருகின்ற வார்த்தைகள், அந்த வார்த்தைகள் அத்தனையும் சட்டம் என்று கருதுகின்ற இந்த நாடு, அதை ஏற்று ஏமாந்திருக்கிறது. அந்தமாதிரி ஏமாற்றத்தை ஏற்படாமல் செய்து, இனிமேலாவது திருத்தத்தைச் செய்து, "அதில் ஏமாற்றம் இல்லை, உள்ளபடியே அது விவசாயிகளுக்கு தந்திருக்கின்ற ஒரு நல்ல வரம்" என்ற அளவுக்கு அரசு செய்து காட்டட்டும் என்று சொல்லிக்கொண்டு அமைகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு நான் திருத்தமே கொடுத்திருக்கிறேன். திருத்தத்திற்குள் அடக்கி என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலே, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் திரு. வ. ஆர். தாமோதரன், திரு. கோ. சி. மணி ஆகிய இருவரும் இந்த அவசரச் சட்டத்திற்கு அவசியம் இல்லாத நிலையைப் பற்றியும், இன்றைக்கு வந்திருக்கின்ற சட்ட முன்வடிவு நிச்சயமாக எந்த முடிவையும் காட்டாது என்பதைப் பற்றியும் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவசரச் சட்டம் என்பது அரசுக்கு இருக்கின்ற பிரத்தியேக உரிமை, எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரலாம், எதற்காக வேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்றாலும்கூட, அந்த ஆயுதத்தை, அந்த வாய்ப்பினை மிகக் குறைவாக எந்த அரசு பயன்படுத்துகிறதோ, அந்த அரசுதான் மிகவும் பொறுப்பான அரசாக இருக்க முடியும். ஆனால் இன்றைக்கு அவசரச் சட்டம் கொண்டு வந்திருப்பதன் நோக்கம், அவசரமற்ற ஒரு நோக்கமாக இருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, இந்தச் சட்டத்திற்கு என்ன அவசரம் என்பது எனக்கும் புரியவில்லை. இந்த அவசரச் சட்டத்தைத் தொடர்ந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த அவசரச் சட்டம் முடிவடைவதற்குள்ளாக, அந்தப் பிரச்சினையில் தீர்வு



கண்டு, நிரந்தரமான பரிகாரத்தைக் கொடுக்கின்ற நிலை ஆக வேண்டும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, 8 முறைகள் இது அவசரச் சட்டமாகவே நீடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையைப் பற்றி அரசு உணராமல் இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. முழுமையாக உணர்ந்திருக்கிறது. அவர்களும் காரணம் சொல்லியிருக்கின்றார்கள். "இந்த அவசரச் சட்டத்தை நீடிப்பது நல்லதாக அமையாது. இது விவசாயிகளுக்கு எதிராக இருக்கும். இதனால் அவர்கள் மீது வழக்குத் தொடருகின்ற நிலைமை கட்டாயமாக இருக்கும். ஆகவே அரசு பாதுகாப்பு அளிப்பதற்குத்தான் இந்த அவசரச் சட்டம்" என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றைக்கும் இந்த இன்றைக்கு அந்த நிலைமைக்கு வந்தாகிவிட்டது. அவசரச் சட்டம் நிலைமைகள்தான் இருக்கின்றன. கடந்த 8 முறை தொடர்ந்து வந்திருக்கிறது வந்திருக்கிறது. கடந்த 6 மாத காலமாகவும் இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முடியாமல் என்றால், என்ன பொருள்? இதற்கு என்ன காரணம்? இன்று அரசு, இருக்கிறோம். இப்படி இருப்பதற்கு என்ன காரணம்? விவசாயிகளைப் பொறுத்தவரை ஒரு தெளிவில்லாத கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற நல்ல நோக்கங்களைப்பற்றி நான் குறை கூற முடியாது. இத்திருத்தச் சட்டம் பாதுகாப்பு அளிப்பதற்காக, நன்மைகளை, ஏழை எளியவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக் கொண்டுவருவது என்பது அவருடைய இதயத்திலே ஊறிப் போன ஒன்று என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கு இந்தப் பிரச்சினையில் ஒரு நிலையான பரிகாரம் காண முடியவில்லை என்றால், அதற்கு ஒத்துக்கொள்ள இன்று அவருடைய கட்சியினர் அல்லது அமைச்சரவை அவருடைய கட்சியினரை கொள்ளாமல் இருக்க வேண்டும் அல்லது அவரால் அவருடைய கட்சியினரை ... இருக்க முடியவில்லை என்[...] அவருடைய கருத்துக்கு [...] எடுத்துக் கொள்[...] வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்[...] இந்த அவசரச் சட்டத்தை இன்றைக்கு நான் நாளும் நினைக்கிறேன். இந்த அவசரச் சட்டத்[...] இன்றைக்கு இருக்கின்ற நிலைக்காக இன்னும் ஒரு [...] கொண்டு வந்திருக்கின்ற விதம் [...]

(பிற்பகல் 6-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதர[ன்] அவர்கள் கூறியது போல, இந்தச் சட்டத்தை ஜனவரி வரையிலும் நீட்டித்திருக்கிறார்கள். ஜனவரிக்குப் பிறகு ஒரு சட்டம் கொண்டுவரப்போகிறார்களா, அல்லது ஜனவரிக்குப் பிறகு இதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காணப் போகிறார்களா ஜனவரிக்குப் பிறகு இதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காண்பார்களா என்றால், இல்லை. நான் நிச்சயமாகச் சொல்கிறேன், "ஜனவரிக்குப் பிறகு"

இன்னொரு அவசரச் சட்டம்தான் வரும். இதற்கு என்ன பொருள்?
அமைச்சரவர்கள், ஜனவரிக்குப் பிறகு இதற்கு நிரந்தரப் பரிகாரம் கிடைக்கு
மென்று வாக்குறுதி தந்தால் போதும். ஜனவரிக்குப் பிறகு முழுமையாக இது
தான் கொள்கை, பயிரிடும் குத்தகைதாரர்கள் அவர்களுடைய பாக்கிகளை
இன்னின்ன முறையில் பைசல் செய்ய வேண்டுமென்று முடிவெடுத்திருக்
கிறோம், இதையெல்லாம் 'ரைட்-ஆஃப்' செய்கிறோம், இவர்களுக்கெல்லாம்
இந்த உதவிகளைச் செய்கிறோம், இந்தக் கொள்கையிலே இதுதான்
எங்களுடைய முடிவு என்று வரையறுத்துச் சொல்லும் நிலைக்கு அரசு
வந்திருக்கிறதா என்றால், இல்லை. இன்றைக்கு, தேர்தல்கள் முடிகின்ற
வரையிலும் பார்த்துக்கொள்வோம் என்ற அளவிலேதான் இந்த மசோதா
வந்திருக்கிறது. தேர்தல்களுக்குப் பிறகு சட்டமன்றம் கூடுமோ, கூடாதோ,
எனக்குத் தெரியாது. ஜனவரி 6 ஆம் தேதிவரை தேர்தல்கள் நடைபெறும்,
8 ஆம் தேதி முடிவுகள் வெளிவரும். ஆனால், இந்தச் சட்டத்தைக் கொண்டு
எப்படி நிரந்தரப் பரிகாரம் காண முடியும்? இந்த மன்றத்தை ஒரு கேலிக்
கூத்தாக்கி, இங்கே இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம், "taken
for granted" என்ற முறையில், இதை வைத்துக்கொள்ளுங்கள்,
இன்னொரு அவசரச் சட்டம் வரப் போகிறது என்று சொல்லத்தக்க நிலை
நல்லதல்ல. இதனால் ஏழை விவசாயிகளை நிரந்தரமாகச் சங்கடத்திற்கு
உள்ளாக்குகிறார்கள். அவர்களுக்கு "Psychological fear" ஏற்பட்டிருக்
கிறது. கடன் சுமையை, மாதத்திற்கு மாதம், ஆண்டுக்காண்டு அதிகமாகச்
சுமந்துகொண்டிருக்கும் நிலையில், முடிவாக அரசு என்ன முடிவு எடுக்குமோ,
அதன் காரணமாக எந்த அளவிற்கு மொத்தமாகப் பணம் கட்ட வேண்டி
வருமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கிறது. நில உடைமையாளர்கள்,
நிலச் சொந்தக்காரர்கள், இந்தச் சட்டம் எப்போது காலாவதி ஆகுமென்று
பார்த்திருந்து, பாய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதற்கிடையில்
இதனால் ஏற்படும் பரஸ்பர அவநம்பிக்கை, இதன் விளைவாக அரசுத்
தரப்பில் இருந்து கொடுக்கும் வாக்குறுதிகள் நிறைவேறுமா என்று எதிர்த்
தரப்பில் எழும் அச்சங்கள்—இப்படிப்பட்ட நிலைமைகளை எத்தனை நாட்
களுக்கு விவசாயிகள் பிரச்சினையில் நீடித்துக் கொண்டே போகப் போகி
றார்கள் என்று அறிய விரும்புகிறேன். ஆகவே இந்த அரசுக்கு நல்ல
வாய்ப்பு ஒன்றைத் தர வேண்டுமென்று நான் விரும்பினேன். அதனாலே
தான், இந்தச் சட்ட முன்வடிவைப் பார்த்தவுடன், அமைச்சரவர்களுக்குக்
கொஞ்சம் துணையாக இருக்க ஏதாவது செய்யக் கூடாதா என்று
நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள்





ஜூலை மாதம்வரை இந்தச் சட்டத்தை நீட்டிக்கலாமென்றும் அதற்குள்
இதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் காணுங்களென்றும் சொன்
னார்கள். என்னுடைய திருத்தத்தில் ஏப்ரல் மாதம்வரை இதை
நீட்டிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். எதிர்க் கட்சியினர்
கொடுக்கும் திருத்தத்தை ஆட்சியினர் சாதாரணமாக ஏற்றுக்கொள்வதில்லை.
ஆகவே என்னுடைய திருத்தத்திற்கு அமைச்சரவர்கள் ஒரு புதிய திருத்தம்
கொண்டு வந்தாலும், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அல்லது,
அமைச்சரவர்களே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, ஜூலைவரை இந்தச்
சட்டத்தை நீட்டிக்கலாமென்று தெரிவித்து, அதற்குள் இதற்கு நிரந்தரப்
பரிகாரம் காண முடியுமென்ற உறுதி கொடுக்கும் நிலை இருக்குமானால்,
நிச்சயமாக நன்றாக இருக்கும். அதைத் தவிர்த்துவிட்டு பிரச்சினைகளை
மேலும் வளரவிடுவது நல்லதல்ல. பிரச்சினைகளை வளரவிடுவதன் மூலமாக
நமக்கு ஆதாயம் அல்லது நம்முடைய அரசியல் நிலைமையைத் தெளிவாக்காத
வரையில் பரவாயில்லை, இந்தப் பக்கம் நில உடைமையாளர்களையும் விரோதப்
படுத்திக்கொள்ளக்கூடாது, அந்தப் பக்கம் குத்தகைதாரர்களையும் விரோதப்
படுத்திக்கொள்ளக்கூடாது என்கின்ற அளவிலே இரு தரப்பினருக்கும்
இடையிலே நடந்து கொண்டிருப்பது நல்லதல்ல. திட்டவட்டமாக, நிலையாக
நின்று, மக்களுடைய பொதுவான நன்மை மனத்திலேகொண்டு செயல்படும்
ஆட்சிக்கு இது நல்லதல்ல. ஆகவே என்னைப் பொறுத்தவரையில், ஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன், தெளிவாக வரையறுத்துச் சொல்ல வேண்டும்.
பரிகாரம்கூடச் சொன்னார்கள். இந்த அளவிலே "write-off"
செய்கிறோமென்று சொல்லுங்கள்; இவரவர்கள் திரும்பச் செலுத்த
முடியாதவர்களென்று நினைக்கிறோம், எனவே அவர்களுக்கு 'ரைட்-ஆஃப்'
செய்கிறோமென்று சொல்லுங்கள்; இவரவர்கள் திரும்பச் செலுத்த வேண்டு
மென்று கருதுகிறோம், அவர்கள் தவணையில் செலுத்த வேண்டும் அல்லது
மொத்தமாகச் செலுத்த வேண்டுமென்று சொல்லுங்கள்; ஓரளவிற்கு
உள்ளவர்கள் நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். ஏதாவது
ஒரு முடிவு எடுக்க வேண்டும். எந்த முடிவும் எடுக்காமல், எத்தனை
நாட்களுக்கு குழப்பமான நிலையில், அவசரச் சட்டத்தையே நீட்டித்துக்
கொண்டு போவது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சரவர்களிடம் மெத்த உரிமையோடு கேட்டுக்
கொள்கிறேன். அரசுக்குச் சாதகம் செய்வதற்காகத்தான் திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறேன். அரசாக முன்வந்து, காலத்தைக் கொஞ்சம்
நீட்டித்துக் கேட்டு, திட்டவட்டமாக இதுதான் கொள்கை என்று அறிவிக்க

வேண்டும். ஒரு கொள்கையே கிடையாது, ஆகவே வளர்த்துக் கொண்டிருக்கிறோமென்று வளர்த்துக்கொண்டே போவது அரசுக்கும் நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல, விவசாயிகளுக்கும் நல்லதல்ல, குத்தகைதாரர்களுக்கும் நல்லதல்ல, நில உடைமையாளர்களுக்கும் நல்லதல்ல, என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போதெல்லாம், 'நிலச் சுவான்தார்கள், நிலக் கிழார்கள்' என்று அலங்கார வார்த்தைகளைப் பயன்படுத்துவது மட்டுமே ஒரு அரசுக்குப் பாதுகாப்பாக இருக்க முடியாது. இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவது இந்த அரசுக்கு அவமானம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இவ்வளவுதான் உச்சவரம்பு என்று அரசு வரையறுத்துச் சொன்ன பிறகு, நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள், நிலக் கிழார்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத நிலையையும், அரசு போட்ட சட்டத்தை அரசே அமல்படுத்த முடியாமல், கையாலாகாத நிலையில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் நிலையையும் உருவாக்குகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவு அவசரம் இல்லாத நிலையிலே, தனியாக அரசின் இயலாமை காரணமாக, முடியாமை காரணமாக, முடிவெடுக்க முடியாமை காரணமாக கொண்டுவரப்பட்டுள்ளது. சட்டத்தினுடைய மறைவிலே, திரையிலே பதுங்கிக்கொண்டு, அவசரச் சட்டம் என்ற பெயரிலே கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொல்லி, இதற்குக் கால நீட்டிப்பு போனால் போகிறதென்று நாங்கள் அரசுக்குக் கொடுக்கத் தயார், இதில் தெளிவான முடிவுக்கு அரசு வர வேண்டுமென்று சொல்லி, உரையை முடிக்கின்றேன்.

*** திரு. ஆ. நல்லசிவன்:** மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மூன்று மசோதாக்களை அவையின் முன் வைத்திருக்கிறார்கள். அதிலே சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979 மற்றும் சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979 ஆகிய இரண்டு மசோதாக்களை நான் ஆதரிக்கிறேன். ஆனால் சட்ட முன்வடிவு எண் 44/1979-ஐ நான் எதிர்க்கிறேன். முதல் இரண்டு மசோதாக்களைப் பொறுத்தமட்டில், யாருக்கு இந்த மசோதாக்கள் மூலமாக நிவாரணம் தர விரும்புகிறோமோ, அவர்களுக்கு அந்த நிவாரணம் நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று நாங்களும் நினைக்கிறோம். ஆனால் தற்காலிக நிவாரணமாக, 6 மாதங்களுக்கு ஒரு



முறை இதை நீட்டித்துக்கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்த மசோதாவில் நிரந்தர நிவாரணத்திற்கு ஏற்பாடு இல்லாதபோதிலும், இதை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பதன் மூலமாக, யாருக்கு நிவாரணம் தரப்பட வேண்டுமென்று எண்ணுகிறோமோ, அவர்களுக்கு அது தற்காலிகமாகவாவது கிடைக்கட்டும் என்ற முறையில் இந்த மசோதாக்களை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல, இதில் அரசு திட்டவட்டமான முடிவிற்கு வர வேண்டுமென்று நினைக்கிறேன். அதிலே, இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள் என்று நான் அரசுக்குச் சொல்லவில்லை. இப்படித்தான் செய்ய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். வார பாக்கிகளை 'ரைட்-ஆஃப்' செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஒருவர் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, அந்தந்த ஆண்டுக்கான வாரத்தைக் கொடுக்கவே கஷ்டப்படும்போது, பழைய ஆண்டுகளுக்கான வாரத்தைக் கட்ட வேண்டுமென்றால், அது அவர்களுக்கு மிகவும் கஷ்டத்தை அளிக்கும். ஆகவே அதற்கு அவர்களுக்கு நிரந்தர நிவாரணமாக, இந்த பாக்கிகளைச் செலுத்த வேண்டியதில்லை என்று முடிவெடுத்து, அவசரச் சட்டம் முடியும்போது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டெனன்ட்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்ற பிரச்சினையை மீண்டும் வற்புறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்):** அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பைனான்சியல் ஏஜன்சீஸ் மூலமாக டெனன்ட்சுக்குக் கடன் கொடுத்து, நிலங்களை அவர்கள் வாங்க ஏற்பாடு செய்யலாமென்று சொன்னார்கள். அது வேண்டாம். நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அடங்கலில் யார் யார் டெனன்ட்ஸ் என்று இருக்கிறார்களோ, அவர்களை 'டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டில்' உள்ள பாதுகாப்பின் அடிப்படையில் நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் ஆக்கிவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறியதுபோல். அந்த நிலங்கள் டெனன்ட்சுக்குப் போவதன் காரணமாக நிலத்தை இழக்கும் நிலச் சுவான்தார்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். விவசாயிகளைப் பொறுப்பாக்குவதற்குப் பதிலாக, அவர்களுக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டு, நஷ்டஈடு பெற வேண்டிய நிலையிலுள்ள நிலச்சுவான்தார்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு கொடுக்கும் பொறுப்பை ஏற்று,

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 6

ஒத்திப் போடக் கூடாது என்பதைச் சொல்லாமல் சொல்லி ஒத்திப் போடுங்கள்
என்று சொன்னார்கள். அதுபற்றி எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள்.
தொடர்ந்து அதற்கு பதில் சொல்லத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது,
ஒன்றைச் சொன்னார்கள். இப்படியே நீங்கள் செய்துகொண்டே போனால்
"Postponement is increasing burden of Tenants" என்று
சொன்னார்கள். இப்படி தள்ளிப் போட்டுக்கொண்டே போனால், அவர்கள்
கஷ்டப்படுவார்கள் என்று சொன்னார்கள். தள்ளிப் போடுவது கடந்த
கால குத்தகை பாக்கிக்கு. அதுதான் இன்றைக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்
கிறதே தவிர, நிகழ் காலத்திற்கு அல்ல என்பது முன்பே சொல்லப்பட்டிருக்
கிறது. நிகழ் கால வார வசூலைத் தடை செய்ய முடியாது. நிகழ் கால
வாரத்தைக் கொடுக்காவிட்டால், வெளியே அனுப்புவதைத் தடை செய்யவும்
முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.
புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆண்டு ஒரு சட்டம், அதற்கு முன்னால்
வறட்சிப் பகுதிக்காக, சில இடங்களில் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம்,
இப்படி சட்டங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் வருவாய்த்துறை அமைச்சர்
அவர்கள் மாறி மாறி தன்னுடைய கருத்துக்களைச் சொன்னார்கள் என்று
குறிப்பிட்டார்கள். மாறி மாறி கருத்துக்களைச் சொல்கிறபோது, நெல்
விலையைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்து மத்திய
அரசு, மாநில அரசு ஆகியவற்றுக்கான அதிகாரங்களைக் கவனித்து வந்தால்,
அதுபற்றி மிக நன்றாகத் தெரிந்திருக்கும். மாநில அரசுக்கு உணவுப்
பொருட்களுக்கு விலையைப் போடுவதற்கும், ஏற்றுவதற்கும், கூட்டுவதற்கும்
அதிகாரம் இல்லை என்பதை நான் இன்றைக்குக் கூடத் தெரிவித்துக்
கொள்கிறேன். அப்படி இருக்கிறபோது நடைமுறையில் எப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கே கூட நன்றாகத்
தெரியும். இதே சட்டமன்றத்திலே கேரளாவிலே வாங்கினார்கள் என்று
சொன்னார்கள். ஆனால் நான் அதற்கு பதில் சொன்னேன். கேரளாவிலே
அவர்கள் செய்தது தவறு என்று. மத்தியப் பேரரசு தாக்கீது கொடுத்தது
என்று சொல்லப்பட்டது. ரூபாய் ஆயிரம் டன் அவர்கள் வாங்கியது தவறு
என்று தாக்கீது அனுப்பிய பிறகு, அவர்களும் அதை சரி என்று ஒத்துக்
கொண்ட பிறகு, 'பப்ளிக் ஆக்ஷன்' மூலம் அவர்கள் விற்று விட்டார்கள்.



1979 நவம்பர் 6] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

மத்திய அரசு அவர்களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது. இதற்கு முன்னால்
இருந்த அரசைக்கூட அதிகமாக லெவி வாடகை எப்படிக் கொடுத்தார்கள்
என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு,
"நாங்கள் பணம் கொடுக்கிறோம், நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?" என்று
சொன்னதற்குப் பிறகு அவர்கள் "நீங்கள் அதிகமாகப் பணம் கொடுத்தால்,
அந்தப் பணத்தை எங்களிடத்தில் கேட்கக்கூடாது" என்று சொன்னார்கள்.
அது மட்டுமல்ல. மாநில அரசு மத்திய அரசுக்கு அரிசி கொடுக்க வேண்டு
மென்றால், மத்திய அரசு சொல்கின்ற விலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்"
என்றும் சொன்னார்கள். இப்பொழுது இந்தியா பூராவும் ஒரே உணவு
மண்டலமாக இருப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும்.
இவ்வொரு மாநில அரசுக்கும் அவர்கள் உணவு கொடுக்க வேண்டும். அவர்கள்
சொன்ன நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு அதிக விலைக்கு வாங்கத் தயார்
என்று சொன்னதற்குப் பிறகுதான், அவர்கள் சரி என்று ஒத்துக்கொண்
டார்கள். நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்த பிறகுதான், அவர்கள்
நமக்கு அனுமதி கொடுத்தார்கள். மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேலாக
நாங்கள் 20 ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறோம். அதனால் ஏற்படுகின்ற
நஷ்டத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. மத்தியப் பேரரசு நாம்
உணவுப் பொருள்களை வாங்குகின்ற விலையை நமக்குக் கொடுப்பதில்லை.
அவர்கள் நிர்ணயித்துள்ள விலைக்குத்தான் நம் உணவுப் பொருள்களை
வாங்குகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி,
நான் நெல்லைப் பற்றி மாறி மாறிச் சொல்ல விரும்பவில்லை. தேர்தலுக்
காகவும் நான் சொல்லவில்லை. தேர்தல் பற்றி நான் கவலைப்படவும் இல்லை.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் 75 : 25 நியாய
வாரம் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதுபற்றி அரசு ஆராய்ந்துகொண்
டிருக்கிறது. அரசு விரைவிலே அதன்மீது முடிவெடுக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். இன்னொன்றையும் திரு. மணி அவர்கள் சொன்
னார்கள். இப்படி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, வாரிய நிலங்
களுக்கு எல்லாம் கூட விதிவிலக்குக் கொடுத்திருக்கிறீர்களே என்று சொன்
னார்கள். அதுபற்றி நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
அரசு நிலமானாலும் சரி அல்லது அரசு வாரியத்தினுடைய நிலமானாலும் சரி
குத்தகை விகிதத்தில் எந்தத் தவறும் இல்லை, மாற்றமும் இல்லை. நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குத்தகை கொடுப்பதிலே
மாற்றம் வேண்டும் என்று சொன்னார்கள். குத்தகை கொடுப்பதிலே

(பிற்பகல் 7-10)

பிரச்சினையில்லை. இருக்கிற சட்டப்படி 40-60 தான் குத்தகை. இப்போது கொண்டு வந்திருப்பது என்னவென்றால், அந்த நிலங்கள் இந்த அரசுக்கோ, பல்கலைக் கழகங்களுக்கோ, வாரியங்களுக்கோ சொந்தமாக இருந்தால், அவர்களை வெளியே அனுப்பும் உரிமை இந்தச் சட்டத்தின் மூலம் இருக்கிறது. அதற்குக் காரணம், எடுக்கப்படுகின்ற நிலங்கள் எதற்காக எடுக்கப்படுகின்றன என்று பார்க்க வேண்டும். அந்த நிலங்கள் உள்ளாட்சித் துறைக்கோ, வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது போன்ற தேவைகளுக்கோ எடுக்கப்படுகின்றபோது, அப்படி எடுப்பது அரசு என்று சொல்லும்போது, இது தனித்தன்மை வாய்ந்தது. (உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் தம்முடைய இருக்கையிலிருந்து எழுந்தார்).

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்) :** உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும் (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பொது மக்களுடைய நலனுக்காக, சமுதாயத்தினுடைய நலனுக்காக நிலம் எடுக்கப்படுகிறது. சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதற்காக என்று சொன்னால், விதைப் பண்ணை ஏற்படுத்துவதற்காக, ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்காக எடுக்கும்போது, அவர்களை வெளியே அனுப்பலாம் என்று இருக்கிறதே தவிர வேறல்ல. இந்தச் சட்டம் இப்போது நாங்கள் கொண்டுவந்ததல்ல. இந்தச் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது 18—3—1975-லே அவையிலே கொண்டு வந்தது. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு முன்னாலே தொடர்ந்து இருக்க முடியாத காரணத்தினாலே, அதை விட்டுவிட்டது. அப்போது இருந்த சில சிக்கல்களினாலே இதைக் கொண்டு வந்தார்கள். இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** நியாய வாரச் சட்டத்திலே ஒரு திருத்தம். அந்தச் சட்டத்தின் மிக முக்கிய நோக்கமே அவர்கள் கொடுக்க வேண்டிய குத்தகையைப் பற்றியது, வாரத்தைப் பற்றியது. அதிலே ஒரு கிளாரிஃபிகேஷன், ஒரு சந்தேகம் கேட்பதிலே தவறு ஒன்றுமில்லை. நிலத்தை தேவைப்படும்போது எடுக்க இந்தத் திருத்தமா? அல்லது அந்த நிலத்துக்குக்



குத்தகை கொடுத்திருந்தால் சட்டப்படி குத்தகை கிடையாதா? அல்லது இஷ்டப்படி அரசாங்கம் நிர்ணயிக்கின்ற குத்தகையா என்ற விளக்கம் சொல்ல வேண்டும். அதற்குத்தான் நான் எழுந்தேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** குத்தகை நிலம் என்றால் அந்தக் குத்தகைக்கு வாங்குவது, கொடுப்பது எல்லோருக்கும் ஒன்றுதான். இன்றைக்கு இருக்கிறபடி 40-60 தான். ஆனால் எடுக்கப்படுகின்ற நிலம் அரசின் நலனுக்கு எடுக்கப்படும்போது, அரசின் நலன் என்றால் அது சமுதாயத்தின் நலன். அப்படி சமுதாயத்தின் நலனுக்கு நிலம் எடுக்கப்படும்போது குத்தகைதாரரை வெளியேற்றுவதைத் தடை செய்ய முடியாது என்பதற்குத் தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டம் 18—3—1975 ஆம் நாளன்று கொண்டு வரப்பட்டது.

**திரு. கோ. சி. மணி :** குறிக்கோளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இனிமேல் குறிக்கோளில் விவரங்கள் தெளிவாக இருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். இப்போது நாங்கள் கேட்டோம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த சட்ட மன்றத்தில் பேசப்படும் பேச்சு. ஆனால் சட்டம் கொண்டுவரும் நோக்கத்தைப்பற்றிப் பேசும்போது, இந்த வாசகத்தைப்பற்றித்தான் நாம் பேசுகிறோம். அதிலே ஒரு திருத்தம் வரும்போது தான் அதைப்பற்றி நினைக்கிறோம். ஆகவே, குறிக்கோள் தெளிவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபோது, இந்த 44-வது மசோதாவைப்பற்றிக் கூறியபோது. அது பொது நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டது என்றும், பொது நன்மைக்காகத் தான் நிலங்களை எடுக்கிறோம் என்றும் சொன்னார்கள். விளை நிலங்களாக இருந்து சாகுபடி செய்யும் நிலங்களை பொது நன்மைக்காக அரசு எடுத்தால், சாகுபடி செய்பவர்களை வெளியேற்றும்போது, அவர்களுக்கு அரசு புறம்போக்கு நிலத்திலிருந்து பயிரிட நிலம் கொடுக்க வேண்டும். அப்படி ஏற்பாடு செய்யாமல் அரசு நிலங்களை எடுத்தால், அது அரசு எடுத்தாலும் வேறு யார் எடுத்தாலும், விவசாயிக்கு நிலம் இல்லாமல் போகிறது. அதற்கு என்ன பாதுகாப்பு சொல்லப்பட்டிருக்கிறது? இன்னொன்று, நிலத்தை எடுத்த பிறகு அந்தக் கார்ப்பரேஷன் நிலத்தை குத்தகைக்கு விட்டு டெனன்ட் பயிரிட்டால்,

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 6

(பிற்பகல் 7-10)

பிரச்சினையில்லை. இருக்கிற சட்டப்படி 40-60 தான் குத்தகை. இப்போது கொண்டு வந்திருப்பது என்னவென்றால், அந்த நிலங்கள் இந்த அரசுக்கோ, பல்கலைக் கழகங்களுக்கோ, வாரியங்களுக்கோ சொந்தமாக இருந்தால், அவர்களை வெளியே அனுப்பும் உரிமை இந்தச் சட்டத்தின் மூலம் இருக்கிறது. அதற்குக் காரணம், எடுக்கப்படுகின்ற நிலங்கள் எதற்காக எடுக்கப்படுகின்றன என்று பார்க்க வேண்டும். அந்த நிலங்கள் உள்ளாட்சித் துறைக்கோ, வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைப்பது போன்ற தேவைகளுக்கோ எடுக்கப்படுகின்றபோது, அப்படி எடுப்பது அரசு என்று சொல்லும்போது, இது தனித்தன்மை வாய்ந்தது. (உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் தம்முடைய இருக்கையிலிருந்து எழுந்தார்).

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்) :** உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும் (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பொது மக்களுடைய நலனுக்காக, சமுதாயத்தினுடைய நலனுக்காக நிலம் எடுக்கப்படுகிறது. சமுதாயத்திற்குப் பயன்படுத்துவதற்காக என்று சொன்னால், விதைப் பண்ணை ஏற்படுத்துவதற்காக, ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதற்காக எடுக்கும்போது, அவர்களை வெளியே அனுப்பலாம் என்று இருக்கிறதே தவிர வேறல்ல. இந்தச் சட்டம் இப்போது நாங்கள் கொண்டுவந்ததல்ல. இந்தச் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது 18—3—1975-லே அவையிலே கொண்டு வந்தது. ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு முன்னாலே தொடர்ந்து இருக்க முடியாத காரணத்தினாலே, அதை விட்டுவிட்டது. அப்போது இருந்த சில சிக்கல்களினாலே இதைக் கொண்டு வந்தார்கள். இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** நியாய வாரச் சட்டத்திலே ஒரு திருத்தம். அந்தச் சட்டத்தின் மிக முக்கிய நோக்கமே அவர்கள் கொடுக்க வேண்டிய குத்தகையைப் பற்றியது, வாரத்தைப் பற்றியது. அதிலே ஒரு கிளாரிபிகேஷன், ஒரு சந்தேகம் கேட்பதிலே தவறு ஒன்றுமில்லை. நிலத்தை தேவைப்படும்போது எடுக்க இந்தத் திருத்தமா? அல்லது அந்த நிலத்துக்குக்



1979 நவம்பர் 6] [திரு. கோ. சி. மணி]

குத்தகை கொடுத்திருந்தால் சட்டப்படி குத்தகை கிடையாதா? அல்லது இஷ்டப்படி அரசாங்கம் நிர்ணயிக்கின்ற குத்தகையா என்ற விளக்கம் சொல்ல வேண்டும். அதற்குத்தான் நான் எழுந்தேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** குத்தகை நிலம் என்றால் அந்தக் குத்தகைக்கு வாங்குவது, கொடுப்பது எல்லோருக்கும் ஒன்றுதான். இன்றைக்கு இருக்கிறபடி 40-60 தான். ஆனால் எடுக்கப்படுகின்ற நிலம் அரசின் நலனுக்கு எடுக்கப்படும்போது, அரசின் நலன் என்றால் அது சமுதாயத்தின் நலன். அப்படி சமுதாயத்தின் நலனுக்கு நிலம் எடுக்கப்படும் போது குத்தகைதாரரை வெளியேற்றுவதைத் தடை செய்ய முடியாது என்பதற்குத் தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டம் 18—3—1975 ஆம் நாளன்று கொண்டு வரப்பட்டது.

**திரு. கோ. சி. மணி :** குறிக்கோளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், நன்றாக இருந்திருக்கும். இனிமேல் குறிக்கோளில் விவரங்கள் தெளிவாக இருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். இப்போது நாங்கள் கேட்டோம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சட்ட மன்றத்தில் பேசப்படும் பேச்சு. ஆனால் சட்டம் கொண்டுவரும் நோக்கத்தைப்பற்றிப் பேசும்போது, இந்த வாரத்தைப்பற்றித்தான் நாம் பேசுகிறோம். அதிலே ஒரு திருத்தம் வரும்போது தான் அதைப்பற்றி நினைக்கிறோம். ஆகவே, குறிக்கோள் தெளிவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியபோது, இந்த 44-வது மசோதாவைப்பற்றிக் கூறியபோது, அது பொது நன்மைக்காகக் கொண்டுவரப்பட்டது என்றும், பொது நன்மைக்காகத் தான் நிலங்களை எடுக்கிறோம் என்றும் சொன்னார்கள். விளை நிலங்களாக இருந்து சாகுபடி செய்யும் நிலங்களை பொது நன்மைக்காக அரசு எடுத்தால், சாகுபடி செய்பவர்களை வெளியேற்றும்போது, அவர்களுக்கு அரசு புறம்போக்கு நிலத்திலிருந்து பயிரிட நிலம் கொடுக்க வேண்டும். அப்படி ஏற்பாடு செய்யாமல் அரசு நிலங்களை எடுத்தால், அது அரசு எடுத்தாலும் வேறு யார் எடுத்தாலும், விவசாயிக்கு நிலம் இல்லாமல் போகிறது. அதற்கு என்ன பாதுகாப்பு சொல்லப்பட்டிருக்கிறது? இன்னொன்று, நிலத்தை எடுத்த பிறகு அந்தக் கார்ப்பரேஷன் நிலத்தை குத்தகைக்கு விட்டு டெனன்ட் பயிரிட்டால்,

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 நவம்பர் 6

அந்த டெனன்டுக்கு 60-40 என்ற முறைக்குப் பாதுகாப்பு இல்லை.
எக்சம்ஷன் என்று சொல்லும்போது, இரண்டு சட்டங்களின் மூலமாக இருக்கும்
பாதுகாப்பும் சர்க்கார் நிலங்களில் பயிரிடும் விவசாயிகளுக்கு இல்லாமல் போய்
விடும். ஆகவே, அந்தப் பாதுகாப்பு, சட்டத்தில் இல்லாமல், மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொல்வதன் மூலம் எப்படி கிடைக்கும் என்று கேட்க
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** சட்டத்திலே மிகத் தெளிவாக
இருக்கிறது. சட்டம் என்பது உங்களுக்குத் தெரியும். 1955-56 ஆம் ஆண்டு
கொண்டுவரப்பட்ட குத்தகைதாரர் சட்டம் பயிர் செய்யும் குத்தகைதாரர்களை
வெளியேற்றக்கூடாது என்ற சட்டம். அதன் பிறகு அரசு நிலங்களுக்கு
முதலிலே விதிவிலக்கு வந்தது. நீதிமன்றங்களுக்குப் போனபோது ஒரு
நீதிபதி அதற்கு மாறாகவும், சில நீதிபதிகள் சாதகமாகவும் தீர்ப்புக் கொடுத்த
தனாலே அப்போது இருந்த அரசு அந்தச் சங்கடங்களை நீக்க இதைக்
கொண்டு வந்தார்கள். இப்போது அந்தச் சங்கடங்கள் வருவதற்கு முன்
னாலேயே திருத்தம் கொண்டு வருகிறோம். அரசு நிலம் பயிரிட்டாலும்
சரி, வேறு எந்த நிலம் பயிரிட்டாலும் சரி, 40-60 என்பதிலே எந்தவிதமான
பாகுபாடும் இல்லை. அந்த நிலங்களை எடுத்து அரசு பயன்படுத்துகின்ற
போது, அல்லது அந்த நிலங்களை அரசு வாரியங்கள் பயன்படுத்துகின்ற
போது, குத்தகைதாரர்களை வெளியேற்றக் கூடாது என்று தடைச் சட்டம்
இருக்கிறதே, அதிலிருந்து விதி விலக்கு அளிக்கத்தான் இந்தச் சட்டம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவுகளைப்
பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி முடித்த பிறகு, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களின் பேச்சிற்கு பதில் சொல்லி முடித்த
பிறகு, சட்ட முன்வடிவை எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதைத் தவிர, அதில்
உறுப்பினர்கள் குறுக்குக் கேள்வி கேட்டு, அவற்றுக்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பதில் சொல்வது சம்பிரதாயத்திலே இல்லாத ஒன்றாக இருக்
கிறது.

**திரு. ஆ. நல்லசிவன்:** மசோதாவிலே இல்லாத ஒன்றை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசி முடித்த பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.



1979 நவம்பர் 6] (மேலவைத் துணைத் தலைவர்)

அதற்குப் பின்பும் இப்படி உறுப்பினர்கள் எழுந்து கேள்விகளைக் கேட்டு,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்வது
சம்பிரதாயம் இல்லை.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்
போது, அவர்களது பதிலிலே எழுந்த சந்தேகங்களை நிவர்த்திக்க மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே முற்பட்டேன். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் 'நான் பேசி முடிந்த பிறகு கேளுங்கள்' என்று
சொன்னார்கள். ஆகவே தான் இப்போது கேட்கிறோம். இது எப்படி குறுக்
குக் கேள்வியாகும்? சந்தேகங்களைக் கேட்பதும், அமைச்சர் அவர்கள் அந்த
சந்தேகங்களை நிவர்த்திப்பதும் ஒரு மரபு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்ட முன்வடிவுகளைப்
பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எழக்கூடிய சந்தேகங்
களையெல்லாம் கேட்பதற்காகத்தான் சட்ட முன்வடிவுகள் மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.
அதிலே தங்களுடைய சந்தேகங்களை எழுப்ப வேண்டும். அவைகளுக்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு
சட்ட முன்வடிவுகள் சட்டமாக்க எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அதை
விட்டுவிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது உறுப்பினர்கள்
கேள்வி கேட்டு, அவர் முடித்த பிறகும் கேள்வி கேட்டால், எப்படி சரியாக
வரும்?

**திரு கோ. சி. மணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சை
திசைதிருப்பவோ, மாற்றுக் கருத்துக்களைப் பேசவோ செய்தால், அது தவறு.
ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டு வருவதிலே ஏற்
படுகின்ற சந்தேகங்களை நிவர்த்திக்க முற்பட்டு கேள்வி கேட்பது தப்பா?
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட கேட்பதற்கு அனுமதித்தார்கள். நான்
பேசி முடித்த பிறகு நீங்கள் கேட்கலாம் என்று சொன்னார். இது நாளைக்கு
நடைமுறையிலே வரும். இந்தப் பிரச்சினை எனக்கு மட்டுமல்ல, உங்களுக்
கும் உண்டு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்படிக் கேட்பது நடை
முறையில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேன்.

[1979 நவம்பர் 6

திரு. ஏ. ஆர். தாமோதரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
பதிலில் இந்த சந்தேகத்தை அவர் தெளிவாக 'ரிமூவ்' பண்ணவில்லை.
Fair Rent -க்கு இது 'அப்ளிக்கபிள்' இல்லையா என்ற சந்தேகம்
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருந்தால். . .

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member may well
speak in English itself.

THIRU A. R. DAMODARAN: I only wanted the Hon. Minister
to fully appreciate this because .........
பேர் ரென்ட் ஆக்ட்லே, 19-வது செக்ஷனிலே
கொடுக்கப்பட்ட exemption ஆல் 'ஃபெயர் ரென்ட்' ஆல்டர் ஆகுமா?
ஆகாதா? என்று "Statement of objects and reasons" ல் சரியாகச்
சொன்னால், இந்த சந்தேகம் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன்
அவர்களுக்கும், திரு. மணி அவர்களுக்கும் வந்திருக்காது. அவர்கள் இரண்டு
பேரும் 'எக்ஸ்ப்பீரியன்ஸ்ட் கவுன்சிலர்ஸ்'. மாண்புமிகு அமைச்சர் அவர்
களுடைய பதிலே தெளிவாக இல்லாததால், திரும்பவும் அவரைக் கேள்வி
கேட்கும் நிர்ப்பந்தமும், அவசியமும் ஏற்பட்டு இந்த சந்தேகத்தினால்தான்
கேட்கிறார்கள்.

* திரு. ஆ. நல்லசிவன்: 1955 ஆம் ஆண்டுச் சட்டத்தில் அரசு நிலங்களுக்கு
விதிவிலக்கு இல்லை. 1895 ஆம் ஆண்டு சென்ட்ரல் ஆக்ட்-லே அந்தமாதிரி
அரசு நிலங்களுக்கு இச்சட்டங்கள் பொருந்தாது என்று இருக்கிறது.
சென்ட்ரல் ஆக்ட் வெள்ளைக்காரன் காலத்திலே போட்ட சட்டம். நாட்டிலே
டெனன்டுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று சட்டம் வந்த பின்பு, அதை
மாற்ற வேண்டுமே தவிர, செருப்புக்கு ஏற்றவாறு காலை வெட்டும் தன்மை
இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சந்தேகத்தை ஒருமுறை
மொத்தமாகக் கேட்டுவிடுங்கள். அடிக்கடி கேட்க வேண்டாம்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பழைய சட்டத்தின் அடிப்
படையில்தான் இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நான் தெளி
'வாகச் சொல்லியிருக்கிறேன். அவர்களை வெளியேற்றுவதில் அரசுக்கு
உரிமையிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். குத்தகையிலே எந்தவித
மான மாறுபாடும் இல்லை. அரசு நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்தாலும்,
60-40 தான். அதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை,



1979 நவம்பர் 6]

திரு. கோ. சி. மணி: 7-வது பிரிவு முடிந்து, 8-வது பிரிவிலே திட்டவட்ட
மாக, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும், அல்லது மாநில அரசுக்குச்
சொந்தமான கழகங்கள், பல்கலைக் கழகங்கள் இவைகளுக்கு விதிவிலக்கு
இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர 'ஃபேர் ரென்ட்' உண்டா
என்று இல்லை. விதிவிலக்கைப் பொறுத்தவரையில், சட்டத்திலே விதிமுறை
களுக்கு ஏற்ப நிலங்களுக்கும் விதிவிலக்கு தானே.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 1956 ஆம் ஆண்டுச் சட்டமே
குத்தகைதாரரை வெளியேற்றுவதிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகும்.
அந்தச் சட்டத்தினுடைய 'ஹெடிங்' "குத்தகைத்தாரரை வெளியேற்று
வதிலிருந்து பாதுகாப்பு". இது அதற்கு விதிவிலக்கு.

திரு. கோ. சி. மணி: ஒரேயொரு சந்தேகம். சந்தேகம் தான். அதைப்
பெரிதாக நினைக்கக்கூடாது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசிமுடிக்கும் வரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காத்து இருந்தால்
ஒரேயடியாக அவர் பதில் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
எழுந்து பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை.

திரு. கோ. சி. மணி: குத்தகைதாரரை வெளியேற்றுவது என்பது
குத்தகையைப் பற்றியது மட்டுமல்ல. இன்னொரு பிரிவும் இருக்கிறது.
குத்தகையைச் சரியாக அளக்காவிட்டால், கோர்ட்டுக்குப்போய் ஆர்டர்
வாங்கிய பிறகும் அளக்காவிட்டால், குத்தகைதாரரை நிலத்திலேயிருந்து வெளி
யேற்றலாம் என்று இருக்கிறது. இன்னொன்று, விவசாயிகள் நில உச்சவரம்
புச் சட்டத்தின் அடிப்படைக்கு மேற்பட்டு நிலங்களை வைத்திருந்தால், அவர்
களை வெளியேற்றலாம் என்று இருக்கிறது. மேலும், விவசாயக் காரியங்
களுக்கு அல்லாத பிற காரியங்களுக்கு அந்த விவசாய நிலங்களை உபயோகப்
படுத்தினால், அந்த அடிப்படையிலே விவசாயிகளை வெளியேற்றலாம் என்று
இருக்கிறது. ஆகவே, நில வெளியேற்றம் என்பது வேறு. குத்தகை பாக்கிக்
காக மட்டுமே வெளியேற்ற இடமில்லை. மேற்கண்ட இவ்வளவு காரியங்களுக்
கும் வெளியேற்றலாம் என்று இருக்கிறது. இவ்வளவு காரியங்களும் இருக்கும்
போது, அரசாங்கத்திற்கு அந்த நிலம் தேவைப்பட்டால், எடுத்துக்கொள்வது
என்று 'கிளாசிபிக்கேஷன்' வைத்தால் என்ன? அது தான் நாங்கள் கேட்
பது. இந்த விளக்கம் அதிலே இல்லை என்பது தான் எங்கள் கேள்வி.

[1979 நவம்பர் 6

(பிற்பகல் 7-20 )

THIRU A. R. DAMODARAN : Mr. Deputy chairman, Sir, on a point of order. Normally when these Bills are sent to us, it is always usual to print the original section and the amended section. The reason why this confusion has arisen is that in the circulated papers, the original section has not been given to us along with the amendment. When I go to the Library, there is only one book containing the Cultivating Tenants Protection Act. The said book will not be available for other Members and how then can these Members verify the provision in the original Act, Sir?

MR. DEPUTY CHAIRMAN : I understand that Annexure has also been sent to all the hon. Members. This is what I learn from the office. The Bill is only for the purpose of extension of the particular Act. The Act which was to lapse by 15th July 1979 had been extended up to 15th January 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னுள்ள இந்தச் சட்டமுன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment—

"In clause 2, for the words "15th day of January 1980", the words '1st day of April 1980" be substituted."

திரு. கோ. சி. மணி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.



1979 நவம்பர் 6]

திரு. க. இராமமூர்த்தி: இந்தத் திருத்தத்தின்மீது பேச வேண்டிய அனைத்துக் கருத்துக்களையும் நான் ஏற்கெனவே பேசிவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உள்ளடக்கிப் பேசியிருந்தாலும்கூட, எந்த வாக்குறுதியையும் தரவில்லை. வாக்குறுதி தரமுடியாத நிலையில் இருக்கிறார்களோ என்பது தெரியவில்லை. எனவே என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கும் சேர்த்தே பதில் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், மிக விரைவில் முடிவெடுக்க வேண்டும் என்று அரசு எண்ணிக் கொண்டிருப்பதால், இந்தத் திருத்தம் தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?

திரு. க. இராமமூர்த்தி: I think I must give an opportunity மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அரசு தனது வாக்குறுதியை செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். நிறைவேற்றும் என்று கருதி என்னுடைய திருத்தத்தை நான் திரும்பப் பெறுகிறேன். Sir, I withdraw my amendment.

திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்

**தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979)**

[எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 6

பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாது காத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சில உறுப்பினர்கள் : மற்றவை நாளைக்கு.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் முன் மூன்று சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிப் பேசத் தேவை யில்லை என்றால் அவைகள் அனைத்தையும் நிறைவேற்றி விடலாம்.

(3) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு புயலால், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 46/1979.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும்

@ 159 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு எண் 46/1979) (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979)**

1979 நவம்பர் 6] [மேலவைத் துணைத் தலைவர்]

குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** இந்தச் சட்ட முன்வடிவின் மீது நான் பேசுவதற்கு அனுமதி கேட்டிருந்தேன். ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும் என்று அப்போது சொல்லப்பட்டது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. எஸ். இராம கிருஷ்ணத் தேவர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசுவார்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் என்ன பதில் சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. இது ஏதோ சினிமா கதையைப்போல் அல்லவா இருக்கிறது. "என்னடி மீனாட்சி, சொன்னது என்னாச்சி" என்பதுபோல் இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முதலில் சொல்லப்பட்டது என்னவென்றால் முதல் சட்ட முன்வடிவின்மீது பேசிவிட்டு பிறகு தேவை யிருந்தால் இதன் மீது பேசலாம், இல்லாவிட்டால் நிறைவேற்றிவிடலாம் என் பதுதான். மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் பேச மாட்டோம் என்று சொன்னார்கள். . .

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** நாங்கள் சொன்னால் தானே. ஆட்சியில் இருப்பவர்களுக்கும் சில விஷயங்கள் தெரியும். அவர்களுக்குச் சில விஷயங்கள் தெரியாமலேகூட இருக்கலாம். எங்களுக்குக் கூட சில விஷயங்களில் தெரியாமல் இருக்கலாம். அதைச் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்பில்லை என்றால், என்ன அர்த்தம்? அரசாங்கத்தில் உள்ளவர்களைப் பொறுத்த வரையில், புயல் வெள்ள நிவாரணத்தைப்பற்றிப் பேசியபோது கொடுத்த வாக்குறுதிகளில் 75 சதவிகிதத்தை இன்னும் நிறைவேற்றாமலே இருக் கிறார்கள். இதன் காரணமாக எங்கள் பகுதியில் உள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

சமீபத்தில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்கூட புயல் புகல் அடிக்கும்போது மக்களுக்கு உதவிட வேண்டும் என்பதற்காகப் புயல் புகல் இடங்கள் என்று கட்டப்படுவதைப் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அந்தக்

2. *Amendment of section (1), President's Act 36 of 1976.*—In sub-section (3) of section 1 of the Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Act, 1976 (President's Act 36 of 1976), for the figures, letters and words "15th day of July 1979" the figures, letters and words "15th day of January 1980" shall be substituted.

3. *Repeal.*—The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Second Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 8 of 1979), is hereby repealed.



## இணைப்பு X

(118 ஆம் பக்கத்தில் இனம் 6 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### L.A. BILL No. 46 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Act, 1978.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Second Amendment Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 13th July 1979.

2. *Amendment of section 3, Tamil Nadu Act 17 of 1978.*—In section 3 of the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Act, 1978 (Tamil Nadu Act 17 of 1978) (hereinafter referred to as the principal Act), for the figures, letters and words "15th day of July 1979", the figures letters and words "15th day of January 1980" shall be substituted.

3. *Amendment of section 4, Tamil Nadu Act 17 of 1978.*—In section 4 of the principal Act, for the figures, letters and words "15th day of July 1979", the figures, letters and words "15th day of January 1980" shall be substituted.

4. *Repeal.*—The Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Second Amendment Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 9 of 1979), is hereby repealed.

இணைப்பு XI

[125 ஆம் பக்கத்தில் இனம் 6 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 44 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Cultivating Ten[ants] Protection Act, 1955 and the Tamil Nadu Cultivating Tena[nts] (Payment of Fair Rent) Act, 1956.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Cultiv[at]ing Tenants Protection and Payment of Fair Rent (Amendme[nt]) Act, 1979.

2. *Amendment of Tamil Nadu Act XXV of* 1955.—In the Ta[mil] Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu XXV of 1955) after section 7, the following section shall be shall be deemed always to have been added, namely:—

" 8. *Act not to apply to lands owned by Central Governmen[t], State Governments, etc.*—Nothing contained in this Act shall app[ly] to any land owned or taken on lease by,—

(i) the Central Government or any State Government or a local authority; or

(ii) any company or corporation owned or controlled [by] the Central Government or any State Government; or

(iii) any University constituted by any law.".

3. *Amendment of Tamil Nadu Act XXIV of* 1956.—In the T[amil] Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, (Tamil Nadu Act XXIV of 1956), after section 18, the foll[owing] section shall be and shall be deemed always to have been a[dded], namely:—

" 19. *Act not to apply to lands owned by Central G[overn]ment, State Government, etc.*—Nothing contained in thi[s Act] shall apply to any land owned or taken on lease by,—



(i) the Central Government or any State Government or [an]y local authority; or

(ii) any company or corporation owned or controlled by [th]e Central Government or any State Government; or

(iii) any University constituted by any law."

1979 நவம்பர் 7]

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, [illegible]

புதன்கிழமை, 1979 நவம்பர் 7 [illegible]

[illegible] பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் [illegible] சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது. [illegible]

**Stagnation Increments.**

*81 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thirumathi C. THAMIZHARASI and Thiru S. MUTHUSAMY): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether, according to G.O. Ms. No. 1050, Finance (Pay Commission), dated 5th October 1978, stagnation increments have been allowed only for those personnel, the maximum of whose scale of pay does not exceed Rs. 1,500 per mensem including the stagnation increments ; and

(*b*) If so, whether there is any proposal with the Government to reconsider the matter and allow stagnation increments to the personnel whose pay exceeds Rs. 1,500 per mensem as there are a number of such cases in the State?

பதவி தேக்கநிலை சம்பள உயர்வுகள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திருமதி சி. தமிழரசி மற்றும் திரு. [illegible] முத்துசாமி சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் [illegible] வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எந்தப் பணியாளரது உயர்ந்தபட்ச சம்பள [illegible] ரூ. 1,500-ஐ [illegible] நிலை சம்பள உயர்வு உட்பட மாதம் ஒன்றுக்கு [illegible] சம்பள [illegible] இல்லையோ, அந்தப் பணியாளர்களுக்கு மட்டும் [illegible] 1978 [illegible] 1050 ஆம் எண் அரசாணையின்படி [illegible]

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை,

புதன்கிழமை, 1979 நவம்பர் 7

[illegible] தமிழ்நாடு சட்டமன்ற மேலவை [illegible] பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## வினாக்கள்—விடைகள்

### *Stagnation Increments*

*81 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN (on behalf of Thirumathi C. THAMIZHARASI and Thiru S. MUTHUSAMY): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether, according to G.O. Ms. No. 1050, Finance (Pay Commission), dated 5th October 1978, stagnation increments have been allowed only for those personnel, the maximum of whose scale of pay does not exceed Rs. 1,500 per mensem including the stagnation increments ; and

(*b*) If so, whether there is any proposal with the Government to reconsider the matter and allow stagnation increments to the personnel whose pay exceeds Rs. 1,500 per mensem, as there are a number of such cases in the State ?

### தேக்கநிலை சம்பள உயர்வுகள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திருமதி சி. தமிழரசி மற்றும் திரு. எஸ். முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எந்தப் பணியாளர்களது உயர்ந்தபட்ச சம்பள விகிதம் (தேக்கநிலை சம்பள உயர்வு உட்பட) மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500-க்கு மிகாமல் உள்ளதோ அந்தப் பணியாளர்களுக்கு மட்டுமே [illegible] 1978 ஆம் ஆண்டு [illegible] 1050 ஆம் எண் அரசாணையின்படி [illegible]

(இ) ஆம் எனில், அந்த விஷயத்தை மறு பரிசீலனை செய்து, மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500-க்கு மேற்பட்ட சம்பளம் பெறுபவர்கள் இம்மாநிலத்தில் பலர் உள்ளதனால், அவர்களுக்கு பதவி தேக்க நிலை சம்பள உயர்வுகளை அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) ஆம்.

(இ) இல்லை.

## *Pay Scale of Sub-Judges.*

* 82 Q.—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Tamil Nadu Judicial Officers' Association, expressing disappointment on equating the post of sub-Judge with that of the Under Secretary in the Secretariat, instead of equating it with that of the District Revenue Officer, in the recent pay revision; and

(*b*) if so, the action taken thereon ?

### சார்பு நீதிபதிகளின் சம்பள விகிதம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட சம்பளவிகிதங்களில், சார்பு நீதிபதி (Sub-Judge) பதவித்தரம், மாவட்ட வருவாய் அதிகாரியின் பதவித் தரத்திற்கு இணையாகக் கொண்டு வரப்படாமல், தலைமைச் செயலகத்திலுள்ள சார்புச் செயலாளர் பதவித் தரத்திற்கு இணையாகக் கொண்டு வரப்பட்டிருப்பது குறித்து, தமிழ்நாடு நீதித்துறை அதிகாரிகள் சங்கத்திடமிருந்து, அவர்கள் ஏமாற்றத்தைத் தெரிவித்து, ஏதேனும் முறையீடு அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு நீதித்துறை அதிகாரிகள் சங்க முறையீட்டை அரசு பரிசீலித்து, சார்பு நீதிபதியின் சம்பள விகிதத்தை மேலும் மாற்றி அமைப்பது அவசியமில்லை என்று முடிவு செய்துள்ளது.



திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: தலைவர் அவர்களே, சார்பு நீதிபதிகளுக்கு அன்லிமிடெட் ஜுரிஸ்டிக்ஷன், அதாவது எல்லையற்ற ஜுரிஸ்டிக்ஷன் இருக்கிறது. பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைப் பற்றி தீர்ப்பளிக்க அவர்களுக்கு உரிமையும் தகுதியும் இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களுக்கு சில நூறு ரூபாய்களாவது சம்பளத்தில் அதிகப்படுத்திக் கொடுக்கலாம். இப்போதிருக்கும் சம்பள விகிதத்தை மாற்றிக் கொடுக்க அரசு ஏதாவது பரிசீலிக்குமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, சம்பளக் குழு பரிந்துரைகளுக்கு முன்பு சார்பு நீதிபதிகள் ரூ. 850—50—1,250 என்ற சம்பள விகிதத்திலேதான் பணியாற்றி வந்தார்கள். தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மாற்றியமைக்கப்பட்டபோது, அது 1,000—60—1,300—70—1,650 என்ற சம்பள விகிதத்திற்கு இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் கூடுதலாக உயர்த்த வேண்டிய அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்த வினாவிலேயே சப்-ஜட்ஜினுடைய சம்பளத்தை ஆர்.டி.ஓ. சம்பள லெவலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் கேட்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை ரூ. 1,000—1,200 போதுமானதாக இருந்தாலும் கூட, இந்த மாவட்டத்திலே தலைமை நீதிபதி அல்லது டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கலெக்டர் ரேங்கிலே இருந்தால், ஆர்.டி.ஓ. ரேங்கிலேயாவது சப்-ஜட்ஜ் இருந்தால்தான், அவர்கள் வழங்கக்கூடிய நீதி நியதியாக வழங்கப்படும் என்ற நிலை இருக்கிறது. அதை உத்தேசித்தாவது மறு பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மூன்றாவது சம்பளக் குழுவினுடைய பரிந்துரையில் ஒரு நிலையில் சம்பள விகிதம் பெற்றுக்கொண்டிருக்கக் கூடிய பல பதவிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்று, 'இன்டக்ரேஷன் ஆப் சேவிஸ் அண்டு கேடர்ஸ்' என்பதிலே ஒரு பரிந்துரை இருந்தது. அதை ஏற்றுக்கொண்டு அனைத்து அலுவலர்களும் வரவேற்கக்கூடிய அளவுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சார்பு நீதிபதிகள், நிர்வாகப் பொறியாளர்கள், துணை இயக்குநர், சார்புச் செயலாளர் எல்லாம் கிட்டத்தட்ட அந்த ஆரம்ப படியிலேதான் இதற்கு முன்பு சம்பளம் பெற்று வந்தார்கள். அதை ஒருங்கிணைக்கும்போது, அந்த விகிதத்திலேதான் நாம் அதைச் செயல்படுத்த முடிகிறது. இந்த ஒன்றை மட்டும் எடுத்து தனியாக மாவட்ட வருவாய் அலுவலர்களோடு ஒப்பிடுகின்றபோது, செயல் பொறியாளர்கள், நிர்வாகப் பொறியாளர்கள் மற்றவைகளை எல்லாம் அப்படி மாற்றியமைக்கின்ற பிரச்சினை எழுகிறது. அதனால் நிதிப் பிரச்சினையும் எழுகிறது.

திரு. ஈ. சால். வெங்கடேசன்: செக்ரட்டேரியட் அண்டர் செக்ரட்டேரியன் தரத்தை உயர்த்தி, சப்-ஜட்ஜுகளின் சம்பள விகிதத்திற்குச் சமமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சப்-ஜட்ஜுகளுக்கு கவர்ன்மெண்ட்டில் [illegible] துறையில் பதவி வந்தால், அவர்களுக்கு டெப்டி செகரட்டரி பதவி கொடுக்கப்படுகிறது. அதையாவது கருத்தில் கொண்டு அரசு மறு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: [illegible] கேள்வியில் [illegible] இருக்கு [illegible] நிலையாக இருக்கிறது [illegible] கோரிக்கை [illegible] இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் [illegible]

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' எழுப்ப முடியாது. கேள்வி நேரத்திலே [illegible]

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் [illegible] முதலமைச்சர் அவர்கள் வரவில்லை. ஏனென்றால், முன்னவர் அவர்கள் பதில் [illegible] அவர்கள் அவைக்கு [illegible] தொடர்ந்து இப்போது [illegible] அமைச்சர் அவர்களின் [illegible] முன்னவர் அவர்களே பதில் சொல்வது முறைதானா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அப்படியில்லை. On a point of clarification [illegible] தான் [illegible] கேள்வி நேரம் முடிந்த [illegible] It is not a point of order.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இப்போது 'Point of clarification' [illegible] அதற்கு அப்புறம் கேள்வி நேரத்தில் [illegible] அப்படிக் கேட்க [illegible]

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: [illegible] பதில்கள் சொல்லியாகிவிட்டது. [illegible] கேள்வி கேட்டால், எதிலவது சொல்ல முடியும். [illegible] நேரம் முடிந்தது [illegible]

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: [illegible] இல்லை என்றாலும், நான் அனுமதிக்கிறேன் [illegible] அப்படியானது கேளுங்கள்.







*Proceeds of Raffle Tickets.*

*83 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the proceeds of the State Government from 1st July, 1977 till November 1978, by the sale of Tamil Nadu Government Raffle Tickets; and

(b) the percentage allotted to various Departments from these proceeds?

பரிசுச் சீட்டு வருவாய்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் [illegible] 1977 முதல் நவம்பர் 1978 முடிய கிடைத்துள்ள வருவாய் [illegible]

(ஆ) இந்த வருவாய் எந்தெந்தத் துறைகளுக்கு எந்த சதவிகிதத்தில் [illegible] செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர்): (அ) [illegible] 1977 முதல் 30—11—1978 வரையிலான காலத்தில் பரிசுச் சீட்டு விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த வருவாய் ரூ. 2,[illegible] ஆகும். [illegible] ரூ. 1,75,52,000 ஆகும். [illegible] 1977-78-ல் கிடைத்த [illegible] தொகை [illegible] ரூ. 1,75,52,000.

(ஆ) 1977-78 ஆம் ஆண்டுக்கு [illegible] வருவாய் ரூ. 1,75,52,000 [illegible] 1977-78-ல் கிடைத்த [illegible]

1. [illegible] பொது நிவாரண நிதிக்கு வருவாய் 39 இலட்சம் ரூபாய் (முதலமைச்சர்) [illegible]

[illegible] நிகர வருவாய் 4,36,52,236 ரூபாயில் 75 சதவிகிதம் [illegible] 3,02,38,[illegible] ரூபாய் [illegible]

3. [illegible] 25 சதவிகிதமான 34,13,059 ரூபாய் [illegible] பொது வருவாயில் சேர்க்கப்பட்டது.

[illegible]

**திரு. க. இராமமூர்த்தி:** இது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிறப்புக் குலுக்கல். இந்த நிதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொது நிதிக்குக் கொண்டு போகப்பட்டது முறைதானா? அது பாதிக்கப் பட்ட மக்களைத் தவிர மற்றவர்களுக்கும் பயன்படுகின்ற அளவிலே, எந்தக் குறிக்கோளுக்காக இந்தக் குலுக்கல் வைக்கப்பட்டதோ, அதைத் தவிர்க்கின்ற முறையிலே மாற்றியது சரிதானா? அந்த முழுத் தொகையும் வெள்ளத்தி னாலே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இதுபோலவே குடிநீர் வழங்குகிற திட்டத்திற்கு உதவுகின்ற வகையிலே சிறப்புக் குலுக்கல் நடத்தப்பட்டது. எந்த வகையிலே அதற் கான இடங்களை, ஊர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இது மூலக் கேள்வியிலிருந்து கொஞ்சம் மாறுபட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட இலாகாவைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களோடு பதில் சொல்ல முடியும் என்றாலும், பொதுப்படையாக முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்றாலும், பொது நிதியிலிருந்து வெள்ள நிவாரண நிதிக்கு 39 லட்சம் ரூபாயைத் தாண்டி கூடுதலாகவே வழங்கப்பட்டிருக்கிறது. எனவே முதலமைச்சர் அவர்களுடைய பொது நிவாரண நிதிக்குப் பணப் பற்றாக்குறை ஏற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையிலே அந்தப் பணம் மாற்றம் செய்யப்பட்டு கூடுதலாகவே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்பதுபற்றி முழு புள்ளிவிவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும். அதுபோலவே குடிநீர் வழங்குவதற்கான சிறப்புத் திட்டத்தின்கீழ், அந்தப் பணம் இந்தத் தமிழ்நாடு சிறப்பு நல நிதிக்கு ஒதுக்கப்பட்டிருக் கிறது. எந்தெந்த ஊர்களுக்கு எந்த அடிப்படையிலே என்று கேட்டால், ஏற்கனவே எந்த எந்த ஊர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்பதைப் பற்றி குடிநீர் வடிகால் வாரியமும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சேர்ந்து திட்டம் தீட்டி வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களிடம் அதற்கான புள்ளிவிவரங்களைத் தனியாகக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4.10)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** பல மாநிலங்களுடைய பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கப்படுகின்றன. அதைப் பார்க்கும்போது, அந்தக் குறிப் பிட்ட மாநிலத்திலிருந்து வந்தவைதானா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. எனவே அவைகளைத் தடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா? மேலும் நம் முடைய மாநிலப் பரிசுச் சீட்டின் பரிசுத் தொகையை அதிகமாக்குவதன் மூலம், வேறு மாநிலங்களின் பரிசுச் சீட்டை மக்கள் வாங்காமல் இருக்கச் செய்வதற்கு, ஏதாவது திட்டம் அரசிடம் உண்டா?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அரசினுடைய பரிசுச் சீட்டு சிறப்புக் குலுக்கலில் 5 லட்சம் ரூபாய்வரை, அதிகப் பரிசு அறிவித்து, சிறப் பாக விற்பனை செய்கிறோம். மேலும் மற்ற மாநிலங்களில் பரிசுச் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, மற்ற மாநிலங்களில் நம்முடைய மாநிலத்தின் பரிசுச் சீட்டு களும் விற்கப்படுகின்றன என்பதால், அதில் எச்சரிக்கையாக இருப்பது நல்லதென்று அரசு கருதுகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மொத்த வருமானம் 6 கோடியே 18 லட்சம் ரூபாய், அதில் நிகர வருமானம் 2 கோடி ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே 4 கோடி ரூபாய்க்கு மேல் செலவினமாகிறது. ஆகவே 6 கோடி ரூபாய் வருமானம் பெற்றால் 2 கோடி ரூபாய்தான் நிகர வருமானம் பெறுகிற நிலைமையை மாற்றி, செலவைக் குறைக்கிற நடவடிக்கை களை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** செலவினங்களில் மிகப் பெரிய தொகை பரிசுகளுக்குத்தான். அதிகப்படியாக பரிசு களை அதிகப்படியாகப் பரிசுகள் வழங்குவதுதான். கூடுதலாக பரிசுச் சீட்டு களையும், சிறப்புப் பரிசுகளையும் வழங்கினால்தான், இந்த நிகர லாபத்தைப் பெற முடியும். அப்போதுதான் சீட்டுகளை விற்பனை செய்ய முடியும். பரிசுகளின் எண்ணிக்கையைக் குறைத்து, பரிசுத் தொகையின் அளவையும் குறைத்தால், இந்த அளவிற்கு விற்பனையை எதிர் பார்க்க முடியாது. இந்தத் திட்டம்தான் சிறப்பானது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** பரிசுச் சீட்டுக் குலுக்கல் சென்னை நகரத்தில் மட்டும்தான் நடைபெறுகிறது. இந்தக் குலுக்கல்கள் வேறு நகரங் களில் நடைபெறுவதற்கு, ஏதாவது செயல்திட்டம் அரசிடம் இருக்கிறதா? வேறு எந்த நகரங்களில் குலுக்கல்கள் நடைபெறும்?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** பரிசுச் சீட்டுக் குலுக்கல் சில முக்கிய இடங்களிலே நடைபெற்று வருகிறதென்று நினைக்கிறேன். சொத்துக்குறிப்பு என்ற பிரச்சினை இதில் வரவில்லை.

வேலை நிறுத்தம் செய்து தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலையை உண்டாக்கியவர்கள்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: வேலை நிறுத்தம் என்பது சில நேரங்களில் காரணத்தோடு வருகிறது, சில நேரங்களில் காரணங்கள் இல்லாமலும் வருகிறது. வேலை நிறுத்தத்தினால் சில நேரங்களில் வேலைகள் தடைபடுவதும் உண்டு. அப்படி வேலைகள் தடைப்பட்டாலும், அதற்குப் பிறகு வேலைக்கு வரும்போது, நிரம்பச் செய்து முடிக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்தக் குறிப்பிட்ட சம்பவம், ஒரு அ.தி.மு.க. பிரமுகர் ரேஷன் கார்டுக்காக வேண்டுமென்று வற்புறுத்தியபோது, சில வழிமுறைகள் அதற்கு இருக்கின்றன என்று ஆட்சேபணை சொன்னபோது, அதையும் மீறி உடனடியாக உத்தரவு பிறப்பிக்க முடியுமா, இல்லையா என்று கேட்ட காரணத்தால், அவர் மிரட்டப்பட்டார், அவமதிக்கப்பட்டார் என்ற காரணத்தால், அவர்கள் போராட்டம் நிகழ்த்தினார்கள். குறைந்த அளவிற்கு, அவர்களுடைய அலுவலக வேலையைத் தடுத்ததற்காக போலீஸ், கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற தகவல் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். தாசில்தார்கள், ஆளும்கட்சிக்காரர்கள் மிரட்டினாலும் நியாயமாக வேலை செய்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: வருவாய்த் துறை அமைச்சரவர்கள் அவருடைய துறையைப்பற்றி பெருமைப்பட்டுக்கொள்கிறபோது அவருடைய மிரட்டுகிற அவருடைய கட்சிக்காரர்களிடமும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுமென்ற உறுதியைத் தருவாரா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: என்னுடைய துறை மட்டுமல்ல. தமிழகத்திலுள்ள எல்லாத் துறைகளும் பாரபட்சமில்லாமல்தான் நடக்கின்றன. பாரபட்சமாக நடந்தால்தானே உத்தரவாதம் தேவை. எனவே இப்போது உத்தரவாதம் தேவையில்லை.



### *Compounding of Entertainment Tax.*

*85. Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the theatre owners have represented to the Government, to re-examine the procedure of compounding the Entertainment Tax followed in the case of permanent theatres and touring cinemas situated within the Town Panchayat and Panchayat limits; and

(b) if so, the decision taken by the Government thereon?

### கேளிக்கை வரியில் கூட்டுத் தீர்வை

திரு. வெ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேரூராட்சி மன்ற மற்றும் ஊராட்சி மன்ற எல்லைக்குள் அமைந்துள்ள நிரந்தர திரைப்பட அரங்குகள், தற்காலிக திரைப்பட அரங்குகள் (Touring Cinemas) ஆகியவைகளுக்கு விதிக்கப்படும் கேளிக்கை வரி முறையில் பின்பற்றப்படும் கூட்டுத்தீர்வை (Compounding) வரி முறையை மறுபரிசீலனை செய்யுமாறு, திரையரங்கு உரிமையாளர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(இ) தற்காலிகத் திரைப்பட அரங்குகளின் இனம்வாரி விகிதத்தை மாற்றியமைக்கும் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. நிரந்தரத் திரையரங்குகள் சம்பந்தப்பட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. தங்கப்பாண்டியன்: 'சி' ஸ்டேஷன், 'பி' ஸ்டேஷன் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகளில் இருக்கும் நிரந்தரத் திரை அரங்குகளுக்கு இப்போது போடப்படும் கேளிக்கை வரி, காம்பவுண்டிங் டாக்ஸ், அதிகமாக இருக்கிறது. இதனைக் குறைப்பதற்கு உரிமையாளர்களுக்குச் சலுகைகள் செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பேரூராட்சிகள், ஊராட்சிகளில் உள்ள திரை அரங்குகளுக்கான வரி இதனால் இரண்டு மடங்காகியிருக்கிறது. எனவே இதனை அரசு அனுதாபத்தோடு பரிசீலிக்குமா?

## Demonstration by Revenue Officers.

* 84. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that Officers of the Madurai Branch of the Tamil Nadu Revenue Officers' Association have staged demonstration in front of the Madurai District Collectors' Office on 14th December 1978;

(b) if so, the reason therefor; and

(c) the action taken on the representation received from them?

[illegible]

### வருவாய்த்துறை அதிகாரிகள் ஆர்ப்பாட்டம்

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 14—12—1978-ல் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன் தமிழ்நாடு வருவாய்த்துறை சங்க மதுரைக் கிளையைச் சார்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) அவர்களிடமிருந்து வந்த முறையீட்டின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மதுரை மாவட்டத்தில் வருவாய்த் துறை அதிகாரிக்குக் குறை ஏற்பட்டதாக அவர்கள் ஒரு நாள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கூப்பிட்டு, அந்தக் குறையை நிவர்த்தி செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை. இப்போது நிலைமை சுமுகமாக இருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: அந்தக் குறை என்ன? வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள் என்பது கேள்வியிலேயே இருக்கிறது. அமைச்சரவர்கள் மெதுவாக நழுவி விட்டார்கள். அதை [illegible] மாறு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: நான் நழுவவில்லை. அங்கே தனிப்பட்ட ஒருவர், வருவாய்த் துறை வட்டாட்சியருக்கு விரோதமாக அங்கே வந்து, அவரை மதிப்புக் குறைவாக நடத்தியதாக நினைத்து, அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். அப்படி எங்கே நடந்தாலும், அதைச் சுமுகமாகத் தீர்ப்பதுதான் நல்லது. பொது மக்களாக இருந்தாலும், அரசு அதிகாரியாக இருந்தாலும், அவர்களைக் கூப்பிட்டு, ஒன்றாகப் பேசி, ஒத்துப் போகச் செய்துவிட்டார்கள் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள்.

திரு. ம. சங்கரலிங்கம்: ஏதோ ஒருவர் வந்து, மதிப்புக் குறைவாக நடத்தினார், அதனால் கிளர்ச்சி வந்ததாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். பெரிய அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர், வருவாய்த் துறை அதிகாரியைப் போய்ப் பார்த்து, 'நான் யார் தெரியுமா?' என்று மிரட்டிய தாகவும், அவ்வாறு அவர் அவமதிப்பாக நடந்ததால்தான், இந்தக் கிளர்ச்சி நடந்தது என்பதும் உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அ.தி.மு.க. வைச் சேர்ந்தவரா, அ.தி.மு.க. வைச் சேர்ந்தவராகக் இல்லையா என்பது பிரச்சினையில்லை. அத்துமீறி அதிகாரிகளை மிரட்டு கூட இருக்கலாம். யாராக இருந்தாலும், அத்துமீறி மிரட்டுவதும் கூடாது வதும். அதிகாரிகள் பொதுமக்களை அத்துமீறி யாராக இருந்தாலும், ஒத்துப் என்பது ஜனநாயகத்தில் முக்கியமானது. போகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வது போல், இது சாதாரண பிரச்சினையல்ல. எந்த நோக்கத்திற்காக கிளர்ச்சி ஏற்பட்டது? குறிப்பிட்ட நபர் வட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் அத்துமீறி பிரவேசித்து, தனக்குச் சாதகமாக உத்தரவு போட வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டதா? மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன காரணம் சொல்லி சமாதானம் செய்தார்? ஏற்பட்ட விளைவுகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: குறிப்பிட்டு, இந்தக் காரணத்தால்தான் என்ற தகவல் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், அது சரியா என்று விசாரித்துப் பார்க்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: காரணம் எதுவாக இருந்த போதிலும், ஒரு நாள் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் [illegible] அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? [illegible] அரசு அலுவலர்கள் தங்களுடைய குறையை,

வேலை நிறுத்தம் செய்து தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலையை உண்டாக்கியவர்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வேலை நிறுத்தம் என்பது சில நேரங்களில் காரணத்தோடு வருகிறது, சில நேரங்களில் காரணங்கள் இல்லாமலும் வருகிறது. வேலை நிறுத்தத்தினால் சில நேரங்களில் வேலைகள் தடைபடுவதும் உண்டு. அப்படி வேலைகள் தடைப்பட்டாலும், அதற்குப் பிறகு வேலைக்கு வரும்போது, நிரப்படச் செய்து முடிக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : இந்தக் குறிப்பிட்ட சம்பவம், ஒரு அ.தி.மு.க. பிரமுகர் சிமெண்ட் தனக்குத் தர வேண்டுமென்று வட்ட ஆட்சியாளரை வற்புறுத்தியபோது, சில வழி முறைகள் அதற்கு இருக்கின்றன என்று அவர் சொன்னபோது, அதையும் மீறி உடனடியாக உத்தரவு பிறப்பிக்கின்றாயா, இல்லையா என்று கேட்ட காரணத்தால், அவர் மிரட்டப்பட்டார், அவமதிக்கப்பட்டார் என்ற காரணத்தால், அவர்கள் போராட்டம் நிகழ்த்தினார்கள். குறைந்த அளவிற்கு, அவர்களுடைய அலுவலக வேலையைத் தடுத்ததற்காகவாவது, கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்ற தகவல் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களிடமிருந்து தெரிந்து கொண்டேன். தாசில்தார்கள், ஆளும்கட்சிக்காரர்கள் மிரட்டினாலும் நியாயமாக வேலை செய்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து, மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : வருவாய்த் துறை அமைச்சரவர்கள் அவருடைய துறையைப்பற்றி பெருமைப்பட்டுக்கொள்கிறபோது அவருடைய துறையை மிரட்டுகிற அவருடைய கட்சிக்காரர்கள்மீதும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படுமென்ற உறுதியைத் தருவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : என்னுடைய துறை மட்டுமல்ல. தமிழகத்திலுள்ள எல்லாத் துறைகளும் பாரபட்சமில்லாமல்தான் நடக்கின்றன. பாரபட்சமாக நடந்தால்தானே உத்தரவாதம் தேவை. எனவே இப்போது உத்தரவாதம் தேவையில்லை.



## Compounding of Entertainment Tax.

* 85. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that the theatre owners have represented to the Government, to re-examine the procedure of compounding the Entertainment Tax followed in the case of permanent theatres and touring cinemas situated within the Town Panchayat and Panchayat limits ; and

(b) if so, the decision taken by the Government thereon ?

### கேளிக்கை வரியில் கூட்டுத் தீர்வை

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேரூராட்சிமன்ற மற்றும் ஊராட்சிமன்ற எல்லைக்குள் அமைந்துள்ள நிரந்தர திரைப்பட அரங்குகள், தற்காலிக திரைப்பட அரங்குகள் (Touring Cinemas ) ஆகியவைகளுக்கு விதிக்கப்படும் கேளிக்கை வரி முறையில் பின்பற்றப்படும் கூட்டுத்தீர்வை (Compounding) வரி முறையை மறுபரிசீலனை செய்யும்படி, திரையரங்கு உரிமையாளர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த முடிவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(இ) தற்காலிகத் திரைப்பட அரங்குகளின் இணக்கவரி விதிப்பை மாற்றியமைக்கும் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. நிரந்தரத் திரையரங்குகள் சம்பந்தப்பட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : 'சி' ஸ்டேஷன், 'பி' ஸ்டேஷன் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகளில் இருக்கும் நிரந்தரத் திரை அரங்குகளுக்கு இப்போது போடப்படும் கேளிக்கை வரி, காம்பவுண்டிங் டாக்ஸ், அதிகமாக இருக்கிறது. இதனால் தியேட்டர் உரிமையாளர்களுக்குச் சலுகைகள் செய்ய வேண்டுமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பேரூராட்சிகள், ஊராட்சிகளில் உள்ள திரை அரங்குகளுக்கான வரி இதனால் [illegible] எனவே இதனை அரசு ...

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : [illegible] [1979 நவம்பர் 7
பேரூராட்சி மன்றங்களில் இருக்கின்ற திரை அரங்குகளுக்கு [illegible] மன்றங்கள் அல்லது
காட்சிகள் என்ற முறையில், [illegible] என்ற அடிப்படையில் வரி [illegible] தினம் இரண்டு
படுகிறது. அந்த அடிப்படையில் 14.2 சதவிகிதம் வரி போட வேண்டும்
[illegible] 16 சதவிகிதம் வரி பெறுகிறோம்.
இருந்தனவோ [illegible] முன்பு எவ்வளவு இருந்ததோ அதைவிட இப்போது அதிகமாக இருக்கின்றன, அதனால்
நஷ்டமில்லை என்று தெரிய வருகிறது. அதனால், கோரிக்கையை [illegible]
கொள்வதற்கில்லை.

புலவர் புலமைப்பித்தன் : கூட்டுத் தீர்வை வரி முறையினால்தான்
செத்துப் போகவிருந்த திரைப்படத் தொழில் உயிர் பெற்றிருக்கிறதென்பதை
உணர்ந்து, அதைத் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். மேலும் பெரு நகரங்களைப் பொறுத்தவரையில், வாடகை [illegible]
அதிகமாக இருக்கிறது. வாரந்தோறும் 15,000 ரூபாய்க்குக் குறைவில்லாமல்
வாடகை வாங்குகிறார்கள். யார் எப்படிப் போனால் என்ன, தன்னுடைய
வயிறு நிரம்பினால் போதுமென்ற மனோபாவத்தோடு திரை அரங்கு உரிமை
யாளர்கள் இருக்கிறார்கள். எனவே பெரு நகரங்களில் விழுக்காடு [illegible]
யைக் கொண்டு வந்தால், திரைப்படத் தொழில் மேலும் வளர்ச்சி அடைய
வாய்ப்பாக இருக்குமென்பதை உத்தேசித்து, அப்படிப்பட்ட நடவடிக்கை
களில் அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இணைக்கு முறை வரியைக்
கொண்டுவந்ததன் காரணம் இருக்கிற குறைந்த எண்ணிக்கையுள்ள அதிகாரி
களை வைத்துக்கொண்டு கிராமந்தோறும் நடக்கிற சினிமா கொட்டகைகளைப்
பார்க்க, இன்ஸ்பெக்ஷன் செய்ய முடியாத நிலை இருக்கிறது என்பதனால்,
கிராமந்தோறும் எல்லா இடங்களிலும் உள்ள திரைப்பட அரங்குகளுக்கு
அவர்கள் போய் பார்வையிட முடியாது என்பதால் இணைக்க வரி (கம்பவுண்டிங்
டேக்ஸ்) முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். பெரிய நகரங்களுக்கு
உறுப்பினர் சொன்ன முறையைக் கொண்டு வருவதா இல்லையா என்பது
அரசு பரிசீலிக்கும்.

[illegible] இரா. சனார்த்தனம் : இந்தப் புது வரி விதிப்பின்
[illegible] கூடிய வருமானம் குறைவா, இல்லை கூடுதலா? [illegible]



1979 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : புது வரி விதிப்பின் மூலம் அரசுக்கு வருமானம் கூடியிருக்கிறது. அப்படி வருமானம் கூடியிருக்கிறது என்று சொன்ன உடனேயே, சினிமாக் கொட்டகைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லக்கூடாது. 1977-78 ஆம் ஆண்டு 20.81 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. 1978-79 ஆம் ஆண்டு 23.76 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. ஆக, ஒரே வருடத்தில் மூன்று கோடி ரூபாய் அளவுக்கு அதிக வருமானம் வந்திருக்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : திரைப்பட அரங்குகளுக்கு லைசென்ஸ் வழங்குவதைப் பொறுத்தவரை, இரண்டு திரைப்பட அரங்குகளுக்கு இடையே ஒரு கிலோமீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென்று இருந்ததை அரை கிலோமீட்டர் இடைவெளி இருந்தால் போதும் என்று அரசு குறைத்து நிர்ண யித்திருக்கிறதா? அப்படிக் குறைத்து அரசு நிர்ணயித்திருந்தால், அங்கே ஏற்கெனவே இருந்த திரைப்பட அரங்கு பாதிக்கப்படாதா? இதுபற்றி அரசு என்ன முடிவு செய்திருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : லைசென்ஸ் கொடுப்பது பற்றி என்னிடம் தகவல் இல்லை. தகவல் இருந்தால் சொல்லிவிடலாம்.

புலவர் புலமைப்பித்தன் : கன்னடம், ஆந்திரம் போல் இந்த மாநிலத்தி லும் “சப் சிடி” (subsidy) தொகையை அரசு திரைப் படத்தைத் தயாரிப்பவர்களுக்குத் தருவதன் மூலம் படத் துறை வளர்ச்சியடைவதுடன் அரசுக்குக் கூடுதல் வருவாயும் கிட்டும். அப்படிப்பட்ட உத்தேசத்தில் அரசு ஈடுபடுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அதுபற்றி அரசு யோசிக்கும்.

## *Damages by Heavy Rains.*

* 86. *Q.*—THIRU A. NALLASIVAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of persons died due to the heavy rains during the end of 1978 ;

(*b*) the estimate of the damages caused to the Agricultural Products ;

(*c*) the estimate of the damages caused to the Private and Public properties; and

(*d*) the relief measures taken by the Government after finding out the damages?

MR. DEPUTY CHAIRMAN : If the Hon. Minister is not prepared to take up the question, there can be postponement. The answer has been placed on the table of the House half an hour earlier. Then, the hon. Member cannot ask for postponement and it cannot be conceded under the Rules.

(பிற்பகல் 4.30)

*Closure and Lock-out in Industries.*

* 90. Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the number of Industries—(i) under permanent closure and (ii) under lock-out in Tamil Nadu during the past one year; and

(b) the number of workers affected thereby?

தொழிற்சாலைகள் கதவடைப்பு மற்றும் மூடுதல்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் கடந்த ஓராண்டு காலத்தில்—(i) நிரந்தரமாக மூடப்பட்ட (closure); (ii) தற்காலிகமாக மூடப்பட்டுள்ள (lock-out) தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இவற்றால் பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விவர அறிக்கை@ ஒன்று சட்டமன்ற பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. RAMAMOORTHY : Sir, I do not think I can ask any supplementary question. Even within the half hour, I was not able to go through all the 27 pages since, in addition to this, there are also other written answers placed on the table of the House. I am not taking objection to the Hon. Minister's answer. I only express my inability to go through and digest the long written answer and then ask my supplementaries.

@ 260-281-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. ம. சங்கரலிங்கம் : 90 ஆவது வினாவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரிய அளவில் பதில் அளித்திருக்கிறார்கள். இனிமேலாவது சுருங்கிய அளவில் பதிலளிக்க அமைச்சரவர்கள் முயற்சி செய்தால்தான் உறுப்பினர்களுக்கு எளிதில் புரிந்து விளக்கம் கேட்க வாய்ப்பாக இருக்கும். விடை 27 பக்கம் கொண்ட பெரிய புத்தகம் மாதிரி இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விளக்கமாக விடை கொடுக்கப்படுகிறது என்றால், உறுப்பினர்களே படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். உறுப்பினர்கள் நீண்ட அளவில், 'எக்ஸ்ஹாஸ்டிவ்' ஆக முற்றிலுமான 'பர்ட்டிகுலர்ஸ்' விரும்புகிறார்கள் என்ற காரணத்தால்தான், விடை கொடுத்திருக்கிறோம்.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member should be happy that the Hon. Minister has given a detailed reply to the question.

THIRU K. RAMAMOORTHY : Sir, I am happy and I am thankful to the Hon. Minister for giving all the particulars for my question. What I said was that I was not able to go through all the 27 pages of the written answer within this very short time because there were several other answers along with this to be digested within half an hour for supplementaries to be put. That is the problem. I am only expressing my inability to digest all this within half an hour; I am not that much a genius to go through and digest the long answer within the short time available. If the Chair permits, I will put my supplementary questions tomorrow. It can be only with the permission of the Chair.

DR. H. V. HANDE : Sir, may I suggest one thing? The procedure that is adopted in this House and the other House is this. Whenever long replies are placed on the table of the House and the hon. Member finds it difficult to digest, because of paucity of time, he would take it home and after digesting it, he can put a separate question on that.

MR. DEPUTY CHAIRMAN : I think the hon. Member Thiru Ramamoorthy also knows about it.

THIRU K. RAMAMOORTHY : Thank God, The answer to this question has come to the House after nearly one year. Let me take this opportunity.

இந்தத் தற்காலிகமாக மூடப்பட்ட தொழிற்சாலைகள் மற்றும் நிரந்தரமாக மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகள், இவற்றின் காரணமாக எத்தனை

தொழிலாளர் வேலை நாளை (man-days) நாம் இழந்திருக்கிறோம்?
இதன் விளைவாக உற்பத்திக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டம் எவ்வளவு?
அதைப்போல நிரந்தரமாக மூடப்பட்டிருக்கின்ற நிறுவனங்களில் எந்தெந்த
நிறுவனங்களை அரசு ஏற்றுக்கொள்வது என்பதுபற்றி முயற்சித்திருக்கிறது?
தொடர் நிறுவனங்களை (Sister concern) வைத்துக்கொண்டு ஒரு
நிறுவனத்தை மூடிவிட்டு இன்னொரு நிறுவனத்திலே, முழு ஆதாயத்தைப்
பெறும் வகையில் நடத்துகின்ற அல்லது ஏமாற்றுகின்ற தொழிற்சாலைகள்
இங்கே ஏதாவது இருக்கின்றனவா? அந்த அடிப்படையில் என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதற்றால் பாதிக்கப்பட்டுள்ள
தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதுதான் கேள்வி. 'மேன்-
டேய்ஸ்' இழப்பு எவ்வளவு என்றெல்லாம் கேள்வி கேட்டிருந்தால், அந்தத்
தகவல்களையும் என்னால் தந்திருக்க முடியும். கேள்விக்கேற்ற விடை
கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின்
எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்லும்போது, நிரந்தரமாக மூடப்பட்ட
தொழில் நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 911 பேரும், தற்
காலிகமாக மூடப்பட்ட நிறுவனங்களில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின்
எண்ணிக்கை 21,285 என்றும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இப்போது கேட்ட மற்ற கேள்விகள் ஏற்கெனவே கேட்டிருந்த
கேள்விக்கு நேரடியாகத் தொடர்புள்ளவைகள் அல்ல. கேள்விகளை
செப்பரேட் பண்ணி, இரண்டு காலமாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள்
எத்தனை என்பது போல் ஏழு, எட்டு கேள்விகளாகப் போட்டிருந்தால்,
எனக்கும் சப்ளிமெண்டரி கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியும். இப்போது
என்னிடம் இருக்கும் தகவல்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட
தகவல்கள் இல்லை. 'மேன்-டேய்ஸ் லாஸ்' எவ்வளவு என்ற தகவல் இல்லை.
உற்பத்தி எவ்வளவு இழந்திருக்கிறார்கள் என்ற தகவலும் இல்லை.
கேட்கப்பட்ட கேள்விக்கே விடை தயாரிக்க இவ்வளவு நாட்கள் ஆயிற்று.
கேட்கப்பட்ட கேள்விக்கு நல்லபடியாக விடை கொடுத்திருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: The Hon. Minister has mentioned that during the period from June 1977 to May 1978, 911 workers have been affected due to permanent closure of factories and that due to temporary closure of 42 factories, 21,285 workers have been affected. May I know, since this must be well within the knowledge of the Hon. Minister, how many of these 42 factories which were temporarily closed have since been reopened and how many of the 31 factories which have been permanently closed have since been reopened, after 1978?



THE HON. THIRU S. RAGHAVANANDAM: Sir, according to the information available with me, permanent closure means permanent closure and I do not think any of them have come back for work. As for temporary closure, it is only lock-out and the period is clearly mentioned in the answer. The hon. Member may kindly go through it. Lock-out only means that it is for a temporary period. It naturally follows that 21,285 workers would have come back if the lock-outs had been lifted and if the workers had not been dismissed or removed or their services terminated or subjected to things like that.

THIRU A. R. DAMODARAN: Because the Hon. Minister has only based his answer on assumptions, we can theoretically assume that all these 42 lock-outs have been lifted after 1978 and that the 21,285 workers would have gone back to work. Is this a correct assumption?

திரு. க. இராமமூர்த்தி: கச்சாப் பொருட்கள் இல்லை என்பதால், சில
தொழிற்சாலைகள் நிரந்தரமாகவும், சில தொழிற்சாலைகள் தற்காலிகமாகவும்
மூடப்பட்டிருக்கின்றன. கச்சாப் பொருட்கள் இல்லையென்றால், அத்தகைய
கச்சாப் பொருட்களை அரசே வாங்கி வழங்க அரசு முயற்சி எடுத்ததா?
தற்காலிகமாக மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்குக் கச்சாப் பொருட்கள்
உடனடியாகக் கிடைக்கச் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிற்சாலைகள் மூடப்
பட்டது 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் அடுத்த ஆண்டு மே மாதம்
வரையில் இருக்கிறது. என்னென்ன கச்சாப் பொருட்கள் தேவை, அவற்றில்
என்னென்ன கேட்டார்கள், யாரிடத்திலே வந்தார்கள் என்ற தகவல்கள்
இப்போது என்னிடத்திலே இல்லை. ஒவ்வொரு தொழிற்சாலையும் மூடுவ
தற்குக் காரணம் கச்சாப் பொருட்கள் இல்லாதது, trading loss, mis-
management, misunderstanding between the partners, etc.
இந்தக் காரணங்களால் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. இது இரண்
டாண்டு காலத்துக்கு முன்னால் நடந்தது. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கேட்கக்கூடிய தகவலைக் கொடுக்கக்கூடிய நிலையில் நான் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வருத்
தத்தை அதிகமாக்க நான் விரும்பவில்லை. நிரந்தரமாக மூடப்பட்ட
தொழிற்சாலைகளின் முதலாளிகள், அந்தத் தொழிற்சாலைகளை மூடிய
பிறகு வேறு தொழிற்சாலைகள் ஏதாவது துவக்கியிருக்கிறார்களா?

டாலும், தொழிற்சாலைகளில் இழப்பு ஏற்படுவதாலும் that is, trading loss பொருளாதார நெருக்கடி financial Crisis உற்பத்தி இழப்பு you are not able to compete in the market இப்படி தொழில் மந்தம் ஏற்பட்டு, மூடப்பட்டிருக்கின்றன. இதைவிட நான் என்ன பதில் கொடுக்க வேண்டும். ஆங்கிலத்தில் எழுதியிருந்தால் சரியான ஏற்ற வார்த்தைகள் இருந்திருக்கும். அந்த அறிக்கையிலே இந்தத் தொழிற்சாலைகள் எதற்காக மூடப்பட்டன என்ற தகவல்கள் இருக்கின்றன. கச்சாப் பொருட்கள் கிடைக்காமை, raw materials not available இயந்திரம் அகற்றப்பட்டது, இப்படியெல்லாம் detailed -ஆக இருக்கிறது. It is not as if .. .. .. .. ..

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இயந்திரங்கள் அகற்றப்பட்டதை "removal of the machinery" என்று சொல்லலாம். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், மிகப் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன், தேவையான தகவல்கள் எல்லாம் மிகத் தெளிவாகத் தரப்பட்டிருக்கின்றன. தொழில் மந்தம், பொருளாதார நெருக்கடி இவைகளைத் தவிர என்ன தகவல்களைத் தர முடியும்?

(பிற்பகல் 4-40)

திரு. ம. சங்காலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள் என்றாலும், அரசாங்கத்தின் சார்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அந்த வகையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு என்ன மாற்று வேலை கொடுக்கப்பட்டது என்று கேட்கிறபோது, அதுபற்றிய தகவல்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இது முக்கியமான பிரச்சினை. எனவே மேலவை விதி 41-ஏ யின் கீழ் இந்தப் பொருள் குறித்து ஒரு அரை மணி நேர விவாதம் நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுபற்றி ஆராய்ந்து தகுந்த முடிவெடுக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்தை 'என்டார்ஸ்' செய்கிறேன். விதி 41-ஏ படி ஒரு ½ மணி நேர விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுபற்றி ஆராய்ந்து தகுந்த முடிவு எடுக்கப்படும்.





## Drinking-water for Pallavaram.

* 91. Q.—THIRU K. ARIVAZHAGAN: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any new scheme under the consideration of the Government for the supply of drinking-water to Pallavaram; and

(b) if not, whether the Government will take steps to implement the old Palar Drinking-water Scheme?

## பல்லவபுரத்துக்கு குடிநீர்

திரு. க. அறிவழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) பல்லவபுரம் பகுதிக்கு குடி தண்ணீர் வழங்குவதற்கு புதிய திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) இல்லையெனில், பழைய பாலாறு குடிநீர் வழங்கு திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ரூ. 9 இலட்சம் செலவில் அவசரத் திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) இதன்னியில் பழைய பாலாறு குடிநீர் வழங்கு திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு தயாரித்து நிறைவேற்றுவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. அறிவழகன்: பல்லவபுரத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் எந்த ஆண்டில் கிடைக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆலந்தூர் பல்லவபுரம் மற்றும் வழியிடை கிராமங்களுக்கும், பாலாற்றைத் தலைப்பிடமாகக் கொண்ட நிரந்தர குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த, ஏற்கெனவே அமைக்கப்பட்ட 'கான்கிரீட்' நீரேற்றுக் குழாய்க்குப் பதிலாக, வார்ப்பு இரும்புக் குழாய்களை அமைக்க ரூ. 443 இலட்சம் அதிகப்படியான செலவுத் திட்டம் ஒன்றை வாரியம் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் பரிசீலனை முடிந்து அனுமதி வழங்கப்பட்டவுடனே வேலை துவக்கப்பட்டுவிடும். வேலை துவங்கி விரைவில் குடிநீர் வழங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

தற்காலிகமாக மூடப்பட்ட தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்கள் இந்த ஓராண்டு காலத்திலே ஆரம்பித்து நடத்திவரும் தொழிற்சாலைகளில் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தகவல்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. ஆனால், கோர்ட் தீர்ப்புப் பிரகாரம் ஒரு தொழிற்சாலையை அதனுடைய முதலாளி வேண்டும்போது மூடிக் கொள்ளலாம். He can permanently close it. ஏன் மூடினாய் என்று கேட்கும் அதிகாரம் இல்லை. Whether the closure is bonafide or malafide, உண்மையாகவே மூடியிருக்கிறாரா, இல்லை மூடியிருக்கிறேன் என்று சொல்லி ஏமாற்றுகிறாரா என்று பார்க்க வேண்டுமே தவிர, ஏன் மூடினாய் என்று கேட்கும் அதிகாரம் இல்லை. ஒரு அதிகாரம் இருக்கிறது. 300 ஆம் அதற்கு மேலும் தொழிலாளர்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளாக இருந்தால், 90 நாட்களுக்கு முன்பு நோட்டீஸ் கொடுத்து, அரசினுடைய அனுமதி பெற வேண்டும் என்று இருந்தது, சுப்ரீம் கோர்ட் இப்போது அதுகூட தேவையில்லை, மூடுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்று சொல்லிவிட்டார்கள். இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எடுத்துச் சொல்வது நல்லது என்று சொல்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: இப்படி மூடப்பட்ட தொழிற்சாலைகளில் நியாயமான காரணங்களுக்காக மூடப்பட்ட தொழிற்சாலைகள் எத்தனை என்று அரசு ஆராய்ந்ததா? இவ்வாறு மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகவும், நாட்டினுடைய பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும் வேறுவகையான சட்டம் கொண்டு வர ஏதாவது வழிமுறைகள் அரசு பரிசீலனையில் வைத்திருக்கிறதா? அப்படி வேறு வழிமுறைகளைக் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதற்கு ஒரு நல்ல சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது. தொழில் தகராறு சட்டம், மற்றும் இது சம்பந்தமான எல்லாச் சட்டங்களையும் அலசிப் பார்த்து என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சேர்ந்துள்ள கட்சியினுடைய தொழிற் சங்கத்தின் பிரதிநிதியும் இடம் பெற்றிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மீண்டும் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி இருக்கையை விட்டு எழுந்தார்.)

பதில் சொல்ல ஞாபகம் வைத்துக்கொள்வதே கஷ்டமாகப் போய்விட்டது. வயதாகிவிட்டது. (சிரிப்பு).



திரு. க. இராமமூர்த்தி: நியாயமான காரணங்களுக்காக எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இது நடந்து இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது. இதுபற்றிய தகவல்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. மீதியுள்ள அனைத்துத் தகவல்களும் அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிரச்சினைகள் தோன்றி, லேபர் ஆபீசருக்கு வந்து, அவர் தலையிட்டு கன்சிலியேஷன் ஃபெய்லூர் ஆகி அதுபற்றிய ரிப்போர்ட் வந்திருக்கும். இப்போது அதுபற்றிச் சொல்வதற்கு it is too late.

THIRU J. M MIAKHAN: There are certain cases like that of the Chrome Leather Company where there is neither a lock-out nor a closure nor a strike. In such cases what do the Government propose to do? Do they propose to take over the concern and run it? I suppose the Government are aware that more than 800 people are suffering for the past one year without a job due to the situation in the Chrome Leather Company. The workers just go there, put their signature and come back because there is no closure, lock-out or strike. May I know what the Government propose to do in the matter?

THE HON. THIRU S. RAGHAVANANDAM: The Government are seriously thinking of taking action which will not affect the tax-payer, the worker and the industry.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்த வினா மிகவும் முக்கியமான வினா. 31 தொழிற்சாலைகள் நிரந்தரமாக மூடப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக தமிழ்நாட்டிலே உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வினா எழுப்பப்பட்ட பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் பொறுத்தவரையும், வேதாந்தமும் கலந்த பதிலாக இருக்கிறதேத் தவிர, இந்த மன்றம் எந்தத் தகவலைக் கேட்டுப் பெற விரும்புகிறதோ அது மறுக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வினாக்களுக்கு உரிய விடைகளைச் சரியாக தயார் செய்யவில்லை என்பதால், சட்டமன்ற பேரவை விதி 41-ன் கீழும், 41-அ பிரிவின் கீழ் ½ மணி நேர விவாதம் இதற்காக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் அளித்திருக்கும் அறிக்கையில் மிகத் தெளிவாக இருக்கிறது. நான்கு தொழிற்சாலைகள் பொருளாதார நெருக்கடியாலும், 6 தொழிற்சாலை-- பொருளாதார சீர்கேட்

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** வாரியம் பரிந்துரை செய்து
இப்போது அரசின் அனுமதி கேட்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள்
சொல்லுகிறார்கள். இது தண்ணீர்ப் பிரச்சினை. மக்களுக்கு குடி
தண்ணீர் எப்போது வரும் என்பதுதான் கேள்வி. திட்டம் பரிசீலனையில்
இருக்கிறது என்றால், என்ன அர்த்தம்? பல விஷயங்கள், பல வருஷங்களாக
அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. குடி தண்ணீர் பற்றியும்
பரிசிலனையே செய்து கொண்டிருந்தால், குடல் தீய்ந்து போய்விடுமே?
எனவே இதுபோன்ற குடிநீர்ப் பிரச்சினையிலாவது பரிசிலனை செய்வதை
நீண்ட காலத்திற்கு விட்டுவிடாமல் சீக்கிரமாகவே முடிவுக்கு வர அரசு
முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அதற்கு ஒரு 'இனட்டெரிம்
ரிலீப்ஃ' கொடுக்கப்பட்டிருக்கிறது. 9 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு
அவசரத் திட்டம் செயல்படவிருக்கிறது. அதை நான் விளக்க வேண்டுப்
என்றால், விளக்கத் தயாராக இருக்கிறேன். விளக்கினால் நேரமாகுமே
என்ற காரணத்தால் விளக்கவில்லை. இடைக்காலத்தில் அந்த ஏற்பாடு செய்
யப்பட்டிருக்கிறது. 9 லட்சம் ரூபாய் செலவில் திருவான்மியூர் 'ஏரியா'
விலிருந்து குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. அறிவழகன்:** பல்லவபுரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடி
தண்ணீர் எந்த ஆண்டு கிடைக்கும் என்பதுதான் என்னுடைய கேள்வி.
அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** எவ்வளவு விரைவில் குடி
தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் பல்லவ
புரத்து மக்களுக்கு இந்த அரசு குடி தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க
இருக்கிறது. தற்போது அந்தத் திட்டம் அரசாங்கத்தின் ஆய்வில் இருக்கும்
போது, இந்த ஆண்டு என்று குறிப்பிட்டுச் சொல்லி சிக்கிக்கொள்வது
அவ்வளவு புத்திசாலித்தனம் அல்ல.

**திரு. சி. இராமலிங்கம்:** பல்லவபுரம், ஆலந்தூர், அனகாபுத்தூர், பம்மல்
ஆகிய நகரங்களுக்குக் குடி தண்ணீர் வேண்டும் என்ற காரணத்திற்காக
இந்தப் பஞ்சாயத்துக்கள் அனைத்தும் சேர்ந்து எல்.ஐ.சி.-யிடமிருந்து சுமார்
ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கடன் வாங்கி குடிநீர் வாரியத்திற்குக் கட்டியிருக்
கிறார்கள். இந்தப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு,
ஏறத்தாழ 5, 6 ஆண்டுகளாகியும் கூட, அது இன்னும் பூர்த்தியாகாமலே இருக்
கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், வட்டியை
மட்டும் கட்டிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. எனவே இந்தத்





திட்டம் வந்த பிறகு, பஞ்சாயத்திடமிருந்து வட்டியை வசூலிப்பதுதான்
நல்லது என்று பொதுமக்கள் கருதுகிறார்கள். எனவே தற்காலிகமாக அந்த
வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா
என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தனிக் கேள்வி போட்டால்,
விவரமாகப் பதில் சொல்ல இயலும்.

**திரு. ம. மாணிக்கம்:** பல்லவபுரத்திற்கு இடைக்காலத் திட்டம் காரண
மாக விரைவில் குடி தண்ணீர் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லு
கிறார்கள். விரைவில் என்பதற்கு ஏதாவது கால நிர்ணயம் உண்டா? அது
ஐந்து வருஷத்திலா, மூன்று வருஷத்திலா, ஏழு வருஷத்திலா அல்லது ஆறு
மாதத்திலா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
எங்கே வசிக்கிறார்கள்?

[ஒரு குரல்—குரோம்பேட்டைப் பகுதியில்தான். (சிரிப்பு).]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அத்தியாவசியமான குடிநீர்
நெருக்கடியைப் போக்கும் விதத்தில் ஓர் தற்காலிக அவசர வேலையாக
அக்கரையிலிருந்து நீர் எடுத்துச் செல்லும் குழாய் மூலம் ஐ.ஐ.டி.-க்கு
ஒரு நாளைக்கு 9 லட்சம் லிட்டர் தண்ணீர் வீதம் குன்றத்தூரிலிருந்து
குழாய்க் கிணறுகள் அமைத்து சுமார் 9 லட்சம் லிட்டர் தண்ணீர் ஒரு
நாளைக்கு வீதம் இரண்டு நகராட்சிகளுக்கும் அளிக்க திட்டமிடப்பட்டு,
அதன்படி குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆலந்தூருக்கு ரூ. 9.97 லட்சம்
நிர்மாணச் செலவிற்கும், ரூ. 50,000 பராமரிப்பிற்காகவும், பல்லவபுரத்திற்கு
ரூ. 9 லட்சம் நிர்மாணச் செலவிற்காகவும், ரூ. 62,009 பராமரிப்பிற்காகவும்
மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசும் ஒப்புதல் அளித்தது. மேலும் மேற்படி
திட்ட மதிப்பீடுகளை மத்திய அரசின் அனுமதி பெற்று இணைந்த நகர்ப்புற
வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக செலவழிக்கவும் மதிப்பீடுத்
தொகையை கடன்களாக பாலிக்கு நகராட்சிகளுக்கு வழங்கவும், பொதுத்
திட்டத்தின் கடனுடன் சேர்ந்து திரும்ப வசூலிக்கலாம் எனவும் முடிவு
செய்து அமைச்சரின் ஒப்புதலையும் பெற்று அரசு தன் ஆணை எண் 202,
நகர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, நாள் 6—2—1979-ல் ஒப்புதல் அளித்
துள்ளது. இந்த வேலைகள் துவங்கப்பட்டு தற்போது முடியும் தருவாயில்
உள்ளன.

டாக்டர் இரா. சனார்த்தனம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்லவபுரம் என்பது எங்கே இருக்கிறது? இதைப்போலவே சேர, சோழ, பாண்டியபுரம் என்று இருக்கின்றனவா? அங்கேயும் இப்படிப் பட்ட குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பல்லாவரம்தான் பல்லவபுரம் என்று அழைக்கப்படுகிறது.

## *House Building Loans to Teachers of Private Schools and Local Bodies.*

*92 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU K. MEENAKSHISUNDARAM) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether House building loan facility is being given to the Government servants and Government School Teachers;

(*b*) if so whether the Government have received any representation from the Teachers Associations to provide this facility to private and local body school teachers; and

(*c*) if so, the decision taken thereon by the Government ?

## தனியார் பள்ளி மற்றும் உள்ளாட்சி நிறுவன ஆசிரியர்களுக்கு வீடு கட்ட கடன் வசதி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்:

(அ) அரசு ஊழியர்களுக்கும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், வீடு கட்ட கடன் வசதி அளிக்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இந்தக் கடன் வசதியை தனியார் பள்ளி மற்றும் உள்ளாட்சித்துறை ஆசிரியர்களுக்கும் தர வேண்டுமென, ஆசிரியர் சங்கங்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு என்ன முடிவு எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்,

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அரசு ஊழியர்களுக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், வீடு கட்டுவதற்குக் கடன் வசதி அளிக்கப்படுகிறது. அதைப்போலவே உள்ளாட்சித் துறையில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் வீடு கட்டுவதற்குக் கடன் வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து ஏதேனும் உண்டா? உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்தகைய கடன் வசதி வழங்கப்பட வேண்டும் என்று பல்வேறு சங்கங்களிடமிருந்து பல தீர்மானங்கள் அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளன. இந்தக் கோரிக்கையின் மீது அரசு என்ன முடிவெடுத்திருக் கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் இதற்கு ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன். இத்தகைய கடன் வசதியை தனியார் பள்ளி மற்றும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கும் தர வேண்டும் என்று ஆசிரியர்களின் சங்கங்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா என்பதுதான் கேள்வி. அதற்கு நான் அளித்த பதில் 'இல்லை' என்பதாகும். அப்படிப் பட்ட கோரிக்கையே வரவில்லை. 'நோ டிமாண்டு'.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தனியார் பள்ளி மற்றும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கும் இத்தகைய கடன் வசதி தர வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா என்ற வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதிலளிக்கிறார்கள். அண்மையில் ஆசிரியர்களும் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தில் இதையே ஒரு கோரிக்கையாக வைத்திருந்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் சட்டமன்றத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைத் தந்தார்கள். அதாவது 940 ஆசிரியர்களுக்கு ரூபாய் 30 லட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் வழங்கப்பட்டது என்று அப்போது அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது அத்தகைய கோரிக்கை அரசுக்கு வந்து, அதை அரசு ஏற்றுக் கொண்டதைப்போல் பதில் அளித் தார்கள். தற்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அத்தகைய கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே இதில் எது உண்மை என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொன்ன தற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் கல்வியமைச்சர் அவர்கள் அத்தகைய கோரிக்கை வந்திருக்கிறது, அதன்மீது கடன் வழங்கப் பட்டிருக்கிறது என்று சொன்னது சரியான தகவல் அல்ல என்று ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதைப்பற்றி உரிய அமைச்ச
ரிடம் கேள்வி கேட்டு விளக்கம் பெறலாம். என்னைப் பொறுத்தவரையில்—
வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரிய அமைச்சர் என்ற
முறையில்—எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல் இதுதான். அதாவது
கோரிக்கை ஏதும் வரவில்லை என்பதுதான்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்
இந்த வினாவைக் கேட்கும்போது, இங்கே தொழிலாளர் நலத் துறை
அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதற்கு முன்னால்
இங்கே கல்வியமைச்சர் அவர்கள் வேறு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கி
றார்கள் என்று அந்த நிலைப்பாட்டை மட்டும் சுட்டிக் காட்டியிருந்தால்,
அவருக்குத் தேவையான விளக்கத்தை அரசாங்கத்தின் சார்பிலேகூட நாங்கள்
கொடுத்திருக்கலாம். ஆனால் அவருடைய துணைக் கேள்வியின் பிற்பகுதியில்
“தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கோரிக்கை மனுக்கள் ஏதும்
வரவே ‘இல்லை’ என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். காரணம் இதன் மூலம் கல்வியமைச்சர் அவர்கள் சொன்னது
சரியான தகவல் அல்ல என்றாகிவிடுகிறது” என்றார்கள். கல்வியமைச்சர்
அவர்கள் இங்கே சொன்னது நிறைவேறக் கூடாது, அது சரியான தகவல்
அல்ல என்று இருக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு உறுப்பினர் திரு.
மீனாட்சிசுந்தரம் அவர்களுக்குத் தனிப்பட்ட அக்கறை இருக்குமானால்,
அதைப்பற்றி நாங்கள் ஆட்சேபணையில்லை. ஆனால் அவர் உள்நோக்கம்
கற்பிக்கும் முறையில் துணைக் கேள்வி போடுவதும், கல்வியமைச்சரின்
பதில் சரியான தகவல் அல்ல என்று ஆகி விடுகிறது. அது மகிழ்ச்சிக்குரிய
செய்தி என்ற முறையில் நன்றி என்பதும் சரியல்ல.

(பிற்பகல் 4-50)

திரு க. மீனாட்சிசுந்தரம்: இப்போதும் சொல்லுகிறேன் சரியான
தகவல் அல்லதான். சரியான தகவல் அல்ல என்பதை மெய்ப்பிக்கிற வகை
யிலேதான் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கி
றார்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: தலைவர் அவர்களே, சரியான
தகவல் இல்லை என்று சொல்லட்டும். தவறான கருத்து என்று சொல்லுவ
தற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமையிருக்கிறது. அதற்கு சம்பந்தப்
பட்ட அமைச்சர் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார். ஆனால் இரண்



டையும் இணைத்து “தொழிலாளர் நல அமைச்சர் இல்லை என்று சொல்லு
வதற்கு நன்றி” என்றால் என்ன பொருள்? ஆசிரியர்களுக்கு அப்படிப்பட்ட
நன்மையைச் செய்யக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: “பொய்யான தகவல்”
என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதை “சரியான தகவல்
அல்ல” என்று அவைக் குறிப்பேட்டில் மாற்றிக்கொள்ளவும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகை கொடுக்கக்
கூடாது என்ற நோக்கத்திலே நான் சொல்லுவதாக முன்னவர் அவர்கள் திசை
திருப்புவதை நான் மறுக்கிறேன். நான் அந்த அடிப்படையிலே சொல்ல
வில்லை. கல்வி அமைச்சர் உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார்
என்பதை தொழிலாளர் நல அமைச்சர் தெளிவுபடுத்தியதற்குத்தான் நான்
நன்றி கூறினேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: அப்படியானால் மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் “இல்லை” என்று சொன்னதற்கு
நன்றி கூறியிருக்க வேண்டியதில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றால் ...
“இல்லை” என்று பதில் சொன்ன

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: “இல்லை” என்று பதில் சொன்ன
தற்கு நன்றி தெரிவித்தது ஏன் என்று விளக்கினால், மக்கள் புரிந்துகொள்
வார்கள்.

திரு. க. அறிவழகன்: அரசுப் பள்ளிகளில் வேலை பார்க்கிற ஆசிரியர்
களுக்கு வீடு கட்ட அரசே கடனைக் கொடுக்கிறது. ஆனால் அரசினுடைய
மானியத்தையும், மற்ற சலுகைகளையும் பெறுகின்ற தனியார் பள்ளி ஆசிரியர்
களுக்கும், உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்க
வில்லை. ஆகவே இந்தச் சலுகை அவர்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்பது
தான் கேள்வி. ஆகவே அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் வேலை பார்க்கிற
ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகையைத் தருகிற திட்டம் அரசிடம்
இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. செ. முத்துசாமி: அரசு ஊழியர்களுக்குண்டான சலுகை உள்ளாட்சித்
துறையில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும் உண்டா என்று கேட்டால்,
“இல்லை” என்று இரத்தினச் சுருக்கமாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லு
கிறார்கள். அரசு ஊழியர்களுக்குண்டான சலுகையை ஆசிரியர்களுக்குத்
தராமல் இருப்பது என்ன நியாயம்?

[1979 நவம்பர் 7

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : காலம் கடந்திருப்பதால் மான்புமிகு உறுப்பினர்களும் இரத்தினச் சுருக்கமாகக் கேள்விகளைக் கேட் கலாம். (சிரிப்பு)

திரு. செ. முத்துசாமி : தனியார் பள்ளிகளிலும், உள்ளாட்சி மன்றப் பள்ளி களிலும் பணிபுரிபவர்களையும் சமமாக மதிக்கக்கூடிய கொள்கை இந்த அரசுக்கு உண்டா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோரிக்கை மனுவே வரவில்லை. எனவே கோரிக்கை மனுவை அனுப்பட்டும். பதிலை பிறகு எதிர்பார்க்கலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : பொதுவாக கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக தனியார் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் வீடு கட்ட கடன் பெறும்போது அதிகமான வட்டி வசூலிக்கப்படு கிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டு தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஊராட்சி மன்ற ஆசிரியர்களுக்கும் வீடு கட்ட அரசே கடன் அளிக்க வேண்டு மென்ற கோரிக்கையை ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற முறையில் இந்த மன்றத் தில் சமர்ப்பிக்கிறேன். அவர்களுக்குக் கடன் வசதி அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முதலில் கோரிக்கையை அனுப்பட்டும். பரிசீலிப்போம். பிறகு கருத்தைத் தெரிவிப்போம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொதுவாக ஆசிரியர்களுடைய கோரிக் கைகள் கல்வித் துறைக்குத்தான் போகும். கல்வித் துறை என்பது அரசி னுடைய ஓர் அங்கம். கல்வித் துறைக்கு அனுப்பப்பட்ட கோரிக்கைகள் வீட்டு வசதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அரசு ஊழியர்களுக்கும், அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீடுகட்ட கடன் வசதி அளிக்கப்படுகின்றதா? ஆம் எனில், இந்தக் கடன் வசதியை தனியார் பள்ளி மற்றும் உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்கும் தர வேண்டுமென ஆசிரியர் சங்கங்களிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா என்பதுதான் என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி. வரவில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் "பொய்" என்று குறிப்பிட்டதை "உண்மைக்குப் புறம்பான" என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். கல்வித் துறை அமைச்சர் சட்டப் பேரவையிலே சொன்ன கருத்துக்கும், இங்கே தொழிலாளர் நல



அமைச்சர் சொல்லுகிற கருத்துக்கும் மாறுபாடு இருக்கிறது. ஒரே கேள்விக்கு அமைச்சரவையில் உள்ள இரண்டு அமைச்சர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லலாமா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவையில் பேசியதை இங்கே இழுப்ப வேண்டியதில்லை. "பொய்" என்ற வார்த்தை "அன்பார்லி மென்டரி" என்பதால், அதற்குப் பதிலாக வேறு வார்த்தையைச் சொல்லியிருக் கிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : கருத்து மாறுபட்டிருந்தால், [illegible] சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வரலாம். ஆசிரி யர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கட்டிடம் கட்டும் இலாக்கா (ஹவுசிங் போர்ட்) தொழி லாளர் நல அமைச்சர் அவர்களிடம் இருப்பதால், நேரிடையாகவே அவரிடம் கேள்வியைக் கேட்கிறார்கள். [illegible] சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் [illegible] கேட்டுப் பெறலாம். [illegible]

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : ஒரே பிரச்சினையில் இரண்டு விதமான விடை கள் வரலாமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : இலாக்காக்கள் தனித்தனியாக இருக்கும்போது, அவரவர் இலாக்காவிலிருந்து பெறப்பட்ட பதிலைத்தான் சொல்ல முடியும். கேள்விக்குரிய பதிலைத்தான் சொல்ல முடியும். [illegible] கல்வி அமைச்சரைப் [illegible] ஒரு விவாதமாக எடுத்துக்கொள்ள முடியாது. [illegible] மேற்கொண்டிருக்கிறார்கள் [illegible] இந்த வரையில் என்னென்ன முயற்சிகளை [illegible] வேண்டுமென்றால், என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கூடுதல் தகவல் [illegible] நிச்சயமாகப் பெறலாம்.

திரு. ம. சங்காலிங்கம் : ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து அரசுக்கு வேண்டு கோள் வந்துள்ளதா என்பதுதான் மூலக் கேள்வி. [illegible] தொழிலாளர் நல அமைச்சர் மாத்திரமல்ல, எல்லாத் துறை [illegible] [illegible] ஆசிரியர்கள் கல்வி அமைச்சரிடம் [illegible] அவர்கள் சொல்லியிருக் [illegible] கல்வி [illegible] அமைச்சர் [illegible] கிறார்கள். [illegible] கல்வி அமைச்சரோடு தொழிலாளர் நல அமைச்சர் [illegible] பேசி இதுபற்றி ஒரு நல்ல முடிவை எடுப்பார்களா [illegible] விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : [illegible] மாண்புமிகு [illegible] தலைவர் [illegible] விரும்புகிறேன். [illegible] அமைச்சரோடு [illegible]

திரு. செ. முத்துசாமி : கல்வி அமைச்சரால் சொல்லப்பட்டது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வீட்டு வசதி கடன் அளிக்கும் திட்டம். இங்கே கேட்டிருப்பது, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் வீட்டு வசதிக் கடன் சலுகை, உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுமா என்று கேள்வி. அது வேறு, இது வேறு, ஆகவே இந்தத் திட்டம் உண்டா என்பதுதான் நான் கேட்பது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோரிக்கையே வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். வேறு என்ன பதிலை எதிர்பார்க்கிறார்கள் என்று புரியவில்லை.

## New Bus Routes.

***93 Q.—Thiru K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Transport be pleased to state the number of Licences** granted to (i) new entrants and (ii) **unemployed Graduates in South** Arcot District between 1st July 1977 and 7th December 1978 for **operating new Bus Routes ?**

## புதிய பேருந்து வழித்தடங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

புதிய வழித்தடங்களில் பேருந்து விடுவதற்காக, 1—7—1977 முதல் 7—12—1978 வரையிலான காலங்களில் தென்னார்க்காடு மாவட்டத்தில் (i) புதிய பேருந்து உரிமையாளர்களுக்கும், (ii) வேலையில்லாத பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (i) பனிரெண்டு

(ii) இரண்டு.

திரு. க. இராமமூர்த்தி : புதிய பேருந்து வழித்தடங்களுக்குரிய உரிமம் ஏற்கெனவே பஸ் முதலாளிகளாக இல்லாதவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது ஏற்கெனவே பஸ் வைத்திருப்பவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

வேலையில்லாத பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற வழித்தடங்களைப் பொறுத்த வரையில், அரசினுடைய வேலைவாய்ப்பு தேடித்தரும் நிலையத்தில் உள்ள பதிவேட்டில் பதிவு செய்துள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?



(திரு. க. இராமமூர்த்தி)

அல்லது வேலைக்குப் போவதற்கு விருப்பம் இல்லாமல் வீட்டிலேயே இருக்கக் கூடிய பட்டதாரிகளுக்கு பொழுது போக்காக இந்தத் தொழிலை நடத்துகிற வகையிலே கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நியூ என்ட்ரன்ட்சைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே பேருந்து உரிமம் எதுவும் பெற்றிராதவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. டவுன் பஸ்ஸைக்கு அப்பாற்பட்டு 25 கிலோமீட்டரிலிருந்து 40 கிலோமீட்டர் வரையில் உள்ள குறிப்பிட்ட புதிய வழித்தடங்கள் நியூ என்ட்ரன்ட்ஸ்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. ஆனால் அந்தக் குறிப்பிட்ட வழித்தடங்களில் புதுமுகங்கள் மனுச் செய்யாமல் இருந்து இங்கின் பஸ் ஆப்பரேட்டர்கள் மனுச் செய்திருந்தால், அப்படிப்பட்டவர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட காரணத்தால் வழித்தடங்களை இழந்திருப்பவர்களாக இருந்தால், அவர்களுக்கும் முன்னுரிமை வழங்கலாம் என்று உச்ச நீதிமன்றமும், உயர்நீதி மன்றமும் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலே வழங்கப்படுகிறது. வேலை இல்லாத பட்டதாரிகளைப் பொறுத்த வரைக்கும் எம்ப்ளாய்மென்ட் இராஜிஸ்டர்களுக்குத்தான் அந்த உரிமம் வழங்க வேண்டுமென்று எதுவுமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் முடியும்வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆனால் பட்டம் பெற்றவர்கள், புதிய வழித்தடங்களுக்காக மனுக்களைச் செய்கிற பட்டம் பெறாதவர்கள் மனுதாரர்களிலும் பொறியியல் பட்டதாரிகளுக்கு போது, பட்டம் பெற்ற மனுதாரர்களிலும் பொறியியல் பட்டதாரிகளில், பி.ஈ. (மெக்கானிக்கல் என்ஜினியரிங்) ஆகியவற்றில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. டிப்ளமா (ஆட்டோமொபைல்), பி.ஈ. (மெக்கானிக்கல்) கொடுக்கப்படுகிறது. மெக்கானிக்கல் என்ஜி பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. டிப்ளமா இன் மெக்கானிக்கல் என்ஜினியரிங், டிப்ளமா இன் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் ஆகியவர்களுக்கும் உரிமம் வழங்கப்படுகிறது. இந்த இரண்டும் சலுகை அளிக்கவசம் என்ற இல்லாத நிலையில் வரும் பட்டதாரிகளுக்கும் டிரான்ஸ்போர்ட் ஆத்தாரிட்டி தலைவர் ஜெனரல் முறையின் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிசீலித்திருக்கிறார்கள். இந்த அடிப்படையிலேதான் அவர்கள் அதையும் பரிசீலித்திருக்கிறார்கள். இரண்டு பட்டதாரிகள் உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-00)

திரு. ஆ. தங்கசிவன் : சென்னையிலிருந்து மதுரைக்கு விடப்பட்ட ஆம்னி பஸ்கள் 10 விட்டிபட்டிருக்கு பஸ்கள் நிறுத்தப்பட்டு, இன்றைக்கு பி.ஆர்.சி. பஸ்கள் போகின்றன. இந்த பஸ்களிலே டிக்கட்டு கொடுக்கின்ற பொறுப்பினை தேஷிக் பஸ்கள் நிறுத்தப்பட்டு அவர்கள் சென்னையிலிருந்து மதுரைக்கு கம்பெனிக்குக் கொடுத்து

ரூபாய் 22 டிக்கெட்டுக்கு ரூபாய் 26 கேட்கிறார்கள். அவர்களிடமிருந்து ரூபாய் 26-க்கு சீட்டு வாங்கிக் கொண்டு போய் வண்டியிலே ஏறினால் அங்கு ரூபாய் 22-க்கான டிக்கெட்டுக் கொடுக்கிறார்கள். ஏன் இந்த நேஷனல் டிராவல்ஸ் கம்பெனிக்குப் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது? இந்த டிக்கெட் கொடுக்கின்ற பொறுப்பை அரசுக் கழகம் நேரடியாகவே ஏற்றுச் செய்வதற்கு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நேஷனல் டிராவல்ஸ் கம்பெனி என்று எந்த ஒரு கம்பெனியிடமும் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கவில்லை. மாறாக அந்த இடத்திலே திடீரென்று இந்த முடிவெடுக்கப்பட்டது. பேருந்து கள் எல்லாம் அந்த இடத்திலேயே வந்துவிட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை வந்தது. அந்த இடத்திலே வந்துவிட வேண்டும் என்று கேட்டு, அந்தக் குறிப்பிட்ட இடத்திலே இடமில்லாத காரணத்தால், அந்த இடத்தின் அருகிலே அரசுத் துறையைச் சார்ந்த பல்லவன் போக்கு வரத்து விரைவுப் பேருந்துத் துறையைச் சார்ந்தவர்களே இடம் கொடுத் தார்கள். இன்று முதல் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினைச் சார்ந்த ஒரு மெட்ரோ டிரிவ் டெப்போவிலேயே டிக்கட்டு வழங்கப்படவிருக்கின்றது.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய வழித் தடங்கள் வழங்குவதற்கான சில விதிமுறைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பஸ்களை (Surrender) விட்டுக் கொடுத்தவர்களுக்கு வேறு தடங்கள் கொடுப்பது என்பதைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். இது நீங்க ளாக புதிய வழித்தடங்கள் கொடுக்கின்றபோது, ஏற்கெனவே பேருந்துகளை வைத்துக்கொண்டிருக்கும் பல உரிமையாளர்களுடைய குடும்பத்தைச் சார்ந்த வர்களாக இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலே அரசு அக்கறை கொள்ளுமா? அப்படிப்பட்டவர்கள் தவறான தகவல்கள் கொடுத்து வழித் தடங்கள் உரிமம் பெற்றவர்களானால், அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படும் என்றால், அந்த வழித்தடங்களுக்கு உரிமம் கொடுத்ததை மீண்டும் திரும்பப் பெற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய நல்லெண்ணத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் உரிமங்கள் வழங்குகிறபோது, உரிமம் கேட்டு மனுச் செய்கின்ற மனுதாரருக்கு பேருந்து உரிமை ஏற்கெனவே இருக்கின்றதா என்பதைத்தான் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். காரணம் 'மோட்டார் வாகனச் சட்ட விதிமுறைகளின் அடிப் படையிலே தனிப்பட்ட முறையில், அப்ளிகேண்ட்ஸ் உடைய விவரங்களைத் தான் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும். அதுதான் சட்ட நியதியும் கூட. ஆனால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே அதிகமாக பேருந்து உரிமங்கள் பெற்றவர்களாக இருப்பது தெரிய வந்தால், நீதிமன்ற



டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டிக்கு 'They have got discretionary power; அந்த 'டிஸ்கிரிஷனரி பவர்' இருக்கின்றபோது, அப்படி அவர்கள் தடுத்து விட்டால்—மனுதாரர்கள் உடனேயே அப்பீல் செய்து விடுகிறார்கள். எஸ்.ஏ.டி.டி.-க்கும் பிறகு ஹைகோர்ட்டுக்கும் அப்பீல் செய்து விடுகிறார்கள். அப்பீல் செய்கின்றபோது, அவர்கள் சட்ட விதி முறையைச் சுட்டிக்காட்டி, மனுச் செய்துள்ள தனிப்பட்ட மனுதாரருக்கு ஏற்கெனவே உரிமம் இல்லை என்றும், ஏனைய தகுதிகள் இருக்கின்றனவென்றும் சொல்லிவிடுகிறார்கள். இது மோட்டார் வாகனச் சட்டத்தின் அடிப்படையிலுள்ள காரணத்தால், அந்தச் சட்டத்தையே மாற்றினாலொழிய, ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையிலே சட்டத்தை மாற்ற யோசித்து வருகிறோம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்கள் திடீ ரென்று நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்படி நிறுத்தப்பட்டதால் பொது மக்கள் அவதிக்குட்பட்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஆம்னி பஸ்கள் திடீரென்று நிறுத்தப் பட்டதற்குக் காரணம் இருக்கிறது. 1978 ஆம் ஆண்டிலிருந்து இந்த மாதம் வரை சராசரியாக மாதம் ஒன்றுக்கு சுமார் 50 ஆம்னி பஸ்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கு முக்கிய காரணம், 69 ஆம்னி பஸ்கள் ஏற்கெனவே 1973 ஆம் ஆண்டு வாக்கில் அரசிடமிருந்து உரிமம் பெற்று வரி செலுத்தி ஓட்டி வருகிறார்கள். இந்த சுமார் 69 ஆம்னி பஸ்கள் நீங்கலாக மேற்கொண்டு 200 பஸ்களை ஒரு வித வரியும் செலுத்தாமல் ஓட்டி வருகிறார்கள். பழக்கமாக இந்த வண்டிகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை ரூபாய் 12,000 அரசுக்கு வரி செலுத்தி ஆகவேண்டும். ஆகவே அப்படி ரூபாய் 50,400 ஆண்டுக்கு ரூபாய் 50,400 வரி செலுத்த வேண்டும். எஸ்.டி.ஏ. தலைவரிடமோ, வட்டார ஆட்சித் தலைவரிடமோ வரி செலுத்தாமல், அவர்கள் மாவட்ட மாநிலங்களில் உரிமம் பெற்று தமிழ கத்தில் உரிமம் பெறாமலேயே பஸ்ஸை ஓட்டி வருகிறார்கள். இதனால் அண்டை அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது. [illegible] நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அண்டை யதைப் போல நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, [illegible] தற்காலிகமாக மாநிலங்களுக்குச் சென்று அங்கு ரூபாய் 50 வரி கட்டி வாங்குகிறார்கள். பழனி, பார்பிட்டை 'டூரிஸ்ட் பர்மிட்' என்று சொல்லி நாட்களுக்கு உரிமம் பெற்று திருப்பதி, காஞ்சி போவதற்காகவும் அல்லது பத்து நாட்களுக்கு உரிமம் பெற்று விட்டு, உண்மையில் பெங்களூர் டு மெட்ராஸ் என்று ஸ்டேஜ் கேரியேஜ் ஆக பேருந்துகள் மீது ஓட்டி வருகிறார்கள். தற்போது 40 உரிமம் இல்லாத பேருந்துகள் மீது இப்படி எடுக்கின்றபோதுதான் பஸ்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள்.

(திரு. சி. பொன்னையன்) [1979 நவம்பர் 7

தொல்லைக்குட்பட்டிருக்கிறார்கள். நாம் நிறைய விரைவுப் பேருந்துகள் விட்டிருக்கிறோம். 192 பேருந்துகளை கடந்த 1½ ஆண்டுக் காலமாக விட்டோம். ஆனால் இவைகளுக்குப் போட்டியாக, நான் முன்பு சொன்னதைப் போன்ற பேருந்துகள் 100, 150 என்ற எண்ணிக்கையில் அண்டை மாநிலங்களிலிருந்து வந்தபடியால், இழப்பு ஏற்பட்டது. நமது பேருந்துகளுக்கு ஏற்படும் இழப்பைத் தடுத்து நிறுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த இரண்டு தினங்களாக அரசுப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் இரா. ஜனார்த்தனம்:** புதிய வழித் தடங்களுக்கு உரிமங்கள் படித்த வேலையில்லாதவர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். படித்த வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அதிக உரிமங்கள் தருவதற்கு ஏதேனும் திட்டங்கள் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஏற்கெனவே பதிலில் சொல்லியிருக்கிறேன். வேலையில்லாத பட்டதாரிகளைப் பொறுத்தவரையில், பொறியியல் பட்டதாரிகளுக்கு இவ்விஷயத்தில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மனுச் செய்பவர்களில் பொறியியல் கல்வியில்லாதவர்களே இல்லையென்றால், அதை மனதில் கொண்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். இதைத் தவிர பிரத்தியேகமான திட்டம் இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆம்னி பஸ்களிலே 200 பஸ்களில் 40 பஸ்கள் இப்போது ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும், அரசாங்க விரைவு வண்டிகள் விடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மீதி இருக்கக்கூடிய 160 பஸ்களும் முறை தவறாக நம்முடைய தமிழகத்திலே ஓடிக்கொண்டிருந்தால், அரசாங்கம் அவைகளையெல்லாம் தடை செய்து நம்முடைய விரைவுப் பேருந்துகளை விட்டு நம் அரசாங்கத்திற்கு லாபம் ஈட்ட அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இதிலே ஒரு முக்கிய சட்டப் பிரச்சினை உள்ளது. இப்போது ரத்து செய்திருப்பதுகூட சி.எப்.எக்ஸ். நோட்டீஸ் என்ற ஒரு நோட்டீஸ் விட்டு செய்துள்ளோம். கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தகவல் கேட்கின்றபோது, எத்தனை பேருந்துகள் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன என்று கேட்டார்கள். தற்போது ஓடும் ஏறத்தாழ ஐந்தாயிரம் அரசுப் பேருந்துகளில் ஏறத்தாழ 368 பேருந்துகள்தான் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. ஆனால் இந்த 269 ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரைக்கும் 143 ஆம்னி பஸ்கள் ஒரு ஆண்டில் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. பல உயிர்கள் இழப்பிற்கு அவைகள் காரணமாக இருந்தன.



1979 நவம்பர் 7] (திரு. சி. பொன்னையன்)

1973 ஆம் ஆண்டில் உரிமம் பெற்று ஓடிக்கொண்டிருந்த 69 ஆம்னி பஸ்கள் தரமானவையாக இருக்கின்றன. ஆனால் உரிமங்கள் இல்லாமல் 'ஸ்பேர் பஸ்' என்றும், 'கூடுதல் பஸ்' என்றும் சொல்லிக்கொண்டு பஸ்களை ஓட்டி பெரும் லாபம் அடைகிறார்கள். சி.எப்.எக்ஸ். நோட்டீஸ் கொடுத்து, 'மெக்கானிக்கல் டிபெக்ட்ஸ்' என்ற அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உயர்நீதி மன்றத்திலே சில ஆம்னி பஸ்காரர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். ஒரு சினிமா தியேட்டர் தொடங்க வேண்டுமென்றாலும் உரிமம் வாங்கித்தான் தொடங்க வேண்டும். பல பஸ்களுக்கு உரிமங்கள் வாங்காமலே இருக்கிறார்கள். அவ்வாறு ஓடிய ஒரு பஸ்-ஐ 'இம்பௌண்ட்' செய்தோம். அவர்கள் உயர்நீதி மன்றம் சென்றார்கள். அங்கு "This cannot be construed as a material object needed for evidence in this particular case. So it should be immediately released" என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி கோர்ட்டிலே உத்தரவிட்ட அடுத்த நாளே உரிமம் இல்லாமல் ஓட்டினார்கள். மோட்டார் வாகன வரிகள் மூலம் ஆண்டிற்கு ரூபாய் 55 கோடி வருகிறது. இந்த வரியை இழக்கக்கூடாது என்றும் அரசுப் பேருந்துகளை விடவேண்டுமென்ற காரணத்தினாலும்தான் இதுபோன்ற கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய தமிழக அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு விரோதமாக நீதி மன்றங்கள் தீர்ப்புக் கொடுத்திருப்பதாக இப்போது சொன்னார்கள். நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகு, தனியார் பஸ்கள் ஓடுகின்றன. அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். [illegible] நீதிமன்றத் தீர்ப்புக்கும் பிறகு அந்த பஸ் சொந்தக்காரர்களிடம் நடவடிக்கை எடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்கு அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொன்ன அந்தக் கடுமையான நடவடிக்கைகளின் அடிப்படையில்தான், தற்போது தமிழகத்திலே ஓடிக்கொண்டிருந்த ஆம்னி பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Namakkal-Belukkurichi Town Bus.*

*94. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have received representations requesting the plying of Town Bus from Namakkal to Belukurichi; and

(*b*) if so, the reason for the delay in conceding the request ?

தொல்லைக்குட்பட்டிருக்கிறார்கள். நாம் நிறைய விரைவுப் பேருந்துகள் விட்டிருக்கிறோம். 192 பேருந்துகளை கடந்த 1½ ஆண்டுக் காலமாக விட்டோம். ஆனால் இவைகளுக்குப் போட்டியாக, நான் முன்பு சொன்னதைப் போன்ற பேருந்துகள் 100, 150 என்ற எண்ணிக்கையில் அண்டை மாநிலங்களிலிருந்து வந்தபடியால், இழப்பு ஏற்பட்டது. நமது பேருந்துகளுக்கு ஏற்படும் இழப்பைத் தடுத்து நிறுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கடந்த இரண்டு தினங்களாக அரசுப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன.

**டாக்டர் இரா. ஜனார்த்தனம்:** புதிய வழித் தடங்களுக்கு உரிமங்கள் படித்த வேலையில்லாதவர்களுக்குக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். படித்த வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அதிக உரிமங்கள் தருவதற்கு ஏதேனும் திட்டங்கள் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஏற்கெனவே பதிலில் சொல்லியிருக்கிறேன். வேலையில்லாத பட்டதாரிகளைப் பொறுத்தவரையில், பொறியியல் பட்டதாரிகளுக்கு இவ்விஷயத்தில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மனுச் செய்பவர்களில் பொறியியல் கல்வியில்லாதவர்களே இல்லையென்றால், அதை மனதில் கொண்டு, மற்றவர்களுக்குக் கொடுக்கலாம். இதைத் தவிர பிரத்தியேகமான திட்டம் இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆம்னி பஸ்களிலே 200 பஸ்களில் 40 பஸ்கள் இப்போது ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும், அரசாங்க விரைவு வண்டிகள் விடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மீதி இருக்கக்கூடிய 160 பஸ்களும் முறை தவறாக நம்முடைய தமிழகத்திலே ஓடிக் கொண்டிருந்தால், அரசாங்கம் அவைகளையெல்லாம் தடை செய்து நம்முடைய விரைவுப் பேருந்துகளை விட்டு நம் அரசாங்கத்திற்கு லாபம் ஈட்ட அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இதிலே ஒரு முக்கிய சட்டப் பிரச்சினை உள்ளது. இப்போது ரத்து செய்திருப்பதாகட இ.எப்.எக்ஸ். நோட்டீஸ் என்ற ஒரு நோட்டீஸ் விட்டு செய்துள்ளோம். கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தகவல் கேட்கின்றபோது, எத்தனை பேருந்துகள் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன என்று கேட்டார்கள். தற்போது ஓடும் ஏறத்தாழ ஐந்தாயிரம் அரசுப் பேருந்துகளில் ஏறத்தாழ 368 பேருந்துகள் தான் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. ஆனால் இந்த 269 ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரைக்கும் 143 ஆம்னி பஸ்கள் ஒரு ஆண்டில் விபத்துக்குள்ளாகியிருக்கின்றன. பல உயிர்கள் இழப்பிற்கு அவைகள் காரணமாக இருந்தன



... ஓடிக்கொண்டிருந்த 69 ஆம்னி பஸ் 1978 ஆம் ஆண்டில் உரிமம் பெற்று கள் தாமானவையாக இருக்கின்றன. ஆனால் உரிமங்கள் இல்லாமல் 'ஸ்பேர் பஸ்' என்றும், 'ஜுடல் பஸ்' என்றும் சொல்லிக்கொண்டு பஸ்களை ஓட்டி பெரும் லாபம் அடைகிறார்கள். இ.எப்.எக்ஸ். நோட்டீஸ் கொடுத்து, 'மெக்கானிகல் டிபெக்ட்ஸ்' என்ற அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உயர்நீதி மன்றத்திலே சில ஆம்னி பஸ்காரர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். ஒரு சினிமா தியேட்டர் தொடங்க வேண்டுமென்றாலும் உரிமம் வாங்கித்தான் தொடங்க வேண்டும். பல பஸ்களுக்கு உரிமங்கள் வாங்காமலே இருக்கிறார்கள். அவ்வாறு ஓடிய ஒரு பஸ்-ஐ 'இம்பௌண்ட்' செய்தோம். அவர்கள் உயர்நீதி மன்றம் சென்றார்கள். அந்த "This cannot be construed as a material object needed for evidence in this particular case. So it should be immediately released" என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி கோர்ட்டிலே உத்தரவிட்ட அடுத்த நாளே உரிமம் இல்லாமல் ஓட்டினார்கள். மோட்டார் வாகன வரிகள் மூலம் ஆண்டுக்கு ரூபாய் 56 கோடி வருகிறது. இந்த வரியை இழக்கக்கூடாது என்றும் அரசுப் பேருந்துகளை விடவேண்டுமென்ற காரணத்தினாலும்தான் இதுபோன்ற கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய தமிழக அரசாங்கம் எடுக்கின்ற [illegible] நடவடிக்கைகளுக்கு விரோதமாக நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகு, தனியார் இப்போது சொன்னார்கள். நீதி மன்றம் தீர்ப்புக் கொடுத்த பிறகு அந்த பஸ் சொந்தக்காரர்கள்மீது நடவடிக்கை [illegible] அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். [illegible] தீர்ப்புக்கும் பிறகு அந்த பஸ் சொந்தக்காரர்கள்மீது நடவடிக்கை மேற்கொண்டு [illegible] முடியாத நிலை இருக்கிறதா? அரசு அதற்கு [illegible] நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நான் சொன்ன அந்த நடவடிக்கைகளின் அடிப்படையில்தான், தற்போது தமிழகத்திலே ஓடிக்கொண்டிருந்த ஆம்னி பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Namakkal-Belukkurichi Town Bus.*

*94. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have received representations requesting the plying of Town Bus from Namakkal to Belukurichi; and

(*b*) if so, the reason for the delay in conceding the request?

நாமக்கல்-பேளுக்குறிச்சி நகரப் பேருந்து

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல்லிலிருந்து, பேளுக்குறிச்சி வரை நகரப் பேருந்து Town Bus) விடக்கோரி, அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 5-10)

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இப்போது பஸ் அங்கே ஓடிக்கொண்டிருக் கிறது. அதாவது நாமக்கல்லிலிருந்து பேளுக்குறிச்சிக்கு டவுன் பஸ் இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லி, அதற்காக அமைச்சரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு) அதற்கு அடுத்தபடியாக நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : முதலில் உறுப்பினரவர்கள் கூறிய தற்கு பதில் சொல்லி முடித்துவிடுகிறேன். உறுப்பினரவர்கள், 'அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்திருக்கின்றனவா' என்று கேள்வி கேட்டிருக்கிறார். எனவே, 'அரசுக்கு முறையீடு எதும் வரவில்லை' என்று பதில் சொன்னேன். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும், தானாகவே ஒரு ஆய்வை நடத்துகிறது. இதுவரை பேருந்துகள் செல்லாத கிராமப்புற வழித் தடங்களில் ஆய்வு நடத்தி, எங்கெங்கு பேருந்துகள் விட வேண்டுமென்று முடிவு செய்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில், இந்த வழித் தடத்தில் பேருந்து விடப்படலா மென்று முடிவு செய்து, 6—6—1979 அன்று பேருந்து விடப்பட்டிருக்கிறது. கோரிக்கையின் அடிப்படையில் விடப்படவில்லை, ஆய்வின் அடிப்படையில் தான் விடப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : நானே அமைச்சரவர்களிடம் கோரிக்கை கொடுத்திருக்கிறேன். அதன் அடிப்படையில் வந்ததோ, ஆய்வின் அடிப் படையில் வந்ததோ, எப்படியோ பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும் நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு ஒரு சொகுசு பஸ் ஓடிக்கொண்டிருந்தது. கடந்த நான்கு மாதங்களாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்தை தொடர்ந்து அந்த வழித்தடத்தில் விட அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதன் விவரம் என்னிடத்தில் இல்லை. கண்டிப்பாக அந்தப் பேருந்து உடனடியாக விடப்படும். அதோடு, ஈரோட்டிலிருந்து நாமக்கல் வழியாக சென்னைக்கு ஒரு சொகுசுப் பேருந்து அடுத்த மாதம் முதல் விடப்படும்.

திரு. செ. முத்துசாமி : தற்போது, இந்தப் பேருந்து நாமக்கல்லிலிருந்து, முத்துக்காப்பட்டி, சேந்தமங்கலம் வழியாக பேளுக்குறிச்சிக்குச் செல்கிறது. மருவூர்பட்டியில் உயர்நிலைப் பள்ளி இருப்பதாலும், அந்த ஊருக்கு பஸ் வசதி இல்லாததாலும், நாமக்கல்லிலிருந்து பேளுக்குறிச்சிக்கு விடப்படும் பேருந்தை, மருவூர்பட்டி, சேந்தமங்கலம் வழியாக விட அரசு முன்வருமா ? மேலும் நாமக்கல்—பேளுக்குறிச்சிக் வழித்தடத்தில் ஏராளமான கூட்டமிருப் பதால், இன்னொரு டவுன் பஸ்ஸைவிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோல, அந்த வழித்தடத்தில் ஏகப்பட்ட நெரிசல் இருக்குமானால், கண்டிப்பாக அந்த யோசனை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : 'டவுன் பஸ்' என்பது இப்போது பெரு நகரங்களில்தான் விடப்படுகிறது. சிறு நகரங்களிலும் இதுபோன்ற டவுன் பஸ்களை விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மோட்டார் வாகனச் சட்டத்தில் "நகரப் பேருந்துகள்" என்று இருக்கிற காரணத்தாலேதான், அவ்வாறு அழைக்கப்படுகிறது. ஆனால் கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளாக நகரப் பேருந்துகளை டவுன் பஞ்சாயத்து என்று சொல்லப்படுகிற பகுதிகளிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிராமங்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வகையில் விடுகிறோம். மோட்டார் வாகனச் சட்டத்தில் 'டவுன் பஸ்' என்றிருக்கிறது. இருந்தாலும் டவுன் பஞ்சாயத்துக்களிலிருந்து கிராமப்புறங்களை நோக்கி இந்த நகரப் பேருந்துகளைவிட, தகுதியான இடங்கள் இவை என்று நாம் 'நோட்டிபை' செய்து, அங்கே நாம் இந்தப் பேருந்துகளை விடுகிறோம். அவை 'டவுன் பஸ்' என்று அழைக்கப்படுகின்றன. கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளில் விடப்பட்ட நகரப் பேருந்துகளில், 70 சதவிகிதம் பேருந்துகள், முனிசிபாலிட்டி களிலிருந்து கிராமங்களை நோக்கியும், டவுன் பஞ்சாயத்திலிருந்து கிராமங்களை நோக்கியும் விடப்பட்டிருக்கின்றன. உண்மையிலேயே, அவற்றை 'டவுன் பஸ்கள்' என்று சொல்வதைவிட 'வில்லேஜ் பஸ்கள்' என்றுதான் அழைக்க வேண்டும். அந்த அடிப்படையிலேகூட நாம் சட்டத்தை மாற்ற நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : பேருந்துகள் போகாத கிராமங்களில்கூட இன்றைக்கு பேருந்துகள் போகின்றன. அதுபோல நாமக்கல் தாலுகாவில் இராமநாதபுரம் புதூர் என்ற கிராமத்திற்கு தனியார் பேருந்து போய்க் கொண்டிருந்தது. அது திடீரென்று நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுபற்றிய கோரிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கும், அமைச்சரவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அது குறித்துப் பரிசீலித்து, மீண்டும் அங்கு பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேருந்துகள் ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த வழித்தடங்களில், பேருந்துகளை நிறுத்தும்போது, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய வழித்தடத்தில் பேருந்தை நிறுத்திய தனியார்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அரசுப் பேருந்து ஒன்றினை அந்தப் பகுதியில் இயக்க முடியுமா என்பது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## Persons Travelling in Taxies.

* 95. Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN & THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is under the consideration of the Government to allow 3 persons in Auto Rickshaw, 6 in Ambassador Taxi and 5 in other Taxis for travel; and

(b) if so, the date from which such permission is to be granted?

### டாக்சிகளில் பயணம் செய்யும் நபர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & (திரு. ஈ. எஸ். வெங்கடேசன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) ஆட்டோ ரிக்ஷாவில் 3 பேரும், அம்பாசிடர் டாக்சியில் 6 பேரும், இதர டாக்ஸிகளில் 5 பேரும் பயணம் செய்ய அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அனுமதி வழங்கப்படும் ?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை,

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பெட்ரோல் விலையேற்றத்தின் காரணமாக, டாக்சிகளாலும், ஆட்டோ ரிக்ஷாக்களாலும் பொதுமக்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட, ஏற்படும் அல்லல்கள் அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, இந்தக் கேள்வியில் உள்ள அம்சத்தை அரசு பரிசீலனை செய்தால், பொது மக்களுடைய தொல்லைகள் குறையும். சைக்கிளில் இரண்டு பேர்கள் போகலாமென்று சொல்லும்போது, ஆட்டோ ரிக்ஷாவில் 3 பேர்கள் போகக்கூடாது என்பதற்கு என்ன தடை இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆட்டோ ரிக்ஷாக்களைப் பொறுத்தவரைக்கும் அதனுடைய அகலம் 111.8 சென்டி மீட்டர் நீளத்திற்குக் குறையாமல் இருந்தால், மூன்று பயணிகளை ஏற்றிச் செல்லலாம். ஆனால், தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்களில் பெரும்பாலானவை வெஸ்பா, பஜாஜ் ஆட்டோ ரிக்ஷாக்களாக இருப்பதால், 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதித்தால், விபத்து அதிகமாக ஏற்படுமென்பதால், அது தடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் மூன்று பயணிகளை ஏற்றிச் செல்லும் அளவிற்கு லேம்ப்ரட்டா ஆட்டோ ரிக்ஷாக்கள் வருமென்ற தகவல் வந்திருக்கிறது. அப்படி வரும்போது, அது குறித்துப் பரிசீலிக்கலாமென்று இருக்கிறோம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், ஐதராபாத்தில், ஆட்டோ ரிக்ஷாக்களில் அதிகாரபூர்வமாக மூன்று பேர்களை ஏற்றிச் செல்லுகிறார்கள் ; கட்டணம்கூட சென்னையைவிடக் குறைவாக இருக்கிறது. இப்போது அமைச்சரவர்கள், லேம்ப்ரட்டா ஆட்டோ ரிக்ஷாக்கள் வரும் போது, இது பரிசீலிக்கப்படுமென்று சொன்னார்கள். எனவே, லேம்ப்ரட்டா ஆட்டோ ரிக்ஷாக்கள் வரும்போது, கட்டணத்தை உயர்த்தாமல், ஆட்டோவில் 3 பேர்கள் செல்லவும், டாக்சிகளில் 5 பேர்கள் செல்லவும் ஏற்பாடு செய்ய, அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆந்திர மாநிலத்தில் 3 பயணிகள் ஆட்டோவில் செல்லுகிறார்கள் என்பது உண்மைதான். அந்த அடிப்படையில் லேம்ப்ரெட்டா ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதிக்கலாமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்து வருகிறோம்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that fifty
per cent of the accidents in Madras City are caused by auto-rick-
shaws, may I request the Government not to give any approval to
this proposal? May I know whether the Government will refuse
permission because it is positively dangerous to the passengers who
travel in auto-rickshaws?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஐ.ஆர்.டி. மற்றும் ஐ.ஐ.ஆர்.டி.
என்று சொல்லப்படுகிற, சாலைப் போக்குவரத்து பற்றி ஆய்வு நடத்துகிற,
இரண்டு நிறுவனங்களும், போக்குவரத்துத் துறையிலே அனுபவம் மிக்க
மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூறிய ஆலோசனையைத்
தான் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் லேம்ப்ரட்டா பெரிதாக இருக்கும்,
அகலமாக இருக்குமென்று கூறுகிறார்கள். அது இன்னமும் வரவில்லை.
வந்தால், அதற்கு மட்டும் இது குறித்துப் பரிசீலிக்கலாமென்று இருக்கிறோம்.
தற்போதுள்ள ஆட்டோக்களில் மூன்று பயணிகளை ஏற்றிச் செல்ல
அனுமதிக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: என்னுடைய தொகுதியான சேலம்,
கோவை போன்ற இடங்களில் ஆட்டோவில் மீட்டர்கள் பொருத்தியும், அந்த
மீட்டர்கள்படி கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை என்பது அரசுக்குத்
தெரியுமா? அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்
என்பதை அறிய விரும்புகிறேன். இன்னொன்று, புதிய கட்டணம் என்று ஒரு
அட்டை வைத்திருக்கிறார்கள். அது மாற்றிய மீட்டர் கட்டணமா, அதற்கு
மேல் கட்டணமா, எந்தத் தேதியிலிருந்து அவர்கள் மாற்றியிருக்கிறார்கள்
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கோவை, சேலம், திருச்சி, மதுரை
ஆகிய நான்கு பகுதிகளிலும் மீட்டர்கள் பொருத்தப்பட்டும், நடைமுறையில்
அதை உபயோகப்படுத்தாமல் இருப்பதால், கண்டிப்பாக அதை நடை
முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கடுமையான உத்தரவு போட்டு
நடவடிக்கை எடுத்தபோது, அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்.
அவர்கள் "தற்போது உபயோகித்து வருகிற மீட்டர்கள் சிறிய மீட்டர்களாக
இருப்பதால், அவை சரியான முறையில் இயங்கவில்லை. சென்னையிலே
ஆட்டோ, டாக்சிகளுக்குப் பொருத்தப்படுவதைப்போல பெரிய மீட்டர்கள்
வேண்டும், அது கிடைக்கவில்லை" என்றும் கூறினார்கள். அதை அரசும்
ஆய்ந்தது. இன்னும் 2, 3 மாதங்களில் தேவையான மீட்டர்கள் கிடைத்து
விடுமென்பதால், மேலும் 3 மாதங்களுக்குக் காலத்தை நீட்டித்துத் தந்திருக்
கிறோம். மூன்று மாதங்களில், சேலம், கோவை, திருச்சி, மதுரை ஆகிய



நகரங்களில், சென்னையைப் போலவே ஆட்டோ, டாக்சிகளுக்கு மீட்டர்களை
நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம்.

திரு. க. அறிவழகன்: International Children's Year-ல் நம்முடைய
மாண்புமிகு அமைச்சரவர்கள் பேருந்துகளில் குழந்தைகள் செல்ல சில
உரிமைகளை வழங்கியிருக்கிறார்கள். அதுபோலவே ஆட்டோக்களில்
பெற்றோர்கள் செல்லும்போது, 12 அல்லது 15 வயதுக்குட்பட்ட
குழந்தைகளை அழைத்துச் செல்லவும், அம்பாசிடர் டாக்சியில் பெற்றோரும்,
குழந்தைகளுமாக 6 பேர்கள் செல்லவும், மற்ற டாக்சியில் 5 பேர்கள்
செல்லவும் அனுமதி அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: International Children's Year
-க்கு முன்னாலேயே, பொது மக்கள் தாமாகவே இந்த உரிமையை எடுத்துக்
கொண்டு, குழந்தைகளை ஏற்றிக்கொண்டுதான் செல்லுகிறார்கள். (சிரிப்பு.)

## *Human hearts.*

* 96. *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the names of Hospitals wherein human hearts are being separated and preserved and the number of such human hearts;

(*b*) the name of the Hospital wherein the heart of the late Thanthai Periyar is being preserved; and

(*c*) the steps taken by the Government to acquire it?

## மனித இருதயங்கள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் எந்த எந்த மருத்துவமனைகளில் எத்தனை மனித
இருதயங்கள் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன?

(இ) இவற்றில் மறைந்த தந்தை பெரியாரின் இருதயம் எந்த மருத்துவ
மனையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது?

(உ) இதனை தன்வசப்படுத்திக்கொள்ள அரசு எடுத்துள்ள நடவடிக்கை
யாது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) தற்போது கீழ்க்கண்ட மருத்துவமனைகளில் எதிரே குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் மனித இதயங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| (1) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை. | 29 |
| (2) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை. | 130 |
| (3) செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கல்பட்டு. | 13 |
| (4) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 26 |
| (5) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி. | 10 |
| (6) மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை. | 56 |
| (7) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தஞ்சாவூர். | 24 |

(இ) தந்தை பெரியாரின் இதயம் தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் விஞ்ஞான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

(உ) இவ்விதயம் 15—2—1979 வரை வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் பாதுகாக்கப்பட்டு பிறகு அம்மருத்துவக் கல்லூரி பதப்படுத்தல் துறை பேராசிரியர் மற்றும் முதல்வர் அவர்களால் அரசுக்கு வழங்கப்பட்டது.

(பிற்பகல் 5-20)

**திரு. க. இராமமூர்த்தி :** இதயத்தைத் தனியாகப் பிரித்தெடுக்கின்றபோது, உடலுக்குச் சொந்தமானவர்களின் முன் அனுமதியைப் பெற்றுத்தான் பிரித்தெடுக்கப்படுகிறதா, இல்லை முன் அனுமதியில்லாமலேயே பிரித்தெடுக்கப் படுகிறதா ? தந்தை பெரியாரின் இதயத்தைப் பிரித்தெடுத்தபோது, அதற்கான அனுமதியை யார் வழங்கினார்கள் ?





**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** அரசாங்க மருத்துவமனையாக இருந்தால், உடலுக்குச் சொந்தமானவர்களிடம் கேட்டுத் தான் இதயத்தைப் பிரித்தெடுப்பது வழக்கம். விபத்துக்களினாலோ, அசம்பாவிதங்களினாலோ இறந்து போகின்றவர்களுடைய இதயத்தையும், அதாவது வழக்குகளில் சம்பந்தப்பட்ட உடல்களில் இருந்தும், வழக்கின் முக்கியத்துவம் கருதி, உடல் உறுப்புகளை பரிசோதனைக்காக (போஸ்ட்-மார்ட்டம்) எடுப்பதும் உண்டு. வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனையில் தந்தை பெரியாருடைய இதயத்தைப் பிரித்தெடுத்திருக்கிறார்கள். என்ன காரணத்திற்காக அப்படி எடுத்தார்கள் என்பதை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய இதயம் வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரியில் பாதுகாக்கப்பட்டு வந்ததாகவும், தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் விஞ்ஞான முறையில் அது பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றும் சொன்னார்கள். அதுபோல் வேறு தலைவர்கள் யாருடைய இதயத்தையாவது அரசு பாதுகாத்து வைத்திருக்கிறதா ? (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தனிக் கேள்வி கேட்டால் பதில் தர முடியும்.

**திரு. செ. முத்துசாமி :** இதயங்கள் எதற்காக உடலிலிருந்து பிரித் தெடுக்கப்பட்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ப்பில் வைக்கப்படுகின்றன ? காரணம் என்ன ? அதனால் என்ன நன்மை ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** சில நேரங்களில் இது போன்ற இதயங்கள், இன்னும் பல உறுப்புகள் மருத்துவக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குப் பயன்படும் என்ற காரணத்தால், எடுத்து பாதுகாக்கப் படுவது உண்டு. சில இடங்களில் மிகப் பெரிய தலைவர்களாக, அறிஞர்களாக விளங்கியவர்களில் உறுப்புகள்கூட பாதுகாக்கப்பட்டு வருவதாக இன்றைய தினம் கூறப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தந்தை பெரியாருடைய இதயம் என்ன காரணத் திற்காக, யாருடைய அனுமதியுடன் அவருடைய உடலிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டது என்பதற்கு இதுவரை மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வில்லை. அதுபற்றி விசாரித்துக் கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். முதலில் தந்தை பெரியாருடைய இதயம் வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனையில் இருப்பதாக தனிப்பட்ட நபர் ஒருவர் மேடையில் பேசும்போது கூறினார். பிறகு பெரியார் இதயம் இல்லையென்று

ஆஸ்பத்திரி அதிகாரிகள் அறிக்கை விட்டார்கள். அதன் பிறகு பெரியார் இதயம் இருப்பதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூர் மருத்துவக் கல்லூரியில் பாதுகாக்கப்பட்டு வந்த பெரியாருடைய இதயம் தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் பாதுகாக்கப்பட்டு வருவதாக அறிக்கை கொடுத்திருக் கிறார்கள். எது உண்மை என்று தெரியாத ஒரு முரண்பாடான நிலை ஏற்பட் டிருக்கிறது. இதுபற்றி அரசு ஆராய்ந்து உண்மை நிலையை அறிய முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : வேலூர் மருத்துவமனையில் பெரியாருடைய இதயத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று நமக்குத் தகவல் வந்த பிறகு தான் அதை இங்கு எடுத்து வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டோம். வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனை தனியார் மருத்துவமனை, அவர்கள் தனியாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள். அவர்களிடம் ஏன் எடுத்து வைத்திருந்தீர்கள் என்று தான் கேட்டிருக்கிறோம். நடவடிக்கை எடுப்பதற்கான முறையில் அவர்களை நாம் கேட்க முடியாது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பெரியார் இதயத்திற்கும் மற்றவர் களுடைய இதயத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன? சின்ன இதயம், பெரிய இதயம் என்று ஏதாவது வேறுபாடு இருக்கிறதா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தந்தை பெரியார் அவர்களுக்கு இருந்த இதயம் 'எதையும் தாங்கும் இதயம்' என்பது தான் எனக்குத் தெரியும். பொதுவாக மனிதனுடைய உடல்வாகுக்கு ஏற்றவாறு; இயல்புக்கு ஏற்றவாறு இதய அமைப்பும் மாறுபடும்.

திரு. க. இராமமூர்த்தி : தந்தை பெரியார் அவர்களுடைய இதயத்தை எடுத்து வைக்கவில்லை என்று வேலூர் மருத்துவமனையிலிருந்து சம்பந்தப் பட்டவர்கள், மருத்துவர்கள் அறிக்கை வெளியிட்ட பின்பு தனியார் ஒருவரால் பொதுக் கூட்டத்தில் பெரியார் இதயம் வேலூர் கிறிஸ்துவ மருத்துவமனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்ட பிறகு, இந்த முரண்பாடான நிலைமை உருவாகியிருக்கிறது. அதிகாரபூர்வமாக மருத்துவர்களால் அது பெரியாருடைய இதயம் அல்ல என்று மறுக்கப்பட்ட பிறகு, இப்படிப்பட்ட தொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக மருத்துவமனை யிலுள்ளவர்கள் மோசடி செய்தார்களா, இல்லை வேறு யாராவது மோசடி செய்தார்களா? யார் ஏமாற்றியது? இதில் மோசடி நடைபெற்றிருக்கிறதா



என்பது அரசுக்குத் தெரியாதா? உண்மையிலேயே அது தந்தை பெரியாருடைய இதயம் தானா என்று ஏதாவது விசாரணை செய்யப் பட்டிருக்கிறதா? விசாரணை மூலம் அது தந்தை பெரியாருடைய இதயம் தான் என்று அதிகாரபூர்வமாக அறியும் முன்னரே அதை அரசு அவசரமாக தந்தை பெரியாருடைய இதயம் தான் என்று அறிவிக்க என்ன அவசியம் ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : வேலூர் மருத்துவக் கல்லூரி பதப்படுத்தல் துறை பேராசிரியர் மற்றும் முதல்வர் ஆகியோர் அது தந்தை பெரியார் அவர்களுடைய இதயம் தான் என்று கூறியிருக்கிறார்கள். புகழ் வாய்ந்த மருத்துவமனையில் உள்ளவர்கள் இதற்காக உண்மைக்கு மாறானதைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்ற நிலையில் தான் அது பெரியாருடைய இதயம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## Medical College Teachers.

* 97. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Medical College teachers are eligible for the new U.G.C. scales of pay; and

(b) if not, the reasons therefor?

## மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள், பல்கலைக் கழக மானியக் குழு நிர்ணயித்துள்ள புதிய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) & (இ) இந்திய அரசின், கல்வி மற்றும் சமூக நலத்துறை விதித்த நிபந்தனைகளின்படி பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் மருத்துவ நிலையங்களில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களைத் தவிர்த்து மற்ற பல்கலைக் கழக மற்றும் அதனுடன் இணைந்த ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என உள்ளது.

[1979 நவம்பர் 7

**திரு. பா. ரா. தாமஸ் :** பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் மருத்துவ நிலையங்களில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களைத் தவிர்த்து மற்ற பல்கலைக் கழக மற்றும் அதனுடன் இணைந்த ஆசிரியர் களுக்கும் பொருந்தும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். 1—1—1973 முதல் 31—3—1979 வரை திருத்தியமைக்கப்பட்ட பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்த சம்பள விகிதங்களை பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கியதன் மூலம் மருத்துவக் கல்லூரி ஆசிரியர்கள் பயனடைந்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்களை நடைமுறைப்படுத்துவதைப்பற்றி ஆராய இந்த அரசு சென்னை, மதுரை மற்றும் காமராஜ் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் மற்றும் கல்வித் துறை, நிதித் துறை செயலர்களைக் கொண்டு ஒரு சிறப்புக் கமிட்டி நியமனம் செய்தது. அக்கமிட்டியின் பரிந்துரை களின்படி, பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்களை அரசினர் மற்றும் அரசின் நிதி உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு, கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு அரசு ஆணையும் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

அகில இந்திய தொழில் கல்வி நிலையம் (ஆல் இந்தியா கவுன்சில் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன்) சிபாரிசின் அடிப்படையில், இந்திய அரசு பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதம் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று அறிவித்ததின் பேரில், இம்மாநிலத்தில் மேற்கூறிய கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இச்சம்பள விகிதம் கொடுத்து, அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. மருத்துவக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு சம்பளத்தை மாற்றியமைக்க சிபாரிசு செய்யவில்லை. ஆனால் தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின்படி அவர்களின் சம்பள விகிதங்கள் மாற்றியமைக்க பட்டுள்ளன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் தொழில் பிரிவில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கும் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறபோது, மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் கல்வித் துறை, நிதித் துறை செயலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சிறப்புக் கமிட்டியும் பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்கள் அரசினர் மற்றும் அரசின் நிதி உதவி பெறும்



1979 நவம்பர் 7]

தனியார் கல்லூரிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கலாம் என்று சிபாரிசு செய்திருக்கும்போது, மருத்துவக் கல்லூரி உதவிப் பேராசிரியர் களுக்கும் பேராசிரியர்களுக்கும் மட்டும் அந்தச் சம்பளத்தைக் கொடுக்காமல், தமிழ் நாடு மூன்றாவது சம்பளக் குழுவில் மாற்றியமைக்கப்பட்ட சம்பள விகிதங்களை அவர்கள் பெறுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்வது நியாயமில்லை. இதனால் ஒவ்வொரு பேராசிரியரும் 300 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை மாதந்தோறும் குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் மத்தியில் இதனால் பரவலாக அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. போராட்ட முயற்சியில் அவர்கள் ஈடுபடுவதற்கு முன்பாக அரசு அவர்கள் பல்கலைக் கழக மானியக் குழு நிர்ணயித்துள்ள புதிய சம்பள விதங்களில் சம்பளம் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று அறிவிக்குமா ? அரசு அவர்களுடைய கோரிக்கையை ஏற்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இந்திய அரசின் கல்வி மற்றும் சமூக நலத் துறை, பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்த சம்பள விகிதங்களை பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் மற்றும் அத்துடன் இணைந்த கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர் களுக்கும் மாநில அரசுகள் கொடுக்க முன் வந்தால், இந்திய அரசு அதற்கு நிதி உதவி வழங்கும் என்று கூறியது. மாநில அரசுகள் இதனை 1—1—1973 முதல் வழங்க முன் வந்தால், இந்தப் புதிய சம்பள விகிதத்தின்படி அரசுக்கு ஏற்படக்கூடிய செலவுத் தொகையில் 80 சதவீதத்தை 1—1—1973 முதல் 31—3—1979 வரை மத்திய அரசே ஏற்றுக் கொள்வதாகவும், 31—3—1979-க்குப் பின்னால் இதனால் ஏற்படக்கூடிய முழுச் செலவையும் மாநில அரசே ஏற்க வேண்டும் எனவும் கூறியுள்ளது. மருத்துவக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு சம்பளத்தை மாற்றியமைக்க சிபாரிசு செய்யவில்லை. ஆகவே இந்தச் சம்பள விகிதம் அவர்களுக்குக் கடைப்பிடிக்கப்படவில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** பல்கலைக் கழகத்தின் வரம்புக்கு உட்பட்டது தான் மருத்துவக் கல்லூரியும். பல்கலைக் கழகத்துடன் இணைந்த கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த ஊதிய விகிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று பல்கலைக் கழக மானியக் குழு சிபாரிசு செய்திருக்கும்போது, எம்.ஏ. பட்டதாரிகளைவிட, தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை விட, அதிகமாகப் படித்துவிட்டு வந்து மருத்துவக் கல்லூரியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இந்த ஊதிய விகிதத்தை வழங்காததனால், அவர்கள் மத்தியில் பெரிய அதிருப்தி வளர்ந்து கொண்டிருப்பதை அரசு உணருமா ? அவர்களுடைய கோரிக்கை மறுபரிசீலனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : அதிருப்தி நீங்கத் தான் அவர்களுக்கு தமிழ் நாடு மூன்றாவது சம்பளக் குழுவின் ஊதிய விகிதங்கள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

திரு. க. அறிவழகன் : 'ஆல் இந்தியா மெடிக்கல் கவுன்சில்' என்று அழைக்கப்படுகின்ற அகில இந்திய மருத்துவ நிலையம் சொல்லியிருக்கின்ற சிபாரிசுகளுக்கும் யு.ஜி.சி. என்று அழைக்கப்படுகின்ற மானியக் குழு சொல்லியிருக்கின்ற சிபாரிசுகளுக்கும் பல்கலைக் கழக பல்கலைக் கழக மானியக் குழு சம்பளத்தை மாற்றியமைக்க சிபாரிசு செய்ய இருக்கின்றது. மருத்துவக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் பேராசிரியர்களுக்கு வித்தியாசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு தமிழ் நாடு மூன்றாவது ஊதியக் குழு கொடுத்துள்ள ஊதிய விகிதங்கள் குறைவாக இருப்பதால், அவர்களுடைய குறைகள் இனிமேலாவது நிவர்த்தி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : எந்தப் பேராசிரியரும் இதுவரை குறை இருப்பதாக என் கவனத்திற்கு முறையிட்டு கொண்டுவரவில்லை.

### *Maternity Hospital in Mallankinar.*

* 98. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a Maternity Hospital before the end of 1978-79 in Mallankinar Town Panchayat, Aruppukkottai Taluk, Ramanathapuram District; and

(*b*) if so, the estimated amount thereof ?

மல்லாங்கிணரில் மகப்பேறு மருத்துவமனை

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மல்லாங்கிணர் பேரூராட்சியில் 1978-79 ஆம் ஆண்டிற்குள் மகப்பேறு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. வே. தங்கப்பாண்டியன் : இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டம் மல்லாங்கிணறு ஊராட்சி ஒன்றியத்தினுடைய தீர்மானம் கூட ஏற்கெனவே அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது கூட, இதுபற்றிப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்வார்களா ?

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரிவு 65-சி-யின்கீழ் தாய்-சேய் நல நிலையங்களைப் பராமரிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். அரசாணைக்கேற்ப பஞ்சாயத்து ஒன்றியங்கள் 10 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு தாய்-சேய் நல நிலையம் வீதம் திறந்து பராமரிப்பதற்கான செலவில் 2/3 பகுதியை அரசிடமிருந்து கோரலாம். ஆனால் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை தாலூக்காவில் மல்லாங்கிணறு பேரூராட்சியில் புதிய தாய்-சேய் நல விடுதித் திட்டம் எதுவும் இல்லையென்று கூறினேன். ஆனால், மாவட்ட சுகாதார அலுவலர் அந்த இடத்திலே ஒரு மருத்துவமனை திறக்க வேண்டும் என்று ஒரு ஆய்வு செய்து அதற்கான கருத்துரு அனுப்பியிருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : குடும்பக் கட்டுப்பாட்டில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. அதையொட்டி, மகப்பேறு நிலையங்களில் கூட்டம் குறைந்திருக்கிறதா ? அல்லது இந்த மருத்துவமனைகள் அதிகமாக இருப்பதால், மக்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் : தாய்-சேய் நல நிலையங்களின் நோக்கமே பிறக்கின்ற குழந்தைகளைப் பராமரிக்கத்தான். பிறக்கின்ற குழந்தைகளைப் பராமரித்தாக வேண்டும். அதிகம் பெறாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். தாய்-சேய் நல விடுதிகளை மூடினால், பிறப்பதைத் தடுக்கலாம் என்பது சரியானதென்று எடுத்துக்கொள்ள முடியாது.

### *Social Service Institutions*

* 99. *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of social service institutions that are getting grants or loan assistance from the Government; and

(*b*) the amount received as grant or loan assistance by each institution, yearwise ?

சமூக நல நிறுவனங்கள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசிடமிருந்து மானியம் அல்லது கடன் உதவி பெறுகிற, சமூக நலப் பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் யாவை?

(இ) தனித்தனியே அவை பெறுகிற மானியம் அல்லது உதவித்தொகை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (இ) இதற்கான விவர அறிக்கை @ சட்டமன்ற மேலவை முன்பு வைக்கப்படுகின்றது.

திரு. க. இராமமூர்த்தி: சமூக நலப் பணிகளிலே ஈடுபட்டுள்ள நிறுவனங்களிலே ஆண்டுதோறும் 10,000 ரூபாய்க்குக் குறையாமல் கடன் உதவி அல்லது மானியம் பெறுகின்ற நிறுவனங்களிலே அரசினுடைய பிரதிநிதிகள் யாராவது நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்களா? இல்லையென்றால், இனிமேல் அரசினுடைய பிரதிநிதிகள் யாராவது இடம் பெற அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அவ்வப்போது அரசு அதிகாரிகள் அந்த நிறுவனங்களுக்குச் சென்று எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்பதைப் பார்த்து வருகிறார்கள்.

திரு. க. அறிவழகன்: இப்படிப்பட்ட நிறுவனங்களிலே இருக்கின்ற குழந்தைகளுக்குத் தரப்படுகின்ற மானியத் தொகையின் அளவை உயர்த்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அப்படிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்த சமூக நல நிறுவனங்கள் அரசினுடைய உதவியைப் பெறுவதோடு கூட ஏராளமான வெளிநாட்டு உதவி பெற்று, குறிப்பாக பால் பவுடர் போன்ற முறைகளில் உதவிகளைப் பெற்று அவற்றை அவைகள் தவறாகப் பயன்படுத்துகின்றன. அம்மாதிரி நடவடிக்கை களைக் கண்காணித்து, தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

@ 283-284-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அப்படிப்பட்ட புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை. அம்மாதிரி புகார்கள் வந்தால், அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. இராமமூர்த்தி: இந்த நிறுவனங்களில் இருக்கும் 'லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப்பு'-க்குக் கூட 11,400 ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் சமூக நலப்பணிகள் ஏதேனும் செய்கின்றனவா? வேறு சில நிறுவனங்களுக்கு பெண்களுக்கான விடுதிகள் கட்ட மானியம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த மானியம் எந்த அடிப்படையிலே தரப்படுகிறது? கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களிலே தங்குகின்ற பெண்களுக்கு கட்டண விகிதங்களிலே சலுகைகள் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பெண்கள் தங்குவதற்கான விடுதிகள் கட்டுவதற்கான செலவில் 75 சதவிகதத்தை மத்திய அரசு ஏற்கிறது. 15 சதவிகதத்தை மாநில அரசு ஏற்கிறது. தொண்டு நிறுவனங்கள் 10 சதவிகதத்தை ஏற்கின்றன. சமுதாயத்திலே மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் சகோதரிகளுக்கு, கிராமப்புறங்களிலேயும், மற்றும் சில இடங் களிலேயும் இருந்து நகர்ப்புறங்களுக்கும் அவர்கள் வரும்போது, சில சலுகைகளை நாம் அவர்களுக்கு அளிக்கிறோம்.

*Artificial Insemination Centres*

* 100. *Q.*—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of Artificial Insemination Centres in South Arcot District and the places of their location?

செயற்கைமுறை இனவிருத்தி நிலையங்கள்

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள செயற்கை முறை இனவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது? அவை அமைந்துள்ள இடங்கள் யாவை?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அவையின் முன் ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 293-294 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. க. இராமமூர்த்தி : திண்டிவனம், சிதம்பரம், விழுப்புரம் ஆகிய மூன்று தாலுக்காக்களில்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதிலேகூட, சிதம்பரத்திலே 37 இடங்களிலும், திண்டிவனத்திலே ஏழு இடங்களிலும், விழுப்புரத்தில் நான்கு இடங்களிலும்தான் இந்த வசதி கிடைக்கிறது. இந்தப் பாரபட்சம் ஏன் என்று அறிய விரும்புகிறேன். மாவட்டத்தின் மற்ற தாலுக்காக்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அந்தந்தப் பகுதிகளிலிருந்து வருகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த வசதிகளை அளிக்கிறோம். மற்ற இடங்களுக்கும் இந்த வசதி வேண்டும் என்று எங்களுக்கு விண்ணப்பங்கள் வந்தால், அங்கெல்லாம் இந்த வசதியை விரிவாக்க, தயாராக இருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி : இதுபோன்ற திட்டங்கள் தென் ஆற்காடு மாவட்டம் போன்ற மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் விரிவாகப் பிரச்சாரம் செய்யப்படுவதில்லை. அதனால் அங்குள்ள மக்கள் இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தக்கூடியவர்கள் கூட இதனுடைய நன்மைகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமையால் பயன்படுத்தவில்லை. ஒருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூட, மேடையிலே பேசும்போது, நேரடியாகச் சொல்லும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இந்த நிலைமைகளைக் கருத்திலே கொண்டு, இந்த நிலையங்களை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் பரவலாக அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இப்படிப்பட்ட திட்டங்களுக்கு விளம்பரம் கொடுப்பதற்காகத்தான் தமிழ் நாடு முழுவதும் மாவட்டந்தோறும் இப்போது கால்நடைக் கண்காட்சிகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்கிறேன். அடுத்த மாதம் நிச்சயமாக திண்டிவனம் நகரத்திலே இந்தக் கால்நடைக் கண்காட்சி நடைபெறும். அப்போது இந்தத் திட்டங்களுக்கு அதிகமான விளம்பரம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (* அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்.

### ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : On a point of clarification நான் 29 ஆம் தேதி குறிப்பிட்ட ஒரு பொருளைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் தந்தேன். அந்தப் பொருளைப் பற்றி நேற்று இந்த மன்றத்தைச் சேர்ந்த இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் முன்மொழிந்து சொல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட பொருளைப்பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த பிறகும், என் பெயரை ஏன் குறிப்பிடவில்லை என்பதை நான் அறிந்துகொள்ளலாமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவர் புதுப்பித்தார், தாங்கள் புதுப்பிக்கவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நம்முடைய சட்டமன்ற மேலவை விதி 50-ல் அவையின் அனுமதியைப் பெறத் தவறும் தீர்மானம் ஒன்றை அதே கூட்டத்தொடரில் 43-வது விதியின்கீழ் மீண்டும் கொண்டுவரக் கூடாது என்று இருக்கிறது. பக்கம் 27, ரூல் 50-ன் கீழ் கொண்டு வரக்கூடாது என்று இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதி என்றால் அவைக்குக் கொண்டுவரப்பட்டு வேண்டிய ஆதரவு பெறாவிட்டால் மறுபடியும் அது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரக் கூடாது. தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற மீண்டும் தங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தாங்கள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கூட்டத் தொடரின் இடையிலே ஆறு நாட்கள் இடைவெளி விடப்பட்டதால், இந்தத் தொடர், தொடர்கூட்டமாகக் கருதப்படுகிறதா அல்லது புதிதாகக் கூட்டப்பட்ட கூட்டமாகக் கருதப்படுகிறதா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : புதிதாகத் துவக்கப்பட்ட கூட்டமாகத்தான் கருதப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அப்படியென்றால் இந்த விதி தடையாக இருக்கிறதா? விதிவிலக்கப்படுகிறதா? இப்படியான சூழ்நிலையில் விதி விலக்கப்படும் இடையாதா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அறிவிக்கத் தேவையில்லை. It is available in the Rules Book itself.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வீராசாமி, திரு. கோ. சி. மணி ஆகியவர்கள் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நேற்றையதினம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம்பற்றிக் கேட்டபோது, அவைக்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே தலைமை தாங்கி, 'நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொன்னீர்கள். இப்படி நாளைக்கு என்று சொல்லுவது ஒரு கதை சொல்வார்களே அதுபோலத்தான் இருக்கிறது. உண்மையிலேயே நாளைக்கு வருமா? நாளைக்கு வரும் என்றால் தேதி என்ன? ஒத்திவைப்புத் தீர்மானத்தை எதற்காகக் கொண்டு வருகிறோமோ அதனுடைய அவசியத்தை இந்த அவை உணரவில்லை. குறிப்பாக எங்கு பார்த்தாலும் கெரோசின், டீசல் கிடைக்கவில்லை. வீட்டிலே சமைப்பதற்கு 'கேஸ்' இல்லை. இப்படிப்பட்ட ஒரு அவசியமான பிரச்சினையைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் மூன்று நாட்களுக்கு முன்னாலே கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களது இலாகா, மற்றும் இந்த அரசாங்கம் இவ்வளவும் இருந்தும் பதில் சொல்லவில்லையென்றால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்கு என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: டீசல், மண்ணெண்ணெய் இவைகள் இரண்டு பொருள் பற்றியும் இரண்டு இலாக்காக்களிடமிருந்து குறிப்புகளைப் பெற வேண்டியிருந்ததால், கொஞ்சம் தாமதமாகப் பதில் வந்திருக்கிறது. விரிவான, தெளிவான அறிக்கை கொடுக்க வேண்டும் என்பதால்தான் அரசு ஆர்வத்தோடு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. கண்டிப்பாக நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நான் நேற்றையதினம் மிக முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, மதுரையில் ஏறக்குறைய 1,200 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது ...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஆய்வில் இருக்கிறது. விவரமாக நீங்கள் சொல்ல வேண்டாம். நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஆ. நல்லசிவன்: நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன் ...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஆய்வில் இருக்கிறது, நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



திரு. செ. முத்துசாமி: கல்லூரி ஆசிரியர்களைப்பற்றி நான் ஒரு ...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஆய்வில் இருக்கிறது.

திரு. பா. ரா. தாமஸ்: உயிருக்கு ஊசல் ஆடிக்கொண்டு உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களது பிரச்சினைபற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்றைக்குக் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நாளைக்கு பதில் சொல்லப்படும்.

திரு. செ. முத்துசாமி: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பதே சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்காக. ஆனால் இப்போது இந்த ஒத்திவைப்புத் தீர்மானமே ஒத்திவைக்கப்படுகிறது. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒத்திவைக்காமல், அந்தந்த நாளிலேயே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(பிற்பகல் 5-40)

திரு. பா. ரா. தாமஸ்: சில ஆசிரியர்கள் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால், அது குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அது நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும். தற்போது அது ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. நல்லசிவன்: கல்லூரி ஆசிரியர்கள் குறித்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிவிக்கப்படுமா?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அதுவும் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவையனைத்தும் ஆய்வில் இருக்கின்றன. அநேகமாக நாளைக்கு சில எடுத்துக்கொள்ளப்படலாம். ஒவ்வொரு உறுப்பினராக எழுந்து என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேட்காமல் இதையே ஒவ்வொருவருக்கும் பதிலாக எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1979 நவம்பர் 7

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு உறுப்பினர்களுடைய பெயரைச் சொல்லி அவர்கள் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம் 'நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்' என்று குறிப்பிட்டார்கள். இந்த இரண்டு உறுப்பினர்களைத் தவிர, ஏனைய உறுப்பினர்களின் பெயரையும் சொல்லி இவர்கள் தந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களும் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லாமல் இருந்திருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. வீராசாமி, திரு. ஆ. நல்லசிவன், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. செ. முத்துசாமி, திரு. பா. ரா. தாமஸ், திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. வே. தங்கப்பாண்டியன் ஆகியோர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ. சி. மணி, ஆ. திராவிடமணி, செ. முத்துசாமி, க. மீனாட்சிசுந்தரம், சி. ரா. லெட்சுமிகாந்தன். பா. ரா. தாமஸ், ஆ. நல்லசிவன் ஆகியோர் இன்றையதினம் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆய்வில் உள்ளன.

### 3. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டின் பெருமழையால் குளங்களில் ஏற்பட்ட உடைப்புக்கள் இதுவரை சரிவர அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய நிலைமை குறித்து.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக குளங்களில் ஏற்பட்ட உடைப்பு இன்றுவரை சரிவர அடைக்கப்படாததால், இவ்வருடம் பெய்ய இருக்கும் பருவ மழையில் மேலும் உடைப்பு ஏற்பட்டு, விவசாயம் பாதிக்கும் நிலை உருவாகியுள்ள அபாய நிலைமை குறித்து"

மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**குளங்களில் ஏற்பட்ட உடைப்புகள் இதுவரை சரிவர அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய நிலைமை குறித்து**

1979 நவம்பர் 7]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழை காரணமாக, நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் ஆகியவை களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இம் மாவட்டத்தில் மொத்தம் 89 நீர்ப்பாசனக் குளங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. இந்த உடைப்புகள் அனைத்தும் மூடப்பட்டு, குளங்கள் பாசனத்திற்கு பயன்படும்படியாக சீராக்கப்பட்டுள்ளன. குளங்களின் கரைகளை அவசியத்திற்கு ஏற்ப பலப் படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் அறிக்கையிலே 89 நீர்ப்பாசனக் குளங்களில் கடந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக உடைப்புகள் ஏற்பட்டன என் றார்கள். ஆனால் அவைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன என்றும் மூடப்பட்டிருக்கின் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த உடைப்புகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின் றனவே தவிர, அடைக்கப்படவில்லை. இந்த உடைப்புகள் எல்லாம் 1978 ஆம் ஆண்டு நவம்பர் பெருமழையால் ஏற்பட்டவை. அதற்குப் பிறகு கடந்த பிப்ரவரி-மார்ச்-ஏப்ரலில் ஒரு கோடை காலமே வந்து போய்விட்டது. இந்த உடைப்புகள் அடைக்கப்பட வேண்டும் என்று நாங்களும் கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் பதில் சொல் லும்போது, இந்த உடைப்புகளை அடைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கிறது என்று அப்போது சொன்னார்கள். அதைப் போலவே இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துச் சொன்னபோதும், குறிப்பாக புயல் வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கைமீது பேசும்போதும், அரசுத் தரப்பிலிருந்து இந்தப் பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மூன்று மாத கோடை காலமும் முடிந்து விட்டது. உடைப்பு ஏற்பட்ட இடங்களில் ஏதோ கொஞ்சம் மணல் சாக்குகளை வைத்து மூடியிருக்கிறார்களே தவிர, வேறொன்றும் செய்யவில்லை. தற்போது மீண்டும் இந்த ஆண்டு நவம்பர் தொடங்கி பெரு மழை அந்தப் பகுதிகளில் பெய்து கொண்டிருக்கிறது. மூடப் பட்ட அந்த உடைப்புகள் மீண்டும் திறக்கப்பட்டு பெரும் உடைப்புகளாக மாறி, விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை உண்டு பண்ணும் நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை நேரிலேயே வந்து பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்ட

[1979 நவம்பர் 7

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட இரண்டு உறுப்பினர்களுடைய பெயரைச் சொல்லி அவர்கள் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானம் 'நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்' என்று குறிப்பிட்டார்கள். இந்த இரண்டு உறுப்பினர்களைத் தவிர, ஏனைய உறுப்பினர்களின் பெயரையும் சொல்லி இவர்கள் தந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களும் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறி வித்திருந்தால், இந்தப் பிரச்சினைக்கே இடம் இல்லாமல் இருந்திருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. வீராசாமி, திரு. ஆ. நல்லசிவன், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. செ. முத்துசாமி, திரு. பா. ரா. தாமஸ், திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. வே. தங்கப்பாண்டியன் ஆகியோர் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கோ. சி. மணி, ஆ. திருவடி மணி, செ. முத்துசாமி, க. மீனாட்சிசுந்தரம், சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ், ஆ. நல்லசிவன் ஆகியோர் இன்றையதினம் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆய்வில் உள்ளன.

## 3. கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்.

(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டின் பெருமழையால் குளங் களில் ஏற்பட்ட உடைப்புக்கள் இதுவரை சரிவர அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய நிலைமை குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக குளங்களில் ஏற்பட்ட உடைப்பு இன்றுவரை சரிவர அடைக்கப் படாததால், இவ்வருடம் பெய்ய இருக்கும் பருவ மழையில் மேலும் உடைப்பு ஏற்பட்டு, விவசாயம் பாதிக்கும் நிலை உருவாகியுள்ள அபாய நிலைமை குறித்து"

மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



## குளங்களில் ஏற்பட்ட உடைப்புகள் இதுவரை சரிவர அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய நிலைமை குறித்து

1979 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. ப. ஞீமுந்தைவேலு: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்த பெருமழை காரணமாக, நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் ஆகியவை களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இம் மாவட்டத்தில் மொத்தம் 89 நீர்ப்பாசனக் குளங்களில் உடைப்புகள் ஏற்பட்டன. இந்த உடைப்புகள் அனைத்தும் மூடப்பட்டு, குளங்கள் பாசனத்திற்கு பயன்படும்படியாக சீராக்கப்பட்டுள்ளன. குளங்களின் கரைகளை அவசியத்திற்கு ஏற்ப பலப் படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் அறிக்கையிலே 89 நீர்ப்பாசனக் குளங்களில் கடந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக உடைப்புகள் ஏற்பட்டன என் றும் அவைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த உடைப்புகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின் றனவே தவிர, அடைக்கப்படவில்லை. இந்த உடைப்புகள் எல்லாம் 1978 ஆம் ஆண்டு நவம்பர் பெருமழையால் ஏற்பட்டவை. அதற்குப் பிறகு கடந்த பிப்ரவரி-மார்ச்-ஏப்ரலில் ஒரு கோடை காலமே வந்து போய்விட்டது. இந்த உடைப்புகள் அடைக்கப்பட வேண்டும் என்று நாங்களும் கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் புதில் சொல் லும்போது, இந்த உடைப்புகளை அடைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கிறது என்று அப்போது சொன்னார்கள். அதைப் போலவே இந்த மன்றத்திலே நாங்கள் எடுத்துச் சொன்னபோதும், குறிப்பாக புயல் வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கைமீது பேசும்போதும், அரசுத் தரப்பிலிருந்து இந்தப் பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மூன்று மாத கோடை காலமும் முடிந்து விட்டது. உடைப்பு ஏற்பட்ட இடங்களில் ஏதோ கொஞ்சம் மணல் சாக்குகளை வைத்து மூடியிருக்கிறார்களே தவிர, வேறொன்றும் செய்யவில்லை. தற்போது மீண்டும் இந்த ஆண்டு நவம்பர் தொடங்கி பெரு மழை அந்தப் பகுதிகளில் பெய்து கொண்டிருக்கிறது. மூடப் பட்ட அந்த உடைப்புகள் மீண்டும் திறக்கப்பட்டு பெரும் உடைப்புகளாக மாறி, விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை உண்டு பண்ணும் நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியை நேரிலேயே வந்து பார்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்

கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டின் பெரு மழையால்
குளங்களில் ஏற்பட்ட உடைப்புகள் இதுவரை சரிவர
அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய
நிலைமை குறித்து

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 நவம்பர் 7

எல்லை தொடங்கும் இடமான ஆரல்வாய் மொழியிலிருந்து நெடுஞ்சாலை
ஓரமாகவே இருக்கிற குளங்களை மட்டுமாவது அவர் வந்து பார்க்கலாம்,
அல்லது அதிகாரிகளை அனுப்பியாவது வந்து பார்த்து வரச் சொல்லலாம்.
கோதண்டராமன் குளம், வீமசேரி மேலையார்குளம், தத்தியார்குளம், இரவி
புதூர் குளம் ஆகிய குளங்கள் எல்லாம் கன்னியாகுமரி மாவட்ட எல்லை
யிலிருந்து நாகர்கோயில் சேரும் பாதையில் சுமார் எட்டு மைல்களுக்குள் இருக்
கின்றன. அவைகள் அனைத்துமே ரோடுக்கு அருகிலேயே இருக்கின்றன.
அமைச்சர் அவர்கள் காரில் இருந்து இறங்காமல் காரில் இருந்தவாறே
பார்க்கக் கூடிய குளங்கள். அந்தக் குளங்கள் அனைத்திலும் தற்போது
உடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. அறிக்கையில்தான் அந்த உடைப்புகள் மூடப்
பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அந்தக் குளங்களிலிருந்து இப்போதும்
தண்ணீர் வடிந்து கொண்டிருப்பதை, நேரில் சென்று பார்த்தால், அமைச்சர்
அவர்களே தெரிந்துகொள்ள முடியும். எனவே இதற்கு அமைச்சர் அவர்கள்
தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தக் குளங்களில் ஏற்பட்
உடைப்புகள் அனைத்தும் மூடப்பட்டு பாசனத்திற்கு வசதியாக ஆக்கப்பட்
டிருக்கின்றன என்று என் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறேன்.
நிரந்தரமான பணிகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ப
தையும் ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய குளங்களில் உடைப்பு ஏற்பட்டிருந்தால்,
அவைகளையெல்லாம் உடனடியாக அடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.
மேலும் அந்தக் குளங்களை நேரில் பார்வையிட அவைகள் சாலைகளின்
ஓரங்களில் இருந்தால்தான், நாங்கள் போவோம் என்பதில்லை. கிராமங்
களுக்கு ஊடே அவை இருந்தாலும், அவைகளைச் சென்று பார்க்க நாங்கள்
தயாராக இருக்கிறோம். அவைகள் அனைத்தும் கண்டிப்பாகக் கவனிக்கப்
படும் என்ற உறுதியை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : அமைச்சர் அவர்களின் வாக்குறுதிக்கு நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாக்குறுதிகள் செயலில் இல்லை என்பதை
மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்ட
வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே நாங்கள் சொல்லியிருக்கிறோம். இந்த
மன்றத்திலேயேகூட சொல்லியிருக்கிறோம். கோதண்டராமன் குளம்
உடைப்பைப் பொறுத்தவரையில், அங்கேயுள்ள செயல் பொறியாளரிடமிருந்து

கன்னியாகுமரி மாவட்டத்தில் சென்ற ஆண்டின் பெரு மழையால்
குளங்களில் ஏற்பட்ட உடைப்புகள் இதுவரை சரிவர
அடைக்கப்படாததால் விவசாயம் பாதிக்கப்படும் அபாய
நிலைமை குறித்து



1979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

எனக்குக் கடிதமே வந்திருக்கிறது. அவர் அந்தக் கடிதத்தில் என்ன சொல்லி
யிருக்கிறார்? "இந்தப் பணியை நாங்கள் செய்ய மாட்டோம்" என்று சொல்லி
யிருக்கிறார். அதை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். அதற்குக்
காரணமாக "இது எங்கள் துறையைச் சார்ந்தது அல்ல, இது ஹைவேஸ்
துறையைச் சார்ந்தது" என்று அவர் சொல்லியிருக்கிறார். பெரு மழையின்
காரணமாக நீர்ப்பாசனத்திற்கு உதவும் குளமே உடைந்திருக்கிறது. அந்தக்
குளத்தின் ஊடே ஒரு கரை ரோடாகவும் இருக்கிறது. எனவே இதை
ஹைவேஸின் தள்ளிவிட்டு, அந்த உடைப்பை அடைக்காமல், அங்கேயிருக்கும்
விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியைச் செய்து தராமல் இருப்பது என்ன
நடிக்கை என்று தெரியவில்லை. ஹைவேஸ் இலாகாவுடன் வேளாண்மைத்
துறை அதிகாரிகள் சந்தித்துப் பேசி இந்தச் செய்திருக்க வேண்டும். மற்று
பெய்து ஒரு வருஷத்திற்குப் பிறகும் இந்த பதிலைச் சொல்லிக் கொண்டிரு
புகள் மூலம், இந்த அரசு இதில் எந்த அளவுக்கு அக்கறை காட்டி
படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி
உடனடியாக இதில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் முன்வருவாரா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் அவர்களே இதற்கான பதிலையும் சொல்லியிருக்கிறார்கள் என்பதால்
அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நீர்ப்பாசனத் துறையைப்
பொறுத்தவரையில், 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட குளங்களை மட்டும்
ஒப்படை செய்திருக்கிறார்கள். 100 ஏக்கருக்கும் குறைவாக இருக்கிற
குளங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு கட்டுப்பட்ட குளங்களாக
இருக்கின்றன. சில ஹைவேஸ் துறையைச் சார்ந்த குளங்களாகவும் இருக்
கின்றன. இவைகளையெல்லாம் பொதுப்பணித் துறைக்கே—நீர்ப்பாசனத்
துறைக்கே—கொடுக்க வேண்டும் என்று அரசு ஆலோசித்து வருகிறது. அந்த
ஆலோசனையின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட்டு உடனடியாக நடவடிக்
கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிற குளங்கள் எவை
யாக இருந்தாலும், உரிய துறைக்குச் சொல்லி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு
செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) கைத்தறித் துணி மொத்த விற்பனைக்கான தள்ளுபடியை (ரிபேட்) திருத்தியதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சில கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

"கூட்டுறவு சங்கங்களில் கைத்தறித் துணி மொத்த விற்பனைக்கு கொடுக்கின்ற தள்ளுபடியை (ரிபேட்) நிறுத்திவிட்ட காரணத்தால், தமிழ் நாட்டில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய ஊர்களிலுள்ள கூட்டுறவு கைத்தறி சங்கங்களின் துணிகள் ஏராளமாகத் தேங்கிக் கிடப்பதால் கைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்து".

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலவையின்முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் "அருப்புக்கோட்டைப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட ரகமான "ஸ்டேப்பிள் ஃபைபர்" மூலம் தயாரிக்கப்படும் மோட்டா ரகச் சேலைகள்தான் உற்பத்தியாகின்றன. இவைகள் இங்கே அதிகமாக விற்பனையாவதில்லை" என்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு முறை மட்டும் ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்குள், அதாவது ஒரு ஆறு மாத கெடு கொடுத்து, இப்போது தேங்கியிருக்கும் இந்தத் துணிகளை வாங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : தற்போது அந்தப் பகுதியில் தேக்கத்தில் இருக்கிற "ஸ்டேப்பிள் ஃபைபர்" ரகங்கள் நமது மாநிலத்தில் விற்பனையாகாத ரகங்களாகும். பீகார், அசாம் போன்ற மலைப் பிரதேசங்களில்தான் அந்தத் துணிகள் விற்பனையாகின்ற காரணத்தால், மத்திய அரசு தள்ளுபடிக்கு ஒரு உச்சவரம்பு விதித்துவிட்ட பிறகு, அந்த மாநிலங்களில் உள்ள வியாபாரிகள் இங்கே இந்த ரகத்தை வாங்க முன்வரவில்லை.

இப்போது தேங்கி இருக்கிற ரகங்களை நட்டத்திற்காவது விற்பனை செய்துவிட்டு மீண்டும் கோவாப்டெக்ஸ் கொடுக்கிற ரகங்களை தமிழ் நாட்டிற்குள் விற்று அல்லது வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் லாபம்

@ 295-296 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## கைத்தறித் துணி மொத்த விற்பனைக்கான தள்ளுபடியை (ரிபேட்) நிறுத்தியதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சில கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து





கிடைக்கும் ரகங்களை உற்பத்தி செய்து தருவதன் மூலம் எதிர்பார்க்கும் லாபத்தில் இந்த நட்டத்தை ஈடுகட்டலாமா என்று கோவாப்டெக்ஸ் நிறுவனம் தற்போது பரிசீலித்து வருகிறது.

(பிற்பகல் 5-50)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு ஓர் அறிக்கையைத் தயாரித்து இங்கே கொடுத்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைக்கு நாம் நிரந்தரப் பரிகாரம் காண வேண்டும். அருப்புக்கோட்டையில் கைத்தறி நெசவாளர்களோடு பவர்லூம்கள் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறேன். அதை ஈடு செய்யும் வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கென்று 10 சதவீதத்தை நிரந்தரமாகக் கொடுத்தால், கைத்தறி நெசவாளர்கள் நெய்யும் துணிகளை விற்பனை செய்ய முடியும். ஆகவே கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமாக உதவி செய்வதற்கு மாநில அரசு ஏதாவது பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** அருப்புக்கோட்டையைத் தவிர தமிழ் நாட்டில் மற்ற மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் துணித் தேக்கம் இல்லை. ஆகவே நிரந்தரத் தள்ளுபடி அவசியமில்லை. அருப்புக் கோட்டையிலும் இப்போது நெய்யக்கூடிய ரகங்களை மாற்றி கோவாப்டெக்ஸ் கொடுக்கிற ரகங்களை நெய்தால், தேக்கம் ஏற்படாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

### 4. தனி உறுப்பினர் தீர்மானங்கள்.

### (1) மேல் உயர்நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய குழு அமைப்பது குறித்து—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மேல் உயர்நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க மேலவை உறுப்பினர்கள் ஏழு பேர் அடங்கிய ஒரு குழு அமைப்பது குறித்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்கள் 2—3—1979 அன்று முன்மொழிந்த தீர்மானத்தின்மீது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 27—4—1979 அன்று பதில் அளித்தார்கள். அதைத் தொடர்ந்து தற்போது திரு. சங்கரலிங்கம் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

[1979 நவம்பர் 7

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத்
தீர்மானம் 1979 ஏப்ரல் 27 ஆம் நாள் அன்று இந்த மன்றத்திலே விவாதிக்கப்
பட்டு, நானும் மற்றும் பல உறுப்பினர்களும் கருத்துக்களை எடுத்துச்
சொன்ன பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.
அன்று நேரமின்மையால் திரும்ப பதில் அளிக்கிற பொறுப்பு இன்று எனக்குத் -
தரப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய ஆண்டு ஒன்று சென்றிருப்பதால், அந்தத் தீர்மானத்தைப்
பற்றி இரண்டு வரிகளைக் கூறி தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டிய நிலை
இருக்கிறது. "ஹையர் செகண்டரி பள்ளிகள் நம் நாட்டில் தொடங்கப்பட்டு
புதிய முறைக் கல்வி தொடங்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய
பிரச்சினைகளைப்பற்றியும், ஹையர் செகண்டரி வகுப்புகளைச் சிறப்பாக
நடத்த முடியாத வகையில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன
என்பதை ஆராய்வதற்கும் ஏழு பேர் அடங்கிய ஓர் ஆய்வுக் குழுவை அமைக்க
வேண்டும்" என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் கருப்பொருள். மேல்
உயர்நிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய
ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால், மேல் உயர்
நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை
வழங்க ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.
அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "நல்ல முறையில் பாடத்
திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ற நிலையில் குழுக்கள்
அமைக்கப்பட்டு புதிய பாடப் புத்தகங்கள் வந்திருக்கின்றன" என்றும் சொன்
னார்கள். ஏப்ரல் 27 ஆம் தேதி இந்த பதில் அளிக்கப்பட்டது. அப்போது
மேல்நிலைப் பள்ளி தொடங்கி ஓராண்டு ஆகியிருந்தது. இப்போது இரண்
டாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது. முதலாண்டு நாம் திடீரென்று ஆரம்
பித்ததால், சரியான பாடப் புத்தகங்கள் வராமல் இருந்தன என்பதை மன்
னிக்கக் கூடிய குற்றமாகக் கருதலாம். ஓர் ஆண்டு அனுபவம் பெற்ற பிறகு
பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு
இரண்டாவது ஆண்டுப் பாடப் புத்தகங்களில் பெருந் தவறுகள் வருவத
சாதாரணமாக மன்னிக்கக் கூடிய குற்றம் அல்ல. உதாரணமாக ஒன்
ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். எல்லா பாடப் பிரிவுகளுக்குள்ளு
நான் செல்லத் தயாராக இல்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இரண்டாவது ஆண்டுக்குரிய பொருளாதாரப் பாடப் புத்தகத்தில் உள்
- தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவது ஆண்டுக்குரிய பாட
திட்டம் தேர்வுக்கு வராது. புதிய கல்வி முறையில் முதலாவது ஆண்



979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

பாடத் திட்டத்தில் தேர்வு இல்லை. தேர்வு இல்லாமலே அப்படியே வெற்றி
பெறச் செய்துவிடுகிறோம். நான் பேசிய நாளிலேயே அந்த முறையை
மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். முதலாவது ஆண்டுக்கும்
அரசாங்கத் தேர்வு வைக்க வேண்டும். அதுவும் ஆறு மாதங்களுக்கு ஒரு
முறை செமஸ்டர் முறையில் தேர்வை வைக்க வேண்டுமென்று கேட்டிருக்
கிறேன். மாணவர்கள் இரண்டாவது ஆண்டுப் பாடங்கள் அத்தனையிலும்
தேர்வு எழுதி, வெற்றி பெற்று அடுத்த வகுப்புக்குப் போகவும், தொழில்
நுட்பக் கல்லூரிக்குச் செல்லவும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்
கொள்ள வேண்டும். இரண்டாம் ஆண்டு பொருளாதாரப் பாடத்திற்கென
இரண்டு புத்தகங்கள், வால்யூம்—1, வால்யூம்—2 வெளிவந்திருக்கின்றன.
வால்யூம்—1-ல் முதல் பக்கத்தில் "எவையெவை பொருள்களை உற்பத்தி
செய்கிறது" என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. "எவையெவை" என்ற
பன்மைக்கு "உற்பத்தி செய்கிறது" என்ற ஒருமை வினைமுற்று முதல்
பக்கத்திலேயே இலக்கணப் பிழையோடு அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அஃறிணையாக இருந்தால் சொல்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அதே புத்தகத்தில் 77-வது பக்கத்தில் மற்றொரு
பிழை. ஒரு சமதர்ம பொருளாதாரத்தை உருவாக்க வேண்டியதில் "அரசு
முக்கிய பங்கு வகிக்கிறது' என்று சொல்லப்படுகிறது "The Government
has a big role to play" என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள்.
அதையே தமிழில் மொழிபெயர்க்கும்போது, "அரசு ஒரு பெரிய உருளையை
விளையாடிக் கொண்டுள்ளது" என்று புத்தகத்திலே அச்சடித்திருக்கிறார்கள்.
"முக்கிய பங்கு வகிக்கிறது" என்ற ஆங்கில வாசகத்திற்கு மொழிபெயர்க்கிற
போது "உருளையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது" என்று
சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தை மாணவர்கள் படிக்க, ஆசிரி
யர்கள் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த பிறகு, செய்தித் தாள்களில் இந்தக்
குறைபாடு எடுத்துச் சொல்லப்பட்ட பிறகு, அந்தப் புத்தகம் பின்வலிக்கப்
பட்டது. எத்தனை ஆயிரம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கும்?
எத்தனை ஆயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப்
புத்தகமும், அதிலே இருக்கிற பாடத் திட்டமும் இந்த ஆண்டுத் தேர்வுக்குக்
கிடையாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் அதற்கு
மாற்றுப் புத்தகம் இது வரையிலும் கொடுக்கப்படவில்லை. இதனால் அரசாங்
கத்திற்கு எவ்வளவு ரூபாய் இழப்பு? மாணவர்களுக்கு பாடத் திட்டத்தைப்
படிக்க முடியாத நிலை. இது ஒரு பெரிய குற்றம் என்று சொல்வது மட்டு
மல்லாமல், இதற்குக் காரணமானவர் யாரென்று கண்டுபிடித்து, அவருக்கு
தண்டனை கொடுத்து, அவரை நிரந்தரமாகக் கல்வித் துறையிலிருந்து

[1979 நவம்பர் 7

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் 1979 ஏப்ரல் 27 ஆம் நாள் அன்று இந்த மன்றத்திலே விவாதிக்கப் பட்டு, நானும் மற்றும் பல உறுப்பினர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்ன பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அன்று நேரமின்மையால் திரும்ப பதில் அளிக்கிற பொறுப்பு இன்று எனக்குத் தரப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய ஆண்டு ஒன்று சென்றிருப்பதால், அந்தத் தீர்மானத்தைப் பற்றி இரண்டு வரிகளைக் கூறி தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. "ஹையர் செகண்டரி பள்ளிகள் நம் நாட்டில் தொடங்கப்பட்டு புதிய முறைக் கல்வி தொடங்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்சினைகளைப்பற்றியும், ஹையர் செகண்டரி வகுப்புகளைச் சிறப்பாக நடத்த முடியாத வகையில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்வதற்கும் ஏழு பேர் அடங்கிய ஓர் ஆய்வுக் குழுவை அமைக்க வேண்டும்" என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் கருப்பொருள். மேல் உயர்நிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால், மேல் உயர் நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை வழங்க ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "நல்ல முறையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ற நிலையில் குழுக்கள் அமைக்கப்பட்டு புதிய பாடப் புத்தகங்கள் வந்திருக்கின்றன" என்றும் சொன்னார்கள். ஏப்ரல் 27 ஆம் தேதி இந்த பதில் அளிக்கப்பட்டது. அப்போது மேல்நிலைப் பள்ளி தொடங்கி ஓராண்டு ஆகியிருந்தது. இப்போது இரண்டாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது. முதலாண்டு நாம் திடீரென்று ஆரம்பித்ததால், சரியான பாடப் புத்தகங்கள் வராமல் இருந்தன என்பதை மன்னிக்கக் கூடிய குற்றமாகக் கருதலாம். ஓர் ஆண்டு அனுபவம் பெற்ற பிறகு பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு இரண்டாவது ஆண்டுப் பாடப் புத்தகங்களில் பெருந் தவறுகள் வருவது சாதாரணமாக மன்னிக்கக் கூடிய குற்றம் அல்ல. உதாரணமாக ஒன்றே ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். எல்லா பாடப் பிரிவுகளுக்குள்ளும் நான் செல்லத் தயாராக இல்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இரண்டாவது ஆண்டுக்குரிய பொருளாதாரப் பாடப் புத்தகத்தில் உள்ள தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவது ஆண்டுக்குரிய பாடத் திட்டம் தேர்வுக்கு வராது. புதிய கல்வி முறையில் முதலாவது ஆண்டுப்



1979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

பாடத் திட்டத்தில் தேர்வு இல்லை. தேர்வு இல்லாமலே அப்படியே வெற்றி
பெறச் செய்துவிடுகிறோம். நான் பேசிய நாளிலேயே அந்த முறையை
மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். முதலாவது ஆண்டுக்கும்
அரசாங்கத் தேர்வு வைக்க வேண்டும். அதுவும் ஆறு மாதங்களுக்கு ஒரு
முறை செமஸ்டர் முறையில் தேர்வை வைக்க வேண்டுமென்று கேட்டிருக்
கிறேன். மாணவர்கள் இரண்டாவது ஆண்டுப் பாடங்கள் அத்தனையிலும்
தேர்வு எழுதி, வெற்றி பெற்று அடுத்த வகுப்புக்குப் போகவும், தொழில்
நுட்பக் கல்லூரிக்குச் செல்லவும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்
கொள்ள வேண்டும். இரண்டாம் ஆண்டு பொருளாதாரப் பாடத்திற்கென
இரண்டு புத்தகங்கள், வால்யூம்—1, வால்யூம்—2 வெளிவந்திருக்கின்றன.
வால்யூம்—1-ல் முதல் பக்கத்தில் "எவையெவை பொருள்களை உற்பத்தி
செய்கிறது" என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. "எவையெவை" என்ற
பன்மைக்கு "உற்பத்தி செய்கிறது" என்ற ஒருமை வினைமுற்று முதல்
பக்கத்திலேயே இலக்கணப் பிழையோடு அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அஃறிணையாக இருந்தால் சொல்லலாம்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதே புத்தகத்தில் 77-வது பக்கத்தில் மற்றொரு
பிழை. ஒரு சமதர்ம பொருளாதாரத்தை உருவாக்க வேண்டியதில் "அரசு
முக்கிய பங்கு வகிக்கிறது' என்று சொல்லப்படுகிறது "The Government
has a big role to play" என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள்.
அதையே தமிழில் மொழிபெயர்க்கும்போது, "அரசு ஒரு பெரிய உருளையை
விளையாடிக் கொண்டுள்ளது" என்று புத்தகத்திலே அச்சடித்திருக்கிறார்கள்.
"முக்கிய பங்கு வகிக்கிறது" என்ற ஆங்கில வாசகத்திற்கு மொழிபெயர்க்கிற
போது "உருளையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது" என்று
சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தை மாணவர்கள் படிக்க, ஆசிரி
யர்கள் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த பிறகு, செய்தித் தாள்களில் இந்தக்
குறைபாடு எடுத்துச் சொல்லப்பட்ட பிறகு, அந்தப் புத்தகம் பின்வலிக்கப்
பட்டது. எத்தனை ஆயிரம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கும்?
எத்தனை ஆயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப்
புத்தகமும், அதிலே இருக்கிற பாடத் திட்டமும் இந்த ஆண்டுத் தேர்வுக்குக்
கிடையாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் அதற்கு
மாற்றுப் புத்தகம் இது வரையிலும் கொடுக்கப்படவில்லை. இதனால் அரசாங்
கத்திற்கு எவ்வளவு ரூபாய் இழப்பு? மாணவர்களுக்கு பாடத் திட்டத்தைப்
படிக்க முடியாத நிலை. இது ஒரு பெரிய குற்றம் என்று சொல்வது மட்டு
மல்லாமல், இதற்குக் காரணமானவர் யாரென்று கண்டுபிடித்து, அவருக்கு
தண்டனை கொடுத்து, அவரை நிரந்தரமாகக் கல்வித் துறையிலிருந்து

[1979 நவம்பர் 7

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத்
தீர்மானம் 1979 ஏப்ரல் 27 ஆம் நாள் அன்று இந்த மன்றத்திலே விவாதிக்கப்
பட்டு, நானும் மற்றும் பல உறுப்பினர்களும் கருத்துக்களை எடுத்துச்
சொன்ன பிறகு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.
அன்று நேரமின்மையால் திரும்ப பதில் அளிக்கிற பொறுப்பு இன்று எனக்குத்
தரப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய ஆண்டு ஒன்று சென்றிருப்பதால், அந்தத் தீர்மானத்தைப்
பற்றி இரண்டு வரிகளைக் கூறி தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டிய நிலை
இருக்கிறது. "ஹையர் செகண்டரி பள்ளிகள் நம் நாட்டில் தொடங்கப்பட்டு
புதிய முறைக் கல்வி தொடங்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய
பிரச்சினைகளைப்பற்றியும், ஹையர் செகண்டரி வகுப்புகளைச் சிறப்பாக
நடத்த முடியாத வகையில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன
என்பதை ஆராய்வதற்கும் ஏழு பேர் அடங்கிய ஓர் ஆய்வுக் குழுவை அமைக்க
வேண்டும்" என்பதுதான் என்னுடைய தீர்மானத்தின் கருப்பொருள். மேல்
உயர்நிலைப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், தகுந்த கல்வித் தகுதியுடைய
ஆசிரியர்கள், தக்க ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருப்பதால், மேல் உயர்
நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை
வழங்க ஒரு குழு அமைக்க வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.
அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "நல்ல முறையில் பாடத்
திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ற நிலையில் குழுக்கள்
அமைக்கப்பட்டு புதிய பாடப் புத்தகங்கள் வந்திருக்கின்றன" என்றும் சொன்
னார்கள். ஏப்ரல் 27 ஆம் தேதி இந்த பதில் அளிக்கப்பட்டது. அப்போது
மேல்நிலைப் பள்ளி தொடங்கி ஓராண்டு ஆகியிருந்தது. இப்போது இரண்
டாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது. முதலாண்டு நாம் திடீரென்று ஆரம்
பித்ததால், சரியான பாடப் புத்தகங்கள் வராமல் இருந்தன என்பதை மன்
னிக்கக் கூடிய குற்றமாகக் கருதலாம். ஓர் ஆண்டு அனுபவம் பெற்ற பிறகு,
பல அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு,
இரண்டாவது ஆண்டுப் பாடப் புத்தகங்களில் பெருந் தவறுகள் வருவது
சாதாரணமாக மன்னிக்கக் கூடிய குற்றம் அல்ல. உதாரணமாக ஒன்றே
ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன். எல்லா பாடப் பிரிவுகளுக்குள்ளும்
நான் செல்லத் தயாராக இல்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

இரண்டாவது ஆண்டுக்குரிய பொருளாதாரப் பாடப் புத்தகத்தில் உள்ள
தவறைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலாவது ஆண்டுக்குரிய பாடத்
திட்டம் தேர்வுக்கு வராது. புதிய கல்வி முறையில் முதலாவது ஆண்டுப்



1979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

பாடத் திட்டத்தில் தேர்வு இல்லை. தேர்வு இல்லாமலே அப்படியே வெற்றி
பெறச் செய்துவிடுகிறோம். நான் பேசிய நாளிலேயே அந்த முறையை
மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். முதலாவது ஆண்டுக்கும்
அரசாங்கத் தேர்வு வைக்க வேண்டும். அதுவும் ஆறு மாதங்களுக்கு ஒரு
முறை செமஸ்டர் முறையில் தேர்வை வைக்க வேண்டுமென்று கேட்டிருக்
கிறேன். மாணவர்கள் இரண்டாவது ஆண்டுப் பாடங்கள் அத்தனையிலும்
தேர்வு எழுதி, வெற்றி பெற்று அடுத்த வகுப்புக்குப் போகவும், தொழில்
நுட்பக் கல்லூரிக்குச் செல்லவும் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக்
கொள்ள வேண்டும். இரண்டாம் ஆண்டு பொருளாதாரப் பாடத்திற்கென
இரண்டு புத்தகங்கள், வால்யூம்—1, வால்யூம்—2 வெளிவந்திருக்கின்றன.
வால்யூம்—1-ல் முதல் பக்கத்தில் "எவையெவை பொருள்களை உற்பத்தி
செய்கிறது" என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. "எவையெவை" என்ற
பன்மைக்கு "உற்பத்தி செய்கிறது" என்ற ஒருமை வினைமுற்று முதல்
பக்கத்திலேயே இலக்கணப் பிழையோடு அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அஃறிணையாக இருந்தால் சொல்லலாம்.

திரு. ம. சங்கரலிங்கம் : அதே புத்தகத்தில் 77-வது பக்கத்தில் மற்றொரு
பிழை. ஒரு சமதர்ம பொருளாதாரத்தை உருவாக்க வேண்டியதில் "அரசு
முக்கிய பங்கு வகிக்கிறது' என்று சொல்லப்படுகிறது "The Government
has a big role to play" என்று ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறார்கள்.
அதையே தமிழில் மொழிபெயர்க்கும்போது, "அரசு ஒரு பெரிய உருளையை
விளையாடிக் கொண்டுள்ளது" என்று புத்தகத்திலே அச்சடித்திருக்கிறார்கள்.
"முக்கிய பங்கு வகிக்கிறது" என்ற ஆங்கில வாசகத்திற்கு மொழிபெயர்க்கிற
போது "உருளையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறது" என்று
சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தை மாணவர்கள் படிக்க, ஆசிரி
யர்கள் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த பிறகு, செய்தித் தாள்களில் இந்தக்
குறைபாடு எடுத்துச் சொல்லப்பட்ட பிறகு, அந்தப் புத்தகம் பின்வலிக்கப்
பட்டது. எத்தனை ஆயிரம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டிருக்கும்?
எத்தனை ஆயிரம் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்தப்
புத்தகமும், அதிலே இருக்கிற பாடத் திட்டமும் இந்த ஆண்டுத் தேர்வுக்குக்
கிடையாது என்று சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் அதற்கு
மாற்றுப் புத்தகம் இது வரையிலும் கொடுக்கப்படவில்லை. இதனால் அரசாங்
கத்திற்கு எவ்வளவு ரூபாய் இழப்பு? மாணவர்களுக்கு பாடத் திட்டத்தைப்
படிக்க முடியாத நிலை. இது ஒரு பெரிய குற்றம் என்று சொல்வது மட்டு
மல்லாமல், இதற்குக் காரணமானவர் யாரென்று கண்டுபிடித்து, அவருக்கு
தண்டனை கொடுத்து, அவரை நிரந்தரமாகக் கல்வித் துறையிலிருந்து

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 நவம்பர் 7

அப்புறப்படுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவ்வளவு பெரிய தவறுக்கு இடம் கொடுத்துவிட்டு சிபார்சுகளின் பேரில் அவர்கள் மேல் பொறுப்புக்களில் இடம் பிடித்துக் கொண்டிருப்பதை உடனடியாக அகற்ற அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு 912 பள்ளிகளில் மேல்நிலைக் கல்வியைப் புகுத்தினோம். அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகிய துறைகளின்கீழ் உள்ள பள்ளிகளிலும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் ஆக ஒரு 50 பள்ளிகளில் இதைப் புகுத்தினோம். இந்த ஆண்டு 182 பள்ளிகளில் மேல்நிலை வகுப்பு களை ஆரம்பிக்க அனுமதியைக் கொடுத்திருக்கிறோம். ஆக 1,200 பள்ளி களில் இந்தக் கல்வி முறை பயிற்றுவிக்கப்படுகிறது. ஒரு கால கட்டத்திலே மாணவர்களுக்கும் அறிவுத் துறைக்கும் இடைவெளி ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தால் சொல்லுகிறேன். இப்போது படிக்கிற மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி கற்பிக்காவிட்டால், சமுதாய அறிவு இடைவெளி ஏற்பட்டுவிடும். 912 பள்ளிகளில் 212 பள்ளிகள் வெறும் அக்கடமிக் ஸ்ட்ரீமை மட்டும் கற்பித்துக் கொண்டிருக்கின்றன. தொழில் பிரிவுப் பாடங் களுக்கு பாடப் புத்தகங்கள் இல்லை. பாடத் திட்டங்கள் இல்லை. தொழில் பிரிவு இல்லாததற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். ஒன்றரை ஆண்டு களுக்குப் பிறகு புதிதாக ஆரம்பிக்கிறோம் என்று சொன்னால், அது தவறு. திரும்பத் திரும்ப அதை விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. சுருக்கமாகவே சொல்லுகிறேன்.

அதிக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். ஆசிரியர்களுடைய எண்ணிக்கை யைப்பற்றி புள்ளிவிவரம் தந்திருக்கிறார்கள். அந்தப் புள்ளிவிவரத்தின் படி, சென்ற ஆண்டு 7,941 ஆசிரியர்கள் இந்தக் கல்வியில் ஈடுபடுத்தப்பட்டிருக் கிறார்கள் என்று தெரிகிறது. அதிலே மேல் பட்டப் படிப்பு பெற்றவர்கள் 3,742 பேர், பட்டப் படிப்பு பெறாதவர்கள் 4,190 பேர். இந்தக் கல்வியைக் கற்பிக்கத் தகுதியில்லாத நாலாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் இந்தக் கல்வியைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அடிக்கடி மறு பயிற்சி கொடுக்கிறோம் என்றாலும்கூட, இந்தக் கல்வி முறையைப் பயிற்று விக்க அவர்கள் தகுதியற்றவர்கள். அதை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். ஆசிரியர்களின் வேலையில்லாத பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு தற்காலிகமாக அதை அனுமதித்தோம். மேல் பட்டப் படிப்பு படித்தவர்கள் 7,941 பேர்கள். அதில் 3,742 பேர்கள் பி.எஸ்ஸி. (கணக்கு), பி.எஸ்ஸி. (சையன்ஸ்), எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ. (ஹிஸ்டரி) பட்டம் வாங்கி யவர்கள்—ஐம்பது சதவிகிதத்தினர். இவர்கள் அந்தப் பாடத்தைக் கற்பிக்கச்



1979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

சரியான தகுதியைப் பெற்றவர்கள் இல்லை. 'பேசிக் ஹிஸ்டரி' அவர் களுக்குத் தெரியாது. பேசிக் தமிழ் தெரியாது. முதுகலைப் பட்டம் பெறு வதற்காக குறிப்பிட்ட பாடப் பகுதியைப் படித்துவிட்டு பட்டம் பெற்றவர்கள் புதிய பாடங்களைப் பயிற்றுவிக்க முடியாது.

(பிற்பகல் 6.00)

இன்று கல்வித் துறையிலே ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளத்தைப் போல, வேறு எந்தத் துறையிலேயும் வழங்கப்படவில்லை. அதை நான் மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ள வேண்டும். பல்கலைக் கழகத்திலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் முதலிலே வரும்போதே வாங்குகின்ற சம்பளம் ரூபாய் 750-க்கு மேல் இருக்கின்றது. ஒரு பேராசிரியருக்கு ரூபாய் 1,500-க்கு மேல் சம்பளம் கொடுக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? நம்முடைய சிந்தனை எல்லாம் கல்வித் துறைக்கு, கற்பிக் கின்ற துறைக்கு திறமையானவர்கள், தகுதியானவர்கள், முதல் தரமானவர்கள் வரவேண்டும் என்பதுதான். ஏனென்றால் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர் களுக்கு, பேராசிரியர்களுக்கு ஒரு கலெக்டருக்கு இருக்கக்கூடிய சம்பளத்தை விட, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு இருக்கின்ற சம்பளத்தைவிட, மருத்துவத் துறையில் உள்ள ஒரு பேராசிரியருக்கு இருக்கிற சம்பளத்தைவிட சம்பளம் உயர்த்திக் கொடுத்திருப்பதன் நோக்கம் தரமானவர்கள் இங்கே ஈர்க்கப்பட வேண்டும் என்பதுதான். ஏனென்றால் பல ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை உருவாக்குகின்றவர்கள் ஆசிரியர்கள்தான். அந்தப் பணியிலே ஈடுபட்டிருப் பவர்கள் தரமான கல்வியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். மேல்நிலைப் பள்ளியிலே, பிரைவேட் ஸ்டடியிலே படித்துவிட்டு வரக்கூடிய எம்.ஏ. பட்டதாரிகள், சையன்ஸ், மேத்தமேடிக்ஸ் பி.எஸ்ஸி. யிலே படித்து விட்டு 10 ஆண்டுக் காலம் அதையே பயிற்றுவித்துவிட்டு, இன்றைக்கு பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள் எம்.ஏ. (ஹிஸ்டரி) பட்டம் பெற்றுவிடுகிறார்கள். பகல்பூர் யூனிவர்சிட்டி யிலே, இமாசல பிரதேஷ் யூனிவர்சிட்டியிலே அவர்கள் பட்டத்தைப் பெற்று இன்கிரிமெண்ட் பெறுவதற்காகப் படித்துவிடுகிறார்கள். அவர்கள் எல்லாம் அந்தப் பயிற்சியை அளிப்பதாக இருக் கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்தப் பயிற்சியை விளைவித்துவிடும் என்பதை நான், அந்தக் கல்வி முறை மிகுந்த கேட்டை விளைவித்துவிடும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நினைவுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கொடுக்கின்ற சம்பளம் உயர்ந்த சம்பளமாகக் கொடுக்கிறோம். தரமான கல்வி பயின்றவர்களுக்கு இடம் கொடுக்கும் நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்வது தவறல்ல என்று நினைக்கிறேன்.

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 நவம்பர் 7

அதுபோலவே ஆய்வுக் கூடங்கள். இப்போது அரசுப் பள்ளிகளிலே
எல்லாம் ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்த மானியம் ஒதுக்கி நல்ல கட்டடங்
களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தனியார் துறையிலே அந்த அளவுக்கு
நிலைமை இல்லை. இன்னொன்று, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதமே விவரத்
தின்போது நான் மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினேன். இந்தப் புதிய
கல்வி முறையைக் கேட்கின்ற பள்ளிகளுக்கு, அவை தரமான பள்ளிகளாக
இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் அனுமதி கொடுக்க
வேண்டுமென்று நான் சொன்னேன். அப்போதுகூட சில பள்ளிகளைச் சுட்டிக்
காட்டினேன். மூன்று ஆண்டுகள் தலைமையாசிரியர், ஆசிரியர்கள் உட்பட
அனைவரும் மாஸ் காப்பியிங்குக்கு உடந்தையாக இருந்து பரிட்சை நடத்திய
பள்ளிக்குக்கூட மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு அரசு அனுமதி கொடுத்திருக்
கிறது. மூன்று ஆண்டுகளுக்கு debar பண்ணியிருக்கிற பள்ளிக்கும்
கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிக்கு எல்லாம் அனுமதி கொடுக்கப்
பட்டிருக்கிறது. உயர்ந்த பாடத் திட்டத்தை தரமாக அமல் நடத்துகின்ற
பள்ளிகளுக்கு, தரமான பள்ளிகளுக்குப் பார்த்துக் கொடுக்க வேண்டுமென்று
நான் சொன்னேன். அப்போது நான் பேசியதை அமைச்சர் அவர்கள் பார்த்
தால் தெரியும். இதையெல்லாம் நான் ஒரு குறையாகச் சொல்லவில்லை.
வேகமாக அமல் நடத்த வேண்டும் என்பதற்காக நாம் அனுமதி கொடுத்திருக்
கிறோம். இந்த ஆண்டு அப்படிக் கொடுக்கக் கூடாது என்று நான் சொன்
னேன். இந்த ஆண்டு 152 பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது
என்று நான் நினைக்கிறேன். அவைகளிலும் தனியார் துறையில் அதிகமாகக்
கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி தவறு செய்கின்ற நிரம்ப பள்ளி
களுக்கு இந்த கல்விக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். மேல்நிலைக் கல்வி
யைப் பயிற்றுவிக்கின்ற பொறுப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதை
இன்னும் தெளிவாகச் சொல்வதானால், கன்னியாகுமரி, திருநெல்வேலி
மாவட்டத்திலே அப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.
பல இடங்களிலே இந்த மாவட்டங்களிலே நிலைமை அப்படித்தான் இருக்கிறது
என்பதை நான் விசாரித்து அறிந்திருக்கிறேன். ஒரு மேல்நிலைக் கல்விப்
பள்ளிக்கு அனுமதி பெறுவதற்கு அவர்கள் ரூபாய் 10,000, ரூபாய் 20,000
என்று செலவு செய்திருக்கிறார்கள். அவர்கள் அனுமதி பெறுவதற்கு சக்தி
வாய்ந்த அரசியல் தலைவர் ஒருவருக்கு அதைப் பெறுவதற்காகக் கொடுத்
திருக்கிறார்கள். மேல்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியர் நியமனம் அவர்
களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செல்வாக்கு
மிகுந்த ஒருவர், பொது வாழ்வில் இருக்கக்கூடிய ஒருவர், இந்தப் பள்ளியிலே
நான் வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு



1979 நவம்பர் 7] (திரு. ம. சங்கரலிங்கம்)

ஆசிரியரை நியமிப்பதற்குரிய உரிமையைத் தர வேண்டுமென்று அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் நியமனம் செய்வதற்கு ரூபாய்
10,000 பெறுகிறார்கள்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான்கூட ஒரு
பகுதியில் என் பக்கத்திலுள்ள ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளி ஆக்க
வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக்கொண்டேன்.
அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித்
தலைவர் அவர்கள் இவ்வாறு பரிந்துரை செய்பவர்கள் எல்லாம் பணத்திற்காக
வருகிறார்கள் என்று சொன்னால், எங்களைப் போன்றவர்கள் அமைச்சர்
அவர்களை அணுகும்போது, அவர்களுக்குத் தவறான எண்ணத்தை உரு
வாக்கும் என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, நான் அத்தனையும் அப்படி
என்று சொல்லவில்லை. சென்ற ஆண்டு 912 பள்ளிகளிலே ஒரு 12 பள்ளி
களுக்குத்தான் தவறு செய்கின்ற பள்ளிகளுக்கு அனுமதி கொடுத்திருக்
கிறார்கள். இந்த ஆண்டு 152 என்பதில் சுமார் 15, 20 பள்ளிகள், தவறு செய்
கின்ற பள்ளிகள், செல்வாக்கு மிக்கவர்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக்
கொண்டு, அந்தக் கல்விக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள். ஆகவே இந்த
இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக 30 பள்ளிகள் அதைப் பெற்றிருக்கின்றன.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் இதைச் சொல்வதன் மூலம் அந்தப்
பள்ளிகளை அடையாளம் கண்டுகொண்டு, அவர்கள் தவறு செய்யாமல் இருக்
கிற பள்ளிகளுக்கு அடுத்து கொடுக்க வேண்டுமென்ற உணர்வுடன்தான் சொல்
கின்றேனே தவிர, குற்றம் சாட்ட வேண்டுமென்ற உணர்வோடு சொல்லவில்லை.
ஏனென்றால் இன்று கல்வியிலே ஒரு மாற்றம், ஒரு புரட்சிகரமான மாற்றம்
கொண்டுவருகிறோம். இதில் தோல்வியுற்றால், இனிமேல் கல்வித் துறையிலே
ஒரு மாற்றத்தைக் காண்பதற்கு எல்லோரும் அஞ்சுகின்ற நிலை ஏற்படும்.
இந்தக் கல்வி மாற்றத்தால் எந்தவிதமான தோல்வியும் வராமல், இந்தக் கல்வி
மாற்றம் வெற்றி பெற வேண்டுமென்ற குறிக்கோளோடு, உணர்வோடு, அதில்
இருக்கக்கூடிய அக்கறையின் காரணமாக அதில் தவறு நடக்கக் கூடாது என்ற
உணர்வோடு நான் சொல்கிறேனே தவிர, வேறு அல்ல. எந்த ஒரு குறிப்பிட்ட
ஆளையும் நான் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட
சொல்லியிருக்கிறேன். தனியார் துறையில் அதிகமாகக் கொடுக்கக் கூடாது.
அவர்கள் தவறை அதிகமாகச் செய்கிறார்கள். அரசுத் துறையிலே உள்ள
பள்ளிகளில் கொஞ்சம் தகுதிக் குறைவுகள் இருந்தாலும்கூட, தவறுகள்
அதிகமாக இழைக்கப்படுவதில்லை என்பதைத் திரும்பத் திரும்ப நான் சொல்
வதற்குக் காரணமே இதுதான் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன். இவ்வாறு பல பள்ளிக்கூடங்களுடைய செயல் நிலைமைகளைத்

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 நவம்பர்

தெரிந்துகொள்வதற்கு நாம் ஒரு குழுவாகப் போய் ஆய்வு செய்ய வேண்டியது
மிகவும் அவசியம் என்பதை மாத்திரம் நான் வற்புறுத்திக்கொள்கிறேன். இந்த
விவாதத்தில் கலந்துகொள்கிறபோது சொன்னேன். இந்தப் பள்ளிகளில்
ஹையர் செகண்டரி வகுப்புகள் தனியாக ஒரு பள்ளியாக இயங்க வேண்டும்
இப்போது சில பள்ளிகளிலே 1-வது வகுப்பிலிருந்து 12-வது வகுப்பு வரை
இருக்கிறது. அது ஒரு பெரிய 'ஸ்லம்' மாதிரி இருக்கிறது. பல்வேறு
தகராறுகளும், நாம் எதிர்பாராத விளைவுகளும் கிளம்புகிற நிலையில், அது
அமைந்துகொண்டிருக்கின்றது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே
சுட்டிக்காட்டுவது தவறில்லை என்று நினைக்கிறேன். ஒரு நல்ல பள்ளி 500
மாணவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதற்குமேல் பள்ளியிலே
மாணவர்கள் இருந்தால், அது ஒரு தரமான கல்வியைக் கற்பிக்கின்ற இடமாக
இல்லாமல், ஒரு சந்தைக் கூடம் மாதிரி அமைந்து விடும். ஆகவே மேல்நிலைப்
பள்ளியிலேயும் இரண்டு வருப்புகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு வருடப்
பிரிவிலும் ஐந்து அல்லது ஆறு வகுப்புகள். அதிலே இரண்டு வருடங்களுக்கு
அந்தப் பிரிவுகளிலே 10 வகுப்புகள் இருக்கும். குறைந்தது 400 மாணவர்கள்
இருப்பார்கள். அப்படி ஒரு தனி யூனிட்டாக வருவதாக இருந்தால்தான்,
பல பிரச்சினைகள் இல்லாமல் இருக்கும்.

இப்போதுகூட நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்
திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல பள்ளிகளிலே இப்போது புதிய
புதிய பிரச்சினைகள் எழுந்து கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர்
அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

ஹையர் செகண்டரி பள்ளியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் தங்களை
உயர்நிலைப் பள்ளி மாணவர்களைப் போல நடத்தக் கூடாது என்ற கோரிக்
கையை வைத்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே இருக்கிறது. பக்கத்
திலேயுள்ள மாவட்டத்திலேயே சொல்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலே
பாப்பிரெட்டிபட்டியிலே, பாப்பாரப்பட்டியிலே உள்ள மாணவர்கள் அங்கே
அச்சிட்டு, நோட்டீஸ் அடித்து அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய
கோரிக்கையிலே தாங்கள் கல்லூரி மாணவர்களைப்போல நடத்தப்பட
வேண்டும், உயர்நிலைப் பள்ளியிலே உள்ள மாணவர்களைப்போல நடத்தக்
கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். பல கோரிக்கைகளிலே இதுவும்
ஒன்று. அந்த மாணவர்களிடையே அப்படி உணர்ச்சி வந்தால், அமைதியாகப்
படித்துக்கொண்டிருக்கின்ற மற்ற சாதாரண மாணவர்கள், 8-வது, 9-வது,
10-வது வகுப்பு மாணவர்கள் தொல்லைக்குள்ளாவார்கள். பல்கலைக் கழக
மானியக் குழுவினர் "அமைதியாக நடைபெற வேண்டிய பல்கலைக் கழகக்
கல்வி, பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புகள்கூட, இப்போது புகுமுக வகுப்புகளினால்

தொல்லைக்குள்ளாக்கப்படுகின்றன. ஆகவே புதுமுக வகுப்புக்களை எடுத்துக்
கொள்ளுங்கள். அவைகளை மாற்றுங்கள்" என்று சொன்னார்கள். இப்போது
ஒன்று முதல் 10 வரை, 6 முதல் 10 வரை வகுப்புகள் இருக்கக்கூடிய உயர்
நிலைப் பள்ளிகளில் அமைதியாக நடந்த கல்வி முறை, இந்த மேல்நிலைக்
கல்வி மாணவர்களை நாம் கொண்டு வந்து சேர்த்ததனால், அமைதி இழக்கக்
கூடிய அபாயம் இருக்கிறது என்று நான் அமைச்சர் அவர்களுக்கு முன்னா
லேயே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திருநெல்வேலியில் செயிண்ட்
கேபிரியல் ஹைஸ்கூல், தூத்துக்குடியில் கார்டுவெல் ஹைஸ்கூலிலே இந்தக்
கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலேயும் இந்தக்
கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். பல மாவட்டங்களிலே இது வலுவடைந்து
கொண்டிருக்கிறது. இப்படி உருவாகாமலிருப்பதற்கு நாம் செய்ய வேண்டியது
என்ன? இப்போது இருக்கக்கூடிய ஹையர் செகண்டரி மாணவர்கள்
தங்களை கல்லூரி மாணவர்களாகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு
இன்னொரு காரணம் அந்தப் பாடத் திட்டம் அவர்களை வேறு ஒரு சிந்தனை
யில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முடியாத அளவுக்கு கடுமையான பாடத்
திட்டம் ரிச் சிலபஸ் அவர்களுக்கு இருக்கிறது. அதை முறையாக ஆசிரி
யர்கள் கற்பிக்கவில்லை. அங்கே என்ன இருக்கிறது? அவர்களுக்கும்
அந்தப் பயிற்சி இல்லை. பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள்தான் அங்கே
கற்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் எப்படி இந்த அல்ஜீப்ரா
கற்பிக்க முடியும்? இப்போது 8 ஆம் வகுப்புக்கு அல்ஜீப்ரா கொடுத்திருக்
கிறோம். சென்ற ஆண்டு பி.ஏ., பி.எஸ்ஸி. படித்த ஆசிரியர்கள் கற்பித்தார்கள்.
இப்போது 8 ஆம் வகுப்புக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் கற்பிக்க
வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பி.டி. படித்த ஆசிரியர்
களை அங்கேயிருந்து மாற்றியிருக்கிறோம். 8 ஆம் வகுப்பும் பாடத்
திட்டம் முந்தைய 10 ஆம் வகுப்புப் பாடத் திட்டம். இப்போது புதிய
கல்வி முறை வருவதன் காரணமாக ஒரு 'ஸ்ட்ரக்சர்ட் சிலபஸ்' என்று சொல்லி
பாடத் திட்டத்தை மாற்றியமைத்து, பூரணமாக பாடத் திட்டத்தை மாற்றி
நாம் தொடங்கியிருக்கிறோம். 11-வது வகுப்பிலே படித்ததை இப்போது
10-வது வகுப்பிலேயே கொண்டு வந்திருக்கிறார்கள். 8-வது வகுப்புப் பாடத்
திட்டம், 9-வது வகுப்புப் பாடத் திட்டமாக இணைக்கப்பட்டிருக்கிறது.
9-வது வகுப்புப் பாடத் திட்டத்திலே உள்ள அல்ஜீப்ராவை செகண்டரி
கிரேட் ஆசிரியர்களால் பயிற்றுவிக்க முடியாது. ஆகவே 8-வது வகுப்
புக்கும் பட்டதாரி ஆசிரியர்களை அனுப்ப வேண்டும். அந்த செகண்டரி
கிரேடு ஆசிரியர்கள் நாளாவட்டத்திலே கல்லூரியிலே நேரடியாகப் படித்து,
எம்.ஏ., எம்.எஸ்ஸி. தகுதி பெற்றவர்களை நியமித்து நல்ல முறையிலே கற்
பிக்கச் செய்து தனியாகப் பிரிக்க வேண்டிய தேவையை, சூழ்நிலையை

(திரு. ம. சங்கரலிங்கம்) [1979 நவம்பர் 7

உருவாக்குகிறது. இதுபோன்ற பல சிக்கலான பிரச்சினைகளை, ரொம்ப
நுணுக்கமான பிரச்சினைகளை நாம் ஆராய வேண்டியிருப்பதால், நான்
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொள்வது என்ன
வென்றால், நான் இவ்வளவு நேரமாக எடுத்துச் சொல்வதற்குக் காரணம்
என்னவென்றால், ஒரு ஆய்வுக் குழு தேவை என்பதை வற்புறுத்துவதற்
காகத்தான்.

(பிற்பகல் 6-10)

நான் கடந்த கூட்டத் தொடரில், இதே பொருளைப்பற்றி விவாதிக்கும்
போதுகூடச் சொன்னேன். Alexander the Great உலகம் முழு
வதையும் பிடித்துவிட்டு, சிந்து நதி வரை வந்து, தன்னுடைய சாம்ராஜ்யத்தை
விஸ்தரித்துவிட்டு, திரும்பிப் போகும்போது, அவனுடைய சாம்ராஜ்யத்தில்
ஒவ்வொன்றாகப் போய்க் கொண்டிருந்தது என்று சொன்னேன். ஒன்றை
வேகமாக அமல் நடத்தும்போது, வேகமான கண்காணிப்பு இருக்க வேண்டும்.
அதைக் கண்காணிக்கப் பல குழுக்கள் இருக்க வேண்டும். வெறும் அதிகாரி
களை மாத்திரம் வைத்துக்கொண்டு, ஆராய்ந்து கொண்டிருக்கக் கூடாது.
கல்வித் துறையிலே ஓய்வு பெற்றவர்கள், துணை வேந்தர்கள் ஆகியோர்களைக்
கொண்ட குழுவை அமைக்க வேண்டும். இந்த மாமன்றத்திலுள்ள, கல்வித்
துறையில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களையெல்லாம் பள்ளிகளுக்குச் சென்று,
ஆராயச் சொல்ல வேண்டும். இப்போது தொழில் பிரிவிற்கு ஆசிரியர்கள்
இல்லை, பாடத் திட்டங்கள் இல்லை. கல்வி இயக்குநர் அவர்கள் நாகர்கோயி
லுக்கு வந்து, புதிய கல்வித் திட்டத்தை அமல்படுத்தும் தலைமை ஆசிரியர்
களை அழைத்து வைத்துப் பேசும்போது, அந்தத் தலைமை ஆசிரியர்கள் பல
குறைகளைச் சொன்னார்கள். தொழில் பாடத் திட்டம் வரவில்லை, ஆசிரி
யர்கள் இல்லை என்றெல்லாம் தலைமை ஆசிரியர்கள் சொன்னார்கள்.
வேடிக்கையாக ஒரு சம்பவம் அப்போது நடந்தது. ஒரு தலைமை ஆசிரியர்
"நர்சிங் பாடத்தை என்னுடைய பள்ளியில் வைத்திருக்கிறேன். இப்போது
அதற்கு ஆசிரியர் கிடைக்கவில்லை. நான் ஒரு நர்சைத் தேடிக்கொண்டிருக்
கிறேன்" என்று சொன்னார். உடனே கல்வி இயக்குநர் அவர்கள் "நர்சைத்
தேடுவதை இப்போது நிறுத்திவிட்டு, பாடத் திட்டத்தை மாற்றி, வேறொரு
பாடத் திட்டத்தை வையுங்கள்" என்று ஆலோசனை சொன்னார். (சிரிப்பு)
எதற்காகச் சொல்கிறேன் என்றால், கல்வித் திட்டத்தை, பாடத் திட்டம்
இல்லாமல், ஆசிரியர்கள் இல்லாமல், ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் அமல்
படுத்துகிறார்கள். பின்னால் இந்தத் திட்டம் தோல்வி அடையாமல் இருப்
பதற்கு சரியான கண்காணிப்பு இருக்க வேண்டுமென்பதற்காக, இந்த அவை
யினுடைய ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைக்க வேண்டுமென்று
நான் சொன்னேன்



1979 நவம்பர் 7]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் ரொம்ப நகைச்சுவையாகப் பேசி, இன்றுதான் நான் கேட்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: இந்த நகைச்சுவைகூட எனக்குச் சொந்தமானதல்ல. கல்வித் துறை இயக்குநர் அவர்கள் சொன்னதைத் திருப்பிச் சொன்னேன். நகைச்சுவையாக இருக்கிற நிலையைச் சொல்லி, இப்போதே திருத்தினால் சிறப்புடையது. மூன்று ஆண்டுகள் இதே நிலையில் போனால், மேல்நிலைக் கல்வியே நகைப்பதற்குரிய நிலைக்கு வந்துவிடும். அப்படி வந்துவிடக்கூடாதென்பதற்காகத்தான் நான் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை கல்வி அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வெற்றிக்குரிய திட்டங்களை வேகமாகச் செயல்படுத்த நாங்கள் ஒத்துழைக்கிறோம். வேகமாக எப்படி நடக்கிறதென்று ஆய்வு செய்ய ஆய்வுக் குழு தேவை. ஒருவேளை கல்வி அமைச்சரவர்கள், கன்சல்டேடிவ் கமிட்டி என்று ஒன்று இருக்கிறது, அதுவே இந்தப் பணியைச் செய்யலாமென்று சொல்லலாம். அப்படியும் செய்யலாம். அதிலிருந்து ஒரு சிறிய குழுவைப் போட வேண்டும். ஆய்விற்குப் பெரிய குழு போனால் ஆய்வு நடக்காது, விருந்துதான் நடக்கும். அவர்களுக்கு வரவேற்பும், பாராட்டும்தான் நடக்கும். ஆய்வு அப்படியே இருக்கும். எனவே இதையெல்லாம் ஆய்ந்து முடிவு காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தீர்மானத்தை அமைச்சரவர்கள் ஆதரிப்பார்களென்று நம்பி, அமைகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுகின்ற விதம்பற்றி ஆராயக் குழு அமைக்க வேண்டுமென்ற எதிர்க் கட்சித் தலைவரவர்களுடைய கருத்து, மேல்நிலைக் கல்வியானது புதிதாக வந்திருக்கிறது, அந்தப் புதிய கல்வி மாறுதல் சிறந்த முறையிலே வெற்றி பெற வேண்டும், அதிலே ஏற்படுகின்ற தவறுகளைக் கண்காணித்து, அவற்றை நீக்குவதற்கான முயற்சிகளை, இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததைப்போலவே வேகமாகச் செயல்படுத்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தைக் காட்டுகிறது. நான் அதைப் பாராட்டுகிறேன்.

இப்போது மேல்நிலைக் கல்வித் திட்டம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களிலுள்ள பள்ளிகளிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாம் அந்தக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று, அடிப்படையிலே ஆராய்ந்து பார்க்கிறபோது, இருக்கின்ற வசதிகளை நாம் கணக்கில் எடுத்து, அந்த வசதிகளைப் பெற வேண்டிய மக்களையும் மனத்திலே வைத்து, அதற்கேற்ப இந்தக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமென்பதுதான் நான் வலியுறுத்திக் கூற வேண்டிய உண்மையாகும். நம்முடைய வசதிகளை மாத்திரம் எண்ணிப்

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 7

பார்த்து, நாம் பள்ளிகளைத் திறக்கும் முயற்சிகளை மேற்கொண்டால், சமுதா
யத்தில் பெரும்பான்மையான மக்களுக்கு இந்த மாதிரி நல்ல காரியங்களின்
பலன் பரவலாகக் கிடைக்காது, அது ஒரு சமூக நீதியை வழங்கியதாகாது
என்ற அடிப்படையிலே, நாம் இந்த முயற்சியை, குறைந்த வசதிகள் இருந்த
போதிலும், மேற்கொண்டிருக்கிறோம். இங்கே அச்சம் தெரிவித்த மாண்புமிகு
எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒன்றைச் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். இதுவரையில் கல்வித் துறையில் நடந்து வந்த
முறைகளை இப்போது மாற்றியிருக்கிறோம். சென்னையிலே இருக்கிற அதி
காரிகளும், நிபுணர்களும் அல்லது கல்வித் துறையைச் சேர்ந்த மற்றவர்களும்
சேர்ந்து ஆராய்ந்து பார்த்து, முடிவுகளை எடுத்து, அதை மாநிலம் முழுவதும்
நிறைவேற்றுகிற பழக்கத்தை இதுகாறும் மேற்கொண்டு வந்தார்கள். கடந்த
இரண்டு ஆண்டுகளாக அதில் ஒரு மாற்றத்தை நாம் செய்திருக்கிறோம்.
அதிலும் குறிப்பாக, மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தமட்டில், நாம் அதைப்
பின்பற்றி வருகிறோம். மேல்நிலைக் கல்வியில் யார், யார் பங்கு பெற்றிருக்
கிறார்களோ, அவர்களையெல்லாம் அழைத்து, அதிலும் குறிப்பாக மாவட்டந்
தோறும் தலைமை ஆசிரியர்களை அழைத்து, கூட்டி, அவர்களுடைய கருத்
துக்களையும், சிபாரிசுகளையும் கேட்டு, அவர்கள் தங்களுக்குள்ளாக ஆராய்ந்து
பார்த்து, எடுக்கும் முடிவுகளை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த
அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது என்ற நல்ல முடி
வெடுத்து, அந்த அடிப்படையில் இந்தக் கல்வித் திட்டத்தை நாம் செயல்
படுத்திக்கொண்டிருக்கிறோம். இதனால், ஏற்படக்கூடிய பல்வேறு குறை
பாடுகள், ஓரளவிற்குக் குறைவாக இருக்கின்றன என்று தெரிவிக்க நான்
கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ந்து, இந்தக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே பங்கு
பெற்றுள்ள ஆசிரியப் பெருமக்கள், தலைமை ஆசிரியர்கள், மற்றும் ஆர்வம்
கொண்டவர்கள் அனைவருடைய கருத்துக்களை வரவேற்கவும், பரிசீலிக்கவும்
சிறந்த மனத்தோடு இருக்கிறோமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பொருளாதாரப் பாடப் புத்தகத்தைப்பற்றி ஒரு புகாரை எதிர்க்
கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். அது குறித்து என்னுடைய விளக்
கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். புத்தகம் எழுதுவது என்பதை
அரசு தானே செய்வதில்லை. அதற்காக நிபுணர்கள் அடங்கிய குழுவைப்
போடுகிறோம். அந்த நிபுணர்கள்தான் புத்தகத்தை எழுதக் கடமைப்பட்ட
வர்கள். எழுதியதற்குப் பிறகு, இன்னொரு நிபுணர் குழுவைப் போட்டு,
அந்தப் புத்தகத்தை 'ரெவ்யூ' செய்கிறோம். அதற்குப் பிறகு அது டெக்ஸ்ட்
புக் சொசைட்டிக்கு வந்து, அங்கே அச்சிடப்படுகிறது. எனவே புத்தகத்தை



1979 நவம்பர் 7] (திரு. செ. அரங்கநாயகம்)

உருவாக்குகின்ற முயற்சியில் நேரிடையாக அரசு எந்தவிதப் பொறுப்பையும்
ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுகூட அல்ல, முழுக்க, முழுக்க எந்தத் துறை
யில் அந்தப் புத்தகம் எழுதப்படுகிறதோ, அந்தத் துறையிலுள்ள நிபுணர்களை
நம்பி, இந்தப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. இதில் ஏற்படுகிற குறை
களுக்கு அந்த நிபுணர்கள்தான் பொறுப்பானவர்கள். எனவே நம் தமிழ
கத்திலே இப்படிப்பட்டவர்கள் நிபுணர்களாக இருக்கும் நிலையில், நாம்
யாரை நம்புவது என்பதுதான் நம் மனத்திலே உள்ள பிரச்சினை. யாராக
இருந்தாலும், இந்த நிலையிலே குறிப்பிட்டுச் சொல்வது, பொதுவான ஒரு
பொறுப்பை ஏற்றுக்கொள்கிறபோது—புத்தகம் எழுதுவதாக இருந்தாலும்
சரி, பள்ளிக் கூடம் நடத்துவதாக இருந்தாலும் சரி—நாம் சமுதாயக்
கடமையை ஆற்றுகிறோமென்ற சமுதாயப் பொறுப்பு இல்லை என்றால், அது
எப்படி சமுதாயத்தைப் பாதிக்கக்கூடும் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்
காட்டாக இருக்கிறது. மேலும் அந்தத் தவறை அவர்கள் செய்யக்கூடாது
என்பது மட்டுமல்ல, யாரும் அப்படிச் செய்யக் கூடாது என்பதுதான் நம்
முடைய நோக்கமாகும். பொருளாதாரப் புத்தகத்தை எழுதுவதற்கு
அமைக்கப்பட்ட குழுவிலிருந்தவர்களின் பெயர்களை நான் படிக்கக் காரணம்,
இப்படிப்பட்டவர்கள் இனியும் இப்படி நடப்பார்களேயானால், இதைவிட
பெரிய நடவடிக்கைக்கு அவர்கள் ஆளாக நேரிடும் என்பதற்காகத்தான். இதை
உறுப்பினர்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எக்ஸ்பெர்ட் கமிட்டியில் இருந்த மெம்பர்கள் :

1. Dr. Naganathan, M.A., Ph.D., Lecturer in Economics, University of Madras.
2. Thiru S. Nilakantan, Professor of Economics.
3. Thiru G. Radhakrishnan, Assistant Professor of Statistics, Presidency College.
4. Thirumathi Nalini Ravindran, Assistant Professor of Economics, Presidency College.
5. Prof. N. Varadarajan, Professor of Economics, Villupuram.

Review Committee Members:

1. Dr. Nalla Gounder, Head of the Department of Economics, University.
2. Vasanthi Devi, Principal, Ethiraj College.
3. Dr. T. S. Venkatasami, Chief Professor of Economics, Presidency College.

## மேல் உயர்நிலைப் பள்ளிகள் செயல்படும் விதம்பற்றி ஆராய குழு அமைப்பது குறித்து

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 7

(பிற்பகல் 6-20)

நான் இந்தப் பெயர்களைப் படிக்கக் காரணம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கின்றபோது அவர்களுக்குத் தமிழும் தெரியவில்லை, பொருளா தாரமும் தெரியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான். அந்த அளவுக்கு அவர்களுக்குப் பொறுப்பிருக்கிறது. ஒன்றிரண்டு வரிகளைப் படித்த மாத்திரத்திலேயே அவர்களின் மொழி பெயர்ப்பின் திறனை நாம் புரிந்துகொள்ள முடியும். ஒரு பெரிய பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கின்றபோது, எந்தப் பேராசிரியராக இருந்தாலும், புத்தகத்தைப் படித்துத் தேறி வரக்கூடிய மாணவர்கள், பொறுப்புக்கு வரக் கூடியவர்களை உருவாக்கப் போகின்றவர்கள் என்கிற சமுதாயப் பொறுப்பை நிச்சயமாக ஏற்று, அவற்றை நல்ல முறையில் ஏற்று நடத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இல்லையென்றால் அதற்குச் சமுதாயம் அளிக்கும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு நாம் நடவடிக்கை எடுத்து மாணவர்கள் அந்தப் புத்தகங்களைப் படிக்கக் கூடாது என்பதற்காக திரும்பப் பெற்றிருக்கின்றோம். அதுபோல் புத்தகங்களை எழுதிய பேராசிரியர்களுக்கு அதற்கான பணத்தைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறோம். விளையாட்டாகப் புத்தகங்களை எழுதியவர்களுக்கு இதை ஒரு தண்டனையாகக் கொடுத்திருக்கிறோம். இவ்வளவையும் நான் இங்கே சொல்லக் காரணம் இதிலேயிருக்கிற ஆபத்து சமுதாயத்திற்கு ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான். இதனால் பின் விளைவுகள் ஏற்படுமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவு உணர்வோடு சொன்னார்களோ அதே அளவு உணர்வை இந்த அரசும் கொண்டிருக்கிறது. இனிமேல் பொறுப்பு ஏற்கின்றவர்கள் யாராக இருந்தாலும், அவ்வளவு சாதாரணமாகக் கருதி, நினைத்து புத்தகம் எழுதுகின்ற காரியத்தில் செயல்படக் கூடாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மேல்நிலைக் கல்வி முறை நல்ல முறையில் செயல்படுவதற்கான மேலும் பல யோசனைகளையும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர் களும் சொல்லியிருக்கிறார்கள். அந்த யோசனைகளையும் நிச்சயமாக நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம். இன்றைக்கு நடுநிலைப் பள்ளிகளில் இருக்கின்ற 8-வது வகுப்பிற்கு பி.டி. ஆசிரியர்கள்தான் போதிக்கத் தகுதி படைத்தவர்கள். அதை இப்போது நாம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களிடம்தான் தந்திருக்கிறோம் என்கிற அந்தக் கருத்து பரிசீலனைக்குரிய நல்ல கருத்து. இதற்கு முன்னால் 11 ஆண்டு படித்த கல்வியை 10 ஆண்டுக்குள் படிக்கின்ற நிலையை இன்றைக்குள்ள மாணவர்கள்



பெற்றிருக்கிறார்கள். ஆகவே, கீழ் வகுப்பிலேயே உயர்ந்த கல்வியைச் சொல்லித் தர வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்கேற்ப ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டிய நியாயமும் இருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை நிச்சயமாகப் பரிசீலிக்கிறோம்.

இன்னொன்றையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மாணவர்கள் படிக்கின்ற புத்தகங்களைப் பார்த்துவிட்டு அதிக பாரமாக இருக்கிறது என்கிற ஒரு குற்றச்சாட்டு இன்றையதினம் இருக்கிறது. அது ஒரு பொதுவான கருத்து. எந்த வகுப்புக்குரிய மாணவர்களுடைய கல்வியாக இருந்தாலும் சரி, பாடப் புத்தகங்கள் பாரமாக இருக்கின்றன என்று சொல்வது ஒரு வழக்கமாக இருக்கிறது. பாரம் என்று நாம் சொல்லுகின்ற போது, நடைபெறுகின்ற அந்தக் கல்வியினுடைய நிலைமையைத்தான் எடுத்துக்காட்டுகிறது. உண்மையான கல்வியாக தரத்தைத்தான் அது படிக்கின்ற கல்வி இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தால், பாரம் என்று விமர்சனம் செய்கின்ற ஒரு எண்ணம் வரவே வராது. இத்தகைய சூழ்நிலை களில் நமக்கு இருக்கின்ற ஒரு எல்லை, ஒரு லிமிட்டேஷன் என்று கல்வியை வைத்துக் கொண்டு பார்த்தால், நம்முடைய நோக்கம் எல்லாம் நம்முடைய நாட்டில் எந்த ஒரு பல்கலைக் கழகத்திலும் பி.ஏ. படித்து பட்டம் பெற்று வெளியே வந்தால், அவர்கள் பிரிட்டனிலே பட்டம் பெற்று வெளியே வருகிற மாணவர்களுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்பது. அதுபோல பி.எஸ்ஸி. பட்டம் பெற்று வெளியே வருகிற நம்முடைய மாணவர்களுடைய கல்வியின் தரம் அமெரிக்காவிலே படித்து பட்டம் பெற்று வெளியே வருகின்ற மாணவர் களுக்கு இணையாக இருக்க வேண்டும். கல்வியின் தரத்தைப் பொறுத்த வரை, விட்டுக்கொடுக்கின்ற நிலை எந்தக் காரணம் கொண்டும் நம்முடைய நாட்டிலே நிகழக்கூடாது என்ற அடிப்படையில்தான் கல்வி முறையை நாம் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் 10 அல்லது 5 சதவிகிதம் தாழ்வான அளவிலே நமது பாடத் திட்டத்தை உருவாக்கினாலும், கல்வியிலே அடிமை நிலைக்கு நம்மை நிரந்தரமாக ஆளாக்கிவிடும். அரசியல் ரீதியாக சுதந்திரம் பெற்ற நாம் அறிவுத் துறையிலே நிரந்தரமாக அடிமைப்பட்டு அது விக்கிவிட்டு விடும். பாடத் திட்டங்களைத் தீட்டுகின்றபோது, இந்த ஒரு லிமிட்டேஷன், ஒரு எல்லை எப்போதும் இருந்துகொண்டிருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுவதுடன், அதற்கேற்ப பாடப் புத்தகங்களையும் நாம் எழுதுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றை யெல்லாம் மனதிலே வைத்துத்தான் பாடத் திட்டங்களைத் தீட்டுகிறோம்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 7

தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை, தனியார் பள்ளிகளுக்கு நாம்
விரும்பி எதுவும் செய்யவில்லை. புதிதாகப் பள்ளிகளை ஆரம்பிக்கின்ற
போது, அதிகப்படியாக மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்கிறபோது, அரசின்
சார்பில் பணம் செலவு செய்யும்போது, தகுந்த அளவில் அங்கு வசதியும்
வாய்ப்பும் இருக்கும்போது, தனியாருடைய பள்ளிகளை, தனியாருடைய
முயற்சிகளை நாம் பயன்படுத்துகின்ற நிலையில் தனியார் பள்ளிகளுக்கு
இத்தகைய மேல்நிலைப் பள்ளிகளை நடத்துகின்ற வாய்ப்பினைத் தருகின்
றோம். சில பேர் அதற்காகச் செலவு செய்ததாக எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் சொன்னார்கள். அதைக் கொடுப்பதில் எந்தவிதமான ஒரு கட்டா
யத்தையும், தடையையும் நாம் ஏற்படுத்தவில்லை. எனக்குத் தெரிந்தவரை
ந்து கேட்டவர்களுக்கெல்லாம் கொடுத்ததாகத்தான் எனக்கு நினைவு.
ரு தடை அல்லது கிடைக்க முடியாத ஒரு வாய்ப்பாக அதை யாரும்
நினைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். இதிலே பணம் தருகின்ற
சூழ்நிலை மிக மிகக் குறைவாகத்தான் இருந்திருக்கும் ஏதாவதும்
அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்குமேயானால், அதற்காக வருந்து
கிறேன். கல்வித் துறையிலே இப்படிப்பட்ட நிலைமைகள் வருமேயானால்,
நிச்சயமாக ஆரம்பமே மோசமாக இருக்கிறது என்பதை மனதிலே வைத்து
பெரும் பிஸினஸ் போல, வர்த்தக ரீதியாக மாறக் கூடிய நிலைமை வரக்
கூடாது என்பதிலே அக்கறையாக, எச்சரிக்கையாக இருக்கிறோம். அதிலே
எல்லோருமே மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும்
உணர்கிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதைப்பற்றி ஒரு குழு ஆராய
வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
சொன்னார்கள். நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய பாதுகாப்புகள்,
எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய அக்கறை எவ்வளவோ இருந்தாலும்
கூட, இவற்றைப் பற்றியெல்லாம் ஆராய வேண்டுமென்று சொல்லு
கின்ற அந்த எண்ணத்தை நான் ஒரு ஆர்வத்தோடு சொல்லப்படுகிற
நல்ல கருத்தாக ஏற்றுக்கொள்கிறேன். அதிலே எனக்கு இருக்கின்ற
ஒரு எண்ணம் அல்லது நினைவு, இங்கே இருக்கின்ற உறுப்பினர்
களே கூட இந்த மேல்நிலைப் பள்ளிகளைப்பற்றி ஆராய்ந்து சிந்திக்கின்ற
வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்களா என்பதுதான். அந்த அடிப்படையிலே
கல்வித் துறையில் அமைக்கப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழு இரண்டு
மூன்று முறை கூட வேண்டுமென்று முயற்சி எடுத்தும், பல்வேறு கட்சித்
தலைவர்கள் உறுப்பினர்களாக இருக்கிற காரணத்தினால், அவர்களுக்குப்
பல்வேறு இதர அலுவல்கள் இருப்பதால், அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு
இணங்க கூட்டம் கூட்டப்படாமல் தள்ளிப் போடப்பட்டுக்கொண்டே



1979 நவம்பர் 7]

வருகிறது. அது மறுபடியும் கூடும்போது இதுபற்றி ஏற்பாடு செய்ய முடிவு
செய்திருக்கிறோம். வருகின்ற 24 ஆம் தேதி மதுரையில் அந்த ஆலோசனைக்
குழுக் கூட்டம் கூட ஏற்பாடு செய்து வருகின்றோம். கூட்டம் கூடுகின்ற
போது, முதலிலே மேல்நிலைக் கல்விபற்றி தீர ஆராய்ந்து பரிசீலிக்கக்கூடிய
வாய்ப்பினைப் பெறுகின்றோம். அதற்குப் பிறகு யோசித்து அங்கே தரப்
படுகின்ற யோசனையின் அடிப்படையில் மேற்கொண்டு முடிவுகளை நாம்
எடுக்க முடியும் என்பதைக் கூறி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு வற்புறுத்த வேண்டாமென்று
கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
தீர்மானத்தை வற்புறுத்துகிறாரா, இல்லை திரும்பப் பெறுகிறாரா?

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த
உறுதியின் அடிப்படையில் நானும் ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக
இருப்பதால், என் கருத்தை குழுவில் வலியுறுத்தி, அதிலிருந்து ஒரு உப
குழுவை அமைத்து அதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம் என்ற எண்ணத்தில்
தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

## (2) அனைத்துப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் அரசே ஏற்று நடத்துவது பற்றி

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே,

"தனியார் கல்வி நிலையங்கள், உள்ளாட்சித் துறை, மாநகராட்சியின்
கீழ் உள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள்-
ஊழியர்களுக்குப் பூரண பணிப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கல்வி
நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே சீரான நிர்வாகத்தின் கீழ் கொண்டு
வரும் பொருட்டும், சீரான கல்வி வளர்ச்சியை நிலை நிறுத்தும் பொருட்டும்
தமிழ்நாட்டில் உள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், உள்ளாட்சி,
மாநகராட்சித் துறை நடத்தும் பள்ளிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே
ஏற்று நடத்தத் தகுந்த சட்டத்தை நிறைவேற்றுமாறு அரசுக்கு இம் மேலவை
பரிந்துரை செய்கிறது"

என்கிற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

[1979 நவம்பர் 7

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தனியார் கல்வி நிலையங்கள், உள்ளாட்சித் துறை, மாநகராட்சியின் கீழ் உள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள்-ஊழியர்களுக்குப் பூரண பணிப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் ஒரே சீரான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் பொருட்டும், சீரான கல்வி வளர்ச்சியை நிலை நிறுத்தும் பொருட்டும் தமிழ்நாட்டில் உள்ள தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், உள்ளாட்சி, மாநகராட்சித் துறை நடத்தும் பள்ளிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்தத் தகுந்த சட்டத்தை நிறைவேற்றுமாறு அரசுக்கும் இம் மேலவை பரிந்துரை செய்கிறது"

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, இந்த மிக மிக முக்கியமான தீர்மானத்தை முன் மொழிவதற்கு வாய்ப்புக் கொடுத்த இந்த மன்றத்திற்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே பள்ளிக் கல்வி அமைப்பை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை அரசுத் துறை, உள்ளாட்சித் துறை, தனியார் துறை ஆகிய மூன்றுமாகும். அரசுத் துறையிலே கல்வித் துறை, அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை ஆகிய மூன்று பிரிவுகளும் பள்ளிகளை நடத்துகின்றன.

(பிற்பகல் 6-30)

உள்ளாட்சித் துறையிலே ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி ஆகிய துறையினர் பள்ளிக்கூடங்களை நடத்துகிறார்கள். தனியார் துறையிலே மைனாரிட்டியினர், மைனாரிட்டி அல்லாதவர், மிஷனரி/நான்-மிஷனரி (Missionary/Non-missionary) என்று சொல்லக்கூடிய இரண்டு பிரிவுகள் பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. கல்லூரிக் கல்வி அமைப்பை எடுத்துக் கொண்டால், இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று தனியாரால் நடத்தப்படுகின்ற கல்லூரிகள். மற்றொன்று அரசே நடத்துகின்ற கல்லூரிகள். ஆக கல்லூரிக் கல்வி அமைப்பை எடுத்துக்கொண்டால் இரண்டு பிரிவுகள்தான் இருக்கின்றன. தமிழகத்திலே ஊராட்சி ஒன்றியங்கள் மொத்தமாக 23,050 பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. நகராட்சிகளும் மாநகராட்சிகளும் 1,553 பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. தனியார்துறை மொத்தம் 7,839 பள்ளிக்கூடங்களை நடத்துகின்றன. அரசுத் துறை மொத்தம் 3,640 பள்ளிக்



79 நவம்பர் 7] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

டங்களை நடத்துகின்றன. கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அரசுத்
றையில் 51 கல்லூரிகளும் தனியார் துறையில் 137 கல்லூரிகளும் இயங்கிக்
ாண்டிருக்கின்றன. பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில்,
ரசுத் துறையில் 22 கல்லூரிகளும், தனியார் துறையில் 22 கல்லூரிகளும்
இருக்கின்றன. இதர 8 கல்லூரிகள் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக இருக்
கின்றன. இந்த அடிப்படையிலே, தமிழகத்திலே பள்ளிக் கல்வி அமைப்பும்,
கல்லூரிக் கல்வி அமைப்பும் இருக்கின்றன. இந்தத் தீர்மானத்தைப்
பொறுத்தவரையில், இதற்கு மூன்று முக்கிய நோக்கங்களைக் குறிப்பிட
விரும்புகிறேன். இந்தத் துறையிலே பணியாற்றுகின்ற, கல்வி நிலையங்
களிலே பணியாற்றுகின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும்
பூரணப் பணிப் பாதுகாப்பு, (Service Security) ஒன்று, இரண்டாவது,
இந்தக் கல்வி நிலையங்கள் அனைத்தையும் சீரான முறையில் ஒழுங்கான
நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்பது. மூன்றாவதாக, தரமான,
சீரான கல்வித் தரத்தை (Standard of education) நிலை
நிறுத்துவது. ஆக, இந்த மூன்று நோக்கங்களின் அடிப்படையில் இந்தத்
தீர்மானத்தை நான் முன்மொழிய விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிவதற்கு சில குறிப்பிட்ட காரணங்களும்
இருக்கின்றன. அவற்றை சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். உள்ளாட்சித்
துறையிலும், தனியார் துறையிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு பூரணப்
பணிப் பாதுகாப்பு இல்லையென்பதை இந்த மன்றத்திலே பல்வேறு
விவாதங்களின் மூலமாக பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும்,
ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆசிரியர் சங்கங்களுடைய பிரதிநிதிகளும் இதை இந்த அரசிடத்திலும்,
சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் விரிவாக எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலும், தனியார் துறையிலும் பணியாற்று
கின்ற ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு கிடையாது. இரண்டாவதாக,
அவர்களுடைய வேலை நிலை (Service condition) மிகவும் மோசமாக
இருக்கிறது. மூன்றாவதாக, உள்ளாட்சித் துறையிலும், தனியார் துறையிலும்
இருக்கும் பள்ளிக்கூடங்களைப் பார்த்தால், அங்கெல்லாம் கல்வியின் தரம்
நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. நான்காவதாக, தனியார்
துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் கல்வியைப் பொறுத்தவரையில்,
ஊழல், லஞ்சம், முறைகேடுகள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே
போகின்றன. ஐந்தாவதாக, மக்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்
வரிப்பணமாகப் பெற்று அந்தப் பணம் இந்தத் துறையின் மூலமாகப்
பாழடிக்கப்படுகிறது என்பது என்னுடைய கருத்து. ஆறாவதாக, உள்ளாட்சித்

துறையிலும், தனியார் துறையிலும் அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை தவறான வழிகளிலேயும், முறையற்ற முறையிலேயும் பயன்படுத்துகிறார்கள். ஏழாவதாக, சட்டங்களை மீறக்கூடிய பல்வேறு அன்றாட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேற்சொன்ன இந்தக் காரணங்களின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழிய ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்திற்கு என்று சில குறிப்பிட்ட அடிப்படையும், பின்னணியும் உண்டு. காரணம், மக்களுடைய வரிப்பணத்திலிருந்து, தனியார் பள்ளிகளானாலும் சரி, உள்ளாட்சித் துறைப் பள்ளிகளானாலும் சரி, அவைகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் மானியம் என்ற பெயரிலே கொடுக்கப்படுகிறது. தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுடைய ஊதியத்திற்கான முழுத் தொகையையும் அரசு முழு மானியமாகத் தருகிறது. கட்டிடங்கள் கட்டவும் அரசு கணிசமான அளவுக்கு மானிய உதவி அளிக்கிறது. நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஊதியங்கள் வழங்கவும் மானியம் அளிக்கிறது. கட்டிடங்கள் கட்டவும் மானியம் அளிக்கிறது. உள்ளாட்சித் துறை ஆசிரியர்களுக்குக் கணிசமான அளவு மானிய உதவியும், கட்டிடங்கள் கட்டவும், வேறுபல திட்டங்களுக்கும் அரசு மிகக் கணிசமான அளவிலே நிதியுதவி ஆண்டுதோறும் செய்து வருகிறது. நிதிநிலை அறிக்கையிலேயும் இதைக் காணலாம்.

**திரு. சி. இராமலிங்கம்:** இராம ராஜ்யம் இந்த நாட்டிலே அமைய வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராம ராஜ்யத்திலே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது ஒழுங்குப் பிரச்சினையா? அல்லது விளக்கப் பிரச்சினையா? என்னவென்று சொல்லிவிடுங்கள். எப்போதுமே ஒரு பேச்சில் குறுக்கிட்டுப் பேசும்போது, அது தன்னிலை விளக்கமா, ஒழுங்குப் பிரச்சினையா என்பதை முதலிலே சொல்லிவிடுங்கள். ஒரு சொற்பொழிவு போல பேசுவதற்கு இடமில்லை.

**திரு. சி. இராமலிங்கம் :** கிராம ராஜ்யம் அமைய வேண்டும் என்று காந்தியடிகள் சொன்னார்கள். அதன் அடிப்படையிலேதான் பஞ்சாயத்துக்களின் கீழ் பள்ளிகள் இருக்கின்றன. அங்கே செலழிக்கின்ற பணம் பாழாகிறது, வீணாகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் அதிகமாக இருக்கிறது என்று பொதுமக்கள் சொல்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்கிறாரா?





**திரு. வே. தங்கப்பாண்டியன்.:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது, உள்ளாட்சித் துறையிலே உள்ளவர்கள் அட்டகாசம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். உள்ளாட்சித் துறையிலே நடைபெறுகின்ற காரியங்கள் எதுவும் உள்ளாட்சித் தலைவர் அவர்களின் நேரடிப் பொறுப்பிலே இல்லை. அங்கே பி.டி.ஓ. இருக்கிறார். ஆசிரியர்களை நிர்வகிப்பது அதிகாரிகளே தவிர, உள்ளாட்சித் தலைவருக்கு நேரடியான எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அட்டகாசம் செய்கிறார்கள் என்ற சொற்றொடரை நான் பயன்படுத்தவில்லை. முறைகேடுகள் இருக்கின்றன என்றுதான் சொன்னேன். சட்ட மீறல் நடைபெறுகிறது என்று சொன்னேன். காந்தியடிகள் விரும்பிய இராம ராஜ்யத்தில் ஊழல் நடக்கலாம் என்று அவர் சொல்லவில்லை. முறைகேடுகள் நடக்கலாம் என்று அவர் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ராம ராஜ்யம் அமுலில் வராததால் அனுபவம் இல்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தமிழ்நாட்டில் 209 கோடி ரூபாய், மிகப் பெரிய தொகை கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய வருவாயிலே பெரிய தொகை கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 209 கோடி ரூபாயில் [illegible] பங்கு கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடக்கக் கல்விக்காக மட்டும் 101 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. [illegible] ஒதுக்கப்படு[illegible] இவ்வளவு மிகப் பெரிய தொகை கல்விக்காக [illegible] இங்கே குறிப்பிடுகிறது. 'ஆல்பிரட் மார்ஷல்' அவர்கள் சொன்ன கருத்தை இங்கே கருதுகிறேன். "கல்வி [illegible] மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். [illegible] என்பதே மிகப் பெரிய தேசிய முதலீடு" என்று அவர் சொன்னார். இன்னும் சொன்னார்:

"Education is a National investment".

"Alfred Marshall emphasised the importance of education as a National investment and, in his view, the most valuable of all capital that is invested in human beings". இந்தத் தொகை இருக்கிறதே மனித சக்தியிலே முதலீடு செய்கின்ற (Most Valuable) அதனால் மிகவும் பயனுள்ளது, பலனுள்ளது. [illegible] என்ற சொற்றொடரை மார்ஷல் அவர்கள் [illegible] முதலீடு செய்யப்படுகின்ற தொகையின் பலன் ஆகவே, கல்வித் துறையில் முதலீடு செய்யப்படுகின்ற [illegible] பயன் கிடைக்க வேண்டும். பலன் கிடைக்காவிட்டால், [illegible] பலன் கிடைக்கவில்லை என்பதை [illegible] என்பதுதான் அவர் கருத்து. [illegible] விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே கல்வியின் நிலை எப்படி இருக்கிறது என்பதைச் சொல்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் சார்பாக இந்த மன்றத்திலே இடம்பெற்றிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கயவுசெய்து விருப்பு வெறுப்பு இல்லாமல் இந்தக் கருத்துக்களை அலசிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலே ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது 28,494 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களிலே 1,30,540 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். 4,923 ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். கல்வியிலே மிகப்பெரிய கட்டம் ஆரம்பக் கல்வி. மிகவும் முக்கியமானது ஆரம்பக் கல்வி. கல்விக்காக அடிக்கல் நாட்டப்படுகின்ற இடம் ஆரம்பக் கல்வி பெறும் இடம். அஸ்திவாரம் என்று சொல்வதே ஆரம்பக் கல்வி. அப்படி இருக்கின்ற இந்த ஆரம்பக் கல்விக்காக மட்டும் 73¾ கோடி ரூபாய் நடப்பாண்டில் செலவழிக்கப்படுகிறது. கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் அரசின் சார்பாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்விக்காக 331½ கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த 331½ கோடி ரூபாயும் மக்களுடைய வரிப் பணம். இதனால் ஆரம்பக் கல்வியின் தரம் உயர்ந்ததா, அதில் ஏதாவது வளர்ச்சி ஏற்பட்டதா என்று பார்த்தால், இல்லை. பள்ளிக்கூடங்களுக்கு வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக்கொண்டு, கல்வியின் தரத்தை மதிப்பிடக் கூடாது. மதிப்பிற்குரிய காமராசர் அவர்கள் காலத்திலே இலவசக் கல்வித் திட்டம் கொண்டுவந்தார்கள். அதனால் அப்போது மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு உயர்ந்தது. மதிய உணவுத் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் காரணமாக, ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அதை மட்டும் வைத்துக்கொண்டு, கல்வியின் தரத்தை எடைபோடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

இந்த அவைக்குப் பெருந்தொகை செலவு செய்யப்பட்டும் இப்போது என்ன நடைபெறுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆரம்பக் கல்வியைப்பற்றி பல்வேறு வகைகளில் நாம் விமரிசனம் செய்கிறோம். ஆரம்பக் கல்வியில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நாங்கள் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறோம். நாங்கள் ஆசிரியர்களின் பிரதிநிதிகளாக இருந்தாலும்கூட, ஆரம்பக் கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒப்புக்கொள்கிறோம். வெறும் கண்துடைப்பாக இங்கே எல்லாம் சரியாக இருக்கிறது என்றோ, கல்வி வளர்ச்சி ஆரம்பப் பள்ளி நிலையில் மிகச் சிறப்பாக இருக்கிறது என்றோ



ஒரு போலியான வாதத்தை இந்த அவையின் முன் வைக்க விரும்பவில்லை. ஆனால் ஆரம்பக் கல்வியின் தரம் தாழ்ந்திருப்பதற்கான காரணம் என்ன என்பதைத்தான் நான் இப்போது கூற விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் குறிக்கோள்களைப் பொறுத்தவரையில், ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் உயர்ந்த நோக்கத்துடன் இந்தச் சமுதாய முன்னேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தாம் அளித்த கொள்கைக் குறிப்பிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். மற்ற துறைகளைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கிராமப்புறத்தில் கல்வித் துறை இன்னும் முன்னேற்றம் அடையவில்லை, நிச்சயமாக முன்னேற்றமடையவில்லை என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசின் சார்பில் கல்வித் துறையே ஒரு புள்ளிவிவரத்தை நமக்குக் கொடுத்திருக்கிறது. அதாவது முதல் வகுப்பில் சேரும் மாணவர்களின் **எண்ணிக்கையில் 50 சதவீத மாணவர்கள் மட்டுமே 5 ஆவது வகுப்பில்** படிக்கிறார்கள் என்பதுதான் அந்தப் புள்ளிவிவரம். அதாவது 100 மாணவர்கள் **முதல் வகுப்பில் சேர்ந்தால், 5 ஆவது வகுப்பு வரும்போது அவர்களில்** 50 பேர்கள்தான் இருக்கிறார்கள். இடையில் மற்ற 50 மாணவர்களும் காணாமல் போய்விடுகிறார்கள். அதைத்தான் நாம் 'டிராப்ஸ் அவுட்' (drop out) என்று சொல்லுகிறோம். இவ்வாறு 50 சதவீத மாணவர்கள் இடையிலே தங்கள் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். இந்த நிலையில் நாம் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். முதல் வகுப்பில் 100 மாணவர்கள் சேர்ந்தால், 5 ஆவது வகுப்பிற்கு வரும்போது, 50 மாணவர்கள்தான் இருக்கிறார்கள் என்றால், அது எவ்வளவு பெரிய தேசிய இழப்பு (wastage) இது முதலிட்டுக்கு ஏற்படுகிற பண இழப்பு என்பதை உணர வேண்டும். கல்வித் துறையால் அளிக்கப்பட்ட புள்ளிவிவரம் இது. இது மேல் வகுப்பிற்குச் செல்லச் செல்ல இன்னும் அதிகமாகிறது. முதல் வகுப்பில் 100 மாணவர்கள் சேருகிறார்கள் என்றால், எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பிற்கு வரும்போது, 5 மாணவர்கள்தான் இருக்கிறார்கள் என்று கல்வித் துறையிலே ஆராய்ச்சி செய்து, இந்தப் புள்ளி விவரத்தைத் தந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நாட்டிலே நிலைமை இருக்கிறது.

மாணவர்களுக்கு இலவச மதிய உணவைத் தருகிறோம், சீருடையைத் தருகிறோம். இருந்தும்கூட கல்வியின் தரம் ஏன் வளரவில்லை என்று நாம் பார்க்க வேண்டும். இதில் அண்மையில் நாம் ஒரு முடிவு செய்திருப்பதையும்

எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது முதல் வகுப்பிலிருந்து 3 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, தேர்வு இல்லாமலேயே, 'மாஸ் புரமோஷன்' (Mass promotion) கொடுப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம்.

* **திரு. இரத்தின பாலகுருசாமி:** தலைவரவர்களே, கல்வித் துறையில் தனி நபர் தீர்மானம் ஒன்றைப் பிரேரேபித்து இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனுபவத்தின் காரணமாக எனக்கு இதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவார்கள் என்று நம்புகிறேன். உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் உள்ளாட்சித் துறையில் இருக்கும் பள்ளிகள் அனைத்தையும் அரசுத் துறையிலேயே ஏற்று நடத்த வேண்டும் என்று தனது தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு அவருடைய கருத்துப்படியே அரசே இந்தப் பள்ளிகளையும் ஏற்று நடத்தினால், 100-க்கு 5 மாணவர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி.-க்கு வருகிற நிலை மாறி, 50 பேர் வருவார்களா? இந்த நிலைமைக்கு யார் காரணம்? மாணவர்கள் காரணமா? அங்கேயுள்ள ஆசிரியர்கள் காரணமா? இதை உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** எங்கள் ஊர்ப் பெரியவர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் நீண்ட அனுபவம் பெற்றிருக்கிறார்கள். சிதம்பரத்திற்குப் பக்கத்திலே அவரது சொந்த ஊர். உள்ளாட்சிப் பள்ளிகளின் நிலைமை என்ன என்பதும், அதற்குக் காரணம் என்ன என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் அவர் ஆளும் தரப்பில் உட்கார்ந்திருக்கிற காரணத்தால், இதை ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரத்தின பாலகுருசாமி:** இல்லை, இல்லை. உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 100-க்கு 5 பேர்தான் எஸ்.எஸ்.எல்.சி.க்கு வருவதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே பள்ளிகளில் தரம் குறைவதற்கான காரணம் என்ன என்பதை அவர் விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்ட கருத்து மிக முக்கியமான கருத்தாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தனி நபர் தீர்மானமே உள்ளாட்சித் துறையில் இருக்கிற



பள்ளிகளை அரசுத் துறையே ஏற்க வேண்டும் என்பதுதான். தற்போது
அவைகள் உள்ளாட்சித் துறையில் இருப்பதால், இன்னின்ன குறைபாடுகள்
இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எனவேதான் மாண்புமிகு உறுப்பினர்
திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் கேட்டதும், நான் கேட்க
விரும்புவதும், உறுப்பினர் சொல்லுகிற குறைபாடுகள், அரசுத் துறையே
இந்தப் பள்ளிகளை உள்ளாட்சித் துறையிடமிருந்து மேற்கொண்டால் எப்படி
நீங்கும் என்பதை விளக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இன்னும் என்னுடைய தீர்மானத்தின்
மீதான பேச்சு முடிவடைந்துவிடவில்லை. அதற்குள் அதை விளக்க
விரும்புகிறேன். இடையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுப்பினர்
அவர்களும் குறுக்கிட்டுவிட்டார்கள்.

Mass promotion கொடுப்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன். எதற்காக
இதைக் கொடுக்கிறோம்? தற்போது இருக்கிற தேக்க நிலையைக் குறைக்க. மாணவர்களை மீண்டும் பள்ளிக்
கூடத்தோடு இடையில் காணாமல் போய்விடுகிற அவர்களைக் கவருவதற்காக
கல்விக்கு Attract செய்ய—அதாவது முதல் வகுப்பிலிருந்து
இதைக் கொடுக்கிறோம். அதன் காரணமாகத் தான் இனி தேர்வே கிடையாது. தேர்வு
மூன்றாம் வகுப்புவரை மாணவர்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்னைப்
இல்லாமலே புரமோஷன் என்று ஆணை மாற்றலாமே தவிர, தேர்வே இல்லாமல்
பொறுத்தவரையில், தேர்வு முறையை சரியல்ல. இது என்னுடைய
மாணவர்களுக்குப் புரமோஷன் என்பது புகுத்தக்கூடாது. அது
சொந்தக் கருத்து. அப்படிப்பட்ட முறையை நாம் மாண்புமிகு கல்வியமைச்சர்
கல்வியின் தரத்தைப் பாழாக்கிவிடும் என்பதை மாற்றலாம்,
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்வு முறையை 'கண்டோடு
ஆனால் தேர்வே இல்லாமல் Mass promotion என்று தெரிவித்துக்கொள்கிறேன்.
கைலாசம்' என்று வைப்பது சரியில்லை என்று

இலவசக் கல்வி, இலவசப் புத்தகம், கற்பலகை இலவசம். சீருடை
இலவசம் என்று எல்லாவற்றையும் கொடுத்து, இவ்வளவு வசதிகளைச் செய்து
தந்த பிறகும், நாட்டில் ஆரம்பக் கல்வியின் தரம் உயரவில்லை என்றால்,
அதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

மாணவர்களுக்குப் பாடம்
ஆசிரியர்களுக்கு முக்கியமான வேலை ஊராட்சி ஒன்றியப்
சொல்லிக் கொடுப்பது. ஆனால் இன்றையதினம் முக்கியமான
பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் செய்யாமல்
எந்தக் கல்விப் பணியைச் செய்ய வேண்டுமோ அதைச்

எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது முதல் வகுப்பிலிருந்து 3 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, தேர்வு இல்லாமலேயே, 'மாஸ் புரமோஷன்' (Mass promotion) கொடுப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம்.

*** திரு. இரத்தின பாலகுருசாமி:** தலைவரவர்களே, கல்வித் துறையில் தனி நபர் தீர்மானம் ஒன்றைப் பிரேரேபித்து இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனுபவத்தின் காரணமாக எனக்கு இதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவார்கள் என்று நம்புகிறேன். உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் உள்ளாட்சித் துறையில் இருக்கும் பள்ளிகள் அனைத்தையும் அரசுத் துறையிலேயே ஏற்று நடத்த வேண்டும் என்று தனது தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு அவருடைய கருத்துப்படியே அரசே இந்தப் பள்ளிகளையும் ஏற்று நடத்தினால், 100-க்கு 5 மாணவர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி.-க்கு வருகிற நிலை மாறி, 50 பேர் வருவார்களா? இந்த நிலைமைக்கு யார் காரணம்? மாணவர்கள் காரணமா? அங்கேயுள்ள ஆசிரியர்கள் காரணமா? இதை உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** எங்கள் ஊர்ப் பெரியவர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்திருக்கிறார்கள். அதிலே அவர்கள் நீண்ட அனுபவம் பெற்றிருக்கிறார்கள். சிதம்பரத்திற்குப் பக்கத்திலே அவரது சொந்த ஊர். உள்ளாட்சிப் பள்ளிகளின் நிலைமை என்ன என்பதும், அதற்குக் காரணம் என்ன என்பதும் அவருக்குத் தெரியும். ஆனால் அவர் ஆளும் தரப்பில் உட்கார்ந்திருக்கிற காரணத்தால், இதை ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*** திரு. இரத்தின பாலகுருசாமி:** இல்லை, இல்லை. உறுப்பினர் அவர்கள் பேசும்போது, 100-க்கு 5 பேர்தான் எஸ்.எஸ்.எல்.சி.க்கு வருவதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே பள்ளிகளில் தரம் குறைவதற்கான காரணம் என்ன என்பதை அவர் விளக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர, வேறு அல்ல.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் இங்கே குறிப்பிட்ட கருத்து மிக முக்கியமான கருத்தாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தனி நபர் தீர்மானமே உள்ளாட்சித் துறையில் இருக்கிற



பள்ளிகளை அரசுத் துறையே ஏற்க வேண்டும் என்பதுதான். தற்போது அவைகள் உள்ளாட்சித் துறையில் இருப்பதால், இன்னின்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். எனவேதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் கேட்டதும், நான் கேட்க விரும்புவதும், உறுப்பினர் சொல்லுகிற குறைபாடுகள், அரசுத் துறையே இந்தப் பள்ளிகளை உள்ளாட்சித் துறையிடமிருந்து மேற்கொண்டால் எப்படி நீங்கும் என்பதை விளக்க வேண்டும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இன்னும் என்னுடைய தீர்மானத்தின் மீதான பேச்சு முடிவடைந்துவிடவில்லை. அதற்குள் அதை விளக்க விரும்புகிறேன். இடையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுப்பினர் அவர்களும் குறுக்கிட்டுவிட்டார்கள்.

Mass promotion கொடுப்பதைப்பற்றிக் குறிப்பிட்டேன். எதற்காக இதைக் கொடுக்கிறோம்? தற்போது இருக்கிற தேக்க நிலையைக் குறைக்க. அதோடு இடையில் காணாமல் போய்விடுகிற மாணவர்களை மீண்டும் பள்ளிக் கல்விக்கு Attract செய்ய—அதாவது அவர்களைக் கவருவதற்காக இதைக் கொடுக்கிறோம். அதன் காரணமாகத் தான் முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்புவரை மாணவர்களுக்கு இனி தேர்வே கிடையாது. தேர்வு இல்லாமலே புரமோஷன் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், தேர்வு முறையை மாற்றலாமே தவிர, தேர்வே இல்லாமல் மாணவர்களுக்குப் புரமோஷன் என்பது சரியல்ல. இது என்னுடைய சொந்தக் கருத்து. அப்படிப்பட்ட முறையை நாம் புகுத்தக்கூடாது. அது கல்வியின் தரத்தைப் பாழாக்கிவிடும் என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்வு முறையை மாற்றலாம், ஆனால் தேர்வே இல்லாமல் Mass promotion என்று 'கண்டோடு கைலாசம்' என்று வைப்பது சரியில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இலவசக் கல்வி, இலவசப் புத்தகம், கற்பலகை இலவசம், சீருடை இலவசம் என்று எல்லாவற்றையும் கொடுத்து, இவ்வளவு வசதிகளைச் செய்து தந்த பிறகும், நாட்டில் ஆரம்பக் கல்வியின் தரம் உயரவில்லை என்றால், அதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கு முக்கியமான வேலை மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது. ஆனால் இன்றையதினம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முக்கியமான எந்தக் கல்விப் பணியைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவிடாமல்

தடுக்கப்படுகிறார்கள். இதுதான் முக்கியமான காரணம். அவர்கள் கல்விப் பணி தவிர வேறு வேலையைச் செய்யத் தூண்டப்படுகிறார்கள். "பாடம் போதிப்பது உன்னுடைய முக்கியமான வேலை அல்ல" என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே ஆசிரியர்களைப் பார்த்துச் சொல்லுகிறார். இது தான் உண்மை. "பாடம் போதிப்பதைப்பற்றிக் கவலைப்படாதே, வேறு வேலையைச் செய்துவிட்டு வா" என்று அவர் கூறுகிறார். இப்படிச் சொல்லுகிற ஆணையாளர்கள்தான் நாட்டில் அதிகம். நல்லவேளையாக தேர்தல் இன்னும் நடக்கவில்லை. தேர்தல் நடந்து முடிந்த பிறகு, ஒரு சில ஒன்றியத் தலைவர்களும் இப்படித்தான் சொல்வார்கள். நல்ல தலைவர்களும் இருக்கிறார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருச்சி மாவட்டத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவர் இருந்தார். அவர் திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் ஒரு தீர்மானமே கொண்டு வந்தார். அதாவது ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இருக்கிற பள்ளிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று தீர்மானமே கொண்டு வந்தார். ஆனால் அங்கே இருந்த மற்ற தலைவர்கள் அவரைச் சரிப்படுத்தி உட்கார வைத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட நல்ல சிந்தனை உள்ள தலைவர்களும் இருக்கிறார்கள். நம்மிடம் இருக்கும் கோளாறு என்ன என்று எண்ணிப்பார்க்கிற தலைவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் உள்ளாட்சி நிறுவனங்களில் ஆணையாளர்களின் அதிகாரம் கொடிகட்டிப் பறக்கிறது. அவர்கள் வைத்ததுதான் சட்டம். அதைப் போலவே கல்வியைப்பற்றியோ தெரியாத for Education (கல்வி விரிவுப் பணி அதிகாரிகள்) Extension Officer மேற்பார்வை செய்கிறார்கள். கல்வியைப்பற்றித் தெரியாத இந்தப் பள்ளிகளை பள்ளிகளை மேற்பார்வை செய்கிறார்கள். அவர்கள்தான் இருக்கிறார்களே என்று சொல்லலாம். Deputy Inspectors பள்ளிகளைப் பொறுத்தவரையில், டெபுடி இன்ஸ்பெக்டர்களின் ஆனால் ஊராட்சி ஒன்றியப் மிகவும் பரிதாபமானது. நாங்களெல்லாம் நேரடியாகப் பார்த்து நிலைமை அவர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. வருகிறோம். பள்ளிகளை மேற்பார்வை செய்யப் போகவில்லை. அவர்களெல்லாம் சென்று வரவேண்டுமே என்று போய் வருகிறார்கள். ஏதோ பள்ளிகளுக்குச் அதிகாரம் படைத்தவர்களாக, ஆசிரியர்களை அவர்களுக்கு மேலே வேறு பலர் இருக்கிறார்கள். இதன் ஆட்டிப்படைப்பவர்களாக இன்ஸ்பெக்டர்கள் கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கு காரணமாகத்தான் டெபுடி வழிகாட்டுதலைச் செய்ய இயலவில்லை. சரியான (கைடென்ஸ்)





அது மட்டுமல்ல. உள்ளூர் சக்திகள், உள்ளூர் பிரமுகர்கள் வேறு இருக்கிறார்கள். அவர்களின் உருட்டல் மிரட்டல்களையெல்லாம் சொல்ல முடியாத அளவுக்கு இருக்கின்றன. இவர்களுடைய தலையீட்டிற்கும் குறுக்கீட்டிற்கும் ஆசிரியர்கள் உள்ளாகிறார்கள். இவ்வாறு பல்வேறு வகையில் அதிகாரிகள் மூலமாகவும், உள்ளூர் பிரமுகர்கள் மூலமாகவும் ஆசிரியர்கள் சொல்ல முடியாத தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதுதான் உண்மை. இந்தக் காரணங்களால்தான் பள்ளிக் கல்வியின் தரம் உயரவில்லை.

ஆசிரியர்கள் தங்களின் முக்கிய பணியான பாடம் போதிப்பதை விட வேறு பணியைச் செய்யச் சொல்லப்படுகிறார்கள். அவைகளில் சிலவற்றை மட்டுமே இங்கே அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் என்றாலே உடனே அதிகாரி களுடைய நினைவுக்கு வருவது 'குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆள் பிடிக்கிற வேலை'. அதற்கு இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைத் தவிர, வேறு ஆளே கிடையாது. ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதைப் போல், இந்த அறுவை சிகிச்சைக்கு ஆள் பிடித்து வருகிற மிக முக்கியமான வேலை இன்றைக்கு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்போது

(பிற்பகல் 6-50)

கட்டாயப்படுத்துவதில்லையென்று அரசின் சார்பாகச் சொல்லலாம். சில இடங்களில் கட்டாயப்படுத்துவதில்லைதான். ஆனால் வேறு சில யுக்திகளைப் பயன்படுத்துகிறார்கள். "உனக்கு ஓர் ஆண்டுக்கு இவ்வளவு கோட்டா. இதை நீ முடிக்கிற வரையில் பள்ளிக்கு வர வேண்டாம். முடித்துவிட்டு வந்த பிறகு கையெழுத்துப் போடலாம். அது வரையில் பள்ளிக்கூடத்திற்கு வராமல் இருக்கலாம்" என்று சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் பள்ளிக்கு வந்தாலும் கூட அதிகாரிகள், "யார் உன்னை பள்ளிக்கு வரச் சொன்னார்கள்? உன்னுடைய கோட்டா முடிந்ததா?" என்று கேட்கக்கூடிய நிகழ்ச்சி இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே குடும்பநலத் திட்டத்திற்கு ஆள் பிடித்து வருகிற வேலைதான் அவர்களுக்கு முக்கியமான வேலை. அதைச் செய்யும்படி கட்டாயப்படுத்தாமல், இவ்விதமான சலுகையைக் காட்டி அவர்களை சலுகைக்கு இரையாக்குகிறார்கள்.

இன்னொரு முறை Transfer செய்தல். மேற்சொன்ன முறைக்குக் கட்டுப்படவில்லையென்றால், அவர்களை 'டிரான்ஸ்ஃபர்' செய்வார்கள். அப்படி இல்லா அவர்களை வேறு இடங்களுக்குத் தூக்கியடிப்பார்கள். உண்மைக்கு மாறான குற்றச் சாட்டாலும், செய்யாத தவறுகளுக்காக,

சாட்டுகளை அவர்கள் மீது சுமத்தி, நடவடிக்கை எடுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், இப்படிப்பட்டவைகளைப்பற்றி முறையிடலாம். அந்த வாய்ப்பும் இப்போது இல்லை.

அதுமட்டுமல்லாமல், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு, அரசு கடன் பத்திரங்களை விற்பனை செய்வதிலும், பரிசுப் பத்திரங்களை விற்பனை செய்வதிலும், கோட்டா உண்டு.

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "கோணியில் கல்லைக் கட்டி அடிப்பதைப் போல அடிக்கிறார்கள்". எந்தெந்தப் பஞ்சாயத்தில் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். எந்தெந்த இடத்தில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள் என்பதை புள்ளிவிவரத்தோடு அவைக்குத் தெரிவித்தால், நாங்களும் அதைத் தெரிந்துகொண்டு, அதற்கான நடவடிக்கையை எடுக்க உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, "கோணியில் கல்லைக் கட்டி அடிப்பது" என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் என்னவென்று விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, எனக்கும் அது என்னவென்று புரியவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, கல்லை தனித்தனியாக அடித்தால் உடையாது. ஆகவே மொத்தமாக கோணியில் கட்டி அடித்தால் உடையும். அது போல பொதுவாக இன்னின்ன நடந்தது என்று சொல்லி பிரயோஜனம் இல்லை. ஒவ்வொன்றாக எந்தெந்த இடத்தில் நடந்தது என்பதை விவரத்தோடு சொல்ல வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடித்தது போதும்.

**திரு. சி. இராமலிங்கம்:** ஊராட்சி மன்றங்களில் இதை இதைச் செய்கிறார்கள் என்று மொத்தமாகச் சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் தலையீட்டைப்பற்றி நாங்கள் சொல்ல ஆரம்பித்தால், அவர்களால் பதில் சொல்ல முடியாது.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களின்பால் அனுதாபம் கொண்டு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல உள்ளம் படைத்த மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். அது வேறு விஷயம். நான் இப்போது பொதுப்படையாகத்தான் சொன்னேன். இந்த மன்றத்திலேயே ஆதாரத்தோடு, எந்தெந்த ஆணையாளர் என்னென்ன செய்தார் என்பதையெல்லாம் பெயர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பது குறிப்பை எடுத்துப் பார்த்தால் தெரியும். குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம். பொதுப்படையாகச் சொல்லுகிறேன் என்றால், அந்த அளவுக்குப் பரவலாக அது இருக்கிறது. இது கசப்பான உண்மை. ஆனால் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். இது போன்ற பல்வேறு காரியங்களுக்கு ஆசிரியர்களை நிர்ப்பந்தப் படுத்துகிறார்கள். சென்சஸ் வேலை, அரசு கடன் பத்திரங்களை விற்பனை செய்தல், பரிசுப் பத்திரங்களை விற்பனை செய்தல், அரசு விழாக்களுக்கு நிதி தேடித்தருதல், ரேஷன் கார்டு தயாரித்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், டி.பி. ஸ்டாம்ப் விற்றல், கொடிநாள் ஸ்டாம்ப் விற்றல் போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் நல நிதிக்காக ஸ்டாம்ப் விற்பனையின் மூலமாக நிதி சேர்ப்பதையும் ஆசிரியர்களிடமே ஒப்படைக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது**: பேரவையிலே காலையில் கண்டனத் தீர்மானம் இருந்தது. அதனால் அவர்கள் வரக்கூடிய சூழ்நிலை இல்லாமல் இருந்தது. அவர்கள் கண்டிப்பாக வருவதாக இருக்கிறார்கள். இன்றைக்கு வருவார்கள். அப்படி இன்று வரவில்லை என்றால், நாளைக்கு வந்து கலந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Books containing Obscene Matters.*

* 100-A *Q*.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal with the Government to ban books which contain obscene matters; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## ஆபாசக் கருத்துக்கள் அடங்கிய நூல்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) ஆபாசக் கருத்துக்கள் அடங்கிய நூல்களைத் தடை செய்வது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்):** (அ) & (இ) இல்லை. எனினும் இ. பி. கோ.-வில் இது சம்பந்தமான ஷரத்துக்களில் உள்ள தண்டனையை அதிகமாக்குவதன் மூலம், இதனைக் கட்டுப்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, ஆபாசக் கருத்துக்கள் அடங்கிய நூல் வெளியிடப்படுவதின் மீது கட்டுப்பாடு இருப்பதற்காக கடும் தண்டனை இருப்பதுபற்றி பல முறை சொல்லப்பட்டது. இப்படி பல தடவைகள் முயற்சி செய்தும் தோல்வி அடைந்திருக்கிறோம். அப்படிப்பட்ட கடும் தண்டனை விதிப்பது பற்றிப் போதாது என்ற நிலை இருப்பதால், அப்படிப்பட்ட நூல்களைத் தடைசெய்வது சமுதாய நன்மைக்கு உகந்ததாக இருக்கும். எனவே இன்னும் அதிகக் கடும் தண்டனை விதிப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 292 ஏ-யின் கீழ் அதிகபட்ச தண்டனையாக 2 ஆண்டுகள் என்று இருக்கிறது. தண்டனைக் காலத்தை கூடுதலாக்கியிருப்பதே அதிகபட்ச தண்டனையாகும். அப்படிப்பட்ட ஆபாசப் புத்தகங்களைத் தவிர்ப்பதற்கு அந்த தண்டனையிலே வாய்ப்பு இருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தண்டனை கொடுக்கப்படுவதிலே சில விதி முறைகள் இருந்தாலும், நடைமுறையில் ஆபாச நூல்களை பகிரங்கமாக பொது இடங்களில் விற்பனைக்காக வைத்திருக்கிறார்கள். அதையே காட்சிப் பொருள்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால், அந்தச் சட்டம் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெரிகிறது. அந்த எண்ணம் பொதுமக்கள் மத்தியில் இருக்கின்றது. ஆகவே அதிகார இயந்திரத்தை முடுக்கிவிட்டு அந்தச் சட்டங்களைச் செம்மையான முறையிலே செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுப்பார்களா?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** இதில் வாக்குறுதி கொடுக்கின்ற பிரச்சினை எழவில்லை. ஏற்கனவே தண்டனை வழங்கும் அதிகாரம் இருக்கிறது. தண்டனைக் காலத்தை இன்னும் அதிகரித்திருப்பதனால், அப்படிப்பட்ட புத்தகங்களை வெளியிடுபவர்களுக்கும், எழுதுபவர்களுக்கும் ஒரு அச்ச உணர்வு ஏற்படும். அதனால் அப்படிப்பட்ட காரியங்களில் அவர்கள் ஈடுபடாமலிருப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்போதே 2 ஆண்டு காலம் தண்டனை என்று இருந்தும், அதையும் மீறி பல கடைகளிலே ஆபாசப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன, காட்சிப் பொருளாக வெளியிலேயே வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதைப்பற்றி அரசு இன்னும் அதிகமான நடவடிக்கைகள் எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன்:** ஆபாசக் கருத்துக்கள், நூல்கள் எவை எவை என்று அரசு விதிமுறைகள் வகுத்திருக்கின்றதா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** அதற்கு என்று விதிமுறைகள் வகுத்தால், அதுவே ஆபாசமாகப் போய்விடும். சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** ஆபாச நூல்கள்பற்றிச் சொல்லப்படுகிறது. அதேபோல் ஆபாசக் கருத்துக்களை வெளியிடுகின்ற வார இதழ்கள் இருக்கின்றன. அவைகள்பற்றியும் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** ஆபாச நூல்கள், ஆபாசக் கருத்துக்கள் என்பதெல்லாம் இந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** சமீப காலத்தில் மவுண்ட் ரோட்டில் ஓரப்பகுதியிலே ரோடிலேயே மிகக் கேவலமான பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய ஆபாசமான நூல்களை விற்கக்கூடிய நிலையைக் கண்டு நான் மிகவும் மன வேதனைப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த மாதிரி நிலைமைகள் இருப்பதை மாற்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடிக்கடி காண்கிறீர்கள் போலிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: ரோடிலே வரும்போது பார்வையில் படுகிறது. ரோடும் பாழாகாமல் கன்று ஆடு வருவது எப்படி முடியும்? ஆதலால் தயவு செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் மனம் தளராமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட விஷயத்தில் கவனத்தைச் செலுத்தாமல் இருந்தால் நல்லது.

### Surrender of Earned Leave.

*101 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to permit the State Government Servants to surrender one month's Earned Leave in a year, in lieu of cash allowance;

(b) whether the Third Tamil Nadu Pay Commission has made any recommendation in this regard; and

(c) if so, the decision taken by the Government thereon?

### ஈட்டிய விடுப்பை ஒப்படை செய்தல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரொக்கப்படிக்குப் பதிலாக ஓராண்டில் ஒருமாத ஈட்டிய விடுப்பை ஒப்படை செய்ய, மாநில அரசு ஊழியர்களுக்கு அனுமதி வழங்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) இதுகுறித்து தமிழ்நாடு மூன்றாவது ஊதியக்குழு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்): (அ) இல்லை.

(ஆ) & (இ): ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாத ஈட்டிய விடுப்பை ஒப்புவித்துத் தொகை பெற்றுக்கொள்ளும் வசதியை அளிக்க வேண்டும் என்ற பணியாளர் சங்கங்களின் முறையீடுகளை பரிசீலித்த பின்னர், மூன்றாவது தமிழ்நாடு சம்பளக்குழு அம்முறையீடுகளுக்கு எதிராகப் பரிந்துரை செய்தது;



ஏனெனில் இது பணியாளர்கள் ஈட்டிய விடுப்பை எடுத்துக் கொள்ளும் ஆர்வத்தை கட்டுப்படுத்துவதுடன் தொடர்ந்து பணி செய்வதினின்றும் அவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டிய இடைக்கால ஓய்வையும் எடுக்க விடாமல் தடுத்து விடும். ஓய்வில்லாமல் தொடர்ந்து பணி செய்வது பணியாளர்களுடைய உடல் நலத்தைப் பாதித்து நிர்வாகத் திறமையையும் குறைத்து விடும். சம்பளக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பொதுவாகவே ஊதியக் குழு அரசு ஊழியர்களுடைய உணர்ச்சிக்கு எதிராகத்தான் பல வகைகளிலே அறிக்கை கொடுக்கிறது. இந்த ஊதியக் குழுவும் அப்படித்தான் செய்திருக்கிறது. அது அப்படியிருந்தாலும் கூட, அதன் பரிந்துரையை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஆராய்ந்து மறு பரிசீலனை செய்து ஒரு நிலையான ஆணையை வழங்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே ஊழியர்களின் அந்தக் கோரிக்கையை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: 1968 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சட்டத்திலிருந்தும், 1971 ஆம் ஆண்டு ஆணைப்படியும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசுப் பணியாளர்கள் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சென்று, ஆண்டு ஒன்றுக்கு ஈட்டிய விடுப்பை ஒப்புவித்துத் தொகை பெறும் ஒரு வாய்ப்பினை தாராளமாக்கியிருக்கிறது. இதற்கு மேலும் இன்னும் தாராளமாக அறிவிப்புகளை அரசு செய்வதிலே சங்கடங்கள் இல்லை என்றாலும், பெரும்பாலும் எப்போதும் பணம் ஈட்டுகின்ற முயற்சியிலேயே அரசுப் பணியாளர்கள் ஈடுபடுவர். அதன் காரணமாக அவர்களின் உடல் நலம் ஓய்வில்லாததனால் பாதிக்கப்படும். அவர்களுடைய உடல்நலத்திலே அரசு கொண்டுள்ள அக்கறையின் காரணமாக, அரசு இதை வேண்டாம் என்ற அளவில், சம்பளக் குழுவினுடைய பரிந்துரையை அப்படியே ஏற்றுக் கொண்டது.

திரு. செ. முத்துசாமி: உடல் நலம் என்பது பலருக்குக் கெடாமலேயே ரிடையர் ஆகியிருக்கிறார்கள். அப்படிப் பல அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். ஈட்டிய விடுப்பு எடுத்தாக வேண்டும் என்பதிலும் அப்படி இல்லாவிட்டாலும், அவர்கள் உடல் நலத்தில் அரசுக்கு அக்கறையும் இருப்பதால், அவர்கள் ஓய்வு பெற ஈட்டிய விடுப்பு எடுத்துச் செல்லும்போது, வெளியிலே செல்லும்போது, அவர்களுக்கு டிராவல் கன்செஷன் என்று கொடுக்கலாம். மற்ற சில ஸ்டேட்களில் அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். ஓய்வு எடுக்க மற்ற இடங்களுக்குப் போகும்போது, அவர்கள் அங்கு போக ஏதாவது டிராவல் கன்செஷன் என்று ஒன்றைத் தர அரசு ஆலோசிக்குமா?

திரு. செ. முத்துசாமி : ரோடிலே வரும்போது பார்வையில் படுகிறது. போதும் பாராமல் கன்று வருவது எப்படி முடியும்? ஆதலால் தயவு செய்து அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் பணம் தவறாமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட விஷயத்தில் கவனத்தைச் செலுத்தாமல் இருந்தால் நல்லது.

## Surrender of Earned Leave.

* 101 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to permit the State Government Servants to surrender one month's Earned Leave in a year, in lieu of cash allowance ;

(b) whether the Third Tamil Nadu Pay Commission has made any recommendation in this regard; and

(c) if so, the decision taken by the Government thereon ?

## ஈட்டிய விடுப்பை ஒப்படை செய்தல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரொக்கப்படிக்குப் பதிலாக ஓராண்டில் ஒருமாத ஈட்டிய விடுப்பை ஒப்படை செய்ய, மாநில அரசு ஊழியர்களுக்கு அனுமதி வழங்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) இதுகுறித்து தமிழ்நாடு மூன்றாவது ஊதியக்குழு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : (அ) இல்லை.

(ஆ) & (இ) : ஆண்டு ஒன்றுக்கு ஒரு மாத ஈட்டிய விடுப்பை ஒப்பு வித்துத் தொகை பெறும் சலுகையை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையில் ... பரிசீலித்த பின்னர், மூன்றாவது தமிழ்நாடு சம்பளக்குழு ஒப்புறுதியிடுகளுக்கு எதிராகப் பரிவுரை செய்தது;



வகையில் இது பணியாளர்கள் ஈட்டிய விடுப்பை எடுத்துக் கொள்ளும் ஆர்வத்தை கட்டுப்படுத்துவதுடன் தொடர்ந்து பணி செய்வதினாலும் அவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டிய இடைக்கால ஓய்வையும் எடுக்க விடாமல் தடுத்து விடும். ஓய்வில்லாமல் தொடர்ந்து பணி செய்வது பணியாளர் களுடைய உடல் நலத்தைப் பாதித்து நிர்வாகத் திறமையையும் குறைத்து விடும். சம்பளக் குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பொதுவாகவே ஊதியக் குழு அரசு ஊழியர்களுடைய உணர்ச்சிக்கு எதிராகத்தான் பல வகைகளிலே அறிக்கை கொடுக்கிறது. இந்த ஊதியக் குழுவும் அப்படித்தான் செய்திருக்கிறது. அது அப்படியிருந்தாலும் கூட, அதன் பரிந்துரையை ஒதுக்கி வைத்துவிட்டு, அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஆராய்ந்து மறு பரிசீலனை செய்து ஒரு நிலையான ஆணையை வழங்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே ஊழியர்களின் அந்தக் கோரிக்கையை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : 1968 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட சட்டத்திலிருந்தும், 1971 ஆம் ஆண்டு ஆணைப்படியும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அரசுப் பணியாளர்கள் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சென்று, ஆண்டு ஒன்றுக்கு ஈட்டிய விடுப்பை ஒப்புவித்துத் தொகை பெறும் ஒரு வாய்ப்பினை தாராளமாக்கியிருக்கிறது. இதற்கு மேலும் இன்னும் தாராளமாக அறிவிப்புகளை அரசு செய்வதிலே சங்கடங்கள் இல்லை என்றாலும், பெரும்பாலும் எப்போதும் பணம் ஈட்டுகின்ற முயற்சியிலேயே அரசுப் பணியாளர்கள் ஈடுபடுவர். அதன் காரணமாக அவர்களின் உடல் நலம் ஓய்வில்லாததனால் பாதிக்கப்படும். அவர்களுடைய உடல்நலத்திலே அரசு கொண்டுள்ள அக்கறையின் காரணமாக, அரசு இதை வேண்டாம் என்ற அளவில், சம்பளக் குழுவினுடைய பரிந்துரையை அப்படியே ஏற்றுக் கொண்டது.

திரு. செ. முத்துசாமி : உடல் நலம் என்பது பலருக்குக் கெடாமலேயே இருக்கிறார்கள் ... ரிடையர் ஆகியிருக்கிறார்கள். அப்படிப் பல அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். அப்படி இல்லாவிட்டாலும், ஈட்டிய விடுப்பு எடுத்தாக வேண்டும் என்பதிலும் அவர்கள் உடல் நலத்தில் அரசுக்கு அக்கறையும் இருப்பதால், அவர்கள் ஓய்வு பெற ஈட்டிய விடுப்பு எடுத்துச் செல்லும்போது, வெளியிலே செல்லும்போது, அவர் களுக்கு டிராவல் கன்செஷன் என்று கொடுக்கலாம். மற்ற சில ஸ்டேட் களில் அப்படிக் கொடுத்திருக்கிறார்கள். ஓய்வு எடுக்க மற்ற ஸ்டேட்டுகளில் ... போக ஏதாவது டிராவல் இடங்களுக்குப் போகும்போது அவர்கள் அங்கு கன்செஷன் என்று ஒன்றைத் தர அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** இது குறித்து தனிக் கேள்வி போட்டால், அரசின் பாலிசி அரசு என்ன கருதுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும் என்று நம்புகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஈட்டிய விடுப்பு என்ற சொற்றொடரே தெளிவான பொருளைத் தருகிறது. ஈட்டிய விடுப்பைப் பயன்படுத்திக் கொள்கின்ற உரிமை எந்த நாளுக்கும் உண்டு. ஆதலால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள்பால் அனுதாபத்துடன் கூறிய கருத்தை நாங்கள் வரவேற்றாலும்கூட, ஈட்டிய விடுப்பை 'சரண்டர்' செய்து அரசு அலுவல்களை ஊழியர்கள் தொடர்ந்து செய்வதன் மூலமாக அரசுக்கு நன்மைதான் ஏற்படுகிறது. அந்தக் கண்ணோட்டத்திலாவது அரசு அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி ஊழியர்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைத்து தொகை பெறும் கோரிக்கையை அரசு மறு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** அரசின் கொள்கை ஈட்டிய விடுப்பை ஒப்படைத்து தொகை பெறும் கோரிக்கை பற்றித் தெளிவாக இருக்கிறது. ஈட்டிய எதையும் வீணாக்கக்கூடாது என்பதுதான் அரசினுடைய கருத்து. விடுப்பைப் பணமாக்காமல், ஓய்வு நேரங்களை ஊழியர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் அரசின் கொள்கை. அதுதான் அரசுக்கும் நல்லது, அரசு ஊழியர்களுக்கும் நல்லது என்று அரசு கருதுகிறது.

*Execution of Work through offers.*

* 102 *Q.*—THIRU A. NALLASIVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the Maramath Works of Public Works Department in Paramakkudi Division are carried out through offers, instead of calling for tenders ; and

(*b*) the benefits accrued to the Government by this method ?

விருப்பறிவிப்பு முறை மூலம் வேலைகள் செய்தல்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகள் ஒப்பந்தப்புள்ளி மூலம் விடப்படாமல் விருப்பறிவிப்பு (offer) முறையில் செய்யப்படுகின்றன என்பது உண்மையா ?

(இ) இதன்மூலம் அரசுக்கு ஏற்படும் நன்மைகள் யாவை ?



**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது** (மாண்புமிகு நிதி அமைச்சர் சார்பில்) : (அ) பரமக்குடி கோட்டத்தில் பொதுப்பணித்துறை மராமத்து வேலைகளான செப்பனிடுதல் காலமுறை பராமரிப்பு, புதிய கட்டுமானப் பணிகள் முதலியன யாவும் ஒப்பந்தப்புள்ளி முறையிலேயே நிறைவேற்றப் படுகின்றன. ஆயினும் நெருக்கடி காலப்பணிகள்—அதாவது புயல், வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப்பணிகள்—அரசு அளித்துள்ள சில விசேட அதிகாரங்களின் அடிப்படையில் "நியமனமுறை" மூலம் நிறைவேற்றப்படு கின்றன. இம்முறை வழக்கமான முறையாக எல்லா நேரங்களிலும் செயல் படுத்தப்படுவதில்லை.

(இ) விருப்பறிவிப்பு முறையில் நெருக்கடி காலங்களில் மராமத்து வேலைகளைத் துரிதமாக செயல்படுத்த அரசால் முடிகிறது. இதனால் உயிர், பொருள் மற்றும் பயிர் சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. மேலும் வறட்சி யினால் பாதிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களுக்கும் கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பும், நல்ல ஊதியமும் பெற வகை செய்யப்படுகிறது.

*Fisheries Development.*

* 103 *Q.*—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the names of the dams and reservoirs in Tamil Nadu where fisheries development and fishing are undertaken ; and

(*b*) the revenue accrued to Government every year by fishing in each of them ?

மீன் வளர்ச்சி.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள அணைக்கட்டுகள் மற்றும், நீர்த் தேக்கங்கள் ஆகியவற்றில், மீன்வளர்ச்சி மற்றும் மீன்பிடிப்பு ஆகியவை எங்கெங்கு நடை பெறுகின்றன?

(இ) இவை ஒவ்வொன்றிலும், மீன்பிடிப்பு மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. உ.சொ. எட்மண்ட் :** (அ) & (இ) அவையில் ஓர் விவர அறிக்கை (@) வைக்கப்படுகின்றது.

@ 400-402 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 8

(பிற்பகல் 4-10)

திரு. க. இராமமூர்த்தி: சென்ற ஆண்டு, அல்லது அதற்கு முந்தின ஆண்டு மேட்டூர் அணையில் தண்ணீர் அளவிற்கு அதிகமாகக் குறைந்து விட்டதன் காரணமாக, மீன்கள் பிடிக்கப்படுவதற்கு முன்பே செத்துவிட்டன என்பது உண்மையா? அது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த அணையிலே இயற்கை நிலையே தண்ணீர் குறைவதன்மூலம் மீன்கள் இறந்து போவதைத் தடுக்க முடியாது.

திரு. க. இராமமூர்த்தி: மீன்களை வளர்க்கின்ற இடங்களிலே, மீன்கள் உயிரோடு இருப்பதற்குத் தேவையான தண்ணீரின் அளவு இயற்கையாகக் குறைவது என்பது வேறு. சில நேரங்களில் அதிகமாகத் தண்ணீரை அந்த இடங்களிலிருந்து எடுத்து விடுவதாலும், மீன்கள் இறந்து போகின்றன. அதை அரசு தவிர்க்குமா? மேலும் மேட்டூர் அணை போன்ற இடங்களில் நேரடியாக மீன்களைப் பிடித்து, விற்பனை செய்வதற்கான அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறதா? எந்தெந்தப் பகுதிகளில் அந்த அமைப்பு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: எந்தெந்த இடங்களில் மீன்களை [illegible] உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது அல்லது ஏலத்தில் அந்த உரிமம் [illegible] என்பது பற்றிய குறிப்புகள் விவர அறிக்கையிலே இருக்கின்றன.

டாக்டர் இரா. சனார்த்தனம்: கட்லா, ரோப், நீர்க்கால் போன்ற மீன் களில் எது அதிகமாகக் கிடைக்கிறது? எந்த மீன் சுவையானது? எங்கே ஏற்றுமதி செய்கிறார்கள்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சாத்தனூர், பவானிசாகர் போன்ற அணைகளில் மூன்று தரமுள்ள, ருசியுள்ள மீன்களும் கிடைக் கின்றன. [illegible] அதிக அளவிலே மேற்கு வங்கத்தின் தலைநகரான [illegible] அனுப்பப்பட்டு, மீனளத் துறைக்கு அதிக வருவாயைத் தருகின்றன.

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சரவர்களுடைய அறிக்கையின்படி பூண்டி, [illegible] போன்ற இடங்களிலேதான் உரிமம் வழங்கி மீன் விற்பனை நடைபெறுகிறதென்று நினைக்கிறேன். இந்த மூன்றும் மிகப்



1979 நவம்பர் 8]

பெரிய ஏரிகள், நீர்த் தேக்கங்களாகும். எனவே அரசே ஓர் அமைப்பை ஏற்படுத்தி, மீன்களைப் பிடித்து, வியாபாரம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அரசே நேரடியாக மீன்களைப் பிடிக்கின்ற நோக்கில், மீனவர்களிடமிருந்து எதிர்ப்பு வருகிறது. அந்தப் பகுதியில் மீன் பிடிக்கும் மீனவர்களுடைய தொழில் பாதிக்கக் கூடாது என்பதால், சில இடங்களில் இப்படிப்பட்ட முறைகள் கையாளப்படுகின்றன. சில இடங்களில் மீன் ஆராய்ச்சிக்காக, அப்படிப்பட்ட இடங்களை அரசே தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

திரு. ம. சங்கரலிங்கம்: மீன் பிடிக்கிற உரிமத்தை ஏலத்தில் விடுவதன் மூலமாக, மீன் பிடிக்கும் காலமாகிய கோடையில் கொஞ்சம் எஞ்சியிருக்கும் தண்ணீரும் இல்லாமல் போகிறது. மீன் பிடிப்பவர்கள் தண்ணீரை வற்ற வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதால், விவசாயத்திற்குக் கொஞ்சம் கூட தண்ணீர் வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதால், விவசாயத்திற்குக் கொஞ்சம் கூட தண்ணீர் இல்லாமல் போகிறது. இது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டதா? ஏலம் விடுவது, உரிமம் விடுவது என்பதைவிட, அரசுத் துறையில் மீன் பிடிப்பதை வைத்துக் கொண்டால், லாப நோக்காக இல்லாமல் இருப்ப தால் தண்ணீரையும் வீணாக்காமல் இருக்கலாம். மீன்களையும் பிடிக்க வாய்ப்பாக இருக்கும். இது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அப்படி ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் குத்தகை அடிப்படையில் விட வேண்டுமென்று மீனவர் சங்கம் வலியுறுத்தி வருகிறது. இதிலே ஒரு திருத்தம் தேவை என்பதை உணர்ந்து, அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### *Janatha Meals.*

* 104. *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the rules regarding the compulsory serving of Janatha Meals at controlled prices in Restaurants have been relaxed;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reasons therefor?

## ஜனதா சாப்பாடு

**திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு விடுதிகளில் கட்டுப்பாட்டு விலையில், கட்டாய ஜனதா சாப்பாடு வழங்குதல் தொடர்பான விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன என்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** (அ), (ஆ) & (இ) உணவு விடுதிகளில் ஜனதா சாப்பாடு கட்டுப்பாடான விலைகளில் வழங்குவது குறித்து அரசு எந்த விதிகளையும் தளர்த்தி ஆணைகள் பிறப்பிக்கவில்லை. 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அவசரகால நிலை [illegible] செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளில் இந்திய [illegible] விதிகள் செல்லாததாகப் போனதின் விளைவாக தமிழ்நாடு உணவு விடுதிகள் (விலை நிர்ணயம், உணவுப் பண்டங்களின் விலைப்பட்டியல் அறிவிப்பு) ஆணை 1976 காலாவதி ஆகிவிட்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** உணவு விடுதிகளில் தயாரிக்கப்படும் பண்டங்களுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் மார்க்கெட்டில் தாராளமாக, உரிய விலையில் கிடைத்தாலும், மாநிலம் முழுவதிலுமுள்ள உணவு விடுதிகளில் மட்டும் அநியாய விலைக்கு விற்கும் நிலைமை இருக்கிறது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் வெளிச் சந்தையில் தாராளமாக, நியாயமான விலையில் கிடைக்கின்றன என்ற நல்ல கருத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதற்காக, அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், உணவு விடுதிகளிலே இன்றையதினம் விலையேற்றம் இருக்கிறது. அரசு அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று எண்ணி, நிர்ணயித்துக் குறைத்தாலும், அது அரசுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதையும் அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மேலும் உணவுப் பண்டங்களுக்கான விலையைக் கட்டுப்படுத்தினால், அவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்லலாமென்ற ஐயப்பாடும் இருக்கிறது. மேலும் அதன் காரணமாக, உணவின் தரத்தைக் குறைத்துவிடலாமென்ற ஐயப்பாடும் இருக்கிறது. எனவே உணவு விடுதி



களைத் தரம் பிரித்து, ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு விலையைக் குறிப்பிடலா மென்ற ஆலோசனை இன்றையதினம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன்:** நியாய விலைக் கடைகள் என்று வைப்பதைப் போல, நியாய விலை உணவு விடுதிகளையும் நடத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** எல்லாவற்றையும் அரசே நடத்த வேண்டுமா என்கின்ற ஒரு குறைபாடு இன்றையதினம் பல்வேறு அரசியல் கட்சிகள் மத்தியில் இருக்கும்போது, உணவு விடுதிகளை அரசே நடத்தலா மென்று புதிய குரல் எழுப்பியது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அது அரசுக்கு முடியாத காரியம். அதற்கு மிகுந்த கண்காணிப்பு தேவை என்பது உறுப்பினரவர்களுக்குத் தெரியும்.

திரு. ப. சங்காரலிங்கம்: உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக விருக்கிறதென்பதை அரசு உணர்கிறது. உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யத் தேவையான பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்பதையும் அரசு உணர்கிறது. எனவே இன்றியமையாத உணவுப் பண்டங்கள், சாப்பாடு, இட்டிலி போன்றவற்றின் விலையைக் கட்டுப்பாடு செய்து, தொகுக உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால், ஏற்படும் நஷ்டத்தை விற்பனையாளர்கள் ஒருமாதிரியாகச் சமாளித்துக்கொள்வார்கள். அதையும் பரிசீலித்து, ஏழைகள் உண்ணும் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப் படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன நல்ல யோசனையை நான் ஏற்கெனவே அரசின் சார்பில் ஓட்டல் உரிமையாளர்களிடம் சொல்லியிருக்கிறேன். [illegible] அதாவது அசாதாரணமான உணவிற்கு அதிக விலை வைத்தாலும், சாதாரண மக்கள் சாப்பிடும் இட்டிலி, தோசை, காப்பி, பகல் உணவு ஆகியவற்றின் விலையைக் குறைக்க வேண்டுமென்று ஓட்டல் உரிமையாளர்களிடம் கேட்டிருக் கிறோம். அதை, அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர்கள், ஓட்டல் உரிமையாளர்களைக் கேட்க வேண்டுமா என்று கேட்கலாம். அவசர காலத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதே என்றால், அதை எதிர்த்து எந்த உணவு விடுதி உரிமையாளரும் நீதி மன்றத் திற்குப் போக முடியாத நிலை இருந்தது. அவசர காலத்தில் [illegible] தரம் குறைந்திருந்தால், காரணம் இல்லாமல் அடித்து சிறையிலே போடும் சாத்தியக்கூறு இருந்தது. இன்றைக்கு உணவின் தரத்தை எப்படி நிர்ணயிப்பது என்பதைத்தான் அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

[1979 நவம்பர் 8

**ஜனதா சாப்பாடு.**

**திரு. பா. ரா. தாமஸ் (திரு. க. சந்தோஷம் சார்பில்):** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு விடுதிகளில் கட்டுப்பாட்டு விலையில், கட்டாய ஜனதா சாப்பாடு வழங்குதல் தொடர்பான விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ), (இ) & (உ) உணவு விடுதிகளில் ஜனதா சாப்பாடு கட்டுப்பாடான விலைகளில் வழங்கப்படுவது குறித்த அரசு விதிகளையும் தளர்த்தி ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை. 197[illegible] ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் அவசரகால நிலை நீக்கப்பட்டதுடன் செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளில் இந்திய உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்ட விதிகள் செல்லாமல் போனதின் விளைவாக தமிழ்நாடு அரசு உணவு விடுதிகள் (விலை நிர்ணயம், உணவுப் பண்டங்களின் விலைப்பட்டியல் அறிவிப்பு) ஆணை 1976 காலாவதி ஆகிவிட்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** உணவு விடுதிகளில் தயாரிக்கப்பட வேண்டிய பண்டங்களுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் மார்க்கெட்டில் தாராளமாக, உரிய விலையில் கிடைத்தாலும், மாநிலம் முழுவதிலுமுள்ள உணவு விடுதிகளில் அநியாய விலைக்கு விற்கும் நிலைமை இருக்கிறது. இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** அத்தியாவசிய உணவுப் பண்டங்கள் வெளிச் சந்தையில் தாராளமாக, நியாயமான விலையில் கிடைக்கின்றன என்ற நல்ல கருத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதற்காக, அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும், உணவு விடுதிகளிலே இன்றையதினம் விலையேற்றம் இருக்கிறது. அரசு அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று எண்ணி, ஓரளவிற்குக் குறைத்தாலும், அது அரசுக்குத் திருப்திகரமாக இல்லை என்பதையும் அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. மேலும் உணவுப் பண்டங்களுக்கான விலையைக் கட்டுப்படுத்தினால், அவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்லலாமென்ற ஐயப்பாடும் இருக்கிறது. மேலும் அதன் காரணமாக, உணவின் தரத்தைக் குறைத்துவிடலாமென்ற ஐயப்பாடும் இருக்கிறது. எனவே உணவு விடுதி



1979 நவம்பர் 8]

களைத் தரம் பிரித்து, ஒவ்வொரு தரத்திற்கும் ஒரு விலையைக் குறிப்பிடலாமென்ற ஆலோசனை இன்றையதினம் அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

**புலவர் புலமைப்பித்தன்:** நியாய விலைக் கடைகள் என்று வைப்பதைப் போல, நியாய விலை உணவு விடுதிகளையும் நடத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** எல்லாவற்றையும் அரசே நடத்த வேண்டுமா என்கின்ற ஒரு குறைபாடு இன்றையதினம் பல்வேறு அரசியல் கட்சிகள் மத்தியில் இருக்கும்போது, உணவு விடுதிகளை அரசே நடத்தலாமென்று புதிய குரல் எழுப்பியது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அது அரசுக்கு முடியாத காரியம். அதற்கு மிகுந்த கண்காணிப்பு தேவை என்பது உறுப்பினரவர்களுக்குத் தெரியும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** உணவுப் பண்டங்களின் விலை அதிகமாக ஏறியிருக்கிறதென்பதை அரசு உணர்கிறது. உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யத் தேவையான பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்பதையும் அரசு உணர்கிறது. எனவே இன்றியமையாத உணவுப் பண்டங்கள், சாப்பாடு, இட்டிலி போன்றவற்றின் விலையைக் கட்டுப்பாடு செய்து, சொகுசு உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தாமல் இருந்தால், ஏற்படும் நஷ்டத்தை விற்பனையாளர்கள் ஒருமாதிரியாகச் சமாளித்துக்கொள்வார்கள். அதையும் பரிசீலித்து, ஏழைகள் உண்ணும் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன நல்ல யோசனையை நான் ஏற்கெனவே அரசின் சார்பில் ஓட்டல் உரிமையாளர்களிடம் சொல்லியிருக்கிறேன். [illegible]— அதாவது அசாதாரணமான உணவிற்கு அதிக விலை வைத்தாலும், சாதாரண மக்கள் சாப்பிடும் இட்டிலி, தோசை, காப்பி, பகல் உணவு ஆகியவற்றின் விலையைக் குறைக்க வேண்டுமென்று ஓட்டல் உரிமையாளர்களிடம் கேட்டிருக்கிறோம். அதை, அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள், ஓட்டல் உரிமையாளர்களைக் கெஞ்ச வேண்டுமா என்று கேட்கலாம். அவசர காலத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதே என்றால், அதை எதிர்த்து எந்த உணவு விடுதி உரிமையாளரும் நீதி மன்றத்திற்குப் போக முடியாத நிலை இருந்தது. அவசர காலத்தில் ஏதாவது தரம் குறைந்திருந்தால், காரணம் இல்லாமல் பிடித்து சிறையிலே போடும் சாத்தியக்கூறு இருந்தது. இன்றைக்கு உணவின் தரத்தை எப்படி நிர்ணயிப்பது என்பதைத்தான் அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 4.20)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இன்றையதினம் தமிழ்நாட்டில் பெரும்பாலான உணவு விடுதிகளில் ஜனதா சாப்பாடு போடப்படுவதில்லை. இனி மேலாவது எல்லா உணவு விடுதிகளிலும் ஜனதா சாப்பாடு கட்டாயம் போடப்பட வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? மேலும் விடுதிகளில் போடப்படுகின்ற ஜனதா சாப்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ருசி பார்த்திருக்கிறாரா? (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** ஜனதா சாப்பாட்டை ஒருசில சந்தர்ப்பங்களில் நான் சுவைத்துச் சாப்பிட்டிருக்கிறேன். கோவை பெருந்து நிலையத்தில் கோவையிலுள்ள மகளிர் கல்லூரியினர் ஜனதா சாப்பாடு விடுதியை வெற்றிகரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இது மாண்புமிகு உறுப்பினருக்கே கூட தெரியும். பெரும்பாலான உணவு விடுதிகளில் ஜனதா சாப்பாடு போடப்படுவதில்லை என்று உறுப்பினர் சொல்லியதிலிருந்து ஒருசில ஓட்டல்களிலாவது ஜனதா சாப்பாடு போடுகிறார்கள் என்பதை உறுப்பினரே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜனதா சாப்பாடு போடும்படி ஓட்டல்காரர்களை எப்படிக் கட்டாயப்படுத்துவது? அதற்கு ஏதாவது சட்டம் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகக் கூடும். நாம் உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயித்து உத்தரவு போட்டால், அவர்கள் தரத்தைக் குறைத்து விடுவார்கள். அப்போது மக்கள் அரசாங்கத்திடம் குறை கூறுவார்கள். உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்கவும், தரம் குறையாமல் இருக்கவும், பொது மக்களிடமிருந்து புகார்கள் வராமல் இருக்கவுமான நடவடிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அதை எப்படி வெற்றிகரமாகச் செய்வது என்பது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN : May I know from the Hon. Minister, instead of trying to attack the problem from the end of price controls and catching hotel-owners under Emergency regulations, why the Government will not take interest in liberalising licensing provisions for small hotels so that competition would serve to reduce the price of meals in hotels? Instead of asking customers to weigh 'Iddli' and to taste the 'Sambaar', and then file a report with the Hon. the Minister for Civil Supplies, this, in my opinion, would be a better method of controlling prices.



**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** உணவு விடுதிகளை ஆரம்பிக்க யாருக்கும் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை. யார் ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத்தாலும், உடனேயே ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் இப்பொழுது இருக்கின்றன.

**திரு. செ. முத்துசாமி :** உணவு விடுதியை எங்கே ஆரம்பிக்காவிட்டாலும், சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியிலே ஆரம்பித்தால், சட்டமன்ற உறுப்பினர்களின் வயிற்றைக் கெடுத்துக்கொள்வதிலிருந்து அவர்களைக் காப்பாற்றலாம். டில்லியிலிருக்கிற தமிழ் நாடு உணவு விடுதியில் ஏற்பாடு செய்திருப்பது போல், இங்கேயும் ஒரு உணவு விடுதியை ஆரம்பித்து, அது நல்ல முறையில் நடைபெற அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்கின்ற விருப்பத்தினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை அரசு விரைவிலே செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** டில்லியிலிருக்கிற தமிழ் நாடு உணவு விடுதியில் உணவை நல்ல முறையில் பரிமாறுகிறார்கள் என்கிற விஷயம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருப்பதுபோல் எனக்கும் தெரியும். டில்லியில் தமிழ் நாடு உணவு விடுதியில் அழகான முறையில் உணவைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள். அரசுக்கு அதனால் எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்பதையும் உறுப்பினர் உணர வேண்டும். அங்கே கொடுக்கப்படுகின்ற உணவுக்கு மானியமாக தொகை கொடுக்கப்படுகிறது. சென்னையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் அதுபோல் உணவு விடுதி நடத்துவது என்பது அரசு எவ்வளவு மானியத் தொகை கொடுக்க இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. உறுப்பினர் சொன்ன யோசனையைக் கருத்தில் கொண்டு, இந்தத் துறை அதுமாதிரி உணவு விடுதி ஒன்றை ஆரம்பிக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் :** உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்கவும், உணவுப் பண்டங்களின் தரம் குறையாமல் இருக்கவும், பொது மக்களிடமிருந்து புகார்கள் வராமல் இருக்கவுமான காரியங்களைக் குறித்து முயற்சி செய்து அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது "மயிலே மயிலே இறகைப் போடு" என்பது போல் இருக்கிறது. நிச்சயமாக மயில் தானாக இறகைப் போடாது. ஏழை யெளிய பாமர மக்கள் அவதிப்படுகின்ற அளவுக்கு இன்றையதினம் மிக அதிக விலைக்கு உணவுப் பொருள்கள் உணவு விடுதிகளில் விற்கப்படுகின்றன. அதை அடக்குகின்ற சட்ட நுணுக்கங்கள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. முடியாதது என்பதும் அல்ல. அப்படியிருக்க ஏன் இந்தக் காரியம் தாமதப் படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சிக்கலான கேள்வியை உறுப்பினர் கேட்டிருக்கிறார். இதற்குப் பதில் சொல்ல கொஞ்சம் நேரம் அதிகமாகும். அரசாங்கத்திற்கு சட்டம் போடுவது என்பது முடியாத காரியம் அல்ல. இன்றைக்குச் சட்டம் கொண்டு வந்து விடலாம். தொடரிலேயே கூட சட்டம் கொண்டு வந்து விடலாம். அந்த சட்டம் [illegible] இருக்க வேண்டும், இவ்வளவு விலை இருக்க வேண்டும். இட்டிலி இன்ன எடை வரலாம். ஆனால் இட்டிலி இன்ன ரூபி இருக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு இருக்க வேண்டும் என்கின்ற அளவுகோலை [illegible] இன்ன தரத்தில் அதை நாம் வலியுறுத்திக் கூற முடியாது. அப்படியே உணவுப் பண்டங்களின் எடையையும், விலையையும் சட்டத்தின் மூலம் அரசாங்கம் நிர்ணயித்தால், விடுதிக்காரர்கள் உணவுப் பொருள்களின் தரத்தைக் குறைத்து விடுவார்கள். அப்போது உணவைச் சாப்பிடுகின்ற பொதுமக்களிடமிருந்து அரசாங்கத்திற்குப் புகார் வர வாய்ப்பிருக்கிறது. "மயிலே மயிலே இறகைப் போடு" என்கின்ற முறையில் நெருக்குதல் கொடுத்து இந்த ஓட்டல் உரிமையாளர்களிடமிருந்து அரசு தயாராக இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலை அதிகம் [illegible] மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலில் குறிப்பிட்டு கொண்டு அதை இங்கே தெரிவித்திருக்கின்ற நிலையில் அரசுக்கு உணவு விடுதிகளின் சொந்தக்காரர்களோடு இருக்கின்ற சுமுகமான உறவின் அடிப்படையில், உணவுப் பொருள்களுக்கு எந்த விலை வைத்தாலும், ஒவ்வொரு உணவு விடுதியிலும் கட்டாயம் ஜனதா உணவுப் பண்டங்கள் குறைந்த விலையில் ஏழை எளிய மக்களுக்கு விற்கின்ற வகையிலே, வைத்திருக்கின்ற வகையிலே முடிந்தால் சட்டத்தின் துணை கொண்டோ அல்லது வேண்டு கோளின் மூலமாகவோ ஒரு நிலையை உருவாக்க அரசு முன்வருமா? ஏழை எளிய மக்களுக்கு இன்றையதினம் இருக்கின்ற இந்தச் சங்கடத்தை அரசு விரைவிலே போக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அரசுக்கு உணவு விடுதிகளின் சொந்தக்காரர்களோடு [illegible] எந்தவிதமான உறவும் இல்லை என்பதை நான் முதலிலே மாண்புமிகு உறுப்பினர் [illegible] நடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். [illegible] அந்த [illegible] ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க, நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். பல்வேறு சந்தர்ப்பங்களில் உணவு விடுதி [illegible] அவர்கள் வைத்துக்கொண்டிருக் [illegible] அழைத்தும் பேசியிருக்கிறோம். அவர்[illegible] அது



பற்றி ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாமும் அவர்களுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுப்பதால் ஒன்றும் கெட்டுவிடாது என்பதால் கொஞ்சம் கால அவகாசம் கொடுத்திருக்கிறோம்.

## *Export of Rice.*

* 105 *Q*.—THIRU C. R. LAKSHMIKANDHAN : DR. T. R. JANARTHANAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have granted permission to the Government of Tamil Nadu in 1979 to export rice directly from its stock ;

(*b*) if so, the names of the countries to which rice is proposed to be exported ; to be exported and the quantity of rice in tonnes to be exported ; and

(c) the price at which a tonne of rice will be exported ?

## அரிசி ஏற்றுமதி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : டாக்டர் இரா. ஜனார்த்தனம் : } மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ் நாடு அரசு தன்னுடைய கையிருப்பிலிருந்து அரிசியை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு 1979-ல் அனுமதி அளித்திருக்கிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு டன் அரிசி ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது ?

(உ) ஒரு டன் அரிசி என்ன விலைக்கு ஏற்றுமதி செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(இ) & (உ) இந்த போங்கள் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்:** அரிசியை தமிழ் நாட்டிலிருந்து, தன்னுடைய கையிருப்பிலிருந்து வெளிநாட்டுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்வதற்குரிய பேரங்கள் நடந்து வருவதாகவும் இன்னும் அது குறித்த முடிவு செய்யப்படவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இந்த அரிசியை நாம் வெளிநாடு களுக்கு அனுப்பினால், தமிழ் நாட்டிலே நமக்கு அரிசித் தட்டுப்பாடு வரும் போது, அரசு அதை எப்படி சமாளிக்கப் போகிறது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** நமக்கு அரிசித் தட்டுப்பாடு வரும்போது, அரசு என்ன செய்யப் போகிறது என்று உறுப்பினர் கேட்டார். ஒரு இலட்சம் டன் வரை நாங்கள் அரிசி ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, மத்திய அரசின் அனுமதியைக் கோரினோம். அவர்கள் 80 ஆயிரம் டன் அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தாராளமாக இருக்கின்றபோது, ஏற்றுமதி செய்து விட்டால், தட்டுப்பாடு ஏற்படுகின்றபோது,' என்ன செய்வது என்று உறுப்பினர் கேட்டார். தாராளமாக உற்பத்தி ஆகின்ற நேரத்தில் ஏற்றுமதி செய்வதும், தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதும், தட்டுப்பாடு ஏற்படு மென்று தெரிந்தவுடன் ஏற்றுமதி செய்யாமல் நிறுத்திக்கொள்வதுமான ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரம் அரசுக்கு எப்போதும் இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது அரிசி தாராளமாக உற்பத்தி ஆகின்ற நேரத்தில் ஏற்றுமதி செய்வதும், தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதும், தட்டுப்பாடு ஏற்படுமென்று தெரிந்தவுடன் ஏற்றுமதி செய்யாமல் நிறுத்திக்கொள்வதுமான ஏற்பாட்டினை அரசு செய்யும் என்று குறிப்பிட்டார். நாம் விரும்பும்போது ஏற்றுமதி செய்யலாம், விரும்பாதபோது வெளிநாடுகளுக்கு அரிசியை நிறுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார். இப்போது நமக்கு தேவைக்கு அதிகமாகச் சேமித்து இருப்பிலே வைக்கப்பட்டிருக்கின்ற, மீதியிருக்கின்ற அரிசியை அனுப்ப அரசு முயற்சி செய்கிறதா இல்லை நம்முடைய தேவைக்கு இருப்பிலே இருக்கின்ற அரிசியை அனுப்பிவிட்டு, தட்டுப்பாடு வரும்போது நிறுத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் இப்படிப்பட்ட ஏற்பாட்டினை அரசு செய்கிறதா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** இப்போது நம்முடைய தேவைக்கு அதிகமாக மீதியாக எவ்வளவு அரிசி இருக்கிறதோ அதைத்தான் **ஏற்றுமதி செய்கிறோம்.**



**டாக்டர் இரா. சனார்த்தனம்:** விவசாயிகளுக்கு நெல்லின் விலை கட்டுப் படியாகவில்லையென்று கூக்குரலிடுகிறார்கள். இந்த நிலையில் விவசாயிகள் நன்மையைக் கருதி இன்னும் கூடுதலாக, உபரியாக இருக்கும் அரிசியை வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? அரிசியை எந்தெந்த வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** எந்தெந்த நாடுகளுக்கு அனுப்புகிறோம் என்கிற விபரம் என்னிடத்தில் இல்லை. அதிகமாக உபரி விளைச்சல் நாட்டிலே ஏற்படுகின்ற நேரத்தில், விவசாயிகளுக்கு தாராளமாகக் கூடுதல் விலை கிடைக்க இதன் மூலமாகத்து நன்மை செய்யலாமே என்கிற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான், இப்படிப்பட்ட உபரி அரிசியை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 80 ஆயிரம் டன் அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதி பெற்றிருப்பதாக அமைச்சர் சொன்னார். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றபோது, ஒரு டன் அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** ஐ. ஆர். 10 பச்சை அரிசி 2 ஆயிரம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதனுடைய விலை 265 டாலர். அதுபோல் ஏ.டி.டி. 31 (ADT 31) ரக பச்சரிசி 17 ஆயிரம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதனுடைய விலை 255 டாலர். மேற்கண்ட விலைக்கு விற்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற அரிசிக்கு டாலர் மெட்ரிக் டன்னுக்கு இன்ன இன்ன விலை என்கிற விபரத்தை உள்நாட்டு கணக்கில் அமைச்சர் சொன்னார். அவர் கூறியதிலிருந்து உள்நாட்டு விலைக்கும் வெளிநாட்டு விலைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுபற்றி விளக்கமாக அமைச்சர் பதில் கூறுவாரா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** டாலரின் மதிப்பு சில நேரங்களில் குறைவதும் உண்டு, சில நேரங்களில் கூடுவதும் உண்டு. ஒரு டாலருக்கு இப்போதுள்ள விலை 8 ரூபாய். அந்த முறையில் கணக்கிட்டுப் பார்த்தால், உறுப்பினருக்கு அதன் கணக்குத் தெரியும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இப்பொழுது இயற்கை நமக்குச் சாதக மாக இருப்பதால், விளைச்சல் அதிகமாகி ஏற்றுமதி செய்யக் கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதே இயற்கைக்கு சிற்றம் ஏற்பட்டு தொடர்ந்து ஒன்றிரண்டு ஆண்டுகள் பொய்த்துப் போய்விட்டால், மறுபடியும் நமக்கு

[1979 நவம்பர் 8

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அரிசியை தமிழ் நாட்டிலிருந் தன்னுடைய கையிருப்பிலிருந்து வெளிநாட்டுக்கு நேரடியாக ஏற்றும செய்வதற்குரிய பேரங்கள் நடந்து வருவதாகவும் இன்னும் அது குறித் முடிவு செய்யப்படவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்பு கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இந்த அரிசியை நாம் வெளிநா களுக்கு அனுப்பினால், தமிழ் நாட்டிலே நமக்கு அரிசித் தட்டுப்பாடு வரும் போது, அரசு அதை எப்படி சமாளிக்கப் போகிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நமக்கு அரிசித் தட்டுப்பா வரும்போது, அரசு என்ன செய்யப் போகிறது என்று உறுப்பினர் கேட்டார் ஒரு இலட்சம் டன் வரை நாங்கள் அரிசி ஏற்றுமதி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, மத்திய அரசின் அனுமதியைக் கோரினோம். அவர்கள் 80 ஆயிரம் டன் அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தாராளமாக இருக்கின்றபோது, ஏற்றுமதி செய்து விட்டால், தட்டுப்பாடு ஏற்படுகின்றபோது, என்ன செய்வது என் உறுப்பினர் கேட்டார். தாராளமாக உற்பத்தி ஆகின்ற நேரத்தில் ஏற்றுமதி செய்வதும், தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதும், தட்டுப்பாடு ஏற்ப மென்று தெரிந்தவுடன் ஏற்றுமதி செய்யாமல் நிறுத்திக்கொள்வதுமான ஏற்பாடுகளைச் செய்யும் அதிகாரம் அரசுக்கு எப்போதும் இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது அரிசி தாராளமாக உற்பத்தி ஆகின்ற நேரத்தில் ஏற்றுமதி செய்வதும், தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக்கொள்வதும், தட்டுப்பாடு ஏற்படுமென்று தெரிந்தவுடன் ஏற்றுமதி செய்யாமல் நிறுத்திக்கொள்வதுமான ஏற்பாட்டினை அரசு செய்யும் என்று குறிப்பிட்டார். நாம் விரும்பும்போது வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யலாம், விரும்பாதபோது நிறுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார். இப்போது நமக்கு தேவைக்கு அதிகமாகச் சேமித்து இருப்பிலே வைக்கப்பட்டிருக்கின்ற, மீதியிருக்கின்ற அரிசியை அனுப்ப அரசு முயற்சி செய்கிறதா இல்லை நம்முடைய தேவைக்கு இருப்பிலே இருக்கின்ற அரிசியை அனுப்பிவிட்டு, தட்டுப்பாடு வரும்போது நிறுத்திக்கொள்ளலாம் என் எண்ணத்தில் இப்படிப்பட்ட ஏற்பாட்டினை அரசு செய்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இப்போது நம்முடை தேவைக்கு அதிகமாக மீதியாக எவ்வளவு அரிசி இருக்கிறதோ அதைத்தா ஏற்றுமதி செய்கிறோம்.



1979 நவம்பர் 8]

டாக்டர் இரா. சனார்த்தனம்: விவசாயிகளுக்கு நெல்லின் விலை கட்டுப் டியாகவில்லையென்று கூக்குரலிடுகிறார்கள். இந்த நிலையில் விவசாயிகள் ன்மையைக் கருதி இன்னும் கூடுதலாக, உபரியாக இருக்கும் அரிசியை வெளி டுகளுக்கு அனுப்புவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா? அரிசியை ந்தெந்த வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: எந்தெந்த நாடுகளுக்கு னுப்புகிறோம் என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. அதிகமாக உபரி விளைச்சல் நாட்டிலே ஏற்படுகின்ற நேரத்தில், விவசாயிகளுக்கு நாலைந்துக் டுதல் விலை கிடைக்க இதன் மூலமாகத் நன்மை செய்யலாமே என்கிற ல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான், இப்படிப்பட்ட உபரி அரிசியை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 80 ஆயிரம் டன் அரிசியை வெளிநாட்டுக்கு ற்றுமதி செய்ய மத்திய அரசின் அனுமதி பெற்றிருப்பதாக அமைச்சர் சொன்னார். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றபோது, ஒரு டன் அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஐ. ஆர். 10 பச்சை அரிசி 2 ஆயிரம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதனுடைய விலை 265 டாலர். அதுபோல் எ.டி.டி. 31 (ADT 31) ரக பச்சரிசி 17 ஆயிரம் மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. ஒரு மெட்ரிக் டன்னுக்கு அதனுடைய விலை 255 டாலர். மேற்கண்ட விலைக்கு விற்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பா. ரா. தாமல்: வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்ற அரிசிக்கு டாலர் மெட்ரிக் டன்னுக்கு இன்ன இன்ன விலை என்கிற விகிதத்தை உள்நாட்டு கணக்கில் அமைச்சர் சொன்னார். அவர் கூறியதிலிருந்து உள்நாட்டு விலைக்கும் வெளிநாட்டு விலைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுபற்றி விளக்கமாக அமைச்சர் பதில் கூறுவாரா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: டாலரின் மதிப்பு சில நேரங்களில் குறைவதும் உண்டு, சில நேரங்களில் கூடுவதும் உண்டு. ஒரு டாலருக்கு இப்போதுள்ள விலை 8 ரூபாய். அந்த முறையில் கணக்கிட்டுப் பார்த்தால், உறுப்பினருக்கு அதன் கணக்குத் தெரியும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இப்பொழுது இயற்கை நமக்குச் சாதகமாக இருப்பதால், விளைச்சல் அதிகமாகி ஏற்றுமதி செய்யக் கூடிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதே இயற்கைக்கு சீற்றம் ஏற்பட்டு தொடர்ந்து ஒன்றிரண்டு ஆண்டுகள் பொய்த்துப் போய்விட்டால், மறுபடியும் நமக்கு

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு இதே மத்திய அரசிடம் நாம் கையேந்தி நிற்க வேண்டியிருக்கும். அதை நாம் கவனத்தில் கொண்டு, நம்மிடம் இப்போது உபரியாக இருக்கிறது, ஆதலால் ஏற்றுமதி செய்கிறோம் என்கிற கொள்கைக்கு பதிலாக நீண்ட காலமாக அரிசியை கெட்டுப் போகாமல் விஞ்ஞான ரீதியில், நவீன முறையில் பாதுகாத்து வைத்துக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். அதுபற்றிப் பரிசீலிக்க வேண்டும். இப்போது ஆப்பிள் பழத்தைக் கூட கெட்டுப்போகாமல் பாதுகாக்கக் கூடிய நவீன முறைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. அந்த முறையில் இதையும் பாதுகாப்பாக கெட்டுப்போகாமல் ஆண்டுக் கணக்கில் சேமித்து வைக்க வேண்டும். இப்போது உபரி என்று நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய அனுப்பினால் நாட்டுக்குத் தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் நாம் மத்திய அரசை அரிசி வேண்டும் என்று கேட்டால், மத்திய அரசு நமக்குத் தர மறுக்கிறது. இவற்றை யெல்லாம் மனதிலே கொண்டு அரசு ஏற்றுமதி ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பாக பரிசீலித்ததா ?

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நாட்டு மக்களுடைய நலன் கருதி மிகுந்த அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். இப்போது குறுவை அறுவடை நடந்துகொண்டிருக்கிறது. இந்தக் குறுவை அறுவடையிலே எவ்வளவு கொள்முதல் செய்யலாம், எவ்வளவு அரிசியை கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம், எவ்வளவு அரிசி இப்போது நம்மிடம் கூடுதலாக, உபரியாகக் கையிருப்பில் இருக்கிறது என்பதையும் கணக்கிட்டு, அடுத்த சம்பா அறுவடை வரையிலும் எவ்வளவு அரிசி தேவைப்படுகிறது, அந்த சம்பாவிற்கு பிறகு எவ்வளவு தேவை என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான் ஏற்றுமதி செய்ய முடிவெடுத்திருக்கிறோம். இந்த அரிசி நீண்ட காலமாக கையிருப்பில் இருக்கிறது. இதற்கு மேலும் கையிருப்பில் வைத்தால், நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குப் பெரிய இழப்பை ஏற்படுத்தும் என்பதாலும், கையிருப்பில் தற்போது அரிசி அதிகமாக இருப்பதாலும், குறுவை அறுவடையில் நமக்கு அதிகமான அளவுக்கு நெல் கொள்முதல் செய்ய வாய்ப்பு இருப்பதாலும், இந்த நிலைமைகளை ஒட்டுமொத்தமாக உத்தேசித்துத்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மத்திய அரசு வெளி நாடுகளுக்கு அரிசி அனுப்புவதற்கு தமிழகத்திற்கு மட்டும் அனுமதி கொடுத்திருக்கிறதா ? வேறு எந்தெந்த மாநிலங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள் ? எந்தெந்த நாடுகள் அரிசி வாங்க இருக்கின்றன ?





மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நம்மிடமிருந்து அரிசியை வாங்க கிழக்குத்திசை நாடுகள் முன்வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே எத்தனை மாநிலங்களுக்கு இம்மாதிரி அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைய சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே உபரி மாநிலமாக இருப்பது நம்முடைய தமிழ் மாநிலம் ஒன்று தான்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தமிழ்நாட்டிலே இருந்து அரிசி ஏற்றுமதி செய்வது சம்பந்தமான கேள்விக்குப் பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரிசியைத் தவிர தமிழ் நாட்டிலே விளையக் கூடிய இதர தானியங்களுக்கு வெளிநாடுகளிலே கிராக்கி இருக்கிறதா ! அதைப்பற்றி அரசு ஆய்வு செய்ததா ? கிராக்கி இருக்கிறதென்றால், எந்தெந்த தானியங்களுக்கு கிராக்கி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தானியங்கள் தேவைப்படும் நிலையைப் பொறுத்தவரையில், அரிசி ஒன்றைத்தான் நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை இப்போது இருக்கிறது. மற்ற தானியங்களுக்கு வெளிநாடுகளிலே கிராக்கி இருக்கிறதா என்று அரசு ஆராயவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வேறு ஏதாவது தானியங்கள் நம்மிடம் உபரியாக இருந்தால், அவற்றுக்கு வெளி நாடுகளிலே கிராக்கி இருந்தால், அவற்றைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : வெளிநாடுகளுக்கு அரசு அரிசியை ஏற்றுமதி செய்யும்போது, 'வேலைக்கு உணவு' திட்டத்தின் அடிப்படையிலே நாம் வேலை செய்பவர்களுக்கு அரிசியை வழங்குகின்ற ஒரு ஏற்பாட்டினைச் செய்திருக்கின்ற நிலையில் இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவுக்கு அரிசி ஒதுக்கீடு செய்வது என்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா ? இந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏற்படாத அளவிலே, ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : 'வேலைக்கு உணவு' என்ற திட்டத்திற்குத் தேவையான அரிசியை மத்திய அரசு தன்னுடைய 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா' என்ற நிறுவனத்திலிருந்து நமக்குத் தருகிறது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு இதே மத்திய அரசிடம் நாம் கையேந்தி நிற்க வேண்டியிருக்கும். அதை நாம் கவனத்தில் கொண்டு, நம்மிடம் இப்போது உபரியாக இருக்கிறது, ஆதலால் ஏற்றுமதி செய்கிறோம் என்கிற கொள்கைக்கு பதிலாக நீண்ட காலமாக அரிசியை கெட்டுப் போகாமல் விஞ்ஞான ரீதியில், நவீன முறையில் பாதுகாத்து வைத்துக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். அதுபற்றிப் பரிசிலிக்க வேண்டும். இப்போது ஆப்பிள் பழத்தைக் கூட கெட்டுப்போகாமல் பாதுகாக்கக் கூடிய நவீன முறைகள் நடைமுறைக்கு வந்துவிட்டன. அந்த முறையில் இதையும் பாதுகாப்பாக கெட்டுப்போகாமல் ஆண்டுக் கணக்கில் சேமித்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது உபரி என்று நாம் வெளிநாட்டுக்கு அனுப்பினால், நமக்குத் தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் நாம் மத்திய அரசை அரிசி வேண்டு மென்று கேட்டால், மத்திய அரசு நமக்குத் தர மறுக்கிறது. இன்றைய வெல்லாம் மனதில் கொண்டு அரசு ஏற்றுமதி ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பாக பரிசீலித்ததா ?

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நாட்டு மக்களுடைய நலன் கருதி மிகுந்த அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த கேள்வியைக் கேட்டார்கள். இப்போது குறுவை அறுவடை நடந்துகொண்டி ருக்கிறது. இந்தக் குறுவை அறுவடையிலே எவ்வளவு கொள்முதல் செய்யலாம். எவ்வளவு அரிசியை கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம் எவ்வளவு அரிசி இப்போது நம்மிடம் கூடுதலாக, உபரியாகக் கைவசம் இருக்கிறது என்பதையும் கணக்கிட்டு, அடுத்த சம்பா அறுவடை வரையிலும் எவ்வளவு அரிசி தேவைப்படுகிறது, அந்த சம்பாவிற்கு பிறகு எவ்வளவு தேவை என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்துத்தான் ஏற்றுமதி செய்ய முடிவெடுத்திருக்கிறோம். இந்த அரிசி நீண்ட காலமாக கையிருப்பில் இருக்கிறது. இதற்கு மேலும் கையிருப்பில் வைத்தால், நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குப் பெரிழப்பை ஏற்படுத்தும் என்பதாலும், கையிருப்பில் தற்போது அரிசி அதிகமாக இருப்பதாலும், குறுவை அறுவடையில் நமக்கு அதிகமான அளவுக்கு நெல் கொள்முதல் செய்ய வாய்ப்பு இருப்பதாலும், இந்த நிலைமைகளை ஒட்டுமொத்தமாக உத்தேசித்துத்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மத்திய அரசு வெளி நாடுகளுக்கு அரிசி அனுப்புவதற்கு தமிழகத்திற்கு மட்டும் அனுமதி கொடுத்திருக்கிறதா? வேறு எந்தெந்த மாநிலங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள்? 'தெந்த நாடுகள் அரிசி வாங்க இருக்கின்-ன?



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : நம்மிடமிருந்து அரிசியை வாங்க கீழ்த்திசை நாடுகள் முன்வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே எத்தனை மாநிலங்களுக்கு இம்மாதிரி அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைய சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே உபரி மாநிலமாக இருப்பது நம்முடைய தமிழ் மாநிலம் ஒன்று தான்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தமிழ்நாட்டிலே இருந்து அரிசி ஏற்றுமதி செய்வது சம்பந்தமான கேள்விக்குப் பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரிசியைத் தவிர தமிழ் நாட்டிலே விளையக் கூடிய இதர தானியங்களுக்கு வெளிநாடுகளிலே கிராக்கி இருக்கிறதா? அதைப்பற்றி அரசு ஆய்வு செய்ததா? கிராக்கி இருக்கிறதென்றால், எந்தெந்த தானியங்களுக்கு கிராக்கி இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தானியங்கள் தேவைப்படும் நிலையைப் பொறுத்தவரையில், அரிசி ஒன்றைத்தான் நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை இப்போது இருக்கிறது. மற்ற தானியங் களுக்கு வெளிநாடுகளிலே கிராக்கி இருக்கிறதா என்று அரசு ஆராயவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வேறு ஏதாவது தானியங்கள் நம்மிடம் உபரியாக இருந்தால், அவற்றுக்கு வெளி நாடுகளிலே கிராக்கி இருந்தால், அவற்றைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : வெளிநாடுகளுக்கு ஆக அரிசியை ஏற்றுமதி செய்யும்போது, 'வேலைக்கு உணவு' திட்டத்தின் அடிப்படையிலே நாம் வேலை செய்பவர்களுக்கு அரிசியை வழங்குகின்ற ஒரு ஏற்பாட்டினைச் செய்திருக்கின்ற நிலையில் இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவுக்கு அரிசி ஒதுக்கீடு செய்வது என்று அரசு திட்டம் செய்திருக்கிறதா? இந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏற்படாத அளவிலே, ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : 'வேலைக்கு உணவு' என்ற திட்டத்திற்குத் தேவையான அரிசியை மத்திய அரசு தன்னுடைய 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா' என்ற நிறுவனத்திலிருந்து நமக்குத் தருகிறது.

**திரு. ஆ. திராவிடமணி:** வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்ற திட்டத்தின்கீழ், எண்ணெய் வளம் மிக்க நாடுகளுக்கு நம்முடைய அரிசியைக் கொடுத்து அங்கிருந்து எண்ணெயைக் குறைந்த விலைக்கு வாங்கி இங்கே ஓடாமல் இருக்கும் டாக்சிகளை ஓட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** நாம் அரிசியைக் கொடுப்பதால், அவர்கள் அங்கே இருக்கிற எண்ணெயைக் குறைந்த விலைக்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை இல்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, this question and the answers may receive wide publicity in India. So, may I ask the Government whether fresh instructions have come from the Government of India not to export rice, in view of the drought situation in the northern parts of our country?

**திரு. க. அறிவழகன் :** இப்படி பள்ளியிலிருந்து மாணவர்கள் நின்று விடுகின்ற நிலைமையை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதில் ஒன்று, மதிய உணவு ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்குப் போடப்படுகிறது என்பதாகும். அந்தத் திட்டத்தை உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். மூன்றாம் வகுப்பு வரை மாணவர்களை நிறுத்தாத நிலை இருக்கிறதென்று சொன்னார்கள். அப்படி உயர்நிலைப் பள்ளி வகுப்புகளிலும் யாரையும், எந்த வகுப்பிலும் நிறுத்தாத சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். ஏழை எளிய மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களின் ரிசல்ட்டைப் பார்க்காமல், அந்த ஆசிரியர் களைப் பாராட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நிலைப் பள்ளிகளில் மதிய உணவை விஸ்தரிக்கும் திட்டம் இப்போது இல்லை. இப்போது மூன்றாம் வகுப்புவரை தோல்வி என்பது இருக்கக்கூடாது என்றும், எல்லோரையும் பாஸ் ஆக்கிவிட வேண்டுமென்றும் சொன்னதற்குக் காரணம், இளம் குழந்தை களுக்குத் தோல்வி வரும்போது, அவர்கள் பள்ளிக்குப் போவதையே விரும்ப வில்லை என்பதுதான். அவர்கள் பள்ளியை விட்டு நின்று விடுகிறார்கள் என்பதால், அப்படி வைத்திருக்கிறோம். அதை மேலும் நீட்டிக்க விரும்ப

வில்லை. மேலும் இது போன்ற மாணவர்கள் படிக்கும் பள்ளியின் ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப் பாராட்ட ஆரம்பித்தால், எந்த அடிப்படையில் பாராட்டுவது, எப்படிப் பாராட்டுவது, யாரைப் பாராட்டுவது என்பது புரியாததாகி விடும்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** அமைச்சரவர்கள் தந்திருக்கிற புள்ளி விவரங்களிலிருந்து, 1 முதல் 5 வகுப்புகளில் 45 சதவிகிதம் டிராப்-அவுட் இருக்கிறது என்பது தெரிகிறது. அமைச்சரவர்கள் அதைத் தடுப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் அத்தனையும், அதைத் தடுப்பதற்குரிய சரியான நடவடிக்கைகள்தான். இதையும் மிஞ்சி நின்றுவிடுகிற மாணவர்கள் இருக்கிறார்கள் என்றால், அதற்கு ஒரே காரணம் ஏழ்மைதான். ஏழைக் குடும்பங்களில் இருக்கிறவர்கள், 10 வயதிற்குட்பட்ட பையனை 1 ரூபாய், 2 ரூபாய் சம்பாதித்துக் கொண்டுவர நிர்ப்பந்திக்கிறார்கள். அத்தகைய மாணவர்களுக்குப் பள்ளிப் படிப்போடு, ஏதாவது வேலையை பள்ளிக்குள்ளேயே கொடுத்து, படிப்பு முடிந்து வீட்டிற்குப் போகிறபோது, 1 ரூபாய் கொடுத்தனுப்பும் சூழ்நிலையை உருவாக்க அரசு ஆராய்ச்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** எதிர்க் கட்சித் தலைவரவர்களின் கருத்தினை நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இதற்கு இன்னொரு காரணம், பெற்றோர்கள் படிக்காமல் இருப்பதுதான். பெற்றோர்கள் படிக்காமல் இருப்பதால், குழந்தைகள் படித்து நல்ல பயனைப் பெற வேண்டுமென்று அவர்களால் நினைக்க முடியாத காரணத்தால்தான், இன்றைக்குப் பெருவாரியான குழந்தைகள் படிக்காமல் இருக்கிறார்கள். எனவே இந்த முதியோர் கல்வியைப் பொறுத்தமட்டில், அடிப்படையான கருத்து, முதியோர் கல்வியை மேலும் பரப்ப வேண்டும் என்பதுதான். காரணம் குழந்தைகள் படிக்க வேண்டுமென்பதற்காகத்தான்.

**திரு. க. இராமமூர்த்தி:** பள்ளிகளிலே ஏற்படும் (Drop-out) டிராப்-அவுட் பிரச்சினையை கல்வி அமைச்சரவர்கள் முழுமையாக உணர்ந்திருக்கும் நிலையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றிய அளவிலும், மாநகராட்சி அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் (Drop-out) டிராப்-அவுட் பற்றி பரிசீலனை செய்ய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். டிராப்-அவுட்டைக் குறைப்பது, அதிகரிப்பதற்குக் காரணம் என்ன என்ற நிலைகளை பரிசீலனை செய்ய அந்தந்தப் பகுதிகளில் ஒரு கமிட்டி அமைக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** டிராப்-அவுட்டைக் குறைக்க சிறப்பு முயற்சிகளை எடுக்க அரசு விரும்புகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** ஏற்கெனவே பள்ளியில் புகுந்துவிட்டு வெளியேறிய நிலையிலும், இன்னும் பள்ளியில் புகாத நிலையிலும் 20 விழுக்காடு குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களை இணைத்து, பள்ளிக்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சரவர்கள் எத்தகைய நடவடிக்கையை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இவைகளைப்பற்றிப் பேசும் போது, இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். மாணவர்கள் பள்ளிக்குப் போக விரும்புவதில்லை. (சிரிப்பு) சிறு குழந்தைகளாக இருந்தாலும் சரி, 10 வயதுக் குழந்தைகளாக இருந்தாலும் சரி, 8 வயதுக் குழந்தைகளாக இருந்தாலும் சரி, பள்ளிக்கூடம் போக வேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு இல்லை. அந்த நிலைமையில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. எனவே கல்விச் சூழ்நிலை என்பதைவிட, படிப்பு அப்படி இருக்கிறது. அவர்களே விரும்பிப் படிக்கும் நிலையில் படிப்பு இல்லை. ஆகவே அடிப்படையே கோளாறாக இருப்பதால், இத்தனையும் பேசுவதை விட்டு, அதைப் பரிசீலிக்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி:** ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், வறுமை காரணமாக இருக்கிறது. மேலும் படிப்பு டிராப்-அவுட்டுக்கு படித்துவிட்டு வந்த பிறகு, எந்த வேலைக்கும் செல்லக்கூடிய சூழ்நிலை இல்லாததால், அதாவது வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதால், படிப்பதால் என்ன பயன் என்று பெற்றோர்களும் நினைக்கிறார்கள், மாணவர்களும் நினைக்கிறார்கள். அதனால் மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், டிராப்-அவுட் வருகிறது. எனவே படித்துவிட்டு வருகிறவர்களுக்கு வேலை அளிப்பதற்கு புரட்சிகரமான திட்டத்தை கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வருவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இங்கே கேட்டிருக்கிற கேள்வி, ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரை பள்ளிப் படிப்பை இடையே விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதுதான். வேலை வாய்ப்புப் பிரச்சினை இதில் எதுவும் இல்லை. நாம் சமுதாயத்திலே நாகரிகமாக வாழ்வதற்கு கொஞ்சம் அடிப்படைக் கல்வி தேவை. அதைப் பெற அந்தக் குழந்தைகள் விரும்ப வேண்டும். அந்தக் குழந்தைகள் அந்தக் கல்வியைப் பெற, பெற்றோர்கள் விரும்ப வேண்டும். அந்த அடிப்படையிலே நான் இதைப் பார்க்க விரும்புகிறேன்.

## Verification of Teachers' Certificates.

* 112 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government will issue orders, so as to avoid the procedure of verifying the teachers' Certificates and degrees every year during the annual inspection of schools?

### ஆசிரியர்கள் சான்றிதழ்களைப் பரிசீலனை செய்தல்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

பள்ளி ஆண்டாய்வின்போது, ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர்களின் சான்றிதழ்கள் மற்றும் பட்டங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும் நடைமுறையைத் தவிர்க்கும் வகையில் அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவ்வாறு அரசு ஆணை பிறப்பிப்பது உசிதமில்லை. சான்றிதழ்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்து ஆய்வு செய்வதற்குத்தான் ஆண்டாய்வு ஏற்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு ஆண்டும் இவை பரிசீலிக்கப்பட வேண்டியது மிக அவசியமாகிறது. ஆசிரியர் சம்பளங்கள் பற்றி தகுதிகள் எல்லாம் கணக்கிடப்பட இம்முறை மிக மிகத் தேவையாகக் கருதப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஆண்டு ஆய்வு என்பதே, ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பள்ளியிலும் கணக்கு விவரங்கள் ஒழுங்காக இருக்கின்றனவா, நியமனங்கள் ஒழுங்காக இருக்கின்றனவா, மற்ற வேலைகள் ஒழுங்காகச் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதற்காகத்தான். சென்ற ஆண்டு பார்த்த அதே சான்றிதழ்களை, சரி என்று ஏற்கெனவே கையொப்பமிட்ட பிறகு, மறுபடியும் ஏன் அதைப் பார்த்து நேரத்தை வீணாக்க வேண்டுமென்பது தெரியவில்லை. அரசின் மற்ற துறைகளில் இந்த நடைமுறை இல்லை. கல்வித் துறையில் மட்டும் அது இருப்பது ஏன்? அதை நீக்குவது குறித்து அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தற்போதுள்ள கல்வி விதிகளின்படி ஆசிரியர்களின் சான்றிதழ்கள் ரத்து செய்யப்பட்டோ, நிறுத்தி வைக்கப்பட்டோ இருந்தால், அவர்களைப் பணியில் அமர்த்தக்கூடாது. தாற்காலிகமாக அக் கல்வி விதிப்படி சான்றிதழ்கள் சரியாக இருக்கின்றனவா என்று ஆய்வு செய்வதற்காக ஆண்டாய்வு தேவைப்படுகிறது. ஒரு நபருடைய சான்றிதழ்



களை வேறு நபர்கள் தவறாகப் பயன்படுத்தாமல் தடுக்கவும் இம்முறை தேவைப்படுகிறது. மேலும் தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு ஓய்வு காலச் சலுகைகள் அளிக்கையில் அவர்களுடைய சான்றிதழ்கள் மாநிலத் தலைமைக் கணக்காய்வாளரால் சரி பார்க்கப்படுகின்றன. ஆதலினால் அவைகள் சரியாகவும், தவறிப் போகாமலும் இருக்க இந்த முறை உதவுகிறது. இதுபோன்ற பல காரணங்களாலேதான் அவைகளை ஒவ்வொரு ஆண்டும் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை சான்றிதழ்களைக் காட்ட ஆசிரியர்களுக்குப் பெருத்த சிரமம் இருப்பதாக நான் கருதவில்லை.

(பிற்பகல் 5-20.)

**திரு. ம. சங்கரலிங்கம்:** பள்ளி ஆண்டு ஆய்வின்போது ஒவ்வொரு ஆண்டும் சான்றிதழ்கள் பரிசீலிக்கப்பட வேண்டியது மிக அவசியம் என்று அமைச்சர் சொன்னார். ஒரு ஆசிரியரை முதலில் நியமிக்கும்போது, அவருடைய சான்றிதழ்களைப் பரிசீலனை செய்வதும், அதுபோல் அவரைப் பணியில் உறுதிப்படுத்தும்போது சான்றிதழ்களைப் பரிசீலனை செய்வதும் இன்றியமையாததே. அதற்குப் பிறகு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சான்றிதழ்களைக் காட்டினால் போதும் என்கிற முறையில் இப்போதுள்ள விதியை அவசியம் திருத்த வேண்டும். இப்போது அது இல்லாமல் ஆண்டுதோறும் ஆடிட்டுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது என்று சொல்லி, ஆண்டு பூராவும் நிர்வாகமே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நிர்வாகம் வைத்துக் கொள்வதன் மூலம் ஆசிரியர்கள் படித்திருக்கின்ற கல்வித் தகுதிக்குத் தக்கபடி உயர்ந்த பதவிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்ப அவர்களால் முடியவில்லை. அவர்கள் படித்த பட்டம் அவர்களுக்குப் பயன்படாத நிலையும் இருக்கிறது. ஆதலால் ஆசிரியர் நியமனம் செய்யப்படும்போதும், பிறகு வேலை உறுதிப்படுத்தப்படும்போதும், அதன் பிறகு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் சான்றிதழ்கள் மற்றும் பட்டங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யக் கொடுத்தால் போதும் என்கிற வகையில் இதை நடைமுறைப்படுத்துவதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்களுடைய சான்றிதழ்களை நிர்வாகம் வாங்கி வைத்துக்கொண்டு அவர்களுக்குத் திரும்பத் தராமலேயே பல்வேறு தொல்லைகளுக்கு ஆசிரியர்களை ஆளாக்குகின்ற புகார்கள் நம்முடைய கவனத்திற்கு வருகின்றன. அவைகளைத் தடுக்க எவ்வாறு இல

நடவடிக்கைகளை எடுப்பது என்பதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Seniority Lists of Teachers.*

*113 *Q*.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether teachers are selected and appointed in Higher Secondary Schools on the basis of the seniority lists maintained for men and women teachers separately; or

(*b*) whether they are selected on the basis of a common seniority list?

ஆசிரியர்கள் பணிமூப்புப் பட்டியல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசு உயர் இடைநிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யும்பொழுது, ஆண் ஆசிரியர்களுக்கு ஒரு பணிமூப்பு பட்டியலும், பெண் ஆசிரியர்களுக்கு ஒரு பணிமூப்பு பட்டியலும் தனித்தனியே வைக்கப்பட்டு, அவைகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

(ஆ) அல்லது இருபாலாருக்கும் பொதுவான பட்டியலை வைத்துக் கொண்டு அதன் அடிப்ப[illegible] தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அர[illegible]யகம்: (அ) இல்லை.

(ஆ) ஆம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆசிரியர்களை நியமனம் செய்யும் பொழுது, ஆண் ஆசிரியர்களுக்கும் பெண் ஆசிரியர்களுக்கும், அதாவது இரு பாலாருக்கும் பொதுவான பணிமூப்புப் பட்டியலை வைத்துக்கொண்டு, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார். அப்படி என்றால், பதவி உயர்வு கொடுக்கும்போது, இருபாலாரையும் பொது வான பணிமூப்புப் பட்டியலிலிருந்துதான் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் ஆண் ஆசிரியர்களை பெண்கள் பள்ளிக்கு அனுப்ப வேண்டி வரும்போது, பாகுபாடு செய்கிறார்கள். அதாவது பொதுவான பணிமூப்புப் பட்டியலி



லிருந்து தேர்ந்தெடுத்து ஆசிரியர்களை நியமிக்கும் அந்த நடைமுறையைப் பின்பற்றுவதில்லை என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா? ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரே பணிமூப்புப் பட்டியலை வைத்துக்கொண்டு பெண்கள் பள்ளிகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது மட்டும் ஆண் ஆசிரியர்கள், பெண் ஆசிரியர்கள் என்கிற முறையில் பிரிக்கலாமா, பாகுபாடு காட்டலாமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மொத்தமுள்ள பெண்களில் மேல் நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான பெண் ஆசிரியர்கள் பணிமூப்பு வரைய றைக்குள் இல்லாததால், வரையறைக்கு மேற்பட்ட சில பெண் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சரித்திரம், மற்றும் தமிழ் பாடத்திற்குத் பெண்கள் பள்ளிகளுக்கு இதை அவசியம் செய்ய வேண்டியிருப்பதால் செய்கிறோம்.

திரு. பா. ரா. தாமஸ்: இவ்வாறு பொது பணிமூப்புப் பட்டியலிலிருந்து பதவி உயர்வு வழங்கும்போது, பெண் ஆசிரியர்களை ஆண்கள் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். அதே சமயத்தில் பெண்கள் பள்ளிகளில் ஆண் ஆசிரியர் களுக்கு வாய்ப்பு வந்தால், அந்த வாய்ப்பை அவர்களுக்குக் கொடுக்காமல் மறுக்கிறார்கள். ஆண்கள் பள்ளிகளுக்கு பெண் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியராக வர வாய்ப்பளிக்கும்போது, பெண்கள் பள்ளிகளுக்கு மட்டும் ஏன் ஆண் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வரக் கூடாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பெண்க[illegible]க்கு என்றுதான் நாம் ஒதுக்கீடு செய்வதில்லை. ஆண்களுக்கு எ[illegible]ஒதுக்கீடு செய்கிறோம். [illegible] அடிப்படையில் நாம் பெண்களை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அ[illegible] பெண்களும் சமமாகப் நியமிக்கின்றோம். மற்ற பதவிகளில் ஆண்களும் நிர்ணயிக்கப்பட்டு, நாம் அதன்படி அவர்களை நியமிக்கின்றோம்.

*Physical Education Directors and Librarians in Colleges.*

* 114. *Q*.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that University Grants Commission scale of pay is not being implemented in the case of Physical Education Directors and Librarians in the Colleges ; and

(*b*) if so, the reasons therefor?

கல்லூரி உடற்பயிற்சி இயக்குநர்கள் மற்றும் நூலகர்கள்.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கல்லூரிகளில் உள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்கள் ஆகியோருக்கு பல்கலைக்கழக மானியக்குழு சம்பள விதங்கள் அமல்படுத்தப் படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அனைத்துக் கல்லூரி உடற் பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கு பல்கலைக் கழக மானியக் குழு வினால் பரிந்துரைக்கப் பட்ட ஊதிய விகிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Teaching and Non-Teaching Staff of Aided Schools.*

* 115. *Q.*—THIRU P. R. THOMAS, THIRU M. SANKARA-LINGAM, THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Teaching and non-Teaching staff employed in Aided Schools are not eligible to enjoy leave salary when they go on medical leave or any leave other than casual leave, till they rejoin duty after the expiry of the leave; and

(*b*) if so, the reasons therefor?

அரசு மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணி யாளர்கள்.

திரு. பா. ரா. தாமஸ்,

திரு. ம. சங்கரலிங்கம் &

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும், அலுவலகப் பணியாளர்களும் மருத்துவ விடுப்பில் செல்லும்பொழுதும், அல்லது தற்செயல் விடுப்புத் தவிர ஏனைய விடுப்பில் செல்லும்பொழுதும்



விடுப்புக்காலம் முடிவடைந்து மீண்டும் பணியில் சேரும் வரையில் விடுப்புச் சம்பளம் பெறுதற்குத் தகுதியுடையவர்கள் அல்லர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மருத்துவ விடுப்பில் சென்று திரும்பி வந்து பணியில் சேரும் போது, உடனேயே அவர்கள் ஊதியத்தைப் பெற வாய்ப்பிருக்கிறது. அது சம்பந்தமாக சுற்றறிக்கையும் அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதே சுற்றறிக்கை தனியார் பள்ளிகளில் மற்றும் மானியம் பெறும் பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும் பொருந்தும் என்கின்ற முறையில் ஏன் கொடுக்கக்கூடாது? இதுபற்றி அமைச்சர் பரிசீலிப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களும் மருத்துவ விடுப்பில் செல்கின்றபோது, "விடுப்பில் போய் திரும்ப வந்து பணியாற்றுவேன்" என் கின்ற உறுதியை அளிப்பார்களேயானால், அவர்களுக்கும் இவ்வூதியம் அளிக் கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சருடைய அறிவிப்பை தனியார் பள்ளிகள் நடைமுறையில் செயல்படுத்துவதில்லை. இதை நடைமுறையில் அனைத்து தனியார் பள்ளிகளும், அரசு மானியம் பெறும் பள்ளிகளும் செயல் படுத்த வேண்டுமென்கின்ற கண்டிப்பான உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனியாக ஏதாவது குறிப்பிட்ட புகார் வந்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள் இரண்டு மாதம் மருத்துவ விடுப்பில் சென்று திரும்பி வருகிறார்கள் என்றால், மீண்டும் 2 மாதம் பணியில் அமர்ந்தால்தான் ஊதியத்தைப் பெற்றுத் தர

முடியும் என்று தடை விதிக்கிறார்கள். இதைத் தவிர்த்து அந்தந்த மாத ஊதியத்தை அவர்கள் பெறும் வகையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** பொதுவாக அரசு ஊழியர்கள் எந்த மாதத்திலாவது இடையிலே மருத்துவ விடுப்பில் சென்றாலும், மீண்டும் அந்த மாதத்திலேயே ஊதியத்திலேயிருந்து பிடித்தம் செய்யாமல் சம்பளத்தை "சாங்ஷன்" செய்ய வேண்டுமென்று நிதித் துறையிலேயிருந்து உத்தரவு இருக்கிறது. அவ்வாறு அவர்கள் முழு ஊதியத்தையும் பெறுமாறு அனுமதித்து விட்டு, பிடித்தம் ஏதாவது இருந்தால், பின்னால் வருகிற மாதங்களில் அவர்களுடைய ஊதியத்திலிருந்து பிடித்துக்கொள்ளலாம் என்று இருக்கிறமாதிரி, தனியார் மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அலுவலகப் பணியாளர்களுக்கும் இது விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அரசு ஊழியர்களுக்கு உள்ள வசதிகளை தனியார் பள்ளி ஊழியர்களுக்கும் தர வேண்டுமென்கின்ற விருப்பம் நமக்கு இருந்தாலும், அரசு ஊழியர்களுக்கும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாதவர்களுக்கும் இடையே வேறு சில முறையில் சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

## *Silting in Mettur Reservoir.*

*116. *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have represented to the Central Government during November, 1978 that silting in the Mettur Reservoir is increasing due to the soil erosion on either side of the Cauvery river in the Karnataka State area;

(*b*) if so, whether any reply has been received from the Central Government; and

(*c*) if so, the details thereof?



## மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மண்மேடு.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கர்நாடக மாநிலப் பகுதியில் காவேரியின் இருகரைப் பகுதிகளிலும் மண் அரிப்பு ஏற்படுவதால், மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மண்மேடு அதிகரிக்கிறது என்று, தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு, 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முறையீடு செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து அதற்கு ஏதாவது பதில் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) இல்லை.

(இ) மற்றும் (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** இங்கே மாண்புமிகு அமைச்சர் மைசூர் மாநிலத்திலேயிருந்து வருகின்ற காவிரி நீரினால் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மண்மேடு அதிகரிக்கவில்லை என்று கூறினார். இன்றைய எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் கருநாடக மாநிலப் பகுதியில் காவேரியின் இருகரைப் பகுதிகளிலும் மண் அரிப்பு ஏற்படுவதால் மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மண்மேடு அதிகரிக்கிறது என்றும் இதனால் நாளாவட்டத்தில் மேட்டூரில் நீர் மட்டம் குறையும் என்றும் செய்தி வந்திருக்கிறது. இப்போது இதுபற்றி பயம் இல்லாவிட்டாலும் கூட, வருங்காலத்தை மனதில் வைத்து இதுபற்றி அரசு ஆய்வு நடத்துமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** காவிரி ஆற்றைப் பொறுத்தவரை, கருநாடகப் பகுதியிலே கட்டியான நிலத்தின் வழியாக, பாறைகளின் வழியாக நீர் வருகிறது. அதனால் மண் அரிப்பு ஏற்பட்டு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் மண்மேடு ஏற்பட வழியில்லை என்று பொறியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். மீண்டும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** நம் அரசுக்கும் கருநாடக அரசுக்கும் ஏற்பட்டிருந்த காவிரி நீர் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது. புதிய ஒப்பந்தம் இதுவரை ஏற்படவில்லை. அப்படி இருக்கும்போது, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு, குறிப்பாக தஞ்சையிலுள்ள விவசாயிகளுக்கு

காவிரி நீர் உடன்பாட்டின்படி காவிரி நீர் கிடைக்குமோ என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய பயத்தைப் போக்க, புதிய ஒப்பந்தம் ஏற்படுத்த கருநாடக அரசுடன் இந்த அரசு தொடர்பு கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே பல தடவைகள் குறிப்பாக மத்திய அரசின் மூலம் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. மீண்டும் அந்தப் பேச்சுவார்த்தை தொடர வேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய மாநிலத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மேட்டூர் நீர்த்தேக்கத்தை ஆழப்படுத்தும் பணி எப்போதாவது நடந்ததா? (சிரிப்பு) நடந்தது என்றால் எந்த ஆண்டு நடந்தது? மறுபடியும் எப்போதாவது ஆழப்படுத்தும் பணியை மேற்கொள்ளக்கூடிய உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஆழப்படுத்துவதற்கான குறிப்புகள் இல்லை.

## *Heavy Rains in Sirumalai Areas.*

*117 Q.—THIRU A. NALLASIVAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the estimate of the damages caused by the recent heavy rains in Sirumalai areas near Dindigul; and

(*b*) the relief measures taken thereon?

## சிறுமலைப் பகுதியில் பெரு மழை.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திண்டுக்கல் அருகிலுள்ள சிறுமலைப் பகுதியில் சமீபத்தில் பெய்த பெரு மழையால் விளைந்த சேதத்தின் மதிப்பு எவ்வளவு?

(இ) எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** விவர அறிக்கை@ அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

@ 404-405 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(உ) இல்லை.

## *Veterinary Doctors.*

*118. Q.—THIRU K. RAMAMOORTHY (on behalf of THIRU N. SUNDARESA THEVAR): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to remove the disparity in the pay and other benefits between the Government Doctors and the Veterinary Doctors; and

(*b*) whether it is a fact that Veterinary Doctors and Students conducted an agitation in this regard; and

(c) if so, whether the Government have given any assurance to them?

## கால்நடை மருத்துவர்கள்.

**திரு. க. இராமமூர்த்தி (திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்):** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் இருபாலருக்கும், சம்பளம் மற்றும் சலுகைகளில் உள்ள வித்தியாசத்தைப் போக்க அரசுக்கு உத்தேசம் ஏதும் உள்ளதா?

(இ) இதுகுறித்து கால்நடை மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பது உண்மையா?

(உ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு ஏதேனும் உறுதி அளித்துள்ளதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (அ) இது சம்பந்தப்பட்ட செயற்குறிப்பு நிதித் துறையின் பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) இல்லை.

## *Poultry Development.*

*119 Q.—THIRU A. BALASUBRAMANIAM and THIRU S. MUTHUSAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to set up a Poultry Feeds Unit at Namakkal in Tamil Nadu, where Poultry Development is carried on, on a large scale;

(b) whether there is any scheme with the Government to establish a Joint Directorate of Animal Husbandry Department at Namakkal; and

(c) if so, when they will be established?

### கோழி வளர்ப்பு.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் & திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ்நாட்டிலேயே கோழி வளர்ப்பு அதிகமாக உள்ள நாமக்கல் வட்டத்தில், கோழித்தீவன தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) நாமக்கல்லில், கால்நடை பராமரிப்புத்துறையின் இணை இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது அவை அமைக்கப்படும்?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (அ) சேலம் மாவட்டத்திலுள்ள சேசன் சாவடியில் செயல்பட்டு வந்த கோழித் தீவனக் கலவை நிலையத்தை நாமக்கல்லுக்கு மாற்றும் செயற்குறிப்பு தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) நாமக்கல்லில், கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. அத்துறையின், இணை இயக்குநர் அலுவலகம் அங்கு அமைக்கும் திட்டம் எதுமில்லை.

(இ) தீவனக் கலவை நிலயத்தின் இயந்திரங்களை அமைப்பதற்குப் பொருத்தமான கட்டிடம் கிடைத்தவுடன் கோழித் தீவன தயாரிப்புத் தொழிற்சாலை நாமக்கல்லில் அமைக்கப்படும்.

(பிற்பகல் 5-30)

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** கோழிப் பண்ணை என்பது விவசாயத்தினுடைய இணை பொருள். கோழித் தீவனத்திற்கு குஜராத் மாநிலத்திலே எந்தவிதமான வரியும் இல்லை. ஆந்திரா மாநிலத்திலே 2 பெர்சென்ட் வரி தான் போட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே மட்டும் 4 பெர்சென்ட் வரி போடப்பட்டிருக்கிறது. கோழித் தீவனத்திற்கு, குஜராத்தைப்போல, வரி விலக்கு அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் தமிழக அரசிடம் தற்போது இல்லை.

**திரு. செ. முத்துசாமி:** இணை இயக்குநர் அலுவலகம் அங்கு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டால், துணை இயக்குநர் அலுவலகம் அங்கு இருக்கிறது என்றும், அதனால் இணை இயக்குநர் அலுவலகம் தேவையில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தமிழகத்தில் கோழி வளர்ப்புத் துறையிலே முட்டை அதிகமாக உற்பத்தி செய்வதில் முதலிடம் வகிப்பது நாமக்கல். நாமக்கல்லிலும் அதைச் சுற்றியுள்ள ஈரோடு, திருச்செங்கோடு போன்ற பகுதிகளிலேதான் தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கோழி முட்டையில் மொத்தம் 75 சதவீதம் உற்பத்தியாவதால், இயக்குநர் அலுவலகத்தையோ—'டேப்கோ'வையோ—அந்த இடத்துக்கு மாற்றலாம். அப்படி மாற்ற முடியவில்லையென்றால், ஒரு இணை இயக்குநர் அலுவலகத்தை அங்கே வைப்பதன் மூலம் அங்கு ஏற்படக்கூடிய தேவையைப் பூர்த்தி செய்ய இயலும் என்பதால், அங்கே இணை இயக்குநரை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** சாதாரணமாக இணை இயக்குநர் அலுவலகம் மாவட்டத் தலைநகரில்தான் அமைவது வழக்கம். அப்படித்தான் இப்போது அமைந்திருக்கிறது. தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தையே நாமக்கல்லுக்கு மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். பார்க்கப் போனால் நாமக்கல்லில்தான் அதிகமாகக் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. அங்கே நாள் ஒன்றுக்கு 8 லட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. எனவே, அங்கே அதை மாற்றுவதைவிட மதுரை போன்ற இடங்களில் வைத்தால், அங்கிருந்து கன்னியாகுமரி, நெல்லை போன்ற மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விரிவாக்கி உற்பத்தியைப் பெருக்க வசதியாக இருக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி:** வேகமாக முன்னேறியிருக்கிற நாமக்கல்லுக்கு [illegible] மேலும் செலவழிப்பதில் பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கிற வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்[illegible] மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தைக் கொஞ்சம் பொறுமையாகக் கவனிக்கலாம் என்ற [illegible] இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(b) whether there is any scheme with the Government to establish a Joint Directorate of Animal Husbandry Department at Namakkal; and

(c) if so, when they will be established ?

### கோழி வளர்ப்பு.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் & திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ்நாட்டிலேயே கோழி வளர்ப்பு அதிகமாக உள்ள நாமக்கல் வட்டத்தில், கோழித்தீவன தயாரிப்பு தொழிற்சாலை ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) நாமக்கல்லில், கால்நடை பராமரிப்புத்துறையின் இணை இயக்குநர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது அவை அமைக்கப்படும் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) சேலம் மாவட்டத்திலுள்ள சேசன் சாவடியில் செயல்பட்டு வந்த கோழித் தீவனக் கலவை நிலையத்தை நாமக்கல்லுக்கு மாற்றும் செயற்குறிப்பு தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) நாமக்கல்லில், கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. அத்துறையின், இணை இயக்குநர் அலுவலகம் அங்கு அமைக்கும் திட்டம் எதுமில்லை.

(இ) தீவனக் கலவை நிலையத்தின் இயந்திரங்களை அமைப்பதற்குப் பொருத்தமான கட்டிடம் கிடைத்தவுடன் கோழித் தீவன தயாரிப்புத் தொழிற்சாலை நாமக்கல்லில் அமைக்கப்படும்.

(பிற்பகல் 5-30)

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: கோழிப் பண்ணை என்பது விவசாயத்தினுடைய இணை பொருள். கோழித் தீவனத்திற்கு குஜராத் மாநிலத்திலே எந்தவிதமான வரியும் இல்லை. ஆந்திரா மாநிலத்திலே 2 பெர்செண்ட் வரி தான் போட்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே மட்டும் 4 பெர்செண்ட் வரி போடப்பட்டிருக்கிறது. கோழித் தீவனத்திற்கு, குஜராத்தைப்போல, வரி விலக்குக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் தமிழக அரசிடம் தற்போது இல்லை.

திரு. செ. முத்துசாமி: இணை இயக்குநர் அலுவலகம் அங்கு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டால், துணை இயக்குநர் அலுவலகம் அங்கு இருக்கிறது என்றும், அதனால் இணை இயக்குநர் அலுவலகம் தேவையில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தமிழகத்தில் கோழி வளர்ப்புத் துறையிலே முட்டை அதிகமாக உற்பத்தி செய்வதில் முதலிடம் வகிப்பது நாமக்கல். நாமக்கல்லிலும் அதைச் சுற்றியுள்ள ஈரோடு, திருச்செங்கோடு போன்ற பகுதிகளிலேதான் தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கோழி முட்டையில் மொத்தம் 75 சதவீதம் உற்பத்தியாவதால், இயக்குநர் அலுவலகத்தையோ—'டெப்போ'வையோ—அந்த இடத்துக்கு மாற்றலாம். அப்படி மாற்ற முடியவில்லையென்றால், ஒரு இணை இயக்குநர் அலுவலகத்தை அங்கே வைப்பதன் மூலம் அங்கு ஏற்படக்கூடிய தேவையைப் பூர்த்தி செய்ய இயலும் என்பதால், அங்கே இணை இயக்குநரை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: சாதாரணமாக இணை இயக்குநர் அலுவலகம் மாவட்டத் தலைநகரில்தான் அமைவது வழக்கம். அப்படித்தான் இப்போது அமைந்திருக்கிறது. தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தையே நாமக்கல்லுக்கு மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். பார்க்கப் போனால் நாமக்கல்லில்தான் அதிகமாகக் கோழிப் பண்ணைகள் இருக்கின்றன. அங்கே நாள் ஒன்றுக்கு 8 லட்சம் முட்டைகள் உற்பத்தியாகின்றன. எனவே, அங்கே அதை மாற்றுவதைவிட மதுரை போன்ற இடங்களில் வைத்தால், அங்கிருந்து கன்னியாகுமரி, நெல்லை போன்ற மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை விரிவாக்கி உற்பத்தியைப் பெருக்க வசதியாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : வெகுவாக முன்னேறியிருக்கிற நாமக்கல்லுக்கு மேலும் மேலும் சலுகைகளைக் கொடுப்பதைவிட பின்தங்கிய நிலையில் இருக்கிற வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களைச் சார்ந்திருக்கின்ற [illegible] மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்கலாம் என்று நின்ற மாவட்டத்தைக் கொஞ்சம் பொறுமையாகக் [illegible] இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன் வருமா ?

1979 நவம்பர் 8]

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலேயே கோழிப் பண்ணைகள் (Poultry Farms) எங்கு அதிகமாக உள்ளன?

(இ) அங்கு கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** (அ) நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் பெருந்துறை ஆகிய பகுதிகளில் கோழிப்பண்ணைகள் அதிகமாக உள்ளன.

(இ) இல்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** இந்தக் கோழிப் பண்ணைகள் நாமக்கல் பகுதியிலே அதிகமாக இருக்கின்றன. அங்கே இந்தத் தொழில் ஒரு குடிசைத் தொழிலாகக் கருதப்படுகிறது. அதே நேரத்தில் இந்தத் தொழிலுக்கு மின்சாரம் மிக அதிகமான அளவுக்குத் தேவைப்படுகிறது. மின்சாரத்துக்கான டேரிஃப் அதிகமாக இருக்கிறது. இந்தக் குடிசைத் தொழில் விருத்தியடைய வேண்டும் என்பதால், இப்போது இருக்கும் கட்டணத்தைக் குறைத்து சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** அதுபற்றிய குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மதுரை மாவட்டத்தில் கப்பலூரில் உள்ள கோழிப் பண்ணை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இன்றைய தினம் பல்வேறு காரணங்களால் இந்தக் கோழிப் பண்ணை விஸ்தரிப்பு தடைப்பட்டிருக்கிறது. இந்தக் கோழிப் பண்ணையை மேலும் பயனுள்ள அளவுக்கு விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்துத் தொகுதியாக இருந்தும் கவலிக்கவில்லையென்று வருத்தப்படுகிறேன். சென்ற நிதிநிலை அறிக்கையின்போது, மாண்புமிகு நிதியமைச்சர்

அவர்களால் 5 லட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு, ஏற்பாடுகள் துரித மாக நடைபெறுகின்றன. இப்போது 2.60 என்ற விரிய கோழி வகைகளை உற்பத்தி செய்ய தயாராக இருக்கின்றன.

**திரு. செ. முத்துசாமி:** நாமக்கல்லிலே இந்தத் தொழிலில் தனியார் ஈடு பட்டு வெற்றிகரமாக நடத்துகிறார்கள். நாமக்கல்லில் இருக்கும் 'கிளை மேட்டிக் கண்டிஷன்' தான் இந்தத் தொழிலுக்கு ஏற்றதாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவேதான் பங்களூரிலே இருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் வந்து இந்தத் தொழிலை அங்கே நடத்துகிறார்கள் கோவை பக்கத்திலே இந்தத் தொழில் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதாலும், உற்பத்தியைப் பெருக்க நாமக்கல் சிறந்த இடமாக இருப்ப தாலும், அதை இங்கு மாற்ற அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** ஏற்கெனவே கோழிக் குஞ்சு பொரிக்கும் நிலை நல்ல முறையில் இருக்கிறது. இப்போது திருப்தியுடன் சிறப்பாக நடைபெறுகிறது. அதை மாற்றும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** கோழித் தீவனத்தைப் பொறுத்தவரையில், வரிவிலக்கு அளிக்கும் உத்தேசம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆந்திராவைப்போல வரி விதிப்பை 2 சதவீத மாகக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** அதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

[குறிப்பு.—உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### (1) மண்ணெண்ணெய், டீசல் கிடைக்காமையால் பொதுமக்கள் படும் அவதி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமமூர்த்தி, திரு. வீராசாமி ஆகியோர் மண்ணெண்ணெய், டீசல் கிடைக் காமையால் பொதுமக்கள் படும் அவதி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானத் திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதை விளக்கக் கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு அத்தியாவசியப் பொருளான கெரோசின் தீபாவளிப் பண்டிகை நாளிலிருந்து வழங்கப்படாமல் இருக்கிறது. அதனால், குறிப்பாக குடிசை யிலே வாழக்கூடிய ஏழை மக்கள் ஒவ்வொரு கெரோசின் கடைக்கும் சென்று, தினந்தோறும் கெரோசின் கிடைக்காத காரணத்தால், அங்கே கலகம் விளை விக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அப்படி கெரோசின் கிடைக்காததால் ரூ. 1.60-க்கு விற்கவேண்டிய ஒரு லிட்டர் கெரோசினை ரூ. 2.60 கொடுத்து கள்ள மார்க்கெட்டிலே வாங்கக்கூடிய சூழ் நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப் போலவே இன்றையதினம் டீசல் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக் குறையால், பொருள் போக்குவரத்துக் கழகம் லாரிகளுக்குக் கூட டீசல் கிடைக்காமல் அவர்களும் கள்ள மார்க்கெட்டிலே டீசலை வாங்கி உபயோகப் படுத்துவதால், இன்றையதினம் அந்தக் கட்டணங்களையெல்லாம் உயர்த்தி யிருக்கிறார்கள். அதன் காரணமாக, வெளியூரிலிருந்து வரும் காய்கறிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எல்லாம் விலையேறும் அபாயம் ஏற்பட் டிருக்கிறது. பொது மக்களுக்குத் தேவைப்படுகின்ற கெரோசின் பற்றாக் குறை காரணமாக ஏழைகள் மத்தியிலே, குறிப்பாக வியாபாரிகள் மத்தியிலே ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்றையதினம் 'கேஸ்' கிடைக்கவில்லை. இதையெல் லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்தான் மத்தியிலேயும் இந்தத் துறைக்கு அமைச்சராகவும் இருக் கிறார். அப்படி இருக்கும்போது, தமிழகத்திலே இப்படிப்பட்ட பற்றாக் குறை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. இது குறித்து உடனடியாக மத்திய அரசோடு கலந்து பேசி இந்தப் பற்றாக் குறையைப் போக்குவதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். எனவே, பொதுமக்களுடைய இந்த இன்றியமையாத பிரச்சினையைப்பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு தொழிலாளர்களுடைய அகில இந்திய அளவிலே ஏற்பட்டிருக்கின்ற நிலை பெருமளவில் வேலை நிறுத்தம் காரணமாக, டீசல், பெட்ரோல் வரும்

பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக பஸ்கள் ஓடுவதைக்கூட குறைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுமோ என்ற அபாயம் ஏற்பட்டு, தற்காலிகமாக இப்போது அந்த அபாயம் நீங்கியிருக்கிறது என்றாலும், நிரந்தரமாக இதே நிலை ஏற்பட்டுவிடுமோ என்கிற பயத்திலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. இந்த நிலைமையைப் பொறுத்தவரையில், இது ஆண்டுக்காண்டு அல்லது சில மாதங்களுக்கு ஒரு முறை வந்துகொண்டிருக்கின்றது. இதிலே மாநில அரசு நேரடியாக அதிகமாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும்கூட இந்த மாநிலத்தில் நடுத்தர வர்க்கத்தினர், ஏழையெளிய மக்கள் உபயோகப்படுத்தும் கெரோசின், சமையலுக்காகப் பயன்படுத்தும் 'கேஸ்' இவைகள் எல்லாம் கிடைக்காமல் திண்டாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தம் என்ற மிரட்டல் வரும்போதே, இவைகள் எல்லாம் கிடைக்காது என்ற அச்சம் ஏற்பட்டு, அதன் விளைவாக சாதாரண குடும்பங்களிலே இருக்கின்ற பெண்கள் எல்லாம் கடைகளுக்குச் சென்று க்யூவாக நிற்க வேண்டிய நிலையும், அங்கும் கிடைக்காமல் கள்ள மார்க்கெட் காரணமாக இன்றைய தினம் இந்தப் பிரச்சினை மேலும் அதிகரித்திருப்பது.

(பிற்பகல் 5-40.)

கடந்த ஆண்டு தொடர் கூட்டத்தில் இதேபோன்ற தட்டுப்பாடு நிலை பற்றி இந்த மன்றத்திலே நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து அதன்மீது பேசும்போதுகூட, நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். இந்தப் பொருள்களை விநியோகம் செய்கிற அமைப்பை அரசாங்கம் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். தமிழகத்தில் இன்றைய ஏழை மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், அலுவலகங்களுக்குப் போகிறவர்களுக்கும் கெரோசினும், குக்கிங் கேஸ்-ம் தான் உடனடி உதவியாக அமைந்திருக்கின்றன. விறகு விலை கொடுத்து வாங்க முடியாத அளவுக்கு, சாதாரண மக்கள் எட்ட முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இந்த நிலையில் விநியோகம் செய்யும் அமைப்பை அரசு நாட்டுடைமைப்படுத்தி வில்லையோ என்று நான் எனவே அதுதான் காரணமாக— அரசு இதில் போதிய அளவுக்கு கவனம் செலுத்த நாட்டில் இந்தப் பொருள்களுக்குப் பஞ்சம் இருப்பதன் காரணமாக—அடிக்கடி மார்க்கெட்டில் இவைகளை வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு பொதுமக்கள் கள்ள பொருள்களை விநியோகிக்க ஒரு நிரந்தரமான யந்திரத்தை உருவாக்கி, இந்தப் குறைந்தபட்சம் தங்களுக்குத் தேவையான பொருள்கள் எந்த நிலையிலும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும், கள்ள மார்க்கெட்டுக்குப் போகாமல





கிடைக்கும் என்ற அளவுக்கு மக்களுக்கு ஆதாரமும் உத்தரவாதமும் அளிக்க வேண்டும். ஆனால் இதுவரை அந்தவகை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். இன்றைக்கிருக்கிற நிலை இன்று அல்லது நாளையோ சரியாகிவிடலாம் என்றாலும்கூட, மீண்டும் இப்படிப்பட்ட நிலை வந்துவிடுமோ என்ற அபாயம் இருப்பதால், இதில் ஒரு நிரந்தரமான விநியோக அமைப்பை உருவாக்க வேண்டும், அதையும் விரைவில் செயல்படச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, நாட்டின் பெரும்பாலான ஏழை எளிய மக்கள், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோர் இதனால் பாதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவம்பற்றி விவாதிப்பதற்கு அவையின் ஏனைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உசொ. எட்மண்ட்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரபு நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் பெட்ரோலிய மூலப் பொருட்களின் வரவு சென்ற சில மாதங்களாகத் தடைபட்டுள்ளது. இதன் விளைவாக, மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் போன்ற பெட்ரோலியப் பொருட்களின் தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டு விடக்கூடாதென்ற கவலையில் மாநில அரசு மத்திய அரசுக்குச் சில கோரிக்கைகளை வைத்துள்ளது. தமிழகத்திற்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்பது அதில் ஒன்று. அனைத்திந்திய நிலைமையைக் கருதி இக் கோரிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஒதுக்கீடு செய்யப்படும் அளவை ஒழுங்காக விநியோகம் செய்வதற்காக அரசு சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும், கூட்டுறவு நிறுவனங்களினாலும் நடத்தப்படும் இராமக் கடைகளை மையமாக வைத்துக்கொண்டு, அதே சமயத்தில் கைவண்டி மண்ணெண்ணெய் விற்பனையாளர்களையும், மண்ணெண்ணெய் விற்பனையை மட்டுமே நிரந்தரத் தொழிலாகக் கொண்டிருக்கும் தனியார் வியாபாரிகளையும் இதில் ஈடுபடுத்திக்கொண்டு, சீரான விநியோகத்தை மேற்கொள்ள ஒருமுறை வகுக்கப்பட்டுள்ளது. இம்முறை பெரும்பாலும் திருப்திகரமாகவே இயங்கி வந்தது.

சென்ற 14 நாட்களாக அனைத்திந்திய அடிப்படையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஊழியர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து, 'மந்த வேலை இயக்கம்' நடத்தி வருகின்றனர். இதன் விளைவாகத் தமிழகத்திற்கு ஒதுக்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 8

பாதிக்கப்பட்டு, அதன் காரணமாக பஸ்கள் ஓடுவதைக்கூட குறைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுமோ என்ற அபாயம் ஏற்பட்டு, தற்காலிகமாக இப்போது அந்த அபாயம் நீங்கியிருக்கிறது என்றாலும், நிரந்தரமாக இதே நிலை ஏற்பட்டுவிடுமோ என்கிற பயத்திலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. இந்த நிலையைப் பொறுத்தவரையில், இது ஆண்டுக்காண்டு அல்லது சில மாதங் களுக்கு ஒரு முறை வந்துகொண்டிருக்கின்றது. இதிலே மாநில அரசு நேரடி யாக அதிகமாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும்கூட இந்த மாநிலத்தில் நடுத்தர வர்க்கத்தினர், ஏழையெளிய மக்கள் உபயோகப்படுத்தும் கெரோசின், சமையலுக்காகப் பயன்படுத்தும் 'கேஸ்' இவைகள் எல்லாம் கிடைக்காமல் திண்டாடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தம் என்ற மிரட்டல் வரும் போதே, இவைகள் எல்லாம் கிடைக்காது என்ற அச்சம் ஏற்பட்டு, அதன் விளைவாக சாதாரண குடும்பங்களிலே இருக்கின்ற பெண்கள் எல்லாம் கடை களுக்குச் சென்று க்யூவாக நிற்க வேண்டிய நிலையும், அங்கும் கிடைக்காமல் கள்ள மார்க்கெட் காரணமாக இன்றைய தினம் இந்தப் பிரச்சினை மேலும் அதிகரித்திருப்பது.

(பிற்பகல் 5-40.)

கடந்த ஆண்டு தொடர் கூட்டத்தில் இதேபோன்ற கட்டுப்பாடு நிலை பற்றி இந்த மன்றத்திலே நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து அதன்மீது பேசும்போதுகூட, நான் ஒரு கருத்தைத் தெரிவித்தேன். இந்தப் பொருள்களை விநியோகம் செய்கிற அமைப்பை அரசாங்கம் நிரந்தரப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தேன். தமிழகத்தில் இன்றைய தினம் ஏழை மக்களுக்கும், நடுத்தர வர்க்கத்தினருக்கும், அலுவலகங்களுக்குப் போகின்றவர்களுக்கும் கெரோசினும், குக்கிங் கேஸும் தான் உடனடித் தேவைகளாக அமைந்திருக்கின்றன. விறகு விலை கொடுத்து வாங்க முடியாத அளவுக்கு, சாதாரண மக்கள் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எனவே தனியாக இந்த நிலையில் விநியோகம் செய்யும் அமைப்பை அரசு தாமதப்படுத்தி வருவதன் காரணமாக— அரசு இதில் போதிய அளவுக்கு கவனம் செலுத்த வில்லையோ என்று எண்ணும் அளவுக்கு இருப்பதன் காரணமாக— நாட்டில் இந்தப் பொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு பொதுமக்கள் கள்ள மார்க்கெட்டில் இவைகளை வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்தப் பொருள்களை விநியோகிக்க ஒரு நிரந்தரமான இயந்திரத்தை உருவாக்கி, குறைந்தபட்சம் தங்களுக்குத் தேவையான பொருள்கள் எந்த நிலையிலும் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கும், கள்ள மார்க்கெட்டுக்குப் போகாமல்



1979 நவம்பர் 8] [திரு. க. இராமமூர்த்தி]

கிடைக்கும் என்ற அளவுக்கு மக்களுக்கு ஆதாரங்கள் உத்தரவாதம் அளிக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப் வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட அந்தளவு நடவடிக்கைகள் இன்றைக்கிருக்கிற நிலை இன்று படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். மீண்டும் இப்படிப் அல்லது நாளையதினம் பரிமாறிவிடலாம் என்றாலுங்கூட, இதில் ஒரு நிரந்தர பட்ட நிலை வந்துவிடுமோ என்ற அபாயம் இருப்பதால், அதையும் விரைவில் செயல் மான விநியோக அமைப்பை உருவாக்க வேண்டும், நாட்டின் பெரும்பாலான படச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, இதனால் பாதிக்கப் ஏழை எளிய மக்கள், மத்தியதர வர்க்கத்தினர் ஆகியோர் முக்கியத்துவம்பற்றி பட்டிருக்கும் காரணத்தால், இந்தப் பிரச்சினையின் வேண்டு விவாதிப்பதற்கு அவையின் ஏனைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உசொ. எட்மண்ட்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் பெட் ரோலிய மூலப் பொருட்களின் வரவு சென்ற சில மாதங்களாகக் குறைந்து உள்ளது. இதன் விளைவாக, மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் போன்ற பெட்ரோலியப் பொருட்களில் தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டு விடக்கூடா தென்ற கவலையில் மாநில அரசு மத்திய அரசுக்குச் சில கோரிக்கைகளை வைத்துள்ளது. தமிழகத்திற்கு ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்பது அதில் ஒன்று. அனைத்திந்திய நிலைமையைக் கருதி இக் கோரிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில் ஒதுக்கீடு செய்யப்படும் அளவை ஒழுங்காக விநியோகம் செய்வதற்காக அரசு சில ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மண் ணெண்ணெயைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும், கூட்டுறவு நிறுவனங்களினாலும் நடத்தப்படும் இராமக் கடைகளை மையமாக வைத்துக்கொண்டு, அதே சமயத்தில் கைவண்டி மண் ணெண்ணெய் விற்பனையாளர்களையும், மண்ணெண்ணெய் விற்பனையை மட்டுமே நிரந்தரத் தொழிலாகக் கொண்டிருக்கும் தனியார் வியாபாரிகளையும் இதில் ஈடுபடுத்திக்கொண்டு, சீரான விநியோகத்தை மேற்கொள்ள ஒருமுறை வகுக்கப்பட்டுள்ளது. இம்முறை பெரும்பாலும் திருப்திகரமாகவே இயங்கி வந்தது.

சென்ற 14 நாட்களாக அனைத்திந்திய அடிப்படையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஊழியர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து, 'மந்த வேலை இயக்கம்' நடத்தி வருகின்றனர். இதன் விளைவாகத் தமிழகத்திற்கு ஒதுக்

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1979 நவம்பர் 8

கப்பட்டுள்ள மண்ணெண்ணெய்யைக்கூட இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் தருவதற்கு இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மற்ற எண்ணெய்க் கம்பெனி களின் ஒதுக்கீட்டை வைத்துக்கொண்டு இதுவரை மண்ணெண்ணெயில் தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டுவிடாமல் நாம் நிலைமையைச் சமாளிப்பதில் வெற்றி கண்டுள்ளோம். இந்தக் கிளர்ச்சி தொடர்ந்து நீடித்தால், கவலைக் கிடமான நிலை உருவாகும்.

டெல்லியில் இது குறித்து நடக்கும் பேச்சுவார்த்தைகளின் பயனாக இன்னும் ஓரிரு நாட்களில் நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்று, சுமுகமான நிலைமை மீண்டும் திரும்பி, தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட மண்ணெண்ணெய்யை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஒழுங்காகக் கொடுக்கக் கூடிய நிலைமை உருவாகிவிட்டதால், சிக்கல் எதுவும் ஏற்படாது. நிலைமையை உன்னிப்பாக அரசு கவனித்து, விழிப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இதுவரை மண்ணெண்ணெய்யைப் பொறுத்த மட்டில், தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டுவிடவில்லை என்பதில் நாம் மன நிறைவு கொள்ளலாம்.

இம்மாநில அரசுடன் பெட்ரோலியப் பொருட்களின் சமப் பங்கீட்டில் தொடர்பு கொள்ளும் பொருட்டும், பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் தேவை நிலைகளை அறிந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்காகவும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் வட்டார அலுவலர் (விற்பனை) அவர் களை மாநில ஒருங்கிணைப்பாளராக மத்திய அரசு நியமித்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள எல்லாத் துறைகளுக்கும் தேவைக்கேற்ப வழங்கும் நிலையை அறிந்து டீசல் எண்ணெயை சமப் பங்கீடு செய்யும் பொறுப்பை இம்மாநில போக்குவரத்து ஆணையாளரிடம் இவ்வரசு ஒப்படைத்துள்ளது.

மாநில போக்குவரத்து ஆணையாளர் எண்ணெய்க் கம்பெனி இடங்களி லிருந்து சில்லரை வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளிடமிருந்து நுகர்வோருக்கும் டீசல் எண்ணெய்யைத் தட்டுப்பாடு இல்லாமல் எல்லா இடங் களுக்கும் கிடைக்குமாறு வகை செய்யும் அதிகாரத்தினை மாவட்ட ஆட்சி யாளர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

இம்மாநிலத்தின் கடந்த வருட அளிப்பு நிலையைக் காட்டிலும் இவ்வரு டத்தில் (1979-80) டீசல் எண்ணெய் தேவை 15 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மத்திய அரசின் பெட்ரோலியத்



1979 நவம்பர் 8] [திரு. க. உரோ. எட்மண்ட்]

துறை இம்மாநில அரசுக்குப் பல தொடர்புகளின் மூலம் டீசல் எண்ணெய் அளிப்பு நிலை கடந்த வருட அளிப்பு நிலையைக் காட்டிலும் 5 சதவிகிதத் திற்கு மேல் இருக்கலாகாது என வரையறை செய்துள்ளது. இவ்வரையறை யின்படி மத்திய அரசு இம்மாநில அரசுக்கு டீசல் எண்ணெய்யை கீழ்க்காணும் ஒதுக்கீடு முறையில் வழங்குவதற்கு வாக்குறுதி அளித்துள்ளது:—

| | |
|---|---|
| அக்டோபர் 1979 | 60,886 மெட்ரிக் டன்கள் |
| நவம்பர் 1979 | 58,636 மெட்ரிக் டன்கள் |
| டிசம்பர் 1979 | 60,283 மெட்ரிக் டன்கள் |
| ஜனவரி 1980 | 66,360 மெட்ரிக் டன்கள் |
| பிப்ரவரி 1980 | 54,754 மெட்ரிக் டன்கள் |
| மார்ச் 1980 | 73,421 மெட்ரிக் டன்கள் |

மாநில போக்குவரத்து ஆணையாளர் டீசல் எண்ணெய் வழங்குவதற்கான துறைகளைக் கீழ்க்காணும் முதன்மையை (Priority) கடைப்பிடிக்குமாறு அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

1. வேளாண்மைத் துறையில் பம்பு செட்டுகளுக்கும் மற்றும் டிராக்டர் களுக்கும்.
2. மீன்பிடி மரக்கலங்கள்.
3. சாலைப் போக்குவரத்து (பயணியர் மற்றும் சரக்குகள்).
4. விசைத் தறிகள் (பவர் லூம்ஸ்).
5. தொழில் துறையில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின் உற்பத்தி பெருக்குதல்.

மத்திய அரசின் ஒதுக்கீடு முறைக்குத் தகுந்தவாறு இம்மாநிலத்தில் டீசல் எண்ணெய் தேவையை சம பங்கீடு முறையில் பகிர்ந்து வழங்குவதன் பொருட்டு இம்மாநிலப் போக்குவரத்து ஆணையாளர் தமிழக அரசுக்கு ஒரு கட்டுப்பாடு ஆணை பிறப்பிக்குமாறு அதன் வரைவை அனுப்பியுள்ளார். இது குறித்து இந்த அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இம்மாநிலத்தில் கம்பெனி இடங்குகளிலிருந்து சில்லரை வியாபாரி களிடமிருந்து நுகர்வோருக்கும் உள்ள டீசல் எண்ணெய் பங்கீட்டு முறை பொதுவாக திருப்திகரமாகவே உள்ளது எனக் கூறப்படுகிறது. இம் மாநிலத்தில் டீசல் எண்ணெய் விவசாயிகளுக்கும் லாரி உரிமையாளர்களுக்கும்

தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிறது என்று மாநில போக்குவரத்து ஆணையாளர் மாநில அரசுக்கு அறிவித்துள்ளார். டீசல் எண்ணெய் விவசாயிகளுக்கும் லாரி உரிமையாளர்களுக்கும் கிடைப்பதில் தட்டுப்பாடு குறித்து குறிப்பாக என்னிடத்தில் அவ்வாறு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தால் அது குறித்து போக்குவரத்து ஆணையாளர் மாநில ஒருங்கிணைப்பாளருடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுப்பார்.

கடந்த அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி அன்று டெல்லி சென்று வந்த இம்மாநில போக்குவரத்து ஆணையாளர் மத்திய அரசுக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் இம்மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டதன் விளைவாக டீசல் எண்ணெயின் அளிப்புநிலை குறைவாகவே இருந்தது. ஆதலால் கடந்த வருடத்தின் மதிப்பீட்டை வைத்து இவ்வருடமும் நவம்பர் மாதத்தின் தேவையை மதிப்பீடு செய்யலாகாது எனக் கூறி இவ்வருடம் நவம்பர் மாதத்தின் எண்ணெய் ஒதுக்கீடு 58,636 மெட்ரிக் டன்கள் அதிகரிக்கப்படுதல் வேண்டும் என எடுத்துரைத்து அதில் அவர் வெற்றியும் கண்டுள்ளார்.

போக்குவரத்து ஆணையாளர் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் ஊழியர்களின் 'கோ-ஸ்லோ' வேலை நிறுத்தம் இன்று வாபஸ் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். எனவே நிலைமைகள் சீர்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. தட்டுப்பாடு இல்லாமல் டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் போன்றவைகள் தாராளமாகப் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலைமையை மாநில அரசு மிகவும் உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது தேவைப்படும் தகுந்த நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுத்து வருவதால் இதைப்பற்றி அவையில் விவாதிக்க அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு மெட்ரிக் டன் என்றால் 1.2 கிலோ லிட்டர் என்றார் . . .

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விதி 43-ல் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால், அதன் மீது அமைச்சரின் பதிலுக்குப் பிறகு விவாதத்திற்கோ, வினாவிற்கோ இடம் இல்லை.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** புள்ளிவிவரத்தில் ஏதோ பிழை இருக்கிறது என்கிறார். அதைப்பற்றி விளக்கலாமே. விதிகளில் அவ்வளவு கடுமையாக நாம் இருக்க வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அமைச்சர் அவர்கள் ஒரு மெட்ரிக் டன் என்றால் 1.2 கிலோ என்று குறிப்பிட்டார். அதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** ஒரு மெட்ரிக் டன் என்பது 1.21 கிலோ லிட்டரைக் குறிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## (2) சென்னையில் கண் நோய் பரவியிருப்பதைக் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சென்னையில் கண்நோய் பரவி இருப்பதைக் குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருந்தார். அவர் அவையில் இல்லாத காரணத்தால் அது கைவிடப்படுகிறது.

## (3) 15 உடற் பயிற்சி இயக்குநர்கள் வேலை நீக்கம் குறித்தும், அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்தும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. பா. ரா. தாமன், திரு ஆ நல்லசிவன், திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. செ. முத்துசாமி, திரு. ம. சங்கரலிங்கம் ஆகியோர் 15 உடற்பயிற்சி இயக்குநர்கள் வேலை நீக்கம் குறித்தும், 6—11—1979 முதல் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்தும் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்தி வைப்புத் தீர்மான விதிகளின்கீழ் வருகிறது என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதன்மீது பேச வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், ஒரு உறுப்பினர் சொன்ன கருத்தையே மற்றவர்களும் சொல்லாமல் முடிந்த அளவுக்குச் சுருக்கமாகத் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு பணியில் இருந்த 15 உடற்பயிற்சி ஆசிரியர்கள், சர்வீஸ் கமிஷன் வேறு சிலரைத் தேர்ந்தெடுத்தது என்ற காரணத்தால், பணியிலிருந்து திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்கள் அதைப்பற்றி உடனே முறையிட்டபோது, அவர்களை வேலையிலே அமர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பு வழங்கியும், கல்வித் துறையிலுள்ள அதிகாரிகள் இன்று வரையில் அதைச் செயல்படுத்தாததால், ஒரு பரிதாபகரமான நிகழ்ச்சி நடந்திருக்கிறது. வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகு, குடும்பச் சுமையின் காரணமாக மேற்கொண்டு வாழ்க்கையை நடத்த முடியாதென்பதால், தற்கொலை செய்து கொண்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் எல்லா விவரங்களையும் இங்கே தந்தால் விவாதம் தொடங்கியதாக அர்த்தமாகும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறிப்பிடுவதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட ஒன்றைச் சொன்னாலே போதும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆகவே வேலைநீக்கம் செய்யப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். திடீரென்று வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களின்பால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிவுடன் இருந்தும், அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டுமென்று நியாயமாக உணர்ந்தும், அது இன்று வரையில் ஏன் செய்யப்படவில்லை என்பது புரியவில்லை. அதன் காரணமாக உண்ணாவிரதம் இருக்கக்





கூடிய மகிழ்ச்சியற்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால், இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் கூறியதுபோல, 15 உடற்பயிற்சி இயக்குநர்கள் கடந்த 6, 7 ஆகிய இரண்டு தினங்களில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய பரிவும், ஆதரவும், கனிவும் இருந்தும்கூட, துரிதமாக இந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுக்காத காரணத்தால்தான், இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அவல நிலையால் ஏற்படக்கூடிய சிக்கலைப் பற்றி, சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏழு வருடங்களாகப் பணிபுரிந்த 15 உடற் பயிற்சி ஆசிரியர்களை வேலையிலிருந்து திடீரென்று நீக்கிவிட்டார்கள். கடைசியாக அமைச்சர் அவர்களிடம் இந்தப் பிரச்சினை போனபோது அவர்களுக்கு வேலை கொடுக்கும்படி சொன்னார்கள். ஹையர் செகண்டரி ஸ்கூல்களுக்கு 400 பிசிகல் டைரக்டர்கள் தேவையென்று கருதி, அதற்காக அரசு ஓர் உத்தரவை வெளியிட்டது. அதை பள்ளிக் கல்வித் துறையிலிருந்து திருப்பி அனுப்பிவிட்டார்கள். அமைச்சர்கள் அனுப்பும் உத்தரவைக்கூட பள்ளிக் கல்வி இயக்குநர் திருப்பி அனுப்பும் நிலைமை இந்தத் துறையிலே இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில் அந்த ஆசிரியர்கள் தங்களுடைய உண்ணாவிரதத்தை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு உடனடியாக வேலை அளிக்க ஏற்பாடுகளைச் செய்வதற்காக, இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவையில் இல்லை. அடுத்து, திரு. முத்துசாமி பேசுவார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முற்போக்கான மக்கள் உடல் நலம் பேணுவதற்காக, ஒரு தனி இலாக்காவையே ஏற்படுத்தி முயற்சியை மேற்கொண்டு அதற்காக இயக்குநர்கள், ஏழு ஆண்டுக் காலமாக இருக்கிறார்கள். ஆனால் 15 உடற் பயிற்சி

காலம் பணியாற்றிய பிறகு, வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டிருப்பதால், சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அரசை நம்பி பல ஆண்டுகள் பணியாற்றியவர்களை வெளியே அனுப்பக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே காரியங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு கடையிலே ஒருவன் 6 மாதங்களுக்கு வேலை செய்திருந்தால்கூட, அவனை வேலையிலிருந்து நீக்குவதற்கு வழியில்லை என்று சட்டம் இருக்கும்போது, ஏழு ஆண்டுக் காலமாகப் பணியாற்றிய ஆசிரியர்களை வெளியேற்றியிருக்கிறார்கள். ஆந்திரப் பிரதேசத்து முதலமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் தற்காலிகமாக இருக்கக்கூடிய ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் அத்தனை பேர்களுடைய பணிகளையும் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பாமலேயே ரெகுலரைஸ் செய்திருக்கிறார்கள் என்ற நல்ல நடைமுறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைப் போலவே இங்கேயும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முழு விவரத்தையும் சொல்ல வேண்டிய இல்லை. எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் சொன்னால் போதும்.

**திரு. செ. முத்துசாமி :** ஏற்கெனவே அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாததால்தான், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வாழ்வு அளிப்பதற்காகவும், அவர்களைச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்காகவும் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 உடற்பயிற்சி ஆசிரியர்கள் தாங்கள் வேலை இழந்ததை முன்னிட்டு சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அனைவரும் அரசுப் பணி புரிந்தவர்கள். தனியார் பள்ளிகளிலோ, தனியார் நிறுவனங்களிலோ ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டால் அந்த நிறுவனங்களின் மீது அரசு நடவடிக்கை எடுக்கிறது. ஆனால் அரசுத் துறையிலேயே ஏழு ஆண்டுகளாகப் பணி புரிந்தவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இது



மிகவும் வருந்தத்தக்க நிலை. ஆனால் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் விதிமுறைகள் இதற்கு இடையூறாக இருக்கின்றன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வாக்குறுதியை அளித்தும், நடவடிக்கை எடுத்தும், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதை ஒத்துக்கொள்ளாத நிலை இருப்பதால்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு விரும்பியும், அதைச் செய்ய முடியாத அளவிற்கு தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பது மிக அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய கருத்துக்களைச் சொன்னால், அரசுக்கு அது உதவியாக இருக்கும். இந்தத் தீர்மானம் மற்ற தீர்மானங்களைப் போல் அல்ல. இந்தத் தீர்மானத்தை விவாதிக்கிற போது, பப்ளிக் சர்வீஸ் கமிஷனை [illegible] என்ன செய்ய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவத்தையும், பிற மாநிலங்களில் உள்ள நடைமுறைகளையும் எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே இது இன்றியமையாதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கெனவே மூன்று பேர் சொல்லி விட்டனர்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அதற்கு ஒரு வழி இருக்கிறது. அதை எடுத்துச் சொல்வதற்காக இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள உடற்கல்வி இயக்குநர்கள் பதவி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் இருப்பதால், தேர்வாணைக் குழுவினால் நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டுதான் முறையாக அப்பதவிகளை நிரப்ப முடியும். தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையான நபர்கள் இல்லாமையினால், பள்ளிக் கல்வித் துறையில் இந்த உடற்கல்வி இயக்குநர் பதவிகள் முதன்மைக் கல்வி அலுவலர்களால் தற்காலிகமாக நிரப்பப்பட்டன. தேர்வாணைக் குழு நடத்தும் நியமனத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டாலன்றி, தற்காலிக பணியில் உள்ள உடற்கல்வி இயக்குநர்கள் எவரையும் தொடர்ந்து வைத்திருக்க இயலாது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 நவம்பர் 8

1979 ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு வினரால் நேரடி நியமனத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 உடற் கல்வி இயக்குநர்கள் அந்த ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டனர். இதன் விளைவாக தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக் கப்படாத தற்காலிகமாகப் பணியாற்றிய உடற் கல்வி இயக்குநர்கள் சிலர் வேலை இழக்க நேரிட்டு பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதில் 4 பேர்கள் மட்டுமே மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிகமாகப் பணியாற்றியவர்கள். இருந்தாலும் இம்முறை பதவி இழந்த 14 உடற் கல்வி இயக்குநர்களை மீண்டும் தற்காலிகமாக பணியிலமர்த்த அரசு அனுதாபத்துடன் கவனிக்கும். ஆனாலும் இவர்கள் தமிழ் நாடு தேர்வாணைக் குழுவினால் நேரடித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டாலன்றி முறையாக நியமனம் செய்ய முடியாது.

ஆகவே அவர்களுக்கு வாய்ப்புத் தாவிருக்கின்ற காரணத்தாலும், அவர் களும் நாம் சொன்னவற்றை ஏற்றுக்கொண்டு உண்ணாவிரதத்தைக் கைவிட் டிருக்கிற காரணத்தாலும், இதற்காக சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இப்பிரச்சினை குறித்து, அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

(4) கல்வி அமைச்சரின் வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் பொறுப்பாளர் உண்ணா விரதம் இருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. ஆ. நல்லசிவன் ஆகியோர் "கல்வி அமைச்சரின் வாக்குறுதி நிறைவேற்றப்படாததால் கல்லூரி ஆசிரியர் கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் பொறுப்பாளர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து" ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத் திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளுக்குட்பட்டு வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



1979 நவம்பர் 8]

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கல்லூரி ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திய போது கல்லூரிகள் மூடப்பட்டிருந்த நிலையிலே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியை எப்ரல் மாதத்தில் தந்தார்கள். 1—7—1979-க்குள் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய துணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்படுவார்கள் என்ற வாக்குறுதியைத் தந்தார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தவறான செய்திகளை மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துக்கொண்டிருக் கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்தினருடைய தகவல்களைத்தான் தெரிவிக்கிறேன். அவர்களுடைய கோரிக்கைகளில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைத்தான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தவறானது என்று சொன்ன பிறகு, அது மெய்யா இல்லையா என்பது விவாதத்திற்கு வர வேண்டிய விஷயம். ஆகவே இப்போது அதை விட்டுவிட்டு விஷயத்திற்கு வர வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மெய் என்று நிரூபிக்க நான் முயற்சி செய்ய வில்லை. அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகளில் உள்ளவற்றை நிறைவேற்றவில்லை என்பதால்தான் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். தேர்வு கள் நடக்கிற நேரத்தில் கல்லூரி ஆசிரியர்கள் போராட்டத்தில் இருந்தால், அதனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினையில், ஏற்கெனவே ஒப்புக் கொண்டவைகளை நிறைவேற்றாததால், ஏற்பட்டுள்ள பதட்ட நிலையை கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவையில் இல்லாததால், அடுத்து திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுவார்.

[1979 நவம்பர் 8

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்
களே, கல்லூரி ஆசிரியர்கள் பிரச்சினையில் மிக முக்கியமான பிரச்சினைகள்
இரண்டு. ஒன்று, தற்காலிக கல்லூரி ஆசிரியர்களை நிரந்தரப்படுத்துதல்;
இரண்டு, குறிப்பிட்ட பணிகளின் அடிப்படையிலே துணைப் பேராசிரியர்
களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துதல். இந்த இரண்டு மிக முக்கிய
மான கோரிக்கைகளைப்பற்றிய விவாதம் கூட முன்பு இந்த அவையிலே நடந்
திருக்கிறது. அந்தக் கோரிக்கைகளின்பால் மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்கள் அனுதாப உணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பது எங்களுக்குத்
தெரியும். ஆகவே இப்படி அனுதாப உணர்வோடு இருந்தும், பிரச்சினைகள்
தீர்க்கப்படாததால், இந்தப் பிரச்சினைகளில் ஒரு முடிவு காண மேலவையின்
இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-00)

*** திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, இந்த வருட பட்ஜெட்
செஷன்போது ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் பற்றி விவாதம் வந்தபோது
அரசின் சார்பிலே கொடுக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று
நேரடியாக ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுப்பது. இந்தப் பிரச்சினையில்
தனியார் நிறுவனங்களுடன் அரசு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டால்தான்
நேரடி ஊதியப் பட்டுவாடா நடைபெற முடியும். அரசு இந்த விஷயத்தில்
ஒரு முடிவு எடுத்து ஒரு ஆர்டர் போட்டால், அவர்கள் உடனே கோர்ட்டுக்குப்
போய் விடுகிறார்கள். தனியார் நிறுவனங்களுடன் பேசி அரசுடன்
ஒத்துழைக்ச் செய்து, அங்கு நேரடியாக ஊதியம் கொடுக்க முயற்சி எடுக்க
வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய முக்கியமான
வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதற்காக இந்த அவையின் இதர
அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 7—11—1979
அன்று கல்லூரி ஆசிரியர்கள், அனைத்துப் பல்கலைக் கழகங்கள் சார்பிலே
அவர்களுக்கு வழங்கப்பட்ட சில வாக்குறுதிகள் முழு அளவுக்கு நிறைவேற்றப்
பட வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்து மாநில அளவிலே தொடர்ந்து
போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படை
யிலேயே, அதை எடுத்துக்காட்டாக வைத்திருக்கிறார்கள். மாணவர்களுடைய



1979 நவம்பர் 8] [திரு. பா. ரா. தாமஸ்]

கல்வி நிலை பாதிக்காமல் இருக்க, ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள
வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலே இதர அலுவல்களை ஒத்திவைத்து
விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேலவைத் தலைவர் அவர்களே,
கல்லூரி ஆசிரியர்களின் சங்கங்களைச் சேர்ந்த கூட்டுச் செயல் குழுவின்
உறுப்பினர்கள் 7—11—1979 அன்று கல்வி அமைச்சரின் உறுதிமொழிகள்
நிறைவேற்றப்படவில்லை என்று தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி
பல்கலைக் கழகம் முன் உண்ணாவிரதம் இருப்பது அரசின் கவனத்திற்குக்
கொண்டுவரப்பட்டது. இந்த ஆண்டு தொடக்கம் பிப்ரவரி-மார்ச் திங்கள்
களில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கல்லூரி ஆசிரியர்களின்
சங்கங்கள் போராட்டத்தில் இறங்கின. அவர்களின் முக்கிய கோரிக்கைகள் :
(1) பணிப் பாதுகாப்பு அளித்தல், (2) பல்கலைக் கழக மானியக் குழுவின்
விகிதங்களை அமுல் படுத்தியதால் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்தல், (3)
மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைப்படி வீட்டு வாடகைப் படி மற்றும்
நகர்ப்புற ஈட்டுப்படி வழங்குதல், (4) தமிழ்க் கல்லூரிகளுக்கு யு.ஜி.சி. ஊதிய
விகிதங்கள் வழங்குதல், (5) பி.லிப். ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்
படுத்துதல், (6) பி.எச்.டி. படித்தவர்களுக்கு சிறப்பூதியம் வழங்குதல், (7)
கல்லூரி முதல்வர்களுக்கு விடுப்பு மற்றும் சேமநல நிதி கடன் வழங்க அதிகாரம்
அளித்தல், (8) முழு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை விஸ்தரித்தல், (9) 4
வருடம் பணி செய்த உதவிப் பேராசிரியர்களைப் பேராசிரியர்களாக பதவி
உயர்வு அளித்தல், (10) தற்காலிக ஊழியர்களின் பணி முறையை வரன்முறைப்
படுத்துதல், (11) நேரடி ஊதியம் வழங்குதல் போன்றவைகளாகும். அரசு இச்
சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேச்சு வார்த்தை நடத்தியது. அதைத்
தொடர்ந்து மேற்கூறியவைகளில் பல்வேறு கோரிக்கைகள்மீது அரசு ஆணை
வெளியிட்டுவிட்டது. எஞ்சியுள்ள சில கோரிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனை
யிலுள்ளது. தனியார் கல்லூரி ஆசிரியர்களின் பணி விதிமுறைகளைப்
பரிசீலனை செய்ய நிர்வாகம், அரசு, பல்கலைக் கழகம், கல்லூரி முதல்வர்,
பேராசிரியர் மற்றும் ஆசிரியர்/ஆசிரியரல்லாத சங்கங்களைச் சேர்ந்த பிரதி
நிதிகள் அடங்கிய குழுவை அரசு அமைத்தது. இக்குழு நேரடி ஊதியம்
வழங்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஆராய்ந்தது. 12—10—1979
அன்று நடந்த இக்குழுவின் கூட்டத்தில் எல்லாப் பிரதிநிதிகளும் நேரடி
ஊதியம் வழங்கும் திட்டத்தைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதைத்
தொடர்ந்து இது சம்பந்தமாக அரசு உத்தரவுகள் பிறப்பிக்க உள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 நவம்பர் 8

நிலையையை நன்கு அறிந்த பின்னும் இக்கோரிக்கையை வலியுறுத்தி ஆசிரியர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டது வருந்துதற்குரிய செயலாகும். இது தவிர, தற்காலிக ஆசிரியர்களின் பணிமுறைகளை வரன்முறைப்படுத்துவது குறித்து தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவிற்கு அரசு எழுதியுள்ளது. பல வருடம் பணி செய்த உதவிப் பேராசிரியர்களை பேராசிரியர்களாகப் பதவி உயர்வு செய்வது குறித்து சில விளக்கங்கள் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்பொருள் குறித்து பல்கலைக் கழக துணை வேந்தர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோருடன் பலமுறை விவாதிக்கப்பட்டது. இது குறித்து அரசு விரைவிலேயே ஒரு முடிவு எடுக்கும். ஆக, ஆசிரியர்களின் பிரச்சினைகளை அரசு அவ்வப்போது பரிவுடன் கவனித்து தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது நன்கு புலப்படும். எஞ்சியுள்ள கோரிக்கைகளின் மீதும் விரைவிலேயே ஆணை வெளியிடப்படும். சங்கப் பிரதிநிதிகளுடன் அவர்கள் கோரிக்கையில் சுமுகமான சூழ்நிலையில் பேச்சு நடத்த அரசு எப்பொழுதும் தயாராக உள்ளது. அதை விடுத்து உண்ணாவிரதத்தில் அவர்கள் இறங்கியது துரதிருஷ்டவசமே. அவர்கள் ஒரு சுமுகமான தீர்வுக்கு வழி காண ஒத்துழைப்பார்கள் என்று அரசு நம்புகிறது. ஆகவே இதற்காக இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று கருதி என் அனுமதியை மறுக்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### உள்ளாட்சித் துறை அமைச்சர் ஒரு கேள்விக்கு அளித்த பதில் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவல் சம்பந்தமாக ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்துள்ளார்கள். அது எவ்வாறு இந்த விதியின் கீழ் வருகிறது என்பதை விளக்க வேண்டும்.



1979 நவம்பர் 8]

**திரு. செ. முத்துசாமி**: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த அக்டோபர் 27 ஆம் தேதி, 14-வது கேள்விக்குப் பதில் அளிக்கும்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டிருந்தது, 5 பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றும் ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் சம்பளம் மறு நிர்ணயம் செய்யப்பட்டதா என்பதைப் பற்றிக் கேட்டிருந்தேன். அந்த ஐந்து பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரே அரசாணையை வைத்து நிர்ணயம் செய்யப்பட்டதா என்று கேட்டிருந்தேன். அதிலே 2, 3 பஞ்சாயத்து யூனியன்கள் மீது நடவடிக்கை எடுத்து விட்டு, சேலம் மாவட்டத்தில் உள்ள மேச்சேரி, காடையாம்பட்டி பஞ்சாயத்தின் மீது நடவடிக்கை எடுத்து அப்படி நிர்ணயிக்கப்படவில்லை என்று இங்கே பதில் சொன்னார்கள். அந்தப் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த அளவில், அப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு எனக்கு, நான் ஒரு உறுப்பினன் என்ற காரணத்தால், பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஆதாரபூர்வமாக விவரம் வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அப்படி நிர்ணயிக்கவில்லை என்று கொடுத்த தகவல் தவறானது என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து**: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டுள்ள கேள்வி 27—9—1978 நாளிட்டதாகும். அந்தத் தேதியில் அமுலில் இருந்த தலைமையாசிரியருக்கு மாறாக ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதா என்பதே உறுப்பினரது கேள்வி. அந்தத் தலைமையாசிரியருக்கு மாறாக அதாவது 11—4—1974-ல் இடப்பட்டிருந்த தலைமையாசிரியருக்கு மேச்சேரியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதே எனது பதிலாகும். 11—1—1979 நாளிட்ட ஆணை எண் 65 பற்றி உறுப்பினர் தனது கேள்வியில் எதுவும் குறிப்பிடவில்லை. அரசின் தலைமையாசிரியர் பற்றி 11—1—1979 மட்டுமே குறிப்பிட்டுள்ளார். உண்மையில் இந்தத் தலைமையாசிரியர் 13—2—1979 நாளிட்ட ஆணை எண் 65-ன் படி நீக்கப்பட்டுவிட்டது. ந. க. 1175/79 நாளிட்ட மேச்சேரி ஒன்றிய ஆணையாளரின் நடவடிக்கை எண் அதற்குப் பிறகு வெளியிடப்பட்டது. மேற்கூறிய காரணங்களுக்காக 27—10—1979 அன்று மேலவையில் உறுப்பினர் திரு. முத்துசாமி கொடுத்த வினா எண் 14-க்கு அளிக்கப்பட்ட பதில் முற்றிலும் சரியானதே. இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினைக்கும் இடமில்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: இந்த உரிமைப் பிரச்சினை பற்றிய என்னுடைய தீர்ப்பை பின்னர் வழங்குகிறேன்.

## 4. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செயல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (2) பேரவையிலிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் நிர்மாணிக்கப்பட்டு அவரது கையொப்பத்துடன் இம்மேலவையின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, பந்தயமாட்ட மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன—

1. தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செயல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு.

2. தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு.

3. தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த மற்றும் விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

4. தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு திரையரங்கங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.



### (3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 8—11—1979 ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி, சட்டமன்ற மேலவையின் நடப்புக் கூட்டத் தொடரின் அலுவல் விவரம்.

| | | |
|---|---|---|
| 9—11—1979 | மாலை 4 மணி முதல் 7 மணி வரை | அரசின் சட்ட முன்வடிவுகள். |
| 10—11—1979 | | கூட்டம் இல்லை |
| 11—11—1979 | | ஞாயிறு-விடுமுறை |
| 12—11—1979 | காலை 10 மணி முதல் 1 மணி வரை | அரசின் சட்ட முன்வடிவுகள் |
| | 1 மணி முதல் 1-30 மணி வரை | தொழிற்சாலைகள் கதவடைப்பு—முதல் குறித்த வினா எண் 90 மீது அரை மணி நேர விவாதம். |
| | மாலை 4 மணி முதல் 7 மணி வரை | அரசின் சட்ட முன்வடிவுகள். |
| 13—11—1979 | காலை 10 மணி முதல் 1 மணி வரை | அரசின் சட்டமுன்வடிவுகள். |

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம். திருவாளர்கள் பா. ரா. தாமஸ், கெ. ரா. லெட்சுமிகாந்தன், செ. முத்துசாமி அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

## 5. தகவல் கோரல்.

### (1) அரை மணி நேர விவாதம் குறித்து.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நான் இப்போது ஒத்துக்கொண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றிச் சொல்லவில்லை. வாகைக்குளம் சூடு பற்றி இங்கே டேபிளில் ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அதைக் குறித்து அரை மணி நேரம் விவாதம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். தொழில் பிரச்சினை எவ்வளவு முக்கியமான பிரச்சினையோ அதுபோல இதுவும் முக்கியமானதுதான். அதற்கும் அரை மணி நேர விவாதம் அனுமதித்தால், அது சம்பந்தமாக நீண்ட விளக்கம் கொடுப்பார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதுபற்றி மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் வற்புறுத்த வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, சேலம் கலைக் கல்லூரியைப்பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** நான் கேட்கும் விஷயம், வாகைக்குளம் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி ஒரு கமிஷன் ரிப்போர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது அரை மணி நேரம் விவாதம் பற்றிக் கேட்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. நாளைக்குச் சொல்கிறேன்.

(பிற்பகல் 6-10)

## (2) ஒத்தி வைப்புத் தீர்மானம் குறித்து.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால், அவைக்கு வருவதற்கு முன்பு, என்னுடைய அறைக்கு வந்து, தகவல் கேட்டுக்கொள்ள வேண்டும். இங்கே கேட்பதால் பயன் உண்டு என்பது எனக்கும் தெரியும். இருந்தாலும், அறையில் கேட்பதுதான் மரபு.

## 6. கவன ஈர்ப்பு.

(1) தமிழ் நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைச் சட்டம் 1973-க்கு டிரிபியூனல்களுடைய அதிகாரம் பற்றித் திருத்தம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திருவாளர்கள் பா. ரா. தாமஸ், கி. ரா. லெட்சுமிகாந்தன், செ. முத்துசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். திரு. பா. ரா. தாமஸ்.



**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

“தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைச்) சட்டம் 1973-ன்படி அமைக்கப்பட்டுள்ள டிரிபியூனல்களுக்கு ஆணைகளைச் செயல்படுத்துவதற்கு உரிய அதிகாரங்கள் அந்த டிரிபியூனல்களுக்கு இல்லாததால், பாதிக்கப்படுகின்ற ஆசிரியர்களுக்கு டிரிபியூனல்கள் நீதி வழங்கும் பொழுது அதன் பலனை ஆசிரியர்கள் அனுபவிக்க முடியாமல் பல்வேறு இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாவதால் இந்தக் குறைபாட்டை நீக்குவதற்குத் தேவையான அம்சங்களைத் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறைச் சட்டம் 1973-ல் சேர்க்க வேண்டுமென்று அண்மையில் உயர்நீதி மன்றத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதால் தோன்றியுள்ள புதிய நிலைமைகள் குறித்து”.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, ஓர் அறிக்கை @ அவையின்முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி வழங்கிய தீர்ப்பின்படி, ஆசிரியர்களுக்குள்ள சாதகத்தை டிரிபியூனல்கள் நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தென் ஆற்காடு மாவட்டத்தில் ஓர் ஆசிரியருக்கு வழங்கிய தீர்ப்பை இந்தச் சட்டத்தால் அமல்படுத்த முடியவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே கல்வித் துறையானது ஆசிரியர்களுக்கு ஊதியத்தை நிறுத்தலாம். சட்டத்திலுள்ள அதிகாரத்தின்படி நடுவர் மன்றத் தீர்ப்பை அமலாக்க முடியாது. இதன் அடிப்படையில் பள்ளியின் அங்கீகாரத்தை நிறுத்தலாமென்றுதான் இருக்கிறது. எனவே ஆசிரியர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைத்து, ஆசிரியர்களுக்குப் பலன் கிடைக்கும் அளவிலே ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ 405 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறைச்) சட்டம் 1973-க்கு டிரிபியூனல்களுடைய அதிகாரம் பற்றித் திருத்தம் குறித்து

[1979 நவம்பர் 8

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நீதி மன்ற நீதிபதியின் தீர்ப்பின் சான்றிட்ட நகல் கிடைத்தவுடன் அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைச்) சட்டம், 1973-லே ஏராளமான குறைகள் இருக்கின்றன என்று பல முறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்கு ஒரு அத்தாட்சியாக மதிப்பிற்குரிய உயர்நீதிமன்ற நீதிபதி ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர், ஒரு குறிப்பிட்ட அம்சம் பற்றித் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வேறு பல குறைபாடுகள் இருப்பதால், அதைப் பற்றி விரிவாக ஆய்வு நடத்தி, சட்டத் திருத்தம் கொண்டுவர அமைச்சரவர்கள் வாக்கு அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதில் வேறுபல குறைபாடுகள் இருப்பதாக உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதையும் பரிசீலிக்க அரசு தயாராக இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** சமீபத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பிலே டிரிபியூனல் தீர்ப்பு வழங்கிய பின்னரும், அதன் பலனை ஆசிரியர்கள் அனுபவிக்க முடியவில்லை, மீண்டும் சிவில் கோர்ட்டுக்குப் போக வேண்டிய பரிதாபகரமான சூழ்நிலை இருக்கிறதென்று மாண்புமிகு நீதிபதி அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். சிவில் வழக்கு தலைமுறை தலைமுறையாக நடக்கும் சூழ்நிலை ஏற்படும். எனவே டிரிபியூனல் தீர்ப்பை உடனடியாக அமல் நடத்த விதிகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதுகூட . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதற்கு, விளக்கம் கேட்கிற அளவிற்குத்தான் விதி அனுமதிக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தீர்ப்பைப் பற்றிச் சொல்லியிருப்பதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விளக்கம் மட்டும் கேளுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** ஆபத்தைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஆபத்தைப் போக்க அரசு தயாராக இருக்கிறது. (சிரிப்பு).



## (2) அருப்புக்கோட்டை எஸ். பி. கே. கலைக் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

1979 நவம்பர் 8]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் ம. சங்கரலிங்கம், வே. தங்கப்பாண்டியன், சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ், க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ம. சங்கரலிங்கம் . .

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் :

"இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை எஸ். பி. கே. கலைக் கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்கள் வேலை நிறுத்தம், உண்ணாவிரதம் இருப்பது குறித்து"

---

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, ஓர் அறிக்கை @ அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** விவர அறிக்கை அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்டாலும், அது குறித்து சிறப்பான முயற்சி எடுக்கப்பட்டால், ஆசிரியர்கள், மாணவர்கள் வேலை நிறுத்தத்தைப் போக்க முடியும். அந்தக் கல்லூரி நிர்வாகம், இன்றைய தினம் கல்லூரி முதல்வரை வேலையிறக்கம் செய்துள்ளதால், இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு, இதில் சுமுகமாகத் தீர்வு காண முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் முயற்சி செய்கின்றேன்.

---

@ 406 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 8

**திரு. ம. சங்கரலிங்கம் :** பல்கலைக் கழகம் ஒரு குழுவை அனுப்பி, அந்தக் குழுவின் அறிக்கையை ஒட்டி, முதல்வரைத் திரும்பவும் முதல்வர் பதவியில் நியமிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அரசும் எடுத்துச் சொல்லியது. ஆனால் நிர்வாகம் அதை ஏற்க மறுக்கிறது. இப்படி அரசினுடைய அறிவுரையை, ஆணையை அல்லது பல்கலைக் கழகத்தினுடைய ஆணையை மீறுகிற கல்லூரிகளை அரசே தற்காலிகமாக எடுத்து நடத்தும் வழிமுறை இருக்கிறது. அப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் லட்சுமிபுரம் கலைக் கல்லூரியையும், பாய்னீர் குமாரசாமி கல்லூரியையும் அரசே தற்காலிகமாக எடுத்து நடத்துகிறது. அப்படி இந்த அருப்புக்கோட்டை எஸ். பி. கே. கலைக் கல்லூரி நிர்வாகமும் அரசு ஆணையை, அறிவுரையை ஒப்புக்கொள்ளாததால், தற்காலிகமாக அந்தக் கல்லூரியை அரசு எடுத்து நடத்துமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது அவர்கள் அரசுக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். அதன் முடிவைப் பொறுத்து, மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தினர், தங்களது சங்கத்தைச் சேர்ந்தவர் முதல்வராக நியமிக்கப்படவில்லை, அதனால்தான் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற எண்ணத்தை அறிக்கை ஏற்படுத்துகிறது. இது பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்திற்குத் தவறான உள் நோக்கம் கற்பிக்கிறது. இல்லாத ஒரு காரணத்தை இருப்பதாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதில் மறைக்க வேண்டிய இரகசியம் ஒன்றுமில்லை. இப்போது பல்வேறு கல்லூரிகளிலே ஆசிரியர்கள், தங்களுக்குத் தேவையானவர்கள் பிரின்சிபாலாக இருக்க வேண்டுமென்று போராடுகிறார்கள். பிடிக்கவில்லை என்றால், செல்லம்மாள் கல்லூரி போன்றவைகளில், அந்தக் கல்லூரி பிரின்சிபாலை நீக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சங்கத்தில் சேர்ந்துவிட்டதாலேயே, இஷ்டம்போலப் பேசும் வாய்ப்பை இன்று பெற்றிருக்கிறார்கள். அதை உறுப்பினரவர்கள் மறுக்கக் கூடாது. நானும் மறுக்க முடியாது.



1979 நவம்பர் 8]

**திரு. பா. ரா. தாமஸ் :** அருப்புக்கோட்டை கல்லூரி சென்ற ஆண்டும் பல ஒழுக்கக் கேடுகளுக்கு உட்பட்டு, முறையாக நடைபெறவில்லை. இந்த ஆண்டும் 24 ஆம் தேதியிலிருந்து ஆசிரியர்கள் மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து, உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னதுபோல, அங்கே கல்வி பாதிக்கப்படுவதால், அந்தக் கல்லூரியை அரசே மேற்கொண்டு, சில ஆண்டுகளுக்கு நடத்தி, கல்வி பாதிக்காத அளவிற்கு இருக்க, அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசினுடைய யோசனையை, ஆணையை ஏற்றுக்கொள்ள மறுக்கிற நிலையில்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அரசின் தீர்மானம்.

## அலுவல் வரிசையில் மாற்றம் குறித்து

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"மேலவை விதி 21 (3)ன் கீழ் இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள சட்டமுன்வடிவுகளில், 8ஆம் இனமான தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்டமுன்வடிவு முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தமட்டில், நிகழ்ச்சி நிரலில் போட்டுள்ள வரிசை அளவிலேதான் நாங்கள் தயாரித்துக்கொண்டு வருகிறோம். சாதாரணமாக ஒரு நாளைக்கு 6, 7 சட்ட முன்வடிவுகள்தான் வரும். அதற்கான குறிப்புகளோடு வந்திருக்கிறோம். எனவே முழுமையாகத் தயாராக இல்லாத நிலையில், அவற்றுக்குத் திருத்தங்கள் கொடுக்காத நிலையில், இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது. எனவே தயவுசெய்து வரிசைப்படி எடுக்க, மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்ன அவகாசம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள் ?

**திரு. க. இராமமூர்த்தி :** நாளை இதை எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** குதிரைப் பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தலைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்துக்களைச் சொல்வதில் இடர்ப்பாடு எதுவும் இருக்கப் போவதில்லை. தேவைப்பட்டால் அந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யும்போது, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் தேவையான விளக்கம் தருவார்கள். இது இன்றைக்கே திருப்பி அனுப்பப்பட்டால்தான், வழக்கு மன்றத்தில் அரசின் சார்பாகக் கருத்துக்களைச் சொல்ல முடியும். எனவே இதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"மேலவை விதி 21 (2)-ன் கீழ் இன்றைய அலுவல் பட்டியலில் இடம் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளில், 8 ஆம் இனமான தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு முதலில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

**தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.**

(பிற்பகல் 6.20)

**8. அரசின் சட்ட முன்வடிவு.**

**தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே . . .

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குதிரைப் பந்தயம் (முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவை முன்மொழிகின்றபோது சற்று விரிவாகவும்





விளக்கமாகவும் அதுபற்றிய விவரங்களைத் தெரிவித்தால், எங்களுடைய கருத்துக்களை நாங்கள் தெரிவிக்க வாய்ப்பாக இருக்கும். காரணம் இது பற்றிய வழக்கு ஒன்று ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. மீண்டும் இதுபோன்று அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகாமல் இருக்கும் வகையில் மிகுந்த கவனத்தோடு இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** விரிவாக விளக்கம் தேவை.

* **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** முகவர் நிறுவனங்களை ஒழிக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவை பேரவையிலே கொண்டு வந்து அங்கு நிறைவேற்றப்பட்டு மேலவைத் தலைவரவர்களின் அனுமதியின்பேரில் இங்கேயும் அதை நிறைவேற்ற வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறேன். ஏன் இந்தச் சட்டம் அவசரச் சட்டமாகக் கொண்டுவரப் பட்டது என்றால், சென்னையிலே என்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், வீதிகளில், கடைகளில் எல்லா இடங்களிலும் சூதாட்டங் கள் நடத்திக் கொண்டிருந்தார்கள். குதிரைப் பந்தயம் என்றாலே சூதாட்டம் என்பது வேறு. பந்தயம் நடக்கும் இடத்திலே போய் சூதாடுவது என்பது நடக்கும் இடத்தை விட்டு வெளியே வேறு இடங்களில் சூதாடுவது என்றால்; வேறு. அப்படி பந்தயம் நடக்கும் இடத்திலே போய் சூதாடுகிறார்கள். வெளியே சாதாரணமாக ஒரு குதிரைக்கு 5 ரூபாய் என்று சொல்லுகிறார்கள். பொது சூதாடுகிற போது 50 பைசா, 75 பைசா, 1 ரூபாய் என்றெல்லாம் மக்களை சூதாட வைக்கிறார்கள். சமுதாயத்திலுள்ள ஏழையெளியவர்கள், எதும் அறியாதவர்கள் இப்படிப்பட்டவர்கள் வீதியிலே போகிறபோது "நீங்கள் குதிரைப் பந்தயத்திற்கு 5 ரூபாய் கட்ட வேண்டாம், 50 பைசா கொடுத்தால் போதும், நீங்கள் பந்தயத்தில் ஜெயிக்க முடியும், உங்களுக்குப் பங்குத் தொகை வரும்" என்று சொல்லி ஆயிரக்கணக்கான கடைகளை வைத்துக்கொண்டு

@ 407-410 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது

[திரு. எல். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 8

இலட்சக்கணக்கான [illegible] தெரியாத ஏழையெளிய மக்களை ஏமாற்று
கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கே [illegible] பந்தயம்
நடந்தாலும், இங்கே கிண்டியிலே [illegible] குதிரைப் பந்தயம் நடை
பெறுகிறது. [illegible] மக்களுக்கு [illegible] டிக்கட் வாங்கும்
[illegible] அப்படி
டிக்கெட் கொடுக்காமல் ஆதரிக்கும்போது இலட்சக்கணக்கான ஏழை மக்கள்
ஏமாற்றப்படுகிறார்கள். அவர்களை [illegible]
சூதாட்டத்திலிருந்தும் காப்பாற்ற வேண்டும், பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்
என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர, வேறு
ஒன்றுமில்லை. இதிலே [illegible] ஒன்றும் இல்லை. இது ஒரு கொள்கை
தான். [illegible] என்பது
தான் இங்கே பிரச்சினை. ஏழையெளிய மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க
[illegible], இந்தச்
சட்டத்தை ஆதரிப்பார்கள். ஏழையெளிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க
வேண்டாம், அவர்களை சூதாட்டத்திலிருந்து காப்பாற்ற வேண்டாம் என்கிற
எண்ணம் இருந்தால், ஆதரிக்க வேண்டாம். (சிரிப்பு) ஏதோ ஒரு சட்டம்
வருகிறது என்கிற வகையில் ஆதரிக்க வேண்டாம். [illegible] நீங்கள்
சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்காக, சமுதாயத்திற்கு முன்னேற்றத்தைக்
கொண்டு வருவதற்காக [illegible] இருப்பது போல்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது என்று கருதுகிறேன்.
ஆதலால் எல்லோரும் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை
ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 63/1979) [illegible] வேண்டும்".

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே
குதிரைப் பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல் சட்ட
முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்ற சூழ்நிலை, இதனுடைய நோக்க



1979 நவம்பர் 8] [திரு. க. இராமமூர்த்தி]

[illegible] செய்ய வேண்டிய
தொன்றை எல்லாம் [illegible] தெரிவித்துக்கொள்
[illegible] இருக்கிறது என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்
கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருக்கே உரிய முறையிலே
[illegible] காரியத்தை முடித்துக்கொள்ள வேண்டு
[illegible] வெற்றி பெற முயன்றிருக்கிறார்கள்
[illegible] நாம் பார்த்தாக
என்றாலும், இங்கே இருக்கின்ற உண்மை நிலைமை [illegible]
வேண்டும். ஏழையெளிய மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால்,
[illegible] வேண்டுமென்றால், சட்ட முன்வடிவை
[illegible]
[illegible] நேர் மாறாக, நேர் எதிராக
தெரிவித்தார்கள். [illegible] கொண்டிருக்கின்றன என்பதை
இன்றைக்கு [illegible] நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை
நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க அரசு என்ன ஆர்வம் இதுவரை காட்டி
யிருக்கிறது? குதிரைப் பந்தயத்தோடு தொடர்புடைய ஒன்றை ஒழிக்கத்
தான் அரசு ஆர்வம் காட்டி இந்தச் சட்ட முன்வடிவை கொண்டு
வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் குதிரைப் பந்தயத்தை அறவே ஒழிக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டும் கூட, இன்றையதினம் இது சம்பந்தமாக உச்ச
நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வழக்கை
[illegible] நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படி
துரிதப்படுத்த இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அப்படி
எடுத்திருந்தால், குதிரைப் பந்தயத்தை தமிழ்நாட்டிலிருந்து அறவே ஒழிக்க
இன்ன இன்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று மிகத் தெளிவாக
அரசு சொல்லியிருக்கலாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, மின்சாரத்
துறை அமைச்சர் அவர்கள் அவையில் இன்டரெஸ்டிங்காக, சுவையாக ஏதோ
ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அது குதிரைப் பந்தயம்
சம்பந்தப்பட்ட புத்தகமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே,
குதிரைப் பந்தயத்தில் உறுப்பினருக்கு இவ்வளவு அக்கறை இருக்கும் என்று
நான் நினைக்கவில்லை. (சிரிப்பு) சனிக் கிழமை இந்தப் புத்தகத்தைத்
தருகிறேன்.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவரவர்களே, அவை
நடக்கும்போது அமைச்சர்களோ, உறுப்பினர்களோ பேசலாம் அல்லது
புத்தகம் படிக்கலாமா?

[1979 நவம்பர் 8

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** சட்டசபை அலுவல் தொடர்பான புத்தகங்கள் படித்துக் கொண்டிருக்கலாம். அமைச்சர் அவர்கள் சட்டசபை அலுவல் தொடர்புடைய விஷயங்களைத் தான் படித்துக்கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு)

*** திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் இருக்கின்ற அந்த வழக்கை துரிதப்படுத்த, வேகப்படுத்த, வெற்றி காண நடவடிக்கைகளை எடுப்பதில் அரசு தன்னுடைய தரப்பிலேயிருந்து உரிய ஆர்வம் காட்டவில்லை, அக்கறை காட்டவில்லை. அதுமட்டுமல்ல, குதிரைப்பந்தயத்தை மேலும் உற்சாகப் படுத்துகின்ற வகையில் சில நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் பல செய்திகள் வந்திருக்கின்றன. ஒன்று அந்த குதிரைப் பந்தயக் கிளப்புக்காக அவர்கள் அரசின் நிதி உதவி வேண்டும் கோரிக்கையாக வைத்து, அதனை ஏற்கனவே மறுக்கப்பட்ட பிறகு இந்த அரசு மீண்டும் வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்கிற தகவல் வந்திருக்கிறது. குதிரைப் பந்தயத்தையே அறவே ஒழிப்பது என்ற முயற்சியையும் எடுத்து, கொள்கை அடிப்படையிலே திட்டமும் தீட்டி, அதற்கான நடவடிக்கைகளையும் எடுக்காமல், இன்றைக்கு அரசின் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் குதிரைப் பந்தயத்தை நடத்துகின்றவர்களை அரசு உற்சாகப்படுத்துகின்ற நிலை உருவாகியிருக்கிறது. இத்தகைய அரசின் நடவடிக்கை மூலம் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, குதிரை வளர்ப்பவர்கள் "குதிரைப் பந்தயம் நடத்துவதற்காக மட்டும் நாங்கள் குதிரைகளை வளர்க்கவில்லை" குதிரைகளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் குதிரைகளை வளர்க்கிறோம்" என்று சமீபத்திலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குதிரைப் பந்தயத்தை இந்த அரசு சூதாட்டமாகக் கருதுகிறது என்பது உண்மையாக இருக்குமானால், அரசின் தரப்பிலே இருப்பவர்கள் அல்லது அரசில் தலைமையை ஏற்றிருப்பவர்களுடைய பெயரால் அங்கே பந்தய கப்புகள் இருப்பது நியாயமல்ல, இருக்கவும் கூடாது. அது மட்டுமல்லாமல் குதிரைப் பந்தயத்தை நடத்துகின்றவர்களுடைய கிளப் கூட்டம் (Race Club meeting) கூட தனி முதலாளிகளின் வீடுகளிலே நடைபெறுகிறது. இதை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்தக் கூட்டங்களுக்கு நம்முடைய அரசு



1979 நவம்பர் 8] [திரு. க. இராமமூர்த்தி]

அதிகாரிகள் போய் கலந்துகொள்கின்றனர். அந்த அளவுக்கு அவர்களுடைய செல்வாக்கு மிகுந்திருக்கிறது. இன்றைய தினம் குதிரைப் பந்தயம் நடத்துகின்றவர்கள் தங்களுடைய வீடுகளிலேயே (Race Club) கூட்டத்தை நடத்தி அதிலே அரசு அதிகாரிகளைப் பங்கேற்கச் செய்யும் அளவுக்கு நிலை உருவாகியிருக்கிறது. இந்த அரசு உண்மையிலேயே குதிரைப் பந்தயத்தை ஒழிக்க முடியுமா, ஒழிக்கப் போகிறதா என்கிற சந்தேகம் கூட எழுந்திருக்கிறது. இந்த 'டர்ப்' களை எல்லாம் ஒழிப்பதன் மூலம் 50 பைசா 1 ரூபாய் கட்டி சூதாடுகின்ற ஏழையெளிய பாமர மக்களை அரசு காப்பாற்றப் போகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 8 அணா அல்லது 1 ரூபாய் மட்டுமல்ல, எத்தனை 8 அணாக்களை, எத்தனை 1 ரூபாய்களை அந்த ஏழையெளிய பாமர மக்கள் யாருக்கும் தெரியாமல், பற்றாக்குறை, தட்டுப்பாடு, கள்ளச்சந்தை ஆகியவற்றை ஒழிக்க அரசு கொட்டி முறையான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தால்,

(பிற்பகல் 6-30)

அளந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அன்றாடம் கண்டு வருகிறோம். அந்த நிலையில், 8 அணா, 1 ரூபாய் பந்தயம் வைத்து ஆடுபவர்களுக்கு நாங்கள் பாதுகாப்புக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்வதன் மூலமாக, நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்கின்றீர்கள். நான் ஒன்றை அறிந்து கொள்ள விரும்புகிறேன். 8 அணா, 1 ரூபாய் என்று சொல்லுவது அவர்கள் கட்டுகின்ற பந்தயத்தொகையாக இருக்கலாம். 8 அணா, 1 ரூபாய் என்று வைத்தே ஒரு நபர் ஒரு ரூபாய்க்கு மேல் அல்லது 5 ரூபாய்க்கு மேல் ஆடவில்லை என்று அரசு உறுதியாகச் சொல்ல முடியுமா? அப்படிப் பந்தயம் வைத்து கலந்து கொள்பவர்கள் இதை நிறுத்தினால், மறுபடியும் கிண்டி ரேசுக்குப் போகப் போகிறார்கள். ஆகவே, பந்தயத்திலே கலந்துகொள்கின்ற எண்ணத்தை அடக்குவது வேறு. குதிரைப் பந்தயத்தை நடக்க விட்டுவிட்டு, 8 அணா ஒரு ரூபாய் வைத்து ஆடுகிறவர்கள், இவர்கள் ஏழைகள், 5 ரூபாய் வைத்து ஆடுபவர்கள் பணக்காரர்கள் என்று கம்யூனல் ஜி.ஓ.வுக்குக் கொடுக்கும் விளக்கத்தைப் போன்று, இதற்கும் விளக்கம் சொல்லிக்கொண்டிருப்பது அரசுக்கு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 8 அணா, 1 ரூபாய் வைத்து ஆடுபவர்கள் ஏழைகள், 5 ரூபாய் வைத்து ஆடுபவர்கள் பணக்காரர்கள் என்று சொல்வதால், சமுதாயத்திலே வர்க்கப் போராட்டத்தை வளர்த்து மலிவான விளம்பரம் பெற அதன் மூலம் ஒரு (Cheap publicity)

வதற்கு இந்தச் சட்ட முன்வடிவை துணையாக அரசு வைத்திருக்கிறதே
தவிர உண்மையின் நோக்கத்தை அந்தரங்க சுத்தியோடு இந்த அரசு
நிறைவேற்றவில்லை.

இன்றைக்கு, 8 அணா, 1 ரூபாய் என்று வைத்து நடைபெறுகின்ற
எதற்காக ஆதரிக்கின்றீர்களோ அதைத் தடுக்காத வகையில், அவர்களுக்கு இந்த
வாய்ப்பை நீங்கள் மறுத்தால், அவர்களுக்கு 8 அணாவோடு போகின்ற செலவு
அல்லது 1 ரூபாயோடு போகின்ற செலவு, அவன் வீட்டிலே பெண்டாட்டி
பிள்ளைகளை அந்த அளவு பாதிப்பதில்லை. இருபது 5 ரூபாயும். ஆகவே
மேலும் கொண்டுபோய் [illegible] கொண்டுபோய் விடும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறையை நாம் [illegible]
கண்டிருக்கிறோம். மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்தபோது, மது குடிப்பு
நடைமுறையில் இருந்தபோது, அதிகமானவர் [illegible]
குடிக்கக் கற்றுக்கொண்டார்களே தவிர சாராயம் [illegible]
குறையவில்லை. இந்த உண்மையை நீதிமன்றங்களிலே இருக்கும் வழக்குகள்
எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே, ஆடுகின்ற முயற்சிகள் இருப்பவைகளை
ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் அதிலே இல்லை. ஆகவே, 8 அணா, 1
ரூபாய் வைத்து ஆடுபவர்கள் ஏழைகள் என்பார். 5 ரூபாய் வைத்து ஆடு
பவர்கள் பணக்காரர்கள் என்றும் சொல்வது [illegible]
உதவியிருக்கிறதே தவிர, அடிப்படையான நோக்கத்தை நிறைவேற்றுவதாக
இல்லை. இந்தச் சட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு நன்மை இல்லை. சமுதா
யத்திலும் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இந்த அரசுக்கு
சட்டம் கொண்டுவரும் அதிகாரம் இருக்கிறது. சட்டம் கொண்டு வருகி
றீர்கள். [illegible] இந்த அதிகாரத்தை [illegible]
நேர்மையாகவும், [illegible]
இந்தச் சட்ட முன்வடிவு தந்திருக்கிறது என்று [illegible]
இந்தச் சட்ட முன்வடிவு எவ்வளவுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே
ஆதரிக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டாலும் கூட, இது எதிர்க்கப்பட
வேண்டிய ஒன்று என்று சொல்லி, எதிர்ப்பதால் ஏழையெளிய மக்களுக்கு
நன்மை ஏற்படும் என்று சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைய தினம் 13 சட்ட
முன்வடிவுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. மணி 6-35 ஆகி
விட்டது. எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகப் பேசி முடிக்க முடியுமோ அவ்வ



ளவுக்கவ்வளவு அதிகமான சட்டமுன்வடிவுகளை நாம் நிறைவேற்றலாம்
என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்களைப்
பேச அழைக்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச்
சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன். காரணம், இந்தச் சட்டத்தைக்
கொண்டுவரப்பட்ட
பொறுத்தவரையில், சட்டம் நல்ல நோக்கத்துடன் தான் கொண்டுவரப்பட்டி
ருக்கிறது என்றாலும், இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் விதத்
தைப் பார்த்தால், இந்தச் சட்டத்தின் நோக்கம் ஈடேறாது என்பது தான்.
ஏழையெளிய மக்கள் 50 பைசா, 60 பைசா என்று கொண்டுபோய் கொடுத்து
சூதாடி தங்களுடைய பொருளாதாரத்தைப் பாழ்படுத்திக்கொள்கிறார்கள்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலையி
லிருந்து அவர்களைக் காப்பாற்ற இந்தச் சட்டம் உதவியாக இருக்கும் என்று
சொன்னார்கள். நல்ல நோக்கத்துடன் சொன்னாலும், நடைமுறையிலே
என்னவாகும் என்றால், இப்போது வெளியே ஆடுபவர்கள், வெளியே ஆடாமல்
உள்ளே போய் ஆடுவார்கள். 50 பைசாவிலே ஆடுபவர்கள் 5 ரூபாய் கொடுத்து
ஆடுவார்கள். அவர்களுக்கு இப்போது இருக்கும் கஷ்டம் இன்னும் அதிக
மாகும். நோக்கம் நல்லது. கையாளும் முறை நோக்கத்திற்கு நேர்மாறாகப்
[illegible] இந்தச் சூதாட்டம் ஆட [illegible]
பவன் போகிறவர் அளவுக்கு இருக்கிறது. ஏழையாக இருக்கட்
டும், பணக்காரனாக இருக்கட்டும், தன்னிடம் காசு இல்லையென்றால், திருடி
பித்துப் பிடித்த மாதிரி வெறி கொண்டிருக்கிறார்கள். ஏழையாக இருப்
யாவது கொண்டுபோய் ஆடும் அளவுக்கு பித்துப்பிடித்து இருக்கிறார்கள்.
தாலியை அடகு வைத்தாவது கொண்டுபோய் ஆடுவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்
பதால் போக மாட்டார்கள் என்பது சரியல்ல. [illegible]
கள் [illegible] இந்தச் சூதாட்டத்தை [illegible] சொன்னார்கள். இந்தச் சூதாட்
கொடுக்காமல் இருக்க முடியாது என்று [illegible] சூதாட்டத்தையே நிறுத்த
டத்தை நிறுத்துவதற்கு குதிரைப் பந்தய [illegible]
வேண்டும். [illegible] ஆட்சிக் காலத்திலே [illegible]
நோக்கம் ஈடேறாது. [illegible]
அவர்கள் . . . . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நாம் மட்டும் நிறுத்த வேண்டுமா?
அல்லது இந்தியா முழுவதும் நிறுத்த வேண்டுமா?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இந்தியாவுக்கே பல வழிகளில் நாம்
வழிகாட்டியாக இருந்திருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நாளைக்குக் குதிரைப் பந்தய(ம்) பங்களூரில் நடந்தால், அவர்கள் டர்ஃப் ஏஜன்சி நடத்தலாமா?

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** இது மாநில சபை. அதனாலே நம(து) மாநிலத்தைப் பொறுத்தவரையில், நமக்கு அதிகாரம் இருக்கிறது. முதலில் நம்மைச் சீர்திருத்த வேண்டும். எத்தனை காரியங்கள் நம்மைப் பார்த்(து) அவர்கள் செய்திருக்கிறார்கள்? முதலில் நம் மாநிலத்திலே தடுப்போம். கலைஞர் காலத்திலே 'ரேஸ்' நிறுத்தினோம். இடையில், சில வருஷங்கள் மூடப்பட்டிருந்தது. அதை நாம் பார்த்திருக்கிறோம். மறுபடியும் ஏதோ பிடி போட்டார்கள், கேஸ் போட்டார்கள். மீண்டும் மறுபடியும் அவர்கள் துவக்கிவிட்டார்கள். ஆகவே, சட்டம் கொண்டு வந்து மறுபடியும் அதை நிறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற குதிரைப் பந்தய டர்ஃப் ஏஜென்சி ஒழிப்பு மசோதாவிற்கு எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சூழ்நிலையையும் இது தேவைதானா என்ற வினாவையும் எழுப்பியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய முன்னுரையில் இது ஏழையெளிய மக்களைப் பாதிக்கக்கூடியது என்றும், எனவே இதனால் ஏழைகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணரக்கூடியவர்கள் ஆதரியுங்கள் என்றும் சொன்னார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், ஆதரிப்பவர்களேகூட, சட்ட மன்றப் பேரவையிலே எதிர்த்துத்தான் பேசியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். "எட்டு அணா கொடுத்து, ஒரு ரூபாய் கொடுத்து இந்த சூதாட்டம் ஆடுகிறார்கள், ஆகவே ஒழிக்கிறோம்" என்று சொன்னால், பெரிய சூதாட்டக்காரர்களே இப்போது இந்த அரசாங்கம்தான். பரிசுச் சீட்டு மூலம் மிகப் பெரிய சூதாட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறது இந்த அரசு. குதிரைப் பந்தய டர்ஃப் ஏஜென்சிகளை ஒழிப்பதன் மூலம் இந்த சூதாட்டத்தை ஒழித்து விடலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. மேலும் எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், எங்கும் குதிரைப் பந்தயம் இருக்கிறது; இந்தியாவிலே பல மாநிலங்களிலே குதிரைப் பந்தயம் நடத்துகிறார்கள். ஆனால் தம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நாம் பேரறிஞ(ர்)





அண்ணா அவர்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர, அவர் எதை விரும்பினாரோ அதைச் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே குதிரைப் பந்தயத்தை ஒழித்தோம். பாதிக்கப்பட்டவர்கள் நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். இப்போது குதிரைப் பந்தயம் திரும்பவும் நடைபெறுகிறது. இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால், நான் உண்மையிலேயே பாராட்டியிருப்பேன். ஆனால், அதை விட்டுவிட்டு டர்ஃப் ஏஜென்சிகளை ஒழிக்கிறார்கள். இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களிலும் டர்ஃப் ஏஜென்சிகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிலே மட்டும் குதிரைப் பந்தயத்திற்கான டர்ஃப் ஏஜென்சிகளை ஒழிக்கிறோம் என்று சட்டம் கொண்டு வருவது வருந்தத்தக்கது.

(பிற்பகல் 6-40)

அதுமட்டுமல்ல, இந்தத் தொழிலில் சுமார் 12,000 தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று இந்தத் தடைச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தவர்கள்—ஏஜென்சிக்காரர்கள்—தங்களுடைய மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் அனைத்தும் இந்தச் சட்டத்தாலே பாதிக்கப்படும். ஆனால் அதற்கும் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லக்கூடும். 12,000 பேர் வேலை இழந்துவிடுகிறார்கள் என்பதற்காக ஒரு புனிதமான சட்டத்தைக் கொண்டுவராமல் இருக்க முடியுமா? மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்தபோதுகூட, இப்படித்தான் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள், அவர்களுக்கெல்லாம் நாம் வேறு வேலையா கொடுத்தோம் என்று கூடக் கேட்கலாம். ஆனால் மதுவிலக்குச் சட்டம் என்பது நமது மாநிலத்தில் எந்த அளவுக்கு அமுல்படுத்தப்படுகிறது என்பது இந்த நாட்டுக்கும் தெரியும், இங்கே அமர்ந்திருக்கிற நம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். மதுவிலக்குச் சட்டம்தான் இருக்கிறதே தவிர, மதுவும் சாராயமும் இங்கே ஆறாக ஓடக்கூடிய அளவுக்கு, அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் இந்தக் கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை பெருகக்கூடிய அளவுக்கு அந்தத் தொழில் நமது மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட அறிவார்கள்.

இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவதன் மூலம் எனக்கிருக்கிற சந்தேகமெல்லாம் "நாங்கள் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப் போகிறோம்— ... கொண்டுவந்த பிறகும் சிலர் கள்ளச் சாரா(யம்) எப்படி மதுவிலக்குச் சட்டம்

யத்தை விற்று பெறும் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்களோ, அதைப் போல்—இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வராத அளவுக்கு அக்கிரமமாக மறைமுகமாக இந்த வெளிப்பந்தய முறையில் [illegible] சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள்" என்று [illegible] பதிவாகியிருக்கிறது [illegible].

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகின்றபடி, பலர் ஒன்று சேர்ந்து ஆறு [illegible], ஒரு ரூபாய் என்று போட்டு, [illegible] இல்லாதவர்கள் [illegible] ஆறு பேர் ஒன்றாகச் சேர்ந்து ஒருவரை அனுப்பி இந்தப் பந்தயத்தை ஆடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த வெளிப்பந்தய முறையை ஒழிப்பதன் மூலம் ஆறுபேர் 10 ரூபாய் அல்லது ஐந்து ரூபாய் என்று எடுத்துக்கொண்டுபோய் குதிரைப் பந்தய மைதானத்திற்குள்ளே போய் ஆடக்கூடிய சூழ்நிலையை இந்த அரசாங்கம் உருவாக்குகிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குத் தெரிந்த வரையில், இன்றையதினம் குதிரைப் பந்தயம் நடத்தும் பொறுப்பில் உள்ளவர்கள், அந்தப் பகுதிக்கு வந்தவர்கள் அரசாங்கத்திடம் மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கிற காரணத்தால், குதிரைப் பந்தய கிளப்புக்கே அதிகமான லாபம் வர வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அரசாங்கத்தை அணுகி அதன் காரணமாக இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவரப்படுகிறதோ என்று சந்தேகப்படுகிற அளவுக்கு இன்றைக்கு இந்தச் சட்டம் வந்திருக்கிறது.

இந்த அரசாங்கம் 12,000 பேர்களுடைய குடும்பங்களைப்பற்றிக் கவலைப் படவில்லை. ஏழைகள் அரசு என்று சொல்லிக்கொண்டே சூதாட்டத்தை [illegible] ஏழைகள் குதிரைப் பந்தய மைதானத்திற்கே போய் சூதாடும் சூழ்நிலையை உருவாக்குகிற அரசாங்கம், இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவருவது நியாயம்தானா என்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டு, அந்த வழக்கில் அரசாங்கத்தின் சார்பில் பதில் [illegible], அவசர அவசரமாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து [illegible] நிறைவேற்றுவது என்பது உள்ளபடியே இந்த நாட்டில் ஒரு சமுதாய நீதி இருக்கிறதா என்ற சந்தேகத்தை எனக்கு உருவாக்குகிறது. எனவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதா





தேவையற்றது, 12,000 பேர்களுடைய குடும்பத்தைப் பாதிக்கக்கூடியது என்ற கருத்தை நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லி, இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது எனது கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்கு முன்னால் தலைவர் அவர்கள் மூலமாக ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்ட மன்றங்களின் மிக முக்கியமான பணி சட்டங்களை நிறைவேற்றுவ தாகும். ஒரு சட்ட மன்றக் கூட்டத் தொடரின் இறுதி நாட்களில் மிக வேக மாக, உறுப்பினர்கள் இருக்கிற நாட்களில் நான் மூன்று 13 அல்லது 14 சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வந்தால், எல்லோரும் போய்விடுவார்கள், நாமும் அவைகளை நிறைவேற்றிக்கொண்டு வந்துவிடலாம் என்ற எண்ணத் தில் இந்த அவையில் சட்ட முன்வடிவுகள் கொண்டுவரப்படுவது என்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

சட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால், பொதுவாக சட்ட முன் வடிவுகள் சட்ட மன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ஒரு வார காலம் அவகாசம் கொடுத்து அல்லது இந்தத் தொடர் கூட்டத்தில் இல்லை யென்றால், அடுத்த தொடர் கூட்டத்தில் அந்தச் சட்ட முன்வடிவுகளை விவாதித்து நிறைவேற்றுவதுதான் முறையாக இருக்கும். திடீரென்று சட்ட முன்வடிவுகளை அறிமுகப்படுத்தி, உடனே அதைச் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று கோரும்போது, உறுப்பினர்களுக்கு அந்தச் சட்டங்கள்பற்றிய முழுமையான தகவல் கிடைப்பதில்லை. சட்டப் புத்தகங்களைப் பார்க்கலாம் என்றாலும், அவைகள் சட்ட மன்ற நூல் நிலையத்தில் கிடைப்பதில்லை. நூல் நிலையத்திற்குச் சென்று அந்தச் சட்டப் புத்தகங்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்குள் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு விடுகிறது. பாராளு மன்றத்தில் என்ன நடைமுறை இருக்கிறது என்றால், நாடாளுமன்ற உறுப் பினர்கள் தங்களுக்கு வேண்டிய சட்டத்தைப்பற்றிய குறிப்பு எழுதிக் கொடுத்து அதை நாடாளுமன்ற நூல் நிலையத்திற்கு அனுப்பினால், அங்கே இருக்கிற நூலக அலுவலர்கள் மிகத் திறமையாக அந்த உறுப்பினருக்குத் தேவையான அனைத்து விவரங்களையும் தேடி எடுத்துக் கொடுக் கிறார்கள் . . .

[1979 நவம்பர் 8

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சட்ட முன்வடிவின்மீது பேசுகிறார்களா அல்லது ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்ட முன்வடிவின் தொடர் பாகப் பேசுகிறார்.

**திரு. ம. சங்காலிங்கம் :** சட்ட முன்வடிவின்மீது பேசுகிற சரியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றுதான் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படி மிக வேக வேகமாக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு சட்டப் புத்தகங்களில் வெறும் காகிதத்தால் நிரப்பப்படும் நிலை உருவாகிறது; நீதி மன்றங்களிலே பெரிய குழப்பம் உருவாகிறது. சட்டங்கள் ஏட்டளவில்தான் இருக்கின்றனவே தவிர, பொது மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கேள்வி நேரத்தில்கூட இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஆபாசப் புத்தகங்கள், படங்கள்பற்றிக் கேட்டபோது, அதுகுறித்து ஒரு சட்டம் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதற்கு என்று ஒரு சட்டம் இருந்தும்கூட, அந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவில்லை என்பதைத்தான் நாம் உணர வேண்டும். சட்டம் புத்தகத்தில்தான் இருக்கிறது, அமுல் படுத்தப்படவில்லை. இப்படி ஆயிரக்கணக்கான சட்டங்கள் இருக்கின்றன. இப்போதுகூட நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? 1868 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குத்தான் திருத்தம் கொண்டு வருகிறோமே தவிர, வேறொன்று மில்லை. சுதந்திரம் கிடைத்து இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும், சமுதாயத்திற்குத் தேவையான புதுச் சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. நிறைவான சட்டங்கள் உருவாவதற்கு இன்னும் நாம் முயற்சிகளை மேற்கொள்ளாமல் இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

குதிரைப் பந்தயத்தின் மூலமாக இந்த நாட்டில் இருக்கிற ஏழை எளிய மக்கள் அதிர்ஷ்ட அமைப்பு வந்தது ஒரு நாளில் செல்வத்தைச் சேர்த்து பணக்காரர் பெற்றுவிடலாம் என்று நினைக்கிறார்கள். இந்த நம்பிக்கையைத் தடுக்க இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறார். அமைச்சர் அவர்கள் பேசும்போது ஏழைகள் மீது நல்லெண்ணம் கொண்ட வர்கள் இந்தச் சட்டத்தை ஆதரியுங்கள், ஏழைகள் மீது பற்றுதல்



1979 நவம்பர் 8] [திரு. ம. சங்காலிங்கம்]

இல்லாதவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்க்கலாம் என்று ஒரு இக்கட்டான நிலையை உறுப்பினர்களுக்கு உருவாக்கும் வகையில் மசோதாவை அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள்.

இந்த அரசுக்கு ஏழைகள் மீது உண்மையிலேயே நல்லெண்ணம் இருந்தால், பற்று இருந்தால், முதலில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்கக்கூடிய முறைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக் கூடும். இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன்னால் இருப்பதால், நாங்கள் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர இயலவில்லை என்று சொல்லலாம். இந்த அரசுக்கு உண்மையில் அப்படிப் பட்ட ஒரு நல்லெண்ணம் இருந்தால், நீதிமன்றத்தில் இருக்கிற அந்த வழக்கைத் துரிதப்படுத்த வேண்டும் என்று 'அட்வான்ஸ் பெட்டிஷன்' கூட போடலாம். நீதிமன்றத்தை அணுகி, இந்த வழக்கை மிகச் சீக்கிரமாக முடிக்க வேண்டும், காரணம் இது ஒரு முக்கியமான சமுதாயப் பிரச்சினையைக் குறித்ததாகும் என்று சொல்லி, ஒரு அட்வான்ஸ் பெட்டிஷன் போட்டு தீர்ப்பைத் துரிதப்படுத்தலாம். இதற்கிடையில் இப்போது கொண்டு வருகிற சட்டம் எப்படி இருக்கிறது என்றால், 'புற்று நோய்க்கு பூச்சு மருந்து' போல் இருக்கிறது. சமுதாயத்தில் இருக்கிற குதிரைப் பந்தயம் என்னும் புற்று நோய்க்கு 'பூச்சு மருந்து' தரப்படுகிறது. இந்த நோயைப் போக்க எக்ஸ்ரே வைத்தியம், கதிரியக்க வைத்தியம் செய்ய வேண்டுமே தவிர, பூச்சு மருந்தால் ஒன்றும் செய்துவிட முடியாது. இதனால் குணமாக்க முடியாது. இந்த நோய் சமுதாயத்தில் பெரும் செல்வந்தர்கள் என்று கருதப்படுபவர் களின் துணையோடு, பெரிய பொறுப்புகளில் இருப்பவர்களின் துணையோடு வெற்றிகரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டதைப்போல், குதிரைப் பந்தயம் நடக்கும் எல்லைக்குள் ஆட்கள் கூட்டம் குறைவதைத் தடுத்து கொஞ்சம் கூட்டு வதற்காகச் செய்யப்படுகிற சட்டமோ என்றுகூட ஐயப்படுகிற நிலை உருவாகியிருக்கிறது.

அது மட்டுமல்ல. இந்தச் சட்டத்தின் மூலம் இந்த அரசு இந்தச் சூதாட்டத்தைத் தடுக்கப் போவதுமில்லை. மறைவாக இதற்கான டிக்கட் களை விற்பனை செய்பவர்கள் இருக்கத்தான் போகிறார்கள், அதைப்போல வாங்குபவர்களும் இருக்கத்தான் போகிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் மது விலக்குச் சட்டம் இங்கே அமுலில் இருக்கிறது. இருந்தாலும் இங்

பெருமளவில் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களும் இருக்கிறார்கள், குடிக்கிறவர்களும் இருக்கிறார்கள். காய்ச்சுகிறவர்களுக்கு இடையே இரண்டு கோஷ்டி. அவர்களுக்கிடையே பட்டப் பகலில் சென்னைத் தெருக்களில் கோஷ்டி மோதல் நடைபெறுகிறது. நாம் அதைப் பார்க்கிறோம். அதைப் போலவே இந்தச் சட்டத்தின் மூலமாகவும் இந்த 'முகவர்களை'த் தடுத்து விடப் போவதில்லை. ஆனால் யாராவது இந்த ஆட்சிக்குப் பிடிக்காதவர்கள் இந்தக் கடை வைத்திருந்தால், [illegible] இருக்கிறது என்று சொல்லி வழக்குப் போட இதை உபயோகிக்கலாம். ஏதோ ஒரு புத்தகம் இருக்கிறது என்று சொல்லி, வேண்டாதவர்கள் மீது வழக்குப் போட இந்தச் சட்டம் பயன்படும். வேண்டாதவர்களைத் தொல்லைப்படுத்த இந்தச் சட்டம் பயன்படும். எனவே இந்தக் காரணங்களால் இந்தச் சட்ட முன்வடிவை [illegible] கொண்டு, ஒரு முழுமையான சட்டம் கொண்டு வந்து, குதிரைப் பந்தயத்தையே தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுகிற சட்டம் கொண்டு வருவீர்களானால், நாங்கள் அதை வரவேற்போம், அதை ஏகமனதாக நிறைவேற்றித் தருவோம் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவு சரியில்லை என்று இந்த அரசுக்கு அறிவுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசிய அனைத்து உறுப்பினர்களுமே குதிரைப் பந்தயத்தில் சமுதாயக் கேடுகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுபற்றி பல அரிய யோசனைகளையும் இங்கே கூறியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நல்ல உணர்வோடு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்தார்கள் என்று அனைவரும் உணர்ந்திருப்பார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், உள்ள உணர்வு இருக்கும்போது, அந்த உணர்வுகளை முதலில் வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் மனிதனுடைய இயற்கையான குணம். மறைமுகமாக இந்தச்

(பிற்பகல் 6-50)

சட்டத்தை ஆதரித்திருக்கிறார்கள். மறைமுகமாகத் தவறு நடக்கிறது. மறைமுகமாக நடக்கிற தவறை, தவறு என்று ஏற்றுக்கொண்டு, அதை நம்மால் தடுக்க முடியாது என்பதல்ல. இந்த அவைக்குச் சொன்னால் புரிந்துகொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். மறைமுகமாகத் தவறு



[illegible] படுகிறார்கள், நடக்கிறது. அதற்கான சட்டங்கள் இருக்கின்றன. [illegible] அந்தத் தவறுகள் [illegible] தண்டனை [illegible]. ஆனால் [illegible] ஒப்புக்கொள்ளவில்லை. குதிரைப் பந்தயத்தைப் [illegible] என்று இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக் [illegible] என்று இந்த அரசு [illegible] இடைக் காலத்திலே [illegible] போக்குவதற்கு முன்னால் இந்தச் சட்டத்தை இங்கே [illegible] வேண்டுமென்பதற்காகத்தான் [illegible] கொண்டு வந்திருக்கிறோம்.

[illegible] என்று சொன்னார்கள். [illegible] கண்டுபிடிக்கவில்லை. புற்று நோய்க்கு புற்று நோய்க்கு இதுவரை மருந்து [illegible] என்பதற்காக அதைப் போக்குவதற்கான மருந்து கண்டுபிடிக்கவில்லை [illegible] ஈடுபடாமல் இருப்பதில்லை. இருந்தாலும் [illegible] மருத்துவர்கள் [illegible] ஆப்பரேஷன் செய்வார்கள். [illegible] செய்வோம் என்று ஆப்பரேஷன் [illegible] [illegible] [illegible] ஒழிப்பதற்கு [illegible] இந்தச் சட்ட முன்வடிவைக் [illegible] கொண்டு வந்திருக்கிறோம்.

குதிரைப் பந்தயத்தைப் [illegible] ஒரு சூதாட்டம், [illegible] நடைபெறுகிறது. குதிரைப் பந்தயம் என்பது ஒரு [illegible] [illegible] சொல்லிவிட்டு முகவர்கள் [illegible] என்று [illegible] [illegible] இந்தச் சட்ட முன்வடிவை [illegible] இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

நான் முதலில் பேசும்போது, ஏழைகளுக்கு நன்மை அளிக்க வேண்டு மென்று கருதுகிறவர்கள் இந்தச் சட்ட முன்வடிவுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று [illegible] இந்தச் சட்டத்தைப் [illegible] தெரிவிக்க [illegible] இந்த ஆதரவு [illegible] [illegible] தமிழ் நாடு [illegible] உறுப்பினர் திரு. [illegible] இருக்க வேண்டும் என்று மாண்புமிகு [illegible] குதிரைப் பந்தயத்தை [illegible] சொன்னார்கள். [illegible] தமிழ் நாடு [illegible] இருக்க வேண்டும் [illegible] செய்ய வேண்டுமென்று [illegible] ஒழிப்பதற்கு முன்னாலே இதையாவது செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 8

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி என்றைக்கும் போல இன்றைக்கும் பேசினார். 'யாரோ பெரிய பணக்காரர்கள் வந்து பார்த்தவுடனே இதைச் செய்திருக்கிறார்கள்" என்று சொன்னார். யாரும் தவறாக நினைக்கக் கூடாது. பணக்காரர்கள் எல்லாம் முதலிலே எங்கே இருந்தார்கள்? காங்கிரஸ் ஆட்சியிலே யார் யார் அமைச்சர்களைப் போய்ப் பார்த்தார்கள். [illegible] பற்றி தி. மு. க. ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் தி. மு. க. அமைச்சர்களைப் பார்த்தார்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். [illegible] உண்டு. நான் [illegible] சொல்லுகிறேன். இங்கே வந்து [illegible] தெரிவித்துக்கொள்ளுகிறேன். [illegible] வேண்டும் [illegible] இதைக் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கே [illegible] நடக்கவில்லை. ஆனால் அரசுக்கு வரவேண்டிய வரியும் [illegible] போகிறது. [illegible] இருந்திலே [illegible] விடப்படுவதில்லை. அதனால் அதன் மூலம் வர வேண்டியது [illegible] போகிறது.

(திரு. க. இராமமூர்த்தி இருக்கையிலிருந்து எழுந்தார்).

MR. DEPUTY CHAIRMAN : The Hon. Minister is not yielding.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அரசுக்கு வரவேண்டிய வரி ஏமாற்றப்படுகிறது. இவைகளையெல்லாம் நிரந்தரமாகப் போக்குவதற்கு ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு முன்னால் இதைச் செய்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இது இல்லையென்று சொன்னார்கள். அதிலே அதிக மகிழ்ச்சி அடைய வேண்டியவன் என்னைவிட வேறு யாருமல்ல. அந்த உரிமை எங்களுக்குத்தான் இருக்கிறது. அதிலே அதிக மகிழ்ச்சி [illegible] நான். ஆனால் [illegible] கோர்ட்டுக்குப் போய் அதற்குத் தடை பெற்றுவிட்டார்கள். ஹைகோர்ட் டிஸ்மிஸ் செய்ததும், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் தடையை வாங்கிவிட்டார்கள். இன்றைக்கு அது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. இந்த அரசு அது [illegible] விரைவிலே நடவடிக்கை எடுக்கும். கடைசி வரைக்கும் அதை இல்லாமல் செய்வதுதான் அரசினுடைய கொள்கை. இடைக்காலத்திலே பண்ண வேண்டிய நன்மையைச் செய்வோம் என்று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1979 நவம்பர் 8]

MR. DEPUTY CHAIRMAN : I wish to make one clarification to the hon. Members. When a Member intervenes but the Hon. Minister does not sit down, that would mean that he is not yielding. It is not necessary that he should say that he is not yielding. The Chair can take cognisance of the matter and bring that fact to the notice of the hon. Member.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே முதலாளிகள் அமைச்சர்களைப் பார்த்தார்கள் என்றும் அப்படியே தி.மு.க. ஆட்சியிலேயும் பார்த்தார்கள் என்றும், இப்போதும் பார்க்கிறார்கள் என்றும், ஆனால் [illegible] என்றும் சொன்னார்கள். தி.மு.க. ஆட்சியில் யாரும் [illegible] இல்லையென்றும் சொன்னார்கள். [illegible] பார்த்தார்கள், ஆனால் [illegible] இல்லை என்பதற்காக அமைச்சர்தான் [illegible] முதலாளிகள் வந்து பார்த்து நீட்டிப்புக் குதிரைப் பந்தயத்தை ஒழித்தது. [illegible] சொன்னாலும், [illegible] கொடுத்தாலும், அந்தக் காரணத்தைக் கொண்டும் நீடிக்காமல் ஒழித்தே [illegible] குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிறேன் [illegible] மாண்புமிகு அமைச்சர் அவர்கள். ஆகவே நாங்கள் [illegible] இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள [illegible] இந்த அரசாங்கம் [illegible] வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை இந்த மன்றம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : அவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது, குதிரைப் பந்தய மைதானத்திலே [illegible] குறைந்தது. இந்தச் [illegible] கூடுதலாக்குவதாகவும் சொன்னார். என்று குறிப்பிட்டார். அதைக் கூடுதலாக்குவதாகவும் [illegible] தெரிந்து சட்ட முன்வடிவின் [illegible] கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவைத் தலைவர் அவர்களே, அதைக் கூடுதலாக்க வேண்டுமென்று நினைத்திருந்தார், அரசு அதை [illegible] விளம்பரத்தில் [illegible] வேண்டும். ஆனால் அரசு [illegible] வில்லை. ஆகவே அதைக் கூடுதலாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லை.

குதிரைப் பந்தயம் நடக்கிறபோது மறைமுகமாக விளம்பரம் நடைபெறுகிறது. ஆனால் அங்கே நடைபெறுகிறபோது மறைமுகமாக நடைபெற வழி வகை இருக்கிறது.

**திரு. இளம்பரிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வெளியே ஆடுகிறவர்கள் இருப்பதால், அதிக வரி வராமல் இருக்கிறது என்றும், அதற்காகத்தான் இதை நிறுத்துகிறோம் என்றும் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னதைத்தான் இவர்களும் சொல்லுகிறார்கள். அவருக்குத் தெரிவித்த பதிலேதான் இவருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.00)

9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

*Nil*

*B. Reports, Notifications and Other Papers.*

* 41. The Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979 (L.A. Bill No. 66 of 1979), as passed by the Assembly.

42. The Tamil Nadu Horse Race (Abolition of Turf Agencies) Bill, 1979 (L.A. Bill No. 63 of 1979), as passed by the Assembly.

* 43. The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 64 of 1979), as passed by the Assembly.

* 44. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment and Special Provisions) Amendment Bill, 1979 (L.A. Bill No. 60 of 1979), as passed by the Assembly.

* 45. The Tamil Nadu Cinemas (Regulation) Amendment Bill, 1979 (L.A. Bill No. 61 of 1979), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 7th November 1979.

## இணைப்பு I.

[303 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 103-க்கான விடையைக் காண்க.)

(அ) & (இ) மீன் வளர்ச்சி மற்றும் மீன் பிடிப்பு செய்யப்படும் அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்களின் பெயர்களும், இவைகளிலிருந்து மீன் பிடிப்பு மூலம் 1976–77, 1977–78-ம் ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருவாயும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:—

| நீர்த்தேக்கங்களின் பெயர்கள். | அரசுக்குக் கிடைத்த வருவாய். 1976–77 ஆம் ஆண்டில். ரூ. | அரசுக்குக் கிடைத்த வருவாய். 1977–78 ஆம் ஆண்டில். ரூ. |
|---|---|---|
| **செங்கற்பட்டு மாவட்டம்—** | | |
| 1. பூண்டி .. | 745·15 | 9,350·15 |
| **தென்னாற்காடு மாவட்டம்—** | | |
| 2. மணிமுத்தா .. | 16,791·40 | 7,793·85 |
| 3. வெல்லிங்டன் .. | 1,662·45 | 6,489·65 |
| 4. விதூர் .. | 9,251·64 | 8,889.42 |
| 5. கோமுகி .. | 2.826·58 | 5,890·22 |
| 6. வீராணம் . | 3,813.50 | 18,188·05 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்—** | | |
| 7. சின்னாறு .. | 1,763·21 | 204·81 |
| **மதுரை மாவட்டம்..** | | |
| 8. வைகை அணை .. | 4,339·18 | 6,901·05 |
| 9. மஞ்சளாறு . | 5,841.50 | 11,909·74 |
| 10. சத்தியாறு .. | 19,689·40 | 16,717·07 |
| 11. பெரியாறு .. | 8,044·10 | 6,822.80 |
| 12. கோவிலாறு .. | 4,608·60 | 1,657·85 |
| **திருநெல்வேலி மாவட்டம்—** | | |
| 13. மணிமுத்தாறு .. | 7,734·58 | 9,518·69 |
| 14. ஹோப் ஏரி .. | 3,697.33 | 2,469·24 |
| 15. திருமூலப்பேரி .. | 477·92 | 2,423·66 |
| **கன்னியாகுமரி மாவட்டம்—** | | |
| 16. பேச்சிப்பாறை .. | 5,602·30 | 4,585·85 |
| 17. பெருஞ்சாணி .. | 5,215·55 | 1,357·60 |
| 18. சித்தாறு—I .. | 2,232·18 | 3,203·15 |
| 19. சித்தாறு—II .. | 1,662·48 | 4,748·21 |
| **கோயம்புத்தூர் மாவட்டம்—** | | |
| 20. பில்லூர் .. | 3,592·08 | 6,609·15 |
| 21. உப்பாறு .. | 29,582·59 | 21,383·17 |
| 22. சோலையாறு .. | 1,654·85 | 1,702·05 |
| **நீலகிரி மாவட்டம்—** | | |
| 23. பைகாரா .. | 4,634·20 | 3,555·24 |
| 24. சாந்திநல்லா . | 9,741·90 | 13,355·27 |
| 25. உதகை ஏரி | | |
| 26. எமரால்ட் .. | 9,125·10 | 12,073·60 |
| 27. குந்தா .. | 1,671·20 | 1,426·00 |
| 28. கிலின் மார்க்கன் .. | 1,100·60 | 1,365·80 |
| 29. தி. ஆர். பசார் .. | 1,646·40 | 1,393·60 |
| **தர்மபுரி மாவட்டம்—** | | |
| 30. கிருஷ்ணகிரி .. | 10,576·45 | 21,084·85 |
| | 1,79,324·42 | 2,13,070.09 |

மீன்பிடிப்புக்கு உரிமம் வழங்குவதன் மூலம் கிடைத்த உரிமக் கட்டணம்.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| பூண்டி .. .. .. | 10,733·00 | 20,079.00 |
| வீராணம் .. .. . | 28,466·00 | 29,184·10 |
| மேட்டூர் அணை .. .. | 59,752·00 | 51,753·00 |
| | 99,101·00 | 1,01,015·00 |

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு மீன் பிடிப்புக்காக 1-7-1977 முதல் குத்தகைக்கு விடப்பட்ட சாத்தனூர் அணை, பவானிசாகர், ஆளியாறு, அமராவதி, திருமூர்த்தி— இந்த 5 நீர்த்தேக்கங்களில் பிடித்த மீன்களுக்கு 30-6-78—முடிய கிடைத்த உரிமைப்பங்கு (royalty) | .... | 2,36,212·55 |
| மொத்தம் .. | 2,78,425·42 | 5,50,297·74 |

குறிப்பு:

திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னணையாறு 1976-77 ஆம் ஆண்டிலும் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பெருமாள் ஏரி, மதுரை மாவட்டத்திலுள்ள மருதாநதி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடனா, கோயம்பத்தூர் மாவட்டத்திலுள்ள மேல் ஆளியாறு, தர்மபுரி மாவட்டத்திலுள்ள சின்னாறு, 1977-78-ம் ஆண்டிலும், மீன்துறைக்கு மாற்றப்பட்டது. இவைகளில் மீன் பிடிப்பு அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படும்.

## இணைப்பு II

[329 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 110-க்கான விடையைக் காண்க.]

(*a*) The number of cases pending disposal in the High Court, Madras as on 31st March 1979 is as follows :—

| | |
|---|---|
| (1) Criminal Appeals ... ... ... | 2,440 |
| (2) Criminal Revision Petitions ... ... | 1,589 |
| (3) Civil Suits (High Court Original Side) ... | 1,565 |
| (4) Original Side Appeals ... ... ... | 159 |
| (5) (*a*) Appeal Suits ... ... ... | 3,790 |
| (*b*) Second Appeals ... ... ... | 5,200 |
| (6) Civil Miscellaneous Appeals ... ... | 1,340 |
| (7) Civil Revision Petitions ... ... ... | 3,919 |
| (8) Writ Petitions ... ... ... ... | 8,020 |
| (9) Writ Appeals ... ... ... ... | 924 |

(*b*) & (*c*) There are no prescribed time limit for disposal of cases by courts. There is, therefore, no factor to decide whether a particular case has been delayed or not. Certain cases are however pending for quite a long time. The reasons for the pendency are due to giving sufficient opportunities to all sides and complying with the statutory formalities before disposal of cases, unreadiness on the part of the Advocates and the larger number of cases instituted in some courts increasing the volume of work of Judges.



## இணைப்பு III

[335 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 111க்கான விடையைக் காண்க.]

தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடுவோர் பற்றிய விவரங்கள் (1977-78-ம் ஆண்டுக்குரியவை.)

| வகுப்பு. (1) | 1976-77ம் ஆண்டு பயின்று வந்தோர். (2) | 1977-78ம் ஆண்டு பயின்று வந்தோர். (3) | மேல் வகுப்புக்கு வராமல் நின்று விட்டவர். (4) | நின்று விட்டவர்கள் விழுக்காடு. (5) | நின்று விட்டவர்களுள் தாழ்த்தப்பட்டவர்கள்/மலைசாதியினர் விழுக்காடு. (6) |
|---|---|---|---|---|---|
| | க. அனைத்து வகுப்பினரும். | | | | |
| I | 1,617,885 | .. | 233,918 | 14.46 | .. |
| II | 1,258,966 | 1,383,967 | 112,522 | 8.94 | .. |
| III | 1,111,680 | 1,146,444 | 120,125 | 10.81 | .. |
| IV | 960,808 | 991,555 | 126,689 | 13.19 | .. |
| V | 802,940 | 834,119 | 120,536 | 15.01 | .. |
| VI | 654,424 | 682,404 | 123,299 | 18.84 | .. |
| VII | 492,035 | 531,125 | 67,520 | 13.72 | .. |
| VIII | 403,408 | 424,515 | 45,162 | 11.20 | .. |
| IX | 331,517 | 358,246 | 81,126 | 24.47 | .. |
| X | 222,426 | 250,391 | 37,586 | 16.90 | .. |
| XI | .. | 184,840 | | | |
| | உ. தாழ்த்தப்பட்டோர். | | | | |
| I | 328,592 | .. | 56,796 | 17.28 | 24.28 |
| II | 236,602 | 271,796 | 21,454 | 9.07 | 19.07 |
| III | 198,543 | 215,148 | 23,308 | 11.74 | 19.40 |
| IV | 170,071 | 175,235 | 25,330 | 14.89 | 19.99 |
| V | 132,895 | 144,741 | 31,426 | 23.65 | 26.07 |
| VI | 92,278 | 101,469 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| VII | 67,513 | 75,921 | 16,357 | 17.73 | 13.27 |
| VIII | 54,353 | 59,842 | 7,671 | 11.36 | 11.36 |
| IX | 45,428 | 44,505 | 9,848 | 18.12 | 21.81 |
| X | 30,119 | 29,849 | 15,579 | 34.29 | 19.20 |
| XI | .. | 22,156 | 7,963 | 26.44 | 21.19 |

ஙு. மலை சாதியினர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I | 8,027 | .. | .. | .. | .. |
| II | 5,585 | 6,360 | 1,667 | 20.77 | 0.71 |
| III | 4,455 | 4,602 | 983 | 17.60 | 0.87 |
| IV | 3,355 | 3,625 | 830 | 18.63 | 0.69 |
| V | 2,705 | 2,949 | 406 | 12.10 | 0.32 |
| VI | 1,581 | 1,737 | 968 | 35.79 | 0.80 |
| VII | 1,193 | 1,183 | 398 | 25.17 | 0.32 |
| VIII | 1,035 | 963 | 230 | 19.28 | 0.34 |
| IX | 909 | 790 | 245 | 23.67 | 0.54 |
| X | 658 | 540 | 369 | 40.59 | 0.45 |
| XI | .. | 450 | 208 | 31.61 | 0.55 |

## இணைப்பு IV

(348 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா 117க்கான விடையைக் காண்க.)

(அ) மதுரை மாவட்டம், திண்டுக்கல் அருகில் உள்ள சிறுமலைப் பகுதியில் நவம்பர் 78ல் பெய்த மழையினால் கீழ்க்கண்ட பயிர்கள் பாதிக்கப்பட்டன :

| வரிசை எண். (1) | பயிர் விபரம். (2) | பாதிக்கப்பட்ட அளவு (3) |
|---|---|---|
| 1. | வாழை | 64.59 ஏக்கர் (முழுச் சேதம்) |
| | | 1,435.41 .. (பாதியளவு சேதம்) |
| 2. | எலுமிச்சை | 2,800 .. (பகுதி சேதம்) |



(இ) மேற்படி பெருமழையினால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் சிறு விவசாயிகள் மற்றும் குத்தகைதாரர்களுக்கு ரூ. 6,459 (ரூபாய் ஆறாயிரத்து நானூற்றி ஐம்பத்து ஒன்பது) மானியமாக சிறுமலைப் பகுதியில் வழங்கப்பட்டது. பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 48 ஆகும். கடந்த டிசம்பர் மாதத்தில் பெய்த பெரு மழையினால் இம் மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க சேதம் ஏதும் ஏற்படவில்லை. எலுமிச்சை மரங்களின் கிளைகள் ஒடிந்தும், பழங்கள் மழையினால் உதிர்ந்தும் சேதம் ஏற்பட்டன. இப்பழ மரங்களில் முழு அளவு சேதம் குறிப்பிடத்தக்க அளவு இல்லை.

## இணைப்பு V

(375 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

இம்மாநிலத்தில் உள்ள அரசு மானியம் பெறும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளின் நிர்வாக மேம்பாட்டிற்காகவும், ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பிற்காகவும் இயற்றப்பட்ட தமிழ் நாடு தனியார்ப் பள்ளிகள் வரன் முறைச்சட்டம், 1973ன் பிரிவு 42-ன் படி தனியார்ப்பள்ளி நிர்வாகத்தினருக்கும் அதில் பணிபுரியும் ஆசிரியர் மற்ற ஊழியர்கட்கும் இடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க, மாவட்ட துணை நீதிபதி அல்லது மாவட்ட நீதிபதி அளவிலான தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிபதிகள் தீர்ப்பாயமாக செயல்படும்பொழுது சிவில் கோர்ட்டிற்கு உள்ள அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்கு உண்டு. தவிரவும், மேற்சொன்ன சட்டப்பிரிவு 12-ன் படி,

"இச்சட்டத்தினையோ, அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளையோ அல்லது அது தொடர்பான ஆணைகளையோ தனியார்ப்பள்ளி நிர்வாகங்கள் கடைப்பிடிக்கத் தவறினாலோ அல்லது ஆசிரியர்கள் மற்ற ஊழியர்கள் ஆகியோருக்கு சம்பளம் வழங்கத் தவறினாலோ மேலும் அவ்வப்பொழுது இயற்றப்படும் சட்டவிதிகளை நிறைவேற்றத் தவறினாலோ அல்லது மீறினாலோ அவ்வாறு தவறிழைக்கும் பள்ளியின் அங்கீகாரத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ரத்து செய்ய அரசிற்கு அதிகாரம் உண்டு".

இக்கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழக்கில் இம்மாதிரியான உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தீர்ப்பு வழங்குகையில் இம்மாதிரியான தனியார்ப் பள்ளிகள் வரன்முறைச் சட்டத்தில் திட்டவட்டமான விதி முறைகள் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டதாகத் தெரிய வருகின்றது. தீர்ப்பின் சான்றிட்ட நகல் உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரிடமிருந்து கிடைத்தவுடன் வழக்குகளில் தீர்ப்பாயங்களின் ஆணைகளை அமல் செய்ய சட்டத்தைத் திருத்துவதன் அவசியத்தை அரசு பரிசீலிக்கும்.

## இணைப்பு VI.

(377 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

அருப்புக்கோட்டை, சைவ பானு க்ஷத்திரிய கல்லூரியில் முதல்வராகப் பணி புரிந்து வந்த திரு. பி. ராஜதுரை என்பவரை நிர்வாகம் 28—3—1979 அன்று முதலில் வேலை நீக்கம் செய்து, பின்னர் பேராசிரியராக பணியிறக்கம் செய்தது. இதைத் தொடர்ந்து இக்கல்லூரியில் விரும்பத்தகாத சில நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. கல்லூரி முதல்வரை பணியிறக்கம் செய்ததற்கு ஒப்புதல் கோரி பல்கலைக் கழகத்திற்கு நிர்வாகம் வேண்டியது. 29-7-1979 முதல் திரு. சீனிவாசகம் என்பவரை முதல்வர் பொறுப்பில் நிர்வாகம் நியமித்தது. இதே சமயத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட திரு. ராஜதுரையும் பல்கலைக் கழகத்திற்கு மனு செய்தார். நிர்வாகம், குறிப்பிட்டுள்ள விதி முறைகளை பின்பற்றாத காரணத்தினால் திரு. ராஜதுரையை திரும்ப முதல்வராக நியமிக்கும்படி பல்கலைக் கழகம் கூறியது. ஆனால் அரசுக்கு தாங்கள் மனுச் செய்துள்ளதாக நிர்வாகம் கூறி திரு. ராஜதுரையை மறுபடி முதல்வராக நியமிக்கவில்லை. இடையே வேறு ஒருவரை முதல்வரா நிர்வாகம் நியமித்தது. 3-9-1979 முதல் 9-9-1979 வரையும் மற்று 8-10-1979 முதல் 12-10-1979 வரையும் கல்லூரி மூடப்பட்டதாகத் தகவ வந்தது. கிடைத்துள்ள செய்திகளின்படி மதுரைப் பல்கலைக் கழக ஆசிரி சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள இக்கல்லூரி ஆசிரியர்கள் சிலர் தற்போ நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் மேற்படி சங்கத்தைச் சார்ந்தவர் அல்ல எ காரணத்தினால் ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்றும் தங்கள் சங்கத்தை சேர்ந்தவர் முதல்வராக நியமிக்கப்படவில்லை என்று குறிப்பிடுவதாகவும் தெரிகிறது. இவர்கள் கூட்டாக சிறுவிடுப்பு எடுத்ததைத் தொடர்ந்து இ கல்லூரிக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. 22-10-1979 முதல் 30-10-1979 வரை மாணவர்களுக்கு படிப்பதற்கு வசதியாக விடுமுறை அளிக்கப் பட்டிருக்கிறது. இடையே இராசாயனத் துறையைச் சேர்ந்த பேராசிரிய ஒருவரை கல்லூரி முதல்வர் பொறுப்பில் 15-10-1979 முதல் நிர்வாக நியமித்துள்ளதாகத் தெரிகிறது. 30-10-1979 முதல் மாணவர்களுக்கு பல்கலை கழக தேர்வு ஆரம்பமாகியுள்ளது.





## இணைப்பு VII

(381 ஆம் பக்கத்தில் இனம் 8-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

(As Passed by the Assembly.)

### L.A. BILL No. 63 OF 1979.

*A Bill to provide for the abolition of the system of turf agencies in respect of any horse race in the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Horse Race (Abolition of Turf Agencies) Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 19th October 1979.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) 'bet' includes wager;

(*b*) 'Government' means the State Government;

(*c*) 'horse' means a male horse and includes mare, gelding, filly pony or any other horse by whatever name called;

(*d*) 'horse-race' means any race in which any horse runs or is made to run in competition with any other horse,—

(i) for any prize of whatever nature or kind, or

(ii) for any bet made or to be made, or

(iii) for both such prize and bet,

in respect of any such horse, or the rider thereof;

(*e*) 'turf agency' means any agency which carries on the business of,—

(i) receiving bets from the public in general, or

(ii) purchasing tickets on behalf of punters, or

(iii) making bets on behalf of punters,

for commission or remuneration in respect of any horse run in a horse-race or in respect of any rider of such horse;

(*f*) 'turf agent' includes any person who, by way of business,—

(i) receives bets from the public in general, or

(ii) purchases tickets on behalf of punters, or

(iii) makes bets on behalf of punters,

for commission or remuneration in respect of any horse run in a horse-race or in respect of any rider of such horse.

3. *Abolition of the system of turf agencies.*—The system of carrying on the business of a turf agency or a turf agent in respect of any horse-race is hereby abolished.

4. *Prohibition of the system of turf agencies.*—No person shall carry on the business of a turf agency or a turf agent in respect of any horse-race.

5. *Penalty.*—Any person who contravenes or attempts to contravene or abets the contravention of the provisions of section 4 or any rules made under this Act shall be punishable with rigorous imprisonment for a period which may extend to three years and shall also be liable to fine.

6. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was incharge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly.

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to, any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.



*Explanation.*—For the purpopses of this section,—

(*a*) "company" means any body corporate, and includes a firm or other association of individuals; and

(*b*) "director" in relation to a firm means a partner in the firm.

7. *Indemnity.*—(1) No suit or other proceeding shall lie against the Government for any act done or purporting to be done under this Act or any rule made thereunder.

(2) No suit, prosecution or other proceeding shall lie against any authority or officer, or servant of the Government for any act done or purporting to be done in good faith under this Act or any rule made thereunder.

8. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out the purposes of this Act.

(2) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and, unless they are expressed to come into force on a particular day shall come into force on the day on which they are so published.

(3) Every rule made under this Act shall, as soon as possible, after it is made, be placed on the table of both Houses of the Legislature and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

9. *Act to override other laws, decrees, etc.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force, or any custom, usage or decree or order of a court or other authority.

10. *Repeal and saving.*—(1) The Tamil Nadu Horse Race (Abolition of Turf Agencies) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 20 of 1979) is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Ordinance including any rules made shall, in so far as they are not inconsistent with this Act, be deemed to have been done or taken under this Act and shall continue in force accordingly, unless and until superseded by anything done or any action taken under this Act.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1979 நவம்பர் 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Delay in Payment of Pension*

* 127 Q.—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether pension, gratuity, arrears of salary, etc., were not given till 15th September 1978 to any of the District Educational Officers, who retired during 1970;

(*b*) if so, the reason for such non-payment;

(*c*) whether any representation has been received in this regard; and

(*d*) if so, the action taken thereon?

### ஓய்வூதியம் கொடுப்பதில் காலதாமதம்

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற மாவட்டக் கல்வி அதிகாரிகளில் யாரேனும், 15—9—1978 ஆம் நாள்வரை ஓய்வூதியம், பணிக்கொடை சம்பளபாக்கி முதலியவைகள் கிடைக்கப்பெறாமல் இருக்கிறார்களா?

(இ) ஆமெனில், அவ்வாறு கொடுக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் யாது?

(உ) இதன்மீது முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ), (உ) & (எ) சேலம் மாவட்ட கல்வி அலுவலராகப் பணியாற்றிய திரு. கே. அனந்தபப்புவுக்கு அரசாணை எண் 1070, கல்வி, நாள் 29—5—1976-ல் ஓய்வூதியமும் பணிக்கொடையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியமும் பெற்றுவருகிறார்.

திரு. கே. அனந்தபப்பு அவர்களின்மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையிலிருந்ததால் 29—5—1976 வரை ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை அனுமதிக்க காலதாமதமாயிற்று.

மேலும் விதிகளின்படி சில தேர்வுகளில் தேர்ச்சி பெறவில்லையாதலால் அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர் பதவியில் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்ததாக முன்பு அறிவிக்கப்படவில்லை. இதுகுறித்து அன்னார் அரசுக்கு முறையீடு செய்தார். 15—11—1978 நாள் அன்று அதுகுறித்த விதியிலிருந்து தவிர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் அவருக்குச் சேர வேண்டிய ஊதிய உயர்வுகளும் அதன் பயனாக நிலுவை ஊதியமும் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் இவரின் பணிப்பதிவேட்டில் பழைய திருவாங்கூர்-கொச்சி மாநிலத்தில் அவர் பணியாற்றியவை பற்றிய சில பதிவுகள் சரியில்லாததால், அவற்றை சரி செய்து ஓய்வூதியம் பணிக்கொடை மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்பை அனுப்புமாறு மாநில தலைமைக் கணக்காயர் கேட்டுள்ளார். இதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, சேலம் மாவட்டக் கல்வி அதிகாரி ஓய்வு பெற்று பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவருடைய ஓய்வு ஊதியப், பணிக்கொடை ஆகியவை வழங்கப்படவில்லை. அவர் ஒரு இலாக்காத் தேர்வில் தேறாததால், அதற்குக் காரணம் நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பது அவருடைய சம்பளத்தை தெரிகிறது. அவர் இலாக்காத் தேற வேண்டியதில்லை. அமைச்சர் அவர்கள் பதவியிலிருந்து மன்றமும் தீர்ப்பு அளித்து, அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது குறித்து நீதி போன்ற மற்றவர்களுக்குச் சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அவரைப் இவருக்கு மாத்திரம் கொடுக்காமல் இருப்பதற்குத் தனியான காரணம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அந்த ஆசிரியர் தகுதி காண் பருவம் முடிந்ததாக இப்போது அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதனால் அவருக்கு ஊதியம் அளிக்கப்பட்டுவிட்டது. வேறு தனியாகக் காரணம் இல்லை



**திரு. ம. சங்கரலிங்கம்:** அவருடைய இலாக்காவில் சில பெரிய அதிகாரிகள் அந்தப் பகுதிக்கு வருகிறபோது, இவர் போகவில்லை என்ற ஒரு காரணத்திற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றித் தனியாக ஆராய்ந்து, அவருக்குக் கொடுக்க வேண்டிய சம்பள பாக்கி, பணிக்கொடை பாக்கி இவைகளையெல்லாம் உடனடியாகக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவருக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகள் கிடைப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. செ. முத்துசாமி:** ஆசிரியர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்டர்களில், அவர்கள் எந்த எந்தப் பள்ளிகளில் எந்த எந்தப் பதவிகளில் இருக்கின்றார்களோ அவைகளைப்பற்றி அந்தந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியர் கையொப்பமிட வேண்டும். இப்போது கேரளாவிலே, திருவாங்கூர்-கொச்சியிலே பணியாற்றியவர்கள் ரிஜிஸ்டரில் அந்தப் பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களின் "Services verified and found correct" என்ற சான்று இல்லாததால், ஓய்வூதியம் தர முடியவில்லை. இதற்குக் காலதாமதமாகும். ஆகவே இவர்களுக்கு ரிலாக்சேஷன் பெற வேண்டும். அங்கு அனுப்பியும் அவர்களுக்கு இன்னும் கொடுக்கவில்லை. இங்குள்ள அரசு அதற்கு ரிலாக்சேஷன் செய்து ஒரு உத்தரவிடுமா? அதற்காக முயற்சிகளை எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** கல்வித் துறையிலே உள்ள விதிகளை நாம் பின்பற்றித்தான் ஆகவேண்டும். ரிலாக்சேஷன் என்று போய் விடுமானால், ரிலாக்சேஷனே ரூலாக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** பொதுவாக அதிகாரிகளானாலும், ஆசிரியர்களானாலும், அவர்கள் ஓய்வு பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முன்னாலேயே ஓய்வூதியம் கணக்கிட்டுக் கொடுக்கின்ற திட்டம் அரசிடம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்தத் திட்டம் இப்போது நடைமுறையில் இருக்கிறதா? அதிலே சிக்கல் இருந்தால், அது நீக்கப்பட்டு, ஓய்வு பெற்ற அன்றே விரைவாக ஓய்வு ஊதியம் பெறக்கூடிய திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** ஆசிரியர்கள் பல பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் இப்படிப்பட்ட சிரமங்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை அரசு உணர்கிறது. அதற்கான விதிகளை ஆராய்ந்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்பதில் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

## Drawing Masters

* 123 Q.—THIRU P. R. THOMAS and THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Drawing Masters' Association has made a representation to the Government to permit them to appear for Training School-Leaving Certificate Examination, after five years of service ; and

(b) if so, the action taken thereon?

### ஓவிய ஆசிரியர்கள்.

**திரு. பா.ரா. தாமஸ் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) தமிழ்நாடு ஓவிய ஆசிரியர்கள் சங்கம், ஐந்து ஆண்டுக்காலம் பணியாற்றிய பிறகு, அவர்களை டி.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கக் கோரி, அரசுக்கு மனு கொடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (இ) ஆம். இக் கோரிக்கையை பரிசீலிக்க ஏற்பதற்கில்லை என முடிவெடுக்கப்பட்டது.

## Tamil Cultural Centre.

* 129 Q.—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have created a new Department called 'Tamil Cultural Centre'; and

(b) if so, the duties and functions entrusted to that Department?

### தமிழ் கலாச்சார மையம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் கலாச்சார மையம் (Tamil Cultural Centre) என்ற ஒரு புதிய துறை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தத் துறைக்கு என்ன பணிகள் ஒதுக்கப் பட்டுள்ளன ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம். தமிழ்ப் பண்பாட்டு மையம் என்ற புதிய இயக்ககம் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(இ) கம்பர், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்களின் நினைவாக உருவாக்கப்பட்ட இம்மையம், தமிழர் பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, கலை உணர்வை இந்நாட்டிலுள்ளோர் மட்டுமின்றி வெளி நாட்டாரும் தெரிந்து கொள்ளத்தக்கவகையில் நூலகம், படிப்பகம், காட்சி அரங்கம், கலைக் கூடங்கள் கொண்டதாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தமிழ்ப் பண்பாட்டு மையத்திற்குப் பொறுப்பு வகிக்கின்ற அதிகாரிகளாக தமிழ்த் துறையிலே வல்லுநர்களாக இருப்பவர்களை, பொறுப்பில் அமர்த்த தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா? வழக்கம்போல் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழேதான் இந்தத் துறை இயங்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழிலே, தமிழ் மொழியிலே, தமிழ்க் கலைகளிலே நல்ல பற்றும் ஆர்வமும் கொண்டுள்ளவர், டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் அவர்களைத்தான் இதற்கு இயக்குநராக நியமித்திருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இந்தத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தில் தமிழ் எம்.ஏ. படித்தவர்களை, பல பேர்களை பெரிய அளவிலே இந்தத் துறையிலே நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்த மையத்தினுடைய பணிகளை நாம் ஒழுங்காக எப்படி நடத்துவது என்பதுபற்றி நாம் யோசித்துப் பார்க்கின்றபோதுதான், யார் யாரை வேலைக்கமர்த்துவது என்பதுபோன்ற பிரச்சினைகள் வரும். வேலைக்கு அமர்த்தவேண்டியவர்களை மனதில் கொண்டு பணிகளை வரைமுறைப்படுத்துவது என்று ஆகிவிட்டால், இந்தத் திட்டம் தவறாகத்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## Teachers of Government High School, Vaiyampatti.

* 130 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU S. MUTHUSAMY) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the services of teachers of Government High School, Vaiyampatti, Tiruchirappalli District, have not been regularised for the past seven years ;

(b) if so, whether the service books of such teachers who served formerly in Kalaimagal High School, Vaiyampatti, have been retained illegally by its Correspondent;

[1979 நவம்பர் 9

(c) if so, the action taken by the Government to obtain the service books ; and

(d) whether the services of such teachers will be regularised without service books, considering their welfare?

வையம்பட்டி அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்பு
மிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க
வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், வையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி
ஆசிரியர்களின் பணி, ஏழாண்டுக் காலமாக பணிவரன்முறைப்படுத்தப்படாமல்
இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், மேற்படி ஆசிரியர்களின் பணிப்பதிவேடுகள் அவர்கள்
அதற்குமுன் பணியாற்றிய வையம்பட்டி கலைமகள் உயர்நிலைப் பள்ளித்
தாளாளரிடம் சட்ட விரோதமாகச் சிக்கிக் கொண்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், மேற்படி பணிப்பதிவேடுகளைப் பெறுவதற்கு அரசு
என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

(எ) மேற்படி ஆசிரியர்களின் நலன் கருதி, மூந்திய பணிப் பதிவேடுகள்
இல்லாமலேயே அவர்களின் பணிவரன்முறைப்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) தாளாளர் பணிப்பதிவேடுகளை வழக்கு சம்பந்தமாக நீதி மன்றத்
தில் ஒப்படைத்துள்ளார். வழக்கு முடிவு பெறாமல் இருப்பதால் பணிப்
பதிவேடுகள் தற்போது கிடைக்கவில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(எ) ஆசிரியர்களின் பணிப்பதிவேடுகளைப் பரிசீலித்து அவர்களின்
பணி வரன்முறைப்படுத்துவது நடைமுறையில் இருந்து வருகிறது.
ஆசிரியர்களின் பணிக்காலம், பணியின்தன்மை, பெற்ற சம்பளம் போன்ற
விபரங்கள் பணிப்பதிவேட்டில் இருக்கும் ஆதலால், அவர்களின் பணிப்
பதிவேடுகளைப் பரிசீலித்த பின்னரே பணிவரன்முறை செய்வது சரியாகும்.
எனவே, மேற்படி ஆசிரியர்களின் பணிப்பதிவேடுகள் இல்லாமல் அவர்களின்
பணியை வரன்முறைப்படுத்த இயலாது.

திரு. பா. ரா. தாமஸ்: இந்தப் பள்ளியின் முந்திய நிர்வாகமானது தவறான
முறையில் நடந்ததன் காரணத்தினால் அரசுப் பள்ளியில், தனியார் பள்ளி
ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு
ஊதியத்தை நிர்ணயம் செய்வதில் சிரமம் இருக்காது என்ற கருத்து



1979 நவம்பர் 9]

இருக்கிறது. மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களின் பணியின் அடிப்படையிலே
ஊதியம் கொடுத்திருக்கிறார். அந்த அடிப்படையிலேயே இந்த ஆரம்பப் பள்ளி
ஆசிரியர்களுக்கும் ஊதியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

இதுபோலவே, மாநிலத்தில் எத்தனை பள்ளிகளை அரசாங்கம்
மேற்கொண்டிருக்கிறது. அத்தகைய பள்ளிக்கூடங்களில் பணியிடங்கள் உள்ள
ஆசிரியர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பணிப் பதிவேடுகளை வைத்துத்
தான் நடைமுறையில் வரன்முறைப்படுத்த வேண்டுமென்பது விதியாகும்.
அந்த அடிப்படையிலேயே பதிவேடுகள் வந்த பிறகு வரன்முறைப்படுத்த
நடவடிக்கை எடுக்கலாம். இப்போது இருக்கின்ற லட்சக்கணக்கான
ஆசிரியர்களில், அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பணியாற்றிக்கொண்டிருக்
கின்ற ஆசிரியர்கள் இரண்டொருவருக்கு பணிவரன்முறைப்படுத்தப்படாமல்
இருக்கத்தான் செய்யும். அதற்காக பணிப்பதிவேடுகள் இல்லாமலேயே வரன்
முறைப்படுத்துவதாக இருந்தால், நிர்வாகத்திலே பெரிய குழப்பத்தைத்தான்
நாம் வரவேற்கின்ற நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

திரு. ம. சங்கரலிங்கம்: வையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில்
பணி புரிகிறவர்கள், அதற்கு முன்னால் கலைமகள் பள்ளியில் ஆசிரியர்களாக
இருந்தார்கள். கலைமகள் பள்ளி அரசினுடைய உத்தரவுகளை ஏற்றுக்
கொள்ளாததால், அங்கே அரசுப் பள்ளியை ஆரம்பித்து, அந்த ஆசிரியர்களை
வேலைக்கு எடுத்துக்கொண்டார்கள். இப்போது கலைமகள் பள்ளி நீதி
மன்றத்திற்குச் சென்றிருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் அந்த வழக்கு
நீதி மன்றத்தில் இருக்கும். அதற்குரிய வழிமுறைகள் உண்டு. எனவே கல்வித்
துறை அதிகாரிகளை நீதிமன்றத்திற்கு அனுப்பி, பணிப் பதிவேட்டினைப்
பரிசீலனை செய்து, அவர்கள் பணியை வரன்முறை செய்து, அதன்மூலம்
அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதிய உயர்வினை அரசு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேறு வகையிலே பணிப்
பதிவேட்டில் இருக்கும் விவரங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தால்,
அந்த முறையில் ஆராயும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பணிப் பதிவேடு (Service certificate) இல்லாமல் பணியை வரன்முறை செய்யவும் அடிப்படையிலேகூட ஊதிய நிர்ணயம் செய்யவும், தற்போது கல்வித் துறையில் விதிமுறை இருக்கிறது என நினைக்கிறேன். எனவே அந்த முறையில் ஆவன செய்ய, அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு பழக்கம் இருப்பதாக என்னிடம் தரப்பட்ட விவரத்தில் காணோம்.

*Compulsory Religious Instruction in Christian Schools.*

* 131 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN (on behalf of THIRU K. MEENAKSHISUNDARAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government are aware that religious instruction is given compulsorily for the boys and girls studying in Schools run by Christians; and

(b) if so, whether the Government will take action to prevent this non-secular activities of these institutions, run with the aid of Secular State?

கிறித்துவப் பள்ளிகளில் கட்டாய மதபோதனை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிறித்துவ சமூகத்தினரால் நடத்தப்படும் பள்ளிகள் அனைத்திலும் மாணவ, மாணவியருக்கு கட்டாயமாக மதபோதனை செய்யப்படுவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், மதச்சார்பற்ற அரசின் உதவியுடன் நடைபெறும் இப்பள்ளிகள், மதச்சார்புடன் நடத்தப்படுவதைத் தடுக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) அப்படிப்பட்ட புகார்கள் எவையும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சாதாரணமாக அரசியலமைப்புச் சட்டத்தில், அரசு உதவியைப் பெறுகின்ற, மதச்சார்புடைய கல்வி நிறுவனங்களில் மத போதனை கட்டாயமாக நடத்தப்படக்கூடாது என்று விதிமுறை



இருக்கிறது என்று நினைக்கிறேன். அது பல முறை மீறப்படுகிறது. இது பரவலாக பல இடங்களில் இருப்பதை அறிய மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், கல்வித் துறை அதிகாரிகள் மூலமாக ஆய்வு நடத்துவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் கட்டாய மத போதனை இருக்கக்கூடாது என்பதுதான் இப்போது கடைப்பிடிக்கப்படும் விதி. அப்படித் தவறான முறையில் யாராவது செய்தால், அதற்குண்டான நடவடிக்கையை கல்வித் துறை நிச்சயமாக எடுக்கும். ஆனால் சில நிறுவனங்களில், விரும்புகின்றவர்களுக்குப் போதனை தரவென்ற முறையில் ஒரு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. அதற்குச் சில நிபந்தனைகளைப் போட்டிருக்கிறோம். அவை, (1) பிற சமயங்களைத் தாக்குதல் கூடாது, (2) மத மாற்றம் செய்வதற்கு ஆசிரியர்களையோ, மாணவர்களையோ, கட்டிடங்களையோ பயன்படுத்தக்கூடாது, (3) மத போதனை, மத வழிபாடு நடக்கும் நேரத்தை, பாட நேரத்தில் சேர்க்கக் கூடாது. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விரும்புகிறவர்களுக்கு மத போதனை அளிக்கலாம். கல்வி நிலையத்தில் மத போதனை செய்ய டிரஸ்டுகள் ஏற்பாடு செய்தால், அப்படிப்பட்ட கல்வி நிலையங்களில் மதபோதனை நடைபெறலாம்.

திரு. பா. ரா. தாமஸ்: மதத்தின் பெயராலே நடத்தப்படும் பள்ளிகளிலே அல்லது அவர்கள் நிர்வாகத்திலே உள்ள பள்ளிகளிலே பள்ளிப் பாடத் திட்ட நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரங்களிலே, அந்தந்த சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு மதபோதனை அளிக்கிறார்கள். அதற்கு அரசு தடை விதிக்குமா அல்லது அது அவர்களுக்குள்ள உரிமை என்று கருதுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு இப்போது விரும்புவது கட்டாய மத போதனை இருக்கக்கூடாது என்பதுதான். பிற மதத்தினர் மனம் நோகும்படி, அவர்கள் எந்தக் காரியங்களையும் அங்கே செய்யக்கூடாது. மத மாற்றம் இருக்கக்கூடாது. இன்னொன்று, மத போதனை, மத வழிபாடு என்ற பெயரிலே பள்ளி நேரத்தைப் பயன்படுத்தக்கூடாது. இவைகள்தான் அவர்களுக்கு இப்போது போட்டுள்ள நிபந்தனைகள். மதத்தின் பெயரால் மூட நம்பிக்கைகளை வளர்க்காமல் இருந்தால், நிச்சயமாக இந்தச் சமுதாயத்திற்குப் பெரும் சேவை செய்தவர்களாவார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பகுத்தறிவுக் கொள்கைகளை சில நிறுவனங்கள் மாணவர்களிடம் பரப்புவதற்கு விரும்பினால், அரசு அதை அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்வி நிலையங்கள் பகுத்தறிவைத் தான் பரப்ப வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 121, 122, 123 ஆகிய மூன்று வினாக்களும் ஒத்திவைக்கப்படுகின்றன.

### Law Consultative Committee.

* 124 Q.—THIRU D. SANTOSHAM and THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Law be pleased to state :

(a) whether there is any proposal to set up a Tamil Nadu Law Consultative Committee;

(b) if so, the stage at which the matter now stands ?

### சட்ட ஆலோசனைக் குழு.

திரு. த. சந்தோஷம் மற்றும் திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழ்நாடு சட்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: ஆசிரியர்கள், இன்னும் மற்ற துறைகளிலுள்ளவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கன்சல்டேடிவ் கமிட்டி என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல நீதித் துறையில் உள்ளவர்களின் பிரச்சினைகளைக் கவனிக்கத் தனியாக கன்சல்டேடிவ் கமிட்டி அமைக்கப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Such a proposal is not under consideration of the Government.

### First Class Magistrate's Court at Tindivanam.

* 125 Q.—THIRU K. RAMAMOORTHY: Will the Hon. the Minister for Law be pleased to state:

(a) the Courts functioning in Tindivanam Revenue Division; and

(b) whether there is any proposal with the Government to set up a First Class Magistrate's Court at Tindivanam ?



### திண்டிவனத்தில் முதல்வகுப்பு குற்றவியல் நீதிமன்றம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டிவனம் வருவாய்க் கோட்டத்தில் (Revenue division) இயங்குகின்ற நீதி மன்றங்கள் யாவை?

(இ) திண்டிவனத்தில் ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி நீதி மன்றம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) The Courts now functioning in Tindivanam Revenue Division are the following:—

*At Tindivanam*

(i) Sub-Court, Tindivanam.

(ii) District Munsif's Court, Tindivanam.

(iii) Judicial Second Class Magistrate's Court, Tindivanam, and

(iv) Additional Judicial Second Class Magistrate's Court, Tindivanam.

*At Gingee*

(v) District Munsif's Court, Gingee.

(vi) Judicial Second Class Magistrate's Court, Gingee.

(b) No, Sir.

திரு. க. இராமமூர்த்தி: அங்கே இயங்குகின்ற நீதிமன்றங்களைப் பார்க்கும்போது, திண்டிவனத்தில் முதல் வகுப்பு நீதிபதியினுடைய நீதி மன்றம் இருக்க வேண்டியது அவசியமென்பது தெரிகிறது. பல அப்பீல்கள் செஞ்சி, திண்டிவனம் போன்ற பகுதிகளிலிருந்து விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. எனவே நீதி மன்றங்களைப் பரவலாக்குகின்ற கொள்கையை ஏற்றுள்ள இந்த அரசு, திண்டிவனத்தின் கோரிக்கையை மீண்டும் பரிசீலனை செய்யுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The principle of decentralisation advocated by my hon. friend Thiru K. Ramamoorthy would itself compel the Government not to shift the Court of the First Class Magistrate from Villupuram to Tindivanam.

## *Pending Cases*

* 126 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Law be pleased to state :

(*a*) the total pendency of cases in the Court of Sub.Divisional Judicial Magistrate, Poonamallee, as on 1st April 1979;

(*b*) the number of cases (i) pending for six months and (ii) filed under Second 304 of Criminal Procedure Code ; and

(*c*) the average duration of disposal of cases filed under Scction 304 of Criminal Procedurc Code ?

### முடிவு பெறாத வழக்குகள்

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1979 ஆம் நாள் நிலவரப்படி, பூவிருந்தவல்லி நீதித்துறை துணைக்கோட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் முடிவுறாமல் நிலுவையாக உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(இ) (i) ஆறு மாதங்களுக்கு மேலாக நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை, (ii) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 304-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) 304-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் முடிவு செய்யப்படுவதற்கு சராசரியாக ஆகும் கால அளவு யாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY:

| | |
|---|---|
| (a) The total pendency of cases in the Court of Sub-Divisional Judicial Magistrate, Poonamallee as on 1st April 1979 ... ... ... ... | |
| (*b*) The number of cases (i) pending for over six months as on 1st April 1979 ... | 3108 |
| (ii) Filed under Section 304, Criminal Procedure Code as on 1st April 1979 ... ... | 515 |
| (*c*) The average duration of disposal of cases filed under section 304, Criminal Procedure Code— ... ... | Nil |

Does not arise.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: நான் கேட்ட கேள்வியிலே 304-ஏ பிரிவு பற்றிக் கேட்டிருந்தேன். ஆனால் இங்கே பிரிவு 304 என்று போடப்பட்டிருக்கிறது. அதில் தவறு ஏற்பட்டிருக்கலாம். அமைச்சரவர்கள் கொடுத்ததிலிருந்து 'பெண்டிங்' நிறைய அதிகமாக இருக்கிறது என்பது தெரிகிறது. அமைச்சரவர்கள் சொல்லிய பூந்தமல்லி சப்-டிவிஷனல் கோர்ட்டைப்பற்றி எனக்கு நேரிடையாகத்



தெரியும். அது எப்போதும் அதிகமான வழக்குகள் உள்ள கோர்ட். பொது மக்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். ஆதலால் மற்றொரு முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட் கோர்ட்டை அங்கு அமைக்க அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, in view of the expert knowledge of the hon. Member Thiru E. S. Venkatesan who has stated about this high mounting pendency prevailing in the Court at Poonamallee, I am inclined to submit to this House that should the High Court consider that another Court is absolutely necessary, the High Court may be invited to send a proposal for sanction of this Government.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: அமைச்சரவர்கள் "High Court may be invited", என்று சொன்னார்கள். யார் அவர்களை "இன்வைட்" பண்ணுவது?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The very large number of cases might be a factor which will invite the High Court or induce the High Court to send a proposal to the Government.

## *Rail Rapid Transit System for Madras*

* 132 Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether there is any proposal to move the Government of India to accord sanction immediately to the recommendation for the surface-*cum*-elevated-rail rapid transit system from Thiruvottiyur to Kasturbanagar in Madras City, in order to relieve the ever-increasing traffic problem ; and

(*b*) if so, the stage at which the matter now stands?

### சென்னை மாநகருக்கு ரயில் விரைவு போக்குவரத்து

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அதிகரித்துக்கொண்டே வரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை சமாளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில் திருவொற்றியூரிலிருந்து கஸ்தூரிபாய் நகருக்கு மேற்பரப்பு-உயர்நிலை ரயில் விரைவு போக்குவரத்து முறைக்கான பரிந்துரைக்கு உடனடியாக அனுமதி வழங்குமாறு இந்திய அரசைக் கேட்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) & (இ) சென்னை மாநகர் விரைவு போக்குவரத்து திட்டத்தை விரைவில் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கும்படி, மத்திய அரசை தமிழ்நாடு அரசு ஏற்கனவே வலியுறுத்தி உள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(பிற்பகல் 4-20)

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: இந்தத் திட்டத்திலே எத்தனை பகுதிகள் உள்ளன? எனக்குத் தெரிந்தவரை, இந்தத் திட்டம் 3 பகுதிகளாக இருக்கின்றன என்று கருதுகிறேன். பீச்சிலிருந்து லஸ் வரை 8.1 கிலோ மீட்டர், லஸ்ஸிலிருந்து கஸ்தூரிபாய் நகர் வரை 4.3 கிலோ மீட்டர், பீச்சிலிருந்து திருவொற்றியூர் வரை 9.3 கிலோ மீட்டர். பண நெருக்கடியின் காரணமாக இவற்றை எல்லாம் விட்டு விட்டு சென்னை பீச்சிலிருந்து பைக்ராப்ட்ஸ் ரோடு, லஸ் வரை உள்ள திட்டத்தை மட்டும் செயல்படுத்துவது என்கிற ஒரு கருத்து இருக்கிறது. அதிலே பீச்சிலிருந்து பைக்ராப்ட்ஸ் ரோட்டிற்கு முதலில் போட வேண்டுமென்றுதான் எண்ணம் இருக்கிறது. அதற்குச் செலவு 23.84 கோடி ரூபாய். மற்ற பகுதிக்குச் செலவு ரூபாய் 19.84 கோடி. இப்போதே திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்தால், 1982 ஆம் ஆண்டுக்கு முன் முடிந்து விடும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆதலால் உடனேயே இத்திட்டத்தைத் துவக்க அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூன்று வகையில் அந்தத் திட்டம் உள்ளது என்று உறுப்பினர் சொன்னது மிகவும் சரியானது. நிலைமை என்னவென்றால் இதை நிறைவேற்றிக் கொடுப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன.

"The CM. has addressed the PM again on 6th October 1979 emphasising the need to approve the above project for Madras. The reply from the Government of India is still awaited."

This is the latest pos'tion.

திரு. க. இராமமூர்த்தி: இது மிக மிகத் தேவையான திட்டம். இது எத்தனை ஆண்டுகளாக மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது? இதுபற்றி நம்முடைய முதலமைச்சர் எப்போது மத்திய அரசோடு தொடர்பு கொண்டார்? இப்போது இருக்கின்ற நிலையிலே இதை மீண்டும் நம்முடைய முதலமைச்சர் மத்திய அரசிடம் வலியுறுத்தினால், கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முன் வருவாரா?



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். 6—10—1979 அன்று தமிழக முதல்வர் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

"The Chief Minister addressed the Prime Minister again on 6th October 1979 emphasising the need to approve the above project for Madras. The reply from the Government of India is still awaited."

இப்போதிருக்கிற சூழ்நிலையை என்று உறுப்பினர் சொன்னார். எப்போதுமே மத்திய அரசில் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு ஒரு 'புல்' இருக்கிறது. (சிரிப்பு).

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: முந்தின கேள்விக்கு தொழிலாளர் நல அமைச்சர் என்ன பதில் சொன்னார் என்று எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (சிரிப்பு)

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் ஏதோ சொன்னார்கள். ஆங்கிலத்தில் அவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. தமிழில் ரொம்பப் பாண்டித்தியம் பெற்றவர். அவர் தமிழிலேயே சொல்லியிருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் தமிழிலேயே இரண்டொரு வார்த்தைகள் சொல்லலாமே!

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லும்போது இப்போது இருக்கிற அரசியல் சூழ்நிலையில் மத்திய அரசிலிருந்து விரைவில் அனுமதி பெற்றுவிடலாம் என்று சொன்னார். அதற்கு நான் இப்போதிருக்கிற முதலமைச்சருக்கு மத்திய அரசில் எப்போதும் செல்வாக்கு இருக்கிறது என்று சொன்னேன். திட்டத்திற்கு அனுமதி கிடைப்பதில் சிக்கல் இருக்கிற காரணத்தால் 6—10—1979 அன்று பிரதமருக்கு நம்முடைய தமிழக முதல்வர் இந்தத் திட்டத்தை கட்டாயம் தமிழகத்தில் செயல்படுத்த வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்: மிக்க நன்றி.

திரு. பா. ரா. தாமஸ்: இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது, சென்னை நகரக் கட்டிடங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா? இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது, கட்டிடங்களுக்குப் பாதிப்பு ஏற்படுமானால், அதற்கு அரசு என்ன பரிகாரம் காண உத்தேசம்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நாம் எல்லோரும் விரும்புவது போல் இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தால், உறுப்பினர் சொல்கிற கருத்து நிச்சயம் கவனத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினா 133 மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே . . .

THIRU K. RAMAMOORTHY: Sir, in view of the present situation, I do not press my question. There is already a Joint Select Committee on this.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் கேள்வியை 'பிரஸ்' பண்ணவில்லையென்று சொன்னதால், அமைச்சர் பதில் சொல்ல வேண்டியதில்லை.

*Scheme for Drinking Water Supply from Siruvani to Coimbatore.*

*134 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Labour be pleased to State—

(a) when the drinking-water supply scheme from Siruvani to Coimbatore is expected to be completed;

(b) whether there is any proposal under the consideration of the Government to provide drinking-water to the intermediary villages; and

(c) if so, the details thereof?

சிறுவாணியிலிருந்து கோவைக்கு குடிநீர் வழங்கு திட்டம்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறுவாணியிலிருந்து கோவைக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டம் எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

(இ) இடையிலே உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் அளிக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஜூன் 1980.

(இ) ஆம்.

(உ) கோவை நகராட்சி (சிங்காநல்லூர் உள்பட) —— சூலூர் விமானப் படைத்தளம், 6 பேரூராட்சிகள், 15 வழியோர கிராமங்கள்



1979 நவம்பர் 9]

டாக்டர் இரா. சனார்த்தனம்: சிறுவாணி குடிநீர் திட்டத்தின் மூலம் கோவை நகருக்குக் குடிநீர் கிடைக்கும் என்றாலும், அது மாநகராட்சியாக ஆன பிறகு, அது பெருகியிருக்கிற அளவில் மக்கள் தொகையும் உயரக் கூடிய நிலையில் தேவையான அளவு குடிநீர் கிடைக்குமா? அல்லது இத்திட்டத்தில் மாற்றம் ஏதாவது ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வருகின்ற தண்ணீர் போதும் என்று கருதுகிறோம். மாற்றம் செய்வதாக இப்போது ஆலோசனையில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: நீண்டகாலமாக இந்தத் திட்டம் தாமதப் படுத்தப்படுகிறது. 1980 ஆம் ஆண்டு திட்டம் முடிவடையும் என்று சொன்னார்கள். 1980 ஆம் ஆண்டு என்றால் எந்த மாதம்?

(பதில் இல்லை)

திரு. வே. தங்கப்பாண்டியன்: On a point of order. ஒரு கேள்வி அவையில் அனுமதிக்கப்பட்டு, அமைச்சர் பதிலோடு தயாராக வந்து, அதன் பிறகு அந்தக் கேள்வியைக் கேட்ட உறுப்பினர் . தனக்கு விருப்பம் இல்லையென்று சொன்னால் மட்டும் அந்தக் கேள்வியை 'வித்டிரா' பண்ணக்கூடிய நிலைக்கு மேலவை விதியிலே ஏதாவது இடம் இருக்கிறதா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் சொல்வது என்னவென்றால் கேள்வி இருந்தால் தான் துணைக் கேள்வி வருகிறது. கேள்வியை உறுப்பினர் வற்புறுத்தவில்லையென்றால், அது போய்விடுகிறது என்று தான் அர்த்தம். அதனால் துணைக் கேள்வி வருவதற்கு நியாயம் இல்லை அல்லவா?

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஒரு கேள்வி கேட்கப்பட்டு, அனுமதிக்கப் பட்டு, அவைக்கு வந்த பிறகு கேள்வி கேட்ட உறுப்பினரே அந்தக் கேள்வியை விரும்பவில்லையென்று சொல்லிவிட்டாலேயே அது காலாவதியாகிவிட்டது, முடிந்து விட்டது என்று அர்த்தமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: போயிற்று என்று தான் அர்த்தம், முடிந்து விட்டது என்று தான் அர்த்தம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: இந்தக் குடிநீர் திட்டத்திற்கு அரசு எவ்வளவு தொகை செலவழித்திருக்கிறது? மேற்கொண்டு எவ்வளவு தொகை செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஆயுள் காப்பீட்டு கழகத்திலிருந்து ரூபாய் 500 இலட்சமும், தமிழ்நாடு அரசிடமிருந்து ரூபாய் 1,... இலட்சமும் கடனாகப் பெறப்பட்டிருக்கிறது. ஆக 15.16 கோடி. இதற்கு மேல் செலவாகும் என்று எதிர்பார்க்கவில்லை. செலவாகும்படி ஆகிவிட்டாலும் பின்வாங்கப் போவதில்லை.

**புலவர் புலமைப்பித்தன்:** சிறுவாணி குடிநீர் வழங்கு திட்டம் நீட்டிக்கப்படும் என்று சொன்னார்கள். திருச்சிப் பாதையை ஒட்டி இருக்கிற ஊர்களுக்கு மட்டுமா, இல்லை வழியோர இரு மருங்கிலும் தள்ளி இருக்கும் கிராமங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தாங்கள் அனுமதித்தால் இத்திட்டத்தால் பயனடையும் சுற்றுப்புற நகரங்கள், வழியோரக் கிராமங்கள் ஆகியவற்றின் பட்டியலைப் படிக்க நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நேரம் ஆகுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஒன்றும் நேரமாகாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சரி, படியுங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** சுற்றுப்புற நகரங்கள், சிங்காநல்லூர் நகராட்சி, கணபதி பேரூராட்சி, தெலுங்குப் பாளையம் பேரூராட்சி, சூலூர் பேரூராட்சி, கவுண்டபாளையம் பேரூராட்சி, குனியாமுத்தூர் பேரூராட்சி, அங்கநூர் பேரூராட்சி, சூலூர் விமானப் படைத்தளம்.

வழியோரக் கிராமங்கள், ஆலந்துறை பேரூராட்சி, புலுவாப்பட்டி பேரூராட்சி, பேரூர் பேரூராட்சி, குமாரபாளையம் பேரூராட்சி, தொண்டாமுத்தூர் பேரூராட்சி, தாழியூர் பேரூராட்சி, வடவள்ளி பேரூராட்சி, வீர கோளம் பேரூராட்சி, நாகபுரம் ஊராட்சி.

தீத்திபாளையம் ஊராட்சி, ஜாகிர்நாயக்கன்பாளையம் ஊராட்சி, தேவராயபுரம் ஊராட்சி, மாதம்பட்டி ஊராட்சி, மாதவராயபுரம் ஊராட்சி, பேரூர் செட்டிபாளையம் ஊராட்சி.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கேள்வியே "இடையிலே உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் அளிக்கும் உத்தேசம் எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்பது. நீண்ட பதிலாக இருக்குமானால், மற்ற கேள்விகளுக்கு தொழிலாளர் நல அமைச்சர் அச்சடித்துக் கொடுப்பது மாதிரி அச்சடித்துக் கொடுத்திருக்கலாம். இவ்வளவு நேரத்தை வீணாக்க வேண்டியது இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 135, 136, 137 ஆகியவை இடையில் எடுத்துக்கொள்ளப்படும்.





*Medical Department Staff.*

138 Q.—THIRU K. RAMAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state the number of staff of Medical Department against whom action has been taken so far as a result of the surprise visits, inspection and enquiry made by the Hon. Minister for Health in the Government Hospitals?

மருத்துவத்துறை ஊழியர்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மருத்துவமனைகளுக்கு திடீரென்று சென்று விசாரணை, பார்வையிடல் ஆகியவை நடத்தியதன் விளைவாக, மருத்துவத்துறையைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** 46 நபர்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** 46 பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இதில் எத்தனை பேர் குற்றவாளிகள் என்று முடிவு செய்யப்பட்டது? எத்தனை பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இடையிலே விசாரணை தொடங்குவதற்கு முன்னால் அல்லது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, திரும்பவும் சஸ்பென்ஷன் ரத்து (Cancel) செய்யப்பட்டு வேலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை பேர் மீது குற்றச்சாட்டுகள் கொண்டுவரப்பட்ட பிறகு, சில நாட்களிலே கைவிடப்பட்டு அவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்?

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விடை, சுமார் 8 பக்கங்கள் இருப்பதால், அதனை அச்சடித்துத் தந்துவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** பண்ருட்டி மருத்துவமனையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களே தவறுகளைக் கண்டுபிடித்து 4 டாக்டர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களை டிரான்ஸ்ஃபர் செய்து, அந்தச் செய்தி பத்திரிகைகளிலே கூட வந்தது. அதற்குப் பிறகு உண்மையிலேயே மருந்துகள் இல்லாததால்தான் 'இன்டென்ட்' போட்டும் 6 மாதங்களுக்கு

அதிகமாக ஆகியும் கடலூர் மருத்துவமனையிலிருந்து தேவையான மருந்துகள் வராததால் தான், அந்த நிலை ஏற்பட்டது என்ற உண்மை தெரிந்த பிறகு, அந்த டாக்டர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையா? இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்க்க இனியாவது முறை யான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மருந்து இல்லை என்று சொல் கின்றபோது, தேவையான மருந்துகளை வாங்கிக்கொள்வதற்கு சம்பந்தப் பட்ட மருத்துவமனையினுடைய மருத்துவ அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் 'இன்டென்ட்' போட்டு குறித்த நேரத்தில் மருந்து வரவில்லையென்றால், அவர்களுக்கென்று இருக்கின்ற அதிகாரத்தைப் பயன் படுத்தி தேவையான, அத்தியாவசியமான மருந்துகளை உள்ளூரிலேயிருந்து வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வாங்கி வைக்கத் தவறினால், அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் மக்கள் தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி உள்ளூரிலே யிருந்து மருந்துகளை வாங்கி வைக்காததால்தான், அங்கே இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலிருந்து திடீரென்று மருத்துவமனைகளுக்குச் சென்று ஆய்வு நடத்தி, பலபேர் குற்றவாளிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல்கள் வந்திருக்கின்றன. இது வர வேற்கத்தக்கது என்றாலும், மக்களின் பிரதிநிதிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களோடு செல்கின்றபோது, அவர்களுக்கு வேண்டாதவர்களாக இருப்ப தால், நல்லமுறையில் பணியாற்றும் அதிகாரிகள் மீது கூட தவறான அபிப் பிராயம் சொல்கிறார்கள். எனவே, ஆய்வுக்குச் சென்று நடவடிக்கை எடுக்கும் நிலை நீடிக்கவேண்டுமா? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மக்கள் நலன் கருதி மருத்துவ மனைகளில் உரிய முறையில் எல்லோரும் பணியாற்ற வேண்டும் என்பதற் காகத்தான் இந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மக்கள் பிரதிநிதிகளே வேண்டாம் என்று சொன்னால், கைவிட்டுவிடத் தயார்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவமனை களில் பணியாற்றுகின்ற டாக்டர்களின் நிலையைச் சொன்னார்கள். மருந்து வேண்டும் என்று "இன்டென்ட்" போட்டு ஓராண்டுக்கு மேலாகியும் டி.எம்.ஓ. விடமிருந்து இன்னும் மருந்து அனுப்பப்படவில்லை. டாக்டர்கள் மீது





நடவடிக்கை எடுக்கும் முன்பு, டி.எம்.ஓ.-க்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், அவர்களைக் காப்பாற்றுவது அவசியம் தானா? "இன்டென்ட்" போட்டே ஒரு ஆண்டு காலத்துக்கு மேலாக டாக்டர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர்கள் தாங்களாகவே உள்ளூரிலேயிருந்து மருந்துகளை வாங்கிவிட்டால், அது 'ரேட்டிஃபை' ஆவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகுமோ என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கேகூட தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நடவடிக்கையின் காரணமாக இந்த நிலைமை மேலும் அதிகரித் திருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கூற்று உண்மையாக இருக்குமானால், அந்த டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுத்ததை (Withdraw) திரும்பப் பெற்றுக்கொண்டு அவர்களை வேலைக்கு அழைக்கவேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மருத்துவர்கள் மருந்து வாங்கு வதற்காக, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஏற்றவாறு, அவர்களுக்கு 'டிஸ்கிரஷனரி பவர்ஸ்' என்று ஒரு வரையரைக்கு உட்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அந்தச் சிறிய மருத்துவமனையினுடைய மருத்துவ அதிகாரி வாங்கிய மருந்துகள் போதாத அளவுக்கு இருந்தால், அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற பெரிய மருத்துவ அதிகாரி கூட உள்ளூரிலே யிருந்து மருந்துகள் வாங்கிக்கொடுக்கலாம். அந்த அதிகாரம் அவருக்கு இருக்கிறது. இத்தகைய அதிகாரங்கள் வழங்கப்பட்டும், சில இடங்களில் மருத்துவர்கள் மருந்து வாங்காமல் "இன்டென்ட்" போட்டோம், வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் டி.எம்.ஓ. போன்றவர்கள் இதுபோன்ற தவறுகள் செய்கிறார்கள் என்று தெரிந்தால், அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே தவிர, அவர்களைக் காப் பாற்றுவதற்கு யாரும் இங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் நல்லமுறையில் எல்லாக் காரியங்களையும் செய்கிறார் என்பது நடைமுறையிலே தெரிகிறது. தவறு செய்த டாக்டர்களை நீக்கியாயிற்று. அப்படி நீக்கியவுடனே திரும்பவும் போட்டாயிற்று என்று சொன்னால், நீக்குவானேன், மீண்டும் போடுவானேன்? தவறு செய்தவன், எந்த ஊருக்குப் போனாலும், இந்தத் தவறுதானே செய்வான். செய்த தவறுக்காக அவனை நீக்கிவிட்டால், அவன் கோர்ட்டுக்குப் போவான், அங்கு போய் நன்றாகக்

கஷ்டப்பட்டு, திருந்தி, இனிமேல் நல்லபடியாக நடப்பேன் என்று அவனாகத் திருந்துவான். ஆகவே, நீக்கியவர்களை உடனடியாகப் போட்டாயிற்று என்று சொன்னால், என்ன அர்த்தம்?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** நீக்கியவுடனேயே போடுவதில்லை. துறையின் அதிகாரத்திற்குட்பட்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பிறகுதான் அவர்கள் திரும்பவும் போடப்படுகிறார்கள். கூடியவரையில் அவர்களை மீண்டும் அதே இடத்தில் போடுவதில்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, may I ask the Hon. Minister whether such punitive action is being taken only against Medical Officers or whether equally punitive action is taken against all members of the hospital staff whom may indulge in such activities?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** மருத்துவ அதிகாரிகள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அங்கே பணியாற்றுகின்ற எல்லாப் பிரிவுகளிலே இருப்பவர்கள் மீதும், அவர்கள் தவறு செய்வார்களானால், நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** இதுபோன்ற சோதனைகள் மூலம் தவறு செய்பவர்கள் கண்டிக்கப்படுகிறார்கள் என்பதோடு, அங்கே சிறப்பான முறையில் பணியாற்றுபவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு வருவதால் தொடர்ந்து இதுபோன்ற சோதனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வாரா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** மக்கள் விரும்புகின்ற வழியில் பணியாற்றத்தான் இந்த அரசு இருக்கிறது.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திடீரென்று சோதனைகள் செய்தபோது, எதுபோன்ற குற்றங்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது? பொதுவாக அப்படிப்பட்ட குற்றங்கள் மேற்கொண்டு நடக்காமல் தடுப்பதற்கு இதுவரை எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** எதுபோன்ற குற்றங்கள் என்று சொல்வது மிகப்பெரிய பட்டியலாக இருப்பதால்தான், அச்சடித்துத் தந்துவிடுகிறேன் என்று கூறியிருக்கிறேன். அப்படி தவறுகள் மேற்கொண்டு செய்யாமலிருக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்ட பண்ருட்டி நிகழ்ச்சியில் இருக்கும் மருத்துவ அதிகாரி மருந்து அனுப்ப வேண்டும் என்று தலைமை மருத்துவமனை அதிகாரிக்குக் கோரிக்கை விடுத்தும், அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல் தாமதப்படுத்திய கடலூர் தலைமை மருத்துவ அதிகாரி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** அதற்குரிய விளக்கம் கோரி தலைமை மருத்துவ அதிகாரிக்கு இன்றையதினம் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

*Medical Allowance*

* 139 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the total amount granted towards Medical Reimbursement to the Government Servants including teachers during 1976-77 and 1977-78;

(*b*) whether any representation has been received from the concened Associations requesting the Government to sanction the Medical Allowance instead of Medical Reimbursement to the Government Servants including teachers; and

(*c*) if so, the action taken thereon?

மருத்துவப்படி.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில் ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவு ஈட்டுத் தொகைக்காக (Medical Reimbursement) தரப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

(இ) மருத்துவச் செலவு ஈட்டுத் தொகைக்குப் பதிலாக, ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் மருத்துவப்படி தரவேண்டுமென்று சம்பந்தப்பட்ட சங்கங்களிடமிருந்து கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன்:** (அ) 1976-77-ல் ரூபாய் 44.23 இலட்சமும், 1977-78-ல் ரூ. 42.25 இலட்சமும் ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களுக்கு மருத்துவச் செலவு ஈட்டுத் தொகைக்காக தரப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) அரசு ஊழியர்களுக்கு மாதந்தோறும் மருத்துவப்படி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு அவ்வாறு செய்ய இயலாது என முடிவு செய்யப்பட்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதே கேள்வியை சில தினங்களுக்கு முன்பு மேலவையில் நடந்த கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டபோது, மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை அளிப்பதிலே ஊழலுக்கு நிறைய இடம் இருப்பதால், அதை ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட அளவுத் தொகையை அனைத்து அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சமமாக அளிப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தார்கள். ஆனால், இப்போது மாறுபட்ட விடையைக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மருத்துவச் செலவு ஈட்டுத் தொகைக்குப் பதிலாக ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் மருத்துவப்படி தர வேண்டுமென, ஆசிரியர் சங்கங்கள் உட்பட பல்வேறு பணியாளர் சங்கங்கள் விடுத்துள்ள கோரிக்கை குறித்து பல தடவை அரசினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மருத்துவச் சலுகை என்பது தேவை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும். மருத்துவச்சிகிச்சை எதுவும் தேவையில்லாதவர்கள், மருத்துவப் படி எதுவும் பெறத் தகுதியுடையவர்களாகக் கூடாது. மருத்துவச் செலவுகளை ஈடு செய்வதே இதில் திட்டவட்டமான நோக்கமாக இருக்க வேண்டும். அரசு ஊழியருக்குக் கொடுக்கப்படும் சம்பளத்துடன் ரொக்கப்படியும் நாளடைவில் இயல்பாகக் கொடுக்க வேண்டியதாகி விடும். மருத்துவச் சிகிச்சை நீங்கலான பிற காரியங்களுக்கு அதனைப் பயன்படுத்திக்கொள்ள வழியும் கூடும். மாதம் ஒன்றுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை மருத்துவப் படி கொடுப்பதானாலும், அரசுக்குத் தோராயமாக ஆண்டுக்கு ரூ. 5 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. ஆதலால், அரசு ஊழியருக்குப் பணமாகத் தரவேண்டுமென்பதில்லை; தேவை நேரும் போது, மருத்துவமனைகளில் அவர்கள் சிகிச்சைக்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தர ஏற்பாடு செய்யலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இதுபோன்ற நிலையில் சில தவறுகள் ஆங்காங்கே நிகழ்ந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தத் தவறுகள் நடைபெறாமலிருப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இதுபோன்ற நிலையில் சில தவறுகள் என்று சுட்டிக்காட்டியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில தவறுகள் அல்ல, பல தவறுகள் . . .



**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களைச் சொல்லவில்லை, சங்கங்கள் தந்த கோரிக்கைகளின் . . .

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** சில தவறுகள் அல்ல, பல தவறுகள். இது தேவை உள்ளவர்களுக்குக் கிடைப்பதில்லை. உண்மைக்கு மாறான காரணங்களைக் காட்டி, உண்மைக்கு மாறான சான்றுகள் கொடுத்து, பணத்தைப் பெற்று, தங்களுடைய சுய நலத்துக்காகப் பயன்படுத்து கிறார்கள் என்பதே சங்கங்களுடைய பொதுவான குற்றச்சாட்டாக இருக்கும் போது, ஊழலை ஒழிக்க வேண்டும், லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும் இந்த அரசுக்கு ஊழலுக்கு வழிவகுக்கும் இந்த முறையை மாற்றுவதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-40)

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** ஊழியர்களுக்கு மாதத்திற்கு ரூ. 10 அல்லது ரூ. 15 மருத்துவப்படியாகக் கொடுத்து விடுகிறோம் என்று வைத்துக்கொண்டால், சில நேரங்களில் மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் ஊழியர்களுக்கு அதிலும் குறிப்பாக கொஞ்சம் கடினமான வியாதியால் அவதிப்படுகிறவர்களுக்கு சொந்தத்திலிருந்து அதிகமாகச் செலவாக வழி உண்டாகும். அதோடு நோயால் பாதிக்கப்படாதவர்களுக்கு இந்த மருத்துவப் படியைப் பணமாகத் தருகிறபோது, அதை அவர்கள் சர்வ சாதாரணமாகச் செலவு செய்துவிடுகிற வாய்ப்பும் ஏற்பட்டுவிடும். ஆகவே அந்த மாதிரிச் செய்வதைவிட தேவைப்படுகிற ஊழியர்களுக்கு தேவைப்படுகிற நேரத்தில் தேவைப்படுகிற அளவுக்கு மருத்துவச் செலவிற்கான உதவியைச் செய்வதால் அவர்களுக்கு நன்மை ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகிற தவறுகள் இல்லாமலிருக்க பல்வேறு ஏற்பாடுகளையும் இந்த வகையில் அரசு செய்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இந்தப் பிரச்சினை தொடர்ந்து ஊழியர்களுக்கு ஒரு அதிருப்தியைத் தருகிற பிரச்சினையாகவே இருந்து வருகிறது. மெடிகல் எக்ஸ்பென்செஸ்-க்கு என்று அரசாங்கத்தில் நிதி ஒதுக்கப்படுகிறது. ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டுக்கும் இவ்வளவு தொகை என்று ஒதுக்கப்படுகிறது. ஆனால் எல்லா ஊழியர்களும் இந்த வசதியைப் பெற முடியவில்லை. மேல் மட்டத்தில் இருக்கும் சிலரும், அரசை சீக்கிரமாக அணுகக்கூடிய வாய்ப்பு உள்ளவர்களும் இவ்வாறு ஒதுக்கப்படும் தொகையிலிருந்து ஒரு பெரும்பகுதியைப் பெற்று விடுகிறார்கள் என்ற குறை இருந்து வருகிறது. எனவே ஆண்டுக்கு இவ்வளவு ரூபாய் என்று மெடிகல் எக்ஸ்பென்சுக்காக . . .

ஒதுக்கும் தொகையை நபருக்கு இவ்வளவு என்று சம பிரித்து அரசாங்கம் ஏன் கொடுக்கக்கூடாது? நம் நாட்டில் அநேகமாக எல்லோரும் நியூட்ரிஷன் குறைவு காரணமாக வியாதிக்குள்ளாகிறார்கள். வியாதி வராதவர்கள் யாருமே கிடையாது; ஒரு குடும்பம்கூட வியாதியிலிருந்து தப்ப முடியாத நிலை இருக்கிறது. எனவே ஊழியர்களுக்கு அந்தத் தொகையை சம பிரித்துக் கொடுத்து விடுவது நல்லது என்று நினைக்கிறேன். அவர்கள் அதிகமான தொகையைக் கூட கேட்கவில்லை. இருக்கிற தொகையை சம பிரித்துக் கொடுத்தாலே போதும். அதை ஏன் அரசு செய்ய முன்வரவில்லை?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 44.25 லட்சம் ரூபாயும் 42.25 லட்சம் ரூபாயும் தான் மருத்துவ ஈட்டுச் செலவிற்காக அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை ஊழியர்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்றால், ஒவ்வொருவருக்கும் மிகக் குறைந்த தொகைதான் கிடைக்கும். அது அவர்களுடைய மருத்துவச் செலவிற்கு எந்த வகையிலும் போதாது. தவறுகள் நடைபெறாத அளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எங்காவது தவறு நடக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுமானால், இந்த அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ரி-இம்பர்ஸ்மெண்ட் என்று சொல்லப்படும் மருத்துவச் சிகிச்சைக்கான ஈட்டுத் தொகையில் பெரும்பகுதியான தொகையை அதிகாரிகளே பெற்றுவிடுவதாக ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது. மாதந்தோறும் ரூ. 500-க்கு மேல் இந்த வகையில் மருத்துவ ஈட்டுத் தொகையைப் பெறும் அதிகாரிகளை நிரந்தர நோயாளிகள் என்று கணக்கிட்டு, அப்படிப்பட்ட அதிகாரிகளுக்குக் கட்டாய ஓய்வு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, மருத்துவ ஈட்டுப்படி தேவையின் அடிப்படையில் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஓய்வு பெற்றவர்கள் அனைவருக்கும் இது கண்டிப்பாகத் தேவைப்படும். காரணம் வயதானவர்களுக்கு நிச்சயமாக உடம்பு சரியாக இருக்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வயதானவர்கள் எல்லாம் உடம்பு சரியில்லாமல் இருப்பார்களா என்ன?



**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** எனவே ஓய்வு பெற்றவர்களுக்கு மாதா மாதம் பென்ஷன் தொகையோடு இந்த மருத்துவ ஈட்டுத் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இது குறித்து தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை என்பது அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த வசதியை அரசுத் துறையிலும், உள்ளாட்சித் துறையிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் மட்டும் அனுபவிக்கிறார்கள். ஆனால் தனியார் துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த மருத்துவ ஈட்டுத் தொகை வழங்கப்படுவதில்லை. எனவே அவர்களுக்கும் இந்த வசதியை விரிவாக்கும் திட்டம் பற்றி அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** தற்போது அந்த விதமான திட்டம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Kidney Transplantation.*

* 140 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN and THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether it is a fact that there is no facility in the General Hospital, Madras for transplanting kidney to the kidney-affected patients ;

(*b*) if so, whether any scheme is under the consideration of the Government for providing such a facility ; and

(*c*) if so, the date on which the scheme will be implemented?

## சிறுநீரகம் பொருத்துதல்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :**
**திரு. பா. ரா. தாமஸ் :**
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்:

(அ) நோயாளிகளின் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டால் மாற்று சிறுநீரகம் பொருத்துவதற்கான வசதி, சென்னை பொது மருத்துவ மனையில் இல்லை என்பது உண்மையா?

[1979 நவம்பர் 9

(இ) ஆம் எனில், இந்த வசதியை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(உ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** (அ) ஆம்.

(இ) & (உ) மாற்று சிறுநீரகங்கள் பொருத்தப்பட்ட நோயாளிகளுக்கு முறையான சிகிச்சைகளை அளிப்பதற்கு தேவையான இடவசதி (Barrier Nursing Room) தற்சமயம் பொது மருத்துவமனையில் இல்லை. எனவே புதிதாகக் கட்டப்பட்டு வரும் பலமாடிக் கட்டிடத்தில் இச்சிகிச்சைக் [illegible] எனவே சிறுநீரக மருந்தியல் மற்றும் சிறுநீரகக் குழாய் அறுவையியல் துறைகள் இப்புதிய கட்டிடத்திற்கு மாற்றிய பிறகு மாற்று சிறுநீரகங்கள் பொருத்துவதற்கான முறைகள் கையாளப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தத் திட்டத்திற்காக அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு? எவ்வளவு விரைவாக அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** இந்தத் திட்டத்திற்கான கட்டிடத்தையே இப்போது தான் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அதற்கான வரைமுறைகள் நிர்ணயிக்கப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இந்த ஆண்டு [illegible] நிதிநிலை அறிக்கையில் நான் பேசும்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி தந்தார்கள். அதாவது வருகிற ஆண்டு இந்தத் திட்டத்திற்கு நிதி [illegible] செய்யப்படும் என்றும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதை நடைமுறைப்படுத்தலாம் என்றும் கூறினார்கள். எனவே வருகிற நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்து திட்டத்தைத் துவக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு உறுப்பினர் நிதிய மைச்சர் அவர்களிடம் தெரிவித்த கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன், மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டாலும்கூட, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, அதற்குத் தேவையான பயிற்சி பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்களா என்பது தெரிய



1979 நவம்பர் 9]

வில்லை. அப்படிப் பயிற்சிபெற்ற டாக்டர்கள் அரசு மருத்துவ மனைகளில் இல்லையென்றால், [illegible] பெறுவதில் இத்தகைய மாற்றுச் சிறுநீரகம் பொருத்தும் பயிற்சி பெற்றவர்கள் இருப்பதால், அங்கே நமது அரசாங்க டாக்டர்களை டெபுடேஷனில் அனுப்பும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாற்று சிறுநீரகம் பொருத்தப்பட சிறுநீரகம் தானமாக அளிப்பவரின் திசுக்களையும், மாற்று சிறுநீரகம் பொருத்தப்படுவோரின் திசுக்களையும் பொருத்தம் பார்க்கும் முறை இச்சிகிச்சையில் இன்றியமையாததால், திசுக்கள் பொருத்தம் பார்க்கும் பரிசோதனைக் கூடம் (tissue testing laboratory) மிகவும் அவசியமானது. இதற்கான பயிற்சி பெறுவதற்காக ஒரு மருத்துவரை சாண்டிகாரிலுள்ள முதுநிலைப்பட்ட மேற்படிப்பு மருத்துவ நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட விருக்கிறது. இந்த திசுக்கள் பொருத்தும் முறையில் ஒரு மருத்துவர் பயிற்சி பெற்று வந்த பிறகு, புதிதாகக் கட்டப்பட்டுள்ள பலமாடிக் கட்டிடத்தில் சிறுநீரக அறுவையியல் துறையில் ஒரு திசுக்கள் பொருத்தம் பார்க்கும் சோதனைக்கூடம் அமைக்கப்பட்டு, மாற்று சிறுநீரகம் பொருத்துவதற்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாற்று சிறுநீரகம் பொருத்தும் வசதி அரசுத் துறை மருத்துவ மனைகளில் இல்லாத காரணத்தால், இத்தகைய நோயால் பாதிக்கப்படும் அரசு ஊழியர்கள் அதற்கான சிகிச்சையை தனியார் மருத்துவ மனைகளில்தான் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வாறு தனியார் மருத்துவ மனைகளில் மாற்று சிறுநீரகம் பொருத்திக்கொள்ளும் போது, அதிகமான செலவாவதால், அதை ஈடுகட்ட அரசு முன்வருமா ? அப்படியென்றால் ஒருவருக்கு எவ்வளவு தொகை அளிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும், அதைப் போன்ற நெருக்கடியான நேரங்களில் அரசு ஊழியர்களின் கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு அரசு உரிய உதவியை அவர்களுக்குச் செய்துகொண்டிருக்கிறது.

## *Tourist Permit for Van or Mini Bus*

* 135 *Q.*—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether it is a fact that the tourist permit is not being given in Tamil Nadu to the Van or Mini Bus which can carry 5 to 25 persons ; and

(*b*) if so, whether there is any proposal with the Government to give tourist permit to such Van or Mini Bus ?

மூடுவண்டி அல்லது 'மினி பஸ்ஸுக்கு' சுற்றுலா உரிமம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) தமிழ் நாட்டில் ஐந்து பேருக்குமேல் இருபத்தைந்து பேருக்குள் பயணம் செய்யக்கூடிய மூடுவண்டி அல்லது மினிபஸ் போன்றவற்றிற்கு சுற்றுலா உரிமம் அளிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இத்தகைய மூடுவண்டி அல்லது மினி பஸ் ஆகிய வற்றிற்கு சுற்றுலா உரிமம் அளிக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) இல்லை, எனினும் ஒப்பந்த ஊர்திகளுக்கு அனுமதிக்கப்படும் இருக்கையின் எண்ணிக்கையை அய்ந்திற்கு மேற்பட்டும் பத்துக்கு மிகாமலும் அனுமதிக்க பரிசிலிக்கப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மினி பஸ்கள் அல்லது 15 அல்லது 20 இருக்கைகள் உள்ள சிறிய பஸ்கள் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டால், குடும் பங்கள் ஒரு இடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லவும் அல்லது சிறு குழுவினர் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்வதற்கும் 'மகிழ்வு உலா' செல்லவும் பயன்படும். வேறு மாநிலங்களில் இந்த நடைமுறை இருக் கிறது. ஆகவே இதை அரசு மீண்டும் பரிவுடன் பரிசீலனை செய்ய முன் வருமா ?.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** குடும்பம் என்றால், பொதுவாக 10 பேர்களுக்கு மேல் இருக்காது என்றுதான் கருத வேண்டும். ஆகவே அந்த அடிப்படையில் 5-க்கு மேல் 10-க்கு உட்பட்டவர்களை ஒப்பந்த ஊர்திகளில் ஏற்றிச் செல்லலாம் என்ற வகையில் பரிசிலிக்கலாம்.

*Bus Service to Kollimalai*

* 136 *Q.*—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to operate Government bus service from Tiruchirappalli and Karur in Tiruchirappalli District to Kollimalai, via, Namakkal ; and

(*b*) if so, the date from which it will be operated?





கொல்லி மலைக்குப் பேருந்து வசதி.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய இடங்களிலிருந்து நாமக்கல் வழியாக கொல்லிமலைக்கு அரசு பேருந்து விடும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் விடப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தற்போது கொல்லி மலைக்கு மூன்று பஸ்கள் போய்க்கொண்டிருக்கின்றன. இருந்தாலும் சில காலங்களில் அவைகளில் இடம் கிடைக்காத காரணத்தால், பஸ்களின் மேலேயும் ஏறிச் செல்லுகிற நிலை இருக்கிறது. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் ஏற்கெனவே கோரிக்கை விட்டிருக்கிறோம். எனவே கரூர் வழியாக திருச்சியிலிருந்து பஸ்ஸை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** கொல்லிமலையைப் பொறுத்த வரையில், திருச்சி-கரூர் ஆகிய பகுதிகளிலிருந்துதான் மக்கள் செல்லு கிறார்கள் என்பதில்லை. சேலத்திலிருந்தும், மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் பகுதியிலிருந்தும், நாமக்கல் பகுதியிலிருந்தும்கூட செல்கிறார்கள். குறிப்பாக கொல்லிமலையின் அடிவாரத்தில்தான் விவசாயப் பணிகள் அதிக மாக நடைபெறுகிற காரணத்தால், மலையில் விளைகிற பொருட்களை மலை யடிவாரத்திற்குக் கொண்டு வரவும், அருகாமையில் உள்ள நகரங்களுக்கு எடுத்துச் செல்லவும் அடிவாரம் வரை பேருந்துகளை விடலாம் என்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மலையின் மேல் பகுதிகளுக்குச் செல்ல சில நேரங்களில் நெரிசல் அதிகமாக இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்றைய முன்தினம்தான் இது குறித்து ஒரு உத்தர விட்டிருக்கிறேன். இதுகுறித்து மீண்டும் ஆய்வு செய்து, அதிகப்படியான பேருந்துகளை அல்ல, அதற்குப் பதிலாக (Short-wheel-based) சிறிய உந்து களை அந்த வழித் தடங்களில் விடுவதற்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கொல்லி மலை நடுக்கோம்பையிலிருந்து நாமக்கல் வரையில் டவுன் பஸ் வேண்டுமென்று கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு கோரிக்கையை வைத்தார்கள். பஸ்கள்

போவதைக் கூடத் தடை செய்து ஸ்ட்ரைக் செய்தார்கள். [1979 நவ
அதிகாரிகள், உடனடியாக ஆவன செய்வோம் என்று சொன்னா அப்
அங்கேயுள்ள மாணவர்களும், விவசாயிகளும் பஸ் இல்லாததால், ரொம்
கஷ்டப்படுகிறார்கள். ஆகவே உடனடியாக ஒரு டவுன் பஸ்ஸை விட அமை
அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவ
ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். வருகின்ற 14
தேதியன்று அங்கு பேருந்து விடப்பட இருக்கிறது.

## *Transport Buses Via New Legislators' Hostel*

* 137 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN: Will the Ho
the Minister for Transport be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration
the Government to ply buses which are now running, in some
the important routes, via the New Legislators' Hostel in Madra
and

(*b*) if so, the date on which the buses will be run?

### புதிய சட்ட மன்ற விடுதி வழியாக் பேருந்துகள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை
அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்
கிறேன் :

(அ) சென்னையில் புதிய சட்ட மன்ற உறுப்பினர் விடுதி வழியாக
ஒரு சில முக்கிய தடங்களில் ஓடும் பேருந்துகளை விட, அரசு பரிசீலித்
வருகிறதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் பேருந்துகள் விடப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சட்ட மன்ற உறுப்பினர்களின் நலனுக்
காகக் கேட்கப்பட்ட கேள்வியல்ல இது. சட்ட மன்ற விடுதியில், குறிப்பாக
புதிய விடுதியில் தங்கியிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களைச் சந்திக்க
ஒவ்வொரு நாளும் ஏராளமான பொது மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.
நாங்களும் அவர்களை அழைத்துக்கொண்டு பல இடங்களுக்குச் செல்ல
வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் அருகாமையில் சென்று ஏற பேருந்
நிலையம் இல்லை. ஆகவே புதிய சட்ட மன்ற விடுதியில் உள்ள Gate
அருகே அந்த வழியாகச் செல்லும் பஸ்களை நிறுத்தக்கூடிய வகையிற்கு ஒ



பஸ் ஸ்டாப்பைப் போட ஏற்பாடு செய்வார்களா? தலைமைச் செயலகத்
திற்கு வருவதற்கும், அடையாறில் உள்ள அமைச்சர்களைக் காணச் செல்லு
வதற்கும் இது உதவியாக இருக்கும் என்பதால், அந்தப் பகுதிகளுக்குச்
செல்லுகின்ற பஸ்களையாவது புதிய சட்ட மன்ற விடுதியின் Gate-ன்
அருகே நிற்க வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுதாபத்துடன்
பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே இருக்கின்ற வழித்
தடங்களில் ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளை சட்டமன்ற விடுதிக்குள்ளே
திருப்பிவிட்டால், அல்லது கூவத்தையொட்டிய சாலையில் விட்டால்,
அதனால் சிக்கல்கள் ஏற்படுமென்று கருதுகிறேன். பாரி முனையிலிருந்து
திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் போன்ற பகுதிகளுக்கும், பாரி முனையிலிருந்து
எழும்பூர் போன்ற பகுதிகளுக்கும் செல்லக்கூடிய பொதுப் பயணிகளுக்கு
இது கண்டிப்பாக இடையூறு தருமென்ற காரணத்தால், இது சரியான ஆலோ ஈ்
சனையாக இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : சட்ட மன்ற விடுதியிலிருந்து தலைமைச் செயல
கத்திற்கு வர வேண்டுமென்றால், ஆட்டோ, டாக்சி ஆகியவைகள் வருவ
தில்லை. தூரம் குறைவாக இருக்கிறது என்பதோடு, இங்கே வந்தால்
திரும்பிப் போகும் வாய்ப்பு இல்லை என்பதாலும், அவர்கள் வர
மறுக்கிறார்கள். ஆகவே சட்ட மன்றம் நடக்கிற நாட்களில் சட்ட மன்ற
விடுதியிலிருந்து தலைமைச் செயலகத்திற்கு பஸ் விடுவதைப் போல சட்ட
மன்றம் நடக்காத மற்ற நாட்களிலும் 'மெட்டடார் வேன் சர்வீசை' நிரந்தர
மாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மினி பஸ்ஸைத்தான் மாண்புமிகு
உறுப்பினர் மெட்டடார் வேன் என்று குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்
கிறேன். மினி பஸ்கள் சென்னையில் பல இடங்களில் விட்டிருக்கிறோம்.
அந்த அடிப்படையிலே பரிட்சார்த்தமாக சட்ட மன்றம் கூடும் வரைக்கும்
விட்டுப் பார்க்கலாம். அது நல்ல முறையில் இயங்கினால் தொடரலாம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : பாரி முனையிலிருந்து பல்வேறு ஊர்
களுக்குச் செல்லக்கூடிய பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகளை காலையில்
எட்டு மணிக்கோ, ஒன்பது மணிக்கோ சென்று பிடிக்க வேண்டுமென்றால்
ஆட்டோ, டாக்சிகள் கிடைப்பதில்லை. ஆகவே அந்தப் பேருந்துகளை
அண்ணா சாலையில், அண்ணா சிலைக்கருகில் நிறுத்த மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

[1979 நவம்பர் 9

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நெடுந்தூர பஸ்களையெல்லாம் தாம்பரம், மாம்பலம், பாரி முனை ஆகிய இடங்களில் நிறுத்துகிறோம். டாக்சி, ஆட்டோ கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே துரித பேருந்து நிலையங்களில் ஆட்டோ, டாக்சி ஸ்டாண்டை ஏற்படுத்தி, எழும்பூர், சென்ட்ரல் ஆகிய இடங்களில் இருப்பதைப்போல ஒரு சிஸ்டத்தைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. கி. ரா. லெட்சுமிகாந்தன்:** கருநாடக மாநிலத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் தலைநகருக்கு வந்ததும் தொலைபேசியின் மூலமாகச் செய்தியை எஸ்டேட் ஆபீசருக்குத் தெரிவித்தால், அவர்களை விடுதிக்கு அழைத்து வருவதற்கும், அவர்கள் அலுவலகங்களுக்குச் செல்வதற்கும் உரிய வாகன ஏற்பாடு ஏற்பாடுகளைச் செய்கிறார். அதற்கான கட்டணமும் வாங்கிக்கொள்வதாகக் கேள்விப்படுகிறேன். அது ஒரு நல்ல முறை. சட்ட மன்ற கூட்டத் தொடர் நடக்கிற நாட்களில் கட்டணம் இல்லை, மற்ற நாட்களில் Nominal தொகையை வாங்குவதாகத் தெரிகிறது. அந்த நல்ல முறையை இங்கேயும் நடைமுறைப்படுத்த ஏன் பரிசீலனை செய்யக் கூடாது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அந்த முறை நல்ல முறையாக இருக்கலாம். சட்டணம் வசூலிக்க வேண்டுமென்று வைத்தால், சட்ட மன்ற உறுப்பினர்களால் அந்தக் கட்டணத்தைத் தர முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் பல வழித்தடங்களில் பேருந்துகளில் சென்றுவர கட்டணம் அதிகமாகுமென்று கருதுகிறேன்.

THIRU J. M. MIAKHAN: The buses proceeding from Tambaram to Madras, after stopping near the L.I.C. Building, stop only beyond the Transport House and there is no intermediate stop. Persons like me who are coming from the mofussil find it very difficult. Will the Hon. Minister consider having a stop somewhere near P.Orr and Sons or Bharat Buildings or somewhere near the Government Estate so that persons like me can get down there and proceed to the Legislators' Hostel? Now, there is no stop between L.I.C. Building and the Bodyguard Lines.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பி. ஆர். அண்டு சன்ஸ் அருகில் சுரங்கப்பாதை அமுலுக்கு வந்துவிட்டதாலும் அங்கே சில விபத்துக்கள் நிகழ்வதாலும் அங்கிருந்து இடத்தை மாற்றி டிரான்ஸ்போர்ட் ஹவுஸுக்கு அருகிலே இப்போது போடப்பட்டிருக்கிறது.



1979 நவம்பர் 9]

**திரு. ஜே. எம். மியாகான்:** ஒரு கிலோமீட்டர் அளவுக்குத் தொலைவு இருக்கிறது. அங்கிருந்து வரும் பயணிகள், அதுவும் எங்களைப் போன்றவர்கள் டவலிலிருந்து இறங்கி வர வேண்டியிருப்பதால் சிரமமாக இருக்கிறது. ஆட்டோ, டாக்சிகளும் கிடைப்பதில்லை. ஆகவே அண்ணா சிலைக்கருகில் ஒரு பஸ் ஸ்டாப்பை ஏற்படுத்த முடியுமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரு கிலோமீட்டர் தூரம் என்பதைவிட அங்கே நிகழ்கின்ற சாலை விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால்தான், இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**(1) மதுரை-இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலை நீக்கத்தில் உள்ள 1,800 காவல் துறையினர் சம்பளம் வாங்க முடியாமல் அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் படும் இன்னல்கள் குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன், "மதுரை-இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,800 காவல் துறையினர் தற்காலிக வேலை நீக்கத்தில் இருப்பதால் சம்பளம் வாங்க முடியாமல் அவர்களும், அவர்கள் குடும்பத்தினரும் படும் இன்னல்கள் குறித்து" ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின்கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நடந்த காவல்துறை போராட்டத்தையொட்டி மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான காவல் துறையினர் கைது செய்யப்பட்டார்கள். இப்போது போராட்டத்தின் வேகம் குறைந்து அரசாங்கத்தினுடைய வேண்டுகோளை ஏற்று பல பேர் மீண்டும் வேலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே சிறையில் வைக்கப்பட்டிருந்த காவலாளர்கள் ஜாமீனில் விடுதலை பெற்று வந்திருக்கிறார்கள். அரசாங்கமும் பலரை விடுதலை செய்திருக்கிறது. அவர்களெல்லாம் மீண்டும் பணிக்கு வர வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கம் உத்தரவிட்டிருந்தும்கூட, சற்றேறக்குறைய இரண்டாயிரம் பேர்களுக்கு, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், சம்பளம் இல்லையென்ற நிலைமை உருவாகியிருக்கிறது. வேலைக்குத் திரும்ப வருகிறவர்களுக்குச் சம்பளம் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆகவே அவர்கள்

மீண்டும் போராட்டத்திற்குத் தள்ளப்படுவார்களோ என்ற நிலைமை இருக்கிறது. நடந்த கசப்பான சம்பவங்களை மறந்துவிட்டு, மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட கசப்பான சம்பவங்கள் மீண்டும் தலை தூக்காத வகையில் இதோடு விட்டுவிட வேண்டும். ஆனால் இந்தப் போராட்டத்தையொட்டி அரசாங்கம் வெறுவிதத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிகிறேன். அவர்கள் இருக்கும் குடியிருப்புகளைக் காலி செய்ய வேண்டுமென்று சொல்லியும், குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குடிநீர் வசதியையும், மின்சார வசதியையும் துண்டித்தும் அவர்களுடைய குடும்பங்களை 'டிஸ்லொக்கேட்' (Dislocate)) செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு அவதிகளுக்கும், கொடுமைகளுக்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதையே காரணமாகக் கொண்டு அவர்கள் மீண்டும் பணிக்கும் போகாமல் இருக்கிறார்கள். இந்த நிலைமை அந்த மாவட்டங்களிலிருந்து பிற மாவட்டங்களுக்கும் பரவாமலிருக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலைமையில் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு காவலர் பிரச்சினைகளைப்பற்றி விவாதித்தால், அது குறித்து பல்வேறு நிகழ்ச்சிகளை இந்தச் சபைக்குத் தெரிவிக்க முடியும். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-00)

**மாண்புமிகு திரு. கே. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு காவல் துறை அதிகாரிமீது கடுமையான குற்றச்சாட்டுகள் இருந்தாலோ அல்லது சுமத்தப்படும் சூழ்நிலைகள் இருந்தாலோ அல்லது அவர்மீது கிரிமினல் குற்றம் புலனாய்விலிருந்தாலோ அல்லது நீதி மன்றத்தில் விசாரணையில் இருந்தாலோ, தமிழ் நாடு காவல் துறை சார்நிலைப் பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதி 3(e)(1) படி, அவரை தற்காலிக வேலை நீக்கம் (suspension) செய்யலாம். மேலும், ஒரு காவலர் 48 மணி நேரத்திற்கு மேல் சிறைக் காவலில் வைக்கப்பட்டிருந்தால், மேற்படி விதி 3 (e) (2) படி அவர் தானாகவே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவராகக் கருதப்படுவார்.

காவல் துறையில் ஒரு பிரிவினர், குறிப்பாக தென் மாவட்டங்களைச் சார்ந்தவர்கள், 16—10—1979 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியும் நிர்வாகத்தை அமைதியான முறையில் நடத்திச் செல்லவேண்டியும் காவல் துறையினர் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்-





டவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்பந்தமான நிலை ஏற்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபட்டு, சில காவலர்கள் கைதாகியும் உள்ளனர். தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ள அரசு அலுவலர் சம்பளம் பெற தகுதியற்றவர் ஆகிறார். ஆனால் அவருக்கு விதிப்படி தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ள சமயத்தில் ஜீவன படிகள்(subsistence allowance) வழங்கப்படும். ஆகவே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட எல்லாக் காவல் துறையினரும் அவரவர்கள் தகுதிகேற்ப ஜீவனப் படி (subsistance allowance) பெற தகுதியுள்ளவர்களாவார்கள். மதுரை தெற்கு), மதுரை (வடக்கு), இராமநாதபுரம் (கிழக்கு), இராமநாதபுரம் (மேற்கு) ஆகிய நான்கு காவல் துறை மாவட்டங்களிலும் மொத்தம் 1,600 காவல் துறையினர் கைது செய்யப்பட்டு தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆகவே உறுப்பினர் கூறியதுபோல், அந்த மாவட்டங்களில் 1,800 காவல் துறையினர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பது சரியல்ல. காவல் துறையினரை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது, பொது நலனைக் கருதியும், விதிமுறைகளுக்கு உட்பட்டுமே செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோருக்கும் வேலை செய்த நாட்களுக்கு ஊதியமும், தற்காலிக வேலை நீக்க காலத்திற்கு ஜீவனப் படியும் subsistance allowance முறைப்படி கொடுக்கப்படும். ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

(2) தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் தமிழாசிரியர் பணி நியமன ஆணையில் உள்ள முறைகேடுகள்பற்றி பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர்கள் திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம், சி. ரா. லெட்சுமிகாந்தன், பா. ரா. தாமஸ் ஆகியோர் தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தமிழாசிரியர் பணி நியமனம் செய்வதில் நிகழ்ந்த முறைகேடுகள் குறித்தும், தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்தும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இவ்விதியின்கீழ் எப்படி வருகின்றது என்பதைப்பற்றி சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன். திரு. க. மீனாட்சிசுந்தரம் அவையில் இல்லை. அடுத்து திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் விளக்க வேண்டும்.

## தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் தமிழாசிரியர் பணி நியமன ஆணையில் உள்ள முறையீடுகள் பற்றி பயிற்சி பெற்ற தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து

[1979 நவம்பர் 9

* **திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளிலே அண்மையில் தமிழாசிரியர்கள் பதவிகள், பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகள் ஆகியவற்றில் ஏராளமான காலியிடங்கள் ஏற்பட்டன. அவைகளுக்கு அந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி நியமனங்கள் செய்யும்போது, சில முறைகேடுகள் செய்திருப்பதாகச் சொல்லி தமிழாசிரியர் பயிற்சி பெற்ற இளைஞர்கள் ஒரு நேரடியான நடவடிக்கையில், உண்ணாவிரதம் இருப்பதில் இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் முறைகேடுகளை சுட்டிக்காட்டியும் அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்புகூட ஒரு பட்டதாரி ஆசிரியர் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, பட்டதாரி ஆசிரியரை நியமனம் செய்வதிலே முறைகேடுகள் இருப்பதாகச் சொல்லி தடை வாங்கியதாகத் தெரிய வருகிறது. இந்த நிலைமையிலே, தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிபற்றி ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் பரவலாக இருக்கின்றன. அவர் இதற்கு முன்பு தென்னாற்காடு மாவட்டத்தில் பணியாற்றியிருக்கிறார். பிறகு சேலம் மாவட்டத்தில் பணியாற்றியிருக்கிறார். அவரைப் பற்றி ஏராளமான குற்றச்சாட்டுக்கள் இருந்தும்கூட, ஒரு முக்கியமான பதவியிலே அவரைத் தொடர்ந்து கல்வித் துறையிலே வைத்திருக்கிறார்கள் என்பது ஏன் என்று தெரியவில்லை. இந்தச் சூழ்நிலையிலே அவருடைய முறைகேடுகளைப்பற்றி அரசின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதால், இதைப்பற்றி விரிவாகப் பேசி இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழலை, முறைகேடுகளை நடைபெறாமல் தடுக்க, தீர்வு காண இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தர்மபுரி மாவட்டத்திலே, அநேக தமிழாசிரியப் பெருமக்கள் பல ஆண்டு காலமாக நியமனத்திற்குக் காத்திருக்கும்போது, சமீப காலத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள், முறைகேடான முறையிலே பதவியைப் பெற்றிருப்பதாகவும், அதனால் பெரிய பாதிப்பு இருப்பதாகவும், இந்த ஒழுங்கீனங்களை நிவர்த்திக்கும் வகையிலே அவர்கள் நேரடி நடவடிக்கையிலே ஈடுபட்டிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். இந்த நிலை மேலும் சீர்கேடு அடைந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த அவையினுடைய அலுவலை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தின்மீது விவாதித்து ஒரு நல்ல முடிவு ஏற்பட வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 9]

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது:** தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தமிழாசிரியர் நியமனத்திற்கு நேர்முகத் தேர்வு செய்து அவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களை வரிசைப் படுத்தி தமிழாசிரியர் பணிக்கு நியமனம் செய்தார். நியமனத்தில் எவ்விதத் தவறும் நடைபெறவில்லை என்றும் அரசாணை ஏதும் மீறப்படவில்லை எனவும் தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தெரிவித்திருக்கிறார். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட கோப்புகளை உடன் அனுப்பும்படி தர்மபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரை பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுள்ளார். அவை கிடைத்த உடன், அதனைப் பரிசீலித்து தவறுகள் ஏதேனும் நடந்திருப்பின், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் இந்த அவையில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த அளவில் இணை இயக்குநர் ஒருவரையும் அங்கு உடனடியாக அனுப்பி, அவரே அந்தக் கோப்புக்களை எடுத்து வரவேண்டும் என்று பணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே மேலவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கருதி அனுமதி மறுக்கிறேன்.

### 3. கவன ஈர்ப்புத் தீர்மானம்.

#### நாமக்கல் வட்டத்தில் மின்சார சப்ளை தொடர்ந்து வராததால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் இன்னல்படுவது குறித்து.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"நாமக்கல் வட்டத்தில் மின்சார சப்ளை தொடர்ந்து வராததால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் இன்னல்படுவது குறித்து".

* **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தற்போதைய உச்சக் கட்டத் தேவை 1,800 மெகாவாட் ஆகும். ஆனால் உற்பத்தித்திறன் 1,150 முதல் 1,200 மெகாவாட் வரைதான் உள்ளது

னுடைய பட்டப் படிப்பு இதற்குத் துணையாக இருக்கிறது. ஏனென்றால் 9—8—1979-லிருந்து டெக்ஸ்டைல் மில்களுக்கு மேலும் கூடுதலாக ஒரு ஷிப்ட் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பல ஆண்டுகளாக ஸ்டேகரிங் என்று இருந்தது. அதாவது, காலையில் ஒரு பகுதிக்குக் கொடுப்பார்கள், மாலையில் ஒரு பகுதிக்குக் கொடுப்பார்கள். அதையும் 24 மணி நேரம் என்று ஒரு உத்தரவு போட்டுவிட்டார்கள். இவை என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஏனென்றால் போர்டு சுயாட்சித் தன்மையுடையது. சுயாட்சி எப்படியெல்லாம் தொந்தரவு கொடுக்குமென்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. நான் இந்த சுயாட்சியைச் சொல்கிறேன். வேறு சுயாட்சியைப்பற்றியல்ல. (சிரிப்பு) தங்களவர்களிடம் வரும் சுயாட்சி நிச்சயமாகப் பலன் அளிக்கும். ஆகவே எதிர்பாராத அளவிலே டெக்ஸ்டைல் மில்களுக்கு எக்ஸ்டிரா ஷிப்ட் கொடுத்ததால், Agricultural and Rural L.T. loads staggering -ஐ எடுத்துவிட்டதன் காரணமாகவும், இந்த நிலைமைகள் இருக்கின்றன. 9—8—1979-ல் தொழில் நிறுவனங்களுக்கும் 11—9—1979-லே விவசாயத்திற்கும் இப்படிச் செய்ததன் விளைவாக தேவை அதிகமாகி, பல இடங்களிலே மின் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு உத்தரவுகளையும் திரும்பப் பெற வேண்டுமென்று மின் வாரியத்திற்கு நிச்சயமாக உத்தரவு பிறப்பிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசின் தீர்மானம்.

### தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 5/1920) வரைவுத் திருத்தங்கள்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து, மேற்படி சட்டத்தில் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.





### வரைவுத் திருத்தங்கள்.

தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அதாவது :—

"12-A. 9, 10, 11-வது விதிகளின்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீது, அம்மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதிசெய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

(2) 26-வது விதியில், (பி) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது :—

"(பி) 23-வது விதியின்கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள் மீது, அம்மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதிசெய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதிவைக்கவும் வேண்டும்".

*** திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே, இரண்டாவது பகுதியில், 26 ஆம் விதியில் 'பி' பிரிவிற்குப் பிறகு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும், நகராட்சி மன்றக் கவுன்சிலுக்கு இருக்கின்ற அப்பீல் அதிகாரத்திற்குள்ளே தலையிடுகின்ற ஒன்றாகும். கவுன்சில் கூடி அப்பீலுக்கு வருகின்ற மனுக்கள்மீது முடிவெடுக்கும் நிலை இருக்கிறது. இன்றைக்குத் தேர்தல் இல்லாத நிலையிலே, அநேகமாக எல்லா நகராட்சி மன்றங்களும் தனி அதிகாரிகளாலே நடத்தப்படுகின்ற நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்திற்குத் தேவை இருப்பதாக அரசு கருதினாலும், இது ஒரு passing phenomanon என்று கருதுகிறேன். நிச்சயமாக அமைச்சரவர்கள், நிரந்தரமாகத் தேர்தல் கிடையாதென்ற நிலையை உருவாக்க மாட்டார்களென்று நம்புகிறேன். என்றைக்காவது தேர்தலை நடத்துவார்களென்று நம்புகிறேன். ஆகவே நகராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற இந்த அதிகாரத்திலே கை வைப்பதன் மூலமாக, விவரத்தை எல்லாம் எழுத வேண்டுமென்ற நிலைமை வரும்போது, அதுபற்றிய

[திரு. ச. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 9

தஞ்சைப் பகுதியில் மழை பெய்திருப்பதின் காரணமாக, மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்காக அனுமதிக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டதால், மேட்டூர் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி முழுவதுமாக 28—10—1979 இரவு முதல் நிறுத்தப்பட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சார அளவு அங்கு பெய்த மழையின் காரணமாக பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் பணி பாதிக்கப்பட்டு 240 மெகாவாட்டிலிருந்து 70 மெகாவாட்டாகக் குறைந்துள்ளது. எண்ணூர் மின் நிலையத்திலிருந்து 200 முதல் 250 மெகாவாட் எதிர்பார்க்கப்பட்டது. அங்கு இரண்டாவது இயந்திரம் எதிர்பாராமல் பழுதுபட்டதால், உற்பத்தி 100 முதல் 150 மெகாவாட்டாகக் குறைந்தது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் எதிர்பார்த்த நாளில் உற்பத்தி திரும்பவும் துவங்க முடியாததால், 100 முதல் 180 மெகாவாட் குறைந்தது.

மேற்கூறிய காரணங்களினால் தமிழ்நாட்டில் 600 மெகாவாட் பற்றாக்குறை இருந்தது. இதன் காரணமாக நாமக்கல் பகுதி உட்பட மாநிலத்தில் பல பகுதிகளிலும் அவ்வப்போது தேவையான அளவு மின்சாரத் தடை செய்ய வேண்டியதாயிற்று. இந்நிலைமை 10—11—1979 முதல் சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் மின் பொறியாளர் பட்டம் பெற்று இந்த இலாகாவிற்குப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற காரணத்தினாலே, தமிழகத்திலே விவசாய மக்கள் அத்தனை பேரும் நிச்சயமாக நமக்குக் கஷ்டமான நிலைமை ஏற்படாது என்று எதிர்பார்த்து ஏமாந்துவிட்ட நிலைமைதான் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தஞ்சைப் பகுதியிலே மழை அதிகமாகப் பெய்ததால், மேட்டூர் அணையைத் திறந்து விடவில்லை. அதுபோல, சேலம் மாவட்டத்தில் அதிக மழை பெய்ததால், கிணற்றிற்குத் தண்ணீர் வந்துவிட்டது. எங்களுக்கு அதனால் மின்சாரம் அதிகம் தேவைப்படுகிறது. இதைப் பார்க்கின்றபோது, தஞ்சைப் பகுதியிலே இருக்கின்ற விவசாய மக்களைப் பாதுகாப்பதற்கு, காப்பாற்றுவதற்கு இந்த அரசு இருப்பதைப் போலவே எங்களை. சேலம் மாவட்ட விவசாய மக்களைக் காப்பாற்றுவதிலே அக்கறை காட்டவில்லை என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் மழை அதிகமாகப் பெய்ததால், தண்ணீர் வந்துவிட்டது. அந்தத் தண்ணீரை இறைக்க, எங்களுடைய பகுதி விவசாய மக்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. மின்சாரம் கிடைக்காததால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி கவனிக்க வேண்டும். அடுத்து ...



1979 நவம்பர் 9]

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அடுத்த விளக்கம் அப்புறம்தான் கேட்க வேண்டும். இரண்டு விளக்கங்களை ஒன்றை அடுத்து ஒன்றாகக் கேட்கக் கூடாது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** நெய்வேலியிலே மழை பெய்த காரணத்தால், நிலக்கரி எடுக்க முடியவில்லை. எண்ணூரிலே, தூத்துக்குடியிலே அனல் மின்சாரம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அது எப்படி எதிர்பாராததாகிவிட்டது? எதையெல்லாம் அதிகாரிகள் சொல்கிறார்களோ அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் அப்படியே இங்கே வந்து சொல்வது அவ்வளவு நல்லதல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதிலே கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலே கவனம் செலுத்த வேண்டும். மின்சாரக் கட்டுப்பாடே இல்லை என்று சொல்கிறார்கள். எங்கு பார்த்தாலும் கட்டுப்பாடு இருக்கின்ற மாதிரிதான் தெரிகிறது. மின்சாரம் எந்த நேரத்தில் தான் கிடைக்கும் என்பது தெரியவில்லை. காலையிலே 8 மணி முதல் 10 மணி வரை கிடைக்கும் அல்லது மாலை 3 முதல் 4 மணி வரையில் கிடைக்கும் என்று வரையறுத்து அதன்படி கொடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தினைச் சொல்லிவிட்டால், விவசாய மக்களுக்கு சவுகரியமாக இருக்கும். மின்சாரம் கிடைக்கும் என்றுதான் மோட்டார் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு அரை மணி நேரம் ஓடி விட்டு நின்றுவிடுகிறது. சப்ளை 'ஃபுல்'லாக வராததாலே, மோட்டார் நின்றுவிடுகிறது. எங்கள் பகுதியிலே நூற்றுக்கணக்கான மோட்டார்கள் இருக்கின்றன. அடிக்கடி மின்சாரம் நின்றுவிடுவதாலும் மின் சப்ளையில் ஏற்றத் தாழ்வு காரணமாகவும் மோட்டார்களின் காயில்கள் கெட்டுப்போய் விடுகின்றன. இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, முறையாக மின்சாரம் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தஞ்சையில் மழை பெய்யும்பொழுது, நாம் மேலும் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டால், தஞ்சாவூர் மாவட்டமே முழுகிவிடும். அதனால்தான் மேட்டூரில் இருக்கிற அணையிலிருந்து தண்ணீரை விடுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். தஞ்சை விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும். சேலம் விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல், நான் மின்சார வாரியத்திலிருந்து இந்த விவரங்களைப் பெற்றேன். மின்சார வாரிய நிர்வாகம் இதை ஓரளவிற்குத் திறமையாகச் சமாளித்திருக்கலாமென்றுதான் நான் கருதுகிறேன். அவர்களே சொன்னதுபோல என்

னுடைய பட்டப் படிப்பு இதற்குத் துணையாக இருக்கிறது. ஏனென்றால் 9—8—1979-லிருந்து டெக்ஸ்டைல் மில்களுக்கு மேலும் கூடுதலாக ஒரு ஷிப்ட் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பல ஆண்டுகளாக ஸ்டேகரிங் என்று இருந்தது. அதாவது, காலையில் ஒரு பகுதிக்குக் கொடுப்பார்கள், மாலையில் ஒரு பகுதிக்குக் கொடுப்பார்கள். அதையும் 24 மணி நேரம் என்று ஒரு உத்தரவு போட்டுவிட்டார்கள். இவை என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. ஏனென்றால் போர்டு சுயாட்சித் தன்மையுடையது. சுயாட்சி எப்படியெல்லாம் தொந்தரவு கொடுக்குமென்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. நான் இந்த சுயாட்சியைச் சொல்கிறேன். வேறு சுயாட்சியைப்பற்றியல்ல. (சிரிப்பு) தக்கவர்களிடம் வரும் சுயாட்சி நிச்சயமாகப் பலன் அளிக்கும். ஆகவே எதிர்பாராத அளவிலே டெக்ஸ்டைல் மில்களுக்கு எக்ஸ்டிரா ஷிப்ட் கொடுத்ததால், Agricultural and Rural L.T. loads staggering -ஐ எடுத்துவிட்டதன் காரணமாகவும், இந்த நிலைமைகள் இருக்கின்றன. 9—8—1979-ல் தொழில் நிறுவனங்களுக்கும் 11—9—1979-லே விவசாயத்திற்கும் இப்படிச் செய்ததன் விளைவாக தேவை அதிகமாகி, பல இடங்களிலே மின் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு உத்தரவுகளையும் திரும்பப் பெற வேண்டுமென்று மின் வாரியத்திற்கு நிச்சயமாக உத்தரவு பிறப்பிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசின் தீர்மானம்.

### தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 5/1920) வரைவுத் திருத்தங்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு தலைவரவர்களே,

"தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து, மேற்படி சட்டத்தில் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.



### வரைவுத் திருத்தங்கள்.

தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அதாவது :—

"12-A. 9, 10, 11-வது விதிகளின்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீது, அம்மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதிசெய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது :—

"(c) 23-வது விதியின்கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள்மீது, அம்மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதிசெய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதிவைக்கவும் வேண்டும்".

* திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே, இரண்டாவது பகுதியில், 26 ஆம் விதியில் 'பி' பிரிவிற்குப் பிறகு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும், நகராட்சி மன்றக் கவுன்சிலுக்கு இருக்கின்ற அப்பீல் அதிகாரத்திற்குள்ளே தலையிடுகின்ற ஒன்றாகும். கவுன்சில் கூடி அப்பீலுக்கு வருகின்ற மனுக்கள்மீது முடிவெடுக்கும் நிலை இருக்கிறது. இன்றைக்குத் தேர்தல் இல்லாத நிலையிலே, அநேகமாக எல்லா நகராட்சி மன்றங்களும் தனி அதிகாரிகளாலே நடத்தப்படுகின்ற நிலை இருக்கிறது. இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்திற்குத் தேவை இருப்பதாக அரசு கருதினாலும், இது ஒரு passing phenomanon என்று கருதுகிறேன். நிச்சயமாக அமைச்சரவர்கள், நிரந்தரமாகத் தேர்தல் கிடையாதென்ற நிலையை உருவாக்க மாட்டார்களென்று நம்புகிறேன். என்றைக்காவது தேர்தலை நடத்துவார்களென்று நம்புகிறேன். ஆகவே நகராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற இந்த அதிகாரத்திலே கை வைப்பதன் மூலமாக, விவரத்தை எல்லாம் எழுத வேண்டுமென்ற நிலைமை வரும்போது, அதுபற்றிய

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 9

பூரணமான விவாதம் நடைபெற வாய்ப்பில்லாமல் போகிறது என்கின்ற நிலையைக் கருதி, தீர்மானத்தின் இந்தப் பிரிவை மாண்புமிகு அமைச்சரவர்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், இதைத் தெளிவாகப் பார்த்து, இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்களென்று கருதுகிறேன். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திருத்தம் வருவதற்குக் காரணம், சொத்து வரி, வீட்டு வரி போன்றவைகளுக்கான மேல் முறையீடுகள் வருகின்றபோது, அதற்கான காரணங்கள் என்ன என்று காட்டப்படாமல், வரிகளைக் குறைத்து விடுகிறார்கள். எந்தக் காரணத்தால் வரிகள் குறைக்கப்படுகின்றனவோ, அந்தக் காரணத்தைத் தெளிவாகக் குறிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இதில் வேறு எந்த நோக்கமுமில்லை. இது நகராட்சி மன்றத்தின் அதிகாரத்தைக் குறைப்பதற்காக அல்ல. வரி அப்பீல் குழுவிற்கு யார் தலைவராக இருந்தாலும், காரணத்தை எழுத வேண்டுமென்றுதான் இந்தத் திருத்தம் வருகிறது. அரசு அறிவுரை தருகிறது, அது முறைப்படி கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதற்காகத்தான் திருத்தம் வருகிறது. அதிகாரப் பறிமுதலாக நிச்சயம் இராதென்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

“தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து, மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்”.

**வரைவுத் திருத்தங்கள்.**

தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது :—

“12 A 9, 10, 11-வது விதிகளின்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீது, அம் மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக்



1979 நவம்பர் 9]

குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம் மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்.”

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதாவது :—

“(c) 23-வது விதியின்கீழ் வரப்பெறும் மேல்முறையீடுகள்மீது, அம் மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்பட வேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம் மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்.”

**தீர்மானம்,** அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்டமுன்வடிவுகள்.

**(1) 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/1979).**

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, I beg to move—

"That the Madras City Police (Amendment) Bill, @ 1979 (L.A. Bill No. 43 of 1979), as passed by the Assembly, be taken into consideration."

Under section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888), the Commissioner of Police is empowered to levy such fee not exceeding twenty rupees as may from time to time be fixed by the State Government for every licence or permission granted under the said Act. It is considered that the prevailing rates of fees levied by the Commissioner of Police under the said section for the above purpose are very low, taking into consideration the increase in the cost of services rendered in granting such licences and permissions. Compared to the rates of fees obtaining in the cities of Bombay and Calcutta, the rates of fees levied by the Commissioner of Police, Madras, under the Tamil Nadu Act are also very low. It has, therefore, been considered necessary to enhance the maximum levy of fee from twenty rupees to seventy-five rupees by suitably amending the said section 77 of the Madras City

@ 499 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Police Act, 1888 (Act III of 1888). The Bill seeks to achieve the above object. Sir, I commend the motion for the acceptance of the House.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம் :—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் 20 ரூபாயாக இருந்து வரும் லைசென்ஸ் தொகையை 75 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். சென்ற ஆண்டிலே, இரண்டு ரூபாய் என்று இருந்ததை 20 ரூபாயாக்கியிருக்கிறார்கள். இப்போது மீண்டும் அதை 75 ரூபாயாக, மூன்று மடங்குக்குமேல் ஆக்கியிருக்கிறார்கள். மேலும் 'பீஸ்' எதற்கு என்று தெளிவாகச் சொல்லப்படவில்லை. லைசென்ஸ் கட்டணம் என்றுதான் போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் பொதுக் கூட்டம் நடத்துவதற்குப் பெறப்படும் லைசென்ஸ் இதில் அடங்குமா என்பது தெரியவில்லை. குறிப்பாக ஓரிடத்திலே "taking into consideration increase of service" என்று சொல்லுகிறார்கள். எந்த 'சர்வீசை' பண்ணுகிறார்கள் என்பது தெரியவில்லை. பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் இதைவிட பீஸ் குறைவாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். கல்கத்தாவில் 10, 15, 20 ரூபாய்தான் இருக்கிறது. ஆகவே அமைச்சரவர்கள் இங்கே கூறியபடி இதை 75 ரூபாயாக உயர்த்தினால் மிகவும் பாதிப்பு ஏற்படும். தேர்தல்கள் வருகின்ற இந்த நேரத்தில் சாதாரணப் பொதுக் கூட்டங்களுக்கும் இந்தத் தொகை வசூலிக்கப்படுமா என்பதைத் தெளிவாக விளக்கினால் நல்லது. அரசியல் கட்சிகள் தேர்தல் பொதுக் கூட்டங்களை நடத்த வேண்டி இருப்பதால், 75 ரூபாய் என்று லைசென்ஸ் கட்டணம் போட்டால் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கே அஞ்சும் நிலை ஏற்படும். எனவே இது பொதுக் கூட்டங்களுக்குப் பொருந்துமா என்று அமைச்சரவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு 20 ரூபாய் என்று ஆக்கியுள்ளார்கள், மீண்டும் இந்த ஆண்டு அதை 75 ரூபாயாக ஆக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.





THIRU K. RAMAMOORTHY. Sir, may I move the amendment and then speak?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** பொதுவாகப் பேசுங்கள்.

***திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலும், உரிமங்களுக்கான கட்டணத்தை உயர்த்தியிருப்பதற்கான காரணமே, நியாயமற்ற ஒன்று எனக் கருதுகிறேன். கட்டணத்தை உயர்த்தியிருப்பதற்கான காரணத்தை அரசு தெரிவித்திருக்கிறது. "taking into consideration the increase in the cost of service rendered in granting such licence and permission" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள்.

"Compared to the rates of fees obtaining in the cities of Bombay and Calcuta, the rates of fees levied by Commissioner of Police of Madras under the Tamil Nadu Act are also very low".

மற்ற மாநிலங்களிலே இந்த உரிமங்களுக்கு விதிக்கப்படுகிற கட்டணத்தைவிட தமிழகத்திலே குறைவாக இருக்கிறது, ஆகவே உயர்த்துகிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்று, இந்த உரிமங்களை வழங்குவதற்காக எடுத்துக்கொள்ளும் காவல் துறை நடவடிக்கைகளுக்கு அதிகச் செலவாகிறதென்றும் சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 5-20)

உரிமங்களைப் பொறுத்தவரை, நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். காவல் நிலையத்தில் உரிமம் வழங்க வேண்டுமென்ற நிபந்தனை அல்லது சட்டத்தைக் கொண்டிருக்கும்போது, காவல் துறை இந்தப் பணியில் ஈடுபடுகிறது. அது அதனுடைய கடமையும்கூட. காரணம் நாம் இன்றைய தினம் காவல் துறைக்காக பல கோடி ரூபாயைச் செலவு செய்கிறோம். இந்த உரிமத்திற்கான மனுக்களை அல்லது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதும், அனுமதி தருவதும் அதன் பணியாகும். தனியாக உரிமம் வேண்டி கோருகின்ற மனுக்களை அல்லது கோரிக்கைகளைப் பரிசீலனை செய்வதற்கு சர்வீஸ் செலவு பணிச் செலவு அதிகமாகிறது, ஆகவே அதற்காக கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று சொல்லுகின்ற வாதம் நியாயமற்ற, பொருந்தாத வாதம். மற்ற மாநிலங்களில் கட்டணம் அதிகம், ஆகவே இந்த மாநிலத்தில் உயர்த்துகிறோம் அல்லது குறைக்கிறோம் என்றால், மற்ற மாநிலங்களிலுள்ள பல்வேறு நிலைகளில் நாம் உயர்ந்திருக்கிறோமா அல்லது சமமாக இருக்கிறோமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பல இடங்களில் பல்வேறு

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 9

அமைப்புகள், நிர்வாகங்கள் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, அங்கே இருப்பதைப்போல இங்கேயும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் உயர்த்துவது அல்லது உயர்த்தச் சொல்லுவது நியாயம் அல்ல, முறையும் அல்ல.

இந்த உரிமங்களைப் பொறுத்தவரை, ஒரு 'நாமினல்' பீஸ் (fees) மாதிரி கட்டணம் இருக்க வேண்டும். சிறு கடை அல்லது சிறு தொழில் நடத்துவதற்காக "லைசென்ஸ" வேண்டி பணம் கட்டுகின்ற ஒரு நிலை வரும் போது, அரசாங்கம் கட்டணத்தை உயர்த்தினால், உரிமம் வேண்டி கட்டணம் கட்ட முன்வருகிறவர்களேகூட கோரிக்கைகளை அனுப்பாமலேயே, மனுக்களைத் தராமலேயே அவர்களது காரியங்களைத் தாங்களாகவே அனுமதியில்லாமல் செய்கின்ற போக்கு சமுதாயத்தில் அதிகமாகிவிடும், மலிந்து விடும். அரசுக்கு இது தெரியாமல்தான் நடக்கிறது என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால் அரசு இந்தக் காரியத்தில் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு பிளாட்பாரக் கடைகளை எடுத்துக்கொள்வோம். அவர்கள் வீதியோரங்களில் கடை வைத்திருக்கிறார்கள். தனித் தனியாக கடைகளுக்கு உரிமங்களை வாங்க வேண்டுமென்பது வேறு. பிளாட்பார வாசிகள் உரிமம் வாங்க வேண்டுமென்கின்ற நிலை வரும்போது, அவர்கள் கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்களாக, இயலாதவர்களாக இருக்கிறார்கள். 250 ரூபாய் முதலீட்டில் ஒரு பழக்கடை வைக்க முடியும். அதன் மூலம் அவர்கள் நாள்தோறும், அன்றாடம் தங்களுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற முடியும். அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்கள் இந்த உரிமத்தைப் பெற கட்டணம் கட்ட வேண்டி வரும்போது, கட்டணம் மிக அதிகமாக உயர்த்தப்பட்டிருப்பதால், அதைத் தவிர்க்கக் கூடிய நிலையும், உரிமம் இல்லாமல் கடை வைக்க வேண்டிய நிலையும் அல்லது வேறு வழிகளில் கடை வைக்க வேண்டிய நிலையும் உருவாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். அரசியல் ரீதியாக பொதுக் கூட்டங்களுக்குக்கூட உயர்ந்த அளவு கட்டணம் வசூலிக்கலாம் என்கின்ற அச்சத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்னொன்றையும் நான் கேள்விப்படுகிறேன். உயர்ந்தபட்ச கட்டணம்தான் 75 ரூபாய். இதற்கு உள்ளாக குறைக்கின்ற (discretionary power) நிர்ணயிக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு, அரசாங்க அதிகாரிகளுக்கு இருக்கின்றது என்று சொன்னார்கள். இதில் பயம் தேவையில்லை, அச்சம் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந்தால், மற்ற மாநிலங்களைவிட இங்கே



1979 நவம்பர் 9] [திரு. க. இராமமூர்த்தி]

குறைவாக இருக்கிறது என்று அவர்கள் சொன்னது எந்த வகையில் பொருத்தம்? மற்ற மாநிலங்களில் உரிமங்களுக்காகச் செலுத்தும் கட்டணத்தைவிட இங்கே குறைவு என்கின்ற நிலை இருக்குமானால், (discretionary power) நிர்ணயிக்கும் அதிகாரம் இருப்பதனால் அரசு அதிகாரிகள் தங்களுடைய முடிவினை எடுத்து, முடிவிற்கு ஏற்ப இந்த உயர்ந்தபட்ச கட்டணத்திற்கு உட்பட்டு எந்த ஒரு கட்டணத்தையாவது அவர்கள் இஷ்டம்போல் விதிக்கின்ற ஒரு நிலை ஏற்படும். கட்டண உயர்வுக்கு இந்த அரசு சொல்லியிருக்கின்ற காரணம்' சரியாக இல்லை. இந்த நிலைகளும் அவசியமானதாகவும், தேவையானதாகவும் இல்லை.

அது மட்டுமல்ல. ஒருவேளை உரிமங்களுக்கான கட்டணத்தைச் செலுத்தும்போது, பெரிய அளவில் தொழில்களை ஆரம்பிப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் நியாயமாக இன்னும் அதிகம் கட்டணம் செலுத்த வேண்டும். அவர்கள் கட்டணத்தைச் செலுத்துவதற்கு வேறு வழியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக இதுதான் சிறு தொழில்களுக்கும் பெரிய தொழில்களுக்கும் உரிய நடவடிக்கை என்று வைத்திருப்பது நியாயமில்லை. வாய்ப்பு உள்ளவர்களையும், வசதி உள்ளவர்களையும் இதற்கு உள்ளே அடக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் பொருந்தும் என்கின்ற வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது நல்லதல்ல. இந்தச் சட்டம் தேவையில்லாதது, கட்டண உயர்வு அவசியமற்றது என்று சொல்லி, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

*** திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் இன்றைய நிலைக்கு அவசியமற்றது என்றுதான் தோன்றுகிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் நல்லசிவனும், இராமமூர்த்தியும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 20 ரூபாயாக இருந்த கட்டணம் 75 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், அதாவது 275 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், செர்வீஸ் செலவில் அந்த அளவுக்கு 275 சதவிகிதம் உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். விளக்கத்திலேகூட பம்பாயில், கல்கத்தாவில் கூடுதல் என்றுதான் விளக்கப்பட்டிருக்கிறது. வேறு நியாயம் ஒன்றும் காணப்படவில்லை. ஒரு சட்ட முன்வடிவை முன்வைக்கும்போது, புதிய விளக்கம் இல்லாமல் வைக்கிற குறைபாடு இனிமேலாவது தவிர்க்கப்பட வேண்டும். லைசென்ஸ் 75 ரூபாய் என்று வைக்கும்போது செர்வீஸில் என்ன அபிவிருத்தி ஏற்படப் போகிறது? செர்வீஸில் அபிவிருத்தி ஏற்பட்டு, அதனால் மக்களிடத்தில், சம்பந்தப்பட்ட

வர்களிடத்தில் திருப்தி ஏற்பட்டால்கூட பரவாயில்லை. அதற்குக்கூட இந்த
அளவுக்கு 20 ரூபாயிலிருந்து 75 ரூபாய்க்குப் போக வேண்டாம். வேண்டு
மானால் அரசுக்கு நிர்வாகச் செலவு அதிகம் ஆகிறது என்ற கருத்தை வாதத்
திற்காக எடுத்துக்கொண்டால்கூட, 20 ரூபாயை 25 ரூபாய் ஆக்கலாமே தவிர,
ஒரேயடியாக இப்படி 75 ரூபாயாக உயர்த்துவதால் மக்களுக்கு எந்தவித
நன்மையும் இல்லை. மக்களுக்கு அரசின்மீது அதிருப்தி ஏற்படும். 20
ரூபாயை 25 ரூபாயாக ஆக்கி இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தால்,
அது மகிழ்ச்சியைத் தரும். 75 ரூபாயாக நாம் ஆக்கி, அதைக் கட்டும்படி
வலியுறுத்தும்போது, ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபடும் அரசு என்று
நாம் அழைத்துக்கொண்டு இப்படி சர்வீஸ் சார்ஜையும் உயர்த்திக்கொண்டு
போவது சரியாக இருக்காது. எந்தக் காரணத்தைக் கொண்டும் 75
ரூபாய்க்குப் போக வேண்டாம். அமைச்சர் அவர்கள் இங்கே உறுப்பினர்கள்
சொன்ன நல்ல கருத்துக்களை கவனத்தில் எடுத்து பரிசீலனை செய்வதுடன்
என்னுடைய வேண்டுகோளையும் கவனத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்ற
நம்பிக்கையில் 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தலாம் என்று கோரி
அமைகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு
சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட
முன்வடிவின்மீது சில கருத்துக்களை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டது
போல், அரசாங்கம் ஒரு உரிமத்தைப் பெறுவதற்கான கட்டணத்தை 5 ரூபாய்
அல்லது 10 ரூபாய் உயர்த்துவதைக்கூட சூழ்நிலையைப் பொறுத்து,
யோசித்து, அது சரியா இல்லையா என்று நம்மாலே சொல்ல முடியுமே தவிர,
ஒரே தடவையாக இன்றையதினம் 20 ரூபாய் என்று இருந்ததை 75 ரூபாயாக
உயர்த்தியிருப்பது எந்த விதத்தில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை.
இதுசம்பந்தமான ஒரிஜினல் சட்டத்தின் 77-வது பிரிவில்

'for every licence or permission granted under this Act the Commissioner may levy such fee not exceeding two rupees as may from time to time be fixed by the State Government

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு ரூபாயாக இருந்ததை இடையிலே
20 ரூபாய் என்று மாற்றிவிட்டு அதுவே அதிகம் என்று கருதப்படுகின்ற
நேரத்தில் இன்றையதினம் அதை 75 ரூபாய் என்று ஆக்கியிருப்பது உள்ள
படியே சாதாரணமாக உரிமங்களைப் பெற வேண்டுமென்ற அந்த நல்ல
எண்ணத்தை அரசாங்கம் ஒழித்துக்கட்டுகிறதோ என்ற எண்ணம் எங்களைப்
போன்றவர்களுக்கு உருவாகிறது.





உதாரணத்திற்கு இன்றையதினம் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு போலீஸ் துறையிலும் அனுமதி பெற வேண்டும். ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் அப்படிப்பட்ட அனுமதியைப் பெறாமலேகூட கூட்டங்களை நடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆளும் கட்சியிலுள்ள ஒரு அமைச்சர் ஒரு பொதுக் கூட்டத்தில் வந்து பேசுகிறார் என்றால், அந்தக் கூட்டத்திற்கு லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்களா இல்லையா என்பதுபற்றி யாரும் 'வெரிஃபை' பண்ணுவதில்லை. அமைச்சர்கள் போகும்போது கூடவே செக்யூரிட்டி போகிறது.

**மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி :** எனக்கு செக்யூரிட்டி இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சட்ட அமைச்சருக்கு செக்யூரிட்டி இல்லாமல் இருக்கலாம். மற்ற அமைச்சர்களுக்கு இருக்கிறார்கள். அமைச்சர்களுக்கு செக்யூரிட்டி இருப்பதை யாரும் மறுக்கவில்லை, வேண்டாம் என்றும் சொல்லவில்லை. இன்றைய சூழ்நிலையில் அமைச்சர்களுக்கு நிறைய பாதுகாப்பு தேவை. அந்த அளவுக்கு அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் எனக்கு இருக்கிற அச்சம் எல்லாம் . . .

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** உறுப்பினர் விளக்கமாகச் சொல்ல வேண்டுகிறேன்.

(பிற்பகல் 5-30)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த நாட்டிலே சாதாரண குடிமகனுக்குப் பாதுகாப்பில்லை. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் குறைந்தபட்சம் மாண்புமிகு அமைச்சர்களுக்காவது பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I have got great respect for my hon. Friend Thiru Veerasami but I am afraid the debate is going off the rail. I am sorry the debate must be confined, must be compelled to be confined to the scope of Bill in question.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்த நாட்டினுடைய சாதாரண குடிமகனுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு இருக்கிறதோ அந்த அளவுக்குப் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இருந்தால் போதும்.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member Thiru Veerasami may please confine his remarks to the Bill before the House.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இடையிலே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். விளக்கம் அளிப்பது என்னுடைய கடமை. எனக்கு ஏதோ விளக்கத் தெரியாது என்று நினைக்கக் கூடாது. ஆகவேதான் நான் விளக்கினேன். சாதாரண குடிமகனுக்கு இருக்கிற பாதுகாப்பு போதும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சாதாரண குடிமகனுக்கு இருக்கிற பாதுகாப்பு இருந்தால் போதாது. எப்படிப்பட்ட பாதுகாப்பு வைத்திருக்கிறார்கள் என்று கேட்கவில்லை. ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்கள் கூட்டம் நடத்தினால், அந்தக் கூட்டத்திற்கு காவல் நிலையத்திலிருந்து அனுமதி பெறுவது என்று சொன்னால், அவர்கள் கட்டணம் கட்டாமலேயேகூட அனுமதிகள் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் ஆளும் கட்சியாக இருப்பதால், அந்த வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால், எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் அனுமதியில்லாமல், உரிமம் இல்லாமல் எந்தவிதமான நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது. இந்திரா காந்தி அம்மையார் தமிழகத்துக்கு வந்தபோது, உண்ணாவிரதம் இருந்த சிலரைச் சுட்டிக்காட்டி ஒரு போலீஸ் அதிகாரியிடம் நான் கேட்டபோது, 'எங்களுடைய அனுமதி இல்லாமலேயே அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்' என்று சொன்னார். அவர்களுடைய ஊர், பெயர் தெரியவில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அனுமதி இல்லாமலேயேகூட இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட அரசாங்கம் விரும்பினால் அனுமதிக்கும், உபயோகப் படுத்தும். எதிர்க் கட்சியிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் அனுமதி பெறாமல் செய்தால், உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். உடனே சட்டம் வேலை செய்யும். கைது செய்யப்படுவார்கள். யார் மைக்கை வைத்தானோ அவன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே 20 ரூபாய் என்று இருப்பதை 75 ரூபாயாக உயர்த்தியிருப்பது அக்கிரமமாகும், அநியாயமாகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்கள் காஸ்மோபாலிட்டன் சிட்டீஸ் என்று சொன்னால், டெல்லியிலே எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது? இந்தியாவின் தலைநகராக இருக்கக்கூடிய டெல்லியைவிட சென்னையில் ஒன்றும் சர்வீஸ் சார்ஜ் அதிகமாக ஆகாது. டெல்லியிலே உள்ள லைசென்ஸ் பீசை விட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு சென்னைக்கு கொண்டு வரப் படுகிறது என்றால் இந்தச் சட்டம் எவ்வளவு அக்கிரமமான, அநியாயமான சட்டம் என்பதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குத்



தெரிந்தவரையில், எதிர்க் கட்சிகளுடைய நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக, எதிர்க் கட்சியிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் கூட்டம் போடுவதைத் தடுப்பதற்காக, இந்த நாட்டிலே இருக்கின்ற பாமர மக்களுக்கு அரசியல் அறிவு ஏற்படுத்த ஏற்பாடு செய்யும் அரசியல் கூட்டங்களைக் குறைக்கத்தான் இந்த நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபடுகிறது. எப்போதுமே ஆளும்கட்சியாகிவிட்டால், கூட்டங்கள் அதிகம் தேவையில்லை. பேசுவதை, அரசாங்க விழாக்களிலேயே பேசிவிடலாம். ஆனால், எதிர்க் கட்சிகளைப் பொறுத்தவரையில், அதிகமான அளவிலே கூட்டங்கள் போட வேண்டும். அப்படிப்பட்ட கூட்டங்களை இந்தச் சட்டம் தடுக்கக்கூடியதாக, எதிர்க் கட்சிகளுடைய நடவடிக்கைகளை ஒடுக்குவதாக இருப்பதால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இது அநியாயமான, அக்கிரமமான சட்டம், எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கும் சட்டம், ஆகவே இந்தச் சட்டத்தை மிகக் கடுமையாகக் கண்டிக்கிறேன் என்று சொல்லி பேச வாய்ப் பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I have only very brief remarks to make on this Bill. I am glad that on this one occasion my friends, the leaders of all political parties have risen to protest against the increase in the licence fees from Rs. 20 to Rs. 75. This is one that has been brought to their attention because an amendment of the Act has been required. But, I think, from October 1, the Hon. the Minister for Revenue has sought to increase the licence fee for every licence that has been issued under various Acts in our State. Unfortunately, in our delegation of powers, the rule-making powers of the Government have permitted the Government to increase the licence fees according to their own desires and they could offer as an excuse for the increase in levy the extra expenditure incurred. But I would like the Hon. the Minister for Law who is moving this Bill to note, since he has been a Judge, that there are many judgements which state that licence fee is not a tax. The increase in expenditure of the Government cannot be the reason for any increase in licence fees. Licence fee will have to be directly proportionate to the quantum of services rendered in giving that licence. The Government can never quote as an excuse the 36 crore pay increase for their employees for the increase in the licence fees under this provision.

It has been brought to my notice probably during the Budget discussion—I shall bring the whole set of rules that have been framed by the Hon. the Minister for Revenue—that under the

Weights and Measures Act, he has increased the licence fees by 50 per cent, from Rs. 200 to Rs. 300 and there has been this indiscriminate increase in licence fees without conscience. The same degree of lack of conscience has been exhibited in increasing the licence fees from Rs. 20 to Rs. 75 in this Bill. My frinds, the leaders of all the political parties feel aggrieved only from the point of view of public meetings. Sir, the same licence fees will also be paid by their own party—the ruling party which will be holding its public meetings. But what is the point in increasing the fees from Rs. 20 to Rs. 75 ? So far as the increase in licence fee for public meetings is concerned the timing of this Bill is awkward and it could have been done after two months and after the elections are over. Naturally it has brought forth the comment that it is being done to stifle the Opposition. But I am sure that this has nothing to do with politics and it is only because of the greed on the part of the Government to increase licence fees for every industry and every trade that is being conducted in our State. I would like to say that even though the Legislature may approve this, the flat increase in the licence fees is going to be questioned in Courts of Law on the ground whether it is justified, whether the quantum of services rendered is proportionate to the increase in licence fees. I would like the Hon. the Ministers for Revenue and for Law to bear this in mind when proposals are put forth to them for increase in licence fee indiscriminately. As a person in the trade, I remember a very wonderful instance in Nellikuppam Municipality in which a Writ Petition had to be resorted to. There also it related to the levy of licence fee for trade and they chose to make the wonderful distinction according to their notification and they said that small petrol pumps will pay Rs. 100, medium sized petrol pumps will pay Rs. 200 and large sized petrol pumps will pay Rs. 500. Naturally, the whole distinction was absurd. But they

(பிற்பகல் 5-40)

did not realise it just as the Government do not realise today that many of the increases in licence fees are absurd. So, I had to go on a Writ Petition of Rs. 1,500 to get that wretched notification quashed. Why do this Government want to force people to go to Courts? Yesterday, the Hon. the Law Minister himself said, "There are 25,000 cases pending. I cannot do anything; the Courts are overburdened with work ". If they keep on producing such laws, then people have to go to Court. If they keep on increasing the licence



fee without any justification, people have to go to Court. Although this amendment has been brought forth, if the concessions that are going to be given to the Police Force are taken into consideration, this increase in licence fee will be a flea-bite. How much revenue are Government going to get out of this ? When you receive V.I.P.'s tens of thousands of persons belonging to the Police Force are on security duty and lakhs of rupees are being spent on receiving these V.I.P.'s at Airports, providing bandobust, putting up fences, etc. People are quite entitled to ask, " why do you spend lakhs of rupees on such lavish security arrangements when you want to increase from Rs. 20 to Rs. 75 or from Rs. 50 to Rs. 100 the licence fees collected from us ? ". Therefore, I am one with all those who have said that any increase in licence fee according to the provisions of this Bill is unjustified and totally not warranted by any alleged increase in the cost of service by Government.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I am thankful to the hon. Members for the high level of debate that has been brought to bear on the discussion on this Bill in this House.

Principally and substantially only two points emerged and they have been made out by hon. Members on the Opposition. One is that there need not be a sum of Rs. 75 as licence fee for public meetings. All that the amendment that is before the House contemplates is only an increase of the licence fees up to Rs. 75. It is not intended to raise the fee in every case to the height and tune of Rs. 75 for every trade or avocation for which licence or permission is granted. That is the outer limit and the maximum amount that the licensing authorities can impose either for licence or for permission. For public meetings, as the hon. Member Thiru Damodaran has put it, it is really not going to be discriminatory. Whichever party holds the meeting has got to pay the same universal rate of licence fee that will be fixed.

THIRU A. R. DAMODARAN: May I request the Hon. Minister not to quote me in justifying this argument? I only said that it would not cause hardship to some parties only.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am only drawing support to the view from the hon. Member. Whoever holds a public meeting has got to pay a certain licence fee but that does not necessarily mean Rs. 75.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர்

(பிற்பகல் 5-40)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அனைத்துக் கட்சிக்காரர்களும் பொது கூட்டங்களுக்கான லைசென்ஸ் கட்டணம் கட்டப் போகிறார்கள் என்றாலு ஆளும் கட்சிக்காரர்களுக்கு லைசென்ஸ் கட்டணம் கட்டுவது என்பது மிகவு சுலபம். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியும் . . . .

THE HON. THIRU K. NARAYANASWAMY: I confess tota ignorance of these mechanics.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் சொல்வது கூட்டம் நடத்துகிறவ களுக்குத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோபித்துக்கொள்ள கூடாது. நாங்கள் கூட்டம் நடத்திப் பழக்கப்பட்டவர்கள். கூட்டம் நடத்து போது, ஒரு கூட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் வருகிறார்கள் என்றா பக்கத்திலே இருக்கிற கடைக்காரர்கள் ரூ. 5 தருவார்கள். ஆனால் அே நேரத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் கூட்டம் நடத்தினால், ஒரு ரூபாய் அல்ல இரண்டு ரூபாய்தான் தருவார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. சோ சுந்தரம் அவர்களுக்குத் தெரியும். கூட்டம் நடத்தும்போது, எப்ப வசூலாகும் என்பது அவருக்கு நன்கு தெரியும். யாருமே கட்சிப் பணத்தை எடுத்து கூட்டம் நடத்துவது கிடையாது. ஆளும் கட்சிக் கூட்டம் நடக்கிற என்றால், பயந்து கொண்டு அதிகமாகக் கொடுப்பார்கள். அதனால் அவர்க அதிகமான லைசென்ஸ் கட்டணம் கட்ட முடியும். எதிர்க் கட்சிகளை பொறுத்த வரையில், அநேகமாகப் பிச்சை எடுத்துத்தான் இதைக் கட் வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருப்பதன் காரணமாக இந் லைசென்ஸ் தொகையை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந் அளவுக்குக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I am obliged to th hon. Member for this knowledge because he himself once upon time was a leading member of the ruling party which governed th State.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அந்த அனுபவத்தின் காரணமாகத்தா நான் சொல்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The fee is onl raised to the maximum amount of Rs. 75. That does not necessaril mean that every permission or licence is going to be granted only o the payment of a sum of Rs. 75. I want to make it very clear. Th is only to enable the Commissioner to submit his proposals so tha he may embody them in the by-laws to be passed under the Madra City Police Act, 1888.



1979 நவம்பர் 9]

The apprehension of the hon. Member Thiru Veerasami is not well-founded in the sense that a sum of Rs. 75 is not necessarily fixed for every public meeting. Even assuming it is so fixed, I do not think that a sum of Rs. 75 will be an instrument of obstruction to the political activities of any Party whatever.

THIRU ARCOT N. VEERASAMI: A clarification. . .

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member may ask for clarifications after the Hon. Minister finishes his speech. The Hon. Minister is not yielding now.

THE HON. THIRU. K. NARAYANASWAMY: I entirely agree with the statement of the hon. Member Thiru Damodaran that licence fee is not tax. I submit it is so. It is a very well-known proposition of law laid down repeatedly by Courts. Even the highest Court, the Supreme Court has held so, I think, in the Calcutta West Indian Theatres case and even in the Madurai Municipality case.

The hon. Member also made mention about the timing of this legislative amendment. There can always be some type of criticism about the timing. If the measure is brought before the Budget, it may be asked "why add to the burden of the Budget?" and if it is brought later on, some other type of criticism may arise. Always, there will be some type of criticism. But the point which I want to stress before this House as a matter of submission in a most respectful manner is that this power is granted to the Commissioner in order to vary the rates according to the needs of the licences and permissions that have to be granted for various trades and professions.

I request that this motion for the acceptance of the House may be accepted.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் லைசென்ஸ் கட்டணம் அதிகபட்சம் ரூ. 75 என்றாலும் பொதுக் கூட்டங்களுக்கு ரூ. 75 வசூலிக்கமாட்டார்கள் என்ற வாக்குறுதியைத் தந்திருக் கிறார்கள். நான் அவர்களிடத்தில் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எதெதற்கு எவ்வளவு கட்டணத் தொகை என்பதை அமைச்சர் அவர்கள் இங்கேயே அறிவித்துவிட்டால், அது பத்திரிகையிலும் வந்துவிடும். கூட்டம் நடத்துகிறவர்களுக்கும் அது தெரிந்துவிடும். பொதுக் கூட்டம் நடத்த வேண்டுமானால், மைக் லைசென்ஸ் வாங்க வேண்டும். அதற்கு எவ்வளவு கட்டணம்? அதைப்போல மதச் சடங்குகள் சம்பந்தமான கூட்டங்கள் நடக்கும். அதற்கு லைசென்ஸ் கட்டணம் எவ்வளவு? இப்படி அரசியல்

கூட்டங்களுக்கு இவ்வளவு என்றும், மதச் சடங்குகள் உள்ள கூட்டத்திற்கு இவ்வளவு என்றும் கட்டணத்தை வசூலிக்கும் உரிமை போலீஸ் கமிஷனருக்கு வழங்கப்படுகிறது என்றால், அதற்கும் அரசாங்கத்திலிருந்து 'டைரெக்ஷன்கள்' கொடுக்க வேண்டும். ஆகவே அது ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு கட்டணம் என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்களா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The Commissioner of Police will take into consideration the trend of the debate in this House and the other House, Legislative Assembly, and make necessary proposals for the consideration of the Government in due course of time.

THIRU A. R. DAMODARAN: Sir, one clarification. May I know whether the Commissioner of Police has got the power to levy various licence fees for various trades, etc., because from what the Hon. the Law Minister mentioned here, I got the imprsssion that varying licence fees could be levied by the Commissioner of Police? I seek a clarification from the Hon. Minister whether there is any such power given to the Commissioner of Police, because the Statement of Objects and Reasons says flatly that the licence fee is raised from Rs. 20 to Rs. 75. May I know whether there is such a power for the Commissioner of Police to fix varying fees for the several licences that are granted under this Act because I do not have the original Act with me at present?

திரு. ஆ. நல்லசிவன்: அமைச்சர் அவர்கள் பேசும்போது கட்டணத் தொகையை நிர்மாணிப்பதைப் பொறுத்தவரையில், அதைப்பற்றி கமிஷனர் ஆப் போலீஸ் பை-லா போடும்போது, வெவ்வேறு நோக்கங்களுக்கு எவ்வளவு எவ்வளவு லைசென்ஸ் கட்டணம் என்பதைப் பரிசீலனை செய்து முடிவு செய்வார் என்று குறிப்பிட்டார்கள். இப்போது மேக்சிமம் ரூபாய் 20 என்று இருக்கும்போது கூட்டத்திற்கு எவ்வளவு லைசென்ஸ் தொகை வாங்குகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்கே தெரியும். எனவே இந்தத் தொகையை ரூபாய் 75 என்று உயர்த்தும்போது, பொதுக் கூட்டங்களுக்கு எவ்வளவு உயர்த்துவார்கள் என்று அறிவித்துவிட்டால், வெளியே பொதுக் கூட்டம் போடுகிறவர்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I wish to read the very clause that is now sought to be brought into effect: "For every licence or permission granted under this Act, the Commissioner of



(Thiru K. Narayanaswamy)

Police is empowered to levy such fee not exceeding Rs. 75 as may from time to time be fixed by the State Government." Therefore, every licence or permission will be varying for trades like tea shop, eating house, lodging house, hostels, the places where music performances are held, all permanent places of public resort, temporary places of public resort, other places of public resort, etc., etc. Therefore, it is bound to be varied and there can be no doubt about it.

Regarding the request of my hon. Friend Thiru Nallasivan, I again repeat that the Commissioner of Police has got to send proposals to the Government so that they may be embodied as by-laws and when those proposals reach the Government, the Government will give due attention to them, particularly in view of the sentiments expressed in this House, in fixing the licence fees for the public meetings.

THIRU A. R. DAMODARAN: I want one clarification, Sir, I do not know whether under the Madras City Police Act, the tea shops and other shops referred to have to obtain a licence. I do not know what exactly the Hon. Minister referred to when he mentioned about tea shops and coffee shops. Do they require any licence from the Commissioner of Police to run tea shops, coffee shops, etc., in the City of Madras? When speaking, the Hon. Minister read about tea shops, coffee shops, and hotels. I want a clarification whether these persons have to obtain licences?

THE HON. THIRU K. NARAYANASWAMY: Under section 77, the Commissioner of Police has got to issue licences and the Commissioner of Police has himself sent up a proposal for enhancing the fees and he has given a list of trades, etc., for which licences are issued. I have only read out the list of trades, etc., enumerated by him.

THIRU K. S. ABDUL WAHAB: One clarification.

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member cannot seek a clarification. Only those who have participated in the discussion can ask for a clarification.

[1979 நவம்பர் 9

(பிற்பகல் 5.50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the following amendment:

"In clause 2, delete the word "seventy",

The amendment was duly seconded by Thiru M. Sankaralingam.

*திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, உறுப்பினர்கள் எழுப்புகிற அத்தனை சந்தேகத்தையும் தீர்ப்பதற்கான முயற்சியை சாதாரணமாக எடுப்பது உண்டு. ஆனால் இன்றைக்கு சட்ட அமைச்சர் அவர்கள் அந்த அளவுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையிலே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இன்னொன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, சீர்திருத்தத் திருமணங்களையெல்லாம் சட்டப்படி செல்லத்தக்கதாக மாற்றிய பிறகு, திருமணங்களை மிகக் குறைந்த செலவில் நடத்தக்கூடிய நிலையை தமிழகத்திலே உருவாக்கினார்கள். ஆனால் இந்த அரசாங்கம், திருமணங்களை நடத்துகிறவர்கள் "மைக் செட்டுகளை" வைத்து நடத்த விரும்பினால், கட்டணம் கட்டி "லைசென்சை"ப் பெற வேண்டுமென்ற நிலையை உருவாக்கியிருக்கிறது. இந்தக் கட்டணத்தை விதிக்கக்கூடிய அதிகாரத்தை (Discretionary Power) போலீஸ் அதிகாரியிடம் ஒப்படைக்கிறார்கள். இந்த மிகப் பெரிய பயங்கரமான ஆயுதத்தை போலீசாரிடம் ஒப்படைப்பதன் மூலம், திருமணத்தை நடத்துகிறவர்கள் மைக் செட் லைசென்சுக்காக காவல் நிலையத்திற்கு நடந்துகொண்டிருக்கிற நிலை ஏற்பட்டு, அதனால் ஆகும் செலவு



1979 நவம்பர் 9]

கல்யாணச் செலவுகளை விட அதிகமாகக் கூடிய நிலைமைகளை உருவாக்கும். இதிலே சட்டபூர்வமான பாதுகாப்பு இல்லை. அதிகாரிகள் விரும்புகிற அளவிற்குக் கட்டணத்தை வசூலிக்கலாம் என்ற நிலை இருக்கிறது. அதனால் மற்ற அதிகாரிகளுடைய தயவிலேதான் பாதுகாப்பைப் பெற வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே இது வசதியற்றவர்களுக்கு உகந்ததல்ல. காவல் நிலையங்களுக்குச் சென்று காவல் துறை அதிகாரிகளோடு நேரிடையாக எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பற்றவர்களுக்கு பெரும் தீமையாக, தொல்லையாக அமைந்துவிடும் என்பதால் நான் கொடுத்துள்ள திருத்தத்தை வலியுறுத்தி முன்மொழிகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: The subject-matter of this legislation is only the rate of fee and no discretion is vested in the Commissioner when once the by-laws are accepted by the Government. There is no scope for abuse of any power by the Thiru Commissioner, as has been apprehended by the hon. Member Thiru Ramamoorthy.

THIRU K. RAMAMOORTHY: The discretionary power of the Police Officer is always there. The highest amount is Rs. 75 under this Bill and, therefore, the discretionary power of the officer is there.

THE HON. THIRU K. NARAYANASWAMY: There is no discretionary power. The recommendation of the Commissioner by way of a by-law must come before the Government for their acceptance. After it gets the legal validity, there is absolutely no area, not even one per cent of area, for any discretion whatever.

MR. DEPUTY CHAIRMAN: Is the hon. Member pressing his amendment or withdrawing it?

THIRU K. RAMAMOORTHY: Sir, I have got to press my amendment under the present circumstances.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை. . .'.

"In clause 2, delete the words "seventy",

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I move—

"That the Madras City Police (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 43 of 1979), as passed by the Assembly, be passed."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) 1979-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979.)

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, I beg to move—

"That the Madras City Police (Second Amendment) Bill 1979 (L.A. Bill No. 51 of 1979), as passed by the Assembly, be taken into consideration".

Instances of obscene dances in the exhibitions conducted in the City of Madras have been brought to the notice of the Government. Such dances are in violation of the specific conditions of the licences granted under section 34 of the Madras City Police Act, 1888. For effective enforcement of the conditions of licences, it is proposed to amend section 34 of the Madras City Police Act for requiring persons other than a local authority applying for licences to conduct exhibitions to furnish security deposits as prescribed by the Commissioner of Police for the observance of the conditions of the licences, which will be forfeited to the Government in the event of breach or non-observance of the conditions of the licences. It is also proposed to amend section 76 of the said Act so as to enable the Commissioner of Police to suspend the licences then and there for violation of the conditions of licences pending action against the holders of the licences.

The Bill seeks to achieve the above objects.

Sri, I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

@ 500 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆபாசம் என்ற பெயராலே, சட்டமன்றம் கூடுகிற ஒவ்வொரு முறையும் சட்ட முன்வடிவை கொண்டு வருகிற அளவிற்கு எப்படி இது வளர்ந்திருக்கிறது என்று புரியவில்லை. அல்லது வளர்ந்திருப்பதாகக் கருதும் நிலை உருவாகியிருக்கிறதா என்பதும் தெரியவில்லை. இதிலே நாம் தெளிவாக இருந்தாக வேண்டும். பொது இடங்களில் நடக்கக்கூடிய நடனங்களில் எந்த அடிப்படையிலே அவற்றை ஆபாசம் என்று கருதுகிறோம் என்று தெரிய வில்லை. இது போன்றவைகளைத் தடுப்பதற்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து ஏற்கெனவே பல சட்ட முன்வடிவுகளைச் சட்டமாக நிறைவேற்றி தன்னுடைய கரங்களில் வைத்துக்கொண்டு, ஆனால் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது என்பது சென்னை நகர வீதிகளிலே நடமாடுகிறவர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரிகிறது. வீதிகளிலே ஆபாச சுவரொட்டிகள், ஆபாசப் புத்தகங்கள் உள்ள நிலையை இன்னும் காண முடிகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகிறபோது, "எது ஆபாசம் என்பதைப்பற்றி வரையறுத்தால் அதுவேகூட ஆபாசமாகப் போய் விடும்" என்று சொன்னார்கள். அரசு தன்னுடைய கரங்களிலே சட்டங்களை வைத்துக்கொண்டு அதை நிறைவேற்ற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிற நிலை இன்றைக்கு இருக்கிறது. ஆபாச சுவரொட்டிகளை ஒழித்துவிடு கிறோம் என்று சொன்னார்கள். சினிமா சுவரொட்டிகளில் ஆபாசம் இடம் பெறாது என்று சொன்னார்கள். ஆனால் என்ன ஆயிற்று? பெண்கள் எல்லாம் ஊர்வலமாக வந்து ஆபாச சுவரொட்டிகளைக் கிழித்தார்கள், கொளுத்தினார்கள், மறைப்பு போட்டு ஒட்டினார்கள். பத்திரிகைகளில் ஆபாசமான விளம்பரங்களை அன்றாடம் பிரசுரிக்கிற நிலை ஏற்பட்டிருக் கிறதா, இல்லையா என்று அறிய விரும்புகிறேன். ஆபாசத்தை ஒழிப்பதற்காக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும், சட்டத்தை மீறுகிறவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதிலே பாரபட்சம் காட்டப்படுகிறது. வேண்டிய துறை யினர், சினிமாத் துறையினர் ஆகியவர்கள் சட்டத்தை மீறும்போது, இந்தச் சட்டம் கண்ணை மூடிக்கொள்கிறது. அவர்கள் மீது இந்தச் சட்டம் பாய்வதில்லை. சட்டம் முழுவதுமாக அமுல்படுத்தப்படுவதில்லை. அதைப்

போலவே கண்காட்சிகளில் நடனங்களை ஏற்படுத்தும்போது, அங்கே ஆபாசம் வருகிறது. இந்தச் சட்டத்தை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் கொண்டு செல்ல முடியும். வேண்டியவர்கள் நடத்துகிறபோது கண்ணை மூடிக் கொள்ளும், வேண்டாதவர்கள் நடத்தும்போது, அது கிராமங்களில் நடத்துகிற தெருக்கூத்தாக இருந்தாலும், இந்தச் சட்டம் அங்கே சென்று அதை நிறுத்தும். ஊரிலே நடக்கிற கோஷ்டிச் சண்டை, அரசியல் சண்டை ஆகிய வற்றைத் தடுத்து நிறுத்த இந்தச் சட்டத்தின் மூலம் போலீஸ்காரர்களைக் கொண்டு வருகிற நிலை மிகச் சுலபமாக ஏற்படும். தேர்தல் நேரத்தில் இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக, சில கிராமங்களில் நடைபெறக்கூடிய கலை நிகழ்ச்சிகளைத் தடுக்க இதனை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முடியும்.

(பிற்பகல் 6.00)

ஆபாசம் (Obsen ty) என்பது எது என்பதை வரையறுக்கின்ற நிலை இதிலே இல்லை. அல்லது "அப்சீனிட்டி" என்பது இதுதான் என்று வரையறுத்துச் சொல்லவும் முன்வரவில்லை. கொண்டு வருகின்ற சட்டங்கள் எல்லாம், ஏதோ நாட்டிலே, ஊரிலே இருப்பவர்கள் ஆபாசமாக இருந்து கொண்டிருப்பது போலவும், வெளியிலே ஆபாசமாக ஆடிக்கொண்டிருக் கின்றார்கள் என்பது போலவும் ஒரு உருவகப்படுத்திக்கொண்டிருப்பதில் தான் திரும்பத் திரும்ப இந்த அரசு முனைந்துகொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். பெரிய பெரிய உணவு விடுதியிலே, ஓட்டல்களிலே இந்த மாதிரி நடைபெறுவதில்லையா என்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறார்கள்? ஏன் கண் மூடிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அது தேவை என்று நினைப்பீர்களானால், ஏழைகளுக்கு ஒரு சட்டம், பணக்காரர்களுக்கு ஒரு சட்டம் என்று ஏன் நிலை மாறுபடுகிறது? அதுமட்டுமல்ல, இவைகள் பெரும்பாலும் கண்காட்சிகளில் மலிந்து காணப்படுகின்றன. நகராட்சிக் கண்காட்சிகளில்கூட அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. இதை நடத்து கின்றவர்களுக்கு, நிர்வாகப் பொறுப்பை ஏற்று இருப்பவர்களுக்கு, உள்ளே நடக்கின்ற நிகழ்ச்சிகள்மீது ஒரு கண்ட்ரோல் இருக்கிறதா இல்லையா? இதற்குச் சட்டம் எங்கேயிருந்து வருகிறது? சட்ட முன்வடிவில் கோளாறு இருக்கின்றது என்பது மட்டுமல்ல, இந்தச் சட்டத்தை தேர்தல் நேரங்களில் கொண்டுவருவது நியாயமற்றது என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே இருக்கின்ற சங்கடம், இந்தச் சட்டத்தை நிறை வேற்றி வைத்துக்கொண்டிருக்கின்றார்களே தவிர, அதை அமுல் நடத்த முடிவதில்லை என்பதுதான். வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்,





தமிழகத்திலே, உள்ளவர்கள், ஊரிலே உள்ளவர்கள் துணியே இல்லாமல் நடமாடிக்கொண்டிருக்கின்றார்களோ என்று சந்தேகப்படும் நிலைமைக்குத் தான் இதன் விளைவு இருக்கிறது. 3 மாதத்திற்குள், 6 மாதத்திற்குள், "ஆப்சீனிட்டி" பற்றிய சட்ட முன்வடிவு ஆண்டுக்கு 2, 3 முறைகள்கூட கொண்டுவரப்படுகிறது. இந்த மாதிரி நிலைகளை உருவாக்குவது நம்முடைய பண்பாட்டை, நாகரிகத்தைக் காப்பாற்றுவதாக அமையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மாறாக, வேறுவிதமாக நினைக்கக்கூடிய ஒரு நிலையை மக்கள் மத்தியிலே விளம்பரப்படுத்துகின்ற ஒன்றாக அமைந்து விடுகிறது.

இந்தச் சட்ட முன்வடிவு இந்த நேரத்திலே தேவையற்றது. இதனாலே பெரிய விவகாரங்கள் எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் தள்ளி வெளிப்படுத்தியிருந்தாலும், தவறு இல்லை. தேர்தல் வர இருக்கின்றது. இந்தச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்கின்ற ஒரு நிலை உருவாகிவிடும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வர வேண்டும் என்பதற்காகத்தான், இந்தச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றுகிறார்களோ என்ற எண்ணம் ஏற்படும். அரசு காட்டியிருக்கின்ற காரணம் நல்லதாக இருக்குமானால்கூட, அதைக்கூட களங்கப்படுத்தக்கூடிய தாகத்தான் நிலைமை உருவாகிவிடுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே தயவுசெய்து இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பப் பெறவேண்டும். வழக்கம்போல், இதில் பிரிஸ்டிஜ் (prestige) என்று நாம் பார்க்க வேண்டாம். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், நாம் பிரிஸ்டிஜ் பார்க்கிறோம். இந்த நிலையில், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அப்படியெல்லாம் பிரிஸ்டிஜ் பார்க்க வேண்டாம். தேர்தலில், ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இப்போது நமக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லுங்கள் என்கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கும் நம்பிக்கைக்கும், அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கைக்கும் கொஞ்சம் மாறுபாடு இருக்கிறது. எங்களைப் போன்று அவர்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது என்று சொல்கின்ற காரணத்தினாலே, அந்த உரிமையோடு கேட்கிறேன். ஒரு ஜனநாயக உணர்வோடு, இந்தச் சட்ட முன்வடிவை அருள் கூர்ந்து திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** துணைத் தலைவரவர்களே, கண்காட்சி சாலைகள் நடத்துபவர்கள் டெப்பாசிட் தொகை கட்ட வேண்டும். அந்த டெப்பாசிட் தொகை கட்டி லைசென்சுகள் வாங்குகிறார்கள். அந்த

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 நவம்பர் 9

லைசென்ஸினுடைய நிபந்தனைகளை மீறினால், டெப்பாசிட் தொகை பறிமுதல் செய்யப்படும் என்ற நோக்கத்துடன் இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது என்று அறிகிறேன். குறிப்பாக கண்காட்சி நடத்துபவர்கள் ஆபாச நடனங்கள் நடத்துகிறார்கள் என்றும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆபாச நடனம் என்றால், கண்காட்சியில், இந்த அவையிலே சொல்ல முடியாத அளவுக்கு, ஆபாச நடனங்கள் நடக்கின்றன என்று நான் தெளிவுபடுத்துகிறேன். அதற்குப் போகக் கூடிய வாய்ப்பு எனக்கு இல்லை. கண்காட்சியை நடத்துபவர்கள் சொன்னார்கள். 'அங்கு ஒரு பெண் நடனம் ஆடிக்கொண்டு இருப்பாள். ஒவ்வொரு துணியாகக் கழற்றிவிடுவாள். பூரா துணியையும் கழற்றிவிட்டு ஓடிவிடுகிறாள்' என்று கூறுகிறார்கள். வெளிப்படையாகவே இதுதான் நடக்கிறது. ஆபாச நடனத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதிலே நான் இதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இதற்கு டெப்பாசிட் கட்ட வேண்டுமென்று சொல்லும்போது, பெரும் தொகையாகக் கட்ட வேண்டும். ரூபாய் 5,000, ரூபாய் 10,000 என்று இருக்க வேண்டும். அங்கே தப்பு செய்தால், அந்தத் தொகையைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கண்காட்சி நடத்துபவர்கள் சூதாட்டம் நடத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. கண்காட்சி நடத்துபவர்கள் சூதாட்டம் நடத்துவதை நடைமுறையில் காண்கிறோம். சட்டத்தில் இடமில்லை, அவர்களும் சூதாட்டம் நடத்துகிறார்கள். அங்குள்ள அதிகாரிகளைக் கட்டிக்கொண்டு சூதாட்டம் நடக்கிறது. அங்கு சூது நடக்கின்றது. இதைத் தடுக்க பெரிய அதிகாரிகள் திடீரென்று சோதனை செய்து சிறிய அதிகாரிகள் யார் யார் இதை அனுமதிக்கிறார்களோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும், சூதாட்டத்தினை இதனாலே நிறுத்த முடியும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆபாச நடனக் கண்காட்சி அங்கு மட்டுமல்ல, நம்முடைய ஓய்வு விடுதிகளிலே, ஃபைவ் ஸ்டார் ஓட்டல்களிலே பூரணமாக நிர்வாணமாக நடனமாடுகிறார்கள். அதற்கு நான் போகா விட்டாலும் . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** விவரங்களை உறுப்பினர் அவர்கள் சொல்லத் தேவையில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** அங்கேயும், ஆபாசமான நடனங்கள் ஆடுகிறார்கள் அதையும் அரசு கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சினிமாவிலும் ஆபாசங்கள்



1979 நவம்பர் 9]

**திரு. இரத்தின பாலகுருசாமி:** ஆபாசம் ஆபாசம் என்று இப்போது பேசுகிறார்கள். அந்த ஆபாசத்தைப் பார்க்கத் தெரிந்துகொண்ட காரணத்தினாலே தான் பேசுகிறார்கள். அல்லது வேறு ஒருவர் சொல்லிப் பேசுகிறார்கள். இது நடைமுறையிலே நாட்டு மக்கள் மத்தியிலே நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டு வந்த ஒன்று. சென்ற கூட்டத்தொடரில் கூட பாப்பாத்தி என்று ஒரு சினிமா படத்தைப் பார்த்துவிட்டு வந்து ஆபாசம் ஆபாசம் என்று சொன்னார்கள். அந்தப் படம் கிராமியங்களில் எப்படியிருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டியிருக்கிறதே தவிர வேறு அல்ல. ஆகவே அப்படிப்பட்ட திருத்தங்கள் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஆபாசம் பார்த்திருக்கிறார்களா என்று கேட்டார்கள். கண்காட்சியில் பார்த்ததில்லை என்று நான் சொன்னேன். ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டலிலே கிட்டத்தட்ட சமீபத்தில் நான் பார்த்தேன். ஒரு ஃபைவ் ஸ்டார் ஓட்டலிலே பார்க்கக்கூடிய ஒரே ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. ஆனால் நான் ஒன்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது சினிமாவிலே பார்க்கிறோம், ஒரு செகண்டிலே வருகிறார்கள், மறைந்து விடுகிறார்கள், 5 ஸ்டார் ஓட்டலிலே ஒரு மாதிரி காட்டிவிட்டு ஓடிவிடுகிறார்கள். இதையே போஸ்டரிலே போட்டு சுவர்களிலே ஒட்டிவிடுகிறார்கள். அது அங்கே 'ஸ்டான்ட்ஸ்டில்' ஆக இருக்கிறது. அந்தப் போஸ்டரை முறைத்துப் பார்த்துக் கொண்டே இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இந்த போஸ்டர்கள் ஆபாசங்களிலே உச்ச நிலையடைந்ததாக நான் சொல்வேன். இந்தப் போஸ்டர் ஆபாசத்தை அரசு கண்காணிக்க வேண்டும், இதைக் கட்டுப்படுத்த வேண்டும். அதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்ட அமைச்சர் அவர்களால் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவில் என்னுடைய கட்சியின் சார்பில் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்னாலே இது சட்ட ரீதியாக செல்லுபடியாகுமா என்பதை நான் கிளப்ப விரும்புகிறேன். ஏனென்றால் இது ஒரு 'மணி பில்' பணச்சட்டம். இதில் வரி விதிப்பது இருக்கிறது. டெபாசிட் செக்யூரிடி என்ற பெயரால் என்று வாங்குகிறோம் என்று சொன்னாலும், லைசென்ஸ் பீஸ் உயர்த்திப் பெறுவது என்றாலும், அதனால் அரசாங்கத்துக்கு வருமானம் வருகிறது. அதுபற்றி துணை மானியம் வரும்போது என்ன என்று சொல்ல வேண்டும்.

எஸ்டிமேட் ஆப் இன்கம், வருமானம் எவ்வளவு என்று சொல்ல வேண்டும்.
அந்த நிதியை ஒரு வரைமுறைக்குள் கொண்டுவர வேண்டும்.
முறையாகும். அந்த வரைமுறைகளுக்கு வெளியே நின்று கொண்டிருக்
கிறார்கள், அப்பால் சென்று கொண்டிருக்கிறார்கள் என்ற என் ஐயப்பாட்டிற்கு
மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் தெரிந்துகொள்ள

(பிற்பகல் 6.10)

ஆசைப்படுகிறேன்; ஏனென்றால் இப்போதுதான் துணை மானியக்
கோரிக்கையை அமைச்சரவர்கள் தந்தார்கள். அதிலே இந்த வரி
விதிப்புபற்றிச் சொல்லி, எஸ்டிமேட்டட் இன்கம் இவ்வளவு என்று சொல்லி
யிருக்கலாம். அல்லது, வரக்கூடிய பிப்ரவரி, மார்ச் மாதங்கள் வரை
பொறுத்திருந்து, தேர்தல்கள் எல்லாம் முடிந்த பிறகு, பட்ஜெட்டரி இன்கம்
மாக இதை சொல்லியிருக்கலாம். இதற்கிடையில், ஓர் அளவிற்கு இதை வரி
இல்லையென்று சொன்னாலும்கூட, என் இவ்வளவு வேகமாகக் கொண்டுவர
வேண்டும்? இது வரிதான், அதனால் வருமானம் வருகிறது என்பதை மறுக்க
முடியாது என்பதை அரசு உணர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்
திரு. தாமோதரன் அவர்கள், இதற்கு முந்தைய சட்ட முன்வடிவின்மீது
பேசும்போது, லைசென்ஸ் கட்டணம் எல்லாம் வரியல்ல என்று நீதி மன்றம்
தீர்ப்பளித்திருக்கிறது என்று எடுத்துக் காட்டினார்கள். அதை சட்ட அமைச்
சரவர்களும் ஏற்று சுட்டிக்காட்டி, அதன் உண்மையைச் சொன்னார்கள்.
அரசாங்கத்திடம் வந்து, அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அரசாங்க அனுமதி
யோடு சில நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமென்பதற்காக அளிக்கப்படுவது
லைசென்ஸ் கட்டணம். அது இரண்டு ரூபாயாக இருந்ததை 20 ரூபாயாக
ஆக்கி, இப்போது மீண்டும் அந்தத் தொகையை 75 ரூபாயாக்கி இருப்பதைப்
பார்க்கும்போது, அரசாங்கம் அதை வருவாயாகத்தான் கருதுகிறதென்பது
தெரிகிறது. ஒரு நிகழ்ச்சியை நடத்த, அரசாங்கத்திற்குத் தெரிவித்து, அதை
நடத்துவதற்கு லைசென்ஸ கட்டணம் என்று வைத்துக்கொள்ளாமல், அரசுக்கு
வருமானம் கிடைக்கிற வகையில் அந்தக் கட்டணத்தை மாற்றும்போது, அது
வருமானம்தான். அரசாங்கத்தின் அறிவோடு, அரசாங்கத்தின் அனுமதியோடு
நடக்கக்கூடிய செயலுக்கு அளிக்கப்படும் கட்டணத்தைத்தான் லைசென்ஸ்
கட்டணம் என்று சொல்லுகிறோம். ஆனால் லைசென்சையே வரியாக
மாற்றும் பெருமை இந்த அரசுக்கு இருக்கலாம். எனவே அந்த வரை
யறைக்குள் இது வர வேண்டுமென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், பொருட்காட்சிகளிலே ஆபாச நடனங்களைத் தடுப்பதற்கு
இந்த அரசாங்கம் முயற்சி எடுப்பதுபோல ஒரு மாயையே உருவாக்குகிறது.
என்னிடத்தில் கேட்டால், ஆபாசம் என்ன என்பதை முதலில் வரையறை





செய்ய வேண்டும், பிறகு அதைத் தடை செய்ய வேண்டும். உண்மையிலேயே
ஆபாசத்தைத் தடுப்பதற்கு அரசு முனைவதாக இருந்தால், அது இந்த அரசின்
உண்மையான நோக்கமாக இருந்தால், எது எது ஆபாசம் என்று முதலில்
வரையறுத்து, அவைகளைத் தடை செய்ய வேண்டும். பொருட்காட்சிகளுக்குப்
பொறுப்பேற்று யார் நடத்தினாலும், ஆபாச நடனங்களை அங்கே
நடத்தினால், அவர்கள் கைது செய்யப்பட்டு, கிரிமினல் சட்டப்படி தண்டிக்கப்
பட வேண்டும். ஆனால் இப்போது ஆபாசத்தை நடத்துவதற்கு செக்யூரிட்டி
கட்டணத்தை உயர்த்துகிறார்கள். கட்டணத்தை மேலும் கூட்டுவதால்,
ஆபாசத்தை நன்றாக நடத்தலாமென்ற நிலைதான் ஏற்படும். எனவே
இதனால் ஆபாசத்தை மேலும் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறார்களென்ற
குற்றச்சாட்டை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது தனியார் துறையில்
பொருட்காட்சிகளை நடத்தக்கூடாதென்று சட்டம் போட்டார்கள். அது
எனக்கு நன்றாக நினைவிற்கு இருக்கிறது. சவுத் இந்தியன் அத்லெட்டிக்
அசோசியேஷன்—எஸ்.ஐ.ஏ.ஏ.—நடத்திக் கொண்டிருந்ததாகிய பொருட்
காட்சியை நடத்தக் கூடாது என்றும், ஒன்று அரசு நடத்த வேண்டும் அல்லது
அரசுப் பொறுப்பில் இருக்கக்கூடிய சுற்றுலா வாரியம் போன்றவைகள் நடத்த
வேண்டும் அல்லது குவாசி கவர்மென்ட்டாக இருக்கிற நகர மன்றங்கள் நடத்த
வேண்டுமென்றும், அந்த வருவாயை பொது சமுதாய நலப் பணிகளுக்குப்
பயன்படுத்த வேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணை
பிறப்பித்து, அதை அமுல்படுத்தியது. இந்த அரசு வந்த பிறகு தனியார்
களுக்கு, பொருட்காட்சி என்ற பெயரிலே ஆபாச நடனம் நடத்த வசதி
செய்து கொடுத்து, அவர்களிடத்திலிருந்து ஏராளமான தொகையை, அரசை
இயக்கிக் கொண்டிருக்கும் கட்சியினர் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.
கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவிலில், அங்கு இருக்கக்கூடிய
அ.தி.மு.க. பொறுப்பாளருடைய பேராதரவில், நாகராசா திடலில் பல
நாட்களாக பொருட்காட்சி என்ற பெயரால், ஆபாச நடனம் நடந்து
வருகிறது. பொது மக்கள் கண்டனக் கூட்டம் போட்டும், அங்கு இருக்கக்
கூடிய அ.தி.மு.க.-வைச் சேர்ந்த, ஆனால் அந்த அமைப்பாளரைப் பிடிக்காத
மற்ற தலைவர்கள் இந்த நடனம் நடக்கக்கூடாதென்று தந்தி கொடுத்தும்,
அதைத் தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டது. அதைத் தடை
செய்திருந்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு. ஆனால் இப்போது இந்த
அரசு அதைத் திறந்து விட்டிருக்கிறது. அதற்குப் பிறகு சென்னை நகரில்
மாத்திரம் ஆபாச நடனத்திற்கான ரேட்டைக் கூட்டியிருக்கிறார்கள். பொருட்
காட்சிக்குச் செல்கிறவர்கள் ஆபாச நடனத்தையும் அனுபவிக்கிறார்கள்.
ஆபாச நடனத்திற்கு பல்வேறு இலக்கணங்கள் இருக்கலாம், அதில் கருத்து

வேறுபாடு இருக்கலாம். அதற்கு செக்யூரிட்டி கேட்கிறார்கள். அதையும் சேர்த்து சேட்டில் கூட்டப் போகிறார்கள். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவு மக்களை ஏமாற்றக் கொண்டு வந்த சட்ட முன்வடிவு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரிப் பொருட்காட்சிகளை ஒரேயடியாகத் தடை செய்தால், பொருட்காட்சிகளை நடத்த ஒருவரும் முன் வரமாட்டார்கள். சாதாரணமாக பொருட்காட்சிகள் விஞ்ஞான அறிவை வளர்க்கவும், மாணவர் களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை வழங்கவும் நடத்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நடத்தும் பணியை அரசு ஏற்றிருக்கிறது, கதர்வாரியம் ஏற்றிருக்கிறது, பல சமுதாய அமைப்புகள் ஏற்றிருக்கின்றன. இந்த நிலையில் தனியார் பொருட்காட்சிகளை நடத்து கிறார்களென்றால், லாபத்தைத் தேடித்தான். எனவே அவர்கள் படக்காட்சி, நடனம் அல்லது ஆபாச நடனம்—அதுதான் சாதாரண நடனமாயிற்றே— ஆகியவற்றை நடத்தாமல் போகக்கூடாது என்பதற்காக, அதற்கு ஒரு செக் யூரிட்டி என்று சொன்னவுடன், அந்த நடனம் இருக்கிறது என்பதுதான் பொருள். எனவே அப்படிப்பட்ட பொருட்காட்சிகளை நிரம்ப நடத்த இந்த அரசு ஊக்குவிக்கிறது என்று சொல்லி, அது தேவையில்லை என்றும் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவைப் பின்வலித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் என்னுடைய கருத்தோடு ஒன்றியவர்கள். இப்படிப்பட்ட ஆபாசம் தமிழ் நாட்டில் இருக்கக்கூடாதென்ற கருத்துடையவர்கள். அந்தக் கருத்து அவர்களுக்கு இருக்குமானால், இந்தச் சட்டத்தை மாற்றி, ஆபாச நடனத் தடைச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இந்த நாட்டில் உடை உடுத்துவதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுக்க வேண்டும். பொது மக்கள் கூடியிருக்கும் இடத்தில் ஆண்கள் இப்படி உடை அணிய வேண்டும், பெண்கள் இப்படி உடை அணிய வேண்டும் என்பதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டும். எனவே தேவையற்ற இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, நாட்டில் ஆபாசத்தைப் பெருக்காமல் இருக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் பெயராலே கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்களிடம் மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் பெருமதிப்பு உடையவர்கள். அவர் ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நான் வன்மையாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, Sir, I must at first extend my grateful thanks to the hon. Member Thiru K. S. Abdul Wahab for his very formidable support given to me in piloting this measure, particularly for his denunciation of obscenity which is so often a feature in these exhibitions.



I am very glad to notice that the hon. Member went to the extent
of suggesting the imposition of security of Rs. 10,000 which should
be forfeited on the display of any scenes of obscenity. He further
pleaded for total prohibition of gambling inside these exhibitions
and he did not spare even Five Star Hotels from the range of his
attack. I must express my hearty thanks for his kind support to me
in piloting this measure and particularly in commending and
appreciating the objective of the Government in piloting this
measure.

Thiru Ramamoorthy made mention about the vagueness of the
word 'obscenity' and in a similar way, the hon. the Leader of the
Opposition was mentioning about the difficulties for any authority
in arriving at a conclusion on the question of obscenity. I myself
appreciate the difficulties in coming to a conclusion whether a parti-
cular scene enacted in an exhibition is obscene or not. I have given
some thought to this and, therefore, I would like to express it in
this fashion. There are dances performed in exhibitions wherein
a woman strips her dress one by one and she presents herself in
naked beauty and runs away from the scene. There can be no doubt
that obscenity has been displayed there. There will be no difficulty
here. Any public officer or public servant who witnesses such a
scene is bound to come to the right conclusion. When I say 'public
servant', I mean a public servant who discharges his function with
honesty and integrity.

(பிற்பகல் 6-20)

Therefore, in such cases, there would not be any difficulty for the
officer, to say " Well, this is a scene of obscenity which you have to
stop ; I am going to forfeit the security amount for you have violat-
ed the conditions of the licence ". There are bound to be a few
instances where dances like Bharata Natyam which comes to my
mind are performed and certainly such a performance would never
constitute an obscenity whatever. But, in between, there is a
twilight area which may be vague, ambivalent and indeterminate.
On the one side of the middle spectrum it may be verging on
obscenity and on the other side it may not be verging on obscenity
at all. This difficult area will always be there but in administering
laws one has got to encounter such difficulties. Even assuming an
elaborate definition is sought to be brought into the Act, it may
not be possible to define because it may not be so easy for one to
arrive at the conclusion of obscenity particularly in cases occurring
in the twilight area or middle-ground area.

The hon. Member Thiru Ramamoorthy was apprehensive whether this had got anything to do with the elections. I did not know that the election fever was on. But, for every legislative measure there seems to be almost a universal, may I say, tendency—I do not want to use the word malady—to tinge every part of a speech with election spirit. Obscenity has got nothing to do with elections and so, this measure has got nothing to do with elections. Has "Lady Chatterley's Lover" got anything to do with Indian elections? This Bill also has got that much to do with the coming elections.

I am grateful to the hon. the Leader of the Opposition for his unusual kind of gracious reference to me. I was really moved when he mentioned about my friendship with late Amarar Anna which ripened almost into a spiritual brotherhood. I wish that Amarar Anna were here for us to hear how unrelentingly he would have been championing the cause which I am now actually propounding before this House in respect of the prevention of obscenity for which a security deposit is contemplated in the Bill.

There are bound to be some lapses in regard to administration of laws. There has been section 302, Indian Penal Code to punish the murderers but are there not murders going on even now? Just because there is a penal provision to punish a particular crime or for a lapse from the normal morality, things do not stop there. They do occur and they do recur. That is human nature. As long as human nature has its failings, human nature conceives of getting over the laws and other things. So, there are bound to be lapses and transgressions of the laws of the land. They do not immediately cease to function and appear on the scene but they do continue to appear. Human mind and human genius can only work for the purpose of eradicating them or lessening the evil as much as possible. Are there not thefts going on? Macaulay legislated as early as in 1861 but still they are going on. Every day we see a number of thieves being hauled up one after another before the Courts. Therefore, there is no question of lessening or eradicating or removing this evil completely. The evil is bound to persist, because it is monetarily so profitable for the man who organises these exhibitions.

In fact, I am bound to recall to this House that one Member in the other House stated that these people practically made so much money that they would allow this small security to be forfeited,, and that there must be a stiff and high security amount which should act as a deterrent so that those men would not take the risk of exhibiting such indecent and obscene dances in exhibitions in this State.



Although this has no relevance to the debate on the present Bill on the anvil, I must respectfully submit to this House, by reason of my personal regard and respect for the hon. the Leader of the Opposition, that the licence fee can never be magnified into tax. That position is accepted and that has been reiterated by the hon. the Leader of the Opposition himself. This could not be brought into any Revenue Account for the simple reason that it is not revenue derived from tax but it is only a licence fee and it will be varying from time to time according to the number of applications that come up before the Licensing Authorities. It is only later on at the end of the year, that the total licence fee collected by the authorities will become revenue for the Government. The rate of Rs. 2 was fixed in 1888 and it was raised some time back to Rs. 20. Have we not travelled some distance from 1888? Are we to be content with the same licence fee? In the other Metropolitan Cities, viz., Bombay and Calcutta where also the City Police Act, similar to the Madras City Police Act, is in force, the rates have been increased. Therefore, naturally, the authorities sought to draw comparison from the rates prevailing in Bombay and Calcutta and they made out a case for increase in the licence fees which is subject to the maximum of Rs. 75. That does not mean that a fee of Rs. 75 will necessarily be imposed. I would like to give this assurance that the fee of Rs. 75 will not necessarily be fixed for all kinds of licences and permissions.

Mr. Deputy Chairman, I again express my respectful concurrence with the view of the hon. the Leader of the Opposition and I wish to say that nobody can get away with the performance of indecent and obscene dances in the Exhibition, which is being held at Nagercoil. If the hon. the Leader of the Opposition gives me all the details, certainly the offender will not be beyond the arms of the law. The law will take care of his activities if he is not going to stop. The law requiring security will be applied with the same rigour and force and there will be no discriminatory treatment accorded to one person against another. I do not think any hon. Member has made any mistake between 'deposit' and 'fee'. Security deposit is security deposit and fee is quite a different thing.

(பிற்பகல் 6.30)

THIRU A. R. DAMODARAN: Sir, there is no question of licence fee in this Bill. 'Security Deposit' was what we were talking about. Even in the previous Bill where a licence fee is contemplated, the licence fees are brought in the Budget documents. Under every sub-

(Thiru A. R. Damodaran) [1979 நவம்பர் 9

head, we could know from the Budget documents the amount of licence fees collected. Even in respect of licence fees collected under the Madras City Police Act, we can find out the amount under the Head Police. I only mentioned that licence fee could not be considered to be a tax.

THE HON. THIRU K. NARAYANASWAMY: There is no difficulty about that. I suppose even the hon. the Leader of the Opposition has not made any mistake in respect of the terms 'security deposit' in this Bill and "licence fee" as contemplated in the other Bill.

திரு. ம. சங்கரலிங்கம்: எனக்கு ஒரு சிறு விளக்கம் தேவை. தனியார் பொருட்காட்சி நடத்த அரசு அனுமதிக்கிறதா? என்னுடைய பேச்சில் நான் சொல்கிறபோது சொன்னேன். தனியார் துறையிலே நடத்துவதற்கு அனுமதி யில்லை என்பதுதான் இதற்கு முந்திய அரசு எடுத்த நடவடிக்கை. இப்போது பொருட்காட்சிகளில் ஆபாச நடனங்களுக்கு ஒரு செக்யூரிட்டி இருப்பதால், தனியார் துறையிலே நடத்த அரசு அனுமதிக்கிறதா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: The very section says "at any time during the currency of any such licence, require any person". "Any person" would cover even an individual private person.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY: Sir, I move the amendment standing in my name, namely—

"In clause 3, sub-clause (1-A), delete the words 'and in such a case, no show cause notice is necessary'."

திரு. ம. சங்கரலிங்கம்: நான் வழிமொழிகிறேன்.



1979 நவம்பர் 9]

*திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் மிகவும் தேவையானது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்குப் பின்னர் அவர் இந்தத் திருத்தத்தை ஏற்பார் என்று நான் உறுதி யாக நம்புகிறேன். காரணம், மிகவும் தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்படும் என்று சொன் னார்கள். சட்ட முன்வடிவு ஏனென்று கூட தெரிவித்தார்கள். கொலை செய்பவர்களுக்கு மரண தண்டனை என்று சட்டம் இருந்தும் கூட, நாட்டிலே கொலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். திருடுவது குற்றம் என்று சட்டம் இருந்தும் கூட, கடும் தண்டனை இருந்தும் கூட, திருடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் போலவே இந்தச் சட்டமும் சில நேரங்களிலே மீறப்படலாம். அப்படி மீறப் படும்போது, இந்தச் சட்டம் அமுலில் இல்லையோ என்ற கேள்வியை எழுப்புவது எப்படி நியாயமாக இருக்கும் என்று கேட்டார்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தச் சட்ட மீறல் மறைவாக நடைபெறுகிறது அல்லது கண்டுபிடிக்க முடியாமல் போகிறது. ஆனால், இந்தச் சட்டத்தை மீறுவது என்பது, சட்டம் போட்டவர்களுடைய கண்ணெதிரிலேயே, நாட்டு மக்களுடைய கண்ணெதிரிலேயே அன்றாடம் மீறப்படுகின்ற நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே தான் சட்டம் இங்கே செயல்பட மறுக்கிறது. கொலை செய்பவன் தப்பித்துவிடுகிறான். ஆனால், இந்தச் சட்டத்தை மீறுபவன் செய்துகொண்டே இருக்கிறான். "It is a continuing process offence", தொடர்ந்து செய்துகொண்டேயிருக்கும் குற்றம் என்ற முறையிலே இருக்கிறது. இந்தச் சட்டம் அங்கே இயங்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. அதோடு மட்டுமல்ல, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்த வரையில், (Show Cause) விளக்கம் கோரி நோட்டீசுக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்சீனிட்டி, ஒழுங்கீனங்கள் அல்லது ஆபாசங்கள் நடத்துகின்றவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை என்பது இந்தச் சட்டத்தை மீறுகின்றபோது எடுக்கப்படும் நடவடிக்கையாகும். இந்தச் சட்டம் எப்போது இயங்குகிறது என்றால், இதற்குப் புறம்பான நடவடிக்கை களை நிகழ்த்தும்போது இயங்குகிறது. இந்தச் சட்டத்தை மீறிய பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது, 'ஷோகாஸ் நோட்டீஸ்' எங்கே வருகிறது? அங்கே தான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லிய ஒரு கருத்தை நான் வலியுறுத்துகிறேன். யாருக்குச் செல்வாக்கு இருக்கிறதோ அல்லது ஆளும் கட்சித் தாப்பினரோடு யாருக்குத் தொடர்பு இருக்கிறதோ அவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்த பிறகு, அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்பினை இந்தச் சட்டம் அளிக்கிறது. ஷோ-காஸ் நோட்டீஸ் என்பதே ஆபாச நடனம்

நடத்தியது ஆபாசமாக ஆகாதா என்ற விளக்கம் கேட்கத்தான். ஆபாசம் என்று கருதும் நிலையை, 'அப்சினிட்டி' என்ற நிலையை நாம் இன்னும் வரையறுக்கவில்லை. ஆனால் 'அப்சீனிட்டி' எதுவாக இருக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக்காட்டிச் சொன்னார்கள். 'இது ஆபாசம்' என்று எங்கேயாவது இருப்பவர்கள், அல்லது பார்க்கின்ற மக்கள், அல்லது பார்க்கின்ற அதிகாரிகள் தகவல் கொடுத்த பிறகு தான், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படித் தகவல் கொடுக்கப்பட்ட பிறகு, அதற்கு ஒரு 'ஷோக்காஸ் நோட்டீஸ்' கொடுத்து, அது ஆபாசமா இல்லையா என்று விளக்கம் தர ஒரு வாய்ப்புத் தந்து, அதற்குப் பிறகு ஆபாசமாக இருந்தால், டெப்பாசிட்டை (forfeit) பறிமுதல் செய்வது, (fine) அபராதம் போடுவது என்ற நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் அப்சினிட்டியைத் தொழிலாக வைத்திருப்பவர்களிடையே பாரபட்சம் காட்டுவதற்கு அல்லது அவர்கள் மூலமாக வேறுவகையானவர்கள் ஆதாயம் பெறுவதற்கு அல்லது அரசாங்கத் தரப்பிலே செல்வாக்கு வைத்திருக்கக்கூடியவர்கள் இந்த அப்சினிட்டியை மிகப் பெரிய தொழிலாக நடத்த வாய்ப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு இந்தச் சட்ட முன் வடிவே கைகொடுக்கின்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், 'அப்சினிட்டியைத் தடுக்க வேண்டும் என்பது அரசினுடைய நோக்கம்' என்று. அதிலே சந்தேகம் இடையாது. ஆனால், இந்தச் சட்டத்தின் பல்வேறு நிலைகளைப் பார்க்கும் போது, இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு அவர்களை விடக் கூடாது என்ற நிலையின் காரணமாக இந்த ஒரு வாக்கியத்தை "In such a case no show-cause notice is necessary" என்பதை விட்டுவிடுவதன் மூலம் நடவடிக்கை எடுத்தால் எடுத்ததுதான் என்ற நிலைமையைக் கொண்டு வரலாம். அது கொஞ்சம் கடுமையாக இருந்தாலும்கூட, இந்தச் சட்டம் முறையாக செயல்பட வழி வகுக்கும் என்பதைச் சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY. The very object of taking immediate and effective and deterrent action, which the hon. Member Thiru Ramamoorthy pleads for, is sought to be achieved by this Bill. Actually, we have gone to the extent of saying "the Commissioner may, at any time and for reasons to be recorded in writing, suspend any licence granted under this Act and in such a case, no show cause notice is necessary". So, the very object is achieved. If the licence is still there, the exhibitionist can enact on the next day also but when once the licence is



suspended, he cannot do that. The process of issuing a show cause notice will take some time and it will result in dilatoriness. Therefore, the action would be effective and deterrent if no show cause notice is necessary. His licence can be suspended in addition to forfeiture of the security deposit. Therefore, it is conceived only for ensuring effective, deterrent and immediate action against the exhibitionist.

THIRU A. R. DAMODARAN: Sir, it is customary for the Hon. Minister to request the hon. Member to withdraw his amendment in which case, I think, the hon. Member may oblige.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I would certainly make one thousand requests to the hon. Member to withdraw his amendment.

THIRU K. RAMAMOORTHY: Sir, I must oblige the Hon. the Law Minister.

*திருத்தம், அவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.*

*பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

*பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.*

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I move—

"That the Madras City Police (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 51|1979), as passed by the Assembly, be passed."

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

*தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*

நடத்தியது ஆபாசமாக ஆகாதா என்ற விளக்கம் கேட்கத்தான், ஆபாசம் என்று கருதும் நிலையை, 'அப்சினிட்டி' என்ற நிலையை நாம் இன்னும் வரையறுக்கவில்லை. ஆனால் 'அப்சினிட்டி' எதுவாக இருக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோடிட்டுக்காட்டிச் சொன்னார்கள். 'இது ஆபாசம்' என்று எங்கேயாவது இருப்பவர்கள், அல்லது பார்க்கின்ற மக்கள், அல்லது பார்க்கின்ற அதிகாரிகள் தகவல் கொடுத்த பிறகு தான், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படித் தகவல் கொடுக்கப்பட்ட பிறகு, அதற்கு ஒரு 'ஷோக்காஸ் நோட்டீஸ்' கொடுத்து, அது ஆபாசமா இல்லையா என்று விளக்கம் தர ஒரு வாய்ப்புத் தந்து, அதற்குப் பிறகு ஆபாசமாக இருந் தால், டெப்பாசிட்டை (forfeit) பறிமுதல் செய்வது, (fine) அபராதம் போடுவது என்ற நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் அப்சினிட்டியைத் தொழிலாக வைத்திருப்பவர்களிடையே பாரபட்சம் காட்டுவதற்கு அல்லது அவர்கள் மூலமாக வேறுவகையானவர்கள் ஆதாயம் பெறுவதற்கு அல்லது அரசாங்கத் தரப்பிலே செல்வாக்கு வைத்திருக்கக்கூடியவர்கள் இந்த அப்சி னிட்டியை மிகப் பெரிய தொழிலாக நடத்த வாய்ப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு இந்தச் சட்ட முன் வடிவே கைகொடுக்கின்ற நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், 'அப்சினிட்டியைத் தடுக்க வேண்டும் என்பது அரசினுடைய நோக்கம்' என்று, அதிலே சந்தேகம் இடையாது. ஆனால், இந்தச் சட்டத்தின் பல்வேறு நிலைகளைப் பார்க்கும் போது, இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு அவர்களை விடக் கூடாது என்ற நிலையின் காரணமாக இந்த ஒரு வாக்கியத்தை "In such a case no show-cause notice is necessary" என்பதை விட்டுவிடுவதன் மூலம் நடவடிக்கை எடுத்தால் எடுத்ததுதான் என்ற நிலைமையைக் கொண்டு வரலாம். அது கொஞ்சம் கடுமையாக இருந்தாலும்கூட, இந்தச் சட்டம் முறையாக செயல்பட வழி வகுக்கும் என்பதைச் சொல்லி என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY . The very object of taking immediate and effective and deterrent action, which the hon. Member Thiru Ramamoorthy pleads for, is sought to be achieved by this Bill. Actually, we have gone to the extent of saying "the Commissioner may, at any time and for reasons to be recorded in writing, suspend any licence granted under this Act and in such a case, no show cause notice is necessary". So, the very object is achieved. If the licence is still there, the exhibitionist can enact on the next day also but when once the licence is





suspended, he cannot do that. The process of issuing a show cause notice will take some time and it will result in dilatoriness. Therefore, the action would be effective and deterrent if no show cause notice is necessary. His licence can be suspended in addition to forfeiture of the security deposit. Therefore, it is conceived only for ensuring effective, deterrent and immediate action against the exhibitionist.

THIRU A. R. DAMODARAN: Sir, it is customary for the Hon. Minister to request the hon. Member to withdraw his amendment in which case, I think, the hon. Member may oblige.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I would certainly make one thousand requests to the hon. Member to withdraw his amendment.

THIRU K. RAMAMOORTHY: Sir, I must oblige the Hon. the Law Minister.

திருத்தம், அவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I move—
"That the Madras City Police (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 51|1979), as passed by the Assembly, be passed."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்டமுன்வடிவு@ (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 6-40)

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்தின் வட பகுதியில் உள்ள சில இடங்கள் தமிழகத்தோடு இணைந்தபோது, ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்குமிடையே ஒரு (Border change) எல்லை மாற்றம் ஏற்பட்டு அதன் காரணமாக இரண்டிற்குமிடையே எல்லை வரை யறுக்கப்பட்டபோது ஏற்பட்ட சிக்கல் காரணமாக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்னுடைய அச்சமெல்லாம் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, ஏற்கெனவே இருந்த நிலைமை (regularise) முறைப்படுத்தப்படுகிறது என்றாலும், இந்தச் சட்ட முன்வடிவில்

"The standard rates of assessment were levied and collected up to the 30th June 1964 in certain villages in the added territories and thereafter the collection was discontinued.

@ 501-502 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.





* In certain other villages in the added territories the levy and collection was continued up to 30th June 1966. It is, however, proposed to give retrospective effect to the repeal of the Andhra Act from the 1st July 1964. As regards the collections made on and from the 1st July 1974 and up to the 30th June 1966 in certain villages, necessary administrative orders have already been issued by Government for adjusting them against the demands on account of land revenue."

என்றிருப்பதைப் பொறுத்தவரை பரவாயில்லை. ஆனால் இந்த வரையறைக்குள் வாராதவர்களைப் பொறுத்தவரையில, இந்தச் சட்டத்தின் காரணமாக பழைய பாக்கிகளை புதிதாகச் செலுத்த வேண்டி வந்துவிடுமோ என்ற சந்தேகம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்ற உத்தரவாதத்தை அமைச்சர் அவர்கள் தந்தால், இந்தச் சட்ட முன்வடிவின் மீது வேறு விவாதமே தேவையில்லை என்று கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக்கிய பிறகு இதன் விளைவாக சிலவற்றை அரசு முறைப் படுத்திக் கொண்டாலும், இந்தச் சட்டத்திற்குள் அடங்குகிற மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் மீது கடந்த கால பாக்கிக்காக புதிதாக வரி செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படித் தருவாரானால், இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்க முடியும் என்று கூறி அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் தமிழகத்தில் உள்ள நிலவரி முறையை ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர்ந்த பகுதி களுக்கும் விஸ்தரித்துவிட்டு, ஆந்திர மாநிலத்தின் நிலவரிச் சட்டத்தைப் பின்வலிப்பது என்று இருக்கிறது. 1956-ல் ஆந்திரத்திலிருந்து ஒரு பகுதியும், கேரளத்திலிருந்து ஒரு பகுதியும் தமிழகத்தோடு சேர்ந்தன. சேர்ந்த பகுதிகள் மிகச் சிறிய பரப்புள்ளவை என்பதாலும், தமிழ் நாடு பரப்பளவில் மிகப் பரந்தது என்பதாலும், தமிழகத்தின் வரிவிதிப்பு முறைகளைத்தான் அங்கே அமுல்படுத்த வேண்டும் என்று எண்ணாமல், அந்தப் பகுதிகளில் அமுலில் இருக்கும் நல்ல வரிவிதிப்பு முறைகளை நாம் ஏற்றுக்கொள்கிற முறையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 9

ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். கேரளா மாநிலத்தி
லிருந்து கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர்ந்தபோது, அங்கே
இருந்த நிலவரி விதிப்பு முறையும் அங்கே இருந்த நில ரெக்கார்டுகள் வைக்
கின்ற முறையும் தமிழகத்தில் இருக்கின்ற முறையைவிட எவ்வளவோ சாலச்
சிறந்ததாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதற்குக்
காரணம், அப்போது சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் கேரளாத்தில்
திருவாங்கூர்—கொச்சின் திவானாக இருந்து, மிகத் திறமையாக அந்த நிலவரி
விதிப்பு முறைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். குறிப்பாக நெல்
விவசாயம் செய்கிறவர்களுக்கு அடிப்படை வரியைப் போட்டு மற்றவர்களுக்கு
வரியை அதிகமாக வைத்திருந்தார்கள். உதாரணமாக தமிழகத்தில் 2
போகம் நெல் பயிரிடும் விவசாயிக்கு ரூ. 100-க்கு மேல் வரி விதிக்கிற
நிலைமையை வைத்திருக்கிறோம். இரண்டு போகம் தனது நிலத்தில் நெல்
பயிரிடும் விவசாயிகள் மிகக் குறைவு. அதற்குக் காரணம் அப்படிப் பயிர்
செய்யும் விவசாயிக்கு வருவாய் மிகக் குறைவு. ஒரு 15 ஏக்கர்
நிலத்தை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு விவசாயி தொடர்ந்து
அதில் 2 போகம் நெல் பயிரிட்டால், மிக விரைவிலேயே
அந்த 15 ஏக்கர் நிலத்தையும் விற்று கடனைக் கொடுத்து
விட்டு சென்னையில் குடிசையில் வந்து வாழ்கிற நிலையில்தான் இருக்கிறார்.
ஆனால் இந்த நிலைமையை இந்த ஆட்சி அமைப்பில் இருக்கிறவர்கள் இன்று
வரை உணர முடியவில்லை. ஆனால் 1942 ஆம் ஆண்டிலேயே இந்த நாடு
சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே சர் சி. பி. இராமசாமி ஐயர்
அவர்கள் உணர்ந்து திருவாங்கூர்—கொச்சியில் நெல் விவசாயம் செய்கிற
விவசாய மக்களுக்கு மிகக் குறைவான வரி விதிப்பைப் போட்டார்கள்.
அதாவது ஒரு செண்டுக்கு அங்கே இருக்கிற ஒரு காசு—14 அணா வரி
விதித்தார். ஆனால் தோட்டப் பயிர்களை ரப்பர், தேயிலை போன்ற
வியாபாரப் பொருள்களுக்கு அதிகமான வரியை விதித்தார்கள். அந்த
அளவுக்கு அவருடைய வரிவிதிப்பு முறை மிகச் சிறப்பாக இருந்தது.
தமிழகத்தில் இருக்கும் வரி விதிப்புமுறைதான் சிறந்தது என்ற அடிப்படை
யில் மற்றவர்களைக் கண்கொண்டும் பார்க்காமல், அடியோடு நமது முறை
யைப் புகுத்துவது என்பது சரியல்ல. நாங்கள் தமிழகத்தோடு சேர்ந்த
போது, இதைப் பலமுறை இங்கே எடுத்துச் சொன்னோம். அதற்கு அப்
போது ஆட்சியில் இருந்தவர்கள் என்ன கேட்டார்கள் என்றால் "அப்படி
யானால் இங்கே ஏன் வந்தீர்கள்?" என்பதுதான். அப்போது காங்கிரஸ்
அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அப்படித்தான் கேட்



1979 நவம்பர் 9] [திரு. ம. சங்கரலிங்கம்]

டார்கள். அந்த முறைதான் இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள்
அங்கேயே இருப்பதுதானே என்று சட்டமன்றத்திலேயே கேட்ட பரிதாபமான
நிலை இருந்தது.

இன்றையதினம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
இவ்வாறு மாற்றப்பட்ட பகுதிகளுக்கு ஏற்கெனவே அமுலில் இருந்த ஆந்திர
வரிவிதிப்பு முறையை மாற்றி தமிழகத்தின் வரிவிதிப்பு முறையை விஸ்தரிப்
பதை நான் வரவேற்கிறேன். ஆனால் தமிழக நெல் விவசாயிகளுடைய
நிலங்களுக்கு வரி விதிக்கிற முறையை மாற்றியமைக்க வேண்டும் என்று
இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக இரு
போகம் நெல் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு குறைந்த பட்ச வரி இருக்கும்
படியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்பு
கிறேன். இந்தக் கருத்து இந்தச் சட்ட முன்வடிவிற்குத் தொடர்பில்லை
என்றாலும் இதை அரசுக்கு உணர்த்த வேண்டியது என்னுடைய கடமை
என்று தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இது
எப்போதோ வந்து நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதற்கு
முன்னாலே வந்த அரசு அல்லது அரசுகள் இதைச் செய்யாமல் விட்டுவிட்
டார்கள் என்பதால், அவர்கள் செய்யாமல் விட்டுப் போனதை நடைமுறைப்
படுத்தவே நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோமே
தவிர, புதிதாக நாங்கள் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வரவில்லை என்
பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு நாடு என்றால், அந்த நாடு முழுவதும் ஒரே மாதிரியான வரிவிதிப்பு
முறைதான் இருக்க வேண்டும். பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமான
வரிவிதிப்பு முறைகள் இருக்கக்கூடாது. ஒரு மாநிலம் என்றால், அந்த
மாநில எல்லை முழுவதுமே அந்த மாநில வரிவிதிப்பு முறைதான் இருக்க
வேண்டுமே தவிர, அண்டை மாநிலத்தில் இருக்கும் வரிவிதிப்பு முறை சில
பகுதிகளில் அமுல் செய்யப்படுவது என்ற நிலை இருக்கக்கூடாது. ஆனால்
தமிழகத்தின் சில மாற்றப்பட்ட பகுதிகளில் என்ன நடந்தது என்றால்,
ஆந்திரத்திலிருந்து தமிழகத்தோடு வந்து சேர்ந்த பகுதிகளில்
சில வருஷங்களுக்கு ஆந்திர வரியையும், தமிழ் நாட்டு வரியையும் சேர்த்து
வாங்கினார்கள். எப்படியோ அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்
எந்தச் சட்டத்தின் அடிப்படையில் அவர் அப்படிச் செய்தாரோ தெரியாது—
யார் சொல்லி அப்படிச் செய்தாரோ தெரியாது—இரண்டு வகைகளும் வரி

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 9

வாங்கி விட்டார். ஆனால் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே இந்த முறை கைவிடப்பட்டது. ஏற்கெனவே வாங்கியதை சட்டப்படி ஒன்றும் செய்ய முடியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். அவருக்கு சந்தேகம் வரத் தேவை யில்லை. நில வரியின் மூலமாக அரசாங்கத்திற்கு அதிகமாக வருமானம் வரப் போவதில்லை. இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்கான காரணம் ஏற்கெனவே நடைபெற்றுவிட்ட ஒன்றை முறைப்படுத்த வேண்டும், ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதுதான். இரண்டு மாநிலங்கள் சட்டப்படியும் வரியை வசூல் செய்து கொண்டிருக்கிறபோது, ஆந்திரச் சட்டப்படி வசூல் செய்யப்பட்ட பணத்தை பின் வரும் பசலி ஆண்டுகளுக்கு வரவு வைத்துக் கொள்வது என்று அரசு முதலில் உத்தரவு போட்டது.

தற்போது ஆந்திரச் சட்டத்தை நீக்கிவிட வேண்டும் என்பதுதான் இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கம். 1963 ஆம் ஆண்டிலிருந்து ஒரு சட்டம் வந்து, அந்தச் சட்டப்படிதான் தற்போது எல்லா வரிவிதிப்பும் செய்யப்படுகிறது. ஆந்திரச் சட்டத்தை எடுப்பது மட்டும்தான் இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கம், வேறு ஒன்றுமில்லை என்று சொல்லி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு இந்த விளக்கம் போதும் என்று கருதுகிறேன். இன்னும் அதிகமாக வேண்டுமென்றாலும், விளக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுகிறேன்.

(பிற்பகல் 6-50)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



1979 நவம்பர் 9]

பிரிவு 1.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்துகளுக்குப் பிறகு என்னுடைய திருத்தத்திற்கு அவசியமில்லை என்று கருதுவதால், திருத்தத்தை முன்மொழிய விரும்பவில்லை.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் என் 48/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

---

@. 502 . ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது

[1979 நவம்பர் 9

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1979) ஆய்ந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்கிறேன். ஆதரிக்கும்போது என்னுடைய நோக்கத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையிலும் உபரி நிலத்திலிருந்து விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்று இருப்பதால், நடைமுறையில் அது 15 ஏக்கர் வரையிலும் போவதால், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை, நஞ்சையாக இருந்தால் அதற்கு ஒன்றரை சாதாரண ஏக்கர் என்றும், புஞ்சையாக இருந்தால் 3 சாதாரண ஏக்கர் என்றும் குறைக்கிறார்கள். இதனால் மேலும் அதிகமான நபர்களுக்குக் கொடுக்கலாம் என்பது வாஸ்தவம்தான். ஆனால் இந்தியாவில் நில உச்சவரம்புச் சட்டம் என்பது நடைமுறையிலே பெரிய மோசடியாக இருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. பேராசிரியர் மகலநோபிஸ், 1956 ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கு ஓர் அறிக்கையைக் கொடுத்தபோது, அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்த நிலஉச்சவரம்புச் சட்டத்தின்படி இந்தியாவிலே 6 கோடி ஏக்கர் உபரியாகக் கிடைக்குமென்றும், அந்நிலங்கள் நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் என்றும் கூறினார்கள். பின்னால் அது 4 கோடி ஏக்கர்களாக இருக்கிறது என்று கணக்குச் சொன்னார்கள். கடைசியில் மத்திய அரசு 1976-ஆம் ஆண்டில் ஆய்வு நடத்தி ஒரு கணக்கை வெளியிட்டிருக்கிறார்கள். நாடு பூராவும் உள்ள மாநில அரசுகள் தங்களுடைய நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக உபரியாக உள்ள நிலங்கள் 40 இலட்சம் ஏக்கர்கள்தான் என்று கண்டுபிடித்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் 6 கோடி ஏக்கர் என்று சொல்லி, 20 ஆண்டுக் காலம் நில உச்சவரம்புச் சட்டத்தை அமுல் நடத்திய பிறகு, 40 இலட்சம் ஏக்கர்கள் தான் உபரியாக உள்ளன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலும் கையகப்படுத்தியது 20 இலட்சம் ஏக்கர்கள் என்றும், விநியோகம் செய்யப்பட்டது 12 இலட்சம் ஏக்கர்கள்தான் என்றும் 1976 ஆம் ஆண்டில் மத்திய அரசினர் ஒரு கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள்.





நாடு பூராவும் நில உச்சவரம்புச் சட்டம் இப்படி மோசடியாய்ப் போய், 20 ஆண்டுகள் நில உச்சவரம்புச் சட்டத்தை அமுல் நடத்திய பிறகும், நிலப் பிரபுக்கள், நிலச்சுவான்தார்கள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த முறையில் சட்டங்களைப் போட்டுப் பிரயோஜனம் இல்லை. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பினாமியாக இருக்கின்றன. பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்கப் போகிறோம் என்று தமிழக அரசில் சொல்லுகிறார்கள். அதற்காக என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்க அரசு முயற்சி செய்யும்போது, விவசாயிகளும் அரசுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அரசு வேண்டுகோளை விடுக்க வேண்டும். கிராமப்புறங்களில் இயங்குகிற விவசாயிகள் சங்கத்தின் ஒத்துழைப்போடு யார் யாரிடம் பினாமி நிலங்கள் பாவிக்கிடக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அப்போதைக்கப்போது பேசப்பட்டு விட்டுவிடுகிற பிரச்சினையல்ல இது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலொழிய, தமிழ் நாட்டில் எந்த விதமான தொழில் விவசாய வளர்ச்சியையும் ஏற்படுத்த முடியாது என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, பினாமி நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Mr. Deputy Chairman, I think this Bill is really a ceiling measure to bring down the area of land that could be given to a cultivating tenant both under section 94 (2) as well as under various rules that have been framed because the Hon. Minister has stated here that instead of allotting up to a maximum of 5 standard acres to cultivating tenants under section 60 of the Act or up to a maximum of 3 standard acres to those who are dispossessed, 3 ordinary acres of dry land or 1½ ordinary acres of wet land could be allotted. I take it that the object of this Government is to bring down the ceiling from 3 standard acres to acres of dry land or 1½ acres of wet land. So, this is really a ceiling measure for cultivating tenants who are to be assigned lands. In pursuance of this objective, may I first point out that it strikes me as very odd, particularly when the declaration has been given in this Bill mentioning about the Directive Principles of the Constitution and in particular clauses (*b*) and (*c*) of Article 39 and Article 46 of the Constitution? Article 39, clauses (*b*) and (*c*), refer to two things, namely, that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good and that the operation of the economic

system does not result in the concentration of wealth and means of production to the common detriment. I think it is a very novel definition of the Hon. Minister to state the declaration in this Bill. A cultivating tenant has been given the power to hold 5 standard acres and it is according to the Cultivating Tenants Act and the Hon. Minister has not gone into that aspect. According to the Land Ceiling Act, in the disposal of surplus lands, it seems rather strange that a ceiling of 3 ordinary acres of dry land and 1½ ordinary acres of wet land has been fixed in section 94 (2) of the Act. The Hon. Minister feels that this will be a concentration of economic power and wealth and, therefore, he is bringing this measure of fixation of ceiling. While I am aware of the fact that directive principles in Article 39(*b*) and (*c*) have to be quoted, had to be quoted, had to be quoted in the past Land Reforms Legislation and while I am also aware of the fact that in the Ninth Schedule we have 16 amendments to the Land Reforms Act which have been passed and which, therefore, could not be questioned as conflicting with the Fundamental Rights and while I am aware of the fact that an amendment to the Land Reforms Act cannot automatically go into the Ninth Schedule without the approval of Parliament, I still think that it is stretching the imagination a little too far to say that the giving of 5 acres to a tenant will be concentration of economic power and wealth. I only wanted to mention that there was a tendency for the Government to quote these directive principles in season and out of season to justify every expropriatory measure they brought forth before the House. I think it will not stand scrutiny if they quote Article 39 (*b*) and (*c*) in this case. However, I only wanted to mention that it was hardly necessary to quote them in this case, since in the disposal of surplus lands the Hon. Minister might have stated that by this ceiling, the available 20 or 30 thousand acres could be distributed to 40 or 50 thousand people instead of only to 20,000 people. From the point of view of rule-of-thumb that more people would benefit, it is a very ideal solution. I will not refer to all the economic consequences of the fragmentation of land. But I would like to point out to the Hon. Minister, and here I am very serious, that I do not like his tampering with the definition of the 'standard acre' as laid down in the Land Reforms (Fixation of Ceiling) Act. The definition was made in clause 40 of the Land Reforms Bill. Four or five Select Committees have spent months together in trying to achieve a rational definition of the term 'standard acre'.



(பிற்பகல் 7-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் காலவரையறை நீட்டிக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN: It comes under different categories like the 'standard acre' in Kanyakumari district, the 'standard acre' in Shencottah taluk and the 'standard acre' in Tamil Nadu depending on the source of irrigation and the land revenue that is being charged. Months have been spent by officers of the Revenue Department and experts in the field of land reforms and Select Committees have gone into it. We have spent a lot of time in trying to get a good definition of 'standard acre'. When suddenly the Hon. Minister wants to amend section 94 (2) removing the concept of 'standard acre' and bringing it down to 'dry land' and 'wet land', all the contradictions that arose when we tried to define 'standard acre' arise in this definition also. He cannot equate 3 acres of dry land in Ramanathapuram district with 3 acres of dry land in Chingleput district or in South Arcot district where dry land is used for cultivation of sugarcane or for groundnut-cultivation. He cannot equate 1½ acres of wet land in Thanjavur district with 1 1/2 acres of wet land in Gingee taluk of South Arcot district. All sorts of anomalies and inconsistencies are likely to develop as a result of this new definition that he is seeking to give, only because he wants to please, say, 10,000 more tenants. It is a good idea but economically there is no justification at all for it. For this reason, even if he considers it necessary to alter the area, I would still request him to retain whatever he wants to give—3 acres of dry land or 1½ acres of wet land—in terms of standard acres. Let him say that the ceiling is reduced from 3 standard acres to 1 standard acre or 1½ standard acres so that it will remove any possible inconsistencies that may arise as a result of this alteration that he is making.

Sir, I presume that all lands that have already been acquired by Government and which have not yet been distributed to tenants are sought to be brought under the provisions of the new Act. But I have a fear that this may lead to a certain action being taken to recover land from tenants who may be holding more than the stipulated ceiling which the Hon. Minister has mentioned now. I am worried whether it may not mean that dispossession is going to take place even in the case of cultivating tenants who may be having more than the surplus. I am also worried whether new social

(Thiru A. R. Damodaran) [1979 நவம்பர் 9

tensions may not be created as a result of such dispossession. I would like the Hon. Minister to clarify whether this will take effect only in the future and whether this will not affect any cultivating tenant who is already in possession of land but who may not have acquired possession, legally speaking. We know the long time that it takes between an application under section 18 of the Act where Government acquires the land and the time when the land is assigned in favour of the tenant. This may mean dispossession and this would also cause hardship, I think, to some cultivating tenants who are already in possession of the land.

Sir, what the Hon. Minister is trying to do is this and Thiru Nallasivan has welcomed this Bill. One would have expected him to insist that the landless labour should be preferred to the cultivating tenant having only one acre of land at least. This is like saying that a worker of a factory drawing Rs. 700 per month should give up voluntarily Rs. 50 of his salary so that five other workers who are getting Rs. 100 per month can make it Rs. 150. What you are trying to do is to take the land from a very poor tenant and giving it to an even poorer tenant. I think the philosophy of ceiling does not apply to this case because the man who is already having 3 standard acres would, if he has not already been assigned this land, be forced to give up a portion of that, so that it may be given to poorer tenants. I hope the Hon. Minister will clarify because there is an element of doubt in my mind whether this will amount to dispossession of cultivating tenants who are already in possession of land and for whom title to the land has not yet passed. It may be three or four years since the lands have been cultivated by them after acquisition but the lands may not have been assigned to them. If it is so, it will cause tremendous hardship to the cultivating tenant who is going to be deprived of the land, i.e., the surplus.

Sir, one word more and I have done. Since this is an amendment to the Land Reforms Act, I would like to plead for another amendment which the Government can consider. Section 5 has clearly laid down that a public trust should not acquire any agricultural land even for the purpose of starting a Hospital or a school. Section 73 removed the power of the Government to grant exemption to any public trust to purchase even one acre of agricultural land. Consequently we are facing genuine difficulties. Those of us who have got public trusts and who want to start hospitals or



1979 நவம்பர் 9] (Thiru A. R. Damodaran)

schools, are unable to buy even one acre of land which has been classified as agricultural land ever since the 1974 Act was passed. I would request the Hon. Minister not to grant a blanket permission but to retain the power of the Government to grant exemption to such public trusts to purchase the stipulated 5 acres or 10 acres for the purpose of starting a school or a hospital. In many of the district areas, we are unable to do this. I only wanted to make this suggestion because, if the Hon. Minister is likely to come up with some legislation during the Budget session, I would like him to consider an amendment of section 73 and section 5 where it has been clearly laid down that in future no public trust can acquire any land for any purpose whatsoever. I think it requires re-thinking. I have made this appeal and I wrote when President's rule was here and requested the Advisers to accomplish this but it could not be done as such action would have been misunderstood. I request the present Government to consider this.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை 12—11—1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

## இணைப்பு I

[455 ஆம் பக்கத்தில் இனம் 5(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 43 of 1979. As passed by the Assembly.

*A Bill further to amend the Madras City Police Act, 1888.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

(1) *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Police (Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 77, Tamil Nadu Act III of* 1888.—In section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888), for the words "twenty rupees", the words "seventy ive rupees" shall be substituted.

tensions may not be created as a result of such dispossession. I would like the Hon. Minister to clarify whether this will take effect only in the future and whether this will not affect any cultivating tenant who is already in possession of land but who may not have acquired possession, legally speaking. We know the long time that it takes between an application under section 18 of the Act where Government acquires the land and the time when the land is assigned in favour of the tenant. This may mean dispossession and this would also cause hardship, I think, to some cultivating tenants who are already in possession of the land.

Sir, what the Hon. Minister is trying to do is this and Thiru Nallasivan has welcomed this Bill. One would have expected him to insist that the landless labour should be preferred to the cultivating tenant having only one acre of land at least. This is like saying that a worker of a factory drawing Rs. 700 per month should give up voluntarily Rs. 50 of his salary so that five other workers who are getting Rs. 100 per month can make it Rs. 150. What you are trying to do is to take the land from a very poor tenant and giving it to an even poorer tenant. I think the philosophy of ceiling does not apply to this case because the man who is already having 3 standard acres would, if he has not already been assigned this land, be forced to give up a portion of that, so that it may be given to poorer tenants. I hope the Hon. Minister will clarify because there is an element of doubt in my mind whether this will amount to dispossession of cultivating tenants who are already in possession of land and for whom title to the land has not yet passed. It may be three or four years since the lands have been cultivated by them after acquisition but the lands may not have been assigned to them. If it is so, it will cause tremendous hardship to the cultivating tenant who is going to be deprived of the land, i.e., the surplus.

Sir, one word more and I have done. Since this is an amendment to the Land Reforms Act, I would like to plead for another amendment which the Government can consider. Section 5 has clearly laid down that a public trust should not acquire any agricultural land even for the purpose of starting a Hospital or a school. Section 73 removed the power of the Government to grant exemption to any public trust to purchase even one acre of agricultural land. Consequently we are facing genuine difficulties. Those of us who have got public trusts and who want to start hospitals or



schools, are unable to buy even one acre of land which has been classified as agricultural land ever since the 1974 Act was passed. I would request the Hon. Minister not to grant a blanket permission but to retain the power of the Government to grant exemption to such public trusts to purchase the stipulated 5 acres or 10 acres for the purpose of starting a school or a hospital. In many of the district areas, we are unable to do this. I only wanted to make this suggestion because, if the Hon. Minister is likely to come up with some legislation during the Budget session, I would like him to consider an amendment of section 73 and section 5 where it has been clearly laid down that in future no public trust can acquire any land for any purpose whatsoever. I think it requires re-thinking. I have made this appeal and I wrote when President's rule was here and requested the Advisers to accomplish this but it could not be done as such action would have been misunderstood. I request the present Government to consider this.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை 12—11—1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-07)

## இணைப்பு I

[455 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 43 of 1979. As passed by the Assembly.

*A Bill further to amend the Madras City Police Act, 1888.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

(1) *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Police (Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 77, Tamil Nadu Act III of 1888.*—In section 77 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888), for the words "twenty rupees", the words "seventy five rupees" shall be substituted.

## இணைப்பு II

[473 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.

### L.A. BILL No. 51 OF 1979.

(As passed by the Assembly)

*A Bill further to amend the Madras City Police Act,* 1888

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras City Police (Second Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section* 34, *Tamil Nadu Act III of* 1888.—Section 34 of the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888) (hereinafter referred to as the principal Act) shall be renumbered as sub-section (1) of that section and—

(1) in sub-section (1) as so renumbered, in the proviso, for the words "in this section", the words "in this sub-section" shall be substituted;

(2) after sub-section (1) as so renumbered, the following sub-sections shall be added, namely:—

"(2) The Commissioner may, at the time of grant of a licence under sub-section (1) or at any time during the currency of any such licence, require any person, other than a local authority, applying for such licence or the holder of such licence, as the case may be, to deposit with the Commissioner in cash or in Government promissory notes such sum as may be prescribed, as security for the due observance of the conditions of the licence.

(3) Where there is breach or non-observance of the conditions of the licence granted under sub-section (1), the Commissioner may forfeit the security so deposited to the Government.

(4) The forfeiture of the deposit shall not be a bar for proceeding against the holder of the licence under the provisions of section 76."

who have got public ——



3. *Amendment of section* 76, *Tamil Nadu Act III of* 1888.—In section 76 of the principal Act, after sub-section (1), the following sub-section shall be inserted, namely:—

"(1-A) Notwithstanding anything contained in the proviso to sub-section (1) in so far as it relates to suspension of any licence granted under this Act, where a prima facie case has been made out, the Commissioner may, at any time and for reasons to be recorded in writing, suspend any licence granted under the Act and in such a case, no show cause notice is necessary."

## இணைப்பு III

[501-502 ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

[L.A. Bill No. 45 of 1979 (as passed by the Assembly.)]

*A Bill to repeal the Andhra Land Revenue Assessments (Standardization) Act,* 1956, *in its application to the added territories*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirieth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Andhra Land Revenue Assessments (Standardization) Repeal Act, 1979.

(2) It shall be deemed to have come into force on the 1st July 1964.

2. *Repeal of Andhra Act XXIX of* 1956.—The Andhra Land Revenue Assessments (Standardization) Act, 1956 (Andhra Act XXIX of 1956) (hereinafter referred to as the principal Act), in its application to the added territories, is hereby repealed.

*Explanation.*—For the purpose of this Act, "added territories" means the territories specified in the Schedule to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959).

3. *Savings.*—The Government shall be entitled to levy the current rates of assessment as defined in clause (i) of section 2 of the principal Act on all lands on which standard rates of assessment

were levied under the principal Act immediately before the date of the commencement of this Act; and accordingly,—

(a) the repeal of the principal Act by section 2 shall not affect the levy and collection of the current rates of assessment aforesaid; and

(b) the State Government or any officer or authority subordinate to them, shall continue to exercise, all the powers which they had immediately before the commencement of the principal Act in respect of matters relating to fixation, reduction, enhancement, cancellation or revision of assessments fixed under the settlement or re-settlement notification in force in the added territories.

## இணைப்பு IV

[493 ஆம் பக்கத்தில் இனம் 5 (4)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

[L.A. Bill No. 48 of 1979 (as passed by the Assembly).]

*A Bill furher to amend the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Act, 1979.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in Part IV, and in particular clauses (b) and (c) of Article 39 and Article 46 of the Constitution.

3. *Tamil Nadu Act 58 of 1961, as subsequently modified, to have effect subject to modifications.*—The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961), as subsequently modified, shall have effect as if, in sub-section (2) of section 94,—

(i) in clause (a), for the expression "three standard acres", the expression "three acres of dry land or one and a half acres of wet land" had been substituted;

(ii) to clause (a), the following Explanation had been added, namely :—

"*Explanation.*—Where a person holds both dry and wet land, then, for the purpose of calculating the extent of his holding under this clause, one acre of wet land shall be deemed to be equal to two acres of dry land.".

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1979 நவம்பர் 12.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### I. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Power Cut*

*141 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that power cut has been imposed throughout Tamil Nadu, from March 1979 ;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken by the Government to avert such power cuts?

### மின் வெட்டு

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. த. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1979 மார்ச்சிலிருந்து, தமிழ்நாடு முழுவதும் மின்வெட்டு அமல் படுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில் அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) அத்தகைய மின்வெட்டுகள் ஏற்படாமல் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம். ஆனால் இந்த மின்சார வெட்டு 27—6—1979 முதல் நீக்கப்பட்டது.

(இ) இந்த மின்சார வெட்டு மின் இணைப்பின் திறனுக்கும் உச்சத் தேவைக்கும் இடையே உள்ள இடைவெளியைச் சரிப்படுத்த அமுல் செய்யப்பட்டது.

(உ) அனல் மின் நிலைய உற்பத்தித் திறனைப் பெருக்கவும் கேரளாவிலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் அதிக அளவு மின்சாரத்தைப் பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மார்ச் மாதத்தில் அமல்படுத்தப்பட்டு, மின்வெட்டு தளர்த்தப்பட்டிருக்கிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது மின்வெட்டு அமலில் இல்லாதபோதிலும், கிராமங்களில் தொடர்ந்து மின்சாரம் வருவதில்லை. அதைப் போலவே சென்னை நகரத்திலே 15 ஹார்ஸ் பவருக்கு மேலேயுள்ள சிறு தொழில்களுக்குக்கூட 8 மணி நேரத்திற்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்று அதிகாரிகள் வற்புறுத்துவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் மின்வெட்டு அமலில் இல்லை என்று சொல்லிக்கொண்டு, மறைமுகமாக மின்வெட்டை அமல்படுத்துவது ஏன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அன்றையில் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில்கூட நான் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். விவசாயத்திற்கு ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மின்சாரம் தந்தார்கள். இப்போது எல்லா நேரமும் அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாமென்ற உத்தரவை மின் வாரியம் பிறப்பித்திருக்கிறது. அதைப்போல சில தொழில் நிறுவனங்களுக்கு இரண்டு ஷிப்டுகள் என்று இருந்தது, மூன்று ஷிப்டுகள் என்று மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே மின் உச்சத் தேவை அதிகமாகியது. அதுவுமின்றி மின் உற்பத்தித் திறன் குறைந்துவிட்டது. தஞ்சையில் மழை பெய்ததால், மேட்டூரில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை. ஏனென்றால் நாம் தண்ணீரை விடுவதில்லை. எண்ணூரிலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நெய்வேலியில் உள்ள சுரங்கத்திலும் வெள்ளம் புகுந்த காரணத்தாலே, அவர்களும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியவில்லை. எனவே உற்பத்தி குறைவாகவும், உச்சத் தேவை அதிகமாகவும் ஆகிவிட்டதால், மின் வாரியம் அவதிக்குள்ளாகியிருக்கிறது. ஆகவே இந்த மின் துண்டிப்பு நடைபெறுகிறது. இதை முறைப்படுத்த வேண்டுமென்று மின் வாரியத்திற்கு அரசு சொல்லியுள்ளது.





**திரு. சி. இராமலிங்கம் :** நகராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த மின்சார பல்புகள் வாங்குவதென்ற காரியத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்குண்டா? நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவை, பல்புகள், மின்சாரக் கருவிகள் ஆகியவற்றை சூப்பர் மார்க்கெட்டிலிருந்துதான் வாங்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. வெளியிலே 2 ரூபாய்க்கு விற்கும் பல்பு, சூப்பர் மார்க்கெட்டில் 3 ரூபாய் 60 காசுகள் விற்கிறது. வெளியிலே 75 ரூபாய்க்குக் கிடைக்கும் மின்சார ஒயர், அங்கே 95 ரூபாய் என்று சொல்லுகிறார்கள். அங்கே விலை அதிகமாக இருக்கிறது. எனவே இந்தப் பணியை மின்சார வாரியமே ஏற்று, எல்லா இடங்களிலும் மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அரசாணையின்படி தெரு விளக்குகளை ஊராட்சி மன்றங்கள் பராமரிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் பராமரிக்க வேண்டுமென்பது குறித்து ஊராட்சித் துறையிலிருந்து ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இந்தப் பொறுப்பை மின் வாரியம் ஏற்றுக்கொண்டால், சிறப்பாக இருக்குமா என்பதைப் பரிசீலிப்பது ஒருபுறம் இருந்தாலும், மின் வாரியம் தன்னுடைய பராமரிப்பில் வைத்திருந்தபோது, தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை என்று மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும், சட்டமன்றத்திலும் குறை சொல்லப்பட்டு வந்தது. எனவே, இதில் எது சிறந்தது என்பதைப்பற்றி அரசு விரைவில் ஆராய்ந்து முடிவெடுக்கும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மின்வெட்டு என்பது தமிழகத்திற்குப் புதிதல்ல, ஆனால் மின் பற்றாக்குறை என்பதைத் தெரிந்து, அதை முன்கூட்டியே அரசு அறிவித்து, முறைப்படி அதை செயல்படச் செய்து, விவசாயிகளுக்குக் கொடுப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பது தெரியவில்லை. விவசாயிகளுக்கு மின்சாரம் முழுமையாகக் கொடுக்கப்பட்டுவிட்டதென்று சொல்லுகிறார்கள். ஆனால் தென் மாவட்டங்களில் விவசாயிகளுக்கு, குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் கொடுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த முடிவுகளை மின்வாரியம் மேற்கொண்டது. அரசுக்கு இந்தத் தகவல்கள் அனுப்பப்படவில்லை. 24 மணி நேரமும் மின்சாரம் தாராளம் என்று உத்தரவைப் போட்டுவிட்டார்கள். உச்சத் தேவை அதிகமாகி அதனால் உச்சத் தேவை அதிகமாகிவிட்டது.

விட்டதால், பல இடங்களில் திரள் திரள் என்று மின்சாரத்தைத் துண்டித்து விடவேண்டிய நிலை ஏற்பட்டது. எந்த விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் அந்த உத்தரவைப் போட்டார்களோ, அந்த விவசாயிகளே அந்த உத்தரவின் மூலம் பாதிக்கப்பட்டார்கள். மீண்டும் அந்தத் தடைகளைக் கொண்டு வந்தால் தான், விவசாயிகளுக்கும் நன்மை, மின் வாரியத்துக்கும் நல்லது என்று அரசு கருதியுள்ளது.

THIRU D. V. D'MONTE : Sir, a few months ago, the Government gave an assurance that small-scale industries would not be affected by any power cut. Nevertheless, a sort of *de facto* power cut exists not only in the Industrial Estates in Madras but elsewhere in the State. As a result there has been staggering and, in fact, some of the factories have been closed down. Will the Government give an assurance that at least small-scale industries will not be seriously affected by any power cut that may be imposed in future?

The HON. THIRU S. RAMACHANDRAN : There is a difference between power cut and load-shedding. What has happened in recent times is load-shedding and not power cut. Load-shedding results only when peak-demand increases more than the available capacity. Such a situation occurred last month owing to removal of restrictions in certain categories of load. This was brought to the notice of the Government and the Government have issued instructions to restore again those restrictions which obtained in certain categories of consumers. We now hope that the peak demand will be within the reach of the availability of energy. I can assure the House that, by this method, this happening of load-shedding, which I personally feel is the crudest form of regulation of power supply, will be put an end to.

திரு. பா. ரா. தாமஸ் : இத்தகைய மின் வெட்டு காரணமாக அநே நகரங்களில் மின்சாரத்தைப் பயன்படுத்தி குடிநீர் வழங்க முடியாத நிலை யில் பெருத்த தொல்லை ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக திண்டுக்க நகராட்சியில் மக்கள் தங்களுக்கு வேண்டிய குடிநீரை குடிநீர் தேக்க திலிருந்து பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். மின் வெட்டு காரணமா ஆத்தூர் தண்ணீர் தேக்கத்திலிருந்து இரவு 10 மணிக்கு, இரவு 12 மணிக்கு கூட மின்சாரம் இல்லாத காரணத்தால் மின் இயந்திரம் ஓடாமல் தண்ணீ தட்டுப்பாடு இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்க விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகைய காரணங்களுக்காக க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : உள்ளாட்சித் துறை மின்சார விளக்குகளைப் பராமரிக்கின்றது. அதனால் கிராமங்களில் பல்புகள் எரிய வில்லை. புதிதாகப் பொருத்துகின்ற பல்புகள் 3 நாள் கூட சரியாக எரிவ தில்லை. 'ஃபிட்டிங்' சரியான முறையில் செய்வதில்லை. கிராமங்களில் தெரு விளக்குகள் பஞ்சாயத்துக்களின் பராமரிப்பில் இருக்கின்றன. இந்த நிலையில் கிராமத்தில் பல்புகள் எரியவில்லையென்றால், மக்கள் யாரிடம் போய்ச் சொல் லுவார்கள்? நிர்வாக அதிகாரியை சென்று காண்பது மிகவும் கஷ்டமான காரியம். மின் வாரியமே இந்தப் பராமரிப்புப் பணியை மேற்கொண்டால், மிகவும் நல்லது. முன்பே நான் சொல்லிக்கொண்டிருந்தேன். அமைச்சர் அவர்கள் ஏதோ பண்ணியிருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் எவ்வளவு நாளைக்குள்ளாக உள்ளாட்சித் துறையிலிருந்து எடுத்து மின்வாரியம் அந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாதாரண விளக்குகள் எரிந்த காலமானாலும் சரி, மின்சார விளக்குகள் வந்துள்ள இந்தக் காலமானாலும் சரி, தெரு விளக்குகளை உள்ளாட்சி மன்றங்கள் தான் பராமரிக்க வேண்டும், எரிய வைக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற கருத்து வற்புறுத்தப் பட்டு உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் உள்ளாட்சி மன்றங்கள் பல விதமான கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கின்றன என்பதை உணர்ந்து மறுபடியும் அதை மின்சார வாரியம் எடுத்துக்கொள்ளலாமா என்பதுபற்றி ஆய்வு செய்யும்.

திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் : அந்தக் காலத்திலும் உள்ளாட்சி மன்றங்களும், பஞ்சாயத்துக்களும் தான் பராமரித்து வந்தன. அப்போதே நான் அதை ஆட்சேபித்தேன். பிறகு மின்வாரியம் நிர்வாகத்தை மேற் கொண்டது. அப்போதும் நிலைமை சரியாகவில்லை. பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பது என்றைக்கும் அரசு சொல்கிற சமாச்சாரம். எவ்வளவு நாளைக்குள் உள்ளாட்சித் துறையிலிருந்து எடுத்துக் கொள்வார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் அதைத் தான் முதலிலேயே சொன்னேன். மின் வாரியமே மேற்கொண்டபோதும் குறைகள் நீங்குவதாக இல்லை. அப்போதும் குறைகள் சொல்லப்பட்டன. பல்புகள் சரியாக எரிய

வில்லை, பல்புகள் தீய்ந்து போயிருக்கின்றன, பல்புகள் மாற்றப்படவில்லை, மின்சார வாரியம் சரியாக அக்கறை காட்டவில்லை என்றெல்லாம் உறுப்பினர்கள் சட்டமன்றத்தின் பெரியதை சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகளைப் பார்த்தாலேயே தெரியும். அப்போதும் ஏராளமான குறைகள் சொல்லப்பட்டன. ஆனால் அந்த அமைப்பின் குறைகள் குறைவு என்பதை ஆராய்ந்து பார்த்துத்தான் அதற்கேற்ப முடிவுகளை மேற்கொள்ள முடியும்.

## *Cutting More Mines in Neyveli*

* 142 Q.—THIRU C. R. LAKSHMIKANDHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have insisted on the Central Government to cut more mines in Neyveli in order to augment the thermal power; and

(*b*) if so, the details thereof?

### நெய்வேலியில் மேலும் சுரங்கங்களை வெட்டுதல்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அனல் மின்சக்தி உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு, நெய்வேலியில் மேலும் சுரங்கங்களை வெட்ட வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) இத்திட்டம், தமிழகத்தின் மின் தேவையைக் கணிசமான அளவுக்குச் சமன் செய்யத் தேவைப்படும் எனக்கருதி 1962 ஆம் ஆண்டிலிருந்தே மைய அரசை இவ்வரசு வலியுறுத்தி வந்திருக்கிறது.

தமிழ்நாட்டின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையிலும் இத்திட்டத்திற்கான அனுமதி தேவை என்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. 1973 நவம்பர் திங்களில் மீண்டும் இதை வலியுறுத்தி சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது மைய அரசுக்கு விரைந்து அனுப்பி வைக்கப்பட்டது.



நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டமும் அதனைச் சார்ந்த 3×21. மெ. வா. திறனுள்ள மின் நிலையமும் அமைக்க மைய அரசால் 22—2—1978 அன்று அனுமதி அளிக்கப்பட்டது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** பொதுவாக தமிழகத்தின் மின்சாரத் தேவையினுடைய அளவு என்ன ? அதை அனல் மின் சக்தியின் மூலமாக எந்த அளவுக்கு ஈடுகட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது ? நெய்வேலி அல்லாமல் வேறு ஏதாவது இடங்களிலும் அனல் மின் சக்தி நிலையங்கள் நிறுவுவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா ? ஆமெனில் அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தமிழகத்தினுடைய மின்சாரத் தேவை வளர்ந்து வருகிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. எவ்வளவு தேவை என்று நாம் குறிப்பிட்டு அறுதியிட்டுச் சொல்ல முடியாது. மின்சாரத் தேவையைச் சரிக்கட்டுவதற்காக நாம் ஏற்கெனவே பல திட்டங்களைப் போட்டு அவற்றை நிறைவேற்றி வருகின்றோம். அந்த வகையிலே 2,060 மெகாவாட் உற்பத்திக்காக இப்பொழுது நடைமுறையில் திட்டங்கள் இருக்கின்றன. மேலும் மத்திய அரசிடத்திலே 850 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட திட்டங்களுக்கு அனுமதியளிக்கக் கோரி திட்டங்களை அனுப்பி இருக்கின்றோம். குறிப்பாக அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரை, மேட்டூரில் ஒரு அனல் மின் திட்டம் தேவை என்று வற்புறுத்தி வருகிறோம். சென்னையில் இன்னொரு அனல் மின் திட்டம் தேவை என்று சொல்லி, அந்த அடிப்படையில் திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. க. இராமமூர்த்தி :** நெய்வேலித் திட்டத்திற்கு நாமே இடம் கொடுத்திருக்கின்றோம். நம்முடைய மாநில அரசு தொடர்பு கொண்டு திட்டங்கள் சுமுகமாக முடிக்கப்பட்டிருக்கின்றன. நாம் நிதியை அதில் போட்டிருக்கிறோம் என்கிற அடிப்படையில், நிர்வாகப் பொறுப்பும் பங்கும் மாநில அரசுக்கும் இருக்கிறது என்ற அடிப்படையில் அரசு முயற்சி செய்யுமா ? அதற்கான நடவடிக்கையை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** விளக்கமாகச் சொல்லவும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அதாவது நிர்வாகப் பொறுப்பிலே தமிழக அரசின் பிரதிநிதிகள் இடம் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஏற்கெனவே இருவர் இடம் பெற்றுள்ளனர்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : நெய்வேலி திட்டத்தை, தமிழக அரசின் [1979 நவம்பர் 12
திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள்.
தமிழக அரசின் முழுத் திட்ட வடிவையும் அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா ?
இல்லை, மாற்றம் ஏதாவது செய்திருக்கிறார்களா ? கோவையிலும் ஒரு
தெர்மல் பிளான்ட் ஏற்படுத்தப்படுமா ? தனியார் யாராவது அதை ஏற்படுத்த
முன்வந்தால், அதற்குரிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோவையில் நீர் மின் திட்டம்
ஏராளமாக இருப்பதால், அங்கே தெர்மல் பிளான்ட் தேவையில்லை. தனியார்
யாரும் அதை அமைக்க முன்வரமாட்டார்கள். நெய்வேலி அனல் மின்
உற்பத்தித் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தின் கீழ் உள்ளது
என்ற அடிப்படையில் அது அவர்களுடைய திட்டம் தான். தமிழக அரசு
அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. நெய்வேலி நிர்வாகம்
மத்திய அரசு நிர்வாகம். அவர்கள் எந்த அடிப்படையில் ஏற்படுத்த வேண்டு
மென்று விரும்பினார்களோ அந்த அடிப்படையில்தான் அது செய்யப்
பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : நெய்வேலி சுரங்கம் வெட்டுவது குறித்து
நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மின்சார அமைச்சர் திரு.
ச. இராமச்சந்திரன் அவர்களும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பா.
இராமச்சந்திரன் அவர்களும் உற்சாகம் காட்டினார்கள். மத்தியில் அமைச்சர்
பா. இராமச்சந்திரன் இல்லாததால் இப்பொழுது திட்டத்தை வேகமாக நிறை
வேற்றுவதில் ஏதாவது தடங்கல் இருக்கிறதா ? இல்லை, வேகமாக நடை
பெறுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்
தால் அனுமதி வழங்கப்பட்டு நெய்வேலியில் துவங்கப்பட்டது. நம்முடைய
குடியரசுத் தலைவர் அவர்கள்தான் வந்து துவக்கி வைத்தார்கள். மாநில
முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். மத்திய அரசினுடைய
ஒப்புதலையெல்லாம் ஏற்கெனவே பெற்று வைத்திருப்பதால், அந்தத் திட்டத்
திற்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. (சிரிப்பு)

(முற்பகல் 10-20)

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : நெய்வேலித் திட்டம் மத்திய அரசி
னுடைய திட்டம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
இதில் மாநில அரசின் பங்காக எதாவது முதலீடு செய்யப்பட்டிருக்கிறதா ?
இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தியாகின்ற மின்சாரம் எந்தெந்த மாவட்டங்
களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.



1979 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உற்பத்தி செய்யப்படுகின்ற
மின்சாரம் தமிழ் நாட்டினுடைய மொத்த 'கிரிடில்' சேர்க்கப்பட்டிருக்கிறது.
ஆகவே, இந்த மின்சாரம் எங்கே போய் பயன்படுத்தப்படுகிறது என்பதைச்
சொல்ல முடியாது. மத்திய அரசினுடைய முதலீட்டிலேதான் இந்த நெய்
வேலி மின்சக்தி நிலையம் துவங்கப்பட்டிருக்கிறது. மாநில அரசின் முதலீடு
எதுவும் இல்லை. நம்முடைய வற்புறுத்தலே மத்திய அரசு எவ்விதமான
முதலீட்டையும் தேவைப்படும் அளவுக்கு நம்முடைய மாநிலத்திலே செய்ய
வில்லை என்பதுதான். மற்ற வெளி மாநிலங்களிலே செய்கின்ற அளவுக்குச்
செய்யவில்லை என்பதுதான் நமது குறை. இந்தக் குறை நீண்டகாலமாக
இருந்துவருகிறது. நல்லவேளையாக கடந்த இரண்டாண்டு ஆட்சிக்காலத்
திலேதான் இந்தத் திட்டமாவது நமது மாநிலத்திற்குக் கிடைத்தது.

திரு. க. அறிவழகன் : மின்சாரத் தேவை அதிகமாகி வருவதால், அனல்
மின் சக்தி உற்பத்தியை அதிகமாகச் செய்ய வேண்டிய தேவை ஏற்படும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், இந்த
மின்சக்தித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு கல்பாக்கம் அணுமின் நிலையம்
எப்போது தன் உற்பத்தியைத் தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கல்பாக்கம் அணுமின் நிலையம்
எப்போது உற்பத்தியைத் தொடங்கும் என்பது யாருக்கும் தெரியவில்லை.
அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அணு மின் நிலையம் என்பதால்,
அதற்குத் தேவையான மூலப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டி
யிருக்கிறது. நாம் அணுகுண்டு சம்பந்தமாக எந்த அளவுக்கு முடிவுகளைக்
கையாளுகிறோமோ அதைப் பொறுத்துத் தான் நிலைமை இருக்கும்.
என்றைக்கு மத்திய அரசு தயார் என்று சொல்கிறார்களோ அதுவரையில்
இலவுகாத்த கிளியாகத்தான் நாம் இருக்க வேண்டும்.

## *Executive Officers of Temples.*

* 143 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government have received resolutions passed in the 7th and 8th Conferences by the General Body of the Tamil Nadu Temple Executive Officers Association ;

(*b*) if so, whether the Government have any proposal to create promotional opportunities for Executive Officers in Temples ; and

(*c*) if so, the stage at which the matter now stands ?

கோயில் நிர்வாக அதிகாரிகள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக திருக்கோயில் நிர்வாக அதிகாரிகள் சங்கத்தின் ஏழாவது, எட்டாவது மாநில மாநாடுகளில், அதன் பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், கோயில்களில் நிர்வாக அதிகாரிகளின் பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்குகிற செயல்திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(உ) ஆம் எனில், அது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) ஆம்.

(இ) கோயில்களில் செயல் அலுவலரின் பதவி உயர்வு வாய்ப்பை உருவாக்குகிற செயல் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

(உ) இது பற்றி மேலும் சில விவரங்கள் சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

**திரு. க. அறிவழகன் :** 'செயல் அலுவலர்கள்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 'செயல் அலுவலர்கள்' யார் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** 'செயல் அலுவலர்கள்' என்பவர்கள் 'எக்சிக்யூட்டிவ் ஆபீசர்'கள்.

**திரு. சி. இராமலிங்கம் :** கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக தமிழ்ப் புலவர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. பல தமிழ்ப் புலவர்கள் வயதாகியும் வேலையில்லாமல் வீட்டிலேயே இருக்கிறார்கள். ஆகவே . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்ப் புலவர்கள் மட்டுமல்ல, எல்லோருமே வயது ஆகிவிட்டால் வீட்டிலேதான் இருக்கவேண்டும்.

**திரு. சி. இராமலிங்கம் :** இந்தத் தமிழ்ப் புலவர்களை நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** 'நிர்வாக அலுவலர்கள்' என்பவர்கள் நிர்வாகத்திற்காகப் போடப்படுவார்கள். ஆகவே, அவர்கள் அதற்குரிய அடிப்படைத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, அப்படிப்பட்ட தகுதிகளைப் பெற்று மேலும் கூடுதல் தகுதியாக தமிழ்ப் புலமை பெற்றிருந்தால், அவர்களைப் பற்றிய விவரங்களைத் தந்தால், அக்கறையோடு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 144 Q.—THIRU V. THANGAPANNDIAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that an announcement was made in the Legislative Assembly in March, 1973, accepting 12 demands out of 16 demands raised in the Conference of Executive Officers of the Temples in Tamil Nadu;

(*b*) if so, whether the 12 demands have been implemented;

(c) if not, the demands which have not been implemented; and

(*d*) the reasons for not implementing the same?

**திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக திருக்கோயில் நிர்வாக அதிகாரிகள் மாநாடு எழுப்பிய 16 கோரிக்கைகளில் 12 கோரிக்கைகளை அரசு 1973 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் ஏற்றுக் கொள்கிறது என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த 12 கோரிக்கைகளும் அமல்படுத்தப்பட்டனவா ?

(உ) இல்லையெனில், அமல்படுத்தப்படாத கோரிக்கைகள் யாவை ?

(எ) அமல்படுத்தாததற்கு காரண

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** (அ) 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாக மானியக் கோரிக்கையை 26—3—1973-ல் சட்டப் பேரவையில் முன்மொழிந்து பேசும்போது முன்னாள் அற நிலைய அமைச்சர் இது குறித்து அவ்வாறு குறிப்பிட்டார்.

(இ), (உ) & (எ) அதிகாரிகள் சங்கத்தின் 16 தீர்மானங்களின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி ஒரு விவர அறிக்கை @ இம் மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** நிர்வாக அதிகாரிகள் தங்களுடைய கோரிக்கைகளை மட்டும்தான் அரசுக்கு அனுப்பினார்களா? அல்லது நிர்வாகத்தை எவ்வாறு நல்லமுறையில் நடத்துவது என்ற ஆலோசனைகளையும் அனுப்பினார்களா? திருப்பதியிலேயிருந்து இப்போது பன்றத்திலே இருக்கும் அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம் என்று கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதே முறையை இங்கும் கடைப்பிடிக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நிர்வாக அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்துவது பற்றிய எந்த ஆலோசனைகளையும் வழங்கவில்லை. அவர்கள் தங்களுடைய தேவைகளைத்தான் கேட்டிருக்கிறார்கள். அவைகளைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். திருப்பதியிலே இருக்கிற நிர்வாக அலுவலர்கள் செய்வதைப்போல இங்கே இருப்பவர்கள் முயற்சிப்பார்களா, அப்படி முயற்சிகளை மேற்கொண்டால், நம்முடைய பக்தர்கள் அதை ஏற்றுக்கொள்வார்களா என்பதை இனிமேல்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நிர்வாக அதிகாரிகளுக்கு உரிய தகுதிகள் யாவை என்று அறிய விரும்புகிறேன். நிர்வாக அதிகாரிகளாக இன்றைக்கு அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகிறார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** நிர்வாக அதிகாரிகளுக்கென்று சில தகுதிகள், விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் குறைந்தபட்சம் முன்னாலே இருந்த எஸ்.எஸ்.எல்.சி. தகுதி அடிப்படைத் தகுதியாக நிர்ண

@ 684-688 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



யிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி நியமனம் செய்யப்பட்டது. நேரடியாக நியமனத்திற்கு எடுக்கிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களிலிருந்து குறிப்பிட்ட சதவிகிதத்தினரை எடுப்பது என்ற வரையறைக்கேற்ப அவர்கள் எடுக்கப்படுகிறார்கள்.

## *Junior Deputy Inspectors*

* 145 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of Junior Deputy Inspectors have been up-graded; and

(*b*) if so, the number of such posts up-graded and the number of persons benefited?

## இளநிலைத் துணை ஆய்வாளர்கள்

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இளநிலைத் துணை ஆய்வாளர்களின் பதவிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட பதவிகள் எத்தனை? அதனால் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) & (இ) அரசு தனது 8—5—1978 நாளிட்ட கல்வித் துறையின் ஆணை (நிலை) எண் 831-ல் 1—4—1978 முதல் 63 இளநிலை பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்களை பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்களாக மாற்றி ஆணை பிறப்பித்தது. இவ்வாணையினை மறு பரிசீலனை செய்யக்கோரி தமிழ்நாடு கல்வி சார்பு பணி சங்கத்திடமிருந்து வந்த கோரிக்கையை கருத்தில் கொண்டு, அரசு இப்பொருளினை மறுபரிசீலனை செய்தது. 63 இளநிலை பள்ளித்துணை ஆய்வாளர் பணியிடங்களை துணைப் பள்ளி ஆய்வாளர் பணியிடங்களாக மாற்றி பிறப்பித்த ஆணையினை திருத்தி வைத்து தற்போது பணிபுரிந்துவரும் இளநிலை பள்ளித் துணை ஆய்வாளர்கள் பணியிலிருந்து ஒவ்வொருவராக ஓய்வு பெறும்போது அப்பணியிடங்களை துணைப் பள்ளி ஆய்வாளர் பணியிடமாக மாற்றிக் கொள்ளலாம் என ஆணை (நிலை) எண் 2234 கல்வி, நாள் 14—12—1978-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இப்போது 'ஏ', 'பி' என்ற இரண்டு பிரிவுகளும் இணைக்கப்பட்டிருப்பதால், இந்த வாய்ப்பினையும் 'பி' பிரிவினருக்கு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** குறிப்பிடப்பட்ட பதவிகளில் இப்போது ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓய்வு பெற்று புதியவர்களைப் போடும்போது பரிசீலிக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** துணைப் பள்ளி ஆய்வாளர் பதவியும் ஆசிரியர்கள் பதவியும் மாற்றக்கூடிய பதவிகள். இப்போது இருப்பவர்கள் ஓய்வு பெற்ற பிறகுதான், 'பி' பிரிவிலிருந்து மாற்றி இந்தப் பதவியில் அமர்த்தப்படுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது அந்தப் பதவிகளில் இருப்பவர்கள் ஓய்வு பெற நீண்டகாலமாகும் என்பதாலும், இந்தப் பதவி மாற்றப்படும் பதவியாக இருப்பதாலும், இப்போது அந்தப் பதவியில் இருப்பவர்கள் ஓய்வுபெறும் முன்னரே 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுகுறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** இளநிலை ஆய்வாளர்களுடைய பணி இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்கக்கூடிய பணி. ஆகவே, இந்தப் பதவியை நீக்கிவிடாமல்—ஆரம்பக் கல்வி சிறப்பாக நடைபெறும் கருத்தை மனதிற்கொண்டு—இந்தப் பதவியைத் தொடர்ந்து கல்வித் துறையிலே வைப்பதோடு, மேலும் அதிகமான பதவியிடங்களை உருவாக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது சொன்ன விவரத்திற்கு மேல் வேறு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

## *Law Graduates.*

* 146 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the total number of seats available in the Law Colleges in the State; and

(*b*) the total number of Law Graduates coming out of these Law Colleges every year?



## பட்டம் பெற்ற சட்டக் கல்வி மாணவர்கள்

**திரு. வே தங்கப்பாண்டியன் (திரு. த. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்திலுள்ள சட்டக் கல்லூரிகளில் மொத்தம் எத்தனை இடங்கள் உள்ளன ?

(ஆ) இச் சட்டக் கல்லூரிகளிலிருந்து ஒவ்வோராண்டும் மொத்தம் எத்தனை மாணவர்கள் பட்டம் பெற்று வெளிவருகின்றனர் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இம் மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை சென்னையில் 640-ம், மதுரையில் 320-ம் ஆகும். இதில் கோவை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளில் உள்ள இடங்கள் சேர்க்கப்படவில்லை.

(ஆ) சட்டக் கல்லூரிகளில் இருந்து ஆண்டுதோறும் பட்டம் பெறும் சட்டக் கல்வி மாணவர்களின் எண்ணிக்கை சென்னையில் 250 சராசரியாகவும், மதுரையில் 100 சராசரியாகவும் உள்ளது.

**திரு. பா. ரா. தாமஸ் :** நடப்பாண்டிலே சட்டக் கல்லூரிகளில் இன்னும் கல்வி தொடர்ந்து நடைபெற மாணவர்களைச் சேர்க்கவில்லை என்றார், அதற்குக் காரணங்கள் யாவை ? இல்லை என்று சொல்லுகிறார்களே,

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையிலே நாம் சில மாறுதல்களைச் செய்தோம். அதன்மீது சில மாணவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று, நாம் செய்திருந்த மாறுதல்களிலே சில செல்லாது என்று கூறி இன்றையதினம் தீர்ப்பு வந்திருக்கிறது. இனி அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் நாம் சேர்க்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய குறிப்புப் படி, ஆண்டுதோறும் 350-க்கும் அதிகமான மாணவர்கள் சட்டக் கல்வியில் தேர்வு பெற்று வெளியே வருகிறார்கள். அவர்களிலே எத்தனை பேர்கள் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்துகொண்டு பணியாற்றுகிறார்கள், எத்தனை பேர் சட்ட அறிவு தேவைப்படுகின்ற துறைகளிலே ஆண்டுதோறும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்கின்ற பரிசீலனையை அரசு செய்ததா ? செய்யவில்லையென்றால், அப்படிச் செய்ய முன்வருமா ?

[1979 நவம்பர் 12

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்த விவரங்கள் தற்போது
என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், அந்த விவரங்கள்
தரலாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நடப்பாண்டிலே சேலம், தர்மபுரி ஆகிய
பின்தங்கிய மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகள் ஏற்படுத்தக் கோரி சட்ட
மன்ற மேலவை, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இன்றைக்குக்
கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே நடப்பாண்டிலே
சட்டக் கல்லூரி சேலம் மாவட்டத்திலே அமைக்கப்படுமா என்று அறிந்து
கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த ஆண்டு கோவையிலும்,
திருச்சியிலும் இரண்டு சட்டக் கல்லூரிகள் ஆரம்பிக்கலாம் என்று
முடிவெடுத்து, அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல் 10-30)

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்
அடிப்படையில் சட்டக் கல்லூரியில் பயில விரும்பும் மாணவர்களைத் தேர்ந்
தெடுக்க வேண்டும் என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டிருப்பதால், திருச்சி
மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில்கூட, உயர்நீதி
மன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட
வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழகத்தில் உள்ள 4 சட்டக்
கல்லூரிகளுக்குமே அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில்
தான் மாணவர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற நிலையில் அரசு
இருக்கிறது.

**திரு. க. அறிவழகன் :** சட்டக் கல்லூரி சென்னையில் ஒரே கல்லூரியாக
இருந்தபோது, எத்தனை மாணவர்கள் படித்தார்களோ, அதே எண்ணிக்கை
மாணவர்கள்தான் தற்போது அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் படிக்கி
றார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? சென்னைச் சட்டக்
கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசுக்கு
உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நம்முடைய மாநிலத்தின்
தேவைக்கு ஏற்பவும், இருக்கிற வழக்குகளின் நிலைமைகளைக் கருத்தில்
கொண்டும்தான் நாம் சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின்
எண்ணிக்கையை அதிகப்படுத்தவோ குறைக்கவோ வேண்டியிருக்கிறது.



1979 நவம்பர் 12]

புதிதாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், கோவையிலும், திருச்சி
யிலும் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருப்பதன் காரணமாக, சென்னைச்
சட்டக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியவர்
களாக இருக்கிறோம். அதோடு அதிகமானவர்கள் சட்டம் பயின்று, தங்களை
வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொண்டு, கோர்ட்டுக்குப் போகிறபோது
ஏற்படுகிற பாதிப்பையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பது மட்டு
மல்ல, அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு கூட இல்லாத காரணத்தால், பலர் பல
வகையிலும் கஷ்டப்படுவதைப் பார்க்கிறோம். 3, 4 ரூபாய்க்கு ஜாமீன்
மனு கொடுக்க வருகிற அளவுக்கு பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள்.
இதனால் பல பெரிய வழக்கறிஞர்கள்கூட பாதிக்கப்படுகிறார்கள். இது பற்றிய
நேரடி அனுபவம் எனக்கே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சென்னைச் சட்டக் கல்லூரியில் 540
மாணவர்களுக்கான இடமும் மதுரையில் 320 மாணவர்களுக்கான இடமும்
ஆக மொத்தம் 860 இடங்கள் இருக்கின்றன. ஆனால் ஆண்டொன்றுக்கு 350
மாணவர்கள்தான் தேர்வு பெறுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே
குறிப்பிட்டார்கள். அட்மிஷன் சைடில் காலியுள்ள இடங்கள் எத்தனை ?
பாக்கியிருக்கும் 40 ஸ்தானங்கள் காலியாக இருப்பதற்கு அல்லது பூர்த்தி
யாகாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நான் குறிப்பிட்ட எண்ணிக்
கையில் 120 இடங்கள் கோவையிலும், 120 இடங்கள் திருச்சியிலும் இருப்பதை
நான் சேர்த்துச்சொல்லவில்லை. பொதுவாக ஆண்டுதோறும் ஏறத்தாழ
350 மாணவர்கள் (250 + 100) தான் பாஸ் செய்கிறார்கள். தேர்ச்சி பெறும்
மாணவர்களின் தொகை அந்த அளவுக்குத்தான் இருக்கிறது. இங்கே தரப்
பட்டிருக்கிற விவரத்தின் அடிப்படையில் பார்த்தால்கூட, 1977-78-ல் சட்டக்
கல்லூரிகளில் மொத்தம் 1151 இடங்கள் இருந்தன. அந்த ஆண்டு தேர்வு
களில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 35.9 சதவீதம்தான்.
முதல் ஆண்டு வகுப்பில் பி.எல். வகுப்பில் 1977-78 ஆம் ஆண்டில் இருந்த
இடங்கள் 1050. அந்த ஆண்டு தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 33.5
சதவீதம். அதைப் போலவே எம்.எல். வகுப்பில் 1977-78 ஆம் ஆண்டு பயில
இருந்த இடங்கள் 64. ஆனால் அந்த ஆண்டு தேர்வு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
எண்ணிக்கை 1.5 சதவீதம். தேர்வு பெறுகிற மாணவர்களின்
குறைகிற காரணத்தால், அது அப்படி இருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** இப்பாநிலத்தில் அஞ்சல் வழி மூலமாகச் சட்டக் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? எந்தெந்தக் கல்லூரிகளால் அஞ்சல் வழி சட்டக் கல்வி போதிக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லையென்றாலும், அஞ்சல் வழியில் சட்டக் கல்வி பயில்கிறவர்களை 'பார் கவுன்சில்' வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து கொள்ள அனுமதிப்பதில்லை. இந்த அடிப்படையின் காரணமாக மாநிலங்களில் அஞ்சல்வழி சட்டக் கல்விப் பயிற்சி அளிப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. நானேகூட அஞ்சல் வழியாகத்தான் சட்டத்துறையில் பட்டம் பெற்றேன். நான் பரீட்சைக்குப் போன ஆண்டோ அதற்கு இரண்டொரு ஆண்டுகள் கழித்தோ அதை நிறுத்திவிட்டார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக 'புரொஃபெஷனல் கல்லூரிகளில்' சேர்ந்துதான் படிக்க வேண்டும் என்பதை பார் கவுன்சில் வலியுறுத்திவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** சட்டக் கல்லூரித் தேர்வு முறையை ஆட்சேபித்து மாணவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மாணவர்கள் எந்தக் கோரிக்கையை முன்வைத்து உயர்நீதி மன்றத்தில் வழக்கைத் தொடர்ந்தார்கள்? உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு என்ன? அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தற்போது அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு முழுமையாக நம் கைக்கு வந்து சேரவில்லை. அந்தத் தீர்ப்பு அரசாங்கத்திற்கு வந்து சேர்ந்தவுடனே உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் அந்தத் தீர்ப்பில் ஒரு முக்கியமான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. சட்டக் கல்லூரியில் சேருவதற்கு பி.எ., பி.எஸ்ஸி., என்ற அளவுக்கு பட்டப்படிப்பு இருந்தால் போதும் என்று பல்கலைக் கழக விதி குறிப்பிடுகிறது. ஆனால் சட்டக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும்போது, எம். எ., பட்டம் பெற்ற ஒரு மாணவர் விண்ணப்பித்தால் பி. எ., பட்டம்பெற்ற மாணவர்களைவிட ஒரு 5 அல்லது 10 மார்க் அதிகமாகக் கொடுக்கலாம் என்று அரசில் ஒரு விதி செய்திருந்தோம். அதற்குக் காரணம் "to select the best" என்பதுதான். அந்த அடிப்படையில் நாம் ஒரு விதி செய்தோம். உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன் காரணமாக எம். எ., எம். எஸ்ஸி. என்று எந்தப் பட்டம் பெற்றிருந்தாலும் அவர்களையும் பி. எ., பட்டம் பெற்ற மாணவர்களோடு ஒன்றாக வைத்து எண்ண வேண்டும். அவர்களை சமமாக பாவிக்க வேண்டும்



என்று உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பின் மீது நாம் மேல்முறையீட்டிற்குச் செல்ல வேண்டுமா, வேண்டாமா என்பது ஒரு பிரச்சினை. தற்போது அளிக்கப்பட்டிருக்கும் தீர்ப்பை ஒட்டித்தான் நாம் மாணவர்களை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. இதைத்தான் அரசு பரிசீலித்து வருகிறது.

**டாக்டர் இரா சனார்த்தனம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த விவரத்தின் அடிப்படையில் பார்த்தால், சட்டக் கல்வியில் தேர்வு பெறுகிற மாணவர்களின் சதவீதம் 1 அல்லது 2 என்ற அளவில்தான் இருக்கிறது. இதன் மூலம் வடிகட்டல் முறை மிகப் பெரிய அளவில் இந்தச் சட்டக் கல்வியில் கையாளப்படுகிறது என்பது தெரிகிறது. எனவே பெருமளவுக்கு சட்டப் படிப்பிற்கு மாணவர்களை அனுமதிப்பதன் மூலம் பெருவாரியான மாணவர்கள் சட்ட அறிவு பெறுவதற்கு பயனுடையதாக இருக்கும். அதிகமான எண்ணிக்கை பெற்ற மாணவர்களைத்தான் சட்டக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வது என்ற நிலை இருக்குமானால், இது கல்யாண மார்க்கெட்டில் சட்டக் கல்வியில் பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு மிகப் பெரிய கிராக்கியை ஏற்படுத்திவிடும். இதன்காரணமாக பெற்றோர்களுக்கு பாதகம் ஏற்படுகிற நிலை ஏற்படும் என்பதையும் அரசு கவனத்தில் கொண்டு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்களை சட்டக் கல்லூரிகளில் சேர்க்க அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்யாணத்தைப்பற்றி இந்த அரசு எந்தக் கவலையும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் அதிகமான மாணவர்களைச் சேர்ப்பது என்பது கல்வியினுடைய தரத்தையேகூட தாழ்த்திவிடும் என்ற எண்ணத்தை இந்த அரசு கொண்டிருக்கிறது. இப்போது அவையில் தரப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்துகூட மாணவர்களின் எண்ணிக்கை வகுப்புகளில் அதிகமாக இருக்கிறபோதுதான், ஆசிரியர்கள் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. இதன் காரணமாகவே நல்ல சட்ட அறிவு பெற்ற வழக்கறிஞர்கள் நமக்குக் கிடைக்கவில்லை என்பது மாத்திரமல்ல, இன்னும் டெல்லியில் உள்ள சுப்ரீம் கோர்ட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் வாதாடிக் கொண்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கும்போது, அது இன்னும் மிகவும் வேதனைப்படக் கூடியதாக இருக்கிறது. நல்ல சட்ட மேதைகளை உருவாக்க வேண்டுமென்றால், கூடுமானவரை மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். இதன் மூலம்தான் நல்ல சட்ட அறிவு பெற்றவர்களை நாம் உருவாக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 நவம்பர் 12

**திரு. க. இராமமூர்த்தி :** சட்டக் கல்லூரிப் பாடத் திட்டத்தில் Samester System " புகுத்தப்பட்டது. அது எந்த அடிப்படையில் புகுத்தப்பட்டது? பிறகு அந்த முறை திரும்பப் பெறப்பட்டதாக பத்திரிகைகளில்கூட செய்தி வந்ததே. எந்த அடிப்படையில் திரும்பப் பெறப்பட்டது ? திரும்பப் பெறப்பட்டது உண்மைதானா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? அதோடு மாநிலத்தில் வழக்குரைஞர்கள் மிகுதியாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு இருக்கிற சங்கடங்களையும் அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். சட்டக் கல்வி தேவைப்படுகிற அல்லது சட்ட அனுபவம் தேவைப்படுகிற வேலைகளுக்கு—குறிப்பாக கம்பெனிகள் மற்றும் லேபர் டிபார்ட்மெண்ட் போன்றவைகளில்—சட்டக் கல்வியில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தோ, சட்டக் கல்வியில் பட்டம் பெற்றவர்கள் மட்டுமேதான் நியமிக்கப்பட வேண்டும் என்றோ சொல்லி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சட்ட அறிவு தேவைப்படுகிற பல்வேறு பணிகளுக்கு தற்போது சட்டக் கல்வியில் பட்டம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்காத நிலை இருக்கிறது என்பதை இந்த அரசு உணருகிறது. அப்படிப்பட்ட பதவிகளுக்கு சட்டக் கல்வியில் பட்டம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது அந்த நிறுவனங்களின் முன்னேற்றத்திற்கும் நல்ல உறுதுணையாக இருக்கும் என்பதை மட்டும் இந்த நோக்கில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செமஸ்டர் சிஸ்டம் குறித்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. என்றாலும் இந்த அரசைப் பொறுத்தவரையில் செமஸ்டர் சிஸ்டம் என்பது மிக மிகத் தேவையான ஒன்று என்ற கருத்து இருக்கிறது. பெரும்பாலான மாணவர்
களைப் பொறுத்தவரையில், படிப்பு என்பது அநேகமாக மனப்பாடம் செய்
வது என்ற நிலைதான் இருக்கிறது. இதன் காரணமாக பிற்படுத்தப்பட்ட
அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஓராண்டுக்
காலம் அல்லது இரண்டாண்டுக் காலத்திற்கான பாடங்களை மனப்பாடம்
செய்ய மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நாம் படிக்கும்போதுகூட, இண்டர்
மீடியட், பி.ஏ., ஆகியவற்றை இரண்டாண்டு காலத்திற்குச் சேர்த்தே படித்
திருக்கிறோம். அதன் காரணமாக நாம் அப்போது பட்ட அவஸ்தைகளை
நினைத்துப் பார்த்தால், தற்போது தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மற்றும்
பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு மனப்பாடம்
செய்யும் முறை மிகப் பெரிய தடையாக இருக்கிறது. செமஸ்டர் முறை
யில் 6 மாத காலத்திற்கான பாடத்தைப் படித்து முடித்துவிடுகிற நிலை



1979 நவம்பர் 12]

இருக்கிறது. இதன் காரணமாக இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாண
வர்கள் மிகுந்த பயனை அடைகிறார்கள். இதைத்தான் சில கல்லூரிகளில்
கேட்டபோது நான் அறிந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக பச்சையப்பன்
கல்லூரியில் எம்.காம். படிப்பு என்பது பெரும்பாலான மாணவர்களால் மிகவும்
விரும்பிப் படிக்கப்படுகிறது. அந்தப் பாடத்தில்கூட செமஸ்டர் முறை
காரணமாக, அனைத்து மாணவர்களும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்
கிறார்கள் என்பது மட்டுமல்ல, பெரும்பாலானவர்கள் 'முதல் வகுப்பில்'
தேர்ச்சியுற்றிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். இதற்கு ஒரே
காரணம் செமஸ்டர் முறைதான். இது மாணவர்களாலும் பரவலாக விரும்பி
ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே, செமஸ்டர் முறை என்பதே மாணவர்
களுக்குக் கிடைத்திருக்கிற ஒரு வரப்பிரசாதம் என்று கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** சட்டக் கல்லூரியில் மாணவர்களைச்
சேர்ப்பது குறித்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் முழு விவரமும்
இன்னும் அரசுக்குக் கிடைக்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். தீர்ப்பு வந்து இரு வார காலம் ஆகிறது. இந்தத் தீர்ப்பைப்
பெறுவதில் அரசாங்கத்திற்கு என்ன சங்கடம்? இருக்கக்கூடிய அட்வகேட்-
ஜெனரல், பப்ளிக் பிராசிக்யூட்டர் ஆகியவர்கள் ஏன் இதை உடனடியாக
வாங்கி அரசுக்கு அனுப்பவில்லை? நவம்பர் மாதம் வரையில் சட்டக்
கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கவில்லை. ஜூலை மாதத்திலேயே அவர்கள்
சேர்ந்திருக்க வேண்டும். தீர்ப்பிற்குப் பிறகு அரசாங்கம் என்ன நடவடிக்கையை
எடுத்திருக்கிறது? சட்டக் கல்லூரி திறக்கப்படுமா? அதில் மாணவர்கள்
சேர்க்கப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சட்டக் கல்லூரி இந்த ஆண்டு
நிச்சயமாகத் திறக்கப்படும். மாணவர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்
படுவார்கள், சட்டக் கல்வி தரப்படும். ஆனால், எப்போது என்கிற விவரம்
என்னிடத்திலே இல்லை. தீர்ப்பை விரைவிலே பெற்று மற்ற நடவடிக்கை
களை எடுக்குமாறு அரசு சார்பிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். நாள் கடந்து போனதற்குக் காரணம், பி.ஏ.,
பி.எஸ்ஸி. தேர்வு முடிவுகள் பின்தங்கி வந்ததுதான். கல்லூரிப்
பேராசிரியர்கள் வேலை நிறுத்தம் காரணமாக தேர்வுகள் தள்ளி வைக்கப்
பட்டு, தேர்வு முடிவுகளும் தள்ளி வைக்கப்பட்டு பின்தங்கி வந்த காரணத்
தால்தான், தொடர் நடவடிக்கைகள் எடுப்பதிலும் கால தாமதம் ஏற்பட்டிருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள் 147, 148 ஒத்தி வைக்கப் படுகின்றன.

## Ganga-Cauvery Linkage Scheme

* 149 Q.—THIRU C. R. LAKSHIMIKANDHAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether it is a fact that the Central Government have called for advice from the State Government regarding the Ganga-Cauvery Linkage Scheme;

(b) if so, whether the State Government have sent any proposals regarding this Scheme; and

(c) if so, the details thereof?

## கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் குறித்து மத்திய அரசு, மாநில அரசிடமிருந்து ஆலோசனைகள் கேட்டிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இத்திட்டம் குறித்து மாநில அரசு குறிப்புகள் எவையேனும் அனுப்பியுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) & (உ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் ஆகுமென்றும், அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை இதர மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றும், அப்படிப் பகிர்ந்து கொண்டால்தான் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்றும் செய்திகள் வந்தன. அது எந்த அளவிற்கு உண்மை? இது வரையில் அவ்வாறு மத்திய அரசு மாநில அரசிடம் கேட்காவிட்டாலும்கூட, இந்தத் திட்டத்தின் அவசியத்தைப்பற்றி மாநில அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறதா?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கங்கை-காவிரி இணைப்புத்
திட்டத்தைப் பொறுத்த வரையில், முதற்கட்டமாக காவிரியுடன் கோதாவரி,
கிருஷ்ணா போன்ற நதிகளை இணைக்க வேண்டுமென்று ஏற்கெனவே வலி
யுறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய தேசிய நதி நீர் இணைப்புத் திட்டத்தின்
(National Water Grid) கீழ் இதைக் கொண்டு வர வேண்டுமென்று
கேட்டுக்கொண்டிருக்கிறோம். 1978-ல் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்
பிறகு, நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 19—12—1979-ல் மத்திய அரசு
ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறது. அதில் "ஆறுகளின் உபரி நீரை
வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிகளுக்குப் பயன்படுத்துவதற்கான செயல்
திட்டத்தை உருவாக்கி, தலைமைப் பொறியாளர் ஒருவர் தலைமையின் கீழ்,
மத்திய தேசிய நதி நீர் குழு என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்
றும், இந்த அமைப்பு ஆந்திரம், பீகார், குஜராத், அரியானா, ஜம்மு-காஷ்மீர்,
தமிழ்நாடு, உத்திரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் தற்
உள்ள 95 மாவட்டங்களில் பஞ்சத்தால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் தற்
போது இருக்கக்கூடிய உபரி நீரை அந்தப் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்குத்
திருப்பிவிடுதல் பற்றி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்" என்று தெரிவிக்கப்
பட்டுள்ளது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இது ஒரு நல்ல கற்பனையான திட்டம்,
காவிரி நீர் சம்பந்தமாக கர்நாடகா அரசுடன் நம்முடைய மாநில அரசு
ஏற்படுத்திய ஒப்பந்தத்தையே நடைமுறைப்படுத்த முடியாத நிலை இருக்கும்
போது, பல்வேறு மாநிலங்கள் ஈடுபடுகிற ஒரு திட்டத்தைச் செயல்படுத்த
முடியுமா? நதிகளை தேசியமயமாக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது.
இந்தக் கொள்கையில் தமிழ்நாடு என்ன நிலையைப் பின்பற்றுகிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
தான் கற்பனையில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.
இத்திட்டம் கற்பனையான திட்டம் அல்ல, உருவாக்கப்படக் கூடிய திட்ட
மாகத்தான் மத்திய அரசாங்கம் செய்திகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது.
மேற்கே நோக்கிப் பாய்கிற நதிகளைக் கிழக்கே திருப்பிவிட வேண்டுமென்று
இந்த அரசாங்கத்தின் சார்பாகக் கேட்கப்படுகிறது. இதற்காக ஒரு
அமைக்கப்பட்டு அது ஆய்விலே இருந்துகொண்டிருக்கிறது. இது முடியாத
திட்டமில்லை. உண்மையிலேயே நதிகளையெல்லாம் தேசியமயமாக்க
வேண்டுமென்ற கொள்கையிலிருந்து இந்த அரசு பின்வாங்கவில்லை, வலி
யுறுத்திக் கொண்டிருக்கிறது. இத்திட்டத்தால் தமிழ் நாட்டிலே இருக்கக்
கூடிய பற்றாக்குறை மாவட்டங்களுக்குத் தண்ணீர் கிடைக்குமாதலால் பாசன

வசதிகளை அதிகரிக்க முடியும். அப்படிப்பட்ட நிலைமையில்தான் இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தமிழ்நாட்டினுடைய விவசாய வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், வேறுபல வளர்ச்சிக்கும் இது மிக அதிகமாக உதவக் கூடிய திட்டமாக இருப்பதால், மத்திய அரசு இதற்காகக் கோருகிற தொகை எவ்வளவு இருந்தாலும், அதைக் கொடுத்து அந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இது ஏற்கெனவே ஆய்வில் இருக்கிறது என்பதைக் கோடிட்டுச் சொல்லியிருக்கிறேன். ஆய்வு முடிந்தவுடன் மீண்டும் வலியுறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** கங்கை-காவிரி இணைப்பில் கோதாவரி, கிருஷ்ணாவும் இணைந்து வருகின்றனவா? அப்படி வரக்கூடிய நதிகள் மலைப் பிரதேசங்களைத் தாண்டி வரும்போது மலையை உடைத்து, கொண்டு வரப் போகிறார்களா அல்லது குழாய்களின் மூலம் ஏற்றி இறக்கப் போகிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் என்பது ஒரு பெரிய திட்டம். பல ஆண்டுகளுக்கு நடத்தக்கூடிய திட்டம். அதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்குமா இல்லையா என்பதைப் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். முதற்கட்டமாக காவிரியுடன் கோதாவரி, கிருஷ்ணா ஆகிய நதிகளை இணைத்தால், தமிழ்நாட்டிற்குப் பலன் கிடைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். இதைத்தான் நாம் தெரிவித்திருக்கிறோம். இந்த இணைப்பின் மூலம் எப்படியெல்லாம் தண்ணீர் கொண்டுவரப்படும் என்பது ஆய்வில் உள்ளது. மலையைக் குடைந்தா, குழாயின் மூலமா அல்லது தரையின் மூலமா என்பதையெல்லாம் ஆய்வில் கண்டுபிடித்துக் கூறுவார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** தமிழகத்தினுடைய மொத்தத் தண்ணீர் தேவை வ்வளவு, இதிலே பற்றாக்குறை எவ்வளவு என்பதை மாநில அரசு ஆய்வு சய்திருக்கிறதா? கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தின் மூலமாக இந்தப் ற்றாக்குறையை எந்த அளவிற்கு ஈடுகட்ட முடியும் என்கிற ஆய்வையும் சய்திருக்கிறதா? எந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை தமிழக அரசு ணுகியிருக்கிறது?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால்தான், இதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். பற்றாக்குறை எவ்வளவு என்று சொன்னால், நலமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம், காவிரி நதி நீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதிலே போதிய அளவு நீரை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே இவைகளையெல்லாம் சொல்லிவிட்டால், பக்கத்திலேயுள்ள மாநிலங்கள் இந்தப் புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு, இப்படியிருக்கிற சூழ்நிலையில் உங்களுக்குத் தேவையா என்று கேட்கக்கூடும். ஆகவே, இப்படிப்பட்ட 'சென்சிட்டிவ்' கேள்விகளைக் கேட்காமல் இருக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் அமுலுக்கு வந்தால், அது வரவேற்கக் கூடிய திட்டம்தான். இதைச் செயல்படுத்துகிற நேரத்தில், இந்தியாவினுடைய நிலப்பரப்பு இருக்கிற சூழ்நிலையில் சில இடங்களில் பம்பிங் செய்துதான் கொண்டுவரக்கூடிய நிலை இருப்பதால், இதற்கு ஏராளமான மின்சாரம் தேவைப்படும். அந்த அளவிற்கு மின்சார உற்பத்தி இல்லாத காரணத்தால், இத்திட்டத்திற்கு சாத்தியக்கூறு இல்லையென்ற கருத்து அறிஞர்கள் மத்தியிலே சொல்லப்படுகிறது. இது உண்மையா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அறிஞர்கள் மத்தியிலே பேசக் கூடிய கருத்துக்கள் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இந்தத் திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதுதான் எங்களுக்குத் தெரிந்த உண்மை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கங்கை-காவிரி இணைப்புத் திட்டம்பற்றி சர். சி. பி. இராமசாமி அவர்கள் கூறி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இப்போது வருகிற மத்திய அரசின் கருத்தைப் பார்த்தால், முதற்கட்டத்தில் வட மாநிலங்கள் பங்கு பெறுவதாகத்தான் இருக்கிறது. முதற்கட்டத்திலேயே தமிழகமும் பங்கு பெறுகிற வகையில் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். இத்திட்டத்தின் கீழ் எட்டு மாநிலங்களில் உள்ள 95 மாவட்டங்கள் எடுக்கப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே தமிழ் இன்று என்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கங்கை-காவிரி இணைப்போடு சிவ பெருமான் முடியில் உள்ள கங்கையையும் இணைக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சிவபெருமான் கங்கை நீர் என்று ஒன்று இருந்தால், அதுவும் சேர்த்துக்கொள்ளப்படும்.

## *New Brinjal Variety*

* 150 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether it is a fact that an improved Brinjal MDU 1 has been developed by the Department of Horticulture; and

(*b*) if so, the speciality of this variety ?

## புதிய கத்திரிக்காய் இனம்.

திரு. பா. ரா. தாமஸ் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தோட்டக் கலைத் துறையினர், எம்.டி.யு-1 என்ற மேம்பட்ட கத்திரிச் செடி இனத்தை உருவாக்கியுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த வகையின் தனிச் சிறப்பு என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) MDU 1 என்ற உயர் ரக கத்திரிக்காய் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் கண்டுபிடிக்கப் பட்டது.

(இ) MDU I கத்திரியின் வயது விதையிலிருந்து விதைக்கு 150 நாட்களாகும். இது மற்ற இனங்களின் வயதைக் காட்டிலும் 10 முதல் 20 நாட்கள் குறைவானதாகும். இந்த ரகச் செடியின் காய்ப்பு சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 33.6 டன்களாகும். இது நாட்டு ரகத்தைவிட 31 சதவீதம் அதிகமாகும். இதன் காய்ப்பு—பிப்ரவரி—ஜூலை, ஜூன்—நவம்பர், நவம்பர்—ஏப்ரல் ஆகிய மூன்று பருவங்களிலும் நன்றாக உள்ளது. இந்த ரகம் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களுக்கு ஏற்றதாக உள்ளது.



(முற்பகல் 10-50)

திரு. பா. ரா. தாமஸ் : மதுரையில் விளையும் கத்தரிக்காய், சாதாரணமாக இருக்கின்ற கத்திரிக்காய்களைவிட ருசியாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் புதிய வித கத்திரிக்காயை உண்டிருக்கின்றார்களா ? அதன் சுவையை அறிந்திருக்கின்றார்களா ? அந்த ரக கத்திரிக்காயை மாநிலம் முழுவதும் பரப்பும் அளவிலே ஏதாவது திட்டம் வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் குடியிருக்கின்ற வீட்டிலேயே ஒரு காய்கறித் தோட்டம் வைத்திருக்கிறேன். இங்கு சொல்லப்பட்டிருக்கின்ற எம்.டி.யு. 1 என்ற மேம்பட்ட கத்திரிக்காயும் பயிராகியிருக்கிறது. சாப்பிடுவதற்கு மிகமிக ருசியாக இருக்கிறது. இதுபோன்ற கத்திரிக்காய் பல மாவட்டங்களில், தென் மாவட்டங்களில் அதிகமாக விளைவிக்கப்பட்டு வருகிறது. ஆறு வகையான காய்கறிகள் இன்று பல்கலைக் கழகங்களால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று அவைகள் எல்லாம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister confine the use of fertilisers to locally manufactured ones instead of using the imported fertilisers for the simple reason that these brinjals which are bloated into big-sized ones lose their taste?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கத்திரிக்காயைப் பொறுத்த அளவிலே, நாம் அதன் சைஸை வைத்து மதிப்பிட முடியாது. பெரிய கத்தரிக்காய் ருசியாக இருக்கிறதா என்பார்கள். அதிலே சத்து அதிகமாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும். அவைகளிலே சத்து அதிகமாக இருக்கிறதால் தான், அதை விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். இது நீ[illegible] போலவே அண்ணாமலை கத்திரிக்காய் என்று இருக்கிறது. அ[illegible] கத்திரிக்காய். இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கத்திரிக்காய் நல்ல சத்துள்ள கத்திரிக்காயாக இருக்கிறது. அதுவும் மக்கள் விரும்பி வாங்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தோட்டக் கலைத் துறையினர், இந்த கத்திரிக்காய் துறையிலே ஆராய்ச்சி செய்ததுபோல் வேறு ஏதாவது காய்க[illegible]களைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்து கண்டுபிடிப்புகள் நடத்தியிருக்கிறார்களா ? ஆம் என்றால், அது பற்றிய விவரம் என்ன ?

[1979 நவம்பர் 12

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** வேறு காய்கறி வகைகளையும் இது போன்ற வகைகளையும் பற்றி கவனம் எடுத்து பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றன. தோட்டக் கலை மூலம் இதுபோன்ற பல ரகங்களை உற்பத்தி செய்வதற்கு பொதுமக்களுக்கு இதன் நல்ல தரமான விதைகள் கிடைக்கக்கூடிய சூழ்நிலைகளை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த அடிப்படையிலே இன்றைக்கு சென்னைக்குப் பக்கத்திலேயுள்ள 50 கிலோ மீட்டர் தூரத்தில் ஓரிடத்தில் ரூ. 86 லட்சம் செலவில் ஒரு திட்டத்தை அமுல்படுத்த இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்தக் கத்திரிக்காய் நிறைய காய்க்கிறது, சத்துள்ளது என்று சொன்னார்கள். இதுபோலவே மூன்றாண்டுக் காலத்திலே மிக அதிகமாகக் காய்க்கின்ற முருங்கை மரங்களை உருவாக்குவதற்கு திட்டம் இருப்பதாக சமீபத்திலே விவசாயத் துறை செய்தி வந்ததே, உண்மையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விவசாயி என்று தெரிகிறது. அவர்களுடைய தோட்டத்திலே இந்த வகை முருங்கைக் காய் காய்க்கிறதா!

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** என்னுடைய தோட்டத்திலும் முருங்கைக்காய் இருக்கிறது. என்னுடைய காய்கறித் தோட்டத்திலேயே விளைகிற முருங்கைக்காய்க்குப் பரிசுகூட கிடைத்திருக்கிறது. அது மிக ருசியாக இருந்ததால், அந்தப் பரிசைப் பெற்றிருக்கிறது. மேலும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட டிராம் ஸ்டிக், அதாவது முருங்கைக் காய் பற்றிக்கூட ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** எம்.டி.யு. 1 என்ற மேம்பட்ட கத்திரி பெரிது மட்டுமல்ல, சத்துள்ளது என்றும் சொன்னார்கள். ஹவுஸ் கார்டன்ஸ், சென்னையிலுள்ள பங்களாக்களில் இருக்கின்றன.. அந்தக் கத்திரி விதைகளை அவர்களுக்குக் கிடைக்கச் செய்து மேலும் பரவலாக உற்பத்தி செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 12]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஆடிப்பட்டம் தேடி விதை என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதற்கிணங்க காய்கறிகளைப் பயிர் செய்வதற்கு 'ஆடிப்பட்டம்' என்று சென்னை நகரத்திலே விழா கொண்டாடப்படுகிறது. இந்தக் காய்கறி விதைகளை இப்போதுகூட எல்லா வீடுகளுக்கும் நாம் தோட்டக்கலைத் துறை மூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU D. V. D'MONTE : Sir, as a result of the recent visit of the Hon. Minister to Korea, have the Government formulated any plan for disseminating and propagating the growth of vegetables on a wider and larger scale?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கொரியாவிலேகூட நெல் அதிகமாக விளைகிறது. அங்கு நெல்லுக்கு மாற்றுப் பயிராக காய்கறிகளைத்தான் விளைவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற நிலைமைகளை நம் தமிழகத்திலே கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை, திட்டங்களை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஜப்பானிலேகூட அப்படி விளைவிக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவந்தால், விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** கத்திரிக்காய்பற்றி இவ்வளவு கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதில் உறுப்பினர் அவர்களும் மேலும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கத்திரிக் காய் பயிரிடுவதாகச் சொன்னார்கள். உறுப்பினர்களுக்கு அந்தக் கத்திரிக் காயை வழங்குவார்களா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எல்லோருக்கும் வழங்குகின்ற அளவுக்கு என்னுடைய தோட்டம் அவ்வளவு பெரிதாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்திலே இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்பு சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவ ரால் தீர்மானிக்கப்பட்டு அவரது கையொப்பத்துடன் இம்மேலவையின் பரிந் துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, மேலவையின் இசைவிற்காக பேரவைத் தலைவரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகளின் பிரதிகள் பேரவைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு.

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவு.

3. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

4. 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

5. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

6. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு.

7. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு.

8. 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

9. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

10. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு.

11. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

12. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு.

equal to two acres



13. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

14. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு.

15. 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு.

16. 1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

## 3. கவன ஈர்ப்பு.

தருமபுரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமனத் திற்கு தொடக்கப்பள்ளிகளில் இடைநிலை இடத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் வேலை தேடித்தரும் மாவட்ட அலுவலகத்தில் பெயர்கள் பதிவாகி இருந்தும் அவர்களை நேர்முக பேட்டிக்கு அனுப்பாததால் புலவர் பட்டம் பெற்ற வர்கள் நியமனத்திற்கு வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமனத்திற்கு தொடக்கப் பள்ளிகளில் இடைநிலை இடத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் உரிய முறை யில் வேலை தேடித்தரும் மாவட்ட அலுவலகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்திருந்தும், அவர்களின் பெயர்களை நேர்முகப் பேட்டிக்கு அனுப்ப முடி யாது என்று நிராகரித்து விட்டதால் புலவர் பட்டம் பெற்ற நூற்றுக்கணக் கான ஆசிரியர்கள் நியமனம் பெற வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டிருப்பது குறித்து" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஓசூரில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிருஷ்ணகிரியில் பதிவு இன்டர்வியூவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் போஸ்ட் கிராஜுவேட் செய்யப்பட்டவர்கள் அனுப்பப்படவில்லை.

@ 689 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**தருமபுரி மாவட்டத்தின் அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள்
நியமனத்திற்கு தொடக்கப் பள்ளிகளில் இடைநிலை
இடத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் வேலை தேடித்
தரும் மாவட்ட அலுவலகத்தில் பெயர்கள் பதிவாகி
யிருந்தும் அவர்களை நேர்முக பேட்டிக்கு
அனுப்பாததால் புலவர் பட்டம் பெற்றவர்கள்
நியமனத்திற்கு வாய்ப்பின்றி பாதிக்கப்
பட்டிருப்பது குறித்து**

[திரு. செ. முத்துசாமி] [1979 நவம்பர் 12

ஆக ஆகிக்கொண்டிருக்கின்றவர்களை எப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு
செய்ய மறுக்கிறார்கள். இதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.
இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க விரும்புவது என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தற்சமயம், இப்படிப்பட்ட
ஆசிரியர்கள், இவர்கள் பெற்றுள்ள உயர் தகுதிக்கு ஏற்றாற்போல் தகுந்த
மேல் பணிகளுக்காக வேலை வாய்ப்பகங்களின் மூலம் உதவி கோரி பதிவு
செய்ய அனுமதிக்கலாம் என்ற கருத்துரையை வேலை வாய்ப்பு மற்றும்
பயிற்சித் துறை இயக்குநர், அரசின் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்
துறைக்குத் தனது 5—11—1979 நாளிட்ட கடிதத்தில் அனுப்பியுள்ளார்.
இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர்
அவர்கள் ஒரு புகார் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வேலைவாய்ப்பகத்திலே
யும், இன்னொரு வேலை வாய்ப்பகத்திலேயும் உள்ள வித்தியாசம் பற்றிக்
குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புகாரை இன்னும் கொஞ்சம்
விளக்கக் குறிப்பாக எழுதிச் சொல்வார்களானால், அதன் மேல் நடவடிக்கை
எடுக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** முது கலைப் பட்டம் பெற்றிருப்பவர்கள் வேலை
வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொள்வதுபற்றி அரசின் பரிசீலனையில்
உள்ளது என்று சொன்னார்கள். ஏற்கெனவே நிரந்தரமான வேலையில்
உள்ள ஆசிரியர்கள் பதிவு செய்துகொள்ள முடியாது என்று சொன்னார்கள்.
10-எ(1) விதியின் கீழ் நியமனம் பெற்றிருந்தால் பதிவு செய்து கொள்ளக்
கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றபோது, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குப்
பதவி உயர்வு காரணமாக எங்கும் செல்ல முடியாத சூழ்நிலைகள் இருப்ப
தனால், வேறு உத்தரவை இட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அண்மையிலே அரசு எடுத்த முடி
வின்படி, இப்படிப்பட்ட ஆசிரியர்களுக்கு என்று ஒரு தனியான நடவடிக்கை
எடுக்க அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.





(முற்பகல் 11-00)

## 4. அரசின் சட்டமுன்வடிவுகள்.

**1) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு
கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979)—தொடர்ச்சி.**

* **திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலும், அரசுக்கு நில உச்ச
வரம்புச் சட்டத்தின் அடிப்படையிலே கிடைக்கும் உபரி நிலங்களை, அமைச்
சரவர்களின் வார்த்தைகளிலே சொல்வதானால் அதிகமான பேர்களுக்கு
நன்மை பயக்கும் அளவிலே, மிக அதிகமான பேர்களைத் திருப்தி செய்யும்
அளவிலே கொண்டுவரப்பட்டுள்ளது என்று அறிகிறேன். அப்படித்தான்
சட்ட முன்வடிவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "If the maximum limit
in the case of surplus lands is reduced as in the case of
poramboke land, a large number of persons will be benefited by
the scheme of Land Reforms." உச்சவரம்புச் சட்டம்
கொண்டு வந்ததே, நிலம் பரவலாக அதிக பேர்களுடைய கரங்களுக்குச்
செல்ல வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் அதே நேரத்தில் அதிகம்
பேர்களுடைய கரங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற நல்லெண்ணம் தவறாகப்
பயன்படும் நிலைமையிலே சட்டம் உருவாகி, அதற்குப் பிறகு விவசாயம்
என்ற அந்தத் துறையின் பக்கமே தலை வைத்துப் படுக்க முடியாத நிலைமை
களை சட்டம் உருவாக்கக் கூடாதென்கிற நிலையையும் இந்த அரசுக்கு,
இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம்,
ஸ்டேண்டர்ட் (standard) ஏக்கர் என்ற அடிப்படையிலே தருகிற
போது, கொஞ்சம் அதிகமான நிலம் போகிறது, 15 சாதாரண ஏக்கர்
அளவிற்குக்கூடக் கிடைக்கிறது. இதைக் குறைத்தாக வேண்டுமென்ற
நோக்கம் நல்லதாகவே இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தின் அடிப்படை
யிலே, அரசின் கை வசம் இருக்கிற (Surplus lands) உபரி நிலம்
எந்த அளவிற்கு இருக்கிறது அல்லது எந்த அளவிற்கு அரசுக்கு நிலம்
கிடைக்குமென்று அரசு எதிர்பார்க்கிறது, அதிலே எந்த அளவிற்கு அரசு
ஏற்கெனவே கைப்பற்றியிருக்கிறது என்கின்ற குறிப்புகள் இல்லை. சாதாரண
மாக அப்படிப்பட்ட குறிப்புகள் வருவதில்லை, சட்ட முன்வடிவுகளோடு
கொடுக்கப்படுவதில்லை என்றாலும்கூட, வருவாய்த்துறை அமைச்சரவர்கள்
நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போது, அப்படிப்பட்ட
தகவல்களை, இந்த அவையிலே இருப்பவர்களுக்குக் கொடுத்தால், அவர்கள்
அந்த அடிப்படையிலே சட்ட முன்வடிவை விமர்சனம் செய்ய நல்ல வாய்ப்பாக

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 12

இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு
மூலமாக தனியார்களுக்கு அல்லது நிலமற்றவர்களுக்கு உபரி நிலத்தைப்
பங்கிட்டுத் தரும்போது, மூன்று ஏக்கர் புஞ்சை நிலம் 1½ ஏக்கர் நஞ்சை
நிலம்—சாதாரண ஏக்கர்தான்—கொடுக்கலாமென்ற அளவிலே இந்தச் சட்ட
முன்வடிவின் மூலம் திருத்தம் வந்திருக்கிறது. நான் இந்த நேரத்தில் ஒரு
கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அமைச்சரவர்கள் பொறியியல் படித்து, பொறியியல் பட்டப் படிப்போ
அமைச்சராக இருக்கிறவர்கள். விவசாய நிலைமைகளையும் நன்றாக அறிந்
தவர்கள் என்ற தகவலைப் பல நேரங்களில் அவர்களே சொல்லியிருக்
கிறார்கள். நானேகூட அப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்
தாலும், அவர் நஞ்சையை மட்டும் மனத்திலே கொண்டு, மற்ற இடங்களை
அணுகும்போது, இதிலுள்ள சிக்கல்கள் தெரியாமல் இருக்கலாம். உபரி
நிலங்களைக் கொடுக்கும்போது, ஒரு ஜோடி ஏர் மாடுகளை வைத்துக்கொண்டு
அல்லது வேறு சில வசதிகளை வைத்துக்கொண்டு விவசாயம் செய்யும் விவ
சாயி நிலமற்று இருப்பதால், இதைத் தருகிறார்கள். இந்த நிலங்களில்
அவர்கள் பூரணமாக உழைக்கும் அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா
என்றால், நிச்சயமாகக் கிடையாது. 3 ஏக்கர்கள் புஞ்சை நிலத்தில்
ஓராண்டு முழுவதும் என்று சொல்லாவிட்டாலும்கூட, மற்ற விவசாயிகளைப்
போல தங்களை முழுக்க ஈடுபடுத்திக்கொள்ளும் அளவிற்கு, விவசாயி அந்த
நிலங்களை நம்பி விவசாயம் செய்ய முடியாது. அது மட்டுமல்ல, பகுதி
நேர விவசாயியாகக்கூட அல்ல, ஆண்டிலே ஒரு சில நாட்கள் விவசாயத்திலே
ஈடுபட்டால் போதும், தன்னுடைய 1½ ஏக்கர் நஞ்சை நிலத்தை அல்லது 3
ஏக்கர் புஞ்சை நிலத்தை அல்லது இரண்டும் கலந்த அதற்கிடையிலே உள்ள
நிலத்தைப் பயிரிட முடியும். எனவே நிறைய விவசாயிகளை உருவாக்கு
தானது, அதிலிருந்து அவர்கள் வருவாயைத் தேடிக்கொள்ளும் நிலைமை
ஏற்படுத்தாது. அரசாங்கத்தின் நோக்கமும் நிறைவேறாது, அதற்கு மாறா
சிறு விவசாயிகளை நாட்டிலே உருவாக்கி, நிரந்தரக் கடனாளிகளாக்கு
வேறொரு திட்டமாகத்தான் இது முடியுமென்பதைத் தெரிவித்துக்கொ
கிறேன். எந்த அளவிற்கு விவசாயம் செய்ய முடியுமோ அந்த அளவிற்
நிலம் கொடுக்க முடியாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். குறைந்
பட்சம் ஒரு விவசாயி தன்னை முழுக்க ஈடுபடுத்திக்கொள்ளும் அளவிற்
நிலம் கொடுக்க வேண்டும். கொடுக்கின்றோமென்பதற்காக 1½ ஏக்
கொடுத்தால் போதுமென்று சொன்னால், அது விவசாயமாக இராது.



979 நவம்பர் 12] [திரு. க. இராமமூர்த்தி]

அதில் பயிர்
ஏக்கர்களை உழுவதென்பது 2 நாட்களில் முடிந்துவிடும், கணவனும், மனைவி
வைக்கும் வேலை 1 வாரத்திற்குமேல் நடைபெறாது. கணவனும், மனைவி
ம் நிலத்தில் இறங்கி வேலை செய்பவர்களாக இருந்தால், அவர்களோடு
குழந்தைகளும் சேர்ந்துகொண்டால், அந்த வேலை மிகச் சுலபமாக முடிந்து
விடுகிறது. அப்படி முடிகிற விவசாயத்தின் மூலமாக, அந்த விவசாயியும்
பல நேரங்களில் அதில் முதலீடு
அவனைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது. ஆகவே நிலத்தை, சாதாரண
செய்கின்ற தொகைக்கே நஷ்டம் ஏற்படும். 15 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு 3
ஏக்கராகக் கொண்டுவருவதில் தவறில்லை. எந்த அளவிற்கு குறைந்த
ஏக்கர் நஞ்சை நிலமென்று வைத்திருக்கிறார்கள். அரசு கருதுகிறதென்பது புரியவில்லை,
பட்சம் இருக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறதென்பது புரியவில்லை, 3 ஏக்கர் புஞ்சை
ஒருவேளை சட்டமுன்வடிவில் குறிப்பிட்டுள்ளதுபோல், 3 ஏக்கர் புஞ்சை
அல்லது 1½ ஏக்கர் நஞ்சை இருந்தால் போதுமென்று அரசு கருதுகிறதோ
என்னவோ, தெரியவில்லை. அந்த முறையில் அணுகினால், விவசாயத்
மட்டுமல்ல,
துறையிலே அரசின் கொள்கைகள் தோற்றுப் போகுமென்பது
இந்த ஆட்சியின் பதவிக்காலம் முடிவதற்குள் கூட்டுறவுத் துறையும் அழிந்து
போகும், சிறு விவசாயிகளும் அழிந்துவிடும் நிலை ஏற்பட்டு விடும். ஆகவே
சட்டம் செய்ய வேண்டும்.
ர்களுக்கு ஏற்ற வகையிலே, உதவும் வகையிலே சட்டம் செய்ய வேண்டும்.
ஏக்கர் என்பதே மிகக் குறைவாக இருக்கிறது என்று நான் கருது
றேன். அமைச்சரவர்கள் மீண்டும் இதுபற்றிப் பரிசீலனை செய்து,
குறைந்தபட்சம் 5 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது 3 ஏக்கர் நஞ்சை நிலம் நா
ன்வர வேண்டும். இந்த நிலையின் அடிப்படையிலேதான் நாம்
ருகிறோம். ஆகவே அரசு எதிர்பார்க்கின்ற நபர்களின் எண்ணிக்கைதான்
தனால் குறையும். ஆனால் சிறிய விவசாயிகள் என்ற அளவிலே அவர்கள்
ங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் அளவிற்கு, (Self-employed) என்று
செல்ப்-எம்ப்பளாய்ட் ஆக அவர்கள் இருக்கும் நிலையை உருவாக்கும் என்று
சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயத்தைப் பொறுத்தவரையில், புதிய புதிய கருவி
களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். டிராக்டர்கள் இல்லையென்றாலும்,
சாதாரணமாக ஏர் உழும் கருவிகளைக்கூட நவீனப்படுத்தியிருக்கிறார்கள்.
சாதாரண ஏழை விவசாயி அதை வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய
முடியுமென்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அந்த நிலையில் இதை
நோக்க வேண்டும். எவ்வளவு அதிகமான பேர்களுக்குக் கொடுக்கிறோமென்
பது புள்ளி விவரத்திற்குத்தான் உதவும். எனவே இந்தச் சட்டமுன்வடிவு

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 12

ாட்டை முன்னேற்றச்செய்யும் சட்டமுன்வடிவாக இராதென்று சொல்லி,
இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்
சரவர்கள் அதற்கு அவகாசம் கோரி, சட்டமுன்வடிவைத் திரும்பப் பெற்று,
தீரப் பரிசீலித்து, மீண்டும் அவைக்குப் புதிய சட்டமுன்வடிவாகக் கொண்டு
வந்தால், திருத்தம் இல்லாமல், முழுமனதோடு நிறைவேற்றி அதை
ஆதரிக்க முடியுமென்று சொல்லி, அமைகிறேன்.

(முற்பகல் 11.10)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மேலவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு
வரப்பட்டிருக்கின்ற 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு
கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் மீது திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஒருசில கருத்துக்களைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தச் சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது.
திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில்
ஏழையெளியவர்களுக்கெல்லாம் நிலம் வழங்குவது என்கிற ஒரு நல்ல
தத்துவத்தை அமுல்படுத்தியது. இலட்சக் கணக்கானவர்களுக்கு பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயும், கலைஞர் அவர்களுடைய
ஆட்சிக் காலத்திலேயும் பட்டா வழங்கி நிலம் ஒதுக்கியிருக்கின்றோம். ஒரு
காலத்திலே நிலச்சுவாந்தார்கள் எத்தனை ஏக்கர் நிலம் வேண்டுமானாலும்
வைத்துக் கொள்ளலாம் என்று இருந்த நிலை மாறி, இன்றையதினம்
நாட்டிலுள்ள மக்களெல்லாம் சோஷலிச சித்தாந்தங்களை ஏற்றுக்
கொண்டுள்ள நிலையில், வரவேற்கின்ற நிலையில் எல்லோருக்கும் சொந்தமாக
நிலம் வழங்க வேண்டும், உபரி நிலங்களையெல்லாம் ஏழையெளியவர்களுக்கு
வழங்க வேண்டும் என்கின்ற கொள்கை கழக ஆட்சிக் காலத்திலே பின்பற்றப்
பட்டு, இன்றையதினம் இந்த அரசாங்கமும் தொடர்ந்து அந்தக் கொள்கை
வழியிலே இப்படிப்பட்ட சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பதை நான்
உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில்
மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச்
சொன்னார்கள். முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை அதனுடைய
கொள்கைவழி நின்று தமிழகத்திலுள்ள நிலச்சுவாந்தார்களிடம் அளவுக்கு
அதிகமாக இருக்கின்ற நிலங்கள் அகற்றப்பட்டு, இன்றைக்கு உள்ளபடியே
உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற காலக் கட்டத்தை



1979 நவம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நிலம் இல்லாத
ஏழையெளியவர்களுக்காக அரசாங்கம் நிலத்தை ஒதுக்கியிருக்கிறது. இதை
நாங்கள் வரவேற்கிறோம்.

புஞ்சை 3 ஏக்கர், நஞ்சை $1\frac{1}{2}$ ஏக்கர் வழங்குவது என்று இன்றுள்ள
மக்கள் தொகை அடிப்படையில், அதிலேயும் மக்கள் தொகை அதிகமாக
வளர்ந்து கொண்டு வருகின்றபோது, இருக்கின்ற நிலத்தை பங்கு போட்டுக்
கொடுப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. அந்த வகையில் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தச் சட்ட முன்வடிவை மனப்பூர்வமாக
நான் வரவேற்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்
கூடிய இந்தச் சட்ட முன்வடிவில் "எக்ஸ்பிளனேஷன்" என்கிற அந்தப்
பகுதியில்

"Explanation : Where a person holds both dry and wet land,
then, for the purpose of calculating the extent of his holding
under this clause, one acre of wet land shall be deemed to be
equal to two acres of dry land."

என்று போட்டிருக்கிறார்கள். இதன் மூலம் சில மாவட்டங்களில் இன்றைய
தினம் நஞ்சைக்கும் புஞ்சைக்கும் வித்தியாசம் தெரியாமல் நிலம் ஒதுக்கப்
படுகிறது. இன்றையதினம் புஞ்சை நிலத்திலும் கூட வருவாய் தரக்கூடிய
நிலங்களாக, விவசாயிகளுக்குப் பலன் தரக்கூடிய நிலங்களாக சில
மாவட்டங்களில் நிலங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில்
ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்தை இரண்டு ஏக்கர் நஞ்சை நிலத்துக்குச் சமமாக
பாவிப்பதாக இருக்கக்கூடிய பிரிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்
வடிவைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இந்தச் சட்ட முன்வடிவைப்
பொறுத்தவரையிலும், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பொதுவாக
வரவேற்றிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன். சில பேர் சிறப்பாக
வரவேற்றிருக்கிறார்கள் என்று சொல்லி என் பேச்சை ஆரம்பிப்பதில் தவறு
இல்லையென்று நான் கருதுகிறேன்.

அருமைப் பெரியவர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது ஒரு
விஷயத்தைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையிலும்,
மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களைப் பற்றிச் சொல்ல

வேண்டுமானால், அரசு கொண்டுவரக்கூடிய எந்தச் சட்ட முன்வடிவானாலும்,
எல்லாவற்றையும் பொதுவாக ஆதரித்திருக்கிறார்கள். அதிலும் வருவாய்த்
துறையிலே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை மிகச்
சிறப்பாக ஆதரித்திருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தம் பற்றிக் கொண்டுவரக்கூடிய
சட்டங்களையெல்லாம் மிக மிகச் சிறப்பாக இந்த அவையில் ஆதரித்துப்
பேசியிருக்கிறார்கள். ஆதரித்துவிட்டு, வேண்டுமானால் அதில் இருக்கிற
குறைபாடுகளை நல்ல எண்ணத்தில், நல்ல நோக்கத்தில், இவை இவை
என்று சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார்கள். இதில் இன்னும் தீவிரம் காட்ட
வேண்டும் என்று அரசுக்கு யோசனை சொல்லியிருக்கிறார்கள். அவர்
சொன்ன அந்த நல்ல யோசனைகளையெல்லாம் இந்த அரசு
பரிசீலித்திருக்கிறது என்பதை பொதுவாக அவர் பேசிய பேச்சுக்கு நான்
சொல்கிறேன்

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவை
வரவேற்று கருத்துக்களைச் சொன்னார்கள். அதற்காக நான் என்னுடைய
மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். "எங்களுடைய ஆட்சிக்
காலத்திலே கொண்டு வந்ததை இன்னும் தீவிரப்படுத்தியிருக்கிறீர்கள்" என்று
குறிப்பிட்டார்கள். அதற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். நாங்களும் அவர்களை விட்டுப் பிரிந்து வந்து கொஞ்சம்
காலம் தானே ஆகிறது. எங்கள் ஆட்சி சொல்லிய, செய்த பலவற்றையும்
நீங்கள் செய்கிறீர்கள் என்று அவர்கள் சொல்லியது குறித்து என்னுடைய
மகிழ்ச்சியை நிரம்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆனால் "இந்த 1½ ஏக்கர் நஞ்சை, 3 ஏக்கர் புஞ்சை என்கிறபோது
அதை நான் வரவேற்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்
சொல்கிறபோது, "இன்றைக்கு அதிகமான பேர்களுக்குக் கொடுக்க
வேண்டும். எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர்கள் நாட்டிலே நிலம்
இல்லாமல் இருக்கும்போது இன்னும் அதிகப் பேர்களுக்கு அரசாங்கம்
நிலத்தைக் கொடுக்க வேண்டும்" என்று சொல்லி ஆதரித்திருக்கிறார்கள்.
இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப்பட
வேண்டும் என்ற அடிப்படையில், நாடு இன்றைக்குப் போய்க் கொண்டிருக்கிறது
என்கிறபோது, இந்த அரசும் அந்த வகையில் அந்த நல்லெண்ணத்தைக்
கொண்டிருக்கிறது என்கிற ஒரு நல்ல எண்ணத்தை அவர்கள் சொன்னதற்காக
உள்ளபடியே என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாவட்டத்திற்கு
மாவட்டம் நஞ்சை புஞ்சையினுடைய தாரதம் இருக்கிறது என்றும்
சொன்னார்கள். நஞ்சையாக இருந்தாலும், புஞ்சையாக இருந்தாலும்,

(திரு. எஸ். டி. சோமசுந்தரம்) [1979 நவம்பர் 12

இங்கே சொல்வதற்கு எனக்குச் சங்கடமாக இருக்கிறது. அதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் என்னவென்றால், சொன்னதைத் திரும்பத் திரும்ப ஏன் சொல்கிறோம் என்பது. இரண்டாவது சங்கடம் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி ஏன் நேரத்தை விணாக்க வேண்டும் என்பதுதான். மூன்றாவது நான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய நிலையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இல்லை அவைக்கு வருவதற்கு முன்னாலே படித்துக் கொண்டு வருவார்கள், நான் சொன்னவற்றையெல்லாம் ஞாபகப்படுத்திக் கொள்வார்கள் என்ற எண்ணம் எனக்கு இருந்த காரணத்தால்தான், திரும்பத் திரும்பச் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு மிக்க தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் அவர் கேட்ட விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. முதலிலேயே நான் புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறேன். 6 மாதங்களுக்கு முன்னால் கூட சொல்லியிருக்கிறேன். எவ்வளவு நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது, யார் யாருக்குக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் சொல்லியிருக்கிறேன். அவையில் ஒரு தடவை சொன்னதைத் திரும்பத் திரும்ப சொல்லத் தேவையில்லை. நேரத்தை விணாக்க வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்லவில்லை. அவைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வரும்போது மறந்துவிட்டு வர மாட்டார்கள், ஞாபகத்தில் வைத்திருப்பார்கள், படித்துவிட்டுத்தான் வருவார்கள் என்று நான் கருதிய காரணத்தால்தான், அந்த விவரங்களைக் கொடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-20)

பதிவேட்டிலே வருகிறது. சட்டத் திருத்தங்கள் வரும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப் பார்த்துவிட்டு வருவது தானே நல்லது. இந்தச் சட்ட முன்வடிவிலே குறையிருந்தால், அந்தக் குறைகளைச் சொல்லலாம். நாங்கள் இந்தச் சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருகிறோம். ஆனால் நிறைவேற்றுவது நாங்களல்ல. நிறைவேற்றுவது இந்த மாமன்றம். இந்த மன்றம் நிறைவேற்றுகிறது என்று சொன்னால், இந்த மன்றத்திலே இருக்கி அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும், இங்கு வருவதற்கு முன்பே சட்டத்தை நல்ல முறையில் படித்துவிட்டு வந்து, தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால், இந்த மன்றம் நல்ல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்று சொல்ல முடியும். இதுவரையிலும் உபரியாக அறிவிக்கப்பட்ட நிலத்தினுடைய பரப்பளவு 1,44,334 ஏக்கர்கள். அரசு ஒப்படைத்த உபரி நிலத்தின் பரப்பளவு 1,04,695 ஏக்கர்கள். அரிசனங்களுக்குக் கொடுத்

இருக்கிறார்கள். எல்லோருக்குமே பூரணமாக வயிற்றுக்குச் சோறு போட முடியாவிட்டாலும், இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அரை வயிற்றுக்காவது போட வேண்டும். அவர்களுடைய உயிர் உடலோடு இருக்க வேண்டும். அந்த எண்ணத்தோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அவர்களைப் பட்டினியாகப் போடாமல் அரை வயிற்றுக்காவது சோறு போட வேண்டும் என்ற மனிதாபிமானத்தோடு தான் இருக்கிற நிலத்தை நாம் அதிகப் பேருக்குப் பகிர்ந்து கொடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது உங்களுக்குத் தெரியும். இந்தச் சட்டம் 1961 ஆம் ஆண்டு வந்தது. ஆனால், இவ்வளவு ஆண்டு காலமாக இப்படி ஒரு சிறந்த சட்டம் வரவில்லையே, இப்போது கொண்டு வந்தீர்களே என்று எங்களை நீங்கள் பாராட்டியிருக்க வேண்டும். இவ்வளவு காலமாக 5 ஸ்டேண்டர்ட் ஏக்கர் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களே, இன்றைக்கு 5 ஸ்டேண்டர்ட் ஏக்கர் போதுமா என்று கேட்கிறார்கள். இன்றைக்கு ஆயிரக்கணக்கான பேர்கள் நிலமற்றவர்களாக இருக்கும்போது 5 ஸ்டேண்டர்ட் ஏக்கர் கொடுக்கிற போது, அது சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காகவேதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. பழைய சட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னால், 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தில், தமிழ்நாடு 58/1961, வகைப்படுத்தும் உபரி நிலங்களில் தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டின் நிலச் சீர்திருத்தச் சட்டப்படி ஒரு நபரிடம் உயர்ந்த அளவு 5 ஸ்டேண்டர்ட் ஏக்கர் வரை ஒப்படைக்கலாம். இன்றைக்கு ஏன் இப்படிக் கொண்டு வருகிறோம் என்றால், 1971 ஆம் ஆண்டு ஒரு சட்டம் வந்தது. அரசு நிலங்களைக் கொடுக்கிறபோது, ஒப்படைக்கிறபோது 1½ ஏக்கர் அல்லது 3 ஏக்கர் கொடுக்க வேண்டும். 3 சாதாரண ஏக்கர் புஞ்சை அல்லது 1½ ஏக்கர் நஞ்சை அரசு நிலங்களையும் கொடுக்கிறோம். அரசு நிலம் என்கிறபோது, அது புறம்போக்கு நிலம். அந்தப் புறம்போக்கு நிலம் விளைச்சல் உள்ள நிலமாக இருக்காது. விவசாயத்திற்கு ஏற்றதாக இருக்காது. அப்படி அரசு நிலங்களைக் கொடுக்கிறபோது கூட, நாம் 1½ ஏக்கர்தான் கொடுக்கிறோம், அல்லது 3 ஏக்கர்தான் கொடுக்கிறோம். ஆனால், இந்த நிலம் விவசாயம் செய்து கொண்டிருக்கின்றவர்களிடமிருந்து உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நிலம் என்கிறபோது, இது சாதாரண நிலத்தை விட அதிகமான விளைச்சல் கொடுக்கக்கூடிய நிலம் என்பது நன்றாகத் தெரியும். ஆகவே தான் இதைக் கொடுக்கிறபோது





என்று சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு குறைத்துக் கொடுக்கிறோம் என்று சொல்கிறபோது, இன்றைக்குக் உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு குறைத்துக் கொடுக்கிறார்களே என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு தமிழகத்திலுடைய நிலை என்ன? இன்றைக்கு 32,54,593 சிறிய விவசாயிகள் என்றால், கணக்கைச் சொல்வதானால், கொண்டிருக்கிறார்கள் 1½ ஏக்கர்தான் எவ்வளவு நிலத்தை வைத்துக் சராசரியாகப் பார்த்தால் பாரம்பரையாக 4,26,300 ஏக்கர் நிலங்கள். இருக்கிற நிலை. நிலம் வைத்துக் வருகிறது. இதுதான் இன்றைக்கு சொந்தமாக தான் வைத்துக் விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள், பெரும்பான்மையானோர் இவ்வளவு 50 லட்சம் விவசாயிகள் கொண்டிருப்பவர்கள்கூட தமிழ்நாட்டிலே மொத்தம் 32 லட்சம் பேர் 1½ ஏக்கர் கொண்டிருக்கிறார்கள். இந்த 50 லட்சம் விவசாயிகளிலே சராசரியாக இருக்கிறார்கள். சில இடங்களில் தமிழகத்திலே நிலம் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு வைத்துக் 1 ஏக்கர் அல்லது ¾ ஏக்கர் கூட இருக்கலாம். யார் யார் எப்படி இந்த இருக்கிற விவசாய நிலங்களை எண்ணிப் பார்த்து தான் ஒரு நல்ல கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கொண்டு வந்திருக்கிறது. அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். பெயரை எடுக்க வேண்டும் என்று தான் கொண்டு காலத்திலே இவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே செய்யாததை செய்யாததை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் ஏக்கர் என்பதை சாதாரண நாங்கள் செய்திருக்கிறோம். "5 ஸ்டேண்டர்ட் என்று பொது மக்களிடத்திலே 1½ ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கிறோம், என்பதைப் பணிவன்போடு சொல்லிக் சொல்வதற்காகக் கொண்டுவரவில்லை" பேசும்போது கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் என்று கருதுகிறேன். சட்டத்திற்கு சம்பந்தப்படாததைக் கூட சொன்னார்கள் அனுபவம் மிக்கவர் சொல்கிற அவர் ஒரு அனுபவம் மிக்க உறுப்பினர். கொண்டு வந்தீர்களே" போது அவரே "சட்டத்திற்கு சம்பந்தப்படாததைக் கருதக் கூடாது. இந்த என்று சொல்கிறாரே, என்று யாரும் தவறாகக் நிலம் நிலமற்றவர்களுக்குக் உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக எடுக்கப்படுகிற ஆனால் ஒன்றைச் கொடுப்பதைப் பற்றியதுதான் இந்தச் சட்ட முன்வடிவு. மத ஸ்தாபனங்கள் சொன்னார்கள். இருக்கிற கல்வி ஸ்தாபனங்கள், புதிதாக வருகிற இவைகளுக்கெல்லாம் முதலிலேயே சலுகை இருக்கிறது, கொடுப்பதைப் பற்றியெல்லாம் கல்வி ஸ்தாபனங்களுக்கெல்லாம் நிலம்

சொல்லவில்லையே என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும், 1971 ஆம் ஆண்டு ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது.

(முற்பகல் 11-30)

1971 ஆம் ஆண்டில் ஒரு சட்டம் வந்தது. அப்போது கல்வி நிலையங்கள் மற்றும் மத ஸ்தாபனங்களுக்கு எவ்வளவு நிலம் இருந்ததோ அந்த நிலங்களையெல்லாம் அவைகள் அப்படியே வைத்துக்கொள்ளலாம்; ஆனால் அதற்கு மேல் அந்த நிறுவனங்கள் நிலங்களை வாங்கக் கூடாது, அப்படி வாங்கினால் அது சட்டப்படி செல்லாது என்று சட்டம் வந்தது. இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் சட்ட முன்வடிவிற்கும் அந்தச் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது, புதிதாக ஏற்படும் கல்வி நிறுவனங்களுக்கு ஏதாவது வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களின் கருத்தை அரசு பரிசிலனை செய்யும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக சட்டத்தின் காரணமாக இதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட அதற்க பாதிக்கப்படுமா என்றும் அவர்கள் கேட்டார்கள். இந்தச் பழைய இன்றைக்கு அரசாங்கத்தின் கெஜட்டில் வெளியிடப்படுகின்றதோ 1961 லிருந்துதான் சட்டமாகும் என்பதையும் இந்த நேரத்தில் கட்டுக் கொள்கிறேன். மேலும் இந்தச் சட்டத்திற்கு அரசியல் ...தின் பாதுகாப்பு கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று ...டார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் ...று சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) தமிழ்நாடு இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



பிரிவு 3.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the amendment standing in my name, namely,

"In clause 3, sub-clause (i) (*a*), for the word 'three' substitute the word 'five' and for the words 'one and a half' substitute the word 'three'"

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களின் திருத்தத்தை நான் வழி மொழிகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, I move the following amendments :

(1) "In clause 3, for sub-clause (i) substitute the following:

"in clause (*a*), for the expression 'three standard acres', the expression 'one and a half standard acres' had been substituted;"

(2) "Delete sub-clause (ii)".

THIRU D. V. D'MONTE : I second the amendments proposed by my hon. Friend Thiru Damodaran.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கங்களை விரிவாகச் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவின் அவசியத்தைத், தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களின் வாதம் என்னுடைய திருத்தம் எவ்வளவு தேவையானது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது என்பதை மட்டும் இப்போது சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பற்றி நான் குற்றச்சாட்டு எதையும் சொல்ல விரும்பவில்லை. என்றாலும் ஒரே ஒரு கருத்தை மட்டும் இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'உங்களுக்கு 6 மாதங்களுக்கு முன்பே சட்ட முன்வடிவு பற்றிய புள்ளி விவரங்களைக் கொடுத்திருந்தோமே, அவைகளைப் பார்த்துக் கொண்டு ...ந்திருக்கக் கூடாதா, தெரிந்து வந்திருக்கக் கூடாதா" என்றெல்லாம் கேட்டார்கள். எனக்கிருக்கிற வருத்தமெல்லாம் இந்த நில உச்சவரம்புச் சட்டத்தை எவ்வளவு அலட்சியமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்

என்பதுதான். இப்போதும்கூட 6 மாதத்திற்கு முந்திய புள்ளிவிவரங்கள் தான் வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, கடந்த 6 மாத கால அ இந்த ஆட்சி எவ்வளவு உபரி நிலங்களை தன்வசப்படுத்தியிருக்கிறது எ புள்ளிவிவரம் இன்னமும் உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை.

ஏற்கெனவே அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நிலத்தைப் பிரித்த வேண்டியிருக்கிறது. கடந்த 6 மாத காலத்தில் உபரி நிலத்தை பே எவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், விவரம் இ இல்லை. 6 மாதங்களுக்கு முன்பு என்ன நிலையோ அதுதான் நம சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவில்தான் மாண்புமிகு அமை அவர்களின் பதிலும் இருக்கிறது. எனவேதான் இந்த நில உச்சவ சட்டத்தை இந்த ஆட்சி எவ்வளவு அலட்சியமாகக் கொண்டு நிறைவேற்றுகிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் பேசும்போது, தமிழகத்தில் கைப்பற்றப்பட்ட நிலத்தின் பரப்பு—அதாவது நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படை எடுக்கப்பட்ட உபரி நிலத்தின் பரப்பு—1,44,334 ஏக்கர். இதில் வி களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருக்கும் நிலத்தின் பரப்பு 1,04,695 ஏ இது கூட 6 மாதத்திற்கு முன்னால் இருந்த நிலவரம். இந்த ஆட்சி பத வந்த பிறகு எவ்வளவு உபரி நிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன விவரம் தரப்படவில்லை. நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் இன்னும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டினை இப் ஆட்சியில் இருப்பவர்கள், தேர்தலுக்கு முன்பும், தேர்தலின்போ தேர்தலுக்குப் பிறகும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட பிறகு, ஆட்சியாளர்கள் எவ்வளவு நிலத்தை உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் எ கொண்டிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைத் தந்தால்தான், இ எந்த அளவுக்கு ஆர்வத்தோடு இந்தச் சட்டத்தை நிறை கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியும். அந்த விவரம் எங்களுக்குத் தரப்படவில்லை.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது பட்டினியாக இ னுக்கு ஒரு கை சோறு போடுகிறோம் என்றார்கள். அவனுக்கு மு சோறு போடாவிட்டாலும், ஒரு கை அளவுக்காவது இப்போது றோம் என்று குறிப்பிட்டார்கள். இப்படி ஒரு கை அளவுக்கு சோறு போடுவது என்பது அவனுடைய பசியை மேலும் அதிகப்படு



ன்று மட்டும் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பத்து பேருக்குப் போட்டோம் என்று எண்ணிக்கையைக் காட்டாமல், யாருக்குப் போடுவதானாலும் பசியைப் போக்கக்கூடிய அளவுக்குப் போடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திருத்தத்தைப் பிரேரேபித்த பிறகு திருத்தத்தைப்பற்றி மட்டும்தான் உறுப்பினர்கள் பேசலாம்.

***திரு. க. இராமமூர்த்தி:** திருத்தத்தின் மூலமாக ஐந்து ஏக்கர் என்று உயர்த்துவதன் காரணமாக ஏற்படும் நியாயத்தையும் நான் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது என்றாலும் நான் சுருக்கமாகவே முடித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எந்த அளவுக்கு நாம் செயல்பட்டிருக் கிறோம் என்பதுதான் முக்கியமாகும். அமைச்சர் அவர்கள் மேலும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1971 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத் தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட உபரி நிலத்திலும், புஞ்சை என்றால் மூன்று ஏக்கரும், நஞ்சை என்றால் 1½ ஏக்கரும் தரப்படும் என்று சொன்னார்கள். இந்த அவையிலிருந்து வெளியே போய் திரும்ப வருவதற்குள் உச்ச வரம்பு சட்டத்தில் என்னுடைய கொள்கையை மாற்றிக்கொள்வேன் என்றும் குறிப் பிட்டார்கள். ஆனால் அது உண்மையல்ல என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

"32,54,930 விவசாயிகள் 42,63,000 ஏக்கர் நிலத்தைப் பயிரிடுகிறார்கள். ஆகவே சராசரியாக ஒருவருக்கு 1½ ஏக்கர் நிலம்கூட இல்லை. ஆகவே என்னுடைய சட்ட முன்வடிவு மிக நியாயமானது" என்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சட்ட முன்வடிவு எவ்வளவு அநியாயமானது என்பதைத்தான் இந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது என்று கருதுகிறேன். இன்றையதினம் விவசாயிகளாலே மின்சாரக் கட்டணத்தைக்கூட கட்ட முடிய வில்லை. அந்த அளவுக்கு அவர்களுக்குக் கடன் சுமை இருக்கிறது. பல இடங்களில் விவசாயிகள் மின் கட்டணத்தைக் கட்ட முடியாமல் அவதிப்படு கிறார்கள். அந்த அளவுக்கு வசதியில்லாமல் அவர்கள் இருக்கிறார்கள். கூட்டுறவுக் கடனிலும், அரசாங்கக் கடனிலும் இன்றையதினம் அவர்க உழன்றுகொண்டிருக்கிறார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 12

உபரி நிலத்தை அரசாங்கம் கொடுக்கும்போது, ஒரு நபருக்கு புஞ்சை [illegible] ஏக்கர், நஞ்சையானால் 1½ ஏக்கர் என்று வரும்போது, [illegible] இல்லாதவர்கள், அதாவது வேறு நிலம் இல்லாதவர்கள், [illegible] வேறு தொழில் இல்லாதவர்கள் யார் என்று பார்த்துக் கொடுக்கிறார்கள். இந்த வகையில் பார்க்கும்போது, விவசாயத்தை மட்டும் [illegible] பலர் இல்லை. [illegible] வேறு தொழிலையும் பார்த்துக்கொண்டு விவசாயத்தில் [illegible] லட்சக்கணக்கில் சொல்ல [illegible] நாம் மறந்துவிடக் கூடாது.

[illegible] நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவனைவிட பத்து சென்ட் நிலம் வைத்திருப்பவன் அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறான், பத்து சென்ட் நிலம் வைத்திருப்பவனைவிட ஒரு ஏக்கர் நிலம் வைத்திருப்பவன் அதிகமாக [illegible] இல்லை.

(பிற்பகல் 11-40)

ஆகவே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவு விவசாயி களை நிரந்தரமாகக் கடன்காரர்களாக மாற்றுகிற ஒன்றாகத்தான் [illegible] யாருக்கு உபரி நிலத்தைத் தருகிறார்களோ [illegible] பட்டாளியாக மாறப் போகிறார்கள் என்ற நிலை உருவாகு [illegible] அதிலிருந்து அவர்கள் விடுபட தக்க நடவடிக் [illegible] துணையாக இருப்பதால், என்னுடைய திருத் [illegible] அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு [illegible] கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, the reason why I moved this amendment was that I wanted the Government, irrespective of the fact whether they wanted to give three acres of dry land or 1½ acres of wet land, to express themselves in the Bill in terms of standard acres. If the Government feel that 1½ acres of land are too much, I do not mind their saying that half a standard acre would be given under this particular section which relates to disposal of surplus lands. The hon. Member Thiru Veerasami said that the lands in Ramanathapuram district could not be equated with the lands in Chingleput district. The



1979 நவம்பர் 12] [Thiru A. R. Damodaran]

Hon. Minister replied that the Government would hereafter, consider how they were going to bring different allocations for different districts. Let me tell the Hon. Minister that as long as this Act is in force and as long as this particular section is in force, he will not be able to introduce any Government Order reducing the extent of land in respect of either Ramanathapuram district or Chingleput district because that would go against the spirit of the Act. All these factors were considered when section 40 of the Tamil Nadu Land Reforms Act was taken into consideration, and when the term 'standard acre' was defined. For example, one acre of land in Thanjavur district with a land revenue of more than Rs. 15 would work out to 0.8 standard acre whereas one acre of land in Chingleput district with a land revenue of Rs. 8 would work out to another extent in terms of standard acre. I appreciate the motive of the Hon. Minister though I do not know whether he is bringing satisfaction or happiness by this measure. I agree that if there is only 40,000 or 50,000 acres of land, it is better to distribute it to 25,000 people. However, I wish he had not quoted the example of distribution of poramboke lands while mentioning about the distribution of surplus lands. These two lands are on an entirely different footing. One is cultivated land and the other is uncultivated land and, therefore, distribution of poramboke land has no relevance to the distribution of surplus land under the Land Reforms Act. I only want to bring home to the Hon. Minister that if he falls into the temptation of altering the conception of 'standard acre', many complications may arise.

Sir, reference was made to section 59 of the Tamil Nadu Land Reforms Act about the area held by cultivating tenants. That has nothing to do with this amendment because this Amending Bill deals with section 94 (2). What I wanted to mention was that, under that particular section, a dispossessed tenant was entitled to a maximum of three standard acres. The Hon. Minister, by reason of the present Amending Bill, brings down the ceiling from three standard acres to 3 acres of dry land and 1-1/2 acres of wet land. I said that, by this, the Hon. Minister was likely to have problems in the future because he would have to take the extra land from the cultivating tenant and distribute it to other

tenants. It will create certain social problems. However, if the Government feel that they will be able to take care of this problem, I have no objection at all. But, I have consistently held the view that there is no point in our taking something from a poor tenant and giving it to a poorer tenant. Because the ceiling for the dispossessed cultivating tenant is sought to be reduced, I wanted the Hon. Minister to take this point into account.

Sir, the Hon. Minister gave the figures; but I would request him not to blame Members on the Opposition for not having the figures. He has probably got three Secretaries, 15 Deputy Secretaries and 25 Under Secretaries to feed him with information. Let me tell him that we are not able to get, in our Legislature Library, even the Act as amended. I will refer to that at a later date. If the Hon. Minister had been in the Opposition at some time or other in the Legislative Assembly or the Council, he might be in a position to appreciate our difficulties. Having sat in the Treasury Benches and in the cool halls of the Lok Sabha, he will not be aware of our problems. I would like to tell him that in considering these Bills, we in the Opposition would welcome if he enables some of us, who want more information, to have a discussion with the Revenue Secretary on the intricacies of the matter. The Revenue Bills are extremely complicated and it is not surprising that Members of the Opposition do not understand, sometimes even the Ministers in charge find it difficult to explain the provisions of the Act. I, therefore, request the Hon. Minister to bear with us if we are not quoting proper statistics and it is his duty to furnish us with statistics.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என் காலதாமதம் ஆகிறதென்று கேட்டார்கள். இதற்கு முன்னாலேயே இதை நான் விளக்கியிருக்கிறேன். நில உச்ச வரம்புச் சட்டத் தைக் கொண்டு வருகிறபோது, நிலமற்ற ஏழைகளுக்கு உபரி நிலத்தை எடுத்துக் கொடுப்பதிலே உள்ள சங்கடங்களை எண்ணிப் பார்க்காமல், அப்போது சட்டம் கொண்டு வந்தவர்கள் விட்டுவிட்டார்கள் என்று சொன்னேன். உபரியாக எடுக்கப்படுகிற நிலத்தில் என்ன பொருள் விளைகிறது, அந்தப் பொருள் களுக்கு என்ன விலையைப் போட வேண்டும், எத்தனை மடங்கு பணத்தை காம்பென்சேஷனாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது, சில நிலங்களில் சில ஆண்டுகளில் நெல் விளையும்



சில காலங்களில் கடலை விளையும்; சில நேரங்களில் பணப் பயிர்களைப் போடுவார்கள். இப்படிப்பட்ட நிலத்திற்கு அதிகாரம் பெற்ற அதிகாரி மதிப்பைப் போடுகிறபோது, அறுவடை காலங்களில் ஒரு விலையையும், அறு வடை இல்லாத காலங்களில் ஒரு விலையையும் நிர்ணயிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் போக்கி நாத்தின் அடிப்படையிலே இந்த அரசாங்கம் விலை போட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லும்போது, ஆறு மாதங்களுக்கு முன்பு கொடுத்த விவரத்தையே இங்கே கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆறு மாதங்களுக்கு முன்பே அன்றைக்கு என்ன நிலை இருந்தது என்பதைப் பார்த்துக் காட்டியிருக்கிறேன். இன்றைக்கு உள்ள நிலைமையை இப்போது சொல்லுகிறேன். இன்றைக்கு எடுக்கப்பட்ட நிலத்தின் பரப்பு 1,44,534 ஏக்கர் என்றும் அவற்றில் உபரி நிலமாகக் கருதி ஒப்படை செய்யப்பட்டவை 79,906 ஏக்கர் என்றும் சொன்னேன். முதலிலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இப்போதிருக்கிற நிலச்சுவாந்தாரர்களை நாங்கள் ஏழைகளாக ஆக்கவில்லை. ஆனால் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் கொடுக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறேன். நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுக்கிறபோது புறம்போக்கு நிலத்தைக் கொடுத்தால், அதிலே விவசாயம் செய்வது சங்கடம். நில உச்சவரம்பின் மூலம் வருகிற மதிப்புள்ள நிலத்தை தகுதியுள்ளவர்களுக்கு மூன்றரை ஏக்கர், மூன்று ஏக்கர் என்று கொடுத்தால், அது நிலமற்றவர்களுக்கு உரிமையாகிறது. இதை 20 ஆண்டுகளுக்கு முன்பே கொண்டுவரவில்லையே என்று வேதனைப்படுகிறேன். ஆகவே இப்போது கொண்டு வந்திருப்பதற்காக இதை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொள்கையை நான் மாற்றிக்கொள்வதாகச் சொன்னார்கள். கொள்கையை நான் மாற்றிக்கொள்ளமாட்டேன். முற்போக்குக் கருத்துக்கள் வருகிற போது, அதை நான் வெகுவேகமாக ஏற்றுக்கொள்கிறேன். நான் வெளியே சென்றுவிட்டு உள்ளே வருகிறபோது முற்போக்குக் கருத்து வருகிறதென்றால், அதை ஏற்றுக்கொள்வேன், கொள்கையை மாற்றிக்கொள்வேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அமைச்சர்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லுவதற்கு செயலாளர்கள் இருக்கிறார்கள், துறைச் செயலாளர்கள் இருக்கிறார்கள்; எங்களுக்கு யாரும் இல்லை, ஒன்றும் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 12

தான் ஆதாரம் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்லு வேண்டுமென்று. இப்போது சட்டமாக வருகிறபோது அந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்று செயலாளர்கள் எங்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறார்கள். திருத்தங்களைப் போடுவதற்கு வரைக்கும், பாசன நிலத்தின் அளவைக் குறைப்பது, கட்டுவதா என்பதை அமைச்சரவைதான் முடிவு செய்கிறது. இதிலே சொன்னால் பிரச்சினை. இந்த ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதை முப்பது என்பதா, மூன்று என்றா குறைக்க வேண்டும் என்பது எங்களுடைய கொள்கை. இந்தக் கொள்கையை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை சட்டத்துறைச் செயலாளரும், வருவாய்த் துறை செயலாளரும் யோசனை சொல்லுவார்கள்.

(பிற்பகல் 11-50)

அதிலே மாற்றமில்லை. இதுவரையிலே நிலமற்ற ஏழைகளுக்கு நிலத்தைக் கொடுக்கிறபோது, அதை எப்படிக் கொடுக்கிறது என்று சொல்லுகிறபோது, அதைக் கொடுப்பதற்கு என்று விதி முறைகள் வைத்திருக்கிறார்கள். அதை யார் குத்தகை எடுத்து பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். குத்தகை எடுத்திருந்தவர்கள் முன்னுரிமை பெறுபவர்கள் என்று இருந்தால், அவர்களுக்கு முதலிலே முன்னுரிமை கொடுக்கிறோம். முன்னுரிமை கொடுப்பது என்பது முதலிலே இருக்கிறது. அதற்கு அடுத்து மூன்று ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலம் இருந்து, அதிலேயும் இரண்டே ஏக்கர் நிலம் இருக்கிறது. அப்படிப்பட்ட முன்னுரிமை இருக்கிறது. அவர் போக, எவ்வளவு நிலம் இருக்கிறது? அவர்களுக்கு 1½ ஏக்கர் என்று கொடுக்கிறோம், அதிலேதான் சிறிது மாற்றம். அவர்களுக்கு ஏற்கெனவே உள்ள ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று சொல் கொள்ளும் முன்னுரிமை மூன்று ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் வைத்துக்கொள்ளலாம் என்று கருத்து கொடுக்க வேண்டுமென்று மூன்று ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குக் குறைத்தவர் மாற்றம் செய்திருக்கிறார்கள். இதிலே சட்டமே படிக்க வேண்டியதில்லை. அந்த முன் உரிமையிலேதான் எப்படிக் கொடுக்க வேண்டியதில்லை. விளக்கத்துக்காக இருக்க வேண்டியதில்லை. இதிலே எண்ணங்கள் தெளிவாக இருந்தால் போதும். இதற்குச் சட்டம் தேவையில்லை. நம்முடைய எண்ணங்கள் தெளிவாக இருக்க வேண்டும். மக்களுக்கு எதைச் செய்கிறோம் என்பது நமக்குத் தெளிவாக



1979 நவம்பர் 12] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

இருந்தால் போதும். சட்டம் எதற்கு? சட்டத்தை வைத்து அதற்குப் பின்னாலே நடைமுறைகளை வைத்து சட்டத்தை ஆக்குகிறோம். அதுதான் என்னுடைய ஆழமான கருத்து என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். யார் ஏற்றுக்கொள்வார்களோ, யார் ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ என்று பார்ப்பதில்லை. சட்டத்தை நாம் படித்துக்கொண்டு போவதில்லை. அந்த எண்ணங்களை வைத்து இந்த எண்ணங்களுக்கு ஏற்ப சட்டம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அப்படி இல்லாவிட்டால், சட்டத்தை மாற்ற வேண்டு மென்பதுதான் என்னுடைய கருத்து. அதுதான் என்னுடைய எண்ணம். இதற்கு சட்டத்தைப் படிக்க வேண்டியதில்லை. சட்டம் தேவை என்று இதைக் கொண்டுவருவதற்கு சொல்லமாட்டேன். சட்டத்தைப் படித்து விட்டுத்தான், அந்தச் சட்டத்தின் விளக்கத்தை வைத்துத்தான் சொல்ல வேண்டும் என்பது தேவையில்லை. மக்களுடைய எண்ணத்தைப் படித்து விட்டு, அதைத் தெரிந்துகொண்டு அந்த மக்களுக்கு எதைச் செய்வது என்று முடிவு செய்து அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதுதான் எனக்குத் தெரிந்தது என்று என் மொழியிலே பேசுகிறேனே தவிர வேறல்ல. 13 (2)-ல் எப்படி இருக்கிறது, அதை விட்டுவிட்டு சட்டத்திலே எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டிருப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்டாண்டர்ட் ஏக்கரில் நிர்ணயிக்க வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று அன்றைக்குச் செய்தார்கள் என்றால், 1962-ல் ஒரு பெரிய குழு போட்டு, மாநிலம் பூராவும் சுற்றிப் பார்த்து, எந்தெந்த நிலத்தை எப்படி ஸ்டாண்டர்ட் ஏக்கர் ஆக்குவது, எதை எப்படி ஆக்குவது, மூன்று ஏக்கரை ஒரு ஏக்கராக எப்படி ஆக்குவது, ஐந்து ஏக்கரை எப்படி ஒரு ஏக்கர் ஆக்குவது, அல்லது 8 ஏக்கரை எப்படி ஒரு ஏக்கராக்குவது என்றெல்லாம் போட்டார்கள். அன்றைக்குப் போட்டார்கள். அன்றைக்கும் இன்றைக்கும் எத்தனையோ வந்துவிட்டது. எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாற்றங்கள் வந்திருக்கின்றன. எவ்வளவோ நீர்ப்பாசனத் திட்டங்களிலே எவ்வளவோ இடத்திலே எவ்வளவோ கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள். அன்றைக்கு இருந்ததற்கும், கணக்கு போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக இன்றைக்கு இன்றைக்கு இருக்கின்றதற்கும் வித்தியாசம் இருக்கிறது. பிறகு ஏக்கர் என்று அதையெல்லாம் எப்படிச் செய்ய வேண்டும் என்றால், திரும்பப் பார்க்க வேண்டும். அப்படிப் போய்ப் பார்க்க வேண்டும். தேவையான வைத்துக்கொள்ள வேண்டும். சட்டத்தை வைத்துக் கொண்டு மிரட்டுவது பார்த்தால்தான் தெரிகிறது.

என்று இருக்கக் கூடாது. நேராக ஆளைப் பார்க்க வேண்டும். நீங்கள் ஜாதகம் கணித்து, அதைப் படித்து, இதுதான் ராமசாமி, இதுதான் கோவிந்தசாமி என்று கண்டுபிடிப்பதைவிட, அவர்களை நேராகக் கண்டுபிடித்து இவர்தான் ராமசாமி, இவர்தான் கோவிந்தசாமி என்று சொல்வது எவ்வளவு இலகுவோ, அதுபோல இந்த [illegible] எக்கரை வைத்துக்கொள்வதை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள், "இப்படியெல்லாம் இருக்கிறது. இப்படிச் செய்யலாமே" என்று யோசனையைச் சொன்னார்கள். நான் நல்ல யோசனை என்று சொன்னேன். அங்கத்தினர் திரு. வீராசாமி சொன்னவுடனே நாம் ஏற்றுக்கொள்வதா என்று நான் எண்ணவில்லை. சொன்னவுடனே ஏற்றுக்கொண்டேன். அவர் சொன்ன யோசனை ஏற்றுக்கொள்ளக் கூடியது. நல்ல யோசனை என்று சொன்னேன். அதற்கு என்ன காரணம்?

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

அது மட்டுமல்ல. அண்ணா அவர்கள்கூட என்ன சொல்லியிருக்கிறார்கள்? மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது மாற்றான் தோட்டத்து மல்லிகையல்ல. பக்கத்துத் தோட்டம் இது. பக்கத்திலேயே இருக்கின்ற தோட்டம்தான். மாற்றான் தோட்டம்கூட இல்லை. ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால், ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அது உங்களுக்குத் தெரியும். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த அளவில், உங்களுடைய எண்ணங்கள் தெளிவாக இருந்தால், ஏற்றுக்கொள்வோம். இதிலே சில மாற்றங்கள் பண்ணுகின்றார்களே என்று சங்கடப்படுகின்றார்கள். ஏழைகளுக்கு நன்மை ஒன்றுமே இல்லையே என்று சொல்லவில்லை. பணக்காரர்களுக்குக் கஷ்டம் வருமே என்பதுபோல் சொல்கிறார்கள். நாட்டுடைய நிலைமை என்ன என்று பார்க்க வேண்டும். ஏழைகளைப்பற்றி அவர்களுக்கு நெஞ்சிலே இருந்தால், இதை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்கமாட்டார்கள். நாட்டிலே இன்றைக்கு 50 லட்சம் பேர்களில், 32 லட்சம் பேர்கள் ஒரு ஏக்கருக்குக் குறைந்து, முக்கால் ஏக்கருக்கு, 1½ ஏக்கருக்கு, 1¼ ஏக்கருக்குக் குறைந்து வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு இருக்கின்ற தமிழ்நாட்டு புள்ளிவிவரப்படி 50 லட்சம் பேர்களில் 32 லட்சம் விவசாயிகள் முக்கால், ஒன்றரை ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். நிலமற்ற ஏழைகளுக்குக் கொடுப்பது என்று சொல்லும்போது, ஏன் ஐந்து ஏக்கர் வரை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆறு ஏக்கர் கொடுக்க



வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியென்றால் நிலம் இல்லாதவர்களுக்கு அல்லவா கொடுக்க வேண்டும்? நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கொடுப்பதாக அல்லவா சொல்கிறீர்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் வாயாலேயே சொல்லியிருந்தால், கொஞ்சம் மகிழ்ச்சியாக இருக்கும். நிலம் உள்ளவர்களுக்கு நிலம் கொடுப்போம் என்கிறீர்கள். அவர்களுக்குக் கொடுக்கிறபோது, காம்பென்சேஷனிலே பாதியைக் குறைத்து, பாதியை இந்த அரசு போட்டு அவர்களுக்குக் கொடுத்தால் நன்றாக இருக்குமே, அதை அவர்கள் நிலமற்ற ஏழைகள் ஆயிற்றே என்று சொல்லியிருந்தால், நான் வரவேற்றிருப்பேன். இப்படி ஏழை விவசாயிகள் எல்லாம் கஷ்டப்படுகிறார்களே, நிலமற்றவர்களுக்குக் கொடுக்கிறீர்களே, அவர்களிடம் பணம் வாங்குகிறீர்களே, இது கூடாது என்று சொன்னால்கூட, அரசு இன்னும் ஒரு படி முன்னே போகும் என்று சொல்லிக்கொள்கிறேன். அங்கத்தினர் திரு. ...ல்சிவன் அவர்கள்கூட நிலத்தில் ஏமாற்றுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். பினாமி நிலத்தை நாம் எடுக்கிறோம், அப்படி பினாமி நிலத்தை எடுப்பதற்கு என்று ஒரு மக்கள் குழு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்த மக்கள் குழுவை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதையும் இந்த அரசு செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

THIRU K. RAMAMOORTHY : Sir, I press my amendment since the Hon. Minister has not come forward with a request to withdraw.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். அவருடைய ரெக்குவஸ்டை நான் ஏற்றுக்கொள்வது என்பதல்ல. உங்களுக்குச் சட்டத்தை மறுப்பதற்கு உரிமையிருக்கிறது. இதிலே ஏன் ரெக்குவஸ்ட் பண்ண வேண்டும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன் என்று சொல்லுங்கள். அது சரியாக இருந்தால் ஏற்றுக்கொள்கிறேன். ரெக்குவஸ்ட் என்பதற்கு இந்த அவையிலே இடமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I press the amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 3, sub-clause (i) (a), for the word 'three' substitute the word 'five' and for the words 'one and a half substitute the word 'three'".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

THIRU A. R. DAMODARAN : Sir, I withdraw my amendment whether there is a request or not.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, the word 'request' is only a matter of parliamentary courtesy.

திரு. தாமோதரன் அவர்களுடைய திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 48/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(நண்பகல் 12-00)

(2) 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

THIRU K. RAMAMOORTHY : Sir, I move—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1979 (L.A. Bill No. 49 of 1979), as passed by the Assembly, be referred to a Select Committee".

THIRU V. THANGAPANDIAN : Sir, I second the amendment.

* திரு. க. இராமமூர்த்தி : துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை, இந்த அவையின் உறுப்பினர்களடங்கிய ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டுமென்ற என்னுடைய திருத்தத்தை ஒட்டி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, மிகத் தேவையான ஒரு சட்டமுன்வடிவை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனை வரவேற்கின்ற நிலையிலே, ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அது இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டிய கருத்து இல்லை யென்றாலும், இந்தச் சட்ட முன்வடிவால் யாருக்கெல்லாம் பலன் கிடைக்கிறதோ அவர்களைப் பொறுத்த கருத்து என்ற அளவிலே அதைச் சொல்ல விரும்புகிறேன்.

---

@ 690-693 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

புதியதாக எந்தப் பகுதிகளுக்கெல்லாம் இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுகிறதோ, அதாவது நகரை ஒட்டிய மற்றைய பகுதிகளுக்கு அமல்படுத்தப்படுகிறதோ, அந்தப் பகுதிகளிலே நிலங்களை வாங்கியவர்கள் ஹவுசிங் போர்ட், எம்.எம்.டி.ஏ. (Housing Board, M. M. D. A.) ஆகியவற்றுக்கு டெவலப்மென்ட் சார்ஜ் என்று செலுத்தியிருக்கிறார்கள். இப்போது டவுன்ஷிப்புகளையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவரும் நேரத்திலே, அவர்கள் மேலும் அதிகமாகப் பணம் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அது குறித்து அமைச்சரவர்கள் இப்போது பதில் தர முடியாவிட்டாலும், அதை கவனத்திற்குக் கொண்டு வர இந்தச் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தை வாய்ப்பாகக் கருதி சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லி, மிக அதிகமான பேர்களுக்குப் பயன் தரும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக அமைச்சரவர்களைப் பாராட்டி, அமைகிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Sir, I hope the Hon. the Minister for Revenue will be happy because this is an amendment which I welcome, as it will extend relief to tenants in various urban areas. Sir, this Act was introduced in 1922 and various amendments have been carried out in 1955, 1960, 1965 and 1973 and much of the confusion has arisen because of the powers of notification of the Government under section 1(2) and section 2(1) (i). In fact, if one traces the history of this Act over the past 30 years, one finds that it has been extended to various Municipalities or in respect of one Municipality at some stage it has been withdrawn and at another stage, it has been introduced; and in 1973 almost all the Municipalities were notified as coming within the City Tenants' Protection Act. I am glad that today the Hon. Minister has brought an amendment whereby he seeks to give protection to the tenants in all Municipal areas, though they have already been notified under the Act. In other words, if my understanding is correct, all Municipalities, all areas which are already covered by the Act at various stages will now be covered by this Act on a particular date which will be the date of publication of this Amending Act. In other words, if it is published on November 20, all the tenancies created prior to November 20 will be protected in all Municipal areas. As far as the Townships are concerned, the Government have taken the power under Schedule II (1) to notify a Township under this Act. The only thing that causes a little confusion in our minds is the classification of residential and non-residential purposes which has led to a great



deal of litigation and a voluminous case history in Courts. That is why when my hon. Friend Thiru Ramamoorthy suggested that this Bill should be referred to a Select Committee I felt it was necessary because this is an Act which is 55 years old. Some cases have gone even to the Privy Council in 1937 and in the light of the various Court judgments, I think the Government could bring in a comprehensive amendment to this Act because various loopholes have been pointed out by Courts.

The Act was extended to Cuddalore Municipality, I think, in December 1955. In 1960, the application of the Act was withdrawn in respect of Cuddalore Municipality for some reason which I will not go into. In 1965, it was re-notified. In 1973, the Government issued notifications saying that under section 1 (i) about 40 or 50 Municipalities would be exempted from the provisions of this Act. Again, in 1975, another G.O. was issued by the Government notifying that various Municipalities were exempted for 'residential' and 'non-residential' purposes under section 2 (1) (i) of the Act. A doubt arose whether the protection of this Act would be given to Cuddalore Municipality only in respect of tenancies that existed prior to 1965 or to those that existed prior to 1975. The Court ruled that protection must be given only to tenancies that existed prior to 1965 and not to those that existed prior to 1975. The reason why I am pointing this out is that in the issuance of G.O.'s various ambiguities arise. I am glad that this Bill clearly mentions about all areas. In fact, I would request the Government to give the widest possible publicity to this measure because this will be a very beneficial measure to tenants in these areas. I am aware that many of them have built buildings and they cannot be evicted. We must appreciate this fact and give them the maximum compensation because the Act provides for this. I hope that maximum publicity will be given to this enactment which will be of great benefit to the citizens living in over 100 Municipalities and in the Corporation areas of Madras City and Madurai.

The only thing that I would like to mention is that in extending this to the townships, the Government should make it clear whether they propose to extend it only for residential buildings or for non-residential buildings because doubts have arisen in the past. If the Government make their intention clear, then, it would help the tenants in those areas to clarify their own minds on this subject.

[Thiru A. R. Damodaran] [1979 நவம்பர் 12

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசினுடைய பொது நோக்கத்தை நான் சொல்லிவிட முடியாது. இந்த மாதிரிச சீர்திருத்தங்களில் வேகத்தைக் காட்ட வேண்டுமே தவிர, இருக்கிற சீர்திருத்தங்களை முடக்கச் சொல்லக் கூடாதென்றுதான் சொன்னேன். அரசு அதை ஏற்றுக்கொள்வதாக

Sir, there is another reason why this Bill should be referred to a Select Committee. The Hon. Minister, in his previous speech, said that he would have welcomed suggestions for paying half the amount of compensation. But, my philosophy is never to deprive any person of any compensation. You can deprive persons of their land, property, etc., but they must be compensated. That is my view and I do not expect all political parties to accept it.

MR. DEPUTY CHAIRMAN: The Hon. Minister said that half the amount would be paid by tenants and another half would be given by Government. He did not say anything about depriving any person of anything.

THIRU A. R. DAMODARAN: My understanding was otherwise, Sir.

நான் சொல்லவில்லை.

* THIRU A. R. DAMODARAN: What I want to mention is that under section 7 of the Act, the landlord who is unable to evict the tenant according to the old amendment of 1960 is entitled to fixation of fair rent which will be 25 per cent above the rent that existed in 1960. While I agree that the tenants should be protected from eviction, I still do not think, in view of the increase in land values, that the Government could deprive the landlord of his legitimate rent. Twenty-five per cent over the rent that existed in 1960 is no rent at all and it is against the principles of equity and justice. While the tenant should be protected from eviction, there must be some consideration also for the escalating values in land over which the landlord will have to pay wealth tax, urban land tax and various other taxes. I, therefore, feel that Thiru Ramamoorthy's suggestion that this Bill should be referred to a Select Committee is a very good suggestion, although it is too late because the Assembly has passed the Bill and the Assembly has been adjourned. Thiru Ramamoorthy wants the Bill to be referred to a Select Committee. I fully support this measure and it is the duty of the Government Whip who is not here, at least while the Bills are discussed, to collect the Members of this Hou-



1979 நவம்பர் 12]

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இதிலே சில சட்ட நுணுக்கங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும்கூட, இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக நகரங்களுக்கெல்லாம் விஸ்தரிக்கப்படக்கூடிய இந்தச் சட்டங்களை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதிலே இருக்கின்ற குறைபாடுகளை அரசாங்கம் எதிர்காலத்திலே பரிசீலிக்கும் என்று நான் நம்புகின்றேன். இந்தச் சட்ட முன்வடிவில் காலங்களைப் பொறுத்தவரையிலும், எந்தெந்தத் தேதிகளிலேயிருந்து ஒரே மாதிரியான நிலைமைகளை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இன்று பொதுவாக இருக்கின்ற நிலைமைகளை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னை மாநகராட்சியோடு பல ஊராட்சிகள் இணைக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியினுடைய எல்லை விஸ்தரிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் உண்மையிலேயே குத்தகைதாரர்களுக்கு ஒரு பாதுகாப்பு மிக மிகத் தேவை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே இந்தச் சட்டத்தின் அடிப்படையில் குத்தகைதாரர்கள் சில நேரங்களிலே பாதிக்கப்படுவார்கள் என்கிற நிலைமை மாறி, நகரங்களிலே உள்ள இன்றையதினம் ஒரு பாதுகாப்புக்கான சூழ்நிலை உருவாகியிருப்பது, வரவேற்கத்தக்க ஒன்றாகும். படியே குத்தகைதாரர்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதை நான் நினைவூட்டுவது நல்லது என்று கருதுகிறேன். பல ஆண்டு காலமாக தனியார் நிலங்களில் குடிசை போட்டுக்கொண்டிருப்பவர்களானாலும் சரி 25 வர்கள் ஆனாலும் சரி, வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, குத்தகையை இன்றைய அல்லது 50 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட குத்தகையை இன்றைய தினம் அதிகப்படுத்தவும் முடியாமல் சொந்தமாக்கிக் கொள்ளவும் முடியாமல் ஒரு சூழ்நிலை இருந்ததை உணர்ந்ததால்தான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அப்படிப்பட்டவர்களுக்கு குடிசை மாற்று வாரியம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர் 12

ஒன்றை சென்னையில் ஏற்படுத்தி ஏழையெளியவர்களுக்கு வீடுகள் கட்டிக்
கொடுக்கலாம் என்கிற திட்டத்தைப் பரிசீலித்தது. மாண்புமிகு முதலமைச்சர்
திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே ஒரு அறிவிப்பை வெளி
யிட்டார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரை, மாநகராட்சிக்குச் சொந்த
மான நிலமாக இருந்தாலும் சரி, அரசுக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும்
சரி, அங்கு குடிசைகளைக் கட்டிக்கொண்டிருக்கும் குடிசைவாசிகளுக்கு
எல்லாம் ஒரு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் பட்டா கொடுக்கும்
நிலையை அரசு உருவாக்கும் என்று சொன்னார்கள். சென்னையைப்
பொறுத்தவரை, இன்றையதினம் 600 குடியிருப்புகள் இருக்கின்றன. குடிசை
வாசிகள் தனியார் நிலங்களிலோ, மாநகராட்சி நிலங்களிலோ அல்லது அரசு
நிலங்களிலோ குடிசைகளை அல்லது வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கிறா
கள். அவர்களுக்கெல்லாம் ஒரு பாதுகாப்பற்ற நிலை இருந்து வந்தது
முன்னேற்றமான ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதுபோல, குத்தகை
தாரர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தி
அடிப்படையில் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதுபோல, இன்னமும் எதிர்
காலத்திலே அவர்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் இப்படிப்
பட்ட சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவர
வேண்டும். அதிலும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
பரந்த மனப்பான்மை கொண்டவர்கள். அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரி
யங்களையெல்லாம் நமக்கு நிறைவேற்றித் தருவார்கள். அப்படிப்பட்டவர்கள்
இன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சராக இருப்பதால், ஒரு நல்ல
சட்டத்தைக் கொண்டு வந்து சென்னை மாநகரிலே, நகரியங்களிலே, தனியார்
நிலங்களில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்கள், அரசு நிலத்தில் வீடு கட்டிக்
கொண்டிருப்பவர்கள், நகரியங்களுக்குச் சொந்தமான இடங்களில் வீடுகளைக்
கட்டிக்கொண்டிருப்பவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் ஒரு நியாயமான
முறையில் விலையை நிர்ணயித்து, பட்டா செய்து கொடுத்தாலும் சரி,
அவற்றையெல்லாம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன்.

குடிசைமாற்று வாரியம் சென்னையைப் பொறுத்தவரை, இன்னும் சுறு
சுறுப்பாகச் செயல்பட்டு, 600 குடியிருப்புகளில் குத்தகைதாரர்களாக இருக்
கிறார்களே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் உடனடியாக
நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட
உடனேயே அறிவிக்கப்பட்ட திட்டம் இது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்
னால் ஏதோ ஓரிரு இடங்களில் ஏதோ சம்பிரதாயத்திற்காக விழாக்கள் எடுத்
திருந்தாலும், 600 இடங்களில் இதற்கான திட்டங்கள் இன்னும் மேற்கொள்ளப்
படாமல் இருக்கின்றன. நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்களுக்கு



1979 நவம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அந்த நிலத்தை விரைவில் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைக
களை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட
நல்ல சட்டங்களை வரவேற்கிறேன் என்று சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு
மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, பொதுவாக இந்தச் சட்ட முன்வடிவையும் வழக்கம்போல்
எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள். அதனால் இதிலே அதிக நேரம் பேசு
வதற்குத் தேவையில்லை. இந்தச் சட்ட முன்வடிவின்படி, அரசு மூலமாக
எந்த நாளில் அறிவிக்கப்படுகிறதோ அந்த நாளிலிருந்து இதற்கு முன்னால்
யார் யார் குடியிருந்தார்களோ அவர்களுக்கு இது பாத்தியதையை
உண்டாக்குகிறது என்பது சட்டம். அறிவிக்கிற நாளிலிருந்து அதற்கு
முன்னால் நீதிமன்றத்திற்குச் சென்றவையாக இருந்தாலும், நீதிமன்றங்களில்
இருப்பவை எல்லாம் செல்லாது என்பது ஒன்று.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இது நல்ல சட்டம்
என்று சொல்லி, மக்களுக்கெல்லாம் இந்தச் சட்டம் நன்றாகத் தெரியும்படி நல்ல
முறையில் விளம்பரம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச்
சட்டம்பற்றி பொதுமக்களுக்கு நன்றாகத் தெரிய வேண்டுமென்பதற்காகத்
தான் செய்தியாளர்களையும் நாம் சட்டமன்றப் பேரவை, சட்டமன்ற மேலவை
ஆகிய இடங்களில் அனுமதித்திருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் இதுபற்றி
விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்தித் துறையில் நீண்ட
காலமாக, பல ஆண்டுகாலமாக அனுபவமும் திறமையும் பெற்றவர்கள். மக்க
ளுக்கு நல்ல முறையில் பயன்படும் வகையில் அவர்கள் நிச்சயமாக செய்திகளை
வெளியிடுவார்கள். அப்படி அவர்கள் சொல்லிய பிறகும், மக்களுக்குத்
தெரியாவிட்டால், அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை
மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கிறபோது, நிலத்
தின் விலை ஏறியிருக்கிறது, அதற்கு என்ன செய்வது, பழைய வரியைக்
கொடுப்பதா, இல்லை என்ன செய்வது என்கிற சந்தேகத்தைச்
சொன்னார்கள். இன்றைக்கு கடைசி மூன்று ஆண்டு சந்தை
விலையைப் பார்த்தால், சந்தை விலையில் சராசரி விலைக்கு
ஏற்ப வாங்கிக்கொள்ளலாம் என்று சட்டத்தில் வழிவகை இருக்கிறது. இன்
றைக்கு இருக்கிற விலைக்கு ஏற்றவாறும், அதற்கான குத்தகைக்கு ஏற்ற
வாறும், வரி வாங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து வருஷத்திற்கு
ஒரு முறைதான் குத்தகையை ஏற்றலாம். ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை

தான் ஏற்ற வேண்டுமென்று இருக்கிறது. இல்லாவிட்டால் ஒவ்வொரு வகு
தாரும் எதிர்ப்பிடுவார்கள். அதுவும் 25 சதவிகிதம்தான் ஏற்றலாம் என்று
இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் 25 சத
விகிதம் போதாது என்று கருதினார்கள். இன்றைக்கு 25 சதவிகிதம் என்று
தான் இருக்கிறது. இவற்றைப்பற்றியெல்லாம் வேண்டுமானால் பின்னால்
யோசிக்கலாம் என்பதைமட்டும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

வேறு எந்த உறுப்பினரும் இதுபற்றிச் சந்தேகம் எழுப்பவில்லை. அரசு
மூலம் அறிவிக்கப்படும் நாளிலிருந்து எல்லோருக்கும் உரிமை வந்து விடுகிறது.
1955 ஆம் ஆண்டிலே, 1960 ஆம் ஆண்டிலே, எல்லாம் சட்டங்கள் வந்தன
என்றாலுங்கூட, அவைகள் நீதிமன்றங்களில் இருப்பதாக மாண்புமிகு உறுப்
பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். பல வழக்குகள் இன்றைய
தினம் நீதிமன்றங்களில் இருக்கின்றன. ஆனால் அரசு அறிவிக்கும்
நாளைக்குப் பிறகு, அந்த வழக்குகள் எல்லாம் செல்லுபடியாகாது. இன்றைக்கு
இந்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்படுகிறது. இந்தச் சட்ட முன்வடிவின்
அடிப்படையில்தான், வேண்டுமானால் அவர்கள் புதிதாக வழக்குகளைப்
போட்டுக்கொள்ளலாம் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்
திருத்தத்தை வற்புறுத்துகிறாரா, இல்லை திரும்பப் பெறுகிறாரா?

THIRU K. RAMAMOORTHY : I withdraw my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள
பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு, சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979) ஆய்விற்கு
எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை
வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, தலைப்பு ஆகியவை, அவையின்
முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே,
“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு, சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979) நிறை
வேற்றப்படவேண்டும் ”

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள
பிரச்சினை—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு சென்னை மாநகரக் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/1979) நிறை
வேற்றப்பட வேண்டும் ”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(3) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்
லுபடியாக்குதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 66/1979)

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I beg to move—

“ That the Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, @ 1979 (L.A. Bill No. 66 of 1970), as passed by the Assembly, be taken into consideration ”.

Sir, I commend the motion for the acceptance of the House.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட
தீர்மானம்—

“ சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1979 ஆம்
ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்லுபடியாக்குதலும்) சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979) ஆய்விற்கு
எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ”

@ 694-696 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 11

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களும், திரு. தங்கப் பாண்டியன் அவர்களும் திருத்தங்களை முன்மொழிவார்கள்.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the amendment standing in my name, namely,

"That the Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979 (L.A. Bill No. 66 of 1979) be referred to a Select Committee of the Council, consisting of seven Members of this House".

THIRU A. BALASUBRAMANIAM : Sir, I second it.

THIRU V. THANGAPANDIAN : Sir, I move the amendment standing in my name, namely,

"That the Tamil Nadu Police Laws (Amendment and Validation) Bill, 1979 (Legislative Assembly Bill No. 66 of 1979) be referred to a Select Committee of the Council, consisting of seven Members of this House".

திரு. சே. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள், காவல் துறையிலே மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை முன்மொழிந்தபோது அது பற்றி அவர்களுடைய கருத்துக்கள் விவரமானதாக சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் இந்த வாய்ப்பினை ஏற்று கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவு காவல் துறையிலே மாற்றத்தை உருவாக்குகின்றது என்ப தோடு மட்டுமல்ல, நல்ல எண்ணத்தோடு செய்யப்படுகின்ற ஒரு காரியம் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். காவல் துறையைச் சீரமைக்க வேண்டும் என்பதற்காக ஒரு குழு வையே நாம் அமைத்தோம். சீரமைக்க வேண்டும் என்ற எண்ணம் அடிப் படையாக இருக்கிறது. ஆனால் சீரமைக்கும் முறையால் இப்போது காவல் துறையினுடைய செயல்முறைகளை மேலும் வலிமை ...ம்' என்ற அளவிலே குறைப் வைத்துக்கொண்



1979 நவம்பர் 12] [திரு. க. இராமமூர்த்தி]

... மூலமாக ஏற்படுத்தி செயல்படுகின்ற நிலைமை இந்தச் சட்ட முன்வடிவின் ... மாண்புமிகு சட்ட ... இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ... பல்வேறு நிலைகளை அமைச்சர் அவர்கள், இந்தச் சட்ட முன்வடிவினுடைய ... பரிசீலித்திருக்கிறார்களோ சட்டத்தினுடைய கோணத்திலேயிருந்து மட்டும் ... காவல் துறையினுடைய பொறுப்பினை என்று அஞ்சுகிறேன். ஒருவேளை, காவல் ... ஏற்றிருந்தால், அவர்களே போலீஸ் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ... சட்டத்திற்கு அவர்கள் அமைச்சராக இருந்திருந்தால், நிச்சயமாக இந்தச் ... நான் நம்புகிறேன். காரணம் ஒப்புதலளித்து இருக்க மாட்டார்கள் என்று ... (Director-General) என்று அழை ஐ.ஜி. ஒருவரை டைரக்டர் ஜெனரல் என்ற ஒருவரை நியமித்து வே... பதா? இல்லையா? டைரக்டர் ஜெனரல் என்ற ... எப்படிச் செயல் பல ஐ.ஜி. க்களையும் உருவாக்கி, அதன் விளைவாக ... எண்ணம் ஆட்சியிலே ...றோம் என்பதுதான். இப்போது ஒரு தவறான ... அதிகரிப்பதன் மூல ...ருப்பவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளை ... கண்டிப்பாக முடி... மாக மட்டும் காவல் துறையைச் சீரமைக்க முடியுமா? ... அவர்களுடைய எண்ணிக் யாது. அதிகாரிகளை அதிகரிப்பதன் மூலம், காவல் துறை மேலும் பலவீன ... கையை மட்டும் அதிகப்படுத்துவதன் மூலம் ... (S.P., D.I.G., A.D.I.G.) மடைகிறது. எஸ். பி, டி.ஐ.ஜி. அடிஷனல் டி.ஐ.ஜி ... அதிகமாக அவர் பல ஐ.ஜி.க்கள் (I.G.) இவர்களின் எண்ணிக்கை அதிகமாக ... வீட்டிலே ...களுக்கு வழங்க வேண்டிய பல வசதிகள், கார், செக்யூரிட்டி, ... காவல் துறையிலே வேலை செய்வதற்கு வேலையாட்கள் போன்றவற்றிற்கு ... குறைத்துக்கொண்டு அந்தக் இருக்கின்ற காவலர்களுடைய எண்ணிக்கையைக் ... நிலை இருக்கிறது. காவலர்களைத்தான் இந்தப் பணிகளுக்கு அனுப்பும் ... எண்ணிக்கை உயரும் அதோடு மட்டுமல்ல, உயர்மட்டத்திலே அதிகாரிகளின் ... செயல்பட் போது, மற்ற நிலைகளைப் பொறுத்தவரையில், நாம் எப்படிச் ... இந்தச் சட்ட முன்வடிவிலே ...றோம் என்பதையும் பார்க்க வேண்டும். ... அதிகமாக இருக்கின்ற அதுபற்றிய கருத்துக்கள் இல்லை. அதிகாரிகள் ... திருட்டுக்களைத் ... காவலர்களை, ... நிலையும், மற்ற பிரிவுகளிலே பணியாற்றும் காவலர்களை, கொலைக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களை ... அந்த அதிகாரி கண்டுபிடிக்கும் பணியிலே ஈடுபட்டிருப்பவர்களை ... நிலையுந்தான் இருக்கி ...தங்களுடைய வேலைகளைச் செய்யப் பயன்படுத்தும் ... இந்தச் சட்ட ...கின்றன. இவ்வாறு காவல் துறை செயலிழந்து போகிறது. ... போட்டிருக்கிறார்கள். முன்வடிவைப் பொறுத்த வரையில், 3 ஐ.ஜி. க்களைப் ... ஒரு ஐ.ஜி. க்ரைம்-லா அன்ட் ஆர்டர் (Crime, Law and Order) இதற்கு ஒருவர். ப்ரொஹிபிஷன் ஆர்ம்ட் ஃபோர்ஸ் (Armed Forces) க்கு ஒருவர். என்போர்ஸ்மெண்ட் (Prohibition Enforcement) க்கு ஒருவர்

ஆக மொத்தம் 3 பேர். இப்படி மூன்று பேராகப் பிரித்து, இந்த அரசு மணி
படித்தவுடனே அவர்கள் வந்து நிற்பதற்கு அவர்களை தலைநகரிலேயே
வைத்திருக்கிறது. ஆனால் மாவட்டங்களின் நிலைமைகளைப் பார்க்க
வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரேயொரு எஸ்.பி. தான். 'லா அண்ட்
ஆர்டர்' (Law and Order)
'ப்ரொஹிபிஷன் என்ஃபோர்ஸ்மென்ட்' 'ஆர்ம்ட் ஃபோர்ஸ்'
மாவட்டங்களிலே எஸ்.பி. ஆகிய இந்த மூன்று சப்ஜெக்டையும்
எந்த ஐ.ஜி.யின் உத்தரவை தான் பார்க்கிறார். இந்த நிலையில்
இரண்டாவது, ஒரே நேரத்தில் அவர் உடனடியாக நிறைவேற்றுவது?
சென்றால், இந்த எஸ்.பி. இந்த ஐ.ஜி.-க்கள் ஒரு மாவட்டத்திற்குச்
முதலாவதாகப் பார்ப்பது? யாரிடத்திலே முதலாவதாகப் போவது? யாரை
'பார்ப்பது, சல்யூட் அடிப்பது' என்பவைகள் காவல் துறையைப் பொறுத்தவரையில்,
மட்டுமல்ல, எப்படி கணக்கிடப்படுகின்றன என்பவைகள் பெரிய கௌரவம் என்பதோடு
வேண்டும். சில அரசியல்வாதிகள் செய்வதைப் போல, நாம் பார்க்க
"நுழைந்து வருகிறார்களா? சொன்ன பிறகு வருகிறார்களா? பார்க்க வரும்போது
வந்தார்களா? சொன்ன பிறகு உட்காருகிறார்களா? சொல்லாமலேயே
உட்காருகிறாரா? செருப்பை வெளியிலே விட்டுவிட்டு சொல்லாமலேயே
இல்லையா?" என்றெல்லாம் பார்ப்பதைப் போல, வந்திருக்கிறாரா?
பொறுத்தவரையில், பெரிய பதவிகளிலே இருக்கும் காவல் துறையைப்
அப்படித்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு போலீஸ் அதிகாரிகளும்
அமைந்துவிடுகிறது. இந்தமாதிரி அந்தத் தன்மை இயற்கையாக
படும்போது, மேலே இருக்கும் நிபந்தனைகளுக்கு ஆட்பட்டு செயல்
வேண்டும். எஸ்.பி.-க்களின் அலுவலர்களின் நிலைமைகளையும் உணர
ஐ.ஜி.-க்களை மட்டும் எண்ணிக்கை
ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அதிகமாக்கி, இந்த அரசு அதிகமாக்கப்படவில்லை.
மாக, தென்ஆற்காடு மாவட்டத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு குழப்பத்தை
பிஷன் ஐ.ஜி. வருகிறார் என்றால் எடுத்துக்கொண்டால், அங்கே உதாரண
நேரத்தில் வேறு ஒரு ஐ.ஜி. அங்கே அவருக்கு மரியாதை கிடைக்கிறது. ப்ரொஹி
கிடைக்கவில்லை' என்று சொல்கிறார். வரும்போது, அவர் 'எனக்கு மரியாதை அதே

அடுத்தபடியாக, 'என்ஃபோர்ஸ்மென்ட்'-க்கு ஒரு ஐ.ஜி. என்று போட்
டிருக்கிறார்கள். என்னுடைய தகவல் சரியாக இருந்தால், அந்தப் போஸ்ட்
(Post) இன்னும் சாங்ஷன் (Sanction) செய்யப்படவில்லை. சாங்ஷன்
செய்யாத நிலையில் அவர் வேலை செய்வதற்கு 'மென்' (Men) கிடையாது.



ஆட்கள் இல்லை. ஐ.ஜி.-க்கு வேலை கிடையாது. வேலையில்லாமல் இருப்
பதற்கு ஒரு ஐ.ஜி.-யை நியமித்திருக்கிறார்கள். It is a reflection on your
executive capacity and it is a reflection on your ability to
administer the State. இந்தத் துறையிலே சீர்திருத்தம் செய்கிறோம் என்று
சொல்லி எப்படி இயலாததாக ஆக்கியிருக்கிறது இந்த அரசு என்பதைக்
காட்டத் தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு 'டைரக்டர் ஆஃப் விஜிலென்ஸ் அண்ட் ஆன்டி
கரப்ஷன்' (Director of Vigilance and Anti-Corruption)
என்ற பதவி எவ்வளவு தேவையான ஒன்று, எவ்வளவு முக்கியமான ஒன்று,
எவ்வளவு முக்கியமான காரியத்தை அவர் செய்ய வேண்டியிருக்கிறது என்
பதை நாம் அறிவோம். ஆனால், இன்னும் அந்த இடம் நிரப்பப்படவில்லை.
எத்தனை மாதங்களாக நிரப்பப்படாமல் இருக்கிறது என்று எண்ணிப்பார்க்க
வேண்டும். நீதிமன்றத்திற்குப் போனால் நாங்கள் என்ன செய்ய முடியும்?
ஆகவே, நிரப்பப்படவில்லை என்பது வேறு. நடைமுறையிலே ஏற்பட்ட
சிக்கல் இந்த அரசை எங்கே இழுத்துக்கொண்டு போயிருக்கிறது என்பதை
பார்க்க வேண்டும். நீதிமன்றத்திற்குப் போனால் நாங்கள் என்ன செய்ய
முடியும்? ஆகவே, நிரப்பப்படவில்லை என்பது வேறு. நடைமுறையிலே
ஏற்பட்ட சிக்கல் இந்த அரசை எங்கே இழுத்துக் கொண்டு போயிருக்கிறது
என்பதைப் பார்க்க வேண்டும். தமிழகத்திற்கு இன்றைய தினம் Director
கிடையாது. of Vigilance and Anti-Corruption It is yet
to be filled up. It is pending.

(பிற்பகல் 12-30)

திரு. சி. இராமலிங்கம்: டைரெக்டர் ஆஃப் விஜிலென்ஸ் அண்டு ஆன்டி
கரப்ஷன் பதவி எத்தனை வருஷங்களாகக் காலியாக இருக்கிறது என்று
உறுப்பினர் அவர்கள் கூற வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியை,
மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அதற்கு பதில்
அளிப்பார்கள் என்று நம்புகிறேன். நான் சில விவரங்களை மட்டும் அவைக்குச்
சொல்ல வந்திருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர்தான் இதற்கெல்லாம்
பதில் அளிக்க வேண்டும்.

(உறுப்பினர் திரு. சி. இராமலிங்கம் எழுந்து பேச முனைந்தார்.)

திரு. க. இராமமூர்த்தி: I am not yielding. இதன் காரணமாகத்
தான் சொல்லுகிறேன், இந்தச் சீர்திருத்த நடவடிக்கை உண்மையில் நடை
முறையில் சீர்திருத்தமாகவே அமையவில்லை. இந்தத் துறையை
வளர்க்கக்கூட இது உதவியாக அமையவில்லை. உண்மையிலேயே காவல்

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 12

துறையில் ஒரு குழப்பத்தை விளைவிக்கும் முறையிலேயே இந்தச் சீர்திருத்தம் அமைந்திருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு முதலில் இந்தத் துறையில் இருக்கிற குறைகளைக் கண்டறிந்து ஆராய்ந் திருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை.

இந்தத் துறையில் புதிதாக 'ஐ.ஜி. ஆஃப் கிரைம்ஸ்' என்ற பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பதவியை உருவாக்கிய பிறகு, மர்தில்த்தில் என்ன நடக்கிறது என்பதை அனுபவத்தில் நாம் பார்க்கிறோம். எப்போதும் நடைபெறுவதைவிட இப்போது மிக மிக நூதனமான முறையில் சில குற்றங்கள் தமிழகத்தில் நடைபெறத் துவங்கியிருக்கின்றன. அதாவது தமிழகத்திற்குப் பழக்கமில்லாத குற்றங்கள் இப்போது வெகு வேகமாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

மதுரையிலும் திருச்சியிலும் ஒரு பெரிய 'ரேக்கட்' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் போகிற விவரம் அறியாத பெண்கள் இன்றையதினம் கடத்திச் செல்லப்படுகிறார்கள். இதற்கென்றே ஒரு கூட்டம் அவர்கள் பின்னாலே ஒரு வாரம் அல்லது 10 நாளைக்குப் போவதும், அந்தப் பெண்களைப் பார்த்து உன்னுடைய அண்ணனைத் தெரியும், அவன் என்னோடு படித்தவன், என்பதும் இப்படி எதை யாவது சொல்லி பேச்சுக் கொடுத்து அவர்களிடம் பழகி ஒரு ஊரிலிருந்து அவர்களை இன்னொரு நகரத்திற்கு அழைத்துச் செல்வதும், அங்கே அந்தப் பெண்களைக் கற்பழிப்பதும், பிறகு பம்பாய் போன்ற நகரங்களில் நடை பெறுவதைப்போல் அந்தப் பெண்களுக்கே தெரியாமல் அவர்களை விற்றுவிடு வதும், பிறகு அவர்களை ரூ. 5,000-க்கும் ரூ. 3,000-க்கும் வாங்கியவர்கள் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று தொழிலில் ஈடுபடுத்துவதும், அதற்குப் பிறகு அவர்களைத் தெருவில் விட்டுவிடுவதும் என்பது சர்வ சாதாரணமாக இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது அன்றாடம் நடை பெறும் நிகழ்ச்சியாக மாறிக்கொண்டிருக்கிறது. திருச்சியில் மாத்திரம் ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல, மூன்று முறை இவ்வாறு நடைபெற்று, பத்திரிகைகளில்கூட செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அரசின் சட்ட முன்வடிவின் மீதான விவாதம் 1 மணிக்கு முடிந்து வேறு பொருள்பற்றிய விவாதம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இன்னும் 7 உறுப்பினர்கள் இதில் பேச இருக்கிறார்கள். எனவே உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எவ்வளவு விரைவாகப் பேசி முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 12]

திரு. க. இராமமூர்த்தி: நான் இந்தப் பொருள் குறித்து ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானமே கொடுத்திருந்தேன். இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேச சந்தர்ப்பம் இருப்பதால், அப்போது இந்தக் கருத்துக்களையும் சொல்ல லாம் என்று எனக்குச் சொல்லப்பட்டது. எனவேதான் அவைகளைப்பற்றி இங்கே குறிப்பிடுகிறேன்.

இப்படி பல செய்திகள் பத்திரிகையில் வந்திருக்கின்றன. நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இதுவரையில் அத்தகைய விடுதிகளின்மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன? யார் யார் வந்தார்கள் என்ற விவரமெல்லாம் தெரிந்தபோது, அவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இவை களில் இந்த ஆட்சி மெத்தனமாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, இன்றைய தினம் தமிழகத்தில் இந்தக் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டு வருவதற்குக் காரணம் காவல் துறையின் செயல்முறையில் இருக்கிற சங்கடங்கள்தான் என்பதை இந்த அரசு உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசு காவல் துறையில் சீர்திருத்தத் தைக் கொண்டுவர விரும்புவதைவிட அதுபற்றிய விளம்பரத்தைத் தேடிக் கொள்வதில்தான் அதிக அர்வத்தைக் காட்டுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தை நான் சென்ற கூட்டத்தொடரின்போதே குறிப் பிட்டேன். அதை மீண்டும் முழுமையாக இங்கே குறிப்பிட விரும்பவில்லை என்றாலும், அதைக் கோடிட்டு மட்டும் காட்ட விரும்புகிறேன். அடையாறில் நடைபெற்ற விபசார விடுதியைப்பற்றி அப்போது குறிப்பிட்டேன். அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் அந்தத் தொழில் அங்கே நடை பெறுகிறது என்று கண்டுபிடித்த பிறகு, காவல் துறையிலிருந்து கொஞ்சம்கூட கூச்சமில்லாமல் ஒரு அறிக்கை வந்தது. இந்த விபச்சார விடுதிக்கு வந்து கொண்டிருந்தவர்கள் Politicians, Officials and Businessmen' அந்த அரசியல் என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு இன்றுவரை அரசியல்வாதி யாரும் வாதிகள் யார் என்று தெரிவிக்கப்படவில்லை. ஒருவேளை அவர் கோர்ட்டுக்கு கோர்ட்டுக்கு வந்ததாகத் தெரியவில்லை. இருக்கலாம் அல்லது வருகிற அளவுக்கு செல்வாக்கு இழந்தவராக இல்லாமல் இருக்க வேண்டும். காவல் துறையோடு அவருக்கு அந்த அளவுக்கு செல்வாக்கு அறிவிக்கப்படவில்லை. அந்த அதைப் போலவே அதிகாரிகள் யார் என்றும் தெரியவில்லை. ஒரு அதிகாரிகளும் கோர்ட்டுக்கு இதுவரை வந்ததாகத் அந்த அளவுக்குச் செல்வாக்கு மிக்கவர்களாக இருக்கக்கூடும், ஆனால் வியாபாரிகளைப் வளை அந்த அதிகாரிகளும் காவல் துறையில்

பொறுத்தவரையிலும், யாருடைய பெயரும் காவல் துறையால் அறிவிக்கப்பட வில்லை. முதல் இரண்டு வகையைச் சார்ந்தவர்களுக்காவது காவல் துறை யோடு செல்வாக்கு இருக்க வாய்ப்புண்டு. ஆனால் பிசினெஸ்மென்களுக்கு இருக்கிற ஒரே வாய்ப்பு காவல் துறையினரைப் பணத்தால் வாங்குவதுதான். ஆக அவர்கள் பெயரும் இதுவரையிலும் வராத காரணத்தால், அப்படிப்பட்ட நிலை இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது. அந்த அளவுக்கு பிசினெஸ் மென்கள் நாட்டில் இருக்கிறார்கள். காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் கொடுக்கிற ஸ்டேட்மெண்ட்டையே சாப்பிடுகிற அளவுக்கு இருக்கிறார்கள் என்ற எண்ணம் பொதுமக்களிடையே உருவாகுமானால், காவல் துறைக்கு இந்த நாட்டில் என்ன மரியாதை இருக்கும் என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I would like to know whether the hon. Member is making a speech on the Police Demand for sanctioning the grant or is he confining himself to the scope and object of this legislation ?

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய ஒத்தி வைப்புத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்கிறபோது, என்னுடைய பேச்சை இந்தச் சட்ட முன்வடிவின் மீது பேசிக்கொள்ளலாம் என்று அவைத் தலைவர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். இந்த அவையைப் பொறுத்தவரை, மாண்புமிகு தலைவர் அவர் களுடைய வார்த்தை சட்டமாகக் கருதப்படுகிறது என்றுதான் நான் எண்ணு கிறேன்.

அது மட்டுமல்ல. இதற்கு முன்னாலே நடந்த கொலைபற்றிகூட 'அதைக் கண்டுபிடித்துவிட்டோம்' என்று காவல் துறையில் சொல்லப் பட்டது. அதே மாதிரி கொலையைப்பற்றி அப்படித்தான் சொல்லப்பட்டது. ஆனால் காவல் துறையால் சொல்லப்பட்ட பெரிய ஆட்களையும் காணோம், அதில் பெரும்புள்ளிகளையும் காணோம். வழக்கையும் காணோம், பெயரை யும் காணோம். ஆண்டுகள் பல ஆனதுதான் மிச்சம். எனவேதான் சொல்லுகிறேன். இன்றையதினம் காவல் துறையில் சீர்திருத்தம் என்று ஆக என்னதான் சொன்னாலும், காவல் துறை இன்றையதினம் முடக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுகிற நேரத்தில் இதற்கெல்லாம் ஒரு விடிவு ஏற்படு கிறதா என்றால், இல்லை என்பது மட்டுமல்ல, மேலும் குழப்பத்தை அதிகரிக் கும் நிலைதான் உருவாக்கப்படுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.



MR. DEPUTY CHAIRMAN : I understand that the Hon. Chairman informed the hon. Member Thiru Ramamoorthy when he wanted discussion on a particular matter through an adjournment motion, namely, the scare of the parents about their school-going girls in the southern districts—Madurai, that he could talk about the matter appropriately on the Bill. It is not as if the hon. Member got permission of the Hon. Chairman to speak about the other matters which the hon. Member is now referring to. I would request the hon. Member to confine himself to the particular Bill so that he may give an opportunity to the other hon. Members who want to speak on this Bill.

THIRU K. RAMAMOORTHY : I understand the difficulty of the Hon. Deputy Chairman. Anyway, I will confine my remarks to the Bill.

மதுவிலக்குக்கு என்று ஒரு ஐ. ஜி. இன்று இல்லை. அதன் விளைவு என்ன? மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த 4 அதிகாரிகள் மீது ஒரு மதுவிலக்குக் குற்ற வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்குத் தொடரப்பட்டதால், நமக்கும் மத்திய அரசுக்கும் ஏற்படும் உரசலை நீங்கள் நன்றாக அறிவீர்கள். என்ன ஆயிற்று அந்த வழக்கு? சரியாக விசாரணை செய்யப்படாமல் இந்த வழக்கு போடப்பட்டது என்று சொல்லி உயர்நீதி மன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. இதற்கெல்லாம் என்ன காரணம்? அதற்கான 'மேன்' கிடையாது. பதவி சாங்ஷன் செய்யப்பட வில்லை. இதன் காரணமாகத்தான் இந்தச் சட்ட முன்வடிவின்மீது இதை யெல்லாம் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

(பிற்பகல் 12-40)

ஆகவே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், இது தேவையற்றது. மக்களுடைய வரிப் பணத்தை வெகுவாக பாழடிக்கக் கூடிய அளவிற்கு இந்தப் பணத்தை இலாக்காவிற்குக் கொடுத்து, அந்த இலாக்காவை மேலும் பலவீனப் படுத்துகிற குற்றத்தைச் செய்கிற அளவிலே இந்தச் சட்டத்தில் பல்வேறு பிரிவுகள் அமைந்திருக்கின்றன என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவுக்கு அவசியமில்லை, இது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஒரு வேளை இது தேவையென்று அரசு கருதினால், இதை ஆய்வுக் குழுவிற்கு விட்டு ஆய்ந்த பிறகு, அவசியமானால் கொண்டுவரலாம் என்ற கருத்தைச் சொல்லி அமைகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக நிறைவேற்றுவதற்கு முன்னால் இதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கூறிய யோசனையை முழு மனதோடு வரவேற்று, அப்படிச் செய்தால்தான், இந்தச் சட்டமுன்வடிவில் இருக்கக்கூடிய ஓட்டை, உடைசல்களையெல்லாம் அடைத்து நல்லதோர் சட்டத்தைக் கொண்டுவரும் வாய்ப்பு இருக்குமென்று சொல்லி மேலும் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஏற்கெனவே இருக்கிற போலீஸ் சட்டத்தை மாற்றியமைத்து, ஒரு ஐ.ஜி. யாக இருந்ததை 3 ஐ.ஜி. க்களாக ஆக்கி, அதற்கு மேல் ஒரு டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் பதவியை புதியதாக ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இது ஒரு சாதாரண பிரச்சினைதான் என்று சொல்லத் தோன்றும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி சொன்னது போல, இந்தச் சட்டத்தை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை. ஒரு தனி நபரைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான், தனி நபருடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த அரசு இவ்வளவு அவசரமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று நாட்டு மக்கள் பேசிக்கொள்கிறார்கள். கீர்த்தி பெற்ற தமிழ்நாடு போலீஸ் நிர்வாகத்தில், சீர்திருத்தம் என்ற பெயரால் சீர்குலைவுக்கு அஸ்திவாரமிடுகிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

தமிழ் நாட்டு போலீசின் பெருமைகளைப்பற்றி ஸ்காட்லாண்ட் யார்டு போலீஸ் துறையோடு ஒப்பிட்டுப் பெருமை பாராட்டிய காலம் உண்டு. ஆனால் இன்றைய பொறுப்புக்கு வந்திருக்கிறவர்கள் என்ன காரணத்தால், சீர்திருத்தம் என்ற பெயரால், ரிடையர் ஆன ஒருவருக்குப் பதவி நீட்டிப்புத் தந்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. பொதுவாக ஒரு சிலருக்குப் பதவி நீட்டிக்கலாம். ஆனால் இவர் என்ன மிகப் பெரிய விஞ்ஞானியா? அவருக்குக் கீழ் உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்க முடியாத அளவிற்கு அறிவு வற்றிவிட்டதா? அவருக்குக் கீழ் தமிழ் நாட்டில் போலீஸ் அதிகாரிகள் யாரும் கிடையாதா? இந்த ஒரு பெரிய மனிதர் எல்லோருக்கும் மேலே வைக்கப்பட்டு, அவர் உத்தரவிட்டால்தான், தமிழ்நாடு ஆடுமா, அசையுமா? ரிடையர் ஆன ஒரு தனி மனிதருக்காக இந்த அரசாங்கம் பதவி நீட்டிப்புக் கேட்டு, மத்திய அரசாங்கம் நீட்டிப்புத் தந்தது. இரண்டாவது



முறையாக மத்திய அரசாங்கம் நீட்டிப்புத் தராது என்று தெரிந்தவுடனே, இருக்கக்கூடிய சட்டத்தை எப்படி தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று கருதி, ஒரு ஐ.ஜி.க்குப் பதிலாக 3 ஐ.ஜி.க்களை உருவாக்கி அவர்களுக்கு மேல் டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்று உருவாக்கியிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே ஒரு சினிமாப் படம் பார்த்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நடித்த படம்தான் அது. அதை நான் விரும்பிப் பார்த்தேன். அதை பல முறை பார்த்திருக்கிறேன். அந்தப் படம் குலேபகாவலி. அதில் ஒரு கதாநாயகனுக்கு 3 கதாநாயகிகள். 3 கதாநாயகிகளை வைத்துக்கொண்டு கதாநாயகன் கஷ்டப்படுவார். அதைப் போல மூன்று ஐ.ஜி. க்களை இந்த டைரக்டர் ஜெனரல் கண்காணிக்க வேண்டும்; ஆர்ம்ட் ரிசர்வ் போலீசுக்கென்று ஒரு ஐ.ஜி. யும், சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்த ஒரு ஐ.ஜி.-யும், மதுவிலக்கைக் கவனிக்க ஒரு ஐ.ஜி.-யும் இப்படி மூன்று ஐ.ஜி.-க்களைப் போட்டிருக்கிறார்கள். இதனால் மதுவிலக்குக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன, சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், ஏற்றுக்கொள்ளலாம். மூன்று பிரிவுகளில் ஆர்ம்ட் ரிசர்வ் போலீஸ்காரர்கள் போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தங்களுடைய சீருடைகளைக் களைந்துவிட்டு, கையில் கொடியேந்தி, போராட்டத்திற்கு முன்னணியில் வந்திருக்கிறார்கள். மதுவிலக்குக் குற்றங்கள் மிகப் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புது ஐ.ஜி. வந்திருக்கிற காரணத்தால், மதுவிலக்குக் குற்றங்கள் இல்லையென்று சொன்னால், ஏற்றுக்கொள்ளலாம். சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க ஒரு ஐ.ஜி.-யைப் போட்டிருக்கிறார்கள். அவர் வந்த பிறகும் என்னென்ன நடந்தன என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி ஒரு பட்டியலையே போட்டுக் காட்டினார்கள். சென்னையில் தொடங்கி திருநெல்வேலி வரையில் கொலைக் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. கொள்ளைக் கூட்டங்கள் நிறைந்து கொள்ளையடிக்கும் குற்றங்கள் மலிந்து போயிருக்கின்றன. போலீஸ் துறையிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றால், என்ன செய்திருக்க வேண்டும்? ஒரு கமிஷன் போட்டு செய்திருக்க வேண்டும். முன்பு ஒரு போலீஸ் கமிஷன் போட்டு, அந்தக் கமிஷன் செய்த சிபாரிசுகளின் அடிப்படையில் பதவி உயர்வைத் தந்திருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் தலைவராக இருந்து, அத்தகைய காரியங்களைச் செய்திருக்கிறார்கள், அதைப் போலவே வ.ஆர்.சி.

என்ற நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப் போட்டார்கள். அதன் சிபாரிசின் அடிப்படையிலே சில காரியங்களைச் செய்தார்கள். அப்படியில்லாமல் திடீரென்று டைரக்டர் ஜெனரல் பதவியை ஏற்படுத்தி, எவ்வளவு பெரிய லெக்குனாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்?

30—11—1978 அன்று அவர் ரிடையர் ஆவார். மறுபடியும் அவருக்கு நீட்டிப்புத் தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் கடிதம் எழுதுகிறது. பிறகு நீட்டிப்புக் கொடுக்கப்படுகிறது. 6 மாத காலம் கழித்து மீண்டும் அவர் பதவிக் காலம் 1-6-1979 அன்று முடிவடைகிறது. அவருக்கு மேல் ஜீனியஸ் உலகத்திலேயே கிடையாது என்பது போலவும், போலீஸ் துறைக்கு என்று அவர்தான் பிறந்து வந்தது போலவும், தமிழ் நாட்டின் அறிவு, திறமை எல்லாம் வற்றி விட்டது போலவும் 12-10-1979—ல் அவரையே மீண்டும் நியமிக்கிறார்கள். 1-6-1979 முதல் 4 மாதங்களுக்கு என்னவென்று சொல்லப்படவில்லை. அந்த 4 மாதங்களில் அவர் பல உத்தரவுகள் போட்டிருக்கிறார். பிறகு ஒரு ஆர்டினன்சைப் போட்டு இப்போது இங்கே சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அவசரச் சட்டத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒரு ரெகுலர் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி ஒரு தனி மனிதருக்காக, அவரைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகச் செய்ய வேண்டுமா? மற்ற மாநிலங்களில் எங்கேயாவது இப்படி ஒன்றுக்கு மேல் ஐ.ஜி.க்களைப் போட்டு டைரக்டர் ஜெனரலையும் போட்டிருக்கிறார்களா? இங்கே என்ன ஆர்மி நடத்துகிறோமா? ஆர்மியில்தான், கப்பற் படை, இராணுவப் படை, விமானப்படை என்று இருக்கின்றன. முப்படைகளுக்கும் தலைவராக ஜனாதிபதி இருக்கிறார். இங்கே இருக்கிற குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுகிறவர்களுக்கு 3 ஐ.ஜி.-க்கள் ஏன்? மூன்று ஐ.ஜி.க்கள் வந்த பிறகு சிலர் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். சிலர் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். இதில் சீனியாரிட்டியாவது பார்த்திருக்க வேண்டும். இதனால் பலருடைய சீனியாரிட்டி பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். இன்னும் பல பேர் வேலைக்கு வராமல் வீட்டுக்கே போயிருக்கிறார்கள். இந்த நிலைமையெல்லாம் உருவாக்க வேண்டுமா? அப்படிப்பட்ட சட்டம் ஏன் ஏற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இது தவறான சட்டமுன்வடிவு, வேண்டாத சட்ட முன்வடிவு என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்கிறேன்.



ஐ.பி.எஸ். ஆபீசர்களுக்கென்று அகில இந்திய விதிமுறைகள் இருக்கின்றன. ஒருவர் ஐ.பி.எஸ். பதவியிலிருந்து ரிட்டையர் ஆனால் அதற்குப் பிறகு அவர் போலீஸ் யூனிஃபாரத்தைப் போட முடியாது. உதாரணமாக ஒருவர் எஸ்.பி.யாக இருந்து ரிடையர் ஆன பிறகு, அவரை பல்லவன் டிரான்ஸ்போர்ட்டில், பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனில் செக்யூரிட்டி ஆபீசராக நியமித்தால், அவர் பழைய யூனிஃபாரமில் வர முடியாது. ஆனால் இன்று ரிட்டையர் ஆன ஐ.பி.எஸ். ஆபீசர், டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் என்ற முறையில் யூனிஃபாரில் வந்து உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள் என்ற அவல நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். காவலர்கள் பிரச்சினையையொட்டி ஏராளமான பிரச்சினைகள் அரசாங்கத்திற்கு உருவாகியிருக்கின்றன. இப் பிரச்சினையில் புதிய சிந்தனையோடு இந்த அரசாங்கம் சட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே பார்டர் செக்யூரிட்டி ஃபோர்சில் மிகப் பெரிய போராட்டம் நடந்தபோது, அவர்களையெல்லாம் மத்திய அரசாங்கம் அழைத்துப் பேசி புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது. அதைப் போலவே தமிழ் நாட்டிலும் காரியங்களைச் செய்ய வேண்டும். புதிய பதவிகளை உருவாக்குவதின் மூலம் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் கூட நான் சொல்லியிருந்தேன். தமிழகத்துக்கு தென் பகுதியில் காவல் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக, பல ஆயிரம் காவலர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இன்றைய தினம் 'பெயில்' வாங்குவதற்காக கோர்ட்டுகளில் மனுச் செய்திருக்கிறார்கள். 'பெயில் பெட்டிஷன்' போட்டால், 'பெயில்' மறுக்கப்படுகிறது. ஆசிரியர்கள் போராட்டம், கல்லூரிப் பேராசிரியர்கள் போராட்டம், என்.ஜி.ஓ. போராட்டம் என்று எத்தனையோ போராட்டங்கள் நடந்திருக்கின்றன. போராட்டம் முடிந்து ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டவுடன், அவர்களுக்கு மீண்டும் உத்தியோகப் பாதுகாப்பு, அவர்கள் ஏற்கெனவே ஸ்ட்ரைக் செய்த நேரத்திற்கான சம்பளமும் கொடுப்பது என்பது நாம் பின்பற்றி வருகிற முறையாகும்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 நவம்பர் 12

(பிற்பகல் 12.50)

எல்லாத் துறைக்கும் அந்தச் சலுகையை கொடுத்து விட்ட பிறகு,
இன்றைய தினம் போலீஸ்காரர்கள் விஷயத்தில் அவர்கள் oppress
Suppress செய்யப்படுகிறார்கள். அவர்கள் harass
பண்ணப்படுகிறார்கள். மதுரை டிஸ்ட்ரிக்டில் இருக்கிறது. அங்கே இருக்கும்
டி.ஐ.ஜி. அவர்கள் காவலர்களை ஏதோ விரோதிகள் போலத்தான் கருதுகிறார்
கள். அந்த காவலர்களைத் தான் அவர்களின் ஆர்டர்லிகளாக வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்
கூட சொன்னார்கள். இந்த மூன்று ஐ.ஜி.க்களுக்கும் ஆர்டர்லிக்கள் இருக்
கிறார்கள். அடுத்து அதேபோல எ.ஐ.ஜி.க்களுக்கும் டி.ஐ.ஜி.க்களுக்கும்
ஆர்டர்லிக்கள். இப்படி ஆர்டர்லிக்களை எல்லாம் உருவாக்கிக்கொண்டிருக்
கிறார்கள். இதுவும் தவிர, வாகன வசதிகள் எல்லாம் மேல் மட்டத்திலே
இருப்பவர்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. மேல் மட்டத்திலே இருப்பவர்
களுக்கு சுற்றி சுற்றித் தருகிறோமே தவிர, அடித்தளத்திலே இருக்கின்ற
வர்கள் பற்றி நாம ஆராய்ந்து பார்த்து அவர்களுக்குப் பரிகாரம் கண்டு
விட்டிருந்தால், அவர்கள் போர்க்கொடி உயர்த்தியிருக்கமாட்டார்கள். அதற்கு
அவர்கள் தயாராக இல்லை. " They are driven to stage a truce march "
என்றுதான் சொல்ல வேண்டும். ஒன்றை மட்டும் நான் மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதற்கு அனுமதி ?

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** ஏற்கனவே உங்களிடம் அனுமதி கேட்டிருக்
கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** எதற்கு அனுமதி பெற்றிருக்
கிறீர்கள் ?

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** பத்திரிகையிலே வந்திருக்கிறது. மதுரை
சண்டே ஸ்டாண்டர்ட், இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கட்சி சார்பற்ற
பத்திரிகை. எந்தக் கட்சியையும் சார்ந்திருக்கின்ற பத்திரிகையல்ல. இந்தியா
முழுவதிலும் பெரிய அளவிற்கு விற்கும் பத்திரிகை. அதிலேகூட ஒரு படம்
எடுத்துப் போட்டிருக்கிறார்கள். போலிஸ் மார்ச் . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் படிக்கலாமே தவிர. அதை உறுப்பினர்களுக்குக் காட்ட முடியாது



1979 நவம்பர் 12]

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** அதிலே சமாதான ஊர்வலம் போயிருப்பதை
படமாகப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எதிர்த்து ஊர்வலம் வரவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதுதான், அதில் என்ன
இருக்கிறது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கலாம். அவ்வளவுதான்.
அதை அப்படியே எடுத்துக்காட்ட முடியாது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** அவர்கள் சமாதானத்திற்கு வந்துவிட்ட
தாக, சமாதானமாகப் போய்விட்டதாகக் காட்டினார்கள். பல்லாயிரக்கணக்
கான போலீஸ்காரர்கள் உடையணிந்து ஊர்வலமாக வந்திருக்கிறார்கள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பத்திரிகையிலே சொல்லி
யிருக்கிறார்கள்.

",Mr. G. Selvaraj, S. P., Madurai Urban, congratulated the
Policemen who had resumed duties in response to the advice given
by the Director-General of Police and other top officials. "

டி.ஐ.ஜி. கொடுத்த வேண்டுகோளை ஒட்டி இன்றைக்கு அந்த போலீஸ்
காரர்கள் உத்தியோகத்தில் வந்து சேர்ந்திருப்பதற்கு அவர்கள் 'கங்க்ராஜு
லேட்' பண்ணியிருக்கிறார்கள். அவரே 'கங்க்ராஜுலேட்' பண்ணிய பிறகும்,
க்க காவலர்கள் வீட்டிற்குத் தண்ணீர் போகவில்லை. கரண்ட் போகவில்லை,
ர்களுக்காக 'மெயில்' மூவ் பண்ணும்போது 'நாங்கள்' தடுக்கிறோம் என்ற
லைமைகள் இருக்கின்றன என்று சொன்னால், இதிலே அரசின் நோக்கம்
ளை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்கள் வ்யவகாரத்தை
ரை முடிந்து விட்டதாகவும், அவர்கள் மீது கோபம் பாராட்டுவதாகவும்
ன் இருக்கிறதே தவிர, அதிலே எந்தவிதமான கெட்டிக்காரத்தனமும்
ரியதாகத் தெரியவில்லை. ஏதோ நாமுடைய பகுதியிலே உள்ள காவலர்கள்
போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய குறைகளை நீக்குவதில்
அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்று இல்லை. அந்தப் பரிதாபகரமானவர்
களிடம் மனிதாபிமான உணர்வோடு அரசாங்கம் அவர்களைப் பார்க்கவில்லை.
இந்த ஆயிரக்கணக்கான காவலர்களுக்குக் காட்டாத கருணையை ஒரு தனி

[திரு. வை. தங்கப்பாண்டியன்] [1979 நவம்பர் 12

மனிதனுக்குக் காட்ட இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவும் இந்தச் சட்ட முன்வடிவு இப்போது தேவையே இல்லாதது. இந்தச் சட்ட முன்வடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவை ஆழமான அளவில் ஆய்ந்து பார்த்து, புதிய யோசனைகளை, புதிய கருத்துக்களைச் சொல்வதற்கு, இந்த அவையின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆய்வுக் குழு அமைப்பது நியாயமானது என்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் அவர்கள் நேரடியாகச் சொல்லிக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. நல்லசிவன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவே ஒரு அவசியமற்ற மசோதா என்பது என்னுடைய கருத்து. இதன் மூலமாக ஒரு புதிய டைரக்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டு அதோடு 3 புதிய ஐ.ஜி.க்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதை வெட்டி நிர்வாகத்திற்கு மேலும் செலவுகள் அதிகரித்திருக்கின்றன. இந்த மசோதாவின் நோக்கம் என்ன? அதைப்பற்றிச் சொல்வதற்குப் பதிலாக, ஏற்கனவே ஐ.ஜி.க்கள் மூன்று விதமான பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு புதிய பதவிக்கு, இருந்த அமைப்பிலே இந்த மாற்றம் தேவையே இல்லாதது. இதற்கு முன்னாலே இருக்கிறது. இருந்த ஒரு ஐ.ஜி. பொறுப்பும் கவனித்த மாதிரி இது இப்போது 3 ஐ.ஜி.க்கள் போட்டு அவைகளைக் கவனிப்பது போலவும் ஆகப்பட்டிருக்கிறது. இந்த டைரக்டர் ஜெனரலையும் என்னுடைய கேள்விக்கு இவைகளைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த ஐ.ஜி.க்கள் இருந்த ஐ.ஜி.க்கள் அந்த வேலைகளைக் கவனித்திருப்பார்கள். இவர்கள் இருந்திருக்கலாம் என்று அந்த மசோதாவிலே 'ஆர்ம்ட் போலீஸ்' என்று போட்டிருக்கிறார்களே, அதைத் தனியாகப் பார்த்தாலும், என்ன 'ஆர்ம்ட்' என்று தெரியவில்லை. top brass என்று எனக்குத் தோன்றுகிறது. இந்த அதிகாரிகளுக்குத் தான் சலுகைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்ற நிலைமைகளும், போக்குகளும் தான் என்று நினைக்கிறேன். இந்த சட்டத்திலே இருக்கின்ற ஒரு காரணமாக இருக்குமோ ...ர்கள்



1979 நவம்பர் 12] [திரு. ஆ. நல்லசிவன்]

என்ன நினைக்கிறார்கள்? ஆர்ம்ட் ரிசர்வ் போலீஸ் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கருதியிருக்கிறேன். "நம்மை இவ்வளவு தீவிரமாக உபயோகப்படுத்துகிறார்கள், நாம் இப்படி இருக்கின்றபோது, மேல் மட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையை மட்டும் அதிகரித்துக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்குப் புதிய இரேடுகள், அப்புறம் 3 ஐ.ஜி. பதவிகள் கொடுக்கிறார்கள்" என்றெல்லாம் நினைக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது அவர்கள் தங்களைப் புறக்கணிப்பதாக நினைக்கிறார்கள். மேல் நிலையில் உள்ள அதிகாரிகளால் மட்டும் தான் இந்தச் சட்டங்கள் நிலைநாட்டப்படுகின்றன என்று அரசு கருதுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். இதுவே அவர்களின் ஆத்திரத்தைத் தூண்டியதோ என்று நான் நினைக்கிறேன். பிப்ரவரி மார்ச் மாதத்திலே பஞ்சாப் மாநிலத்திலே போலீஸ் போராட்டம் ஆரம்பித்து நாடு முழுவதும் நடந்தது. நம் அரசு ஜூன் மாதம் இந்த உத்தரவைப் போடுகிறது. போலீஸ்காரர்களைப் பற்றி ஒன்றும் யோசிக்காமல், போலீஸ் அதிகாரிகள் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு போனார்கள். கீழ் அதிகாரிகளின் காரர்கள் "பல பிரச்சினை இப்படி இருக்கும்போது, எண்ணிக்கையை மட்டும் அதிகரித்துக்கொண்டு போகிறார்கள்" என்று நினைத்தார்கள். இந்த ஆட்சியில் சாதாரண போலீஸ்காரர்கள் மனத்தைப் புண்படுத்தியிருக்கிறது. இந்த சாதாரண நாடு பூராவிலும் உள்ள போலீஸ்காரர்களின் மனத்தை, இந்த அதிகாரிகளின் எண்ணிக்கையை மட்டும் அதிகப்படுத்தியிருப்பது, அவர்களுக்குக் கீழ் பணியாற்றுகின்ற மற்றவர்களைக் கவனிக்காமல் விட்டிருப்பது, அந்தப் போராட்டத்திற்கு ஒரு காரணமாக இருக்கிறது. அதனை போலீஸ் காரர்களிடையே போராட்ட உணர்வைத் தூண்டிவிட்டுவிட காரணமாக இருக்கிறது என்றுதான் நான் எண்ண வேண்டியிருக்கிறது. அந்த நிலைமைகளைப்பற்றி நம் அதிகாரிகள் மட்டுமல்ல, அமைச்சர் அவர்களும் கவனிக்காமல், நாட்டினுடைய நிலைமைகளைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை, புரிந்துகொள்ளவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்ல, இன்னொரு விஷயம், மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதுதான் ஆர்ம்ட் ரிசர்வ் போலீசார் குறித்தது. ஆர்ம்ட் போலீசாரைக் கவனிக்க என்று தனியாக ஒரு ஐ.ஜி. மூன்று மாதங்கள் வரை அவர் இவர்கள் பிரச்சினையை எப்படி கவனிக்க வந்தார். அக்டோபர் மாதம் தான் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்தியிலே அதற்குள்ளாக புகைச்சல் ஏற்பட்டிருக்கிறது. போலீசை 5
கவனிக்க வேண்டாமா? தமிழ் நாட்டில் ஸ்பெஷல் ஆர்ம்ட்

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 நவம்பர் 12

கேம்ப்களிலேயிருந்து கொண்டு வந்து மக்கள் பத்திரிகை, மற்ற இடங்களிலே போராட்டங்களை ஒடுக்க பயன்படுத்தினார்கள். இப்படிப்பட்ட ஆங்காங்குள்ள மற்ற போலீஸ்காரர்களை 'காண்ட்ராக்ட்' பண்ணிப் போவதற்கு ஸ்பெஷல் போலீசுக்கு சந்தர்ப்பம் அளித்தது. அவர்கள் மேலும் அதிருப்தி அடைவதற்கும் இது காரணமாகியிருக்கிறது. இதைப்பற்றி 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே வந்ததைப் படித்துக் காட்டிவிருக்கிறேன்.

இந்த 3 மாத காலத்திலேதான் புதிய ஐ.ஜி. என்று தனியாக ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். இந்த ஆர்ம்ட் போலீசுக்கும் இவர்களுக்கும் இடையே என்ன நடக்கிறது என்று உணர்த்திருந்தால், இதை நாம் 'அவாய்ட்' பண்ணியிருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசுக்கு போலீஸ்காரர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமைக்கு புதிய ஐ.ஜி.யால் முடியாமல் போய்விட்டது. எனவேதான் புதிய பதவிகளும் ஒரு காண்ட்ரிபியூட்டரி பேக்டராக ஆகிவிட்டது என்பதைத் திரும்பச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கபாண்டியன் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "புதிய சட்டத்தைப் போட்டார்கள்; இதற்கு இடம் இருக்கிறதா என்று பார்த்துப் போட்டீர்களா" என்று கேட்டார்கள். 4 மாதம் கழித்துத்தான் திரும்ப ஆர்டினன்ஸ் கொண்டு வந்திருக்கிறார்கள். 1—6—1979-ல் டைரக்டர் ஜெனரல் பதவி உண்டாக்கியிருக்கிறார்கள். ஆர்டினன்ஸ் இல்லாமல், எக்ஸிகியூடிவ் ஆர்டரிலேயே, ஒரு ஜி.ஓ., போட்டு, ஒரு டைரக்டர் ஜெனரல் பதவியை உருவாக்க முடியுமா? அதுவும் அப்பாயிண்ட்மெண்ட் வரைக்கும் தாண்டிய திரும்ப பதவி கொடுக்க முடியுமா? அவர்கள் சொன்ன மாதிரி, அவர் ஒருவருக்குத் 'யூனிபார்ம்' போட அனுமதிக்க முடியுமா என்பதையெல்லாம் செய்யாமல் செய்திருக்கிறார்கள். ஒரு கிரிட்டிசிசம் வந்த பிறகு, 4 மாதங்கள் கழித்து ஒரு அவசரச் சட்டம், விமர்சனம் மசோதா கொண்டுவருகிறார்கள். அதற்கு முன் இதையெல்லாம் யோசனை இருக்க வேண்டும். நீங்கள் இந்த நிர்வாகத்தை எப்படி நடத்துகிறீர்கள் என்பதைத்தான் நாங்கள் யோசிக்கவேண்டியிருக்கிறது. நான்கு மாதங்கள் கழித்து ஆர்டினன்ஸ் போடுகிறீர்களே, இதற்கு முந்திய காலத்தில் அவர்கள் புதிய பதவியில் இருந்தார்களே, அது செல்லுமா, செல்லாதா என்று கேட்கிறேன்.



1979 நவம்பர் 12]

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I give an emphatic answer "yes" and it is absolutely valid.

திரு. ஆ. நல்லசிவன் : அப்படியானால், இப்போது இந்த ஆர்டினன்ஸ் ஏன் கொண்டுவந்திருக்கிறீர்கள்? முன்பு இருந்ததையே தொடர்ந்திருக்கலாமே. நீங்கள் ஏற்கெனவே போட்டிருந்த ஜி.ஓ.வின் படியே தொடர்ந்து வந்திருக்கலாமே. இப்போது தனியாக ஒரு ஆர்டினன்ஸ் அவசியமா என்று கேட்கிறேன். அவசியம் என்றால் அதை ஜூன் மாதத்திலேயே ஏன் போடவில்லை? இதிலே ஏதோ காண்ட்ராடிக்ஷன் இருக்கிறது. ஜூன் உத்தரவு சரியென்றால், இப்போது ஆர்டினன்ஸ் அவசியமில்லை. ஆர்டினன்ஸ் அவசியம் என்றால் அதை 1—6—1979லேயே கொண்டுவந்திருக்கலாம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I will give a completely satisfactory answer to the hon. Member Thiru Nallasivan.

திரு. ஆ. நல்லசிவன் : ஆகவே, இந்த 'போஸ்ட்' அவசியமில்லை. இதனால் சில விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னொரு பிரச்சினையும் இதிலே வருகிறது. அது சீனியாரிட்டி பிரச்சினை. ஒரு டி.ஐ.ஜி. கோர்ட்டுக்கே போயிருக்கிறார். இப்போது சீனியாரிட்டி விஷயங்களிலும் நுழைந்து 'டிஸ்டர்ப்' பண்ணுகிறீர்கள். இங்கே மட்டுமல்ல, தொழிலாளர்கள் விஷயங்களில் நாங்கள் சீனியாரிட்டி தரவேண்டுமென்று பேசினால், அது தவறு என்று இடையில் ப்ரமோஷன் தர வேண்டும் என்று சொன்னால், அது தவறு என்று சொல்வதுபோல, அப்படிச் சொல்லியே பழக்கப்பட்டவர்கள். இப்போது அதிகாரிகள் அதிகாரிகளுக்கும் அப்படிச் செய்கிறீர்கள். அதனால் சீனியாரிட்டி 'டிஸ்டர்ப்' ஆகின்றதால், 'அட்மினிஸ்ட்ரேஷன்' பாதிக்கப்படுகிறது. சீனியாரிட்டி சமாசாரம் என்பது சர்வீஸிலே ஒரு முக்கியமான சமாசாரம். நீங்கள் எப்படி தொழிலாளர்களைப் புறக்கணிக்கிறீர்களோ அந்த மாதிரி உங்கள் அதிகாரிகளையும் புறக்கணிக்கிறீர்கள். அதனால் டிப்பார்ட்மெண்டிலே சிக்கல் உண்டாகின்றது. ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை வற்புறுத்த வேண்டாம் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தொழிற்சாலைகள் கதவடைப்பு பற்றி அரை மணி நேர விவாதத்தை ஒரு மணிக்குத் தொடங்க வேண்டியிருப்பதால், சட்ட முன்வடிவு மீதான விவாதம் பிற்பகல் 4 மணிக்குத்

5. அரை மணி நேர விவாதம்.

## தொழிற்சாலைகள் கதவடைப்பு-மூடுதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொழிற்சாலைகள் கதவடைப்பு-மூடுதல் குறித்து [illegible] மேலவையில் 7—11—1979 அன்று விடையளிக்கப்பட்ட [illegible] வினா எண் 90 தொடர்பாக விவாதம் 1½ மணி நேரத்திற்குள்ளாக முடிய வேண்டும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] சுருக்கமாகப் பேச வேண்டுகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** அவைத் தலைவர் அவர்களே, இதிலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப்பற்றி முதலிலே ஒன்று சொல்ல விரும்புகிறேன். [illegible] விவரங்கள் [illegible] திரட்டப்பட்டிருக்கிறது. அது 1978 [illegible] கமோர்ஷியல் விடுதியில் வெளியிடப்பட்டது. மற்றொன்று, மாதர்களை [illegible] காலத்திற்குக் கேட்கப்பட்டிருக்கிறது விவரங்கள் 1977 ஜூன் முதல் 1978 மே வரைக்கு ஒரு சந்தேகம். என்னிடம் விவரம் இல்லாததால், சந்தேகத்தைக் கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எப்போது இந்தக் கேள்வியை அனுப்பினார்கள் என்பது தெரியவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி:** 1978 மே மாதத்தில்.

**திரு. ப. மாணிக்கம்:** அந்த ஆண்டுக் காலம் என்பதற்குப் பதிலாக, [illegible] இல்லாததால், ஜூன் 1977-லிருந்து விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். [illegible] இருக்கிறது. இருந்தபோதிலும், 1978 [illegible] கமோர்ஷியல் மூடப்பட்டிருக்கிறது. சுமார் 100 [illegible] இருக்கிறார்கள். அவர்கள் எந்த வகையும் இல்லாமல் [illegible]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சரவர்கள் இதில் எவ்வளவு நிமிடம் பேச இருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** 5 நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 5 நிமிடங்கள் பேசினால் 25 நிமிடங்களாகும். அதற்குப் பிறகு அமைச்சரவர்கள் 5 நிமிடங்கள் பேசுவார்கள்.





**திரு. ப. மாணிக்கம்:** கமோர்ஷியல் ஒரு புகழ் பெற்ற பத்திரிகை அது தமிழ்நாட்டில் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய பங்கு வகித்திருக்கிறது. அதை உருவாக்கியவர்களும் முக்கிய பங்கு வகித்திருக்கிறார்கள். தமிழ்நாடு மட்டுமல்ல, சுப்பிரமணிய பாரதியார் காலத்திலிருந்து அதற்கு இந்திய வரலாற்றில் பங்கு உண்டு. இப்போது பாரதியார் போன்ற ஆட்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்தக் காலத்திற்கும் சேவை செய்த பல பத்திரிகையாளர்கள் அதிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எங்கே இருக்கிறார்களென்று நிலை தெரியவில்லை. அவர்கள் நிலைமை படுமோசமாக இருக்கிறது. இதுமாதிரி விவரங்கள் ஏன் இந்த அறிக்கையில் விடுபட்டுப் போயிருக்கின்றன என்பது தெரியவில்லை. இம்மாதிரி முக்கியமான விவரங்கள் விடுபடாமல் இருக்க, வரக்கூடிய காலத்தில் விழிப்பாக இருக்க வேண்டும்.

குரோம்பேட்டையில் குரோம் லெதர் பாக்டரி மூடப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த நிலை தொடர்ந்து இருக்கிறது. அறிக்கையில் மூடப்பட்டதற்குக் காரணம், போனஸ் பற்றிய—பிரச்சினைதான் என்று விவரம் தரப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த போனஸ் மட்டும்தானா விவகாரமாக இருந்தது? போனஸ் பற்றிய பிரச்சினை இருந்தாலும், தொழிற்சாலை திறக்கப்பட்டிருந்தது, தொழிலாளர்கள் போய், வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கையெழுத்துப் போட்டார்கள். லாக்-அவுட் என்று சொல்லவில்லை. ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவித ஊதியமும் கிடையாது. இதுவரை அந்தப் பிரச்சினையில் எந்தவிதத் தீர்வும் கிடையாது. அந்தத் தொழிலை நடத்தக்கூடிய முதலாளி வங்கியிலே வாங்கிய கடனைக் கட்டவில்லை என்பதால் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைத் திறக்க தொழிலாளர்கள் ஆக்கபூர்வமான உதவிகளைத் தரத் தயாராக இருக்கிறார்கள். அரசு முன்முயற்சி எடுத்தால், எந்த வித ஒத்துழைப்பும் தரத் தயாராக இருக்கிறார்கள். அதைத் திறக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, டி.ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட் பற்றியதாகும். வேலைநிறுத்தத்தினால் தொழிலாளர்களிடையே வன்முறையும், ஒழுங்கின்மையும் காரணமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது குறித்து ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதாரம் சீர்குலைகிறது என்பது மட்டுமல்ல, இந்தியப் பொருளா
தாரத்தையே சீர்குலைக்க வைக்கும். அந்நியச் செலாவணிபற்றிக் கவலைப்
படும் நிலைமை இதனால் ஏற்படுகின்றது. அந்நியச் செலாவணி ஈட்டும்
தொழிற்சாலைகள் இது போன்ற அவதிக்குள்ளானால், வேறு வழியே இடை
யாது. அரசே அவற்றை ஏற்றாக வேண்டும். இந்தப் பொறுப்பிலிருந்து
அரசு விடுபட முடியாது. அகில இந்திய அளவில் முதலாளிகள் பேசு
கிறார்கள், அவர்களைக் கூட்டி வைத்துப் பேசுகிறோமென்பது முயற்சியாக
இருக்கலாமே தவிர, வேறொன்றுமில்லை. எனவே பல ஆண்டுகளாக
இருக்கும் இந்த நிலைமைகளைத் தீர்க்க அரசு உறுதியாக முன்வர வேண்டும்.
முதலாளிகள் எதையாவது சொல்லிக்கொண்டேதான் இருப்பார்கள்.

(பிற்பகல் 1-10)

தொழிலாளர்கள் தாப்பிலேயிருந்து குறைகள் இல்லையென்று நான் சொல்ல
வில்லை. பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு கண்டாக வேண்டும். நிவர்த்தி
கண்டாக வேண்டும். மாதக் கணக்கில் தொழிற்சாலைகளை மூடுவது தொழி
லாளர் நலனுக்கும் நல்லதல்ல. அது பொருளாதாரத்தை வளர்க்காது என்ப
தோடு மட்டுமல்லாமல், நாட்டுக்குச் செய்கின்ற சேவையும் ஆகாது. தொழி
லாளர் நல அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே இன்னும் தீவிரமாக
கவனத்தை செலுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய உரையே
நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்பதைச் சொல்லி என் உரையை
முடித்து, அமைகிறேன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டது
போல், சுதேசமித்திரன் நாளேடுபற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. தின
மலர் நாளேடுபற்றி, அதில் நடந்த தகராறுபற்றி மட்டும் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. சுதேசமித்திரன் பத்திரிகை பழம் பெரும் பெருமைவாய்ந்த ஒரு
பத்திரிகை. நூற்றாண்டு விழா கொண்டாட வேண்டிய பத்திரிகை. முன்னாள்
முதல்வர் அவர்கள் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்பட்டு,
அவர்கள் நிர்வாகத்தில் அது நடந்துகொண்டிருந்தது. அது புகழ் வாய்ந்த
ஒரு பத்திரிகை. கிட்டத்தட்ட 100 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்
கிறார்கள். அதுபற்றி ஒன்றும் இதில் குறிப்பிடப்படவில்லை. எனக்குத்
தெரிந்தவரை, 13—8—1977-ல் சுதேசமித்திரன் பத்திரிகை அலுவலகத்தை
மூடுவதற்கான "லே-ஆஃப்" செய்யப்பட்டிருக்கிறது.
closure notice அனுப்பப்பட்டிருக்கிறது. 10—2—1978-ல்
நல அதிகாரிகள் முன்னிலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் எல்லாம்
கூடிப் பேசி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இன்னும்





நிறைவேறவில்லை. தொழிலாளர் நல அதிகாரிகள் முன்னிலையில் ஒப்பந்தம்
ஏற்பட்டும், ஏன் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை? அதுபற்றியும்
ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அந்தப்
பத்திரிகையினுடைய தொழிலாளர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அதைப்
படித்து வந்த வாசகர்களுக்கு அதனால் இழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த
இழப்பினால் பத்திரிகையின் முக்கியத்துவம்கூட இழந்து போயிருக்கிறது.
தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அந்த நாளேடு நின்றுபோய்விட்ட நிலையில்
தொழிலாளர்கள் வருந்திக்கொண்டிருக்கிறார்கள். வாசகர்கள் வருந்திக்கொண்
டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்
படாதது குறித்து என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஒப்பந்தம் நிறைவேற்றப்பட அரசு தீவிரமாக முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,
இன்றையதினம் மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களால்
தொழிற்சாலைகள் கதவடைப்பு, மூடுதல் குறித்து கொடுக்கப்பட்டுள்ள புள்ளி
விவரத்தைப் பார்க்கிறபோது, புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குகின்ற
முயற்சியில் இந்த அரசு ஈடுபடாவிட்டாலும்கூட, இருக்கிற தொழிற்சாலை
களை மூடியிருக்கிற பெருமையையாவது தேடித் தந்திருக்கிறது என்பதை
எடுத்துக்காட்டுகிறது. இந்தப் புள்ளிவிவரத்திலிருந்து தெளிவாக 31 தொழிற்
சாலைகள் நிரந்தரமாக மூடப்பட்டிருக்கின்றன என்ற விவரம் நமக்குத் தெரி
கிறது. 911 பேர் அதனாலே வேலை வாய்ப்பை இழந்திருக்கிறார்கள்
என்கின்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவை எதற்காக
மூடப்பட்டன என்று அந்தத் தொழிற்சாலைகளுடைய விவரங்களைப்பற்றி
அமைச்சர் அவர்கள்கூட அன்றையதினம் படித்துக் காட்டினார்கள். எட்டு
தொழிற்சாலைகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு மூடப்பட்
டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு பல கோடிக்
கணக்கான ரூபாய்களை "டிக்", "சிப்கோ", சிப்காட்", போன்ற நிறுவனங்
களில் மூலதனமாகக் கொடுத்து, தொழிற்சாலைகளைத் துவங்குங்கள் என்று
சொல்லி, உற்சாகப்படுத்துகின்ற அதே நேரத்தில், இருக்கின்ற 8 தொழிற்
சாலைகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு மூடப்பட்டிருக்
கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைக் கொடுத்
திருக்கிறார்கள். அதை நாம் பார்க்கின்றபோது, பல தொழிலாளர்கள் வேலை
வாய்ப்பினை இழந்து, உற்பத்திப் பெருக்கம் பாதிக்கப்பட்டுள்ள நிலையையும்,
எதிர்காலத்திலே மூலதனம் போட்டு தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டு
மென்ற ஆர்வம் தொழில் முனைவோருக்கு இல்லாமல் போய்விடும் என்ப
தையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவையினுடைய கவனத்திற்குக்

கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். சரியான முறையில் அணுகு முறை இல்லாத நிலையில், அதற்காக தொழிற்சாலைகள் மூடப்பட்டன என்பதை சரியாக ஆராயாத நிலையில், பொறுப்பற்ற நெருக்கடியால் மூடப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, அதைக் கேட்டு நான் வருந்துகிறேன். அரசாங்கத்திடம் வாய்ப்புகள், வசதிகள் இல்லாமல் இருந்தால்கூட பரவாயில்லை. ஆனால் வசதிகளும், வாய்ப்புகளும் இருந்தும், "டிக்" போன்ற நிறுவனங்களில் கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, புதிதாகத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முதலீடு இருந்தும் கூட, இந்தத் தொழிற்சாலைகளுக்கு அந்த வசதிகளையும் வாய்ப்புகளையும் இந்த அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதைப் பார்த்து என்னால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. அது மட்டுமல்ல. விவர அறிக்கையில் நான்காவது வரிசை நம்பருடைய நிறுவனமான ஃபிர்ஃபோ பிரைவேட் லிமிடெட் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் காரணமாக அந்த நிறுவனம் மூடப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதே அறிக்கையில் குறிப்புரையில் தொழிலாளர்களின் கோரிக்கைப்படி "தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைகள் அனைத்தும் நிர்வாகத்தினால் வழங்கப்பட்டு விட்டன" என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய கோரிக்கை நிறைவேறிய பின்பும். ஏன் அந்தத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்பட்டிருக்க வேண்டும்? அதற்கான விவரங்கள் அறிக்கையில் இல்லை. அதேபோல 21-வது நம்பருடைய நிறுவனத்தைப் பொறுத்தவரையிலும், தொழிலாளர்களின் சில கோரிக்கைகள் காரணமாக நிறுவனம் மூடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அதே வரிசை நம்பருடைய நிறுவனத்தின் குறிப்புரைப் பகுதியில் "தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைகள் யாவும் வழங்கப்பட்டு பிரச்னைகள் தீர்க்கப்பட்டன" என்று கூறப்பட்டிருக்கிறது. என்றாலும், அந்த நிறுவனம் மூடப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே 6 தொழிற்சாலைகள் ஏன் மூடப்பட்டிருக்கின்றன என்று கேட்டால், தொழில் மந்தம் என்று சொல்லுகிறார்கள் அரசாங்கத்திற்கு மந்தமா, இல்லை அமைச்சர்களுக்கு மந்தமா? தொழிற்சாலைகளுக்கு ஏன் மந்தம்? மூலப்பொருள் கிடைக்கவில்லையா? தொழிலாளர்கள் வேலை செய்யாமல் நஷ்டம் வரும்படி இருந்து விட்டார்களா? "பொம்மை நாகன் நடையில் வீழ்ந்தான்". என்று சொல்வதுபோல விளக்கம் ஏன் சரியாகக் கொடுக்கப்படவில்லை?





42 தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றன என்றும், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 21,285 என்றும் புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பாக தொழிற்சாலைகள், நாட் கணக்கில், வாரக் கணக்கில், மாதக்கணக்கில் மூடப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டதும், ஒரு அரசாங்கம் உடனடியாக உரியவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியாதா? நிச்சயம் எடுத்திருக்க முடியும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் அப்படி நடந்திருக்கிறது. ஏன் இப்படி 42 தொழிற்சாலைகள் ஓராண்டுக் காலத்திற்குள் நிரந்தரமாகக் கூட அல்ல, தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றன என்றால், அரசு பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராக இல்லை என்றுதான் பொருள். தொழிலாளர்களைப் பார்ப்பதையே இந்த அரசு பாவமாகக் கருதுகிறது. தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் கவனிப்பது என்றால், அது பாவமான காரியம் என்ற ஒரு எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்று நான் கூறுகிறேன். அதிலேயும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் நலனை மறந்துவிட்டார்கள் என்பதையும், அவரை முதலாளிகள் நல அமைச்சர் என்று போட்டுவிட்டால் பொருத்தமாக இருக்கும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சியில் அவர் இருக்கும்போது, தொழிலாளர்களுக்காக எப்படியெல்லாம் வாதாடினாரோ, அது போல் இன்றைக்கு வாதாடுவதற்குப் பதிலாக, முதலாளிகளுக்காக வாதாடுகிற காரணத்தில்தான், இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதற்கு அவர் கொடுத்திருக்கின்ற இந்தப் புள்ளி விவரங்களே சான்று. அந்த அறிக்கை எங்களால் தயாரிக்கப்பட்டதல்ல. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட விவர அறிக்கைதான் அது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இன்னும் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சேஷசாயி காகித ஆலைப் பிரச்சினை பல ஆண்டுக் காலமாக, நீண்ட காலமாக இருந்துகொண்டிருக்கிற பிரச்சினை. அதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால் இன்றைக்குக் கூட அரசாங்கம் கொடுக்கின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதுதான். சேஷசாயி காகித ஆலைப் பிரச்சினை பற்றி சட்டமன்றத்தில் எதிர்க் கட்சிக்காரர்கள் வற்புறுத்தியபோது, தொழிலாளர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அரசுத் தரப்பில் வாக்குறுதி தரப்பட்டும் கூட, இன்றுவரை அந்தத் தொழிலாளர்கள் விடுதலை

திரும்பத் திரும்ப லாக் அவுட் என்று குறிப்பில் போட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? சர்க்கார் தரப்பிலே என்ன காரணம் சொல்கிறார்கள்? தொழிலாளர்கள் மத்தியிலே அமைதியின்மை, ஒற்றுமையின்மை, ஒழுங்கின்மை, ஒத்துழையாமை மனப்போக்கு, மெதுவாக வேலை செய்யும் போக்கு என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு தொழிலாளர்களுடனும், முதலாளிகளுடனும் பேசி, சில கண்டிஷன்படி உடன்பாடு ஏற்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** இரண்டு நிமிடங்கள் கூட கொடுங்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மொத்தம் இருப்பது ½ மணி நேரம். உறுப்பினர்கள் பேசி முடிந்த பிறகு, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு சீப் மினிஸ்டர் அவர்களிடத்திலே ஒத்துக்கொண்டார்கள். 9—8—1978 ஆம் நாளன்று ஃபாக்டரி திறக்கப்படுகிறது. ஆனால், 10—8—1978 ஆம் நாள் மீண்டும் ஃபாக்டரி அடைக்கப்படுகிறது. ஒருநாள் திறந்து மறுநாள் ஏன் அடைக்கிறார்கள்? சீப் மினிஸ்டர் முன் பேசி, ஒத்துக்கொண்ட சமாச்சாரத்தை அமுல்படுத்த மாட்டேன் என்கிறார் அங்கே இருக்கும் மேனேஜிங் டைரக்டர். மானேஜ்மென்ட் சீப் மினிஸ்டரோடு ஒத்துக்கொண்ட சமாச்சாரத்தை அமுல்படுத்தாததனால் ஏற்பட்ட இந்தப் போராட்டத்திற்குக் காரணம், தொழிலாளர்களிடையே அமைதியின்மை, ஒழுங்கீனம், ஒத்துழையாமை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பட்டமான முறையில் தமிழ்நாடு முழுவதும் தெரிந்த விஷயம் இது. எப்படி தொழிலாளர்கள் மீது தவறான எண்ணத்தோடு, தொழிலாளிதான் தவறு பண்ணுகிறான் என்று நினைக்கும் விதத்தில் ரிப்போர்ட் இங்கே 'ப்ரசன்ட்' பண்ணப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, செங்கல்பட்டில், சிங்கப்பெருமாள் கோயிலுக்குப் பக்கத்திலே இருக்கும் லைட் ரூஃபிங்ஸ் லிமிடெட் என்ற கம்பெனி.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல நேரம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பதில் சொல்லாமலேயே போய்விடுவார்கள். இந்த 30 நிமிடத்திற்குள் அவர்களுக்கும் நாம் நேரம் கொடுக்க வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்:** 16 நாட்கள்தான் அந்த ஃபாக்டரி மூடப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு மாத காலமாக அந்த ஃபாக்டரி லாக் அவுட்டில் இருந்தது. தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்ததாக ...திலே போட்டிருக்கிறார்கள். ஆனால் முதலாளி நோட்டீஸ் என்ன போட்டிருக்கிறார் என்று சொன்னால்

'No worker shall be permitted to enter into the factory without iving individual undertaking on the following lines . . . . ."

...ப்படி ஒரு நோட்டீஸ் போர்டு போட்டிருக்கிறான்.

'Those who give the above undertaking alone will be entitled to ome inside the factory. Those who are not willing to give this ndertaking will not be permitted inside the factory."

...ன்று போட்டு, கூர்க்கா படையையும், போலீஸ் படையையும் காவலுக்குப் போட்டிருந்தார்கள். அங்கே 16 நாட்கள் தான் அந்த நிறுவனம் மூடப்பட்டிருந்ததாக இந்த அறிக்கையிலே போட்டிருக்கிறார்கள். இல்லீகலாக ஒரு முதலாளி நடவடிக்கை எடுக்கிறபோது, அதை மறைப்பதற்கான முறையில் ...பார்ட்மென்ட் அதிகாரிகளின் நடவடிக்கைகள் அமைகின்றதோ என்று சந்தேகப்படும்படியாகத்தான் இந்த விவரங்கள் இருக்கின்றன.

அடுத்தபடியாக, அம்பீஸ் கபே. (மணியடிக்கப்பட்டது) முடித்துவிடுகிறேன். இந்த அம்பீஸ் கபேயோடு முடித்துக்கொள்கிறேன். இந்த ஹோட்டல் ஒரு பிரபலமான ஹோட்டல். அங்கே 140 பெர்மனென்ட் தொழிலாளர்களும், 60 கேஷுவல் லேபர்களும் இருந்தார்கள். முதல் தடவையாக அந்த முதலாளி லே-ஆஃப் பண்ணுகிறார். லே-ஆஃப் செய்தால் யாரை அந்த முதலாளி லே-ஆப் பண்ணுகிறார். லே-ஆப் செய்தால் யாரை வீட்டுக்கு அனுப்புகிறார்கள்? அந்த முதலாளி, 60 கேஷுவல் லேபர்களையும் வேலைக்கு வைத்துக்கொண்டு 140 பெர்மனென்ட் தொழிலாளர்களில் 2. தொழிலாளர்களை வெளியேற்றுகிறார். அது தவறு என்று அங்கே உள்ள ஒர்க்கர்ஸ் ஆட்சேபணை செய்தபோது, ஹோட்டலை 'லாக் அவுட்' பண்ணுகிறார். அங்கு வேலை செய்த ஒர்க்கர்ஸ் சாப்பிட வழியில்லாமல், அம்பீஸ் கபே-க்கு பக்கத்திலேயே ஒரு தற்காலிக ஹோட்டல் போட ஏற்பாடு செய்தார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அங்கே சென்று ஒரு போண்டாவும், காப்பியும் சாப்பிட்டுவிட்டு 'நன்றாக இருக்கிறது'

என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள். ஆனால் அவர் சாப்பிட்டுவிட்டுப் போன மறுநாளே கார்ப்பரேஷனிலிருந்து அதிகாரிகள் வந்து தற்காலிக ஹோட்டலைப் பிரித்துப் போட்டு விட்டுப் போய்விட்டார்கள். ஆகவே, இந்த மாதிரி ஒரு முதலாளி லே-ஆஃப் செய்து அதை தொழிலாளிகள் ஆட்சேபனை செய்தபோது, முதலாளி ஹோட்டல் முழுவதையும் லாக் அவுட் செய்திருக்கும்போது, இந்த ரிப்போர்ட்டிலே 'தொழிலாளர்களின் ஒழுங்கீன நடத்தை' என்று போடப் பட்டிருக்கிறது. இதனால் 'Department is biassed against the workers' என்பதைத்தான் காட்டுகிறது. இப்படி தொழிலாளிகளுக்கு விரோதமான போக்குத்தான் இந்த ரிப்போர்ட்டிலே அதிகமாக இருக்கிறது. விவரங்களை 'ப்ரசன்ட்' பண்ணியிருக்கும் முறைகூட தொழிலாளர்கள்தான் பூரா தகராறும் பண்ணுகிறார்கள் என்று நினைக்கும்படி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர், நண்பர். நான் 'முதலாளி நல அமைச்சராக' வந்துவிட்டேன் என்று அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் நான் மெத்த பெருமையோடு சொல்லிக்கொள்வேன், நானோ அல்லது இந்த அமைச்சரவையிலே இருக்கும் மற்ற 17 அமைச்சர்களில் யாருமோ எந்த முதலாளியின் தயவிலும் வாழவில்லை. வாழ வேண்டிய தேவையும் இல்லை. நான் இந்த அமைச்சர் பொறுப்புக்கு வரும் வரையில் சாதாரண பஸ்ஸில் தான் போய்க்கொண்டிருந்தேன். இப்போது நான் வைத்திருக்கும் டி.எம்.வி. 999 கார் கூட, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சரானதால், அவர் தயவில் நான் வைத்திருப்பது. நாளைக்கு இந்தப் பதவியும் போய்விட்டால், பழையபடி பஸ் தான், அல்லது வாடகைக் கார்தான். இந்த அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர்களில் பலர் நல்ல என்ஜினியர்கள். நல்ல முறையில் படம் பிடித்து பணம் சம்பாதித்தவர்கள், நல்ல லாயர்கள். அத்தனை பேரும் பல லட்சக்கணக்கான ரூபாய்களை இழந்துவிட்டுத்தான் தொண்டு செய்ய வேண்டுமென்பதால் 936 ரூபாய்க்கு வேலை செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எவ்வளவு பெரிய தியாகம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த முதலாளிகள் கையில் ...

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: Sir, I am not yielding

திரு. ஆற்காடு நா. வீராசாமி: முதலாளிகளுக்கு ...



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: Please sit down. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் not yielding. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் 40 ஆண்டுக் காலமாக தொழிற்சங்கத்திலே தொடர்பு வைத்திருந்தவன். பெரிய பட அதிபர்களாக இருக்கக்கூடியவர்கள், என்ஜினியர்கள், லாயர்கள் இப்படி லட்சக்கணக்கான பணம் சம்பாதித்தவர்கள், அத்தனையையும் விட்டுவிட்டு தியாகம் செய்ய வந்தோம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். யாரும், எந்த நேரத்திலும் எந்த முதலாளிகளிடத்திலும் கை கட்டி நிற்கவேண்டிய தேவையில்லை என்பதையும், கை நீட்டி வாங்க வேண்டிய தேவையில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தன் இருக்கையை விட்டு எழுந்தார்.)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: I am not yielding.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: The Hon. Minister is not yielding. The hon. Member may please be seated.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னார்கள். இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்கள் முதலாளிகள் எழுதித் தருவது. Closure due to violence, lock-outs due to violence என்று நோட்டீஸ் அனுப்புகிறார்கள். அந்த நோட்டீசினுடைய மொழி பெயர்ப்புத் தானே தவிர, அரசினுடைய கருத்தல்ல. இதில் 'க்ளோஷர்' வேறு, 'லாக் அவுட்' வேறு. 'லாக் அவுட்' செய்தது 42. அவைகள் திறக்கப்பட்டு விட்டன. 'க்ளோஷர்' செய்யப்பட்டவை 31. அந்தத் தகவல்தான் அன்றைய தினம் கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கேட்டார்கள். ஒன்று since reopened. Adjudicationக்காக தொழிற் கோர்ட்டுக்கு இரண்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. Number of cases where the units have been closed due to financial loss and where the workers have been paid closure compensation: எழு, ஒன்று திறக்கப்பட்டது, இரண்டு நீதி மன்றத்திற்குப் போனது, எழு நிறுவனத்தில் உள்ளவர்கள் 'க்ளோஷர் காம்பென்சேஷன்' அதாவது கிடைக்க வேண்டிய தொகையை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். 21 நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை. Number of cases where no formal dispute has been raised before the Labour Department is 21. ஆக மொத்தம் 31,

இவைகள் எல்லாம் எட்டு பேர்கள், 10 பேர்கள், 20 பேர்கள் என்று இருக்க கூடிய இடங்கள். "இந்த டிப்பார்ட்மென்ட் என்ன நடவடிக்கை எடுத்தது?' என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மூடுவதுபற்றி அவர்கள் சொன்னார்கள். சுப்ரீம் கோர்ட் அண்மையிலே அளித்த தீர்ப்பிலே கூட மூடுவதற்கு எந்த ஒரு முதலாளிக்கும் உரிமையுண்டு என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறது.

(பிற்பகல் 1-30)

அண்மையில்கூட 'ஃபுல் பெஞ்ச்' தீர்ப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது. மூடப்பட்ட அத்தகைய தொழிற்சாலைகளைப்போய் யாரும் திறந்து நடத்து என்று சொல்ல முடியாது. அதற்கு யாரும் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. தொழிற்சாலை உண்மையிலேயே மூடப்பட்டிருக்கிறதா அல்லது மூடிவிட்டோம் என்று நிருவாகத்தினர் ஏமாற்றுகிறார்களா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, தொழிற்சாலையை மூடாதே என்று சொல்லுகிற உரிமை யாருக்கும் கிடையாது என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த சட்டத்தில் 300 பேர்களும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றும் ஒரு தொழிற்சாலையை மூடுவதாக இருந்தால், 90 நாள் முன்னறிவிப்பு அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று இருந்தது. அதைக்கூட 'ஃபுல் பெஞ்ச் டெசிஷன்' 'ஸ்ட்ரைக் டவுன்' செய்துவிட்டது.

அடுத்து, 12 (3) செட்டில்மென்ட்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், இந்த செட்டில்மென்ட்பற்றி இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன. ஒன்று அமர்சந்த் பியாரேலால் கேஸ்; மற்றது பூனா மஸ்தூர் சபா வர்செஸ் ஜி. கே. துத்தியா.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விரைவில் தமது பதிலை முடித்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** Serious allegations against a well-organised and well-knit Government. அதற்கெல்லாம் பதில் சொல்லியாக வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் சொல்லுகிறேன்.

இந்த இரண்டு தீர்ப்புகளையும் படித்துப் பார்த்தால், ஒன்று தெளிவாகத் தெரியும். 12 (3) செட்டில்மென்ட் போட்டுவிட்டால் அந்த செட்டில்மென்ட்டைப் பொறுத்தவரையில், மறுபடியும் செட்டில்மென்ட் போட்ட இரண்டு தரப்பாரும் சேர்ந்து 'அதை மாற்றலாம்' என்று அவர்களே தீர்மானம் செய்தாலொழிய, வேறு யாரும் இடையில் தலையிட முடியாது; தலையிடவோ மாற்றவோ முடியாது; மாற்றக் கூடாது. இந்த வகையில் ஒரு நீண்ட



கடிதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களே பெற்றிருப்பார்கள். அதற்குத் தொழிலாளர் தலைவர் திரு. வி. எஸ். அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அனைத்து சங்கத் தலைவர்களும் சேர்ந்து அதை மாற்றலாம் என்றால், சட்டத் திருத்தத்தின் மூலம் எதிர்காலத்தில் மாற்றலாம். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், "We cannot initiate conciliation proceedings நீ கன்சிலியேஷனுக்கு வா என்று கூப்பிடவும் முடியாது, கூப்பிடவும் கூடாது. அப்படி அரசாங்கம் ஒரு 'ரெபரன்ஸ்' செய்தால், அது செல்லாது என்பதுதான் தீர்ப்பு. "It is not a valid reference". இந்தச் சட்டத்தை நாம் செய்யவில்லை. இருக்கிற சட்டத்திற்கு மதிப்புத் தருகிறோம். "மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் அதற்கு மணம் உண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நாங்கள் பின்பற்றுகிறோம். திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்ததெல்லாம் தவறா? நல்லதே அவர்கள் செய்யவில்லையா?

7—11—1974-ல் சேஷசாயி பேப்பர் போர்டில் ஒரு பெரிய போராட்டம் நடத்தினோம். 54 நாட்கள் அந்தப் போராட்டம் நடைபெற்றது. நானும் அருமைச் சகோதரர் திரு. நல்லசிவன் அவர்களும் திரு. ரமணி அவர்களும் எல்லோரும் சேர்ந்து போராடிப் பார்த்தோம். அப்போதுகூட திரு. நல்லசிவன் அவர்கள் அங்கே வேகமாகப் போய், வழுக்கி விழுந்து, கால் சுளுக்கி, அதனால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்தப் போராட்டத்தின் கடைசியாக 7—11—1974-ல் 12 (3) செட்டில்மென்ட் இருக்கிற காரணத்தால், இதில் அரசாங்கம் தலையிடக்கூடாது என்று கலைஞரின் ஆட்சியின்போது உத்தரவு வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது இத்தகைய உத்தரவு வந்தது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த விவாதம் அரை மணி நேரம் மட்டும்தான் நடக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் மேலும் பேசுவதானால் அவையின் அனுமதி தேவை. அவை அனுமதி கொடுக்குமானால், நான் அவையை நடத்தத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** விரைவில் முடித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 7—11—1974-ல் அன்றிருந்த சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து அதன்படி நடந்துகொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத்தான் மாற்ற வேண்டும் என்று நமது புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்காகத்தான் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு இதனை மாற்ற வேண்டுமென்று பரிந்துரை செய்தால், அதை மாற்றலாம்.

அதைப்போலவே இன்டிவிஜுவல் அண்டர்டேக்கின் வாங்குவதையும் புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றுவதற்கு என்று அமைக்கப்பட்ட குழுவில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இருக்கிற காரணத்தால், இவைகளையெல்லாம் மனதில் கொண்டு அவைகளை மாற்றியமைக்க பரிந்துரை செய்வார்களானால், அரசு அவைகளைப் பரிசீலிக்கும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி தம் இருக்கையில் இருந்து எழுந்து ஏதோ பேச முனைந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த அரை மணி நேர விவாதத்தைப் பொறுத்தவரையில் விவாதத்தை அவை முன்கொண்டு வருவதற்கு மரபுப்படித் தீர்மானமோ, வாக்கெடுப்போ தேவையில்லை. அரை மணி நேரமானவுடன் விவாதம் முடிவுறும் என்றிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த விவாதம் அரை மணி நேரத்தில் முடிந்திருந்தால், இது சரியாக இருக்கும். அரை மணி நேரத்திற்கு மேலும் நடந்திருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஐந்து நிமிஷம் பேசியிருக்கிறார்கள். அவை அனுமதித்திருக்கிறது. எனவே இதற்குமேல் கேள்வி கேட்கவோ, விவாதிக்கவோ எந்த அனுமதியும் கிடையாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அமைச்சர் அவர்கள் பேசும்போது நான் எழுந்தேன். அவர் குறுக்கீட்டிற்கு இடம் தரவில்லை. இப்போதும் நாங்கள் எந்தக் கருத்தும் சொல்ல முடியாது என்றால் உறுப்பினர்களாகிய எங்களுக்கு என்னதான் பாதுகாப்பு இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த விவாதத்தைப் பொறுத்தவரையில் விவாதத்திற்குப் பிறகு கேள்வி கேட்கவோ, விளக்கம் கோரவோ முடியாது. அரை மணி நேரத்தில் முடிய வேண்டும்.

மேலவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, அவை மீண்டும் பிற்பகல் நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-35)

மீண்டும் மாலை நான்கு மணியளவில் அவை கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)





## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (3) 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979)—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பெயர் கொடுத்திருப்பவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், இந்த ஒரு சட்ட முன்வடிவைத் தவிர வேறு எந்த சட்ட முன்வடிவை எடுத்துக்கொள்ள முடியாது என்று தெரிகிறது. ஆகவே கட்சிக்கு ஒருவர் பிரதிநிதித்துவமாகப் பேசுங்கள். பேசுகிறவர்கள் சுருக்கமாகப் பேசவும்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திற்கான நோக்கங்களும் காரணங்களும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலே நோக்கங்களும் தெளிவுபடுத்தப்படவில்லை, காரணங்களும் தெளிவுபடுத்தப்படவில்லை. அவசரச் சட்டமாகப் போட்டதைச் சட்டமாக்குவதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஒரு ஐ.ஜி. என்று இருந்ததை மூன்று ஐ.ஜி.-க்கள் என்று அதிகரித்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் முதலில் நான்கு ஐ.ஜி.-க்கள் என்றும் ஒரு டைரக்டர்-ஜெனரல் என்றும் விவரங்கள் இருந்தன. பத்திரிகைச் செய்தியை மட்டும் அதிகாரபூர்வமான அறிவிப்பாக இருக்காது என்று எடுத்துக் கொள்ளலாம். பிறகு மற்றொரு செய்தி வந்தது. ஒரு ஐ.ஜி. இராஜினாமா செய்துவிட்டார் என்று செய்தி வந்தது. அந்த இடத்திற்கு யாரைப் போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை யாரையாவது போட்டிருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியாததால், நான் இந்தக் குறைபாட்டை உணர்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவில் மூன்று ஐ.ஜி.க்களும், ஒரு டைரக்டர்-ஜெனரலும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அவைக்கு என்ன காரணத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு வருகிறது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. போலீஸ் நிர்வாகத்தைச் செய்வதற்காக ஒன்றும், குற்றம், குற்றவியல் அல்லது சட்டம் ஒழுங்கு ஆகியவற்றைக் கவனிப்பதற்கு ஒன்றும், மதுவிலக்குக் குற்றங்களைத் தடுப்பதற்காக ஒன்றும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஆயுத போலீஸ் துறையின் அதாவது அபிவிருத்தி செய்வதற்காக என்று காரணங்களைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்களா என்றால், இல்லை. வேலைப் பளு அதிகரித்திருக்கிறது, அதற்காக இந்தப் பாகுபாடு, அதற்காக தனித்தனியாக ஐ.ஜி.-யைப் போட்டிருக்கிறோம் என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், அதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. இப்படி மூன்று ஐ.ஜி.-க்களை ஏற்பாடு செய்து, அவர்களுக்கு ஒரு டைரக்டரைப் போட்டிருப்பது அவர்களுடைய பணிகளை

இணைப்பதற்காக என்று கருதுகிறேன். பொதுவாக நிர்வாக அமைப்பில்
ஒரு டைரக்டர்-ஜெனரல் இருக்கிறார் என்றால், பல்வேறு வேலைகளை
இணைப்பதற்காகத்தான் அவர் இருப்பார். மூன்று ஐ.ஜி.-க்கள் செய்யு
வேலையை ஒரு டி.ஜி. இணைப்பார் என்றால் மாவட்டத்திலுள்ள எஸ்.ப
எப்படி இந்த வேலைகளை இணைப்பார்? மாவட்டங்களில் இருக்கக்கூடி
அமைப்பு வேறுவிதமாக இருக்கிறது. நான் போலீஸ் நிர்வாகம் முழுவதையு
எடுத்துக்கொள்ளவில்லை. இந்தச் சட்டத் திருத்தம் சம்பந்தமா
குறிப்பிட்ட பிரச்சினையைக் கொட்ட விரும்புகிறேன். மூன்று ஐ.ஜி.
களுடைய உத்தரவுகளையும் டைரக்டர்-ஜெனரல் இணைப்பதுபோல்
மாவட்டத்தில் இந்த வேலைகளை எவ்வாறு இணைப்பார்கள்?
நடைமுறையிலே இதனால் குழப்பம் ஏற்படுகிறது. போலீஸ் துறையைப்
பற்றி என்னுடைய அனுபவம் குறைவானது. முன்பெல்லாம் புடிக்கடி
வைது செய்யப்படுவேன். ஆகவே எனக்கு அனுபவம் இருந்தது.
சமீப காலத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லை. ஆனால் சமீப கால அனு
டவர் என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கிறேன். பிறர் மூலமாகக் கிடைத்த
மனமுழுக ஞானத்தை நிராகரிக்க முடியாது. எனக்குக் கிடைத்திருக்கக்
கூடிய தகவலின்படி, இந்தப் பணி அமைப்பு முறை எதிர்பார்த்த பலனை
அளிக்கவில்லை; அதற்கு மாறாக குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது
என்று எனக்குப் படுகிறது. காவல் துறையில் வேலைத் திறமை, குற்றங்
களைக் கண்டுபிடித்தல் ஆகியவற்றில் பலவீனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.
சமீப காலத்தில் மிகப் பெரிய அதிகாரியினுடைய வீட்டிலேயே மோசமான
அளவுக்குக் கொலையும் நகைக் களவும் ஏற்பட்டிருக்கின்றன. அதைப்பற்றித்
துப்புத் துலங்கவில்லை. முன்னால் நடந்ததெல்லாம் பழைய கதை. சென்னை
நகரத்திலே பிரபலமாக நடந்திருக்கக் கூடிய விஷயத்தில் துப்புத் துலக்கு
வதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதில் எந்தவித அபிவிருத்தியும் இல்லை.
எனவே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறபோது, இது
அவசியம்தானா என்று அரசு பரிசீலிக்க வேண்டும். கொண்டு வந்த சட்ட
முன்வடிவை பின்வலிப்பதிலே அரசுக்குச் சிரமங்கள் இருக்கலாம் என்பதை
உணர்கிறேன். இருப்பினும் மற்றொரு பலவீனம் அதிலே இருக்கிறது.
எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் சரியோ, தப்போ தெரியவில்லை. இதில்
உள்ள முக்கியமான ஒருவர் ஏற்கெனவே சிட்டையர் ஆனவர். ஒருநாள் நாடு
விட்டு வெளியே குடியேறலாம் என்ற பேச்சு அடிபடுகிறது. அடிபடும்
பேச்சை மட்டும் ஆதாரமாகக் கருத முடியாது. அது உண்மையாகவும் இருக்
கலாம். நெருப்பு இல்லாமல் புகை கிளம்பாது என்று சொல்லுவார்கள்.
அப்படிப்பட்டவர் போய்விட்டால், டைரக்டர்-ஜெனரல் போஸ்டுக்கு அடுத்து



யார் என்று அதிகாரிகளுக்கிடையில் பதவிப் போட்டிகள் வரக்கூடிய
பிரச்சினை இருக்கிறது. சாதாரணமாக பதவிப் போட்டிகள் வருவதென்பது
நிர்வாகத்திலே சகஜம் என்பது நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்ட பலருக்குத்
தெரிந்த உண்மை. உயர் பதவிக்கு நடக்கக்கூடிய போட்டிகள் அரசாங்கத்
திற்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தலாம். எனவே அரசு இப்போது புனராலோ
சனை செய்ய வேண்டியது அவசியம். அரசுக்கு இது கௌரவப் பிரச்சினை
யாக இருந்தாலும், வரக்கூடிய பட்ஜெட் கூட்டத் தொடரிலாவது இருக்கக்
கூடிய அனுபவங்கள், பொது வாழ்வில் உள்ளவர்களுடைய கருத்துக்கள் ஆகிய
வற்றை எடுத்துக்கொண்டு, இந்த நிலையை மாற்றி, பழைய நிலையைக்
கொண்டுவர அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

* திரு. சி. ரா. வெட்கமிகாந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும்)
செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவையொட்டி சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக சில கூடுதல் பதவி
களும், புதிய பதவிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் இதனால்
ஏற்படக்கூடிய செலவினைத் துல்லியமாக மதிப்பிட இயலாது என்று அறிக்கை
யில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பதவிகளின் காரணமாக ஏற்படப்
போகும் செலவு எவ்வளவு என்பதை ... நிலையில்
அவசரப்பட்டு இந்தப் பதவிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று பொருள்.
இந்தப் பதவிகளை ஏற்படுத்தியதற்கான காரணங்களைப்பற்றி மாண்புமிகு
உறுப்பினர்கள் தங்களுடைய பல்வேறு கருத்துக்களை இங்கே சொல்லியிருக்
கிறார்கள். காவல் துறையினுடைய நிர்வாகத் திறனை வளர்ப்பதற்காகவா
அல்லது அதிகாரத்தைப் பரவலாக்குவதற்காகவா (Decentralisation of
powers) இந்தப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பல்வேறு
வகையிலே விமர்சனம் செய்துகொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 4-10)

பொதுவாக காவல் துறையினுடைய நிர்வாகத் திறமையை அதிகப்படுத்த
வேண்டும். அந்தத் துறையினுடைய பொறுப்புக்கள் அதிகமாகிவிட்டதனால்
அது திறமையாகச் செயல்பட வேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப்பட்ட
பதவிகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று செய்தித் தாள்களில் செய்தி வெளி
வந்திருக்கின்றது. இதனாலே மட்டும் நிர்வாகத் திறன் வளர்ந்துவிடும் என்று
யாரும் எதிர்பார்க்க முடியாது. நிர்வாகத் திறனைப் பெருக்க டிசென்ட்ர
லைசேஷன் (Decentralisation) என்று கொண்டுவரவேண்டுமானால், பல

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1979 நவம்பர் 12

உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, அனைத்து மட்டங்களிலும் அது பரவ
லான முறையில் செயலாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் செய்ய
வில்லை. உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்குப் பதவி நீட்டிப்பு
கொடுப்பதுபற்றிச் சொன்னார்கள். காவல் துறையைப் பொறுத்த அளவிலே,
டைக்கு இருந்த நல்லபெயரை, தற்பொழுது பொது மக்களிடையே நிலவி வரு
கின்ற ஒரு எண்ணத்தை நாம் மறுக்க முடியாது. அந்த அதிகாரி ஆக்க
பூர்வமாக ஏதாவது செய்திருக்கிறாரா? ஏதோ சைக்கிளில் மவுண்ட
ரோடில் சென்றார் என்று வெளியாகிய செய்தி வேண்டுமானால் விளம்பரத்
திற்குப் பயன்படுமே தவிர வேறல்ல. அவர் அந்தத் துறையில் ஆக்கபூர்வமான
நடவடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறாரா என்று பார்க்க வேண்டும். அவ்வாறு
செய்திருந்தால், அதற்காக இந்தப் பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருக்
கின்றன என்றால், அதை யாரும் மறுக்க முடியாது.

அரசு பதவி ஏற்படுத்துவதிலேயும்கூட, 'டைரக்டர்-ஜெனரல்' என்ற
சொற்றொடரைப் பயன்படுத்துவதைப் பொறுத்த அளவிலே, என்னுடைய
கருத்து வேறு. தரைப் படை, விமானப் படை, கப்பல் படை என்று ஆகிய
ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு முக்கிய பதவியாக, Chief of Air Staff, Chief
of Army Staff, Chief of Naval Staff, என்றுதான் சொல்கிறார்கள். இந்த
மூன்று பிரிவையும் கட்டுப்படுத்தக்கூடியவர் குடியரசுத் தலைவர்—ஜனாதிபதி
அவர்கள்தான், சுப்ரீம் கமாண்டர். அதற்கென்று தனியாக ஒரு பதவி கிடை
யாது. ஆக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு Chief இருக்கிறார். Chief of
Army Staff, Chief of Naval Staff, Chief of Air Staff, என்று சொல்
கின்றார்களே தவிர வேறல்ல. இந்த டைரக்டர்-ஜெனரல் என்ற பெயரைப்
பார்த்தாலே, ஒரு கம்பெனியினுடைய நிர்வாக அதிகாரிதான் என்பது
போன்ற நினைவு வருகிறதே தவிர, உயர்ந்த போலீஸ் அதிகாரி அல்லது ஒரு
பெரிய பதவியிலே இருப்பவருக்குரிய கம்பீரமுள்ள பெயராக அது தெரிய
வில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அண்மைக் காலத்திலே மனம்திறந்து அதிகமான
அளவுக்கு பொதுக் கூட்டங்களிலே காவல் துறையினரைப் பாராட்டியிருக்
கிறார்கள். இந்தப் பாராட்டினுடைய விளைவுகளைத்தான் நாம் இப்போது
பார்த்துக்கொண்டிருக்கிறோம். துறையின் அதிகாரியை அளவுக்கு அதிக
மாகப் பாராட்டியதன் விளைவுகளைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கி
றோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகம் பாராட்டலாம்.



1979 நவம்பர் 12] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

ஆனால் அது அளவு மீறிப் போகக்கூடாது. அறிஞர் அண்ணா அவர்கள்
மேல்நாடுகளிலே காவல் துறையினர் மேற்கொள்ளும் சிறந்த அம்சங்களை
நாம் செயல்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அங்கு மறியல், வன்
முறை என்று வந்தால், கும்பலைக் கலைக்கக்கூட மிகச் சாதுரியமான முறை
களைக் கையாளுகிறார்கள். அதுவும் குறைந்த அளவுக்கு பலம் உபயோ
கித்து வன்முறைகளைச் சமாளிக்கிறார்கள். மிகமிகக் குறைந்த அளவிலே
பலத்தைப் பயன்படுத்தி கலைக்கின்றார்கள். அதற்கு என்று மிகச் சிறந்த
நவீன முறைகளை வைத்துச் செயல்படுத்துகிறார்கள். அங்கு காவல் துறை
யினர் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட சிறந்த
முறைகள் இங்கும ஏற்படுகின்ற அளவுக்கு ஒரு விரிவான சட்ட முன்வடிவை
அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** மதிப்பிற்குரிய மேலவைத் தலைவர் அவர்
களே, இன்றையதினம் இந்த மன்றத்திலே பேரவையிலே நிறைவேற்றப்பட்டு
இங்கே நம்முடைய ஒப்புதலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்த
மசோதா மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லி நான் விடைபெறலாம் என்று
கருதுகிறேன். இப்போது புதிதாக ஏற்படுத்தப்பட்ட டைரக்டர்-ஜெனரல்
ஆப் போலீஸ் என்ற பதவி, ஒரு உத்தியோகம் இன்றைய நிலைமையிலே
மிகவும் அவசியமானது என்று எனக்குத் தோன்றுகிறது. அதை நான் இங்கே
வலியுறுத்தியாக வேண்டும். இதிலே குறிப்பாக அவசர அவசரமாக இது ஒரு
ஆர்டினன்ஸ் மூலமாகக் கொண்டு வரப்பட்டு, இன்றைக்கு நம்முடைய இரண்டு
அவைகளினுடைய அங்கீகாரத்திற்கு இந்தச் சட்ட முன்வடிவு வந்திருக்கிறது
என்ற குற்றச்சாட்டு பரவலாக எதிர்க் கட்சியிலே உள்ள நண்பர்களால்
சுமத்தப்பட்டது. அது இயற்கையான குற்றச்சாட்டுத்தான் என்பது
என் கருத்து. ஆனால் அது கொண்டுவரப்பட்ட நேரத்திலே எந்தவிதமான
கொந்தளிப்போ, அதிருப்தியோ காவல் துறையிலே இல்லையென்பதை நான்
இந்த நேரத்திலே வலியுறுத்தியாக வேண்டும். இந்த மசோதா அதற்கு
முன்பாகக் கொண்டுவரப்பட்டது. அப்போது சூழ்நிலைகள் மிகவும்
நன்றாகத்தான் இருந்தன. அது கொண்டுவரப்பட்டதன் நோக்கம் ஒரு
நல்ல நோக்கம். டைரக்டர் ஜெனரல் என்று ஒரு பதவியை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்கள் ஒரு முக்கியமான கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கி
றார்கள். முக்கியமான கொள்கை என்ன? மற்ற மாநிலங்கள் எப்படி
இருந்தாலும், நம்முடைய மாநிலம் மது விலக்கிலே மிகவும் தீவிரமாக இருக்
கிறது. அதனாலே பல கோடி ரூபாய் இழப்பு என்று இருந்தாலும், நாம்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 நவம்பர் 12

அதை அமுல்படுத்துகிறோம். அதிலேதான் அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதை, எந்தக் கட்சி நண்பராக இருந்தாலும், ஒத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படை-யிலேதான் இது கொண்டுவரப்பட்டது. அவசர அவசரமாகக் கொண்டு வருவ தற்குக் காரணம் ஒரு டைரக்டர்-ஜெனரலை நியமித்து, அவருக்குக் கீழே அவருடைய மேற்பார்வையிலே மூன்று இன்ஸ்பெக்டர்-ஜெனரல்கள் பணி யாற்றினால், குறிப்பாக மதுவிலக்குக் கொள்கையிலேயே, நேரடியாகவே டைரக்டரை ஈடுபடுத்திக்கொள்வதற்கு நன்றாக இருக்கும் என்று செய் கிறோம். மதுவிலக்குக் குற்றங்கள் நடந்திருந்தால், தீவிரமாக இருந்தால், டைரக்டர் ஜெனரலுக்கு உடனே தெரிவிக்க வேண்டுமென்றால், ஒரு ஐ.ஜி. தேவைப்படுகிறது. இப்படி அந்த அடிப்படையிலேதான் இந்தப் பதவிகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

ஒரு டைரக்டர்-ஜெனரல் போட்டதன் விளைவாக, இது பெயர்கூட சரியாக இல்லை, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் என்பது டைரக்டர்-ஜெனரலாக வந்திருக்கிறது என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னார்கள். மூன்று சீப் ஆப் ஏர் ஸ்டாஃப், சீப் ஆப் ஆர்மி ஸ்டாஃப் என்று கிடையாது. அப்போது கமாண்டர் இன் சீப் என்று பதவி தேவை என்று பண்டித ஜவஹர்லால் நேரு காலத்திலே சொல்லிக் கொண்டிருந்தார்கள். இதை அந்த நேரத்திலே கூட இந்த மாதிரி கிரிட்டிசிசம் இருந்தது என்பதற்காகச் சொல்கிறேன். இதைப்பற்றிப் பார்லிமெண்டிலே கூட பேசப்பட்டது. சீப் ஆப் ஸ்டாஃப் என்பதைக் கூட நாம் நாளா வட்டத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இப்போது அதுவே பழக்கமாகி விட்டிருக்கிறது. இப்போது வந்திருக்கின்ற போஸ்ட் நல்ல போஸ்ட்தான் என்று எதிர்க்கட்சி நண்பர்கள் கூட ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். நான் இதைச் சொன்னதன் நோக்கம் என்னவென்றால், உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் குறிப்பாக இந்தப் பெயர்கூட சரியாக இருக்கிறதா என்று கேட்டார்கள். நிச்சயமாக இந்தப் பெயர் விரும்பத்தக்க ஒன்றுதான். இன்னொரு காரணம் என்னவென்றால், போலீஸ் இலாகாவில் நிரம்ப காரியங்கள் ஆற்றவேண்டியிருக்கிறது. பொதுவாக நல்ல வகையிலே பணி யாற்ற வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு நல்ல மெக்கானிசம், பெரிய [illegible] போன்றவைகளை உபயோகிக்கும் காலக் கட்டத்திலே அவர்கள் இருக்கிறார்கள். டைரக்டர்-ஜெனரலாக ஒருவர் இருந்தால், அந்த முறைகள் எல்லாம் நிச்சயமாக வரும். இலாக்கா வெற்றிகரமாக நடைபெறும்



1979 நவம்பர் 12] [டாக்டர் எச். வி. ஹண்டே]

என்று கருதுகிறேன். இன்னொன்றையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள் கிறேன். வேண்டுமென்றால் இதையும் அங்கத்தினர் அவர்கள் குறித்து வைத்துக்கொள்ளலாம். இங்கே கொண்டு வந்த பிறகு பல மாநிலங்கள் இதைப் பின்பற்றி இந்த வகையிலேயே வர இருக்கின்றன என்பதை நாம் பார்க்கப்போகிறோம். இன்னும் சில மாதங்களிலே அப்படி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாடுதான் பல விஷயங்களிலே முன்னோடியாக இருக்கிறது.

இன்னொரு கருத்துச் சொன்னார்கள். அது நான் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கருத்து என்ன வென்றால், ஏதோ ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது, மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கிறபோது, காவல் துறையினுடைய தரம் குறைந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு. அதைப்பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தமிழகத்திலே குறிப்பாக இந்த நிலைமை ஏற்பட என்ன காரணம் என்று பார்க்கிறோம். அகில இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் போலீஸ் காரர்களுக்கு உரிமைகள் கொடுக்க வேண்டுமென்று போர்க்கொடி உயர்த்தி னார்கள். அந்த மாநிலங்களிலிருந்து படிப்படியாக, மெல்ல அவுட்டாக, ரீ ஆக்ஷனாக வந்துகொண்டிருந்தது. 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் எல்லா மாநிலத்திலும் போராட்டம் ஏற்பட்டது. பஞ்சாப், அரியானா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங் களிலும் ஏற்பட்டது. அப்போது இங்கே அமைதியாக இருந்தது. எதிர்க் கட்சிக்காரர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டியதாக எனக்கு நினைவு. அந்த நேரத்திலே நமது மாநிலம் அமைதியாக இருந்தது. படிப்படியாக அந்தப் போராட்டம் வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. திடீரென்று போலீஸ் போராட்டம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு சாட்டுவது நியாயமல்ல என்பதுதான் என் கருத்து.

(பிற்பகல் 4-20)

அதே நேரத்திலே இன்னொன்றையும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். இப்போது ஐ.ஜி. என்று இருக்கிறார் கள், டைரக்டர்-ஜெனரல் என்று இருக்கிறார். மாவட்டத்திலுள்ள எஸ்.பி. யுடன் யார் தொடர்பு கொள்வது என்ற பிரச்சினை வருகிறதே என்று சொன்னார்கள். அதில் சந்தேகமான பிரமையும் இல்லை. எஸ்.பி. அவர்கள் ஒட்டுமொத்தமாக மாவட்டத்தில் பணி செய்வார்கள். நாளாவட்டத்தில் அதற்கான விதிகள் இயற்றப்படும். சந்தேகமான கஷ்டமும் அதில் இராது.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 நவம்பர்

ஒரு அதிகாரி எல்லாவற்றையும் கன்ட்ரோல் செய்வதற்கு இருப்பதால், அதி
எந்தவிதமான சங்கடமும் ஏற்பட வாய்ப்பில்லை. உதாரணத்திற்கு, தலை
மைச் செயலகத்தில் பல செக்ரட்டரிகள் இருக்கிறார்கள். மாவட்டத்திலுள்
கலெக்டரோடு அவர்கள் தொடர்பு கொள்கிறார்கள். பல உத்தரவுகளைப்
போட்டு, வேலைகள் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மாவட்டத்
திற்குத் தனி அதிகாரியாக, கலெக்டர் அவர்கள் வேலை செய்கிறார்கள். அவ
ரெவின்யூ செக்ரட்டரி கீழ் இயங்குவதா அல்லது பைனான்ஸ் செக்ரட்டரி கீழ்
இயங்குவதா என்ற பிரச்சினைகள் இல்லை. தலைமைச் செயலகத்தில்
செக்ரட்டரிகள் இருக்கிறார்கள். மாவட்டங்களில் கலெக்டர்கள் இருக்கிறார்
கள். இதில் அட்மினிஸ்ட்ரேடிவ் பிரச்சினை எதுவும் வராது.

இவ்வொரு கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. இத்தனை போஸ்டுகள்
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவே என்று சொல்லப்பட்டது. பல ஆண்டு
களுக்கு முன்பாக, 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரேயொரு டி.ஐ.ஜி. தான்
இருந்தார். பிறகு படிப்படியாக பல பதவிகள் உருவாக்கப்பட்டன.
1971-72-லே அடிஷனல் டி.ஐ.ஜி. என்ற பதவி ஏற்படுத்தப்பட்டது. அதை
யாரும் மறுக்க முடியாது. அந்த நேரத்தில் அது தேவைப்பட்டது. புதிதாக
போலீஸ் இலாக்காவில் கொந்தளிப்பு இருக்கிறது. ஆகவே இந்தப் பதவிகள்
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டு ஆதார
மற்றது, நியாயமற்றது என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே
இப்போது இருக்கக்கூடிய நிலைமையிலே, காவல் துறையிலே அமைதி
ஏற்பட்டிருக்கிறது.. அந்த அமைதியைக் கெடுக்க வேண்டுமென்று, எந்த
எதிர்க் கட்சியாக இருந்தாலும் விரும்ப மாட்டார்கள். அமைதி இருந்தால்,
அத்தனை பேருக்கும் நன்மை; அமைதியின்மை இருந்தால் அத்தனை
பேருக்கும் கெடுதல். நல்ல சூழ்நிலை இப்போது இருக்கிறது. புதிதாக
போஸ்டுகளை உருவாக்கியதால் யாருக்கோ கோபம், கோபித்துக்கொண்டு
போய்விட்டார் என்று சொன்னார்கள். அதைப் பெரிய காரியமாகச்
சொல்வது நியாயமல்ல என்று சொல்லி, சட்டப் பேரவையில் நிறைவேற்றப்
பட்டு, இங்கே கொண்டு வந்துள்ள மசோதாவை எந்தவிதமான தயக்கமும்
இன்றி, சந்தேகமின்றி, ஏகமனதாக நம்முடைய அவை ஏற்றுக்கொள்ள
வேண்டுமென்று நான் வற்புறுத்தி, பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி
கூறி, அமைகிறேன்.



1979 நவம்பர் 12] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மேலவைத் தலைவரவர்களே, நம்முடைய
முதலமைச்சரவர்கள் பெயரால், சட்ட அமைச்சரவர்கள் அறிமுகம் செய்
துள்ள சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டம் தேவையற்றது,
இந்தச் சட்டம் புறக்கணிக்கப்பட வேண்டியது, திரும்பப் பெறப்பட
வேண்டியது என்பதற்காக நான் காரணங்களைச் சொல்ல வேண்டியதில்லை.
ஆளும் கட்சியை வரப் போகும் தேர்தலில் ஆதரிப்பதாக ஒப்பந்தம் செய்து
கொண்டுள்ள கட்சிகளே இந்தச் சட்டத்தை எதிர்த்திருக்கின்றன என்பதே
இந்தச் சட்டம் தேவையற்றது என்பதற்கு போதுமான காரணமாகும்.

* திரு. ஆ. நல்லசிவன்: காலையிலே ரெவின்யூ அமைச்சரவர்கள் கொண்டு
வந்த நில உச்சவரம்பு சம்பந்தமான சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்
பினர் திரு. வீராசாமி அவர்கள் ஆதரித்தார்கள். ஆகவே அவர்களும்
தேர்தலில் உடன்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தமா?

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் சொல்வது, அப்படி உறவு கொண்
டிருக்கிற கட்சிகளுக்குக் கூட இதை எதிர்க்க வேண்டியது அவசியமாகிறது.
வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை சட்டமன்றத்தில் ஜனதா கட்சி,
சி.பி. (ஐ), சி.பி. (எம்.), காங்கிரஸ், தி.மு.க. ஆகிய அத்தனை கட்சிகளும்
எதிர்த்திருக்கின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

ஒரு நாட்டில் அவசரச் சட்டம் கொண்டுவரப்படுகிறதென்றால், பொது
வான பிரச்சினைகளுக்குத்தான் இதுவரைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறதே
தவிர, ஒரு தனி மனிதனுக்காக ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்
கிறதா என்றால் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே அவர்
கள்கூட சட்ட அமைச்சரவர்கள் தமிழில் பேச முடியாது என்பதற்காக சில
கருத்துக்களைச் சொன்னார்கள். ஆணித்தரமாக அடித்துப் பேசக்கூடிய
டாக்டர் ஹண்டே அவர்கள், இப்போது தெரியாது, சில ஆண்டுகளுக்குப்
பிறகு பாருங்கள் என்று சொல்கிறாரே தவிர, இப்போது வந்திருப்பது
நியாயமென்று இன்னும் அவருடைய மனம் சொல்லவில்லை.

டாக்டர் எச். வி. ஹண்டே: என்னைப் பொறுத்தவரையில், இப்போது
கொண்டுவந்துள்ளது நியாயம்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி
அவர்களால் இப்போது புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், பிறகு புரிந்து
கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமென்றுதான் சொன்னேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவருடைய வாதத்திலேயே புரிந்து கொண்டேன். எல்லோரும் எதிர்க்கிறார்கள், ஆளும் கட்சியில் ஒருவராவது ஆதரித்துப் பேச வேண்டுமென்ற முறையில் அவர்கள் பேசினார்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இதிலே நான் வருத்தப்படுவது என்னவென்றால், இன்றையதினம் டைரக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் என்ற பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது. இங்கேகூட சொன்னார்கள், டி.ஜி. பதவி தேவை தானா என்று. எனக்கு 'டி.ஜி.' என்று சொன்னவுடன், பழைய ஞாபகம் வந்தது. முன்பொரு கிராமத்திலும் 'டி.ஜி.' என்று இருந்தார்கள். அதாவது டான்சிங் கேர்ள் என்று பெயர். இன்று அவர்கள் இருக்கும் இடம் தெரியவில்லை. அந்த 'டி.ஜி.' கிராமங்களிலே இல்லையே தவிர, ஆட்சியிலே வந்திருக்கிறது. 'டி.ஜி.' கிராமத்தை விட்டு, இப்போது காவல் துறைக்கு, தலைமைப் பதவியாக வந்திருக்கிறது. ஏற்கனவே இருந்த இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி [illegible] உயர்த்தப்படுவானேன்? மூன்று பேரையும் கண்காணிக்க ஒரு டைரக்டர்-ஜெனரல் தேவைப்படுவானேன்? இதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹண்டே:** 'ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்'. 'டி.ஜி.' என்றால் டான்சிங் கேர்ள் என்று சொல்லிவிட்டு, இப்போது அது அரசாங்கத்திலே வந்திருக்கிறது என்று சொல்வது, நேரடியாக அரசாங்கத்தைப்பற்றித் தரக்குறைவாகப் பேசுவதாக அமையும். எனவே அந்த வார்த்தை நடவடிக்கைக் குறிப்புகளில் இருக்க வேண்டுமா என்று தலைவரவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு 74 வயதாகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அப்படிச் சொன்னபோது, எனக்குக்கூட குழப்பமாக இருந்தது. 'டி.ஜி.' என்று கிராமங்களில் இருந்தார்களென்பது எனக்குத் தெரியாது. எந்தத் தொழிலுக்காக அவர்கள் இருந்தார்களென்பதை உறுப்பினரவர்கள் விளக்கிவிட்டால், அதற்குப் பிறகு அதைக் குறிப்புகளிலிருந்து எடுக்கலாமா என்பதை முடிவு செய்யலாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 74 வயதாகிய தலைவரவர்களுக்கே தெரியாதென்று சொல்லுகிறார்கள். அவர்களை விட நான் சிறியவன். 'டி.ஜி.'க்கள் என்ன வேலை செய்தார்களென்பது எனக்குத் தெரியாது. கிராமங்களில் டேன்சிங் கேர்ல்ஸ் என்று இருந்ததாகப் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். அவர்கள் நடனம் ஆடக்கூடிய பெண்கள் —— நான்



நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். அந்தப் பதவி இப்போது ஒழிந்து விட்டது. ஆட்சிக்கு நடனம் ஆடக் கூடிய அளவிலே இப்படிப்பட்ட பதவிகளை உருவாக்குகிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். டைரக்டர் ஜெனரலை நான் டான்சிங் கேர்ள்சுக்கு ஒப்பிடவில்லை. அப்படிப்பட்ட பதவிகள் இப்போது உருவாக்கப்படுகின்றன என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, இந்த நாட்டு முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே தெளிவான கருத்து ஒன்றைச் சொன்னார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், தயவு தாட்சண்ணியமின்றி, யாருக்கும் பதவி நீட்டிப்பு கிடையாதென்று அறிவித்தார்கள். ஒரு அரசாங்கத்தினுடைய கொள்கையைச் சொன்னார்கள். நாங்கள்கூடப் பாராட்டினோம். அப்போது அதற்கு என்ன விளக்கம் சொன்னார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கும்போது, படித்துவிட்டு பலர் வேலையில்லாமல் திரியும்போது, எதற்காக நாம் எக்ஸ்டென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், காவல் துறையில் ஐ.ஜி.-யாக இருந்தவர் 30—11—1978-ல் ஓய்வு பெறுகிறார். பிறகு அவருக்கு 31—5—1979 வரை பதவி நீட்டிப்பு கொடுக்கிறார்கள். எதற்காக? அரசினுடைய கொள்கை பதவி நீட்டிப்பு கொடுக்கக் கூடாது என்பது. அந்தக் கொள்கைக்கு விரோதமாக பதவி நீட்டிப்பு கொடுக்கிறார்கள். பரவாயில்லை. அதற்குப் பிறகாவது அவரை வீட்டிற்கு அனுப்புகிறார்களா என்றால் இல்லை. 1—6—1979 முதல் அவர் மேலும் பதவியில் நீடிக்க அனுமதிக்கிறார்கள். அந்த நீடிப்புக்கான உத்தரவு உடனடியாகப் போடப்படுகிறதா என்றால், இல்லை. அவசரம் அவசரமாக அக்டோபரில் அவசரச் சட்டம் வருகிறது. ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள், அதுவும் சட்டப் பேரவை, மேலவை ஆகியவை கூட்டப்படுவதற்கு நோட்டீஸ் கொடுத்ததற்குப் பின்னாலே, ஒரு அவசரச் சட்டம் தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவும் தனி மனிதனுக்காக எதற்காக அப்படி அவசரச் சட்டத்தை அரசு கொண்டு வருகிறது? அவருக்கு அரசு எப்படிக்

(பிற்பகல் 4-30)

கடமைப்பட்டிருக்கிறது? அங்கே தான் எனக்கு சந்தேகம் வருகிறது. தனி மனிதனுக்குச் செய்துவிட்டுப்போங்கள், அதற்காக 3 ஐ.ஜி.-க்களை நியமித்து அவர்களுக்கு மேலாக சூப்பர்விஷனுக்காக ஒரு டைரக்டர்-ஜெனரல் என்று

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 நவம்பர் 1

சொல்லும்போது, டாக்டர் ஹண்டே அவர்களுக்காக வாதாடுகிறார். ஒருவர் ப்ரோஹிபிஷன் பார்ப்பார் ஒருவர் லா அன்ட் ஆர்டர் பார்ப்பார் ஒருவர் என்போர்ஸ்மென்ட் பார்ப்பார் என்று சொல்லுகிறார்கள். வாதத்திற்காக வேண்டுமானால் ஒத்துக்கொள்ளலாம். அப்படியானால், இதற்கு முன்னால் ப்ரோஹிபிஷனை கவனிக்காமல் விட்டு விட்டிருந்தார்களா? அதேபோல் லா அன்டு ஆர்டரையும் இதற்கு முன்னால் கவனிக்காமல் விட்டுவிட்டிருந் தார்களா? அதையாவது சொல்லட்டும். இன்றைக்கு மாநில அளவில் 3 ஐ.ஜி.-க்கள், பிறகு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு டி.ஐ.ஜி., இப்படி எல்லாம் வந்த பிறகு டாக்டர் ஹண்டே வாதாடுவார். எப்படி காவல் துறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எஸ்.பி. ரேங்கில் (புரொஹிபிஷன்), எஸ்.பி. (லா அன்ட் ஆர்டர்), இப்படியாக காவல் துறையில் பதவிகள் போய்க் கொண்டேயிருக்கும். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் செய்வதற்காகத்தான் இப்படி 3 ஐ.ஜி.-க்களை உருவாக்கினார்களோ என்கிற சந்தேகம் கூட எங்களைப் போன்ற வர்களுக்கெல்லாம் வருகிறது. டாக்டர் ஹண்டே அவர்கள் விரும்பு கிறார்களே அதுபோல் 3 பேர்களை ஐ.ஜி.-க்களாக நியமித்த பிறகாவது இந்தத் துறையில் உருப்படியாக வேலை நடக்கிறதா என்றால் அது தான் இல்லை. 3 பேர்களை நியமித்த பிறகு தான் மதுவிலக்குக் குற்றங்கள் அதிக மாகியிருக்கின்றன. "அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும்" என்று சொல்வது போல் மூன்று ஐ.ஜி.-க்களை நியமித்த பிறகு சாராயம் தான் அத்தனை பேர்களுடைய கண்களுக்கும் தெரிகிறது. மூன்று பேரை நியமித்த பிறகு நாட்டில் மதுவிலக்குச் சட்டம் இருக்கிறதா என்று சந்தேகப்படும் அளவிற்கு மதுவிலக்குக் குற்றங்கள் பெருகியிருக்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின் "சிறைச்சாலையில் இருக்கும் 1 இலட்சத்து 50 ஆயிரம் மது விலக்குக் குற்றவாளிகள், 6 மாத காலத்திலே மதுவிலக்குக் குற்றங்களுக்காக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவார்கள்" என்று தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் அறிவித்தார். முதலமைச்சரின் அந்த அறிவிப்புக்கு 10 நாட்களுக்குப் பிறகு, புதிதாக இவர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஐ.ஜி. பதவியில் இருப்பவர் "எங்களுக்கு உத்தரவு வரவில்லை" என்று சொல்லுகிறார். 6 மாத காலத்திற்குள் இவ்வளவு மதுவிலக்குக் குற்றங்கள் நடந்திருக்கின்றன. அனைவரும் விடுதலை செய்யப் படுவார்கள் என்று முதலமைச்சர் அறிவிக்கிறார். ஒரு ஐ.ஜி. பதவிக்குப் பதிலாக இப்படி 3 ஐ.ஜி.'க்களை உருவாக்கிய பிறகும், அதற்கு மேலாக டி.ஐ.ஜி.



1979 நவம்பர் 12] (திரு. ஆற்காடு நா. வீராசாமி)

என்ற பதவியை ஏற்படுத்திய பிறகும், இப்படி அரசாங்கம் நடந்தால், அந்தக் குற்றவாளிகளுடைய குடும்பத்தில் உள்ளவர்கள் என்ன நினைப்பார்கள்? கணவன் வருவான், குடும்பத்தை நாளையிலிருந்து பட்டினி போடாமல் காப்பான், நம்முடைய கஷ்டம் எல்லாம் நாளையிலிருந்து தீரும் என்று வீட்டிலிருக்கும் அந்தத் தாய் முதலமைச்சரின் அறிக்கையைப் பார்த்து கற்பனை செய்யமாட்டார்களா? இந்தப் பதவிகள் உருவாக்கப்பட்ட பிறகு, அரசாங்கம் மிக வேகமாகச் செயல்படுகிறது என்று வாதிட்டால் கூட, நாம் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் அப்படி அரசால் வாதாட முடியாது. மதுவிலக்குக் காரணம் அரசாங்க இயந்திரம் வேகமாகச் செயல்படவில்லை. மதுவிலக்குச் சட்டம் குற்றங்களைப் பொறுத்தவரை, ஒரு பக்கத்தில் கூட சரியாக நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய சட்ட முன்வடிவின்

"Section 7 providing the status of a Justice of the Peace has been deleted"

என்று உள்ளது. இது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. இந்தப் பகுதியை நீக்கியிருக்கிறார்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால் அதை நீக்கிவிட்டு செக்ஷன் 50-ஐ அப்படியே வைத்திருக்கிறார்கள்.

"but similar provision in the Act has not been deleted. Section 50 of the Madras City Police Act provides for an inquiry by a Police Officer into any complaint received from the public against any Police Officer. The inquiry is to be made by a Police Officer having the powers of a Magistrate. If section 7 of the Act is to be deleted, then there can be no judicial or magisterial powers for a Police officer."

இப்படி சட்டத்திலே ஏதாவது பிரிவு நீக்கப்பட்டதற்குப் பிறகு, அந்தத் தீர்ப்பை வழங்கக் கூடிய அதிகாரத்தை எடுத்துவிட்ட பிறகு, போலீஸ் அதிகாரி விசாரணை செய்வார் என்று சொல்லுகின்ற அந்த 50-வது செக்ஷனை, தொடர்புடைய பிரிவை நீக்காமல் விட்டுவிட்டதன் மூலம் இதில் முரண்பாடு இருக்கிறதா? இல்லையா? ஒரு பிரிவை நீக்கிவிட்டு அது தொடர் பான மற்றொரு பிரிவை அப்படியே வைத்திருக்கிறார்கள். இதன் விளைவு என்ன ஆகும் என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். நிறைய ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. தலைவரவர்கள் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆதலால் குறிப்பாக ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 நவம்பர் 12

இந்த மன்றத்திற்கும், அமைச்சரவைக்கும் தெரிவிப்பதற்காகச் சொல்லு கிறேன். பொறுப்பான பதவியில் இருக்கக்கூடிய ஒருவர் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் என்பவர். அவருக்கு 1975 ஆம் ஆண்டு போலீஸ் கமிஷனர் ஒரு பொதுவான டி.ஓ. கடிதம் எழுதுகிறார். "குற்றங்கள் இருந்தால் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்" என்று கமிஷனர் இவருக்கு எழுதுகிறார். அதற்கு திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் பதில் எழுதுகிறார். இந்த செக்ஷன் 50 இருக்கின்ற காரணத்தால், இந்த அதிகாரத் தைப் பயன்படுத்தி அந்த திரு. ஆர். கே. பால்சுப்பிரமணியம் என்பவர் தகவல் கொடுத்தாரா இல்லையா, அதற்காக அவருக்குத் தண்டனை வழங்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவருக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பதில் சொல்லும்போது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவாக்க வேண்டும்.

நம்முடைய கோட்டையில் இருக்கிற இதே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அப்படி நடவடிக்கை எடுத்தது தவறு என்றும், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பரிந் துரை செய்கிறார்கள். சட்ட நுணுக்கங்களைப்பற்றி சட்டத் துறையிலிருந்து பரிந்துரை செய்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது மரபு. அவர் ஒரு சமுதாய விரோதி என்று முதலமைச்சர் கூறுகிறார். முதலமைச்சா 'விரோதி' என்று சொல்லும் நபர் யார் என்று தெரியுமா? அவர் தான் "President of the Bureau of Parliamentary work" என்கின்ற வாலண்டரி ஆர்கனைசேஷனில் இருப்பவர். அப்படி இருக்கிற ஒருவரை, இங்கே யிருக்கிற போலீசுக்கு, தனக்கு அதிகாரம் இருக்கிற ஒரே காரணத்தால், அதிகாரத்தைக் கொண்டு தவறான முறையில் அவருக்கு தண்டனை கொடுக்க லாம் என்கின்ற ஒரு எண்ணம் இருக்குமானால், அப்படிப்பட்ட பிரிவை உள்ள படியே நீக்க வேண்டுமா வேண்டாமா? அவர் மீது அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று ஹோம் டிபார்ட்மெண்டிலிருந்து பரிந்துரை செய்கிற நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மட்டும் திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் என்பவர் சமுதாய விரோதி ஆகிவிடுகிறார். அவர் ஒரு பெரிய, நல்ல குடும்பத்தில் பிறந்தவர். எந்தப் பாராளுமன்ற நடவடிக்கைகளைப்பற்றி நாம் இங்கே பேசிக்கொண்டிருக்கி றோமோ அந்தப் பாராளுமன்ற முறையையே வகுப்பதற்கு, இயற்றுவதற்கு உதவியாக இருந்த திரு. ஆர். வி. கிருஷ்ண ஐயர் அவர்களுடைய மகன் தான்



1979 நவம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இந்த திரு. பாலசுப்பிரமணியம் என்பவர். அவருக்கு இந்த நிலை ஏற்பட் டிருப்பது சரிதானா? இப்படிப்பட்ட சட்டங்களை காவல் துறைக்கு வழங்குவது நியாயம்தானா?

இன்றையதினம் 3 ஐ.ஜி. க்கள் தேவை என்று வாதாடும் நேரத்தில் இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு சட்டத்தை மதிக்கிறது, நீதியை மதிக்கிறது என்பதற்கு ஒரே ஒரு விஷயத்தை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். இதே மன்றத்தில் மாண்புமிகு தலைவர் அவர்களால் அனு மதிக்கப்பட்டு இஸ்மாயில் குழு அறிக்கை மீது நீண்ட நேரம் விவாதம் நடை பெற்றது. அரசாங்கமும் இஸ்மாயில் கமிஷனுடைய அறிக்கையை ஒத்துக் கொண்டது. 1976 ஆம் ஆண்டு அவசர காலச் சட்டம் நாட்டில் நடைமுறை யில் இருந்தபோது, சென்னை மத்திய சிறைச்சாலையில் அத்துமீறல்கள் நடைபெற்றன. அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினார்கள். ஜெயில் சூப்பரின்டென்டென்ட் குற்றங்களைச் செய்திருக்கிறார். அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டது. இன்றையதினம் நம்முடைய உயர்நீதிமன்றத்தில் எந்த நீதிபதி தலைமை நீதிபதியாக வீற்றிருக்கிறார்களோ அதே மதிப்பிற்குரிய ஜஸ்டிஸ் திரு. எம். எம். இஸ்மாயில் அவர்களால் எந்த செந்தாமரையும், எந்த பரமகுருவும் குற்ற வாளிகள் என்று நிர்ப்பணிக்கப்பட்டதோ, குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தார்கள், நடைபெற்ற சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்தார்கள் என்று தெளிவாகக் கூறப்பட்டதோ அவர்களுக்கெல்லாம் தான் அரசு பதவி உயர்வு கொடுத்திருக்கிறது. இது நியாயம் தானா? நீதியை மதிக்கக் கூடிய லட்சணம் இதுதானா? எதிர்க் கட்சிக்காரர்கள் இப்படிக் கேட்கிறார்களே என்று சொல்லுவதில் என்ன பயன்? சட்டத்திற்குப் புறம்பாக, சமுதாயத் திற்கு விரோதமாக நடந்துகொண்டிருப்பவர்களுக்கு அரசு பதவி உயர்வு கொடுக்கிறது.

இன்னொன்றையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். பொதுவாக அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள், இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பி. க்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் எந்த மாவட்டத்தில் பிறந்து வளர்ந்திருப்பார்களோ அந்த சொந்த மாவட்டத் தில் அவர்கள் பணியாற்றக்கூடாது என்பது அரசாங்கத்தினுடைய உத்தரவு. அந்த உத்தரவு ஒரே இடத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் செயல் படுகிறது. அந்த ஒரு இடத்தில் மட்டும் அதை நடைமுறைப்படுத்தவில்லை.

உதவி ஆய்வாளர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள், ஆய்வாளர்கள், டி.எஸ்.பி.க்கள் போன்ற போலீஸ் அதிகாரிகள் அவர்களுடைய சொந்த மாவட்டத்தில் பணியாற்றக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு இருந்தும் * * அதைப்பற்றிய புகார் கொடுத்தால், இன்றையதினம் 'டைரக்டர்-ஜெனரல் ஆஃப் போலீஸ்' ஆக இருக்கக்கூடியவர் நடவடிக்கை எடுக்கவில்லை. 'அரசாங்கத்தில் உத்தரவு, நிறைவேற்ற முடியவில்லை' என்று தெரிவிக்கிறார். ஆளுங்கட்சியினருடைய தலையீட்டின் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் உருவாகியிருக்கின்றன என்று நான் சந்தேகப்படுகின்றேன். இப்படிப்பட்ட ஒருவருக்குப் பதவி நீட்டிப்பு கொடுத்ததால், பதவி உயர்வும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட காரியங்களைச் செய்கின்ற, முறைகேடான செயல்களில் ஈடுபட்டிருக்கின்ற ஒருவருக்கு இப்படிப்பட்ட பதவிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கும் இந்தச் சட்டத்தை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, அமைகிறேன்.

(பிற்பகல் 4.40)

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, a good number of speakers have participated in this debate, but, in my view, outstanding points of criticism are only a few, because there has been a kind of duplication of the points raised by the hon. Members.

Thiru Ramamoorthy mentioned about the likelihood of some groupism which he appears to have seen in the creation of these offices including the office of the Director-General of Police. I find none and if the suggestion is that by reason of groupism, these appointments have been made, I refute it on the floor of this House. These offices have been created solely and preponderantly with the desire to supervise and streamline the efficient discharge of the duties by the various holders of office and the work of the Inspectors-General of Police has got to be supervised by the Director-General of Police. The entire work of the police force must be galvanised on efficient lines and it is only with that object in view, that this

* *தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





legislation has been undertaken and the office of the Director-General of Police, in addition to the three Inspectors-General of Police, was created.

Thiru Ramamoorthy also made mention about some scare of women being pursued, kidnapped, taken to Bombay and sold to houses of ill-repute and also about certain other local crimes to specific individuals, although he was not able to give fuller details about these things. When I am on this point, I would like to mention that my hon. Friend Thiru Veerasami also mentioned about some double murder—murder of two persons in Salem district. I have no idea about these things although I can say that with the best and the most efficient Police force, there will still be certain offences which are bound to occur and they will be certainly looked into, investigated properly and the suspects will be brought as accused and charge-sheeted in due course of time. But may I submit to this House that there is Scotland Yard Police in England and the First Class Force in America, and still crimes are committed and they are on the increase. They occur by reason of various circumstances, namely, the environmental pressures, pressures of poverty or due to what may be called hereditary proclivity. All these causes conduce towards the committal of crimes and, therefore, the existence of police force alone cannot put a blankent ban and cannot be an interdiction against the committal of crimes by certain members of the community.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : கிரிமினல் குற்றங்கள் நடப்பதே தவறு, தடுக்கவே கூடாது என்று கூறவில்லை. * * இது எந்த அளவுக்கு நியாயம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I do not know whether this is the subject-matter of any Court proceedings and at what stage this crime is under investigation. All these details are not there. Therefore, it is not possible for me to get any information and pass it on. That is the real handicap from which I suffer. I may straightway say, with great respect to Thiru Veerasami and the few other hon. Members, that this is completely not germane to the narrow ambit of this legislation.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

THIRU A. R. DAMODARAN : Sir, on a point of order. Is it permissible in the House to mention that so-and-so has committed a murder? It is a very serious charge and it may have many repercussions. My hon. Friend Thiru Veerasami may have the proof required. But even then, what would happen if tomorrow somebody says that Damodaran's great-grandmother murdered somebody in Cuddalore? I request that these words may kindly be expunged.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் * * ஐ. ஜி. அவர்களிடத்திலே புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது.

THE HON. THIRU K. NARAYANASWAMY : * * *

It must be judicially proved. All that he can say is "There is some kind of a suspicion or allegation against them". He can say that there is an allegation, Mr. Deputy Chairman—I beg your pardon, Sir, and I apologise to you. Mr. Chairman, Sir, all that the hon. Member can say is "There is an allegation against X, Y or Z". He cannot say beyond that. Even for that allegation, he must be in a position to say, "This finds a place in the F.I.R., or complaint or private complaint". Otherwise, I respectfully submit that this should not go on record.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. இந்தமாதிரி சொல்வது முறைதானா என்பதுதான் பிரச்சினை. ஏற்கெனவே ஒரு மரபை நாம் கடைப்பிடித்து வருகிறோம். அதை மேற்கொண்டு தொடர வேண்டும். ஆகவே, பெயர்களைக் குறிப்பிட்டு "அவர்கள் செய்தார்கள்" என்று சொன்னார்களே அந்தப் பகுதியை நீக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு ஒத்துக்கொள்வது நல்லது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: என்னுடைய பேச்சில் இருந்த வார்த்தைகளைப் பார்த்தால் தெரியும். இதுமாதிரிப் பிரச்சினைகள் வரும் என்பதால்தான் நான் பெயர்களைப் படிக்கவில்லை. நான் தெரிவித்தது, அவருடைய உறவினர்கள் செய்தார்கள் . . .

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறவினர்கள் செய்தார்கள் என்று சொன்னதாலே அந்தப் பெயரை நீக்க வேண்டியது அவசியம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கொலை செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதில் பிடிவாதம் காட்ட வேண்டாம். * * இது ஒரு முன்மாதிரியாக அமைந்துவிடும். ஆகவே, அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அவைக் குறிப்பிலேயும் வரக்கூடாது' பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வரக்கூடாது.

திரு. சி. இராமலிங்கம்: அந்த . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்த விஷயம் முடிந்து விட்டது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது.

THE HON. THIRU K. NARAYANASWAMY. There has been some complaint that there has been increase in crimes. Although this is not quite relevant to the discussion on this small piece of legislation. I would respectively tell this House that in every country—I have myself gone through some of the statistics of American countries and England—crime has been on the increase.

(பிற்பகல் 4.50)

That does not mean and that will not give any excuse for the police force to countenance any increase in the committal of crimes. All that I am saying is, as I submitted earlier, that by reason of a number of forces, social, psychological and hereditary, which come into play, crime has always been on the increase just like the increase in population. Therefore, the creation of this office, particularly that of the Director-General of Police, has nothing to do with the increase in crimes. This office has been created only on 1st June 1979 and certainly it is too short a period to expect any magic formula to affect the increase in crimes or to eliminate the crimes entirely. I want to make this respectful submission that so far as the creation of this office of Director-General of Police is concerned, the Government are not motivated by any kind of favouritism to Thiru Stracey. This Government were impressed by his personal

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

efficiency and, therefore, they have retained his services and they have regularised his services by creating this office of Director-General of Police. This office of Director-General of Police does not end with the demission of office by Thiru Stracey. It was not specially created for Thiru Stracey and this officer will continue as long as this Government continues in office.

The hon. Member Thiru Lakshmikandhan mentioned about the status of this office. I would like to mention to him that the Director-General of Police is No. One Policeman and, therefore, his reference to the Army and the Navy is totally inapposite and inapt.

Some criticism has been made by Thiru Nallasivan about the uniform to be worn by the Director-General of Police and I will come to that a little later. I think the criticism of Thiru Veerasami in respect of one Thiru R. K. Balasubramaniam is rather beside the point. I would even say that it was wide of the mark so far as this piece of legislation is concerned.

The criticism of Thiru Nallasivan centred on two points. One was about the unsuitability of Thiru Stracey to wear the police uniform and the other was to use his own words, that there had been a lacuna inasmuch as the Ordinance was brought into effect only in the month of October, when he had been functioning from 1st June 1979. I would like to give the details of this House. Thiru Stracey attained the age of superannuation on 30th November 1978 and his term of service was extended from 1st December 1978 to 31st May 1979 under rule 16-A of the Rules—what are called the All India Service Death-*cum*-Retirement Benefits Rules, 1958. Thereafter on 31st May 1979, this Government proposed to create this new office of Director-General of Police and made the appointment of Thiru Stracey as the Director-General of Police and three Inspectors-General of Police with effect from 1st June 1979. It was only later on, in October, that the Ordinance was promulgated. The Ordinance is now sought to be supplanted by this Bill. Now, a question of lacuna has been raised by the hon. Member Thiru Nallasivan. He said that the Ordinance was promulgated only in October, while Thiru Stracey started functioning from 1st June 1979. I would like to submit to this House that the power to make the appointment with effect from 1st June 1979 is derived from a combined reading of Article 309 of the Constitution of India, Article 245,



i.e., the legislative power, read with Entry II of List II of Schedule VII, and also the executive power centred in Article 162 of the Constitution. A combined reading of these three Articles gives the necessary power to create this office and to make the appointment with effect from a certain date. There is no difficulty about it. In order to legalise it, there is only one section, i.e., section 1(2)(a), which says that the provisions of this Act, except section 5 shall be deemed to have come into force on the 1st June 1979. Therefore, there is also the legislative sanction to what may be called the executive action taken under Articles 309 and 162. There is no difficulty about it.

With regard to the wearing of Police uniform, there is only one point which I want to mention. In the Indian Police Service Uniform Rules, 1954, there is one rule, which says that the members of the service should not, after their retirement from service, wear the uniform prescribed in these rules, while they are re-employed in non-Police forces. I would submit that Thiru Stracey has been appointed to a Police post with the name of Director-General of Police and, therefore, it is not a non-Police force. Therefore, he has every right and as I submitted in the Legislative Assembly, he ought to, he can and he must right royally wear the Police uniform, Police insignia and Police garb.

The hon. Member Thiru Ramamoorthy made mention that the Enforcement wing of the Police force was not headed by any Inspector-General of Police. I think that the hon. Member has been totally misinformed in this regard. Thiru Paramaguru was, the gentleman who was appointed as the Inspector-General of Police in charge of the Enforcement of Prohibition.

A criticism has been made that the post of Director of Vigilance and Anti-Corruption is vacant from the 1st October 1979, that is, since Thiru Krishnasami retired voluntarily. I may submit to this House that proposals are now before the Hon. the Chief Minister for filling up the post.

Mr. Chairman, Sir, this is merely a Bill of very simple magnitude, importance and significance. I have made my submissions and I request that my motion that the Bill be taken into consideration may kindly be accepted.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது நான் அவையில் குறிப்பிட்ட திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்தச் சட்ட முன்வடிவுக்கும் சம்பந்தமில்லை என்று குறிப்பிட்டார்கள். நானேகூட உதாரணத்திற்காகத்தான் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் பெயரை இங்கே குறிப்பிட்டேன்.

அடுத்து, இந்தச் சட்ட முன்வடிவில் செக்ஷன் 7 நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் தொடர்பான செக்ஷன் 50 அப்படியே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY : Sir, I will just meet that point. The hon Member was mentioning about the abolition of section 7. My recollection is that, in the Madras City Police Act, there was this section 7 and also, I think, section 8 or 9, which vested them with judicial powers. In fact, when I was functioning as a Judge, I wrote a long note that in view of the provisions in the Constitution, the Police Officer in Madras should not be vested with judicial powers. Subsequently, the amendments to the Criminal Procedure Code made an end of this and extinguished those judicial powers in the Police officers. Therefore, they cannot function as Justice of Peace. Therefore, this section 7 is to be deleted.

(பிற்பகல் 5-00)

Section 50 of the Act reads thus : " Any charge against a Police officer above the rank of a Head Constable under this Act shall be enquired into departmentally only by an officer exercising the powers of a Magistrate."

To the best of my understanding, as there is no definition of the word ' Officer ' in the District Police Act, I think he must be one under the Public Servants Inquiries Act, 1850 in which case even an Administrative Officer like an officer of the I.A.S. or I.C.S. can enquire into it. It does not necessarily mean that it must be only by a Police officer exercising magisterial powers. Assuming—I am only saying ' assuming '—that this refers only to a police officer, it will not necessarily mean that there has been any amount of contradiction between the two provisions, viz., the deletion of section 7 and the omission to delete section 50. In this connection, I must say that in all the States, in Andhra, in Madhya Pradesh and if my recollection is correct, even in Rajasthan and Punjab, there have been State Law Commissions. In Madhya Pradesh, a gentleman by name Thiru Dikshit, retired Chief Justice of the M.P. High Court has been appointed as Chairman of the Law Commission. In every State, there has been what is called State Law Commission which goes through every State Law and then recommends the deletion or incorporation of provisions in the various Acts. In our State, there has been no Law Commission. I have been contemplating one such Commission and I will discuss with the Hon. the Chief Minister about the need for one. If this section is to be deleted, certainly we will do it in course of time but this does not in any way affect the validity of the legislation before this House.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. மூர்த்தி அவையில் இல்லாததால் அவருடைய திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வே. தங்கப்பாண்டியன் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, அல்லது திரும்பப் பெறுகிறாரா?

திரு. வே. தங்கப்பாண்டியன்: இந்தச் சட்டத் திருத்தம் ஒரு தனி நபருக்காக வந்திருப்பதற்குப் பதிலாக சமுதாயத்தின் நலன் கருதி கொண்டு வந்திருந்தால், நியாயமாக இருந்திருக்கும். இருந்தாலும் திருத்தத்தை நான் வலியுறுத்த விரும்பவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[புலவர் புலமைப்பித்தன்] [1979 நவம்பர் 12

இதைச் சொல்லுகிற அதே நேரத்தில் 'ஏ' சென்டர் என்று சொல்லப்படுகிற பெருநகரின் உள்ள திரையரங்குகள் உரிமையாளர்கள், படத்தை வெளியிடு வதில் வருகிற வருமானத்தில், படத்தை வெளியிடுகிற வெளியீட்டாளர் களுக்குக் கிடைக்கிற மற்றைய வருமானத்தில் பாதி வரி போக மீதமிருக்கிற பணத்தில் பெரும் பகுதியை எடுத்துக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு வாரத்திற்கு திரையரங்கிற்கு வரி போக நிகர வருமானம் (நெட் கலெக்ஷன்) 16,500 ரூபாயாக இருக்கிறது. அதே நேரத்தில் அந்தத் திரை யரங்கத்திற்கு வாடகையாகத் தர வேண்டிய தொகை 10,500 ரூபாய் என்பதை சொல்லித் தர வேண்டும். ஆகவே ஒரு வாரத்திலே 16,500 ரூபாய் வருகிற தென்றால், அதிலே 10,500 ரூபாய் திரையரங்க உரிமையாளருக்குப் போய் விடுகிறது. மீதியுள்ள தொகை 6 ஆயிரம் ரூபாயில் விளம்பரச் செலவுகள் போக மிச்சமிருக்கிற சொற்பத் தொகை மட்டுமே வெளியீட்டாளர்களுக்கு வந்து சேர்கிறது. ஒரு சில திரையரங்குகள் 20 ஆயிரம் ரூபாய் வரையில் வாரம் ஒன்றுக்கு வாங்குகிறார்கள். வெள்ளையாகவும் இருக்கலாம், கறுப்பாக வும் இருக்கலாம். அப்படி 20 ஆயிரம் ரூபாய் வாங்குகிற அளவிற்கு உள்ள திரையரங்குகளுக்கு இரண்டு வாரங்களுக்கு வேண்டிய தொகையை முன்பண மாக வெளியீட்டாளர்களிடத்திலே கேட்கிறார்கள். படத்தை வெளியிடுவ தற்கு முன்னாலே 40 ஆயிரம் ரூபாயை திரையரங்க உரிமையாளருக்குக் கொடுத்துத் தர வேண்டிய நிலைமை இருக்கிறது. என்னதான் படம் ஓடினாலும் படத்தை எடுப்பதற்காக உழைத்தவருக்கு கணக்குப் பார்க்கிற போது ஒன்றுமில்லை; வெளியிடுகிறவர்களுக்கும் ஒன்றும் இல்லை. ஆனால் திரையரங்கை நடத்துகிறவர்கள், அந்தத் தொகை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள் . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்ட முன்வடிவைப்பற்றிப் பேசலாம். [illegible] ஆகின்றது. சுருக்கமாகப் பேச வேண்டும்.

(பிற்பகல் 5.10)

**புலவர் புலமைப்பித்தன்:** அவர்களுக்குத் தான் அந்த வருமானம் போய்ச் சேருகிறதே தவிர, பட உற்பத்தியாளர்களுக்கு இல்லை. இந்த வரியை விழுக் காட்டு முறையில் கொண்டு வந்தால், அந்தத் தொழிலுக்கு வரியை பர்சென் டேஜ் முறையில் கொண்டு வந்தால், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களுக்கு உதவியாக [illegible]கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கி[illegible]



1979 நவம்பர் 12]

மாத்திரம் அல்லாமல், நல்ல நோக்கங்களுக்காக வருகின்ற படங்களுக்கு வணிக வரி முறையை, காரியல் வரி முறையை மாற்றியமைக்கவேண்டும். நல்ல சீர்திருத்தப் படங்களை, நல்ல கருத்துள்ள படங்களை எடுப்பவர்களுக்கு முழு அளவுக்கு வரிவிலக்கு அளிக்காவிட்டாலும், அவர்களுக்குப் பாதியளவுக் காவது வரிவிலக்கு அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமானால், அப்படிப்பட்ட நல்ல படங்களை எடுப்பார்கள். அப்படிப்பட்ட நல்ல கருத்துள்ள சீர் திருத்தப் படங்கள் வளர்ச்சியினைக் கருதியாவது அப்படிப்பட்ட வரி விலக்கை, பாதி விலக்காவது கொடுத்து, அந்தப் படங்களைத் தயாரிப்பவர் களுக்கு ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவுபற்றி ஒரு சில கருத்துக்களை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். நடப்பிலே 17 காட்சிகள் நடந்தால், 16 காட்சிகளுக்குரிய இணக்க வரியைச் செலுத்த வேண்டுமென்று இருந்த இடத்தில், இந்தச் சட்டத்தை மாற்றுவதன்மூலம் 14 காட்சிகளுக்கான இணக்க வரியைக் கட்டவேண்டும் என்று இருப்பது ஒரு முக்கியமான அம்ச மாகும். ஆனால் இந்தச் சட்ட முன்வடிவிலே அதே சமயத்திலே பிணையத் தொகை என்று ஒரு குறிப்பிட்ட தொகையை அந்தத் திரை அரங்குகளை நடத்துபவர்கள் நிதியாகக் கட்ட வேண்டுமென்றும் அவ்வாறு கட்டுவதன் மூலம் அரசுக்கும், உள்ளாட்சி மன்றத்திற்கும் இழப்பு ஏற்படாத வகையில் இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது. வரித் தொகையைக் கட்டாதவர் களைப் பற்றி பத்திரிகையின் மூலம் பிரச்சாரம் செய்து ஓரளவுக்கு அவர் களை உணரச் செய்யலாம் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்குச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். ஒருவேளை பத்திரிகைகளிலே பெயர் களை வெளியிடுவதன்மூலம் அவர்கள் பெயர்கள் மேலும் விளம்பரம் ஆகலாமே தவிர, அவர்கள் அந்த வரியைக் கட்டுவார்களா என்பது ஐயத்திற்குரியதாகும்.

அடுத்து, டூரிங் டாக்கீஸ்களைப்பற்றி குறிப்பாக இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டூரிங் டாக்கீஸ்களிலே பொதுவாக பயங்கரமான விபத்துக்கள், தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதன் காரண [illegible] அரசுக்கும் தொல்லையாக இருக்கின்றது. தூத்துக்குடியில் உள்ள ஒரு [illegible]டாரில் இந்தமாதிரி விபத்து ஏற்பட்டது. இப்படிப்பட்ட விபத்துக்கள் [illegible]கீஸ்களில் நடக்கின்றன. அது மட்டுமல்லாமல் அங்கு சுகாதார

[திரு. பா. ரா. தாமஸ்] [1979 நவம்பர் 12

வசதிகளும் இல்லை. இவ்வளவு வரி என்று சொல்லும்போது, சாதாரண
வரியைக் கட்டவேண்டுமென்ற காரணத்திற்காக டூரிங் டாக்கீஸ்காரர்கள் எவ்வளவு
மக்களைக் கொள்ளவேண்டுமோ அதைவிட அதிகமான அளவுக்கு அனுமதித்து
விடுகிறார்கள். இதன் காரணமாக திரைப்படக் காட்சி நடத்துபவர்கள், பல
படங்களைத் தொடர்ச்சியாக இரவு முழுவதுமே போடக்கூடிய நிலைமை
களைப் பார்க்கிறோம். இதனால் அங்கு சுகாதார நலம் கெடுகின்ற அளவுக்கு
கேடுகள் விளைவிக்கின்ற அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அவைகள்
மக்களுடைய சுகாதாரத்தை பாதிக்கக்கூடிய அளவிலேதான் அமைந்திரு
க்கின்றன. அதுமட்டுமல்ல படங்களைக் காட்டும்போது, புது பிலிம்களை
இடையிடையே மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரிந்த
தான் இருக்கும் என்று நினைக்கிறேன். டூரிங் டாக்கீஸ்களைப் பொறுத்த
அளவிலே கட்டுப்பாடுகள் வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். மின்
இணைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்தக் குறை ஏற்பட்டிருப்ப
தாகத் தெரிகிறது. சமீபத்தில் இந்த மாதிரி பயங்கரமான விபத்து
ஏற்பட்டிருக்கிறது. வரியை, வருமானத்தைப் பெருக்குவதில் நாம் அதிக
கவனம் செலுத்துகிறோம். அங்கே செல்லுகின்ற மக்களுக்கு சுகாதாரம்
கெடாமல் இருக்க வேண்டும், அந்த மக்களுடைய உயிர்களுக்கு ஆபத்து
ஏற்படாமல் இருக்க வேண்டும். அதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக கிராமப்புறங்களிலே, இந்த டூரிங்
டாக்கீஸ்களிலே இரவு முழுவதும் 5, 6 படங்கள் போட்டுக் காண்பிக்கும்
நிலைமைகள் இருக்கின்றன. இவர்கள் அதிகமான வரியைத் தொகை
யையும், இவ்வளவு வரியையும் கட்ட வேண்டும் என்ற காரணத்திற்காகவே
இரவு முழுவதும் பல காட்சிகளைக் காட்டுகிறார்கள் என்று கருதுகிறேன்.
ஆகவே இப்படிக் காட்டக்கூடிய முறையை மாற்ற வேண்டுமென்ற கருத்தை
இந்த அவையின் முன் வைத்து என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு வருவாய்த்துறை
அமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தச்
சட்டத்தைப் பொறுத்த வரையிலே . . .

**திரு. ஆ. திராவிடமணி:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப்
பொறுத்து நான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நானும் சுற்றிப் பார்த்தேன். யாரும்
எழுந்திருக்கவில்லை.



1979 நவம்பர் 12]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர் இந்தச் சட்ட முன்வடிவில் பேசுவ
தாகச் சொல்லியிருந்தார்கள். அவர் பேச இருப்பதாகச் சொன்னதால்,
நான பேசவில்லை.

**திரு. ஆ. திராவிடமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கேளிக்கை
வரி சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை நான் அவையின் முன் வைக்க
விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2 ஆயிரம் தியேட்டர்கள் இருக்
கின்றன. நிரந்தர அரங்கங்கள் 840, குறு குறு வசதிகள் கொண்ட
தியேட்டர்கள் 36, பெர்மனென்ட் தியேட்டர்கள் 117, டூரிங் தியேட்டர்கள்
கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன என்று தெரிகிறது. இந்தத்
தியேட்டர்கள் மூலமாக ரூ. 23 கோடி வரியாக அரசுக்குக் கிடைக்கிறது.
இந்தத் திரைப்படத் துறை தமிழகத்திலே ஒரு தவிர்க்க முடியாத தொழிலாக
இருக்கிறது. பல பேர்களுக்குத் தொழில் அளிக்கின்ற தொழிலாகவும் இருக்
கிறது. திரைப்பட நடிகர்கள், தியேட்டர் உரிமையாளர்கள், திரைப்படத்
தயாரிப்பாளர்கள், திரைப்பட விநியோகஸ்தர்கள் இவர்களுக்கெல்லாம்
வாய்ப்புகள் அளிக்கின்ற தொழிலாக இருக்கின்றது. ஆகவே இந்தத்
தொழில் தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருக்கின்றது. ஆகவே
இதற்கு என்று ஒரு தனி வாரியம் அமைத்து, அந்த வாரியத்தின் மூலம்
தமிழகத்திலே இருக்கின்ற, ரூ. 23 கோடிக்கு வருவாய் தரக்கூடிய தொழிலை,
இரண்டு ஆயிரம் தியேட்டர்களை கவனித்து, பொறுப்பாக நடத்துகின்ற
அளவுக்கு கட்டுப்படுத்தி நடத்த வேண்டும். கலைத் துறையை அதன்
மேற்பார்வையில் கொண்டு வரவேண்டும். அந்தத் தியேட்டர் உரிமை
யாளர்கள், படத் தயாரிப்பாளர்கள் சிலர் வசதி உள்ளவர்களாக இருப்பார்கள்,
சிலர் வசதி இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். மைசூர் போன்ற இடங்
களில், படம் எடுக்க பணம் கடனாகக் கொடுக்கிறார்கள். தமிழக அரசின்
சார்பில், தியேட்டர்கள் அமைக்க வேண்டுமென்றால், அவர்களுக்குக் கடன்
கொடுக்க வேண்டும். இப்போது தியேட்டர்களுக்குள்ளே ஆபத்தில்லாமல்
கிராம மக்கள் நிம்மதியாகப் படம் பார்க்க முடியாத நிலையிருக்கிறது.
கிராமங்களில் பெர்மனென்ட் தியேட்டர்கள் அமைய வேண்டும். அதற்கு
அரசாங்கமே பண உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.
படம் காட்டும் கருவிகள் வாங்கவும் அரசு பணம் கடனாகக் கொடுக்க வழி
வகைகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், கிராமப்புறங்களிலே
அங்குள்ள மக்களுக்கு நல்லதாக இருக்கும். அங்கெல்லாம் ஒரு பொழுது
போக்கு சாதனமாக இந்தத் திரைப்படம்தான் இருந்துகொண்டிருக்கிறது.
இதன் காரணமாக கிராமப்புற மக்களுக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்க

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 12

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரை அரங்குச் சொந்தக்காரர்கள் வரி கட்டித்தான் ஆக வேண்டும். கட்டத் தவறினால் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்த வரியை வசூல் செய்தாக வேண்டும். அதற்கான வாய்ப்புகள் சட்டத்தில் இருக்கின்றன. சினிமாக் கொட்டகையையே மூடிவிடுகின்ற நிலைமைக்குக் கொண்டு போக முடியும். இதெல்லாம் இருக்கின்ற நிலையிலே, வரி பாக்கி உள்ளவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பது என்பது, கொஞ்சம் கொஞ்சமாக இருக்கின்ற அச்ச உணர்வுகளும் மறந்துப்போகின்ற நிலைமைகளைத்தான் உண்டாக்கும். வரி செலுத்தவில்லை என்றால், நம்முடைய பெயர்தான் பத்திரிகையில் வரப் போகிறதே என்று எண்ணக் கூடிய நிலைமை வரும். இன்கம்டாக்ஸ் கட்டவில்லை என்றால், அவர்களின் பெயர்களைப் போடுகிறார்கள். அதனால் அவர்கள் வேறுபல சிபாரிசுகள் பெற முடியவில்லை, கடன் பெற முடியவில்லை. பாஸ்போர்ட் வாங்கப் போகும்போதுகூட, இதையெல்லாம் அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது. எனவே அதிலே நியாயம்கூட இருக்கிறது. விற்பனை வரி பாக்கியுள்ளவர்கள், அவர்கள் பெயரிலே இல்லாமல், மற்றவர்கள் பெயரிலே தொழில்களைத் தொடங்குவதற்கு முடியும். இந்த வரி பாக்கி அப்படியே இருக்கட்டுமென்ற நிலையிலே, வேறொரு தொழிலை, இன்னொருவர் பெயரிலே நடத்த அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் திரை அரங்குகளைப் பொறுத்தவரையில், நபர்மீது போடுகின்ற வரியல்ல அது. தியேட்டர்களுக்குப் போடுகிறோம். அதைக் கட்டித்தான் தீர வேண்டும். அப்படிக் கட்டவில்லை என்றால், முழுமையாக நடவடிக்கை எடுத்து, வசூல் செய்ய வேண்டியது இலாக்காவின் பொறுப்பு. அப்படி இல்லாத நிலையிலே, பெயர்களை விளம்பரப்படுத்துகிறோமென்று சொல்வதில் பொருளில்லை. அதனால் அவர்கள் அவமானப்படுகிறார்களா என்றால், இல்லை. வரி பாக்கிக்காரர்கள் எப்போதும் அவமானப்படுவதில்லை. எதற்கும் துணிந்தவன்தான் அந்த நிலைக்கு வர முடியும். கூட்டுறவு சொசைட்டியிலே பணம் பாக்கியுள்ளவர்கள்மீது ஜப்தி நடவடிக்கை எடுத்தால்கூட பணம் வருவதில்லை. எனவே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், முழுக்க முழுக்க வரியை வசூலிக்க வேண்டும். அப்படியில்லாமல் பெயர்களைப் பிரசுரிப்பதென்பது, சட்டத்தை வேறு முறையிலே பயன்படுத்துவதாகத்தான் இருக்கும். எனவே அமைச்சரவர்கள் மேலும் திறமையாக அவருடைய துறையை இயக்கி, பாக்கிப் பணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை விட்டுவிட்டு



1979 நவம்பர் 12] [திரு. க. இராமமூர்த்தி]

பத்திரிகைகளிலே பெயர்களைப் போடுகிறோமென்று சொல்வது முறையாக இருக்காது, சரியாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது நமக்கு இருக்கின்ற அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்துவதாகாது என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலும், நான் அதிகமாகப் பேசத் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆனால் உறுப்பினர்கள் பேசும்போது; இதற்குச் சம்பந்தப்படாத கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லி இருக்கிறார்கள். பக்கத்தில் அறநிலையத் துறை அமைச்சரவர்களும் இருக்கிறார்கள், அவர் காதில் அந்தக் கருத்துக்கள் விழ வேண்டுமென்று சொல்லியிருப்பார்களோ என்னவோ தெரியாது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும . . . .

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மேலவை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் தான் அனுமதிக்கப்படலாமென்று விதி இருக்கிறது. அப்படி இருக்க, யாருடைய அனுமதி பெற்று பிள்ளைகள் வந்திருக்கிறார்களென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** குழந்தைகள் எல்லாம் 12 வயதிற்கு மேற்பட்டவர்கள். (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** 16 காட்சிகளுக்கென்று வசூலிக்கப்பட்ட இணைக்க வரி இப்போது 14 காட்சிகளுக்கென்று வசூலிக்கப்படுகிறது என்பது ஒன்று. அடுத்து, சில முனிசிபாலிடிகள் இரண்டாம் தரத்திலிருந்து முதல் தரமாகியிருக்கின்றன. அது ஒன்று. சில முனிசிபாலிட்டிகள் மூன்றாம் தரத்திலிருந்து இரண்டாம் தரத்திற்கு வந்திருக்கின்றன. அது இரண்டு. மூன்றாவது, வரி கட்டாதவர்கள். அவர்கள் அதிகாரிகளிடம் மனு கொடுத்து. அவர்கள் தீர்ப்புக் கூறிய பிறகு, அதாவது அந்தக் காலகெடுவிற்குப் பிறகு, செய்தித்தாள்களில் அவர்கள் பெயர்களைப் போடுவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் வேறு கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. திராவிடமணி அவர்கள் பேசும்போது, இன்றைக்கு சினிமாக் கொட்டகைகள்

எல்லாம் நஷ்டமடைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். சினிமாக் கொட்டகைகளில் அப்படிப்பட்ட நிலைமையில்லை என்பதற்கு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அவற்றுக்கு நஷ்டம் ஏற்படுமானால், அவற்றின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வர வேண்டும். ஆனால் குறையாமல் வளர்ந்துகொண்டே போவதால், நஷ்டமில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். பெர்மனென்ட் தியேட்டர்களாக இருந்தாலும் சரி, செமி-பெர்மனென்ட் தியேட்டர்களாக இருந்தாலும் சரி, டூரிங் தியேட்டர்களாக இருந்தாலும் சரி, அவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. என்னால் அதற்குப் புள்ளிவிவரங்களைக் கொடுக்க முடியும்.

31—12—1977 வரையிலும் பெர்மனென்ட் தியேட்டர்கள் 465 இருந்தன. ஆனால் ஒரு வருடம் கழித்து, அதாவது 31—12—1978-ல் 497 ஆக உயர்ந்தன. ஆனால் அதற்குப் பிறகு 6 மாத காலத்தில், 497 ஆக இருந்தது, 839 ஆக உயர்ந்திருக்கிறதென்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். செமி-பெர்மனென்ட் தியேட்டர்களைப் பொறுத்தவரையில், 31—12—1977 வரை 62 ஆக இருந்தது, அதற்குப் பிறகு சிறிது குறைந்தாலும், இன்றைக்கு, அதாவது 30—6—1979 அன்று 97 ஆக இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். டூரிங் தியேட்டர்கள் 31—12—1977 வரையிலும் 549 இருந்தன. ஒரு வருடம் கழித்து, அதாவது 31—12—1978-ல் 695 ஆக உயர்ந்தன. அதற்குப் பிறகு 6 மாதங்களில் 887 ஆக ஆகியிருக்கிறது. அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுமானால், மூடிக்கொண்டே வந்திருப்பார்கள். ஆனால் இன்றைக்கு அதிகமான அளவிற்கு சினிமாத் தியேட்டர்கள், டூரிங் தியேட்டர்கள் வந்துகொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் 31—12—1978-ல் 1,751 ஆக இருந்தது, அதற்குப் பிறகு 6 மாத காலத்திற்குள், அதாவது 30—6—1979-ல் 1,816 ஆக உயர்ந்திருக்கிறது. ஆகையால் இன்றைக்கு சினிமாத் தியேட்டர்களெல்லாம்—டூரிங் தியேட்டரானாலும், செமி-பர்மனென்ட் தியேட்டரானாலும், பெர்மனென்ட் தியேட்டரானாலும்—லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத்தான் இந்தப் புள்ளிவிவரம் எடுத்துக் காட்டுகிறது. எனவே இன்றைக்குப் போடப்படுகிற வரி அதிகமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஆ. திராவிடமணி எழுந்தார்)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பேசட்டும்.





(பிற்பகல் 5-30)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஆகையினால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவு புதியதொரு மாற்றத்திற்காகக் கொண்டு வரப்படவில்லை. அப்போதைக்கப்போது போடப்பட்டுள்ள உத்தரவுகள் இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் இன்றைக்கு நிறைவேற்றப்படுகின்றன.

மாட்னி ஷோவைப் பொறுத்தவரை, தூத்துக்குடி நிகழ்ச்சிக்குப் பிறகு மாட்னி ஷோ இருக்கக் கூடாது என்பதற்காக அப்படி ஆக்கியிருக்கிறோம். குறைத்தது முதலிலேயே குறைத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படிக் குறைத்த உடனே வரி வசூலை நான் வேறு ஒரு அமைச்சர், ஒன்றைக் குறைத்துவிட்டேன். அது மாத்திரமல்ல. உங்களுக்கு நான் இங்கே பேசுகிறபோது, சில தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கொட்டகைகள் சுத்தமாக இல்லை, மோசமாக இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றியெல்லாம் இந்த அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும். அதுமாத்திரமல்ல. கிராமப்புறத்தில் இருக்கிற சினிமா கொட்டகைகள் எல்லாம் இரவு முழுவதும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். கிராமத்தில் இருக்கிற மக்கள் இரவு முழுவதும் சினிமா பார்க்கிற அளவுக்குப் பொருளாதாரத்தில் உயர்ந்திருந்தால், உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைவேன். கிராமப்புறங்களில் நாள் முழுவதும் சினிமா ஓடிக்கொண்டிருந்தால், பார்ப்பதற்கு அதிகமாக மக்கள் முன்வரமாட்டார்கள். நாள்பூரா ஓடிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஜனங்கள் பூரா ஓடிக் கொண்டிருக்கின்ற சினிமாக் கொட்டகைகளில் கிராமங்களில் பார்க்க முன்வரமாட்டார்கள். கிராமங்களில் இருக்கிற சினிமாக் கொட்டகைகளில் ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள் தான் காட்டுகிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களிலும், பஞ்சாயத்துக்களிலும் உள்ள சினிமாக் கொட்டகைகளிலும் ஒரு நாளைக்கு இரண்டு காட்சிகள்தான் காட்டுகிறார்கள். அதற்கு மேலே காட்டவில்லை என்று என்னால் சொல்ல முடியும். அப்படி எங்காவது குறிப்பிட்ட இடத்தில் காட்டப்படுகிறது, வேறு நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னால், அப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை நான் கூறி இத்துடன் அமைகிறேன்.

**திரு. ஆ. திராவிடமணி:** தியேட்டர்கள் அதிகம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணக்குக் கொடுத்தார்கள். ஆனால் வசூல் கணக்கை அமைச்சர் அவர்கள் கொடுக்கவில்லை. காலையில் கடையைத் திறந்தால்,

**தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கேளிக்**
**மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்**
**பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979)**



நஷ்டம் வருமென்று தெரிந்தாலும், கடைக்காரர்கள் கடையைத் திறப்பார்கள். அதைப்போல ஏதோ தொழில் செய்ய வேண்டுமென்பதற்காக இவர்களும் செய்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** ஏதோ தொழில் செய்ய வேண்டுமென்பதற்காக வன் சினிமாத் தொழிலை இவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய கேள்வி. (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு. 1979 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த; சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 64/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

**தீர்மானம்,** அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





**(5) தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979).**

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வாரிசு அல்லாத தர்மகர்த்தாக்களை நியமிப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்ட முன்வடிவின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1976-ல் ஜனாதிபதியால் சட்டமாகக் கொண்டுவரப்பட்ட பிறகு, முதலிலே ஒரு வருஷம் அவகாசம் கொடுத்தார்கள். அதன் பிறகு 2 வருஷம் மேலும் அவகாசம் கொடுத்தார்கள். வாரிசு அல்லாத தர்மகர்த்தாக்கள் யார் யார் இருக்க வேண்டுமோ அப்படிப் பட்டவர்களுடைய லிஸ்டைத் தயாரித்தார்கள். இதுவரை புதிய டிரஸ்ட் போர்டு நியமிக்கப்படவில்லை. டிரஸ்ட் போர்டு நியமிக்கப்படாததால், இப்போது எல்லாமே எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்ஸ் கையில்தான் இருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையில் எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்களும் இந்த டிரஸ்டுகளில் இருப்பவர்களும் ஒருவருக்கொருவர் கண்காணிப்பாளர்களாக இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர் கையில் மட்டும் அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அவர்கள் தவறு செய்துவிட்டு தப்பித்து விடுவார்கள். தர்மகர்த்தாக்களை மட்டும் போட்டாலும், போதாது. டிரஸ்ட் போர்டு இருந்தாலும், எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்களும் அவர்களும் ஒருவருக்

@ 700 ஆம் பக்கத்தில் இணைப்பு -VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கொருவர் கண்காணிப்பாக இருந்தாக வேண்டும். இதுவரை அதுமாதிரி அமைக்கப்படாததால், எந்தவிதமான கன்ட்ரோலும் இல்லாமல் கீழ்மட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். எல்லாக் கோயில்களையும் கமிஷனர் அவர்களோ, துணைக் கமிஷனர் அவர்களோ கவனிக்க முடியாது. நாடு பூரா பரவியிருக்கின்ற கோயில்களைக் கண்காணிக்க அவர்களால் மட்டும் முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை விட அதிகாரிகள் தான் நல்லவர்கள் என்றோ, அதிகாரிகளை விட தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும் தான் நல்லவர்கள் என்றோ கூறவும் முடியாது. ஒருவரையொருவர் 'கவுண்டர் செக்' பண்ண வேண்டுமென்று விதி இருக்கும்போது, எக்ஸிகியூட்டிவ் ஆபிஸர்களிடம் மட்டும் அதிகாரத்தைக் கொடுப்பது அவ்வளவு சரியாக இருக்காது. ஒரு வருஷம் கூட்டி, பிறகு இரண்டு வருஷம் கூட்டி, அதன் பிறகு இன்னொரு வருஷம் எக்ஸ்டென்ஷன் பண்ணுவது சரியல்ல. இருந்தாலும் இந்த வருஷத்திற்கு உள்ளேயாவது முடிக்க முடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில் குறிப்பிட வேண்டும். வாரிசு அல்லாத தர்மகர்த்தாக்களை நியமிப்பதைப் பொறுத்தவரை, அவர்கள் தனியார் ஆதலால், "ஃபிட் பெர்சன்ஸ்"-ஐப் பார்த்து லிஸ்ட் தயாரிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் "ஃபிட் பெர்சன்ஸ்" என்று சொல்லி, யார் யாருக்குக் கொடுத்தார்கள் என்பதை நாம் கண்டோம். "ஃபிட் பெர்சன்ஸ்" என்றால், யாரை நீங்கள் விரும்புகிறீர்கள், யாரை செலக்ட் பண்ணுகிறீர்கள் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள்தான் "ஃபிட் பெர்சன்ஸ்" ஆக இருப்பார்கள். மேலும் அது விவாதத்திற்கு உரியதாக இருக்கும். எப்படியும் இந்தச் சட்டத்திற்கு எக்ஸ்டென்ஷன் வாங்கிவிடுவார்கள். ஆட்களை நியமிக்கும்போது, ஒரு வட்டாரத்தில் பொதுவாக நாணயமுள்ளவர்கள், நல்லவர்கள் என்று கருதப்படுகின்றவர்களை மட்டும் தயவுசெய்து நியமிக்க வேண்டும். கட்சியில் உள்ளவரா, கட்சியில் இல்லாதவரா என்று கட்சிகளைப்பற்றிக் கவலைப்படாமல் நாணயமுள்ளவர்களா, நல்லவர்களா என்று பார்த்து, அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். பொதுச் சொத்துக்களைப் பராமரிக்கின்ற பணியை ஒப்படைக்கின்ற வேளையில் "அங்கு நாணயமுள்ளவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்" என்று சொல்லி "ஒரு வருட காலத்திற்குள் லிஸ்டைத் தயார் செய்து நல்லபடியாக அமைப்பை ஏற்படுத்துங்கள்" என்று கேட்டு இத்துடன் என் பேச்சை முடித்து, அமைகிறேன்.



THIRU A. R. DAMODARAN. Sir, I only wish to make an appeal to the Government that although in 1976 the non-hereditary trustees were all asked to vacate their office by a Presidential Act—Act No. 24 of 1976, I feel it is a matter of great sorrow that in spite of the lapse of three years, we have still not been able to appoint trustees to these temples. When the Dravida Munnetra Kazhagam came to power, they assured us that they would put in very good people as trustees. It was later found that some of them committed mistakes and some of them were good. Now, Sir, the A.I.A.D.M.K. Government also say that they want to appoint good people as trustees. But I have a very great nervousness in this respect about both the A.I.A.D.M.K. and D.M.K. Governments that somehow when they say 'good people', they would like to bring Party people in this. In this connection, I would like to say that the Congress belonged to a different tradition and, therefore, in some respects it was acceptable to the people because they were not people who denied the existence of God and they were not atheists or agnostics. To put it frankly, the general feeling among those of us who believe in Hinduism and who go to Hindu temples is that these people in power are not sincere in the selection and appointment of trustees. I do not know the individual beliefs of Thiru R. M. Veerappan; but I would like to tell him that we are doing the greatest dis-service to our temples which are the oldest institutions in Tamil Nadu. Whatever you may believe about certain sects gaining control over these temples exercising their monopoly privilege, the fact cannot be denied that by and large the people have faith and temple is a place where one must have faith. There is no question of proving by mathematical formula the existence of God. I would plead that the time has come for us to have a fresh look at the matter because the Hindu Religious and Charitable Endowments Act was passed in 1925 and even when it was passed, some claim was made by the orthodoxy that allowing the Government to play a part in appointing trustees, etc., would result in the politicalisation of the administration of temples and gradually result in temple property being looted by those who have no faith or trust in the temple at all.

(பிற்பகல் 5-40)

Now that we have had experience of 52 to 55 years, my request is that we must find some device whereby the Government do not enter into the picture of appointing trustees for our temples. We have the Hindu Religious and Charitable Endowments Board

and we have the Commissioner. Unfortunately, the position of th Commissioner now is not what was contemplated in the origina Act. The Commissioner has become very much a servant of the Government and he could not act independently in certain matters. If the Government are really sincere about appointing trustees, I will accept it in good faith. I hope they are preparing lists of the people who have applied for truste ships I would plead that, within the Hindu Religious and Charitable Endowments Act itself, we should devise a formula whereby some sort of a religious council or some people who are competent to administer, would be able to appoint the trustees. Today, there is a general complaint and I feel that it must also be voiced. Now the faith of the minorities is protected under the Constitution. Not only that. The majority community is also very careful not to wound the susceptibilities and sentiments of the minority communities. We will not speak in disparagement of the Muslim faith or of the Christian faith and rightly so because they are minorities. But a tendency is creeping in to denigrate the Hindu faith and the institutions that are connected with the Hindu faith. We do not mind people not going to temples. They are not compelled. The Hindu religion does not say that you should worship. We can worship in our own home or we need not worship at all. I do not mind the prevalence of the rationalist philosophy that they do not believe in all these things. We have no objection to it But, when a determined attempt is made to capture these temples solely for the purpose of utilising the wealth that exists in these temples, then, people who follow the Hindu faith have a right to make their views known and to request Government to keep off these temples. I am not accusing the present Government because they have appointed no trustees at all. I do not even know what lists they are preparing. It is all very secret and confidential and they must be exercising very good care. But, what has happened in our co-operative institutions today is that we find members of the ruling Party being nominated as Advisory Committee members. But, knowing politics, we may be sure that these things come about by pressure of events. Otherwise, a Party cannot survive in Government. Therefore, I am worried whether even in the administration of our temples, such practices may not enter. In spite of the Hon Minister, Thiru Veerappan's



very good intentions, pressure may be mounting and people may say, 'If the DMK people appointed so many trustees, why should we be denied, that office?'. Therefore, I would make a very frank request to the Government, on behalf of the Hindu majority community, to keep off our temples. Let them devise a method by which political parties do not appoint trustees and by which people who have faith in these things and who will follow the practice of keeping our temples clean and pure could be put in charge of temples. The persons in charge of the temples should take interest in the administration of the temples. Some 14 years ago, I became a Trustee of Sri Padaleeswarar Temple. I am not orthodox or religious. Somehow, I became a Trustee and there was no complaint as long as I was a trustee. We managed the temple as well as we could. Now, we have junior officers, people who are aged 30 or 32, managing very senior temples. At a particular time during the Dussarrah festival, we visited that temple for worshipping the Goddess. But when we went there recently, we were told that none of us could enter the sanctum sanctorum because the silver 'Viboothi' of the God had been stolen by somebody the previous day while prayers were going on. Sir, it is not that we wish to enter into that place but when all the devotees are kept out of the temple, because of the whims and francies of an Executive Officer who is very junior, those of us who go very often to these temples feel very much hurt that such things should happen in temples. This is only a small incident. The Hon. Minister must also have received reports about very many Executive Officers and some of them are very good and some must also be had because society is composed of good and bad people. The Executive Officers will have to be good and bad, just as there are good and bad trustees. The very idea, as my hon. Friend Thiru Nallasivan pointed out, in having a Board of Trustees is to exercsie a sort of check and balance in the administration of temples. We cannot give 100 per cent powers to trustees nor 100 per cent powers to Executive Officers. That is how the diarchic system came into force, the powers being shared between the Executive Officers and the Trustees. I only wish that the Hon. Minister will not take this as a sort of complaint but as a fervent plea that our temples should not be treated in this fashion and the more you treat it like this, the less will be the wealth that is accumulated in these

[Thiru A. R. Damodaran] [1979 நவம்பர் 1

temples. We are not able to manage our temples because, as the Hon. Minister has stated, they are not able to derive the revenues due to them. The same problem we had in Padaleeswarar temple. For four years the tenants did not even pay the lease amount of Rs. 2,000 for a nine-acre plot which was under their cultivation. The tenants were rich and influential people. In desperation I made an application under section 38 of the Act saying that I would like to sell the land. The land, about 3 1|2 acres, was sold in public auction for three and a half lakhs of rupees. The amount was invested in Fixed Deposit. The income from the investment was utilised for raising the salaries of Gurukkal and other temple employees who were getting about Rs. 35 to somewhere about Rs. 75 and Rs. 80 and the balance was used for the various development activities in connection with the temple. I confess that it is also very difficult for the Government to find good people for appointment as trustees. May I, therefore, plead with the Hon. Minister that he might find some suitable device within the Act iteself and find out whether a Committee of five or seven could be formed and whether that Committee could be given the power to select all these trustees. It would be better to divorce the Government entirely from the selection of trustees, and this is what I honestly want to strees when this Bill is being considered.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அறங்காவலர் குழுக்கள் புதிதாக நியமிக்க வேண்டியிருப்பதாலும், பரம்பரை முறையில் வராத அறங்காவலர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை ஆய்வு செய்யவும், இது தொடர்பாக அமைக்கப்பட்ட வட்டாரக் குழுக்கள் தங்களது பணியினை முடிக்காமல் இருப்பதாலும், போதிய கால அவகாசம் கொடுப்பதற்கு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போலவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, எவ்வளவு விரைவாக இந்த அலுவல்களை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிப்பது இந்தக் கோயில்களுடைய நிர்வாகத்திற்கும் அங்கே நிலவக்கூடிய ஆரோக்கியமான சூழ்நிலைக்கும் நல்லது. விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு, முயன்று விரைவில் முடிப்பார்கள் என்று நம்புகிறேன்.



1979 நவம்பர் 12] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

சிதம்பரத்திலே ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலின் பெயர் 'சபாநாயகர் ஆலயம்'. இந்த ஆலயத்திற்கு அறங்காவலர் குழு நியமிக்கப்படுமா? நியமிக்கப்படாதா? நியமிக்கப்படாது என்ற பொருள்பட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையை அசைக்கிறார்கள். காரணம் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று சட்டபூர்வமாகத் தடை உத்தரவு வாங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. ஒரு ஆண்டுக்கு அந்தக் கோயிலின் வருமானம் 1,500 ரூபாய்க்குக் கீழே தான் இருக்கிறது என்று காட்டி—இந்தக் கோயிலை இந்தச் சட்டத்திற்கு உட்படுத்த, அறநிலையத் துறைக்கு உட்படுத்த முடியாத நிலைக்கு—அந்த நுணுக்கமான முறையைக் கையாண்டு நீதிமன்றத்திலிருந்து தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். ஆனால், அந்த ஆலயத்தின் ஆண்டு வருமானம் என்ன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சொல்லப்போனால், உண்டியல் முறையை வைத்தால், ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வரும் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

(பிற்பகல் 5-50)

எந்தச் சட்டத்தின் இடுக்கைப் பயன்படுத்திக் கொண்டு நீதிமன்றத்தில் தில்லைவாழ் அந்தணர்கள் தடையைப் பெற்றார்களோ அந்தத் தடையை முறியடிக்க அரசு முயற்சி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அண்மையில்கூட சிதம்பரம் ஆலய புனர் நிர்மாணத்திற்கு என்று சுமார் 40 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு அரசின் ஒப்புதலும் பெறப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இந்தத் தொகையில் ஒரு கணிசமான பகுதியை அரசே அளிப்பதாகவும் இருக்கிறது. இந்த நிலையில் அந்த ஆலயத்தின் நிர்வாகக் குழுவில் தில்லைவாழ் அந்தணர்கள் மட்டும்தான் இடம் பெறலாம், வேறு யாரும் இடம் பெற முடியாது என்று இருப்பது சரியல்ல. அது மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தைப் பயன்படுத்தி இதைச் செய்ய முடியாது என்றாலும், தில்லைவாழ் அந்தணர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். லட்சக் கணக்கான ரூபாயை ஆலயப் புனர் நிர்மாணத்திற்கு பல்வேறு பிரமுகர்கள் நன்கொடையாகக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாரும் நிர்வாகக் குழுவில் இடம் பெற்று ஆலோசனை சொல்ல இடமில்லை என்றால், அது நல்ல சூழ்நிலையை உருவாக்காது என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்] [1979 நவம்பர் 12

அடுத்து, சிதம்பரத்தில், மாநில இந்து அறநிலையத் துறையில் அறங்காவலர் குழுத் தலைவராக இருந்த ஒருவர்—தற்போது இல்லை, முன்பு இருந்தார், அவருடைய பெயரை இங்கே நான் குறிப்பிட விரும்பவில்லை—பொதுச் சத்திரம் ஒன்றைத் தன்வயப்படுத்திக் கொண்டிருந்தார். சத்திரத்திற்குச் சொந்தக்காரர் இதுகுறித்து வழக்கு மன்றத்திற்குச் சென்று அந்தச் சத்திரம் தனக்குச் சொந்தமானது என்றும், முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவரிடமிருந்து தனக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் வாதாடினார். கோர்ட்டில் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், இதுவரையிலும் அந்தச் சத்திரத்திற்கு உரியவரிடம் அந்தச் சத்திரம் போய்ச் சேரவில்லை. சேரவிடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வகையில் பல்வேறு சட்டவிரோதமான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சுவாமி சக்ஜானந்தா அவர்களைப்பற்றி அனைவரும் அறிவோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நன்றாக அறிவார்கள் என்று நினைக்கிறேன். அவர் தன்னுடைய காலத்தில் ஒரு 80 ஏக்கர் நிலத்தை, ஓதுக்கி, சிதம்பரம் வட்டாரத்தில், ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினார்கள். அந்த அறக்கட்டளை, பொதுப்பணிகளையும் கல்விப் பணிகளையும் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இன்றையதினம் அந்த அறக்கட்டளை தவறான முறையில், தனிப்பட்ட சில நபர்களின் சொந்த நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இதை அறநிலையத் துறையோடு இணைக்க மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களுக்கு மிக விரைவிலேயே அறங்காவலர் குழுக்களை நியமிக்கிற பணியை முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆலயங்களுக்கு அறங்காவலர் குழுக்கள் நியமிக்கப்படாததன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதைப்போன்ற பல்வேறு தவறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன என்பதைக் கூறிக் கொண்டு, அவ்வாறு அறங்காவலர்களை நியமிக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், கட்சிக்காரர்களை மனதில் கொள்ளாமல், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்ததைப்போல், அறநிலையத் துறையில் உண்மையிலேயே அதிக நம்பிக்கை உள்ளவர்களையும், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களையும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.



1979 நவம்பர் 12]

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறிய கருத்துக்களை
அப்படியே நான் எதிரொலிக்க விரும்புகிறேன் என்று சொல்லிக் கொண்டு,
அதற்கு மேலும் ஓரிரு கருத்துக்களை மட்டும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.
இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவதற்கான காரணங்களைச்
சொல்லுகிறபோது கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது:

"If the amendment was not carried out the fit persons presently administering these institutions would have ceased to have the powers and in the absence of non-hereditary trustees appointed under the Act, there would have been an administrative vacuum."

இதைக் குறித்து ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. திடீரென்று
ஒரு கட்சி தேர்தல் முடிந்த பிறகு ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டு, 2, 3
மாத காலம்தான் ஆகிறது, அதற்குள் எவ்வாறு அனைத்துக் கோயில்களுக்கும்
அறங்காவலர்களை நியமிக்க முடியும் என்ற அளவில் அவசரச் சட்டம் பிறப்
பிக்கப்படுமானால், ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் இந்த ஆட்சியைப்
பொறுத்தவரையில், தேர்தல் முடிந்து 2½ ஆண்டுக் காலத்திற்கு மேலாகிறது.
இப்படி 2 ஆண்டுக் காலத்திற்குப் பிறகும்கூட, ஒரு சட்ட முன்வடிவை
அவையின் முன் முன்னதாகவே கொண்டு வாராமல், ஒரு அவசரச் சட்டத்தைப்
போட்டு, அதற்குப் பிறகு அவசரச் சட்டத்தைச் சட்டமாக்கும் வகையில்
இன்றைக்கு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அற
நிலையத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அமைச்சர் அவர்களின் கவனத்
திற்கு இதை உரிய காலத்தில் கொண்டு வரவில்லையோ என்ற சந்தேகம்
வருகிறது. அந்தத் துறை ஒழுங்காக இயங்குகிறதா என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அறங்காவலர்கள் நியமிக்கப்படாத காரணத்தால், பல கிராமங்களில்
உள்ள கோயில்களில் எந்த அளவுக்குக் குழப்பங்கள் ஏற்படுகின்றன என்பதை
அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அறங்காவலர்கள் அனை
வருமே தவறு செய்து விடுகிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாது.
சென்ற கூட்டத் தொடருக்குப் பிறகு, நான் பல்வேறு இடங்களுக்குச் செல்
லும்போது கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், இதைச் சொல்ல விரும்பு
கிறேன். ஒவ்வொரு ஆலயத்தைப் பொறுத்தவரையிலும், மாவட்ட அளவில்
இருக்கிற அறநிலையத் துறை அதிகாரி 6, 7 பேர் கொண்ட பட்டியலை

அனுப்புகிறார். அந்தப் பட்டியலில் உள்ள பெயர்களிலிருந்து அறங்காவலர் களை நியமிக்க வேண்டுமென்று அவர் அனுப்புகிறார். ஆனால் ஆளும் கட்சியின் சட்ட மன்ற உறுப்பினர் அல்லது கட்சிப் பொறுப்பில் இருக்கிற பொறுப்பாளர் அந்தப் பட்டியலை எடுத்துக்கொண்டு இங்கே வந்து அந்தப் பட்டியலை மாற்ற வேண்டும், அல்லது அதில் 2 பேரை மாற்ற வேண்டும், 3 பேரை மாற்ற வேண்டும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார். ஆளும் கட்சியினருக்கு எப்போதுமே இதுபோன்ற நிலைமைகள் வரும். இந்த நிலை காரணமாகத்தான் அறங்காவலர்களின் நியமனம் தாமதப்படுகிறது என்பது மட்டுமல்ல, ஆலயங்களும் இதுபோன்ற தவறுகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த நிலைமைகள் மாற மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப்போன்ற ஒரு அணுகுமுறையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். தற்போது இந்த அரசு கொண்டிருக்கும் அணுகுமுறை காரணமாக, இவர்களுக்கு "இந்து சமயத்தில்" இருக்கிற கருத்து மாறுபாடுகள் காரணமாகக் காட்டப்படும் அலட்சியமோ என்ற சந்தேகம்கூட எங்களுக்கு வருகிறது. அறங்காவலர் களை நியமிப்பதில் அரசாங்கம் கொண்டிருக்கும் நிலையை மெத்தனம் என்றோ, அலட்சியம் என்றோ குறிப்பிடுவது கூட வெறும் சாதாரண வார்த்தைகள் என்றுதான் நான் நினைக்கிறேன். காரணம் கடைசி நேரம் வரை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த நிலைமைகள் கொண்டுவரப் படாமல், இறுதியாக அவசரச் சட்டம் மூலமாகத்தான் இதை நீடிக்க வேண்டும் என்ற நிலையைக் கொண்டு வந்திருப்பது விரும்பத் தக்கதல்ல. ஒருவேளை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு 6 மாதத்திற்கு முன்பேகூட கொண்டு வரப்பட்டிருக்கலாம். இருந்தாலும் இதில் என் இவ்வளவு கால தாமதம் காட்ட வேண்டும் என்றுதான் எனக்குப் புரியவில்லை. இந்த நிலைமைகள் நல்லதல்ல என்று சொல்லிக் கொள்வதோடு ஆட்சியில் இருப்ப வர்களுக்கு "இந்து சமயத்தில்" நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ சமய உணர்வுகளை மதிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவு தேவையில்லாத ஒன்று, இது துறையின் நிர்வாகத் திறமை யின்மையைக் (Administrative inefficiency), காட்டுகிற அளவில்தான் வந்திருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, இனியாவது அவசரச் சட்டத்திற்கு எப்போதும் வாய்ப்பிருக்கிறது, அதன் மூலம் எதையும் எப்போதும் செய்து கொள்ளலாம் என்று எண்ணாமல், இனியாவது உரிய நேரத்தில் சரியான முறையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.



**டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் இந்தத் திருத்த மசோ தாவைப் பொறுத்தவரையில், எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று என்பதை முதலில் தெரிவித்துக்கொண்டு இதன்மீது என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லி விடை பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அவசரச் சட்டம் கொண்டு வரும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருந்து, கூடிய வரையில் அவசரச் சட்டம் கொண்டு வரும் நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இது சாதாரணமாக அரசாங்கம் செய்ய வேண்டிய ஒன்றுதான் என்றாலும், இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தமட்டில், ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். இந்தச் சட்ட முன்வடிவிற்கான "ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்"-ல் என்ன குறிப்பிட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து பார்க்க வேண்டும்.

"Under section 12 of the said President's Act, every vacancy occurring in the office of non-hereditary trustees shall be filled up within a period of one year from the date of commencement of the said President's Act or within such further period not exceeding two years as the State Government may specify in this behalf by notification. The said President's Act came into force on the 1st June 1976 and, therefore, the time-limit specified n the said section 12 expired on the 31st May 1979."

இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுவதற்கு மூல காரண மாக இருப்பது 1976 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி, இந்த நாட்டில் அவசர நிலை இருந்தபோது, கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இதை ஒப்புகொள்வார்கள் என்று கருதுகிறேன். இதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நான் எண்ணு கிறேன். அதை நிச்சயமாக மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

(பிற்பகல் 6-00)

குறிப்பாக அன்றைக்கு மத்திய அரசாங்கத்தில் ஆளும் பொறுப்பில் இருந்த கட்சியில் திரு. இராமமூர்த்தி அவர்களும் இருந்தார்கள். ஆகவே அது

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 நவம்பர் 1

அவருக்கும் பொருந்தும் என்று சொன்னால் மறுக்கமாட்டார் என்று நினை
கிறேன். அந்த அடிப்படையிலேதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப
பட்டிருக்கிறது.

ஆளும் கட்சி ஒரு ஆர்டினன்சைக் கொண்டு வந்தால், "ஏன் இவ்வளவு
அவசரமாகக் கொண்டு வந்தார்கள்? சட்டமன்றம் கூடும்போது சட்ட முன்
வடிவைக் கொண்டு வந்திருக்கக் கூடாதா?" என்று கேட்க வேண்டிய
கடமை எதிர்க் கட்சிகளுக்கு இருக்கிறது. ஆனால் சட்டமன்றம் ஏறத்தாழ
கடந்த 5 மாதங்களாகக் கூடவில்லை.

THIRU K. RAMAMOORTHY : Particularly, that is my charge.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : தலைவர் அவர்களே, வழக்கமாகக் கேட்கிற
கேள்விக்கு வழக்கமாகச் சொல்லுகிற பதிலைத்தான் அவர் சொல்கிறார்.

டாக்டர் எச். வி. ஹண்டே : சட்டமன்றம் கூடியிருக்க வேண்டியதுதான்.
ஆனால் இந்த ஆண்டு அதிகமான நாட்களுக்கு சட்ட மன்றம் கூடியிருக்
கிறது. ஏறத்தாழ 75, 80 நாட்கள் நடந்திருக்கின்றன. முன்பெல்லாம் 60
நாட்கள், 50 நாட்கள் என்றுதான் நடைபெறும். 1965ஆம் ஆண்டு இந்த
மேலவை 32 நாட்கள்தான் கூடியிருக்கிறது. ஆகவே சட்டமன்றம் கூடு
வதைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு நிறைய நாட்களுக்குக் கூடியிருக்
கிறது என்ற கருத்தை எதிர்க் கட்சி நண்பர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று
கருதுகிறேன்.

ஆனால் இந்தச் சட்டத்திற்கு அஸ்திவாரமே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்
தான் போடப்பட்டது என்பதை நான் சொல்லியாக வேண்டும். நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எல்லோருடைய
உள்ளத்தையும் கவரக்கூடிய வகையில் அழகானதொரு கருத்தைக் கூறியிருக்
கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்
களை நான் புரிந்துகொண்ட வரையில், அந்தக் கருத்தை மாண்புமிகு
அமைச்சர் அவர்களும் வரவேற்பார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை.
கூடிய வரையில் டிரஸ்டிகளாக வரக் கூடியவர்கள், நல்லவர்களாகவும், வல்லவர்
களாகவும் இருக்க வேண்டும். எந்தவிதமான தொல்லைகளும் ஏற்படுத்தா
மல், வரக்கூடியவர்களுடைய மனத்தைப் புண்படுத்தாமல் இருக்க வேண்டியது
அவசியம். நம்முடைய அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதால் எனக்கு
எந்த வழியிலும் இலாபம் கிடையாது. இருந்தாலும் அமைச்சர் அவர்கள்



1979 நவம்பர் 12] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, மாறுதலை நான் பார்த்திருக்
கிறேன். அவர் சட்டமன்ற மேலவையிலே ஒரு நாள் ஒரு விடையை அளித்
திருக்கிறார்கள். அந்த விடை எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது.
திரு. அறிவழகன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கொடுத்தார்கள்.
பக்தர்களைப் புண்படுத்தாமல் கோவில் அறங்காவலர்களைப் போட்டுக்
கொண்டிருக்கிறார்கள், போடுகிற நேரத்தில் நல்லவர்களைப் போட
வேண்டும் என்பதிலே அரசாங்கத்திற்கோ, எதிர்க் கட்சிக்கோ கருத்து வேறு
பாடு இருக்காது. ஆனால் எங்கே பிரச்சினை என்றால், அமைச்சர்களாக
இருந்தாலும், கட்சியாக இருந்தாலும் அவர்கள் கண்காணிக்கலாமா என்பது
தான். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் தன்னுடைய
பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. பல தவறுகள் கோயில்களில் நடை
பெற்றிருக்கின்றன. நீண்ட காலமாக பரம்பரை பரம்பரையாக டிரஸ்டிக
ளாக இருப்பவர்களுடைய தலைமையில்கூட தவறுகள் நடைபெற்றிருக்
கின்றன. திருத்தணி கோயிலைப் பற்றி பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு
முன்பே ஒரு பெரிய பிரச்சினை ஏற்பட்டதைப்பற்றி எதிர்க் கட்சியாக
இருந்தபோது கிளப்பியிருக்கிறோம். பரம்பரையாக வரக்கூடியவர்கள்,
பக்தர்களாக இருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் தலைமையில் தவறு
நடக்காது என்று சொல்வதில் கொள்கை வேறுபாடு இருக்கிறது. இருந்
தாலும் கோயிலைக் கண்காணிக்கிற நேரத்தில் நியாயமாக, நேர்மையாக,
பொருளாதாரச் சிக்கல் இல்லாமல் பணத்தைக் கொள்ளை அடிக்காமல், எந்த
விதத் தவறும் நடக்காமல் பாதுகாக்க வேண்டும். அதிலே அரசு கண்ணும்
கருத்துமாக இருக்க வேண்டும். இந்த மன்றத்திலே உள்ள அத்தனை
பேருக்கும் தெரியும், குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
வீராசாமி அவர்களுக்கும் ஞாபகமிருக்குமென்று கருதுகிறேன். சிலைத்
திருட்டு நடந்ததைப்பற்றி பயங்கரமான பிரச்சினை எழுப்பப்பட்டு, முதலில்
கண்டுபிடிக்க முடியாமல், பிறகு துப்பறியும் போலீஸ் போய் கண்டுபிடித்த
தைப்பற்றி நாம் அறிவோம். இப்படிப்பட்ட தவறுகள், சிலைத் திருட்டுக்கள்
நடந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன்
அவர்கள் சில்வர் விபூதிப் பட்டை திருட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள்.
அதைக் கேட்கும்போது வேதனையாக இருக்கிறது. பக்தர்கள் மனதைப்
புண்படுத்துவதாக இருக்கிறது. திருடு போகாமல், தவறு நடக்காமல் கண்
காணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. அந்தப்
பொறுப்பை அமைச்சர் அவர்கள் செய்கிறார்களா, இல்லையா என்றுதான்
பார்க்கவேண்டும் பக்தர்களையே அறங்காவலர்களாகப் போட வேண்டு

மென்று சொல்லுகிறபோது, நியாயமானவரைப் போட வேண்டும் என்ற
கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும்,
திரு. வீராசாமி அவர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.
அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத் திருத்தத்தை அத்தனை பேரும் வர
வேற்பார்கள் என்று நினைக்கிறேன். வரவேற்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து,
விடைபெறுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட
சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹண்டே
அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டு,
ஜூன் மாதம் ஏற்பட்ட நிலையின் காரணமாக இன்று இந்தச் சட்டத்தைக்
கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்கள்.
1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இப்போது
நாம் இருக்கிறோம். அரசாங்கத்தைக் குறை சொல்ல வேண்டுமென்ற
அவசியம், கட்டாயம் எதிர்க் கட்சியிலே உள்ள எங்களுக்கெல்லாம் இல்லை.
ஆனால் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு 1978 ஆம் ஆண்டு, 1979
ஆம் ஆண்டு ஆகிய இரண்டாண்டுகள் இடையிலே சென்றிருக்கின்றன.
அமைச்சரவையிலே சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய நம்முடைய அறநிலையத்
துறை அமைச்சர் அவர்கள் அறங்காவலர்களை நியமிப்பதில் ஏன் இவ்வளவு
காலதாமதத்தைக் காட்டினார்கள் என்பதற்கு விளக்கம் சொல்வார்களே
யானால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எங்களைப்
பார்த்து அன்றைக்கு, "நியமனங்களைச் செய்யுங்கள், கூட்டுறவு நிறுவனங்
களில் தேர்தலை நடத்துங்கள்" என்று கேட்டார்களே! ஆனால் இவர்கள்
ஏன் நியமிக்கவில்லை? அறங்காவலர்களை நியமிக்கக்கூடாது என்று நாங்கள்
சொல்லவில்லை. அவர்களுக்கு வேண்டியவர்களைக் கூடப் போடலாம்.
ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக்கூட நியமிக்கலாம். அதிலே எங்களுக்குக்
கருத்து வேறுபாடு கிடையாது. அரசாங்கத்தில் நான்-அஃபீஷியல்சை நியமித்
தால், அவர்கள் தவறுகள் செய்வார்கள் என்றும், அதிகாரிகள் தவறே செய்ய
மாட்டார்கள் என்றும் கருதி, தனி அதிகாரிகளைப் போட்டுக்கொண்டிருக்கும்
முறையை அனுமதிக்கக் கூடாது என்று எதிர்க் கட்சியிலே உள்ள நாங்கள்
எவ்வளவு பொறுப்போடு சொல்லுகிறோம் என்பதை டாக்டர் ஹண்டே



போன்றவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். சமுதாயத்தில் அரசியல்
வாதிகளை மட்டும் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இப்படி ஆளும்
கட்சியும், எதிர்க் கட்சியும் ஒருவரையொருவர் குற்றம் சொல்லிக்கொண்டிருப்
பதால், ஆண்டு கொண்டிருக்கிற அதிகார வர்க்கம் எப்படிப்பட்ட குற்றங்
களைச் செய்துகொண்டிருக்கிறது என்பதைக் காட்ட ஏராளமான ஆதாரங்கள்
இருக்கின்றன.

ஓராண்டுக்கு முன்னாலே நடந்த நிகழ்ச்சியைப்பற்றிச் சொன்னபோது,
மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் உடனே ஓர் உத்தரவைப்
போடுவதாகச் சொன்னார்கள். உத்தரவும் போயிற்று. ஆனால் என்ன
நடந்தது? 1978 ஆம் ஆண்டு சனவரி 16 ஆம் நாள் திருத்தணியில் இருக்கக்
கூடிய முருகன் ஆலயத்தில், சங்கராச்சாரியார் கொடுத்த வேலை ஒருவன்
திருடக்கூடிய அளவுக்கு, உருவை மாற்றி கொள்ளையடிக்கக்கூடிய நிலைமை
உருவாகியிருக்கிறது. அதைப்பற்றி விசாரணை நடத்துவதற்கு அமைச்சர்
அவர்கள் ஓர் உத்தரவைப் போட்டார்கள். அந்த விசாரணை பற்றிய
அறிக்கை இது வரை வந்ததா என்றால், வரவில்லை. இதற்கு என்ன
காரணம்? சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது கட்சிச் சொந்தக்காரர்
களோ இந்த மாதிரியான தவறைச் செய்திருந்தால், அவசர அவசரமாக
விசாரணை செய்து அடுத்த ஒரு வாரத்திற்குள்ளோ, ஒரு மாதத்திற்குள்ளோ
அறிக்கையைக் கொடுத்திருப்பார்கள். இதில் சம்பந்தப்பட்டவர்கள் அதிகாரி
களாக இருப்பதால், யாரைக் காட்டிக் கொடுப்பது, யாரைக் காப்பாற்றுவது
என்ற முயற்சியிலே ஈடுபட்டு, அரசாங்கத்திற்கு அறிக்கையைத் தராத நிலை
இருக்கிறது. இதை உற்சாகப்படுத்தக்கூடாது.

சமீபத்தில் கூட்டுறவுத் துறையில் நியமனங்களைச் செய்தார்கள். அப்படி
நியமனம் செய்த நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்
தார்கள் என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினார்கள்.
அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியில் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு நியமனக் குழுவில் இட
அளித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போலவே
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் பதவியைக் கொடு
கிறார்கள் என்று குறையை நான் சொல்லத் தயாராக இல்லை, கட்

ஆட்சியை உருவாக்கியதோ அந்தக் கட்சிக்காகத் தொண்டாற்றிய தொண்
டர்கள் பொறுப்பிலே வருவதை குற்றம், குறை என்று நான் சொல்லத் தயா
ராக இல்லை. இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கிறவர்கள் எதிர்க்
கட்சியாக இருந்தபோது அப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்களைச் சொல்லி
யிருந்தாலும், அவைகளை நாங்கள் திருப்பிச் சொல்ல விரும்பவில்லை.
ஆனால் தேர்தலையும் நடத்தாமல், நியமனங்களையும் செய்யாமல் அதிகாரி
களை நம்பி, இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு இன்றைய தினம் குறைபாடு
களுக்கு ஆளாகியிருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாண்டுகளாக நியமனம் செய்யவில்லை. வட்டாரக் குழுக்கள்
ஆங்காங்கே விண்ணப்பங்களை வரவழைத்து, பரிசீலனை செய்து, மேலதிகாரி
களுக்கு அனுப்பி, ஆணையாளர் ஒப்புதல் பெற்று, செய்யப் போகிறோம்
என்று குறிப்புகளைக் கொடுத்திருந்தாலும், குறைந்தபட்சம் 1980 ஆம் ஆண்டு
மே மாதத்திற்குள்ளாக தமிழகத்திலுள்ள எல்லா ஆலயங்களுக்கும் அறங்
காவலர்களை நியமித்துவிடுவார்களா என்பது சந்தேகமாகவே இருக்
கிறது. இரண்டாண்டு காலம் என்று இருந்ததை எப்படி மூன்றாவது
ஆண்டுக்கு நீட்டிக்க வேண்டுமென்று இன்றைக்குத் திருத்தம் கொண்டு வரு
கிறார்களோ அதைப் போலவே அடுத்த ஆண்டும் நான்காவது ஆண்டுக்கு
நீட்டிப்புத் தர வேண்டுமென்ற முறையில் சட்டமுன்வடிவைக் கொண்டு வரா
மல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 6-10)

டாக்டர் ஹண்டே அவர்கள்கூட சொன்னார்கள். இதற்கு முன்பு எப்படி
எப்படியோ நடந்தது என்று சொன்னார்கள். அவர்கள் அதிகப்படுத்திச்
சொல்லியிருக்கிறார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அது ஆண்ட
வனாக இருந்தாலும் சரி, தவறு செய்கின்றவர்கள் இருக்கின்ற வரை, அந்தத்
தவறுகளைத் திருத்திவிட முடியுமா என்றால், அது முடியாது. ஆனால்
தவறு செய்தவர் யார் என்று தெரிந்த பிறகு, உள்ளபடியே அவர் மீது நட
வடிக்கை எடுக்காமல் இருந்தால், தவறுகள் அதிகரிக்கும், குற்றச் சாட்டுகள்
அதிகரிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சி
யிலே சிலைகள் திருடு போகாமல் இருக்கிறதா ? சிலைகளைத் திருடுபவர்கள்
யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் ... வகை





நான் மறுக்கவில்லை. முன்பு நடந்ததைச் சொல்லி, இப்போது நடக்கின்ற
தவறுகளுக்கும் அதையே சொல்லிச் சொல்லி பூசி மெழுக ஆரம்பித்தால்,
பின்னால் உங்களுடைய குற்றங்களை நாங்கள் சொல்லிப் பேசவேண்டிய
அவசியம்தான் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்
சரவை அந்த நியமனங்களைச் செய்யும்போது, நியமிக்கப்படுகின்றவர்கள்
நல்லவர்களாக, நியாயமானவர்களாக, வல்லவர்களாக இருக்க வேண்டும் என்ற
எண்ணம் இருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த
போதும் அந்த நம்பிக்கை இருந்தது. அண்ணா முதலமைச்சராக இருந்த
...து நியமிக்கப்பட்டவர்கள் நல்லவர்கள்தான். அவர்கள் எதிர்காலத்தில்
...படி நடந்து கொள்வார்கள் என்று அப்போதே அளந்து சொல்ல முடி
...து. நல்லவர்களாக இருந்தவர்கள், அங்கே போன பிறகு தவறு செய்
...ர்களாக மாறிவிடுகிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். அதைச் செய்
...துதான் ஒரு அரசுக்குரிய கடமையாகும். அமைச்சர் அவர்கள் யாரை
...யமிப்பதாக இருந்தாலும், அவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும்.
...ல்லவர்களேகூட தவறு செய்தால், அவர்களைத் திருத்த வேண்டும். அர
...ங்கமும் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திருச்செந்தூரிலே
...ஒரு அறங்காவலர். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் எவ்வளவு நிமிடங்களாகப் பேசுகிறார்கள் ?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் பேச ஆரம்பித்து ஒரு இரண்டு
நிமிடங்கள் ஆகியிருக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பேச
ஆரம்பித்து 10 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சரி. இன்னும் இரண்டு நிமிடங்களில்
முடித்துவிடுகிறேன். திருச்செந்தூரிலே இருக்கக்கூடிய கோயில் அலுவலகத்
திற்கு அறங்காவலர் குழு நியமித்ததாகவும், அதிலே கேசவ ஆதித்தன் என்
பவர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.
ஒருவேளை அது தவறு என்று அமைச்சரவர்கள் சொன்னால், திருத்திக்
கொள்கிறேன். நான் பலவற்றை ஆதாரத்தோடு பேசிப்பழகியிருக்கிறேன்.
இந்தத் தகவல் கிடைத்தபோது, நியமன உத்தரவு இருக்கிறதா என்றால்,

விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதன் முடிவு என்ன என்பது பற்றி நாட்டு மக்களுக்குத் தெரியப்படுமே என்பதற்காகத்தான் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரை, எந்த விதமான ஒளிவு மறைவும் இல்லை. அதிகாரிகளுக்கு பங்கப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஓராண்டு காலமாக இந்த விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் அவர்கள் அரசுக்கு அறிக்கை கொடுக்கவில்லை. நகை நடந்திருக்கிறது என்று எனக்கு யாராவது தகவல் தந்தால், சொல்கிறேன். எனக்குத் தகவல் தந்தது யார் என்பது மாண்புமிகு அமைச்சருக்கே தெரியாது. இன்னார்தான் என்று அமைச்சர் அவர்கள் கற்பனை செய்துகொண்டிருக்கலாம். அப்படியே அவர் கற்பனை செய்து கொண்டிருந்தாலும், அரசாங்கம் கால அவகாசம் தர வேண்டுமென்பதில்லை. மூன்று மாத காலத்திற்குள்ளாக அல்லது ஆறு மாத காலத்திற்குள்ளாக அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுங்கள், அதற்குள்ளாக விசாரணையை முடித்துக்கொள்ளுங்கள் என்று விசாரணை செய்பவர்களை வற்புறுத்துவதில் அரசாங்கத்திற்கு என்ன தடை? திருத்தணிக் கோயிலில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன என்று நான் சொன்ன பிறகுதான், இந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகும் அவர்களிடமிருந்து அறிக்கை வருவதில் தாமதம் ஏற்படுவது முறைதானா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளோம். விசாரணையில் குற்றச்சாட்டுகள் தெளிவாக்கப்பட வேண்டும், நிரூபிக்கப்பட வேண்டும். பொது விசாரணை என்று சொன்ன பிறகு, ஆவணங்களைப் பார்க்க வேண்டும் என்றும் கால அவகாசம் வேண்டுமென்றும் அவர்கள் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நாங்களும் கால நீட்டிப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் திருச்செந்தூரில் ஒருவர் பெயரைச் சொல்லி அவரை அறங்காவலராக நியமித்ததனால் அவர் ஆலயத்தையே அபகரித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: பதிவேட்டைப் பாருங்கள். "நிலத்தை" என்று தான் சொன்னேன்.





மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: முதலில் ஆலயத்தையே என்றுதான் சொன்னீர்கள். பிறகுதான் நிலத்தை என்று சொன்னீர்கள். நான் அதைக் கூர்ந்து கவனித்தேன். எதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஆதாரத்தோடும் பேசுவார், பிறகு அது எந்த அளவுக்குப் போய் நிற்கும் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியுமாதலால், வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து அவர் பேசியதைக் கூர்ந்து கவனித்தேன். முதலில் ஆலயத்தையே என்று சொன்னார்கள். பிறகு ஆலயத்திலுள்ள நிலத்தை என்று சொன்னார்கள்.

ஆலயங்களில் அறங்காவலர்களாக வருபவர்களுக்கு சில அடிப்படைத் தகுதிகள் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படிதான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். முதல் விதி வயது. இரண்டாவது விதி அவர்கள் அந்த ஆலயத்தினுடைய சொத்தை அனுபவிப்பவர்களாக, எந்த ஒரு ரூபத்திலும், அதாவது குத்தகைதாரர்களாகவோ, வாடகைதாரர்களாகவோ தொடர்பு உடையவர்களாக இருக்கக்கூடாது. அந்த விதிகளையெல்லாம் பின்பற்றித்தான், ஆய்வாளர்கள் அவர்களுடைய தகுதியைப் பரிசீலித்து தேர்ந்தெடுத்து அனுப்பிய பட்டியலிலிருந்து தகுதியுள்ளவர்களைத் இன்றைக்கு நியமிக்கிறார்கள். நான் அவையில் இல்லாதபோது, வேறு ஒரு சட்ட முன்வடிவின்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கருத்தைச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். உங்களுக்கு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். அப்படி உங்களுக்குத் தகவல்களைத் தரும் போது அவைகளைப்பற்றி தயவுசெய்து பரிசீலிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கு உரிய உரிமையைப் பயன்படுத்தி எதையாவது பேசுவதும், அதுவும் இந்த அவையில் இல்லாதவர்களுடைய பெயரைச் சொல்லிப் பேசுவதும் சரியல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் உறுப்பினர்களாக இல்லாதவர்களுடைய பெயர்களைச் சொல்லிப் பேசுகிறீர்கள். அப்படிப் பேசுகிறபோது ஒரு நபர் என்று பேசலாம் அல்லது பெயர்களைச் சொல்லாமல் எடுத்துக் காட்டலாம். இந்த மன்றத்தில் உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த அவையில் உறுப்பினர்களாக இல்லாதவர்கள், அவையில் பேசுவதற்கான வாய்ப்பு இல்லாதவர்கள், இப்படிப்பட்டவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லி, பிறகு அவைகளைப் பத்திரிகைகளிலும் போட்டுவிட்டால், பிறகு யார் வந்து மாற்றுவது இவ்வளவு தவறுகளைச் செய்திருப்பவரை அறங்காவலராக நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவரை உடனடியாக

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 12

கட்சியையும் சேர்த்தே சொன்னார்கள். எங்களுக்குக்கூட சந்தேகம் இருந்தது. 1967-க்குப் பின்னாலே சாதாரணக் குடிமகனாக இருந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அறங்காவலர்களாக வந்துவிட்டால், அவர்கள் ஏழைகளாக இருந்தால், பெரிய பணக்காரர்களாக இல்லாத காரணத்தால், தவறுகள் நடந்து விட்டனவோ என்று பார்த்தால், அதற்கு முன்னாலே போனால், சுரங்கத்திற்குள்ளே போவதுபோல் இருக்கிறது. பெரும் பணக்காரர்கள், பெரும் பெருச்சாளிகள் சுரண்டிக்கொண்டே போயிருக்கிறார்கள். அதைத்தான் பார்க்க முடிகிறது. வெளியிலே இருந்தால் ஆண்டவனுக்குப் பயந்தவர்போல இருக்கிறார்கள். தர்மகர்த்தா ஆகிவிட்டால், ஆண்டவனுக்குப் பயப்படும் தன்மையை பக்தன் மறந்துவிடுகிறான் என்பதுதான் இன்றைக்குள்ள நிலை. பக்கத்தில் போய்விட்டால், அதற்குப் பிறகு சாதாரணம்தானே. தூரத்தில் இருக்கும்போது பயப்படுகிறான். அருகிலே நெருங்குகையில் ஆண்டவனும் சாதாரணமென்று நினைக்கிறான். தவறு செய்வதில் ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் இல்லை. அதற்கு திரு. தாமோதரன் அவர்கள் ஒரு உதாரணம் சொன்னார்கள். பாடலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை வைத்துக்கொண்டுள்ள வசதி மிக்க ஒருவர் குத்தகையை எப்படிக் கொடுக்காமல் இருக்கிறார் என்பதை எடுத்துச் சொன்னார். அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு. ஆலயங்களின் சொத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் வசதி மிக்கவர்கள். அவர்கள்தான் அதை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். 10 பேர்கள் வசதியில்லாதவர்கள் எடுத்துக்கொண்டவர்களாக இருக்கலாம். 90 சதவிகிதம் அளவிற்கு லட்சாதிபதிகள் இவற்றை வைத்துக்கொண்டு, அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலியில், ஒருவருக்கு எவ்வளவு நிலமென்று கேட்டபோது, 40 ஏக்கர் என்று சொன்னார்கள். சொந்த நிலமா என்று கேட்டபோது, கோவில் நிலமென்று சொன்னார்கள். அந்த நிலங்களைப் பங்குபோட்டுக்கொண்டு, குடும்பத்திலுள்ள பலர் பெயரில் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு என்ன குத்தகை என்றால், 200 ரூபாய். இவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன. எனவே ஏழையாகப் போகிற அறங்காவலர்தான் தவறு செய்கிறார் என்று எண்ணிவிடாதீர்கள். பணக்காரர்களும் தவறு செய்கிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை. ஏழையாக இருப்பதால் தவறு செய்கிறார்கள், கட்சிக்காரர்களாக இருப்பதால் தவறு செய்கிறார்கள், கட்சி இல்லாதவனாக இருந்தால் தவறு செய்ய மாட்டான், பணக்காரனாக இருந்தால் தவறு செய்ய மாட்டான் என்ற இலக்கணம் பொருந்தாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 12] [திரு. இராம. வீரப்பன்]

இந்த அரசு, குறிப்பாக நம்முடைய முதலமைச்சரவர்கள் ஆலயங்களை மிகப் பெரிய அளவிலே கண்காணிக்க வேண்டுமென்பதில், குற்றங்கள் களையப்பட வேண்டுமென்பதில் அக்கறையோடு இருக்கிறார்கள். குற்றமற்ற நிர்வாகம் நடத்த வேண்டுமென்பதில் ஒரு சதவிகிதம்கூட சந்தேகத்திற்கு இடமில்லாமல் இன்றைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுகிற பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். தயவு செய்து நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, உங்களுக்குத் தெரிந்த நல்லவர்களின் பெயர் பட்டியலைத் தர முடியுமானால் தாருங்கள். அரசு அதைப் பரிசீலிக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(பிற்பகல் 6-30)

இறுதியாகப் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் கடைசியில் ஆதரிக்கிறோம் என்று சொல்லப்போகிறோமே, எடுத்த உடனே ஆதரிக்கிறோம் என்று சொல்லக் கூடாது என்பதற்காக, தேடிக் கண்டுபிடித்து, வேறு விவரங்கள் இல்லாததனால், ஒன்றிரண்டு விஷயங்களைச் சொன்னார்கள். அதைப் பற்றி அவர் இந்த மன்றத்திலே வைத்த குற்றச்சாட்டுகளையொட்டி பகிரங்க விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருவாய் வாரிய உறுப்பினர் திரு. நடராசன் அவர்களை வைத்து பகிரங்க பொது விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரகசிய விசாரணை அல்ல, பகிரங்க விசாரணை. யார் குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களிடத்திலே சொல்லி பிரச்சினையை எழுப்பச் சொன்னார்களோ, அவர்களே பின்னாலே குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்குப் பதிலாக, நாங்கள் அந்த ஆவணத்தைப் பார்க்க வேண்டும், இந்த ஆவணத்தைப் பார்க்க வேண்டும், இந்த ரெக்கார்டைப் பார்க்க வேண்டும், அந்த ரெக்கார்டைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி, ஒவ்வொரு விசாரணையின்போதும் கால அவகாசம், தவணை கேட்டுக் கொண்டே போகிறார்கள். நாங்களும் கால நீட்டிப்பு அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம். அவர்கள் எழுப்பிய காரணத்தால் இதுமாதிரி பல குற்றச்சாட்டுகளை இம்மன்றத்தில் எழுப்பிய காரணத்தால் தான், ஒரு இடத்திலாவது நிரூபிக்கப்படட்டுமே என்கிற நல்ல எண்ணத்தில்

உட்பட மாட்டார்களென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்தி என்பது வேறு, அறத்தைக் கடைப்பிடிப்பது என்பது வேறு, நல்லவர்களாக இருப்பது என்பது வேறு. அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. ஆனால், 1967-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்கள்தான் தவறுகளைச் செய்தார்கள், கட்சிக்காரர்களாக இருந்ததால் தவறுகளைச் செய்தார்கள் என்கின்ற உணர்வே அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது. நான் அதையும் மறுக்கிறேன். 1967-க்கு முன்னாலே இருந்தவர்களும் தவறு களைச் செய்துகொண்டே வந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றத் திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள், இப்படி கடந்த 30 ஆண்டுகளாக நடந்து வருகிறது என்பதை. அந்தத் துறை தன்னாட்சி பெற்ற, சுயாட்சி உரிமை பெற்றுள்ள துறையாக இருந்தும், தவறு நடந்திருக் கிறது. அதற்குப் பிறகுதான் அரசாங்கத்தின் மேல் கண்காணிப்பு வேண்டு மென்று சட்டங்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. தன்னாட்சி நிறுவனமாக இருந்தால், தவறு நடைபெறாது என்பதல்ல. அரசின் மேலாதிக்கம் இருப் பதால், தவறு நடந்துவிடுமென்று சந்தேகிக்க வேண்டியதில்லை. இதில் இருக்கிற கஷ்டமெல்லாம், நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது தான். அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. மிகச் சிறிய கிராமம், கோவில் வருமானம் என்ன என்று கேட்டால், 500 ரூபாய், 400 ரூபாய் ஆண்டுக்கு என்று சொல்லுகிறார்கள். போட்டியைப் பார்த்தால், 25, 30 பேர்கள் போட்டி போடுகிறார்கள். கோயிலுக்கு வருமானம் இல்லை. ஆனால், 25, 30 பேர்கள் பட்டியல் வருகிறது. இதில் தேர்ந்தெடுக்க வேண்டும். எவ்வளவு சங்கடம் இருக்கிறதென்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். வரு மானம் இல்லாத கோயிலுக்கு இவ்வளவு போட்டி இருக்கிறதே என்பதை அரசாங்கத்தாலே புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை கணக்கிலே இல்லையோ என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போல இருந் தாலும், அதையும் தாண்டி, அங்கே பார்க்கிறேன். கிராமங்களிலே இதை ஒரு கௌரவப் பிரச்சினையாக, பல பேர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இந்தக் கிராமத்தின் கோவிலுக்கு நான் தர்மகர்த்தா என்று சொல்கிற நிலைமையை ஏற்படுத்த பல பேர்கள் முனைகிறார்கள். அதில் நல்லவர்களும் இருக்கிறார்கள், நல்லவர்கள் அல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவைகளையெல்லாம் கண்டுபிடிப்பதற்காகத்தான் நான் உங்கள் அனுமதியோடு ஒரு சட்டத்தை நிறைவேற்றி வைத்திருக்கிறேன். அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன். குழு மூன்று பேர்களைத்தான் போட முடியுமென்ற நிலையை உருவாக்கிவிட்டு, அரசாங்கம் இருவரை நியமிக்கும் உரிமையை வைத்திருக்



கிறது. அதற்குக் காரணம், இப்படிப்பட்ட போட்டிகளுக்குள்ளே, சிக்காமல், நல்லவர்கள் எங்கேயாவது இருந்தால், அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களைப் போடத்தான், அரசு அந்த அதிகாரத்தை வைத்திருக்கிறது. இந்த மாமன்றத்தில் சொல்கிறேன், நல்லவர்கள் என்று யாரையாவது நம்புவீர்களா னால், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு உண்மையிலேயே ஆண்டவனுக்குப் பயந்து, ஆண்டவன் சொத்தைக் காப்பாற்றுகிறவர்கள் இருக்கிறார்களென்று தெரிந்தால், அவர்கள் பட்டியலைத் தயவு செய்து தரலாம். அதை அரசாங்கம் பரிசீலித்து, அவர்களையெல்லாம் அறங்காவலர்களாக நியமிக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகத்தான் அந்த உரிமையைக் கையிலே வைத்துக்கொண் டிருக்கிறோம்.

இன்றைக்குப் போடவில்லை, போடவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு 3,640 ஆலயங்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு விட்டார் கள். மூன்று பேர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். இரண்டு பேர்களை நாங்கள் தேடிக்கொண்டிருக்கிறோம். இவர்களையும் போட்டால்தான், அங்கே தலை வரைத் தேர்ந்தெடுக்க முடியும். இல்லையென்றால், மூன்று பேரே போது மென்று சொன்னால்தான், தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியும். இரண்டு பேர் கள் நல்லவர்கள், கட்சி சார்பற்றவர்கள், பொது நலத்தில் அக்கறையுள்ளவர்கள், ஆலயத்தில் அக்கறை செலுத்துபவர்கள், ஆலயத்தின் சொத்துக்களைப் பாது காக்கிறவர்கள், ஆலயத்திற்குச் செலவு செய்கிறவர்கள் யாராவது இடைப்பார் களா என்று தேடி, அப்படிப்பட்டவர்களின் பெயர்களை யார் கொடுத்தாலும் வாங்கி, பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு 3,640 ஆலயங்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். மேலும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆணையரிடத்தில், மிக விரைவில் இந்த நியமனங்கள் நடைபெற்றாக வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். விரைவிலே நடைபெறுமென்பது மட்டுமல்ல, அது நல்ல முறையிலே நடைபெற வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அறங்காவலர்களாக வருகிறவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ தரன் அவர்களும் சொன்னார்கள். இந்தக் கட்சி என்பது மாத்திரமல்ல, காங்கிரஸ் கடந்த காலத்திலே ஆளும் பொறுப்பிலிருந்த கட்சி மாத்திரமல்ல,

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 12

இந்த 80 ஆயிரம் பேர்களை அமர்த்தவேண்டிய பொறுப்பு எத்தனை அதிகாரிகளிடத்திலே இருக்கின்றது என்று கேட்டால், அது 131 அதிகாரிகளிடம்தான் இருக்கிறது. அந்த அளவில்தான் இந்த அறநிலையத் துறையிலே இருக்கிறார்கள். அவர்கள் இன்ஸ்பெக்டர்ஸ். அதாவது ஆய்வாளர்கள் என்று பெயர். அவர்கள்தான் இந்த 80 ஆயிரம் பேர்களுடைய விண்ணப்பங்களைப்பெற்று, அந்த விண்ணப்பதாரர்கள் கூறியிருக்கின்ற விவரங்கள் எல்லாம் உண்மையானவைதானா, சரியானவைதானா என்று அந்தந்த இடங்களிலே விசாரித்து அறிய வேண்டும். அதற்கெல்லாம் அவர்கள் ரிப்போர்ட் கொடுக்க வேண்டும். அதற்கு பிறகு 16 அஸிஸ்டெண்ட் கமிஷனர்கள் இதன் மேலே ஒரு உத்தரவைப் பிறப்பித்து, அவர்களுடைய வரம்பிற்குட்பட்ட ஆலயங்களிலே நியமிக்கவேண்டும். அதற்கும் துணை ஆணையாளர் அவர்களுக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் அடுத்து அரசுக்கும் அனுப்பி பிறகு நியமிக்கப்பட வேண்டும். இப்படி அங்கே நான்கு பிரிவுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆக இந்த 121 இன்ஸ்பெக்டர்கள் இந்த 14 ஆயிரம் சொச்சம் கோயில்களுக்கு 80 ஆயிரம் பேர்களுக்கு மேற்பட்ட அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமென்றால், ஏதோ பாரதத்திலே மயன் மாளிகை எழுப்பியதாகச் சொல்கிறார்களே, அது வேண்டுமானால் புராணத்திற்குச் சரியாக இருக்க முடியுமே தவிர, அதிலே நடக்க முடியுமே தவிர, ஒருவேளை தில்லையிலே நந்தனார் கதையில் வருவதுபோல, அவன் சிதம்பரம் போக வேண்டுமானால், நாளைக் காலைக்குள்ளே எத்தனையோ ஆயிரம் காணி நிலத்தை உழுது, விதைத்து, பயிரிட்டு அறுவடை செய்துவிட்டுப் போ என்று சொல்லி, காலையிலே பார்த்தால் அப்படியே ஆண்டவனுடைய அருளாலே விளைந்துவிட்டது என்று சொல்கிறார்களே அப்படி நம் புராணத்திலேதான் படிக்க முடியுமே தவிர, நடைமுறையில் இயலாது. இந்த 80 ஆயிரம் பேர்களைக் கண்டுபிடித்து நியமிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் தயவுசெய்து அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். அது எப்படி இருக்க முடியும்? அதாவது 131 அதிகாரிகள்தான் இதற்கு இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு இதைச் செய்ய வேண்டும். அதாவது உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறையிலே இருந்தவர்கள்



1979 நவம்பர் 12]

**திரு. க. இராமமூர்த்தி:** நாங்கள் சொன்னதாகச் சொல்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** யார் சொன்னார்கள் என்பதல்ல பிரச்சினை. அந்தத் தவறை மீண்டும் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் யாரோ சொன்னார்கள், செய்தோம் என்று சொல்வதைவிட, ஒரு மோசமான காரியம் இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. RAMAMOORTHY: The Hon. Minister's party should take equal responsibility. It is not that we alone did it. He also concurred with us. His party also concurred with it.

(பிற்பகல் 6-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் அந்த விவாதத்திற்குள்ளேயே நுழையவில்லை. அறநிலயத்தில் இருக்கிற அறங்காவலர்கள் தவறு செய்தார்கள், அவர்களை நீக்க வேண்டுமென்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லவில்லை. அன்றைக்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதைத் தவறு என்றோ, சரியல்ல என்றோ விவாதத்திற்குள் நுழையவில்லை. ஒரு காரியம் செய்யப்பட்டாகிவிட்டது. கொட்டிக் கவிழ்த்துவிட்ட பிறகு, திரும்பவும் சீர்படுத்த வேண்டுமென்றால், எவ்வளவு சிக்கல் அதிலே இருக்கிறது என்பதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே தவிர, யாரையும் குறைபடுத்த வேண்டுமென்பதற்காக அல்ல, குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக அல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களே குற்றம் சொல்லவில்லை, ஆதரிக்கிறோமென்று சொல்லிய பிறகு, நான் எப்படி குற்றம் சொல்ல முடியும்? தயவுசெய்து யாரையும் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. இருக்கிற சிக்கல்களைச் சொல்கிறேன். இவ்வளவு பெரிய முயற்சிகளை ஓராண்டுக் காலத்தில் எடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெளிவாக, கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு இருக்கிற சிக்கல்களை, நடைபெற்றுக்கொண்டிருக்கிற சம்பவங்களை, உணர்வுபூர்வமாக எடுத்துச் சொன்னார்கள். அந்த உணர்வை இந்த அரசு முழுமையாகப் பெற்றிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நியமிக்கப்படுபவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்பதில் இந்த அரசு நிச்சயமாகக் கண்டிப்பாக இருக்கிறது. நான் நல்லவர்களென்று சொல்லும்போது, பக்திமான்களாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். பக்திமான்கள் அனைவரும் நல்லவர்களென்ற இலக்கணத்திற்கு

இல்லை. அவர்களை நியமித்திருக்கிறார்கள். அவர் எந்தக் கட்சி என்
தல்ல முக்கியம். அப்படிச் சொல்லப்படுகின்ற கேசவ ஆதித்தன் என்பவ
அங்கே இருக்கக்கூடிய திருச்செந்தூர் ஆலயத்தை, நிலத்தையே ஏற்கெனவே
அபகரித்திருக்கிறார் என்று சொல்கின்றார்கள். அது உண்மையாக இருக்கு
மானால், அந்த நிகழ்ச்சியை வைத்து அவரை அந்தப் பொறுப்பிலேயிருந்த
நீக்க வேண்டும். தவறு செய்கின்றவர்களை நீக்க வேண்டும். தவறுகளை
நாங்கள் கண்டிக்கிறோம் என்று சொல்கின்ற அரசாங்கம் அதைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இந்தச் சட்டத்தை
நாங்கள் மறுக்கிறோம் என்று சொல்லவில்லை, ஆதரிக்கிறோம் என்று
சொல்லி, மேலும் ஒரு நீட்டிப்பு வராமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த அவ
யிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொண்டு என்
உரையை முடித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற,
பேரவையால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரு
தற்கு அவை முழு ஆதரவை அளித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில்,
நான் அதிக நேரம் விளக்கம் சொல்கின்ற முறையிலே எடுத்துக் கொண்டால்,
இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களின் பொறுமையை நான் அறிந்துகொள்
ளாமல் இருக்கிறேன் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாவேன் என்பது எனக்குத்
தெரியும். அடுத்து வர இருக்கின்ற சட்ட முன்வடிவுகளும் நான் பொறுப்பேற்று
இருக்கின்றவைகள் என்ற காரணத்தினாலே, அவை மீதும் மாண்புமிகு
அங்கத்தினர்கள் ஆதரவு தரத் தயாராக இருக்கும்போது, இதற்காக நான்
நீண்ட விவாதத்திற்குள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால், ஒன்றிரண்டு
கருத்துக்களை மட்டும் கூற விரும்புகிறேன். இந்தத் துறை எப்படி இயங்க
வேண்டும் என்ற கருத்தையும், ஏன் இவ்வளவு நாட்களாக இந்த அறங்
காவலர்கள் நியமிக்கப்படவில்லை என்ற ஐயத்தை எழுப்பி, அதற்கான
விடையையும் மாண்புமிகு அங்கத்தினர்கள் கண்டுபிடித்து இங்கே சொல்லி
யிருக்கிறார்கள். அதற்கு மாத்திரம் நான் விடையளிக்கக் கடமைப்பட்டிருக்
கிறேன்.





1976 ஆம் ஆண்டிலே இந்த மாநிலம் குடியரசுத் தலைவருடைய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, ஒரு அவசரச் சட்டத்தின் மூலம், அன்றைக்கு இருந்த அறங்காவலர்களுடைய பதவிகள் நீக்கப்பட்டன. அப்படி நீக்கப் படுகின்றபோது, அந்தச் சட்டத்தில் ஓராண்டில் மீண்டும் நியமிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்து, அப்படி ஒருவேளை நியமிக்கப்படாவிட்டால், அரசு மேலும் 2 ஆண்டு காலத்தில் நியமிக்க வேண்டும் என்ற அந்த விதியை யும் அதிலே இணைத்திருந்தது. ஆகவே, ஓராண்டு காலத்தில், அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட காலத்திலே, ஆளுநர் பொறுப்பிலே இந்த மாநிலம் இருந்தபோது அது நிறைவேற்றப்படவில்லை. 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. பொறுப்புக்கு வந்த ஓராண்டு காலத்திலே இந்த விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கே மிகுந்த சிக்கல்கள் இருந்தன. பல பிரச்சினைகளை அணுகவேண்டியிருந்தது. அதற்குப் பிறகு ஓராண்டு காலமாக இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அது இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இந்த மூன்றாண்டு காலத்தினுடைய சுருக்கமான வரலாறு இதுதான். ஏதோ ஒரு 50 பேர்களை, 100 பேர்களை நியமிப்பது என்றால், ஒரு மாதம் இரண்டு மாதத்திற்குள்ளாக நியமித்து விடலாம். நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் நியமிக்க வேண்டிய கோயில்கள் 14,708 கோயில்கள், ஒவ்வொரு கோயிலுக்கும் 3-லிருந்து 5 பேர்கள் வரை நாம் நியமிக்கலாம் என்று இருந்தால், கிட்டத்தட்ட 80,000 பேர்களைக் கண்டுபிடித்து நாம் நியமிக்க வேண்டும். ஒரு உத்தரவின் மூலம் அவர்களை நீக்கிவிடலாம். அது எப்போதுமே சுலபம். இன்றைக்குக்கூட நடந்திருக்கிறது. நாடாளுமன்றத்தை ஒரு உத்தரவின் மூலம் கலைத்து விட்டார்கள். ஆனால் அதற்கு என்று ஒரு தேர்தல் நடத்துவது என்றால், எவ்வளவு பெரிய சங்கடங்கள், எவ்வளவு நாட்கள், எவ்வளவு முயற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் காணுகிறோம், அதை உணருகிறோம். ஏறத்தாழ பதினான்காயிரத்து சொச்சம் ஆலயங்கள் இருக்கின்றன. ஏறத்தாழ அவைகளுக்கு 80 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட வேண்டும். முன்பு பொறுப்பேற்றிருந்தவர்கள், ஒரு உத்தரவின் மூலம் அவர்களை நீக்கிவிட்டார்கள். கடலிலே கொட்டிவிட்டு அதைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு வா என்று சொன்னால், அதில் எவ்வளவு சங்கடம் ஏற்படும் என்பதைப் பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு நாம் இன்று சங்கடப் பட்டுக்கொண்டிருக்கிறோம்.

விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதன் முடிவு என்ன என்பது
பற்றி நாட்டு மக்களுக்குத் தெரியட்டுமே என்பதற்காகத்தான் விசாரணைக்கு
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரை, எந்த
விதமான ஒளிவு மறைவும் இல்லை. அதிகாரிகளுக்கு பயப்படுத்த வேண்டு
மென்கின்ற எண்ணமும் எங்களுக்கு இல்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஓராண்டு காலமாக இந்த விசாரணை
நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் அவர்கள் அரசுக்கு அறிக்கை
கொடுக்கவில்லை. தவறு நடந்திருக்கிறது என்று எனக்கு யாராவது தகவல்
தந்தால், சொல்கிறேன். எனக்குத் தகவல் தந்தது யார் என்பது மாண்புமிகு
அமைச்சருக்கே தெரியாது. இன்னார்தான் என்று அமைச்சர் அவர்கள்
கற்பனை செய்துகொண்டிருக்கலாம். அப்படியே அவர் கற்பனை செய்து
கொண்டிருந்தாலும், அரசாங்கம் கால அவகாசம் தர வேண்டுமென்பதில்லை.
மூன்று மாத காலத்திற்குள்ளாக அல்லது ஆறு மாத காலத்திற்குள்ளாக
அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுங்கள், அதற்குள்ளாக விசாரணையை
முடித்துக்கொள்ளுங்கள் என்று விசாரணை செய்பவர்களை வற்புறுத்துவதில்
அரசாங்கத்திற்கு என்ன தடை? திருத்தணிக் கோயிலில் பல இலட்சக்கணக்
கான ரூபாய் மதிப்புள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன என்று
நான் சொன்ன பிறகுதான், இந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்
கிறது. இதற்குப் பிறகும் அவர்களிடமிருந்து அறிக்கை வருவதில் தாமதம்
ஏற்படுவது முறைதானா?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்
ளோம். விசாரணையில் குற்றச்சாட்டுகள் தெளிவாக்கப்பட வேண்டும்,
நிரூபிக்கப்பட வேண்டும். பொது விசாரணை என்று சொன்ன பிறகு,
ஆவணங்களைப் பார்க்க வேண்டும் என்றும் கால அவகாசம் வேண்டுமென்றும்
அவர்கள் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நாங்களும் கால
நீட்டிப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் திருச்செந்தூரில் ஒருவர்
பெயரைச் சொல்லி அவரை அறங்காவலராக நியமித்ததனால் அவர் ஆலயத்
தையே அபகரித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** புரசீடிங்கைப் பாருங்கள். "நிலத்தை"
என்று நான் சொன்னேன்.



**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** முதலில் ஆலயத்தையே என்றுதான்
சொன்னீர்கள். பிறகுதான் நிலத்தை என்று சொன்னீர்கள். நான் அதைக்
கூர்ந்து கவனித்தேன். ஏனையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி
அவர்கள் ஆதாரத்தோடும் பேசுவார், பிறகு அது எந்த அளவுக்குப் போய்
நிற்கும் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியுமாதலால், வரிக்கு வரி, எழுத்
துக்கு எழுத்து அவர் பேசியதைக் கூர்ந்து கவனித்தேன். முதலில் ஆலயத்
தையே என்று சொன்னார்கள். பிறகு ஆலயத்திலுள்ள நிலத்தை என்று
சொன்னார்கள்.

ஆலயங்களில் அறங்காவலர்களாக வருபவர்களுக்கு சில அடிப்படைத்
தகுதிகள் விதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படிதான் அவர்கள்
நியமிக்கப்படுகிறார்கள். முதல் விதி வயது. இரண்டாவது விதி அவர்கள்
அந்த ஆலயத்தினுடைய சொத்தை அனுபவிப்பவர்களாக, எந்த ஒரு ரூபத்
திலும், அதாவது குத்தகைதாரர்களாகவோ, வாடகைதாரர்களாகவோ
தொடர்பு உடையவர்களாக இருக்கக்கூடாது. அந்த விதிகளையெல்லாம்
பின்பற்றித்தான், ஆய்வாளர்கள் அவர்களுடைய தகுதியைப் பரிசீலித்து
அனுப்பிய பட்டியலிலிருந்து தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து
இன்றைக்கு நியமிக்கிறார்கள். நான் அவையில் இல்லாதபோது, வேறு ஒரு
சட்ட முன்வடிவின்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக்
கருத்தைச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். உங்களுக்கு தவறான
தகவலைத் தந்திருக்கிறார்கள். அப்படி உங்களுக்குத் தகவல்களைத் தரும்
போது அவைகளைப்பற்றி தயவுசெய்து பரிசீலிக்குமாறு உங்களைக் கேட்டுக்
கொள்கிறேன். இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கு உரிய உரிமையைப்
பயன்படுத்தி எதையாவது பேசுவதும், அதுவும் இந்த அவையில் இல்லாதவர்
களுடைய பெயரைச் சொல்லிப் பேசுவதும் சரியல்ல என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த
அவையில் உறுப்பினர்களாக இல்லாதவர்களுடைய பெயர்களைச் சொல்லிப்
பேசுகிறீர்கள். அப்படிப் பேசுகிறபோது ஒரு நபர் என்று பேசலாம் அல்லது
பெயர்களைச் சொல்லாமல் எடுத்துக் காட்டலாம். இந்த மன்றத்தில் உறுப்
பினர்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் இந்த அவையில்
உறுப்பினர்களாக இல்லாதவர்கள், அவையில் பேசுவதற்கான வாய்ப்பு இல்லா
தவர்கள், இப்படிப்பட்டவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லி,
பிறகு அவைகளைப் பத்திரிகைகளிலும் போட்டுவிட்டால், பிறகு யார் வந்து
மாற்றுவது இவ்வளவு தவறுகளைச் செய்திருப்பவரை அறங்காவலராக
நியமித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவரை உடனடியாக

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 12

அதிலிருந்து நீக்குவதற்கு இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஆதாரமாக ஒரு
குற்றச்சாட்டு இருந்தாலே போதும். ஆதாரபூர்வமாகக் காட்டுங்கள், அவரை
உடனடியாக நீக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். ஆதாரம்
இல்லாமல் வெறும் அவதூறாகச் சொல்லுவதை, அதிலும் குறிப்பாக பெயர்
களைக் குறிப்பிட்டுப் பேசுவதை மாண்புமிகு உறுப்பினர்கள், அதிலும் மிக்க
அனுபவம் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி போன்றவர்கள்,
நிறுத்திக்கொள்வது எல்லோருக்கும் மிகவும் நல்லது. இப்படியே ஒருவருக்
கொருவர் வெளியில் உள்ளவர்களைப்பற்றிப் பேசிக் கொண்டே போவதா
யிருந்தால், அதற்கு ஒரு முடிவே இருக்காது.

முன்னால் அறங்காவலர்களுக்கு உரிமைகள் இருந்தன. எச்சிலெட்டி
ஆப்லர்ஸ்மீது பழியைப் போட்டுவிட்டு சேர்ந்தோ, சேராமலோ தவறாக
காரியங்கள் நடைபெற்று வந்தன. அறங்காவலர்கள் அவர்களுக்கு இரு
இன்ற அதிகாரங்களின்படி முடிவுகள் எடுத்தால், அவை சட்டத்திற்கு உகந்த
இல்லாத முடிவுகளாக இருந்தால், கோயிலுக்கு பாதகம் ஏற்படுத்தும் முடி
வாக இருந்தால், கோயில் சொத்தைப் பாதுகாப்பதற்குப் பதிலாக பாதிக்
இன்ற முடிவாக இருந்தால், அந்த அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தைப்
பயன்படுத்தி அதை நிராகரிக்கலாம், ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. இல்லா
விட்டால் உடனடியாக மேலதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம்
என்கின்ற வகையில் விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அறங்காவலர்களின்
கட்டுப்பாட்டில்தான் அதிகாரிகள் இருக்க வேண்டுமென்ற நிலைமையை, இனி
மேல் தவறுகள் நடக்கும்போது, கடைப்பிடிக்க வேண்டாம் என்று சொல்லி
யிருக்கிறோம். இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கும்
சொல்லுகிறேன். இந்த அரசு நியமித்திருக்கின்ற அறங்காவலர்கள் யாராவது
எந்த நேரத்திலாவது, எந்த சந்தர்ப்பத்திலாவது தவறுகள் செய்தார்கள்
என்று தெரிந்து உடனே அரசுக்குத் தெரியப்படுத்தினால், அவர்கள் உடனடி
யாக நடவடிக்கைக்கு உட்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏன் நியமனங்கள் இன்னும் நடக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்
பினர்கள் சொன்னதற்கு காரணங்களை நான் சொல்லியிருக்கிறேன். உறுப்
பினர்கள் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று
கேட்டு அமைகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்துக்
கொண்டிருக்கிறவைகள் மட்டும்தான் ஆதாரம் உள்ளவைகள் போலவும், ஏதோ
எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவது எல்லாம் ஆதாரம் இல்லாமல் பேசுவது



1979 நவம்பர் 12] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

போலவும் கருத்துக்களைச் சொன்னார்கள். பல ஆதாரங்களை இந்த அவையில் நான் வைத்திருக்கிறேன். அப்போதெல்லாம் அமைச்சர்கள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. இன்ன பெயருடைய ஒருவர் அறங்காவலராக நிய மிக்கப்பட்டிருக்கிறார். அவர் அந்த ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தை அபகரித்துக் கொண்டிருக்கிற தகவல் வந்ததாகச் சொன்னேன். அப்படியே நான் சொல்லுகின்ற தகவல்களில் தவறு இருந்தால், திருத்திக் கொள்வதாகவும் சொன்னேன். ஏனென்றால் பல சந்தர்ப்பங்களில் ஆதாரங்களை வைத்துக் கொண்டுதான் பல குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறேன். ஒருவர் வந்து ஒரு கருத்தைச் சொல்லும்போது, ஆதாரத்தைக் காட்டு என்று அவரிட மிருந்து ஆதாரங்களைப் பெறுவதற்குள்ளாக அந்தத் தகவலை இந்த மன்றத் திற்குச் சொன்னால், அதுபற்றி அமைச்சர்கள் அறிவிப்பதற்கோ, தவறு களைத் திருத்திக் கொள்வதற்கோ அது வாய்ப்பாக இருக்கும் என்பதால்தான் தகவல் கிடைத்த உடனேயே சொல்கிறேன். அப்படியே நான் சொல்வது தவறாக இருக்குமேயானால், திருத்திக்கொள்கிறேன் என்றும் சொல்கிறேன். அப்படி நான் சொன்னதற்குப் பிறகும், அமைச்சர் அவர்கள் என்னைப்பற்றி இப்படி நான் சொல்லுவது என்னுடைய பழக்கம்தான் என்பதுபோல பேசி னார். எந்தெந்த அமைச்சர்கள் எந்தெந்தக் குற்றங்கள் செய்திருக்கிறார்கள் என்று நான் பல சந்தர்ப்பங்களில் சொன்னபோது எல்லாம் அமைச்சர்களிட மிருந்து அவற்றுக்குப் பதில் இல்லை. இந்த ஒன்றை வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் மிரட்டும் பாணியில் பேசுவது உள்ளபடியே கண்டிக்கத் தக்கது. இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(பிற்பகல் 6-40)

பிரிவு 2

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment—

" In clause 2, *for* the word ' three ' *substitute* the word ' six '."

THIRU V. THANGAPANDIAN : Sir, I second the amendment.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா? திரும்பப் பெறுகிறாரா?

THIRU K. RAMAMOORTHY : Sir, with the permission of the House, I withdraw my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 60/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



(6) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1979).

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 61/1979 ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு

" சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தின்மீது ஒருசில கருத்துக்கள் மட்டும் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு திருத்தங் களுக்கு தமிழ்நாடு சினிமா சட்டம் உள்ளாகியிருக்கிறது. கடந்த காலங் களில் சினிமா திரையரங்குகளுக்கு உரிமம் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் இருந்தன. சொல்லப்போனால், அரசாங்கத்தின் சார்பில் உருவாக்கப்பட் டிருந்த பல்வேறு 'ரிஜிட்' ரூல்ஸ் இன்றைக்கு இலகுவாக்கப்பட்டு உரிமங்கள் வேகமாகப் பெறுவதற்கும், மேல் முறையீடு செய்தால் அந்த மேல்முறை யீட்டின்மீது குறிப்பிட்ட காலத்திலே தீர்ப்புக்கள் பெறுவதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர் களால் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து உரிமத்திற்கு என்.ஓ.சி. கிடைக்காவிட்டாலோ, அல்லது மறுப்பு வரும் போது 'போர்ட் ஆஃப் ரெவின்யூ'-வுக்கு மேல்முறையீடு செய்வதற்கான உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி 'போர்ட் ஆஃப் ரெவின்யூ'-வுக்குப் போய் அங்கும் நீதி கிடைக்கவில்லை என்றால், அதற்குப் பிறகு கோர்ட்டுக்குப் போகும் உரிமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். போர்ட் ஆஃப் ரெவின்யூ வுக்கு அனுப்பாமல் அரசாங்கமே தலையிட்டு கருத்துக்களைச் சொல்வ தற்கும், உத்தரவுகளை மாற்றுவதற்கும் இயலும் என்ற வகையில் அதிகாரம்

@ 701-702 ஆம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அளிக்கும் அளவுக்கு இந்தத் திருத்தம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது
நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன். ஆனால் நாம் ஒரு முறையை
பின்பற்றுகிறோம். இன்றையதினம் நாம் அதிகாரங்களைப் பரவலாக்குவதிலே
கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அதிக அதிகா
ரங்கள் நமக்கு வேண்டுமென்று நாம் சொல்லும்போது, ஒரு மாநில அரசி
னுடைய அதிகாரங்களையும் பரவலாக்குவதுதான் நியாயமான கொள்கை.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிமங்கள் வழங்குவதில் பல்வேறு சிரமங்கள்
இருக்கின்றன. இந்த சிரமங்கள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்
களுக்கும் தெரியும். கடந்த 25 ஆண்டுக் காலமாக இந்தத் துறையிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுபவம் இருக்கிறது. எனக்கு
இருக்கிற ஒரே அச்சம் என்னவென்றால், இப்போது இருக்கும் முறையிலேயே
லைசென்ஸ் கிடைக்க வேண்டுமென்றால், ஏகப்பட்ட காலதாமதமாகிறது. இந்த
நிலையில், மூன்றாவது கட்டமாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பிறகு,
போர்ட் ஆஃப் ரெவின்யூ, போன்றவைகளுக்குப் பிறகு, அரசாங்கம் பார்த்து
அதற்குப் பிறகுதான் லைசென்ஸுக்காக கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய
நிலைமை இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய உத்தரவுக்குமேல்,
மேல்முறையீடாக போர்ட் ஆஃப் ரெவின்யூ-வுக்கு அனுப்பும் நிலையில்லாமல்
நேரடியாக அரசாங்கத்துக்கு என்று வைத்தால்கூட இடையிலே உள்ள
சிரமங்கள் குறையும். கடந்த 25 ஆண்டுக் காலமாக எனக்கும் அனுபவம்
இருக்கிறது. ஒரு டூரிங் தியேட்டருக்கு உரிமம் பெறுவதில் எவ்வளவு
சிரமங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால் இன்றைக்குப்
போட்டிருக்கின்ற திருத்தப்படி, போர்ட் ஆஃப் ரெவின்யூவினுடைய உத்தர
வுக்கு மேல் அப்பிலேட் அதாரிட்டியாக இருக்கும் அதிகாரத்தை அரசாங்கம்
வைத்துக்கொள்ளும்போது, மீண்டும் காலதாமதமாகும் நிலைதான் இருக்
கிறது. ஆகவே, இதை அரசாங்கம் மீண்டும் பரிசிலனை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டாத முறையில் அரசாங்கம் தனக்
கென்று அதிகாரங்களை எடுத்துக்கொள்கின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவ
ருடைய முடிவின்மேல் நேரடியாக அப்பில் அரசாங்கத்திற்குச் செய்யலாம்
என்ற அளவுக்கு சட்டங்களை வைத்துக்கொள்ள வேண்டும். இடையிலே
ரெவின்யூ போர்டு இருக்கும் மேல்முறையீட்டு அதிகாரத்தை அரசாங்கம்
நீக்கிக்கொள்ள வேண்டும். அரசாங்க உத்தரவுக்கு மேல் கோர்ட்டுக்குச்
செல்லலாம் என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும்.
இன்றையதினம் லைசென்ஸ் வாங்குவதற்குச் செலவாகின்ற பணம் ஏராளம்.
ஒரு டூரிங் தியேட்டருக்கு என்.ஓ.சி. வாங்குவதற்குக்கூட ஹைகோர்ட் வரை
யிலும் சென்று ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்யும் நிலைமைகள்கூட



ஏற்பட்டிருக்கின்றன. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே,
இடையிலே இருக்கின்ற பல்வேறு கஷ்டங்கள் நீக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித்
தலைவருடைய முடிவிலிருந்து நேரடியாக அரசாங்கத்திற்கு மேல் முறையீடு
வரவேண்டும் என்றும் அதற்கு மேல் கோர்ட்டுக்கு வரவேண்டும் என்றும்
சொல்லும் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,
இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், நான் மீண்டும் மீண்டும்
சொல்லிவருகிற கருத்தை வலியுறுத்தவேண்டிய கட்டாயத்திலே நான் இருக்
கிறேன். இதிலே ஒன்றுமட்டும் எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அநேக
மாக எல்லாமே அவசரச் சட்டங்களாக வந்திருக்கின்றன. நான் சட்டத்துறை
யைப் பாராட்டுகிறேன். இவ்வளவு அவசரமாகத் தயாரித்துக் கொடுத்த
தற்காக சட்ட அமைச்சர் அவர்களையும், சட்டத் துறையையும் பாராட்டாமல்
இருக்க முடியாது. ஆனால் சட்டத்தைப் பொறுத்தவரையில், "self
Contradictory" ஆக இருக்கிறது. "Appellate Authority"
ஆக யார் இருப்பது என்பதிலே அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம்
வேண்டும் என்று கோரிப் பெறுகின்ற சட்டமுன்வடிவு இது. அரசாங்கம்
அந்த அதிகாரத்தைக் கேட்பதற்குக் காரணம் Statement of objects and
Reasons-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

"The Government considered that there had been many peti-
tions before the Courts against the grant or refusal of cinema
licences and, therefore, it was considered necessary that the
Government should be vested with the necessary powers of revi-
sion over the orders pased by the Appellate Authority under the
Act." அதோடு மட்டுமல்ல. இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது.
"The Government do not have any revisionary power over the
decision passed or order made in appeal by the appellate authority
in respect of licences and permissions granted or refused."
ஏதாவது அவசிய நிலைமை வந்ததென்றால்
எதற்கு என்று புரியவில்லை. ஒரே நாளில் தேர்ந்தெடுப்
பாவாயில்லை. 80,000 பேரை 131 பேர் எப்படி
பார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அவர்களைக்
கொட்டினால், கவிழ்த்தால் எப்படி மீண்டும் வாருவது என்றெல்லாம்
சொன்னார்கள். ரொம்ப சிரமம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அவர்களுடைய தரப்பிலேயிருந்து நினைக்கலாம். அது வேறு. ஆனால்,
இதைப் பொறுத்தவரையில் இப்போது என்ன சூழ்நிலை ஏற்பட்டு விட்டது?
அவசரச் சட்டமாகக் கொண்டு வருவதற்கு என்ன சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது?

(Board) போர்டிலே இருந்து கோர்ட்டுக்குப் போகிறார்கள்.
அதனாலே வழக்குகள் ( Pendency ) 'பென்டன்சி' அதிகமாக
இருக்கிறது. அப்படி இருந்தாலும், சாதாரணமான முறையில் ஒரு சட்ட
முன்வடிவைக் கொண்டு வருவதிலே என்ன சங்கடம் இருக்கிறது? அவசரச்
சட்டம் ஏன்? அப்படிப் பார்க்கும்போதுதான் மற்ற சங்கடங்கள் எல்லாம்
வருகின்றன. நான் குற்றமாகச் சாட்ட விரும்பவில்லை. எனக்கு குறிப்பிட்ட
தகவல்கள் எதுவும் வரவில்லை. ஆனால், " Gaesar's wife must be above
suspicion "
அதுபோல ஆட்சித் தரப்பிலே இருப்பவர்கள் கொஞ்சம் சந்தேகத்திற்கு அப்
பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். சினிமா எப்படிப்பட்ட துறை
என்பது தெரியும். அதை நடத்துபவர்கள் எவ்வளவு வசதி படைத்தவர்கள்
என்பதும் தெரியும். அவர்களுக்கு ஒரு விஷயம் என்றால், அது இலாக்கா
வோடு, அதிகாரிகளோடு இருக்கிறது. அதற்குப் பிறகு நீதிமன்றத்திற்குப்
போகிறது. இடையிலே அமைச்சர் அவர்களுடைய அல்லது அரசாங்கத்தி
னுடைய அதிகாரம் வர வேண்டுமென்று நாம் இப்போது விரும்புகிறோம்.
பரவாயில்லை. ஆனால், அதற்கும் இந்த அவசரச் சட்டத்திற்கும் என்ன
காரணம்? என்ன பொருத்தம்? என்ன தேவை? ஆகவே, இந்த அவசரச்
சட்டம் கொண்டுவந்த முறை சரியில்லை என்பதை நான் சொல்லிக்கொள்
கிறேன். இன்னொன்று, ஏன் நாம் நம்முடைய வேலையைக் குவித்துக்
கொண்டு செல்ல வேண்டும்? அந்த அதிகாரம், அமைச்சர் அவர்களுக்கு
அல்லது அரசாங்கத்திற்கு வருவதன் மூலமாக, இன்மேல் நீதிமன்றத்திற்கு
அதிகமாக வழக்குகள் போகாது என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?
அப்படியென்றால் என்ன பொருள்? வழக்கு மன்றங்களுக்குப் போகின்றது
என்றால், என்ன பொருள்? அரசு அதிகாரிகளே நிறைய தவறான முடிவுகள்
எடுக்கிறார்கள் என்றுதானே பொருள்? அந்த உத்தரவை மாற்றுவதற்கு
அரசுக்கு அதிகாரம் தேவை என்று கேட்கிறார்கள் என்பதைத் தவிர வேறு
என்ன அதிலே இருக்கிறது? அல்லது அதிகாரிகள் முடிவெடுத்த பிறகு
அதை மாற்ற வேண்டிய தேவை வருகிறதா? அப்படியானால், அது நீதி
மன்றத்திற்குப் போகாமல் அதை மாற்றவேண்டிய அதிகாரங்கள் எங்களுக்கு
வேண்டும் என்று கேட்க வேண்டும். இதைத் தவிர வேறு எதுவாக இருக்க
முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதுதான் என்று நான்
குறிப்பிட்டுக் குற்றம் சாட்டவில்லை. ஆனால், இப்படியெல்லாம் இருக்க
லாமோ என்ற சந்தேகத்திற்கு இடம்தரும்படி ஒரு சட்டத்தைக் கொண்டு
வந்து, அதற்குப் பிறகு இந்த அவைக்கு இந்த வேலையைக் கொடுக்க
வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆகவே
இந்த அவசரச் சட்டமும் அதற்குப் பின்னாலே வந்திருக்கிற சட்ட முன்





(மாற்றுத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம்)

(பிற்பகல் 6-50)

வடிவும் தேவையில்லாத ஒன்று என்பதோடு, அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம்
தேவை என்பதே இன்னும் அரசாங்கம் சரியாகத் தெளிவுபடுத்தாத ஒன்று
என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவிற்காகச் சொல்
லப்பட்ட காரணங்கள்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதற்கான
உண்மையான காரணங்கள் என்று அரசுத் தரப்பில் கருதப்படுமானால், இந்தச்
சட்டம் தேவையற்றது என்று மீண்டும் சொல்லி என்னுடைய உரையை
முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
திரு. தங்கப்பாண்டியன் அவர்களும் திரு. இராமமூர்த்தி அவர்களும் இரண்டு
கோணங்களிலிருந்து தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் இந்தத் துறையில் நீண்ட காலமாகச்
சங்கடங்களை நேரடியாக அனுபவித்துக்கொண்டு வருகிறவர் என்ற காரணத்
தால், இந்தச் சட்ட முன்வடிவு குறித்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்
கொண்டு, அந்த மகிழ்ச்சி முழுமையாக இருக்க வேண்டுமானால், கலெக்டர்
களிடமிருந்து மேல்முறையீடு செய்கிற அதிகாரம் நேரடியாக அரசாங்கத்
திடமே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இந்த லைசென்
சுகளை, உரிமங்களைப் பெறுகிற கால கட்டத்தில் அரங்குகளின் உரிமையாளர்
கள் எவ்வளவு சங்கடத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் இங்கே
தெரிவித்தார்கள். அதற்கு மேல் அவர்கள் அப்பீல் செய்வதில் உள்ள கஷ்டங்
களையும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்
திரு. இராமமூர்த்தி அவர்கள் வேறு மாறுபட்ட கருத்தினைத் தெரிவிக்க
வில்லை என்றாலும், அரசாங்கம் 'ரிவிஷன்' அதிகாரத்தை எடுத்துக் கொள்
வதற்கு, இதற்கான சட்டத் திருத்தத்திற்கு எதற்காக அவசரச் சட்டம்
பிறப்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அது குறித்த சரியான
சான்றுகள் இப்போது இங்கே என்னிடம் இல்லையென்றாலும், அப்படிப்
பட்ட ஐயப்பாட்டிற்கு இடமளிக்காமல் அரசாங்கம் இருக்க வேண்டும் என்ற
தனது உணர்வையும் தெரிவித்துக்கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்
திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு நான் ஒன்றை மிகப் பணிவன்போடு தெரிவித்
துக்கொள்ள விரும்புகிறேன். இது குறித்து அவருக்கு எந்த ஐயப்பாடும்

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர்

வேண்டாம். இந்த அவசரச் சட்டத்திற்கு எந்த நோக்கமும் இடையார் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பட்டுக்கொண்டிருக்கிற கஷ்டத்தை பார்த்து, அதற்கு நிவாரணமாவது அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்று பார்த்துத்தான், அரசாங்கம் இந்த அதிகாரத்தை இன்றை எடுத்துக்கொள்கிறது.

நாமெல்லாம் ஜனநாயகத்திலும், கட்சி ஆட்சி முறையிலும் நல்ல நம்பிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஜனநாயக முறைப்படி அமைக்கப் பட்டிருக்கிற ஒரு அரசாங்கம் சில அதிகாரங்களைத் தனக்கென்று எடுத்துக் கொள்ளும்போது, அதற்கு ஒரு உள்நோக்கமோ அல்லது வேறு காரணமோ இல்லாமல் கற்பிக்காமல் இருப்பதுதான் எந்தக் கட்சி ஆட்சி நடத்தினாலும் நல்ல முன்மாதிரியாக அமையும் என்ற கருத்தையும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

எதற்காக 'ஆர்டினென்ஸ்' அவசரச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று திரு. இராமமூர்த்தி அவர்கள் வினவினார்கள். இதற்கான காரணத்தை வெளியே சொல்லக்கூடாது என்றாலும், நான் அதைச் சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே வெளியிட்டிருப்பதால், இங்கேயும் அதைத் தெரிவிப்பது நல்லதென்று கருதுகிறேன். நாமெல்லாம் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகின்ற வகையிலும், சொல்லொணாத் துயரம் அடைகிற வகையிலும் ஒரு துக்கச் சம்பவம் நடைபெற்ற பிறகு, பல்வேறு விதிகளுக்கு நாம் திருத்தங்களை அரசாங்கத்திலிருந்து கொண்டு வந்தோம். அரசாங்கம் பல திருத்தங்களின் மூலம் அந்த விதிகளுக்கு பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவ்வாறு அரசாங்கம் செய்யும்போது, அந்தத் துறையில் இருப்பவர்கள் பெரிய வழக்கறிஞர்களைக் கலந்து, இந்தத் திருத்தங்களை எதிர்த்து போர்டுக்கு அப்பீல் செய்யப் போவதும், வழக்கு மன்றங்களுக்குப் போவதுமான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அந்த நோக்கில்தான் இதை ஒரு அவசரச் சட்டமாக கொண்டு வந்து அரசாங்கம் இந்த அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. அதைப் பிரசுரிப்பதில்தான் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டதே தவிர, வேறு ஒன்றுமில்லை. சட்டமன்றத்திற்கு நேரடியாக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தாலும், சட்டமன்றம் இந்தப் பணியைத்தான் செய்யப் போகிறது. அவசரச் சட்டம் போட்ட பிறகு சட்ட முன்வடிவாக இதைக் கொண்டுவந்தாலும் சட்டமன்றம் இந்தப் பணியைத்தான் செய்யப் போகிறது. ஆக, இதில் சட்டமன்றத்திற்கு எந்த வேறுபாடும், மாறுபாடும் இல்லை. எந்த உள்நோக்கமும் இதில் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 நவம்பர் 12] [திரு. இராம. வீரப்பன்]

வினா எண் 14-க்கு அளிக்கப்பட்ட பதில் முற்றிலும் சரியானதே."

எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு தவறான கருத்தை
ஒன்றும் கூறவில்லை.

"ஒரு கருத்து தவறானது என்று அறிந்து அதை வேண்டுமென்றே
அவையின் திசையைத் திருப்பும் நோக்கத்துடன் கூறினால்தான் அது
அவையுரிமை மீறிய செயலாகும்"

இது எர்ஸ்கின் மே, பக்கம் 142-ல் உள்ளதாகும். எனவே இதில் அவையுரிமை
மீறிய பிரச்சினை எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கின்றேன்.



1979 நவம்பர் 13]

(2) 'தினத்தந்தி' நாளிதழில் கல்வி அமைச்சர் பொருளாதாரப் பாடப்
புத்தகங்கள் பற்றிக் கூறிய கருத்துக்களை வெளியிட்ட செய்தி குறித்து:

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள்
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினைக்கு
முன் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது பற்றி சுருக்கமாகச் சொல்ல
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் எழுந்து அவருடைய
உரிமைப் பிரச்சினை குறித்து கேட்டார்கள். அவைத் தலைவர் அவர்கள்
முதலில் அவரை அனுமதித்தார்கள்.)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,
தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டுள்ள மேல்நிலைப் பள்ளி கல்வி முறையைப்
பற்றி ஆராய 7 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டு
மென்று ஒரு தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், திரு. ம.
சங்கரலிங்கம் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதற்கு நம்முடைய கல்வி
அமைச்சர் அவர்கள் வழக்கமான பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆனால் கல்வி
அமைச்சர் அவர்கள் தந்த பதிலை முழுமையாக பத்திரிகைகள் வெளியிட்டி
ருந்தால், தவறுகள் ஏற்பட்டிருக்காது. அதிலே குறிப்பாக சென்னைப்
பல்கலைக் கழகத்திலே. . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அங்கத்தினர் அவர்கள், சொற்பொழி
வாற்றுகிறார்களா அல்லது அந்த உரிமைப் பிரச்சினையைப் படிக்கிறார்களா?
உறுப்பினர் அவர்கள் முன்னறிவிப்பு கொடுத்ததைப் படித்துவிடலாம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அப்போது கல்வி அமைச்சர் அவர்கள்
பதிலளித்தார்கள்—"பொருளாதாரப் பாடத்திற்கு இரண்டு புத்தகங்கள்
கொடுக்கப்பட்டன. அந்தப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பு மிகவும் மோச
மாக இருந்தது. ஆகவே அந்தப் புத்தகம் பயன்படாது என்று கருதி வாபஸ்
வாங்கப்பட்டுவிட்டது. அந்தப் புத்தகத்தை ஒரு நிபுணர் குழுதான்
அளித்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் நாகநாதன்,
மாநிலக் கல்லூரிப் பேராசிரியர் திரு. ராதாகிருஷ்ணன், மாநிலக் கல்லூரிப்
பேராசிரியர் நளினி ரவீந்தரன், விழுப்புரம் பேராசிரியர் திரு. வரதப்பன்
ஆகியோர் அந்தப் புத்தகத்தைத் தயாரித்தனர்" என்று பதில் கூறியதாக,
8—11—1979 தேதியிட்ட தினத்தந்தியிலே வெளியிடப்பட்டிருக்கிறது.
ஆனால் கல்வி அமைச்சர் அவர்கள் அப்படிப் பதில் அளிக்கவில்லை, எனவே

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 நவம்பர்

பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்ற தலை சிறந்த பேராசிரியர்களை
களங்கப்படுத்தக்கூடிய வகையில் தினத்தந்தியில் இந்தச் செய்தியை வெ
யிடப்பட்டிருக்கிறது. எனவே இந்தச் செய்தியை திரித்துத் தெரிவித்தது
காரணமாக, அந்தப் பத்திரிகையின்மீது ஒரு உரிமைப் பிரச்சினையை
கொண்டுவர அனுமதி வேண்டுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்
ஏதாவது சொல்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒன்றுமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஆற்காடு
நா. வீராசாமி அவர்கள் கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை குறித்து,
சம்பந்தப்பட்டுள்ள பத்திரிகைக்கு எழுதி, அதற்குப் பதில் கிடைத்த பிறகு
இதுபற்றி என் கருத்தைத் தெரிவிக்கிறேன்.

(3) கல்வி அமைச்சரவர்கள் அவையில் அளித்த அறிக்கை குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த அவையில்
11—4—1979-லே கல்விக் கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தின் இறுதி
யிலே ஆசிரியர்களுக்குச் சலுகைகள் அறிவித்தபோது, இளநிலை ஆசிரியர்கள்,
இடைநிலை ஆசிரியர்களாக ஆக்கப்படக்கூடிய ஒரு கொள்கையை அரசு
ஏற்று, இளநிலைப் பயிற்சி ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்ட காரணத்
தினால், அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக ஆக்குவதற்கு எஸ்.சி.ஈ.
ஆர்.டி. மூலம் ஒரு திட்டம் வெளியிடப்பட்டு, அவர்கள் அப்படி ஆக்கப்
படுவார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த
அறிவிப்புக்குப் பின்னால் நான் ஒரு கேள்வியைக் கேட்டேன். அதற்கு
இளநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று, பரீட்சை எழுதியிருப்பவர்களைப்பற்றிக்
'கேட்டார்கள்' என்று பதில் சொல்லி, 'தேவையான பயிற்சிக்கு வேலை
லைமைகள் இல்லாத காரணத்தினாலே பலர் தேர்வு எழுதாமல் இருக்கி
ர்கள். அதற்கு வழிவகை செய்கின்ற வகையில் எஸ்.சி.ஈ.ஆர்.டி. மூலம்
ிற்சி பெற்றுக்கொண்டு நேரடியாகத் தேர்வு எழுதலாம் என்றும், அவர்
நக்கு அந்தத் திட்டம் உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்
றன்' என்று இந்த அவையிலே பதில் அளித்தார்கள். அதே சமயத்திலே
) 82-ன் கீழ், 30—10—1979-லே ஒரு பதிலை அளித்தார்கள். ஒரு
விப்பிலே வரும்போது, 'அரசு எல்லா இளநிலை ஆசிரியர்களும்
-நிலை ஆசிரியர்களாக மாறுவதற்குரிய ஒரு திட்டத்தை, வாய்ப்பளிக்கும்
ரிய திட்டத்தை வருகின்ற நிதி ஆண்டிலிருந்து அமுல்படுத்த எண்ணி



1979 நவம்பர் 13] (திரு. செ. முத்துசாமி)

யுள்ளது. தமிழகக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம், எஸ்.சி.ஈ.ஆர்.டி.; இந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் சிறந்த பெயரைப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் இளநிலை ஆசிரியர்களுக்கு, பணி மூப்பின் அடிப் படையிலே பயிற்சி கொடுத்து இடைநிலை ஆசிரியர்களாக ஆக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே அறிவித்த அறிவிப்பு. இதே அறிவிப்பு இப்போது புதிதாக அறிவிக்கப்படுவதைப் போல இந்த அவைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் உரிமைப் பிரச்சினையைப் படிக்க வேண்டும். அதுதான் முறை. உரிமைப் பிரச்சினை என்றால், உறுப்பினர் அவர்கள் முன்னறிவிப்பு கொடுத்ததை அப்படியே படிக்க வேண்டும். அதை அப்படியே படிக்க வேண்டியதுதானே. என்னிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு உறுப்பினர் அவர்கள் ஒன்றைச் சொல்லக் கூடாது. அதைப் படித்துவிடவேண்டும். அதைப் படித்துவிட்டு நிறுத்தி விட வேண்டும். அதற்கு மேலே பேச அனுமதிக்க முடியாது.

திரு. செ. முத்துசாமி : ஆதலால், இந்த அவைக்கு அமைச்சர் அவர்களால் ஏற்கெனவே தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் ஏற்கெனவே கொடுத்தது மறைக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன், இப்போது புதிதாக அறிவிக்கப்பட்டிருப்பதுபோல சொல்லப்படுவது இந்த அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்ததாக ஆகும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இந்த அவையின் உரிமையை மீறியதாக நான் கல்வி அமைச்சர் அவர்கள் மீது இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, ஆசிரியர்களின் கோரிக்கைகளில் ஒன்றான இளநிலை ஆசிரியர்களை இடை நிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வருகிற ஒரு பிரச்சினையாகும். இது குறித்து பல சங்கங்களும் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி வந்திருக்கின்றன. இளநிலை ஆசிரியர்களுக்கு தனிச் சங்கம் கூட வைத்து, அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் இது தொடர்பாக விவாதித்து, கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம், நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறோம். தற்போதைய மேலவைக் கூட்டம் ஆரம்பிக்கிறபோதுகூட, திரு. ஜே. எஸ். ராஜ் அவர்கள் தலைமையிலுள்ள தமிழ் நாடு தொடக்கப்

பள்ளி ஆசிரியர் கூட்டணி போராடுவோமென்று போராட்ட அறிவிப்பைத்
தந்து, அவர்கள் மறியல் செய்து, அல்லது கைதாகி சிறைக்குச் சென்ற
செய்திகள் பத்திரிகையில் வந்திருக்கின்றன. அப்போது மாண்புமிகு உறுப்
பினர்கள் பலரும் பேரவையிலும், மேலவையிலும் அதுபற்றி அவை
நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற முறையில் ஒத்தி
வைப்புத் தீர்மானங்கள் கொடுத்ததை மாண்புமிகு மேலவைத் தலைவரவர்
களும், மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட
ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி
அவர்கள் தரவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் . . .

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அது குறித்த ஒத்தி வைப்புத்
தீர்மானம் நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தந்திருந்தால் சரி, ஒத்தி வைப்புத்
தீர்மானம் தருவதன் நோக்கம், அரசு அதில் தலையிட வேண்டும், தலையிட்டு
அந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டுமென்பதுதான். அப்படி உறுப்
பினர்கள் பலரும் வற்புறுத்திய ஒரு சூழ்நிலை உருவாகிய நேரத்தில், அரசு
அந்தப் பிரச்சினையை முடித்து, போராட்டத்தை நிறுத்த நடவடிக்கை
எடுக்க வேண்டியதாயிற்று. நான் இங்கே ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது
என்பது, அரசே விரும்பி ஏதோ ஓர் அறிக்கையைத் தர வேண்டுமென்ற
நிலையில் நான் அறிக்கையைத் தரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்
களுடைய விருப்பங்களுக்கேற்ப நாம் ஒரு காரியத்தைச் செய்து, அதன்
மூலம் மாண்புமிகு உறுப்பினர்களுடைய விருப்பத்தை ஓரளவிற்கு நிறை
வேற்ற முடிந்தது என்பதைத் தெரிவிக்கின்ற வகையிலேயும், போராடிக்
கொண்டிருக்கும் ஆசிரியர்கள் அதற்குப் பிறகாவது அந்தப் போராட்டத்தை
நிறுத்தி, நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு ஆசையின்
காரணமாகத்தான் 82-வது விதியின்கீழ் மேலவையில் ஓர் அறிவிப்பு செய்
தோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முத்துசாமி அவர்களின் குற்றச்சாட்டில்
அல்லது உரிமைப் பிரச்சினையில் இருக்கிற மிக முக்கியமான கருத்து, இதற்கு
முன்னாலே அளிக்கப்பட்ட அறிக்கையில் இளநிலை ஆசிரியர்கள் சார்பாக
அரசு சொல்லியிருந்த கருத்தும், இப்போது சொல்லியிருக்கிற கருத்தும்
ஒன்றுதான், ஆகவே புதிதாக ஒன்றைச் சொல்வதுபோல் சொல்லி, மாண்புமிகு
உறுப்பினர்களை ஏமாற்றுவதுபோல் அல்லது அவர்களுடைய கவனத்தைத்
திசை திருப்புவதுபோல் அமைந்திருக்கிறது, என்பதுதான். அப்படிப்பட்ட
ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டதற்காக உரிமைப் பிரச்சினை கொண்டு
வந்திருக்கிறாரென்று கருதுகிறேன். அப்படிக் கொண்டு வந்திருந்தால், நான்



இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவிக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் நாங்கள் இப்போதும் நம்புவது,
இப்போதும் திடமாக உணர்வது, இதற்கு முன்னாலே அறிக்கையிலே
நாங்கள் இளநிலை ஆசிரியர்கள்பற்றிச் சொன்ன கருத்துக்கள், எடுப்பதாகச்
சொல்லப்பட்ட நடவடிக்கைகளைவிட இப்போது எடுக்கப்போவதாகச்
சொல்லும் நடவடிக்கை புதிது, அதைவிடச் சிறந்தது என்பதுதான்.
இன்றைக்குப் பாதிக்கப்பட்டுள்ள 55,000-க்கும் மேற்பட்ட இளநிலை ஆசிரியர்
களுக்கு இதற்கு முன்னாலே அறிவிக்கப்பட்ட அறிக்கையின்படி கிடைக்க
இருந்த பலனைவிட, இப்போது அறிவிக்கப்பட்டுள்ள அறிக்கையின்படி
கிடைக்கும் பலனை மேலும் பரவலாகச் செய்திருக்கிறோம் என்பதை அவர்கள்
அறிய வேண்டுமென்ற எண்ணத்தில், மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவைகளைப்பற்றிப்
பத்திரிகையிலே போடும்போதுகூட, இந்த வித்தியாசத்தைக் கொஞ்சம்
விளக்கமாகப் போட்டால், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் நிலைமைகள் என்ன
என்பதை உணர்ந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும். செகண்டரி கிரேட்
பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, அந்தத் தேர்வை இவர்கள்
தனியாக எழுதுவார்கள், அதற்காகப் பயிற்சி தரும் வாய்ப்பைத் தருவோம்
என்று சொல்லி, நடைபெற்றுக்கொண்டிருக்கும் செகண்டரி கிரேட்
ஆசிரியர்கள் பரீட்சையில் இவர்களை அனுமதிக்கின்ற நடவடிக்கைபற்றித்
தான் முன்னாலே சொல்லப்பட்ட அறிக்கையிலே கூறியிருக்கிற கருத்தாகும்.
ஆனால், இப்போது சொல்லியிருப்பது முற்றிலும் வேறுபட்டது. இவர்
களுக்கென தனியாகவே ஒரு பயிற்சி தருவோம், அது ஐந்து மாத காலப்
பயிற்சியாக இருக்கும், அதற்குப் பிறகு எஸ்.சி.இ.ஆர்.டி. அவர்களைச்
சோதனை செய்தோ அல்லது பரீட்சை வைத்தோ அவர்களை செகண்டரி
கிரேட் ஆசிரியர்களுக்குச் சமமான அந்தஸ்து படைத்தவர்களென்று
அறிவிக்கும் என்று சொல்லியிருக்கிறோம். செகண்டரி கிரேட் பரீட்சை
என்பது வேறு, அதற்குத் தயாரிப்பது என்பது வேறு, அதற்கு ஆசிரியர்களை
அனுமதிப்பது என்பது வேறு, அதற்குப் படிக்க எடுத்துக்கொள்ளும் சிரமம்
வேறு, முயற்சி வேறு, அதற்கான பாடத் திட்டங்கள் வேறு, அதற்கான
பாடப் புத்தகங்கள் வேறு. இப்போது அறிவிக்கப்பட்டது முற்றிலும் வேறு,
புதியது, மிகவும் எளிமையானது. ஆசிரியர்கள் வாரத்திற்கு ஒரு முறை
அசைன்மென்ட் அனுப்பினால் போதும், 5 மாதங்களில் 1 மாத காலம்
நேரிடைப் பயிற்சி தந்தால்போதுமென்று சொல்லுவது, முந்தைய திட்டத்தை
விட சிறந்ததாக இருக்குமென்று கருதித்தான் இதை அறிவித்திருக்கிறோம்.
'புதிது போல' 'புதிது போல' என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள்.

கல்வி அமைச்சரவர்கள் அவையில் அளித்த
அறிக்கை குறித்து

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 13

சொல்லி இந்த மாமன்றத்தை நான் ஏமாற்றுவதாக உரிமைப் பிரச்சினையில்
சொல்லியிருக்கிறார்கள். புதிது என்பது மட்டுமல்ல, அதை விடச் சிறந்தது,
அதைவிட எளிமையானது. ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு இது நல்ல
பயனைத் தரக்கூடியது. ஆகவே இந்த வித்தியாசம் மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு மட்டுமல்ல, அந்த ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கும் தெரிய
வேண்டுமென்ற நல்ல காரியத்தை பத்திரிகையாளர்கள் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இதில் எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் இல்லை
என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களின்
விளக்கத்திற்குப் பிறகு, இதில் எந்தவிதமான உரிமை மீறலும் இல்லையென்று
தீர்ப்பு அளிக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(1) தமிழகத்தில் சிமின்ட் விநியோகத்திலுள்ள குறைபாடுகளைப் போக்குவது
குறித்தும், காலதாமதங்களைப் போக்குவது குறித்தும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. ப. மாணிக்கம் சார்பில்) : மாண்புமிகு
தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
திகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன் :

"தமிழகத்தில் சிமின்ட் விநியோகத்திலுள்ள குறைபாடுகளைப்
போக்குவது குறித்தும், சிமின்ட் வாங்குவதில் ஏற்படும் வீண் கால தாமதங்
களைப் போக்குவது குறித்தும்".

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் (மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
சார்பில்) : மேலவைத் தலைவரவர்களே, அவையின்முன் விவா அறிக்கை@
வைக்கப்பட்டுள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : சிமெண்ட் கன்ட்ரோல் முறையில் மீண்டும்
புதிய சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. இப்போது சிமெண்ட் விநியோகத்தை
அரசாங்கமே செய்கிறது. அதாவது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்
மூலமோ, கூட்டுறவுத் துறை மூலமோ விநியோகம் செய்ய உரிமை பெற்றிருக்

@ 922—925 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது



தமிழகத்தில் சிமெண்ட் விநியோகத்திலுள்ள குறைபாடுகளைப்
போக்குவது குறித்தும், காலதாமதங்களைப் போக்குவது
குறித்தும்

1979 நவம்பர் 13] (திரு. வே. தங்கப்பாண்டியன்)

கிறது. ஏற்கெனவே சிமெண்ட் விநியோகம் செய்கிறவர்கள், வெவ்வேறு
உற்பத்தியாளர்களிடமிருந்து சிமின்ட் பெற அனுமதிப்பதால், சிமெண்ட்டை
எடுத்து வாடிக்கையாளர்களிடம் கொடுக்க காலதாமதம் ஏற்படுகிறது.
அரசுத் துறையிலே கொடுக்கும்போதுகூட குறைபாடு இருக்கிறது. இப்போது
60 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற முறையில் விநியோகிக்கப்படுவதாக
அறிகிறேன். சிமெண்ட் விநியோகத்தை விரைவாகச் செய்ய அரசு முயற்சி
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : விநியோகம் எளிதாக இருக்க
வேண்டுமென்பது மட்டுமல்ல, விநியோகம் நியாயமாக, முறைப்படி, தேவை
யானவர்களுக்கு, கலப்படம் இல்லாமல், சுத்தமாகக் கொடுக்க வேண்டு
மென்பதில் கவனம் செலுத்தப்படுகிறதென்பதை மாண்புமிகு உறுப்பினரவர்
களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 1—1—1979-ல் இந்தத் திட்டம்
அமுல்படுத்தப்படுவதற்கு முன்னால், தனிப்பட்ட வியாபாரிகள் சிமெண்ட்
விற்பனை விநியோகத்தை மேற்கொண்டார்கள். சிமெண்ட் விற்பனை
விநியோகம் தனியார்கள் கையில் இருந்த நேரத்தில், ஏராளமான புகார்கள்
வந்தன. சிமெண்ட்டில் கலப்படம் செய்கிறார்களென்றும், கறுப்புச் சந்தையில்
அதிகமான விலைக்கு சிமெண்ட்டை விற்கிறார்களென்றும் புகார்கள் வந்ததால்,
அவற்றையெல்லாம் படிப்படியாக ஒழுங்கு பண்ணுகிற முறையில், இன்றைய
தினம் 40 சதவிகிதம் விநியோகம் அரசு நுகர்பொருள் வாணிபக் கழகங்களின்
மூலமும் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களின் மூலமும் மேற்
கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே இதில் குறைபாடுகள் குறைந்திருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : கலப்படம் வேண்டுமானால் இன்றைக்குக்
குறைந்திருக்கலாம். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கையூட்டு பெறு
கிறார்களென்ற புகார் வந்திருக்கிறது. எனவே கீழ் மட்டத்திலுள்ள அதிகாரி
களுக்கு அதிகாரங்களைக் கொடுப்பதால்தான் இப்படிப்பட்ட தவறுகள்
நடக்கின்றன. அவற்றைத் தடுக்க அரசு என்ன வழி முறைகளை
வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தவறு நடப்பது என்பது சில
நேரத்தில் தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. அதிகாரிகள் எந்த அளவு
நேர்மையாக, நாணயமாக நடந்து கொள்கிறார்களோ அந்த அளவுக்கு
தவறுகளைத் தவிர்க்க முடியும். தவறு நடக்கிறது என்று உறுப்பினர்

அவர்கள் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுவார்களானால், அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம். பொதுவாக தவறுகள் இன்றையதினம் குறைந்திருக்கின்றன என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**(2) கும்பகோணம், நன்னிலம், பாபநாசம் வட்டங்களில் தொழுநோயாளிகள் மருத்துவ உதவியின்றித் தவிப்பது குறித்தும், அந்நோய் அப்பகுதிகளில் பரவும் அபாயம் நேர்ந்துள்ளது குறித்தும்.**

**திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"கும்பகோணம், நன்னிலம், பாபநாசம் வட்டங்களில் தொழு நோயாளிகள் மருத்துவ உதவியின்றித் தவிப்பது குறித்தும், அந்நோய் அப்பகுதிகளில் பரவும் அபாயம் நேர்ந்துள்ளது குறித்தும்".

**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த விவர அறிக்கையில், சிகிச்சை தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று கருதி தொழு நோயாளிகளுக்கு 2 அல்லது 3 மாதங்களுக்குப் பயன்படக்கூடிய மருந்தை மொத்தமாக, ஒரே தடவையாக மருத்துவர்கள் அளிக்கிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறையாவது, அதாவது 15 நாட்களுக்கு ஒரு முறையாவது தொழு நோயாளிகளுக்கு மருத்துவர்களுடைய நேரடிப் பார்வை இருக்க வேண்டும். எந்த அளவுக்கு சிகிச்சையின் தரம் உயர்ந்திருக்கிறது அல்லது நோயின் குணம் மாறியிருக்கிறது என்கின்ற விவரங்கள் அப்போது தான் தெரிய வரும். 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை, மொத்தமாக மருந்துகளை தொழு நோயாளிகளுக்கு அளிப்பதன் மூலம் மருந்துகளை அவர்களால் சரியாகப் பயன்படுத்த முடியாமல் போகக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. 15 நாட்களுக்கு ஒரு முறையாவது மருத்துவர்கள் தொழு நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்க்கும்படியான ஒரு வசதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்த முயற்சிப்பார்களா ?

@ 925–926 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. ஆர். சவுந்தரராசன் :** மருத்துவமனைக்கு அடிக்கடி வரக்கூடிய நிலையில் இருக்கிற தொழு நோயாளிகளைப் பொறுத்தவரை, 15 நாட்களுக்கு ஒரு முறை மருந்துகள் வழங்கப்படுகின்றன. அந்தந்த இடங்களில் இருக்கிற மருத்துவமனையில் இருக்கிற மருத்துவர்கள் தொழு நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்த்து, அதற்கேற்ப தேவைப்படும் மருந்துகளை வழங்குகிறார்கள். மருத்துவமனைக்கு அடிக்கடி வர முடியாத நிலையிலிருப்பவர்களுக்கு 2 மாதங்களுக்கு தேவையான மருந்துகள் வழங்கப்படுகின்றன.

### 4 அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1979)**

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I beg to move—

"That the Tamil Nadu Prize Schemes (Prohibition) Bill, @ 1979 (L.A. Bill No. 65 of 1979), as passed by the Assembly, be taken into consideration."

It was brought to the notice of the Government that, of late, in order to boost their business, some traders conducted prize schemes whereby prizes were offered or proposed to be given to persons who purchased goods or other articles from them. Such prize schemes adversely affected the prospects of genuine traders and led to many malpractices in the trade. The Government had, therefore, decided to prohibit this practice by enacting a special legislation for the above purpose. To achieve the object in view and as this State Legislature was not in session and as it was considered necessary to take immediate action for the purpose mentioned above, the Tamil Nadu Prize Schemes (Prohibition) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 18 of 1979) was promulgated by the Governor on 12th October 1979 and published in the Extraordinary issue of Part II of the Tamil Nadu Government Gazette, dated 30th October 1979. The Bill seeks to replace the said Ordinance. While bringing this Bill for replacing the Ordinance, the Government have also taken powers to exempt any Prize Scheme or class of Prize Schemes in the public interest. I commend the motion for the acceptance of the House.

@ 926-931 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்— [1979 நவம்பர் 13

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண் 65/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட
வேண்டும்".

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்ட
முன்வடிவை நான் ஆதரிக்கிறேன். இது தமிழ் நாட்டிலே வியாபாரத்தில்
தோன்றியிருக்கக்கூடிய ஒரு விரும்பத்தகாத நிலையைப் போக்க உதவும் என்
பதால், இதை நான் ஆதரிக்கிறேன். முன்னால் சாமான் வாங்குகிறவர்களுக்
கெல்லாம் ஏதாவது ஒரு எவர்சில்வர் டம்ளர், பிளாஸ்டிக் பை போன்ற பரிசுப்
பொருள்களைக் கொடுத்து வந்தார்கள். எல்லோருக்கும் வியாபாரிகள்
ஏதாவது ஒரு பரிசுப் பொருளைக் கொடுக்கும்போது, வாங்கும் பொருள்
களுடைய அடக்க விலையில் பரிசுப் பொருளின் விலையையும் சேர்த்து
அவர்கள் பொருள்களை விற்று வந்தார்கள். வியாபாரத்தில் ஊக்குவிப்பு என்ற
பெயரைச் சொல்லி அந்த மாதிரிக் காரியங்கள் நடைபெற்று வந்தன. ஆனால்
இப்போது இந்தப் பரிசுத் திட்டம் என்பது மக்களிடம் பேராசையைத்
தூண்டக் கூடிய முறையில் அமைந்துள்ளது. இதனால் சாதாரண வியாபா
ரிகள், சிறிய வியாபாரிகள் நியாயமான முறையில் வியாபாரம் செய்ய முடியாத
நிலையையும், அவர்களுடைய வியாபாரம் இதனால் பாதிக்கக் கூடிய நிலை
யையும் நாம் எங்கும் பார்க்கிறோம். குறிப்பாக சமீபத்திலே கோயம்புத்தூ
ரில் இரண்டு துணிக் கடைகள் செய்த அறிவிப்பு மக்களிடையே பரிசுத்
தொகையை அடைய வேண்டுமென்ற பேராசையைத் தூண்டும் விதத்தில்
அமைந்திருந்தது. முதல் பரிசு $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள வீடு.
இரண்டாவது பரிசு நூறு பவுன் (அதாவது கிட்டத்தட்ட 1 இலட்சம் ரூபாய்
மதிப்பு). மூன்றாவது பரிசு 50 பவுன் (அதாவது கிட்டத்தட்ட 50 ஆயிரம்
ரூபாய் மதிப்பு). வியாபாரத்தில் பரிசு என்கிற பெயரால் இப்படிப்பட்ட விளம்
பரங்கள் எல்லாம் இன்றையதினம் வந்துகொண்டிருக்கின்றன. நியாயமாக
வியாபாரம் நடத்துகின்ற நடுத்தர வியாபாரிகள், சிறு வியாபாரிகள் மற்றும்
பலர் இவர்களோடு போட்டி போட முடியாத நிலையில், வியாபாரத்தைக் கை
விட்டு, அவர்கள் நலிந்து போகக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி
இவர்கள் செய்வதன் மூலம் பெரும்புள்ளிகளுக்குச் சாதகமான வியாபாரம் என்
கின்ற நிலைதான் வரும். அப்படி வரும்போது அவர்கள் "டேமேஜ்ட்
குட்ஸ்"ஐக் கூட தள்ளி விடக்கூடிய நிலை, விற்கக்கூடிய நிலை உருவாகியிருக்
கிறது. துணிக்காக மக்கள் துணியை வாங்குவதில்லை, பரிசுக்காகத்தான்
வாங்குகிறார்கள் என்ற நிலை ஏற்படுகிறது. பரிசுக்காக அவர்கள் துணியை



1979 நவம்பர் 13] (திரு. ஆ. நல்லசிவன்)

வாங்குவதால், சாமான் சரியாக இருக்கிறதா என்றுகூடப் பார்ப்பதில்லை. பொருள் நல்ல பொருளா என்று பார்ப்பதில்லை. வீடு இடைக்கப் போகிறது, பவுன் கிடைக்கப் போகிறது என்கிற எண்ணத்தோடே துணியை வாங்குவதால், அது டேமேஜ்ட் கூட்ஸா நல்ல கூட்ஸா என்று கூடப் பார்க்காமல், துணியை வாங்கிவிடுகிறார்கள். அந்தப் பெரும் புள்ளிகளும் இப்படி வருகிறவர்களின் தலையில் டேமேஜ்ட் கூட்ஸ்-ஐக் கட்டிவிடுகிறார்கள், விற்றுவிடுகிறார்கள். இந்த மாதிரி நிலைமை துணிக் கடைகளைப் பொறுத்தவரை மட்டுமல்ல, ஜவுளித் துறையில் மட்டுமல்ல, வேறு வேறு துறைகளிலும் இருக்கின்றன. இப்படிப் பட்ட வேளையில் இந்த பிரைஸ் ஸ்கீமைத் தடை செய்வதற்காக அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

இதை அமுல்படுத்தும்போது எப்படி அமுல்படுத்தப் போகிறார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும். எத்தனையோ சட்டங்கள் இன்றையதினம் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. நல்ல சீர்திருத்தங்கள் எல்லாம் சட்டத்தில் தான் இருக்கின்றன. ஆனால் சரியான முறையில் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதை எப்படி துரிதமாகவும் திறமையாகவும் அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார்கள், அதற்கான உத்தரவாதம் "கேரன்டி" என்ன? என்பன போன்ற விவரங்களை விளக்கமாகக் கூறவேண்டுமென்று கோரி இந்த மசோதாவை ஆதரித்து அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவரவர்களே, பரிசுத் திட்டங்களை நடத்துவதற்கு தடை விதித்து வருகின்ற இந்தச் சட்ட முன்வடிவை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். ஆனால் இந்தச் சட்டமுன் வடிவிலுள்ள சில அம்சங்களைப்பற்றிச் சில சந்தேகங்கள் எனக்கு இருக்கின்றன. இன்றையதினம் வியாபார நிறுவனங்கள் எல்லாம் பரிசுத் திட்டங்களை நடத்துகின்றன. கல்வி நிறுவனங்கள் பரிசுத் திட்டங்களை நடத்துகின்றன. அதுபோல் பத்திரிகைகளிலும் பரிசுத் திட்டங்கள் நடத்தப் படுகின்றன. இன்னும் பல்வேறு நிலையங்கள் பரிசுத் திட்டங்களை நடத்துகின்றன.

பெரும்பாலும் இந்தச் சட்டமுன்வடிவில் அடங்கியுள்ள அம்சங்களைப் பார்க்கும்போது, வியாபார நிறுவனங்களில் நடைபெறும் பரிசுத் திட்டங்களைப்பற்றித் தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. பத்திரிகைகளில் இலக்கியத் துறையில் மக்களிடையே இலக்கிய ரசனையைத் தூண்டுவதற்காக பல பரிசுத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதையும் வியாபார ரீதியாக இந்தச்

(திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்) [1979 நவம்பர் 13

சட்டம் அனுகுமா? அண்மையில் ஒரு பத்திரிகை உயர் நீதிமன்றத்திற்குச்
சென்று தடை வாங்கியிருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லும்போது, தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுவாக கிராமங்களிலும், நகரங்களிலும் நாடகங்கள் நடக்கும்போது,
அதிகமாக டிக்கெட்டுகள் விற்பதற்காக, வசூல் அதிகமாவதற்காக பரிசுத்
திட்டங்களை விளம்பரப்படுத்துகிறார்கள். அதிகப் புகழ் பெறாத டிராமா
கம்பெனிகள் கம்பெனியின் வியாபாரம் அதிகரிப்பதற்காக, டிக்கெட்டுகள்
அதிகமாக விற்க வேண்டுமென்பதற்காக இப்படி விளம்பரம் செய்கிறார்கள்.
இதை இந்தச் சட்டம் எந்தக் கண்ணோட்டத்தில் அணுகும்?

கல்வி நிலையங்கள் பரிசுத் திட்டங்களை நடத்துகின்றன.
கல்வி நிலைய வளர்ச்சிக்காக பரிசுத் திட்டங்களை அவர்கள்
அறிவிக்கிறார்கள்.
அதிலும் இந்தச் சட்டம் எந்தக் கண்ணோட்டத்தில் செயல்படும் என்பதை
யும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும். ஷரத்துக்களில்
அதுபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை, தெளிவாக்கப்படவில்லை.

பரிசுத் திட்டங்கள் அடங்கிய செய்தித் தாள்கள், மற்றும் வெளியீடுகளைப்
பறிமுதல் செய்யும் அதிகாரம் செக்ஷன் 9-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.
இதில் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. உதாரணத்திற்கு
"Cigarette smoking is injurious to health"
விளம்பரத்தைப் போடுகிற அதே பத்திரிகையில என்கிற
அந்தப் பொருளைப்பற்றிப் போடுகிற விளம்பரத்தை இன்னொரு பக்கத்தில்
அதாவது சிகரெட் பிடிப்பது உடம்புக்குக் கெடுதல் என்கிற அனுமதிக்கலாமா?
போடுகிற பத்திரிகை, அதே பத்திரிகையின் இன்னொரு விளம்பரத்தைப்
கொடுக்கின்ற அந்தப் பொருளைப்பற்றி பரிசுத் பக்கத்தில் கம்பெனி
படித்தினால், அந்தக் கம்பெனி மீது நடவடிக்கை திட்டங்களை விளம்பரப்
இருக்க வேண்டுமே தவிர, செய்தித் தாள் மீது எடுப்பதாக சட்டங்கள்
சட்டங்கள் இருக்கக் கூடாது. ஆனால் பத்திரிகைகள் நடவடிக்கை எடுப்பதாக
எடுக்கப்படுமோ என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. மீது நடவடிக்கை
எப்படி வியாபார

(பிற்பகல் 10-30)

நோக்கோடு குறுக்கு வழிகளிலே பணம் சம்பாதிக்க இருக்கின்ற
முறைகளைத் தடுக்க அரசே முனைகிறதோ அதைப்போல, பல செயல்
நிறுவனங்கள், கல்வி என்ற பெயரிலே, தமிழகத்திலே போலி
நாட்களில், 1 மாதத்தில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்படும். இருக்கின்றன

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?



1979 நவம்பர் 13] (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்)

கழகத் தேர்வுகளுக்கு உரிய கோச்சிங் கொடுக்கிறோம் என்றும் சொல்லி,
பொது மக்களை ஏமாற்றி, அவர்களிடமிருந்து பணத்தை வசூலித்து அவர்
களை ஏமாற்றுகிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலே ரிஷிவந்தியம்
என்ற இடத்திலே பல்லாண்டு காலமாக இப்படி வைத்து நடத்திக்கொண்டிருக்
கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் கூட எம்.ஏ. எழுதலாம்,
என்று சொல்கிறார்கள். இதெல்லாம் எப்படி முடியும்? ஆகவே, இப்படிப்
பட்ட நிறுவனங்களைத் தடை செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பரிசுத்
திட்டங்களைத் தடைசெய்ய கொண்டு வரப்பட்டிருக்கும் இந்தச் சட்டமுன்
வடிவு தேவையற்ற ஒன்று. இதன் நோக்கங்கள்கூட சரியான நோக்கங்கள்
அல்ல என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.. பரிசுத் திட்டம்
என்கின்றபோது, நாம் கொடுக்கின்ற பணத்திற்குச் சரியான மதிப்புள்ள
பொருட்கள் கிடைக்காத நிலையில், 'கேம்பிளிங்' என்ற அளவிலே, சூதாட்டம்
அல்லது பந்தயம் என்ற அளவிலே பணம் செலவிடப்படுகிறது என்ற நிலை
வந்து அதற்கு ஆட்சேபணை தெரிவித்தால், எதிர்ப்பு தெரிவித்தால், அதிலே
நியாயம் இருக்கிறது. ஆனால், இந்தப் பரிசுத் திட்டங்களைப் பொறுத்த
வரையில், கடைகளிலே துணி வியாபாரம் இன்றைக்கு நடக்கிறது என்றால்,
அவர்கள் அதற்கு ஒரு பரிசுத் திட்டம் வைத்திருக்கிறார்கள். துணியோ, மற்ற
பொருட்களோ வாங்குபவர்கள், அவர்கள் வாங்குகின்ற பொருட்களுக்கான
ரசீதுகள் எல்லாவற்றையும் வைத்து, அந்த அடிப்படையிலே ஏதோ ஒரு பரி
தருவதாக அவர்கள் இருக்கிறார்கள் என்றால், அதை நாம் ஏன் தடுக்க
வேண்டும்? இப்படி அவர்கள் பரிசு அளிக்கும் பொருள் நல்லவையல்ல என்று
அரசு முடிவெடுத்திருப்பதாக அறிகிறேன். ஆனால் நான் ஒன்றை மட்டும்
சொல்லிக்கொள்கிறேன், ஒரு கடையிலே சென்று 10 ரூபாய் கொடுத்து துணி
வாங்கினால், அந்த 10 ரூபாய் பெறுமானமுள்ள துணி கிடைக்கிறதா என்று
பார்க்க வேண்டும். அதுதான் நியாயம். அந்தத் துணிக் கடைக்காரர் என்னை
வயாற்றினால் நல்லது. நான் 10 ரூபாய் கொடுத்தால், நான் கொடுக்கின்ற
இந்த 10 ரூபாய்க்குச் சரியான அளவுக்குத் துணி அவர் கொடுத்தால்,
மேலும் அதற்கு மேலே ஒரு பரிசோ, போனசோ அல்லது அதுபோன்று
வேறு எதையாவது அவர் கொடுப்பதை நடுவிலே நின்று தடுப்பதற்கு இந்த
அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது? நான் துணி வாங்குகின்றபோது,

(திரு. க. இராமமூர்த்தி) [1979 நவம்பர் 13

இந்தப் பரிசுத் திட்டத்தின்கீழ் ஏமாற்றுகிறார்கள், நல்ல துணி கிடைக்க
வில்லை என்று அரசே சொல்வது அரசின் உரிமையை அளவுக்கு அதிகமாகப்
பயன்படுத்துவது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். சரியான மதிப்பீடு
கிடைக்கிறதா என்று பார்க்கவேண்டியது வாங்குபவருடைய பொறுப்பு.
பொருட்களை வாங்குபவர்கள் எல்லாம், ஊரிலே இருப்பவர்கள் எல்லாம்
ஏதோ இளிச்சவாயர்கள், அவர்களுக்கு அரசு மட்டுமே பாதுகாப்பு அளிப்பது
என்ற அளவிலே வருவது முறையல்ல. பரிசுத் திட்டம் என்ற முறையிலே
இதைப் பார்ப்பது தவறு. யாருக்கோ ஏதோ கோபம், வேண்டாதவர்கள்,
மற்றவர்களுக்கெல்லாம் வியாபாரம் சரியாக நடக்கிறது, இவர்களுக்கு வேண்டிய
வர்களுக்கு அடிபட்டுப்போகிறது என்பதையெல்லாம் மனதில் வைத்துக்
கொண்டு இந்தத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும்
சொல்லப்போனால், இந்தப் 'பரிசுத் திட்டங்கள் தடைச் சட்டம்' என்ற
பெயரே கூட சரியில்லை. காரணம் இது வெறும் பரிசு அல்ல லாட்டரி
சீட்டு மாதிரியல்ல. 1 ரூபாய்க்கு லாட்டரி சீட்டு வாங்கினால் ஒரு மதிப்பும்
கிடையாது. வெறும் காகிதம்தான் அது. குலுக்கலிலே பரிசு விழுந்தால்
தான் மதிப்பு, அப்போது தான் ஒரு லட்சம் ரூபாய், இரண்டு லட்சம்
ரூபாய் என்று வருகிறது. ஆனால், இங்கே 10 ரூபாய் கொடுத்து 10 ரூபாய்
பெறுமானம் உள்ள பொருட்களை வாங்குகிறான், அந்தப் பொருட்களுக்கும்
அதிகமாக யாராவது ஏதோ கொடுக்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால்,
அப்படிச் செய்து அவர்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள
வேண்டும் என்று அவர்கள் நினைத்தால், அதிலே என்ன தவறு? ஆகவே,
இந்தச் சட்ட முன்வடிவு வெறுப்போடு கொண்டுவரப்பட்ட ஒன்று என்று
சொல்லிக்கொள்கிறேன். ஒரு ஆட்சி தனிப்பட்டவர்கள்மீது கோபத்தை
வைத்துக்கொண்டு சட்ட முன்வடிவு கொண்டு வருவதும், ஆட்சி நடத்துவதும்
அவ்வளவு சரியானதல்ல, நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
இந்தச் சட்ட முன்வடிவிலே "forfeiture of newspapers and publica-
tions containing prize schemes" என்று இருக்கிறது. இது ஏன் என்று
எனக்குப் புரியவில்லை. இப்போது 50 பைசா, 75 பைசா என்று பத்திரிகை
விலை இருக்கிறது. 75 பைசா என்று இருந்த இதழின் விலையைக்கூட ஒரு
சில செல்வாக்குப் படைத்தவர்கள் திடீரென்று 90 பைசா என்று உயர்த்தியிருக்
கிறார்கள். இவர்கள் என்ன பந்தயமா நடத்துகிறார்கள்? 8 அணா, 50 பைசா
கொடுத்தால் அதற்குண்டான மதிப்புடையதாக ஒரு பத்திரிகை கிடைக்கிறதா
என்று பார்க்க வேண்டும். 8 அணா கொடுத்து வாங்குகின்றவர்கள் எல்லாம்
பத்திரிகையின் ஒரு பக்கத்தைக் கிழித்து எழுதி அனுப்புங்கள், குலுக்கிப்
பார்க்கிறோம், அல்லது வங்கிகளிலே போட்டுவிட்டு பின்னாலே பார்க்கிறோம்
என்கிறார்கள். ஒரு பத்திரிகை ஆனந்தவிகடன் வார இதழ் 50 ஆண்டுகளாகப்



1979 நவம்பர் 13] (திரு. க. இராமமூர்த்தி)

பணியாற்றி, முடிவுற்ற நிலையில் அதற்கென்று விழா கொண்டாடும்போது,
அந்தப் பத்திரிகையின் மூலமாகக் கிடைத்த பணத்திலேயிருந்து, அந்தப்
பத்திரிகையைத் தொடர்ந்து படிக்கின்றவர்களுக்குச் சில பரிசுகளைத் தருவது
என்று அறிவித்திருக்கிறார்கள். 50 பைசாவுக்குப் புத்தகம் வாங்கினால், அது
வாரப் பத்திரிகையாக இருந்தாலும், நாள் பத்திரிகையாக இருந்தாலும், அதி
லிருந்து சில தாள்களைக் கிழித்து அனுப்பினால், இரண்டும் ஒன்றாக இருந்
தால், அதற்கு ஒரு பரிசு. இதிலே யாருக்கு என்ன நஷ்டம்? பத்திரிகைகளின்
தரம் குறைந்து போகிறதா? என்ன காரணத்தால் இந்தப் பத்திரிகைகளுக்
கும், நியூஸ் பேப்பர்களுக்கும் இந்தத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்
கிறது? அந்தப் பத்திரிகைகள் நடத்துபவர்களிடையே ஆயிரம் போட்டிகள்
இருக்கலாம். (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை) அத
னால் நமக்கு என்ன வந்தது? ஏன் அதிலே நாம் தலையிட வேண்டும்?
தலையிட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் பெரிய முதலாளிகளை
வைத்துக்கொண்டு, பட அதிபர்களை, வைத்துக்கொண்டு, ஃபிலிம் டிஸ்டிரி
பூட்டர்கள் எல்லாம் ஒருசில மாவட்டங்களில் ஏஜென்சி எடுக்கவேண்டும் என்று
நிர்ப்பந்தம் செய்தார்களே அதைத் தடுப்பதற்கு . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஃபிலிம் டிஸ்ட்ரிபூட் செய்த
வர்கள் எல்லாம் . . .

(டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் இருக்கையைவிட்டு எழுந்தார்)

THIRU K. RAMAMOORTHY: Sir, I am sorry for my expression in that way.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Chairman, let it be on record. It will show to what length the hon. Member will digress in attacking the ruling party and say that there is no merit in any legislation which this Government bring.

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member has expressed his regret. The matter has already been recorded.

THIRU K. RAMAMOORTHY: I am sorry to say that I can understand the attitude of the ruling party in the matter.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ரொம்ப
வேதனைப்படுகிறார்கள். எந்த மசோதா வந்தாலும் என்னால் குற்றம்தான்
காண முடிவது, நல்லதல்ல என்று நினைக்கிறார். இதுதான் அவர்களுடைய
பரிதாப நிலை.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I must express
on this occasion that there are occasions when the main Opposition
Party Members have expressed a certain amount of appreciation on
some parts of the legislation while subjecting the other parts of the
legislation to severe criticism. I really take it in the real spirit of
sportsman because they feel that this part of legislation is open to
criticism and they adopt the wholesome attitude of criticising por-
tions of the legislation and such criticism is always welcome but
this wholesale condemnation of the entire legislation as totally
unnecessary and the digression from point to point, not knowing
the way to reach the destination is something which I am unable to
follow even for replying purposes.

THIRU K. RAMAMOORTHY: Sir, unfortunately my doubts have
not been answered by the Treasury Benches. Yesterday all my
charges and doubts with regard to a particular Bill came to be
accepted and became true also. The Hon. the Minister for Infor-
mation and Publicity admitted such things.
அவசரச் சட்டங்கள் கொண்டு வரும்போது கொஞ்சம் அனுபவங்களை மனதில்
ஏற்றிக்கொண்டு கொண்டுவந்தால், இதுபோன்ற சங்கடங்கள் வராது.

MR. DEPUTY CHAIRMAN : The Opposition has the say and
the Treasury Benches have the way.

THIRU K. RAMAMOORTHY : Sir, they should bear with my
criticism and they should have the mind to bear with the
criticism. Unfortunately, I would not say that they lack it, but. . .
கொஞ்சம் கோபம் வருவதில் ஆச்சரியம் இல்லை.
வரும்போது, அதிலும் பல அவசரச் சட்டங்கள் கொண்டு வந்த பிறகு, இந்த அவசரச் சட்டங்கள்
சங்கடம், இந்த விமர்சனம். ஆனால், எதுவாக இருந்தாலும் பத்திரிகைகள்
தொழில் அதிபர்களை வைத்துக்கொண்டு, அவர்கள் மூலமாக தங்களின்
பத்திரிகை விற்பனையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று செயல்படும்
போது, நாம் அதைத் தடுக்கவில்லை.

MR. DEPUTY CHAIRMAN : The only point that the Hon.
Minister is making out is that the hon. Member can be pertinent
to the points concerned with the Bill. If the hon. Member feels
that the points that have been raised by him are pertinent to the
Bill, he can mention them.



THIRU K. RAMAMOORTHY : The whole House has already
gone through this Bill. Clause 9 will make it clear that I am just
on the point and only at the point.

(முற்பகல் 10-40)

கதைகளை வெளியிடும் பத்திரிகை
அதுமட்டுமல்ல. பத்திரிகைகளில் அளவுக்கு உணர்ச்சிகளைத்
களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்த
தூண்டும் வாசகங்களையும், படங்களையும் வெளியிட்டுக்கொண்டு பத்திரிகை
யின் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்புகிறார்கள் என்பதையும் பார்க்க
வேண்டும். பத்திரிகைகளில் வெளியிடப்படும் அட்டைப் படங்கள், மற்
றும் கவர்ச்சிப் படங்கள் ஆகியவற்றைத் தடுக்க இந்த அரசு முன்வரவில்லை.
ஆனால் 50 பைசா கொடுத்து ஒரு பத்திரிகை வாங்கிப் படிக்கிற ஒருவருக்கு
அந்தப் பத்திரிகையின் மூலமாக மேற்கொண்டு கூடுதலான முறையில்
லாபம் கிடைக்க வழி இருக்கிறது என்றால், அதைத் தடை செய்யக் காரணம்
என்ன? இப்போது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த
நாளை ஒட்டி பல புத்தகங்கள் விலை குறைப்பு செய்யப்பட்டு விற்கப்படு
கின்றன. 25 ரூபாய் விலையுள்ள புத்தகம் பாதி விலையில் கொடுக்கப்படு
கிறது. குழந்தைகளுக்காக என்று விலை குறைப்பு செய்யப்பட்ட புத்தகங்
களை இன்றைக்கு விற்கிறார்கள். அது 'பிரைஸ் ஸ்கீம்' என்று சொல்லிவிட
லாமா? வாசகர்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் என்பவை நடைமுறையில்
பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்க என்று கொடுக்கப்படுகின்றன.
இதைப்போய் அரசாங்கம் கட்டுப்படுத்துவதன் அவசியம் என்ன என்றுதான்
எனக்குப் புரியவில்லை. இதைப் பார்க்கும்போது, மிகுந்த சங்கடமாக இருக்
கிறது. இப்படிப்பட்ட சட்ட முன்வடிவு வந்ததற்காக நான் உண்மையிலேயே
வேதனைப்படுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவு நியாயமற்றது. பத்திரிகை
படிக்கிற பழக்கம் உடையவர்களையும் கடைகளுக்குப் போகிறவர்களையும்
தவறாக மதிப்பீடு செய்து, அந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்
கிற சட்ட முன்வடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும்
ஏங்கி ஏங்கிப் பார்க்கிறேன் ஏதாவது ஒரு சட்ட முன்வடிவையாவது ஆதரிக்
கும் வகையில் இந்த அரசு கொண்டுவருகிறதா என்று. ஆனால் ஒன்றுகூட
இல்லை என்று சொல்லி வேதனையோடு என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஆற்காடு. நா. வீராசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்
பட்டிருக்கிற 1979 ஆம் ஆண்டு பரிசுத்திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவின்
மீது சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது, மாண்புமிகு
உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முழுமையாக இந்தச் சட்டத்தைச்
கண்டிப்பதைக் கண்டு வருத்தப்பட்டார்கள். எனவே நான் ஓரளவுக்கு
இதை வரவேற்கிறேன் (சிரிப்பு) என்று அவருக்குச் சொல்லிக்கொண்டு இதை
இன்னும் முழுமையாக வரவேற்க வேண்டுமென்றால். . .

THE HON. THIRU K. NARAYANASWAMY : It is exactly what
I said. Even the Members of the main Opposition Party so often
welcome certain parts of legislation and certain parts were open
to their severe criticism. We accept that.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஏழைகள் ஏமாற்றப்படுகிறார்கள் அல்லது பேராசைக்கு
ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்பதுதான் இந்த அரசாங்கம் இத்தகைய சட்டம்
கொண்டு வருவதற்கு மூல காரணமாக இருக்குமானால், இந்த அவையில்
கொண்டு வரப்பட்டிருக்கும் பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவிற்குப்
பதிலாக பரிசுச் சீட்டு ஒழிப்பு மசோதா என்று ஒன்றைக் கொண்டு வந்திருந்
தால், அதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் முழுமையாக
வரவேற்கக் கடமைப்பட்டிருப்பேன். ஆனால் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம்
ஏதோ இந்த நாட்டில் வணிகர்கள் மட்டும்தான் சுரண்டுகிறார்கள், அவர்
களெல்லாம் சமுதாயத்தைச் சுரண்டக் கூடாது, அரசாங்கம் மட்டும்தான்
சுரண்டலாம் என்று சொல்வதைப்போல் இங்கே கொண்டுவரப்பட்ட சட்டம்
இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. எப்போது
ஒரு அரசாங்கம் வணிகர்கள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ள
இந்தப் பரிசுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று
கருதுகிறதோ, அப்போதே தங்களுடைய திட்டத்தாலும் ஏழைகளும் பொது
மக்களும் ஏமாற்றப்படுகிறார்கள், பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும்
உணருகிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது இந்தப்
பரிசுச் சீட்டுத் திட்டத்தை அறிவித்தார்கள். இந்த நாட்டில் சில திட்டங்கள்
அறிவிக்கப்பட்டாலும், அதே நேரத்தில் பொதுமக்கள் உணர்வு வேறு
விதமாக இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். உதாரணமாக
மதுவிலக்குச் சட்டத்தை நாம் முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று
விரும்பினாலும், சமுதாயத்தில் அது எப்படி வெற்றி பெறாமல் இருக்கிறதோ,
அதைப்போல் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய சூழ்நிலையில் பரிசுச்
சீட்டுத் திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குப் பின்னால் திராவிட





முன்னேற்றக் கழக ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
இருந்தபோது மறைந்த இராஜாஜி அவர்களின் நினைவு மண்டபத்தைத்
திறந்து வைக்கிற விழாவில் இன்றையதினம் 'லோக் நாயக்' என்று
இந்தியாவில் இருக்கிற அனைவராலும் பாராட்டப்படுகிற மறைந்த மதிப்பிற்
குரிய திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இப்படிப்பட்ட பரிசுச் சீட்டுத்
திட்டங்கள் ஏழைகளை சுரண்டக் கூடிய திட்டங்கள், சூதாட்டத்தை ஊக்கு
விக்கும் திட்டங்கள் என்பதையெல்லாம் சுட்டிக் காட்டி, "தமிழகத்தில் நீங்கள்
எத்தனையோ புரட்சிகரமான திட்டங்களையெல்லாம் அமுல்படுத்துகிறீர்கள்,
நீங்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிறீர்கள், மதுவிலக்குச் சட்டத்தை
தீவிரமாக அமுல்படுத்துகிறீர்கள், அதைப்போலவே இந்தப் பரிசுச் சீட்டுத்
திட்டத்தையும் ஒழித்துக் கட்டுவீர்களானால் நான் இந்த அரசாங்கத்தை
முழுமையாகப் பாராட்டுவேன்" என்ற கருத்தைத் தெரிவித்தபோது, அதே
நொடியில் அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள்
"இன்று முதல் இந்தப் பரிசு சீட்டு விற்பனைத் திட்டத்திற்கு தடை கொண்டு
வருகிறேன், இனி இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் ஒழிக்கப்படும்" என்று
அறிவித்தார்கள். ஆனால் மீண்டும் இந்த அரசாங்கத்தால் இந்தத் திட்டம்
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனால் தமிழ் நாட்டு மக்கள் எந்த அளவுக்குச்
சுரண்டப்படுகிறார்கள் என்பதை நாமெல்லோரும் நன்கு அறிவோம்.
தமிழ் நாட்டு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் மட்டும்தான் என்றாலும்,
ஓரளவு தாங்கிக்கொள்ளலாம். கேரள அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்,
மகாராஷ்டிர அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், கருநாடக அரசு பரிசுச் சீட்டுத்
திட்டம், 25 லட்சம் ரூபாய் பரிசுச் சீட்டுத் திட்டம் என்று பத்திரிகைகளில்
நாள்தோறும் பார்க்கிறபோது, 25,00,000 ரூபாய் என்று அந்தக் கூப்பன்களின்
பின்னால் பார்க்கிறபோது, ஏழை எளிய மக்கள், கூலி வேலை செய்பவர்கள்,
எவ்வளவோ இன்னல்களுக்கு இடையே தங்களின் குடும்பக் கஷ்டங்களுக்கு
இடையே, அதிர்ஷ்டத்தில் தலையெழுத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், தங்களின்
அன்றாடக் கூலியான 1, 2 ரூபாயை—அதைக் கொண்டு போனால்தான்
அன்றைக்கு அரிசி வாங்க முடியும் என்ற நிலை இருந்தாலும், அதை மறந்து
விட்டு—25 லட்சம் ரூபாய் என்ற எண்ணே அவர்கள் கண்ணைப் பறிப்ப
தால், அந்தச் சீட்டை வாங்கி, அவனுடைய தலை எழுத்து அவனுக்குத்
தெரிந்திருந்தும் ஏமாற்றப்படுகிறான்.

எனவேதான் சொல்லுகிறேன், இன்றைக்கு எவ்வாறு வணிகர்கள் தங்கள்
வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ள இந்தப் பரிசுத் திட்டத்தைக் கையாள
முனைகிறார்கள் என்று அரசு உணருகிறதோ அதைப் போலவே இன்றைக்
இல்லாவிட்டாலும் இனி வருங்காலத்திலாவது ஏழை எளிய மக்களை

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, I must express on this occasion that there are occasions when the main Opposition Party Members have expressed a certain amount of appreciation on some parts of the legislation while subjecting the other parts of the legislation to severe criticism. I really take it in the real spirit of sportsman because they feel that this part of legislation is open to criticism and they adopt the wholesome attitude of criticising portions of the legislation and such criticism is always welcome but this wholesale condemnation of the entire legislation as totally unnecessary and the digression from point to point, not knowing the way to reach the destination is something which I am unable to follow even for replying purposes.

THIRU K. RAMAMOORTHY: Sir, unfortunately my doubts have not been answered by the Treasury Benches. Yesterday all my charges and doubts with regard to a particular Bill came to be accepted and became true also. The Hon. the Minister for Information and Publicity admitted such things.

அவசரச் சட்டங்கள் கொண்டு வரும்போது கொஞ்சம் அனுபவங்களை மனதில் ஏற்றிக்கொண்டு கொண்டுவந்தால், இதுபோன்ற சங்கடங்கள் வராது.

MR. DEPUTY CHAIRMAN: The Opposition has the say and the Treasury Benches have the way.

THIRU K. RAMAMOORTHY: Sir, they should bear with my criticism and they should have the mind to bear with the criticism. Unfortunately, I would not say that they lack it, but. . .

கொஞ்சம் கோபம் வருவதில் ஆச்சரியம் இல்லை.

வரும்போது, அதிலும் பல அவசரச் சட்டங்கள் கொண்டு வந்த பிறகு, இந்த அவசரச் சட்டங்கள் சங்கடம், இந்த விமர்சனம். ஆனால், எதுவாக இருந்தாலும் பத்திரிகைகள் தொழில் அடிப்படையை வைத்துக்கொண்டு, அவர்கள் மூலமாக தங்களின் பத்திரிகை விற்பனையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று செயல்படும் போது, நாம் அதைத் தடுக்கவில்லை.

MR. DEPUTY CHAIRMAN: The only point that the Hon. Minister is making out is that the hon. Member can be pertinent to the points concerned with the Bill. If the hon. Member feels that the points that have been raised by him are pertinent to the Bill, he can mention them.





THIRU K. RAMAMOORTHY: The whole House has already gone through this Bill. Clause 9 will make it clear that I am just on the point and only at the point.

(முற்பகல் 10-40)

அதுமட்டுமல்ல. பத்திரிகைகளில் கதைகளை வெளியிடும் பத்திரிகை களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்த அளவுக்கு உணர்ச்சிகளைத் தூண்டும் வாசகங்களையும், படங்களையும் வெளியிட்டுக்கொண்டு பத்திரிகை யின் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்புகிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும். பத்திரிகைகளில் வெளியிடப்படும் அட்டைப் படங்கள், மற் றும் கவர்ச்சிப் படங்கள் ஆகியவற்றைத் தடுக்க இந்த அரசு முன்வரவில்லை. ஆனால் 50 பைசா கொடுத்து ஒரு பத்திரிகை வாங்கிப் படிக்கிற ஒருவருக்கு அந்தப் பத்திரிகையின் மூலமாக மேற்கொண்டு கூடுதலான முறையில் லாபம் கிடைக்க வழி இருக்கிறது என்றால், அதைத் தடை செய்யக் காரணம் என்ன? இப்போது பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை ஒட்டி பல புத்தகங்கள் விலை குறைப்பு செய்யப்பட்டு விற்கப்படு கின்றன. 25 ரூபாய் விலையுள்ள புத்தகம் பாதி விலையில் கொடுக்கப்படு கிறது. குழந்தைகளுக்காக என்று விலை குறைப்பு செய்யப்பட்ட புத்தகங் களை இன்றைக்கு விற்கிறார்கள். அது 'பிரைஸ் ஸ்கீம்' என்று சொல்லிவிட லாமா? வாசகர்களுக்குக் கொடுக்கும் சலுகைகள் என்பவை நடைமுறையில் கொடுக்கப்படுகின்றன. பத்திரிகைகளின் விற்பனையை அதிகரிக்க என்று இதைப்போய் அரசாங்கம் கட்டுப்படுத்துவதன் அவசியம் என்ன என்றுதான் எனக்குப் புரியவில்லை. இதைப் பார்க்கும்போது, மிகுந்த சங்கடமாக இருக் கிறது. இப்படிப்பட்ட சட்ட முன்வடிவு வந்ததற்காக நான் உண்மையிலேயே வேதனைப்படுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவு நியாயமற்றது. பத்திரிகை படிக்கிற பழக்கம் உடையவர்களையும் கடைகளுக்குப் போகிறவர்களையும் தவறாக மதிப்பீடு செய்து, அந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக் கிற சட்ட முன்வடிவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் எங்கி எங்கிப் பார்க்கிறேன் ஏதாவது ஒரு சட்ட முன்வடிவையாவது ஆதரிக் கும் வகையில் இந்த அரசு கொண்டுவருகிறதா என்று. ஆனால் ஒன்றுகூட இல்லை என்று சொல்லி வேதனையோடு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆற்காடு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கிற 1979 ஆம் ஆண்டு பரிசுத்திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏமாற்றும் பரிசுச் சீட்டுத் திட்டத்தையும் ஒழிக்க ஒரு பிரிவு சேர்க்கப்பட வேண்டும். தற்போது பரிசுச் சீட்டின் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, அதாவது இந்த வகையில் கிடைக்கும் 2 கோடி ரூபாயைக் கொண்டு, மக்கள் நல்வாழ்வுத் துறைக்குத்தானே செலவிடுகிறோம் என்று சொல்வதாக இருந்தாலும்கூட—இதை நான் வாதத்திற்கு ஏற்றுக்கொள்ளத் தயார்—குறைந்தபட்சம் மற்ற மாநிலங்களிலிருந்து கொண்டு வந்து விற்கப்படுகிற பரிசுச் சீட்டுகளையாவது இந்த அரசாங்கம் தடை செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் ஒன்றைப்பற்றிக் குறைபட்டுக் கொண்டார்கள். சில பத்திரிகைகள் தங்கள் பத்திரிகை வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ள அல்லது தங்களின் பத்திரிகையில் கதையின் தரத்தை உயர்த்த என்று நடத்துகிற பரிசுத் திட்டங்களுக்கு ஏன் தடை விதிக்க வேண்டுமென்று கேட்டார்கள். எனக்குக்கூட கொஞ்சம் வருத்தம்தான்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் அந்தச் சட்ட முன்வடிவில்

"பரிசுத் திட்டம் என்பது எந்தத் திட்டத்தின் மூலமேனும், அது எந்தப் பெயரிலேனும் அமைக்கப்பட்டாலும் சரி, பரிசு அல்லது வெகுமதி ஏதேனும் ரொக்கமாகவோ பொருளாகவோ அல்லது அசையும் அல்லது அசையா பொருளானதாகவோ . . ."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சில பத்திரிகைகள் நடத்தும் பரிசுத் திட்டங்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு ஆனந்தவிகடன் பத்திரிகை சிறுகதைப் போட்டி என்று ஒன்றை வைத்து, முதல் பரிசுக்கு 10,000 ரூபாய் என்றும், இரண்டாவது பரிசுக்கு ரூ. 5,000 என்றும் ரொக்கப் பரிசு கொடுக்கிற காரணத்தால், அந்தத் திட்டம் தடை செய்யப்படுகிறது. இது குறித்து நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது, நீதிமன்றம் இடைக்காலத் தடையை அளித்திருக்கிறது என்றாலும், இதனால் ஏற்படுகிற விளைவுகளை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அரசாங்கத்தை ஆதரிக்கிற பத்திரிகைகளுக்கு ஒரு விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. "இதயம் பேசுகிறது" என்ற பத்திரிகை



அரசாங்கத்தை ஆதரிக்கிற பத்திரிகை என்பதும் அமைச்சர்களோடு நெருங்கிய நட்பு கொண்டுள்ள ஒரு பத்திரிகை என்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களேகூட அதில் தலையங்கங்கள் எழுதக்கூடிய அளவுக்கு செல்வாக்கு பெற்ற பத்திரிகை என்பதும் அனைவருக்கும் தெரியும்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I confess total ignorance of any friendship with this gentleman or with this journal.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அமைச்சர் அவர்களுக்கு எப்படி மறுக்க உரிமை இருக்கிறதோ அப்படியே எங்களுக்கும் குற்றஞ்சாட்ட உரிமை இருக்கிறது. நமது சட்ட அமைச்சர் அவர்களுக்கு இம்மாதிரியான பத்திரிகை களைப் படிக்க அநேகமாக வாய்ப்பில்லாமல் இருக்கும் என்று நினைக்கிறேன். நாங்கள் அந்தப் பத்திரிகையை ஆரம்ப காலத்திலிருந்தே படிக்கிறவர்கள். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அந்தப் பத்திரிகையோடு அவருக்குத் தொடர்பு இருக்கிறது. இதை நான் ஒரு குறையாகச் சொல்ல முன்வரவில்லை.

(முற்பகல் 10.50)

இந்தப் பத்திரிகைக்கு மட்டும் விதிவிலக்குக் கிடைக்கிறது. இதிலே போட்டி இல்லையா? என் கையில் உள்ள இந்த 'இதயம் பேசுகிறது' பத்திரிகை 4—11—1979 நாளிட்ட இதழ்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முதலமைச்சருக்கும், 'இதயம் பேசுகிறது' பத்திரிகை ஆசிரியருக்கும் நட்பு இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். முதலமைச்சருக்கு அந்த ஒரு பத்திரிகையோடு மட்டுமல்ல, குமுதத்தோடும், மற்ற அனைத்துப் பத்திரிகைகளோடும் நட்பு இருக்கிறதென்று நான் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: ஒத்துக்கொண்டதற்காக ரொம்ப நன்றி. இது சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறதே என்பதுதான் என்னுடைய வருத்தம். இதை ஒத்துக்கொள்வார்கள் என்றால், இதனுடைய பின்னணி என்ன என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை. இந்த இதழில் ஒரு போட்டியை நடத்துகிறார்கள். "உங்கள் குழந்தை இலவசமாக இலண்டன் செல்ல வாய்ப்பு இருக்கிறது. சர்வதேச குழந்தைகள் ஆண்டையொட்டி குழந்தைகள் ஸ்பெஷல் போட்டி. முதற் பரிசு-இலண்டன் சுற்றுப்பயணம். இரண்டாவது பரிசு—அகில இந்திய

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 நவம்பர் 13

சுற்றுப்பயணம், மூன்றாவது பரிசு—தமிழக சுற்றுப் பயணம்'
என்று அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பத்திரிகை தன்னுடைய
விற்பனையைப் பெருக்கிக்கொள்வதற்காக பரிசுப் போட்டியை
நடத்தலாம். இதைத் தடை செய்ய இந்த அரசாங்கத்திற்கு விருப்பமில்லை,
மனமில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. 'ஆனந்த
விகடன்' ஒரு நடுநிலைப் பத்திரிகை. அது திராவிட முன்னேற்றக் கழகப்
பத்திரிகை இல்லை. நடுநிலைப் பத்திரிகை நடத்துகிற போட்டியைத் தடை
செய்ய இந்த மசோதாவில் வழி இருக்கிறது. ஆனால் 'இதயம் பேசுகிறது'
போன்ற பத்திரிகைகள் கொண்டு வருகிற பரிசுப் போட்டியை இந்த அர
ஊக்குவிக்கிறது. 'ஆனந்த விகடன்' பத்திரிகை புத்திசாலியாக இருந்
அந்த இதழிலும் 'உலகச் சுற்றுப் பயணப் போட்டி' என்று ஆரம்பித்தால்,
இதனால் பாதிக்கப்படுபவர்கள் இந்த நாட்டு மக்கள்தான். தடை என்று
சொன்னால், எந்த ரூபத்தில் இருந்தாலும் தடை செய்ய வேண்டும். வணிகர்
களாக இருந்தாலும் சரி, 'ஆனந்த விகடன்' பத்திரிகையாக இருந்தாலும்
சரி, 'இதயம் பேசுகிறது' பத்திரிகையாக இருந்தாலும் சரி, வியாபாரத்தில்
ஈடுபடுகிறவர்கள் யாராக இருந்தாலும், எல்லோருக்கும் சட்டம் பொதுவாக
இருக்க வேண்டும். சட்டம் சில பேருக்குச் சலுகை செய்வதாக இருக்கக்
கூடாது என்பது என்னுடைய வாதம். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கக் கூடிய சட்டம் எல்லோருக்கும் சம வாய்ப்பு தரக்கூடிய
சட்டமாக இல்லை; சிலருக்கு ஆதாயம் தரக்கூடிய சட்டமாக இருக்கிறது.
அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பரிசுச் சீட்டு நடத்தக் கூடிய
உரிமையைப் பெற்றிருந்தாலும், மற்ற மாநிலத்தவர்கள் இந்த மாநிலத்து
மக்களைச் சுரண்டக்கூடிய அளவில் பரிசுச் சீட்டுக்கள் விற்பனை ஆகக்கூடிய
நிலையைத் தடை செய்யாமல், வியாபாரிகள் நடத்தும் போட்டியை மட்டும்
தடை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமாக இது இருப்
பதால், இந்தச் சட்டத்தை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடிய
வில்லை. ஆகவே விரைவிலே எல்லாப் பரிசுச் சீட்டுக்களையும் தடை செய்கிற
சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பிலே ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி, என்னுடைய
கருத்துக்களை இத்தோடு முடித்துக்கொள்ளுகிறேன்

* THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Deputy
Chairman, Sir, may I first tender my grateful thanks to the hon.
Member Thiru Nallasivan for his graphic description of the mal-
practices that have been practised by some of the leading firms in
Coimbatore with the result that the competing traders have began
to decline and decay Not merely that such traders who dangle



1979 நவம்பர் 13] [Thiru K. Narayanaswamy]

before the gullible purchasing public have even chosen to sell
damaged goods. The Bill aims at preventing such a wholesale
exploitation of the poor gullible public who purchase goods not
because they want to have those goods, but because they want to
take a chance in getting the prizes of a bungalow worth Rs. 1 1|2
lakhs or Rs. 2 lakhs, a gold chain worth about Rs. 1 lakh and
such other prizes. Therefore, the hon. Member Thiru Nallasivan
was thoroughly justified in making a criticism, as vigorously
as the Government, in respect of these malpractices. Thiru Nalla-
sivan has rightly asked the Government the necessary guarantee
and satisfaction that must be given in regard to the enforcing
machinery so that the ban on these prize schemes brought about
by this piece of legislation may be universally enforced. I would
like to assure Thiru Nallasivan that there will be no effort spared
by this Government in gearing up the enforcing machinery with
respect to the law as adumbrated in this piece of legislation.

The hon. Member Thiru Lakshmikandhan, while supporting
this measure, also made a crticism. Particularly, the hon. Mem-
ber made reference to certain journals, dramatic companies and
educational institutions. I would request the hon. Member to give
me the full facts in respect of these bogus journals or genuine
journals which tempt the readers with these prize schemes. The hon.
Member also mentioned about some dramatic companies, educa-
tional institutions and also certain bogus tutorial institutions which
seemed to coach up even failed S.S.L.C.'s for M.A. Degrees. I
would request the hon. Member to give me more details so that I
would like to examine whether they would fall within the ambit of
this law. If they do not, we will think of proper and suitable legis-
lation in days to come.

I am grateful to the hon. Member Thiru Veerasami for his
partial support to this legislation. His criticism was twofold. One
is about permitting the State lotteries of other States. His second
criticism is about those journals which promise trips to other
places instead of money or movable or immovable properties. He
felt that they seemed to escape the clutches of this law. With regard
to his first criticism, may I submit to this House that my recollec-
tion is that the High Court ruled some years back, I think, nearly
a decade ago, that there could be a total ban on the lotteries of
other States? This is to the best of my recollection and I want
to be very careful in saying that this is subject to correction.

Because I have no time to check up with the Law Reports as this has been raised suddenly, I am stating this to the best of my recollection and even if I have erred, I have not misled this House. It is only with the intention of safeguarding my position that I am making this submission to this House. Therefore, this Government will have no jurisdiction over the sale of lottery tickets of other States. I think that the then petitioners raised the question of permissibility of lotteries from other States on the ground of fundamental rights and I think that our High Court has ruled that it will not be possible to ban them. Another point was made about our own State lotteries. The hon. Member Thiru Veerasami was pleased to mention the way in which it was banned. But, to the best of my recollection and with my little knowledge of Tamil, I must say that Amarar Anna said about these lotteries :

" பரிசு விழுந்தால் வீட்டுக்கு ; விழாவிட்டால் நாட்டுக்கு நல்லது ".

This is how Arignar Anna describes the scheme to be in the best interests of either the ticket-holder or in the interest of the State. Therefore, I am not in a position to agree with the hon. Member that the local State lottery is one which is worthy of being banned. This is a matter of policy and I am not fitted to express any opinion on that subject.

So far as the question of " Idhayam " is concerned..........

திரு. க. இராமமூர்த்தி: அது 'இதயம் பேசுகிறது' ஆகும்; 'இதயம்' வேறு பத்திரிகை.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Oh, I see ; it is a mistake unwittingly made. So far as ' Idhayam Pesugirathu ' and its offer of a trip to London are concerned, by *prima facie* reading of the definition of section 2(b) shows that it would certainly not cover that. I agree with that contention. But this Government, as it is not actuated by any bias or any motive to exempt one as against another, would certainly take into consideration this criticism. It would apply its laws absolutely without fear or favour and with almost universal application and force as it were to every citizen in this State. There will be no difficulty about it. I would certainly look into the need for the necessary piece of legislation





that may be warranted by such offers of very attractive things which do not fall within section 2 (b) of this Act ; if the hon. Member Thiru Veerasami himself is willing to pilot a Private Members Bill, the Government will consider even its adoption in due course of time.

The hon. Member Thiru Ramamoorthy made a criticism and I think his criticism is almost practically universal in respect of every Ordinance which is sought to be supplanted by a Bill. Therefore, I think we entirely differ from each other in respect of the need for an Ordinance being supplanted by a Bill. He made one point while asking " Well, I go and spend Rs. 10; how is the State concerned ? ". Certainly the State is not concerned with the quality of the goods that he purchases. The State has better business to do and it has got better work to do. Certainly, the State is not interested in Thiru Ramamoorthi's purchases for Rs. 10 or Rs. 100. But Thiru Ramamoorthy, incidentally, used the word ' bias '. The way he used the word ' bias ' compels me to refute that with all the strength, earnestness and force at my command. There is absolutely no basis, not even a semblance of basis, for any bias that would actuate this Government. It is far, far from it. With regard to his criticism about certain journals, I have already met it while replying to the points raised by the hon. Member Thiru Lakshmikandhan.

(முற்பகல் 11-00)

Sir, I would again like to express my thankful and grateful appreciation to the hon. Members who have extended their support, whether qualified or partial or whole-hearted. I am thankful to the hon. Members Thiru Nellasivan, Thiru Lakshmikandhan, Thiru Veerasami and certainly, last but not the least, I would say, Thiru Ramamoorthy also. I would commend the passing of this Bill by this House.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : என்னுடைய பேச்சில் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. பத்திரிகைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா என்று நான் கேட்டேன். போகஸ் ஜர்னல் என்று சொல்லவில்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY : It may be bogus or genuine journals. I accept that.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : போகஸ் ஜர்னல் என்று குறிப்பிட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : It may be journals of all kinds.

THE HON. THIRU K. NARAYANASWAMY : There are also so many bogus journals. Sir, I am beholden to the hon. Member Thiru Damodaran who has come to my rescue. It may be journals of all kinds.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இதை வெளியிடும் பத்திரிகைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I want to make it clear. If there is an unscrupulous exploitation of the reading public, that journal, whatever may be the status of the journal, will be banned and it will come within the four corners of this law. But, if it is intended to promote the interests of the reading public without intermingling any gambling ingredient in its prize scheme, certainly that will be permitted. Now, there are genuine prize-schemes like, say, a man paying for 10 months at Rs. 10 for getting a stainless steel or aluminium vessel or brassware. There are certain people who go on paying Rs. 20, Rs. 30 or Rs. 40 for 20 months and then buy one gold bangle. So, under section 12 of the Bill, Government have contemplated exempting certain classes of trades in the public interest and good. When public interest is the predominant consideration and when the Government are convinced that there is no gambling element in it, certainly, such schemes will be permitted by delimiting certain classes of goods with a certain ceiling on money, say, Rs. 500, Rs. 1,000, or Rs. 1,500 for vessels made of stainless steel, copper, brass or aluminium, for gold or silver ornaments, for cloth, textiles and for things like that.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1977 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 65/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



பிரிவுகள் 2 முதல் 15 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I move—

“That the Tamil Nadu Prize Schemes (Prohibition) Bill, 1979 (L.A. Bill No. 65 of 1979), as passed by the Assembly, be passed.”

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1979) நிறைவேற்றப்பட வேண்டும்.”

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 5. அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

“1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) முதலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

“1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) முதலில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (2) 1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடி (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979.)

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு இந்திய-மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு இந்திய-மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் பேரில் பேசுகின்ற நான் ஆளும் தரப் பினருக்குக் கொஞ்சம் மகிழ்ச்சியைத் தரமுடியும் என்று கருதுகிறேன். வழக்க மாகவே அவசரச் சட்டம் கொண்டு வந்து அதற்குப் பிறகு, அந்த அடிப்படை யிலேயே சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதனுடைய சங்கடங்களை, சிக்கல்களை. அதனாலே ஏற்படுகின்ற கேடுகளின் விளைவாக, அரசு கட்டுப் படுத்தப்பட்ட நிலையில் கொண்டு வருகிறது. அதிலிருந்து பின்வாங்க முடி யாமல், அவர்களுக்குத் தெரிந்தே சில குறைகள் உள்ள சட்ட முன்வடிவை நிறைவேற்ற வேண்டிய கட்டத்திலே இருப்பதை நாம் காணுகிறோம். நம் முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் அதுபோன்ற நிலைக்கு ஆளாகாமல், நிதானமாகப் பரிசீலனை செய்து, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இது பாராட்டப் படவேண்டிய ஒரு சட்ட முன்வடிவு என்ற என்னுடைய கருத்தைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

---

@ 939-935 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது





அடுத்து, இந்த நேரத்திலே ஒரே ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சங்கு குளிப்பதை அரசு எடுத்துக்கொண்டு, அதற்கான உரிமம் வழங்குகின்ற பொறுப்பினை ஏற்கின்ற நேரத்திலே சங்கு குளிக் கின்றவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக, தொழிலாளர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் சங்கு குளிக்க இறங்கும்போது, நவீன பாதுகாப்புகளோடு இறங்குவதில்லை என்ற தகவல் இருக்கிறது. இப்போது இருக்கும் சாதனங்களோடு அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்கிறார்கள் என்பது ஒரு புறம் இருக்கின்றது. நவீன முறைகளில், அவர்களுக்குப் பரி பூரணமான பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு வாய்ப்புகள், வசதிகள் இல்லை. அவற்றை முழுமையாகத் தருகின்றவர்களுக்கு உரிமம், லைசென்ஸ் கொடுக் கின்ற பொறுப்பினை அரசு ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

அதன் மூலமாக சங்கு எடுப்பதை அதிகமாக்குவது மட்டுமல்ல, கடலிலே தொழிலில் ஈடுபட்டு, அன்றாடம் உயிரைப் பணயம் வைத்து, இந்த செல்லுகின்ற தொழிலாளர்களையும் பாதுகாக்க முடியுமென்று சொல்லி, நல்ல சட்டத்தை கொண்டு வந்ததற்காக அமைச்சரவர்களைப் பாராட்டி, உரையை முடிக்கின்றேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவின் நோக்கத்தை நான் வரவேற்கிறேன். குறிப்பாக,

"The Government of Tamil Nadu have decided to monopolise chanks and chank fisheries in the state".

என்று சொல்லியிருக்கிறார்கள். சங்கு வியாபாரத்தை அரசின் ஏகபோகமாகச் செய்ய விரும்புகிறதென்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த மசோதாவிலுள்ள பல்வேறு பிரிவுகள் அதை உறுதிப்படுத்து கின்றனவா என்றால், இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதாவது லைசென்ஸ், பெர்மிட் இவைகள் மூலமாக சங்கு குளிப்பதும், அதைச் சேகரிப்பதும், அதை வியாபாரம் செய்வதும், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு போவதும் போன்ற வேலைகள் தனியார்கள் மூல மாகவும் செய்யப்படுமென்று இந்தச் சட்டம் கூறுகிறதே தவிர, அரசே இந்தத்

தொழிலை ஏகபோகமாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தை நிறை
வேற்றுகிற மாதிரியில்லை. ஆகவே 'மானாபலைஸ்' என்று சொல்லுவதற்கு
அரசு என்ன பொருள் கூறுகிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

அதாவது, to monopolise chanks and chank fisheries
என்று சொல்லப்படுவதில், லைசென்ஸ் மூலமாகவும், பெர்மிட் மூலமாகவும்
தனியார்கள் தொழில் செய்யவும் ஏற்பாடு செய்திருக்கிறார்களே தவிர,
அந்தத் தொழிலை அரசே ஏற்றுக்கொள்ளும் முயற்சி இல்லை. அது
'மிஸ்லீடிங்' ஆக இருக்கிறது. 'மானாபலைஸ்' என்பதை நான் எப்படிப்
பார்க்கிறேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சங்கு குளிப்பதும்,
சேகரிப்பதும், மொத்த வியாபாரி என்ற முறையில் அதைச் சில்லரை
வியாபாரிகளுக்குக் கொடுக்கும் வேலையையும் அரசே ஏற்றுக்
கொண்டால், 'மானாபலைஸ்' என்பதற்கு முக்கால்வாசி அர்த்தம் பூர்த்தியாகு
மென்று நினைக்கிறேன். ஆனால் லைசென்ஸ் வாங்கிக்கொண்டு, அதைத்
தனியார்கள் செய்யலாமென்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு 'மானாபலைஸ்'
என்றால் என்ன அர்த்தமென்பது எனக்குத் தெரியவில்லை. முதலிலே அரசு
சொல்லியுள்ள குறிப்பிட்ட நோக்கம் நிறைவேற வேண்டுமானால், இந்தத்
தொழிலில், அதாவது சங்கு குளிப்பதற்கு ஏற்பாடு செய்வது, சங்கு குளிப்
பவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வது, அதை விற்பனைக்கு லாயக்
காக்குவது, மொத்த வியாபாரம் செய்வது போன்ற காரியங்களைச் செய்ய
வேறு யாருக்கும் அரசு இடம் கொடுக்கக்கூடாது. சட்ட முன்வடிவின்
நோக்கத்தில், to prevent exfloitation, சங்கு குளிப்பவர்களை
மற்றவர்கள் சுரண்டுவதைத் தடுப்பது என்று சொல்லுகிறார்கள். மேலும்
'with a view to improve the socio-economic conditions'
என்றும் சொல்லுகிறார்கள். அதாவது சங்கு குளிப்பவர்களுடைய சமூகப்
பொருளாதார வாழ்க்கையை உயர்த்துவது என்று கூறுகிறார்கள். நான்
என்ன சொல்கிறேன் என்றால், சங்கு எடுப்பதையும், வியாபாரம் செய்வதையும்
தனியார்கள் கையிலே விட்டுவிடக் கூடாது என்பதுதான். அப்படி விட்டு
விட்டு, சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு உத்தரவாதமும் எப்படி
கொடுக்க முடியும்? 'மானாபலைஸ்' என்பதற்' அர்த்தம் இருக்க வேண்டு
மானால், அரசே இந்தத் தொழிலை முழுமையாகச் செய்ய வேண்டும். அரசு
சொந்த வாரியம் வைத்துக்கொண்டு, சங்கு எடுக்கிற வேலையைச் செய்ய
வேண்டும். சங்கு எடுக்கும் தொழிலாளர்கள் திருநெல்வேலி, கன்னியாகுமரி,
இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிகமாக இருக்கிறார்களென்று
நினைக்கிறேன். அவர்களையெல்லாம் அரசு ஊழியர்களாக ஏற்றுக்கொண்டு,



அவர்களுக்கு 'மினிமம் வேஜஸ்' தீர்மானித்து, அந்த அடிப்படையிலே இந்த
வேலைகளைச் செய்து, அதற்குப் பிறகு, சங்குகளை விற்பனை செய்கிறபோது,
'ரிடெயில் டீலர்ஸ்' மூலமாக விற்க ஏற்பாடு செய்தால், இந்தத் தொழிலிலே
'மானாபலி'யாக அரசு இருக்க முடியும். அப்போது தொழிலாளர்களின்
(socio-economic conditions imyrove) பண்ணவும் முடியும். அவர்
களைப் பல middlemen சுரண்டுவதைத் தடுக்க முடியும். இப்போது
எல்லோரும் அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இனி
லைசென்ஸ் கட்டணம் கட்டினால் போதும். வேறு என்ன மாற்றம் செய்
திருக்கிறீர்கள்? வேறு ஆட்களைக் கொண்டு கடலில் போய் குளித்து,
சங்கு எடுக்க ஏற்பாடுகள் செய்யும் தனியார்கள் இருக்கிறார்கள். அவர்கள்
சங்குகளைச் சேகரித்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். தனி நபர்களும்
அந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது
லைசென்ஸ் கட்டணம் தர வேண்டுமென்பது தவிர, வேறு என்ன
'மானாபலைஸ்' செய்யப் போகிறீர்கள்? 'மானாபலைஸ்' என்று சொல்வது
பார்ப்பதற்கும், படிப்பதற்கும் அழகாக இருந்தாலும், தனியார்கள் இந்தத்
தொழிலில் மீண்டும் ஆதிக்கம் செலுத்த இதன் மூலம் உத்தரவாதம்தான்
கொடுக்கிறார்களென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் இன்னொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். வேலை செய்யும்
தொழிலாளர்களுக்கு இதன் மூலம் எந்தப் பாதுகாப்பும் இல்லை. இதற்கு
முன்னால், சாதாரணமாக, தாங்களே சங்கு எடுப்பவர்கள் அரசாங்கத்திடம்
லைசென்ஸ் பெறாமலேயே அந்தத் தொழிலைச் செய்துகொண்டிருந்தார்கள்.
அபாயகரமான நிலையில் அவர்கள் கடலில் 18 மைல்கள், 20 மைல்கள்
போவார்கள். நான் அவர்களோடு ஒருமுறை படகில் போனேன். 15 மைல்கள்
தள்ளிச் சென்று சங்கு எடுக்கிறார்கள். கடலுக்குள்ளே போகும்போது,
அங்கேயே மூச்சுத் திணறி சிலர் இறந்துபோயிருக்கிறார்கள். அந்தத் தொழி
லாளர்கள் மிகவும் சிரமப்பட்டு, தங்கள் உயிரை பணயம் வைத்து சங்கு
குளிக்கிறார்கள். இதுவரை அவர்களுக்கு விற்கிற உரிமை இருந்தது. அந்த
உரிமையை இப்போது அரசு தடுக்கிறது. அவர்களுக்கு வேறு வகையிலே
வேலையும், குறைந்தபட்ச சம்பளத்திற்கு, உத்தரவாதமும் கொடுக்கும்போது,
அந்த உரிமை தடுக்கப்படுவதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த
உரிமையை அரசு இப்போது எடுத்து விடும்போது, அவர்களை வேலைக்கு
வைத்துக்கொள்ள வசதியுள்ளவர்கள், போட் வைத்துள்ளவர்கள் ஆகியவர்
களுக்கு லைசென்ஸ் மூலம் அந்த உரிமையைக் கொடுப்பது, அரசின் நோக்
கத்தைத் தோற்கடிக்கும். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு என்று சொல்
லும்போது, அவர்களுக்கு மினிமம் வேஜஸ் ஆக்ட்படி பாதுகாப்பு, வேலைப்

பாதுகாப்பு, கிராஜுவிடி, பிராவிடன்ட் பண்ட் போன்றவை—இப்படிப்பட்ட பாதுகாப்புகளைக் கொடுக்க இந்தச் சட்டம் வகை செய்ய வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

மேலும் தமிழ் நாட்டிலேயே ஒரு பாக்டரி ஆரம்பித்து, சங்கை வளையல்களாகச் செய்து விற்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேற்கு வங்கத்தில் சங்கு வளையல் போடாத பெண்மணியைப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட பெரிய மார்க்கெட் அங்கு இருப்பது அரசுக்குத் தெரியும். ஆகவே பாக்டரியை ஆரம்பிக்க வேண்டும். சங்கை ஆபரணம் செய்து அணியக்கூடிய வழக்கமுள்ள மேற்கு வங்கத்தில், சங்கு வளையல்களை விற்க வாய்ப்பு இருப்பதால், அரசு துணிந்து மூலதனம் போட்டு—அது பிரயோசனப்படுமா, பிரயோசனப் படாதா என்று கவலைப்படாமல்—பாக்டரியை ஆரம்பிக்க வேண்டும். 10,000க்கும் மேற்பட்ட சங்கு எடுக்கும் தொழிலாளர்களுக்குப் பலன் அளிக்கும் வகையிலே இதைச் செய்ய வேண்டும். 'டவுன்டிராடன்' என்று சொல்லக் கூடிய, வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு, கீழ் மட்டத்திலுள்ளவர்களுக்கு சேவை செய்யும் பொன்னான வாய்ப்பு அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் சொன்ன அடிப்படையை அரசு ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், ஒரு செலக்ட் கமிட்டியின் ஆய்விற்கு இந்தச் சட்ட முன்வடிவை விட்டு, இதை ஆழமாகப் பரிசீலனை செய்து, 10,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நன்மைகளைச் செய்யலாம். அநேகமாக ஒரு பில்லை செலக்ட் கமிட்டிக்கு விடுவதென்றால், அந்த பில்லைக் 'குளோஸ்' பண்ணுவது என்று சொல்லுவார்கள். நான் அந்த அடிப்படையிலே சொல்லவில்லை. 6 மாதம் 'டைம் லிமிட்' அல்லது 3 மாதம் 'டைம் லிமிட்' என்று போட்டு, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: ஒரு பில்லை செலக்ட் கமிட்டிக்கு விட்டால், அதைக் குளோஸ் பண்ணுகிற மாதிரி என்று சொல்லுவது is a reflection on Select Committees of the House.

**திரு. ஆ. நல்லசிவன்**: என்னுடைய கருத்து அதுவல்ல. நாமதமாகுமென்ற கருத்திலேதான் சொன்னேன்.

**திரு. ம. சங்காலிங்கம்**: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கடலிலிருந்து முத்து, சங்கு போன்றவைகளை எடுத்து, அதை விற்கிற வாணிபத்தை ஒழுங்குபடுத்தும் திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்னால், இந்தத் துறை அமைச்சர



வர்கள் பிறந்த மாவட்டமாகிய திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி அந்தத் தொழிலுக்குச் சிறந்த இடமாக அமைகிறது. தென்கடல் பகுதி முழுவதிலும் அந்தத் தொழில் சிறப்பாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. எனவே அந்தத் தொழிலைக் காக்கின்ற பணிக்கும் இந்தச் சட்டத்திலே வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கு, முத்து, அல்லது முத்துச் சிப்பிகள் எல்லாம் முன்னால் கிடைத்த அளவிற்குக் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. கடலிலே இயங்குகிற பல்வேறு கலன்கள், இயந்திர போட்டுகள், அங்கே ஏற்படுத்தப்படுகிற விஞ்ஞான ரீதியான பரிசோதனைகள் ஆகியவை கடலிலிருந்து கிடைக்கும் சங்கு போன்ற பொருள்களின் வளர்ச்சியைப் பாதிக்கிறதென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகையால் இத்தகைய சங்கு முத்துச் சிப்பிகள் வாழ்கின்ற இடங்கள் முதலில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11-20)

எல்லாக் கடல் பகுதியிலும் அது வளர்வதில்லை. இயற்கையாக சுத்தமான தண்ணீர் போய்ச் சேர்கிற ஆற்றுப் படுகைகளிலும், இயற்கைச் சூழ்நிலையில் அலை உள்ள கடற்கரை ஓரங்களிலும்தான் சிப்பிகள் வளர்கின்றன. அதிகமாக இருக்கிற இடங்கள், தட்பவெப்ப நிலை இவை எல்லாம் இதற்குத் தேவைப்படுகின்றன. இயற்கையாக அந்த அமைப்புகள் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து அந்த இடங்களில் இந்தச் சிப்பிகள் வளர்கின்றன. கன்னியாகுமரி கடலிலுள்ள சிப்பிகளை அதிகமான அளவில் எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். இராமநாதபுரத்திலுள்ள சிப்பிகளை கன்னியாகுமரியில் எடுத்தது என்று சொல்லி கன்னியாகுமரிக்கு வந்து போகின்றவர்களிடம் விற்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சர்வே நடத்த வேண்டும்.

தமிழகத்தில் நீண்ட தொலைவுக்குக் கடல் இருக்கிறது. கன்னியாகுமரியிலுள்ள கொல்லங்கோடு கடல் முதல் சென்னையிலுள்ள கடல் வரை தமிழகம் கடலால் சூழப்பட்டிருக்கிறது. தமிழகத்தைச் சுற்றி அரபிக் கடலில் 30 மைலும், வங்காளவிரிகுடாவில் நீண்ட பெரும் பகுதியும் சூழ்ந்து இருக்கின்றன. எந்தெந்தப் பகுதியில் முத்துச் சிப்பிகள், சங்குச் சிப்பிகள் வளர்கின்றன என்று பார்த்து, அவைகள் செழித்து வாழுவதற்கு விஞ்ஞான ரீதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு அவை செழித்து வளர்ந்த பிறகு அவைகளைப் பிடித்து வளத்தை நெறிமுறைப்படுத்த

வேண்டும். முன்பு முத்து, சங்கு, சிப்பி போன்றவற்றுக்கு குத்தகை மூலம்
லைசென்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அரசுத் துறை மூலம்
ஒழுங்குபடுத்தும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது
வரவேற்கத்தக்கது. இன்னும் லைசென்ஸ் கொடுக்கும் முறை இருக்கின்றது
என்று சில இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. விதிமுறைகளைப்
பொறுத்தவரை, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்த போதிலும்
லைசென்ஸும் அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணத்
திற்கு விதி 6(எப்)ல் ' except under a licence granted by the
authorized officer in such manner as may be prescribed ' சொல்லப்
பட்டிருக்கிறது. எந்தெந்த விதி முறைகளில் லைசென்ஸ் கொடுக்கப்படும்
என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கமே அங்கே போய் முத்துக்
குளிக்க முடியாது. அதை எடுப்பதற்குள்ள விதி முறைகளை வகுக்க
இருக்கிறார்கள். முத்துக் குளிக்க அங்கே தனியாகப் பயிற்சி நடத்த
வேண்டும். பயிற்சி பெற்ற மீனவர் குடும்பத்திலுள்ளவர்களுக்கு நன்கு பயிற்சி
அளித்து, அதன் பிறகு அதற்கென்று பயிற்சிப் பள்ளி ஒன்றை நடத்தி, அதில்
சிறப்பாகப் பயிற்சியளித்து அவர்களைக் கொண்டு முத்துக் குளிக்கச் செய்து,
அரசுத் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ அவைகளைப் பெற்று, நல்ல
தொழில் துறையில் அவற்றை ஒப்படைத்து, நல்ல பொருள்களாக மாற்றி
விற்க வேண்டும்.

கன்னியாகுமரி கடற்கரைக்கு பல வியாபாரிகள் வந்து அங்கு கிடைக்கின்ற
சிப்பி, சங்கு இவைகளையெல்லாம் குறைந்த விலைக்கு மீனவர்களிடமிருந்து
வாங்கி, அதன் பிறகு அவர்கள் வண்ணம் ஏற்றி, அழகுபடுத்தி, மெருகேற்றி
அவைகளை அதிக விலைக்கு விற்கிறார்கள். 1½ ரூபாய்க்கு கன்னியாகுமரி
கடற்கரையில் உள்ள மீனவர்களிடமிருந்து வாங்கி அவற்றை அந்த
வியாபாரிகள் அங்கேயே வட இந்தியாவிலிருந்து உல்லாசப் பயணத்திற்காக
வருகின்றவர்களுக்கு 50 ரூபாய்க்கு மேல் விற்கிறார்கள். இன்னும் அதுவே
வெளிநாடுகளில் 700 ரூபாய், 750 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது. ஆகவே
கடலில் கிடைக்கக் கூடிய அரிய பொருள்களை அரசே ஏற்று எடுத்தி
செப்பனிடுதல், சீரமைத்தல், வண்ணமேற்றுதல், மெருகேற்றுதல், அழகு
படுத்தல் போன்ற வேலைகளையெல்லாம் செய்து உள்நாட்டிலும்,
நாட்டிலும் நல்ல விலைக்கு விற்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டு
மென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வேன். இதற்கு அதிகாரம்
அளிக்கும் சட்ட அமைப்புகள் இதில் இல்லாவிட்டால், வேறு சட்டம் அல்லது
திருத்தம் கொண்டு வந்தாவது இதை இந்த அரசு செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். சிப்பி எடுப்பதில், முத்து எடுப்பதில் இப்படிப்பட்டவர்



களுக்குத் தனியாகப் பயிற்சி கொடுக்க வேண்டும். தூத்துக்குடியில்
இப்பொழுது ஃபிஷரீஸ் காலேஜ் இருக்கிறது. அந்தக் காலேஜில் அப்படிப்
பட்ட பயிற்சியை சிறப்பாகக் கொடுப்பதுடன் அவர்களுக்கு டிப்ளோமாவும்
கொடுக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் நல்ல விதிமுறைகளை ஏற்படுத்த
வேண்டும். இதை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு கலந்து
பேசி ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, அரசின் சார்பிலே அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற திருத்த
மசோதாவின் மீது நல்ல முறையில் கருத்துக்களைச் சொல்லி மசோதாவை
வரவேற்றதற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில்
என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள்
தொழிலாளர்களுக்கு நவீன பாதுகாப்பு முறைகளை இந்தத் துறையிலே
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்கின்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள்.
ஏற்கெனவே இப்பேர்ப்பட்ட ஒரு கோரிக்கை அவர்களுடைய சங்கக் குழுவிட
மிருந்து தமிழக அரசுக்கு வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில்
இருக்கிறது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது மிகப் பொருத்தமாக இருக்கும்
என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்
இந்தத் திருத்த மசோதாவை வரவேற்றாலும், அதைப் பொறுக்குக் குழுவுக்கு
அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அரசைப் பொறுத்த
மட்டிலே, இந்த சங்கு குளிக்கின்ற முறைகளை இப்பொழுது நாம் முறைப்படி
வகுத்துக்கொண்டிருக்கிறோம் என்றாலும் கூட, ஏறத்தாழ பன்னெடுங்
காலமாக சங்கு குளிக்கின்ற தொழில் அரசினுடைய ஏகபோக உரிமையாக
இருந்து வந்திருக்கிறது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
சங்கு குளிப்பவர்கள் கூட அதற்கான உரிமையைப் பெற்றுத்தான் சங்கு
குளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே விதிகள் இருக்கின்ற காரணத்தால் இதில்
பிரச்சினைகள் இல்லாத காரணத்தால், பொறுக்குக் குழுவுக்கு, இதை
அனுப்ப வேண்டியதில்லை என்று அரசின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுக்கு ஏகபோக உரிமை
வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவு வழிவகை வகுக்க முன்வரா
விட்டாலும் கூட, தனிப்பட்டவர்கள் வாங்குவது அல்லது ஓரிடத்திலிருந்து
வேறொரு இடத்திற்குக் கொண்டு போவது என்கின்ற முறை இந்தச் சட்டத்
திலே சேர்க்கப்படவில்லை என்ற காரணத்தால், இதை முழுமையாக அரசு
செயல்படுத்த முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1979 நவம்பர் 13

கருத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இப்போதும் முத்துக் குளிப்பவர்கள் உரிமம் பெற்றுத்தான் முத்துக் குளிக்கிறார்கள். முத்தை எடுத்த பின் அதை அவர்கள் அரசிடம்தான் ஒப்படைக்க வேண்டும். சிலர், வளையல் போன்ற தொழில்களைச் செய்பவர்கள், எங்களுக்கு சங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறபோது, அரசு அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அவர்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. அதேசமயத்தில் அவ்வாறு பெற்ற உரிமையைப் பயன்படுத்தி தவறு செய்தால், அப்படிப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க, அபராதம் விதிக்க அரசு இந்தச் சட்ட முன்வடிவில் வழிவகை செய்திருக்கிறது. ஆகவே இனிமேல் உரிமம் பெற்ற தனிப்பட்டவர்கள் அதிகமாகத் தவறு செய்வதற்குண்டான சாத்தியக் கூறுகள் இந்தச் சட்டத்திலே முழுமையாக இல்லை. சங்கு குளிக்கின்ற தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லையென்றும் அவர்களுக்கு அந்தப் பாதுகாப்பைக் கொடுக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போதே அவர்களுக்கு சங்கு குளிக்கின்ற நேரத்தில் ஆபத்து ஏற்பட்டு, மரணமடைவார்களானால், 10 ஆயிரம் ரூபாய் வழங்குவது என்கின்ற சலுகையை வழங்கி வருகிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, சங்கு, முத்து போன்றவைகள் முன்னால் கிடைத்தது போல் இப்போது கிடைக்கவில்லை, ஆகவே அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதுடன், விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடத்துகின்ற காரணத்தாலும், வேறு அலுவலகங்கள் அந்தப் பகுதிகளில் நடைபெறுகின்ற காரணத்தாலும், முன்பு கிடைத்தது போல் இப்போது சங்கு, முத்து போன்றவை கிடைக்கவில்லையென்றும் கருத்துக்களைச் சொன்னார்கள். அதை அரசு நிச்சயம் கவனத்தில் கொண்டு பரிசீலித்து அதிகமாக அவற்றை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

மேலும் அதுசம்பந்தமான தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் திரு. நல்லசிவன் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதையும் அரசு பரிசீலித்திருக்கிறது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் தெரிவித்து இந்த மசோதாவை



1979 நவம்பர் 13] (திரு. க. உரொ. எட்மண்ட்)

ஆதரித்து கருத்துக்களை வழங்கிய, வரவேற்ற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அரசின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டு அமைகிறேன்.

* திரு. ஆ. நல்லசிவன் : செக்ஷன் 6(எப்)-ல்

"No person shall fish or drive for chank or collect chanks from any chank beds, or use any vessel for such purpose"

என்று இருக்கிறது. அப்படி என்றால், தனி நபர் ஒருவர் படகு அல்லது தோணி வைத்துக்கொண்டு தனியாக ஆட்களை அமர்த்திக்கொண்டு சங்கு எடுக்க முன் வந்தால், அதற்கு சர்க்கார் அனுமதி கொடுக்குமா? அதுமாதிரி "டைவ்" (Dive) பண்ணுவதற்குரிய ஏற்பாடுகள் எல்லாம் அரசின் சார்பில் இருக்குமா? அப்படி அவர்கள் எடுக்கும் சங்கைக் கொண்டு வந்து அரசிடம் கொடுக்க வேண்டுமா? நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தனிப்பட்டவர்கள் போட், படகு, தோணி வைத்துக்கொண்டு தனிப்பட்டவர்களை நியமித்து சங்கு எடுத்து தொழில் நடத்த முன்வந்தால், அவர்களுக்கு அனுமதி தரப்படுமா?

(முற்பகல் 11.30)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அந்தப் பகுதியை அவர்கள் கொஞ்சம் தெளிவாகப் படித்திருந்தால் நிலைமை புரிந்திருக்கும்.

"On and from the date specified under sub-section (1) of section 6-D."

அடுத்தது மிகவும் முக்கியம் செக்ஷன் 6-டி-ஐ முதலிலே பார்க்க வேண்டும்.

'No person shall fish or dive for chank or collect chanks from any chank beds, or use any vessel for such purpose or carry on any business, industry or other activity in respect of chanks except under a licence granted by the authorised officer in such manner as may be prescribed.'

ஆகவே முத்துக் குளிப்பதற்கு உரிமம் பெற வேண்டுமென்பது அந்த விதிகளிலே தெளிவாக இருக்கிறது.

* திரு. ஆ. நல்லசிவன் : நான் சொல்வதெல்லாம், சங்கு குளிக்கக்கூடிய ஒருவர் போட்டைக் கொண்டு போகிறார். சங்கு குளிக்க வெசலை உபயோகப் படுத்தலாம் என்று இருக்கிறது. யார் உபயோகப்படுத்துகிறார்கள்? சங்கு குளிப்பவர்கள் சிலரை வேலைக்கு வைத்துக்கொண்டு, கடலுக்குள்ளேயே

**1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979)**

[திரு. ஆ. நல்லசிவன்] [1979 நவம்பர் 1:

சங்கு குளிக்க இறங்க முடியாத ஒரு நபர், அவர் ஒரு போட்டு வைத்திருப்பதற் கான வசதி பெற்றிருப்பதன் காரணமாக, சங்கு குளிக்க ஏற்பாடு செய்வதை விட, அந்த வேலையை அரசே செய்தால் என்ன ? ஒரு மூன்றாவது மனிதரை, சங்கு குளிக்கத் தெரியாத ஒருவரை, டைவ் பண்ண முடியாத ஒருவரை middleman ஆக ஏன் அனுமதிக்க வேண்டும் ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** சங்கு குளிப்பதிலே அனுபவம் இல்லாதவர்கள் கடலிலே இறங்கி சங்கு குளித்தால், பிறகு திரும்ப வெளியே வரமாட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு இந்திய-மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுத்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :** துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 75/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு இந்திய-மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.





**(3) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 50/1979.)**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்டத் தீர்மானம் :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் முக்கியக் குறிக்கோள் சட்டத்தின் தலைப்பிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல "வாடகைக் கட்டுப்பாடு" என்பதுதான். பொது மக்கள், குறிப்பாக ஏழையெளிய மக்கள், நடுத்தர வகுப்பினர்களுக்கு நியாயமான வாடகைக்கு வீடுகள் கிடைக்கச் செய்ய ஏற்பாடு செய்வதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். ஆனால், நடைமுறையில் இந்தச் சட்டத்தின் குறிக்கோளும், நோக் கமும் நிறைவேறுவதில்லை. இப்போது குடியிருக்க வீடுகள் கிடைப்பது மிக வும் கடினமாக இருக்கிறது. கிடைத்தாலும் வாடகை அநியாயமாக இருக் கிறது. அதிகமான வாடகை வாங்குகிறார்கள். அதிகமான வாடகை வாங்கி குறைந்த வாடகைக்கு ரசீது கொடுக்கிறார்கள். வீடு காலியானதும் அதிகமாக வாடகை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கி, அதிக வாடகை கொடுப்பவர்களை வாடகைக்கு அமர்த்துகிறார்கள். சிக்கல் ஏற்பட்டால் சொந்த உபயோகமென சொல்லித் தப்பிக்கிறார்கள். சம்மரி டிஸ்போசஷன் அல்லது கிரிமினல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டத்திலே வழிவகைகள்

@ 935-937 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ச. எஸ். வெங்கடேசன்] [1979 நவம்பர் 1

செய்யப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுப்ட
தில்லை. அதனாலே வாடகைக்குக் குடியிருப்பவர்களுடைய நிலைமை
மேலும் கடினமாக இருக்கிறது. இந்தமாதிரி நிலைமைகளில் சரியான
நடவடிக்கை எடுப்பதற்கு, ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த இந்தத்
திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றினால் மட்டும்
போதாது. இதைச் சிறந்த முறையிலே செயல்படுத்த அதிகாரிகளுக்கு இந்த
அரசு ஆணையிட வேண்டும். அப்படிச் செய்தால்தான், இந்தச் சட்டத் திருத்
தத்தினுடைய நோக்கம் நிறைவேறும். வீடு கிடைப்பதைப் பொறுத்த
வரையில், நாளுக்கு நாள் மக்களுடைய அவதி மிகவும் அதிகமாகப் பெருகிக்
கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச்
சட்ட முன்வடிவை ஆதரித்து, அமைகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்ட
முன்வடிவை முழுமையாக நான் ஆதரிக்கிறேன். இது தேவையான ஒன்று.
அவர்களே தெரிவித்திருப்பதைப்போல, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பிற்குப்
பிறகு இது மிகவும் தேவை. ஒரேயொரு அச்சம். இது சட்டமாக்கப்பட்ட
பிறகு, இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக அரசாங்கம் தன் கரங்களிலே
மேலும் அதிக அதிகாரத்தைப் பெறுகிறது. அது எங்கே என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள்.

'The proposed amendment does not, however, take away the
right of the landlord to let the building to any tenant or to occupy
it himself if the building is not required for the purposes, or for
occupation by any of the officers specified in section 3(3).'
என்று இருக்கிறது. அந்த அதிகாரம் இருப்பதிலே தவறில்லை. அது
முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்க வேண்டியது
மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பொறுப்பு, சம்பந்தப்பட்ட துறையின்
பொறுப்பு என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று
அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர
வர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்கெனவே இங்கே மாண்புமிகு
உறுப்பினர்கள் திரு. வெங்கடேசன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும்
எடுத்துக்காட்டியதைப்போல, உயர்நீதி மன்றத்திலே எடுத்துக்காட்டிய
('lacuna in the Act') சட்டத்திலே இருக்கக்கூடிய ஓட்டையை,
குறையை, நீக்கவேண்டும் என்பதற்காகக் கொண்டு வந்ததாகும். வீடு



1979 நவம்பர் 13] [திரு. எஸ். இராகவானந்தம்]

காலியான பிறகு, ஏழு நாட்களுக்குள் 'அக்காமடேஷன் கன்ட்ரோலருக்கு'
அறிவிக்க வேண்டும். பிறகு 10 நாட்களுக்கு உள்ளாக 'அரசுக்குத் தேவையா,
மற்றவர்களுக்குக் கொடுக்கப் போகிறீர்களா ? இல்லையா என்று அரசு
அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்கும்போது தேவை
யில்லை' என்று சொல்லிவிட்டால், வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் அதை
யாருக்காவது வாடகைக்கு விடலாம். ஆனால், ஒன்றுமே அறிவிப்புக்
கொடுக்காமல் வேண்டியவர்களை வாடகைக்கு வைத்தால், அல்லது அவரே
குடி சென்று விட்டால், அவரை வெளியேற்ற சட்டத்திலே இடமில்லை.
அதைத்தான் நம்முடைய உயர் நீதிமன்றம் எடுத்துக்காட்டியிருக்கிறது.
அதை நான் படிக்க வேண்டுமென்று சொன்னால்

'In this context contravention being related to occupation of
the building, it can only arise if there is a provision in section 3
intradicting such occupation.' அப்படி அவராக அரசுக்கு அறிவிக்காமல்,
'ஆக்குப்பை' செய்யக்கூடாது, மற்றவர்களுக்கும் விடக்கூடாது என்று
இங்கே ஒரு ப்ரொவிஷனை, சட்டத்தில் இடமில்லை என்று சொன்னதை
நிரப்பி, சட்டத்தில் கொண்டு வருகிறோம். அவர் யாரையாவது உள்ளே
நுழையவிட்டால், அவர்களை வெளியேற்றுவதற்கு அதிகாரம் அளிக்கக்கூடிய
சட்ட முன்வடிவு இது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்
வரவேற்றிருப்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்டத்தை
அமுல்படுத்தும்போது எப்படி எச்சரிக்கையாகச் சில காரியங்களை நடத்த
வேண்டும் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி
அவர்கள் எடுத்துச் சொன்னதையும் கவனத்தில் இந்த அரசு எடுத்துக்
கொள்ளும் என்று உறுதியளிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்க
டேசன் அவர்கள் நீதிபதியாக இருந்தவர்கள். எனவே, அவருடைய கருத்
துக்கும் மதிப்பு கொடுக்கப்படும். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறை
வேற்றித் தரும்படி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்
சினை —

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம்
ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) ஆய்விற்கு
எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

[1979 நவம்பர் 13

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்
பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின்
முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம்
ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) நிறைவேற்றப்
பட வேண்டும்".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்
சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1979 ஆம்
ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) நிறைவேற்றப்
பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்
73/1979).

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு
1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்
வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) பரிந்துரை
செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

---

@ 937-943 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட
தீர்மானம்—

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு
1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) பரிந்துரை
செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 11-40)

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்
களே, விற்பனை வரி சம்பந்தமான இந்தச் சட்ட முன்வடிவை நான் ஆதரிக்
கிறேன். இதன் மூலம், ஏற்கெனவே சில பொருள்களுக்கு 'மல்டி-பாயின்ட்'
என்று சொல்லப்படுகிற பலமுறை விற்பனை வரி ரத்து செய்யப்பட்டு, அவை
களின்மீது ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதன் காரணமாக,
சில்லரை வியாபாரிகள் இப்போது அனுபவித்து வருகிற தொந்தரவுகளி
லிருந்து, தொல்லைகளிலிருந்து சிறிது விடுபடுவார்கள் என்பதால், இதை
வரவேற்கிறேன். மொத்த வியாபாரிகளிடம் ஒருமுனை வரி போடப்பட்டு,
அங்கேயே வசூலிக்கப்பட்டு விடுவதால், விற்பனை வரி அதிகாரிகள் சில்லரை
வியாபாரிகளைத் தொந்தரவுக்கு உள்ளாக்க மாட்டார்கள் என்ற நிலை ஏற்படு
கிறது. ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட வேண்டும் என்பது பொது
வாக பல காலமாக வியாபாரிகளின் சார்பில் வற்புறுத்தப்பட்டு வந்த கோரிக்கை
யாகும்.

அரசும் இன்றையதினம் விற்பனை வரி விதிக்கும்போது, சில்லரை வியா
பாரிகள் அனாவசியமான தொந்தரவுகளுக்கு உட்படுத்தப்படக் கூடாது
என்ற நியாயமான கோரிக்கையை ஏற்கும் அடிப்படையில், இந்த ஒருமுனை
வரியைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்த
போதிலும் பிஸ்கட்ஸ், சாக்லேட்ஸ், சாஃபீஸ் போன்றவற்றைப் பொறுத்த
வரையில், அவைகளின் மீதான வரியும் அதிகப்படுத்தப்படுகிறது என்பதைச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பொருட்களைத் தயாரிப்பவர்களில்
பலர் குறைந்த மூலதனம் போட்டு அவைகளை உற்பத்தி செய்கிறார்கள்.
எனவே அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு பரிசீலிக்க வேண்டும் என்று
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட அளவுக்கு டர்ன்-ஓவர் இருக்கக்கூடிய சிறு வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்களிக்கத் தக்க வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக விற்பனை வரி முழுவதும் பொருள்களை வாங்குவோர் மீதுதான் சுமத்தப்படும். விற்பனை வரியைப் பொறுத்தவரை, அதை வியாபாரி தன்னுடைய பணத்திலிருந்து, தன்னுடைய லாபத்திலிருந்து கொடுப்பதில்லை. பொருளின் விலையோடு சேர்த்து இந்த வரியை பொதுமக்களிடமிருந்து வியாபாரிகள் வாங்கிவிடுகிறார்கள். விற்பனை வரியைக் காரணமாகக் காட்டி விற்பனை செய்யும் எல்லாப் பொருட்களுக்கும் பில் கொடுக்காமல் விலையை ஏற்றி அதிகமாக லாபம் சம்பாதிக்கும் நிலையும் இருக்கிறது. இதை அரசு சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். விற்பனை வரிக்கு எவ்வளவு வாங்க வேண்டுமோ அந்த அளவுக்கு மட்டும்தான் பொருட்களின் விலையோடு வியாபாரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்ற நிலையை அரசு உறுதி செய்ய வேண்டும். அதற்கு ஏதாவது இந்தச் சட்ட முன்வடிவில் அரசாங்கம் உத்தரவாதம் செய்திருக்கிறதா என்றால், இல்லை. பொதுவாக மத்திய அரசு எக்சைஸ் வரி என்று போட்டால், அதைவிட பல மடங்கு அதிகமாகவே பொருட்களை வாங்குவோரிடமிருந்து வியாபாரிகள் பெற்றுவிடுகிற நிலை இன்று இருந்து வருகிறது. இதன் காரணமாகத்தான் விலையேற்றம் ஏற்படுகிறது. மத்திய அரசு 'சாண்' வரி போட்டால் வியாபாரிகள் மூலம் விலைவாசி 'முழம்' ஏறுகிற நிலையைத்தான் நாம் இப்போது பார்க்கிறோம்.

அந்த முறையில் நாம் விற்பனை வரியை விதிக்கும்போது, அரசு எவ்வளவு விற்பனை வரி போடுகிறதோ அந்த அளவுக்குத்தான் பொருட்களின் விலை உயர வேண்டும் என்பதை அரசு உத்தரவாதம் செய்ய வேண்டும். ஆனால் அந்த வகையில் பார்த்தால், அரசாங்கம் ஒன்றையும் செய்யவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், எங்களுக்கு எப்படியாவது வரி வந்தால் போதும் என்று இருந்துவிடுகிறது. வியாபாரியின் டர்ன்-ஓவர்' இவ்வளவு இருக்கிறது, அதற்கு இவ்வளவு வரி கொடு என்று கேட்பதில் மட்டும் பிரயோஜனம் இல்லை. இதனால் பொருட்களை வாங்குவோர்தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே வரி உயரும் அளவுக்கு மட்டும் பொருளின் விலை ஏற்றம் இருக்கும்படி உத்தரவாதம் செய்ய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.





அடுத்து, விற்பனை வரியை ஏய்ப்பவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்று போட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த வகையில் பீனல் புரொவிஷனாகச் சிறைத் தண்டனையைப் போட்டிருப்பது மிகவும் நல்லது. ஏனென்றால் வெறும் அபராதம் போட்டால், ஏமாற்றுகிற வியாபாரிகள் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு பகுதியைக் கட்டிவிட்டு தப்பித்துக்கொள்கிறார்கள். அதனால் சிறைத் தண்டனை கொடுப்பது மிகவும் வரவேற்கத்தக்கது என்று சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தும்போது, சில்லறை வியாபாரிகள் அகப்பட்டுக்கொண்டு, பெரிய வியாபாரிகள் தப்பித்துக்கொள்ள இடம் அளிக்கக் கூடாது. பொதுவாக பெரிய மீன்கள் தப்பித்துக்கொள்ளும், சின்ன மீன்கள்தான் அகப்பட்டுக் கொள்ளும். இதற்குக் காரணம் அரசாங்க மெஷினரியில் இருக்கிற கோளாறு. பெரிய வியாபாரிகளுக்கு அரசாங்க அதிகாரிகளிடம் இருக்கிற செல்வாக்கு காரணமாக, அவர்கள் தப்பித்துக்கொள்ள முடிகிறது. எனவே பீனல் புரொவிஷனை அமுல் செய்யும்போது, பெரிய புள்ளிகள் தப்பித்துக் கொள்ளாதபடி பார்த்துக்கொள்வதோடு, நான் ஏற்கெனவே குறிப்பிட்ட சில பொருட்களை விற்பனை வரி 'ஜுரிஸ்டிக்ஷனிலிருந்து' விலக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பெரிய புள்ளிகளைச் சிறைப் பிடித்தால் அரசுக்கு அதிகமான விற்பனை வரி வசூலாக வாய்ப்பு உண்டு. எனவே இந்த பீனல் புரொவிஷனை அமுல்படுத்தும்போது, பெரிய புள்ளிகள் தப்பித்துக் கொள்ளாதிருக்கவும் அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும் என்று கேட்டு இந்த மசோதாக்களை வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN : Sir, I extend my full support to the measure that has been brought forth by the Hon. the Minister for Revenue and I would like to point out that this Bill covers only a few of the recommendations that were made by the Kaiwar Committee. We wanted a comprehensive amendment of the Sales Tax law but obviously the time at the disposal of the Government was not sufficient and only some provisions of the Act have now been amended and brought forth in this measure. Generally speaking we would like the Sales Tax administration to take care of the revenues of the State but, at the same time, I must inform the Hon. Minister that the complaint against the administration of the Sales Tax Act has been that there is unnecessary harassment of small dealers with turn-over of less than Rs. 10,000 or Rs. 1 lakh. I do not think this is a new complaint and the Hon. Minister is also aware of this. In fact, a Sales Tax raid is like watching a military invasion, with ten jeeps converging on

[Thiru A. R. Damodaran] [1979 நவம்பர் 13

the market place, blocking altogether all the roads, with 15 officers converging on a shop and literally terrorising the small business-man asking him to produce bills, taking vouchers from his pockets and contributing to the maximum harassment of the small dealer. I am glad that Thiru Nallasivan who is by no means a protector of private enterprise has come forward at least to the defence of small traders because, according to his party's philosophy, all those who are small have to be protected. I am also speaking only on behalf of the small traders and it is from them that the maximum complaint has arisen about the harassment in the administration of the Act. I am very glad that some of the provisions in the present Bill have covered the penal clause. Especially under the old Act, a maximum of 150 per cent of the tax evaded could be collected as penalty. It was represented that invariably all officers levied the maximum penalty of 150 per cent. In other words, even if there is a difference of opinion as to whether tax was leviable on a commodity or not and if it was determined by the department that tax was leviable, in spite of the genuine mistake about it, the dealer would be asked to pay 150 per cent of the tax as penalty. It is not as if in all cases there is deliberate evasion. There is a difference between deliberate evasion and non-payment of tax under the mistaken impression that a particular item is not liable to tax. I, therefore, welcome the provision that has been made on the recommendation of the Kaiwar Committee that the penalty be brought down to a limit of 50 per cent of the tax evaded. In other sections also, the recommendations of the Committee are being carried out. I would only like to inform the Hon. Minister that corruption and harassment are not going to be eliminated by any amount of amendment of our laws. Wherever I have had the privilege and pleasure of addressing merchant audiences. I have been stating to them that the time has now come for the merchant community to realise that petitions to the Government about harassment and corruption are not going to stop harassment and corruption. One of the principal reasons to-day why the petitioners, instead of reaching the Secretariat, are flowing on to the roads on the Marina is that the Government are becoming progessively more and more insensitive to public feelings on this issue. But

(முற்பகல் 11-30)

the mercantile community has realised it. I suppose a time will come when, if these raids are taking place in a manner that is



1979 நவம்பர் 13] [Thiru A. R. Damodaran]

not contemplated by law, the merchant community will also take suitable progressive action in this regard. In many places, even today. when an assessment is completed, invariably a certain donation has to be given for the completion of an assessment. You may ask. “Why does the honest dealer have to do this ?” But the fact remains that under the provisions of the law, there are so many sections under which the merchants can be endlessly harassed. For instance, a date will be fixed for completing the assessment and on that date he will be asked to come 4 or 5 weeks later. If the merchant goes 4 or 5 weeks later, he will be asked to bring bill books or account books for three years. All these constitute harassment. I would, therefore, plead with the Hon. Minister that the officers of the Department should be told in very strict terms that such unnecessary harassment will be looked upon with disfavour by the Government. This is not likely to stop even by all the amendments that we may carry out.

Sir, I mentioned about harassment and I will now turn to the long-standing plea of the merchant community that many of the items that are in the multi-point list should be converted to the single-point list. When Dr. Loganathan made his recommendation in 1959, it was one of the most historic recommendations made in the administration of sales tax. It removed almost 59 articles from the multi-point tax to the single-point tax and a revolutionary change was effected in sales tax administration. Sir, I can speak with knowledge of the petroleum trade. Petroleum was one of the products that was converted from multi-point to single-point levy as a result of which, today, the collection of tax from petroleum is 99.9 per cent of the demand. There is a balance of only 0.1 per cent. It may be due, not necessarily to pilferage, but to other factors. Even in the last year, the sales tax figures showed that 84 per cent of our tax was from single-point tax and only 16 per cent was from multi-point tax. I know what the Hon. Minister will say. He will say that he cannot afford to switch over from multi-point levy because he will lose revenue. His Department will never advise him differently in this regard because his Department has a vested interest in the continuance of the multi-point tax. It has a vested interest by reason of the fact that only if the multi-point tax continues will the Departmental officials have a say in harassing small traders and in indulging in all the procedures which will result in the depart-

mental officers getting some benefit out of it. The time has come for the Hon. Minister to take a bold step. I have already pleaded that in respect of mass-consumption goods like edible oils, articles of mass consumption like pulses, grams and such other articles, as they have abolished sales tax in the matter of foodgrains etc. . .

MR. DEPUTY CHAIRMAN : The hon Members who want necessarily to speak aside, are requested to speak in a low voice.

THIRU A. R. DAMODARAN : I am sorry, Sir, because I have a cold . . .

MR. DEPUTY CHAIRMAN : I am not mentioning about the hon. Member Thiru Damodaran. I am mentioning about others. They may speak among themselves in a low voice because the Chair is not able to hear the hon. Member Thiru A. R. Damodaran.

THIRU A. R. DAMODARAN : I just wanted to mention that it would not be difficult for us to project the revenues of the State and also ensure that the maximum number of articles were removed from multi-point list and brought under single-point levy. In fact, if we consider the Bill which the Hon. Minister has brought today, there is an item 'toffee and chocolate sold in bulk' and an item 'toffee and chocolate sold in packages'. We had single-point tax for one and multi-point tax for the other. There are a number of articles which can be positively removed from multi-point list and there are some articles for which sales tax can be totally removed. They have abolished sales tax for foodgrains, fish, perishable articles, milk, milk product, etc. Similarly, for all articles of mass consumption, the Hon. Minister can certainly do it and the loss in revenue will be minimal. There will be a loss of revenue, but it can be made up.

Sir, I want to make another point. The Hon. Minister has brought forth this measure as a concession to the mercantile community and he wants to announce that he has converted some items from multi-point to single-point levy. But while introducing single point levy on goods hitherto subjected to multi-point levy, Government seem to have one temptation and that is to raise the tax from 4 per cent to 8 per cent. I would like to point out to the Hon. Minister that this is an arithmetical exercise which is totally unnecessary. Even if they retain it at a single-point levy



of 4 per cent, they will get the maximum revenue from this. But this is a precaution and an arithmetical exercise that is carried out by the departmental officers because they will say that they will otherwise lose revenue. I would plead with the Hon. Minister that even when he brings goods from multi-point to single-point list, he may see that they are taxed only at 4 per cent and not at 8 per cent, 12 per cent and multiples of 4 per cent. The sales tax is very high in our State. For some products, the sales tax is as high as 16 per cent. In view of the inflation, the sales tax revenue automatically registers an increase. If there is a twenty per cent increase in price level, there will be—not a corresponding increase —an increase in sales tax revenues. There is a buoyancy in sales tax revenue. I, therefore, request the Hon. Minister, since even during the budget session a number of items are likely to be taxed, bringing new articles into the sales tax net, to consider the plea of the trade for switching over certain items from multi-point to single-point sales tax. I realise that the multi-point sales tax may have to continue in respect of items of agricultural commodities where identification of the point of sale is difficult ; but in a large number of items, it should be possible for the Hon. Minister to see that it is removed because small traders and dealers would then be removed from the net of the sales tax collection machinery and harassment would be considerably eliminated in respect of over 50 to 60 thousand small traders. In regard to turn-over also, I would like to point out that there has been a 30 per cent increase in the price of all commodities and the turn-over now prescribed as exempt from sales tax is Rs. 50,000 and it is Rs. one lakh for composition. This may be raised during the budget session to something like double that figure because inflation has taken place and a number of small dealers who are getting very little profit would be benefited. I, therefore, plead with the Hon. Minister that this may be considered by him.

I would like to place on record that even though one year has elapsed after the Committee had given its report, at least now the Hon. Minister has come with a Bill embodying some provisions in the Bill in pursuance of the recommendations of the Committee. Of course, out of 103 recommendations that have been made by the Committee, only about 7 or 8 have been dealt with in this Bill. About 60 to 70 of them can be dealt with by mere executive instructions. Some of them will have to be given effect to by way of amendment to the Sales Tax Act. Since this is a

[Thiru A. R. Damodaran] [1979 நவம்பர் 1

major source of revenue to the State, I hope the Hon. Minister will ponder over the matter deeply before the Budget session and bring forth certain salutary measures which will be welcomed by the merchant community. Having said this, I welcome this Bill wholeheartedly and thank the Government for at least coming forward with some amendments. I will only say that the task is not complete and we expect the Hon. Minister to come forward with further Bills during the course of the next three or four months.

டாக்டர் எச். வி. ஹண்டே: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,
இந்த மசோதாவை வரவேற்று இரண்டொரு வார்த்தைகள் கூறலாம் என்று
நான் நினைக்கிறேன். பலமுனை வரியை விதிக்க வேண்டாமென்றும்,
அதற்குப் பதிலாக ஒருமுனை வரியை விதிக்கலாம் என்றும் எற்கெனவே பல
முறை இந்த மன்றத்தில் சொல்லப்பட்டு, இப்போது படிப்படியாக ஒருமுனை
வரியாக மாற்றியமைக்கக் கூடிய நிலை வருகிற நேரத்தில், இந்த அரசாங்
கத்தை அத்தனை பெரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலும்
முக்கியமாக இந்த வரிகளை எப்படிப் போடுவது, வியாபாரிகளைத் துன்புறுத்
தாமல் இந்த வரிகளை எப்படி வசூல் செய்வது என்பதற்கான விதிகளை
மிகத் தெளிவாக வரையறுக்க வேண்டுமென்ற மதிப்பிற்குரிய உறுப்பினர்
திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஆதரித்து
அதன் அடிப்படையிலே அரசாங்கம் செயலாற்ற வேண்டுமென்று இந்த நேரத்
திலே ஒரு யோசனையைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால்
சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், இப்போது ஆயிரக்கணக்கான
வியாபாரிகள் விற்பனை வரி விதிப்பின் எல்லைக்குள் வருகிறார்கள். ஆகவே
அரசாங்கம் என்ன விதிமுறைகளை வகுத்தால், கீழ் மட்டத்தில் பணியாற்றக்
கூடிய அதிகாரிகள் நல்ல முறையில் செயலாற்ற முடியும் என்பதை இந்த
மன்றத்திலே சொல்லுவதன் மூலம், இந்தத் துறையிலுள்ள அதிகாரிகள்,
இரண்டு தரப்புகளில் இருந்தும் வரக்கூடிய கருத்துக்களைப் புரிந்துகொண்டு,
நல்ல முறையில் விற்பனை வரியை விதிக்க வேண்டும், சேகரிக்க வேண்டும்,
அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உணர்வு அந்த
அதிகாரிகளின் மத்தியிலே ஏற்படுத்துமென்ற நம்பிக்கையோடு நான் இங்கே
பேசுவதற்கு முற்படுகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நம்



1979 நவம்பர் 13] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(நண்பகல் 12-00)

முடைய சேல்ஸ் டாக்ஸ் இலாகாவிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். பல
முறை பல நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். வியாபாரிகளும் சேல்ஸ்
டாக்ஸ் அதிகாரிகளாகத்தான் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். வியாபாரி
களைப் பொறுத்தவரையில், கன்சுமர்களிடமிருந்து, 6 பர்சென்ட், 7 பர்சென்ட்
என்று வரியை வாங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி வாங்கி அந்த
வரியை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய அளவில் இருக்கிறார்கள்.
ஒவ்வொரு வியாபாரியும் ஒரு சேல்ஸ் டாக்ஸ் அதிகாரியாகத்தான் இருக்கிறார்
என்பதிலே தமக்குக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்த அடிப்
படையிலேதான் இந்த வியாபாரிகள் செயல்பட வேண்டும் என்று நாம் இங்கே
வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அப்படிச் செய்கின்ற நேரத்திலே இந்த
அதிகாரிகள் அங்கே சென்று தொந்தரவு கொடுக்காமல், தவறான வழியிலே
போகாமலிருக்க இந்த மசோதா ஒரு அளவுக்குப் பயன்படும் என்பதை நான்
வரவேற்கிறேன். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர்.
தாமோதரன் அவர்கள்கூட சொல்லியிருக்கிறார்கள். என்னவென்றால் இன்கம்
டாக்ஸ் என்று பார்த்தால்கூட, அந்த இலாகாவிலே ஒரு முறையை வகுத்
திருக்கிறார்கள். அங்கு ஒரு தேதி குறிப்பிடுகிறார்கள். அந்தத் தேதி
யிலே, அதிகாரிகள் அங்கே வந்து அவர்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்
கிறார்கள். 11 மணிக்கு வரவேண்டுமென்று சொன்னால், அந்த அதிகாரிகள்
அவர்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். 'அசெர்.' என்று
சொல்லக்கூடியவர்கள் அங்கு போனவுடனே காரியம் முடிந்துவிடுகிறது.
இப்படி நல்ல வகையிலே அங்கே செய்கிறார்கள். அதற்கு என்ன காரணம்
சொல்கின்றார்கள்? அங்கே அதிகமான அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று
சொல்கின்றார்கள். ஆனால் இங்கே ஒவ்வொரு அதிகாரிக்கும் 'ஒர்க்லோட்'
அதிகமாக இருக்கிறது என்று ஒரு பிரச்சினை எழுப்பப்படுகிறது. அந்த
'ஒர்க்லோட்' இருப்பதை ஓரளவுக்குக் குறைத்து, கூடிய வரையிலே ஒரு
அதிகாரிக்கு இவ்வளவு அசெஸ்சீஸ் என்று நிர்ணயிக்க வேண்டும். இத்தனை
அதிகாரிகளுக்கு இத்தனை அசெஸ்சீஸ் என்று இருக்க வேண்டும். அந்த
அளவுக்கு ஒரு நல்ல திட்டம் வகுக்க வேண்டும். எத்தனை அதிகாரிகள்
இருக்க வேண்டும் என்று கணக்கிட்டுச் செய்ய வேண்டும். சென்னைக்கு
இருக்கக்கூடிய அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. அது

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1979 நவம்பர் 13

தான் முக்கியமான காரணம் என்று சொல்கிறார்கள்.
பார்க்க முடிவதில்லை. ஏறத்தாழ ஒரு மணி நேரம், 2 மணி நேரம்
வியாபாரிகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும், கோர்ட்
டிலே அடுத்த நாள் வரவேண்டும் என்று வாய்தா போடுகின்றார்களே, அது
மாதிரி சம்பவங்களும் ஏற்படுகின்றன. அதையெல்லாம் நாம் தவிர்க்க
வேண்டுமென்றால், அதிகாரிகளுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும்
என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு நல்ல
வகை செய்த பிறகு, அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் ஏற்படுத்
தாமல் கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால் ஏற்கெனவே ஒரு கமிட்டி போட்டு
அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகளை எல்லாம் இங்கே ஓரளவுக்கு ஒரு
மசோதா மூலமாகக் கொண்டு வந்து எந்த அளவுக்கு வியாபாரிகளுடைய
தொல்லைகளை அரசாங்கம் புரிந்துகொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்
காட்டாக இந்த மசோதா இருக்கிறது. நிச்சயமாக தேவைப்பட்டால், சில
மாதங்களில் அது ஆர்டராக இருந்தாலும் சரி, சட்டமாக இருந்தாலும் சரி,
அதைக் கொண்டுவருவதாக இருந்தால்கூட அதற்கு அரசாங்கம் தயக்கம்
காட்டாது என்பதையும், அந்த அளவுக்கு வியாபாரிகளுடைய தொல்லை
களைப் புரிந்து கொண்டிருக்கிறது என்பதையும் நினைக்கின்ற நேரத்திலே
இந்த மசோதாவைப் பாராட்ட வேண்டுமென்று சொல்லி, என்னுடைய
வார்த்தைகளை முடித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,
விற்பனை வரி பற்றிய இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கின்ற நான் ஒரே
ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். விற்பனை
வரிச் சட்டத்தைப் பொறுத்த வரையிலும், இது ஒரு பொன் முட்டையிடும்
வாத்து என்ற அளவிலே, அரசே எதிர்பார்க்காத அளவிலே, பெரிய வருவாய்
தருகின்ற ஒன்றாக இருக்கிறது. விற்பனை வரிச் சட்டம் வந்த காலத்திலே
யிருந்து இன்று வரையிலும் பல்வேறு சட்டங்கள் அவ்வப்போது கொண்டு
வரப்பட்டு, இப்போது இந்த விற்பனை வரி பெருக்கப்பட்டிருக்கிறது.
வருமானம் பெருகியிருக்கிறது என்று சொல்கின்ற நிலையிலே, சங்கடங்களும்
பெருகியிருக்கின்றன என்ற நிலைகளும் உண்டு. அதை மொத்தமாகப்
பரிசீலனை செய்து இந்தச் சட்டத்தை முறைப்படுத்த வேண்டு
மென்று கோரிக்கைகள் பல ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றன. அந்தக்
கோரிக்கையை ஏற்றுச் வரையிலேதான் கெய்வார் கமிட்டி அமைக்கப்பட்டது



1979 நவம்பர் 13] (திரு. க. இராமமூர்த்தி)

என்று அறிகிறேன். ஆனால் இன்றைக்குக் கொடுத்திருக்கின்ற விவரங்களைக் கொண்டு பார்க்கிறபோது, கெய்வார் கமிட்டி அறிக்கை அரசுக்கு வந்து ஓராண்டுக்குப் பிறகு, இந்த ஓராண்டுக் காலமாகப் பரிசீலனை செய்த பிறகு, இந்த ஒரு சட்ட முன்வடிவுதான் வந்திருக்கிறது என்பது அவ்வளவு மகிழ்ச்சி கரமாக இல்லை. இதை வரவேற்கிறோம் என்பது வேறு. ஆனால் நல்ல கால அவகாசம் இருந்திருக்கிறது. இந்த விற்பனை வரிச் சட்டத்தை முழு அளவுக்கு முறைப்படுத்தியிருக்க முடியும். அவ்வப்போது பல்வேறு பிரச்சினை கள் எழுகின்றன. சில உச்ச வரம்புச் சட்டத்தைக் குறித்து பல பிரச்சினை கள் எழுவதால், அவைகளைத் தீர்க்க தனித்தனியாகத் திருத்தச் சட்ட முன் வடிவு கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அதிலே வேண்டுமானால் நியாயம் இருக்கலாம். ஆனால் விற்பனை வரிச் சட்டத்தைப் பொறுத்த வரையில், இவ்வளவு அவகாசம் இருந்தும்கூட, ஓராண்டுக் காலம் ஆகியும்கூட, சிபாரிசுகளிலே நியாயம் இருக்கிறது என்று அரசு ஏற்ற பிறகும்கூட, அந்த அறிக்கையின் அடிப்படையிலே ஒரு தெளிவான, முறைப்படுத்தப்பட்ட, முழு மையான சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கலாம். அப்படிக் கொண்டுவர வேண்டுமென்று விரும்பினேன். ஓராண்டுக்குப் பிறகும் இதுதான் என்றால், இன்னும் குறை காலத்தில் கொஞ்சம் அளவுக்குத்தான் இதிலே கை வைப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். இதிலே இருக் கின்ற சங்கடங்களையெல்லாம் பார்க்க வேண்டும். வியாபாரிகளுக்கு, பொது மக்களுக்கு, அரசுக்கு ஏற்படுகின்ற சங்கடங்களையெல்லாம் பார்த்து இவை களையெல்லாம் தீர்க்கும் வகையிலே இன்னும் கொஞ்சம் வேகமாக இயங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று 'கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்' பற்றியது. அந்த ரிப்போர்ட் இன்றைக்கு வெளிவந்திருக்கிறது. இதன் பிரதிகளை அங்கத்தினர் களுக்குக் கொடுத்தாக வேண்டும். அதிலே என்ன நாங்கள் புதிதாகப் படித்துத் தெரிந்து கொள்ளப் போகிறோம்? அரசு வேண்டாமென்று கருதுவதையெல்லாம் தெரிந்துகொள்ளப் போகிறோம். அது அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே திருத்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருகிறார்கள். அறிக்கை அவையில் இருக்கிறது என்று கருதுகிறேன். இந்தச் சட்ட முன்வடிவை அரசு இப்போது கொண்டு வருவதற்கு அடிப்படையான கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டின் பிரதிகளை எங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறேன். அந்த உணர்வில்லாமல்

ஏன் இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. அதைக் கொடுத்துத்தான் முழுமைப்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அறிக்கையின் விவரங்களை எங்களிடமிருந்து மறைத்துவிட்டதாகச் சொல்ல மாட்டேன். கொடுக்கக்கூடாது என்று அரசு நினைப்பதாக நான் கருத வில்லை. கொடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கின்றது என்று உணர் வில்லாமலேயே அரசு செய்ததன் மூலம், இந்தச் சட்டம் முழுமை பெற வாய்ப் பில்லாமல் போகிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டை உடனடியாக மேலவை உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும். அடுத்த முறை இரண்டொரு காரணங்களுக்காக மட்டும் திருத்தம் கொண்டு வருவதை விட்டு, முழுமையாக இருக்கின்ற சட்டமாக இந்த அவைக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவின் மீது ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவில் காரண நோக்க விளக்கம் என்ற குறிப்பில், "வரி செலுத்துபவர்களுக்குள்ள தொல்லை களைக் குறைப்பது, வரி வசூல் நடவடிக்கையை மேம்படுத்துவது, ஊழலை நீக்குவது போன்ற முப்பெரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய மாற்றங்கள் குறித்து ஆலோசனை வழங்கும் பொருட்டு, விற்பனை வரிச் சட்டத்தில் வரி மதிப்பீடு, வரி வசூல், வரி விதிப்பது குறித்து மேல் முறையீடு ஆகியவை தொடர்பாகவுள்ள நடைமுறைகளை விரிவாகப் பரிசீலனை செய்வதற்கு இது ஏற்படுத்தப்பட்டது" என்று இருக்கிறது. நான் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இதையெல்லாம் முழு மனதோடு ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு அரசாங்கம் செயல்படுவதற்கு வருவாய் இன்றியமையாதது. தமிழகத்திலே வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கின்றபோது, குறிப்பாக வருமானத்தில் ஏறத்தாழ 30 சதத்தை இந்த இலாகாதான் வரியாகப் பெற்று ஒழுங்காக கூட்டித் தருகிறது. தமிழ் நாட்டிலே மற்ற இலாகாக்களில் எல்லாம் ஒழுங்காக வசூல் செய்யாத நிலையிலே, இந்த ஒரு இலாகாவாவது செம்மை யாகச் செயல்படுகிறது என்பதைப் பார்க்கும்போது, உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த இலாகாவிலே சில குறைபாடுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருந்தாலுங்கூட நிர்வாகத்திலே இருக்கின்ற அதிகாரிகள், அமைச்சர்கள் இதையெல்லாம் சரி செய்வார்கள் என்று கருதுகிறேன். இருந் தாலும்கூட, இந்தச் சட்ட முன்வடிவின் 6-வது பிரிவில் மூலச் சட்டத்தின் 26 (2) உட்பிரிவில் "வரி நிர்ணயம் செய்யப்பட்ட வரித் தொகையில் ஒன்றரை



மடங்குக்கு அதிகப்படாத அபராதம்" என்று சொன்னார்கள். அதற்குப் பதி லாக கீழ்க்கண்டவாறு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருக் கிறார்கள். "அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வரித் தொகையில் 50 விழுக் காடுகளுக்குக் குறையாமலும், ஆனால் 150 விழுக்காடுகளுக்கு மேற்படாமலும் உள்ள தொகையை அபராதமாக". பொதுவாகவே வியாபாரிகள் தவறு செய்வ துண்டு. வியாபாரிகளுக்காக நான் வாதாட விரும்பவில்லை. அதே நேரத்திலே வியாபாரிகள் அனைவரும் காமர்ஸ் கிராஜுவேட்டை வைத்துக்கொண்டு கணக்கு எழுதுவது இல்லை. பொதுவாக ஒரு கணக்குப்பிள்ளையை வைத்துக் கொண்டுதான் கணக்கு எழுதுவார்கள். அப்படி கணக்கு எழுதக்கூடியவன் ஒரு பெரிய அறிவாளியா என்றால், இல்லை. 5-வது, 6-வது படித்தவர்களைக் கூட சிறு வியாபாரிகள், நடுத்தர வியாபாரிகள் கணக்கெழுதச் சொல்கிறார்கள். நாம் அதைப் பார்க்கிறோம். அப்படி ஏதாவது அதில் தவறு ஏற்படுமானால், இதற்கு முன் இருந்த சட்டப்படி அதிகபட்சம் ஒன்றரை மடங்கு அபராதம்; ஆனால் அந்த அதிகாரிகள் விரும்பினால் இந்த அபராதம் 10 சதம் விதிக்கலாம் அல்லது 15 சதம் விதிக்கலாம். உண்மையிலேயே வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்றியிருப்பார்களானால் அவர்களை தண்டிக்க வேண்டும்.

(பிற்பகல் 12-10)

அரசாங்கத்தை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கமில்லாமலேயே தவறுகள் ஏற்படலாம், எப்படி அரசாங்க நிர்வாகத்திலே சில நேரங்களில் தவறுகள் ஏற்படுகின்றனவோ அதைப்போல வியாபாரிகளுக்கு அவர்களுடைய வியாபாரத்தில் தவறு ஏற்படும்போது அதற்கு அபராதம் விதிப்பதற்கான டிஸ்கிரிஷனரி பவர்ஸைக் கொடுக்கும்போது, தவறு ஏற்பட்டதற்கான தன்மையை அவர்கள் ஆராய்வார்கள். ஆறாவது பிரிவில் குறைந்த பட்ச அபராதம் 50 சதவிகிதம் என்று வைத்திருக்கிறோம். ஏற்கெனவே அதிக பட்சம் என்று வைத்துவிட்டு, அதாவது மினிமம் 50 சத விகிதம், மேக்சிமம் 100 சத விகிதம் என்று வைத்திருக்கிறோம். நான் ஏதோ வியாபாரிகளுக்காக வாதாடுவதாக நினைக்கக் கூடாது. உண்மையிலேயே அரசாங்கத்தை ஏமாற்றக்கூடாதென்று நினைக்கிறவர்களைக்கூட தண்டிப் பதுபோல, குறைந்தபட்ச அபராதத்தை வைத்திருக்கிறோம். அமைச்சரவர்கள் எந்த நோக்கத்திற்காக அதைச் சேர்த்திருக் கிறார்களென்பது தெரியாது. உள்ளபடியே தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, அதை திராவிட முன்னேற்றக் கழகம் வர வேற்கிறது. அவர்களையும் அறியாமல் ஏற்படும் தவறுகளுக்காகத் தண்டிக்கும் போது குறைந்த பட்சம் 50 சதவிகிதம் அபராதம் வசூலிக்க வேண்டுமென்று

(திரு. ஆற்காடு நா. வீராசாமி) [1979 நவம்பர் 13

இருக்கும் பிரிவை அரசாங்கம் நல்ல மனதோடு மறு பரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக நல்ல வருவாயை ஈட்டித்
தரும் துறையில், மேலும் நல்ல முறையில் வருவாயை ஈட்டுவதற்காக எத்தனை
மாற்றங்களை அரசு கொண்டுவந்தாலும், அல்லது சீர்திருத்தங்களைக் கொண்டு
வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அவைகளை வரவேற்கக்
கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை
வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவரவர்களே,
இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து எல்லோரும் பேசி, இதிலே குறைபாடுகள்
இருக்கின்றன என்று சிறப்பாக யாரும் சொல்லாவிட்டாலும், இந்தச் சட்ட
முன்வடிவு காலதாமதமாக வந்திருக்கிறது என்று சிலர் குறிப்பிட்டிருக்கிறார்
கள். காலதாமதமாக இந்தச் சட்ட முன்வடிவு வரவில்லை என்று சொல்ல
இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்
களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு, மாண்புமிகு உறுப்
பினர் திரு. தாமோதரன் அவர்களுக்கும் சொல்ல இருக்கிறேன். விற்பனை
வரியைப் பொறுத்தவரையிலும், இன்று போடப்பட்டு, வசூல் செய்யப்படுகிற
பணத்தையெல்லாம், இந்த அரசு, இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காகச்
செலவு செய்கிறது என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.
ஆனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற நாம், அதிலே எங்கேயும்
தவறு நடக்காமல், அதாவது நூற்றுக்கு நூறு தவறு நடக்காமல் பார்த்துக்
கொள்ள முடியாது. நூற்றுக்கு நூறு தவறு நடக்காமல் முயற்சி செய்தால்
தான், 80 அல்லது 90 சதவிகிதம் நாம் இதிலே வெற்றி காண முடியும்.
அப்படிப்பட்ட வெற்றியைக் காண என் ஒருவனால் மட்டும் அல்லது அரசால்
மட்டும் முடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் மேலவையின்
மூலமாகத் தெரிவித்துக்கொள்வது, இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்
களெல்லாம் எங்கே தவறு நடந்தாலும், அவற்றைத் தெரிவிக்க வேண்டும்.
அரசுக்கு வர வேண்டிய பணம் ஏமாற்றப்படுகிறது என்பதை உணர்ந்து,
அவற்றை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தங்களுக்கு வருகிற வருவாயில்
தவறு ஏற்பட்டால், அதில் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ அந்த
அளவிற்கு அக்கறை காட்டி, எங்கே தவறு நடந்தாலும்—வியாபாரிகள் தவறு
செய்தாலும் சரி, அதிகாரிகள் தவறு செய்தாலும் சரி, அல்லது இடையிலே
உள்ளவர்கள் தவறு செய்தாலும் சரி—அவைகளையெல்லாம் அரசுக்குச்
சொல்ல வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் பணி



1979 நவம்பர் 13] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

வோடு கேட்டுக்கொள்வதற்குக் காரணம், போடுகிற வரியெல்லாம் அரசுக்கு
வரவில்லை, சமுதாயத்திற்கு வருகிறது. அந்தப் பொது நோக்கத்தை எண்ணி
விட்டால், இதைப்பற்றி எண்ணிப் பார்க்கிறபோது ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி
என்று பார்க்காமல் அதில் இருக்கிற நன்மைகளை ஆதரிப்பார்களென்பதை
என்னால் ஏற்றுக்கொள்ள முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, சிறிய வியாபாரிகள் இதனால்
கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு முனை வரி,
பலமுனை வரி பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் பணிவன்போடு ஒன்றைத்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய வீட்டுக்கு சோதனைக்கு
வருகிறோம், அந்தச் சோதனையில் அயப்படாமல் இருந்துவிடுங்கள் என்று
சொல்லும்போது, அந்தச் சோதனையில் யாரும் வெற்றி பெற முடியும்.
சோதனைக்கு வருகிறோமென்று ஒரு நாளைக் குறிப்பிடுகிறோம். குறிப்
பிட்ட நாளில் அந்தச் சோதனையில் யாரும் தவறில்லாமல் தேர்ந்துவிட்டால்,
பலமுனை வரியை ஒருமுனை வரியாகக் கொண்டு வரத் தயாராக இருக்கிறேன்.
வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், குறிப்பிட்ட ஒரு மாதத்தில்
தமிழகத்தில் இருக்கிற எல்லா பரிசோதனைச் சாவடிகளிலும் பொருள்களை
ஏற்றிச் செல்கிற லாரிகள் பரிசோதிக்கப்படுகிறபோது . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் அவையில்
அமைதி காக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஒரே சமயத்தில் எல்லோரும்
பேசினால் என்னால் பேச முடியவில்லை . . . விட்ட இடம் எனக்கு
ஞாபகம் இருக்கிறது (சிரிப்பு) . . . நான் உறுப்பினர்களுடைய மனதைப்
புண்படுத்தி விட்டேனோ என்றுதான் எண்ணினேன்.

ஒரு மாதத்தை நாங்கள் சொல்லுகிறோம். இந்த மாதத்தில், தமிழகத்
திலுள்ள சோதனைச் சாவடிகளில் பரிசோதிக்கப்படுகிற லாரிகளில் நூற்றுக்
குத் தொண்ணூறு அல்லது 95 லாரிகள் பிடிபடாமல், குற்றமில்லாமல் முறைப்
படி செல்லுமென்று சொல்லிவிட்டால், நான் வணிகர்களுடைய கோரிக்கைகள்
பூராவையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுடைய
கோரிக்கைகள் பூராவையும் ஏற்றுக்கொண்டு, எல்லாவற்றுக்கும் ஒருமுனை வரி
யாகக் கொண்டு வருகிறேன். உங்கள் வீட்டுக்குப் பரிசோதனைக்கு
வருகிறோமென்று சொல்லிவிட்டு வருகிறபோது, உங்கள் வீட்டில் பரிசோதனை

யில் அகப்படக்கூடாத பொருள்களை வைத்துக்கொள்ளாமல் இருக்க சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது. வணிகர்களெல்லாம் ஒன்றாகக் கூடி, தீர்மானம் போட்டு, லாரிகளில் ஏற்றப்படுகிற எல்லாவற்றுக்கும் முறையாகப் பட்டியல் வைத்துக்கொண்டு செய்வது என்று தீர்மானம் போட்டுக் கொடுத்த பிறகு, அந்த ஒரு மாதம் பரிசோதனை செய்கிறோம். எல்லாம் வேண்டாம், நூற்றுக்குத் தொண்ணூறு லாரிகள் குற்றமில்லாமல் போனால், அவர்கள் சொல்வதைப்போல நான் ஏற்றுக்கொள்கிறேன். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் உறுதி தருவார்களா? (சிரிப்பு) நான் சொல்லிவிடுகிறேன், ஒரு மாதம் மட்டும் 90 சதவிகிதம் லாரிகள் முறையாக இருந்தால் போதும். நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், நான் எவ்வளவு சங்கடமான நிலையில் இருக்கிறேன் என்பதை. பொன் முட்டையிடும் வாத்துக்குத் தீனி போடத் தயாராக இருக்கிறேன். ஆனால் முட்டைகளை பிறர் எடுத்துச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லா முட்டைகளையும் நான் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அரசாங்கத்திற்கு வர வேண்டிய பகுதி வர வேண்டும். 10 முட்டைகள் போட்டால், அதில் 4 முட்டைகளைத் திருடிக்கொண்டால், பின்னால் நான் என்ன செய்வது? அதனால்தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தேன்.

உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீண்ட கணக்கினை உங்களுக்குக் கொடுக்காவிட்டாலும், 6 மாதங்களில் பரிசோதிக்கப்படுகிறபோது .... பெரிய வியாபாரிகள், சிறிய வியாபாரிகள் பற்றிச் சொல்லப்பட்டது. சிறிய வியாபாரிகளிடத்தில், இந்த இடத்தில் பரிசோதனை செய்தார்களென்று சொல்லுங்கள், நான் கேட்கிறேன். இன்றைக்கு 50 ஆயிரம் ரூபாய் வரைக் கும் வியாபாரம் செய்கிறவர்களுக்கு வரியில்லை. 50,000 ரூபாயிலிருந்து 1 லட்சம் வரை அவர்களுக்கு 'கம்பவுண்டிங்' இருக்கிறது. வேறு எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஏற்றித் தரவேண்டுமென்று திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். ஏற்றித் தரவேண்டுமென்றால், இன்றைக்கு விலை

(பிற்பகல் 12-20)

வாசி ஏறியிருக்கிறது. அதே நிலைமை தொடர்ந்து இருக்குமா? ஏறுமுகமும் இறங்குமுகமும் நடைபெற்றுக்கொண்டிருப்பது தான். இன்று விலைவாசி ஏறும்; நாளை இறங்கும். அதற்காக கொள்கையை மாற்றிவிட முடியாது. [illegible]றைக்கு ஏறியிருக்கிறது என்று உடனே... கையை மாற்றிவிட...





திரும்ப அதைக் குறைக்க முடியாது. உங்களுக்கு வேண்டுமானால் ஒன்றைச் சொல்கிறேன். தமிழகம் பூராவும் 6 மாதத்தில் திடீர் சோதனை செய்தபோது, கணக்குக்கு வராத பொருள்கள் 7½ கோடி ரூபாய் மதிப்புள்ளவை. 6 மாதத்தில் மட்டும் உள்ள கணக்கு இது. ஆக கணக்குக்கு 6 மாதத்திற்குள் வராதது 7½ கோடி ரூபாய். வரியாக நாம் எதிர்பார்ப்பது 76 இலட்சம் ரூபாய். இதிலுள்ள யாருமே சிறு வியாபாரிகள் அல்ல. காரணம் 50 ஆயிரம் ரூபாய், 1 இலட்சம் ரூபாய் இதற்கு மேலாகப் பொருள்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. சிறிய வியாபாரிகள் என்றால், இவ்வளவு தொகைக்கு வாங்கியிருக்க முடியுமா?

திரு. ஏ. ஆர். தாமோதரன்.: இந்தத் துறையிலிருந்து 100 கோடி ரூபாய்க்கு மேல் டர்ன்ஓவர் டாக்ஸ் ஆக வருகிறது. அமைச்சர் அவர்கள் சொல்வது ஒன்றும் அதிகமாக இல்லை. இந்த டிப்பார்ட்மெண்ட் இப்படிப்பட்ட விவரங்களைக் கொடுத்து எப்படியோ பயமுறுத்துகிறார்கள் அதிகாரிகள் கொடுத்த விவரங்களைப் பார்த்த உடனே, எல்லா வியாபாரிகளும் கொள்ளையடிக்கிறார்கள் என்ற எண்ணம் அமைச்சருக்கு வரக்கூடாது. தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களை அந்த எண்ணத்தை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வியாபாரிகளிலே குற்றவாளிகள் அதிகமாக இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் கணக்கெடுத்தால், இன்றைக்கு இலட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். நூறு குற்றவாளிகள் தான் இருக்கிறார்கள், ஆகவே நாட்டில் இருக்கிற காவல் நிலையங்களையெல்லாம் எடுங்கள் என்று சொன்னால், அப்படியே காவல் நிலையங்களை எல்லாம் எடுத்தால், இந்த நூறு குற்றவாளிகள் 1,000 என்றும் 10,000 என்றும் ஆக மாட்டார்களா? இவ்வளவுக்கும் நாம் கண்டிப்பாக இதில் இருப்பதால் தான் குறைந்த எண்ணிக்கையுள்ள குற்றவாளிகள் இன்றைய தினம் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கொஞ்சம் குற்றவாளிகள்தான் நாட்டில் இருக்கிறார்கள் என்று சொல்லி, காவல் நிலையங்களை எல்லாம் நீக்கிவிட்டால் என்ன ஆகும்?

Thiru K. RAMAMOORTHY: It is a good point.

The Hon. Thiru S. D. SOMASUNDARAM: It is not a good point but it is necessary.

அடுத்தபடியாக, கெய்வார் கமிட்டி பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
சொன்னார்கள். அதுபோல் சிங்கிள் பாயின்ட் லெவி பற்றியும் சொன்னார்கள்.
உங்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில்
வளர்ச்சியாலும், மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வணிகப் பெருக்கத்
தாலும், இதுவரை 136 பொருள்கள் ஒருமுனை வரியின் கீழ் கொண்டு வரப்
பட்டிருக்கின்றன. உற்பத்தி அல்லது இறக்குமதி அல்லது பங்கீட்டு முறை
ஆகியவற்றின் முறையாகவும், இலகுவாகவும் அடையாளம் கண்டுகொள்ளத்
தக்க பொருள்கள் மட்டுமே ஒருமுனை வரியின்கீழ் கொண்டு வரப்படும்
என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். கெய்வார் கமிட்டி 26—10—1978 அன்று அறிக்கை
கொடுத்திருக்கிறது. 'ஒரு வருஷம் ஆகிவிட்டது' என்பதை ஏற்றுக்கொள்
கிறேன். அதன் பரிந்துரைகள் 116. 7 பரிந்துரைகள்மீது நடவடிக்கை
எடுக்க முடியாது. சட்டம் மற்றும் விதிகளில் திருத்தம் தேவைப்படும்
பரிந்துரைகள் 50. மீதமுள்ள 51 பரிந்துரைகளைப் பொறுத்தவரை, சட்டமே
இல்லாமல் விதிகள் மூலம் திருத்தப்படும். ஆனால் நான் மாண்புமிகு உறுப்
பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்வேன், "ஒரு வருஷம் ஆகி
விட்டது, ஒரு வருட காலமாக சும்மா இருந்தோம்" என்று சொல்லுகிறீர்களே,
அது சரியல்ல. நாங்கள் சும்மா இருக்கவில்லை. 53 பரிந்துரைகள் இதற்கு
முன்பே நடைமுறைக்கு வந்து விட்டன. அதுமட்டுமல்ல, நான் உங்களுக்கு
ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். வியாபாரிகளுக்குச் சங்கடமாக இருக்
கிறது என்றும், பல முறை அவர்களிடத்திலே பரிசோதனை செய்கிறார்கள்
என்றும், அவ்வாறு பரிசோதனை செய்யக்கூடாது என்றும் அந்தக் கமிட்டி
பரிந்துரையில் கூறியிருக்கிறது. அடிக்கடி பலவிதமான அதிகாரிகள் வியாபார
ஸ்தலங்களுக்குச் செல்கிறார்கள். பரிசோதிக்கிறார்கள், அப்படிச் செய்யக்
கூடாது என்று சொன்னார்கள். அதற்காகத்தான் இன்றைய தினம் அதை
மாற்றி "என்போர்ஸ்மென்ட் விங்" என்கின்ற ஒரே ஒரு விங்கை ஏற்படுத்தி,
10 மாதங்கள் ஓடிவிட்டன. பரிந்துரை வந்து ஓர் ஆண்டு தான் ஆகிறது.
ஆனால் நாங்கள் இந்த விங்கை ஏற்படுத்தி 10 மாதங்கள் ஆகிறது.
அரசினுடைய நடவடிக்கைகளையெல்லாம் தொடர்ந்து கவனமாகக் கூர்ந்து
கவனித்துக்கொண்டிருப்பது பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களுடைய
கடமை. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைப்
போன்ற ஒரு சிறந்த அரசியல்வாதி, மேலவை உறுப்பினர் நிச்சயமாக கூர்ந்து
கவனித்துவரக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



கெய்வார் கமிட்டி ரிப்போர்ட் வந்தவுடனே அதுபற்றி செய்தித் தாளில் வந்தது. மேலும் அவ்வப்போது சட்டத்தைப் பற்றியும் செய்தித் தாளில் வந்திருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** கெய்வார் கமிட்டி ரிப்போர்ட் எங்களுக்கெல்லாம் கொடுக்கப்படவில்லை, அதைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதில் என்ன என்ன சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிய வேண்டும். சிபாரிசுகள் என்ன என்ன என்று நாங்கள் ரிப்போர்ட்டைப் படித்த பிறகு தான், அதுபற்றி எங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கெய்வார் கமிட்டி ரிப்போர்ட்டை உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டு மென்று கேட்கிறோம். அதைக் கொடுப்பதில் என்ன சங்கடம் இருக்க முடியும் ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** ரிப்போர்ட்டின் நோக்கம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அறிக்கையிலிருந்து பரிந்துரைகளைப் படித்துக் காட்டினார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் வணிகத் துறையைச் சீர்திருத்தம் செய்ய, மாற்றியமைக்க ஏற்படுத்தப்பட்ட கெய்வார் கமிட்டி தன்னுடைய அறிக்கையை 1978 ஆம் ஆண்டு அரசுக்குக் கொடுத்தது. இதுவரை சட்டமன்றத்தில் அறிக்கையை வைக்கவில்லை. 1976 ஆம் ஆண்டு திரைப்படத் தொழில் சம்பந்தமான விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையும் அவையில் வைக்கப்படவில்லை. இவைகள் எல்லாம் வைக்கப்படாமல் இருக்கும்போது, இதை மட்டும் ஏன் வைக்க வேண்டும் என்றாலும் கூட, இதில் எத்தனை பக்கம் இருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இவற்றையெல்லாம் உறுப்பினர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்றால், ஒரு ஆயிரம் காப்பிகள் (Copies) தேவைப்படும். இதனால் ஏற்படுகின்ற செலவையும், நன்மையையும் பார்க்கும் போது, கொஞ்சம் அதிகமாகச் செலவாகும். மேலும் இந்த மாதிரி அறிக்கை களையெல்லாம் அவைமுன் வைக்காமலிருப்பதற்கு முன்னோடிகள் கூட இருக்கின்றன. அந்த முன்னோடியைப் பின்பற்றி அறிக்கை அவைமுன் வைக்கப்படவில்லை. ஆனால் அதனுடைய நகல் நூலகத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு சென்றால், இவைகளைப்பற்றியெல்லாம் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

திரு. க. இராமமூர்த்தி: செல்வார் கமிட்டி ரிப்போர்ட்டினுடைய முதல் வால்யூம் என் கையில் இருக்கிறது. 150 பக்கங்கள் இருக்கின்றன. இன்னொரு நூற்றியொன்று வால்யூம் இருந்தாலும் அவ்வளவு பெரிதாக இருக்காது. ஆகவே இரண்டாவது, லெஜிஸ்லேச்சருக்காக சட்டமன்றத்திற்காக எவ்வளவோ செலவு செய்கிறோம்.

This report gives the entire literature for the Bill. It is the basis for the change in a vital Act of the State.

இந்த அவையிலே இத்தனை கோடி ரூபாய், இத்தனை இலட்சம் ரூபாய் ஒவ்வொரு நாளும் கண்டுபிடிக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையிலே சொல்லும்போது, உறுப்பினர்களுக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதற்கு இனிமையாகத்தான் இருக்கிறது. இந்த ஒரு சட்டத்தின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தில்லுமுல்லுகள் கண்டுபிடிக்கப் படுகின்றன என்று நாட்டு மக்களுக்குச் சொல்லும்போது, நாங்களெல்லாம் பெருமையாகக்கூட இருக்கிறது. ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி தன்னுடைய அறிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதில் என்ன இருக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. இது 'முதல் வால்யூம்'. எத்தனை 'வால்யூம்' வந்தால் கூட அவ்வளவு பெரிதாக இருக்காது. அப்படியே இருந்தாலும்கூட, பெரிய புத்தகங்களைக் கொடுக்கிறோம் என்பது கூட அல்ல, எவ்வளவு பெரியது, எவ்வளவு முக்கியமானது என்பதுதான் முக்கியம். அவசிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரும்போது, பல ஆண்டுகளாக இரு அவை களிலும் நாங்கள் வாதாடிக் கேட்டு, ஒரு பெரிய மனது வைத்து அரசாங்கம் செல்வார் கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டி தன் அறிக்கையை அரசாங் கத்திற்குக் கொடுத்த பிறகு, அந்த அறிக்கையை உறுப்பினர்களுக்குக் கொடுக்கும்படி அமைச்சரிடம் கேட்டால் 'லைப்ரரியில் இருக்கிறது, போய் படித்து வாருங்கள்' என்று சொல்வது நல்லதல்ல. எத்தனையோ கோடி ரூபாய் செலவு செய்கிறோம். சில ஆயிரம் ரூபாய்தான் இதற்குச் செலவு ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறுபரிசீலனை செய்வாரா?

திரு. ஆ. திராவிடமணி: யானையை அவ்வளவு விலை கொடுத்து வாங்கு கிறோம். ஆட்டியை காசு கொடுத்து வாங்க என்ன வந்தது? (பலத்த சிரிப்பு).



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: எத்தனையோ கமிட்டிகள் அறிக்கையைக் கொடுத்துள்ளன. முன்னோடியாக அந்த அறிக்கைகள் எல்லாம் சபையில் வைக்கப்படவும் இல்லை, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப் படவும் இல்லை என்றுதான் சொன்னேன். அதைத்தான் பின்பற்றுகிறேன் என்று சொன்னேன். இதனுடைய காப்பி நூலகத்தில் இருக்கிறது என்று சொன்னேன். இதற்கு முன்னால் செய்தித் தாளில் நூலகத்தில் நகல் இருக்கிறது என்று போடப்பட்டிருந்ததைச் சொன்னேன், கமிட்டியினுடைய சிபாரிசு களில் இத்தனை சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம் என்று நான் சொன்னதை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். கமிட்டியின் அறிக்கை வந்து ஒரு வருடம் தான் ஆகிறது. மாண்புமிகு உறுப் பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி அவர்களுக்கும் தாமோதரன் அவர் களுக்கும் நான் ஒன்றைச் சொல்வேன். ஒரு வருடம் என்பது முக்கியமல்ல. இதற்கு முன்னால் அதிலுள்ள பல பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்திருக் கின்றன, முன்கூட்டியே நடைமுறைக்கு வந்திருக்கின்றன. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று நான் சொன்னால், அதை அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ஈ. லெட்சுமிகாந்தன் தலைமை.)

(பிற்பகல் 12-30)

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், எல்லோருமே வரவேற் றிருக்கிறார்கள். சிறிய வியாபாரிகளுக்கு எந்த அளவுக்கு நன்மைகளைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நன்மைகளைச் செய்ய நாங்கள் தயாராக இருக் கிறோம். ஒரு முனை வரியா, பலமுனை வரியா என்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில் வரியை ஏய்க்கிறவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, வியாபாரிகளை மட்டும் குறை கூறவில்லை. வியாபாரிகளும் இருக்கிறார்கள், மற்றவர்களும் இருக்கிறார்கள். நான் முதலிலே குறிப்பிட்ட படி, இந்த வரி வசூல் திறமையாக நடைபெற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். அங்கே தவறுகள் நடந்தாலும், எங்களிடத்திலே சொன்னால், அவைகளைக் கண்டுபிடிக்கிறோம் என்று சொல்லி. இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: [1979 நவம்பர் ஆறாவது பிரிவிலே ஒரு சந்தேகம் எழுப் யிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னா நன்றாக இருக்கும். 50 சதவிதம் என்பதற்கு இதற்கு முன்னாலே இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பின அவர்கள் அந்தச் சந்தேகத்தைச் சரியாக எழுப்பியிருந்தார்கள். திரு. நாமே நான் அவர்கள் சரியாக எழுப்பவில்லை. நான் இரண்டையும் கவனித்து கொண்டுதான் இருந்தேன். சில நேரங்களில் ஒருவருக்கு அபராதம் போட் விட்டால், மேல் முறையீடு செய்யும்போது, அபராதம் போடும்போது 150 சதவிதம் வரைக்கும் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் இன்றைக் மேல்முறையீட்டுக்கு வருகிறபோது எவ்வளவு அதிலே தள்ளுபடி செய் வேண்டும் என்று இல்லாதிருப்பதால், சில நேரங்களில் மிகக் குறைவாகப் போடுகிறார்கள் என்பதால் தான், 50 சதவிகிதத்துக்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 50 சதவிதத்துக்குக் குறையாமலும் 150 சதவிதத்துக்கு மேற்படாமலும் உள்ள தொகையை விதிக்கலாம் என்று இருக்கிறது. 50 சதவிதம் என்று இருப்பது குறைக்கப்படுமா? அல்லது மினிமமே 50 சதவிதமா என்ற விளக்கங்கள் சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 50 சதவிதத்துக்குக் குறைவாக அபராதம் விதிக்க முடியாது.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) பரிந்துரை செய்வ தற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. பரிந்துரை எதுமில்லை.



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே,**

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) திருப்பியனுப்பப் பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அலுவல் வரிசையில் மாறுதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

"கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட

1. தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979),

2. தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979),

3. தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979)

ஆகிய இந்த மூன்று மசோதாக்களும் இப்பொழுது ஒன்றாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள** பிரச்சினை—

“கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட

1. தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979),

2. தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979),

3. தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979)

ஆகிய இந்த மூன்று மசோதாக்களும் இப்பொழுது ஒன்றாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இந்த மூன்று மசோதாக்களையும் ஒன்றாக எடுப்பதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், இந்த மூன்றும் முடிந்தவுடனே இன்றைக்காவது 1 மணிக்கு விட்டுவிட்டு, எஞ்சியிருப்பதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். தினந்தோறும் காலையிலேயும், மாலையிலேயும், இப்படி இரண்டு வேளையும் வைத்தால் எப்படி?

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(5) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979).**

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”

என்று முன்மொழிகிறேன்.

*943. ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்):** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

“சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்”

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் புதிதாக இப்போது 53-வது சட்டத்திலே ஒரு புதிய பிரிவை, 92-ஏ என்ற பிரிவைச் சேர்த்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 91-ஏ என்ற புதிய பிரிவு அரசாங்கத்துக்கு ஒரு புதிய அதிகாரத்தைக் கொடுக்கிறது. சட்டத்தைத் திருத்துவதன் மூலம் கூட்டுறவுத் துறையைப் பலப்படுத்துவது, வளப்படுத்துவது என்ற முறையில் அதிக அதிகாரங்களைப் பெற்று அந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தினால், உண்மையிலேயே இந்த ஷரத்தை வரவேற்கலாம். ஆனால் இந்தப் புதிய பிரிவு ஏற்கெனவே இருக்கிற 53-வது சட்டத்திற்கு ஒரு புதிய பிரிவைச் சேர்த்திருக்கிறார்கள் என்ற அளவிலே இருக்கிறது. அப்படி என்ன அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது? யாராவது கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் வாங்கி அந்தக் கடனிலே நிலுவைப்பாக்கி வைத்திருந்தால், அவர்களுடைய பெயரை வெளியிடுவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு புதிய அதிகாரம் வழங்குகிறது இந்த சட்ட முன்வடிவு. வளர்ச்சியடைகிற ஒரு நாட்டில் கூட்டுறவு ஸ்தாபனம் எல்லாத் துறைகளுக்கும் பொதுவான ஒரு ஸ்தாபனமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில், மக்கள் மத்தியிலே கூட்டுறவு பற்றிய ஒரு ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும் இந்த நேரத்தில், அந்தக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு இந்த ஷரத்து உகந்ததல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். யாராவது கடன் வாங்கி, அந்தக் கடனில் பாக்கி வைத்திருந்தால் அவர்களை ‘லிஸ்ட் அவுட்’ பண்ண இந்தப் புதிய ஷரத்து அரசாங்கத்துக்கு அதிகாரத்தை அளிக்கிறது. இதனாலே என்ன பெரிய ஆதாயம் கிட்டிவிடும்? ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் மாநில அரசிடமிருந்து கடன் வாங்குகின்றன. எத்தனையோ நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் குடிநீர் வசதிக்கோ, வேறு பல காரியங்களுக்கோ மாநில அரசிடமிருந்து கடன் வாங்கி, அந்தக் கடன்களை இன்றைக்கு பல ஆண்டுகளாகத் திருப்பிக் கட்டாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் இந்த அரசு பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தி, இந்தத்

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): அவை முன் உள்ள [1979 நவம்பர் 1
பிரச்சினை—

"கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட

1. தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது
திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 62/1979),

2. தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி
அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979),

3. தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது
திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 72/1979)

ஆகிய இந்த மூன்று மசோதாக்களும் இப்பொழுது ஒன்றாக ஆய்விற்கு
எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இந்த மூன்று மசோதாக்களையும்
ஒன்றாக எடுப்பதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், இந்த மூன்றும்
முடிந்தவுடனே இன்றைக்காவது 1 மணிக்கு விட்டுவிட்டு, எஞ்சியிருப்பதை
நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். தினந்தோறும் காலையிலேயும், மாலை
யிலேயும், இப்படி இரண்டு வேளையும் வைத்தால் எப்படி?

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(5) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது
திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண் 62/1979).

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர்
அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு @
(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

*943. ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது,



1979 நவம்பர் 13]

மாற்றுத் தலைவர் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்): முன்மொழியப்பட்ட
தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1979) ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட வேண்டும்"

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாற்றுத் தலைவர் அவர்களே, 1961 ஆம்
ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் புதிதாக இப்போது 53-வது
சட்டத்திலே ஒரு புதிய பிரிவை, 92-ஏ என்ற பிரிவைச் சேர்த்திருக்கிறார்கள்.
அதன் தொடர்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 91-ஏ
என்ற புதிய பிரிவு அரசாங்கத்துக்கு ஒரு புதிய அதிகாரத்தைக் கொடுக்கிறது.
சட்டத்தைத் திருத்துவதன் மூலம் கூட்டுறவுத் துறையைப் பலப்படுத்துவது,
வளப்படுத்துவது என்ற முறையில் அதிக அதிகாரங்களைப் பெற்று அந்தத்
துறையினுடைய வளர்ச்சிக்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தினால், உண்மை
யிலேயே இந்த ஷரத்தை வரவேற்கலாம். ஆனால் இந்தப் புதிய பிரிவு
ஏற்கெனவே இருக்கிற 53-வது சட்டத்திற்கு ஒரு புதிய பிரிவைச் சேர்த்திருக்
கிறார்கள் என்ற அளவிலே இருக்கிறது. அப்படி என்ன அவசியம் இப்போது
ஏற்பட்டிருக்கிறது? யாராவது கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன் வாங்கி,
அந்தக் கடனிலே நிலுவைப்பாக்கி வைத்திருந்தால், அவர்களுடைய பெயரை
வெளியிடுவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு புதிய அதிகாரம் வழங்குகிறது இந்தச்
சட்ட முன்வடிவு. வளர்ச்சியடைகிற ஒரு நாட்டில் கூட்டுறவு ஸ்தாபனம்
எல்லாத் துறைகளுக்கும் பொதுவான ஒரு ஸ்தாபனமாக வளர்ச்சியடைந்து
வரும் நிலையில், மக்கள் மத்தியிலே கூட்டுறவு பற்றிய ஒரு ஆரோக்கியமான
சூழ்நிலை உருவாகும் இந்த நேரத்தில், அந்தக் கூட்டுறவு இயக்கத்தின்
வளர்ச்சிக்கு இந்த ஷரத்து உகந்ததல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்
கிறேன். யாராவது கடன் வாங்கி, அந்தக் கடனில் பாக்கி வைத்திருந்தால்,
அவர்களை 'ப்ளாக் அவுட்' பண்ண இந்தப் புதிய ஷரத்து அரசாங்கத்துக்கு
அதிகாரத்தை அளிக்கிறது. இதனாலே என்ன பெரிய ஆதாயம் கிட்டிவிடும்?
ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் மாநில அரசிடமிருந்து கடன்
வாங்குகின்றன. எத்தனையோ நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள்
குடிநீர் வசதிக்கோ, வேறு பல காரியங்களுக்கோ மாநில அரசிடமிருந்து
கடன் வாங்கி, அந்தக் கடன்களை இன்றைக்கு பல ஆண்டுகளாகத் திருப்பிக்
கட்டாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளையும், ஊராட்சி
ஒன்றியங்களையும் இந்த அரசு பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தி, இந்தந்த

நகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் அரசாங்கத்திற்கு வாங்கிய கடன்
தொகையைத் திருப்பித் தரவில்லை என்று சொல்ல அரசு முன்வருமா
இல்லை, மாநில அரசே கூட உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கியிருக்கிறது
ரிசர்வு வங்கியிடமிருந்து 'ஓவர்டிராஃப்ட்' மூலம் பணம் பெறுகிறது
அவைகள் இன்றையதினம் ஓவர்ட்யூவாக இருக்கின்றன. உலக வங்கியோ,
ரிசர்வ் வங்கியோ, தங்களுக்கு மாநில அரசு இவ்வளவு பாக்கித் தொகை
தரவேண்டியிருக்கிறது என்று 'லிஸ்ட் அவுட்' பண்ணிச் சொன்னால், மாநில
அரசுக்கு எவ்வளவு 'எம்பாரசிங்' நிலை ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க
வேண்டும். ஏதோ இன்றையதினம் அதிகாரிகள் இப்படிச் சொல்கிறார்கள்
என்று சொல்லி, கூட்டுறவுக் கடனை நாம் வசூலிக்க இந்த முறையைக்
கையாண்டால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகிவிடும், அது நல்லதல்ல
என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களே
கூட இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக
கூட்டுறவுச் சட்டம், ஒரு 'காம்பிரிஹென்சிவ் கோவாப்பரேட்டிவ் சட்டம்'
வரவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.
வரும்போது, இந்த நிலைமைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, அதை ஒரு
கூட்டாய்வுக் குழுவிற்கு விட்டு, என்ன முறையில் புதிய சட்டங்களைக்
கொண்டு வரலாம் என்று பார்த்திருக்க வேண்டும். இன்றையதினம் பல்வேறு
வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில், கூட்டுறவுச் சங்கங்களைத்தான்
முன்னேற்றத்திற்கான அஸ்திவாரமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த
அரசு கடன் வாங்கியவர்களை ஏதோ குற்றவாளிகள் போல பாவிக்கிறது.
ஏன்? என்னென்ன காரணங்களாலே அவர்கள் வாங்கிய தொகையைத்
திருப்பிச் செலுத்த வசதியில்லாமல் இருக்கிறார்கள் என்று பார்க்க
வேண்டாமா? இப்போது பொதுவாக கடன் வாங்கியிருந்தால், உடனடியாக
திருப்பிச் செலுத்துவதற்கு இயலாமல் இருப்பவர்களுக்குக் கடன் திருப்பிக்
கட்டுவதற்கான கால அளவை நீட்டிக்கிறோம். குறுகிய காலக் கடனை
மத்திய காலக் கடனாக நீட்டிக்கிறோம். இதுவும் ஒருபக்கம் செய்துவிட்டு,
சில குறிப்பிட்ட நபர்களை நாங்கள் 'லிஸ்ட் அவுட்' பண்ணுவோம், அவர்கள்
பெயரை விளம்பரப்படுத்துவோம் என்று சொன்னால், விவசாயிகளுக்கு,
அல்லது கடன் வாங்கியிருப்பவர்களுக்குச் செய்யும் நல்ல காரியமா இது?
எத்தனையோ இன்டஸ்ட்ரீஸ் அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கியிருக்
கின்றன. மின்சாரத் துறைக்கு 9 கோடி ரூபாய் அளவுக்குக் கூட திருப்பிச்
செலுத்தவேண்டிய முதலாளிகள் இன்றையதினம் இந்த நாட்டிலே இருக்கிறார்
களே, அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்ததா? இப்படிச்
செய்வதால், அரசாங்கத்திற்குக் கிடைக்கும் லாபம் என்ன? மீண்டும் மக்கள்



மத்தியிலே ஒரு விரோத மனப்பான்மைதான் உருவாகும். வசூல் செய்வதிலே கெடுபிடி இருக்கத்தான் வேண்டும், அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அந்தக் கெடுபிடி எப்படி இருக்க வேண்டும், எந்தக் காலத்தில் இருக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். வசூல் செய்யும் நிலையை எடுத்துக் கொண்டால் கூட, தை மாத காலத்திலே அறுவடையாகும்போது, வசூலிக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்வதில்லை. ஜூன், ஜூலை மாதங்களிலே தான் வசூலிக்குப் போகிறார்கள்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-40)

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். முகவை மாவட்ட மத்திய வங்கி சென்ற ஆண்டிற்கு முந்தைய ஆண்டில் 5 கோடி ரூபாய் அளவுக்குமேல் வரவு-செலவு செய்து கொண்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு அந்த வங்கி எத்தனை நபர்களுக்கு, எவ்வளவு தொகையைக் கடன் வசதியைச் செய்து கொடுத்திருக்கிறது என்று பார்த்தால், அது மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பது தெரியும். அதற்கு என்ன காரணம்? தனி நபர்களின் ஓவர்டியு. இதன் காரணமாக சில சங்கங்கள் ஓவர்டியுவாக இருக்கின்றன. அப்படிப்பட்ட ஓவர்டியு உள்ள சங்கங்களுக்கு அரசாங்கம் கடன் வசதி செய்து தரவில்லை. இதுதான் உண்மை. உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் ஓவர்டியு என்ற காரணத்தைக் காட்டி, சங்கங்கள் அவர் களுக்குக் கடன் வசதி செய்து தரவில்லை. சங்கங்கள் ஓவர்டியு என்று சொல்லி, அரசாங்கம் சங்கங்களுக்குக் கடன் வசதி செய்து தரவில்லை. இப்படிப்பட்ட சிக்கலான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. வறட்சி என்றும், வெள்ளம் என்றும் அரசாங்கம் அறிவித்துவிட்ட பிறகும், கடன் வாங்கியவர்கள் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறபோது, அப்படிப்பட்ட பாக்கிதாரர்களை நாங்கள் பட்டியல் போட்டுக் காட்டுவோம் என்று அரசாங்கம் சொல்வது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதற்கான அனுமதியையும் நான் பெற்றிருக்கிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மேலவையில் பலமுறை அறிவித்திருக்கிறார்கள். புதிதாகக் கூட்டுறவுச் சட்டம் வருகிறவரை நாங்கள் உத்தியோகப் பற்றற்றவர்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 நவம்பர்

களை கூட்டுறவு நிறுவனங்களின் பொறுப்புக்கு நியமிக்கமாட்டோம் என்
சொன்னார்கள். ஆனால் திடீரென்று நாடாளுமன்றத்திற்கான தேர்தல்க
அறிவிக்கப்பட்டு, அந்தத் தேர்தல்களுக்கான மும்முரங்கள் வெகு வேகமா
நடந்துகொண்டிருக்கிறபோது, எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும்—அன்(
இங்கு எனாதபடி எங்கும்—மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையி
எல்லாச் சங்கங்களுக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற
கழகச் சட்ட மன்ற உறுப்பினர்களையும் கட்சி அமைப்பாளர்களையு
நியமித்திருக்கிறார்கள். இவர்கள்தான் கூட்டுறவுத் துறையின் விற்பன்ன
களா? அல்லது கூட்டுறவுத் துறையில் சிறந்த ஆற்றல் பெற்றவர்களா
அல்லது அந்தத் துறையில் ஊறித் திளைத்து அரசாங்கத்திற்கு நல்
ஆலோசனை சொல்லக் கூடியவர்களா? அட்வைசரி போர்டு என்று
அட்வைசரி கமிட்டி என்றும் போடப்பட்டிருக்கிறது. அட்வைசரி போர்
என்று போடப்பட்டதால், சில பேர் டைரக்டர் அந்தஸ்தைப் பெற்று விடுகிறா
கள். அப்படி யார் யார் போடப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை இந்தியன்
எக்ஸ்பிரஸ் பத்திரிகை தலையங்கம் தீட்டி அறிவித்திருக்கிறது.

"Only AIADMK men in Co-operative administration"

எந்தெந்த மாவட்ட மத்திய வங்கியில் எந்தெந்த அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், எந்தெந்த
அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற
உறுப்பினர்கள் போடப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை வெளியிட்டிருக்
கிறது.

கட்சி சார்புள்ளவர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் நியமிக்கக்கூடாது
என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்தான் இங்கே
பலமுறை அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலை என்ன?
அகில இந்திய அண்ணா தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்தபோது, அப்போது
தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களைப் போட்டதற்கே திரு. ஆதித்தனார் மீது
என்னவெல்லாம் சொன்னார்கள்? சட்டத்தை வளைத்துக் கொடுத்து
கண்டவர்க்கெல்லாம் பிரதிநிதித்துவம் கொடுத்துவிட்டார் என்று அவர் மீது
எத்தனை கடுமையான கண்டனங்கள் வீசப்பட்டன? இப்போது
இவைகளெல்லாம் எங்கே போயிற்று? 15 நாட்களுக்கு முன்னாலே இந்த
அரசுக்கு திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள்
அனைத்திலும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அமைப்பாளர்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் போட்டு



1979 நவம்பர் 13] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

தினம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகச் சங்கங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த
நியமனங்களை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். இந்த நியமனங்கள் தேவையற்றவை, வேண்டாதவை,
ஒரு அரசாங்கம் அரசியல் நோக்கத்தோடு செய்தவை என்று சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே
கொஞ்சம் சிந்தனை செய்ய வேண்டும். தேர்தல்கள் மூலமாக ஆளும்
கட்சியினர் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலை இருக்கும்போது,
தேர்தல் இல்லாமல் இந்தச் சங்கங்களுக்கெல்லாம் அட்வைசரி செல் என்று
இப்போது போடுவது எந்த வகையில் நியாயம் என்பதை எண்ணிப் பார்க்க
வேண்டும். இப்படி செல்களைப் போடுவதன் மூலம் ஏற்கெனவே
செல்லரித்துப் போன கூட்டுறவுச் சங்கங்களை மேலும் கெடுக்க வேண்டாம்
என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புவதோடு, இப்படி கடன்
தொகையைத் திரும்பிக் கட்டாதவர்களை 'பிளாக் லிஸ்ட்' செய்து
வெளியிடுவது என்பது சரியல்ல. இது இறுதியாக அரசாங்கத்திற்கும்
வரும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரும், ஊராட்சிகளுக்கும் வரும் என்று
சொல்லிக் கொண்டு, கூட்டுறவுத் துறையில் இத்தகைய 'பேட்
பிரிசிடெண்ட்'-களை உருவாக்காதீர்கள் என்று சொல்லி முடித்துக்
கொள்கிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,
1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு திருத்தங்களைக்
கொண்டு வரும் வகையில் அமைந்துள்ள இந்தச் சட்ட முன்வடிவுகளை நான்
ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்று, அதைத் திருப்பிக் கட்டாமல்
இருப்பவர்களின் பெயர்களைப் பத்திரிகைகளில் பட்டியல் போட்டு
வெளியிடுவதற்கான வகையில் அதிகாரம் கோரும் சட்ட முன்வடிவு
உண்மையிலேயே மிகவும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். ஏனென்றால்
ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில்
விவசாயிகள் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.
இவ்வாறு 40 கோடி ரூபாய்க்குமேல் சிறு விவசாயிகளுக்கு இந்த அரசு கடன்
தள்ளுபடி செய்தும், இன்னும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாதவர்
களின் பட்டியலை வெளியிடுவதில் தவறு இல்லை என்றுதான் நான் கருது

கிறேன். இது ஏதோ 1,000 அல்லது 2,000 ரூபாய் கடன் வாங்கியிருப்பவர்
களை நிர்பந்தப்படுத்தக் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு
இந்த அரசு ஏற்கெனவே நிறைய சலுகைகளை அறிவித்திருக்கிறது. அதற்கு
மேலும் சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்குத்தான் புரட்சித் தலைவர்
அவர்கள் தலைமையில் உள்ள இந்த அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கிறது.

10,000 ரூபாய், 20,000 ரூபாய், 50,000 ரூபாய் என்று கூட்டுறவுச்
சங்கங்களில் கடனை வாங்கிக் கொண்டு, அந்தத் தொகைகளைக் கொண்டு
நிலத்தை வாங்கிக் கொண்டு அல்லது வியாபாரத்தைச் செய்து கொண்டு
அல்லது பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற
பலர் இருப்பதால், அவர்களையெல்லாம் நாட்டுக்கு விளம்பரப்படுத்தி
அறிமுகப்படுத்த வேண்டும் என்பது நல்லதுதான். அவர்களெல்லாம்
அரசியல் போர்வையில் இருந்தாலும் சரி, ஆஷாட பூதிகளைப் போல்
மதத்தைக் கைப்பற்றிக் கொண்டு பக்தர்கள் என்ற போர்வையிலிருந்தாலும்
சரி, யாராக இருந்தாலும் சரி, கூட்டுறவுச் சங்கங்களின் பணத்தைப்
பெற்றுக் கொண்டு அதன் மூலம் தங்களின் வாழ்க்கையைச் செப்பனிட்டுக்
கொண்டிருப்பவர்களை வெளி உலகத்திற்குக் காட்ட வேண்டும் என்ற நல்
ஏற்பாட்டைச் செய்யும் வகையில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்
திருத்தத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் இந்தக்
கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களைச் செய்
வேண்டும் என்ற வகையில் அமைக்கப்பட்ட குழுவில் நானும் அவரோடு
தமிழகம் முழுவதும் சுற்றி வந்தேன். கூட்டுறவுச் சங்கங்களைச்
சேர்ந்தவர்கள், சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவாளர்கள்
எல்லாம் எங்களைச் சந்தித்து பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.
எவ்வளவு சீக்கிரமாக இந்தக் கூட்டுறவுச் சட்டத்திற்குத் திருத்தங்களைக்
கொண்டு வருகிறீர்களோ அந்த அளவுக்கு நாங்களும் அதை
வரவேற்கிறோம் என்றார்கள். வெகு சீக்கிரத்தில் அந்தத் திருத்தங்களைக்
கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொண்டதோடு, "சங்கங்களிடமிருந்து
அதிகமான தொகையைப் பெற்றுக் கொண்டு திருப்பிக் கொடுக்காதவர்களை
இந்த அரசாங்கம் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். ஆனால்
எங்களைப் போன்ற சிறு விவசாயிகளை, குறைந்த கடன் தொகைகளை
வாங்கிக் கட்ட முடியாமல் இருப்பவர்களை மட்டும் விட்டுவிடுங்கள்" என்று



கேட்டுக் கொண்டார்கள். அப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளையெல்லாம் இந்த அரசு உரிய முறையில் பரிசீலிக்கும் என்பதோடு பணத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்றும் ஆஷாட பூதிகளின், நாட்டைச் சுரண்டிக் கொண்டிருக்கும் நபர்களின் பட்டியலை வெளியிட்டு பொது மக்களுக்கு அறிவிக்கும் என்று கூறி, அத்தகைய நல்ல முயற்சியில் ஈடுபட்டு அதற்கான சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிற இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவுகளை வரவேற்று அமைகிறேன்.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிக முக்கியமானவை என்று தான் கருதும் மூன்று மசோதாக்களை இந்த அவையின் முன் கொண்டு வந்து அவைகளைச் சட்டமாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மூன்று மசோதாக்களையும் பற்றிச் சேர்த்து ஒன்றாகப் பேசினாலும், பிறகு அவைகளைத் தனித் தனியே நிறைவேற்றித் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கும் மூன்று திருத்த மசோதாக்களில் ஒன்று கூட்டுறவுச் சங்கங்களின் பாக்கிதாரர்களைப் பட்டியல் போட்டு, நாட்டு மக்களுக்கு அறிவிக்க அரசாங்கம் அனுமதி கோரும் திருத்தமாகும். என்னைப் பொறுத்தவரையில், இந்தத் திருத்தம் தேவை என்றோ, இந்தத் திருத்தத்தினாலே ஏதாவது பயன் ஏற்படும் என்றோ நான் கருதவில்லை.

## 6. அறிவிப்பு.

### மேலவை கூட்டம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. அவையின் முன்னுள்ள கூட்டுறவுச் சட்டத் திருத்த முன்வடிவுகள் நிறைவேறிய பிறகு, கல்வித் துறை பொறுத்த சட்ட முன்வடிவுகளை அவை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றும். அதோடு இன்றைய அவை

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1979 நவம்பர்

நிகழ்ச்சிகள் முடிவடைந்து மீண்டும் நாளை காலை 10 மணிக்குக் கூடி ம
சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்று அறிவி
விரும்புகிறேன்.

அதோடு நாளைய தினம் கேள்வி நேரமும் கைவிடப்படும் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(5) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவ
திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடி
எண் 62/1979)—தொடர்ச்சி.

திரு. கோ. சி. மணி (தொடர்ச்சி) : ஆக இதனால் எந்தப் பல
கிடைத்துவிடும் என்று நான் கருதவில்லை. சங்கங்களுக்கு கடனை
திருப்பிச் செலுத்தாத உறுப்பினர்களின் பட்டியலை வெளியிடும் உரிமை
இந்த மசோதாவின் மூலம் அரசாங்கம் பெற விரும்புகிற அதே நோக்கி
ஒரு கூட்டுறவுச் சங்கம் அதனுடைய மேல் அமைப்புக்குச் செலுத்தாமல், செ
கடந்த சங்கமாக இருக்கிற சங்கங்களின் பட்டியலை வெளியிடும் வாய்ப்
இந்தச் சட்டத்தில் இருக்கிறதா என்றால், எனக்குத் தெரிந்த வரை, இல்
என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு என்ன காரணம் என்று எனக்கு
தெரியவில்லை.

ஒரு சங்கத்தின் உறுப்பினர் கடனைத் திருப்பிச் செலுத்தாத காரண
தால் கேவலப்படுத்தப்பட்டால் பரவாயில்லை என்று துணிந்து அவர்களி
பெயர்களை நாம் அறிவிக்க முற்படுகிறோம். ஆனால் அப்படிப்பட்
அங்கத்தினர் பங்கு பெறுகிற சங்கம் அதனுடைய மேல் அமைப்பிற்கு
செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல், பாக்கிதாரராக, கட
தாரராக, புதிய கடனைப் பெறத் தகுதியற்றவராக இருக்கும்போது, அந்த
சங்கத்தின் பெயரைப் பட்டியல் போட்டு வெளியிட வாய்ப்பில்லை. இதை
பொறுத்தவரை, நான் இதோடு விட்டுவிட விரும்புகிறேன்.

தனி அலுவலர்களின் பதவி 3½ ஆண்டுக் காலம் என்றிருந்ததை இப்போ
4½ ஆண்டுக் காலம் என்று மாற்றுகிறோம். ஏறத்தாழ கடந்த 3½ ஆண்
காலமாக அனைத்துச் சங்கங்களும், மாவட்ட அளவிலிருந்து மாநில அ
வரையான சங்கங்கள் வரை அனைத்துச் சங்கங்களும் தனி அலுவல



1979 நவம்பர் 13] [திரு. கோ. சி. மணி]

பொறுப்பில்தான் இருந்திருக்கின்றன. ஆளுநர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்
இந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தனி அலுவலர்கள் நியமிக்கப்
பட்டார்கள். அதற்குப் பிறகு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு
ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட இந்த அரசு வந்து ஏறத்தாழ 2½
ஆண்டுக்காலம் தனி அலுவலர்களின் பொறுப்பில்தான் அந்தச் சங்கங்கள்
இருந்துகொண்டிருக்கின்றன.

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை)

(முற்பகல் 12-50)

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, மாற்றுத் தலைவர் அவர்களே,
தங்கள் மூலமாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்பு
கிறேன். நீங்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இரண்டரை ஆண்டுக் காலமாக
கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்களின் பொறுப்பிலே இருந்து வந்திருக்
கின்றன. ஏற்கெனவே இருந்த அரசுப் பற்றற்ற அதிகாரிகள் குழுவைக்
கலைத்ததால் தனி அலுவலர்களை நியமித்திருக்கிறீர்கள். இதற்கு நீங்களும்,
உங்களுக்கு முன்னால் ஆளுநர் ஆட்சியில் இருந்தவர்களும் சொன்ன காரணம்
என்னவென்றால், அரசுப் பற்றற்ற அதிகாரிகள் நல்லவர்கள் அல்ல, வல்லவர்கள்
அல்ல என்பதும் தவறான முறைகேடுகள் நடந்தன என்பதும்தான். கூட்டுறவுத்
துறையில் அங்கம் பெற்றிருந்த அரசுப் பற்றற்ற அலுவலர்கள் அத்தனை பேர்
களும் நல்லவர்கள் அல்ல, வல்லவர்கள் அல்ல, எனவே அவர்கள் தேவையில்லை,
அவர்களைக் கூண்டோடு நீக்குவோம் என்று சொல்லி நீக்கிவிட்டு, அத்தனை
சங்கங்களுக்கும் தனி அலுவலர்களை நியமித்தீர்கள். அந்த மூன்றரை ஆண்டுக்
காலத்தில் இரண்டரை ஆண்டுக் காலத்திற்கு உங்களுடைய ஆட்சியினுடைய
நேரடிப் பொறுப்பிலே அந்தத் தனி அலுவலர்கள் இருந்தார்கள். நீங்கள்
என்ன சர்வே செய்தீர்கள்? ஏற்கெனவே இருந்த குறைபாடுகள் களையப்
பட்டு இன்றைக்கு அதிகமான இலாபம் கிட்டுகிறது என்ற உணர்வுக்கு வந்து
இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு தனி அலுவலர்களுக்கு நீட்டிப்புத் தர
வேண்டுமென்று கேட்டால், உள்ளபடியே நான் அதை ஏற்றுக்கொள்ளத்
தயாராக இருக்கிறேன். ஆனால் அன்றைக்கு இருந்த நிலைமை என்ன?
இன்றைக்கு உள்ள நிலைமை என்ன?

தனி அலுவலர்களைப் போடுவதற்கு முன்னால், கும்பகோணம் மத்திய
கூட்டுறவு வங்கியில் நான் பொறுப்பேற்றதற்கு முந்தியும், பிந்தியும் இருந்த
நிலைமை என்ன? இன்றைக்கு இருக்கிற நிலைமை என்ன என்று எண்ணிப்

பார்க்க வேண்டாமா? திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அத்தனை பேரையும் நீக்கினீர்கள். அதற்குப் பிறகு உங்கள் ஆட்சியில் தனி அலுவலர்கள் பொறுப்பில் நிலைமை எப்படி இருக்கிறது? அதற்கு முன்னாலே இருந்த வங்கியின் போர்டு 13½ கோடி ரூபாய்க்குக் கடன் கொடுத்தது. இன்றைக்கு அந்த வங்கி இரண்டு கோடி ரூபாய் கூட கொடுக்க முடியாமல் தவிக்கிறது. இதற்கு என்ன காரணம்? "வாங்கிய கடனை திருப்பிக் கொடுத்தால்தானே மேலும் கடனைக் கொடுக்க முடியும்? வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வில்லை. ஆகவே மேற்கொண்டு கடனை வழங்க முடியவில்லை. கூட்டுறவு வங்கியை நடத்த முடியவில்லை" என்று சொல்கிறீர்கள். கூட்டுறவுத் துறை தனி அலுவலர்கள் கடனை வசூலிக்க நடவடிக்கை எடுக்காததால், கடனை வசூலிக்க முடியவில்லை என்று சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக கடனை வசூலிக்க முடியவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் வாங்கிய கடனைக் கொடுக்கிற நிலையிலே அவர்கள் இருக்கிறார்களா என்பதை ஆராய்வதற்குத் தவறிவிட்டீர்கள். இப்போது ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறீர்கள். அது ஆலோசனைக் குழுவாக இருந்தாலும் சரி, நிர்வாகக் குழுவாக இருந்தாலும் சரி, தற்காலிகக் குழுவாக இருந்தாலும் சரி, நிரந்தரக் குழுவாக இருந்தாலும் சரி. என்ன நோக்கத்திற்காக அந்தக் குழுவைப் போட்டார்கள்? கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கியவர்கள் ஆகியவர்களை ஒன்றாக அழைத்து வைத்து உட்கார்ந்து பேசி, பிரச்சினை என்ன, அதற்குப் பரிகாரம் என்ன என்று கண்டு பரிகாரம் தேட முயன்றிருக்கிறீர்களா? இதுவரை அப்படிப் பட்ட ஒரு நடவடிக்கையை எடுத்ததுண்டா? ஒட்டு மொத்தமாக கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்தவில்லை என்று மட்டும் சொல்கிறீர்கள்.

பெருநிலக்கிழார்கள் தடுத்து நிறுத்துகிறார்கள் என்று சொல்லுகிறீர்கள். பெருநிலக்கிழார் யார், சிறிய நிலச்சுவாந்தார் யார், நடுநிலை விவசாயிகள் யார் என்ற பட்டியல் உங்களிடம் இருக்கிறது. இவர் இவர் பெரு நிலக் கிழார்கள், இவர் இவர் சிறிய நிலச்சுவாந்தார்கள் என்று சொல்லிவிட்டு, பெரு நிலக்கிழார்களிடம் கடன் வசூலிப்போம், மற்றவர்களைப் பற்றிக் கவலைப் படாதீர்கள், அவர்களுக்கு அபயம் கொடுக்கிறோம் என்ற வாக்குறுதியை அளிக்கத் தயாராக இருக்கிறீர்களா? இதுவரையில் அவையை மதித்திருக் கிறீர்களா? இந்த அவையை மதிக்கிற அளவுக்கு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்களா? ஏற்கெனவே மூன்றரை ஆண்டுக் காலமாக உள்ள தனி அலுவலர்களுக்கு மேலும் ஓராண்டு நீட்டித்துத் தர வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். மேலும் சிறப்பு அடைய வேண்டும் என்பதற்காக இன்னொரு குழுவை அவசரம் அவசரமாக நியமித்திருக்



கிறீர்கள். அதற்குப் பதவிப் பிரமாணம் நடக்கிறது. பதவியேற்பு விழா நடக்கிறது. அதற்காக பத்திரிகையில் விளம்பரம் வருகிறது. அவர்களை அழைக்க வங்கிகளில் உள்ள கார்கள், ஜீப்புகள் வீடுவீடாகப் போகின்றன. எல்லா அமைப்பாளர்களும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றிய செய்திகள் பத்திரிகையிலே வருகின்றன. ஆனால் இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. "கடன் திருப்பி வராமல் இருக்கிறதே. அதற்கு என்ன காரணம்? கிராமத்திற்குப் போங்கள். அதிகாரிகளின் துணையோடு விசாரியுங்கள். கடன் திருப்பி வராமலிருக்கக் காரணம் என்னவென்று கண்டறியுங்கள்" என்று இந்தக் கமிட்டியை அனுப்பி நிரந்தரப் பரிகாரம் தேடியிருக்கக் கூடாதா? இதைப் போன்ற கமிட்டியை மாவட்ட வாரியாக, வட்டார வாரியாக, ஒன்றிய வாரியாக அமைத்து கூட்டுறவுத் துறை சம்பந்தப் பட்டவர்களையும், மற்றத் துறையினரையும் அனுப்பி, "கடனை கொடுக்க முடியாமல் இருக்கும் காரணங்களை ஆராய்ந்து வாருங்கள், அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்போம்" என்று கூறிய நிலை உண்டா?

கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி முன்பு ஏறத்தாழ 14 கோடி ரூபாய் வரையில் கடன் கொடுத்தது. இப்போது 2 கோடி ரூபாய் அளவுக்குக் கொடுக்கக்கூட வழி இல்லாமல் இருக்கிறது. வரலாறு காணாத அளவிற்கு இந்த வங்கியைக் கேவலத்துள்ளாக்கியிருக்கிறார்கள். இந்த வங்கியினுடைய தனி அதிகாரி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். "நிதிநிலையை யொட்டி புதிய அங்கத்தினர்களுக்குப் பொருளாகவோ, பணமாகவோ கடன் அளிக்க இயலாத காரணத்தால், கடனைக் கொடுக்காதீர்கள்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பழைய கடனைச் செலுத்தி பாக்கிதாரராக இல்லாமல், கடன் பெறுவதற்குத் தகுதி யுடையவனுக்குக் கூட கடன் கொடுக்க முடியாது என்று அறிக்கையை வெளி யிட்டிருக்கிறார்கள். ஒன்பதாவது மாதம் இந்த அறிக்கை வந்தது. பதினோராவது மாதம் இன்னுமொரு அறிக்கை வருகிறது. "முதல் அறிக்கையை விட்ட பிறகும்கூட சில பேர்களுக்கு பொருள் பகுதியாக கடன் அளிப்பதாகத் தெரிகிறது. இது கண்டிக்கத்தக்கது. அப்படி யாருக்காவது கொடுத்திருந்தால், இனிமேல் கொடுக்கக் கூடாது" என்று சுற்றறிக்கை வருகிறது. இப்படி தகுதி பெற்றவர்கள் இருந்தாலும் கூட, கடன் கொடுக்க முடியாது என்று சொல்லக் கூடிய தனி அதிகாரிகளின் பதவியை நீட்டிக்க வேண்டுமா? இந்த அவைகூட இதை விவாதிக்க வேண்டுமா? இது தேவையா? இதனால் பலன் உண்டா? இதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மற்ற வசதிகளுக்குக் குறைவு இல்லை. ஜப்தி நடவடிக்கை எடுப்பதில் குறை

வில்லை. ஆனால் கொடுத்த கடனை வாங்க முடியவில்லை. தகுதி படைத்த வனுக்குக் கடன் கொடுக்க முடியவில்லை. இதைவிட அந்தச் சங்கங்களுக்கு என்ன வேலை?

வேறு ஒரு வங்கியினுடைய கிளையில் குளிர்சாதனப் பெட்டி இருந்தது. பொது மக்களின் வசதிக்காக, வணிகர்களின் வசதிக்காக வைத்தது தவறு என்று குற்றம்சாட்டினார்கள். இப்போது அங்கேயிருந்து கழற்றப்பட்டு தனி அலுவலருடைய அறையில் இன்றைக்கு வைக்கப்பட்டு அது சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. தனி அலுவலர் குளுகுளு அறையில் இருக்கிறார். பொது மக்கள், வணிகர்கள் வருகிற இடத்திலே வைக்கப்படுவது தவறு என்றால், தனி அலுவலர் அறையில் வைப்பது சரியா? அப்படிப்பட்ட தனி அலுவலருக்கு மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்புத் தர வேண்டுமென்று கேட்கிறீர்களே. இத்தகையவரா தனி அலுவலரா? பொதுமக்கள் அனுபவிக்கத் தேவையில்லை, வணிகர்களைக் கவரத் தேவையில்லை, ஆனால் இப்போதிருக்கிற தனி அலுவலருக்கு இது மிக மிகத் தேவையா?

தனி அலுவலர்களுடைய பொறுப்பிலே இருந்தால், சங்கங்கள் கெட்டு விடுமென்று ஒட்டுமொத்தமாக நான் சொல்லவில்லை. பல அதிகாரிகள் உள்ளபடியே நல்ல எண்ணத்தோடு, திறமையோடு பணியாற்றி வருகிறார்கள். அப்படிச் சில பேர் இருக்கிறார்கள். மொத்தமாக அதிகாரிகளைப் போடுவது தவறு என்று நான் சொல்லத் தயாராக இல்லை. அதற்காகத்தான் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டினேன். கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் செயலைப்பற்றி மட்டும் சொன்னேன். மற்றவற்றை ஆராய்வதற்கு என்னால் முடியவில்லை, தெரியவில்லை.

(பிற்பகல் 1-00)

**மாற்றுத் தலைவர் (திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்):** அவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

* **திரு. கோ. சி. மணி:** இன்றைக்கு ஒரு ஆண்டுகாலம் ஆகியிருக்கும். இடையிலே ஒரு குழு நியமனத்திற்கு அனுமதி பெற வருகிறதா? 4 ஆண்டு களுக்குப் பிறகு ஒரு குழு பதவிப்பிரமாணம் எடுக்கிறது. ஏன்? அவர்கள் கட்சியிலுள்ளவர்களுக்குப் பதவி கொடுப்பதற்காகச் செய்கிறார்களா? அவர் களுக்குப் பதவி கொடுக்க வேண்டுமா? அதனால் என்ன பலன்? அவர்கள் என்ன செய்கின்றார்கள்? அவர்களுக்கு நாம் ஜாப் கொடுத்துக்கொண்டிருக் கிறோம். எல்லா பிரச்சினைகளையும் நாம் பார்க்கிறோம். அங்கே இருக்கின்ற வங்கியிலே என்ன இருக்கிறது? கிராமப்புறங்களிலே தான் அதிகரித்திருக்



கிறது. இங்கே உட்கார்ந்துகொண்டு நிலக்கிழார்கள், நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் பெரிய அளவுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி இருக்கிறது என்ற தவறான கருத்தைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒரு நல்ல சர்வ கட்சிக் குழுவை அமைத்து, மாவட்ட அளவில் பெரிய அதிகாரி களை எல்லாம் கிராமப்புறங்களுக்கு அனுப்பி அங்கேயுள்ளவர்களை ஏமாற்று கின்றார்களே, அது நியாயம்தானா? அதிலே சில வருடங்கள் தவறு ஏற்பட் டிருப்பது உண்மையா? கடனைச் செலுத்தியிருக்கிறார்களா, செலுத்திய கடனை உங்கள் துறையினுடைய அலுவலகத்தில் வைத்திருக்கிறார்களா? இதற்காக ஒரு குழு அமைத்தால், நாம் பாராட்டலாம். அதை விட்டுவிட்டு ஆலோசனைக் குழு என்று சொல்கிறார்கள். அங்கே அது சொல்வது ஒன்று. அவர்கள் பதவிப்பிரமாணம் எடுக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வருகி றார்கள். அந்த வங்கியிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் விழா நடத்தினார்கள். அங்கே கொடி பட்டொளிபட்டு வீசுகின்றது. இவர் கள் 'அங்கு அரசியலில் வேகமான அரசியல் புகுந்துவிட்டது' என்று சொல் கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அரசியல் புகுந்துவிட்டது என்று சொல்கின்றார்கள். ஆனால் இன்றைய தினம் உங்களுடைய கொடியே அங்கு பட்டொளி வீசி பறந்துகொண்டிருக்கிறது. உங்கள் கட்சியினரைப் பதவியில் அமர வைத்ததனாலேயே உங்கள் கொடி பறந்திருக்கிறது. ஒரு 20 ஆண்டுக்காலம் காங்கிரஸ் ஆண்ட காலத்தில் அவர்கள் ஆட்சியில் அவர்கள் கொடி பட்டொளி வீசி அங்கே பறக்க முடியவில்லை. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சிக் கொடி பறக்கவில்லை. ஆனால் இன்றையதினம் உங்கள் கொடி, அந்த வங்கியினுடைய அறையிலே மண்டபத்திலே அங்கே கூட்டம் நடந்திய நேரத்தில் பட்டொளி வீசுகின்றதே. ஆக உங்கள் கட்சி மட்டும் எந்தப் பாரம்பரியத்திலே உருவாகி யிருக்கிறது?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. இரத்தின பாலகுருசாமி:** இதுவரையில் அரசு மக்கள் குழு என்று தீர்மானித்துப் போட்டிருக்கிறது. இப்படி வெள்ள நிவாரணப் பணிகளிலே யும் சரி, நகராட்சிப் பணிகளிலேயும் சரி எந்த இடத்திலே குழு என்று அமைக்கப்பட்டு இருந்தாலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பணியாற்ற வருவதில்லை என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன். அப்படி இருக்கிற நேரத்திலே என் குழு அமைக்கவில்லை என்று காரணம் கேட்டிருக்கிறார்கள். இதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** இது கூட்டுறவுத் துறையைப் பற்றிய விஷயம். இதிலே மக்கள் குழுவிலே அவர்கள் பணியாற்றவில்லையா என்பது பற்றியது அல்ல இந்த வினா.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்னும் 3, 4 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. கூடுமானவரையில் பேசும் நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். 15 நிமிடங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கடைசியிலே பேச இருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** நான் பேசவில்லை. அவர்களே பேசட்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அப்படிச் சொல்வீர்கள் என்று நானும் நினைத்தேன்.

**திரு. கோ. சி. மணி :** இந்தக் கடன் வசூலாகாமல் இருப்பதை வசூலிப் பதற்கு ஏதுவாக இருக்கிறது என்கின்ற எண்ணம் கூட இதைக் கொண்டு வந்ததற்குக் காரணமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆங்காங்கே சட்டியை, பானையை, குடத்தை, பெஞ்சை, நாற்காலியைத் தூக்கிப் போட்டதைவிட கேவலமானது வேறு ஒன்று இருக்கும் என்று நான் கருத வில்லை. அவைகளையெல்லாம் பண்ணியிருக்கிறார்கள். அப்படிப் பண்ணியும் கடனைக்கொடுக்கவில்லை என்றால், ஒரு நோட்டிபிகேஷனை நாளைக்குப் போட்டு அதிலே அவருடைய பெயர் வருவதனாலேயே அந்தக் கடனை அவன் வெட்கப்பட்டுக் கொடுத்து விடுவான் என்று சொல்ல முடியாது. இன்கம் டாக்ஸ் ஆக்டின்படி கூட ஒரு லிஸ்ட் வெளியாகிறது. எவ்வளவு பெரிய லட்சாதிபதிகள் பெயர்கள் எல்லாம் இந்த லிஸ்டில் வருகின்றன. அதைப் பார்த்துவிட்டு அப்படியே வைத்துவிடுகிறார்களே தவிர, அதற்காக வருத்தப் பட்டு, அதிலே ஏதோ அவர்கள் ரேங்க் குறைந்து விட்டது என்று இருப்ப தில்லை. அப்படிப்பட்டவர்களே வருத்தப்படாதபோது, இந்தக் கூட்டுறவுத் துறையிலே மட்டும் கடன் வாங்கியவர்களுக்கு ஒன்றும் போய்விடாது. நியூஸ்பேப்பரிலே அவர்களுடைய பெயர் பிரிண்ட்டாகி வந்திருக்கிறதே என்று அதை 'கட்' பண்ணி அழகாக வைத்துக்கொள்வார்கள். அன்றைக்கு ஒரு நாளாவது அதில் அவன் பெயர் வந்ததே என்று கருதுவான். இதனாலேயே பழைய கடன் எல்லாம் வசூலாகிவிடும் என்று எண்ணினால், நீங்கள் ஏமாந்து போவீர்களே தவிர வேறல்ல. அதைத் தடுக்கவும் நான் விரும்பவில்லை. அதனாலே எந்தப் பலனையும் காண முடியாது. அது தேவையற்றது. அது தீதானது என்று சொல்லவில்லை. அதனாலே இப்போது கெடுதல் வந்துவிடும்



என்று சொல்லவில்லை; நீங்கள் அப்படிப் போடுவதனாலேயே புது வாய்ப்பு வந்துவிடும் என்று சொல்லவில்லை. நான் திரும்பத் திரும்பச் சொல்வது இந்தத் தனி அலுவலர் நியமனத்தைப்பற்றித்தான். 3½ ஆண்டுக்காலம் தனி அலுவலர் கள் நிர்வாகத்திலே இருந்திருக்கிறார்கள். அதைப்பற்றி நீங்கள் பரிசீலித்தீர் களா? அதனுடைய பலனை இந்த அவைக்கு அறிவித்தீர்களா? இன்னும் ஓராண்டு காலம் கேட்கிறோம். அந்தப் பலனை திரும்பவும் பெறத்தான் மேலும் ஓராண்டு காலம் கேட்கிறோம் என்பதையாவது தெளிவாகச் சொல்லிவிட்டு, இந்த ஓராண்டு காலம் நீட்டிக்க வேண்டுமென்று கேட்டிருந்தால்கூட, பரவாயில்லை. ஒட்டுமொத்தமாக 3½ ஆண்டுக் காலம் என்று இருப்பதை 4½ ஆண்டுக் காலமாக மாற்றிக்கொள்ள என்றுதான் வந்திருக்கிறது. இந்த 3½ ஆண்டுக் காலத்தில் 2½ ஆண்டுக் காலம் உங்களுடைய ஆட்சியிலே தனி அலுவலர் நிர்வாகம் நடந்திருக்கிறது. அந்த நிர்வாகத்திலே சரியாக நடந் திருக்கிறதா, தப்பாக நடந்திருக்கிறதா, என்பதைப் பரிசீலித்துப் பார்த்து, நீங்கள் இதைக் கொண்டு வந்திருந்தால், அதை உள்ளபடியே நானும் சேர்ந்து வரவேற்றிருப்பேன். எனவே இதை வரவேற்க முடியவில்லை. தனி அலுவலர் நியமனம் என்பதை நான் ஏற்கவில்லை. அதைத் தொடர்ந்து மீண்டும் கொடுப்பது நல்லதல்ல என்று கூறி இதை நான் மறுக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசலாம். அவர்கள் விரைவாகவும் குறிப்பாகவும் பேசி முடிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் இன்னும் மூன்று உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கின்றது.

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தாங்கள் பேசப்போவ தனால் தான், நான் அதை மீண்டும் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர் களே, இந்தக் கூட்டுறவுத் துறை மசோதாக்கள் எண் 62, 71, 72 பற்றிப் பேசும்போது, மசோதா 72-ல் ஒரு 'டெக்னிகல் பிளா' இருக்கிறது என்பதைச் சொல்லி அத்துடன் விட்டுவிடுகிறேன். மசோதா 62-ல் சொசைட்டிகளுக்குப் பணம் கொடுக்கத் தவறுகின்றவர்கள், 'டிபால்டர்ஸ்' பெயர்களைப் பிரசுரிப்பது சம்பந்தமான விஷயம் வந்திருக்கிறது. நாட்டிலே பொது வாழ்க்கையின் தரம் மிகவும் குறைவாக இருக்கிறது. 'ஒழுங்கீனமாக இருந்தார்; தவறு செய்கிறார்" என்று

சொன்னால் எவ்வளவோ அவமானம் என்று கருதும் பண்பு இப்போது
அவ்வளவாக இல்லை. எனவே இப்படி அச்சடித்துப் போடுவதன் மூலமாக
என்ன பலன் இருக்கப்போகிறது? நான் சம்பந்தப்பட்ட வரையில் சொல்வது
என்னவென்றால், இன்று பொது வாழ்க்கை ஸ்டாண்டர்டு வேறாக
இருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் திரு. மணி அவர்கள் சொன்னபடி,
பேப்பரிலேயே பெயர் வந்தால், அதை அழகாக 'கட்' பண்ணி வைத்துக்கொள்
வார்கள். பிரிண்ட்டாக வந்திருக்கிறது என்று வெட்டி வைத்துக்
கொள்வார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு எக்ஸாஜரேஷனாக
இருந்தாலும்கூட, இப்படிப் பிரசுரிப்பதன் காரணமாக அவர்கள் மனம் திருந்தி
விடுவார்கள் என்ற அளவுக்கு நம்முடைய 'பப்ளிக் லைப் ஸ்டாண்டர்ட்'
இல்லை. ஆகவே, அதைப் போடுவதனால் என்ன பலன் இருக்கும்
என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படிப் போட்டாலும்கூட
சகட்டுமேனிக்கு டிபால்டர்களைப்பற்றிப் போடுவது சரியல்ல. நான்
உதாரணத்திற்குச் சொல்கிறேன், வசதியிருந்தும்கூட தொடர்ச்சியாகப் பணம்
கட்டாதவர்கள் பெயர்களைப் போடலாம். அதற்கும் கூட பலன்
இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதுதான் எனது பாயிண்ட்.
டிபால்டர்ஸ் யார் என்று தீர்மானிக்க வேண்டும். அதற்கு என்ன அடிப்படை
இருக்கிறது? சட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள் எந்த அடிப்
படையிலே அதைச் செய்கிறார்கள் என்பதற்கு ஒரு வரைமுறை வேண்டும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன்.
பயிர் சாகுபடி செய்வதற்காகக் கடன் வாங்கியிருக்கக்கூடிய விவசாயிகள்
அந்தந்தக் காலத்திலே கொடுக்க முடியாமல் கடன்காரர்களாக இருக்கின்
றார்கள். அப்படிப்பட்டவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதவர்
களாக இருக்கிறார்கள். அதைப்பற்றி மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோ. சி.
மணி அவர்கள்கூட குறிப்பிட்டுப் பேசினார்கள். இப்போது கூட்டுறவுக் கடன்
களை எல்லோருக்கும் வஜா பண்ணவேண்டும் என்ற கொள்கையை நாங்கள்
ஏற்றுக்கொள்ளவில்லை. அதைப்பற்றி நாங்கள் தெளிவாக பல தடவைகள்
இந்த அவையிலேயும் வெளியிலேயும் சொல்லியிருக்கிறோம். இன்னும்
சொல்லப்போனால் அதனுடைய காரணத்தை எங்கள் கட்சியிலே நாங்கள்
யோசிக்கிறோம். அது என்னவென்றால் நம் நாட்டிலே மத்திய அரசு,
மாநில அரசு மூலமாகக் கொடுக்கின்ற மானியத்தை வாங்கி
நிறைய இண்டஸ்ட்ரியலிஸ்ட்கள் அனுகூலம் அடைந்திருக்கிறார்கள். அப்படி
அவர்கள் வாங்கி, வாங்கிப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி
இருப்பதனாலே, நம் நாட்டிலுள்ள பெரிய நிலப் பிரபுக்கள். 'ரிச் பெசன்ட்ஸ்
என்ன நினைக்கிறார்கள்? இந்த அரசின் மானியங்களை உபயோகப்படுத்த
உரிமையுள்ளவர்கள் இண்டஸ்ட்ரியலிஸ்ட்டுகள் மட்டும்தானா அவர்கள் மட்டும்



தான் சப்சிடி வாங்க வேண்டுமா? நாம் ஏன் வாங்கக்கூடாது? இந்த
அரசாங்கத்திடமிருந்து பொதுமக்களுடைய பணத்திலிருந்து பெரிய பெரிய
இண்டஸ்ட்டிரியலிஸ்ட்டுகள் எல்லாம் மானியம் வாங்குகிறார்கள். அவர்
களுக்கு அரசினர் மானியம் கொடுக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்
கின்ற பெரும் நிலச்சுவான்தார்களும், ரிச் பெசன்ட்களும் தாங்களும் ஏன்
சப்சிடி வாங்கக்கூடாது என்று நினைக்கிறார்கள். கிராமப்புற மக்களை
'ஆர்கனைஸ்' பண்ணுகின்ற அளவுக்கு அங்கு எந்த இடது சாரி கட்சியும்
துரதிருஷ்டவசமாக பலமாக இல்லை. ஏழை எளிய விவசாயிகள்
மத்தியிலே ஜனநாயகக் கருத்துடைய விவசாயிகள் சங்கங்கள் இல்லை.
அப்படிப்பட்ட பிரிவு எதுவும் அங்கு பலப்படுத்தப்படாமல் இருக்
கின்றது. அதன் காரணமாகத்தான் பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள், நிலப்
பிரபுக்கள் அவர்களை தங்களுக்காகவே தயார்படுத்தி வைத்துக்கொண்டிருக்
கிறார்கள். இந்த நிலைமைகளை இந்த அரசு தடுக்காமல் இருப்பதனால்தான்,
கிராமப்புறங்களிலே உள்ள அந்த ஏழை எளிய விவசாயிகளைக்கூட நிலச்
சுவான்தார்கள் தூண்டுகின்ற நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலேதான் நான்
கேட்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் கிராமப்புறங்களிலே விவசாயிகள் மத்தியிலே இரண்டு பிரிவுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் உச்சவரம்பு என்று பல்வேறு திருத்தங்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது, எனக்குத் தெரிந்தமட்டும், நிலப்பிரபுத்துவம் என்பது ஓரளவுக்கு அடியோடு அழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன். இன்று 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள்தான் இருக்க முடியும். நிலப் பிரபுத்துவம் தமிழ் நாட்டிலே இன்னும் இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

**திரு. ஆ. நல்லசிவன் :** ஆமாம். நிலப் பிரபுத்துவம் என்பதற்கு நீங்கள் கொடுக்கிற வியாக்கியானம் வேறு, நாங்கள் கொடுக்கின்ற வியாக்கியானம் வேறு. நிலத்தில் பாடுபடுகிறவர்களுக்கு, நிலத்தில் இறங்கி வேலை செய்கிறவர்களுக்கு நிலம் போகாத வரையிலும் நிலச்சீர்திருத்தம் நடந்து முடிந்துவிட்டதாகக் கூறமுடியாது. ஒன்று நில முதலாளிகளாக இருக்கிறார்கள் அல்லது நிலப் பிரபுக்களாக இருக்கிறார்கள். நில முதலாளிகள், கூலிக்கு ஆட்களை

அமர்த்தி, வேலை வாங்கிக்கொள்கிறார்கள். நிலப் பிரபுக்கள் வாரக் குத்தகை
வாங்குகிறார்கள். எனவே நம்நாட்டில் நிலப் பிரபுத்துவம் என்பது பரிபூரண
மாக இருக்கின்றதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலிருந்து
நம்முடைய மாநிலம் இன்னும் மாறவில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். நிலத்திலே இறங்கி உழுபவனுக்கு நிலம் சொந்தமாகாத
வரையில், அப்படித்தான் கூற முடியும். இந்த மாதிரி நிலப் பிரபுக்கள்
அரசாங்கத்திடமிருந்து மானியம் பெற முயற்சி செய்கிறார்கள். கூட்டுறவுக்
கடனைக் கட்ட சக்தியுடையவர்களுக்கு அதைக் கொடுக்காத நிலை இருக்
கிறது. அது தடுக்கப்பட்டாக வேண்டும். இடதுசாரி இயக்கங்கள் பலமாக
இல்லாததால், விவசாயிகளை 'ஆர்கனைஸ்' பண்ண முடியாத நிலை இருக்
கிறது, கிராமங்களிலுள்ள நிலப் பிரபுக்கள் ஏழை விவசாயக் கூலிகளைச்
சுரண்டாமலிருப்பதற்காக அரசாங்கத்திடம் பின்வருமாறு சொன்னோம்.
"கிராமப்புறங்களைப் பாகுபடுத்தி அணுகிப் பாருங்கள், கடன் நிவாரணம்
என்றாலும் சரி, வேறு விவசாய நிவாரணமாக இருந்தாலும் சரி, கிராமப்
புறங்களிலுள்ள வர்க்கப் பிரிவினையைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள்,
கிராமங்களில் வர்க்கப் பிரிவினை இல்லையென்று கண்ணை மூடிக்கொண்டு
இருந்தால், பிரயோசனமில்லை" என்று கூறினோம். அதைத்தான் மீண்டும்
கூறுகிறேன். இன்றைக்கு 2,000 ரூபாய் வரையிலும் பயிர்க் கடன் வாங்கியுள்ள
ஆட்களுக்கு கடன் பாக்கியிருந்தால், அதை அவர்கள் காலாகாலத்தில் கட்ட
வில்லை என்றால், அவர்களை 'டிபால்ட்டர்ஸ்' லிஸ்டில் சேர்க்கக்கூடாது.
டிராக்டர்கள் வாங்கிக்கொண்டு, நிலத்தை உழுது, அதன் மூலம் லாபம்
சம்பாதித்து, அவர்களும் கடனைக் கட்டாமல் இருந்தால், அவர்களை
டிபால்டர்ஸ் என்று அறிவிக்கவேண்டும். அதற்கு அரசு முயற்சிக்க
வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதுபோல,
கிராமப்புறங்களில் டிராக்டர்களை வாங்கிக்கொண்டு, அவர்கள் கடனையும்
திருப்பிக் கொடுக்கவில்லை என்றால், அவர்களின் பட்டியலைத் தயாரிக்க
சர்வ கட்சிக் குழுவை அமைக்கலாமென்பது என்னுடைய அபிப்பிராயம்.
ஆகவே இரண்டு பேருக்கும் வித்தியாசம் காண வேண்டும்.

அடுத்து, ஸ்பெஷல் ஆபீசர்ஸ் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். நேற்று
நான் கூறியதுபோலவே, நம்முடைய நாட்டிலுள்ள பொதுவான மக்களின்
வளர்ச்சி மட்டத்தில் அதிகாரிகள்தான் நல்லவர்கள், அதிகாரப் பற்றற்றவர்கள்
மோசமென்ற தத்துவம்தான் அரசினுடைய அணுகு முறைக்கு அடிப்படையாக
இருக்கிறது. அவர்கள் சொல்கிற குறைபாடு இருக்கிறதா என்றால் இருக்
கிறது. அதைத் திருத்த 'காம்ப்ரஹென்சிவ் பில்' கொண்டு வாருங்கள். அதை
அடுத்த பட்ஜெட் செஷனுக்குள் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். இப்போதே 6 மாதமாகிவிட்டது. இன்னும் காலம் கடத்த
வேண்டாம். எந்தபில்லையும் செலக்ட் கமிட்டிக்கு விட்டால், அப்படி விடுவது
பில்களைக் கொல்வதற்குத்தான் என்ற அபிப்பிராயம் பலப்பட்டுப்
போகும். எனவே பட்ஜெட் செஷனுக்கு முன்னால் கொண்டுவர
வேண்டும். அது வருகிறவரையில் நான் எலக்ஷனை அனுமதிக்கக்கூடாது?
எலக்ஷனை அனுமதித்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்-அபிஷியல்ஸ் இருப்பார்
கள், அபிஷியல்களும் இருப்பார்கள். பாலன்ஸ் 'செக்கப்' இருக்கும். நான்-
அபிஷியல்ஸ் மோசம், அபிஷியல்ஸ்தான் நல்லவர்களென்ற அணுகுமுறை
தவறு. அதிகாரிகள் எல்லாம் குற்றம் செய்யாதவர்களாக இருக்கிறார்களா?
அதனால்தான் இந்த அணுகுமுறைதான் திரும்பத் திரும்பி 3 ஆண்டுகள், 5½
ஆண்டுகள் என்று அதிகாரிகளை பதவிப் போட்டதாவது இருக்கிறதென்று
கூறுகிறோம். அந்த அணுகு முறை சரியல்ல என்பது என்னுடைய
அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, அட்வைசரி கமிட்டிபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.
எங்கெங்கு கமிட்டிகள் போடப்பட்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியாது.
ஆனால் அது குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியின்
கீழ் மட்டத்திலிருந்து அரசுக்குப் பெரிய நிர்பந்தங்கள் வருமென்பது எனக்கு
நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால் நான் விக்கிரமசிங்கபுரம் கூட்டுறவு
ஸ்டோர்ஸிலே செக்ரட்டரியாக இருந்தவன். அந்த ஸ்டோர்ஸ் 1978-ல்
அன்றைக்கு இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சரால் கலைக்கப்பட்டது.
அதற்கான காரணம் நியாயமானதல்ல. அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தினரின் வற்புறுத்தல்தான் காரணம். அப்படிக் கலைக்கப்பட்டதற்கு,
பேரவையிலே காரணம் சொல்லப்பட்டது. 7 இலட்சம் ரூபாய் வரையில்
அவர்கள் டீலர்களை மீறிக் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்தை
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் உள்ள டீலர்கள்
பூராவையும் நடைமுறைப்படுத்தும்போது, சிலவற்றை 'வைலேட்' பண்ணாமல்
சொசைட்டிகளால் ஒன்றும் செய்ய முடியாது. அந்த 7 இலட்சம் ரூபாயை
டைரக்டர்கள் சாப்பிட்டார்களா? அல்லது 7 இலட்சம் ரூபாய் அளவிற்கு
பங்குதாரர்கள் சாமான்கள் வாங்கியதை மாதா மாதம் பிடிக்கமுடியாமல்,
பாக்கி இருக்கிறதா? நான் 1953-ல் 4 மாத காலம் அங்கே செக்ரட்டரியாக
இருந்தேன். அந்தக் காலத்திலிருந்தே 'டைரக்டர்ஸ்' இருக்கிறது. ஆளும்
கட்சிக்காரர்களின் நிர்ப்பந்தத்தால் அன்றைக்கிருந்த கூட்டுறவு அமைச்சரவர்
கள் அப்படிச் செய்தார்கள். அது மாதிரி நிர்ப்பந்தம் வரும். எனவே புதிதாக
அமைக்கும்போது, கூட்டுறவுத் துறையில் அனுபவம் உள்ளவர்களைக்

கொண்ட அட்வைசரி கமிட்டியைப் போட்டால்தான், அங்கே 'பாலிடிக்ஸ்' புகாது. 'பாலிடிக்ஸ்' புகுமென்றால் எல்லாக் கட்சிக்காரர்களையும் போடுங்கள். அதைவிட்ட விஷயங்களை நடத்தினால் எல்லாக் கட்சிக்காரர்களும் வருவார்கள். ஜனங்களிடம் யாருக்குச் செல்வாக்கு இருக்கிறதோ, அவர்கள்தான் வருவார்கள். அட்வைசரி கமிட்டி போடும்போது, அதில் பெரும்பாலும் ஆளும் கட்சிக்காரர்களைப் போடுவது சரியல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் என்ன நடந்ததோ அதுதான் நடக்கப் போகிறது. இந்த அரசு அட்வைசரி கமிட்டிகளைப் போடுவதென்று முடிவெடுத்தால், சர்வ கட்சிக்காரர்களையும் போட வேண்டும். இல்லையென்றால் கூட்டுறவுத் துறையில் அனுபவம் பெற்ற, அந்த வட்டாரத்திலுள்ள ஆட்களைப் போடுங்களென்று கூறி, அமைகிறேன்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் துறையிலே நான் அதிகப்படியான கருத்துக்களைச் சொல்ல விரும்பவில்லை என்றாலும், 62/1979 எண்ணுள்ள சட்ட முன்வடிவில் தரப்பட்டிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் அளித்த கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுடைய பெயர்ப் பட்டியலை வெளியிட வாய்ப்பு அளிக்கக்கூடிய ஷரத்து குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களுடைய கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுடைய பெயர்பட்டியலை வெளியிடுவதன் காரணமாக, அந்த முறைகேடுகள் நிகழாமல் இருக்குமென்று எதிர்பார்ப்பதிலே நூற்றுக்கு நூறு வெற்றி பெற வாய்ப்பு இருக்க முடியாதென்பதுதான் என்னுடைய கருத்து. அதே நேரத்திலே மற்றொன்றை கூட்டுறவு அமைச்சரவர்களிடத்து வேண்டுகோளாக விடுக்கிறேன். அரசு அலுவலர்களுக்கென்று, ஆசிரியர்களுக்கென்று கூட்டுறவு நாணயச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களிலே டிபால்ட்டர்ஸ் இருப்பதில்லை. ஒன்றிரண்டு கூட இல்லை. அந்த அளவிற்கு ஒழுங்காகக் கடன்களைக் கட்டி வருகிறார்கள். முறைகேடு இல்லாமல் அந்தச் சங்கங்கள் நடைபெறுகின்றன. இந்த நிலையிலே வெளியிலே இருக்கக்கூடிய சங்கங்களிலே கடன் வாங்கி, ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் வீடு கட்டும் நிலைமையை மேற்கொள்ளுவது என்றால், அது அவர்களுக்கு மிகவும் அரிதாக, சிரமமாக இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். கல்வி அமைச்சரவர்கள்கூட ஒன்றைச் சொன்னார்கள். இந்த நாட்டிலே 2½ இலட்சம் பேர்கள் ஆசிரியர்களாக உள்ள போது, 340 ஆசிரியர்களுக்குத்தான் வீடு கட்டும் சொசைட்டி மூலமாக 30 இலட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். இப்போது என்னுடைய வேண்டுகோள் எல்லாம், ஆசிரியர்களுக்கு என்று தனியாக கூட்டுறவு வீடு



கட்டும் சங்கத்தைத் தொடங்குவதற்காக அமைச்சரவர்கள் வழிவகை செய்ய வேண்டுமென்பதுதான். அப்போதுதான் அவர்கள் எல்லோருடனும் இணைந்துகொண்டு செய்யாமல், தனிப்பட்டமுறையில் அதிகப்படியான ஆசிரியர்கள் பணம் பெற வாய்ப்பாக இருக்குமென்று சொல்லி, அதைச் செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவைத் தலைவரவர்கள் மேலவைக் கூட்டம் நாளைக் காலை நடைபெறுமென்று அறிவித்தார்கள். இப்போது எல்லாக் கட்சித் தலைவர்களும் மாலை 3-30 மணிக்கு அவை கூடி, விட்ட அலுவல்களை முடிக்கலாமென்று கருத்து தெரிவிப்பதால், மாலை 3-30 மணிக்கு அவை கூடும். எனவே இந்த விவாதத்தை 1-30 மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அடுத்துப் பேச இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி விரைவில் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவரவர்களே, ஹாஸ்டலுக்குப் போய் வருகிறவர்கள் 3-30 மணிக்கு வந்துவிடலாம். வீட்டிற்குச் சென்று வருபவர்கள் எப்படி வர முடியும்?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் எவ்வளவு விரைவாக முடிக்கிறார்களோ, அதைப் பொறுத்து முடித்துக் கொள்ளலாம்.

THE HON. THIRU K. MANOHARAN: Sir, instead of at 3-30 p.m., why don't you fix it at 4 p.m.?

**திரு. க. இராமமூர்த்தி:** எப்படி இருந்தாலும் எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் இங்கே முடிக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** நாளைய தினமும் அவை கூட வேண்டியிருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர்கள் இணைந்து முடிவெடுத்திருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 3-30 மணி என்பதை 4 மணி என்று ஆக்குவதில் ஆட்சேபணையில்லை. ஆனால் எல்லா சட்ட முன்வடிவுகளும் இன்றோடு முடியாது. மீதியை நாளை வைத்துக்கொள்ளலாம்.

(பிற்பகல் 1.20) [1979 நவம்பர் 13

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 4 மணி முதல் அவை கூடி விடப்பட்ட அலுவல்களை முடித்துவிடலாம் என்று கருதப்படுகிறது.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே. இந்த கூட்டுறவுச் சங்கங்கள் திருத்த சட்ட முன்வடிவு மூலம் மிகத் தேவையான சட்ட முன்வடிவுகள் இந்த அவை முன் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நான்காவது திருத்தச் சட்ட முன்வடிவு எண் 72 ஐப் பொறுத்தவரை, அதிலே விவாதமே தேவையில்லை. ஆகவே அந்தச் சட்ட முன்வடிவு மிக மிகத் தேவையானது என்று நான் வெளிப்படுத்தி வரவேற்கிறேன். மற்ற இரண்டு சட்ட முன்வடிவுகளைப் பொறுத்த வரை, அதாவது கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தனி அலுவலர்கள் நியமனம் இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரை என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சட்ட முன்வடிவின் நோக்கம் என்ன வென்றால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணம் செலுத்த வேண்டிய தவணைக் கடன் பாக்கிதாரர்களுடைய பெயர்களை பத்திரிகைகளில் விளம்பரப் படுத்துவது அல்லது வேறு முறையில் விளம்பரப்படுத்துவது என்பது ஆகும். அதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தினுடைய கொள்கையே இன்றைய தினம் விமர்சனம் செய்யப்படும் அளவுக்கு வந்திருப்பதாக நான் கருதுகிறேன். கூட்டுறவு இயக்கத்தைப் பலமாக்க வேண்டுமென்கின்ற ஒரு நிலை இருந்த போது, சாதாரண விவசாயிகளுக்கு, ஏழையெளியவர்களுக்காக அது பயன் படவேண்டுமென்று திட்டங்களைத் தீட்டியபோது, அதிலே வெவ்வேறு பணி களையும் நாம் பற்றி செயல்படுத்தினோம், நடைமுறைப்படுத்தினோம். அதை நாம் ஏற்று நடைமுறைப்படுத்தியதற்கு முன்னதாக, கூட்டுறவு இயக்கம் நாட்டிலே வேகமாகப் பரவாத நிலையில் பல ஏழையெளிய மக்கள் ஈட்டிக்காரரிடத்திலிருந்தும், வட்டிக்கடைக்காரரிடத்திலிருந்தும் கடன் வாங்கினார்கள். அப்படி கடன்பட்டவர்கள், அல்லது கடனை வாங்கிய வர்கள் கடன் கொடுத்தவர்களால் மிக மிக துச்சமாக, அடிமைகளைப் போல் நடத்தப்பட்டார்கள். கடன் கொடுத்தவர்கள் அந்த ஏழையெளிய மக்களை மிக துச்சமாக அடிமைகளைப் போல் நடத்திய காரணத்தால், அன்றைய தினம் கடன் வாங்குவதை சமுதாயத்தில் பெரிய அவமானமாக, கேவலமாக நினைக் கின்ற நிலை இருந்தது. இன்றைய தினம் பெரிய பெரிய தொழில் வல்லு நர்கள் பல கோடி ரூபாய்களை, பல இலட்ச ரூபாய்களை அரசாங்கத்திட மிருந்து கடனாகப் பெறுவதை நாம் காண்கிறோம். ஆனால் அன்றைய தினம் ஏதோ ஏழையெளிய மக்கள் 200 ரூபாய், 500 ரூபாய், 1000 ரூபாய், 2000



1979 நவம்பர் 13] [திரு. க. இராமமூர்த்தி]

ரூபாய் என்று கடன் வாங்கினார்கள் என்றால், அதை ஏதோ வாழ்க்கையில் செய்யத் தகாத செயலைச் செய்தது போல் எண்ணினார்கள். சமுதாய அமைப்பின் காரணமாக, கிராம அமைப்பின் காரணமாக, துச்சமாக, அடிமைகளைப்போல் நடத்தியதன் காரணமாக, பல விதத்திலும் நசுக்கியதன் காரணமாக, கொஞ்சம் கூடத் தயங்காமல் பல்வேறு அடக்கு முறைகளை கடன் கொடுத்தவர்கள் கடன்பட்டவர்கள்மீது கையாண்டார்கள்.

அதிலே ஒன்று என்னவென்றால், கடன் கொடுத்தவனுக்குக் கோபம் வந்தால், "என்னுடைய கடன் பணத்தை வைத்துவிட்டுப் போ, இல்லா விட்டால் கழுத்தில் துண்டைப் போட்டு இழுத்துப்போவேன்" என்று மிரட்டு வான். கடன்பட்டவன் அடையப்போகும் அவமானத்தைத் தவிர்க்கின்ற வகையில், மேலும் மேலும் தான் சிறுமைப்படுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டு மென்கின்ற நிலையில் எந்த விதத்திலாவது கடனைக் கட்ட வேண்டும், இல்லை கடன் கொடுத்தவர்களிடத்தில் அடிமையாக இருக்க வேண்டும் என்கின்ற நிலை இருந்தது. அது மட்டுமல்ல, சாதாரணமாக ஒரு விவசாயிக்கு அந்தக் காலத்தில் 2 ரூபாய் ஏர் கூலி என்றால், கடன் கொடுத்தவர்களிடத்தில் அடிமைகளைப்போல் 1½ ரூபாய் கூலிக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது. நான் இந்தக் காலத்தைச் சொல்லவில்லை, அந்தக் காலத்தைச் சொல்கிறேன். இன்றைக்கு ஏர் கூலி 5 ரூபாய்க்கு மேல் இருக்கிறது. அன்றையதினம் சாதாரணமாக ஏர் கூலி 2 ரூபாய் இருந்தது. அதுபோல ஈட்டிக்காரனிடத்தில் கடன் வாங்கியவன் நிரம்ப தொல்லைக்கும் அவமானத்துக்கும் ஆளானான். ஈட்டிக்காரன் வீட்டில் வந்து நின்றாலே அவமானம் என்ற நிலையில், எந்த அளவுக்கு வேண்டுமானாலும், அந்த ஏழையெளிய மக்கள் போக வேண்டிய நிலை இருந்தது. எவ்வளவோ கூனிக் குறுகி, எவ்வளவோ விட்டுக் கொடுத்து, எவ்வளவோ கேவலப்பட்டு, அவனுக்காக எதைச் செய்வதற்கும் அவர்கள் தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டிய பரிதாப நிலை இருந்தது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 1.30 மணிக்கு உள்ளாக உறுப்பினர் பேச வேண்டும். அதன் பிறகு அமைச்சர் பதில் சொல்ல இருக்கிறார். உறுப்பினர் பேசிக் கொண்டேயிருந்தால், நேரமும் போய்க் கொண்டேயிருக்கும் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: சில அடிப்படைக் கருத்துக்களை மட்டும் கூறி சுருக்கமாகப் பேச்சை முடித்து விடுகிறேன்.

[1979 நவம்பர் 13

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மறுபடியும் 4 மணிக்கு வரவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். உறுப்பினர் 1-30 மணிக்குப் பேசி முடித்து, அதற்குப் பிறகு அமைச்சர் பதிலை பண்ண வேண்டும் என்றும் சொல்கிறீர்கள். 10 மணிக்கு வந்தோம். மறுபடியும் மாலை 4 மணிக்கு வரச் சொல்லுகிறீர்கள். காலையில் 1-30 மணிக்கு உறுப்பினர் பேசி முடித்த பிறகு . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிக்கொண்டிருக்கிற போது, கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறீர்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: 1 மணிக்குள் உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கட்டுப்படுத்தியிருந்தால் ½ மணி நேரம் கூட நீட்டித்துக் கொடுத்து 1½ மணிக்குள் முடித்திருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: 1½ மணிக்குள் முடிக்கும்படி உறுப்பினரைச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்லுவார். அதனால் தான் 3½ மணிக்குப் பதிலாக 4 மணிக்கு அவையைக் கூட்டியிருக்கிறோம்.

திரு. க. இராமமூர்த்தி: கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரை, இதிலே கொள்கை [illegible] இருக்கிறது. கூட்டுறவுத் துறையை பரவலான அமைப்பாக, இயக்கமாக ஆக்கியதன் மூலம் ஏழையெளிய மக்கள், விவசாயிகள் எளிதில் கடன் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து சமுதாயத்தை ஏய்ப்பவர்களிடமிருந்தும், நசுக்குபவர்களிடமிருந்தும் காப்பாற்றியிருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நல்ல நிலைக்கு கூட்டுறவுத் துறையை இன்றைக்கு வளர்த்திருக்கிறோம். ஆனால் இன்றையதினம் நல்ல முறையில், நல்ல எண்ணத்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுத் துறைக்கு கடன் தொகையைச் செலுத்த வேண்டியவர்கள் திருப்பிச் செலுத்தவும் இல்லை, அதனால் கூட்டுறவுத் துறை பெற்றோரிடம் கடன் தொகையை மக்களுக்குக் கொடுப்பதும் இல்லை என்று நான் கருதுகிறேன். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளி விவரம் தருவார்கள் என்று நான் நினைக்கிறேன். இன்றையதினம் கூட்டுறவுத் துறை சரியாக இயங்க முடியாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. கடந்த ஓராண்டு காலமாக சரியாகக் கடன் கொடுக்கல் வாங்கல் நடைபெறாத காரணத்தால், கூட்டுறவு வங்கிகள் சரியாக இயங்காமல் போனதன் விளைவாக தமிழகத்திலுடைய முன்னேற்றத்திற்கான எந்த விளைவுகளும் அறிகுறிகளும் இல்லாமல் இந்தத் துறை முடங்கிப் போயிருக்கிறது. இதிலுள்ள பிரச்சினைகளை எப்படித் தீர்க்க வேண்டும் என்பதை



[நவம்பர் 13] [திரு. க. இராமமூர்த்தி]

[illegible]சிப் பார்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்கும் [illegible] பழைய [illegible]க்காரனும், வட்டிக்கடைக்காரனும், மற்றவர்களும் ஏழை [illegible] மக்களுக்குச் செய்ததை நினைவுபடுத்தும் வகையில், நடந்த [illegible]டிக்கைகள் அமையக் கூடாது. கடன் பட்டவர்களை அப்படி நடத்து[illegible]வது சரியான பரிகாரமாக இருக்க முடியாது.

[illegible]னை வாங்கியிருப்பவர்கள் குறிப்பாக கடன் தொகையைத் திருப்பிச் [illegible]லுகின்ற தகுதி படைத்தவர்கள், திருப்பிச் செலுத்த முடியும் என்கிற [illegible]யில் இருப்பவர்கள் கட்டாயம் கடன் தொகையை திரும்பக் கட்டியாக [illegible]டும். அதில் கொஞ்சம் கூட மாறுபட்ட கருத்து யாருக்கும் இருக்கக் [illegible]து. அப்படிப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க [illegible]ங்கம் தயங்கக் கூடாது. அவர்களுக்கு யாரும் துணை நிற்க மாட்டார் [illegible] காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, யாரும் அப்படிப்பட்டவர்களுக்கு [illegible] போக மாட்டார்கள், அதற்குத் தயாராக இல்லை என்பதை நான் [illegible]ரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள் மீது எத்தகைய கடுமை[illegible] நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ அந்த வகையில் கடுமையான [illegible] எடுப்பதை விட்டுவிட்டு, யாரோ ஒரு சிலருக்காக வேண்டி [illegible]டிக்கை எடுப்பதை [illegible] கண்ணோட்டத்தில் பார்த்து அவமானப்படுத்துவது [illegible]லாரையும் அதே [illegible]யாக இருக்காது.

[illegible]காரணத்திற்கு ஒரு கிராமத்தில் 4 பணக்காரர்கள் கடன் வாங்கியிருந்து, [illegible]களுக்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, அவர்கள் 4 [illegible]டைய பெயரையும் பெரிதாக விளம்பரப்படுத்துகிறார்கள் என்றால், [illegible]லே நியாயம் இருக்கிறது. ஆனால் ஒன்றுமே அறியாத ஏழையெளியவர் [illegible] கடன்பட்டு அந்தக் கடனைத் திரும்பக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். [illegible]களுடைய பெயரையும் விளம்பரப்படுத்தக்கூடிய நிலை இருந்தால், அது [illegible] வகையில் நியாயம்? அப்படி நீங்கள் பெயரை விளம்பரப்படுத்தினால், [illegible]ங்கம் தன் கடைசி ஆயுதத்தையும் பயன்படுத்திவிட்டது என்று [illegible]னி வாங்கிய கடனைத் திரும்பக் கட்டமாட்டான். மாத்தாப் போகும். [illegible]ய கடன் பட்டவர்களைப்பற்றி எங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். [illegible]றைய தினம் இன்கம்-டாக்ஸில் இன்ன இன்ன பேருடைய ஆட்கள் [illegible] வைத்திருக்கிறார்கள் என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதே [illegible]ல் செல்வ-டாக்ஸில் விளம்பரப்படுத்துகிறார்கள். அப்படி விளம்பரப் [illegible]த்தியதன் மூலம் அவர்களுக்கு வர வேண்டிய பாக்கி வசூல் ஆகிவிடுகிறதா [illegible]றால், அதுதான் இல்லை. இந்தியாவில் எங்கும் இப்படி விளம்பரப்படுத்து[illegible]

இதன் மூலம் எவ்வளவு பணத்தை வசூல் செய்யப் போகிறோம் என்பதுதான்
நம் முன் உள்ள பிரச்சினை. அந்தப் பணக்காரர்கள் மீது அரசாங்கம்
கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். உங்களுக்கு நடவடிக்கை
எடுப்பதற்கு சங்கடங்கள் இருந்தால், மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு
நடவடிக்கை எடுங்கள். ஒருவேளை ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்ற
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட நடவடிக்கையை
எடுத்தால், கெட்ட பெயர் வரும் என்கின்ற சங்கடம் உங்களுக்கு வருமே
யானால், வரும் என்று எண்ணுவீர்களேயானால், எதிர்க் கட்சியினராகிய
எங்களையும் சேர்த்துக் கொண்டு அதைச் செய்யுங்கள். நாங்களும் உங்க
ளுக்குத் துணை நிற்கிறோம். யார் அந்தக் காரியத்திற்கு ஒத்துழைக்க
மறுக்கிறார்களோ அவர்கள் இந்தக் காரியத்திற்குத் துணை நிற்க மறுக்கிறார்
கள் என்கின்ற பொறுப்பினை அவர்களது கட்சி ஏற்றுக் கொள்ளட்டும்.
இன்றைக்கு கடனைக் கட்டுவதற்குரிய வாய்ப்பும் வசதியும் இருப்பவர்கள்
அன்றைக்கு எப்படி கடன் வாங்கினார்கள், ஏன் வாங்கினார்கள், யார் அவர்
களுக்குச் சிபாரிசு செய்தது என்பதையெல்லாம் எண்ணிப் பார்ப்போமே
யானால், இந்தச் சட்டத்திலே கொண்டு வந்த இன்னொரு மாற்றமே இதற்குக்
காரணம் என்று நினைக்கிறேன்.

முன்பு இருந்த சட்டப்படி, ஒருவன் கடன் பெற வேண்டுமென்றால்,
அவனுக்கு சொத்து இருக்க வேண்டும், சிபாரிசு வேண்டும், இன்னும் இது
போன்ற வேறு நிலைகள் எல்லாம் இருக்க வேண்டும். ஆனால் அதையெல்லாம் விதி
களையெல்லாம் கடைப்பிடிக்காமல், பார்க்காமல் கடன் கொடுத்திருக்கிறார்கள்.
அப்படி கடன் கொடுத்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது? கடன் கொடுக்க சிபாரிசு செய்தார்களே, அவர்கள் மீது
என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஒரு நடவடிக்கையும் எடுக்கப்
படவில்லையே! ஏனென்றால் சட்டம் இயங்கவில்லை. அடிக்களத்திலே இருக்
கிற சிறிய அதிகாரிகள், பொறுப்பிலே அவர்களுக்கு மேல் இருக்கிற அதிகாரி
களை மதிக்க வேண்டும் என்பதிலும், தங்களுடைய வேலை காப்பாற்றப்பட
வேண்டும் என்பதிலும் மட்டும் தான் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்களே
தவிர, அரசாங்க வேலையை அக்கறையோடு வேகமாகச் செய்ய வேண்டுமென்ற
எண்ணம். எனக்குத் தெரிந்தவரை இருப்பதாகத் தெரியவில்லை. பல
விவகாரங்கள் அப்படி அப்படியே முடங்கிப் போய்க் கிடக்கின்றன. பல
சந்தர்ப்பங்களில் இந்த அவையில் நான் அவைகளைப்பற்றி எடுத்துச்சொல்ல
வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனாலும் இதுவரை ஒரு
காரணமில்லை. மேலே இருக்கிற அதிகாரிகளும், அவர்களுக்குக் கீழே இருக்கிற



அதிகாரிகளைக் காப்பாற்றுகிற பொறுப்பு தான் மிக மிக இன்றியமையாதது என்று கருதுகிறார்கள். அதிகாரிகள் தங்கள் நலனை மட்டும் எண்ணி பார்க்கும் நிலையிலிருந்து விடுபட்டு பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முன்வர வேண்டும். அப்படி நான் சொன்ன உடனே, விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லாமல், மனதுக்குள்ளே சொல்லிக்கொண்டிருப்பதும் எனக்குப் புரிகிறது. நான் சொல்லிக்கொண் டிருப்பது ஏழைஎளிய விவசாய மக்களைப்பற்றி அல்ல. திரும்ப கடனைச் செலுத்தக் கூடிய தகுதி படைத்தவர்களை முறையாக சட்டத்தின் மூலமாக பலவந்தப்படுத்தி கடன் தொகையை வசூல் செய்ய அரசாங்கத்திற்கு அரசாங்க அதிகாரிகளுக்கு என்ன வந்தது என்பதை தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

இறுதியாக ஒன்று. இந்தப் பெயர்களை விளம்பரப்படுத்துவது என்பது சரியான நடவடிக்கை அல்ல. கூட்டுறவுத் துறையினுடைய நோக்கத்திற்கே எதிரான நடவடிக்கை இது என்பதைச் சொல்லி, இதன்மூலமாக கடன்கள் மேலும் நிரந்தரமாகத் திருப்பிச் செலுத்தப்படாத நிலைதான் உருவாகும் என்பதையும் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவு தேவையற்ற ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது அமைக்கப்படுகின்ற இயக்குநர் குழு, போர்ட் ஆஃப் டைரக்டர்ஸா அல்லது அட்வைசரி போர்டா என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரைவாக முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அட்வைசரி போர்டா அல்லது போர்ட் ஆஃப் டைரக்டர்களா என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பத்திரிகைகளிலே போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் என்றுதான் பெயர் போட்டு வருகிறது. எதுவாக இருந்தாலும், தேர்தல் நேரத்திலே வருகிறது. கட்சிக்காரர்களை வைத்துச் செய்வதா, இல்லையா என்பதைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய முடிவுக்கு விடுகிறேன். ஆனால் இந்தக் குழு தேர்தல் நேரத்திலே அமைக்கப்படுவதால், குறைந்த பட்சம் மத்தியிலே வங்கியிலே இருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும், கார்களையும், அரசாங்க 'கெஸ்ட் ஹவுஸ்'களையும் இவர்கள் பயன்படுத்த முடியாத ஒரு நிலையை

ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறே ஏனென்றால், இந்த நிலைமைகள் எல்லாம் தவிர்க்க முடிய ஒன்றாகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் சிதம்பரம் திரு. இரத்தின பால சாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மக்கள் குழுவிலே எங்க சேர்த்தார்கள், மற்ற கட்சிகளைச் சேர்க்கவில்லை என்று சொன்னார் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம், ஏதோ . . .

**திரு. இரத்தின பாலகுருசாமி :** நான் அப்படிச் சொல்லவில்லை. மக் குழு போடவில்லையே என்று சொல்கிறார்கள். ஆனால், மக்கள் போடப்பட்டும் உங்கள் கட்சியிலே உள்ளவர்கள் ஒத்துழைக்கவில்லை. அ இருக்கும்போது, மக்கள் குழு போடவில்லையே என்று சொல்கிறீர்களே எ சொன்னேனே தவிர, மக்கள் குழுக்கள் சம்பந்தமாக மற்ற கட்சிகளைப் நான் எதுவும் பேசவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** I stand corrected ஆனால் கட்சிக்காரர்கள் ஒத்துழைக்கவில்லை, ஆகவே போடவில்லை எ சொன்னால் . . .

**திரு. இரத்தின பாலகுருசாமி:** அப்படி நான் சொல்லவில்லை. மக் குழு என்று ஆரம்பித்தபோது, ஒரு கட்சி அதை நிராகரித்து அந்தக் கூட் களிலே கலந்துகொள்ளவில்லை என்று குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஒரு கட்சிக்காரர்கள் வரவில்லை, ஒத்துழைக்க வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். எங்களைப் போட்டுப் பாருங்கள். நாங்கள் ஒத்துழைக்கிறோமா இல்லையா என்று பாருங்கள். ஒரு கட்சி மேல் இருக்கிற கோபத்திற்காக எல்லாக் கட்சிகள் மீதும் கோபம் வேண்டாம் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். இது கூட்டுறவு இயக்கம். இதில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். ஒரு கட்சி மட்டுமே இந்த இயக்கத்தை வளர்க்க முடியாது, அது ஆளும் கட்சியானாலும் கூட. ஆகவே, இந்தக் கருத்துக்களை ஏற்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** நான் பேசிக்கொண்டிருந்தபோது நான் மாண்பு மிகு உறுப்பினர் திரு. பாலகுருசாமி அவர்கள் சொன்னார்கள். நான் ஏதோ மக்கள் குழு போடவில்லை என்று சொன்னதாக, அவர்கள் சொன்னார்கள்



மக்கள் குழு போடவில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஆலோசனைக் குழு பற்றிச் சொன்னேன். அந்தக் குழு கிராம ரீதியாகச் சென்று, நிலைமைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, மக்கள் குழுவைப் பற்றிச் சொல்லவில்லை. இங்கே குறிப்பிட்டிருப்பது கூட்டுறவுத் துறையின் மூலம் போடப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழு.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, மாலையிலேயும் மேலவைக் கூட்டம் நடத்துவதாக இருந்தால், 1-30 மணிக்கு காலை நிகழ்ச்சி களை முடித்துவிட்டு மாலை வரச்சொல்லலாம். இல்லையென்றால் ½ மணி நேரம் கூட வைத்துவிட்டு மாலையில் வைக்காமல் நாளைக்கு வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் விரைவாகப் பேசி முடிப்பார்கள். மாலையிலேயும் மூன்று, நான்கு சட்ட முன்வடிவுகளை எடுக்க வேண்டும். மிகவும் விரைவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடிப்பார்கள் என்ற கருத்திலே மேலவையின் நடவடிக்கை தொடருகிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, கண்ணியம் மிக்க நடந்த 45 நிமிட நேரமாக 6 மாண்புமிகு உறுப்பினர்கள். இந்த மேலவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற கூட்டுறவுத்துறை சம்பந்தப் பட்ட மூன்று சட்ட முன்வடிவுகளைப் பற்றியும் நல்லபல கருத்துக்களை யெல்லாம் தமிழக அரசினுடைய மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மிகவும் உன்னிப்பாக கவனித்து நடவடிக்கைகளை விரைவிலே எடுக்கும் என்று அதற்கு நான் உறுதியளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்த மாமன்றத்திலே மூன்று சட்ட முன்வடிவுகள் மாண்புமிகு உறுப்பினர் களுடைய மேலான பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் இன்றைக்கு வந்திருக் கின்றன. முதலாவதாக, கடன் நிதியுதவி அளித்த வங்கிகளுக்கு உரிய கடனைத் திருப்பித் தராதவர்களுடைய பட்டியல்களை பொது நோக்கோடு பொது நலன் கருதி வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை கூட்டுறவுத் துறையில் உருவாக்குகின்ற விழுமிய நோக்கத்தோடு, பட்டியலை வெளியிடுகின்ற சட்ட முன்வடிவு இது. இரண்டாவதாக கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பது. மூன்றாவதாக,

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 நவம்பர் 13

வைப்பீட்டு காப்புறுதித் திட்டத்தில் இந்திய ரிசர்வ் வங்கியினுடைய வேண்
கோளுக்கிணங்க சில நடைமுறை மாறுதல்களைச் செய்கின்ற நோக்கம். ஆக,
இந்த மூன்று நோக்கங்களுக்காக இந்த மூன்று நடவடிக்கைகளை சட்ட
முன்வடிவுகளாக கண்ணியம் மிக்க இந்தச் சபையினுடைய ஆய்வுக்குக்
கொண்டுவரப்பட்டிருக்கிறது. இவற்றின் மீது பல கருத்துக்கள் தெளிவாகவும்,
உறுதியாகவும் மாண்புமிகு உறுப்பினர்களாலே வெளியிடப்பட்டிருக்கின்றன.
முதற்கண், கூட்டுறவுக் கடன் பாக்கிதாரர்களுடைய பட்டியலை பத்திரிகைகள்
வாயிலாக வெளியிடும்போது, அதிலே இருக்கின்ற சில பின் விளைவுகளைப்
பற்றியும், அப்படி பாக்கிதாரர்களுடைய பட்டியலை ஏடுகளிலே வெளி
யிட்டால், அவர்களுடைய நல்லுணர்ச்சி பாதிக்கப்படும் என்ற விவரங்களை
யெல்லாம் மிகவும் உருக்கத்தோடு மாண்புமிகு திண்டிவனம் இராமமூர்த்தி
போன்ற கண்ணியம் மிக்க உறுப்பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். அவர்
களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் சார்பாக ஒரு
உறுதிமொழியை நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச்
சட்டத்தை அமுல்படுத்தும்போது மிகவும் விழிப்பாக இருந்து அதிக அளவு
பாக்கியுள்ளவர்கள், வசதிபடைத்தவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்தக்
கூடிய ஆற்றல் பெற்றவர்கள் ஆகியவர்களுடைய அந்தப் பட்டியல்களை
மட்டுமே வெளியிட்டு, ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையை கூட்டுறவுத் துறை
யிலே உருவாக்குவோம் என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்
கிறேன். இந்தக் கூட்டுறவுச் சட்டத் திருத்தத்தினுடைய விழுமிய நோக்கமே
இப்படிப்பட்ட ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது
தானே தவிர ஏதோ விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருடைய மனதைப் புண்
படுத்த வேண்டும் என்ற முறையில், பங்கம் ஏற்படுத்த வேண்டுமென்
நோக்கோடு இந்த முயற்சியை, இந்த நடவடிக்கையை தமிழக அரசு எடுக்
கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
கூட்டுறவு நிறுவனத்தை சீர்குலைக்க திட்டமிட்டுச் செயல்படுகின்ற தீய சக்தி
களுடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்
தோடு, உறுதியான நோக்கத்தோடு தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ள
பட்டிருக்கிறது. உதாரணமாக ஒன்றிரண்டை சில வினாடிகளில் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள்
உணர்வுகளைச் சொல்லுகின்ற நேரத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்கள்.
குறிப்பாக, அவர் குடந்தை மத்திய வங்கியைப்பற்றிப் பேசுகிற நேரத்தில்
அதிலும் அவருடைய பொறுப்பில் அந்த வங்கி இருந்த நேரத்தில், குடந்தை
வாழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, குடந்தை கூட்டுறவு மத்திய வங்கியி
லாலேயே அவர்கள் அளித்த கடன் தொகைக்கும் இன்றையதினம் அவை



1979 நவம்பர் 13] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

திருக்கிற புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக் காலத்தில் அளிக்கப்படும்
கடன் தொகைக்கும் ஒப்புமை காட்டி, அதற்கான காரண காரியத்தையும்
சொல்லி, சில கடுமொழிகளையும் சொல்லி, இந்த அரசுக்கு 'வக்கு'
இருக்கிறதா என்றும் கடுமையான சில விவாதத்தைச் சொல்லி அவைகளை
எங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. மணி அவர்கள் வேறு
ஒரு விவரத்தையும் குறிப்பிட்டார்கள். குடந்தையிலிருக்கிற கூட்டுறவு
வங்கியின் தனி அதிகாரி ஏற்கெனவே அவர் பொறுப்பில் இருந்தபோது
இருந்த குளிர் சாதனக் கருவிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டிருந்தார்
என்றும் . . .

(உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் குறுக்கிட முயன்றார்.)

தலைவர் அவர்களே, நான் பேசிய பிறகு ஏதாவது விவரம் சொல்ல வேண்டு
மென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு முன்வரலாம். தயவு
செய்து இடையில் குறுக்கிட வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் பேசுகிற நேரத்தில் இடை
மறித்தால் சில விவரங்கள் தட்டுத் தடுமாறி தவறி விடுகின்றன. எனவே
அருள்கூர்ந்து பொறுத்திட வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, குளிர் சாதனக் கருவி இன்றைக்கும் அந்த வங்கியின் தனி அலுவலரின்
அறையில் இருக்கிறது என்ற விவாதத்தையும் சொல்லி, அங்கே அதைப்
பார்த்தேன் என்றும் ஒரு கடுமையான குற்றச்சாட்டையும் அவர்கள் இங்கே
கூறினார்கள். உடனே நான் தக்கவர்களை விசாரித்துப் பார்த்தபோது,
அந்தக் குளிர்சாதனப் பெட்டி தற்போது குடந்தை கூட்டுறவு வங்கியின் தனி
அலுவலரின் அறையில் இல்லை என்பதையும் வங்கியின் விருந்தினர் அறையில்
தான் இது இருக்கிறது என்பதையும், அதுவும் நல்ல விலை கிடைத்தால்
அதை விற்றுவிடுவதற்கான முயற்சியை அந்த வங்கி எடுத்துக்கொண்டி
ருக்கிறது என்பதையும் அறிந்தேன் என்று இங்கே எடுத்துச் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் ஒரு கருத்தை இங்கே நான் சொல்ல
விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் இதைத் தவறாகப்
புரிந்துகொள்ளக் கூடாது. நான் அறிந்த வகையில் ஆதாரத்தோடு, திட்ட
வட்டமாக என்னிடம் இருக்கிற குறிப்பை வைத்துக்கொண்டு ஒரு விவரத்தை
இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. கோ. சி. மணி

அவர்கள் எப்போது பேசினாலும் குடந்தை வங்கியைப் பற்றியும், அந்த வங்கி சாதித்த சாதனையைப் பற்றியும், அதனுடைய கீர்த்தியைப்பற்றியும், பெருமைகளைப்பற்றியும் பேசுவது வாடிக்கை, மரபு. அதற்காக நான் பெருமை கொள்கிறேன். ஆனால் அவர் பொறுப்பேற்றிருந்த அந்த நேரத்தில் கடன் வசூலை எப்படிச் செய்தார்கள் என்பது குறித்து—அவர்கள் வங்கியின் தலைவராக இருந்த நேரத்தில் அவர்கள் மேற்கொண்ட அணுகு முறையை, அவர் கையாண்ட முறையை, அங்கே இருக்கிற அலுவலர்களை வைத்துக் கொண்டு அவர்கள் செய்த முறைகளைப்பற்றியெல்லாம் நானும் ஓரளவுக்கு கூர்மையாக, பொறுமையாக, நிதானமாக இருந்து அறிந்த வகையில்—சில விவரங்களை நானும் தேடி வைத்திருக்கிறேன். குடந்தை மத்திய கூட்டுறவு வங்கியை இந்தியாவிலேயே தலை சிறந்த வங்கியாக ஆக்கினேன் என்று அவர் இன்றைக்குச் சொல்வதிலே எங்களுக்கும் பெருமை, தமிழகத்திற்கும் பெருமை, என்பதில் இரண்டு விதமான கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால் அந்தப் பெருமையை பெறுவதற்காக அவர்கள் கையாண்ட முறை இருக்கிறதே அந்த முறையை இந்த கண்ணியம் மிக்க சபையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வங்கி அவர் பொறுப்பில் இருந்தபோது கடனை வசூல் செய்வதற்கு "போலீசையும், வன்முறையையும், கட்டாய முறையையும்" பயன்படுத்தினார் என்பதை இந்த நேரத்தில் தெளிவாகவும் அறுதியிட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையை மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்த இந்த அரசு கடந்த இரண்டாண்டு காலமாக எந்த ஒரு இடத்திலும்கூட கடைப்பிடிக்கவில்லை என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் ஏனென்றால் அந்த விவரம் என்னிடம் இருக்கிறது. தேவைப்பட்டால் அதைக் காட்டுகிறேன். அவரே பெருமையாக நடத்திய அந்த வங்கியின் பத்திரிகையில் . . .

(உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் ஏதோ பேச முனைந்தார்.)

இப்போது வேண்டாம். தேவைப்பட்டால், அந்தத் தகவலைக் கொடுக்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அமைச்சராக இருந்தாலும், உறுப்பினராக இருந்தாலும், தவறான தகவலை அவைக்கு அளிக்கக்கூடாது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பேசும் போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ... அமைச்சர் பேசும்போது உறுப்பினர் அவர்கள் கேட்க வேண்டும்.





பிறகு ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லலாம். இடையில் குறுக்கிட வேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது உறுப்பினர் அமர வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** அதற்கான ஆதாரத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கைப்பட அந்தப் பத்திரிகையில் பெருமையோடு எழுதியிருக்கிறார்கள். "இன்றைக்கு இந்த வங்கியினுடைய வசூலில் அதிகமான அளவுக்கு வீழ்க்காடு இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், விவசாயப் பெருங்குடி மக்களே நீங்கள் என்னை மன்னித்துவிட வேண்டும். நாங்கள் போலீசைப் பயன்படுத்தி, வன் முறையைப் பயன்படுத்தி, அந்தக் காரணத்தால்தான் இந்த அளவுக்கு வந்தி ருக்கிறோம். அதற்காகப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்ற விவரத்தை இவர் கூட்டுறவுச் சங்கத் தலைவராக, குடந்தை மத்திய வங்கித் தலைவராக இருந்த நேரத்தில் வெளியிட்ட விவரம் என்னிடம் இருக்கிறது, இருக்கிறது, இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேவைப்பட்டால் அதைக்காட்டத் தயாராக இருக்கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** இந்த அவையில் பேசும்போது ஏதாவது பத்திரிகை யிலிருந்து சில பகுதிகளைப் படிப்பது என்றால் உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடம் முன் கூட்டியே காரணம் காட்டி அதற்கான அனுமதியைப் பெற வேண்டும் என்ற விதி இருக்கிறது. அமைச்சர் என்றால், இந்த விதியிலிருந்து விலக்களிக்கப் படுகிறாரா என்று அறிய விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே படித்த விவரங்களை அவைத் தலைவ ரிடம் முன்கூட்டியே காட்டி அதற்கான அனுமதி பெற்று பிறகு அந்தத் தகவலை அவையிலே படிக்க வேண்டும். அதை அமைச்சர் அவர்கள் செய்ய வில்லை. அவருடைய பேச்சில் "என் கையெழுத்திடப்பட்ட, அச்சடிக்கப் பட்ட அறிக்கை இருப்பதாக" இந்த அவையில் அறிவித்தார்கள். அதைத் தலைவரிடம் சமர்ப்பித்து அவர் அனுமதியைப் பெற்றுத்தான் படிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அறிக்கையைப் படிப்பது என்றால்தான், என்னுடைய அனுமதியைப் பெற வேண்டும். அதைப்பற்றிப் பேசுவதற்கு என்னுடைய அனுமதி தேவையில்லை.

[1979 நவம்பர் 13

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** துணைத் தலைவர் அவர்களே, குடந்தை மத்திய வங்கியின் அதிகார பூர்வமான ஏட்டில் வந்த செய்தியைத் தான் நான் சொல்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கையெழுத்திட்ட அறிக்கை பத்திரிகையில் வந்தது என்று சொல்கிறார்கள். என்னுடைய கையெழுத்திட்ட அறிக்கை என்று குறிப்பில் இருப்பதை ஒன்று நீக்க வேண்டும் அல்லது கையெழுத்திட்ட அந்தக் கடிதத்தையாவது, அறிக்கையையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களிடம் காட்டி பிறகு அதைப் படிக்க வேண்டும் என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** என்னிடம் ஆதாரம் இருக்கிறது என்றுதான் அமைச்சர் சொல்லுகிறார். தகவல் இருக்கிறது என்று தான் அவர் சொல்லுகிறார். எதையாவது இங்கே அவையில் படிப்பதாக இருந்தால்தான், என்னுடைய அனுமதியைப் பெற்று படிக்க வேண்டும். அவர் தகவலைப்பற்றிச் சொல்லும்போது என்னுடைய அனுமதியைப் பெறத் தேவையில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** 'கையெழுத்திட்ட' என்று அவருடைய பேச்சிலேயே குறிப்பிட்டிருக்கிறார்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் என்னிடம் தகவல் இருக்கிறது என்று சொல்லும்போது, என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் சொல்ல வேண்டும் என்பதில்லை. பத்திரிகையைப் படிப்பதாக இருந்தால் மட்டுமே, என்னுடைய அனுமதியைக் கேட்டுப் பெற்று, பிறகு படிக்க வேண்டும். இதுதான் விதி.

**திரு. கோ. சி. மணி :** என்னுடைய கையெழுத்திட்ட அறிக்கையைப் படிப்பதாக அமைச்சர் சொல்லுகிறார். அப்படியென்றால், அந்த அறிக்கையை தலைவரிடம் காட்ட வேண்டும். தங்களுக்குக் காட்டிய பிறகுதான் அதைப் படிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** படிப்பதாக இருந்தால்தான் அனுமதி கேட்க வேண்டும். தகவலைப்பற்றிப் பேசுவதற்கு அனுமதி தேவையில்லை.



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** அப்படிப்பட்ட முறைகளைக் கையாண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் அன்றையதினம் கடன் வசூலை அந்த வங்கியில் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள அரசு, மிகச் சாதாரண விவசாயிகளுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அவர்கள் விரும்பிக் கொடுக்கிற நேரத்தில் மட்டும் பெற்றுக்கொண்டு, ஒரு ஆரோக்கியமான அணுகுமுறையைக் கையாளுகிற காரணத்தால், அத்தகைய நிலைமைகள் இப்போது இல்லை என்பதை இந்த கண்ணியம் மிக்க சபைக்கு நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தும் ஒன்றைச் சொன்னார்கள். கடன் பாக்கிதாரர்களின் 'பட்டியலை வெளியிடுவது என்பது ஏதோ புதிய முறைபோலப் பேசினார்கள். ஏற்கெனவே வருமான வரித் துறையினரும், விற்பனை வரித் துறையினரும் தங்களது பாக்கிதாரர்களிடமிருந்து தங்கள் பாக்கிகளை வசூல் செய்ய இது போன்ற முறைகளைக் கையாள வருமான வரிச் சட்டத்திலும், விற்பனை வரிச் சட்டத்திலும் அதற்குத் தேவையான பாதுகாப்பு ஷரத்துக்களைப் பெற்றுள்ளனர். கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் அப்படிப்பட்ட பாதுகாப்பு ஷரத்து இல்லாத காரணத்தால், அந்தக் குறையைக் களையத்தான் தமிழக அரசு இந்தச் சட்ட முன்வடிவின் மூலம் அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இத்தகையதோர் சட்டம் இயற்றப்பட்டாலும், அது மிகவும் கவனமாகப் பயன்படுத்தப்படும், அந்தச் சட்டம் விழிப்பாகச் செயல்படுத்தப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தனி அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சென்ற ஏப்ரல் மாதம் நடைபெற்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போதே கூட்டுறவுச் சட்டத்திற்கு முழுமையான மாறுதலைச் செய்ய வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தின் அடிப்படையில் சட்ட மன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் 30 பேரைக் கொண்ட ஒரு பொறுக்குக் குழு (செலக்ட் கமிட்டி) அமைக்கப்பட்டு, இந்தச் சட்டத்தில் செய்ய வேண்டிய மாறுதல்களைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இதுவரை அந்தக் குழு 11 மாவட்டங்களில் எண்ணற்ற கூட்டுறவாளர்களின் கருத்துக்களையும் பொதுமக்களின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் கேட்டு, அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறது. எனைய 5 மாவட்டங்களிலும் விரைவில் இந்தக் குழு தனது பணியினை முடித்து அறிக்கை அளிக்க

[திரு. கே. வ. கிருஷ்ணசாமி] [1979 நவம்பர் 1

அதனை அரசுப் பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு இந்தச் சட்
மன்றத்தின் ஆய்விற்குப் பிறகு கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையா
தேர்தல் நடத்தி, மக்களுடைய பிரதிநிதிகளிடம் பொறுப்பை அளிக்க, இ
அரசு சீரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

(பிற்பகல் 1.50)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனைக் குழுவைப்பற்றி சி
நல்ல விவரங்களை அரசினுடைய மேலான பரிசீலனைக்கு வைத்தார்கள்
கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்
மென்று எடுத்த முடிவின்படி, இன்றைக்கு அக்குழுக்கள் செயல்பட்டுக்கொண்
டிருக்கின்றன. அதனுடைய பெயரே சுட்டிக் காட்டுவதைப்போல, ஆலோ
சனைக் குழு தனி அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்
பட்ட குழுவே தவிர, நிர்வாகப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக அல்ல.
ஆனால் நிர்வாகத்தின் பணிகளை ஆய்ந்து தனி அலுவலர்களுக்குப் பரிந்துரை
களையும், யோசனைகளையும் அவ்வப்போது சொல்லும். மக்களுக்கும்
கூட்டுறவு நிறுவனங்களின் பொறுப்பில் இருக்கிற தனி அதிகாரிகளுக்கு
இடையில் இணைப்புப் பாலமாக இருந்துகொண்டு மக்களுடைய தேவை
களையும், குறைகளையும் கவனத்திலே கொண்டு, அவற்றைச் சீராக்கி
செம்மைப்படுத்தும் பணியில் ஆலோசனைக் குழு அதிதீவிரமாகத் தன்னை
ஈடுபடுத்திக்கொள்ளும் என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்
கொள்ளுகிறேன்.

தேர்தல்கள் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
வருகிற வரையில், தனி அதிகாரிகள்தான் அங்கே நிர்வாகப் பொறுப்பாளராக
இயங்குவார்கள். அதிலே எந்தவித மாறுதலும் இருக்காது என்று தெரி
வித்துக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு வங்கிகளான மாநிலக் கூட்டுறவு வங்கிகள், மத்திய வங்கிகள்,
நகர வங்கிகள் ஆகிய மூன்று வகையான வங்கிகள் தமிழ்நாட்டில் 145 நி
னங்கள் இருக்கின்றன. 145 நிறுவனங்களில் 330 கோடி ரூபாய் அளவுக்கு
இன்றைக்கு வைப்பு நிதிகள் இருக்கின்றன. காப்புறுதித் திட்டத்தின் கீழ்
பாதுகாப்பைத் தேட வேண்டுமென்ற சட்டத்தை ஏப்ரல் திங்களில் இந்த
அரசு கொண்டு வந்து, அந்தச் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களில் சில திரு
த்தங்களைச் செய்ய வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி கேட்டுக் கொண்



1979 நவம்பர் 13] [திரு. கே. வ. கிருஷ்ணசாமி]

தற்கிணங்க, இந்த மாமன்றத்தின் முன் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு
வரப்பட்டிருக்கிறது. காப்புறுதித் திட்டத்தின் கீழ் பொது மக்களின் 330
கோடி ரூபாய் வைப்பு நிதிக்குப் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நல்ல
எண்ணத்தோடு இந்தச் சட்டத் திருத்தம் அமைந்திருக்கிறது என்று சொல்லி,
இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் சட்டமாக ஆக்கி திருப்பியனுப்புமாறு
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. கோ. சி. மணி இருக்கையிலிருந்து எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மணி இரண்டு ஆகப் போகிற
தென்பதை கவனத்திலே கொண்டு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

**திரு. கோ. சி. மணி:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நா
பொறுப்பேற்றிருந்த காலத்தில் இந்தியாவிலேயே முதல் பரிசைப் பெ
வேண்டும் என்று கடன் கொடுத்ததை வசூலிப்பதற்காக ஜப்தி நடவடிக்கை
எடுத்ததாகவும் அது சம்பந்தமாக ஓர் அறிக்கையை கையெழுத்தி
பத்திரிகையில் போட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்
அந்த அறிக்கையை அவர்கள் இங்கே காட்ட வேண்டும். கையெழுத்தி
ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறேன் என்று சொல்லுவதனால், அ
இங்கே காட்ட வேண்டும், அல்லது அதைத் திரும்பப் பெற வேண்
அப்படியில்லையென்றால், தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து அந்த வா
கனை நீக்க வேண்டும்.

இன்னுமொரு சேலன்ஜை அவர் சொன்னார், "வங்கியில் அவர் எவ்வளவு
ஜப்தி நடவடிக்கையை எடுத்திருக்கிறார், எவ்வளவு கொடுமைப்படுத்தியிருக்
கிறார்" என்றும் "பலாத்காரம் செய்து, போலீசை வைத்து வசூலித்
திருக்கிறார்" என்றும் அதற்காக "மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்"
என்று நான் எழுதியிருப்பதாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். "இப்படி
யெல்லாம் கொடுமை செய்தேன், பலாத்காரம் செய்தேன், போலீசை வைத்து
வசூல் செய்தேன். அதற்காக விவசாயிகளே என்னை மன்னித்து விடுங்கள்"
என்பது அவருடைய வாசகம். அப்படிப்பட்ட வாசகத்தை, நாம்
கையெழுத்திட்ட வாசகத்தைக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் திரும்ப
பெறவேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தாங்கள் கையெழுத்திட்ட ஓர் பத்திரிகை இருப்பதாகச்
சொல்கிறார்கள். தாங்கள் அது மாதிரி பத்திரிகை கிடையாது என்று
சொல்கிறீர்கள். ஆகவே அவர் சொன்னதும் தாங்கள் சொன்னதும் இரண்டும்
அவைக் குறிப்பிலே ஏறும். அதுதான் செய்ய முடியும்.

Unless it is unparliamentary, it cannot be deleted from the Proceedings of the House. This is my ruling.

**மாண்புமிகு திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட பத்திரிகையில் ஒரு அறிக்கை
வெளியிட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, உறுப்பினர்
அவர்கள் அது இல்லையென்று சொல்லும்போது, அதை நிரூபிக்க வேண்டிய
பொறுப்பு குற்றஞ்சாட்டிய அமைச்சரைச் சார்ந்ததாகும். இல்லையென்றால்,
அதை அவர் வாபஸ் பெற வேண்டும். மேடைகளில் குற்றச்சாட்டைச்
சொன்னால், அதை மறுத்துவிடலாம். இது அப்படிப்பட்டதல்ல. பொறுப்பில்
இருந்த ஒருவர் கூறியது. பத்திரிகையில் வந்திருக்கிறது என்று சொல்லும்
போது, அதைக் காட்ட வேண்டும், இல்லையென்றால் வாபஸ் பெற வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நிரூபிக்க வேண்டிய
பொறுப்பு அமைச்சருக்கு இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அவைத்
தலைவரைப் பொறுத்த வரையில், அவையைக் கண்ணியமாக நடத்திச் செல்ல
வேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு பத்திரிகையில் இருக்கிறது என்று
சொன்னால், அப்படி இல்லை என்று சொல்லுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு முழு உரிமை இருக்கிறது. அதை நிரூபிக்க வேண்டுமென்று நான்
உத்தரவைப் போட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அப்படியானால் நாங்களும் அப்படிப்
பயன்படுத்துவோம்.

**திரு. கோ. சி. மணி :** எதிர்க் கட்சியிலே இருக்கிற எங்களுக்கும் அந்த
உரிமையைத் தந்தாக வேண்டும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு ரூலிங்கைக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓர் உறுப்பினர் அல்லது
அமைச்சர் பேசுகிறபோது, அவர் இப்படிப் பேசினார் என்ற செய்தி





பத்திரிகையில் வந்திருக்கிறது என்று சொன்னால், அதை நிரூபிக்க வேண்டிய
பொறுப்பு பேசிய உறுப்பினரையோ, அமைச்சரையோ சார்ந்தது அல்ல
என்ற தீர்ப்பை வழங்கினால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக
இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மேலவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் சொன்ன
அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்து இங்கே கொடுத்து படித்துக் காட்ட
வேண்டியது அவருடைய கடமை. இல்லையென்றால், வாபஸ் வாங்க வேண்டும்
என்பது அவருடைய கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** இன்னொன்று. நான் வங்கியில் தலைவராக இருந்த
போது நடந்தது என்று சொன்னதற்காகத் தன்னிலை விளக்கம் அளிக்க
விரும்புகிறேன். போலீசை வைத்து கெடுபிடி செய்து வசூலிக்கப்பட்டது
என்று சொன்னார்கள். கடந்த இரண்டாண்டு காலத்தில் இவர்கள் போலீஸ்
நிர்வாகத்தை வைத்துக்கொண்டு எத்தனை ஜப்தியைச் செய்திருக்கிறார்கள்
என்பதையும், நான் பொறுப்பிலிருந்த 5 ஆண்டுக் காலத்தில் போலீசின்
துணையைக் கொண்டு எத்தனை ஜப்தியைச் செய்திருக்கிறேன் என்பதையும்,
கடந்த இரண்டு ஆண்டுகளில் போலீசில் எத்தனை வழக்குகள் பதிவாகியிருக்
கின்றன என்பதையும் நான் பதவியில் இருந்த ஐந்தாண்டுகளில் போலீசில்
எத்தனை வழக்குகள் பதிவாகியிருக்கின்றன என்பதையும் கணக்கிட்டு,
என்னுடைய காலத்தில் எண்ணிக்கை கூடியிருக்குமானால், இந்த அவை
தருகிற தண்டனையை ஏற்கத் தயாராக இருக்கிறேன். அவர்களுடைய
ஆட்சிக் காலத்திலே போலீஸ் கொடுமைகள் (ஹாரஸ்மெண்ட்) அதிகம் என்பதை
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.
எத்தனை எத்தனை வழக்குகள் போலீசில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன
என்பதை அவர் தெளிவாகக் கொண்டு வந்திருக்க வேண்டும். இல்லை
யென்றால், நான் சொல்லுகிற சேலன்ஜை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள
பிரச்சினை :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம்
ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட
மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்விற்கு எடுத்துக்
கொள்ளப்பட வேண்டும்."

[1979 நவம்பர் 13

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் முதலிலேயே சொன்னதுபோல், அப்படி இருக்கிறது என்று சொல்லி விட்டு பேசாமல் இருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்கிற மாபாக இந்த அவையில் சொல்லும்போது, அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்து காண்பிக்கிற வரையில் அவர் சொன்ன கருத்து குறிப்பில் இல்லாமல் செய்வது நியாயம் என்று நினைக்கிறேன். இருவர் பேசிய பேச்சையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டு அவர் கடிதத்தைக் கொண்டு வந்து நிரூபிக்க முடிந்தால், அப்போது அதைப் பற்றிய விவாதத்தைத் தொடங்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி பத்திரிகையைக் கொண்டு வந்து காண்பிக்கிற வரையில், அந்தப் பிரச்சினையைக் குறித்து இருவர் பேசியதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. @

(6) தமிழ் நாடு, 1979 ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது. திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979.)

**மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு b (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

நிர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

---

@ இது குறித்து 15—11—1979 நாள் அவை நடவடிக்கைக் குறிப்பைக் காண்க.

b 944 ஆம் பக்கத்தில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 13

**மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(7) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979).

**மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

---

@ 944-945 ஆம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி:** மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1973) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-00

(அவை, மீண்டும் பிற்பகல் 4.00 மணிக்குக் கூடியது.) [1979 நவம்பர் 13

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை).

4. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979).

(2) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட-முன்வடிவு எண் 70/1979)

(3) 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979).

ஆகிய மூன்று சட்ட முன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு அங்கத்தினர்கள் இந்த மூன்று சட்ட முன்வடிவுகள் மீது தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். பின்னர் ஒவ்வொரு சட்ட முன் வடிவாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(8) 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979 ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

@ 945-947 ஆம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது



## 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979)

1979 நவம்பர் 13]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்.

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் 4—9—1978-லிருந்து பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரியை முதன்மை இடமாகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதிக்கத்திலிருந்த அழகப்பா செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியில் இருக்கும் கீழ்க்கண்ட துறைகளையும் சென்னை குரோம்பேட்டையில் இருக்கும் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தையும் தனது ஆட்சி வரம்பிற்குள் கொண்டு பணியாற்றி வருகின்றது. 1. வேதியல் தொழில் நுட்ப இயல், 2. தோல் தொழில் நுட்ப இயல், 3. நெசவுத் தொழில் நுட்ப இயல், 4. கட்டிடக் கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி, நியமன நாளான 4—9—1978 ஆம் நாளுக்கு முன்னர் சென்னை கிண்டி பொறியியற் கல்லூரியில் அல்லது அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியில் மேல் குறிப்பிட்ட நான்கு துறைகளில் பயிலுகின்ற மாணவர்களும், சென்னை குரோம்பேட்டை தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பொறியியல் பட்ட மேற்படிப்பு அல்லது அறிவியல் பட்ட மேற்படிப்பு கல்வி பயிலும் மாணவர் ஒவ்வொருவரும் சென்னை பல்கலைக் கழகம் நடத்தும் தேர்வுகளை எழுத அனுமதிக்கவேண்டும் என்பதோடு அத்தேர்வுகளின் முடிவின்படி தகுதிபெற்ற மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் வழங்கப்படவும், அண்ணா பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், ஆசிரியர்கள், ஏனைய நபர்கள் ஆகியோருடைய ஊதியம் பணி வரம்பு நிபந்தனைகளை அண்ணா பல்கலைக் கழகம் வேறுபடுத்தக்கூடாது என்பதை வலியுறுத்தும் பொருட்டும் பல்கலைக் கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் துறைகளின் தலைவர்கள் கழக நிலையங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு கல்விக்குழுவில் அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வண்ணமும் இடைநிலைக் கல்வி கழகத் தலைவருக்குப் பதிலாக கல்விக்குழுவில் அரசால் நியமனம் செய்யப்படும் மேல்நிலைக் கல்வியை கவனிக்கும் அதிகாரி ஒருவரைச் சேர்த்துக்கொள்வது பற்றியும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு இப்பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கு சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. பேரவையால் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட முன்வடிவினை ஆய்விற்கு எடுத்துக் கொண்டு இதனை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1979 நவம்பர் 13

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். சட்டத்திற்குக் கொண்டு சார்பாக இந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே இந்தத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. வங்கிகளில் அதே நேரத்திலே தனியார் பள்ளிகளை எல்லாம் அரசு ஏற்று நடத்தக்கூடிய காலம் வராமல் இந்த ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீரும் என்று நிச்சயமாக நம்புவதற்கு இல்லை. தவறு செய்யக்கூடிய தனியார் பள்ளிகளைக் கூட அரசே ஏற்றுக் கொண்டு, நிரந்தரமாக அந்தத் தவறுகளைத் திருத்துவதற்கு அவைகளை எடுத்துக்கொள்வதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த அரசு பள்ளிகளை அரசியல் அமைப்புச் சட்டப்படி தேசிய மயமாக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்த ஒரு கல்வி வாரியம் அமைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதுதான் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதாக அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் இருக்கும் வரை ஒன்றும் முடியாது. சமீபத்திலே உயர்நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இயற்றப்பட்டிருக்கின்ற சட்டத்தைக் குறித்து ஒரு தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இப்போது அந்தத் தீர்ப்பை அமுல்படுத்த இந்த ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு வழங்கு அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த விதிகளிலே சட்டத்திலே வழியில்லை என்பதை சமீபத்திலே உயர்நீதி மன்ற நீதிபதிகள் கூறியிருக்கிறார்கள். மீண்டும் அந்த உத்தரவை அமுல்படுத்துவதற்கு சிவில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய ஒரு பரிதாபகரமான நிலை இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்திலே அதையும் கொண்டு வந்திருக்க வேண்டும். இப்போது கொண்டு வராமலிருப்பதற்குக் காரணம் கூட சொன்னார்கள். அந்தத் தீர்ப்பு இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். அந்தத் தீர்ப்பு வந்த பிறகாவது உடனடியாக, அடுத்த கூட்டத் தொடர் வரை காத்திராமல், அவசரச் சட்டமாகவாவது அதைப் பிறப்பிப்பதற்கு இந்த கல்வித் துறை முன்வர வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



பல்வேறு அவசரச் சட்டங்களை அரசு பிறப்பித்து அமல்படுத்தி வருகிறது. ஆகலால் ஆசிரியர்கள் நலனைக் கருதி இந்தக் கோர்ட்டின் தீர்ப்பு அடிப்படையிலே அவசரச் சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், மருத்துவ விடுப்பு தரப்பட்டிருக்கிறது. அரசுத் துறையில் இலவச சிகிச்சைக்கான சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பொதுவில் ஊழியர்களுக்கான சலுகை இன்னும் வழங்கப்படவில்லை, அதை வழங்குவதற்கு வேண்டும் என்று சொல்லிக்கொள் இதுவரையில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இரண்டொரு முறை கேட்டபோதுகூட, அதைச் செய்வதற்கு இல்லை என்பது போலவே பதில் வந்திருக்கிறது. ஒரே ஒரு சலுகையை மட்டும் நீண்ட காலமாக இது செய்யப்படாமல் நீடிக்காமல் வைத்திருப்பது நல்லதல்ல. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது. அரசுத் துறையிலே, உள்ளாட்சித் துறையிலே இருக்கக்கூடிய சலுகைகளை நீடிப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளிகளுக்கு உண்டான சலுகைகள் ஆரம்பப் பள்ளிகளுக்கு இல்லாமல் இருக்கிறது. இந்தச் சட்ட விதிகளிலே அப்படி இருக்கிறது. இந்தச் சட்டத்தை, விதிகளை வைத்து கல்வித் துறை ஓர் உத்தரவு போட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளிலே எங்காவது மாணவர்களுடைய வருகை குறைவானால், இந்த வருகைக் குறைவின் அடிப்படையிலே அந்த ஆசிரியர்களை நீக்கக்கூடாது, அந்த ஆசிரியர்களை வேறு பள்ளிக்கு மாற்ற ஏற்பாடு செய்யும்வரை அவர்களை அந்தப் பள்ளியிலேயே விட்டு வைக்க வேண்டும். அவர்களுக்குச் சம்பளம் கொடுத்துவர வேண்டுமென்று ஒரு உத்தரவு பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலே போடப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலேதான் இப்படிப் போடப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் ஆரம்பப் பள்ளிக்கும் உயர்நிலைப் பள்ளிக்கும் சேர்த்துதான் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்திலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கல்வி இயக்குநர் அலுவலகத்திலே போடப்பட்ட உத்தரவில் இல்லை. இது என்ன நடைமுறை என்று எனக்குப் புரியவில்லை. ஒரு உத்தரவு போடுகிறார்கள். சட்டத்தின் கீழ் ஒரு விதியை வகுக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளியிலே இன்றைக்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆரம்பப் பள்ளியிலே ஏற்படக்கூடிய அந்த மாணவர்கள் வருகை குறைவுப் பிரச்சினை,

[திரு. செ. முத்துசாமி] [1979 நவம்பர் 13

பள்ளிகளுக்கு உண்டு என்று நமக்கு நன்றாகத் தெரியும். ஆரம்பப்பள்ளி
களுக்கு அப்போதிருந்த உத்தரவினை நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்
கிறோம். இதுவரை கல்வி அலுவலகத்திலிருந்தும் கல்வி டைரக்டர் அலுவல
கத்திலிருந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இருக்
கிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்

(பிற்பகல் 4-10)

திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கல்வி அமைச்சரவர்கள் இதில் உடன
டியாக கவனம் செலுத்த வேண்டும். இரண்டொரு முறை இதைப்பற்றிக்
கேட்டபோது கவனிக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள், பரிசீலிக்கலா
மென்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தால்
தான் ஆசிரியர்களுக்குப் பயன் கிடைக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.
கல்வி அமைச்சரவர்களுக்கு இது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவர்
கள் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக ஊதியம்
வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தனியார்
பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளத்திலே கை வைக்கிறார்கள். இது எனக்கு
நன்றாகத் தெரியுமென்று தமிழ் நாட்டில் முதலமைச்சரவர்கள், கல்வித் துறை
யின் 150-வது ஆண்டு விழாவில், கல்வி அமைச்சரவர்களின் முன்னிலையில்
எடுத்துச் சொன்னார்கள். நானும் அந்த நேரத்தில் இருந்தேன். அந்த நிலை
மையை இந்த அரசு உணர்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று
சொன்னார்கள். ஆனால் கல்வித் துறை இதுவரை அதுகுறித்து என்ன செயல்
பட்டிருக்கிறது? ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்திலே ஒவ்வொரு
மாதமும் கை வைக்கிறார்கள். . வியாபாரம்போல பள்ளிகளை நடத்துகிறார்
கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க 'சட்டத்திலே வழியில்லை. இருக்கிற
சட்டத்தையும் ஒழுங்காக நடைமுறைப்படுத்த முடியாமல் செய்து விடுகிறார்
கள். அதிகாரிகளை விலைக்கு வாங்குகிறார்கள். வயிற்றுக்கு இல்லாமல்,
கல்விப்பணி சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு எதிராக, வியாபாரம் செய்வது
போல் சம்பாதித்துக் கொண்டிருக்கிறவர்கள், கடுமையாக நடவடிக்கைகளை
எடுத்துக் கொண்டிருக்கிறார்களென்பது அரசுக்குத் தெரியும். முதலமைச்சர
வர்கள் சொன்னதை, கல்வித் துறை துணிந்து செய்ய முன் வராதது குறித்து
நான் வருத்தப்படுகிறேன். எப்போது ஆசிரியர்களுக்கு ஊதியம் நேரடியாக
வருமென்பது தெரியவில்லை. இப்போது கல்லூரிகளுக்குப் பரீட்சார்த்த
மாகக் கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். ஆரம்பப் பள்ளி ஆசிரியர்



1979 நவம்பர் 13] [திரு. செ. முத்துசாமி]

களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இதைக் கொண்டுவருவோ
மென்று சொன்னபோது, கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொண்டுவர வேண்டு
மென்று கேட்கப்பட்டது. அப்போது பரீட்சார்த்தமாக ஆரம்பப் பள்ளிகளில்
கொண்டு வந்து, பிறகு கல்லூரிகளுக்கு விஸ்தரிப்போமென்று சொன்னார்கள்.
ஆரம்பப் பள்ளிகளிலேதான் அதிகமாக இருக்கிறது, உயர்நிலைப் பள்ளிகளிலே
அதைவிட அதிகமாக இருக்கிறது. கல்லூரிகளிலே அதைவிட மிக அதிகமாக
இருக்கிறது. இதற்கான திட்டங்களை இதுவரை வகுக்கவில்லை. இப்போது
கல்லூரிகளுக்குப் பரீட்சார்த்தமாகக் கொண்டுவருவோமென்று சொல்லப்படு
கிறது. ஆனால் கல்வித் துறை அப்படியே இருக்கிறது. முற்போக்கான
எண்ணத்தை வைத்துள்ள அரசு இதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள எந்தவித
மான திட்டமும் இல்லை. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்ட முன்வடிவிற்கும் உறுப்பினரவர்கள்
சொல்வதற்கும் என்ன சம்பந்தம்?

**திரு. செ. முத்துசாமி:** சட்டத்தை ஆசிரியர்களின் நலன்களுக்காகக்
கொண்டுவருகிறார்கள். ஆசிரியர்களின் நலனில் அக்கறையுள்ள அரசு, இன்னும்
சில விஷயங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறதென்று சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தனியார் பள்ளி
ஆசிரியர்களுக்கான நலனை பின்னணியிலே வைத்துத்தான், இதைச் சொல்
கிறேனே தவிர, வேறொன்றுமில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆசிரியர்கள் நலன் என்பதில் நிறைய
இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக இந்தச் சட்ட முன்வடிவு
வருகிறது. அதைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. செ. முத்துசாமி :** ஆசிரியர்களுடைய பாதுகாப்பிற்காக வரக்கூடிய
சட்டம் இது. இது குறித்து கல்வித் துறை எடுத்துக்கொண்டிருக்கிற
முயற்சிகள்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய பள்ளிக் கல்வி
இயக்குநரின்கீழ், தனியார் பள்ளி ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள்.
இந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் இருக்கும் சிரமங்களைச் சொல்கிறேன்.
தனியார் பள்ளி ஆசிரியர்கள் இன்றைக்கு நீக்கம் செய்யப்படுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதெல்லாம் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டதில்லை என்று சொல்லவில்லை. கொண்டு வந்துள்ள சட்ட முன்வடிவிற்குச் சம்பந்தமில்லாமல் சொன்னால் எப்படி?

**திரு. செ. முத்துசாமி :** தனியார் பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகளிலே இது ஒன்றாக இருக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக வந்திருக்கும் சட்டத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேன். ஏற்கெனவே உள்ள சட்டத்தை அமல்படுத்துவதில் குறை தவறு செய்கிறதென்று சொல்லிக் கொள்கிறேன். இப்போது புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள். இந்த நேரத்தில் ஏற்கெனவே இருக்கக் கூடிய சட்டம் எவ்வாறு அமல்படுத்தப் படுகிறதென்பதைச் சொல்வதால், இந்தச் சட்டத்தைச் சரியாக அமல்படுத்த வசதியாக இருக்குமென்பதால் சொல்கிறேன். கல்வித் துறை அமைச்சரவர்களுக்கு இது உதவியாக இருக்குமென்பதால் சொல்கிறேன். கல்வித் துறை ஏற்கெனவேயுள்ள சட்டத்தை அமல்படுத்தி என்ன நிலையில் செயல்படுகிறதென்பதைச் சொல்லும்போது, பலவற்றில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னேன். டைரக்டர் அவர்களைப் பலமுறை செயலகத்தில் பார்க்க முடிகிறது, சட்ட மன்றக் கூட்டம் நடந்தால், இங்கே அவரைப் பார்க்க முடிகிறது. ஆனால் டைரக்டர் அவர்களை அலுவலகத்தில் பார்க்க முடியவில்லை. அங்கே சென்றால் பயணம் சென்றுவிட்டார்களென்று சொல்லுகிறார்கள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரும்பவும் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினரவர்கள் விஷயத்திற்கு வரவில்லை, எங்கோ செல்கிறார்.

**திரு. செ. முத்துசாமி :** தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து சரியான நடவடிக்கைகளை கல்வித் துறை எடுக்காமல் இருந்து வருகிறது. அங்கே வேறு காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கும் நிலைதான் இருக்கிறது. ஏற்கெனவேயுள்ள சட்டத்தைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கிற பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம் சரியாக இயங்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவரை அதிகாரியாகச் செயல்பட வையுங்கள், அரசியல்வாதியாகச் செயல்பட அனுமதிக்காதீர்கள். அப்போதுதான் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்துள்ள சட்டத்தை நான் வரவேற்கிறேன். இருக்கின்ற பிரச்சினைகள் தீர்ந்தாலொழிய, எந்தவிதமான நன்மைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்படாதென்பதைச் சொல்லி, இதை வரவேற்கிறேன். நான் சொல்லியபடி, டைரக்டர் அலுவலகத்தில் நடைமுறையை மாற்றி அமைக்க வேண்டும். விரைவாக விதிகளை வகுத்து, உடனடியாக அவசரச் சட்டமாகப் பிறப்பித்து, ஆசிரியர்களுக்கு நன்மை செய்யும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு இயக்குநர் அலுவலகத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** தலைவரவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஸ்டேட் பாங்கிலே பணத்தைப் போடுவது பற்றி இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, டிரிபியூனல் சொல்கிற தீர்ப்புக்களை தனியார் பள்ளி நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டு, அமல் செய்யாத காரணத்தால் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளைத் தீர்க்க, மிக்க விரைவில் கல்வி அமைச்சரவர்கள் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல், கடந்த காலத்தில் இந்தச் சட்டத்தை அமல்படுத்திய விதத்தில் ஏற்பட்டிருக்கிற குறையென்று கருதி, இந்த ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்துள்ள இந்த நேரத்தில், மற்ற திருத்தங்களையும் கொண்டு வந்திருந்தால், மகிழ்ச்சியாக இருந்திருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் பள்ளிகள் சட்டம், பொதுவாக மைனாரிட்டியினர் நடத்துகிற பள்ளிகளிலே செல்லுபடியாகாது என்று கருதப்பட்டாலும், அது குறித்து தீர்ப்பு வழங்கிய தலைமை நீதிபதி அவர்கள் அதிலே சில பகுதிகள்தான் மைனாரிட்டி பள்ளிகளுக்குச் செல்லுபடியாகாது, மற்ற பகுதிகள் செல்லுபடியாகுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அதையும் கருத்திலே கொண்டு, மைனாரிட்டியினர் நடத்தும் பள்ளிகளிலேயும் இவற்றை அமல் செய்ய இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்லாமல், இந்தச் சட்டத்தைக் கொஞ்சங்கூட மதிக்காதிருக்கும் நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் முறையிலே அரசு நிர்வாக இயந்திரம் மிக வேகமாகச் செயல்பட வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. அறிவழகன்] [1979 நவம்பர் 13

மதுரைப் பல்கலைக் கழகத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலு
உள்ள சிண்டிகேட்டில் கல்விச் செயலாளரை இணைக்க வேண்டுமென
பதற்காக திருத்தம் வந்திருக்கிறது. தலைவரவர்களே, தாங்களும் இதிலே
அக்கறை காட்டுவீர்களென்பது எனக்குத் தெரியும். அதனால்தான் என்னை
பேச அனுமதித்திருக்கிறீர்களென்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் எனக்கு
உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். (சிரிப்பு)

திரு. க. அறிவழகன் : இதற்கு முன்னால் அதிகாரப் பற்றற்றவர்கள்
மூன்று பேர்கள் இருக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் அதிகாரப் பற்று
அதிகமாகவுள்ள செயலாளர் அதிலே ஒரு இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டி
ருக்கிறார். அதிகாரப் பற்று அதிகமாகவுள்ள அவர் அந்த இடத்தை
ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் நிலைமை இருப்பதால், சட்டத்தைத் திருத்தி
சிண்டிகேட்டிலே அவர் இடம் பெறும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
அதனால் பல நன்மைகள் இருக்கின்றன. அது என்னவென்றால், எதிர்
காலத்தில் சட்டமன்றத்தில் பல்கலைக் கழகம் பற்றிக் கேட்டால், கல்வி
அமைச்சரவர்கள், பல்கலைக் கழகத்திற்கும், தமக்கும் சம்பந்தமில்லை, அது
பற்றிச் சொல்ல முடியாதென்ற பதிலைச் சொல்ல முடியாது.

(பிற்பகல் 4.20)

பல்கலைக் கழக நடவடிக்கைகளுக்கு எல்லாம் நம்முடைய கல்வி அமைச்சர்
அவர்கள் பொறுப்பேற்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.
காரணம் அந்த அதிகாரிதான் கல்வித் துறையின் தலைமை அதிகாரி,
அவர் தான் கல்வித் துறைச் செயலாளர். சில வேளைகளில் துணை
வேந்தரை நாமினேட் செய்யக் கூடிய பெயர்களை அல்லது கமிட்டிக்கு
உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பட்டியலைக் குறித்துக்
கொடுக்கக் கூடிய மிக முக்கியமான இடத்தில் கல்விச் செயலாளர்
அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் டாக்டர்
ஏ. எல். முதலியார் அவர்கள் துணை வேந்தராக இருந்த வேளையில்
அரசுத் துறையில் உள்ளவர்கள் பல்கலைக் கழகத்திலே தலையிடக் கூடாது
என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் அப்படிச் சொல்லியதற்குக் காரணம்
என்ன என்பதை நான் கூற விரும்புகிறேன். அப்படி அரசின் உயர் அதிகாரி
பல்கலைக் கழக அமைப்புகளில் இடம் பெற்றால், அவரும் அந்தக் கூட்டங்களில்
கலந்துகொள்வாராதலால், அங்கு எடுக்கப்படும் எல்லா முடிவுகளையும் அரசு
ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்படும். அதனால் அரசுக்கு நிறைப்



1979 நவம்பர் 13] [திரு. க. அறிவழகன்]

பற்றாகுறை கூட ஏற்படும். சிலவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக் கூடிய
சூழ்நிலையும், இன்னும் சிலவற்றை காலம் தாழ்த்திக்கொண்டு போகக்கூடிய
நிலையும் ஏற்படும். இதுபற்றி நாட்டிலுள்ள ஆசிரியர்கள் ஏன் அவற்றை
அரசாங்கம் செயல்படுத்தவில்லை என்று கேள்வி கேட்டால், அப்போது
அரசாங்கம் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்படும். அரசுச்
செயலாளர் அங்கு இடம் பெறாமலிருந்தால், அப்படிப்பட்ட ஒரு நிலை
வராது. இப்பொழுது கல்விச் செயலர் அவர்களை இரண்டு பல்கலைக் கழகங்
களின் ஆட்சிக் குழுவில் அலுவல்முறை உறுப்பினராக நியமிக்க அரசு முடிவு
செய்திருப்பதன் மூலம் கல்வி அமைச்சரும், அரசாங்கமும் அந்தப் பல்கலைக்
கழகங்களின் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. கல்லூரிக் கல்வி இயக்குநர் என்று சொல்லக்கூடிய
கல்லூரிக் கல்வி நெறியாளர் இப்பொழுது ஆட்சிக்குழு உறுப்பினராக
இருக்கிறார். நெறியாளர் ஆட்சிக்குழு உறுப்பினராக இருக்கும்போது, கல்வித்
துறைச் செயலாளர் அங்கே இருக்க என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது.
என்கிற கேள்வி எழுகிறது. கல்வி அமைச்சர் அவர்கள் விரும்பினால்,
கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அங்கே இருந்தால் போதும், கல்வித்
துறைச் செயலாளர் அங்கே இருப்பதை எடுத்து விடுவது நல்லது, இப்பொழுது
இல்லாவிட்டாலும் கூட எதிர்காலத்திலாவது இது சிந்திக்கப்பட வேண்டிய
ஒன்று என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன்.

சிண்டிகேட் அமைப்பில் ஆசிரியர்கள் தங்களுடைய பிரதிநிதிகள் இருக்க
வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் இன்னும் பல்வேறு ஆசிரியர்
களுடைய சங்கங்கள் இந்தக் கோரிக்கையை வைத்துள்ளன. அதிலும்
சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தங்களுடைய பிரதிநிதிகள்
பல்கலைக் கழக சிண்டிகேட்டில் இடம் பெற வேண்டுமென்று நீண்ட காலமாக
கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழக ஆசிரியர்
சங்கப் பிரதிநிதிகள் எதிர்காலத்திலே பல்கலைக் கழக சிண்டிகேட்டிலே
மெம்பர்களாக வர வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை
நான் விரும்பி வேண்டிக்கொள்வேன். ஆசிரியர் பிரதிநிதிகளாகிய எங்களை
அதிலே போட வேண்டுமென்று நான் சொன்ன உடனே எங்களுக்கெல்லாம்
அதிலே ஆசை இருக்கிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்
கருதுவார்கள் என்கிற காரணத்தால் (சிரிப்பு) . . .

[1979 நவம்பர் 1

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்கலைக் கழக அமைப்புகளில்
ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக வர வேண்டுமென்ற அந்த
ஆசை இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுவதில் ஒன்றும்
தவறில்லை. எல்லோருக்குமே அந்த ஆசை இருக்கிறது. (பலத்த சிரிப்பு).

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, உங்களைப் பற்றி நான்
குறிப்பிட்ட உடனேயே "உறுப்பினர் எனக்கு உள்நோக்கம் கற்பிக்க
வேண்டாம்" என்று சொன்னீர்கள். அதே உள்நோக்கத்தை இப்பொழுது
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்னிடத்தில் கற்பிக்கிறார்களே.
(சிரிப்பு) தலைவரவர்களே, தாங்கள் பல்கலைக் கழக சிண்டிகேட்டிலே
பொறுப்பு வகித்திருக்கிறீர்கள். தாங்கள் பல்கலைக் கழக சிண்டிகேட்டிலே
இடம் பெற்று தமிழுக்கும், பல்கலைக் கழகத்துக்கும் நிரம்ப சேவை செய்திருக்
கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களுடைய தலைமை இப்பொழுது தேவை
யில்லை என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்பொழுது எனக்கும் கல்வி
அமைச்சருக்கும் உறுப்பினர் முடிச்சுப் போடப் பார்க்கிறாரா? (பலத்த
சிரிப்பு).

திரு. க. அறிவழகன்: பல்கலைக் கழக சிண்டிகேட்டைப் பொறுத்த
வரையில், இனி அங்குள்ள குறைகளைக் கண்டிக்கத் தக்க முறையில் வாய்ப்
பினைப் பெற்றிருக்கிறோம் என்ற முறையில் நாங்கள் எல்லாம் சந்தோஷம்
அடைகிறோம். இன்னும் அதிலே செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் அனைத்
தையும் மிக விரைவிலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவர
வேண்டும். கடைசியாக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்
கழகச் சட்டத்தினைப்பற்றி மூன்றே மூன்று கருத்துக்களைக் கூறி
முடிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்த [illegible]யில் உங்கள் கையிலேயே
இருக்குமே.

திரு. க. அறிவழகன்: ஆம், இருக்கிறது. பேரறிஞர் அண்ணா தொழில்
நுட்பவியல் பல்கலைக் கழக மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்த பிறகு,
மாணவர்கள் போராட்டம் நடத்திய பிறகு மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஒரு பரிசாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது.



1979 நவம்பர் 13] [திரு. க. அறிவழகன்]

அவர்கள் ஒரு உறுதிமொழியை அவர்களுக்கு அளித்தார்கள். அதன் பிறகு
உடனடியாக இதைக் கொண்டு வந்திருப்பதால்தான், இது மகிழ்ச்சிக்குரிய
ஒன்றாக, வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. இன்றையதினம் பேரறிஞர்
அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் பலவிதமான கவலைகள்
இருக்கின்றன. ஏ. சி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜியில் பணியாற்றுகின்ற
ஆசிரியர்களுக்கு உயர்வான சம்பளம் இல்லை. கிண்டி பொறியியல் கல்லூரியில்
பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இருப்பதுபோல், பதவி உயர்வுக்குரிய
வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிடையாது. சென்னைப் பல்கலைக் கழகத்தின்
கீழ் அந்த ஏ.சி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி நீண்ட காலமாக இருந்த
காரணத்தால்தான், அந்த ஆசிரியர்களுக்குரிய சம்பளம், பதவி உயர்வு
போன்ற வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலைகள் இருந்தன. புதிய சம்பளம்
நிர்ணயம் கூட அவர்களுக்கு இல்லாத நிலையில் ஏ.சி. காலேஜ் ஆஃப் டெக்
னாலஜியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்
கிறார்கள்.

அடுத்தபடியாக, ஆசிரியரல்லாத பணியாளர்கள் (நான்-டீச்சிங் ஸ்டாப்)
ஒரு பேராசிரியரைத் தலைவராக வைத்துக்கொண்டு ஒரு சங்கத்தை நடத்து
கிறார்கள். ஒரு பேராசிரியர் ஆசிரியரல்லாத பணியாளர்களின் சங்கத்துக்குத்
தலைவராக இருக்கலாமா என்கிற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. பழம்பெரும்
இலக்கியங்களில் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று சொல்லப்
பட்டிருப்பதுபோல், அந்தப் பேராசிரியர் இந்த சமுதாயத்திற்குத் தொண்
டாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் நாட்டுக்கும் உலகத்துக்கும் இன்றைய
தினம் தொண்டாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆசிரியர்கள் சங்கத்திற்கும்
அவர் தலைவராகிவிட்டார். ஆசிரியரல்லாதவர்களுக்கும் அவர் தலைவராகி
விட்டார். மாணவர்களுடைய போராட்டத்திற்கும் அவர்தான் தலைவராக
இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்நிலையில் பல்கலைக்
கழகத் துணை வேந்தர் அவர்கள் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு அவர்
எப்படி தலைவராக வரலாம் என்று கேட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களாக
உள்ளவர்களுக்கும் அவர் தலைவர், ஆசிரியரல்லாதவர்களுக்கும் அவர்
தலைவர். அதோடு மட்டுமல்லாமல் மாணவர்களின் தலைவராக அவர் வரக்
கூடிய வாய்ப்பு வளர்ந்துகொண்டு வருகிறது.

இந்நிலையில் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் அவருடன்
பேச்சு வார்த்தை நடத்த மறுத்து வருகிறார். சுயகௌரவத்தை, பிரஸ்டீஜை
நினைத்து அவர் பேச மறுத்து வருகிறார். பேரறிஞர் அண்ணா தொழில்
நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் இப்பொழுது துணை வேந்தராக இருப்பவர்

பேராசிரியராக இருந்துவிட்டு வந்தவரல்ல. பொறியியல் துறையில் அனுபவம் பெற்றவராக இருந்தவர். எதிர்காலத்தில் பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாக இருந்தவர்களைத்தான் துணை வேந்தர்களாக நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு கொண்டு வந்திருக்கின்ற இந்த மூன்று சட்ட முன்வடிவுகளின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகச் சட்டத்தைப் பொறுத்த வரை, “பல்கலைக் கழகத்தில் நியமிக்கப்பட்டுள்ள எந்த ஓர் அதிகாரி, ஆசிரியர் அல்லது ஏனைய நபருக்கு எதிர்காலத்தில் பாதகம் ஏற்படக்கூடிய விதத்தில் அவர்களது ஊதியம், ஏனைய பணி வரம்பு—நிபந்தனைகள் ஆகியவற்றை பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் வேறுபடுத்தக் கூடாது” என்கிற கருத்துக்களுடன் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டால் மாத்திரம் போதாது. மிகக் கடுமையாக இதை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்றும், சோர்ந்து போய்விடாமல், ஏனோ தானோ என்று இல்லாமல், அதிகாரிகள் கடுமையான நடவடிக்கையை எடுத்து, இதை அமுல்படுத்துமாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்கின்ற என்னுடைய வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல் காரண—நோக்க விளக்கத்திலேயுள்ள மூன்றாவது பத்தியிலே “இடைநிலைக் கல்விக் கழகத் தலைவருக்குப் பதிலாக, கல்விக் குழுவில் அரசால் நியமனம் செய்யப்படும் மேல்நிலைக் கல்வியைக் கவனிக்கும் கல்வித் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைச் சேர்த்துக்கொள்வது என்று கருதப்பட்டுள்ளது” என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேல்நிலைக் கல்வியில் தொடர்பு உள்ளவர்களைச் சேர்த்துக்கொள்வதுபற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் என்னுடைய யோசனையை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வியைப் பொறுத்தவரை, தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரை ஒரு “லிங்க்” இருக்கக்கூடிய வகையில் அனைத்துப் பிரிவுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய அதிகாரிகளையும் இணைத்து வழிவகை செய்வதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்தால், மிகச் சிறப்பாக இருக்கும்.



அடுத்து, இங்கே ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள், முறைப்படுத்துதல் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எனக்கு முன்னால் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சருக்கோ, மற்றவர்களுக்கோ தனியார் பள்ளி நிர்வாகிகளால் ஆசிரியர்களுக்குச் செய்யப்படுகின்ற முறைகேடுகளைப் பற்றி புதிதாக ஒன்றும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. என்றாலும் கூட இப்போது ஜாதியற்ற, மத பேதமற்ற ஒரு நாட்டிலே, ஒரு அமைப்பிலே, ஏதாவது சில விதிமுறைகளை வகுத்து அவற்றைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலே என்னால் நடக்கின்ற கொடுமைகளை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சாதி வேறுபாடு கருதி பல தனியார் பள்ளிகளிலுள்ள நிர்வாகிகள், ஆசிரியர்களை அடிக்கக்கூட செய்கிறார்கள் என்கிற உண்மை இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கே கூட தெரியும். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில்கூட நான் இதுபற்றிச் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

தஞ்சையிலே ஒரு தனியார் பள்ளி நிர்வாகி அங்குள்ள தமிழ் ஆசிரியரை * * * என்று மாணவர்களுக்கு முன்னிலையில், ஆசிரியர்களுக்கு முன்னிலையில் தகாத சொற்களால் திட்டியிருக்கிறார்.

**டாக்டர் இரா. சவார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் ஜாதிப் பெயர்களைக் குறிப்பிடாமல், வருந்தும்படியான சொற்களை உபயோகப்படுத்தினார் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஏற்கெனவே இந்த மாதிரி வார்த்தைகள் நீக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் பேசும்போது, ஜாதியின் பெயரைச் சொல்லுவதைவிட இழிவாகப் பேசினார் என்று குறிப்பிட்டாலே போதும். உறுப்பினர் சொன்ன அந்தக் குறிப்பிட்ட வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். பத்திரிகைகளும் இதைப் போடாமல் இருக்க வேண்டும்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[1979 நவம்பர் 13

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் ஜாதியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்ற நோக்கத்தில் சொல்லவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால், ஆழமாக நெஞ்சில் பதியும் என்பதால்தான், அப்படிச் சொன்னேன். அந்த நிர்வாகி ஜாதியின் பெயரைச் சொல்லி இழிவாகப் பேசியிருக்கிறார். அதேபோல பாபநாசத்தில் வலங்கைமான் என்ற ஊரில் ஒரு ஆசிரியரை மதத்தின் பெயரால் இழிவாக ஒரு நிர்வாகி பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 4-30)

இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றபோது என்னதான் நாம் இங்கே ஆசிரியர்களுக்கும், மற்றவர்களுக்கும் பாதுகாப்புத் தருவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை அமுல்படுத்துகின்ற அதிகாரிகள் எப்படி இருக்கிறார்கள் என்று சொன்னால்—நான் குறிப்பிட்ட யாரையும் கோடிட்டுக்காட்ட விரும்பவில்லை—பொதுவாக அதிகாரிகளுக்கு ஆசிரியர் களிடமிருந்து எந்தவிதமான வருமானமும் கிடையாது. தனியார் துறையிட மிருந்து அவர்களுக்கு அதிகமான வருமானம் உண்டு. சலுகைகள்' உண்டு. பல்வேறு விதமான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக் கின்றன. இவைகள் எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். என்னதான் ஆசிரியர்களுக்குத் தொல்லைகள் இருக்கின்றன என்பதை அவர்கள் உணர்ந்தாலும், அதிகாரிகள் அந்த நிர்வாகத்தினரிடமிருந்து கையூட்டுப் பெற்றுக்கொண்டு, கையூட்டு என்பதோடு மட்டுமல்ல, மேலும் கேவலமான முறையிலே அவர்களுடைய ஆசாபாசங்களுக்கேற்ற வகையில் வேறு எந்தெந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் வழி செய்ய வேண்டுமோ அந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் வழி செய்யச் செய்து அவைகளை அவர்கள் அனுபவித்துக்கொண்டு ஆசிரியர்களைப் பழி வாங்கும் நிலைமைகளை நாட்டிலே வளர்ந்து வருகின்றன. சாதாரணமாக தனியார் பள்ளிகளை நடத்துவது, ஒன்று பணத்திற்காக அல்லது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களுக்கு என்ன சொன்னேனோ அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் சொல்லவேண்டியதில்லை. உவமையாக எடுத்துச் சொல்லி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கவனத்திற்குக் [illegible]



1979 நவம்பர் 13]

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எத்தனை முறை சொன்னாலும் எண்ணம் ஈடேறவில்லை. ஈடேறும் வரை சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக் கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உவமானம் உவமேயம் ஆக வேண்டாம். அதுபோல் உவமேயம் உவமானம் ஆகவும் வேண்டாம்.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய பகுதிகள் மட்டுமல்லாமல், இவைகளையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட முறையிலே அங்கே தனியார் பள்ளி நிறுவனங்கள் இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும். இந்த 'என்டோ மென்ட்' சம்பந்தமாக எந்த பாங்கிலே பணம் டெப்பாசிட் பண்ணுவது என்று சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக மேல்நிலைப் பள்ளிக்கு பணம் கட்ட வேண்டும். 25,000 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொன்னால், ஒரு தனியார்ப் பள்ளி ஏற்கெனவே வேறு வகையிலே பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிற போது, அந்தப் பணத்தை எடுத்து, இப்போது கட்ட வேண்டிய தொகையைக் கட்டக்கூடாது, இதற்காக தனியாக பெற்றோர்கள்-ஆசிரியர்கள் சங்கத்தின் மூலமாக வசூலித்துத்தான் கட்ட வேண்டும் என்று சொல்லக்கூடிய முறை இன்றைக்கு இருக்கிறது. அதையெல்லாம் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டும் அவர்கள் ஏதோ கட்டுவதற்கு உரிய வாய்ப்புக்கள் இருந்தால் போதும் என்ற வகையிலே இருக்க வேண்டும். மற்றொன்று, ஒரு தனியார் பள்ளியிலே அக்கிர மங்கள் நடக்கின்றன. அந்தப் பள்ளியிலிருந்து ஒரு ஆசிரியர் வெளியேற விரும்பு கிறார். வெளியேற விரும்புகிறபோது, வேறொரு இடத்திலே இருக்கிற மற்றொரு தனியார் பள்ளிக்குச் செல்வதற்கு விரும்புகிறார். அதைப் போலவே அங்கே இருக்கிற ஆசிரியரும் இந்த மாவட்டத்திற்கு வருவதற்கு விரும்புகிறார். அப்படி வருகின்றபோது, இந்த மனமொத்த மாற்றத்திலே அவர்கள் உடனுக்குடன் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிக்கு வருவதற்கு சட்டபூர்வமான ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கிறேன். ஒரு தனியார் பள்ளியிலிருந்து ஒருவர் விடுவிக்கப்படுகிறார் என்று சொன்னால், புதிதாக அந்த இடத்திற்கு வேறு ஒரு ஆசிரியரைப் போட வேணடும் என்று சொன்னால், புதிதாக எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்சுக்குப் போய் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை தான் இருக்கிறது. இந்த ஆசிரியர் அந்தப் பள்ளிக்கும் அந்த ஆசிரியர் இந்தப் பள்ளிக்கும் செல்லும் வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்ட

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1979 நவம்பர்

ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்தால், தனியார் பள்ளியில் இருக்கின்
பெரும்பாலான பிரச்சினைகள் தீரும். அங்கே மன வேறுபாடு ஏற்பட்டதற்கு
பின்னாலே, அந்தக் குறிப்பிட்ட பள்ளியிலே நீடிக்க விரும்பாதவர்கள் அ
விட்டு வேறொரு பள்ளிக்குச் செல்லவும், இந்தப் பள்ளியிலிருந்து அந்த
பள்ளிக்குச் செல்லவும் வாய்ப்பாக அமையும் என்பதால், அதற்குரிய ஏற்பா
களைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே நம்முடை
பேராசிரியர் அவர்கள் எல்லாவற்றையும் சொன்னார்கள். அவர்கள் எல்ல
வற்றையும் சொன்னதற்குப் பிறகு நான் 'பேரா-சிறியாக' உட்கார்ந்திருக்க
கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்றாலும் கூட, அந்தப் பேராசிரியர் அவர்க
ஒன்றைச் சொன்னார்கள். சிறுபான்மை பள்ளிக்கூடங்களைப்பற்றி
சுட்டிக்காட்டினார்கள். என்னதான் சட்டத் திருத்தம் கொண்டு வந்தாலும்
என்னதான் ஆர்வமாகச் செயல்படுத்த முனைந்தாலும், சிறுபான்மையின
பள்ளி என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடியவர்கள் எப்படியாவது இந்த
அரசாங்கத்தையே எதிர்த்து, ஒரு அரசாங்கம் நடத்தக்கூடிய நிலைமைக்கு
அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பதை எப்படித்தான் நீக்குவது என்பதை
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு எப்படித்தான் கட்டுப்பாடு கொண்டு
வருவது என்பதைப்பற்றி இன்னும் தீவிரமாகச் சிந்தித்து அமுல்படுத்து
வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே
சொல்லிக்கொள்ள விழைகிறேன். இவைகளையெல்லாம் நீங்கள் இந்தச்
சட்டத்திலே கொண்டுவர முடியாவிட்டாலும் கூட, நீங்கள் சிந்தித்து,
அவசரச் சட்டம் என்று சொல்வது போலவாவது கொண்டுவந்து செயல்படுத்த
வேண்டும். சட்டமன்றம் முடிந்த பிறகு, ஒரு நான்கு நாட்களுக்
குள்ளேயேகூட சில அவசரச் சட்டகளைக் கொண்டு வருவதை வழக்கமாகக்
கொண்டிருக்கிற அரசு இதற்காகவும் ஒரு அவசரச் சட்டம் கொண்டுவர
முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, கல்வி சம்பந்தப்பட்ட இந்த
மூன்று சட்டத் திருத்தங்களையும் மனமார வரவேற்கிறேன். தனியார் பள்ளி
களைப் பொறுத்தவரையில், 'என்டோமென்ட்' என்ற முறையிலே கணக்கை
இன்று ஸ்டேட் பாங்கிலே வைத்துக்கொள்ளலாம் என்று வந்திருக்கிறது.
ஏற்கெனவே நடைமுறையிலே 'இன்டஸ்ட்டிரியல் டெவலப்மென்ட் கார்ப்ப
ரேஷன்' என்ற அமைப்பிலே அந்தப் பணத்தைப் போட்டு வைக்கவேண்டும்
என்ற சுற்றறிக்கை இலாக்காவின் மூலமாக வந்து கொண்டிருக்கிறது.
ஆகவே, அநேக தனியார் பள்ளிகள் 'என்டோமென்ட்' வைப்புத் தொகையை



1979 நவம்பர் 13] [திரு. பா. ரா. தாமஸ்]

இன்டஸ்ட்டிரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷனிலேதான் வைத்திருக்
கிறார்கள். ஏழு ஆண்டுக்கு ஒருமுறை அதற்கான வட்டியைப் பெறுகிறார்கள்.
என்னைப் பொறுத்தவரையில், இதைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு
கிறேன். ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா அல்லது பாரத் வங்கியிலே வைக்க
இந்த உரிமையை வழங்கி அவர்களையும் இதோடு சேர்த்துக்கொள்ளலாம்
என்பதற்கு ஆட்சேபணை இல்லாவிட்டாலும்கூட, ஒருவேளை இங்குள்ள
மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவற்றினுடைய இரசாயனக்
கூடங்கள், ஆய்வுக் கூடங்கள், ஆய்வுக்கூடக் கருவிகள் எல்லாம் எந்த
அளவுக்குச் சிறப்பாக இருக்கின்றன என்று சீர்தூக்கிப் பார்க்கும்போது,
இன்டஸ்ட்டிரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்ற அமைப்பின் மூல
பெறக்கூடிய தொகையைப் பெற்று நம்முடைய மாநிலத்திலே இருக்கும்
'சிட்கோ' அமைப்பின் மூலமாக வட மாநிலங்களிலேயிருந்து இரசாயனப்
பொருட்களையும் ஆய்வுக்கூடங்களுக்கான கருவிகளையும் பெறக்கூடிய
நிலையை நாமே தவிர்த்து, இந்த என்டோமென்ட் தொகையை சிட்கோவுக்கு
ஒதுக்கி, சிட்கோ நிறுவனத்திற்கு முன்னதாகவே கொடுத்து அவர்கள் மூலமாக
இந்த இரசாயனக் கருவிகளை, ஆய்வுக்கூடங்களுக்குத் தேவையான கருவி
களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு அமைப்பை ஏற்படுத்தினால், இந்தப்
பல கோடி ரூபாய் என்டோமென்ட்டுக்கு இருக்கும் தொகையை பள்ளிக்கூடங்
களுக்கான நலனுக்குப் பயன்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக்கொள்
கிறேன். மற்றொன்று, சில பள்ளிகளுக்கு என்டோமென்ட் இல்லாமல் இருந்து
கொண்டிருக்கிறது. அநேக ஆண்டுகளுக்கு முன்னதாக திறக்கப்பட்ட
பள்ளிகள் என்டோமென்ட் தொகையைக் கட்டாமலேயே ஆரம்பித்திருக்
கிறார்கள். சிறுபான்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், என்டோமென்ட்
கட்ட வேண்டும் என்று நிர்ப்பந்திக்க சட்டத்திலே இடமில்லை என்ற சூழ்
நிலை இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 1 லட்சம்
ரூபாய் என்டோமென்ட் தொகை கட்ட வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளைப்
பொறுத்தவரையில், 75 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். ஆனால், 1950,
1955 ஆம் ஆண்டுகளைப் பார்த்தால், 35 ஆயிரம் கூட கட்டினால் போதும்
என்று இருந்தது. இந்த அமைப்பிலே நான் என்ன கருதுகிறேன் என்றால்,
என்டோமென்ட் தொகை பள்ளியின் வளர்ச்சிக்காக, மாநிலத்தினுடைய
கல்வியின் முன்னேற்றத்திற்காக, கல்வியின் தரம் உயரக் கூடிய அளவிலே
பள்ளிகளுக்குத் தேவையான இரசாயனக் கூடங்கள் அமைப்பதற்கு வேண்டிய
சிறப்பான கருவிகளை வெளிநாட்டு கொலாபோரேஷன் மூலமாக நம்
நாட்டிலே தயாரித்தால், நமது தேவையைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமின்றி,
பிற மாநிலங்களுக்கும் நாம் அனுப்பக்கூடிய நிலையில் இருப்போம் என்று
நான் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. பா. ரா. தாமஸ்] [1979 நவம்பர் 13

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகங்களைப்
பொறுத்தவரையில், இதுவரையிலும் ஆட்சிக் குழுவிலே செயலாளர் இடம்
பெறவில்லை. ஆனால், இன்று இந்தப் புதிய திருத்தங்கள் மூலமாக ஆட்சி
மன்றக் குழுவிலே செயலாளர் இடம் பெறுகிறார். நிதித்துறையைச் சேர்ந்த
செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதியானவர் இந்தப் பல்கலைக் கழகங்
களிலே புகுத்தப்படுகிறார். பொதுவாக பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள்,
போராடும்போது, நிதித்துறை ஒரு பெரிய இடைஞ்சலாக இருக்கும்போது,
மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த நல்ல திருத்தத்தைக் கொண்டு
வந்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். பல்கலைக் கழகங்களில்
உள்ள ஆசிரியர் சங்கங்களுடைய கோரிக்கைகளைத் தெரிந்துகொள்ளவும்,
அதிலே உண்மையான உணர்வோடு செயல்படவும் நிதியைத் தாராளமான
ஒதுக்கீடு செய்யவும், இந்த நடவடிக்கை நல்லமுறையில் பயன்படும் என்ப
தால் நான் இதை வரவேற்கிறேன். அதோடு கூட, பல்கலைக் கழகங்களின்
வளர்ச்சிக்கு எவ்வளவு தொகை தேவை, மாநிலத்திலிருந்தும், மத்திய அரசிட
மிருந்தும் எவ்வளவு தொகை வாங்கித் தரவேண்டும், அங்குள்ள பல்கலைக்
கழகங்களின் நடைமுறைக் கணக்குகளை வைத்துக்கொள்வது, ஆடிட்
செய்வது, அவற்றிலே இருக்கும் குறைபாடுகளை நீக்குவது ஆகியவற்றுக்கு
உகந்தவாறு, நிதித் துறைச் செயலாளரோ, அவருடைய பிரதிநிதியோ இடம்
பெற்றிருப்பது மிகவும் பாராட்டத் தக்கது. அந்த சிண்டிகேட்டிலே ஆட்சிக்
குழுவிலே பொறுப்பு, வழியாக புதிதாக செயலாளர் வருவது வரவேற்கத்
தக்கது. சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், பல்கலைக் கழகத்தினுடைய
முன்னேற்றகரமான திட்டங்களுக்கு வழிவகுக்கவும் இது உதவும் என்ற
நம்பிக்கை இருக்கிறது. அதேசமயத்தில், பள்ளிக் கல்வி இயக்குநரும்
இதிலே இடம்பெற வேண்டும் என்று நான் கருதுகிறேன். என்னுடைய
இந்தக் கருத்து ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்கு மாறு
பட்டதாக இருந்தாலும்கூட, மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும்
இந்த நேரத்தில், காலேஜ் காம்பிளக்ஸ் என்று நாம் புகுத்தியிருக்கும் இந்த
நேரத்திலே, பல கல்லூரிகள் இந்த காலேஜ் காம்பிளக்ஸ்லே மேல்நிலைப்
பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு இரசாயனக் கூடங்களிலே வசதி
களையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதிலே பெரும் தேக்கம்
ஏற்பட்டிருக்கிறது. சில கல்லூரிகளிலே அந்த மாணவர்கள் சோதனைகள்
செய்வதற்கு 60 ரூபாயிலிருந்து 100 ரூபாய்வரை கட்டணம் வசூலிக்கிறார்கள்.
மேல்நிலைப் பள்ளிகளில், வசதி வாய்ப்புக்கள் இல்லாத பள்ளிகளாயிருப்பின்,
அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களை கல்லூரிகளுக்கு அனுப்பி, அங்கே
உள்ள ஆய்வுக்கூடங்களிலே அவர்கள் பயிற்சி பெறவேண்டும் என்றால், பெரும்
தடையாகவும், சிரமமாகவும் இருக்கும். இந்த நேரத்திலே, பள்ளிக் கல்வி



1979 நவம்பர் 13] [திரு. பா. ரா. தாமஸ்]

இயக்குநர் அந்த சிண்டிக்கேட்டிலே இருந்தால், இந்த காலேஜ் காம்பிளக்ஸ்
என்ற முறையைத் திறமையாகச் செயல்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்று
சொல்லிக்கொள்கிறேன். பேராசிரியர் அறிவழகன் அவர்கள் சொன்னது
போன்று, என் ஆசிரியர்களின் பிரதிநிதிகள், பட்டதாரி ஆசிரியர்களின்
பிரதிநிதிகள், அந்தந்தத் தொகுதிகளிலே உள்ள பல்கலைக் கழகங்களிலே
இருக்கும் ஆட்சிக் குழுவிலே பொறுப்பு வகிக்கக்கூடாது என்றும், ஏன்
அதுபோன்ற ஒரு வாய்ப்பை வழங்கக்கூடாது என்றும் நான் கேட்க
விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

(பிற்பகல் 4.40)

அவ்வாறு இடம் பெறுவோமானால், அது மிகவும் உதவியாக இருக்கும். இந்த
மாமன்றத்தில் நாங்கள் இடம் பெற்றிருக்கிறோம். இந்த மாமன்றத்தைவிட
உயர்ந்த மன்றமல்ல அது என்றாலும், ஒரு சுயாதிகாரம் பெற்று செயல்படும்
பல்கலைக் கழகம் சரியாகச் செயல்படுவதற்கு நாங்கள் உதவி செய்யக்கூடும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகள் திருத்தச் சட்ட முன்வடிவைப்பற்றி ஒரு
கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் சென்னை உயர் நீதிமன்றத்
தால் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதாவது நடுவர் மன்றத்தின்
தீர்ப்பை அப்படியே அமுல்படுத்த முடியாது. என்பதுதான் அந்தத் தீர்ப்
பாகும். ஒரு வழக்கில் நடுவர் மன்றம் என்ன சொன்னது என்றால், தென்
னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர் திரு. மாரிமுத்து என்பவரை
திருவாகம் உடனடியாக பணியில் சேர்த்துக்கொள்வதோடு அவருக்கு
ரூ. 10,000 வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. ஆனால் நிருவாகத்
தினர் அந்த உத்தரவின்மீது மேல்முறையீடு செய்து கொண்டார்கள். அதை
யொட்டி ஒரு இடைக்காலத் தடையையும் பெற்றுவிட்டார்கள். அந்த வழக்கில்
நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார் என்றால்: "சட்டப்படி நடுவர் மன்றத்
திற்குத் தன் தீர்ப்பை அமுல்படுத்தும் உரிமை இல்லை. ஆகவே மனுதாரர்
சிவில் கோர்ட்டுக்குப் போய்த்தான் தனக்கு வேண்டிய நியாயத்தைப் பெற
வேண்டியிருக்கிறது" என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள்பால்
மிகுந்த அக்கறை கொண்டவர்கள் நமது கல்வியமைச்சர் அவர்கள் என்பதை
நாங்கள் உணர்ந்திருப்பதால், இந்தத் தொடர் கூட்டத்திலேயே இதற்கு ஒரு
திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினோம். இப்போதுள்ள
சட்டப்படி நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்தும் அதிகாரம் நடுவர்

மன்றத்திற்கு இல்லை. சிறுபான்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில்,
நடுவர் மன்றத்திற்கான வாய்ப்பும் இல்லை, கல்வித் துறையின் மேல் முறை
யீட்டிற்கும் வாய்ப்பில்லை. அந்த அளவுக்கு ஒரு பெரிய அவல நிலை
இருக்கிறது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டு
கோள் விடுக்க விரும்புகிறேன். தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்துதல்
சட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும்.
எந்த ஒரு ஆசிரியரின் மேல்முறையீட்டின் மீதும் இறுதியாகத் தீர்ப்பு வழங்கப்
படும் வரை—அது கல்வித்துறைத் தீர்ப்பானாலும் சரி, நீதி மன்றத் தீர்ப்
பானாலும் சரி, நடுவர் மன்றத் தீர்ப்பானாலும் சரி முடிவான தீர்ப்பு வரும்
வரை அந்த ஆசிரியரைத் தற்காலிகப் பணிநீக்கம்கூட செய்யக்கூடாது என்ற
நிலை வந்தால்தான், இந்த மாநிலத்தில் ஆசிரியர்களுக்கு ஒரு பாதுகாப்பான
நிலை இருக்கும் என்று சொல்லி அதற்கான முறையில் அரசு முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, பொதுவாக இந்த 3 சட்ட முன்வடிவு
களையும் வரவேற்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, கல்வித் துறை சம்பந்தப்பட்ட இம்மூன்று சட்ட முன்வடிவு
களையும் பொதுவாக வரவேற்றுப் பேச விரும்புகிறேன்.

குறிப்பாக, சட்ட முன்வடிவு எண் 70/1979-ஐப் பொறுத்த வரையில்,
விவாதமே தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். நடைமுறை
சௌகர்யத்தையொட்டி தேவையான ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கி
றார்கள் என்ற அளவில் அதைப்பற்றி வேறொன்றும் குறிப்பிட விரும்பவில்லை.

ஆனால் சட்ட முன்வடிவு எண் 69/1979-ஐப் பொறுத்த வரையில் ஒரு
கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். 5-வது பிரிவின் உட்பிரிவான 3-ல்
என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

"(b) one officer dealing with the subject of Higher Secondary
Education in the Education Department, to be nominated by the
Government,".



இதைவிட குறிப்பிட்ட இன்னார்தான் இதில் இடம் பெற வேண்டும் என்று
சொல்லுவது நல்லது என்று கருதுகிறேன். ஏற்கெனவே டைரெக்டர் ஆஃப்
காலேஜியேட் எஜுகேஷன் இதில் பொறுப்பு வகிக்கிற காரணத்தால், கூடுத
லாக செகண்டரி எஜுகேஷனுடைய டைரெக்டரும் அதில் இடம் பெறச் செய்
வதால் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன். அப்படி இருப்பது
தான் பொருத்தமானதாக இருக்கும் பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம்
சரியாகச் செயல்படுவதற்கு இது துணை புரிவதாக இருக்கும் என்றும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர்
அவர்களேகூட மிகுந்த வேதனையோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு
வந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். பொறியியல் கல்லூரியில் சில
வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் சிலர் தங்களின் பட்டப் படிப்பின்
இறுதியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரால் தங்களுடைய பட்டச்
சான்றிதழைப் பெறுகிற நிலையும், அதே கல்லூரியில் வேறு வகுப்புகளில்
படிக்கும் மாணவர்கள் தங்களின் கல்வி முடிந்த பிறகு 'பேரறிஞர் அண்ணா
தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின்' பெயரால் சான்றிதழ் பெறுகிற
நிலையும் உருவாகிறது. என்னைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட
நிலைமையை ஏற்பது என்பது ஒரு சரியான முன் உதாரணமாக அமையாது.
மாணவர்கள் விரும்புகிறார்கள், அல்லது போராடுகிறார்கள் அல்லது வேறு
சூழ்நிலைகள் இருக்கின்றன, ஆகவே இந்த நிலை உருவாகியது என்றாலும்
கூட, பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் நாமெல்லாம் எந்த அளவுக்கு
முயற்சிகளை மேற்கொண்டு ஒரு பல்கலைக் கழகத்தைத் தொடங்கினோம்
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு இந்த நாட்டு
மக்களின் எண்ணத்தை மதித்து, எந்த அளவு உயர்ந்த நோக்கத்தோடு இப்படி
ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கினோம் என்பதை மறந்துவிடக் கூடாது.
ஒரு நாடும், நாட்டு மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்ட மன்றமும் ஒன்றாக
இணைந்து எடுத்த ஒரு முடிவைச் செயலாற்ற வேண்டுமா வேண்டாமா
என்பதுதான் என்னுடைய கேள்வி. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல்
பல்கலைக் கழகம் என்று ஒன்றைத் தொடங்கி அது செயலாற்றிக் கொண்டிருக்
கும்போது, சிலர் "நாங்கள் படித்துவிட்டுப் போகிற வரை எங்களுடைய
பட்டச் சான்றிதழ்கள் அனைத்தும் சென்னைப் பல்கலைக் கழகத்தின்
பெயரில்தான் வழங்கப்பட வேண்டும்" என்று கோரிக்கை வைப்பதும் அதை

நாம் அங்கீகரிப்பது என்பதும் எந்த அளவுக்கு நியாயமானவை என்பன
எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் அங்கீகரிப்பத
மூலம் சென்னைப் பல்கலைக் கழகம் என்று இருந்தால்தான், ஒரு பெரி
உயர்வு அல்லது அந்தஸ்து கிடைக்கிறது, பேரறிஞர் அண்ணா தொழி
நுட்பவியல் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் என்றால் அ
தகுதிக் குறைவானது என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதும், அத்தகை
எண்ணத்தை வளர்ப்பதும் மிகமிகத் தவறு என்பதை இந்த நேரத்தில் சுட்டி
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், தவிர்க்க
முடியாத சூழ்நிலையில் மிகுந்த வேதனையோடு இந்தத் திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் உணருகிறேன். ஆனால் இந்தப்
போக்கு இதோடு முடிவடைந்ததாக அமைய வேண்டும். இனிமேல் இப்படிப்
பட்ட சூழ்நிலைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்குக்
காரணம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்தான் என்று நான் சொல்ல
வில்லை. இதில் யார் யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவ்வளவு பெரும்
இதற்குக் காரணம் என்பது மட்டுமல்ல, இது ஒரு நல்ல முன்னுதாரணம்
அல்ல என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன் : சென்னைப் பல்கலைக் கழகம் என்றிருந்தபோது
அந்த மாணவர்கள் முதல் மற்றும் இரண்டாவது ஆண்டு வகுப்பில் சேர்ந்த
காரணத்தால், இப்போது 3-வது ஆண்டு வருகிறபோது, பல்கலைக் கழகத்தின்
பெயரை மாற்றினால், அது தங்களுடைய எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடும்
என்று எண்ணிப் போராடினார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : எந்தக் கருத்தை நான் இங்கே தெரிவித்தேனோ
அதைத்தான் பேராசிரியர் திரு. அறிவழகன் அவர்கள் தெளிவாக வலியுறுத்தி
யிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். என்னுடைய குறையே அதுதான்.
பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று புதிதாகத்
தொடங்கி, அதில் மாணவர்களும் புதிதாகச் சேர்ந்திருந்தால், அப்போது
ஏற்படும் நிலையே வேறு. ஆனால் 5 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள்
கொண்ட பட்டப் படிப்பை ஒரு கல்லூரியில் தொடரும்போது, இடையில்
[illegible] பல்கலைக் கழகமாக மாறுகிறது. இருக்கிற அமைப்பின் பெயரை
[illegible] நிலை ஏற்படத்தான் செய்யும். அப்படி பெயர் [illegible] மாற்றும்போது,



அதில் இணைக்கப்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் நாங்கள் ஆரம்பத்தில் இந்தப் பட்டப் படிப்பைத் தொடங்கும்போது இந்தப் பல்கலைக் கழகத்தில் தான் சேர்ந்தோம், ஆகவே நாங்கள் படித்து முடித்துவிட்டுப் போகிற வரை எங்களுக்கு அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயரால்தான் பட்டச் சான்றிதழ் கள் வழங்கப்பட வேண்டும் என்று கோருவது எவ்வாறு நியாயமாகும்? அப்படியென்றால் அண்மையில் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் தொடங்கப் பட்டதே அது என்னாவது? இதுவரை சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருந்த கல்லூரிகள்தான் அந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக் கப்பட்டன. அங்கே படிக்கும் மாணவர்கள் இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரால் தங்கள் பட்டச் சான்றிதழ்களை வாங்கவில்லை. அந்த வகையில் அண்ணா பெயரால் அமைந்திருக்கும் இந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயரால்தானே தங்கள் சான்றிதழ்களை வாங்க வேண்டும். இதில் நான் அரசாங்கத்தின்மீது குறை சொல்லவில்லை. என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இத்தகைய எண்ணம் மாணவர்களுக்கு வந்ததேகூட தவறு. இப்படிப்பட்ட எண்ணம் இனிமேல் புதிய பல்கலைக் கழகங்கள் அமையும்போதாவது வரக்கூடாது என் பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக நின்று, ஒரு பிடிவாதமாக இருப்பதுகூட தவறில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட கோரிக்கைகளை ஏற்பதன் மூலம் நாமே இருவேறு பிரிவுகளை ஏற்படுத்து வதாக அமைந்துவிடும். இன்றையதினம் இருக்கிற நிலைமைகள் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னாலே வருகிறவர்களுக்குப் புரியாது. அன்றைய சூழ் நிலையில் இதைப் பார்க்கும்போது, எதற்காக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரால் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன என்ற விவரம் புரியாது. அதைத் தெளிவுபடுத்த அப்போது யாரும் இருக்க மாட்டார்கள். இருக்கவும் முடியாது. அப்போது நமது அடுத்த தலைமுறையினர் நம்மையெல்லாம் தவறாகக் கருதும் நிலை ஏற்படும் என் பதால், இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். யார்மீதும் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை என்றாலும், இத் தகைய நிலைமைகளை இனி எதிர்காலத்திலாவது தவிர்ப்பது நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் அங்கீகரிப்பது என்பதும் எந்த அளவுக்கு நியாயமானவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் அங்கீகரிப்பதன் மூலம் சென்னைப் பல்கலைக் கழகம் என்று இருந்தால்தான், ஒரு பெரிய உயர்வு அல்லது அந்தஸ்து கிடைக்கிறது, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் என்றால் அது தகுதிக் குறைவானது என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பதும், அத்தகைய எண்ணத்தை வளர்ப்பதும் மிகமிகத் தவறு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மிகுந்த வேதனையோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் உணருகிறேன். ஆனால் இந்தப் போக்கு இதோடு முடிவடைந்ததாக அமைய வேண்டும். இனிமேல் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்தான் என்று நான் சொல்ல வில்லை. இதில் யார் யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், அவ்வளவு பேரும் இதற்குக் காரணம் என்பது மட்டுமல்ல, இது ஒரு நல்ல முன்னுதாரணம் அல்ல என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

**திரு. க. அறிவழகன்:** சென்னைப் பல்கலைக் கழகம் என்றிருந்தபோது அந்த மாணவர்கள் முதல் மற்றும் இரண்டாவது ஆண்டு வகுப்பில் சேர்ந்த காரணத்தால், இப்போது 3-வது ஆண்டு வருகிறபோது, பல்கலைக் கழகத்தின் பெயரை மாற்றினால், அது தங்களுடைய எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடும் என்று எண்ணிப் போராடினார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** எந்தக் கருத்தை நான் இங்கே தெரிவித்தேனோ அதைத்தான் பேராசிரியர் திரு. அறிவழகன் அவர்கள் தெளிவாக வலியுறுத்தி யிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். என்னுடைய குறையே அதுதான். பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் என்று புதிதாகத் தொடங்கி, அதில் மாணவர்களும் புதிதாகச் சேர்ந்திருந்தால், அப்போது ஏற்படும் நிலையே வேறு. ஆனால் 5 ஆண்டுகள் அல்லது 4 ஆண்டுகள் கொண்ட பட்டப் படிப்பை ஒரு கல்லூரியில் தொடரும்போது, இடையில் அது பல்கலைக் கழகமாக மாறுகிறது. இருக்கிற அமைப்பின் பெயர் மாற்றும் நிலை ஏற்பட்டுத்தான் செய்யும். அப்படி பெயரை மாற்றும்போது





அதில் இணைக்கப்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் நாங்கள் ஆரம்பத்தில் இந்தப் பட்டப் படிப்பைத் தொடங்கும்போது இந்தப் பல்கலைக் கழகத்தில் தான் சேர்ந்தோம், ஆகவே நாங்கள் படித்து முடித்துவிட்டுப் போகிற வரை எங்களுக்கு அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயரால்தான் பட்டச் சான்றிதழ் கள் வழங்கப்பட வேண்டும் என்று கோருவது எவ்வாறு நியாயமாகும்? அப்படியென்றால் அண்மையில் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் தொடங்கப் பட்டதே அது என்னாவது? இதுவரை சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்திருந்த கல்லூரிகள்தான் அந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக் கப்பட்டன. அங்கே படிக்கும் மாணவர்கள் இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரால் தங்கள் பட்டச் சான்றிதழ்களை வாங்கவில்லை. அந்த வகையில் அண்ணா பெயரால் அமைந்திருக்கும் இந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயரால்தானே தங்கள் சான்றிதழ்களை வாங்க வேண்டும். இதில் நான் அரசாங்கத்தின்மீது குறை சொல்லவில்லை. என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இத்தகைய எண்ணம் மாணவர்களுக்கு வந்ததேகூட தவறு. இப்படிப்பட்ட எண்ணம் இனிமேல் புதிய பல்கலைக் கழகங்கள் அமையும்போதாவது வரக்கூடாது என் பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக நின்று, ஒரு பிடிவாதமாக இருப்பதுகூட தவறில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட கோரிக்கைகளை ஏற்பதன் மூலம் நாமே இருவேறு பிரிவுகளை ஏற்படுத்து வதாக அமைந்துவிடும். இன்றையதினம் இருக்கிற நிலைமைகள் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின்னாலே வருகிறவர்களுக்குப் புரியாது. அன்றைய சூழ் நிலையில் இதைப் பார்க்கும்போது, எதற்காக பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பெயரால் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன என்ற விவரம் புரியாது. அதைத் தெளிவுபடுத்த அப்போது யாரும் இருக்க மாட்டார்கள். இருக்கவும் முடியாது. அப்போது நமது அடுத்த தலைமுறையினர் நம்மையெல்லாம் தவறாகக் கருதும் நிலை ஏற்படும் என் பதால், இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். யார்மீதும் தனிப்பட்ட முறையில் குற்றம் சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை என்றாலும், இத் தகைய நிலைமைகளை இனி எதிர்காலத்திலாவது தவிர்ப்பது நல்லது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 1

அடுத்து சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலை
கழகம் ஆகிய இரண்டையும் பற்றிய சட்ட முன்வடிவின்மீது ஒரு கருத்தை
சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-50)

ஒரு நல்ல காரியத்தை அரசு இன்றைக்குச் செய்திருக்கிறது. கல்
செயலாளரையும், நிதித் துறைச் செயலாளரையும் பல்கலைக் கழகத்தினுடை
சிண்டிகேட் குழு உறுப்பினராக இருக்க வேண்டுமென்று பணித்திருப்ப
மிகத் தேவையான ஒன்று என்று நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களைப்
பொறுத்த வரையில், அவை சுயாட்சியோடு நடைபெற வேண்டுமென்
சொல்லுவது நியாயமான வாதம் என்றாலும், அவர்கள் இன்றைக்குச் செய
படுகிற நிலை கல்வியினுடைய தரத்தை வளர்க்கப் பாடுபடுகிற வகையி
இல்லையென்பதை மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன். பல இலட்சம் ரூபாயை நம்முடைய அரசு தன்னுடைய நிதி
யிலிருந்து பல்கலைக் கழகங்களின் கல்வி வளர்ச்சிக்காகக் கொட்டிக் கொடு
கிறது. ஆனால் அவர்கள் அதை முறையாகச் செலவழிக்கிறார்களா என்
பார்த்தால், இல்லை. கண்ணாடி பங்களாவில் இருந்துகொண்டு எப்படி
வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற நிலையில் செயல்பட்டுக் கொண்டிரு
கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் வந்திருக்குமென்று கருதுகிறேன்.
சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், பல கல்லூரிகளின்
பட்டமேற்படிப்புக்கான வகுப்புகளில் பல இடங்கள் காலியாக இருக்கின்றன.
ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக மாணவர்கள் மனுச் செய்யவில்லை
யென்றால், அவர்களைச் சேர்ப்பதில்லை. அதனால் பல இடங்கள் இன்னும்
நிரப்பப்படாமலே இருக்கின்றன. ஒரு கால அவகாசம் வைத்திருக்கிறார்கள்.
அதற்குப் பிறகு ஒரு வார காலம் அல்லது பத்து நாட்களுக்குள்ளே அனுப்பப்
பட்டுள்ள பல மாணவர்களுடைய மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பல
கல்லூரிகளில் வேலை நிறுத்தம் ஏற்படுகிறது. அதனால் குறைந்தபட்சம்
கல்லூரிகளுக்கு இவ்வளவு நாட்கள் வர வேண்டுமென்ற நிலை பல கல்லூரி
களில் இருப்பதில்லை. குறைந்தபட்சம் இவ்வளவு நாட்கள் இருந்தா
வேண்டுமென்றாலும், அதில் சில நாட்களைக் குறைத்துக்கொள்ள பல்கலை



1979 நவம்பர் 13] [திரு. க. இராமமூர்த்தி]

கழகம் அனுமதி தருகிறது. இதைப் போன்ற நிலைமைகள் இருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு மாணவர்களைச் சேர்க்கமாட்டோம் என்று பிடிவாதமாகச் சொல்லுவது சரியா? விழுப்புரத்திலே இப்படிப்பட்டதொரு அனுபவம் எனக்கே ஏற்பட்டது. பல வகுப்புகளில் நிரப்பப்படாமல் இடம் காலியாக இருந்தது. குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு வந்தவர்களைச் சேர்க்க வேண்டுமென்று கல்லூரி முதல்வரைக் கேட்டபோது, "தேதி முடிந்து விட்டது, இதற்கு மேல் சேர்க்க வேண்டுமென்றால், பல்கலைக் கழகத்தி லிருந்துதான் அனுமதியைப் பெற வேண்டும்" என்று சொன்னார்கள். பல்கலைக் கழகத்தினரை அணுகிக் கேட்டபோது, "எங்களுக்கு இதைப்பற்றித் தெரியாது. கல்லூரிக் கல்வி இயக்குநர்தான் செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கேட்டபோது, "இந்த அதிகாரம் எங்களுக்குக் கிடையாது. பல்கலைக் கழகத்னுடைய சுயேச்சைத் தன்மையில் நாங்கள் தலையிட முடியாது" என்று சொல்லி திருப்பியனுப்புகிறார்கள். இப்படி ஒவ்வொருவரிடமும் போய்த் திரும்பி வருகிற நிலை இருக்கிறது. பல வகுப்புகளில் இடம் காலியாக இருந்தும், மாணவர்கள் படிப்பதற்காக முன் வந்தாலும்கூட, சில நாட்கள் தள்ளிவிட்டதால், மறுபரிசீலனை செய்து அவர்களைச் சேர்க்க முடியும் என்றாலும், ஏன் அந்த வாய்ப்பை அவர்களுக்குத் தராமல் தவிர்க்க வேண்டும்? பல நாட்கள் ஆகிவிட்டால், அது வேறு. ஆனால் சில நாட்கள் ஆகிவிட்டால், ஏன் அவர்களைச் சேர்க்கக் கூடாது?

சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், எனக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது. முதலில் கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கேட்டு, பிறகு கல்லூரி முதல்வரைக் கேட்டு அங்கே சென்றபோது, "முடியவே முடியாது. நாங்கள் யாரையும் சேர்க்க மாட்டோம். அப்படிச் சேர்த்தால், நாங்கள் அவருக்குப் பதில் சொல்ல வேண்டும், இவருக்குப் பதில் சொல்ல வேண்டும்" என்று சொல்லி கடைசியாக ஓரிருவரைச் சேர்த்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் செயல்படுகிற முறையில் ஏதோ கோளாறு இருக்கிறது. எந்த நோக்கத்தில் அவர்கள் செயல்படுகிறார்கள் என்பது தெரிகிறது. இந்த நிலைமை எதனால் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நிதித் துறைச் செயலாளர் அங்கே இருக்கிறபோது, நிதிப் பொறுப்பு ஒழுங்காகச் செயல்படுகிறதா என்பதைப் பார்க்க முடியும். இரண்டு பல்கலைக் கழகங்களுக்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிலுள்ள அத்தனை பல்கலைக் கழகங்களினுடைய ஆட்சி மன்றக் குழுவிலும் நிதிச் செயலாளரும், கல்வித் துறை

[திரு. க. இராமமூர்த்தி] [1979 நவம்பர் 13

செயலாளரும் இடம் பெறும் வழிவகை இருந்தாக வேண்டும். ஆகவே கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நடைமுறையிலே மிகத் தேவையான திருத்தத் தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பல்வேறு நிலைமைகளை உணர்வுபூர்வமாக வும், உள்ள பூர்வமாகவும் ஆராய்ந்து, அவரால் முடிந்த அளவில் சில திருத்தங் களைக் கொண்டுவர வேண்டும் என்று கருதுகிறார். அந்த வகையில் இந்தத் திருத்தங்கள் அமைகின்றன என்பதற்காக அவரைப் பாராட்டி இந்தச் சட்ட முன்வடிவுகள் மிக மிகத் தேவை என்பதை மீண்டும் சொல்லி, நான் அமைகிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்டேட் வங்கியில் தனியார் பள்ளிகள் அறக்கட்டளை நிதிகளை வைப்பீடு செய்ய அனுமதி அளிக்கும் வகையில் 1979 ஆம் ஆண்டு தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு வந்திருக் கிறது. அதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். ஏற்கெனவே சுட்டிக் காட்டப்பட்ட குறைபாட்டைப் போக்குவதற்காக இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அதைப் போலவே ஏராளமான குறைபாடுகள், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், 1973 ஆம் ஆண்டு தனியார் பள்ளி கள் ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டத்தில் இருக்கின்றன. அந்தக் குறைபாடு களையும் களைந்து நிவர்த்தி செய்ய விரிவான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்பது என்னுடைய முதல் கோரிக்கை.

நிர்வாக பள்ளிக் குழு (ஸ்கூல் கமிட்டி) மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டுமென்று விதிமுறை பிரிவு 17 (1)-ல் இருக்கிறது. ஆனால் பெரும்பாலான பள்ளிகளில் பள்ளிக் குழுவே அமைக்கப்படவில்லை. அமைக்கப்பட்ட குழுக்களும் பெரும்பாலான இடங்களில் கூட்டப்படு வதில்லை. அந்தப் பள்ளிக் குழுவிலே யார் யார் இருக்கலாமென்று வரையறுத் திருக்கிறார்கள். நிர்வாகத்தின் சார்பாக எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் உறுப்பினர்களாக இருக்கலாம். ஆனால் அரசின் சார்பாக இரண்டு பேர்தான் இருக்கலாம் என்ற கட்டுப்பாடு இருக்கிறது. அரசின் சார்பாக இரண்டு பேர்கள் மட்டும் இருக்கும்போது, நிர்வாகத்தின் சார்பாக எத்தனை பேர்கள் வேண்டு மானாலும் இருக்கலாம் என்பதால், நிர்வாகம் ஒருதலைப்பட்சமாக முடிவு எடுக்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. மேலும் சில குறைபாடுகளும் இருக்கின்றன. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முழுத் தொகையையும் அரசு மானியமாக அளித்தும் கூட, அரசு ஊழியர்களுக்குத்



1979 நவம்பர் 13] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

தருவதைப் போல மாத இறுதி நாள் அன்றோ, அல்லது முதல் தேதியன்றோ ஊதியம் வழங்கப்படுவதில்லை. அப்படி வழங்காத நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வதுவாக ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும்.

சில பள்ளிகளில் வெற்றுத் தாள்களில் கட்டாய ராஜினாமாவை வாங்கி வைத்துக்கொள்கிறார்கள். இது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குக் கூட தெரியும். ஏனென்றால் அவரும் கோவை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளியில் பணிபுரிந்தவர். இப்படி வெற்றுத் தாள்களில் கையெழுத்து வாங்கி வைத்திருப்பதால், ஆசிரியர்களை வலுக்கட்டாயமாக வேலையிலிருந்து நீக்க முடியும். அதைக் கட்டுப்படுத்த சட்டத்திலே இடம் கிடையாது. இப்படிப் பட்ட தவறுகள் ஏற்பட்டபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும், ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் சட்டத்திலே இதற்கு இடமில்லை. இந்த முறைகேடு இப்போது நடைபெற்று வருகிறது. அதைத் தடுக்க இந்தச் சட்டத்திலே ஒரு நல்ல அம்சம் இருக்க வேண்டும். இதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினை மாண்புமிகு கல்வி யமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

ஒரு ஆசிரியரை தற்காலிக வேலை நீக்கம் செய்துவிட்டால், நிர்வாகம் அவருக்கு 'சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ்' கொடுக்க வேண்டுமென்று விதி 17 (2)-லே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 'சஸ்பெண்ட்' செய்யப் பட்ட ஆசிரியர்களுக்கு 'சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ்' கொடுக்கப்படுதில்லை. விதி 17 (2) செயல்படுத்தப்படுவதில்லை என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நிர்ப்பாயத்தைப் (டிரிபியூனல்) பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் சொன்னார்கள். கல்வி அமைச்சர் அவர்கள்கூட இது பற்றிய ஓர் அறிக்கையை, கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது, கொடுத் தார்கள். "1973 ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 42-ன்படி நிர்ப்பாய நீதிபதிகள் செயல்படும்போது, சிவில் கோர்ட்டுக்குள்ள அனைத்து அதிகாரங்களும், அவர் களுக்கு உண்டு" என்று அந்த அறிக்கையிலே இருக்கிறது. அந்த அறிக்கையிலே ஒரு குறைபாடு இருக்கிறது. சட்டத்திலே என்ன இருக்கிறதென்றால்,

Section 42, sub-clause (4)-

"every Tribunal shall have the same powers as are vested in Civil Court under the Civil Procedure Code, 1908, while hearing an appeal"

என்று இருக்கிறது. வழக்கை விசாரிக்கும்போதுதான் சிவில் கோர்ட்டுக்குரிய அதிகாரம் இருக்கிறது. தீர்ப்பைச் செயல்படுத்தும் அதிகாரம் இல்லை. ஆகவே தவறானதொரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். சரியான முறையிலே புரிந்துகொள்ளாமல் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இப்படிப்பட்ட பல்வேறு குறைபாடுகள் இந்தச் சட்டத்திலே இருக்கின்றன. இதனால் பாதிக்கப்படுவது ஆசிரியர்கள்தான். தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய நாங்கள் ஒரு குழுவை அமைத்து விரிவானதொரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம். எந்தெந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும், எவையெவை நீக்கப்பட வேண்டும், எவையெவை சேர்க்கப்பட வேண்டும், எந்தெந்த விதிமுறைகள் மாற்றப்பட வேண்டும் என்று நாங்களே ஓர் அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம். வழக்கறிஞரைக் கலந்து பேசித்தான் அந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறோம். இந்த அறிக்கையைப் பற்றி விவாதிக்க எங்களுக்கு அழைப்பு விடுத்து அவகாசம் கொடுத்தால் போதும். இதனால் அரசுக்குக்கூட வேலைப் பளு குறைவாகும். நாங்கள் குறிப்பிட்டுள்ள வகையில் நடவடிக்கை எடுத்தால், உதவிகரமாக இருக்குமென்றுகூறி மற்றொரு விஷயத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைப்பற்றிப் பேச முன்கூட்டியே மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

நானும் மேலவை உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். தர்மபுரி முதன்மைக் கல்வி அதிகாரிபற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதிலளித்தார்கள். அந்த ஆசிரியர்கள் நியமனம்பற்றி மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி மீதுள்ள புகார்கள்பற்றி விசாரிப்பதற்கு, ஃபைல்களைப் பெற்றுவருவதற்கு கல்வித் துறை அதிகாரி



ஒருவரை அனுப்பியிருப்பதாகக் கூறினார்கள். அதுபற்றி அரசினுடைய முடிவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY CHAIRMAN: The Bill now under consideration is the Tamil Nadu Recognised Private Schools Regulation (Amendment) Bill, 1979 which deals only wit the investment of funds of the schools in the State Bank of India. I would request the hon. Member to confine himself to the Bill. Because of the shortage of time, I would request the other hon. Members also to confine themselves to the Bill, while speaking.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடம் முன்கூட்டியே இது குறித்துப் பேச அனுமதி வாங்கியிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவைத் தலைவர் அவர்கள் இங்கே இல்லை. அவர் என்ன சொன்னார் என்பது எனக்குத் தெரியாது.

The hon. Member may please speak on the Bill.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** இந்த சென்னை, மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவினையொட்டி ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதையொட்டிச் சில கருத்துக்களைப் பின்னர் சொல்ல இருக்கிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் எப்படி செனட் உறுப்பினர்கள் என்று இருக்கிறார்களோ அதுபோல் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் கழகத்தின் செனட்டிலும் மேலவை, பேரவை உறுப்பினர்கள் இடம் பெறவேண்டும். அந்தப் பல்கலைக் கழகத்திலும் மேலவை, பேரவை உறுப்பினர்கள் செனட் உறுப்பினர்களாகப் பங்கு கொள்ள திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் இவர்களுடைய கோரிக்கையை அரசு ஏற்று, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகத்திற்காக விரைவில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததைப் பாராட்டுகிறேன். மொத்தமாக இந்த மூன்று சட்ட முன்வடிவுகளையும் பாராட்டி, அமைகிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Mr. Deputy Chairman, Sir, I rise to offer my remarks on two of the important Bills. I will not speak on the Bill relating to Recognised Private Schools because other hon. Members have already spoken on the amendment which is non-controversial.

The first Bill relates to an amendment to the Perarignar Anna University of Technology Act. I hope the Hon. the Minister for Education will not mistake me when I say that on the 6th April 1978 when the Bill for the constitution of the Perarignar Anna University of Technology was introduced in the House, I requested the Government to refer the Bill to a Select Committee. Now, Sir, my words have been proved correct by the fact that Act 30 of 1978 has been amended by Act 44 of 1979 and now by Act 69 of 1979. There is no harm in amending an Act. After all, Government have to be responsive to demands made by the staff, students and by the general public and there is no harm in bringing forward amendments. But, when the Madras University Act was amended in 1966 by Act 2 of 1966, the Bill was referred to a Select Committee and it was considered for three months before the Act was changed. Now that the Hon. Minister has on the anvil the Coimbatore University Act, the Tiruchirappalli University Act and perhaps Acts relating to other Universities which may come about in Tamil Nadu, I would make this request to him. When we consider the formation of a new University, there are so many problems that are likely to be thrown up and, therefore, I would request him to have the Bill drafted by the Law Department in consultation with the Education Department and to circulate the Bill for eliciting public opinion at least for a period of three or four months before it is placed before the Houses of the Legislature. This is in the genuine interest of the Education Department itself. If we refer to the Perarignar Anna University of Technology Act, many of the amendments have been brought about because of the demands that have been made by the students of the institutions and by members of the staff to protect their salary and their conditions of service. All these could have been considered when we constituted the new University itself. I am a member of the Syndicate of the Perarignar Anna University of Technology, having been elected from this House and I will have to speak necessarily with a certain amount of caution. Being on that body, I do not want to commit the Syndicate or myself to any particular point of view. But, as my hon. Friend Thiru Ramamoorthy had mentioned about the award of degrees to students of the Engineering College, M.I.T. and certain other institutions, it is correct that when a University is formed, all the students should get their degrees from that particular University. As he rightly pointed out, the same problem may arise in Coimbatore, the same problem may [illegible] in Tiruchirappalli, and all the students who are studying in



second or third year may demand degrees of Madras University and the problem is there. But, in this case, I think the Hon. Minister has been generous enough to accede to the request of the students of the Engineering College. After all, the Engineering College, is 100 years old. It is as old as the Madras University and it may be just a little younger and it is one of the premier institutions in Tamil Nadu and one of the institutions known throughout the world. But this was sought to be made a cause of agitation by my hon. Friend Thiru Arivazhagan, of all Members, who spoke almost in support of this particular agitation when he said that it was sought to be made into a big bone of contention. I think the Hon. Minister did very well in being generous enough to say, "After all, it does not matter if they obtained degrees from the Madras University; these students were already studying in the Engineering College and M.I.T. coming within the Madras University". I, therefore, feel that we cannot take much exception and it is a thing that has been rightly granted because nowadays everything escalates into an agitation and we do not want an ugly situation to develop.

So far as the service conditions of the employees of the three institutions belonging to Perarignar Anna University of Technology are concerned, we are in real trouble. The Guindy Engineering College was a Government College and all the employees in the Government Engineering College were governed by the Tamil Nadu Government Pay Commission, salary, etc. rules including Service Rules. The Alagappa College of Technology was governed by the Madras University and they had separate salary structure and separate service conditions according to the regulations of the Madras University. As far as the M.I.T. was concerned, it was a private institution and the employees were governed by separate service conditions. So, when we brought in this Act to form the Perarignar Anna University of Technology, unfortunately at that time, all that the Government could visualise was that the emoluments of the employees of these three institutions should not be made to suffer because of the formation of a new University. They could not anticipate the many complications that developed after that date. What was the complication that developed after that date? The constitution of a Third Pay Commission and the alteration of the salary and service conditions of the Government servants. Had the employees of the Government Engineering College continued in Government service, they would have received the benefits of the Third Pay

Commission ; and the M.I.T. was also following the scales of pa of the Government. As far as the Alagappa College is concerned they were getting better emoluments prescribed by the Univers ty of Madras. Now everything should be made uniform. The hostel fees, tuition fees, etc. should be brought down to the lowest level; and the sales, allowances, etc., should be brought to the highest level and they should all be uniform as applicable to the University employees. To a certain extent, there is a justification, because this is a unitary University and naturally when the Government say that they have formed this unitary University, all the employees in these institutions expect that their salaries and service conditions should be uniform.

(பிற்பகல் 5-10)

I shall not say more on this subject excepting to appeal to the members of the staff of these institutions to give time to the University to solve this problem as the Government and the University are seized of the problem and a committee has been formed to prescribe uniform service conditions and salary conditions for the employees of the University and not to precipitate matters in such a fashion that the studies of the students are disturbed and even the normal life of the academic community is disturbed. I am speaking with a great deal of sorrow because I do find that the atmosphere of the academic institutions has been disturbed to a considerable extent. It may be well-meaning and it may have a lot of substance in it ; but we must give time to these institutions to solve the problem. The main problem that arises in University administration today is this. The Government gives a block grant of Rs. 22 lakhs or Rs. 25 lakhs to a University and it is announced in the Budget. Any concession that the University has to give to its staff or to the students has to receive the concurrence of the Government. Herein hinges the very important principle of what is meant by autonomy of the University. Today, the autonomy of a University lies only in the syllabi that can be prescribed, the text-books that can be prescribed and in the award of Degrees. As far as finances are concerned, the Universities are totally dependent on the Government for their entire expenditure. Viewed from this standpoint, I would request that though we may nominate Secretaries of the Department, it should not amount to giving a veto-power to a Member of the Syndicate to say that unless the Government approve a certain proposal, the Syndicate cannot sanction that proposal. That is why when Act 2 of 1966 was



considered by the Select Committee, they were very cautious in saying that only the Director of Technical Education—it was Thiru Muthiah at that time—and the D rector of Higher Education, as it was then called, should be the Members of the Syndicate. The Secretary of the Department was not included because they felt that if the Secretary was involved in the day-to-day decisions of the Syndicate, it may embarrass the Government themselves in taking decions at a future date. However, the Act was circumvented in another manner because the power of Government had been there to nominate three Members to the Syndicate and they found that th s power of nomination could be used to bring forward an officer of the Department and the Secretary of the Department was nominated by the Government to the Syndicate. That was why my hon. Friend Thiru Arivazhagan and our Hon. Chairman, Dr. Ma. Po. Si, were in distinguished company with the Secretary nominated by the Government to the Syndicate. That was why my hon. Friend Thiru Arivazhagan and our Hon. Chairman, University. As far as the nomination of the Secretary is concerned, I think it is desirable from one point of view because, today, the University depends to a large extent on Government for funds. Though it is good to have a Secretary of the Education Department on the Syndicate, my feeling of anxiety is that, unfortunately, the Secretary of the Education Department is still, in a way, subservient to the Secretary of the Finance Department. I do not know if this is the position but that is my feeling because nothing can be approved by the Secretary of the Education Department without the formal concurrence of the Finance Department. That is where the principal barricade is erected for any progressive reform of University and for the establishment of what may be termed the autonomy of the University. Now, of course, they have nominated an officer of the Finance Department, not necessarily the Secretary, but they have said that a Deputy Secretary or some such officer would be nominated to the Finance Committee. But in the matter of considering grants to Universities, we have reached a stage where the Madras University is no longer the only University in Tamil Nadu ; we have the Madras University, the Madurai-Kamaraj University, the Annamalai University, the Agricultural University and the Perarignar Anna University of Technology. We shall soon be having, I hope, the Coimbatore University and

[Thiru A. R. Damodaran] [1979 Nov.13

leading to agitations and processions to the Secretariat. In matters regarding lack of toilet facilities in Higher Secondary Schools, a deputation has to come to the Minister. They are not satisfied with the meeting they have with the Education Minister. They want to meet the Hon. the Chief Minister about the provision of toilet facilities in an educational institution. I think this is a most unreasonable attitude. It may be a populist attitude for some of us to say that all these agitations are very good. But we are running the cause of education. There must be a settlement procedure for petty grievances and only policy matters should go to the Minister for his decision. The awarding of bus transport tickets, lack of some facilities for students, lack of a bulb in a hostel—all these issues should be dealt with—I do not say that those demands are unreasonable—at the lower levels. Under no circumstances, should either the Secretary of the Department or the Hon. Minister for Education be asked to deal with them. If we ask him to deal with these problems, he will not be able to advance the cause of education in so far as the strengthening of our Universities and Colleges is concerned.

[பிற்பகல் 5-20]

Sir, I would only like to add one thing. In the Madras University—I do not refer to the Perarignar Anna University of Technology and I am referring to the Madras University—We have the Director of Technical Education, the Director of Collegiate Education and the Director of Medical Education on the Syndicate. Fortunately, we do not have the Director of Agriculture because there is a separate University for Agriculture. But there are two other Directors. One is the Director of Legal Education who is concerned with the award of Law Degrees. Now, an hon. Member has pleaded that the Director of School Education also should be on the Syndicate. But, my point is this. I agree that the Secretary should be on the Syndicate, but what is the point in appointing various subordinates of the Education Department as Members of an autonomous Syndicate? Will they be able to express any opinion independently of the Secretary of the Department? That is why there is a big danger in overloading the Syndicate of a University and packing it with Government officers, because that is one way of reducing the Vice-Chancellor of a University to the grade of a Deputy Secretary in the Secretariat and making the entire University Subordinate



[1979 Nov.13 [Thiru A. R. Damodaran]

to the bureaucracy in the Department. On grounds of principle, I would like the Hon. Minister to take note of this view. As I said, I would like the Secretary to be there but should all these subordinate officers be Members of the Syndicate? They can be Members of the Academic Council or they can be special invitees. Where the restructuring of a technical course is contemplated, their views can certainly be got. They are entitled to give advice on such matters and the University also will be glad to hear their views because they are all highly qualified people. But whether we should have all these people on the Syndicate is a matter on which I would like to reserve my opinion especially in view of the constitution of the new Universities.

One more word and I have done, Sir. I am sorry that I am taking two minutes of your time. Now, certain grants are being given by the University Grants Commission. I have also studied the Report of the University Grants Commission. But we are not entirely happy with what has been given to certain Universities in the South. Many of the deemed Universities in the North are walking away with crores of rupees from the University Grants Commission. For instance, there is the Jawaharlal Nehru University and there are other Universities and I will not refer to all the names. I have no objection to their giving grants to those Universities. What I feel is that the time has come for us to have a State University Grants Commission. This body should be given the block grants from the Government of Tamil Nadu and it should also receive the grants from the University Grants Commission. The State University Grants Commission should be in charge of awarding grants to the 6, 7 or 8 Universities in Tamil Nadu and to the various constituent colleges of the Universities. Eminent educationists and eminent administrators may be chosen for the State University Grants Commission and they may be asked to do this job. I have a reason for mentioning this. The Annamalai University, the Madurai Kamaraj University, the Madras University, all of them have at some stage or other, been affected because of lack of finance from the Government of Tamil Nadu. I realise that there is a tremendous constraint on resources. We are spending over Rs. 230 crores or Rs. 240 crores on education. With the award of the

[Thiru A. R. Damodaran] [1979 Nov. 13

U.G.C. scales of pay, etc., the expenditure on higher education is nearly Rs. 11 crores or Rs. 12 crores or perhaps even a little more, according to the last year's Budget. Still, I would like the Government to consider whether the formation of a State Univer[sity] Grants Commission would not be a proposal that would isolate the Government from all these procedures for grant of finances [t]o Universities. Of course, we in the Legislature will have control because the State University Grants Commission can be subject to the control of the Auditor-General, his report can be placed before both the Houses of the Legislature and we can have a general debate on policy matters. This pro[po]sal would, I believe, be extremely helpful to obviate some of t[he] distortions that have crept in the concept of Government [vis-à]-vis the Universities. I only wanted to mention this.

I welcome the amendments that have been brought forth by Government. They are responsive to the demands that have been made. I would request the Hon. Minister to consider the other suggestions that I have made, especially regarding the Bills relating to the Coimbatore and Tiruchirappalli Universities because, before they are brought in, Government are likely to have the same problems. I would also take this opportunity to request the members of the staff and the students of the Perarignar Anna University of Technology to have patience. Patience is required and we cannot be impatient. We cannot solve our problems in three months and it takes time to solve these problems. And whatever is going to be done is going to be done with retrospective effect from the date of constitution of the University. I would request them not to disturb, especially at this time of the year when all the students will be sitting for their semester examinations and not to precipitate a major crisis on a minor problem. The reduction of tuition fees and reduction of hostel fees cannot be done in isolation in one University or in one College because it will affect the entire tuition fee structure in Universities in other places of Tamil Nadu. With this appeal, I hope it will be possible for these people to consider this in calmness and in patience and to give the Government due time for consideration and sympathetic consideration of their problems.

Thank you.



[1979 நவம்பர் 13]

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்கிறேன் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த மன்றத்தில் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் பலரும் கல்வித் துறை மானியத்திலே பேசிப்பேசி வருவதையும் அதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவருக்கே உரிய நிதானமான அணுகுமுறையோடு பதில் சொல்லி வருவதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதே அணுகுமுறையோடு எங்களுடைய பிரச்சினைகளையும் அல்லது எங்களுடைய கருத்துக்களையும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அணுகுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இன்றையதினம் கல்வித் துறையில் இருக்கக்கூடிய அரசுக் கல்விச் செயலாளர் பல்கலைக் கழக சிண்டிகேட்டில் இடம் பெற வேண்டுமென்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தை ஆதரிக்கின்ற அதே நேரத்தில் இன்னும் இதுபோன்ற திருத்தங்கள், சட்டத்திலே தேவை என்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக இன்றுள்ள சூழ்நிலையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதும், அதிகாரங்கள் சிலருக்கு அதிகமாக வழங்கப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. எனவே தான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபொழுது, அரசாங்கக் கல்விச் செயலாளரை மட்டும் பல்கலைக் கழக சிண்டிகேட்டில் சேர்த்தால் போதுமா, இங்கே இருக்கிற உறுப்பினர்களில் ஒருவரை சிண்டிகேட்டுக்கு அனுப்பினால் என்ன என்கின்ற கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்தில் இருந்தபோது, இந்த அவையிலிருந்து ஒருவரை சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், ஒருவரை மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும் சிண்டிகேட் மெம்பராக நியமிப்பதை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டிருந்தது. அந்த அடிப்படையில்தான் இந்த அவையினுடைய தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ம.பொ.சி. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். [illegible] சென்னைப் பல்கலைக் கழகத்தில் இன்றையதினம் தமிழ்

நடைமுறைக்கு வந்திருக்கிறது என்றால், அந்தப் பெருமை கூட நம்முடைய அவையில் தலைவராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு திரு. ம. பொ. சி அவர்களையே சாரும்.

அது போல் இன்னும் இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்களை, வேண்டு மானால் எதிர்க் கட்சியில் உள்ளவர்களை அனுப்ப முடியாவிட்டாலும் அல்லது அனுப்பத் தேவையில்லாவிட்டாலும் கூட, ஆளும் கட்சியில் இருக்கிற ஒன்றிரண்டு விவரம் தெரிந்தவர்களை, அரசின் கொள்கைகளை அங்கே எடுத்துச் சொல்கின்றவர்களை, மக்களுடைய பிரச்சினைகளை, கல்வித் துறை யிலுள்ள பிரச்சினைகளை அணுகுகின்ற முறையினைத் தெரிந்தவர்களை அங்கே தேர்ந்தெடுத்து அனுப்பி, பிரச்சினைகளை இப்படி இப்படி நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இவர்கள் அவர்களிடம் எடுத்துச் சொல்லுவதன் மூலம், அங்கே இருக்கின்றவர்களுடன் கலந்துரையாடி, பிரச்சினைகளை நல்லமுறையில் சுமுகமாக முடிக்க நமக்கு அது ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட ஒரு சம்பிரதாயத்தை இந்த அரசு உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத் திருத்தத்திலே அது இடம் பெறாவிட்டாலும் கூட, எதிர்காலத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று எப்போது விரும்புகிறாரோ அப்போது நான் இங்கே சொல்லிய கருத்தையும் மனதிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

இன்னொரு கருத்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் ஒத்துக் கொள்ளப்பட்ட கருத்தை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருக்கக் கூடிய நிர்வாகத்திற்கும் அங்கே இருக்கக் கூடிய பேராசிரியர்களுக்கும் ஒரு கோவார்டினேஷன் இருக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் இன்றையதினம் அந்த கோவார்டினேஷன் அங்கே இருக்கிறதா என்றால், அதுதான் இல்லை. எப்படி நாட்டிலே வெளியிலே கட்சிகளுக்கிடையே அரசியல் விளையாடப்படுகிறதோ அதுபோல் அங்கேயிருக்கிற பல்கலைக் கழகத்திலே கட்சி அரசியல் இல்லையே தவிர, அரசியல் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூட ஒத்துக்கொள்வார்கள். எனவே தான் அந்த அரசியல் கூட இல்லாமல் நல்ல நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று அரசு நினைத்தால், அங்கு இருக்கக் கூடிய பேராசிரியர்கள் கூட சிண்டிகேட்டிற்குச் செல்ல உரிமையும்



பெற்றிருக்கும்போது, இங்கே உள்ளவர்களில் ஒருவரை சிண்டிகேட் மெம்பராக நியமிப்பதற்கான சட்டத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வந்தால், முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று. இன்றையதினம் மாணவர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரை, பொதுவாக நான் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் எப்படி யாவது இந்தத் தேர்வு எழுதுவதைத் தவிர்க்க முடியுமா அல்லது பாடப் புத்த கங்களை வைத்துக்கொண்டு தேர்வு எழுத முடியுமா என்கின்ற பிரச்சினை மாணவர்களால் எழுப்பப்படுகின்ற காலம் இது. இப்பொழுது மாணவர்களில் ஒருவர் கூட பல்கலைக் கழக செனட்டில் இல்லை. மற்ற மாநிலங்களில், குறிப்பாக கேரளாவிலுள்ள பல்கலைக் கழகங்களில், மாணவர்களுடைய பிரதி நிதி ஒருவர் செனட் மெம்பராக இருக்கிறார். அதேபோல மேற்கு வங்கத்தில் மாணவர்களுடைய பிரதிநிதி ஒருவர் பல்கலைக் கழக செனட்டில் மெம்பராக வரலாம் என்கின்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கால கட்டத்தில் பழைய பல்கலைக் கழகம், ஒரு வரலாறு படைத்த பல்கலைக் கழகம், பல பெருமைகளுக்குரிய பல்கலைக் கழகம் என்று நம்மால் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கக்கூடிய சென்னைப் பல்கலைக் கழகத்திலேயும் விதிக்கு உட்பட்டு மாணவர் பிரதிநிதி ஒருவர் செனட்டில் இடம் பெறுவதற்கான வாய்ப் பினை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(பிற்பகல் 5-30)

இன்னும் கூட இதிலே புரட்சி செய்யலாம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னாலே சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். எப்போதோ வருமென்று நம்பிக்கொண்டிருக்கின்ற ஊராட்சி [illegible] தேர்தல், ஊராட்சி மன்றத் தேர்தல் இவைகளுக்கெல்லாம் தாய்த் [illegible] என்று 20 சதவீதம் இடம் ஒதுக்க வேண்டும் [illegible] இந்த அரசு கருதிக்கொண்டிருக்கிறது என்றும் [illegible]

அக்கறையோடு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு கல்வித் துறையிலே இருக்கும் பல்கலைக் கழகங்களின் சிண்டிகேட், செனட் இவைகளிலேயெல்லாம் இப்போது தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒருவர் தான் இடம்பெற முடியும் என்று இருக்கும்பொழுது, எப்படி இந்த ஊராட்சி மன்றங்களிலேயும், நகராட்சி மன்றங்களிலேயும் தாய்க் குலத்திற்கு 20 சதவீதம் ஒதுக்க இருக்கிறோம் என்று நாடாளுமன்றத் தேர்தல் வெகு வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு அரசாங்கம் அறிவிக்கிறதோ, அதுபோல் உண்மையிலேயே அந்தக் கொள்கையில் நம்பிக்கை இருக்குமானால், தாய்க்குலத்தைப் பற்றிக் கவலைப் படுவது உண்மையாக இருக்குமானால், உண்மையிலேயே பல்கலைக் கழகங் களுடைய நிர்வாகக் குழுவிலே, சிண்டிகேட்டிலே, செனட்டிலே 20 சதவீதம் தாய்க்குலத்திற்கு ஒதுக்குகிறோம், இருக்கின்ற இடங்களிலே இத்தனை பிரதி நிதிகள் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள், கல்வித் துறையிலே இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற திருத்தங்களை. . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தாய்க்குலத்தைத் தாண்டிப் போங்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி:— ரொம்பப் பெரிய தாய்க் குலத்தை, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சீக்கிரம் தாண்டச் சொன்னால், எப்படித் தாண்டுவது? எனவே, அந்தத் தாய்க்குலத்திற்குக் கூட பிரதி நிதித்துவம் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே சட்டங்களைத் திருத்தினால், அவற்றை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள் கிறேன்.

இவைகள் எல்லாவற்றையும் விட, நான் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த சென்னைப் பல்கலைக் கழகச் சட்டங்கள் எப்போதோ வெள்ளைக்காரன் காலத்திலே உருவாக்கப்பட்ட சட்டங்கள். அதை அப்படியே வைத்துக் கொண்டு இன்னமும் ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திருத்தங் களைத்தான் செய்கிறோம். இன்றைய சூழ்நிலையில் பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கின்ற, எப்படி ஒரு புதிய சட்டம் உரு வாக்கப்பட வேண்டும் என்[illegible] [illegible] நமக்கு இருக்கின்[illegible] அதைப் போல, தமிழ் [illegible]த்தைக்கூட நம்முடைய [illegible] ஒரு புதிய [illegible] வேண்டும் என்று கே[illegible] அவர்களுக்கு



'யூனிஃபார்ம் பில்' என்ற அளவிலே, மதுரை காமராசர் பல்கலைக் கழகமாக இருந்தாலும் சரி, சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும் சரி, அல்லது இப்போது அறிவிக்கப்படவிருக்கின்ற புதிய பல்கலைக் கழகங்களாக இருந்தாலும் சரி; அவைகளுக்கெல்லாம் ஒரேமாதிரியான சட்டம் இருக்க வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு சட்டம், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு சட்டம் என்று இல்லாமல், தமிழகத்திலே இருக்கும் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒரு 'யூனிஃபார்ம் பில்' இருக்கும் அளவுக்கு சட்டம் கொண்டுவந்தால், நான் அதை வரவேற்கிறேன்..

நான் பொதுவாக கல்வித் துறையிலே அதிகமான பிரச்சினைகளைப்பற்றிப் பேசவில்லை. இருந்தாலும், பல்கலைக் கழகங்களுடைய நிர்வாகம் எந்த அளவுக்கு சீர்கேடடைந்திருக்கிறது என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எனக்குப் பின் னாலே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் விவரமாகப் பேசக் கூடும். இருந்தாலும் ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறேன். அங்கே இருக்கின்ற பதிவாளரைப் பற்றிப் புகார்கள்—ஒன்றிரண்டல்ல—எழுப்பப்பட்டன. அப்படி எழுப்பியவர்கள் சாதாரணமானவர்களா என்று கேட்டால், இல்லை. அங்கே உறுப்பினராக இருக்கக் கூடிய திரு. கணேசன் என்பவர் கூட ஒரு புகார் மனு கொடுத்து, சி.பி.ஐ. விசாரணை நடந்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அறிக்கை கொடுத்த பிறகு, அதை பல்கலைக் கழகத்திற்கு அனுப்பியிருக்கி றார்கள்; அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் ஒரு 'அட்டானமஸ் பாடி' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், அதனுடைய நிர்வாகத்திலே தலையிட அதிகாரம் இல்லை யென்று சொல்லக்கூடும். ஆனால், அதிகாரம் இல்லாவிட்டால் கூட, இன்றைய [illegible] அரசுச் செயலாளர் அங்கே சிண்டிகேட்டிற்குப் போகின்ற நேரத்திலே [illegible] மூலமாக அங்கே நடைபெறுகின்ற தவறுகளைத் திருத்துவதற்கு [illegible] மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை [illegible] எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இதற்கு முன்னாலே வைஸ்-சான்[illegible] [illegible] ஆதிசேஷய்யா அவர்கள், கொடுக்கப்பட்ட புகார்களின் பேரில் தனி விசாரணை நடத்தியதன் பேரில் இன்றைய தினம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர் 13

ரிஜிஸ்ட்ட்ராராக இருப்பவர் தனது 51-வது பிறந்த நாள் விழாவிலே 51 சவரன் பெற்றிருக்கிறார் என்று தெரியவருகிறது. வைஸ்-சான்சலராலே எழுப்பப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிந்த பிறகு கூட, அங்கே இருக்கும் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்காவிட்டாலும், பல்கலைக் கழகத்திற்கு நிதியொதுக்கம் செய்கின்ற ஒரு அரசு இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவறு செய்கின்றவர்கள் எங்கே இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற ஒரு மனப்பான்மையை இந்த அரசு உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இன்றையதினம் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்போது, இப்படி தமிழகத்தினுடைய அரசாங்கத்திலே இருக்கக்கூடிய கல்வித் துறையினுடைய செயலாளர் ஒரு சிண்டிகேட் மெம்பராக ஆகக்கூடிய இந்தச் சட்டமுன் வடிவை வரவேற்கிறேன் என்று தெரிவித்து, பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவுகள் எண் 69, 70, 76 ஆகியவைகள் மீது சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். சட்ட முன்வடிவு எண் 60 தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் மாணவர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், அவர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கிறது. அவர்கள் சிலவற்றில் பிடிவாதமாக இருக்கிறார்களே என்று வருத்தப்பட்டுக் கொண்டாலும் கூட மாணவர்கள் பிரச்சினையிலே இந்த அரசு பிடிவாதமாக இல்லை என்பதும் அவர்களுக்குப் பரிந்துரை செய்கின்ற அளவுக்கு மனப்பான்மை படைத்திருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். சென்னை என்ற பெயரிலே சிலருக்கு ஒரு மயக்கம். இந்த மயக்கம் பல ஆண்டு காலமாக இருந்து வருவதுதான். அந்த மயக்கம் மாணவர்களிடமும் இருப்பது என்பது [illegible] வருத்தம்தான். ஏனென்றால் முன்பு தொழிலமைச்சராக இருந்த திரு. வெங்கட்ராமன் அவர்கள் கூட 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதை மாற்றினால் வெளிநாட்டுக்காரர்களுக்குப் புரியாது என்று ஒரு காலத்திலே சொன்னதை யெல்லாம் எண்ணிப்பார்க்கின்றபோது, இந்த மயக்கம் அவ்வளவு பெரியவர்களுக்கே [illegible] போது, மாணவர்களுக்கு இருப்பதிலே ஆச்சரியம் இல்லை. [illegible] ஒரு [illegible] பிரச்சினையாக [illegible] இந்த அரசு [illegible]



1979 நவம்பர் 13] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

அடுத்தபடியாக, தனியார் பள்ளிகளைப்பற்றிச் சொல்கிறபோது, ஒரு அரசினுடைய நிர்வாகத்தில், அது தனியார் பள்ளிகளாகட்டும் அல்லது அரசு நிர்வாகம் ஆகட்டும், இரண்டும் இயங்கும் விதத்தை நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையிலே தனியார் பள்ளிகளே வேண்டாம் என்றில்லாமல், நல்லவர்களும் அதை நடத்துகிறார்கள் என்ற காரணத்தினாலே, அதற்குத் தேவையான சில சட்ட முன்வடிவுகள் மூலம் சில திருத்தங்கள் மூலம் செயல்படுகிற இந்த அரசினுடைய முனைப்பை எண்ணி நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

மூன்றாவது சட்ட முன்வடிவு எண் 76-ஐப் பொறுத்தவரையில், சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பல்கலைக் கழகத்தைப்பற்றி சில கருத்துக்களைச் சொன்னார்கள். இதிலே முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய கல்விச் செயலாளர் அவர்களும், நிதிக் குழுவிற்கு நிதிச் செயலாளரோ அல்லது அவருடையே சார்பாக ஒருவரோ செல்லவேண்டும் என்பது. இவர்கள் சென்றுதான் அங்கே நிலைமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதல்ல. சந்தேகங்கள் இருந்தால், ஒருவேளை அந்த சந்தேகங்களைப் போக்குவதற்கு இது பயன்படும் என்று நான் கருதுகிறேன். பொதுவாக பல்கலைக் கழகம் என்றவுடன், நாம் ஏதோ அங்கே நிதிகளை வாரி இறைத்துவிடுவதற்கு வசதி இருப்பதைப் போல் தவறாகக் கருதுவது கொஞ்சம் வருந்தக் கூடியது. நான் தாழ்மையோடு குறிப்பிடுகிறேன். அங்கே ஒரு கட்டிடம் கட்டுவதானால் கூட, டெண்டர் விடப்படுகிறது. அப்படி டெண்டர் விடுகிறபோது, பல கம்பெனிகள் மனுப்போட்டு அதிலிருந்து தான் தேர்ந்தெடுக்கிறார்கள். எப்படி எடுக்கிறார்கள் என்றால், அங்கே ஒரு 'பில்டிங் கமிட்டி' இருக்கிறது. டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் தான் அந்தக் கமிட்டிக்கு சேர்மென் ஆக இருக்கிறார். சீஃப் எஞ்சினியர் (பி.டபிள்யூ.டி.) அதிலே ஒரு மெம்பராக இருக்கிறார். அதோடு சேர்மென் ஆஃப் அக்கவுண்ட்ஸ் அண்டு ஆடிட் கமிட்டி மற்றும் அதனுடைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, சிண்டி

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 நவம்பர் 13

கேட்டிலே பல தொழில் நுட்ப அறிவு மிக்கவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்து பரிந்துரை செய்து, ஆட்சி மன்றக் குழுவிற்கு அனுப்பு கிறார்கள். பின்பு அந்தக் குழுவிலே முடிவெடுத்துதான் அங்கே காரியங்கள் நடைபெறுகின்றனவே தவிர, ஏதோ அள்ளித் தெளித்தது போல ஒரு [illegible] நடப்பது போலவும் இங்கே இருப்பவர்கள் போவதாலே அவைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்பதுபோலவும் நிலைமை இல்லை. நிலைமைகள் இப்படி இருக்கும்போது, பாவம் அந்தப் பதிவாளர் என்ன பாவம் செய்தாரோ தெரிய வில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர் ஒரு பள்ளியாசிரியராக இருந்[illegible] பதிவாளர் அளவுக்கு உயர்ந்தவர். அவருடைய கல்விச் சேவையைப் பாராட்[illegible] 50 வயதானபோது ஈரோடு, கோவை பகுதிகளிலே கல்வி வளர்ச்சிக்காக [illegible] யாற்றினார் என்று பாராட்டு நடத்தி, அந்தப் பாராட்டிலே அவருக்குத் [illegible] பரிசுகளைக்கூட அந்தக் கல்லூரிக்கு அவர் தந்துவிட்டுதான் [illegible] சம்பவமே தவிர, ஏதோ 51 சவரன் அவர் பெற்றுக்கொண்டார் என்று [illegible] வது தவறு. இன்னும் சொல்லப்போனால், முன்பு துணை வேந்தராக இரு[illegible] திரு. மால்கம் ஆதிசேஷைய்யா என்பவர் குற்றம் சாட்டினார் என்ப[illegible] பிரச்சினை. ஒரு மொட்டைக் கடிதம் வருகிறது. யாருக்கென்றா[illegible] முடைய மேதகு ஆளுநர் அவர்களுக்கு வருகிறது. யார் அனுப்புகிறார் [illegible] பெயர் இல்லாமல் வருகிறது. அந்தக் கடிதம் ஆட்சி மன்றக் குழுவினரலே விசாரிக்கப்படுகிறது. அப்போது திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் துணை வேந்தராக இருக்கிறார்கள். மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த வி[illegible] காரம் இது. விசாரித்து என்ன சொல்கிறார்கள் என்றால், இதிலே பதிவா[illegible] ருக்கு ஒன்றும் சம்பந்தமில்லை என்று. இன்னொன்று இப்படிப்பட்[illegible] மொட்டைக் கடிதங்களை விசாரிப்பதில் இனிமேல் ஆட்சி மன்றக் குழு [illegible] கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு மு[illegible] நடந்த இந்த நிகழ்ச்சி இப்போது வருகிறதென்றால், திருவேளை அந்தப் [illegible] வாளர் மூன்றாண்டு காலமாக அவர் இருக்கிற பதவி முடிந்து புதிதாக [illegible] வருகிற நேரத்தில், இவருக்கு நீட்டிப்புக் கொடுக்கக்கூடாது என்ற [illegible] [illegible] விவகாரம் இதுதான். அதனாலே, இந்த [illegible] [illegible] பார்க்கிறபோது பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு[illegible] [illegible] நடைபெறுகின்றன என்பதை [illegible] [illegible]



79 நவம்பர் 13] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

(பிற்பகல் 5.40)

[illegible] சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு 'யூனிவர்சிடி ஆஃப் தமிழ் நாடு' [illegible]ன்று பெயரை மாற்றினால்கூட, இப்போதிருக்கிற 'சென்னை மயக்கம்' [illegible]ந்துவிடும் என்ற வகையில் அரசாங்கம் அதையும் எண்ணிப் பார்க்க [illegible]ண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் ஒரு பல்கலைக் கழகம், [illegible]சென்னையில் ஒரு பல்கலைக் கழகம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை. [illegible]ழகத்தில் தோன்றிய முதல் பல்கலைக் கழகம் என்ற அடிப்படையில், [illegible] சொல்லுகிறேன். 'யூனிவர்சிடி ஆஃப் தமிழ் நாடு' என்று சொல்லும் [illegible] கேட்பதற்கும் அருமையாக இருக்கிறது.

[illegible] பல்கலைக் கழகத்தின் நிதி நிலையைப்பற்றியும் நாம் எண்ணிப் [illegible] அடுத்து, [illegible] கல்லூரிகளிலிருந்து பி.யு.சி. வகுப்புகள் எடுக்கப்பட்டதன் [illegible]ர்க்க வேண்டும். [illegible] பல்கலைக் கழகங்களுக்குப் போதிய வருவாய் தற்போது இல்லை. [illegible]ரணமாக, வருவாய் இல்லாத நேரத்தில்கூட, நமது பல்கலைக் கழகத்தின் துணை [illegible] வேந்தர் அவர்கள் மிக நல்ல முறையில் இந்தப் பல்கலைக் கழகத்தை நடத்தி [illegible] கடமைப்பட்டிருக்கிறோம். [illegible]கிற பாங்கை உள்ளபடியே நாம் பாராட்டக் [illegible] மொழி போல் [illegible]வும் தமிழால் முடியும். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் [illegible]தாவதெங்கும் காணோம்" என்று யாரோ ஒரு மொழி மட்டும் தெரிந்தவர் [illegible]சொல்லவில்லை. பல மொழிகளைக் கற்றறிந்த பாரதியார் சொன்னதைப் [illegible] போல், தமிழால் எதையும் கற்பிக்க முடியும் என்ற அடிப்படையில், பொறியியற் [illegible] தமிழால் எதையும் [illegible]ல் நல்ல திறம் பெற்ற ஒருவர் பொறியியல் பல்கலைக் கழகத்தின் துணை [illegible] ஆக இருக்கிறார். எனவே அவர் நிருவகித்து வரும் பல்கலைக் கழகத்தைப்பற்றிக் கருத்துச் சொல்லும்போது, கொஞ்சம் சிந்தித்து ஆலோசனை சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதை தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[illegible] பல்கலைக் கழகத்தின் நிருவாகத்தில் யார் பங்கு பெற வேண்டும் என்று [illegible] ஆட்சி மன்றக் குழுவிற்கு வரவேண்டும் என்று சொல்கிறபோது, ஆசிரியர்கள் ஆட்சி மன்றக் குழுவிற்கு வரவேண்டும் என்று [illegible] மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொல்லுவதைப்போல், [illegible] அதில் மாணவர்களும் இடம் பெறத் [illegible] எடுத்துச் சொன்னதைப் போல், [illegible] கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். [illegible]வகை செய்ய வேண்டும் என்று [illegible] போராடிய போதாவது [illegible] தலைவனாக நான் இருந்தபோது, இதற்குப் [illegible] ஆனால் இப்போது மாணவர்களும் அதில் [illegible] இருந்திருக்கும். [illegible] சொல்லிக்கொள்[illegible] அத்தகைய [illegible] [illegible] பெற வேண்டும் என்று

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 நவம்பர் 13

கேட்டிலே பல தொழில் நுட்ப அறிவு மிக்கவர்கள் இருக்கிறார்கள், இவர்கள்
எல்லாம் சேர்ந்து பரிந்துரை செய்து, ஆட்சி மன்றக் குழுவிற்கு அனுப்பு
கிறார்கள். பின்பு அந்தக் குழுவிலே முடிவெடுத்துதான் அங்கே காரியங்கள்
நடைபெறுகின்றனவே தவிர, ஏதோ அள்ளித் தெளித்தது போல ஒரு காரியம்
நடப்பது போலவும் இங்கே இருப்பவர்கள் போவதாலே அவைகள் எல்லாம்
தீர்ந்துவிடும் என்பதுபோலவும் நிலைமை இல்லை. நிலைமைகள் இப்படி
இருக்கும்போது, பாவம் அந்தப் பதிவாளர் என்ன பாவம் செய்தாரோ தெரிய
வில்லை. இன்னும் சொல்லப்போனால், அவர் ஒரு பள்ளியாசிரியராக இருந்த
பதிவாளர் அளவுக்கு உயர்ந்தவர். அவருடைய கல்விச் சேவையைப் பாராட்டி
50 வயதானபோது கூட, கோவை பகுதிகளிலே கல்வி வளர்ச்சிக்காகப் பணி
யாற்றினார் என்று பாராட்டு நடத்தி, அந்தப் பாராட்டிலே அவருக்குத் தந்த
பரிசுகளைக்கூட அந்தக் கல்லூரிக்கு அவர் தந்துவிட்டதுதான் நடந்த
சம்பவமே தவிர, ஏதோ 51 கரன் அவர் பெற்றுக்கொண்டார் என்று சொல்
வது தவறு. இன்னும் சொல்லப்போனால், முன்பு துணை வேந்தராக இருந்த
திரு. மால்கம் ஆதிசேஷையா என்பவர் குற்றம் சாட்டினார் என்பதல்ல
பிரச்சினை. ஒரு மொட்டைக் கடிதம் வருகிறது. யாருக்கென்றால் நம்
முடைய மேதகு ஆளுநர் அவர்களுக்கு வருகிறது. யார் அனுப்புகிறார் என்ற
பெயர் இல்லாமல் வருகிறது. அந்தக் கடிதம் ஆட்சி மன்றக் குழுவினாலே
விசாரிக்கப்படுகிறது. அப்போது திரு. மால்கம் ஆதிசேஷையா அவர்கள்
துணை வேந்தராக இருக்கிறார்கள். மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த விவ
காரம் இது. விசாரித்து என்ன சொல்கிறார்கள் என்றால், இதிலே பதிவாள
ருக்கு ஒன்றும் சம்பந்தமில்லை என்று. இன்னொன்று இப்படிப்பட்ட
மொட்டைக் கடிதங்களை விசாரிப்பதில் இனிமேல் ஆட்சி மன்றக் குழு ஈடுபடக்
கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு
நடந்த இந்த நிகழ்ச்சி இப்போது வருகிறதென்றால், ஒருவேளை அந்தப் பதி
வாளர் மூன்றாண்டு காலமாக அவர் இருக்கிற பதவி முடிந்து புதிதாக ஒருவர்
வருகிற நேரத்தில், இவருக்கு நீட்டிப்புக் கொடுக்கக்கூடாது என்ற வருத்தத்
தைச் சொன்னாலும் கூட, விவகாரம் இதுதான். அதனாலே, இந்த அடிப்
படையிலே பார்க்கிறபோது பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழுக்கள்
எல்லாம் எப்படி நடைபெறுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்
தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் நான் நான் இவைகளைக்
குறிப்பிட்டேன்.



1979 நவம்பர் 13] [டாக்டர் இரா. சனார்த்தனம்]

(பிற்பகல் 5.40)

சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு 'யுனிவர்சிடி ஆஃப் தமிழ் நாடு' என்று பெயரை மாற்றினால்கூட, இப்போதிருக்கிற 'சென்னை மயக்கம்' தீர்ந்துவிடும் என்ற வகையில் அரசாங்கம் அதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் ஒரு பல்கலைக் கழகம், சென்னையில் ஒரு பல்கலைக் கழகம் என்ற அடிப்படையில் சொல்லவில்லை. தமிழகத்தில் தோன்றிய முதல் பல்கலைக் கழகம் என்ற அடிப்படையில், இதைச் சொல்லுகிறேன். 'யுனிவர்சிடி ஆஃப் தமிழ் நாடு' என்று சொல்லும் போதே, கேட்பதற்கும் அருமையாக இருக்கிறது.

அடுத்து, பல்கலைக் கழகத்தின் நிதி நிலைமையைப்பற்றியும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கல்லூரிகளிலிருந்து பி.யு.சி. வகுப்புகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, பல்கலைக் கழகங்களுக்குப் போதிய வருவாய் தற்போது இல்லை. ஆக, வருவாய் இல்லாத நேரத்தில்கூட, நமது பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்கள் மிக நல்ல முறையில் இந்தப் பல்கலைக் கழகத்தை நடத்தி வருகிற பாங்கை உள்ளபடியே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதுவும் தமிழால் முடியும். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று யாரோ ஒரு மொழி மட்டும் தெரிந்தவர் சொல்லவில்லை. பல மொழிகளைக் கற்றறிந்த பாரதியார் சொன்னதைப் போல், தமிழால் எதையும் கற்பிக்க முடியும் என்ற அடிப்படையில், பொறியியற் கல்வியில் நல்ல திறம் பெற்ற ஒருவர் பொறியியல் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கிறார். எனவே அவர் நிருவகித்து வரும் பல்கலைக் கழகத்தைப்பற்றிக் கருத்துச் சொல்லும்போது, கொஞ்சம் சிந்தித்து ஆலோசனை சொல்வது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்தின் நிருவாகத்தில் யார் பங்கு பெற வேண்டும் என்று சொல்கிறபோது, ஆசிரியர்கள் ஆட்சி மன்றக் குழுவிற்கு வரவேண்டும் என்று சொல்லுவதைப்போல், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல், அதில் மாணவர்களும் இடம் பெறத் தக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாணவர் தலைவனாக நான் இருந்தபோது, இதற்குப் போராடிய போதாவது அதில் சுயநலம் இருந்திருக்கும். ஆனால் இப்போது மாணவர்களும் அதில் அங்கம் பெற வேண்டும் என்று சொல்லிக்கொள்வதில் அத்தகைய சுயநலம்

[டாக்டர் இரா. சனார்த்தனம்] [1979 நவம்பர் 13

இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆட்சி
மன்றக் குழுவில் இடம் பெற வேண்டியவர்களின் எண்ணிக்கை என்பது
வகுத்துக்கொள்வதே தவிர, அதை அதிகப்படுத்துவதிலே குற்றம் ஏதுமில்லை

இந்த அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கிற 3 சட்ட முன்வடிவுகளும்
ஒரு அடிப்படையை விளக்குவதாக அமைந்திருக்கின்றன. அரசாங்கத்தின்
கல்விக் கொள்கை என்ன என்பதை விளக்கும் அடிப்படையில் அவை கொண்டு
வரப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் பிரச்சினையானாலும் சரி,
ஆசிரியர்கள் பிரச்சினையானாலும் சரி, அவர்கள் போராடும்போது, அதி
நியாயம் இருக்குமானால், அந்தப் போராட்டங்களையெல்லாம் அமைதி
படுத்த வழி இருக்குமானால், அதற்கான அணுகு முறையைத்தான் இந்த
அமைச்சரவை கையாண்டுகொண்டு வந்திருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்
களின் போராட்டம் என்றால், உடனே அதை அடக்கி ஒடுக்குவது
என்றில்லாமல், அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கத்தான் அர
முயல்கிறது. கல்லூரி ஆசிரியர்களின் பிரச்சினை என்றாலும், ஆசிரியர்கள்
போராட்டம் என்றாலும், அது தோல்வியடைந்ததாக இருக்கக்கூடாது என்ற
நல்ல உள்ளத்தோடு ஆசிரியராக இருந்து அமைச்சராகப் பொறுப்பேற்றி
ருக்கும் கல்வி அமைச்சர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
இந்த 3 சட்ட முன்வடிவுகளையும் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும்
பாராட்டுவதிலிருந்தே இந்த அடிப்படை நன்கு புரியும் என்று சொல்லி
கொள்ளுகிறேன்.

இருந்தாலும் ஒருவேளை அழகுப் பேச்சுக்காக "குலேபகாவலி"
படத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி
இருந்தாலும், பதிலுக்குத் "திரும்பிப் பார்" என்று சொல்லாமல், அதை
மட்டும் நினைத்துப் பார்த்துக்கொண்டு, இவையெல்லாம் இருக்கிற இடத்தில்
பேசிடும் வார்த்தைகளாக இருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாகப் பார்க்கிற
போது கல்விக் கொள்கையில் இந்த அரசு ஆற்றுகிற பணியை ஒட்டிக் கொண்டு
வரப்பட்டிருக்கும் இந்த முன்வடிவுகளை வரவேற்று அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த அவையின் முன் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால்
கொண்டுவரப்பட்டிருக்கிற 3 சட்ட முன்வரைவுகளின் மீது என்னுடைய
கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.



979 நவம்பர் 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தைப்
பொறுத்த சட்ட முன்வடிவில் தேர்வைப் பற்றிய ஒரு பகுதியும், அதனுடைய
கல்விக் குழுவை விரிவடையச் செய்யும் இன்னொரு பகுதியும் இடம் பெற்றி
ருக்கின்றன.

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் 1978 ஆம்
ஆண்டில் தொடங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் முடிவடையும் நிலையில்,
சென்னைப் பல்கலைக் கழகமாக இருந்தபோது சேர்ந்த மாணவர்கள் அங்கே
தேர்வு எழுதி பட்டச் சான்றிதழ் வாங்குவதற்கு தெரிவித்த எதிர்ப்பை
யொட்டி இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தின்
மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இத்தகைய
எண்ணத்தை வளர்த்துக்கொண்டு போவது நியாயம் தானா என்று
கேட்டார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், பொறியியல் கல்வி பெறும் மாணவர்கள்
தங்கள் பட்டச் சான்றிதழை தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் பெயரால்
பெறுவதைப் பெருமையாகக் கருத வேண்டும். அதற்குக் காரணம் அவர்கள்
தொழில் நுட்பப் பட்டத்தைப் பெறுகிறார்கள். சென்னைப் பல்கலைக்
கழகத்தின் பொறியியல் வல்லுநர் என்று பட்டம் பெறுவதைவிட பேரறிஞர்
அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் பட்டம் என்று இருப்பது
அவர்களுக்குச் சாலச் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ
மாணவர்களுடைய விருப்பத்தை ஏற்றுக்கொண்டு இந்தத் திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறார்கள் என்றாலும், அந்தந்தப் பல்கலைக் கழகங்களில்
படிக்கும் மாணவர்கள் அந்தந்தப் பல்கலைக் கழகங்களின் பெயரில்தான்,
தங்களின் பட்டச் சான்றிதழ்களைப் பெறுவதில் பெருமை இருக்க வேண்டும்
என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதன் மூலம்தான் மாணவர்களும்
பெருமைப்பட முடியும், பல்கலைக் கழகங்களும் பெருமைப்பட முடியும்.

அடுத்து, பல்கலைக் கழகத்தின் கல்விக் குழுவை விரிவடையச் செய்யும்
திருத்தத்தைப்பற்றிச் சில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன். பேரறிஞர்
அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் 'சிண்டிகேட்'
இருக்கிறது, கல்விக் குழு இருக்கிறது. ஆனால் செனட் என்று சொல்லப்படும்
பேரவை இல்லை என்று கருதுகிறேன். அதையும் உருவாக்க மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏனென்றால் கல்விக் குழு தவிர்த்த மற்ற பொறுப்புகள்
அனைத்தையும் இப்போது சிண்டிகேட்டே ஏற்றுக்கொள்கிறது, பல்கலைக்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 13

கழகங்களில் இந்த மூன்று பிரிவுகளும் இருக்க வேண்டும். ஆட்சிக் குழு, பேரவை மற்றும் கல்விக் குழு ஆகிய மூன்றும் இருக்க வேண்டும். கல்விக் குழுவைப் பொறுத்தவரையில், கல்வித் திட்டங்களை வகுத்து தேர்வுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. பேரவை நிதிநிலை விவகாரங்களைப் பார்த்துக் கொள்கிறது. இப்படி மூன்று பிரிவுகளும் இருந்தால்தான், ஒரு பல்கலைக் கழகம் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்ற காரணத்தால், ஆரம்ப காலத்தில் இருக்கிற பல்கலைக் கழகத்தில் செனட்—அதாவது பேரவையின் பொறுப்பையும் சிண்டிகேட்டே என்று நடத்துவதானால், சிண்டிகேட்டின் வேலைப் பளு அதிகமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே விரைவிலேயே செனட் சபை ஏற்படுத்துவதற்கான ஒரு திருத்தத்தையும் அரசு கொண்டுவர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டு வரும்போதும், அதை மிகத் தெளிவாகச் சிந்தனை செய்து இன்னும் ஒரு 10 ஆண்டுக் காலத்திற்கு வேறு திருத்தமே தேவைப்படாத அளவுக்கு ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கல்விக் குழுவை விரிவுபடுத்தும்போது, ஏற்கெனவே இருந்த செக்ஷன் என்ன, இப்போது புதிதாக அமைக்கப்படுகிற செக்ஷன் என்ன என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"10 Professors of the University nominated by the Chancellor on the recommendations of the Vice-Chancellor."

அதாவது துணை வேந்தரால் சிபாரிசு செய்யப்பட்டு ஆளுநராகிய வேந்தரால் நியமிக்கப்படுகிற 10 பேராசிரியர்களுக்குப் பதிலாக 15 பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது திருத்தம். அதைப் போலவே 5 பேராசிரியர்கள் அல்லாத ஆசிரியர்கள் என்பதற்குப் பதில் 7 பேராசிரியர்கள் அல்லாத ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தோடு அரசு நின்றுவிடாமல் இத்தகைய இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு தேர்வு முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான திருத்தமும் மிகவும் தேவைப்படுகிற ஒன்றாகும். இப்போது ஆரம்ப கட்டத்தில் நியமன முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு பல்கலைக் கழகம் சுதந்திரமான பல்வேறு கருத்துக்களைக் கொண்ட பேராசிரியர்கள் வந்திருந்து விவாதித்து தெளிந்த சிந்தனையில் முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்றால், பல்வேறு நிலைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை மிகுந்து இருக்க வேண்டும். அதோடு அனுபவம்



1979 நவம்பர் 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

மிக்கவர்கள் தேர்தல்கள் மூலமாக வர முடியாத நிலையில் நியமனம் மூலம் அங்கம் வகித்து தங்களின் கருத்துக்களை எடுத்துரைக்கும் சூழ்நிலையை பல்கலைக் கழகங்களில் உருவாக்க வேண்டும் என்று இணை வேந்தர் பொறுப்பில் இருக்கும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தொழில் நிறுவனங்களிலிருந்து மூவர் நியமிக்கப்படுகிறார்கள். அதோடு எல்லாப் பாலிடெக்னிக்குகளின் பிரதிநிதிகள் அடங்கிய 2 அல்லது 3 பேரும் அதில் இடம் பெறச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, ஐ.டி.ஐ.—அதாவது தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் அல்லது பேராசிரியர்கள் அல்லாத ஆசிரியர்கள் என்ற நிலை மாத்திரமல்லாமல்—தொழில் நுட்பத் துறையான ஐ.டி.ஐ.—யிலிருந்து இரண்டு பேர் இடம் பெற வழிவகை செய்ய வேண்டும். அதோடு 'டெக்னாலஜி இன்வால்வுடு' தொழிற் சாலைகளிலிருந்து பிரதிநிதிகள் வருவதற்கும் வழி வகை செய்ய வேண்டும். மேலும் தொழில் நுட்பத் துறையில் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர்கள் வருவதற்கும் வழிவகை செய்ய வேண்டும். இவைகளெல்லாம் உள்ளடங்கும் வகையில் விரிவான திருத்தச் சட்டத்தை அரசு கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

அடுத்து, தனியார் பள்ளிகளுடைய வைப்பு நிதியை—என்டோவ்மெண்ட்—ஸ்டேட் பேங்கின் கிளைகளில் போடுவதற்கு வழிவகை செய்யும் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒன்று என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. வைப்பு நிதிக்காக தனியார் பள்ளிகளில் என்ன நிலையை உருவாக்குகிறார்கள் என்றால் ஹையர் செகண்டரி அட்மிஷன்போது மாணவர்களிடம் ரூ. 100 அல்லது ரூ. 200 வாங்குகிற நிலை இருக்கிறது. 1 லட்ச ரூபாய் வைப்பு நிதி வேண்டும் என்றால், மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் வாங்குகிற நிலை இருக்கிறது. ஆகவே கல்லூரியில், பள்ளியில் சேர்கிற மாணவர்களிடம் பணம் பெறாமல், நிறைய பணம்படைத்தவர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நிதி திரட்ட வழிவகை செய்ய வேண்டும். பணம் வாங்காமல் மாணவர்களை பள்ளியில் சேர்க்க மறுக்கிறார்கள் என்பதை நானே பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன். இது சம்பந்தமாக பல போராட்டங்களில் ஈடுபட்டு பல

[திரு. ப. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 13

துன்பங்களை அனுபவித்தவன் நான். 1952 ஆம் ஆண்டிலே நாகர்கோவிலில்
உள்ள ஒரு கல்லூரியில் சேர்ப்பதற்காக மாணவரிடத்திலிருந்து கட்டாயமாகப்
பணம் வாங்கியிருக்கிறார்கள் என்பதை மிகக் கஷ்டப்பட்டு பெரும் சோதனை
களுக்கிடையே நிரூபித்துக் காட்ட முயன்று நிரூபித்துக் காட்டியும், அதனால்
பலன் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகவே நிரூபித்துக் காட்டுவதால் பலன்
ஒன்றும் வரப்போவதில்லை.

எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரிப் பெண்கள் ஊர்வலமாக வந்து நிரூபித்துக் காட்டி
யிருக்கிறார்கள். நிரூபித்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க சக்தியற்ற
வர்களாக இருக்கிறோம். சென்னைத் தலைநகரிலேயே ஆயிரக்கணக்கான
அளவில் எஸ்.ஐ.ஈ.டி. மாணவியர்கள் கோட்டை முன்வந்து, "எங்களிடத்திலே
அதிகமாகப் பணம் கேட்கிறார்கள்" என்று சொன்னார்கள். ஆனால் நம்மால்
ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே நிரூபித்துக் காட்ட முடியுமா என்று
கேட்க வேண்டியதில்லை. நிரூபித்துக் காட்டினாலும், அதை மாற்றிக்
கொள்ள முடியாத சூழ்நிலையில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்.
அதற்கும் ஒரு நல்ல சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். இதைச்
செய்வதற்கு, தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டத்தை
மாற்ற மிகப் பெரிய சட்டத் திருத்தம் தேவைப்படுகிறது. தேவைப்பட்டால்,
அரசியலமைப்புச் சட்டத்திலேயே ஒரு திருத்தத்தைச் செய்ய வேண்டும்.
அதற்காக நம்முடைய மன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை
பிற மாநிலங்களுக்கும் அனுப்பி, "கல்வித் துறையைக் காப்பாற்ற அரசியல்
சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் பிரிவு 30-ஐத் திருத்த வேண்டும்" என்று
சொல்லும் அளவிற்கு நாம் இதில் முன் நிற்க வேண்டும். மாண்புமிகு கல்வித்
துறை அமைச்சர் அவர்கள் அதற்கான முன் நடவடிக்கையை எடுக்க வேண்டு
மென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தது, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்
கழகம் ஆகியவற்றில் இப்போது இருக்கக் கூடிய ஆட்சிக் குழுவில் கல்விச்
செயலாளரை உறுப்பினராக நியமிப்பதற்கு அனுமதி வேண்டி வருகிற
திருத்தச் சட்டம். இது குறித்து பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய
அனுபவத்தால் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நானும்
என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். பல்கலைக்
கழகங்கள் எல்லாம் இப்போது உண்மையிலேயே அரசினுடைய ஒரு இலாக்கா
வாக மாற்றப்படுகிறதோ என்ற சந்தேகம் எல்லா இடங்களிலும் தோன்றி
யிருக்கிறது. இதற்கு முன்னால் பல்கலைக் கழகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட



1979 நவம்பர் 13] [திரு. ப. சங்கரலிங்கம்]

பிரதிநிதிகள் அல்லது பல்கலைக் கழகச் சட்டத்தின்படி அமைக்கப்படுகிற
செனெட், அகடமிக் கவுன்சில், சிண்டிகேட் ஆகியவற்றில் அரசாங்கத்தின்
சார்பில் இரண்டு மூன்று பேர் நியமிக்கப்படுபவர்களாக இருப்பார்கள்.
அப்படி இருப்பவர்களில் கல்லூரிக் கல்வி இயக்குநரும் ஒருவர்.
கல்லூரிக் கல்வி இயக்குநர் உண்மையிலேயே அங்கே போய் ஆட்சி செலுத்
துபவர் அல்ல. அவர் அரசுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் பாலமாக
அமைந்து கல்வித் துறையைப்பற்றி பல்கலைக் கழகம் என்ன சீரிய சிந்தனை
களை எண்ணுகிறதோ அதைத் தெரிந்து அரசுக்குத் தெரிவித்து, நிதித்
துறையைப் பொறுத்த வரையில், அரசு என்ன கருதுகிறது என்பதையும்,
கல்விக் கொள்கையைப்பற்றி அரசு என்ன நினைக்கிறது என்பதையும் அறிந்து
பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் எடுத்துச் சொல்லுகிற தூதுவராகத்தான்
இருக்கிறாரே தவிர, வேறு அல்ல. தூதுவராக இருக்க வேண்டுமென்றுதான்
அவரை நியமிக்கிறார்கள். அங்கே போய் ஆட்சி செய்வதற்காக அல்ல
என்பதை நான் உணர்கிறேன். அது உண்மையாக இருக்குமானால், கல்விச்
செயலாளரைவிட கல்லூரிக் கல்வி இயக்குநர்தான் இதற்குப் பொருத்தமாக
இருக்க முடியும் என்பது என்னுடைய எண்ணம். கல்விச் செயலாளரை
நியமிப்பதை நான் வரவேற்கிறேன். கல்விச் செயலாளரை நியமித்த பிறகு,
கல்லூரிக் கல்வி இயக்குநர் எதற்காக? கல்லூரிக் கல்வி இயக்குநர் கல்வி
இலாக்கா செயலாளரின் கீழ் செயல்படுகிற ஒரு அதிகாரி. கல்விச் செயலாளர்
சிண்டிகேட் உறுப்பினராக இருக்கும்போது, அவருடைய சிந்தனைக்கு
மாறுபட்ட கருத்தைச் சொல்லக் கூடிய தகுதியை உடையவராக கல்லூரிக்
கல்வி இயக்குநர் இல்லை. எனவே கல்விச் செயலாளரை பல்கலைக்கழக
ஆட்சிக் குழுவில் உறுப்பினராக நியமித்தால், கல்லூரிக் கல்வி இயக்குநர்
வேண்டாமென்று முடிவு செய்யலாம். ஒருவரே போதுமானது. இப்போது
பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் உறுப்பினராக கல்லூரிக் கல்வி இயக்குநர்
இருக்கிறார். அவர் இருந்து அரசினுடைய கொள்கைகளை பல்கலைக்கழகத்
தினுடைய ஆட்சிக் குழுவின் மூலம் தெரிவித்து அதனுடைய போக்கினை
ஒழுங்குபடுத்த முடியவில்லை என்று அரசு கருதுகிறதா? கல்விச் செயலாள
ருடைய நியமனம் எதற்காகத் தேவைப்படுகிறது என்பதை விளக்கவில்லை.
என்னைப் பொறுத்த வரையில், ஒருவர்தான் தேவை, இரண்டு பேரும் தேவை
யில்லை என்று நினைக்கிறேன்.

கல்விச் செயலாளர் என்பவர் கல்வித் துறையோடு நிரந்தரமாக இணைந்
திருப்பவர் அல்ல. இப்போது கல்வித் துறைச் செயலாளராக இருப்பவர் இதற்கு
முன்பு தொழில் துறைச் செயலாளராக இருந்தவர். இதற்கு முன்பு கல்விச்

செயலாளராக இருந்த திரு. ரங்கபாஷ்யம் இப்போது வேறு ஒரு துறையில் இருக்கிறார். ஐ.ஏ.எஸ். செயலாளர் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றப்பட்டு வந்து மொத்த நிர்வாகத்தை நிர்வகிப்பதிலே வல்லவராக இருக்கலாம். ஆனால் நிரந்தரமாக கல்வித் துறையோடு ஈடுபட்டிருப்பவர் அல்ல கல்விச் செயலாளர். இரண்டு, மூன்றாண்டுகளுக்கு இருப்பார், பிறகு மாற்றப்படுவார். ஆனால் கல்லூரிக் கல்வி இயக்குநர் அப்படியல்ல, கல்வித் துறையிலேயே இருந்து தொடர்பு கொண்டு, ஆசிரியராக இருந்து பிறகு முதல்வராக ஆகிய பிறகு, இயக்குநராக பதவி உயர்வு பெற்று வந்திருப்பார். ஆகவே கல்விச் செயலாளர் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார் களோ அதை கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கொண்டே செய்ய வைக்கலாம். அப்படிச் செய்ய வைக்க முடியவில்லையென்றால், அதற்கான காரணங்கள் என்னவென்பதைச் சொன்னால் என்னால் புரிந்துகொள்ள முடியும். இப்போதும் அரசாங்கம் பல்கலைக் கழகத்தினுடைய தன்னாட்சித் தன்மையில், உரிமையில் தலையிட விரும்பவில்லை என்று கருதுகிறேன். அப்படி இருக்கும்போது, அரசு கல்விச் செயலாளரை பல்கலைக் கழகத்தில் சேர்ப்ப தற்குரிய காரணம் என்னவென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதற்கான காரணங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டு மென்று நான் சொல்லவில்லை, ஆனால் அதைப்பற்றி சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் புதிதாக கல்விக் கொள்கையை விரிவடையச் செய்கிறபோது, மேல்நிலைக் கல்வித் துறையிலே செயல்படுகிற மேல்நிலைக் கல்வி அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்று சொல்லப் படுகிறது. முன்பே பள்ளிக் கல்வி இயக்குநர் அதிலே இருக்கிறார். மேல் நிலைக் கல்விப் பொறுப்பை பள்ளிக் கல்வி இயக்குநரால் தெரிந்துகொள்ள முடியாது என்று அரசு கருதுகிறதா? மேல்நிலைக் கல்விக்கென்று தனி போர்டு தேவை, தனி இயக்குநர் தேவை அதைத் திறம்பட நடத்துவதற்கு என்று நான் முன்பே சொன்னேன். இதை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நடைமுறையில் அரசு இதை உணர்ந்து மேல்நிலைக் கல்வியைப் பிரதிபலிக்க மேல்நிலைக் கல்வியைக் கையாளுகிற அதிகாரியை நியமிக்கிறோம் என்று சொல்கிறதா? பள்ளிக் கல்வி இயக்குநர் இதற்குப் போதுமானவர் அல்ல என்பதை மறைமுகமாக அரசு ஒப்புக்கொள்கிறதா? எதற்காக இதை எடுத்துச்சொல்கிறேன் என்றால், பல்கலைக் கழகத்தில் நிரம்ப அதிகாரிகளைப் புகுத்துவதால் அதிகப் பலன்கள் ஏற்படாது என்பதை எடுத்துக்காட்டு வதற்காகத்தான். பல்கலைக் கழகத்திற்கு சுயமாகச் சிந்திக்கிற நிலையையும்,



கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில், கல்விப் பாடத் திட்டங்களைப் பொறுத்த வரையில் சுய உரிமையையும் கொடுத்திருக்கிறோம். பாடத் திட்டங்களைப் பொறுத்த வரையில், அகடமிக் கவுன்சில் முடிவு செய்கிறது, சிண்டிகேட் அப்படியே ஏற்றுக்கொள்கிறது. அரசைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழகத்திற்கு மாநில அரசு மொத்த நிதியைக் (ப்ளாக் கிராண்ட்) கொடுக்கிறது; மத்திய அரசு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் மூலமாக மானியத்தைக் கொடுக்கிறது. இவற்றை நிர்வகிக்க, அரசைப் பொறுத்த வரையில், யாரும் தேவையில்லை. ஏனென்றால் அவர்களுக்கான ஃபினான் ஷியல் கோட் இருக்கிறது. அந்த நிதியை எப்படி நிர்வகிக்க வேண்டுமென்ப தற்கான விதிமுறைகள், வழிமுறைகள் இருக்கின்றன. அதன்படி நிர்வகிக்கப் படாவிட்டால், தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து நிர்வகிக்கலாம். இவைகள் எல்லாம் அங்கிருந்து கொண்டு நிதிச் சட்டத்தை ஒழுங்குபடுத்தி அமுல்படுத்தாமல் இருப்பதால் பலன் இல்லை.

உதாரணமாக, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்திலே நடந்த சில தவறுகளைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள், "அப்படியெல்லாம் ஒன்று மில்லை, சிறப்பாக நடைபெறுகிறது" என்றும் சொன்னார்கள். அவர் சொன்னதும் சரி, இவர் சொன்னதும் சரி. துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு சில புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன். பல்கலைக் கழகத்தினுடைய நிதி நிர்வாகம் நடப்பதற்கு ரிஜிஸ்ட்ரார்தான் எல்லாவற்றுக்கும் பொறுப்பு. அவரின்கீழ் ஃபைனான்ஸ் ஆபீசர் இருக்கிறார். அவருக்குக் கீழே துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நிதியை எந்தெந்தக் கணக்கில் எப்படியெப்படி வைக்க வேண்டுமென்பதற்கு நிதிச் சட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி செயல்படுத்தப் பட்டிருக்கிறதா என்பதை லோகல் பண்ட் ஆடிட் துறையினர் ஆய்வு செய்து ஒரு ஃபைனான்ஷியல் ஸ்டேட்மெண்டை அளிக்கிறார்கள். அதை செனட் சபையில் வைக்கிறார்கள். செனட் சபை அதை ஒப்புக்கொள்கிறது. இந்த அடிப்படையில் 1977-78 ஆம் ஆண்டுக்கான ஒரு ரிப்போர்ட்டை—

Annual Accounts and Audit Report for the year 1977-78 of University of Madras. என்று அளித்திருக்கிறார்கள். அதிலே

"N. S. S. Special Camp Regular Advances pending adjustment—Separate account not maintained"

என்று பக்கம் 24-ல் சொல்லப்பட்டிருக்கிறது. தனி அக்கவுண்ட் வைக்க வேண்டு மென்று அரசாணையில் சொல்லப்பட்டிருக்கிறது. தேசிய சமூக மன்றம்

அமைக்கப்பட்டு, அதற்கு பாதிலே ஆகும், மத்திய அரசும் நிதி கொடுக்கின்றன. அப்படிப்பட்ட நிதியை எப்படி கணக்கு வைக்க வேண்டுமோ அப்படி வைக்கப்படவில்லை என்பதைச் சொல்லி அதே பக்கத்திலே கடைசியாக

"On verification of the Advances Recoverable Register for 1977-78 under N. S. S. Scheme, it was noticed that advances aggregating to Rs. 15,95,311 were pending adjustment as on 31st December 1978." என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6.00)

பெண்டிங் அட்ஜஸ்ட்மெண்ட் அக்கவுண்ட் இருக்கக்கூடாது. ஏதாவது அக்கவுண்டில் செலவு செய்தால், அதற்கு வவுச்சர் வந்து செலவிலே வந்திருக்க வேண்டும். செலவிலே வந்தால் ரெசிட் வந்து மீதி இருக்க வேண்டுமே தவிர, "பெண்டிங் அட்ஜெஸ்ட்மெண்ட்" என்று சொல்கிறபோது . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது ஆட்சி மன்றக் குழு எப்படி இயங்குகிறது என்பதும் அதிலே பதிவாளர்களுடைய பொறுப்பு என்ன என்பதும். கட்டிடம் கட்டுவதானால், அதற்கு பில்டிங்ஸ் கமிட்டி என்று இருக்கிறது. அதற்கு 'டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன்' தலைவராக இருக்கிறார். அத்தோடு சீப் என்ஜினியர், பி.டபிள்யூ.டி., பில்டிங்க்ஸ் உறுப்பினராக இருக்கின்றார் என்ற விவரத்தைச் சொன்னேனே தவிர, இதில் பதிவாளருக்குப் பொறுப்பில்லை என்று சொல்லவில்லை. யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்ற விவரத்தைத் தான் சொன்னேனே தவிர, இந்த ஆடிட் ரிப்போர்டடுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

(உறுப்பினர் திரு வீராசாமி அவர்கள் பேச எழுந்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் சொன்னதற்காக அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர் சொன்னதற்கு இவர் பதில் சொல்கிறார். நீங்கள் எழுந்திருக்கிறீர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஒவ்வொன்றுக்கும் 'லிங்க்' இருக்கிறது. நான் பேசியதை வைத்து அவர் பேசுகிறார். அவர் பேசினதை வைத்து இவர் பேசுகிறார். அதற்கு அவர் பதில் சொன்னவுடனே நான் பதில் அளிக்கிறேன்.





**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இப்படி ஒவ்வொருமே சொல்லிக் கொண்டே இருந்தால், என்ன ஆகிறது

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். அந்த பாகிரி மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொல்லும்போது, ஏதோ கட்டிடங்கள் கட்டுவது பற்றியும் அதற்கு இருக்கின்ற விதிமுறை களைப் பற்றியும் சொன்னதாகச் சொன்னார்கள். நான் பேசும்போது, அந்தக் குற்றச் சாட்டு கட்டிடம் கட்டுவதிலே ஏற்பட்டதாகக் குறிப்பிடவில்லை. நான் பொதுவாக அங்கு இருக்கின்ற திரு. இரா. கணேசன் அவர்கள் கொடுத்த புகார் மீது ஒரு அறிக்கை தயார் செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு, இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அவர் மீது இருக்கிறது என்று எடுத்துச் சொன்னேனே தவிர வேறல்ல. கட்டிடங்கள் கட்டுவதிலே விதி முறைகள் இருக்கின்றன, அதை எல்லாம் ரிஜிஸ்டிரார் மீறி இருக்கிறார் என்ற குற்றச்சாட்டை நான் சொன்னதாக இருந்தால், அதைப்பற்றி சொல்வதில் அர்த்தம் இருக்கிறது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள், திரு. இரா. கணேசன் அவர்கள் அறிக்கையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த அறிக்கையின் மீது மான நஷ்டஈடு வழக்கு இப்போது இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அதைப்பற்றி இந்த அவையிலே பேசுவது அந்த வழக்கைப் பாதிக்கக்கூடிய விஷயமாக இருக்கும் என்பதால், இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அவரைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தால், அது வேறு விவகாரம். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவர் தாராளமாகக் காப்பாற்றட்டும். எனக்கு இருக்கின்ற உரிமையை உறுப்பினர் அவர்கள் தடுக்க முடியாது. என்னுடைய உரிமை அது. நான் சொல்கின்ற குற்றச் சாட்டு தவறாக இருந்தால், உறுப்பினரிடத்திலே ஆதாரம் இருந்தால் காண்பிக்கலாமே. அப்படியில்லாமல், அது நீதிமன்றத்திலே இருக்கிறது, அதன்மீது எப்படிப் பேசுவது என்று கேட்கக்கூடாது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** அவர்கள் காலத்திலே நியமிக்கப்பட்ட வர்கள்தான் அவர்கள். எங்களுடைய காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அல்ல அவர்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** யாராக இருந்தாலும் கேட்கத்தான் வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** யாராவது ஒருவர் பேசுங்கள். இரண்டு பேர்கள் ஒரே சமயத்தில் பேச வேண்டாம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** யாருடைய ஆட்சிக் காலத்தில் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள் என்பது பிரச்சினையல்ல. எங்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டிருந்தால்கூட, தவறு செய்தவர்களாக இருந்தால், அவர்களைக் கண்டிக்கின்ற உரிமை உங்களுக்குண்டு. நாங்கள் நியமித்து விட்டோம் என்பதற்காக அவர் எது வேண்டுமானாலும் செய்தால், விட்டுவிட முடியாது. அதை நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தவறான தகவல் என்று தெரிகிறபோது, அதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தவறான தகவல் என்று உறுப்பினர் அவர்கள் முடிவு செய்ய முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்கின்ற குற்றச்சாட்டு தவறு என்றால், அமைச்சர் அவர்கள் சொல்லட்டும். அவர்கள் பதில் சொல்லக்கூடிய உரிமை பெற்றிருக்கிறார்கள். ஓர் உறுப்பினர் இன்னொரு உறுப்பினருக்குப் பதில் சொல்வது என்பது என்ன நியாயம்?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தவறான தகவலைச் சொல்லும்போது, அதை மறுப்பதற்கு எனக்கு உரிமையிருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதைச் சொல்லுங்கள். குறிப்பிட்டுச் சொல்லி, அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுப்பதற்கு உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதற்காக அதைச் சொல்வதே தவறு என்று சொல்லக்கூடிய உரிமை உறுப்பினர் அவர்களுக்குக் கிடையாது.

**MR. DEPUTY CHAIRMAN:** The contention raised by the hon. Member Dr. Janarthanam is that the matter is before the Court and that the matter is *sub-judice*. But unless we know that the matter is *sub-judice* or unless some authority informs us so, we cannot take any decision. Some authority should inform us that the matter is *sub-judice*. Otherwise, we cannot take cognizance of it.



**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, அவர் சொல்வதை மறுக்கிற உரிமை எனக்கு இல்லை என்று சொன்னால், எந்த உரிமையோடு நான் இங்கே இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னால், "அதை எனக்குத் தெரிந்த ஆதாரங்களோடு சொல்கிறேன். அவர்கள் வேறு வழியிலேயோ, அமைச்சர் அவர்களிடமோ அதற்காக பதிலைத் தேடிக்கொள்ள வேண்டும். அதைவிட்டு அவர் சொல்வது தவறு" என்று சொல்லி, மறுக்க எனக்கு உரிமையில்லை என்று சொல்வது தவறு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு எந்த அளவுக்குத் தவறுகளை எடுத்துப் பேசுவதற்கு உரிமை இருக்கின்றதோ அந்த அளவுக்கு அதை மறுப்பதற்கு உறுப்பினர் அவர்களுக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற இந்தப் பிரச்சினையைப் பொறுத்த அளவில் நம் மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் இதைப்பற்றிச் சொல்லவில்லை என்று சொன்னதனால், எனக்குப் பிரச்சினை இல்லை. அவையில் இல்லாதவர்கள்பற்றிப் பேசுவது இந்த அவையின் விதிமுறைகளுக்குப் பொருந்திவராது என்று நினைக்கிறேன். நான் எந்த ஒரு தனி நபரைப்பற்றியும் பேசவில்லை. ஒரு பதிவாளரைப்பற்றிப் பேசுகிறேன். ரிஜிஸ்தரார் என்பவர் இந்த அவையால் விவாதிக்கப்பட வேண்டியவர். அந்தப் பதவியிலே யார் இருக்கிறார் என்பதுபற்றிப் பிரச்சினையில்லை. குறிப்பாக 1977-78-லே யார் பொறுப்பிலே இருந்தார்களோ அவர் இந்த அவையினுடைய விவாதத்திற்குட்பட்டவராக ஆகிறார். இப்போது இருக்கக்கூடிய ரிஜிஸ்திரார் பல ஆண்டுக் காலமாக இருப்பவர்கள். அவர்கள் விதிப்படி செய்ய வேண்டும். அவர்கூட விதிப்படி செய்யவில்லை. கணக்கு வைக்கவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. அந்த ரிப்போர்ட்டிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"The State Government, in G.O. No. 7037, Education, dated 17th October 1975, while sanctioning the N.S.S. grant have specifically requested the University to maintain a separate account for N.S.S. Scheme. But separate account was not maintained during the year under report."

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 13

ஆகவே "பல்கலைக் கழகத்திற்கு அரசாங்க, பேரவை, மேலவை ஆகிய இரண்டு அவைகளாலும் [illegible] கொடுக்கப்படுகிறது. அவர்கள் சரியாக நிர்வகிக்கவில்லை. ஆகவே அவரை உடனே அப்புறப்படுத்தலாம். முறை தவறி இருக்கிறது. களைந்து வைக்க வேண்டும். நிதித் துறை விதிகளின்படி செயல்பட வேண்டும். இப்போது இருக்கின்ற நிலையில் கணக்கே வைக்க முடியாது, பார்க்க முடியாது" என்று பல விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் செய்தித்தாளிலே அமைச்சர் அளித்த பதிலையும் படித்தேன். இந்த பத்திரிகையிலே [illegible] பேரவையிலே இந்தக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது என்று இருந்தது. ரிஜிஸ்திரார் ரூ. 48 லட்சம் ரூபாய் என்.எஸ்.எஸ். லிருந்து செலவு செய்திருக்கிறார்கள்; அதிலே 37 லட்சம் ரூபாய் கல்லூரிகளுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது; 11 லட்சம் ரூபாய் அட்மினிஸ்ட்ரேஷன் செலவுக்கு ஒரு வருடத்திற்கு ஆகும். ஆகவே ரூ. 48 லட்சம் செலவாகி விட்டது என்று சொல்வது சரியல்ல. செலவு செய்வது என்பதல்ல பிரச்சினை. அரசாங்கத்திலிருந்து வாங்கிய பணத்தைச் செலவு செய்ய வேண்டுமென்பதல்ல பிரச்சினை. செலவு முறையாகச் செய்யப்பட்டிருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். கணக்குகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். செலவுக்கு வவுச்சர் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். லெட்ஜர்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். முறையாக அவருக்கு அவைகளை வைக்கத் தெரியாதா? அப்படியில்லை. அவரே பைனான்ஸ் ஆபீசராக இருந்தவர்தான். அவருக்கு வைக்கத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் வைக்கவில்லை? அந்த ஒரு காரணமே போதும். [illegible] என்குயரி வைக்க வேண்டும். அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆடிட் போட்டு நடத்த வேண்டும். அது ஒன்றே போதும். நான் இதை எதற்குச் சொல்கிறேன்? இந்த அரசு பல்கலைக் கழகத்தின் தன்னாட்சியிலே தலையிடக்கூடாது. அதற்கு உரிமை இல்லை என்று அதிகாரிகளை வைத்துச் செய்கிறோம். இதை இப்போது சொல்வதற்குக் காரணம் நிதித் துறையிலே தவறுகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டப் படுகிறது. அதைக் கண்காணிக்க அதிகாரிகளை அனுப்புகிறோம். அது தேவையில்லை. சக்தி வாய்ந்த அரசாக இருந்தால், இந்த இடத்திலிருந்து செயல்பட வேண்டும். ஒரு தனி நபர் அரசுக்கு, ஆளுநருக்குப் புகார் செய்திருக்கிறார். ஆளுநருக்கு சி.பி.ஐ. ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் நான் தனியாகச் சொல்வதற்காகச் செய்ய வேண்டும். மற்றவர்கள் சொன்னார்கள் என்பதற்காகக்கூடச் செய்ய வேண்டும். தம்முடைய பல்கலைக்கழகத்திற்கு இழுக்கு என்று வருமானால், கல்விக்கே ஒரு இழுக்கு வரும். அதை நீக்க வேண்டும் என்ற முறையில், அக்கவுண்ட்டன்ட்-ஜெனரல் மூலம் 'போஸ்ட் ஆடிட் என்குயரி' போடுவதற்கு மாண்புமிகு



1979 நவம்பர் 13] [திரு. ம. சங்கரலிங்கம்]

அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். உண்மையிலே இந்த ஆடிட்டிலே சம்பந்தப்பட்டவர்கள் தவறு செய்யாமலிருந்தால், புகழ் சேரும். குற்றம் இருந்தால், குற்றம் களையப்பட்ட உயர்ந்த நிலைக்கு பல்கலைக்கழகம் இழுத்துச் செல்லப்படும்.

பல்கலைக் கழகங்களிலே அதிகாரிகளை குறைவாக வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். செயலாளர் தேவை என்று அரசு கருதுமானால், இருக்கட்டும்; கல்வி இயக்குநர் தேவையில்லை. கல்வி இயக்குநர் போதுமென்றால், செயலாளர் தேவையில்லை. இரண்டிலே ஒன்றை ஆராய்ந்து தம்முடைய அரசு சிந்தித்துச் செயல்பட வேண்டும். எல்லா இயக்குநர்களும், கல்லூரி இயக்குநர், மருத்துவக் கல்லூரி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் இப்படி எல்லா இயக்குநர்களும் இருக்கிறார்கள். அப்படி எல்லோரும் இருக்கத் தேவையில்லை என்று சொல்கிறேன். நம் மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்கள், இன்னும் இரண்டு பேர்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் மக்கள் பிரதிநிதிகளைப் போடலாம் என்று சொல்லலாம். அது அல்ல பிரச்சினை. பல்கலைக் கழகத்தின் தன்னாட்சித் தன்மை காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்க வேண்டும். இவர்கள் எல்லாம் வெளியிலே இருந்து வழிகாட்ட வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிதிக் குழுவிற்கு இதற்கு முன்னால் செயலாளர் இருந்தார்கள். நிதிக்கு என்று ஒரு அதிகாரி தேவைதான். பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலே மூன்று பேர்களை நிதிக் குழு உறுப்பினர்களாக வைக்கிறார்கள். இந்த நிதிக் குழு உறுப்பினர்கள் பைனான்ஸ் செக்ரட்டரி, கல்விச் செயலாளர் இவர்களையெல்லாம் கலந்து விட்டுத்தான் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கிறார்கள். அதிலே செலவை மதிப்பீடு செய்து பட்ஜெட்டுக்கு முன்னால் சமர்ப்பிக்கின்றார்கள்.

(பிற்பகல் 6-10)

எனவே இவைகள் எல்லாம் தேவையில்லை, இயல்பாக நடக்கிற பல்கலைக் கழகம் செவ்வனேதான் நடந்துகொண்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிறேன். ஒருசில அதிகாரிகள், தவறு செய்கிறவர்கள் களையப்பட்டால், பல்கலைக் கழகம் சரிய நிலையில் செயல்பட உதவியாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு, மூன்று சட்ட முன்வடிவுகளும் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப் பட்டிருப்பதால், நான் அவைகளை ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். இதில் இன்னும் தேவையான திருத்தங்கள் வர வேண்டும். ஆனால் தாங்கள் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு, பல்கலைக் கழகத்

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 13

தன்னாட்சித் தன்மையைக் காத்து, பல்கலைக் கழகம் சிறந்த உயர்வு பெறு வதற்கு, இன்னும் தேவையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். அப்படி மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன்னால் 3, 4 மாதங்கள் கல்வித் துறையிலே ஈடுபட்டுள்ளவர்களின் கருத்துக்களைச் சொல்ல அவகாசம் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். அது தேவையானது. அந்த அவகாசத்தையும் கொடுத்து, பல்கலைக் கழக உயர்விற்கு ஏற்ற வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, இங்கே அவையின் முன்னாலே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்ட சட்ட முன்வடிவுகளின்மேல் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த கருத்துக்களை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவுகளின் மீது அவர்கள் தெரிவித்த, பேசிய கருத்துக்களை, நான் பாராட்டுகிறேன். பல கருத்துக்கள், பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவுகள்பற்றி மட்டுமல்லாது, பொதுவாக கல்வித் துறையிலே இருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

குறிப்பாக ஒன்றை நான் கூற வேண்டுமானால், தனியார் பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்பது பல்வேறு சமயங்களில் கூறப்பட்டுவரும் ஒரு கோரிக்கைதான். அது இந்த அவையிலேயும், பேரவையிலேயும் கூறி வருகின்ற ஒன்றுதான். மைனாரிட்டி வகுப்பினால் நடத்தப்படும் அந்தப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ள முடியாதென்ற நிலை இருக்கிறபோது, மெஜாரிட்டியினர் நடத்துகிற பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ளும் சூழ் நிலையை உருவாக்கினால், இந்தச் சமுதாயத்தில் மைனாரிட்டி மக்களைவிட மெஜாரிட்டி மக்களைக் கேவலமான நிலைமையில் வைக்கும் பரிதாபகரமான நிலைமையை உருவாக்கியவர்களாவோம். அப்படிப்பட்ட நிலைமையை ஏற் படுத்தக் கூடாது. அப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலைமை அல்லது மெஜாரிட்டி மக்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. ஆகவே நாம் ஒரு காரியத்தைச் செய்கின்றபோது, எல்லா மக்களுக் கும் ஒரே நீதியை வழங்கக்கூடிய விதத்திலே விதியை உருவாக்கிவிட்ட பிறகு, இந்தக் கருத்தை முன் வைத்துப் பேசினால், நாம் சமுதாயத்தை நன்மை யடையச் செய்யப் பேசியவர்களாவோம். ஆசிரியர்கள் என்ற பகுதியை



1979 நவம்பர் 13] (திரு. செ. அரங்கநாயகம்)

வைத்து, நாம் பிரச்சினைகளை ஆராய்கின்றபோது, நியாயமாகத் தெரிபவை, எல்லோரையும் வைத்து ஆராயும்போது அல்லது பேசும்போது நியாயமாக இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொரு கருத் தையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அரசு ஏற்று நடத்துகிற பள்ளிகள் எப்படி இருக்கின்றன, ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்று நடத்துகிற பள்ளிகள் எப்படி இருக்கின்றன, தனியார் பள்ளிகள் எப்படி நடக்கின்றன என்பதை நாம் பார்ப்பதைவிட மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக தனியார் பள்ளிகள் நல்ல முறையில் நடக்கின்றன என்று நினைக்கிறார்கள். ஆகவே அட்மிஷனுக்குப் போகும்போது, முதலில் தனியார் பள்ளிகளுக்குப் போகிறார்கள். பிறகு அரசுப் பள்ளிகளுக்குப் போகிற போக்கு இருக்கிறது. இதை என்றைக்காவது ஒருநாள் மாற்றி அமைக்க வேண்டும். அந்த நிலைமை வருகின்றபோது, எல்லாப் பள்ளிகளையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னால், மக்களிடத்திலே அதற்கு பெருத்த ஆதரவு இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இவைகளெல்லாம் நீண்ட காலப் பிரச்சினைகள். பள்ளிகளை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கொள்கையில் கருத்து வேற்றுமை இல்லையென்றாலும், நடைமுறையில் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் இருக்கிற சங்கத்தைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அங்கே, அழகப்பா கல்லூரியில் ஒரு பேராசிரியர் இருக்கிறார். அவர் கிண்டி பொறியியல் கல்லூரியிலுள்ள நான்-டீச்சிங் ஸ்டாஃப்-க்குத் தலைவராக இருக்கிறார். அவர் என்னை நேரிலே சந்தித்தபோது, நான் அவருக்கு அறிவுரை கூறினேன். "நீங்கள் ஆசிரியராக இருக்கிறீர்கள், அதுவும் ஒரு கல்லூரியில் இருக்கிறீர்கள், அதுவும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் ஒரு யூனிட்டில் இருக்கிறீர்கள். நீங்கள் அந்தப் பல்கலைக் கழகத்தின் இன்னொரு யூனிட்டில் இருக்கும் நான்-டீச்சிங் ஸ்டாப்-களுக்குத் தலைவராக இருப்பது நல்லதல்ல, நான் பொறுப் பேற்றுள்ள கல்வித் துறையிலே 50 சங்கங்கள் இருக்கும், பல்வேறு பிரச்சினை களிலே வந்து என்னைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரவர்கள் அவர்களுக்குள்ளேயே தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னேன். ஆனால் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில்

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 1

அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை. இதை நாம் ஆதரிக்க முற்பட்டால்
நாளைக்கு ஒரு ஆசிரியர் ரில் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக இருந்து
செயல்படலாம். ஆசிரியர்கள் ஒழுங்காக இருக்க வேண்டுமென்று விரும்புகி
நேரத்தில், தவறான சூழ்நிலைக்கு ஆதரவு தர முடியாது என்றும் சொன்னேன்
ஆசிரியர்கள் பணிக்கு வந்த பிறகு, ஓராண்டில் அவர்கள் ஆசிரியர் தன்மையில்
10 சதவிகிதம் இழக்கிறார்களென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே
பத்து ஆண்டுகளுக்குள்ளாக அவர்களை மறுபயிற்சிக்கு அனுப்பினாலொழிய,
அவர்கள் ஆசிரியர்களாக இருக்க முடியாது என்ற கருத்தையும் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். தங்கத்தை எடை போடுகின்ற தராசுத் தட்டில்,
விறகுக் கட்டையை நிறுப்பதுபோல, ஆசிரியர் பணி செய்யும் ஆசிரியர்கள்
வேறு எதோ காரியம் செய்வதால், டிரேட் யூனியன் லீடராகப் பணியாற்று
வதால் எங்களுக்கு நஷ்டம், பல்கலைக் கழகத்திற்கு நஷ்டம், அவர்களிடம்
படிக்கிற மாணவர்களுக்குப் பெருத்த நஷ்டம், எனவே இதை நாங்கள்
அனுமதிக்க முடியாதென்று அறிவுறுத்துகிறோம். இதுவரையில் மேல் நட
வடிக்கை எடுக்கவில்லை என்றாலும், எடுக்க வேண்டிய நிலைமையை அவர்கள்
உருவாக்கக்கூடாதென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.
இதை நான் அனுமதிக்கவில்லை என்பது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்
பினர்கள் இது போன்ற காரியங்களுக்கு ஆதரவு காட்டக் கூடாது. அப்படிப்
பட்டவர்களுக்கு ஆதரவு தரக்கூடாது. அப்படிப்பட்டவர்கள் அளவிற்கு
மீறிய உரிமையைப் பயன்படுத்தி, சமுதாயத்திற்குப் பயன்படாத நிலைமை
யில், பொது மக்களுடைய பணத்தைச் சம்பளமாகப் பெற்றுக்கொண்டிருக்கும்
நிலைமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கக்கூடாதென்பதைக்
குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. நல்லசிவன்:** துணைத் தலைவரவர்களே, ஆசிரியராக இருக்கிற
ஒருவர் கல்லூரியிலோ அல்லது பள்ளிக்கூடத்திலோ இருக்கக்கூடிய நான்-
டீச்சிங் ஸ்டாஃப்-களுக்கு தலைவராக இருந்தால் அதில் என்ன தவறு?
நிர்வாகத்திலே பிரச்சினைகள் இருந்தால், ஒரு சங்கம் வைத்துக்கொள்வதில்
என்ன பெரிய தவறு நடந்துவிடும் திவோகமே பிரச்சினைகளைத் தீர்த்து
விட்டால், சங்கம் வைத்துக்கொள்ள அவசியமிராது. அப்படிச் செய்யாமல்,
தொழிற் சங்கத்தில் இருக்கிறவர்களை எல்லாம் விறகு என்றும், ஆசிரியர்
களை தங்கம் என்றும் சொன்னால் என்ன பொருள்? அப்படியென்றால் ஒரு
நாட்டிலே டிரேட் யூனியன்களே அவசியமில்லையா? ஏன் அதற்கான சட்டங்
களை வைத்திருக்கிறார்கள்? எனவே அமைச்சரவர்கள் பேசியது இகழ்ச்சி



1979 நவம்பர் 13] (திரு. ஆ. நல்லசிவன்)

யாகவுள்ளது. தொழிற்சங்கவாதிகள் சமுதாயத்திலே மதிக்கப்பட
வேண்டாதவர்கள் என்பதுபோல், அவர்கள் பேசியது வருத்தத்திற்குரியது
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவரவர்களே,
தங்கத்தைவிட விறகு அதிகமாகப் பயன்படுகின்றதென்பதை அறிந்திருக்
கிறோம். நான் சொல்வது, பேராசிரியராக இருந்து, ஒரு சமுதாயத்திற்கு
உயர்ந்த அறிவைத் தர வேண்டிய ஒருவர், நானும் நீங்களும் செய்கிற பணி
யில் இறங்கக் கூடாது என்பதுதானே தவிர, அந்தப் பணிக்கு ஆசிரியர்கள்
போகக்கூடாது என்பதல்ல.

அதுமட்டுமல்ல, இவர் இருப்பது அழகப்பா கல்லூரி. அங்கே இருக்கிற
நான்-டீச்சிங் ஸ்டாஃப் ஒருவரைத் தலைவராக வைத்திருக்கிறார்கள். இவர்
கிண்டி இன்ஜினிரிங் கல்லூரி நான்-டீச்சிங் ஸ்டாஃப்-க்கு நான்தான் தலைவன்,
அப்படித்தான் இருப்பேன் என்று சொல்வது சரியாக இல்லை. இந்த
நிலைமைகள் இருந்தால், என்னால்; கல்வித் துறையால் துறையை நிர்வகிக்க
முடியாது. பல ஆசிரியர்கள் பல சங்கங்களுக்குத் தலைவர்களாகப் போனால்,
மாணவர்களுக்குப் படிப்பை ஒழுங்காகத் தர முடியாது, அப்படிச் செல்கிற
ஆசிரியர்களால் கல்விப் பணி ஆற்ற முடியாது. ஆசிரியர் பணி வேறு, மற்ற
பணிகள் வேறு. ஆசிரியர் பணி என்பது, மாணவர்களுக்கு அறிவையும்,
ஆற்றலையும் ஒழுங்காகத் தர வேண்டிய ஒன்று. அந்தச் சூழலிலே அவர்கள்
இருக்க வேண்டும். அந்த சூழலை விட்டுவிட்டு, அவர்கள் வேறு சூழலுக்குப்
போனால், அதனால் நமக்குத்தான் நஷ்டம். சங்கம் வைக்கின்ற உரிமையை
இன்றைக்கும் தருகிறோம். கல்வித் துறையில் எத்தனையோ சங்கங்கள் இருக்
கின்றன. யார் இந்தச் சங்கத்தை வேண்டாமென்று சொன்னார்கள்? கல்வித்
துறையிலே இருப்பதுபோல வேறு எந்தத் துறையிலும் சங்கங்கள் இல்லை.
அவ்வளவு சங்கங்களையும் அனுமதித்திருக்கிறோம். சிரமத்தைப் பாராமல்
அவர்களுடன் பேசுகிறோம். ஒரு பேராசிரியர் பேராசிரியராக இருக்க
வேண்டும். இன்னும் சொல்லப் போனால், பல்கலைக் கழகத்தைப்பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னபோது,
கண்ணாடிப் பங்களா போல இருந்து கொண்டிருக்கிறார்களென்று சொன்னார்
கள். அந்தப் பேச்சுக்கள் எப்படி வருகின்றன? ஒரு பல்கலைக் கழகம் ஒழுங்
காக நடைபெறவில்லை. அவர்கள் அறிவின் எல்லையில் இருக்கிறார்கள்.
சாதாரண கல்லூரி, சாதாரண பள்ளிக்கூடமல்ல அது. பல்கலைக் கழகத்தில்
இருக்கிறவர்கள் அறிவின் எல்லையில் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள
பல்கலைக் கழகமானாலும் சோவியத் யூனியனில் உள்ள பல்கலைக்

மானாலும், இன்னொருவர் கண்டுபிடித்ததை நாங்கள் பார்த்துக்கொண்டிருப்
போம், அதைப் பின்பற்றுவோமென்றால், அந்த பல்கலைக் கழகமல்ல, வெறும்
கல்லூரிதான்.

(பிற்பகல் 6-20)

ஆகவே பிரிட்டனிலேயோ, வேறு எந்த ஒரு நாட்டிலேயோ ஒரு
பல்கலைக் கழகம் எப்படி இயங்குகின்றதோ அதுபோல் இந்த நாட்டிலேயும்
உள்ள பல்கலைக் கழகங்கள் இயங்க வேண்டுமென்று எண்ணுகின்ற உரிமை
ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. அப்படித்தான் நம்முடைய பல்கலைக்
கழகங்களும் இயங்க வேண்டுமென்று நாங்களும் எதிர்பார்க்கிறோம். அதற்
காகத்தான் ஆசிரியர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறோம்
என்பதை மறவாமல் பணியாற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.
அவர்கள் ஒழுங்காக மாணவர்களுக்குப் பாடங்களைச் சொல்லித் தருவதில்
தான் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். உறுப்பினர்கள் யாரும் த[illegible]
செய்து அதற்கு மாறாக நடக்கின்ற ஆசிரியர்களுக்கு ஆதரவு தரக்கூடாது.
சங்கம் அமைக்க உரிமை தந்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால்,
கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்கள்தான் அதிகமாக அந்த உரிமையை
இன்றையதினம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று பொதுமக்கள்
பேசுகிறார்கள். அந்த முறையில் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள்
அறிவுரை கூற வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

பொதுவாக பல்கலைக் கழகச் சட்டத்திற்கு ஒவ்வொருகாரும் அவையில்
திருத்தங்களைக் கொண்டு வருவது பற்றியும் ஒவ்வொரு பல்கலைக் கழகத்
திற்கும் வெவ்வேறு மாதிரியான சட்டங்களை நாம் வைத்துக்கொண்டிருப்பது
பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள்.
இன்னும் சிலர் வேறு சில திருத்தங்களையும் இதுமாதிரி கொண்டு வந்தால்
நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். அதுமாத்திரமல்லாமல் எதாவது
சட்டங்களைக் கொண்டுவரும்போது, செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, நல்ல
பல்கலைக் கழகச்சட்டமாக உருவாக்கி, ஒரு பல்கலைக் கழகத்தில் அதைச்
செயல்படுத்திப் பார்த்த பிறகு, அந்த அனுபவத்தின் அடிப்படையில் வேறு
பல்கலைக் கழகங்களுக்கும் அதே மாதிரி கொண்டுவர வேண்டுமென்றும்
இன்னும் இதுமாதிரி பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அனைத்தும்
நல்ல கருத்துக்கள். எதிர்காலத்தில் நாங்கள் முடிவுகள் எடுக்கும்போது,
[illegible]களையெல்லாம் கவனத்தில் கொள்வோம்.





பொதுவாக அரசினுடைய இந்தச் சட்டத் திருத்தங்களை ஆதரித்த மாண்பு
மிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இப்பொழுது ஏ.சி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, பேரறிஞர், அண்ணா தொழில்
நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்திருக்கிறது. அங்கு இருக்கின்ற
பேராசிரியர்கள் வாங்குகின்ற சம்பளத்திற்கும் கிண்டி பொறியியல் கல்லூரியில்
இருக்கின்ற பேராசிரியர்கள் வாங்குகின்ற சம்பளத்திற்கும் வேறுபாடு இருக்
கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்த வேறுபாடு
களைக் களைவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்
கிறோம்.

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்டத்தைத்
திருத்துவதற்கான சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில், இப்பொழுது
அதிலே ஏற்பட்டிருக்கின்ற சங்கடங்களை யெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்
கள் எடுத்துச்சொன்னார்கள். நடுவர் மன்றத்திற்குப் போனபோது இருந்த
உரிமை உயர்நீதிமன்றத்திற்குப் போய் வந்த பின் இல்லாமல் போய்விட்டது
என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு நடவடிக்கை
எடுக்கப்படும்.

எம். எல். ஏ., எம். எல். சி.க்களுடைய பிரதிநிதிகள், பேராசிரியர்களுடைய
பிரதிநிதிகள் மாணவர்களுடைய பிரதிநிதிகள் பல்கலைக் கழக அமைப்பு
களிலே இடம் பெறுவதற்கான முயற்சிகளை அரசு செய்ய வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தையும்
உதாசீனப்படுத்தவில்லை.

கல்லூரிகளை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஒரு டைரக்டரேட்டாக ஆக
வைத்து அறிவுத் துறையில் தலைமை தாங்குகின்ற ஒரு கூடாரமாக, மைய
மாக அதை ஆக்கி செயல்படுத்த வேண்டும் என்பது, அரசின் எண்ணம்.
சிண்டிகேட்டில் மெம்பர்களாக இப்படிப்பட்டவர்கள்தான் வரவேண்டுமென்று
பரிசீலித்து அப்படிப்பட்டவர்களுக்கு அந்த இடங்களைத் தருவோம்.

அறிவியலில் நம்முடைய நாட்டிலுள்ள மாணவர்கள் இன்னும் முன்னேற
வில்லை என்று நான் கூறும்போது, இங்கேயும் பல்கலைக் கழக அமைப்புகளில்
இடம் பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தால், அதை
குற்றச்சாட்டாக, தவறாக தயவுசெய்து கருதக் கூடாது. வெளிநாடுகளுக்கு
நான் சென்று பார்த்தபோது, அங்குள்ள பல்கலைக் கழகத்தில் உள்ளவர்கள்

(திரு. செ. அரங்கநாயகம்) [1979 நவம்பர் 13

எல்லாம் சமுதாய வளர்ச்சிக்குத் தொண்டு செய்துகொண்டிருக்கிறார்கள், சமுதாயத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள், சமுதாயத்திற்காக வாதாடிக் கொண்டிருக்கிறார்கள், சமுதாயத்திற்காக நல்ல முடிவுகளைச் சொல்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பார்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் 2/3 பேர் தான் அங்குள்ள பண்ட்-ல் இருந்து சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். மீதி 1/3 பேர் வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆராயும்போது, அவற்றின் மூலம் வருகின்ற நிதி ஆதாரங்களிலிருந்து சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் கல்வியறிவில் அக்கறை காட்டுகிறார்கள். நம்முடைய பல்கலைக் கழகங்களிலும் அதுபோல் வரவேண்டும். அத்தகைய ஒரு நல்ல சூழ்நிலை நம்முடைய நாட்டிலும் வர வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டத் திருத்தங்களை ஆதரித்து நல்ல கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்து சட்டத் திருத்தங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. க. அறிவழகன் :** அழகப்ப செட்டியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் நீண்ட காலமாக விரிவுரையாளர்களாகவும் களாகவும் தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கிண்டி பொறியியல் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் 4 அல்லது 5 ஆண்டுகளுக்குள் துணைப் பேராசிரியர் பதவியிலிருந்து பேராசிரியர் பதவிக்கு மாறிவிடுகிறார்கள். ஆகவே எல்லோரையும் ஒரே நிலையில் வைத்துப் பார்க்காமல், இதற்கு முன்னால் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியத்தையும் கொடுக்கத்தக்க விதத்தில் கொடுத்து பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஆசிரியரல்லாத ஊழியர்களும் அங்கேயே ஆசிரியர்களோடு பணியாற்றுகிறார்கள் என்ற முறையில் அவர்களுடைய பிரச்சினையையும் உடனடியாகத் தீர்க்க வேண்டும். ஆசிரியரல்லாதவர்களுடைய தலைவராக பேராசிரியர் இருக்கிறார் என்கிற பிரச்சினையை பின்னால் தீர்த்துக்கொள்ளலாம். ஆகவே பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஆசிரியரல்லாதவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கவும் அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் "---ர்க்கிப்பாரா?" என்று கேளுங்கள். (சிரிப்பு)



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேராசிரியரைத் தலைவராகக் கொண்டு சங்கத்தை வைத்திருப்பதால், பல்கலைக் கழகத்திலுள்ள ஆசிரியர் அல்லாதவர்களுடைய பிரச்சினைகளை கவனிக்காமல் இல்லை. கவனத்தில் கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

என்று முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 69/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

**(9) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979).**

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவைமுன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1973) நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

@ 947-948 ஆம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(10) தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979).**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".
என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3.

THIRU C. R. LAKSHMIKANDHAN: Sir, I move the following amendment :—

In clause 3, item (ii) (1), after the word 'Education' insert the words 'and the Director of School Education';

@ 948-919 ஆம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU P. R. THOMAS : I second the amendment.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சற்று வேறுபட்ட கருத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதனால் நான் சுருக்கமாக என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்லி அமர்கிறேன். பள்ளிக் கல்விக்கும், பல்கலைக் கழகக் கல்விக்கும் சேர்த்து பொதுவாக இப்பொழுது கல்வித் துறை அரசுச் செயலர் பல்கலைக் கழகத்திலுள்ள சிண்டிகேட்டில் இடம் பெற்றிருக்கிறார்.

(பிற்பகல் 6-30)

இதற்கு முன்பு கல்லூரிக் கல்வி இயக்குநர், டைரக்டர் ஆஃப் ஹையர் செகண்டரி எஜுகேஷன் அந்த சிண்டிகேட்டிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால், பள்ளிக் கல்விக்கும், பல்கலைக் கழகக் கல்விக்கும் நெருங்கிய ஒரு 'கோஆர்டிநேஷன்' இருப்பதால், இவற்றிலே ஒரு இணைப்பை ஏற்படுத்துவதற்கு எந்த வழிமுறையும் இல்லை. அது மட்டுமல்ல, அண்மையிலே மேல்நிலைக் கல்வியை நாம் பள்ளிக் கூடங்களிலே வைத்தோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பலமுறை பல கூட்டங்களிலேயும், சட்டமன்ற மேலவையிலேயும், பேரவையிலேயும் சொல்வதைப்போல கல்லூரிக் கல்வியினுடைய மிக முக்கியமான ஒரு பகுதி இப்போது பள்ளியில் வந்துவிட்டது. பட்டப்படிப்பிலே முதலாண்டு படிக்கக் கூடிய பாடத்திட்டங்கள் எல்லாம் இப்போது பள்ளிக்கு வந்துவிட்டன. அவைகள் ஸ்கூல் எஜுகேஷனுடைய ஒரு பகுதியாக இப்போது இருக்கிறது. ஆனால் பள்ளிக் கல்வி, அதாவது ஹையர் செகண்டரி கல்வி, செகண்டரி கல்வி இந்த இரண்டு பிரிவுகளுக்கும் சேர்த்து இப்போது ஒரே ஒரு இயக்குநர் இருக்கிறார். அந்த இயக்குநர் பல்கலைக் கழக சிண்டிக் கேட்டிலே இடம் பெறாததால், பள்ளிக் கல்வித் திட்டத்தைப்பற்றியும், கல்லூரிக் கல்விக்கும், பள்ளிக் கல்விக்கும் இருக்கவேண்டிய இணைப்பைப்பற்றியும் எடுத்துச் சொல்லும் ஒரு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. டைரக்டர் ஆஃப் ஹையர் எஜுகேஷன் இருக்கிறாரே என்று சொல்லலாம். அவர் கல்லூரிக் கல்வியைப் பற்றி எடுத்துச் சொல்வாரே தவிர, பள்ளிக் கல்வியைப்பற்றி எடுத்துச் சொல்ல முடியாது. பள்ளி மாணவர்களுடைய தேவைகள், அவர்களுடைய மனப்பான்மைக்கேற்ப பல்கலைக் கழகங்களிலே கொண்டு வரவேண்டிய பாடத் திட்டங்கள், வகுப்புகள், பல்வேறு புதிய கோர்ஸுகள் இவைகளைப்பற்றியெல்லாம் பள்ளிக் கல்வி இயக்குநர் சிண்டிகேட்டிலே இடம் பெற்றால்தான், அவருடைய அனுபவத்தை வைத்துச் சொல்ல வாய்ப்பு ஏற்படும். இந்த முறையிலே



பல்கலைக் கழகங்கள் அனைத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைப் பல்கலைக்கழகத்திலும் அவைகளின் ஆட்சி மன்றக் குழுவிலே பள்ளிக் கல்வி இயக்குநரும் இடம் பெற வழி வகுக்க வேண்டும் என்பதற்கான இந்தத் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிறாரா? திரும்பப் பெறுகிறாரா ?

Members are requested to keep silent.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல கருத்துக்களையும் அரசு மதிப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனது பதிலிலே சொன்னதுபோன்று, இந்தத் திருத்தத்தையும் அரசு கருதும் என்று கருதி, திருத்தத்தை வற்புறுத்தவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

திருத்தம், அவை அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 5 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 6

THIRU C. R. LAKSHMIKANDHAN : Sir, I move the following amendment :

"In clause 6, item (ii) (1) after the word 'Education' insert the words 'and the Director of School Education'."

The amendment was duly seconded.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : திருத்தத்தை நான் வற்புறுத்த
ல.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 6, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 7, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

[1979 நவம்பர் 13

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக்-கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) நிறைவேற்றப்பட வேண்டும் ".

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை :—

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) நிறைவேற்றப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(11) தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979).**

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** துணைத் தலைவர் அவர்களே,

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் ".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

" சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

**திரு. க. அறிவழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, . . .

@ 950-952 ஆம் பக்கங்களில் இணைப்பு — ச்சிடப்பட்டுள்ளன.



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** இரண்டு சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன. இரண்டின் மீதும் மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டால், இறுதியாக நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கும்.

**திரு. க. அறிவழகன்:** துணைத் தலைவர் அவர்களே, ஓரிரண்டு கருத்துக்களை சந்தேகங்களாகக் கேட்கும் முறையில் பேச முன்வருகிறேன். மனித சமுதாயத்தையும் உலகத்தையும் காக்கின்ற ஒரு பெரும முயற்சி என்ற முறையில், தமிழ் நாட்டிலே இருக்கும் மலைகளிலே இருக்கின்ற காடுகளைக் காப்பாற்றுவதற்கும், தனியாருடைய காடுகளிலே இருக்கும் மரங்களைப் பாதுகாக்கவும் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப் பட்டிருக்கிறது. நம்முடைய மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருக்கின்ற சில காடுகள் உலகம் தோன்றிய காலம் முதல் எப்போது காடுகள் உருவாயிற்றோ அப்போதே உருவான காடுகள். அதற்குப் பக்கத்திலே இருக்கிற அமைதிக் காடுகள் என்று சொல்லப்படுகின்ற 'சைலன்ட் வேலியில்' இருக்கும் காடுகளைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்தியா முழுவதும் இப்போது காடுகளுடைய பலனைத் தெரிந்தவர்கள் பெரும் முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆதரவு தரும் வகையில் இந்தச் சட்ட முன்வடிவை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருப்பதற்கு நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். காடுகளைக் காப்பாற்றும் குழு என்ற முறையில் கலெக்டர், அதற்குப் பிறகு டிஸ்ட்ரிக்ட் ஃபாரஸ்ட் ஆபீசர், தாசில்தார், எக்ஸிக்யூட்டிவ் என்ஜினியர், பெர்சனல் அசிஸ்டென்ட் டு தி கலெக்டர், இப்படி ஐந்து பேரைப் போட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே வனங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று, விரும்புகின்ற, அதிலே மிகுந்த அக்கறையுள்ள பேராசிரியர்கள், பேராசிரியர்கள் எல்லாப் பகுதிகளிலேயும் இருக்கிறார்கள். அவர்கள் அதற்காகப் பெரும் போராட்டத்தையே இன்றைய தினம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் இணைப்பதன் மூலம் இந்தக் காடுகளைப் பாதுகாக்கின்ற பெரும் முயற்சிக்கு பேராதரவு பெற முடியும். இந்த 5 பேரும் அதிகாரிகளாக இருப்பதால், காடுகளிலே இருக்கும் மரங்களில் சில நோயுற்றவை என்று வெட்டும்போது தடுக்க முடியாத சூழ்நிலையும், ஒரு மரத்தை வெட்டப்போய் அதன் பக்கத்திலே இருக்கிற 10 மரங்களை வெட்டும் சூழ்நிலையும், அதனால் வனத்தினுடைய வளமும், பொலிவும், பெரிதும் பாதிக்கப்படும் நிலையும் இருக்கின்றன. ஆகவே, இது அதிகாரம் உள்ளவர்களுடைய குழுவாக இல்லாமல், அதிகாரப் பற்றற்றவர்களுடைய குழுவாக இருந்து, அதிகாரப்

(திரு. க. அறிவழகன்)

[1979 நவம்பர் 13

பற்றற்றவர்கள் மெஜாரிட்டியாக அங்கே அமர்ந்து முடிவுகளை எடுத்தால்தான் அந்த முடிவுகள் நல்ல முடிவுகளாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருகிறார்களோ அந்த நோக்கம் நிறை வேறும் வாய்ப்பு, அப்போதுதான் ஏற்படும். அந்த அடிப்படையிலே எதிர் காலத்திலே சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படும்போது, அதிகாரப் பற்றற்றவர்களையும், வனத் துறையிலே மிகுந்த அக்கறையுள்ளவர்களையும் இணைத்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காடுகளிலே இருக்கும் மரங்களை வெட்டக்கூடாது என்றால், அங்கேயே வைத்து மரங்களை எரித்து வெளியே கொண்டு போகிறார்கள். சில மரங்களை வெட்டி எடுக்கிறோம் என்று சொல்லி, பல மரங்களைக் கொண்டு போகிறார்கள். அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு, கோடிக்கணக்கான ரூபாய்க்கு அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பதைவிட மிக முக்கியமான, மனித சமுதாயத்திற்குத் தேவையான, உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆக்ஸிஜனை காற்று மண்டலத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அகற்றப்படுகிறது. இப்படியே போனால் 100 ஆண்டுக் காலத்திற்குள் மனிதர்கள் சுவாசிப்பதற்கு ஏற்ற ஆக்ஸிஜன் கிடைக்காது என்று விஞ்ஞான மன்றங்கள் உலகத்திலே இருக்கின்ற அனைத்து அரசுகளுக்கும் எச்சரிக்கை செய்திருக்கின்றன. ஆகவே, இந்தக் காடுகளைப் பாதுகாக்கின்ற முயற்சிகளை இப்பொழுது எடுத் திருப்பதற்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கான பல செயல் முறைகளை நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு, அந்தக் குழுவிலே நம்முடைய சட்டமன்ற பேரவையினுடைய உறுப்பினர்களையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது மேற்குத் தொடர்ச்சி மலையிலே யூகலிப்டஸ் மரங்களை அதிகமாக வைக்கிறார்கள். இதனால் ஏதோ பெரிய செல்வம் கிடைக்கப்போகிறது என்று நினைத்துக்கொண்டிருக் கிறார்கள். இதுபற்றி விஞ்ஞான அறிஞர்கள், "நீங்கள் ஆஸ்திரேலியா நாட்டி லிருந்து யூகலிப்டஸ் மரங்களை இங்கே கொண்டு வந்திருக்கிறீர்கள், இனி மேல் அங்கிருந்து 'கங்காருக்களை'க் கொண்டு வரவேண்டியதுதான்" என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற உயிரினங்கள், மிருகங்கள் அங்கே வளராது. ஆகவே, நீங்கள் யூகலிப்டஸ் மரங்களைக் கூட வளர்ப்பது தவறு. இந்தச் சட்டத்திற்கான விளக்கத்திலே கூட சொல்லியிருக்கிறார்கள். எந்த மரங்கள் வெட்டப்படுகின்றனவோ அந்த மரங்களுடைய ஸ்பீசிஸ் தான் அந்த இடங்களிலே மீண்டும் வளர்க்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக் கிறார்கள். அது பாராட்டத் தக்கது. எந்த மரங்கள் எங்கே வெட்டப்



1979 நவம்பர் 13] (திரு. க. அறிவழகன்)

பட்டாலும், அதே இனத்தைச் சேர்ந்த மரங்கள் மீண்டும் அங்கே வைக்கப் பட்டு வளர்க்கப்பட வேண்டும். இனி, தமிழ் நாடு முழுவதும்—அது சாலை யோரமாக இருந்தாலும் சரி, காடுகளானாலும் சரி, தனியார் காடுகளானாலும் சரி, எந்த இடத்திலும், எந்த மரத்தையும் யாரும் வெட்ட முடியாத சூழ் நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

(பிற்பகல் 6-40)

* THIRU A. R. DAMODARAN : Mr. Deputy Chairman, Sir, I wish to offer my remarks on the Tamil Nadu Hill Stations (Preservation of Trees) Amendment Bill. The other Bill pertains to a committee but that is also covered by this Bill.

Sir, the Hill Stations (Preservation of Trees) Bill was passed in the year 1955 and those of us who have some knowledge of what happens in hill stations realise that there is a great deal of difference between the Bill that is now being introduced by the Hon. Minister and what prevailed in the past. I shall first refer to the committee which the Hon. Minister proposes to establish for giving permission to cut trees either in forests or in private land. The object of the Government is very good. All of us want our trees and forests to be protected. The hon. Member Thiru Arivazhagan was so eloquent about the need for preserving the ecological balance of nature and for preserving our wildlife, trees, etc. So, all of us are agreed as far as this objective is concerned. But I do not know why there is a change in the formation of this Committee. Formerly, the Collector was given the power. Obviously, something has gone wrong somewhere and some Collector has given some permission. That is not revealed but that is what is evident. Some Collector has obviously not handled the situation properly and forests have been denuded in some place. It is all right to appoint a committee with the District Forest Officer and perhaps even the Agricultural Engineer. But there is a question which I would like to point out as I have done while speaking on the last Bill. There is no purpose in constituting a committee with the Personal Assistant to the Collector and the Tahsildar as members of a 5-man committee. Subordinates of the Collector being called members of a committee has no meaning whatsoever. You can have the Personal Assistant to the Collector and the Tahsildar as invitees. They are bound to be there when the Collector is there. I have yet to see a Tahsildar who does not dance attendance when the Collector is there on a committee. I see no purpose at all in having subordinates of the Collector included in a committee in which the Collector and officers like the District

Forest Officer and the Agricultural Engineer find place. Of course, there may be reasons for this. I would like the Hon. Minister to clarify this point in so far as the Committee is concerned.

The other point is about the prohibition of cutting of trees in hill stations. I am an unfortunate fellow who has a bungalow in a hill station, Kodaikanal. In 1977, there were four wattle-bark trees which grew on the side of my bungalow.

(மாற்றுத்தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமை)

When you construct a bungalow in a hill station, you find a number of trees growing on the sides and there are also some huge 100 feet Eucalyptus trees. Somet'mes, you find that there is a danager to the house and so, you want to cut a tree. According to the law, 'no person shall, without the previous permission in writing of the Collector, cut, uproot or burn or cause to be cut, uprooted or burnt any tree, provided that such permission shall not be refused if the tree constitutes a danger to life or property or the tree is dead, diseased or windfallen'. Now, the Hon. Minister wants me to make an application to a committee of five persons to cut a tree which may fall on my house and kill me at any time in the day or in the night. Sir, I appreciate the motive of the Hon. Minister. He wants to preserve forests. But let us also realise the danger. Thinking of issuing a new permit or a new licence to cut trees in my own compound which might endanger life or property is in no way going to advance the object which the Hon. Minister has in view. When we come into Government, Sir, and when we assume positions of authority, we are angry with things that are done by society and by people. We want to bring a law and we want to control these actions. I would like to g've my personal experience to the Hon. Minister. I am sure he would have faced it also when he was not a Minister. I was referring to the wattlebark tree which I had to cut. I had to apply for permission and to pay a deposit of Rs. 10 which was the amount stipulated in the old Act and I had also to pay an unofficial deposit of Rs. 10 to the Revenue Inspector for him to come and 'nspect because I was really worried about it. So, corruption comes in along with the licence procedure. I would request the Hon. Minister to realise that while he may take action for preventing huge forests from being denuded, the difficulty of the individual in obtain'ng a licence has also to be borne in mind. In fact, forests have been denuded in Kodaikanal itself, particularly



in Lake area. There was an 18 acre plot belonging to a doctor in Madurai and in the said plot, there were huge eucalytus and fire trees and it has been absolutely denuded; and they have put some other trees. This has happened over the past 10 years, even after the Act was passed. This plot is near Upper Lake Road just below Chistlewood which I know very well. But I would like to mention that I will not go and appear before any official or a committee asking for a licence to cut a tree which is a danger to my life or to my property. The house is my castle and I wish to stay there as a king and I do not want any interference from any Committee, Revenue Inspector, Tahsildar, P.A to the Collector, Forest Officer or the Collector coming and telling me "You should not cut this tree". Are the Government prepared to pay compensation if that tree falls in my absence on my house property worth about Rs. 50,000. What is the compensation the Government will pay, if the tree falls even while I am sleeping in the bed-room of that house and takes away my life? There is an object and the object is good but in trying to achieve the object, such an extreme measure of giving two months' time to the Committee to give permission is, in my opinion, unwarranted.

There is another difficulty, Sir. Under the old Act, for wind-fallen trees, perm'ssion could not be refused. I am only giving my own personal experience and I think this will be the experience of other house-owners also. In 1977 cyclone, 14 eucalyptus trees fell down in my compound. I have not yet cut these trees because I have to cut the trees only when I go to the hill station during the three weeks in summer. I cou'd not go in 1979 and the trees remain uncut. According to the new Bill, I will have to apply for permission to the Collector. I will apply and wait and when he gives permission, I will go to the hill station, make them into logs and use them as firewood. What I cannot understand is the increase in the deposit also in respect of wind-fallen trees to Rs. 100 per tree. Is it not atrocious? I can understand your prescribing such deposits in respect of certain trees in forests but to ask me to pay Rs. 100 per tree as deposit is not correct. In other words, the Government are encouraging unnecessary permit-issuing powers even in small matters. The Government may introduce this for the large forests. By all means, have it for large forests and the District Forest Officer should also be on the Committee. Till to-day the poor man

is not known to many of us. Probably when he serves as a member of the Committee, we will seek his acquaintance in getting permission to cut trees. We do not want these powers to the Committee to give permission when we want to cut trees. As one interested in growing trees, I will certainly grow more trees. Kodaikanal is a place where the entire beauty of the place will be lost if you do not grow trees. I would request the Hon. Minister to remove this clause for dead, wind-fallen and diseased trees which have fallen on the ground. I have no desire to cut the trees in my compound unless it is dangerous and absolutely necessary. This unwarranted interference in the liberty of individuals to manage their own household affairs is not proper. I would plead with the Hon. Minister at least to consider whether some sort of exemption could not be given for private property as this would be an unnecessary nuisance in hill stations. This is all that I wanted to say.

(பிற்பகல் 6-50)

* **திரு. ஆ. நல்லசிவன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, அரசின் இந்தச்
சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன். அரசிடமிருந்து ஒரு விளக்கத்தைக்
கேட்க விரும்புகிறேன். காடுகளைப் பொறுத்த மட்டில், அது எவ்வளவு
முக்கியம் வாய்ந்தவை என்பதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசியவர்கள்
எடுத்துச் சொன்னார்கள். பேராசிரியர் திரு. அறிவழகன் கூட யூகலிப்டஸ்
பற்றிக் குறிப்பிட்டார்கள். நாட்டிலே மழை பெய்வதற்கும், எரிபொருளாகப்
பயன்படுத்துவதற்கும் காடுகள் முக்கியம் என்று குறிப்பிட்டார்கள். இந்த
அளவுக்கு முக்கியமாக இருக்கக்கூடிய காடுகளை தனியாருடைய கையில் விட்டு
வைப்பதற்குரிய காரணம் என்னவென்று அரசு சொல்லுகிறது என்று எனக்குப்
புரியவில்லை. காடுகளில் உள்ள மரங்களை வெட்டுவதைத் தடை செய்வதற்காக
சட்ட முன்வடிவு கொண்டு வந்ததற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.
ஆனால் சமுதாயத்தினுடைய வாழ்க்கைக்கு அவசியமான காடுகளை தனியார்
கையில் விட்டு வைக்க வேண்டிய காரணம் என்ன? இதற்கு முன்னால் தேசிய
மயமாக்குவதைப்பற்றிய பிரச்சினை வந்தபோது, அமைச்சர்கள் பதிலைச்
சொல்லியிருக்கிறார்கள். கல்வி நிறுவனங்களை என் தேசியமயமாக்கக்
கூடாது என்று கேட்டபோது, "மைனாரிட்டி கம்யூனிட்டியினுடைய உரிமை
பறிபோய்விடும்" என்று சொன்னார்கள். சமுதாய வளர்ச்சிக்கும், செழிப்
புக்கும் காரணமாக உள்ள காடுகளை, மழை பெய்வதற்குக் காரணமாக உள்ள
காடுகளை, நாட்டினுடைய தேவைக்கு அவசியம் என்று கருதுகிற காடுகளைப்
பூராவையும் தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்கிறேன். மலைவாசஸ்
தலங்களில் நிலங்களை தனியார் கையில் ஏன் விட்டு வைக்க வேண்டும்





பங்களா கட்டிகுடியிருக்கட்டும். பங்களாவின் மீது மரம் விழாமலிருக்க
மரத்தை வெட்ட அனுமதி தேவையில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள்
சொல்லுவது 'எக்ஸ்ட்ரீம் கேஸ்'. அதற்காக சொந்த நிலங்களில் உள்ள
காடுகளை அழிக்க அனுமதி கொடுப்பதா? எக்சப்ஷனல் கேசை வைத்துக்
கொண்டு எல்லாக் கேசையும் 'ஆர்கியூ' பண்ணக் கூடாது.

**திரு. ஏ. ஆர். தாமோதரன்** : மாற்றுத் தலைவர் அவர்களே, நான்
சொன்னது 'எக்ஸ்ட்ரீம் கேஸ்' அல்ல. கோடைக்கானலில் பத்தாயிரம் வீடு
கள் இருக்கின்றன. ஹில் ஸ்டேஷனில் என்னுடைய வீடு மட்டும் இல்லை,
அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள், மற்றவர்களும் இருக்கிறார்கள். எல்லா வீடு
களையும் அரசு எடுத்துக்கொண்டு, யாருக்குமே பிரைவேட் ஓனர்ஷிப் இருக்கக்
கூடாது என்று கருதுகிறாரா என்று தெரிய வேண்டும்.

**திரு. ஆ. நல்லசிவன்** ; அங்கே தனியார் வீடுகள் இருக்கக்கூடாது என்று
சொல்லவில்லை. ஃபாரஸ்ட் எல்லைக்குள் வரக்கூடிய இடங்களில் தனியார்
சொத்துக்கள் இருப்பதையும், அதில் மரங்களை வளர்ப்பதையும் வெட்டுவதை
யும் தடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன்.
தனியார் காடுகளையும் தேசியமயமாக்க வேண்டும். ஹில் ஸ்டேஷனில் எப்படி
வீடு கட்டினார்கள்? அவர்களுக்கு அங்கே இடம் இருந்ததால்தானே வீடு
கட்டினார்கள். காடுகளைப் பாதுகாப்பது அவசியம் என்று சொல்லும்போது,
தனியார் காடுகள் இருந்தால், அதையும் சேர்த்து தேசியமயமாக்க வேண்டும்.
அரசில் இதை இப்போது ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்று எனக்குத்
தெரியும். அப்படிச் செய்வதை விட்டுவிட்டு, காடுகளை மாத்திரம் பாதுகாக்
கிறோம் என்றால், தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது மாதிரி இருக்கிறது.
காடுகளை தேசியமயமாக்குவதிலே என்ன ஆட்சேபணை இருக்கிறதென்று
எனக்குப் புரியவில்லை. மரங்களை வெட்டுவதை மட்டும் தடை செய்ய சட்டம்
கொண்டு வருகிறோம் என்றால், அதை அதிகாரியிலிருந்து எல்லோரும்
துஷ்பிரயோகம் செய்கிறார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம்
நிலத்தை எடுக்கலாம் என்று சொல்லும்போது, சமுதாயத்திற்கு உதவக்கூடிய
தனியார் காடுகளை மட்டும் ஏன் விட்டு வைக்கிறார்கள் என்பதற்குச் சரியான
சமாதானம் இல்லை. தனியார் அந்த அளவுக்கு நெருக்குகிறார்கள் என்று
சொன்னால், ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதை அமைச்சர் அவர்கள்
சொல்ல முடியாது. படிப்படியாக தனியார் காடுகளையும் தேசியமயமாக்க
ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். வன இலாக்கா அந்த முயற்
சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 12 ஏக்கருக்கு மேல் காடுகள் இருந்தால் மரம்வெட்ட அனுமதி பெ
வேண்டும் என்று இருந்ததை இரண்டு ஏக்கருக்கு மேல் இருந்தால் என
குறைத்திருப்பதை நான் வரவேற்கிறேன். இரண்டு ஏக்கருக்கு மே
வைத்திருப்பவர்களின் மேல் கை வைக்கும் அதிகாரம் சர்க்காரிடம் இரு
ப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியிே
மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதை
போல, கலெக்டருக்குச் சமமாக உள்ள சர்க்கார் அதிகாரிகளைப் போ
வேண்டும். வன இலாக்காவைச் சேர்ந்தவர்களும், விவசாய இலாக்காவை
சேர்ந்தவர்களும் அதில் இருக்கட்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிர
திநிதிகளான எம்.எல்.ஏ.-க்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்க
ளாகியவர்களையும் போட வேண்டும். மரங்களை வெட்டும்போது, ஏதாவ
சிக்கல் ஏற்பட்டால், அந்த வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநி
இருந்தால், அவருக்கு உடனே தகவல் வரும். அப்போது அந்தப் பிர
ச்னையைத் தீர்க்க அரசுக்கு அவர் ஆலோசனைகளை வழங்
முடியும். ஆகவே பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களையும் எம்.எல்.ஏ
க்களையும் அந்தக் கமிட்டியிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி
க்கொள்கிறேன்.

டிபாசிட் பணம் ரூபாய் 10 என்று இருந்ததை 100 ரூபாய் என்று ஆக்
கியதில் எனக்குச் சம்மதம்தான். நூறு ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள, 20
0 ரூபாய் மதிப்புள்ள மரங்களை வெட்டக்கூடிய சாத்தியப்பாடு இருக்கிறத
ஆகவே இதை உயர்த்தியது தப்பல்ல. இதுகூட குறைவுதான். இன்னு
அதிகரிக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

தப்பு பண்ணுகிறவர்களுக்கு வெறும் அபராதம் மட்டும் போட்டா
ாதாது. அவர்கள் கம்பி எண்ணும் நிலைமை இருந்தால்தான், சமுத
த்தில் இந்த மாதிரியான தப்புகளைப் போக்க முடியும். ஆகவே
வர்களுக்குச் சிறைத் தண்டனை வழங்குவதை நான் வரவேற்கிறேன்
னால், 'அபராதம் அல்லது சிறைத் தண்டனை' என்று போட்டிரு
ார்கள். 'or' என்ற வார்த்தையை எடுத்துவிட்டு 'and' என்
ர்த்தையைப் போட வேண்டும். இல்லையென்றால், அதிகாரிகள் வெறு
பராதத்தை மட்டும் விதித்துவிட்டு, விட்டுவிடக்கூடிய ஆபத்து ஏற்படு
ற்றம் செய்தது நிரூபிக்கப்பட்டால்தான், அபராதத்தை விதிக்கப் போ
ரம். சந்தேகத்தின் பேரில் விதிக்கப் போவதில்லை. ஆகவே வேண்



மென்றே காடுகளை அழித்து லாபமடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு மரங்களை வெட்டினார் என்று நிரூபிக்கப்பட்டால்தான், தண்டனை கொடுக்க வேண்டுமென்ற நிலை வருகிறது. அப்படிப்பட்ட நோக்கில் வெறும் அபராதத்தை மட்டும் போட்டுப் பிரயோசனமில்லை, சிறைத் தண்டனையையும் போட வேண்டும். ஆகவே or என்ற வார்த்தைக்குப் பதிலாக and என்ற வார்த்தையைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் மரங்களை வெட்டுகிற கூலிகளுக்குத் தண்டனையைக் கொடுக்கக் கூடாது. அவன் வயிற்றுப் பிழைப்புக்காக, தன்னுடைய சரீர ஆரோக்கியத்தைக் கூட கெடுத்துக் கொண்டு காட்டுக்குப் போய் வெட்டிப் பிழைக்கிறான். அவன் தான் பூராவிற்கும் பொறுப்பு என்று அவனைப் பிடித்து தண்டனை கொடுப்ப தால் பிரயோசனமில்லை அவனுக்குப் பின்னால் பெரிய ஆர்கனைசேஷனாக இருந்து கொண்டு செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நான் கூறிய மாதிரி திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலமாக மேலும் காடுகளை இறுக்கமாகப் பாதுகாக்க முடியும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் கூறியதற்கு மேல் ஒரே ஒரு கருத்தை மட்டும் கூடுதலாக நான் சொல்ல விரும்புகிறேன். இதற்கான கமிட்டியை அமைக்கிற பிரிவைப் பொறுத்த வரையில், தாசில்தார் இடம் பெறுகிறார், கலெக்டருடைய பெர்சனல் அசிஸ்டெண்ட் இடம் பெறுகிறார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் முரண்பாடு இருக்கிறது.

Clause 4 (2) (*a*) Constittion of the Committee : The Chairman of the Committee or in his absence any member nominated by him in that behalf shall preside at the meeting of the Committee.

அதாவது அந்த ஐந்து பேரும் சம அந்தஸ்து உள்ள, சம உரிமை பெற்ற, சம அதிகாரம் பெற்ற கமிட்டி உறுப்பினர்கள் என்ற முறையிலேதான் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருக்குமானால், அவசியம் ஏற்படும்போது, தாசில்தார் தலைமை வகித்து அந்தக் கமிட்டியை நடத்த முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதில் இருப்பவர்கள் எல்லாம் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள். அவசியம் வருகிறபோது, தாசில்தாரை தலைமை தாங்கி நடத்துமாறு கலெக்டர் பணிக்க முடியுமா? அப்படியே தலைமை தாங்கி அந்தக் கமிட்டியின் கூட்டத்தை நடத்தினாலும்.

அபிப்பிராயத்தைச் சொல்லுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும்.
ஒரு முரண்பாடு என்று கருதுகிறேன். இதற்கான திருத்தங்களை எதிர்க்
கட்சியிலே உள்ள நாங்கள் கொண்டு வந்தால், அதை அங்கீகரிப்பதிலே
அரசுக்குச் சிரமம் இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட
முன்வடிவை நிறைவேற்றுவதற்கு முன்னதாக இதைப் பரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (டாக்டர் இரா. சனார்த்தனம்)**: இந்தச் சட்ட
முன்வடிவின் மீதான விவாதம் முடியும் வரையில், அவையின் அனுமதியுடன்,
அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7.00)

**திரு. க. இராமமூர்த்தி**: ஆகவே அதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்ய
வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
இன்னொன்று "The Personal Assistant (General) to the Collec-
tor shall be the Secretary to the Committee"

கலெக்டருடைய பி.ஏ.வைப் போடுவதைவிட, குறைந்தபட்சம் அந்த
மாவட்டத்தினுடைய டி.ஆர்.ஓ.வைப் போடுவதன் மூலமாக ஓரளவுக்கு அதை
ஈடு செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன்.

கடைசியாக, மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள்
சொன்னதை என்னால் பூரணமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று
சொன்னாலும்கூட, அந்தந்தப் பகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை,
பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களைப் போடுகின்ற நேரத்தில் அதிலே பல
சங்கடங்கள் வருகின்றன. வேண்டியவர்கள் என்று வருகின்ற
போது, சில நேரங்களில் அவர்களால் மறுக்க முடியாமல் போகிறது. மீண்டும்
இந்தக் குழுக்குள்ளே அவர்கள் போவதே சில சிபாரிசுகளைச் செய்வதற்கு
என்றுகூட அமைந்துவிடுகிறது என்று சொல்லலாம். ஆக இதிலே நாம்
எச்சரிக்கையாக இருந்தாலும்கூட, ஏற்கனவே இருக்கின்ற அனுபவங்
களையும், அதிகாரிகளால் வந்த சங்கடங்களையும் நாம் பார்க்க வேண்டியிருக்
கிறது. அந்தக் காரணத்தினால்தான் இந்த மசோதா வந்திருக்கிறது என்று
சொல்ல வேண்டும். அந்தக் காரணத்தினால்தான் யாரையாவது ஒருவரை,
நான் யாரை என்று சொல்லத் தயாராக இல்லை, வெளியிலேயிருந்து
போடலாம் என்று சொல்கிறேன். ஒரு (Non-official) நான்-
ஆபிஷியலைப் போடுவதன் மூலம் ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக இருக்க
முடியும். இந்தக் குழுவினுடைய நடவடிக்கைகள் சரியாக இருக்கும்





என்று நாம் எதிர்பார்க்க முடியும் என்று சொல்கிறேன். அடுத்து, சேலம், ஏற்காடு மலைப் பகுதிகளிலே மற்றப் பகுதிகளிலே நாம் காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக சட்டங்களை இயற்றுகிற நேரத்திலே, ஏதாவது காரணங்களைச் சொல்லி, (Silver oaks) 'சில்வர் ஓக்ஸ்' போன்ற மரங்களையெல்லாம் வெட்ட முடியும்; அதற்கான அனுமதியை வாங்க முடியும் என்ற செய்திகள் உலவிக்கொண்டிருக்கின்றன. அதற்கு நிச்சயமாக இடம் கொடுக்க முடியாது. இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதால், இதில் உள்ள நோக்கத்தைப் பார்க்கும்போது, அது நிச்சயமாக முடியாது என்று சொல்கிறேன். நீலகிரி, ஏற்காடு, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் எந்தச் சூழ்நிலையை வைத்தும், காரணத்தை வைத்தும், எஸ்டேட் முதலாளிகள் யாரும் மரங்களை வெட்டக்கூடாது என்று இருக்க வேண்டும். அதற்கு இடம் தரக்கூடாது என்ற என்னுடைய கருத்தைச் சொல்லி, பொதுவாக இந்த மசோதாவினுடைய நோக்கத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

**திரு. ம. சங்கரலிங்கம்**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவில் உள்ள நோக்கத்தைப்பற்றி இரண்டு கருத்துக்களை யாருமே சொல்ல முடியாது. எல்லோருமே ஒருமனதாக ஏற்றுக் கொள்கின்ற நோக்கம். ஆனால் இன்று நாட்டிலே காடு அழிக்கப்படுவது ஒரு சர்வ சாதாரணமான சம்பவமாக இருக்கிறது. ஒருவேளை இந்த மாதிரி கடுமையான சட்டம் இல்லாததனால் தான், அப்படி ஆகிறதா என்றால், அதுவும் இல்லை. சட்டத்தால் காடு பாதுகாக்கப்படாமல் இருக்கிற நிலை இல்லை. அதைப் பாதுகாக்கின்ற உணர்வு இந்தத் துறை அதிகாரிகளிடத்திலே இல்லை. நமது அமைச்சர் அவர்கள் ஒரு புள்ளிவிவரம் எடுக்க வேண்டும். அதாவது சுதந்திரம் கிடைத்த பிறகு, வனத் துறை அதிகாரிகளாகப் பணி புரிந்தவர்கள் எத்தனை பேர்கள் என்று புள்ளி விவரம் எடுத்து, அதிலே அவர்கள் பணிக்கு வருவதற்கு முன்னாலே என்ன நிலையிலே இருந்தார்கள், அவர்கள் இந்தப் பணிக்கு வந்த பிறகு எப்படி இருக்கிறார்கள், அவர்களுடைய குடும்ப நிலை என்ன என்பதைப்பற்றிப் பார்க்க வேண்டும். அப்படிப் பண்ணினால் நமக்குப் புரியும், இன்றைக்கு நாட்டிலே என்ன நிலைமைகள் இருக்கின்றன? நானும் ஒரு வனப் பகுதியை ஒட்டிய பகுதியிலே வாழ்கின்றவன்தான். கன்னியாகுமரி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய கடைசிப் பகுதி. நான் இருக்கின்ற மலைப் பகுதிகளில் எப்படி கொள்ளை போகிறது என்று சொல்கிறேன். வனத்திலே திருடர்கள், நாட்டிலே அவர்கள் பெரிய மனிதர்கள். நாட்டிலே உள்ள அந்தப் பெரிய மனிதர்கள் அந்த வனத்திற்குள்ளே போனால் என்ன செய்கிறார்கள்

என்பது தெரியும். இதற்கு ஒரு சட்டம் மட்டும் போதுமானதல்ல. அந்த துறை மிக வேகமாக இருக்க வேண்டும். இப்போது இருப்பதைவிட சக் வாய்ந்ததாக, அதிகாரங்களை எல்லாம் வைத்துக்கொண்டு இயங்க வேண்டு என்பதுதான் என்னுடைய கருத்து. ஏதோ ஹில் ஸ்டேஷனில் 500 பேர்கள் 1,000 பேர்கள், 2,000 பேர்கள் வாழ்கின்ற இடத்திலே அவர்களுக்காக வெட்டி கொள்கிறார்கள். அவர்கள் அப்படி தேவைக்கு வெட்டித்தான் ஆக வேண்டு அதெல்லாம் ஒரு பிரச்சினை அல்ல. ஆனால் அந்தக் காடுகளுக்குள் லட்ச கணக்கான மரங்கள் இருக்கின்றன. ஒரு மரமே பல்லாயிரக்கணக்கா ரூபாய்களைக் கொண்டு வருகின்ற நிலையில் உள்ள மரங்கள் சர்வ சாதாரண மாகத் திருடு போகின்றன. அங்கே காண்ட்ராக்ட் எடுக்கிறார்கள். ஒ கூப் காண்ட்ராக்ட் எடுத்துக்கொள்கிறார்கள். அதை வெட்டிக்கொண்டே போகிறார்கள். அதற்குப் பக்கத்திலே இருக்கின்ற காடுகளையெல்லாம் கூட வெட்டிவிடுகிறார்கள். யாருடைய பராமரிப்பிலே என்று சொன்னால், வனத் துறை அதிகாரிகளுடைய பராமரிப்பிலே, பாதுகாப்பிலேயே வெட்டுகிறார்கள் அவ்வளவு மரங்களும் வெட்டப்பட்டுப் போன பிறகு, கொஞ்சம் மரங்களை கட்டைகளைப் போட்டு தீயிட்டுவிட்டு, காட்டிலே தீ பிடித்துவிட்டது, அதனால் மரங்கள் எல்லாம் தீயிலே போய்விட்டன என்று வனத் துறை அதிகாரிகளுக்குச் சொல்லி, வனத் துறை அதிகாரிகளைச் சாட்சியாக வைத்துக்கொண்டு, குத்தகைக்கு எடுத்த பணத்தைக் கூட கட்டாமலிருக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்கிறார்கள். அதற்கு அரசியல்வாதிகளை அழைத்துச் கொண்டு வந்துவிடுகிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதல்ல. மாண்புமிகு அங்கத்தினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட சொன்னார்கள். இந்தக் கமிட்டியிலே அந்த வட்டாரத்திலே தேர்ந்தெடுக்கப் பட்டவர் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கமிட்டி செயல் படாமல் போவதற்கு அதுதான் காரணம். அதில் எந்தக் * கட்சிக்கும் விதி விலக்கில்லை. அவர்கள் அதைப் போய் சொல்லவில்லை என்றால், அவர்களுக்கு வோட்டு கிடையாது. நான்-அரசியலைப் போடுவதானால், இதுவரை தேர்ந்தெடுக்கப்படாதவர் இனிமேல் தேர்தலிலேயே நிற்கமாட்டேன் என்று சொல்பவர்கள்தான். உறுதியாக இருப்பவர்கள்தான் அங்கு போடப் படுபவர்களாக இருக்க வேண்டும். (சிரிப்பு.) தேர்ந்தெடுக்கப்பட்டவர் களுடைய அவல நிலை என்ன? எல்லாக் கட்சிக்கும்தான் இது பொருந்தும் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றல்ல. எல்லோரையும் சமாதானப்படுத் வேண்டும். எல்லோருடைய தயவையும் நாட வேண்டியதாக இருக்கும். அந்தச் சூழ்நிலையை இந்த நாட்டிலே நாம் சுதந்திரம் வாங்கி முப்பது ஆண்டு கழிந்த பிறகும் பார்க்கிறோம். இதை நான் கட்சி சார்பாகச் சொல்லவில்லை.



நமது நாட்டிலே காட்டுப் பகுதிகள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன? இங்கிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளிலே ஒரு மொத்தப் பரப்பிலே காடுகள் 40 சதவிகிதம் இருக்க வேண்டும் என்று சொல்லி, அதைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. அறிவழகன்:** 33 சதவிகிதம் என்று சொல்லுங்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** 33 சதவிகிதம் வரை பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது நமக்கல்ல. நமக்கு ரொம்பக் குறைவாக இருக்கலாம். வனம் சொல்கின்ற அளவுக்கு இருக்கும். ஆனால் உள்ளே போனால், பாலைவனமாகத்தான் இருக்கும் அந்த வனம். அந்த வனத்திற்குள்ளே போய்ப் பார்த்தால், அந்த வனத்திற்கு அப்பால் பாலைவனம்தான் இருக்கும். நம் நாட்டிலே பாலைக்கு இலக்கணம்கூட இலக்கியத்திலே சொல்லி வைத்திருக்கிறார்கள். பாலையான வடிவம் கொண்டது என்று இலக்கியத்திலே சொல்லி வைத்திருக்கிறார்கள். "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையான படிவம் கொண்டது" என்று இலக்கியத்திலே சொல்லி வைத்திருக்கிறார்கள். மழையில்லாமல் முல்லைக் காடும் சேர்ந்த இடமும் குறிஞ்சி மலையும் சேர்ந்த இடமும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**புலவர் புலமைப்பித்தன்:** அது மாத்திரம் அல்ல. "நல்லியல் பிளந்து நடுக்குதுயரந்த பாலை என்பதோர் படிவம் கொண்டு" என்று சொன்னார்கள். நடுக்குதுயரம் என்பதும் வந்து சேர்ந்தது.

**திரு. ம. சங்கரலிங்கம்:** ஆகவே அதையும் சேர்த்துக் கொண்டோமானால், இந்தக் காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுத்தான் பாலை ஆகியிருக்கிறது என்று தெரிகிறது. நம்முடைய தமிழகத்திலே இப்போதுள்ள செங்கோட்டையிலேயிருந்து திருவாங்கூருக்கு கொஞ்ச காலத்திற்கு முன்வரை காரிலே போக முடியாது. அப்படிப் போனால் நமக்கே பயமாக இருக்கும். அந்த வழியில் போகும்போது, யானை வந்துவிடுமோ என்று பயம் இருக்கும். நல்ல காட்டுப்

பகுதியாக இருந்தது. ஆனால் இப்போது எங்கு பார்த்தாலும் வீடுக
இருக்கின்றன. நம் நாடு அப்படி மாறிக்கொண்டிருக்கிறது. இந்த
சந்தர்ப்பத்திலே கேரளாவிலே 'சைலண்ட் வாலி' என்று இருக்கிறது
அந்தப் பிரச்சினையைப்பற்றி நாம் எல்லோரும் படித்திருப்போம். அங்
அதிகமாகப் போனால் 66 மெகாவாட்டுக்கு மின்சாரம் எடுக்க முடியும்
அதற்குள்ள நீர்த் தேக்கம், நீர்வீழ்ச்சி எல்லாம் இருக்கின்றன. இதிே
மின்சாரம் எடுக்க ஒரு திட்டம் போட்டு, பிற நாட்டினுடைய உதவியோ
திட்டத்தை அமுல்படுத்துகின்றபோது, அங்கே எதிர்ப்புத் தெரிவிக்கப்ப
கின்றது. மின்சாரம் எடுக்க வேண்டாம் என்று சொல்கிறார்கள்
மின்சாரம் உங்களுக்குக் கிடைக்கலாம், ஆனால் அங்குள்ள வனங்கள்
பாழாகிவிடும் என்று அதைத் தடுக்கிறார்கள். அங்கே அதைத் தடுக்க
வேண்டும் என்று ஒரு இயக்கம் உருவாகியிருக்கிறது. பல மாத காலமாக
அந்தக் கருத்தை எடுத்து வைக்கக்கூடிய ஒரு காலகட்டத்திலேதான் நாம்
வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கேரளா
போன்று நமக்கு வன வளம் இல்லை. தமிழ் நாட்டிற்கு அவ்வளவு வன வளம்
இல்லை. எனக்குக்கூட வனம் இருக்கிறது. நான் ஒன்று சொல்லிக்கொள்
கிறேன். கன்னியாகுமரியிலே நடக்கிறது. 90 ஏக்கர் வனம் உள்ளவர்கள்
அடுத்து இருக்கும் 900 ஏக்கர் வனத்தை வளைத்து எடுத்துக்கொண்டிருக்
கிறார்கள். இதற்கு முந்திய அரசு அதற்காக நடவடிக்கை எடுத்தது. நீதி
மன்றம் வரை போய் வெற்றி பெற்றது. அதையும் தொடர்ந்து உச்ச
நீதிமன்றம் வரை சென்று வெற்றி பெற்றது. இதற்காக அந்த அதிகாரிகளை
நாம் பாராட்ட வேண்டும். அதிகாரத்திலே இருக்கின்ற அதிகாரிகளில் நல்ல
அதிகாரிகளும் இருக்கிறார்கள். அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.
அப்படிப்பட்டவர்களை நாம் பாராட்டுவதில்லை. இந்த நாட்டிலே நல்லது
செய்பவர்களைப் பாராட்ட வேண்டும். தீமை செய்பவர்களைக் கண்டிக்க
வேண்டும். நல்லது செய்தவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.
இதுபற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு, திருடு போவதைப்பற்றி எடுத்துச்
சொல்ல வேண்டும். இந்த இந்தக் காடுகள் அழிந்து வருகின்றன என்று
சொல்ல வேண்டும். அதன்பேரில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அப்படி நடவடிக்கை எடுக்கின்றவர்கள் சில நேரங்களில் துன்பப்படுத்தப்படு
கிறார்கள். இந்த நிலைமைகள் மாற வேண்டும். முதலில் இந்த இலாகா
ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்
கொள்கிறேன். அப்போதுதான் இந்தச் சட்டம் நன்றாகச் செயல்பட முடியும்.
இந்தச் சட்டத்தைச் செயல்படுத்துகின்ற இயந்திரத்தை வேகப்படுத்த
வேண்டும், நிறைவுப்படுத்த வேண்டும். அது பழுதடையாமல் செய்து,



அந்த வனத்துறையைச் சேர்ந்தவர்கள் நன்கு செயல்பட வேண்டும்.
அப்போதுதான் இந்தச் சட்டம் வெற்றி பெற முடியும் என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 7-10)

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர
வர்களே, இந்த அவையின் முன்னாலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இரண்டு
சட்ட முன்வடிவுகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு
நல்ல அறிவுரைகளையும், நிர்வாகத்திலே இந்தச் சட்டத் திருத்தத்தின்
மூலம் எப்படி எதிர்பாராத சில நிலைகள் ஏற்படலாமென்பதைப் பற்றியும்
பொறுப்போடும், மனம் திறந்தும் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக
நான் அரசின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
முதலில் இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கின்ற நோக்கத்தைப்பற்றிப் பேசிய
எல்லா உறுப்பினர்களும் அதைப் பாராட்டியிருப்பதற்காக நான் பெரிதும்
கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்படிப்பட்ட சட்டத் திருத்தங்கள்
வருகிறபோது, ஏதோ உள் நோக்கம் கற்பித்து இதைக் கொண்டு
வருகிறார்கள் என்று பேசுகின்ற பழக்கம் மலிந்து வருகின்ற இந்தக் காலத்தில்,
இந்த மன்றம் தனக்கே உரித்தான பொறுப்பை எடுத்துக் காட்டுகின்ற
வகையில், இந்தச் சட்டத் திருத்தத்தின் நோக்கத்தை, அதன் அடிப்படை
உணர்வைப் பாராட்டி, வரவேற்றிருப்பது, அரசின் முயற்சிகளுக்கு மேலும்
ஆக்கம் தருமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களே நான் என்ன பேச வேண்டு
மென்று கருதினேனோ அல்லது நான் என்ன பேச வேண்டுமோ அதை
என்னுடைய சார்பிலே தெளிவாகவும், இருக்கின்ற நடைமுறையை மிக
விளக்கமாகவும் எடுத்துச் சொன்னதற்காக நான் அந்தத் துறைக்குப் பொறுப்
பேற்றுக்கொண்டிருக்கிறவன் என்ற முறையில், என்னுடைய சொந்தச்
சார்பிலே அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த
நேரத்தில் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
எதிர்க் கட்சித் தலைவரவர்கள் வனத்துறைபற்றி அதிலே இருக்கிற அதிகாரி
களைப்பற்றிச் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கடந்த

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 13

ஓராண்டுக் காலமாக அந்தத் துறையிலே ஏற்பட்டுக்கொண்டு வருகின்ற மாற்றங்களை, தயவுசெய்து, அருள்கூர்ந்து விசாரித்தாவது அவர்கள் தெரிந்து கொண்டிருப்பாரேயானால், ஓரளவிற்காவது அந்த மாற்றங்கள் எந்த வகையிலே ஏற்பட்டு வருகின்றன என்பதைக் கண்டு, மனக் குறையோடு சிறிது மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்ற சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டிருக்குமென்று உறுதியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வனத்துறை பற்றிப் பேச ஆரம்பித்தால், அது நீண்ட நெடுங்கதையாக மாறி விடும். பல ஆண்டுகளாக இது பொது மக்களாலே கவனிக்கப்படாத ஒரு துறையாக இருந்து வந்த காரணத்தால்தான், அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. காடு என்பதே அடர்ந்த தழையாக, புதர்க் காடுகளாக, மனிதன் போக முடியாத இடமாக, விலங்கினங்கள் மட்டும் வாழும் இடமாக இருப்பது என்ற இலக்கணத்திற்கு உட்பட்டு இருப்பது போலவே அந்தத் துறையும் பொது மக்களின் பார்வைக்கு அப்பாலே இருந்தது. அதற்குள்ளே யாரும் கவனம் செலுத்தாமல், இந்த மாநிலம் முழுவதும் எண்ணிப் பார்த்தால்கூட, மொத்தமாக அதிலே இருக்கும் அதிகாரிகள் சில நூறு பேர்களும், அதிலே சம்பந்தப்பட்ட சில நூறு பேர்கள் காண்ட்ராக்டர்கள் என்ற பெயரிலும் கவனித்துக்கொண்டு வந்த துறையாக அந்தத் துறை இருந்து வந்தது. வனத் துறை என்பது ஒரு நாட்டினுடைய மிகப் பெரிய செல்வம். அது பாதுகாக்கப்பட வேண்டிய செல்வம், அதுமாத்திரமல்ல, அது மிகப் பெரிய வருவாயை ஈட்டித் தருகிற அமைப்பு என்பதும் இதுவரை எண்ணிப் பார்க்கப்படாமல் ஒதுக்கப்பட்டு வந்ததால்தான், அதிலே இவ்வளவு தவறுகள், திட்டமிட்டு தெரிந்தே தவறுகள் நடைபெற்று வந்தன. அதை யாரும் மறுக்க முடியாது. இந்தத் தவறுகள் கடந்த காலத்தில் எப்படி நடந்தன என்பதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் கடந்த ஓராண்டுக் காலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆணைப்படி, மிகக் கடுமையான, கண்டிப்பான உத்தரவு களைப் போட்டு, கண்காணிப்புக்குள் ஆட்படுத்தி, இன்றைக்கு அந்தத் துறை சீர்படுத்தப்பட்டு வருகிறதென்பதை நான் இந்த மன்றத்தின் மூலமாக மக்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வெளியிலே சொல்லப்பட வில்லை. ஐ.எஃப்.எஸ். அதிகாரிகள் என்று, மிகப் பெரிய அளவிலே அகில இந்திய சர்வீசோடு இணைத்துக் கொண்டிருக்கிற அதிகாரிகள் பலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்குக் கீழே இருக்கிறவர்கள் பலர் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பலர் மீது குற்றப் பத்திரிகை தாக்கலாகியிருக்கிறது. இவைகள் எனைக்கும்



1979 நவம்பர் 13] [திரு. இராம. வீரப்பன்]

கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளில் மிகப் பெரிய அளவிலே இன்றைக்குச் செய்யப்பட்டு, பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் தனிப்பட்ட அதிகாரிகள் மீது ஏற்பட்ட கோபதாபத்தால் அல்ல. ஆனால் அந்தத் துறைக்குள் புரையோடி புள்ள அந்த நோய், கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்த பிறகு, இன்றைக்கு அரசு மிகத் தீவிர நடவடிக்கை களை எடுத்து வருகிறதென்பதை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். கன்னியாகுமரி மாவட்டமென்பது, வனத் துறையிலே நடைபெறுகிற குற்றங்களுக்குத் தலைமைப்பீடமாக இருக்கிறதென்பதை மறுக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், அங்கே வனத் துறை அதிகாரிகளாகப் போக பல பேர்கள் மறுக்கிறார்கள். அங்கே இருக்கிறவர்களும் வெளியிலே வர மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட விசித்திரமான சூழ்நிலை அங்கே இருக்கிறது. எந்த அதிகாரியை மாற்றினாலும் அங்கே போவதில்லை. அங்கே இருக்கிற அதிகாரியை வெளியே மாற்றினால், அவர் வெளியிலே வருவதில்லை. ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலை பக்கத்திலே இருக்கிற சகவாச தோஷத்தினாலோ என்னவோ, தெரியவில்லை, ஏற்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்ட மென்பது, வனத் துறையிலே மிகப் பெரிய தவறுகள், ஊழல்கள் நடை பெறுவதற்குத் தலைமை ஸ்தானம் வகித்துக் கொண்டிருந்தது. இப்போது கூட, அதில் விட்ட குறை, தொட்ட குறை இருக்கலாம். அதை மறுக்கவில்லை. ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களைப் போன்றவர்கள், பொறுப்பு வாய்ந்தவர்கள் தவறுகள் எங்கேயாவது நடைபெறுகின்றன என்று தெரிந்தால், தயவுசெய்து அதை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். சட்டமன்ற மேலவையில் பேசுவதால் மட்டும் பலன் ஏற்படாது. இது நாளைக்குப் பத்திரிகைச் செய்தியாக வரும். அரசியலுக்குக்கூட இது பயன்படலாம். அரசு வனத்துறைபற்றி எதிர்க் கட்சித் தலைவர் கடுமையான குற்றச்சாட்டு என்ற தலைப்புக்குள் அடங்கிய செய்தியாக வரலாம். ஆனால் வனத் துறையைப் பாதுகாக்க, செய்ய வேண்டிய உதவி, உங்களுக்கோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கோ, எங்கேயாவது வனத் துறையில் தவறுகள் நடைபெறுகின்றன என்பது சான்றுகளோடு தெரிந்தால், தயவுசெய்து அதை அரசுக்குத் தெரிவியுங்கள். அடுத்த 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப் படுமென்பதை நான் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே கொஞ்சம்கூட அச்சப்படுவதில்லை, தயவு தாட்சண்யம் காட்டப்படுவதில்லை. சமீபத்தில் சேலத்திலே ஒரு முறைகேடான ஏலம் நடைபெற்றது என் பதற்காக, "கன்சர்வேடர் ஆப் பாரஸ்ட்ஸ்" என்ற மிக உயர்ந்த அந்தஸ்துள்ள

அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 90,000 ரூபாய்க்கு விடப்பட்ட புளிய மர ஏலத்தை இந்த ஆண்டு 36,000 ரூபாய்க்கு விட்டு, ஒரு வாரத்திற்குள்ளே அதை உறுதி செய்து, ஒப்பந்தங்கள் கையெழுத்தானது என்பதைக் கண்டுபிடித்து, விசாரித்து—அதற்கு அவர் பொறுப்பா, இல்லையா என்பதை என்னால் சொல்ல முடியாது—அதைக் கண்காணிக்க வேண்டிய மிகப் பெரிய அதிகாரி 'கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ்', அவர் சரியாகக் கண்காணிக்கவில்லை என்பதால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 'கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ்' மூன்று மாவட்டங்களுக்குத் தலைமை அதிகாரி. 24 மணி நேரத்திற்குள், அவர் அந்தப் பகுதியை விட்டு, வேறு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார். ஏனென்றால் மிகப் பெரிய அதிகாரி அவர். அதுதான் உடனடியாக அரசால் செய்ய முடியும். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அரசு கொஞ்சம்கூட தயவு தாட்சண்யம் இல்லாமல் இருக்கிறது என்பதற்காகத்தான். குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் சொல்கிறேன். அங்கேயிருந்து தினசரி தந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் உள்ளே நுழைந்து பார்த்தால், அதிலே என்ன உண்மை இருக்கிறது என்பது தெரிகிறது. எவன் இந்தத் திருட்டு வழக்கிலே அல்லது திருட்டு சம்பவத்திலே ஏற்கெனவே அந்த அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறானோ, அவனுக்குச் சங்கடம் வருகிறது என்றவுடன், அவனே ஒரு தந்தியைக் கொடுக்கிறான். அங்கே போய் விசாரித்துப் பார்க்கும்போது, இவனே சம்பந்தப்பட்டவனாக இருக்கிறான். இல்லையென்றால் அதற்கு ஆதாரமில்லாமல் போகிறது. ஒரு சான்று சொல்கிறேன். மிகப் பெரிய அளவிலே மரங்களைக் கடத்தியதாக ஒரு வழக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் போடப்பட்டது. அதற்காக தனி விசேஷ நீதி மன்றம் அமைக்கப்பட்டு, ஏறத்தாழ 20, 25 பேர்கள்மீது வழக்குப் போடப்பட்டு, கடைசியில் அத்தனை பேர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். நீதி மன்றத்தை நாம் ஒன்றும் சொல்ல முடியாது, அல்லது நீதிபதியின் முன்னாலே தக்க ஆதாரங்கள் தரப்படவில்லையா என்பதையும் நம்மாலே கண்டுபிடிக்க முடியாது. அவசரம் அவசரமாக இதில் ஏன் அப்பீல் செய்யவில்லை என்று கேட்டபோது, அப்பீல் காலம் கடந்து விட்டதென்று சொன்னார்கள். ஏன் அப்பீல் காலம் கடந்தது என்று கேட்டபோது, "நாங்கள் ஏ.பி.பி. ஒபினியன் கேட்டோம், அவர்கள் இதற்கு மேலே அப்பீல் செய்ய கிரவுண்ட் இல்லை, அடிப்படை இல்லை என்று சொல்லிவிட்டார், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அனுமதி வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு முயன்று, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நானே சொல்லி, அனுமதி வாங்கி,



உயர்நீதி மன்றத்திற்கு வந்தால், "காலம் கடந்துவிட்டது, நாங்கள் ஒத்துக் கொள்ள முடியாது' என்று சொல்லிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை

(பிற்பகல் 7-20)

களும் இன்றைக்கு இருக்கின்றன. அதனால் தான் இந்தச் சட்டத் திருத்தத்தை மிகக் குறுகிய கால அளவில் சில கோட்பாட்டுக்கு உட்பட்டு கொண்டு வந்து அதன் மூலமாவது சில தவறுகளைத் தடுத்து நிறுத்தி விடலாமா என்கிற முயற்சி தான் இது. மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இராமமூர்த்தி அவர்களும், தாமோதரன் அவர்களும் இதிலே ஒரு சில ஐயப்பாடுகளை எழுப்பினார்கள். குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதிலே தலைவராக இருக்கிறார், அவருக்குக் கீழே ஒரு உறுப்பினர் தாசில்தார் சம நிலையில் இருக்கிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். தெரிந்து தான் அவ்வாறு போடப்பட்டிருக்கிறார். சட்டத் துறைச் செயலாளர், வனத் துறைச் செயலாளர் இவர்கள் எல்லாம் மிகப் பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், சட்டம் படித்தவர்கள். ஆகவே எப்படி அவரைப் போட்டிருப்பார்கள் என்பதையெல்லாம் உறுப்பினர்கள் அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். இதற்கு முன்னால் இருந்த சட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்படுகிற தாசில்தார் அந்தஸ்துக்குக் குறையாத அதிகாரி அதற்கான அனுமதியை வழங்கலாம் என்று இருந்தது. தலைப்புச் சட்டத்திலே அல்லது மூலச் சட்டத்திலே அப்படி இருந்தது. நாங்கள் அந்த மாதிரி தாசில்தாருக்கு அதிகாரத்தை வழங்கக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் ஆணை பிறப்பித்தோம். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்கம் நேரத்தை நான் எடுத்துக்கொள்வதற்காக மன்னிக்க வேண்டும். 5 நிமிடம்கூட எடுத்துக் சொல்வது எல்லோருக்கும் பயன்படும் என்பதால், உறுப்பினர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்த அதிகாரத்தை தாசில்தாருக்குக் குறையாத அந்தஸ்தில் உள்ளவர்களுக்கு மாற்றிக் கொடுக்கலாம் என்று முந்திய சட்டத்தில், ஒரிஜினல் சட்டத்தில் இருந்தது. அப்படி அதை ஏன் அனுமதித்தார்கள்? இனிமேல் இப்படி கொடுக்கக் கூடாது என்று இப்பொழுது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு அவர்கள் கொடுத்திருக்கிற தகவல்கள் எல்லாம் உண்மைதானா, காற்றினாலே மரம் விழுந்தது உண்மைதானா என்பதையெல்லாம் கண்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிப்பவர் தாசில்தார் தான். வருகிற விண்ணப்பங்களையெல்லாம் இனிமேல் போய் பரிசீலித்துக் கொண்டு வா என்று சொன்னால்

அதற்கும் காலம் எடுப்பார்கள். தாசில்தார் அங்கே இருந்தால் முதிர்ந்த
மரமா, காய்ந்த மரமா, ஆபத்தான மரமா என்று அவர் குழுவில் சொல்லு
வதற்கான வாய்ப்பு உடனடியாகக் கிடைக்கும். இல்லாவிட்டால் மறுபடியும்
தாசில்தாருக்கோ, ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கோ அனுப்பி விழுந்த மரம் பட்
மரமா, வயதான மரமா என்றெல்லாம் அவர்கள் சொல்ல வேண்டியிருக்கும்
அந்த வேலையைக் குறைக்கத்தான் அந்தப் பணிக்காக மாவட்ட ஆட்சித்
தலைவருக்குக் கீழே தாசில்தார் உறுப்பினராக இருக்கிறார். மாவட்ட ஆட்சித்
தலைவர் இல்லாதபோது, அந்தப் பொறுப்பை தாசில்தார் தான் ஏற்பார
என்கின்ற பிரச்சினையே வராது. காரணம் அதற்கான ஏற்பாட்டை மாவட்ட
ஆட்சித் தலைவர் செய்வார். அவர் இல்லாத நேரத்தில் தகுதியான ஒருவரை
அவரே நியமிக்கிறார். அவருக்குப் பின்னால் டி.எப்.ஓ., மாவட்ட வன
இலாகாவைச் சேர்ந்த பொறியாளரை அதில் போட்டிருக்கிறோம். மண்
அரிப்பு ஏற்படாத வண்ணம் பாதுகாக்க வேண்டி, மரங்களை வெட்டுவதனால்
மண் அரிப்பு வராது என்கிற முடிவுக்கு அவர் தான் வர வேண்டும். மண்
அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது.
10 ஆண்டுகள் வயதுள்ள வளர்ந்த மரங்கள் என்று சொல்லி ஒருவர் மரங்களை
வெட்ட அனுமதி கேட்கிறபோது, மரங்கள் இருக்கின்ற இடம் மலைச் சரிவா
யிருந்தால் மழை பெய்தால் மண் அரிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பதை
எல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து அறிந்து சொல்வதற்குத் தான் நாம்
பொறியாளரை, என்ஜினியரைப் போட்டிருக்கிறோம்.

இதற்கு முன்னால் அனுமதியை கலெக்டர் கொடுப்பார் என்று இருந்
நிலையை மாற்றி உண்மையிலேயே யாருக்கும் பாதிக்கக் கூடிய ஒரு நிலையும்
வரக் கூடாது என்பதற்காகத் தான், நன்றாக ஆய்ந்து முடிவு எடுக்க வேண்டு
மென்பதற்காகத்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தாஜா செய்
வதற்காகவும், இழுத்தடிப்பதற்காகவும் இந்தக் குழு கொண்டுவரப்படவில்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் பொதுமக்களுக்குச் சங்கடங்
கள் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்
னார்கள். அதுபற்றி நான் விளக்க விரும்புகிறேன்.

தனி பங்களாக்களில் 5 மரங்கள் அல்லது 10 மரங்கள் இருக்கின்றன. ஒரு
வருடைய பங்களாவில் இருக்கின்ற அந்த மரங்களை யாருக்கும் எந்தவிதத்
தொல்லையும் இல்லாமல் வெட்ட அவர் விரும்பினால் அதற்கு அனுமதியளிக்





அரசு உறுதியளிக்கிறது. இங்கு கொண்டுவரப்பட்டுள்ள இரண்டு சட்டங்களும் மலைகளுக்கு உள்ளே உள்ள காடுகளைப் பொறுத்துத் தான் வருகிறது. 30 ஏக்கருக்கு மேலே இருந்தால் தான் தனியார் காடு என்று 'நோட்டிபை' பண்ண வேண்டுமென்று அடிப்படைச் சட்டத்தில் வந்திருக்கிறது. உடனே 30 ஏக்கர்களுக்குக் கீழே இருப்பவர்கள் எல்லாம் நான் வெட்டுகிறேன், நான் வெட்டுகிறேன் என்று மனுக்களைப் போட்டார்கள். அதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அதற்குப் பிறகு தான் அரசாங்கம் யோசித்தது. 30 ஏக்கர் என்று இருக்க வேண்டாம், 5 ஏக்கர் என்று இருந்தாலே போதும் என்று 5 ஏக்கராகக் குறைத்தோம். 5 ஏக்கர் என்று தனியார் பாதுகாப்புச் சட்டத்திலே குறைத்தாலும் மலைகளிலே மரங்களைப் பாதுகாக்கின்ற சட்டத்திலே தான் இது வருகிறது.

தனியார் காடுகளில் மரங்களை வெட்டுகின்றபோது, அவற்றுக்குப் பதிலாக
மற்ற மரங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று விதியில்லை. ஆனால் மலை
களில் மரங்களை வெட்டுகின்றபோது தான், அதற்குப் பதிலாக மற்ற மரங்
களை நட வேண்டுமென்று விதி இருக்கிறது. அதற்காகத்தான் ஒரு கோன்டி
என்ற வகையில் 100 ரூபாய்க்கு மேற்படாமல் கட்ட வேண்டுமென்று இருக்
கிறது. ஏற்கெனவே 10 ரூபாய் என்று இருந்தது. அன்றையதினம் சில மனுக்
கள் வந்தன. 500 மரங்களை வெட்டினால், அந்த 500 மரங்களும் என்ன
விலைக்கு விற்கப்படுகின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். 10 ரூபாய்
வீதம் ஒருவர் கட்டிவிட்டால், மீண்டும் அந்த இடத்தில் மரங்களை வளர்க்க
வேண்டுமா வேண்டாமா என்கின்ற கவலை அவருக்கு இல்லை. 500 மரங்
களை அவர் விற்றதனால் சம்பாதித்த தொகை 1 இலட்சம் ரூபாய்க்கு மேல்
இருக்கும். 500 மரங்களை வெட்டியவர் ரூபாய் 2 இலட்சத்திற்கு மேல் விற்
பார். இன்னும் சொல்லப்போனால், சில மரங்களை 4 இலட்சம், 5 இலட்சம்
ரூபாய் என்று விற்பர். அவர் கட்டியிருக்கும் டெபாசிட் 5 ஆயிரம் ரூபாய் மட்
டுமே. அவர் மரங்களை வெட்டிய பிறகு, மற்ற மரங்களை பதிலாக
நடாவிட்டால் அவருக்கு டெபாசிட் forfeit ஆகும்; டெபாசிட்டை இழக்க
நேரிடும்; அவ்வளவு தானே என்கின்ற அலட்சியப் போக்கு இருந்தது,
மரங்களை நடாத நிலை இருந்தது. இன்றைக்கு 10 ரூபாய் என்று இருந்ததை
100 ரூபாய்க்கு மேற்படாத வரை ஏதாவது தொகையை நிர்ணயம் செய்யலாம்
என்று விதியைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தக் கட்டணம் மிகப் பெரிய
அளவிலே இருக்கிறது என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ
தரன் அவர்களே எனக்கு உதவியாக ஒன்றையும் சொன்னார்கள். கொடைக்

கானலிலே 10 ஏக்கர், 15 ஏக்கர் காட்டை அழித்திருக்கிறார்கள் என்று சொன்
னார்கள். அப்படித்தான் இன்றைக்குக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்
டிருக்கின்றன. இதை எப்படி நாங்கள் கண்டுபிடித்தோம் என்றால், மிகக்
கூர்ந்து கவனித்ததன் வாயிலாகவும், அனுபவத்தின் வாயிலாகவும் தான்.
மரங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நாங்கள் கடுமையாக நடவடிக்கை
எடுக்க ஆரம்பித்த பிறகு எப்படியோ சட்டத்தின் சந்துபொந்துகளில்
நுழைந்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தார்கள் என்பதும் எனக்குத்
தெரியும்.

என்னுடைய வீட்டுக்குப் பின்னால் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற, முதிர்ந்த
மரங்களை, என் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலையில் இருக்கின்ற
மரங்களை வெட்ட எனக்கு உரிமை வேண்டாமா என்று மாண்பு
மிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கேட்டார்கள். அப்படிப்பட்ட
வைகளுக்கும் அனுமதி கேட்க வேண்டும் என்று முன்னாலேயே சட்டமிருக்
கிறது. ஆனால் அனுமதி கொடுத்தாக வேண்டுமென்று முன்னால் ஒரு விதியை
வைத்தார்கள். அதன் விளைவு கொடைக்கானலில் "புளூ கம்" என்ற
யூக்கலிப்டஸ் வகையைச் சேர்ந்த 300 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்ந்த
மரங்களை, கொடைக்கானலுக்கு அழகூட்டிக்கொண்டு நின்ற மரங்களை
வெட்டிவிட்டார்கள். அதுமாதிரி உயரமாக நாட்டிலே எங்கும் மரங்கள் வளர
வில்லை. கொடைக்கானல் பகுதியிலே மட்டும் தான் வளர்ந்து ஓங்கி நின்றன.
அங்கு ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டவேண்டுமென்று ஒரு விண்ணப்பம்
வந்தது. இவைகள் எல்லாம் காற்றில் வீழ்ந்து விட்டன, "விண்ட் பாலன்
டிரீஸ்", ஆகவே அவைகளை அப்புறப்படுத்தி விற்க உரிமை தர வேண்டு
மென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு வந்தது. கலெக்டர் பல்வேறு
அலுவல்கள் அவருக்கு இருந்த காரணத்தால், விண்ணப்பத்தை தாசில்
தாருக்கு அனுப்பினால், தாசில்தார் 'ஆம்' என்றார். உடனே ஆயிரக்கணக்
கான ஓங்கி உயர்ந்த மரங்கள் வெட்டப்பட்டன. வெட்டப்பட்ட ஒரு மரம்
3 லாரிகளில் ஏற்றப்பட்டிருக்கிறது. அப்படி 3 லாரிகளில் ஒரு மரம் ஏற்றப்
பட்டது என்றால், அது அவ்வளவு பெரிய மரமாக இருந்திருக்க வேண்டும், 300
அடி ஓங்கி உயர்ந்த மரமாக இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து
கொள்ளலாம். தாவர இயல் ஆராய்ச்சி மாணவர்களும், வன இயல் மாணவர்
களும் ஆராய்ச்சிக்காக அப்படிப்பட்ட மரங்களைத் தான் பார்க்க வருவார்கள்.
அந்த மரங்களைத் தான் காட்டுவார்கள். கோயம்புத்தூரிலுள்ள கல்லூரிகளி
லிருந்து வருகின்ற மாணவர்களுக்கும் அதைத் தான் காட்டுவார்கள். இந்த



மரங்கள் நீலகிரியிலும் இருக்கின்றன. ஆனால் அவை இவ்வளவு ஓங்கி 300
அடி உயரத்திற்கு வளர்ந்த மரங்கள் அல்ல. ஏதோ வெள்ளைக்காரன் காலத்தில்
அவனால் வளர்க்கப்பட்டு இன்று ஓங்கி வளர்ந்து நின்ற மரங்களை இப்படிச்
செய்திருக்கிறார்கள். ஏதோ ஓரிடத்தில் 10 அல்லது 20 மரங்கள் வீழ்ந்திருக்க
லாம். ஆனால் அந்தக் காரணங்களைச் சொல்லி இப்படி நல்லபடியாக நிற்
கின்ற மரங்களையும் வெட்டுகின்ற ஒரு நிலை நாட்டில் இருக்கிறது. மரத்தை

(பிற்பகல் 7-30)

வளர்ப்பதைவிட, காப்பித் தோட்டத்தைப் போட்டு பாதுகாத்து வளர்ப்பதை
விட, தேயிலைத் தோட்டத்தைப் போட்டு பாதுகாத்து வளர்ப்பதைவிட இருக்
கிற மரங்களை வெட்டி விற்றால், லட்சக்கணக்கிலே பணம் வருகிறது என்ற
நிலைமை நாட்டிலே உருவாகியிருக்கிறது. அதனாலே ஒரு புதிய உற்சாகமும்,
உத்வேகமும் இந்தச் சொந்தக்காரர்களுக்கு வந்திருக்கிறது. ஏன்? காப்பி
போடுகிறேன் என்று காரணம் காட்டி, தேயிலை போடுகிறேன் என்று காரணம்
காட்டி, சட்டத்திலே இருக்கிற விதிமுறைகளையெல்லாம், சலுகைகளை
யெல்லாம், பயன்படுத்திக்கொண்டு, அல்லது இப்படி காற்றிலே விழுந்து
விட்டது என்று காரணம் காட்டி, லட்சக்கணக்கான ரூபாய்க்கு இன்றைக்கு
மரங்களை வெட்டி விற்கிறார்கள். கொடைக்கானலிலே ஒரு மரத்தை வெட்டி
3 லாரிகளிலே கொண்டு போயிருக்கிறார்கள். அவ்வளவு கடினமான மரம்.
அவ்வளவு நீட்டமான மரம். ஒரு தாசில்தாருடைய அறிக்கையைப் பெற்று,
கலெக்டர் உத்தரவு கொடுத்துவிட்டார். அரசாங்கம் ஒன்றுமே செய்ய முடிய
வில்லை. அனுமதி கொடுத்தாகிவிட்டது, நிறுத்த முடியவில்லை. வழக்கு
மன்றத்திற்குப் போனால், கொடுத்த அனுமதியை இனி திரும்பப்பெற முடி
யாது என்று சொல்லி விடுவார்கள். அதற்குப் பிறகு தான் இந்தச் சட்டம் வரு
கிறது. தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்,
வீடுகளிலே இருக்கிற 10 மரங்கள், 5 மரங்களைப்பற்றிக் கவலைப்பட வேண்
டாம். சட்டத்திலே இருந்தாலும், நிலைமைகளுக்கு ஏற்றவாறு நடவடிக்கை
கள் எடுக்கப்படும். இது எதற்காகக் கொண்டு வரப்படுகிறது? வீடுகளிலே
இருப்பவர்கள் வெட்டிக்கொள்ளலாம் என்று சொன்னால், 10 மரங்கள், 10 மரங்
களாக வந்துகொண்டே இருக்கும். கேட்டால் வீட்டிலேயிருந்து வெட்டிக்
கொண்டு வந்தேன் என்று சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்
தெரியும், திரு. தாமோதரன் போன்றவர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 13

சட்டம் செய்ய முடியாது. திரு. தாமோதரனைப் போன்ற பலர் இருந்தாலும்,
சட்டம் செய்ய முடியாது. ஆனால், தவறு செய்கின்றவர்களுக்காகத்தான்
சட்டமே. தவிர, தவறு செய்யாதவர்களுக்காக இந்தச் சட்டம் இல்லை. ஆகவே,
நல்லவர்கள் இதன் மூலம் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால், அரசாங்
கம் அதற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் கடமைப்பட்டிருக்கிறது. நான்
இப்போது உறுதியளிக்கிறேன். தனியார் வீடுகளிலே நான்கு மரங்கள், ஐந்து
மரங்கள், பத்து மரங்கள் வெட்டுவதற்கோ, ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும்
மரங்களை வெட்டுவதற்கோ இந்தச் சட்டம் குறுக்கே நிற்காது. ஆனால்,
நான் வாதத்திற்கு ஒன்றைக் கேட்கிறேன். இன்றைக்கு சாதாரண சமவெளி
நிலங்களிலே, நகரங்களிலே வீடுகளைக் கட்டிக்கொண்டிருந்தால், நமக்கு
ஆபத்து ஒன்றுமில்லை. மரங்கள் ஒன்றும் பக்கத்திலே இருக்காது, ஓங்கி
வளராது. மேலே விழுந்து விடுமோ என்ற பயமும் நமக்கு வராது. ஆனால்,
மலைகளிலே போய் மலைவாசஸ்தலங்களிலே போய் பங்களாக்களைக்
கட்டிக்கொள்கிறபோது, மிக உயர்ந்த மரங்களுக்கு இடையிலே மாளிகை
களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றபோது, அந்த
உயர்ந்த மரங்கள் இருந்தால் தான் குளிர்ச்சி கிடைக்கும் என்ற எண்ணத்தில்
போகிறபோது, என்றைக்காவது ஒரு நாள் அந்த மரம் காற்றடித்தோ, மழை
யினாலோ, புயலாலோ விழுமென்றால், அது சொல்லிவிட்டா விழும்? அல்லது
இன்றைக்குத்தான் விழப் போகிறது என்பதை நீங்கள் எப்படி கண்டுபிடிக்க
முடியும்? நான் வாதத்திற்காகக் கேட்கிறேன், உங்களுடைய வாதத்தை
மறுப்பதற்காகக் கேட்கவில்லை, நீங்கள் அழகாக இருப்பதற்கோ, குளிர்ச்சி
யாக இருப்பதற்கோ, நிழல் தருவதற்கோ பத்து மரங்கள் வளர்ந்துள்ள
இடங்களிலே மாளிகைகளைக் கட்டுகிறீர்கள். வெள்ளைக்காரன் இந்தச்
சட்டத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணம் இந்த மரங்களையெல்லாம் அவன்
தானே உற்பத்தி செய்தான். அவன் தானே காடுகளை அழகுபடுத்தினான்.
ஆனால் நம்மவர்கள் அப்போது இந்தக் காடுகளிலே நுழையாமல் இருந்
தார்கள். இப்போது நம்மவர்கள் நுழைந்தவுடனே காடுகளை அழிக்கப்
பார்க்கிறார்கள், அழிக்க ஆரம்பித்தார்கள். இது நான் நாம் செய்திருக்
கிறோம். காட்டுக்குள்ளே நுழையாமல் இருந்தோம். நுழைந்தவுடனே
அழிக்க ஆரம்பித்தோம். ஆனால் வெள்ளைக்காரன் ... ான்—இதற்கு முன்னால்
கூட இந்த மாமன்றத்திலே நான் சொல்லியிரு... ...றேன்—இந்த அதிகாரி
களுக்குப் பெயரே வைத்தான். 'கன்சர்வே... ...ஆஃப் பாரஸ்ட்ஸ்'
என்றால் வனத்தைப் பாதுகாக்கின்ற அதிகாரி. ... ...த்தான் அதிகாரிகளை
வைத்திருந்தான். ஆகவே, ஒரு மரமானாலும் ... ...லவதென்றால், இயற்கை
யாக விழுகிறதென்றால், நாம் என்ன செய்ய மு... ...ம்? ஆனால் வெட்டக்



1979 நவம்பர் 13] [திரு. இராம. வீரப்பன்]

கூடாது. எத்தனையோ மரங்கள் இன்றைக்கு விழுந்து கிடக்கின்றன, புயல் அடித்து விழுகிறது, மழை வெள்ளத்திலே விழுகிறது, இவைகள் எல்லாம் இயற்கையினாலே ஏற்படுகின்ற விபத்துக்கள். ஆனால், நாம் பல மரங்களுக்கு மத்தியிலே ஒரு பங்களாவைக் கட்டிக்கொண்டு வாழ வேண்டும் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு, நாம் உள்ளே நுழைகிறபோது, அந்த மரம் விழுந்தால், அதனாலே ஏதாவது சேதாரம் ஏற்படும் என்றெல்லாம் தெரிந்து தானே அதற்குள்ளே போகிறோம். காட்டிற்குள்ளே போய் புலி வேட்டைக்குப் போனால், புலி அடிக்கும் என்று தெரிந்துதானே புலி வேட்டைக்குப் போகிறோம். காட்டிற்குள்ளே போய் நாம் மரங்களை வெட்டுகிறபோது, ஏதாவது யானையினாலேயோ மற்ற மிருகங்களினாலேயோ அபாயம் வரும் என்று தெரிந்து தானே உள்ளே நுழைகிறோம். ஆகவே, மலைகளிலே போய் அவற்றை வாசஸ்தலங்களாக மாற்றிக்கொண்டு, அங்கே மாளிகைகளை அமைக்கிறபோது, சுற்றியிருக்கிற மரங்கள் எல்லாம் என்றைக் காவது ஒரு நாள் இரவிலே தூங்குகின்றபோது, கடும் புயல், காற்று ஏற்பட்டு அந்த மரம் விழுந்தால், நாம் என்ன செய்ய முடியும்? அது நம்முடைய தலையெழுத்து, ஆண்டவன் விதித்த விதி என்று தானே நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். ஓடுகின்ற பஸ் திடீரென்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு ஆந்திர மாநிலத்திலே 60-க்கும் மேற்பட்டோர் காணாமல் போய்விட்டார்கள் என்று செய்தி வருகிறது. அவர்கள் தெரிந்தா போனார்கள்? அப்படி நாமெல்லாம் மலைகளிலே போய் பங்களாக்களைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றபோது, இப்படிப்பட்ட விபத்துக்களையும் எதிர் பார்த்துக்கொண்டு தான் இருக்க வேண்டும். ஆனால், அரசாங்கத்தினுடைய சட்டத்தினாலே அப்படிப்பட்ட விபத்துக்கள் நிச்சயமாக வாராது என்கின்ற உறுதியை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தருகிறேன். வீடுகளிலே இருக்கின்ற ஐந்து மரங்கள், 10 மரங்களை வெட்ட வேண்டுமென்கிற அவசியம் வந்தால், அதை உடனடியாக அனுமதிக்கலாம் என்கின்ற உத்தரவை அரசாங்கம் ஏற்கெனவே பிறப்பித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு இவைகள் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. கொடைக் கானலிலே—நான் பெயரைச் சொல்லவில்லை—இப்படி ஒரு மரம் விழுந்து விட்ட காரணத்தினாலே, வழக்கைத் தொடர்ந்தார்கள் என்று செய்தி வந்தது. அந்த வழக்கை வாபஸ் வாங்குங்கள் என்று நாங்கள் சொல்லியிருக் கிறோம். ஆகவே, அரசு இதிலே தெளிவாக இருக்கிறது. இந்தச் சட்டம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்னது போல, மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய நல்ல எண்ணத்தை வெளிக்காட்டியிருப்பதைப்போல, இன்றைக்கு காடுகள் அழிந்துகொண்டிருப்

பதைத் தடுப்பதற்குத்தான். தனியார், ஏதோ நான்கு மரங்களை, ஐந்து மரங்களை வைத்திருப்பவர்களுக்காக அல்ல. ஏனென்றால், இப்போது நாம் ஐந்து ஏக்கர் என்ற அளவுக்குக் கொடுத்திருக்கிறோம். 5 ஏக்கருக்கு உள்ளேயும் வந்துவிடுவார்கள். அங்கே நீங்கள் ரெமாட்டீர்கள். நீங்கள் ஒரு உதாரணம் சொன்னீர்களே, யாரோ ஒருவர் காட்டை அழித்தார் என்று அவர் வந்துவிடுவார். 5 ஏக்கர் ஒரு மலையிலே இருக்கிறது என்றால், அங்கே எவ்வளவு மரம் இருக்கும் என்று அந்த மலையிலே வாழ்கின்றவர்களுக்குத் தெரியும். அவற்றின் மதிப்பு என்ன என்பதும் அவர்களுக்குத் தெரியும். இன்றைக்கு எப்படியாவது வெட்டி—நாம் சாதாரணமாகச் சொன்னால் வீட்டிலே இருக்கிற சட்டி பானைகளையெல்லாம் விற்றுத் தின்பது போல— எப்படியாவது வெட்டித் தின்பது என்கின்ற ஒரு புதிய பழமொழியை இந்த மரங்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள், காடுகளை வளர்த்துக்கொண்டிருப் பவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள். இதைத் தான், ஒரு மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்றப் பேரவையிலே உள்நோக்கம் கற்பித்து "இதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வருகிறீர்கள்" என்றெல்லாம் கூட பேசினார்கள். நான் கொஞ்சம் கடுமையாக என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டிய ஒரு நெருக்கடிக்கு ஆளானேன். இப்படிப்பட்ட விவரங்களை நான் பேரவையிலே சொல்ல முடியவில்லை. ஆகவே, இந்தச் சந்தேகங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டாம். இதிலே இருக்கின்ற ஐயப்பாடுகள் களையப்படும். குறைகள் இருந்தால் அவைகள் நிவர்த்தி செய்யப்படும். அவற்றை எந்த நேரத்திலும் உறுப்பினர்கள் எடுத்துக் காட்டலாம், சுட்டிக்காட்டலாம். அப்படிப்பட்ட தவறுகள் நிகழாமல் அரசாங்கம் மிகவும் முக்கியமாகக் கவனித்து பரிசீலித்து நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று சொல்லிக்கொள்கிறேன். இறுதியாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தனியார் காடுகளை வைத்துக்கொண்டு "அதைப் பாதுகாக்கிறோம் என்று ஏன் இப்படி ஒவ்வொரு தடவையும் சட்டம் கொண்டு வருகிறீர்கள்?" என்று கேட்டார்கள். தனியார் காடுகளை ...த்துக்கொள்ள வகைசெய்யும் சட்டம் விரைவில் வரப்போகிறது. மஹா ...ட்ராவிலே, கேரளாவிலே அப்படிப்பட்ட சட்டங்கள் நிறைவேற்றப் ...ருக்கின்றன. அந்தச் சட்டங்களை நம்முடைய சட்டத் துறை ஆய்ந்து ...ண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே அது வந்திருக்கும், ...லே சில சந்தேகங்கள் எழுப்பப்பட்ட காரணத்தினாலே அவைகளைப் ...லித்துக் கொண்டிருக்கிறோம். இதை இன்றைக்கு இங்கே நான் ...விப்பதன் மூலம் கூட தனியார் ...களை வைத்திருப்பவர்கள் கொஞ்சம்



விழிப்படைவார்களானால், விழிப்படைந்தாலும், அவர்களை நாங்கள் விட மாட்டோம். காரணம் யார் மீதும் தனியாக எந்தவித காழ்ப்புணர்ச்சி கொண்டும் கொண்டுவரப்படுவதல்ல இந்தச் சட்டம். பெரிய காடுகளுக்கு உள்ளே திட்டுகளைப்போல தங்களுடைய காடுகளை வைத்துக்கொண்டு இவர்கள் "எங்களுடைய காடுகளிலேயிருந்து வெட்டிக்கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டு, நம்முடைய காடுகளிலே இருந்து வெட்டிக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் சொன்னீர்களே, கூப்பு கான்ட்ராக்ட் எடுப்பவர்களைப் பற்றி. இவர்கள். கூப்பு கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு உள்ளே போனவுடனே கூப்பு எடுத்த பகுதியிலே வெட்டுவதில்லை. இந்தக் கூப்புக்கு என்று எந்தப் பகுதியை நாம் எலம் விடுகிறோமோ அந்தப் பகுதியை விட்டுவிட்டு இன்னொரு பகுதியிலே, அரசாங்கப் பகுதியிலே தான் அவன் வெட்டுவது வழக்கம். வெட்டிவிட்டு ஆறு மாதகாலம் முடிந்ததற்குப் பிறகு "நான் இன்னும் வெட்ட வில்லை எனக்கு எக்ஸ்டன்ஷன் கொடு" என்று கேட்பதுதான் இதுவரை வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. அதனாலேதான் சமீப காலத்திலே இந்த விறகுக்கான கூப் வெட்டுவதைக் கூட தடுத்து நிறுத்தினோம். அதன் காரணமாக இன்றைக்கு விறகுக்குக் கொஞ்சம் தட்டுப்பாடு வந்திருப் பதையொட்டி உடனடியாக சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இதிலே என்ன முறைகேடுகள் நடந்துகொண்டிருந்தன என்பதையெல்லாம் கண்டு பிடித்துவிட்டோம். ஆனால் இவைகளைத் தீர்ப்பதற்கு கொஞ்சம் நாளாகும். இது நேற்று ஏற்பட்ட ஜுரம் அல்ல. இன்றைக்கு 'மெட்ராஸ் ஐ' என்று சொல்கிறோமே, அதைப்போல மூன்று நாட்களிலே போகின்ற கண் வலியும் அல்ல. இது ஆண்டாண்டு காலமாக புரையோடிப் போயிருக்கின்ற நோய். இதைத் தீர்ப்பதற்கு கொஞ்சம் நாளாகும். ஆனால் இது 'கேன்சர்' போல ஆளைத் தீர்த்துவிடுகிற அளவுக்கு நிச்சயமாக விட்டுவிட மாட்டோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 7-40)

தேவையான நடவடிக்கைகளை எடுத்து இந்த வனங்களைப் பாதுகாப்போம். இதற்கு சட்டப் பேரவையிலேகூட நான் ஒரு உதாரணத்தைச் சொன்னேன். உலகத்தில் வனங்கள் எவ்வாறு காப்பாற்றப்படுகின்றன என்பதை இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ரஷ்ய நாட்டைச் சேர்ந்த லெனின்கிராட் நகரம் எதிரிகளாலே நான்கு புறங் களிலும் முற்றுகையிடப்பட்டுவிட்டது. லெனின்கிராட் நகரத்தில் மட்டுமல்ல,

பதைத் தடுப்பதற்குத்தான். தனியார், ஏதோ நான்கு மரங்களை, ஐந்து மரங்களை வைத்திருப்பவர்களுக்காக அல்ல. ஏனென்றால், இப்போது நாம் ஐந்து ஏக்கர் என்ற அளவுக்குக் கொடுத்திருக்கிறோம். 5 ஏக்கருக்கு உள்ளேயும் வந்துவிடுவார்கள். அங்கே நீங்கள் வரமாட்டீர்கள். நீங்கள் ஒரு உதாரணம் சொன்னீர்களே, யாரோ ஒருவர் காட்டை அழித்தார் என்று அவ வந்துவிடுவார். 5 ஏக்கர் ஒரு மலையிலே இருக்கிறது என்றால், அங்கே எவ்வளவு மரம் இருக்கும் என்று அந்த மலையிலே வாழ்கின்றவர்களுக்கு தெரியும். அவற்றின் மதிப்பு என்ன என்பதும் அவர்களுக்குத் தெரியும் இன்றைக்கு எப்படியாவது வெட்டி—நாம் சாதாரணமாகச் சொன்னா வீட்டிலே இருக்கிற சட்டி பானைகளையெல்லாம் விற்றுத் தின்பது போல எப்படியாவது வெட்டித் தின்பது என்கின்ற ஒரு புதிய பழமொழியை இ மரங்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள், காடுகளை வளர்த்துக்கொண்டிரு பவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள். இ தான், ஒரு மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்றப் பேரவையிலே உள்நோக் கற்பித்து "இதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வருகிறீர்கள் என்றெல்லாம் கூட பேசினார்கள். நான் கொஞ்சம் கடுமையாக என்னுடை உணர்வுகளை வெளிப்படுத்தவேண்டிய ஒரு நெருக்கடிக்கு ஆளானே இப்படிப்பட்ட விவரங்களை நான் பேரவையிலே சொல்ல முடியவில்லை ஆகவே, இந்தச் சந்தேகங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டாம். இ இருக்கின்ற ஐயப்பாடுகள் களையப்படும். குறைகள் இருந்தால் அவை நிவர்த்தி செய்யப்படும். அவற்றை எந்த நேரத்திலும் உறுப்பினர்கள் எடுத் காட்டலாம், சுட்டிக்காட்டலாம். அப்படிப்பட்ட தவறுகள் நிகழா அரசாங்கம் மிகவும் முக்கியமாகக் கவனித்து பரிசீலித்து நடவடிக்கைகள் ஈடுபடும் என்று சொல்லிக்கொள்கிறேன். இறுதியாக, நம்முடைய மாண்பு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தனியார் காடுகளை வைத்துக்கொ "அதைப் பாதுகாக்கிறோம் என்று ஏன் இப்படி ஒவ்வொரு தடவையும் சட்டம் கொண்டு வருகிறீர்கள்?" என்று கேட்டார்கள். தனியார் காடுகளை ...த்துக்கொள்ள வகைசெய்யும் சட்டம் விரைவில் வரப்போகிறது. ம ...ராவிலே, கேரளாவிலே அப்படிப்பட்ட சட்டங்கள் நிறைவேற்ற ...ருக்கின்றன. அந்தச் சட்டங்களை நம்முடைய சட்டத் துறை ஆய்ந் ...ண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத் தொடரிலேயே அது வந்திருக்கும் ...லே சில சந்தேகங்கள் எழுப்பப்பட்ட காரணத்தினாலே அவைகளை ...லித்துக் கொண்டிருக்கிறோம். இதை இன்றைக்கு இங்கே ...ிப்பதன் மூலம் கூட தனியார் காடுகளை வைத்திருப்பவர்கள் கொ





விழிப்படைவார்களானால், விழிப்படைந்தாலும், அவர்களை நாங்கள் விட மாட்டோம். காரணம் யார் மீதும் தனியாக எந்தவித காழ்ப்புணர்ச்சி கொண்டும் கொண்டுவரப்படுவதல்ல இந்தச் சட்டம். பெரிய காடுகளுக்கு உள்ளே திட்டுகளைப்போல தங்களுடைய காடுகளை வைத்துக்கொண்டு இவர்கள் "எங்களுடைய காடுகளிலேயிருந்து வெட்டிக்கொண்டு வருகிறோம்" என்று சொல்லிவிட்டு, நம்முடைய காடுகளிலே இருந்து வெட்டிக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் சொன்னீர்களே, கூப்பு கான்ட்ராக்ட் எடுப்பவர்களைப் பற்றி. இவர்கள் கூப்பு கான்ட்ராக்ட் எடுத்துக்கொண்டு உள்ளே போனவுடனே கூப்பு எடுத்த பகுதியிலே வெட்டுவதில்லை. இந்தக் கூப்புக்கு என்று எந்தப் பகுதியை நாம் ஏலம் விடுகிறோமோ அந்தப் பகுதியை விட்டுவிட்டு இன்னொரு பகுதியிலே, அரசாங்கப் பகுதியிலே தான் அவன் வெட்டுவது வழக்கம். வெட்டிவிட்டு ஆறு மாதகாலம் முடிந்ததற்குப் பிறகு "நான் இன்னும் வெட்ட வில்லை எனக்கு எக்ஸ்டென்ஷன் கொடு" என்று கேட்பதுதான் இதுவரை வாடிக்கையாக இருந்து வந்திருக்கிறது. அதனாலேதான் சமீப காலத்திலே இந்த விறகுக்கான கூப் வெட்டுவதைக் கூட தடுத்து நிறுத்தினோம். அதன் காரணமாக இன்றைக்கு விறகுக்குக் கொஞ்சம் தட்டுப்பாடு வந்திருப் பதையொட்டி உடனடியாக சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். இதிலே என்ன முறைகேடுகள் நடந்துகொண்டிருந்தன என்பதையெல்லாம் கண்டு பிடித்துவிட்டோம். ஆனால் இவைகளைத் தீர்ப்பதற்கு கொஞ்சம் நாளாகும். இது நேற்று ஏற்பட்ட ஜுரம் அல்ல. இன்றைக்கு 'மெட்ராஸ் ஐ' என்று சொல்கிறோமே, அதைப்போல மூன்று நாட்களிலே போகின்ற கண் வலியும் அல்ல. இது ஆண்டாண்டு காலமாக புரையோடிப் போயிருக்கின்ற நோய். இதைத் தீர்ப்பதற்கு கொஞ்சம் நாளாகும். ஆனால் இது 'கேன்சர்' போல ஆளைத் தீர்த்துவிடுகிற அளவுக்கு நிச்சயமாக விட்டுவிட மாட்டோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 7-40)

தேவையான நடவடிக்கைகளை எடுத்து இந்த வனங்களைப் பாதுகாப்போம். இதற்கு சட்டப் பேரவையிலேகூட நான் ஒரு உதாரணத்தைச் சொன்னேன். உலகத்தில் வனங்கள் எவ்வாறு காப்பாற்றப்படுகின்றன என்பதை இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

இரண்டாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ரஷ்ய நாட்டைச் சேர்ந்த லெனின்கிராட் நகரம் எதிரிகளாலே நான்கு புறங் களிலும் முற்றுகையிடப்பட்டுவிட்டது. லெனின்கிராட் நகரத்தில் மட்டுமல்ல,

[திரு. இராம வீரப்பன்] [1979 நவம்பர் 13

ரஷ்ய நாடு முழுவதும் மரங்களை வைத்து மிகுந்த அக்கறையோடு வளர்த்து
வருகிறார்கள். அங்கேயிருக்கிற மரங்களை யாரும் வெட்டக்கூடாது. அந்த
வகையில் லெனின்கிராடு நகர மக்கள் சாலையோரங்களில் மிக அழகான
மரங்களை வைத்து அற்புதமாக வளர்த்து வந்திருந்தார்கள். அந்த மரங்களில்
யாரும் கை வைக்கக்கூடாது, வெட்டக்கூடாது என்பது அரசாங்கத்தின்
கண்டிப்பான ஆணை. ஆனால் மாதக் கணக்கில் லெனின்கிராடு நகரம் எதிரி
களால் முற்றுகையிடப்பட்டுவிட்டது. லெனின்கிராட் மக்களுக்கு எண்ணெய்
இல்லை, எரிபொருள் இல்லை, விறகுக்குப் பஞ்சம் வந்துவிட்டது. பொது
மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில்
போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, முற்றுகை நீடித்துக் கொண்டி
ருக்கிறது. இந்த அளவு போராட்டத்திலும்கூட லெனின்கிராட் நகரத்து
மக்கள் அப்போது ஒரு மரத்தைக்கூட வெட்டாமல் பாதுகாத்தார்கள்
என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த வரலாற்றை நேற்று
பேரவையிலும் சொன்னேன், இங்கேயும் சொல்லுகிறேன். அந்த உணர்வின்
அடிப்படையில்தான் இந்தத் திருத்தங்கள் இங்கே கொண்டு வரப்படுகின்றன.
தனிப்பட்டவர்களை, சட்டத்தை மதிக்கின்றவர்களை எந்தக் காரணத்தைக்
கொண்டும் பாதிப்பிற்கு உள்ளாக்க வேண்டும் என்று இதைக் கொண்டுவர
வில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் சட்டத்தை மதிப்பவர்கள் ஒரு
சதவீதம் கூட பாதிக்கப்பட மாட்டார்கள். அதுமட்டுமல்ல, தனியார்
காடுகள் விரைவிலேயே அரசாங்க மயமாக்கப்படும். அவைகள் தேசிய
சொத்துக்களாக, மக்கள் காடுகளாகப் பராமரிக்கப்படுகிற நிலைமையை
உருவாக்க இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்த நோக்கங்களை உறுப்பி
னர்கள் அனைவரும் வரவேற்று சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே
எழுப்பிய சந்தேகங்களுக்கு நான் தெரிவித்த கருத்துக்கள் நல்ல விளக்கங்
களாக அமைந்திருக்கும் என்று கருதி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ
தான் அவர்கள் தமது திருத்தத்தை இன்னும் முன்மொழியவில்லை என்ற
போதும்கூட—தமது திருத்தத்தை திரும்பப் பெற வேண்டுமென்று பணிவன்
போடு கேட்டுக்கொண்டு—இந்த நேரத்திலேயே இத்தகைய கோரிக்கையை
விடுவதன் மூலம் பிறகு கேட்டுக்கொள்கிற அந்த வேலையும் குறையும் என்ற
அடிப்படையில்—இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும்
என்று கேட்டு அமைகிறேன்,



1979 நவம்பர் 13]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு, தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணை தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

## Clause 6

THIRU A. R. DAMODARAN: Sir, I move the following amendment:—

"In clause 6, *add* the following as second proviso:

'Provided further that where permission is refused under section 6, clause 1 (*b*), the Government will pay such compensation as may be prescribed for loss to life and property that may arise as a result of such refusal.'"

@ 250-254 ஆம் பக்கங்களில் இணை

X*V



THIRU C. R. LAKSHMIKANDHAN: I second the amendment.

* THIRU A. R. DAMODARAN: Sir, I have moved this amendment just because I wanted half a minute to say something. I would like to thank the Hon. Minister for his very lucid exposition of the subject which we all appreciate. Perhaps it requires a very much more cultured, sophisticated audience to understand all the ideas that he has mentioned. We are in full agreement. Even when I stand for moving this amendment, I still want to bring to the notice of the Hon. Minister that we are all fully alive to the need for protection of our forests and I will be the last person to come in the way of sanction to any sort of prohibition in our forests. I wanted to point out that even in Kodaikanal, there was a rule that within 100 feet of the road which surrounds the lake no tree should be cut and no house should be built. That rule has also been flagrantly violated during the recent past. In this instance, the Hon. Minister mentioned about my house having been built in forest. I would like to tell him, since he is the Minister for Tourism also, he himself had built a Tourist Lodge where at least 25 big eucalyptus trees have been cut. So, trees will be cut only if it is absolutely necessary to build a house. My only fear is that when the provision is very strict, if there is a real danger to life and to the property, there will be difficulty. I am not speaking about half a dozen trees even. Perhaps even one tree may pose a danger. I would request that at least executive instructions may be given to see that in case there is danger to life and property the provision for granting permission to cut the trees shall not be refused. Whatever may be our desire to protect the forests, we cannot fail to respect human life and dignity. In India we never consider human life and human dignity at all. Although we praise and we talk very much in terms of these virtues, human life and human dignity have always been at a discount. My intention in bringing this to the attention of the Hon. Minister is this. Human life should also be respected while we should be equally anxious to protect our trees.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே விளக்கத்தையும் உறுதிமொழியையும் தந்திருக்கிறேன். எனினும் மீண்டும் அதைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் வீடுகளைச் சுற்றியிருக்கிற மரங்களில் ஒன்றிரண்டு ஆபத்தான நிலையில் இருப்பதாகக் கருதி அவைகளை வெட்டுவதற்கோ,

[திரு. இராம. வீரப்பன்] [1979 நவம்பர் 13

அகற்றுவதற்கோ, அங்கே விழுந்துவிடும் மரங்களை எடுத்துப் போவதற்கோ எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தடையில்லாமல் நிச்சயமாக இந்த அரசு பார்த்துக்கொள்ளும். தேவையான அரசாங்க ஆணைகளை இதன் அடிப் படையில் முன்பே சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வனத்துறை அதிகாரிகளுக்கும் பிறப்பித்திருக்கிறது. எனவே மீண்டும் அந்த உறுதிமொழியை வலியுறுத்தும் வகையில் தனியார்களுக்குச் சங்கடங்கள் நேராதவாறு அரசு நிச்சயமாக அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெறுகிறாரா?

THIRU A. R. DAMODARAN: Sir, I thank the Hon. Minister for his assurance and I withdraw my amendment.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 6, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 7 முதல் 15 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்**: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"



1979 நவம்பர் 13]

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 1. கேள்வி நேரம் கைவிடப்படல்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்**: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ் 15—11—1979 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்**: அவை முன்உள்ள பிரச்சினை :

"சட்டமன்ற மேலவை விதி 22-ன் கீழ், 15—11—1979 அன்று கேள்வி நேரம் கைவிடப்படலாம்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 15—11—1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

அவை, பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

(814 ஆம் பக்கத்தில் இனம் 4 (8)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L.A. BILL No. 69 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Perarignar Anna University of Technology Act, 1978.*

**Be** it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Perarignar Anna University of Technology (Second Amendment) Act, 1979.

(2) (*a*) Section 2 shall be deemed to have come into force on the 1st November 1979.

(*b*) Section 4 shall be deemed to have come into force on the 4th September 1978.

2. *Amendment of section 34, Tamil Nadu Act 30 of 1978.*—In section 34 of the Perarignar Anna University of Technology Act, 1978 (Tamil Nadu Act 30 of 1978) (hereinafter referred to as the principal Act), for sub-section (2), the following sub-section shall be substituted, namely :—

"(2) Notwithstanding anything contained in sub-section (1) or any other provisions of this Act, every person who, immediately before the appointed day, was a student of—

(i) the College of Engineering, Guindy, Madras or of any of the institutions specified in item (1) of Schedule I ; or

(ii) the M.E. or M.Sc. (Applied Mathematics) Courses of the Madras Institute of Technology,

shall be admitted to the examinations held or conducted by the University of Madras and the corresponding degree, diploma or other academic distinctions of the University of Madras shall be conferred upon the qualified students on the result of such examination, by the University of Madras.".

3. *Amendment of section 36, Tamil Nadu Act 30 of 1978.*—the proviso to clause (a) of sub-section (4) of section 36 of the principal Act, the words "except with the previous approval of the Chancellor" shall be omitted.

In section 37 of the Principal Act, for the expression "the employees referred to in sub-section (1) of section 36 as on the date to be specified in the order under clause (*a*) of the said sub-section (1) ", the expression "the employees referred to in sub-sections (1) and (2) of section 36 as on the dates of their becoming employees of the University" shall be substituted.

5. *Amendment of Schedule II Tamil Nadu Act 30 of 1978.*—In Schedule II to the principal Act, in Statute 9, in clause (1).—

(i) in item (*d*) for the words "ten Professors", the words "fifteen Professors" shall be substituted;





(ii) in item (*e*), for the words "five Teachers", the words "seven Teachers" shall be substituted;

(iii) for item (*h*), the following item shall be substituted, namely :—

"(*h*) one officer dealing with the subject of Higher Secondary Education in the Education Department to be nominated by the Government;" ;

(iv) after item (*s*), the following item shall be inserted, namely :—

"(*ss*) all Heads of Departments and Heads of Centres of the University;" ;

(v) in item (*t*), for the expression "items (*a*) to (s) ", the expression "item (*a*) to (*s*) and item (*ss*) " shall be substituted.

## இணைப்பு XI

(884 ஆம் பக்கத்தில் இனம் 4 (9)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 70 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Amendment Act, 1979.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 33, Tamil Nadu Act 29 of 1974.*—For sub-section (2) of section 33 of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974), the following sub-section shall be substituted, namely :—

"(2) A private school may invest or deposit its funds—

(a) in the State Bank of India constituted under the State Bank of India Act, 1955 (Central Act 23 of 1955) ; or

(*b*) in a subsidiary bank as defined in the State Bank of India (Subsidiary Banks) Act, 1959 (Central Act 38 of 1959); or

(*c*) in any corresponding new bank as defined in the Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act 1970 (Central Act 5 of 1970) or Post Office Savings Bank; or

(*d*) in any of the securities specified in section 20 of the Indian Trusts Act, 1882 (Central Act II of 1882); or

(*e*) in such mode as may be prescribed."

## இணைப்பு XII

*(885 ஆம் பக்கத்தில் இனம் 4 (10)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)*

## L.A. BILL No. 76 OF 1979.

(As passed by the Assembly)

*A Bill further to amend Madras University Act, 1923 and the Madurai-Kamaraj University Act, 1965.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth Year of the Republic of India as follows:—

### PART I.

### PRELIMINARY.

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras University and Madurai-Kamaraj University (Second Amendment) Act, 1979.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

### PART II

### AMENDMENTS TO THE MADRAS UNIVERSITY ACT, 1923.

2. *Amendment of section 14, Tamil Nadu Act VII of 1923.*—In section 14 of the Madras University Act, 1923 (Tamil Nadu Act VII of 1923) (hereinafter referred to as the 1923 Act), in Sub-section (*a*) under the heading "*Ex-Officio Members*" item (4) shall be omitted.



3. *Amendment of section 18, Tamil Nadu Act VII of 1923.*—In section 18 of the 1923 Act, in sub-section (*a*), under the heading "*Ex-officio Members*",—

(i) item (1) shall be renumbered as item (1-A);

(ii) before item (1-A) as so renumbered, the following item shall be inserted, namely:—

"(1) The Secretary to Government in charge of Education;".

4. *Amendment of section 26, Tamil Nadu Act VII of 1923.*—In section 26 of the 1923 Act, in sub-section (1), for item (ii), the following item shall be substituted, namely:—

"(ii) The Secretary to Government in charge of Finance or any officer nominated by him".

### PART III.

### AMENDMENTS TO THE MADURAI-KAMARAJ UNVERSITY ACT, 1965.

5. *Amendment of section 15, Tamil Nadu Act 33 of 1965.*—In section 15 of the Madurai-Kamaraj University Act, 1965 (Tamil Nadu Act 33 of 1965) (hereinafter referred to as the 1965 Act), in sub-section (*a*), under the heading "*Class I—Ex-officio Member,*" item (4) shall be omitted.

6. *Amendment of section 19, Tamil Nadu Act 33 of 1965.*—In section 19 of the 1965 Act, in sub-section (*a*), under the heading "*Class I—Ex-officio Members*",—

(i) item (1) shall be renumbered as item (1-A);

(ii) before item (1-A), as so renumbered, the following item shall be inserted, namely.—

"(1) The Secretary to Government in charge of Education;".

7. *Amendment of section 29, Tamil Nadu Act 33 of 1965.*—In section 29 of the 1965 Act, in sub-section (1), for item (ii), the following item shall be substituted, namely:—

"(ii) The Secretary to Government in charge of Finance or any officer nominated by him;".

இணைப்பு XIII

(888ஆம் பக்கத்தில் இனம் 4 (11)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 67 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Preservation of Private Forests Act, 1949.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirtieth year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Preservation of Private Forests (Second Amendment) Act, 1979.

(2) It shall come into force at once.

2. *Amendment of section 1, Tamil Nadu Act XXVII of 1949.*—In section 1 of the Tamil Nadu Preservation of Private Forests Act, 1949 (Tamil Nadu Act XXVII of 1949) (hereinafter referred to as the Principal Act), in sub-section (2)—

(*a*) in clause (iii), for the figures and words " 12 hectares" the figures and words " 2 hectares " shall be substituted.

(*b*) in the Explanation, for the figures and words " 12 hectares " and " District Collector ", the figures and words " 2 hectares " and " committee " shall respectively be substituted.

3. *Amendment of section 2, Tamil Nadu Act XXVII of 1949.*—In section 2 of the principal Act, clause (*a*) shall be relettered as clause (*aa*) thereof and before clause (*aa*) as so relettered, the following clause shall be inserted (*aa*) a
the following clause shall be inserted, namely :—

" (*a*) ' committee ' means any committee constituted under section 2-A and having jurisdiction ; ".

4. *Insertion of new sections 2-A, 2-B and 2-C in Tamil Nadu Act XXVII of 1949.*—After section 2 of the principal Act, the following sections shall be inserted, namely :—

" 2-A. *Constitution of Committees.*—(1) The State Government may, by notification with effect from such date as may be



specified therein, constitute for each district a committee for the purpose of this Act, consisting of the following members, namely :—

(*a*) the District Collector as Chairman of the Committee ;

(*b*) the District Forest Officer having jurisdiction over the district ;

(*c*) the Tahsildar having jurisdiction over the area ;

(*d*) the Executive Engineer of the Agriculture Department in charge of soil conservation ;

(*e*) the Personal Assistant (General) to the Collector of the district, who shall be the Secretary of the committee.

2-B. *Meetings of Committees.*—(1) The committee may meet as often as may be necessary and shall, subject to the provisions of sub-sections (2) and (3), observe such rules of procedure in regard to transaction of business at its meetings (including the quorum at meetings) as may be prescribed by the State Government under this Act, provided that not more than two months shall elapse between one meeting of the committee and another.

(2) The Chairman of the committee or in his absence any member nominated by him in that behalf shall preside at a meeting of the committee.

(3) All questions at a meeting of the committee shall be decided by a majority of the votes of the members present and voting and in the case of an equality of votes, the Chairman of the committee or in his absence the person presiding, shall have a second or casting vote.

2-C. *Vacancy in committee, etc., not to invalidate acts or proceedings.*—No act or proceeding of the committee shall be deemed to be invalid by reason only of the existence of any vacancy in the committee or any defect in the nomination of a member thereto or on the ground only that more than two months have elapsed between one meeting of the committee and another.

5. *Amendment of section 3, Tamil Nadu Act XXVII of 1949*—In section 3 of the principal Act.—

(*a*) in sub-section (1), in clause (*a*), for the words " District Collector ", the word " committee " shall be substituted ;

(*b*) in sub-section (2), for the words " District Collector ", the word " committee " shall be substituted.

6. *Amendment of section 6-A. Tamil Nadu Act XXVII of 194*
—In section 6-A of the principal Act, in clause (iv), for t
words " District Collector ", the word " committee " shall be su
stituted.

7. *Amendment of section 8, Tamil Nadu Act XXVII of 194*
—In section 8 of the principal Act, for the words " Distri
Collector ", the word " committee " shall be substituted.

8. *Amendment of section 9, Tamil Nadu Act XXVII of 1949.*—
In section 9 of the principal Act, for the words "District Collecto
the word " committee " shall be substituted.

9. *Amendment of section 10, Tamil Nadu Act XXVII of 1949.*—
In section 10 of the principal Act, in sub-section (2), in clause (c
for the words " District Collector " the word " committee " sha
be substituted.

## இணைப்பு XIV

(918 ஆம் பக்கத்தில் இனம் 4 (12)க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 68 OF 1979.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Hill Stations (Preser vation of Trees), Act, 1951.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in th
Thirtieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be calle
the Tamil Nadu Hill Stations (Preservation of Trees) Amendmen
Act, 1979.

(2) It shall come into force at once.

2. *Amendment of long title and preamble to Tamil Nadu Ac*
*VII of 1955.*—In the long title and preamble to the Tamil Nadu
Hill Stations (Preservation of Trees) Act, 1955 (Tamil Nadu Act
XVII of 1955) (hereinafter referred to as the principal Act), for
the expression " hill stations " wherever it occurs, the expression
" hill areas " shall be substituted.



3. *Amendment of section 1, Tamil Nadu Act XVII of 1955.*—
In section 1 of the principal Act,—

(*a*) in sub-section (1), for the expression " Hill Station ", the expression " Hill Areas " shall be substituted.

(*b*) in sub-sections (2) and (3), for the expressions " hill stations ", " hill station " and " such station " wherever they occur, the expressions " hill areas " " hill area " and " such area " shall, respectively, be substituted.

4. *Amendment of section 2, Tamil Nadu Act XVII of 1955.*—
In section 2 of the principal Act,—

(*a*) for clause (*a*), the following clause shall be substituted, namely :—

" (*a*) " committee " means any committee constituted under section 2-A and having jurisdiction ;" ;

(*b*) in clause (e) for the expression "*Fort St. George Gazette*" the expression "*Tamil Nadu Government Gazette*" shall be substituted.

5. *Insertion of new sections 2-A, 2-B and 2-C in Tamil Nadu Act XVII of 1955.*—After section 2 of the principal Act, the following sections shall be inserted, namely :—

" 2-A. *Constitution of committee.*—(1) The Government may, by notification, with effect from such date as may be specified therein, constitute for each hill area a committee for the purpose of this Act consisting of the following members, namely :—

(*a*) the District Collector having jurisdiction as Chairman of the committee ;

(*b*) the District Forest Officer having jurisdiction over the hill area ;

(*c*) the Tahsildar having jurisdiction over the hill area ;

(*d*) the Executive Engineer of the Agriculture Department in-charge of soil conservation having jurisdiction over the hill area ;

(*e*) the Personal Assistant (General) to the Collector of the District, who shall be the Secretary of the Committee.

2-B. *Meetings of committee.*—(1) The committee may meet as often as may be necessary and shall, subject to the provisions of sub-sections (2) and (3), observe such rules of procedure in regard to transaction of business at its meetings (including the quorum at meetings) as may be prescribed by the Government under this Act, provided that not more than two months shall elapse between one meeting of the committee and another.

(2) The Chairman of the committee or in his absence any member nominated by him in that behalf shall preside at a meeting of the committee.

(3) All questions at a meeting of the committee shall be decided by a majority of the votes of the members present and voting and in case of an equality of votes, the Chairman of the committee or in his absence the person presiding, shall have a second or casting vote.

2-C. *Vacancy in committee, etc., not to invalidity acts or proceedings.*—No act or proceeding of the committee shall be deemed to be invalid by reason only of the existence of any vacancy in the committee or any defect in the nomination of a member thereto or on the ground only that more than two months have elapsed between one meeting of the committee and another."

6. *Amendment of section 3, Tamil Nadu Act XVII of 1955.*—For sub-section (1) of section 3 of the principal Act, the following sub-section shall be substituted, namely :—

"(1) *No person shall, without the previous permission in writing of the committee*—

(*a*) cut, uproot or burn, or cause to be cut, uprooted or burnt, any tree, or

(*b*) fell or remove any tree which, constitutes danger to life or property, or is dead or diseased or windfallen, or has silviculturally matured, or

(*c*) cut or remove any tree for the improvement of coffee crop in any coffee plantation in such area in any hill area as the Government may, by notification, specify in the behalf :

Provided that where permission to cut, remove a tree is granted on the grounds referred to in clause (*a*) to (*c*) above, the committee, shall impose as a condition the effective regeneration of an equal number of the same or other suitable species of



trees, and for that purpose, may require the person to whom the permission is granted to deposit with the committee a sum not exceeding one hundred rupees for each tree permitted to be cut or removed ".

7. *Amendment of section 4, Tamil Nadu Act XVII of* 1955.—In section 4 of the principal Act,—

(*a*) in sub-section (2), for the expressions "Collector who" and "he", the expressions "committee which" and "it" shall, respectively, be substituted;

(*b*) in sub-section (3), for the expression "hill station", in both places where it occurs and for the expressions "collector who" and "he", the expressions "hill area", "committee which" and "it" shall, respectively, be substituted.

8. *Amendment of section 5, Tamil Nadu Act XVII of* 1955.—In section 5 of the principal Act, for the word "Collector", the word "committee" shall be substituted.

9. *Amendment of section 6, Tamil Nadu Act XVII of* 1955.—In section 6 of the principal Act, for the exppression "Prefer an appeal in writing to such officer as may be prescribed and such officer shall, after giving the appellant an opportunity of being heard, pass such order thereon, as he may think fit", the following expression shall be substituted, namely :—

"prefer an appeal in writing to the Government and the Government shall, after giving the appellant an opportunity of being heard, pass such order thereon, as they may think fit."

10. *Amendment of section 7, Tamil Nadu Act XVII of* 1955.—In section 7 of the principal Act, for the words "with fine which may extend to five thousand rupees", the words "with imprissionment which may extend to one year, or with fine which may extend to five thousand rupees, or both" shall be substituted.

11. *Omission of section 9, Tamil Nadu Act XVII of* 1955.—Section 9 of the principal Act shall be omitted.

12. *Amendment of section 10, Tamil Nadu Act XVII of* 1955.—In section 10 of the principal Act, for the expression "Collector" and "his" the expressions "committee" and "its" shall, respectively, be substituted.

13. *Amendment of section* 11, *Tamil Nadu Act XVII of* 1955.—In section 11 of the principal Act, for the word "Collector", the word "committee" shall be substituted.

14. *Amendment of section* 13, *Tamil Nadu Act XVII of* 1955.—In section 13 of the principal Act, for the expression "Code of Criminal Procedure, 1898 (Central Act V of 1898)", the expression "Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974)" shall be substituted.

15. *Construction of reference to "Tamil Nadu Hill Stations (Preservation of Trees) Act".*—References to the Tamil Nadu Hill Stations (Preservation of Trees) Act, in any Act or in any rule, notification, proceeding, order regulation, by-law or other instrument made or issued under such Act, or rules, orders or notifications made or issued under the principal Act shall be construed as references to "the Tamil Nadu Hill Areas (Prservation of Trees) Act."

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1979 நவம்பர் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

**மழையால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சிசுந்தரம், திரு. ப. மாணிக்கம், திரு. ம. சங்கரலிங்கம் ஆகியோர் மழையால் தென் மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 6 நாட்களாக தொடர்ந்து நம்முடைய நாட்டிலே பெருத்த மழைபெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக ஏறத்தாழ 18 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். மேட்டுப்பாளையம் உதகைப் பகுதியில் காட்டேரியில் நிலச்சரிவு ஏற்பட்டிருக்கிறது. மணப்பாறையில் குடிசைகள் விழுந்திருக்கின்றன. நெய்வேலியிலே இணைப்புகள், சாலைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சையில் ஏறத்தாழ மூன்றாயிரம் ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கி பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக கடைமடைப் பகுதிகளாகிய மன்னார்குடி, திருவாரூர், நாகை, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய பகுதிகள் மிகப் பெரும் பாதிப்புக்கு இலக்காகியிருக்கின்றன. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குடிசைகள் நீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக விலைவாசி யேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாக வெங்காயத்தின் விலை கூட அதிகமாகி இருக்கிறது. மண்ணெண்ணெய்க்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இதுபற்றியெல்லாம் நாம் ஆய்ந்து விரிவாக விவாதித்து பரிகாரம் தேடுவதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்காக இந்த அவையினுடைய பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சமீபத்தில் ஒரு வார காலமாகப் பெய்த மழையின் காரணமாக நெல்லை மாவட்டத்தில் மிகப் பெரிய சேதாரம் ஏற்பட்டிருக்கிறது. வந்திருக்கக் கூடிய விவரங்களைப் பார்த்தால், சில உயிர்களுக்கு நாசம் ஏற்பட்டிருக்கின்றது என்று தெரிகிறது. இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்குமென்று நம்பப்படுகிறது. தாழ்ந்த பகுதிகளில் கட்டப்பட்டிருந்த குடிசைகள் அழிக்கப்பட்டுவிட்டன. அது மட்டுமல்ல கால்நடைகள் சேதாரமும் ஏற்பட்டிருக்கின்றது. பல கண்மாய்கள், குளங்கள் நிரம்பியிருப்பதால், எந்த நேரத்திலும் உடைந்துவிடலாம் என்ற அச்சம் இருக்கிறது. மழையின் காரணமாக தஞ்சை மாவட்டத்திலே பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது. துரிதமான நிவாரணம் இல்லாவிட்டால், கஷ்டங்கள் அதிகமாகும். குறிப்பாக விவசாயப் பகுதி பெரிதும் பாதிக்கப்படும். சென்னை நகரத்திலே கூட தாழ்ந்த பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கிக் கிடக்கிறது. ஆண்டுதோறும் இப்படிப்பட்ட துன்பத்திற்கு மக்கள் ஆளாக வேண்டியிருக்கிறது. தாழ்ந்த பகுதி மக்களுக்கு இப்படிப்பட்ட ஆபத்து ஆண்டுதோறும் ஏற்படுகிறது. குறிப்பாக நெல்லை மாவட்டம், தஞ்சை மாவட்டம், சென்னை போன்ற இடங்களில் மிகப்பெரிய சேதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதுகுறித்து துரித நடவடிக்கை தேவை. இராமநாதபுரம் மாவட்டத்திலே, நெல்லை மாவட்டத்திலே கண்மாய்கள் குளங்கள் நிரம்பியிருப்பதால், அணை உடையக்கூடிய ஆபத்து இருக்கிறது. மேற்கொண்டு ஒரு நாள் மழை பெய்தால்கூட, பல கண்மாய்கள் உடைந்து விடுமென்ற அச்சம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். அதிலே சிறிய கலக்கம் இருப்பதாக எனக்குக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது. ஆகவே இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம்:** தலைவர் அவர்களே, கழிந்த சில நாட்களாக தமிழகம் எங்கும் பெய்து வருகிற மழையால் பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 28 பேர் இறந்தனர் என்ற செய்தி இன்று வந்திருக்கிறது. 1[illegible] லிருந்து தொடங்கி இன்று காலை செய்தி 28 பேர் என்று வந்திருக்கிறது. இது இன்னும் பெருகுவதை நாம் தடுக்க விரும்பினாலும் கூட, பெருகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சுமார் 70 ஏரிகள் உடைந்து, பஸ் நிலையத்திலே இரண்டு அடி தண்ணீர் தேங்கி நின்று போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான குடிசைகள் விழுந்து மக்கள்



பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே மாத்திரம் 12 பேருக்கு மேல் இறந்ததாகச் செய்தி வந்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிவிப்பில் 20 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலும் இதே நிலை. பல குளங்கள் உடைந்து பயிர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல குடிசைகள் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் தண்ணீரில் மூழ்கிக் கிடக்கின்றன. குன்னூர், ஊட்டி போன்ற இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, அங்கு பல்லாயிரக்கணக்கான நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சென்னைப் பெருநகரில் தாழ்ந்த பகுதியில் ஆயிரக்கணக்கான குடிசைகள் பாதிக்கப்பட்டு, ஏறத்தாழ ஒரு லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வளவு பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இதற்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருப்பதாகச் செய்திகள் வாயிலாகவும், வானொலியின் மூலமாகவும் நாங்கள் கேட்கிறோம். எனவே, இந்த மன்றத்தில், என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள், என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அந்தந்த வட்டாரத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகள் எதிர்பார்க்கிறார்கள் என்று விவரங்களை அறிவிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், 1978 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மழையின்போது திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட உடைப்புகளைச் சரியாக அடைக்காததால்தான், மீண்டும் இந்த உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்தால், இல்லையென்று பதில் அளித்தாலும், அது உண்மை என்பதை மழை நிரூபித்துக்காட்டிய பிறகு, என்னுடைய எடுத்துக்காட்டு உண்மை என்பதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. இதனால் ஏற்பட்டுள்ள மக்களுடைய பிரச்சினைகள், நிவாரணப் பிரச்சினைகள் ஆகியவற்றை விவாதித்து மக்கள் நலம் காணுகிற நிலையில் நல்ல நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுகிற வகையில் இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மேலவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள மத்திய அரசு வானிலை நிலையம் 26—10—1979 அன்று ஸ்ரீலங்கா கடற்கரைக்கும் தமிழ் நாடு கடற்கரைக்கும் தென்மேற்குப் பகுதியில் குறைந்த காற்றழுத்த மண்டலம் உருவாகி இருப்பதன் விளைவாக தென் கிழக்குப் பருவ மழை கடற்கரையோரப் பகுதிகளில் வலுவடைந்துள்ளதாகவும், இதன் விளைவாக செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், புதுக்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 15

கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்
களிலும் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் கனத்த மழை பெய்யக்
கூடும் என எச்சரித்தது. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும்
சென்னை மாநகராட்சி தனி அலுவலருக்கும் இச்செய்தி தெரிவிக்கப்பட்டு,
தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டனர்.

வருவாய் வாரிய உறுப்பினரும் நிவாரண ஆணையருமான திரு. ஆர்.
நடராஜன், ஐ. ஏ. எஸ். அவர்களும் 31—10—1979 பிற்பகலில் சென்னை
மாநகராட்சியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கூட்டம் கூட்டி, சென்
னையை எதிர்நோக்கியிருக்கும் கனத்த மழையினால் ஏற்படும் விளைவுகளை
சமாளிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை விளக்கிக்கூறி, மக்களுக்கு
ஏற்படும் துயரினைத் துடைப்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தில் எடுத்த முடிவுக்கேற்ப மாந
ராட்சி தனி அலுவலர் ஒவ்வொரு துறையிலும் தங்கள் பணிகளைச் செவ்வனே
செய்ய வேண்டுமென சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அவ்வப்பொழுது வானிலை நிலையத்திலிருந்து பெறப்பட்ட செய்திகள்
மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்மாதிரியான இயற்கை இடர்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைப்
பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி
யும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெயையும், ஒரு புடவையும், ஒரு வேட்டியும் இலவச
மாகக் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், கோட்டாட்சித்
தலைவருக்கும் ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும்
குடிசை முழுவதும் சேதமடைந்தால் ரூ. 100-ம், குடிசையின் ஒரு பகுதி சேத
மடைந்தால் ரூபாய் ஐம்பதும், வீடுகளை மீண்டும் கட்டுவதற்கு மானியமாகக்
கொடுக்கப்படுகிறது.

8—11—1979 அன்று இரவு பெய்த பெருமழையின் விளைவாக தாமிர
பரணி ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டது எனவும், திருநெல்வேலி ஜங்ஷன் மையப்
பேருந்து நிலையத்தில், இரண்டடி அளவிற்கும் தண்ணீர் உள்ளது என்றும்,
13 குளங்களில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், வெள்ளத்தினால்
பாதிக்கப்பட்ட பகுதிகளை செயற் பொறியாளருடனும், திருநெல்வேலி கோட்
டாட்சித் தலைவருடனும் சுற்றிப்பார்த்து நிவாரணப் பணிகளை மேற்கொண்
டுள்ளதாக, நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் 9—11—1979 அன்று
அரசுக்குத் தகவல் அனுப்பியுள்ளார். 10—11—1973 அன்று குளங்களில்
உடைப்புகள் எல்லாம் செப்பனிடப்படுகின்றன என்றும், பாதிக்கப்பட்ட
மக்கள் ஒன்பது நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, ஒவ்வொரு



1979 நவம்பர் 15] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

(முற்பகல் 10-10)

குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி வழங்குவதாகத் தெரிவித்தார். 12—11—1979
தேதியிட்ட அறிக்கையில் நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர்
முதலமைச்சரின் ஆணைக்கேற்ப பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்
ஒவ்வொருவருக்கும் 30 கிலோ அரிசி, ஒவ்வொரு நாளைக்கும் 5 கிலோ வீதம்,
10—11—1979-லிருந்து வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். தொழிலாளர்
நல அமைச்சரும் தானும் திருநெல்வேலி டவுன், பேட்டை, தச்சநல்லூர்
ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறி, நிவாரணப்
பணிகளை துரிதமாக நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்
தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலகத்திலிருந்து சேதங்களைப் பற்றித் தெரிவிக்கப்பட்ட விவரங்கள்,
உயிரிழப்பு 7, ஆண் 4, பெண் 3, காணாமல் போனவர் 1 பெண், கால்நடை
இழப்பு 1, குடிசைகள் முழுச் சேதம் 586, பகுதிச் சேதம் 430.
4,603 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 13—11—1979 வரை 23,310 கிலோ
கிராம் அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. குடிசை புனரமைப்பு
நிவாரணத் தொகையாக ரூ. 16,380, 188 பேர்களுக்கு 13—11—1979 வரை
வழங்கப்பட்டுள்ளது. பயிர்ச் சேதம் 1,529 ஏக்கர்கள். வேளாண்மைத்
துறை அமைச்சரும், உணவுத் துறை அமைச்சரும் வருவாய் வாரிய
உறுப்பினர், திரு. இராமச்சந்தரும், நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட
பகுதிகளை 14—11—1979 அன்று நேரில் பார்வையிட்டு மேலும் தேவையான
நிவாரணப் பணிகளைச் செய்வதில் முனைந்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் 13—11—1979 அன்று பெய்த மழையினால்
சுமார் 7,000 ஏக்கர் தாளடி பயிர்கள் ஒரு அடி தண்ணீரில் மூழ்கியிருந்தது
எனவும், 14—11—1979 அன்று பெரு மழையில்லாததால், தண்ணீர்
வடிந்து வருகிறது என்றும் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
தெரிவித்துள்ளது. இம்மாவட்டத்தில் சுமார் 120 குடிசைகள் பகுதிச்
சேதம் அடைந்துள்ளதாகவும், வட்டாட்சியர்கள் இச்சேதத்தினைத்
தணிக்கை செய்து குடிசை மானியத் தொகை வழங்குவது பற்றி நடவடிக்கை
எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் 12—11—1979 இரவிலும், 13—11—1979
அதிகாலையிலும் பெய்த பெருமழையின் விளைவாக 77-வது வட்டத்தைச்
சார்ந்த வத்தலக்குண்டு ஆறுமுகம் நகர், 122-வது வட்டத்தைச் சார்ந்த
தாமஸ் சாலை 110-வது வட்டத்தைச் சார்ந்த தங்கல்கரை 134 வது
வட்டத்தைச் சார்ந்த முத்தையாபுரம் மற்றும் நாராயணசாமித் தோட்டம்,

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர்

கபாலி வளைபோஜனத் தோட்டம் ஆகிய இடங்களில் தாழ்வான பகுதிக தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற மாநகராட்சி தக்க நடவடிக் எடுத்துள்ளது. வட சென்னை, தென் சென்னைப் பகுதிகளில் பாதிக்கப்ப மக்களுக்கு 75,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநகரா அலுவலர்கள் பாதிக்கப்பட்ட இடங்களையும் சாலைகளையும் சுற் பார்த்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளனர். இதில் உயிரிழ காணாமல் போனவர்கள் விவரம் தருகிறேன். திருநெல்வேலி மாவட்டத் இறந்தவர்கள் 7 பேர்கள், கால்நடை இழப்பு 1, செங்கல்பட்டு மாவட்டத் இறந்தவர்கள் 7 பேர்கள், கால்நடை 1, கோயம்புத்தூர் 4 பேர்க தஞ்சாவூர் மாவட்டத்தில் காணாமல் போனவர் 1, வட ஆற்க மாவட்டத்தில் இறந்தவர்கள் 3, தென்னாற்காடு மாவட்டத்தில் 2 பேர்க சென்னையில் இறந்தவர் 1, கால்நடை இழப்பு 1, ஆக மொத்த இறந்தவர்கள் 24, காணாமல் போனவர் ஒருவர், கால்நடை இழப்பு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதர மாவட்டங்களில் மழையினா அதிகச் சேதமில்லை. அண்மையில் பெய்த மழையினால் செட்டிப்பேட்டை சோழவரம், பூண்டி நீர்த்தேக்கங்களில் நீர்பிடிப்பு அதிகமாக உள்ளதா சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினை, வரும் கோடைக்காலத்தி இல்லாமல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக பயிர்களுக்கு இம்மழையினால் நன்மையெனக் கருதப்படுகிறது. பாதிக்கப்பட்ட இடங்களி தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், அவையை ஒத்திவைத்து இ குறித்து விவாதம் நடத்தத் தேவையில்லையெனக் கருதப்படுகிறது.

இன்னமும் சொல்லப் போனால், நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்ச அவர்கள் கோயம்புத்தூருக்குச் சென்று நிவாரணப் பணிகளில் தீவிரமா ஈடுபடவிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறபோது, நான் செய்தித்தாளிலே பார்த்தேன், வானொலியிலே கேட்டேன் என்று சொன்னார்கள் அது மட்டுமல்ல. அவர் அந்த இடங்களுக்குச் சென்று நிவாரணப் பணி எப்படி நடக்கிறது என்று பார்த்து, அது செம்மையாக நடைபெறவில்லை என்று சொன்னால், அவைகளைச் செய்வதற்கு நன்கு கவனிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் அங்கு வேலைகள் சுணக்கமாக நடப்பதாகச் சொன்னார்கள். அங்கு வேலைகள் சுணக்கமாக நடக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வானொலி மூலம் தெரிந்த அன்றிலிருந்து, 10 நாட்கள் முன்பே, செயலாற்ற வேண்டியவை களுக்கு, வேண்டிய உத்தரவுகளை நான் பிறப்பித்திருக்கிறேன் என்பது என்னுடைய அறிக்கையின் மூலமாகத் தெரியும். மாண்புமிகு அங்கத்தினர்



1979 நவம்பர் 15] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

அவர்கள் அப்படி ஏதாவது இருந்தால், எங்கே எப்படி சுணக்கம் இருக்கிறது என்று சொன்னால், அதைத் தீர்ப்பதற்கு வேண்டியவைகளைச் செய்ய இந்த அரசு முன்னுக்கு வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், பெருவாரியான மாவட்டங்கள் தர்மபுரி, இராமநாதபுரம் போன்றவைகளுக்கு இந்த மழையின் காரணமாக நன்மை ஏற்படுகிறது என்பதைச் சொல்கிறேன். ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இப்பொருள் குறித்து இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க அவசியம் இல்லை என்று என் அனுமதியை மறுக்கிறேன்.

(முற்பகல் 10.20)

## 2. தன்னிலை விளக்கம்.

(1) 13—11—1979 அன்று கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்திற்கு அளித்த பதில் குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுடைய தன்னிலை விளக்கம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில், ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க அருள்கூர்ந்து வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவரவர்களே, 13—11—1979 ஆம் நாளன்று கூட்டுறவுச் சட்டத் திருத்த முன்வடிவுகளின் மீதான விவாதத்தில் இம்மன்றத்தில் நான் பேசியபோது குடந்தை கூட்டுறவு மத்திய வங்கியின் பொறுப்பேற்று இருந்த காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் அந்த வங்கியின் சடங்களை எவ்வகையில் வசூலித்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில், அவர் கையெழுத்திட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றைக் குறிப்பிட்டுப் பேசினேன். நான் அந்தப் பத்திரிகைக் குறிப்பைக் கொண்டு வந்து இந்த அவையில் காண்பிக்கின்ற வரையில் அது பற்றி இங்கே எழுந்த விவாதங்களை வெளியிடாது நிறுத்தி வைப்பது நியாயம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தாங்களும் அதை ஏற்று தீர்ப்பளித்தீர்கள்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 நவம்பர் 15

நான் ஆதாரமாகக் குறிப்பிட்ட, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி
அவர்கள் கையெழுத்திட்டு வெளியாகியுள்ள அந்தப் பத்திரிகை அறிக்கையை
இந்த மன்றத்தில் படித்துக் காட்டி, தங்கள் அனுமதியோடு இந்த அவையின்
முன் இந்தக் குறிப்பை வைக்கிறேன்.

கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கியினால் நடத்தப்படும் கூட்டுறவு
மாத வெளியீடு 'குடந்தை கூட்டுறவுச் சுடர்' என்பதாகும். குடந்தை
மத்தியக் கூட்டுறவு வங்கியின் அதிகாரபூர்வமான கூட்டுறவுச் சுடர் அது.

1971 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் தீபம் 2, சுடர் 5 இதழில், அப்போது
கும்பகோணம் மத்திய வங்கியினுடைய தலைவராக இருந்த மாண்புமிகு
உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் தன் கையெழுத்திட்ட,
"வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்" என்ற தலைப்பில் அந்த அறிக்கையை
வெளியிட்டுள்ளார்கள்.

அந்த அறிக்கையில் முக்கியப் பகுதிகள் :

(1) வசூல் பணியில் கால தாமதம் :

எவ்வாண்டையும்விட இவ்வருட வசூல் பணி மிக முக்கியமானது. இ
ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தது. அரசியல் கட்சிக்காரர்க
ஒருவருக்கொருவர் வசூலில் பாரபட்சம் காட்டுகிறார்கள் என்
சொல்லுவார்களென்று கருதி, ஆரம்பத்தில் ஒரு மாத காலம் தாமதித்
வசூல் பணியைத் துவக்கினோம்.

(2) தவணை நீடிப்பு இல்லை :

நமது வங்கி எல்லையில் சில பகுதிகளில் விளைச்சல் குறைந்தத
காரணமாக, கடனைத் திருப்பிச் செலுத்த தவணை நீடிப்புக் கோ
பல விவசாயிகளும், விவசாய சங்கங்களும் வங்கி அனுமதியைப் பெ
நாடினர்.

ஆனால் சென்ற சாகுபடிக்குப் பெற்ற கடனைத் தீர்த்துவிட்டால், வரு
பயிர்க் காலத்தில் தட்டின்றி உடன் கடன் கிடைக்கும் என்
உறுதிமொழியும் உத்திரவாதமும் அளித்த பின்னர், பல இன்னல்களுக்
இடையே தவணை நீடிப்பு எதிர்நோக்கி நின்ற விவசாயிகளும், சங்கங்களு
கடனைத் தீர்த்து, புதிய சாகுபடிக்கு ஆண்டுக் கடன் மனு அனுப்ப
வைத்தனர்.



1979 நவம்பர் 15] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

(3) காவல் துறை உதவி :

இவ்வாண்டு வசூல் பணியில் ஈடுபட்டுள்ள வங்கியின் பணியாளர்கள்
பலவித சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தது. ஒருசில விவசாயிகள் வசூலுக்கு
கடும் எதிர்ப்பு காட்டியதன் காரணமாக காவல்துறை உதவியை நாட வேண்டிய
ஒரு சூழ்நிலை உருவாகியது.

(4) கட்டாய வசூல் :

வங்கி ஊழியர்களில் பலர் ஏச்சும் பேச்சும் ஏற்றனர். இருந்தபோதிலும்,
எப்படியும் விவசாயிகளிடம் இவ்வருடம் வசூலாக வேண்டிய கடனை
கட்டாயமாக வாங்கி, அவர்களை அடுத்த சாகுபடிக்கு கடன் வாங்க
அருகதையுள்ளவர்களாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன்தான்
வங்கி அலுவலர்கள், சங்கச் செயலாளர்கள் எதிர்ப்புகளுக்கும் சோதனை
களுக்கும் இடையே இம்மாபெரும் சாதனையைப் புரிந்துள்ளனர்.

(5) காவல் துறைக்கு நன்றி :

நமது வங்கி வளர்ச்சியில் நாட்டம் கொண்டு, வசூலில் எல்லாவித
ஒத்துழைப்பும், ஆலோசனையும் நல்கிய கூட்டுறவுத் துறை அலுவலர்கள்,
வேண்டும்போது விரைந்து வந்து, போதிய பாதுகாப்பு அளித்த காவல்
துறையினர், வங்கி நிர்வாக அலுவலர், செயலாளர் அனைவருக்கும் வங்கி
நிர்வாகக் குழு தன் நன்றியை உரித்தாக்குகிறது.

மேற்கண்ட கருத்துக்கள் அடங்கிய பத்திரிகை அறிக்கையினைத்தான்
ஆதாரமாகக் கொண்டு, தி.மு.க. அரசு ஆட்சி புரிந்தபோது விவசாயிகளிடம்
போலீஸ் துணையோடு கட்டாய வசூல் செய்தது என்ற விவரத்தை நல்ல
எண்ணத்தோடும், பொது நோக்கத்தோடும் 13—11—1979 அன்று
நடைபெற்ற கூட்டுறவுச் சட்டத் திருத்த முன்வடிவுகளின் மீதான விவாதத்தில்
எடுத்து வைத்தேன் என்பதனை எடுத்துக்கூறி, தங்களின் மேலான
அனுமதியோடு கண்ணியமிக்க இந்த அவையில் இந்தக் குறிப்பை
வைக்கின்றேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அளித்த
தன்னிலை விளக்கத்தில் அன்று அவர்கள் பேசியதற்கு, எந்தக்
காரணத்திற்காக முதலமைச்சரவர்கள் இருந்து, அதை அவைக்
குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அது விளக்கப்
படவில்லை. அவர்கள் சொன்னது, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி
அவர்கள் தலைவராக இருக்கக்கூடிய குடந்தை கூட்டுறவு சங்கத்தில்,

அவர்கள் போலீசை வைத்து, வன்முறையைப் பயன்படுத்தி, கட்டாயமாக வசூல் செய்து, அதனால் உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகளுக்காக அவர் மன்னிப்புக் கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார், கையெழுத்துப் போட்டிருக்கிறார், அது என்னிடத்தில் இருக்கிறதென்று சொன்னார்கள். உறுப்பினரவர்கள், அப்படியில்லை என்று சொன்னார். முதலமைச்சரவர்கள், அது வரும்வரை பேசிய பேச்சு நீக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அதிலிருந்து ஒரு படியை வாசித்துக் காட்டினார்கள். அதில் போலீஸ் துணை புரிந்தது என்று இருக்கிறது. வன்முறை என்றோ அதற்கு இவர் வருத்தம் தெரிவித்தார் என்றோ, கட்டாயப்படுத்தினார் என்றோ இல்லாததால், அன்று இருந்த நிலையே இருக்கிறது. எனவே இதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதுதான் முறை என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** அன்றைய தினம் நான் சொன்னது. . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** இரண்டு பேர் பேசிய பேச்சும் டெடெயில்டாக இருக்கிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர் களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் பேசிய பேச்சும் அவைக் குறிப்பில் இருக்கிறது. முதலமைச்சரவர்கள் தலையிட்டு இரண்டு பேர் வார்த்தைகளும் சம்பந்தமில்லாமல் இருப்பதால், மாண்புமி அமைச்சரவர்கள் ஆதாரத்தோடு அவைகளைச் சொல்லிய பின் வேண்டுமானால் அவைக் குறிப்பில் இருக்கலாமென்று சொன்னார்கள். அ குறித்து துணைத் தலைவரவர்கள் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். எனவே தலைவரவர்கள் அவைக் குறிப்பிலுள்ள பேச்சுக்களைப் பூராவும் பரிசீலித் பின்புதான் மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கம் சரியாக இருக்கிறத என்று சொல்ல முடியும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. மணி அவர்கள் சொன்னதை நீக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் கே வில்லை. அவர்கள் சொன்னதை உறுதிப்படுத்த சான்று இருக்கிறதென் சொன்னார்கள். அதுவும் சேர்ந்து நடவடிக்கைக் குறிப்பில் இருந்தால் என் தப்பு?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சரவர்கள் அன் சொன்னதும் இருக்கட்டும், இன்று படித்ததும் இருக்கட்டும். அதற்கு உ பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்ன பதிலும் இருக்கட்டுமென தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னதை நீக்கச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, அன்றைக்கு நான் சொன்னது, அவர்கள் கட்டாய வசூலில் ஈடுபட்டார்கள், அவர்கள் போலீஸ் துணையை நாடினார்கள், தவணை நீட்டிப்பு செய்யப்படவில்லை, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் நிர்பந்தத்தின்பேரில் வசூல் செய்தார்கள் என்பது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் கையெழுத்திட்ட அறிக்கை இருக்கிறதென்று என்னுடைய பேச்சுக் கூடே எடுத்துச் சொன்னேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதற்கு, அன்றைக்கு ஆதாரம் எங்கே, எங்கே என்று கேட்டார்கள். அந்த ஆதாரத்தை இங்கே கொண்டு வந்து அவையின் பரிசீலனைக்கு வைத்திருக்கிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவரவர்களே, தங்களுடைய தீர்ப்புக்குத் துணையாகத்தான் சொல்கிறேன். அன்று அமைச்சரவர்கள் பேசியதை, ஆதாரம் கொண்டுவரும்வரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தீர்ப்பு அன்று வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு விளக்கம் தந்துள்ளதால், அதுவும் குறிப்பேட்டில் ஏறி, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னதும் ஏறி, அமைச்சரவர்கள் பேசியதும், நான் பேசியதும் குறிப் பேட்டில் ஏறி, அன்று அவர் சொன்னதற்கு ஆதாரம் காட்டவில்லை, அன்று சொன்னது தவறான விளக்கமென்பதையும் குறிப்பேட்டில் ஏற்ற வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. மனோகரன் :** தலைவரவர்களே, ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நான் நிற்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கட்டான நிலை என்று சொன்னதற்குக் காரணம், இந்த விவாதம் நடை பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் நான் இந்த அவையிலே இல்லை. அதற்குப் பிறகு நான் கேள்விப்பட்ட செய்தியை வைத்துக்கொண்டுதான் நான் சொல் கிறேன். அன்றைய தினம் நடைபெற்ற அந்தப் பேச்சில் முக்கியமாக இருந்த அணுகு முறையை இன்று நான் அறிகிறேன். இவ்வளவு லட்சம் ரூபாயை எங்களால் வசூலிக்க முடிந்தது, உங்களாலே முடியவில்லை என்று சொன்ன தற்கு, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னபோது, 'நன்றி, ஆனால் உங்களுடைய அணுகுமுறை வேறு, எங்களுடைய அணுகு முறை வேறு, விவசாயிகளைத் தொல்லைப்படுத்தி, காவல் துறையினர் மூலம் கட்டாயப் படுத்தி, நாங்கள் வசூல் செய்யாத காரணத்தாலேதான் எங்களாலே அந்த

அளவிற்கு வசூல் செய்ய முடியவில்லை, எங்களது அணுகுமுறை இது' என்று சொல்லி, அவர் பயன்படுத்தியதாக எனக்குக் கிடைத்த செய்திகளெல்லாம் 'கட்டாயப்படுத்தப்பட்டது' என்ற ஒரு வார்த்தையை இங்கே அவர்கள் பயன்படுத்தினார் என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால் இங்கே இருக்கிற இந்தக் குறிப்பின்படி, திரு. கோ. சி. மணி அவர்கள் கையெழுத்துப் போட்டு, அச்சாகியிருக்கிற அந்த மலரில் குறிப்பிட்ட பகுதியில் இருக்கிற வாசகங்களை, உங்களுடைய அனுமதியோடு மீண்டும் படிக்க அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். "இவ்வாண்டு வசூல் பணியில் ஈடுபட்டுள்ள வங்கியின் பணியாளர்கள் பல்வித சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தது. ஒருசில விவசாயிகள் வசூலுக்குக் கடும் எதிர்ப்பு காட்டியதன் காரணமாக காவல்துறை உதவியை நாட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது" . . காவல் துறை உதவியை நாட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியது என்பதை தயவு செய்து எதிர்க் கட்சித் தலைவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை உதவியை நாட வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டன என்பதற்கு விளக்கமென்ன என்பதைப்பற்றி ஆழமாகச் சொல்லவில்லை. காவல் துறை உதவியை நாடினார்கள். வங்கி ஊழியர்களில் பலர் ஏச்சும் பேச்சும் ஏற்றனர். இருந்தபோதிலும் எப்படியும் விவசாயிகளிடம் இவ்வருடம் வசூலாக வேண்டிய கடனைக் கட்டாயமாக வாங்கி, அவர்களை அடுத்த சாகுபடிக்குக் கடன் வாங்க அருகதையுள்ளவர்களாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் வங்கி அலுவலர்கள், சங்கச் செயலாளர்கள் எதிர்ப்புகளுக்கும், சோதனைகளுக்கும் இடையே மாபெரும் சாதனையைப் புரிந்துள்ளனர் என்று சொல்லி, காவல் துறைக்கு நன்றி தெரிவித்திருக்கிறார். "இது நீங்கள் கையாண்ட அணுகுமுறை. இது எங்களுக்கு உடன்பாடாதது. ஆகையால் உங்களாலே அதிகமாக வசூலிக்க முடிந்தது. எங்களாலே முடியவில்லை" என்ற கருத்தை அமைச்சரவர்கள் தெரிவித்ததாகக் கருதுகிறேன். அப்படியானால் இதிலே விவாதத்திற்குக் கொஞ்சங்கூட இடமில்லை. அவர் அன்றைக்கு என்ன சொன்னாரோ, அப்படியேதான் நடந்திருக்கிறது என்பதற்கு இது உதாரணம். கையெழுத்து திரு. கோ. சி. மணி அவர்கள் போட்டிருக்கிறார்கள். வீணான விவாதத்தில் ஈடுபட்டால் பயனில்லை.

(முற்பகல் 10.30)

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சொல்வதைக் கேளுங்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அவையில் நடைபெற்ற பிரச்சினையில் அவையினுடைய உரிமை மீறியிருந்தால், உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு நாம் எத்தனையோ தடவை அனுமதித்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அன்று நடந்த விவாதத்தில் பேசியதையும், இன்று கொடுத்த அறிக்கையையும் நாம் உன்னிப்பாகக் கவனித்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. சி. மணி மீது வேண்டுமென்றே பழி சுமத்தும் நோக்கத்தோடு இந்த அறிக்கையில் இல்லாத வார்த்தைகளை எல்லாம் சொல்லி அவர் மன்னிப்புக் கேட்டார், போலீசை வைத்துக்கொண்டு வன்முறையில் ஈடுபட்டார் என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மீது நான் உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறேன். அடுத்தமுறை அவை கூடும்போது அந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை ஒன்று தான் என் தீர்ப்புக்கு உரியது. அவர்கள் சொன்ன வார்த்தைகளை எல்லாம் தஸ்தாவேஜுகளைப் பார்த்த பிறகுதான் அறிய முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அது அவசரப் பிரச்சினையல்ல. பரஸ்பரம் வழக்கமாகக் காணப்படுகிற ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் "நீங்கள் இந்த மாதிரி வன்முறையை உபயோகித்தீர்கள், வசூலிக்கிறீர்கள், எங்கள் காலத்தில் அதிக வசூல்" என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் "உங்கள் காலத்தில் கட்டாயப்படுத்தி, அதிகாரிகளை உபயோகித்து வசூலித்திருக்கிறீர்கள்" என்று சொன்னார்கள். அப்படி இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னார்கள். அதற்கு தஸ்தாவேஜைக் கொண்டு வந்து காட்டிவிட்டார்கள். கட்டாயப்படுத்துவது என்பதும், போலீசை உபயோகிப்பது என்பதும், அதற்கு போலீசாருக்கு நன்றி தெரிவிப்பது என்பதும் இருக்கிறது. அதற்கு இது விளக்கமேயொழிய, அதை நீக்க வேண்டுமென்று அவர்களும் கோரவில்லை. பரஸ்பரம் நீக்குவதற்கு இங்கே பிரச்சினையும் இல்லை. நீக்கம் என்பது எக்ஸ்பஞ்ச், அகற்றுவது என்பது பார்லிமெண்டரி முறைக்கு எதிராக உள்ள வாசகத்தையும் பழி சுமத்துவதாக உள்ள வாசகத்தையும் தான். அமைச்சர் சொல்லியது பழி சுமத்துவது அல்ல. தஸ்தாவேஜைப் பார்த்துக் காட்டியிருக்கிறார், அதற்கு மேல் ஒரு பிரச்சினை அல்ல. இதற்கு மேல்

அவர்கள் செய்தது சரியா தவறா என்பது தனி, அது வேறு விஷயம். அது ஆட்சேபிப்பதற்கோ நீக்குவதற்கோ உரியதல்ல என்று கூறி, அந்த நடவடிக்கையும் இருக்கும். இன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலும் அதிலே சேர்ந்து இருக்கும், எதுவுமே நீக்கப்படமாட்டாது என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

(2) ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதான அறிக்கை குறித்து.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, உறுப்பினர்கள் கொடுத்திருந்த என் துறை சம்பந்தப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு நான் பதிலளிக்கும்போது, தவறாகப் படித்துவிட்டேனோ என்ற பின்னால் தெரிந்து கொண்டேன். ஆகவேதான் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். நான் படிக்கும்போது, 30 கிலோ அரிசி என்று தான் படித்தேன். திருநெல்வேலி மாவட்டத்திற்கு 30 கிலோ அரிசி கொடுக்கப்படு என்று படித்தேன். செய்தித்தாள்களிலும் 30 கிலோ அரிசி என்றுதான் வெளியிட வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக் கொள்கிறேன். கோயம் புத்தூர் மாவட்டத்தைச் சுற்றிப் பார்க்க மாண்புமிகு கல்வி அமைச்ச அவர்கள் இன்றைக்குச் செல்ல இருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்ட த்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. இராகவானந்த அவர்கள் சென்று சுற்றிப்பார்த்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்களும், மாண்புமி விவசாய அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களும் திருநெல்வேலி மாவ டத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்த கொள்கிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரை, தனி அதிகாரி மே பார்வை செய்கிறார். லேட்டியைப் பொறுத்தவரை, வருவாய் வாரிய மெம்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்த நிவாரணப் பணி ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

3. தகவல் கோரல்.

**சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் மீது குற்றச்சாட்டு குறித்து**

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்க உங்கள் அனுமதியுடன் ஒரு தகவலை அவைக்குத் தருவதற்காக ந எழுந்து நிற்கின்றேன். நேற்றையதினம் பல்கலைக் கழக மசோதா பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்கலைக் கழகப் பதிவாள





ற்றி இங்கே சில கருத்துக்களைச் சொன்னார்கள். உறுப்பினர்கள் புரிந்து காள்ள வேண்டுமென்பதற்காக இங்கே சில தகவல்களைச் சொல்கிறேன். ண்டிகேட் விசாரணைக் குழு விசாரணையை முடித்ததற்குப் பிறகு 'களுடைய தீர்ப்பு துணை வேந்தர் அவர்களால் என்னிடத்தில் தரப்பட்டிருக் றது. அதை நான் உங்கள் அனுமதியோடு இங்கே படிக்கிறேன்.

"The anonymous communication is a mixture of falsehoods nd unprovable and unproven charges of receipt of bribes and ommissions against a number of loyal and honest officers of the Jniversity and impertinent questioning of administrative decisions by the present and past Vice-Chancellors taken with the ipproval of the Syndicate."

அந்த மாதிரி அவர்கள் தங்களுடைய முடிவாக எழுதியிருக்கிறார்கள். ஒரு கையெழுத்திடாத விண்ணப்பத்தை அனுப்பியிருந்தாலும், அதை சிண்டிகேட் டிலே குழு மூலமாக விசாரித்து இத்தகைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். இதை உறுப்பினர்களுடைய தகவலுக்காகச் சொல்லுகிறேன்.

அடுத்து, 51 சவரன் மாலை வாங்கினார்கள் என்று சொன்னார்கள். அவருடைய பிறந்தநாள் விழாவில் அவருடைய உறவினர்கள் அல்லது அவருக்கு வேண்டியவர்கள் ஈரோட்டிலே ஒரு கல்லூரியில் ஒரு விழாவை நடத்தி அவரைப் பெருமைப்படுத்தும்போது, ஒரு மாலையை அவருக்குப் போட்டிருக்கிறார்கள். அந்தப் பூமாலையோடு தங்கக் காசுகள் அடங்கிய ஒரு மாலையும் இருந்திருக்கிறது. அதை தலைவரவர்களே, உங்கள் அனுமதி யோடு இந்த அவைக்குக் காட்ட விரும்புகிறேன். இது தான் அந்த மாலை. (உறுப்பினர்களுக்கு மாலையைக் காட்டினார்) அவருக்குத் தெரியாத நேரத்தில் பூமாலையோடு அந்த மாலையையும் சேர்த்து அவருக்குப் போட்டிருக்கிறார்கள்.

Thiru G. SWAMINATHAN : Sir, I think exhibits should not be shown in the house.

**திரு. க. இராமமூர்த்தி :** பவுனாக அல்லாமல் கூட அது இருக்கலாம். வேறு ஏதாவது பிளாட்டினமாகக் கூட இருக்கலாம். (சிரிப்பு) அவை யினுடைய சொத்தாக இது மாண்புமிகு தலைவரவர்களிடமே இருந்தால், உறுப்பினர்களுக்கு சமயம் இருக்கும்போது பார்க்க முடியும். (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர் மாலையை கழுத்திலிருந்து எடுத்துக் கீழே வைத்தபோது, பக்கத்திலே இருந்த ஒருவர் அவரிடத்தில் அதை எடுத்துக்காட்டியிருக்கிறார். அதை அவர் அந்தக் கல்லூரிக்குத்

தந்து விட்டார். அந்த விழாவில் மதிப்பிற்குரிய கிருபானந்த வாரியார், முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மதிப்பிற்குரிய சுந்தரவடிவேலு, விவசாயப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. ரங்கசாமி மற்றும் சாந்தலிங்கம், ராமசாமி போன்றவர்கள் கலந்துகொண்டார்கள். 51 சவரன் என்று சொல்லப்பட்ட மாலை 51 சவரன் அல்ல என்பதையும் 2 அல்லது 3 சவரன் தான் தேறும் போல் இருக்கிறது (சிரிப்பு) என்பதையும், அதையும் அவர் அந்தக் கல்லூரிக்கே தந்து விட்டார் என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் அந்தக் கல்லூரியின் பிரின்சிபால் தான் என்னிடத்தில் அதைக் கொண்டு வந்து காட்டினார். இதை மாண்புமிகு உறுப்பினர்களின் தகவலுக்காக நான் இங்கே சொல்கிற, அதே நேரத்தில் நாங்கள் பதவிகளைக் காப்பாற்றுவதற்காக இதைச் சொல்லவில்லை என்பதையும், இதுபோன்ற ஒரு நிறுவனத்திலே இருக்கின்ற எந்த ஒரு அதிகாரியும் தவறு செய்தால், அவர்களைக் காப்பாற்றுவதற்கான எந்த விதமான பொறுப்பையும் நாங்கள் எடுக்கவில்லை என்பதையும், ஏதாவது தவறு எங்காவது நடைபெறுகிறதாகப் புகார் வந்தால், அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் அல்லது விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் அரசு எப்போதும் தயாராக இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்கிறேன். தர்மபுரி மாவட்ட சி.இ.ஓ. மீது இதே மன்றத்தில் ஒரு பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தார்கள். இப்போது நாம் நடவடிக்கை எடுத்து அவரை விலக்கி வைத்திருக்கிறோம். அதைப்போல தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுப்போம் என்கிற உறுதியை நான் சொல்கிற அதே நேரத்தில் இப்பொழுது நான் சொன்ன தகவல் யாரையும் காப்பாற்றுவதற்காக அல்ல, மாண்புமிகு உறுப்பினர்களின் தகவலுக்காக மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மாலையைக் கொண்டு வந்து காட்டினார்கள். விளக்கத்திற்கு ரொம்ப நன்றி. பொதுவாக அரசு அதிகாரிகள் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இப்போது அதுபற்றி விவாதமே இல்லை. மாலையைப் பற்றிய தகவல் தவிர வேறு இல்லை. தயவுசெய்து நான் அதை அனுமதிக்க மாட்டேன்.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதைக் குறிப்பாகச் சொல்லுங்கள்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அரசாங்கம் கண்டிப்பாக அதிகாரிகளுடைய பிறந்தநாள் விழாக்களின்போது இப்படிப்பட்ட மாலைகள், தங்க மாலைகள் எல்லாம் வாங்கக் கூடாது என்று உத்தரவு போட வேண்டும். ஏற்கெனவே அரசாங்க அதிகாரிகள் அப்படி வாங்கக் கூடாது என்று . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரும்பவும் நீங்கள் விவாதத்திற்குத் தான் போகிறீர்கள் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம். . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அப்படி ஒரு உத்தரவு . , . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதைத்தான் சொல்லிவிட்டீர்களே. சரியாகப் போய்விட்டது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவரவர்களே,

(திரு. ஆற்காடு நா. வீராசாமி எழுந்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்தால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நான் அவரைக் கொடுக்கும் படி கேட்க முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதிகாரிகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் தங்களுடைய பிறந்தநாள் விழாக்களின்போது இப்படிப்பட்ட மாலைகள், தங்க மாலைகள் எல்லாம் வாங்கக் கூடாது என்று உத்தரவு பிறப் பிக்க வேண்டும். அதுவும் காண்டிராக்டர்கள் மாலை போடுகிறார்கள் என்றால், ஏதாவது நோக்கம் இருக்கலாம். ஆகவே இந்த அரசு அப்படிப் பட்ட ஒரு உத்தரவைப் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்ன உணர்வை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், உத்தரவு போடுவது எப்படி என்பது பற்றி நான் திடீரென்று இப்பொழுது சொல்ல முடியாது. ஆனால் அப்படிப்பட்ட தவறான நடவடிக்கைகளை அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 15

## 4. உரிமைப் பிரச்சினை.

திரு. முத்துசாமியின் பேச்சு குறித்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, அண்மை யிலே தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி ஒரு போராட்டத்தை நடத்தியது. அவர்கள் சிறையில் இருந்தபோது, பல கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானம் மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானம் எல்லாம் கொண்டு வந்து இதிலே சுமுகமான முடிவை ஏற்படுத்த வேண்டு மென்று விரும்பினார்கள். அது தொடர்பாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் சில அறிவிப்புகளைத் தந்து அதன் விளைவாக உறுதி. . ,

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இது எந்த விதி யின் கீழ் . . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று எழுந்து மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். இது புதுமையாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு 'உரிமைப் பிரச்சினை கொடுத்திருக் கிறேன் என்று சொன்னாலே . போதும். அதுபற்றி நான் சொல்லி, முடிவு பண்ண முடியும். உறுப்பினர் அவர்கள் அதைக் குறித்து சொற்பொழிவு பண்ண வேண்டாம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** திடீரென்று மாண்புமிகு உறுப்பின டாக்டர் சனார்த்தனம் அவர்கள் எழுந்து பேசுகிறார்கள். உரிமைப் பிர சினை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் கூட பரவாயில்லை. ஆனா ஏதோ . . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஒ உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பின டாக் சனார்த்தனம் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அ களைப்பற்றி ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். ...கென அவையில் பேசியது சம்பந்தமான பேச்சு, மாண்புமிகு கல்வி அமைச் அவர்கள் சம்பந்தப்பட்டது. இதை நான் ஆலோசித்து மற்ற தகவல்களை ஆய்ந்து அடுத்த கூட்டத்தில் இதுபற்றி என்னுடைய தீர்ப்பைத் தெரிவி றேன். விவரம் என் கையில் இருக்கிறது. அதை மட்டும் படியுங்கள்.



1979 நவம்பர் 15]

(முற்பகல் 10-40)

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** ஒரு போத்தைப் பேசிவிட்டுத் தான் இந்த முடிவெடுத்திருக்கிறார்கள் என்றும், ஒரு கேவலமான போத்தை . . .

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** 'ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர்' அவை யினுடைய நடவடிக்கைகள் 'ஹெல்த்தியாக' இருக்கவேண்டும் என்பதால். இப்போது ஒரு மாண்புமிகு உறுப்பினர்பற்றிச் சொன்னார்கள், அந்த உறுப் பினர் இந்த அவையிலே இல்லை. . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது பிரச்சினையல்ல. எந்த நேரத் திலும் உரிமைப் பிரச்சினை கொண்டு வரும்போது, சம்பந்தப்பட்ட உறுப்பினர் இருக்க வேண்டும் என்று இல்லை. உரிமைப் பிரச்சினையை மட்டும் படிக்க வேண்டும். அவைக்குத் தெரிய வேண்டும் இல்லையா?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அந்தப் போராட்டத்தின் மீது ஒரு கேவல மான போத்தை கல்வி இலாக்கா முதலாளிகளோடு பேசிவிட்டுப் பிறந்த போராட்டம்தான் இது. காசுப் போராட்டம். அதற்கான ஆதாரமே கல்வி அமைச்சர் அவர்களின் சட்டசபை அறிவிப்பு என்பதோடு 'நான் ஏதாவது உங்கள் பெயரை சட்டசபையில் சொல்லி அறிவிப்பதைப் போல வழங்கு கிறேன்' என்று திரு. லெட்சுமிகாந்தன், திரு. தாமஸ் ஆகிய இரண்டு மேலவை உறுப்பினர்களிடமும் அமைச்சர் அவர்கள் பேரம் பேசியதாக அறிவித்திருப் பது அந்த மாண்புமிகு உறுப்பினர்களுடைய கௌரவத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கௌரவத்திற்கும், இந்த அவையினுடைய கௌர வத்திற்கும் உகந்ததாக இல்லாததால், இது அவையின் உரிமை மீறல் என்ப தால், உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுக்களை யும் பார்த்து, விவரங்களையெல்லாம் ஆராய்ந்து பிறகு, அடுத்த கூட்டத்தில் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நான் ஒரு 'அட்ஜர்ன்மென்ட் மோஷன்' கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது சம்பந்தமாக மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்குத் தகவல் போயிருக்கும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** ஒரேயொரு விளக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தகவல் போயிருக்கும்.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

### (1) 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தற்பொழுது (1) சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, (2) ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவு, (3) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு, (4) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, (5) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, (6) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு ஆகிய சட்டமுன்வடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எல்லாச் சட்ட முன்வடிவுகளையும் மொத்தமாக எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாச் சட்டமுன்வடிவுகள் மீதும் தங்கள் மேலான கருத்துக்களைச் சொல்லலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்குப் பின்னர் சட்ட முன்வடிவுகள் ஒவ்வொன்றாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகளில் சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் நகராட்சி, முனிசிப்பாலிட்டிகள் இந்த மூன்றையும் தனியாகவும், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், மற்றவையெல்லாம் தனியாகவும் வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேசும்போது எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒன்றாகப் பேசுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** கார்ப்பரேஷன் என்று சில வருகின்றன.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வரட்டுமே. எல்லாவற்றிலும் திருப்பித் திருப்பி தேர்தல்பற்றித்தான் பேசப்போகிறீர்கள். பேசுங்கள். தனித்தனியாகத்தான் பேசவேண்டும் என்று அவை விரும்பினால், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** பில்லிலே.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எப்படியும் திருத்தங்கள் வரும். திருத்தங்களிலே சொல்லலாமே. திருத்தம் கொடுத்திருக்கிறீர்களா ?



**திரு. க. இராமமூர்த்தி :** இல்லை.

**மாண்புமிகு மேலவை தலைவர் :** சட்டமுன்வடிவுகளின் மீது மொத்தமாகப் பேசலாம்.

**மாண்புமிகு திரு. க. காளிமுத்து:** தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு@ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஒரு புதிய மசோதாவைத் தாக்கல் செய்து, அதன் மூலம் உள்ளாட்சி மன்றங்களை தனி அதிகாரிகள் மூலம் இன்னும் ஓராண்டு காலம் ஆளலாம் என்ற வகையில் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு ஊராட்சி ஒன்றியங்களுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்க வகைசெய்யும் அதிகாரத்தைப் பெறுவதற்காக இந்த மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. நான் இந்த மசோதாக்கள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லும் முன்பு, தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே இன்றையதினம் இருக்க வேண்டிய உறுப்பினர்கள் ஏறக்குறைய 63 பேர்கள். 1980 ஆம் ஆண்டு ஏப்ரலில் மேலும் 1/3 பங்கு உறுப்பினர்களின் பதவிகள் இந்த அவையில் காலியாக இருக்கும். இந்த நிலைமை ஏன் ? "என் கேள்விக்கு என்ன பதில்" என்று நான் கேட்கவில்லை. ஒரே கேள்வி, ஒரே பதில். நீண்டகாலமாக திருப்பித் திருப்பி ஒன்றையே சொல்லிக்கொண்டிருக்கிறோம். என்றைக்குத் தேர்தல் என்று கேட்கிறோம் என்றால், தேர்தல் இதோ வந்து

---

@ 121-122 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விட்டது என்று புதிய படத்தை வெளியிடுவதைப்போல நாள் குறிப்பிட்டு,
அப்புறம் பூஜைக்கு என்று ஸ்டே வாங்குவதும், படம் வெளியிடுவதை ஒத்திப்
போடுவதும் போல இந்தத் தேர்தல்களும் ஒத்திப்போடப்படுகின்றன. தமிழ்
நாட்டில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் புதிய அரசு வந்ததிலிருந்து நடை
பெறாமல், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக பிரச்சினைகள்
வளர்ந்துகொண்டு வருகின்றனவே தவிர, எதிர்க் கட்சிகளுடைய
யோசனையை, எதிர்க்கட்சிகளுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கவில்லை.
எந்த நோக்கங்களோடு இந்தப் பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன, கோரிக்
கைகள் வைக்கப்படுகின்றன, விமர்சனங்கள் செய்யப்படுகின்றன என்பதை
யெல்லாம் இந்த அரசு ஆராயவில்லை. நான் அச்சப்படுவதெல்லாம், 1980 ஆம்
ஆண்டோ அல்லது அதற்குப் பிறகோ இந்த மேலவை கூடுகின்றபோது, உள்
ளாட்சி மன்றங்கள் சார்பாக உறுப்பினர்கள் இடம்பெற வாய்ப்பளிக்கப்படுமா
என்பதுதான். இது ஜனநாயகத்துக்கே ஒரு பெரிய விரோதம் என்று சொல்
லிக்கொள்கிறேன். கேரளாவிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடக்கவில்லை
என்று சொன்னார்கள். அங்குள்ள நிலைமை வேறு. அங்கே சட்டமன்ற
மேலவை கிடையாது. மேலும், கேரளாவிலே உள்ளாட்சி மன்றத் தலைவர்
களுடைய பதவிக்காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இங்கே உள்ளாட்சி
மன்றங்கள் தனி அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு, உள்
ளாட்சி மன்றங்களிலே இருக்கும் அதிகாரிகளுடைய பதவிக்காலம் நீட்டிக்கப்
படுகிறது. நான் சாட்டுகின்ற குற்றச்சாட்டு, மத்தியிலே ஒரு எலக்ஷன்
கமிஷன் இருக்கிறதே, அது என்ன தூங்கிக்கொண்டிருக்கிறதா? இத்தனை
இடங்கள் காலியாக இருக்கின்றனவே, இந்த இடங்களை நிரப்ப இந்த அர
சாங்கத்தை வற்புறுத்த அந்தத் தேர்தல் கமிஷன் என்ன நடவடிக்கை
எடுத்தது? எத்தனை முறை தேர்தல் கமிஷன் தமிழ்நாடு அரசை நினை
வூட்டி இது சம்பந்தமாகக் கடிதம் அனுப்பியது? அந்த நினைவூட்டுக் கடிதங்
களுக்கு இந்த அரசு என்ன சால்ஜாப்புகளைச் சொல்லி, என்ன காரணங்
களைச் சொல்லி, என்ன ஆதாரங்களைச் சொல்லி, என்ன கருத்துக்களைச்
சொல்லி இந்தத் தேர்தல் தள்ளிப்போடப்பட்டிருக்கிறது? இது சாதாரண
விஷயம் அல்ல. மேலவைத் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல் கமிஷன்.
இங்கே உள்ளாட்சி மன்றத் தேர்தல் கொஞ்சம் கொஞ்சமாக, உதிரிப்பூக்களாக,
ஒவ்வொரு பூவாக வெட்டப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரம், ஊராட்சி
ஒன்றியங்கள், நகராட்சிகள் இப்படி கடைசியாக இருக்கிற குருத்தையும்
இப்போது வெட்டியிருக்கிறார்கள். இந்தப் பெருமையை இந்த அரசு தேடிக்
கொள்ள வேண்டுமா? மரியாதைக்குரிய, முன்னால் அமர்ந்திருக்கிற



மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் அற்புதமாக ஜனநாயகத்துக்குத்
தோள் கொடுக்கிறவர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேடைப்
பேச்சிலே நான் மயங்கியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அருமை
நண்பர் திரு. காளிமுத்து அவர்கள் மாணவனாக இருந்தபோது 'மேடைமணி'
என்று திரு. தேவர் அவர்களாலே பாராட்டப்பட்டவர்கள். அவர் திராவிட
முன்னேற்றக் கழகத்திலே இருந்தபோதும், இப்போது அ.தி.மு.க.-விலே
இருக்கும் இந்நாளிலும் நிகழ்த்தப்பட்ட அவருடைய அற்புதமான பேச்சுக்கள்
இன்றைக்கும் என்னுள்ளே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் வார்த்
தைக்கு வார்த்தை ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசி, ஜனநாயகத்தைக்
காப்பாற்றத்தான் எங்கள் கட்சி, எங்கள் கட்சி என்று அவர்கள் பேசும்போது
ஜனநாயகத்தைக் காப்பாற்ற எங்களைப்போன்ற இளைஞர்கள் இருக்கிறார்கள்
என்று நான் பெருமைப்பட்டு, அவர்கள் மூலமாக ஜனநாயகம் தழைக்கட்டும்,
அந்த வகையிலே இந்த ஆட்சி அமையும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.
ஆனால், இன்றைக்கு அந்த எண்ணம் எல்லாம் காற்றோடு கலந்துவிட்டது.
இந்த ஆட்சி வந்தபிறகு, இன்றைக்கு தேர்தல்களை நடத்தாமல் ஸ்பெஷல்
ஆபீசர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர்
கள், மன்றத் தலைவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கெல்லாம் ஜன
நாயகம் தழைத்தோங்கி, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் அமைச்
சராக இருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம் ஆனால்
இன்றைக்குத் தனி அதிகாரிகளைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமைச் செயலாளர் அவர்களிலிருந்து
கீழேயிருக்கிற ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வரை சந்திக்கிறார்கள்.
கோட்டாட்சித் தலைவர்களைச் சந்திக்கிறார்கள். அங்கெல்லாம் போகும்
போது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பதிலாக
இப்போது போடப்பட்டிருக்கிற தனி அதிகாரிகள் வருகிறார்கள். அவர்கள்
என்ன பிரச்சினைகளைப் பற்றிச் சொல்வார்கள்? இங்கிருந்து போகின்ற
உத்தரவுகளைப்பற்றிச் சொல்வார்களே தவிர, எந்த ஊர்ப் பிரச்சினை,
எந்த ஊராட்சி ஒன்றியப் பிரச்சினை, எந்த நகராட்சி மன்றப் பிரச்சினை
பற்றி அவர்கள் சொல்ல முடியும்? ஒரு காலகட்டம் வைத்து, இவ்வளவு
நாட்களுக்குள்ளே தேர்தலை நடத்துவோம் என்று இந்த மேலவையிலே
வாக்குறுதி கொடுக்கவில்லை. அப்படி இருக்கும்போது, வருகின்ற நாடாளு
மன்றத் தேர்தலிலே எப்படி ஜனநாயகம்பற்றிப் பேசப்போகிறார்கள்? புயல்
வந்தது, தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது. வறட்சி வந்தது, தேர்தல் தள்ளி
வைக்கப்பட்டது.. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வீடுவீடாகச் சென்று

வாக்காளர் பட்டியல் தயாரிக்கிறார்கள், ஆகவே, இன்றையதினம் தேர்தலைத்
தள்ளி வைக்கிறோம் என்று சொல்கிறார்கள். இப்போது மீண்டும் நாடாளு
மன்றத் தேர்தல் வரப்போகிறது, ஆகவே இந்தத் தனி அதிகாரிகளுடைய
பதவிக் காலத்தைக் கூட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். ஏன் ஊராட்சி
ஒன்றியங்களைக் கலைக்க வேண்டும்? தனி அலுவலர்களை நியமித்ததற்கும்,
பதவி நீட்டிப்புக் கொடுப்பதற்கும், ஊராட்சி மன்றங்களைக் கலைத்ததற்கும்
என்ன சம்பந்தம்? ஒன்றியத்திலே இருந்த தலைவர்கள் என்ன அக்கிரமங்
கள் செய்து விட்டார்கள்? உங்களுக்கு விரோதமாக எந்தக் காரியங்களில்
ஈடுபட்டார்கள்? அவர்களுடைய பதவிக்காலம் முடிந்துவிட்டது, ஆகவே,
அவர்கள் அதற்குமேல் இருப்பது தாங்கிக்கொள்ள முடியாதது என்று என்று
இன்றைக்குச் சொல்கிறார்கள். பதவிக்காலம் முடிந்துவிட்டால் அரசாங்கத்
தினுடைய கடமை என்ன? பதவிக்காலம் முடிந்துவிட்டதென்றால், தேர்தல்
நடத்துங்கள். அவர்களும் இந்த இடத்திற்கு வரட்டும். அதை விட்டுவிட்டு,
ஊராட்சி மன்றத்தைக் கலைப்பதற்குக் காரணம் அவர்கள் பதவிக்காலம்
முடிந்து பல ஆண்டுகாலம் ஆகிவிட்டது, ஆகவே, அவர்கள் பதவியில் நீடிப்
பதில் அரசுக்கு விருப்பமில்லை என்று சொல்லும் வாதம் சொத்தை வாதம்

(முற்பகல் 10-50)

என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது ஏற்றுக்கொள்ளத் தக்க வாதம் அல்ல.
கலைக்கப்பட்ட ஊராட்சி மன்றங்களின் தலைவர்களேகூட தேர்ந்தெடுக்கப்
பட்டு அந்தப் பதவிகளுக்கு வந்தவர்களே தவிர, அவர்கள் யாரும் அதிகாரி
கள் அல்ல, நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. அதிகாரிகள் என்றால் பதவிகளை
நீட்டித்துக் கொடுக்கலாம் அல்லது தேவையில்லை என்று அரசு கருதினால்
அவர்களை நீக்கலாம் ஆரம்பத்திலே ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்த
போதும், சில காரணங்கள் அரசுத் தரப்பில் சொல்லப்பட்டன. அதை-
போலவே நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களைக் கலைத்தபோது
சில காரணங்கள் சொல்லப்பட்டன. கடைசியாக இப்போது ஊராட்சிமன்ற
தலைவர்களின் பதவியையும் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டபோது, அதற்
என்ன காரணம், அரசாங்கத்தில் இருப்பவர்களால் சொல்லப்பட்டது என்றால்
அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் அரசாங்கம் செயல்படுத்த விரும்பும் ஊ
தாரும். அரசாங்கத்தினுடைய ஊர் வளர்ச்சித் திட்டங்களில் தங்கள
வளர்ச்சித் திட்டங்களில் சிறப்பாகவும் சரியாகவும் செயல்படவில்லை என்
முறையாக ஈடுபடுத்திக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறி, அவ



கள் பதவிகளைக் கலைத்தார்கள். இப்படிப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளத்
தக்க வாதம்தானா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
எந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்லி ஊராட்சி மன்றத் தலைவர்களின்
பதவியைக் கலைக்கின்றோமோ, அதே குற்றச்சாட்டுகள் அரசாங்க அதிகாரி
கள் அந்தப் பொறுப்பை மேற்கொள்ளும்போது சொல்லப்பட்டால், அதற்கு
அரசாங்கம் என்ன பதிலை வைத்துக் கொண்டிருக்கிறது என்று எனக்குத்
தெரியவில்லை. நாளைக்கு அரசாங்கத்தின்மீதே கூட குற்றச்சாட்டுகள்
வரலாம். . . .

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்
களையும், நகராட்சிகளையும் கலைத்தது அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களை
யும், நகராட்சிகளையும் கலைத்தது அ.தி.மு.க. ஆட்சி இல்லை என்பதை
நானேகூட ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு ஆட்சியில் இத்தகைய உள்
ளாட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட உடனே என்ன செய்ய வேண்டும் என்பது
தான் என்னுடைய கேள்வி. இன்றையதினம் ஆட்சியில் வந்திருப்பவர்களே
கூட தேர்தல்கள் மூலமாகப் பதவிக்கு வந்தவர்கள்தான் என்பதை நாம்
எல்லோரும் அறிவோம். ஆக, உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட
உடனே, பதவிக்கு வந்த இந்த ஆட்சியாளர்கள் தேர்தலை உடனே நடத்தி
யிருக்க வேண்டாமா என்பதுதான் நான் கேட்க விரும்பும் கேள்வி.
எதற்கெடுத்தாலும் எமர்ஜென்சியைக் காட்டிக் கொண்டிருப்பதில் பயன்
இல்லை. அன்றையதினம் எமெர்ஜென்சி இருக்கும்போது, இந்த உள்ளாட்சி
அமைப்புகள் கலைக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால் இப்போது
எந்தவிதமான எமெர்ஜென்சியும் இல்லையே? நாம் வாழ்ந்து கொண்டிருக்
கிற காலம் மிகவும் சுமுகமான காலம் அல்லவா? தேர்ந்தெடுக்கப்பட்ட நாம்
ஆட்சி செய்துகொண்டிருக்கிற காலம் அல்லவா? இப்போதும் அந்த வாதத்
தையே சொல்லிக்கொண்டிருப்பது எந்த வகையில் நியாயம் என்றுதான்
கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தனது கெட்டிக்
காரத் தனத்தையெல்லாம் இதில் காட்டி பதில் அளித்தாலும் கூட, இதெல்லாம்
சொத்தையான வாதம் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக்
கெட்டிக்காரத்தனத்தைப் பயன்படுத்தி மாண்புமிகு உள்ளாட்சித் துறை

அமைச்சர் அவர்கள், தமது செல்வாக்கையும் பயன்படுத்தி இந்த அமைச்ச ரவையில் எடுத்துச் சொல்லி, விரைவில் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதுதான் நல்லதே தவிர, இன்னும் செத்துப் போன காரணங்களை யெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது காரியமாற்றுவதற்கு உதவாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இருந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் சரியாகச் செயல்படவில்லை, ஊரக வளர்ச்சித் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் அவர்கள்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டு. ஊராட்சி மன்றத் தலைவர்கள் சரியாகச் செயல்படவில்லை என்றால், அதைக் கண்காணிக்கத்தானே அரசாங்கத்தில் பல்வேறு மேலதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் பணியாற்றுவதைக் கண்காணிக்கத்தான் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற நிலைமை காரண மாக என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால், குற்றவாளிகளே நீதிபதிகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எந்தப் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரி பஞ்சாயத்துத் தலைவரின் நடவடிக்கை யைச் சரியாகக் கவனிக்கவில்லையோ, அவர்கள்தான் இன்றையதினம் இந்த அரசாங்கத்தால் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகள்தான் ஊராட்சி மன்றத் தலைவர்களின் செயல்களைத் தணிக்கை செய்து கொண்டு, கண்காணித்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு மேலே ஊராட்சி ஒன்றிய ஆணை யாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளின் பணியைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மேலே கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ரெவின்யூ துறையிலிருந்து இந்தத் துறையைப் பிரித்ததற்குக் காரணமே ஊராட்சித் துறை சரியாகச் செயல்பட வேண்டும், அது சரியான முறையில் வளர வேண்டும் என்பதற்காகத்தான். அவ்வாறு பிரிப்பதற்கு நாங்களெல்லாம் காரணமாக இருந்தோம். உண்மையிலேயே ஜனநாயகம் வளர வேண்டும் என்றுதான் அப்போது பிரித்தோம். இப்போது நிலைமை என்னவென்றால் 133 ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளை உண்டாக்கியிருக்கி றோம், 33 கோட்ட வளர்ச்சி அதிகாரிகளை உண்டாக்கியிருக்கிறோம் என் பதைத் தவிர அவர்கள் ஏதும் உருப்படியான பணியைச் செய்வதாகத் தெரிய வில்லை. ஊராட்சி ஒன்றியப் பணிகளையும் ஊராட்சிப் பணிகளையும்





அவர்கள் கண்காணிப்பதாகத் தெரியவில்லை. அதற்குத்தானே அவர்களை நியமித்திருக்கிறோம். இன்றையதினம் ஊராட்சித் தலைவர்கள் தவறு செய் கிறார்கள் என்று குற்றம்சாட்டி அவர்களையெல்லாம் அந்தப் பதவியிலிருந்து அனுப்பிவிட்டோம். ஒரு பழமொழி சொல்வார்கள் "சீப்பை எடுத்து ஒளித்துக்கொண்டால், கல்யாணம் நின்று போய்விடுமா" என்று. அதைப் போல இருக்கிறது இந்த அரசாங்கம் செய்வது. அப்படித்தான் ஊராட்சி மன்றத் தலைவர்களை நீக்கினார்களே, இனிமேல் ஊராட்சி விவகாரங்களில் தவறே நடக்காதா ? அவர்களுடைய இடத்தில் பணியாற்றும் தனியதிகாரி கள் தவறே செய்ய மாட்டார்கள் என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் இருக் கிறதா ? தவறுகள் இன்றையதினம் மேலும் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதுதான் உண்மை.

ஒன்றை நான் தலைவர் அவர்களின் அனுமதியோடு இங்கே விளக்கமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் ஊராட்சி மன்றங்களில், பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளே தனி அலுவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது ஒரு 5 கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு கிராம சேவக் தனியதிகாரியாகப் பணியாற்றுகிறார். இவர்களுடைய பணிகளை யெல்லாம் யார் கண்காணிப்பது, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களின் பணியைத் தணிக்கை செய்வது என்பது பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரிகளால் நடைபெற்று வந்தது. ஆனால் இன்றையதினம் அவரே தனியதிகாரியாகப் பணியாற்றும் போது, அவருடைய பணியை அவரே தணிக்கை செய்து, அதை அப்படியே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் கள் ஒப்புக்கொள்கிற நிலை உருவாகியிருக்கிறது. இது நியாயம்தானா ? ஆகவே ஊராட்சித் தலைவர்கள் தவறு செய்தார்கள் என்பதால் அவர்களைப் பதவியிலிருந்து அனுப்பிவிட்டோம் என்பது மிக மிக மோசமான வாதம். அதிகாரிகள் தவறே செய்ய மாட்டார்களா ? தேர்ந்தெடுக்கப்பட்ட 12,000 ஊராட்சி மன்றத் தலைவர்களும் தவறு செய்தார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு இன்றையதினம் இந்த அரசாங்கம் யாரை மக்கள் பிரதிநிதி களாகப் போட்டிருக்கிறார்கள் ? மறுபடியும் பொதுமக்களின் பிரதிநிதிகளைத் தானே போட்டிருக்கிறார்கள். அவர்கள் தவறு செய்ய மாட்டார்களா ? இது என்ன வேடிக்கை ?

மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதியோடு இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டுமென்ப தற்காகச் சொல்கிறேனே தவிர, அமைச்சர் அவர்கள் மீது குற்றஞ்சாட்ட இதைச் சொல்லவில்லை.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1979 நவம்பர் 15

எந்தத் தவறுகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத்
தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் செய்தார்கள் என்று
சொன்னோமோ, அதே தவறுகளைத்தான் இன்றையதினம் அவர்களுக்குப்
பதிலாக நியமிக்கப்பட்ட தனியதிகாரிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்
ஊராட்சி ஒன்றியத்திற்கு தனியதிகாரிகள் பொறுப்பு வகிக்கிற காரணத்தால்,
ஆசிரியர் நியமனத்தில் எவ்வாறு தவறு நிகழ்ந்திருக்கிறது என்பதை நான்
இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே
எங்கள் மாவட்டத்தில் ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார்கள்
அதாவது 1969 ஆம் ஆண்டில் வேலை தேடித் தரும் நிலையத்தில் பதி
செய்து கொண்ட ஒருவரை விட்டு விட்டு, 1974 அல்லது 1975 ஆம் ஆண்டி
பெயரைப் பதிவு செய்து கொண்ட ஒரு ஆசிரியரை ஒரு தனி அதிகாரி நியமி
திருக்கிறார் என்பதுதான் அந்தக் குற்றச்சாட்டு. பாதிக்கப்பட்ட அந்
ஆசிரியர் 'நான் புறக்கணிக்கப்பட்டிருக்கிறேன்' என்ற முறையீட்டை, 'த
யதிகாரி தன்னுடைய விண்ணப்பத்தைச் சரியாகப் பரிசீலிக்கவில்லை' என்
குற்றச்சாட்டை அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தெரிவிக்கிறார். கலெ
டரிடமும் அவருக்கு நியாயம் கிடைக்கவில்லை என்ற நிலையில் அ
நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த முறைகேட்டை
தெரிவித்து, அதன் நகலை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்
அனுப்பியிருக்கிறார். இதை நான் சொல்லுவதற்குக் காரணம் இன்றையதி
நியமிக்கப்பட்டிருக்கிற தனியதிகாரிகள் எந்த அளவுக்குத் தவறுகள் செ
கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத்தான். இதையெல்ல
கண்காணிக்க இந்த அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத்த
நான் கேட்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன்தினம் 13 ஆம் தே
மகவை மேற்கு மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் ஆளும் கட்சின
சேர்ந்தவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் எப்படிப்பட்ட மு
கேடுகள் நடைபெறுகின்றன என்பதை எடுத்துச் சொல்லி வருத்தப்பட
கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளை நம்பாமல் அதிகாரிகள்
இந்தப் பொறுப்பை ஒப்படைப்பதால், எத்தகைய தவறுகள் ஏற்படுகின்
என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். நான் இந்த
மசோதாவின்மீது மட்டும் பேசுவதால் கொஞ்சம் விரிவாகப் பேச அனும
வேண்டும் என்று மாண்புமிகு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறே

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுவதற்கு இந்த
மசோதா மட்டும்தான் இருக்கிறது.



79 நவம்பர் 15]

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** விரைவில் நாடாளுமன்றத்திற்கான
தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. அந்தத் தேர்தல்களுக்குப் பிறகும்
இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் தள்ளிப் போடப்படக்
கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். நான் இந்த வகையில் பயப்படு
வதற்குக் காரணமே இந்த அவையில் 3-ல் ஒரு பங்கு இடம் காலியாகப்
போகிறது. ஆசிரியர்கள் சார்பில் அவர்கள் தொகுதியிலிருந்து பிரதிநிதிகள்
இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட முடிகிறது. அதைப்போலவே பட்ட
தாரிகள் தொகுதியிலிருந்து இந்த அவைக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்
பட முடிகிறது. அதைப் போலவே சட்டமன்றத்தின் மூலமாகவும்
பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட முடிகிறது. ஆனால் இந்த அவையில் 3-ல்
ஒரு பங்கு இடம் வகிக்கும் உள்ளாட்சிமன்றங்களின் பிரதிநிதிகள் மட்டும்
அதற்கான தேர்தல்கள் நடைபெறாததன் காரணமாக இங்கே இடம் பெற
முடியாத நிலை இருக்கிறது. இந்தத் தேர்தல்களை நடத்துவதில் வேகம்
காட்டாமல் எதற்காக இவ்வளவு மெத்தனமாக இருக்கிறது என்பதை
வேதனையோடு கேட்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, அரசாங்கம்
இந்தத் தேர்தல்களை நடத்தாமலிருப்பதன் மூலம் தேர்தல் கமிஷனுக்குத்
தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறதோ என்ற எண்ணமும்
ஏற்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இங்கே வேதனை
யோடு சில விவரங்களைச் சொல்லி ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டி
லிருந்து ஆரம்பப் பள்ளிகளை எடுத்து அரசாங்கத்தோடு சேர்க்க வேண்டும்
என்று கேட்டுக்கொண்டார். அதற்கு நானும் மாண்புமிகு உறுப்பினர்
திரு. சி. இராமலிங்கம் அவர்களும் அத்தகைய முயற்சிகளில் அரசாங்கம்
ஈடுபடக்கூடாது என்று அப்போது கேட்டுக் கொண்டோம். மாண்புமிகு
உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஏன் அத்தகைய கோரிக்கையை
வைத்தார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம்
ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் குடும்பநலத் திட்டத்திற்கும், கட்டாயமாக
பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்கும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதியோடு இங்கே ஒரு பரிசுச் சீட்டைக்
காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் மிகத்
திறமையாக 'மாண்புமிகு தலைவரின் அனுமதியோடு படிக்கிறேன், அனுமதி
யோடு காட்டுகிறேன்' என்று சொல்லி தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து

பாற்பத்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தது
என்று சொல்லும்போது, இரண்டரை ஆண்டுக் காலமாகத் தேர்தலைத்
தள்ளிப் போடுவது நியாயமா?

பேரூராட்சி மன்றங்கள் தங்களுடைய நிதியாதாரத்தைப் பெருக்கிக்
கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக்
கமிட்டி பல பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. இதிலே தர்ம
சங்கடம் என்னவென்றால், கிராமப்புறத்தில் உள்ள பேரூராட்சிகள் விஸ்தரிப்
புத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, சாலைகள் போடுவது, குடிநீர்
வசதியை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களைச் செய்ய வேண்டு
மென்றால், எல்லாவற்றிற்கும் தங்களுடைய பணத்திலிருந்தே செலவு செய்ய
வேண்டுமென்று சொல்லுவதுதான். இரண்டாம் நிலை பேரூராட்சிக்கு
ஏறக்குறைய ஐம்பதாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. இதில் ஈ.ஓ.-
வுக்கான சம்பளம், துப்புரவுத் தொழிலாளர்களுக்கான ஊதியம், மேஸ்திரி,
வாட்ச்மேன், எழுத்தர், பணம் வசூலிப்பவர்கள் ஆகியவர்களுக்குரிய சம்பளத்
தைக் கொடுக்கிறது. இதுபோன்ற நிர்வாகச் செலவிற்கு 40 ஆயிரம் ரூபாய்
வரையில் செலவிடுகிறது. இதனால் வளர்ச்சித் திட்டங்கள், விஸ்தரிப்புத்
திட்டங்களுக்கு நிதியில்லை. அருப்புக்கோட்டைத் தொகுதியிலே உள்ள
மல்லாங்கிணறு, காரியாப்பட்டி ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இந்த நிலையிே
தான் இருக்கின்றன. அவர்கள் குடிநீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டு
மென்று குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டால், அத்திட்டத்திற்கான முழுச்
செலவையும் பேரூராட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள்.
வேண்டுமானால் எல். ஐ. சி. யிலிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
என்று சொல்லுகிறார்கள். இந்தத் திட்டத்திற்காக 15 ஆயிரம் ரூபாயைக்
கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைக் கட்டக்கூடிய வாய்ப்பும் வசதி
யும் பேரூராட்சிகளுக்கு இல்லை. இப்படிப்பட்ட நிலையில் நூற்றுக்கணக்
கான பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க என்ன
செய்யப் போகிறார்கள்? நிர்வாகச் செலவிற்கே கொடுத்துவிட்டு வளர்ச்சிப்
பணிகளுக்கு இல்லாமல் போகிறபோது, எப்படி நிதியாதாரத்தைப் பெருக்கப்
போகிறார்கள்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் முன்வர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே தனி அதிகாரிகளுடைய
பதவிக் காலத்தை மேலும் நீட்டிக்கமாட்டோம் என்ற வாக்குறுதியைத்
தந்தாக வேண்டும். உள்ளாட்சித் துறையில் பெண்களுக்கு அதிகமான வாய்ப்
புக் கொடுக்க வேண்டுமென்கிற ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறார்கள்.
18 வயது நிரம்பியவர்கள் வாக்களிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற





கொள்கையையும் அறிவித்திருக்கிறார்கள். இந்தக் காரணங்களினால் வாக்
காளர் பட்டியல் தயாரிக்க காலதாமதம் ஆகும். பெண்களுக்கு வாய்ப்புக்
கொடுப்பதை வரவேற்கிறோம். இன்றைக்கு பெண்களுக்கும், ஆண்களுக்கும்
சம அந்தஸ்து வந்துவிட்டது. ஆகவே பெண்களுக்காக தனி இடம் ஒதுக்கு
வது சரியல்ல என்று யாராவது கோர்ட்டுக்குப் போவார்கள். ஆகவே இதிலே
ஒரு டெக்னிக்கல் பிரச்சினை வரலாம். தேர்தல் கமிஷனைக் கலந்துகொண்டு
ய்ய வேண்டிய விஷயம் இது. ஆகவே இப்போது தேர்தலை முடித்துவிட்டு
ஒரு அதைப்பற்றிக் கவனிக்கலாம். தேர்தலைத் தள்ளிப் போடுவதற்காக,
பெண்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கிறோம். 18 வயது அடைந்தவர்கள்
க்களிக்க வாய்ப்புக் கொடுக்கிறோம்" என்று சொல்லுகிறார்களோ என்ற
ந்தேகம் வருகிறது. ஆகவே இதை மீண்டும் பரிசிலனை செய்து நல்ல
டிவை எடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய திருத்தங்களை முன்
மாழியும்போது மற்றக் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன் என்று கூறி முடித்
துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர்
பெயர் கொடுத்திருக்கிறார்கள். நேரடியாகச் சம்பந்தப் பட்டவர்களும்,
உரிமைதாரர்களும், மற்றவர்களும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்
அவர்களுடைய பதில் சொல்லும் காலத்தையும் சேர்த்தால் இன்றைக்கு 3
மணி வரையில் போகுமென்று தெரிகிறது. இத்தனை நாள் உழைத்து உழைப்
பால் அலுத்துப் போய் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்
பாண்டியன் அவர்கள் சொன்னதைப் போல் "தேர்தல் நடத்தப்படவில்லை"
என்ற ஒரே குற்றச்சாட்டுதான். விளைவுகள்தான் வேறுபடுகின்றன.
ஆகவே இதை ஒவ்வொருவரும் விரிவாகப் பேச வேண்டுமா என்பதை யோசித்
துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே,
ஏராம்பப் பேர்கள் பேச இருக்கிறார்கள் என்று ஆரம்பத்திலேயே சொல்லி
விட்டீர்கள். ஆகவே குறைவாகப் பேச வேண்டும் என்றும் சொல்லி
விட்டீர்கள், பஞ்சாயத்தைக் கலைத்ததைப் பற்றியே எல்லோரும் சொல்லு
கிறார்கள், ஆகவே, எல்லோரும் பேச வேண்டுமா என்று கேட்டீர்கள்.
வீட்டிலே ஐந்தாறு கறிகளை ஏன் சமைக்கிறார்கள்? எல்லாம் வயிற்றில்
ஒன்றாகத்தானே போகிறது. தனித்தனியாக ஒவ்வொன்றாகப் போட்டால்
தான் அதனுடைய ருசியை ருசிக்க முடியும். ஆகவேதான் தனித்தனியாகச்
சமைக்கிறார்கள். எல்லாவற்றையும் போட்டு ஒன்றாகச் சேர்த்தால். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : சில சமயங்களில் ஒன்றாகச் சேர்த் தால்கூட அது சுவையாக இருக்கும். கூட்டாகச் சேர்த்தால், அது சுவையாக இருக்கும்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்** : தாங்கள் எல்லாம் எல்லா சாப்பாட் டையும் சாப்பிட்டு அறிந்து கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் எல்லாம் கிராமத் தில் இருக்கிறவர்கள். சில சமயங்களில் கூட்டுக்கூட சாப்பிடுவதுண்டு. ஆகவே எல்லோருக்கும் பேச வாய்ப்புக் கொடுங்கள். ரொம்ப ஆட்கள் இருக்கிறார் கள் என்றால், எங்கே இருக்கிறார்கள்? ஏற்கெனவே இருப்பவர்கள்தானே இருக்கிறார்கள். புதிதாக ஆள் வரவில்லை. புதியதாக ஆள் வந்து வாய்ப் கொடுங்கள் என்று கேட்கவில்லை. பேச வேண்டியதைப் பேசித்தானே ஆகவேண்டும்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : அதற்காக இவ்வளவு நேரம் எடுத்து கொண்டு இதையே பேசவேண்டாம். மேற்கொண்டு பேசுங்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்** : நான் எதைப்பற்றிப் பேசப்போகி றேன் என்பது எனக்கே புரியவில்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : நீங்கள்தான் எங்கேயோ போய்விட் டீர்களே!

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்** : அமைச்சர் அவர்கள் எங்கள் வீட்டு பிள்ளை. ஆகவே சொன்னால் மானம் போகிறது; சொல்லாவிட்டா பிராணன் போகிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்க வீட்டுப் பிள்ளையாக இருந்தாலும், தவறு செய்தால், கண்டிக்க வேண்டிய எங்களுடைய பொறுப்பு. அமைச்சர் அவர்கள் தவறு செய்கிறார்கள் என் சொல்ல வரவில்லை. அவர் அவருடைய வேலையைச் செய்கிறார். உட செய்ய வேண்டுமென்று ஆணையைப் போடுகிறார். ஆனால் காரியம் நட வில்லை என்பதுதான் எங்களுடைய வருத்தம். பஞ்சாயத்தைக் கலைத் விட்டு தனி அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உ பினர் திரு. தங்கப்பாண்டியன் சொன்னார்கள். பஞ்சாயத்தில் தலைவர்க செய்ய வேண்டிய காரியத்தை அதிகாரிகள் செய்கிறார்கள். அதிகாரிகள் ஆதாரத்தான் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் தப்பு பண்ணிவிட்டார்கள் அதனால்தான் கலைத்துவிட்டோம் என்று அரசினர் சொல்கிறார்கள் அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நாளும் எவ்வளவு ஆதாய தைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்களா? பஞ்சாயத்து





தலைவர்கள் தப்பு பண்ணிவிட்டார்கள் என்றால், இவர்கள் பண்ணக்கூடிய தப்பை யாரிடம் சொல்லுவது? கிராமப் பகுதியில் உள்ள பஞ்சாயத்துக் களைக் கலைத்துவிடலாம் என்றால், இந்தச் சபையை மட்டும் வைத்துக் கொண்டிருப்பது எதற்காக?

மத்திய சர்க்காரில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் கருவைக் கலைக்கச் சொன்னார்கள். இவர்கள் பஞ்சாயத்தைக் கலைக்க ஆரம்பித் தால், என்னவென்று சொல்லுவது? கருவைக் கலைத்துவிடுங்கள் என்று அவர்கள் உத்தரவைப் போட்டார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனி யன்களைக் கலைக்கிற ஆரம்ப விழாவை இவர்கள் நடத்துகிறார்கள்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்**: இது ஆரம்பம் இல்லை, முன்பே நடந்தது.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்**: யார் செய்தாலும் தவறுதான். நாங்கள் செய்யவில்லை என்று சொன்னால், அவர்கள் கெட்டவர்கள், நீங்கள் நல்லவர்கள் என்று ஆகுமா? அவர்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதிகாரிகள் எவ்வளவோ தவறுகளைப் பண்ணுகிறார்கள். எல்லோரும் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்ல வில்லை. எத்தனையோ நல்லவர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களை நடத்த அதிகாரிகள் வந்தால் சில குணங்களும் கூடவே வந்து விடுகின்றன. தன்னுடைய பிள்ளைகளுக்குக் கல்யாணம் பண்ண, சீர் கொடுக்க என்ன பண்ண வேண்டுமென்று யோசித்து, அதையெல்லாம் வாங்கி வைத்துவிடுகிறார்கள். . . இப்படிப்பட்ட வேலைகளையெல்லாம் அவர்கள்

(முற்பகல் 11-10)

நடத்துகிறார்கள். என்றைக்கும் நடப்பதுதான். அரசிடம் சொல்வதற்கு வாய்ப்பு இருந்தது. பஞ்சாயத்துத் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களை வேண்டாமென்று அரசு சொல்லிவிட்டது. அதன் நோக்கம், இஷ்டம்போல் நடக்க வேண்டுமென்பதுதான். ஏதாவது ஒரு நியமனம் கொடுக்க வேண்டும். ஒன்று சொல்கிறேன். ஒரு புடவைக் கடைக்காரர் இருக்கிறார். கிராம ஜனங்கள் கடைத் தெருவிற்குப் போனால், சேலைக்கடைக்கும் போவார்கள். அதைப் புரட்டுவார்கள், இதைப் புரட்டுவார்கள், இப்படி புரட்டிக் கொண்டே யிருப்பார்கள். கடைக்காரருக்கு சலிப்பு ஏற்பட்டு, அவர்கள் எண்ணத்தைத் திசை திருப்புவதற்கு, ஒரு நாள் நம்முடைய தங்கச்சிக்கு வாங்கிக்கொண்டு வந்த சேலை இதுதான் என்று ஒரு புடவையைக் காட்டும்படி சொல்லுவார். அதைக் காட்டுங்கள் என்று கேட்டு உடனே அதை வாங்கிவிடுவார்கள்.

[திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்] [1979 நவம்பர் 15

அதுமாதிரிதான் நடக்கிறது, நியமன விஷயங்களில், இவர்க் போடுகிறா கள், பியூன் போடுகிறார்கள். இன்னும் வேறு வேலைகளுக்கும் ஆட்க போடுகிறார்கள். நாங்கள் பஞ்சாயத்து யூனியனில் இருந்தவர்கள். சேர்ம பதவியில் இருந்தவர்கள். இப்போது பதவியில் இல்லை. இருந்தாலும், அவர்களிடம் வந்து, இவர் ஒரு ஏழை, இவரை அந்த வேலையில் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். அவர் என்ன செய்வார்? உதாரணத்திற்காகத் தான் சொல்கிறேன். அவர் என்ன சொல்லுகிறார்? ... பைட் பையிலிருந்து 5, 6 சிட்டுக்களை எடுத்து வைத்துக்கொண்டு சொல்வார் "உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொடுத்துள்ள சிட்டுக்கு மேலே நாங்கள் என்ன செய்ய முடியும், அவர் முதலிலேயே கொடுத்திருக்கிறார் ஜுங்கள், ஐயா" என்று சொல்லுகிறார்கள். அப்போதும், அவர்கள், "ஏதோ பார்த்துப் ப நியாயமாகவே இருக்கட்டும். ஆனால் அவர்கள் 500 ரூபாய் வாங்குகிற களே என்றுதான் சொல்கிறேன். அமைச்சரவர்கள் பெயரையும் சொல்ல செட்கிறார்கள். எங்களையெல்லாம் போகச் சொல்லிவிட்டு, ஒரு சுத்தமா அதிகாரியை வைத்திருக்கிறார்களே, அவர் ஏன் இதையெல்லாம் செய்ய வேண்டும்? அரசு பஞ்சாயத்தைக் கலைத்ததற்கு ஒரு பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது, அங்கே அவர் எதற்குத் தேவைப் படுகிறார்? எதற்காக பி.டி.ஓ., டி.டி.ஓ. இருக்கிறார்கள்? ஏன் ஆர்.டி.ஓ அல்லது சப்-கலெக்டர் பார்க்கக்கூடாது? அப்படித்தானே முன்னா இருந்தது. ஒரு மனிதன், ஒரு இடத்தில் ரூபாய் 50 கொடுத்து வேலை முடித்துவிட்டால், பரவாயில்லை. ஒருவருக்குக் கொடுத்து, வேலை முடித்துக்கொண்டால், அதுபற்றிச் சொல்லத் தேவையில்லை படிப்படியாகக் கொடுக்க வேண்டியதொரு தேவையில்லாத நிலையை ஏ உருவாக்கியிருக்கிறார்கள்? கிராமங்களிலேகூட பார்க்கலாம். அங் ரோடுகள் கிடையாது. வீடுகளுக்குப் போக முடியாது. இந்த நிலை தான் இருக்கிறது. கிராமங்களைச் சீர்படுத்தினால், மாநிலம் சீர்படுமென் சொல்லுகிறார்கள். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் அறிக் படித்தார்கள். செய்கின்ற காரியங்களையெல்லாம் சொன்னார்கள். சொன்ன உடனே உடனடியாகச் செய்வதற்கு அங்கு என்ன வானொலிப் பெட்டியில் கேட்கிறோமா அல்லது பத்திரிகைகளைப் பார்க்கிறோமா? உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே சொல்லுகிறார்கள். சொன்னது அத்தனையையும் அதிகாரிகள் செய்வதில்லை. அங்கே ஐந்தில் ஒரு பங்குகூட வேலை நடக்கவில்லை. சென்ற புயலில் உடைந்த கண்மாய



1979 நவம்பர் 15] [திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்]

இதுவரையில் அடைத்திருக்கிறார்களா என்றால், இல்லை. இன்னும் அதை அடைக்கவில்லை. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களை முடுக்கி விட்டோமென்று சொல்லுகிறார்கள். 10 நாட்களுக்கு முன்னாலேயே இந்தக் காரியங்களுக்காக உத்தரவுகளைப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அரசு போடும் உத்தரவுகள் சரியில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் போடப்பட்டுள்ள உத்தரவுகள் சரியாக அமுல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அதிலேதான் தவறு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்போது கிராம மக்கள் புகார்களை எழுதிக் கொடுத்தார்கள். முதலமைச்சரவர்களுக்கு எதுவுமே தெரியாமல் இருக்கலாம். இந்த ஊரில் கண்மாய் உடைந்திருக்கிறது. இந்த ஊரில் புயல் வெள்ளம் காரணமாக கண்மாய் உடைந்திருக்கிறது, பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் கட்டிடம் உடைந்திருக்கிறது, பஞ்சாயத்து யூனியன் ஆபீசே தரை மட்டமாக ஆகியிருக்கிறது. இதையெல்லாம் அவர்கள் எங்கே கவனித்துப் பார்க்கிறார்கள்? அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அரிசி 50,000 டன் கொண்டு வந்து கொடுக்கிறோமென்று சொல்லுகிறார்கள். காலாகாலத்தில் கொடுத்திருந்தால், நான் கூட பொதுக் கூட்டங்களில் பாராட்டிப் பேசியிருப்பேன். கொடுத்த பலன் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் கிடைத்திருக்கிறதா?

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** உறுப்பினரவர்கள் அதிக நேரமாகப் பேசுகிறார்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** என்ன சொல்லுகிறார்கள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிறதென்று சொல்லுகிறார்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** அவர் பேசுகிறபோது நான் அப்படிச் சொன்னேனா? தலைவர் சொல்வதைத்தான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்க முடியும். மற்றவர்கள் சொல்வதைக் கேட்க முடியாது. சென்னை மாநகராட்சியில் இருக்கும் அண்ணா நகருக்கு நான் போயிருந்தேன். ஒரே இருட்டாக இருந்தது. சென்னையிலேயே இப்படி இருக்கிறதே, இங்கேயே இப்படியிருந்தால், கிராமங்களின் கதை என்னவாக

இருக்குமென்று நினைத்தேன். ஒரு ஆளைக்கூடப் பார்க்க முடியாது. நன்றாக இருந்தால், எங்கள் ஊரைப் போய்ப் பாருங்கள், அண்ணா நகரைப் போய்ப் பாருங்கள் என்றுதான் சொல்லுவார்கள்.

அங்கே அமைச்சர்கள்கூட இருக்கிறார்கள். பெரிய அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். ஐ.எ.எஸ். அதிகாரிகள் எல்லாம்கூட இருக்கிறார்கள். அந்த இடமே இப்படி இருக்கும்போது, மற்ற இடங்களும் இப்படித்தான் இருக்குமென்று சொல்லுவார்கள். நாங்கள் அதைப் பண்ணிவிட்டோம், இதைப் பண்ணி விட்டோம் என்று மேல் மட்டத்திலே இருந்து கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் பண்ணச் சொல்லியிருக்கிறது. ஆனால் அது நடந்திருக்கின்றதா? அதைப் பார்த்தார்களா? எங்கள் ஊரிலே ஒரு கட்டிடம், முக்கால் பங்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கால் பங்கு கட்டிடம் முடியாமல் இருக்கிறது. இதையெல்லா சொன்னால், இன்னும் மனக் கஷ்டப்படுவார்கள், என்ன இந்த மனிதன் இதை யெல்லாம் சொல்கிறானே என்று. அதிலே என்ன கோளாறு நடந்திருக்கிறது அதற்கான பணத்தை முன்னால் இருந்த காண்ட்ராக்ட்காரன் எடுத்து கொண்டு போய்விட்டான். முக்கால் பாகம் வேலையை முடித்துவிட்டா கால் பங்கு பணத்தையும் வாங்கிக் கொண்டு போய்விட்டான். இதெல்லா அரசாங்கத்தின் குறைதானே. வேறு யாரையும் குறைப்பட்டுக் கொள் வேண்டாம். அரசு உத்தரவிடுகின்ற காரியங்கள் நடக்கின்றனவா இல்லைய என்று பார்க்கவில்லை. அது யாருடைய தவறு? அது தவறு என்று நா சொல்வேன்.

தேவகோட்டையிலே முனிசிபாலிட்டியிலே பம்ப் சிஸ்டத்திலே மீட் வைக்க வேண்டுமென்று அதிகாரிகள் சொன்னார்கள். அந்த மீட்டர்க அங்கே வைத்து விட்டார்கள். உடனே நாங்கள் வந்து சொன்னோ "இதை ஏன் வைக்கிறார்கள்? ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தண் விடுவதற்கு மீட்டர் சிஸ்டம் வைக்க வேண்டுமா? சேர்மன் வந்த பி இதையெல்லாம் செய்யலாம்" என்று சொன்னோம். அப்படிச் சொ பிறகு புதிதாக வைக்க வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொ விட்டார்கள்.

அது மாத்திரமல்ல. இருக்கிற குறைபாடுகளைச் சொன்னால், பெ புராணமாகப் போகும். ரைஸ் மில்லில் 25 ஹார்ஸ் பவர் மோட் இருக்கும். 15 ஹார்ஸ் பவர் என்று எழுதி ஒட்டிவிடுகிறார்கள். அ வந்து பார்க்கின்ற சிப்பந்தி ஒரு சாதாரண சிப்பந்தியாகத்தான் இருப்



அவர் அங்கே போய் என்ன செய்வார்? அதைக் குறித்துக் கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிடுவார். இதையெல்லாம் யாரிடம் போய்ச் சொல்லுவது? இந்த மாதிரியான நிலைமைகள் எல்லாம் இருந்தால், நான் என்ன சொல்ல முடியும்?

நான் எதையோ பேச இருந்தேன். இதிலே வந்து மாட்டிக் கொண்டேன். இந்த மாதிரி குறைபாடுகள் இல்லாமல் செய்ய வேண்டும். யார் செய்தார்கள் என்பது எனக்குத் தேவையில்லை. யார் செய்தாலும், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த அரசு செய்வதிலே இருக்கும் முரண்பாட்டை எடுத்துச் சொல்கிறேன். வாழ்க்கைப்படும்போதே வம்பும் தும்புமாக இருந்தால், வாழ்நாள் பூராவும் வாழ்வது எப்படி இருக்கும் என்று சொல்வார்கள். அதுபோல ஆரம்ப ஸ்டேஜிலே இருந்தே இப்படித்தான் இருக்கிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** அமைச்சர் அவர்கள்கூட ஒரு தங்கச் சங்கிலியைக் காட்டிப் பேசினார்கள்.

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** அது புதுமண்டபத்திலே வாங்கியதோ என்னவோ? அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இப்படியெல்லாம் நடக்கிறது. 25 ஹார்ஸ் பவர் மோட்டார் என்று வைத்து விட்டு பிறகு அதையே அதிலிருந்து எடுத்து மறைத்து வைத்துவிடுகிறார்கள். 15 ஹார்ஸ் பவர் என்று லேபில் ஒட்டியிருக்கிறது. ரப்பர் ஹல்லர் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எந்த கம்பெனிக்காரன் ஏஜென்சி எடுத்தானோ? அவன் சம்பாதித்துக் கொண்டிருப்பான். அந்த ரைஸ் மில்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. கைக்குத்தல் அரிசியில் வைட்டமின் சத்து அதிகமாக இருக்கிறது; ஆகவே இந்த மாதிரி ரைஸ் மில்லில் தான் அரைக்க வேண்டும், பொது மக்கள் உபயோகிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மைல் கல்களுக்கு எல்லாம் மஞ்சள் காவி அடித்தவர்கள் தானே?

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** கையை இங்கே சுட்டிக் காட்டாதீர்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** நான் எல்லாவற்றையும் தலைவர் அவர்களிடம் தான் சொல்கிறேன். இங்கே இருப்பது துணைத் தலைவர் அவர்கள் தான். மஞ்சள் காவி மைல் கல்லுக்கு அடித்ததுபோல, இந்த ரைஸ் மில்களில் ரப்பர் ஹல்லர் வைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம்

ரூ. 10,000 வரையில் அவர்கள் செலவு செய்திருக்கிறார்கள். அவ்வளவுதா
ஆகியிருக்கிறது. ஆனால் அந்த ரைஸ் மில்காரர்கள் அதிலே அரைப்ப
இல்லை. அவர்கள் அதை எடுத்துவிட்டு வழக்கம்போல், முன்பு இருப்ப
போல், அரைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், என்
சொல்கின்றார்கள்? யாரும் அந்த மாதிரி அரைப்பதற்குக் கொண்
வருவதில்லை. இப்படித்தான் இந்த மில்களிலே நடந்து கொண்டிருக்கிறத
இந்த மாதிரி அரைத்த அரிசியை மனிதன் சாப்பிட்டால், மனிதன் அ
நாட்கள் உயிர் வாழ்வான் என்று சொல்கிறார்கள். நாம் சாப்பிடுவது என்
மாதிரி அரிசி என்பதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டும். நா
சாப்பிடுவது அந்தமாதிரியான கைக்குத்தல் அரிசிதானா? குடிசையி
வாழ்பவன் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா
இப்படியெல்லாம் நிலைமைகள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள
கலைத்தது. * * ஜேபியிலே இருந்து 5, 6 சீட்டுக்களை எடுத்து இ
டந்த..ரி கொடுத்தது என்று அதிகாரிகள் கொண்டு வந்து காம
கிறார..கள். கடிதத்தைக் காட்டுகிறார்கள். நான் அமைச்சரவர்கள
கூடவே... கொண்டுபோய் இதையெல்லாம் காண்பிக்க வேண்டும். அ
எல்லா..ம் நேரில் பார்த்தால்தான் தெரியும். இந்த மாதிரியான சீர்கேடு
நீடி..க்க இடம் கொடுக்கக் கூடாது. எந்த பஞ்சாயத்து பிரசிடெண்ட்
'..வாட்டுப் போட மாட்டேன்' என்று சொல்கின்றாரா? "நிர்வாகத்தி
ச..ப்படுத்திவிட்டோம், சரி செய்தோம்" என்று சொல்கிறார்கள். என
..ய்திருக்கிறார்கள்? என்ன இனி செய்யப் போகிறார்கள்? இதை
..ர்த்துக் கொண்டுதானே இருக்க வேண்டும். புயலில் கண்மா
உடைந்திருக்கிறது. 5 வருடமாகியும் இன்னும் அடைக்கவில்லை. இப்போ
"வெள்ள நிவாரணத்திற்கு வேலை செய்ய அரசு இயந்திரத்தை முடு
விட்டோம். எல்லாவற்றையும் செய்யச் சொல்லிவிட்டோம்" என
சொல்கிறார்கள். முன்னரே உடைந்திருப்பதைச் சரி செய்யா
இருக்கும்போது, இந்த இயந்திரம் எப்படி நடக்கும்? அதைப் பே
பார்த்திருக்கிறார்களா? அதைச் செய்தால், இவர்களிடம் தண்ட
வாங்குவார்களா? இப்போது நாம் இங்கே இருக்கிறோம். கோட்
திறப்பது எத்தனை மணிக்கு, மூடுவது எத்தனை மணிக்கு என்பது
தெரியும். வேறு என்ன நடக்கிறது? மாநகராட்சி சரியான முறை
நடக்கவில்லை. நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. இந்தக் கிராமங்க
பற்றித் தவறாக நினைப்பதற்கு இடமில்லை. உடனடியாக பஞ்சாயத்து

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



ஆரம்பிக்க வேண்டும். பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த வேண்டும். ஏதோ இரண்டு. * * இருப்பார்கள். ஒருவர் இருவர் அப்படி இல்லாமல் இருப்பார்கள். இந்த ஒரு * * இருநூறு பேர் சொச்சம். . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் அவையில் உபயோகிக்க வேண்டிய சொல்லைத் தான் உபயோகிக்கின்றார்களா?

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** என்ன பெரிய தப்பாகச் சொல்லிவிட்டிருக்கிறேன்? *

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது அந்த வார்த்தையைவிட மோசமாக இருக்கிறது. உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்தவராகத் தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது சரியில்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் * * என்று சொல்லியதையும் குறிப்பிலிருந்து நீக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையில் ஒரு உறுப்பினரை இன்னொரு உறுப்பினர் * * என்று கேட்பது சரியானதல்ல. அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதே போல் * *என்ற வார்த்தையையும் உபயோகித்திருக்கிறார்கள். அந்த வார்த்தையும் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது.

(பிற்பகல் 11-20)

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் கிராமங்களிலே இருக்கின்றன. அங்கெல்லாம் அமைச்சரவர்கள் சுற்றுப்பயணம் செய்ய வேண்டும். அங்கேயெல்லாம் என்னென்ன வேலைகள் நடந்திருக்கின்றன என்று பார்த்தால்தான், உண்மை தெரியும். ஒரு லட்சம் ரூபாய்க்கு ஒரு கட்டிட வேலை கொடுத்திருக்கிறார்கள். காண்ட்ராக்டுக்கு விட்டிருக்கிறார்கள். அதில் 25 ஆயிரம் ரூபாய்க்கு வேலை நடந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதைக் கண்டுபிடித்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**Thiru P. YELLAMANDA:** Hon. Deputy Chairman, Sir, after a careful study of the Bills before the House, namely, the Madras City Municipal Corporation (Second Amendment) Bill, 1979,

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

[Thiru P. Yellamanda] [1979 நவம்பர் 15

The Tamil Nadu Panchayats (Appointment of Special Officers) Bill, 1979, the Tamil Nadu Municipal Councils (Appointment of Special Officers) Second Amendment Bill, 1979, the Coimbatore Municipal Council Appointment of Special Officers) Second Amendment Bill, 1979, the Tamil Nadu Panchayat Union Councils (Appointment of Special Officers) Third Amendment Bill, 1979 and the Tamil Nadu Panchayats (Third Amendment) Bill, 1979, one can easily raise a doubt whether the present Government are ruling through democratic process or through bureaucracy. A doubt has arisen whether the A.I.AD.M.K. Government have got any faith in the institution of democracy. I feel that the extension of the term of Special Officers and other officers is nothing but putting the cart before the horse and the postponement of election is a severe blow to the civic administration. The A.I.A.D.M.K. Government which is boasting itself as the true champion of the cause of democracy, the A.I.A.D.M.K. Government which is boasting itself as upholding the spirit of democracy, the A.I.A.D.M.K. Government which is always using the name of 'Anna' has failed miserably in following the democratic procedure but has forgotten the word "Anna" which would mean only 'Democracy' as an institution. The word 'Anna' is a very important word for democracy and this Government have failed to conduct the civic elections and thereby have forgotten the policy of 'Anna".

The civic needs are not attended to promptly; there are taps without water. lamp posts without tube lights: there are roads with much repairs; there is stagnation of drainage water and drinking water gets mixed up with drainage water. The people in the City are living amidst filth and squalor all over the City. In fact, the slum in the City is nothing but a hell on earth. This is the fate of A Class City. I do not know what happened to the 'Wonder City' which was mentioned by the Hon. the Labour Minister on 24th October 1978 when our Hon. the Chief Minister conducted a big function. It was 2½ years back and instead of the promised 'Wonder City', we are seeing only the most back-ward City.

(முற்பகல் 11-30)

Now, Sir, I do not want to attribute the reasons for most of the problems to the Madras Corporation. The fault lies with the Madras Metropolitan Water and Sewerage Board. The Boar



1979 நவம்பர் 15] [Thiru P. Yellamanda]

has been created after separating the subject 'Water Supply, Drainage and Sewage' from the Madras Corporation. May I know from the Hon. Minister what the usefulness and utility of this Board is? The Board is not at all functioning properly. You can see the sewage-water flowing right into the streets. The sewage water and the drinking water are coming under one and the same row of pipes. That is the achievement of the Board. It is rather ridiculous and it is rather a criminal waste on the part of this Government to have created this Board. I feel that the constitution of this Board is not at all conducive to the fulfilment of the civic needs of the people. Anyway, what is the solution and what is the remedy for all these? The remedy lies in having a council and not in extending the term of office of officers. The paramount need and necessity at this critical hour is, therefore, holding of elections. Even though the Special Officer of the Corporation is doing his best, it is not possible for him to look after all the needs of the 150 Divisions as he is burdened with routine files, meetings, urgent files, meeting the visitors daily, etc. What is the primary duty of a Councillor? The duty of a Councillor is to check up whether water-supply is made properly and regularly, whether the roads are in proper condition, whether the lights are burning, etc. This is the routine work of each and every Councillor. Now, in the absence of Councillors, the Special Officer cannot be a Vishnu and he cannot deliver the goods to all the people, all on a sudden, by way of taking 'Avataras'. So, in the absence of a Council, any amount of money and any number of officials cannot deliver the goods to the public. The officer is getting his salary by hook or crook. Nobody cares whether he is doing his duty or not. He is an I.A.S. Officer and an ordinary man or illiterate man cannot approach him. தன்னுடைய வீட்டில் பைப்பில் தண்ணீர் வரவில்லை என்று அவரிடம் போய் சொல்ல வாய்ப்பில்லை. That is why whether a Party wins or not, the need of the hour is holding of elections. If they want to have this extension any more, the fate of the civic body will be sealed for ever. Therefore, I urge upon the Hon. the Minister for Local Administration to come forward with a categorical assurance to hold the civic elections as early as possible.

Sir, the decision taken by the Government to reserve seats for Harijans and women is appreciable. But the feasibility and practicability of conducting the elections in the month of April is still in doubt because the bifurcation of Divisions for Harijans and women and the reduction of age-limit may not be possible within the time-limit mentioned by the Hon. the Chief Minister.

Sir, in the end, I would like to draw the attention of this House to the miserable and pitiable lot of the sanitary workers throughout Tamil Nadu and particularly in Madras City. In the last Session, I listed out some of the fundamental, basic, vital issues relating to the sanitary workers like pensionary benefits, extension of scheme for grant of Rs. 10,000 on death, enhancement of salary and regularisation of temporary workers who are in service for more than five years. These are all the fundamental, essential, legitimate rights of the sanitary workers. Even after one year, nothing has been effected. What is the fate of the scavenger to-day? With the very little income he has, he has to maintain himself and his family and the Government have not come forward to do any help to this poor sanitary worker. Anyhow I must also appreciate our Hon. Local Administration Minister for giving special funds for electrification of the colonies of the sanitary workers. However, the other basic demands have not been considered by the Government. Denying pension and benefit of Ten thousand rupees scheme to the sanitary workers is not just. The Corporation is today giving all these benefits to the Supervisors and Superintendents. This Government are claiming that they are doing good to the toiling masses; but the poor scavenger, who is in the last rung of the social and communal ladder has been neglected. What is the logic of giving the benefit of 10 thousand rupees scheme to highly paid Supervisors, when denying the same to the poor scavenger? This is the question before everybody. The Government have come forward with so many new Orders to provide for various categories of officials but they have miserably failed to help the poor people.

ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபடுகின்றோம் என்று இந்த அரசு சொல்
கிறது. ஏழையெளிய மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபடுகின்றோம் என்
நம்முடைய முதல்வர் அவர்கள் பேசுகிறார்கள். இன்றையதினம் பிற்படுத்
பட்ட மக்களில் வசதியுள்ளவர்கள் இருக்கிறார்கள், ஆகையால் அவர்களுடை





முன்னேற்றத்திற்காகத் தான் பிற்படுத்தப்பட்ட மக்களில் வசதி இருக்கின்ற
வர்களுக்கு, மாதம் 750 ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கக் கூடாது என்று
சொல்லி இந்த அரசும், நாஙும் எந்த வசதியும் இல்லாத பிற்படுத்தப்பட்ட
மக்களுக்காக வாதாடுகின்றோம், இதில் என்ன தவறு இருக்கிறது என்று
ரொம்ப அழகாக நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
அப்படியானால் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கீழ்நிலையில்
இருக்கிற நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் திட்டத்தை
ரத்துச் செய்து விட்டது என்? சூப்பர்வைசர் போன்ற அதிகாரிகளுக்கு இந்த
10 ஆயிரம் ரூபாய் திட்டம் உண்டு, ஆனால் நகரசுத்தி தொழிலாளர்களுக்கு
மட்டும் இந்தத் திட்டம் இல்லை. இது நியாயம் தானா? முதல்வர் அவர்
களின் வாதப்படி இந்த நகர சுத்தித் தொழிலாளி ஏழை இல்லையா? அவன்
பணக்காரனா? பங்களாவில் இருக்கிறானா? இல்லை சூப்பர்வைசர் போன்ற
வர்கள் தான் ஏழையெளிய வசதியில்லாதவர்களா? இதுதான் அவர்களுடைய
சமதர்ம நோக்கமா?

அதுமட்டுமல்ல, இன்றையதினம் சட்டப்படி வேலை செய்கின்ற நகர
சுத்தித் தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு சட்டத்திலே
இடமில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் காவல் துறையில் ரிட்டயர் ஆன
ஒரு போலீஸ் அதிகாரிக்கு சட்டத்திலே இல்லாத ஒரு புதிய ஜி.ஓ.வைப்
பிறப்பித்து அவரை டைரக்டர் ஜெனரலாக ஆக்கியிருக்கிறார்கள். இவர்
களுக்கு மட்டும் ஜி.ஓ. வரும், சட்டம் வரும். ஆனால் நகர சுத்தித் தொழி
லாளர்களுக்கு மட்டும் சட்டம் வராது. இதுதான் அரசின் நோக்கமா?
டைரக்டர் ஜெனரலின் கீழே 3 ஐ.ஜி.க்கள் இருக்க வேண்டிய காரணம்
என்ன? அவர்களுக்குக் கொடுக்கப்படும் பணம் மக்களுடைய வரிப்பணம்
தானே. சட்டத்திலே இல்லாத ஒன்றுக்கு அரசாணையை உருவாக்கி
மக்களுடைய வரிப் பணத்தை வீணாக ஆக்குவது தான் அரசின் நோக்கமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** வைக்கப்பட்டிருக்கிற சட்டமுன்
வடிவுகளின் மீது பேசினால் எனக்குப் பதிலளிக்க வாய்ப்பாக இருக்கும்.
தேர்தல் பற்றி, மாநகராட்சி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசு
மாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU P. YEELAMANDA. It is only an example. In the absence of council. . . .

ஆங்காங்கே இந்த அரசு வைத்துக்கொண்டிருக்கிறது. பொதுமக்கள் புகார்
செய்தும், அதனால் பயனில்லை. அதிகாரிகள் புகார் செய்தும் பயனில்லை.
ஆட்சித் தலைவர்களே அவர்களை மாற்றியும் பயனில்லை. இவ்வளவுக்கும்
பிறகும் அந்தத் தனி அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால்
அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய அ.தி.மு.க.விலே செல்வாக்குப் பெற்றவர்கள்
அந்தத் தனி அதிகாரிகளைப்பற்றி அமைச்சர்களிடத்திலே மிக நல்ல மாதிரி
யாகச் சொல்லக்கூடிய அளவுக்கு அந்தத் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள்
என்றுதான் பொருள். என்ன சொல்கிறார்? 'இந்த அதிகாரி அங்கே
இருந்தால்தான் நான், அங்கே சேர்மனாக வரமுடியும்' என்று சொல்லி
அந்தத் தனி அதிகாரியை அங்கே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத்
தனி அதிகாரிகளே ஒரு அ.தி.மு.க. அமைப்பாளர் போன்று செயல்படக்கூடிய
அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை
நான் சுமத்துகிறேன். நான் பேசுகின்றபோது, அ.தி.மு.க. அமைப்பாளரைப்
பற்றிப் பேசுகிறேனே என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னைப்
பார்க்கிறார்கள். இந்த நாட்டிலே ஆசிரியர்கள் இருக்கிறார்களே, அவர்கள்
'நெற்றிக் கண் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று சொல்லக்கூடிய பாரம்
பரியத்தைச் சார்ந்தவர்கள். ஆகவே, அந்த வகையிலே நான் சொல்வதற்கு
கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எனக்கு
நல்ல அபிப்பிராயம் உண்டு. அவர்கள் நீண்டகாலமாகவே, நான் அறிந்த
வரையிலே திருக்குறளிலே சொல்லப்பட்டிருப்பதைப்போல

"கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்"

என்ற குறளுக்கு இலக்கணமாக நடந்துகொண்டு வந்தார்கள். ஆனால்
இப்போது சற்று மாற்றமடைந்திருப்பதாக நான் எண்ணுகிறேன். ஏன்
இப்படிச் சொல்கிறேன் என்றால், அந்த அளவுக்கு தனி அதிகாரிகள் முறை
கேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக நான்
இருக்கிற பகுதியிலே தலைஞாயிறிலே இருக்கிற அதிகாரி பலவிதமான
முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற ஆசிரியர்கள் குறை
கூறுகிறார்கள். பொதுமக்கள் அங்கே இருக்கிற அ.தி.மு.க. அமைப்பாளரே
கூட—அதிலேயும் இரண்டு குழு—அதில் ஒரு குழுவின் அமைப்பாளர் மாவட்ட
ஆட்சித் தலைவர் நடத்திய குறைதீர்க்கும் நாள் கூட்டத்திலே அந்த மேடை
யிலேயே அந்த அதிகாரியைப் பற்றிக் குறை கூறுகிறார். அதற்குப் பின்னாலே
மாவட்ட ஆட்சித் தலைவர் அவருக்கு மாறுதல் அளிக்கிறார். மாறுதல்
அளித்து இப்போது ஒரு வாரத்திற்குள் அந்த உத்தரவு 'கேன்சல்' செய்யப்



டுகிறது. அதிலே என்ன நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், தலை
ஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில்—என்னுடைய பகுதி அது—இருக்கிற ஆணை
யாளர் ஆசிரியர்களுக்கு மாறுதல் தேவையென்றால், 200 ரூபாய் கேட்கிறார்.
மாறுதல் தேவையில்லையென்றால், அவர்கள் இருக்கிற இடத்திலேயே இருக்க
வேண்டுமானால் 50 ரூபாய் வாங்குகிறார். எப்படியும் காசு அவருக்கு
வேண்டும். மாறுதல் வேண்டும் என்றாலும் காசு, மாறுதல் வேண்டாம்
என்றாலும் காசு. சிமெண்ட் மூட்டை வேண்டுமா? ஒரு மூட்டைக்கு
ரூபாய் அதிகம் கொடு என்று கேட்டு வாங்குகிறார். இப்போது குடும்பப்
பாதுகாப்புத் திட்டம் அமுலிலிருக்கிறது. ஒரு ஆசிரியர் இறக்கிறார்.
அவருடைய குடும்பத்துக்கு 10,000 ரூபாய் தரவேண்டும். அதைத் தருவதற்கு
00 ரூபாய் பேரம் பேசுகிறார். இதைத் தனியார் மூலமாகக் கேட்டு அனுப்பு
கிறார் என்று தெரிந்த பிறகு, அவரை விஜிலென்ஸிலே பிடித்துத் தர
வேண்டும் என்று நான் முயன்று, அவருக்கு ஒரு 100 ரூபாய் அட்வான்சாக
முதலிலே தந்து, மீதிப் பணத்தைப் பின்பு தருகிறேன் என்று சொல்லி
விட்டுவா என்று அனுப்பினேன். பணத்தைக் கொண்டு போனவர் என்னிடத்
திலே வந்துவிட்டுச் சென்ற ஆசிரியருடைய மகன் என்று தெரிந்த பிறகு, அவர்
ட்ஷாராகிக்கொண்டு 'என்னிடத்திலே தராதே, கிளார்க்-இடம் கொண்டுபோய்க்
கொடு' என்று திருப்பி அனுப்பி அவர் தப்பித்துக்கொண்டார். இது உண்மை,
இந்தச் செய்தி, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆளும் கட்சியின் அமைப்
பாளரிடம் கேட்டால் தெரியும். அந்தப் பகுதியிலே இல்லாமல் வேதாரண்யம்
பகுதியிலே இருப்பவர் ஒருவர் அ.தி.மு.க. பிரமுகர் அந்தப் பகுதியிலே
சேர்மனாக வரவேண்டும் என்பதற்காக, இந்த ஒன்றியத்திலே, மணக்
குடியிலே அவருடைய பெயரை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து
கொண்டு 'நீ இங்கே இருந்தால்தான் என்னைக் கொண்டுவர முடியும், ஆகவே,
நீ இங்கே இரு' என்று சொல்லி, அவரை அங்கே காப்பாற்றி வைத்துக்
கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட அ.தி.மு.க. அமைப்பாளராக ஆணையர்
செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.
அதுமட்டுமல்ல, சாதாரண ஆசிரியர்கள் டி.ஏ. வாங்க வாய்ப்பில்லை. ஆனால்
அந்தக் கூட்டங்கள் நடத்தியதாகவும், அந்தக்
அதே ஆசிரியர்களுக்காக பல்வேறு கூட்டங்கள் நடத்தியதாகவும், அவர்கள்
கூட்டங்களிலே அந்த ஆசிரியர்கள் வந்து கலந்துகொண்டதாகவும், அவர்கள்
அதற்கு டி.ஏ. வாங்கியதாகவும் பொய்யாக ரெக்கார்ட் தயார் செய்யப்பட்டு
பல்லாயிரக்கணக்கான ரூபாய் டி.ஏ. என்ற முறையில் இன்றையதினம் எடுக்கப்
பட்டிருக்கிறது. ஆசிரியர்களும் பயந்துகொண்டு கையெழுத்துப் போட்டிருக்
கிறார்கள். இவ்வாறு டி.ஏ. வகையில் எவ்வளவு எடுத்தார்கள் என்று ஒரு
வினா எழுதி அனுப்பினேன். அது எனக்குத் திருப்பியனுப்பப்பட்டதே தவிர,

தகவல் கொடுக்கப்படவில்லை. தலைஞாயிறு ஒன்றிய அலுவலகத்தில்
இருக்கும் ஊழியர்கள், வெளியிலே சென்று வேலை பார்க்க வாய்ப்பு இல்லாத
ஊழியர்கள் வெளியிலே சென்று வேலை பார்த்ததாக பொய்யாகப் பட்டியல்
தயார் செய்து, டி. ஏ. அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி ஒரு
வினா கொடுத்திருந்தேன். அந்த வினா தகவலுக்காகச் செல்கிறது. இப்படி
ஒரு வினா கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தவுடன், அங்கிருந்த
அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டர் கிழிக்கப்பட்டு, வேறு ஒன்று புகுத்தப்பட்டு பொய்
ரெக்கார்ட் தயாரித்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்
களுக்குத் தெரிவித்தும், இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும்
எடுக்கவில்லை. இப்படிப்பட்ட அட்டூழியங்கள் தனியதிகாரிகளால் செய்யப்
பட்டு வருகின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். தனி அதிகாரிகள்
ஆட்சியிலே எப்படி நேர்மை இருக்கும்? நியாயம் இருக்கும்? எப்படி இந்த
அரசுக்கு அவர்கள் நல்ல பெயரை ஏற்படுத்தித் தருவார்கள்? அப்படிப்பட்ட
வர்கள் தனி அதிகாரிகளாக பல்வேறு பகுதிகளிலே இருக்கிறார்கள். தேவ
கோட்டையிலே தனி அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவர் லஞ்சம் வாங்கு
கிறார், கொள்ளையடிக்கிறார் என்றெல்லாம் கூட எல்லாக் கட்சி உறுப்பினர்
களும் சேர்ந்து இங்கே புகார் செய்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, மக்கள்
மன்றம் என்ற அமைப்பு அவருடைய முறைகேடுகளையெல்லாம் விளம்பரப்
படுத்தியது. இதற்குப் பின்னாலே அந்த அதிகாரி என்ன செய்தார் என்று
சொன்னால்—ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கைகளை
வற்புறுத்தினார்கள் என்பதற்காக, இவர்கள் தான் என் மீது இந்தத் தட்டியை
எழுதிப் போட்டார்கள் என்று போலீசில் புகார் செய்து அவர்கள் மீது
நடவடிக்கை எடுக்க முயற்சித்தார். அதற்குப் பிறகு விசாரணையிலே
'மக்கள் மன்றம்' என்று இருக்கிற பொதுமக்களுடைய அமைப்பு அதைச்
செய்திருக்கிறது என்று தெரிய வந்தது. அரசு பிறப்பிக்கும் அரசாணைகளை
அவர்கள் நிறைவேற்றுவதில்லை. நிறைவேற்றவேண்டுமென்றால், ஒவ்வொன்
றுக்கும் காசு கேட்கிறார். இப்போது 30-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மாற்றப்
பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய 'ரிக்வெஸ்ட்' இல்லாமல் அவர்கள்
மாற்றப்பட்டார்கள். எங்களுக்கு டி.ஏ. தாருங்கள், சட்டத்திலே இடம்
இருக்கிறது என்று சொன்னபோது, அவர்களை அவமானப்படுத்தும் விதத்தில்
ஒரு ஆசிரியருக்கு 1 ரூபாய் வீதம் கொடுக்கிறார். மாறுதல் செய்து,
அல்லது 30 கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பால் சென்ற ஆசிரியர்கள் டி.ஏ.
கேட்டால், 1 ரூபாய் டி.ஏ. தருகிறார். அதாவது, ஆசிரியர்களை அவமானப்
படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ...





(முற்பகல் 11-50)

டி.ஏ. கேட்டார்கள் என்பதற்காக பிச்சை போடுவதைப்போல் ஆசிரியர்
களுக்கு 1 ரூபாய் முதல் 7½ ரூபாய் வரை இந்த மாத பில்லில் சேர்த்துத்
தந்திருக்கிறார். ஆனால் * * * என்னும் திருவாடானையில் இருக்கும் அந்த
ஆணையர் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் தற்போது
குறிப்பிட்ட அந்த ஆணையரின் பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்
படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மன்னிக்க வேண்டும். திருவாடானையில்
குடியிருந்துகொண்டு தேவகோட்டையில் பணியாற்றுகிறார். திருவாடானை
யிலிருந்து தேவகோட்டைக்கு மாற்றப்பட்டபோது, அதற்காக அவர்
மாற்றுக்கணக்கில் டி.ஏ. வாங்கியிருக்கிறார். ஆனால், உண்மையில் அவர்
தேவகோட்டையில் குடியிருக்கவில்லை. திருவாடானையில் தங்கிக்கொண்டு
தேவகோட்டையில் பணியாற்றுகிறார். ஆனால் அப்படிப்பட்டவர் ஆசிரியர்கள்
டி.ஏ. கேட்டார்கள் என்பதற்காக ரூ. 1 முதல் ரூ. 7½ வரை தருகிறார்.
இதைக் கேட்டால் என்ன சொல்லுகிறார் தெரியுமா? இந்தத் தகவல்
ஒருவேளை தவறான தகவலாகக்கூட இருக்கலாம். "நீங்கள் என்னை ஒன்றும்
செய்துவிட முடியாது. நான் அமைச்சருடைய உறவினன். நீங்கள் என்னை
அசைக்கக்கூட முடியாது" என்று சொல்லுகிறார். இதற்கு அமைச்சர்
அவர்கள் உடந்தை என்று நான் சொல்லவில்லை. இப்படிப்பட்ட முறையில்
தனி அதிகாரிகள் செய்யும் தவறுகள் மிக அதிகமாக இருக்கின்றன என்பதைச்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்பே நான் தலைஞாயிறில் பணியாற்றும் அதிகாரியைப்பற்றிக்
குறிப்பிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட அதிகாரிகள் கலெக்டரேட்டில் பணி
யாற்றும் பி.ஏ.-க்களைக் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அந்தத் தலைஞாயிறு தனி அதிகாரியைப் பற்றி ஊர் பொதுமக்கள் புகார்
செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்களும் புகார் செய்திருக்கிறார்
கள். இன்னொன்றையும் இங்கே வெளிப்படையாகச் சொல்வதற்கு வருத்தப்
படுகிறேன். அங்கே பணியாற்றும் ஒரு கிராம சேவகி அந்தத் தனியதிகாரி
* * * என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். அந்தப் புகாரைப்பற்றி விசாரிக்க
கலெக்டரேட்டிலிருந்து பி.ஏ. செல்கிறார்.

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் விரைவில் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விசாரணைக்கு வந்த அந்த பி.ஏ. என்ன சொல்லுகிறார் என்றால் *** என்கிறார். விசாரணைக்கு வந்த அந்த அதிகாரி இப்படிக் கேட்டதற்குக் காரணம் என்னவென்றால் அவரும் இந்தத் தனியதிகாரிக்கு உடந்தையாக இருக்கிறார். அவர் தஞ்சாவூர் மாவட்ட கலெக்டரேட்டில் செலக்ட் பி.ஏ.-ஆகப் பணியாற்றுகிறார். இப்படி அந்தத் தனி அதிகாரி பெரிய அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக்கொண்டு, பணம் வசூலிப்பதும், மேலாவில் கொண்டுபோய்ச் செலுத்துவதும், புகார்கள் வந்தால் ஊரில் உள்ள அ.தி.மு.க. பிரமுகர்களை அமைச்சரிடத்தில் அழைத்துக் கொண்டு வந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதும்தான் இன்றையதினம் தனியதிகாரிகள் செய்யும் பணிகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட முறையில் தனியதிகாரிகள் ஒன்றியங்களில் தனி ராஜ்யமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிறது என்பதை தகவலுக்காகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கோவை மாநகராட்சி மன்றத்தைப் பற்றிய திருத்தம் இங்கே அவை முன் வந்திருக்கிறது. கோவை மாநகராட்சிப் பகுதியோடு சிங்காநல்லூர் பகுதிகளும் இணைந்திருக்கின்றன. அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஊதியம் வழங்குவது கோவை மாநகராட்சியின் தனி அதிகாரிதான் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** *** என்பதற்குப் பதில் "தவறாக நடந்து கொண்டார்" என்ற வார்த்தைகளை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொல்லலாம். எனவே *** என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** விசாரித்த அதிகாரிகூட அதைத்தான் சொல்லியிருக்கிறார். தவறாகத்தானே நடந்தார், வேறு எதையும் செய்யவில்லையே என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல "தவறாகத்தானே நடந்தார், வேறு காரியம் எதையும் செய்யவில்லையே" என்று அந்த அதிகாரி கேட்டிருக்கிறார்.

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்ட



கோவை மாநகராட்சியில் அடங்கியுள்ள சிங்காநல்லூர் பகுதியில் பணியாற்றும் ஆசிரியர்களை கோவை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு 'அப்-கிரேடு' செய்து அனுப்புகிறார்கள். ஆனால், மாறுதல் கேட்டால், ஆசிரியர்களுக்குத் தரப்படுவதில்லை. அண்மையில் கோவை நகராட்சியில் 40 ஆசிரியர்களுக்கு மாறுதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு மாறுதல் உத்தரவிடும்போது, திருப்பூரிலிருக்கும் சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் அங்கே சென்று அதில் 3 பேர்கள் மட்டும் அனைத்திந்திய ஆசிரியர் பேரவையைச் சார்ந்தவர்கள், எனவே அவர்களுக்கு மாறுதல் அளிக்கக்கூடாது என்று சொல்லி, அவர்களுடைய மாறுதலை மட்டும் 'கேன்செல்' செய்திருக்கிறார். அதற்குப் பிறகு மீதியுள்ள 37 ஆசிரியர்களும் அந்தத் தனி அதிகாரியிடம் சென்று "அந்த மூவரை மட்டும் ஏன் நிறுத்தினீர்கள், எங்கள் மாறுதல் உத்தரவையும் நீக்க வேண்டும், இல்லாவிட்டால் போராட்டம் செய்வோம்" என்று சொன்னதன் காரணமாக, இறுதியாக 40 பேருக்கும் போடப்பட்ட அந்த மாறுதல் உத்தரவு நீக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நடுநிலைமை இல்லாமல், நிருவாகத்தில் தலையிடுவதற்கு வாய்ப்பளிக்கத்தான், தனி அதிகாரிகளின் நியமனம் பயன்படுகிறது என்பதற்காகத்தான் இதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் சொந்த ஊர் செல்வபுரம். அங்கேயுள்ள பள்ளிகளில் 12 ஆசிரியர்களுடைய பதவி காலியாக இருக்கிறது. இன்னும் அந்தப் பதவிகள் நிரப்பப்படவில்லை. அதற்குக் காரணம் அந்த ஊர் அ.தி.மு.க. பிரமுகர்கள் யாரைப் போட வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அவர்களைத்தான் போட வேண்டுமாம். அந்தப் பதவிகளை நிரப்புவதற்கு அ.தி.மு.க. பிரமுகர் ஆட்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் சொந்த ஊரிலேயே இந்த நிலைமை. அந்த ஊரிலுள்ள பள்ளிகளில் 12 ஆசிரியர்கள் பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது என்றால், அது கல்வியமைச்சர் அவர்களுக்கேகூட நல்ல பெயரை உருவாக்க முடியாது. இந்த அளவுக்குத்தான் தனி அதிகாரிகள் இன்றையதினம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி ஒவ்வொரு பகுதியிலும் ஏராளமான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல நேரமில்லை என்றாலும்கூட, ஒன்றைமட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திருப்பனந்தாள் ஒன்றியத்தில் சௌண்டிக்குமரன் ஒரு தனி அதிகாரி இருந்தார். அவர் தலைமையாசிரியர் நியமனத்தின்போது, உண்மையில் யாருக்குக் கிடைக்க வேண்டுமோ அந்த நபருக்குக் கொடுக்காமல் அங்கேயுள்ள

அ.தி.மு.க. பிரமுகர்—அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—சொன்னார் என்பதற்காக அண்மையில் தேர்வில் தேறிய பெண் ஆசிரியை ஒருவருக்கு அந்தப் பதவியை அளித்திருக்கிறார். அவரிடம் இதுபற்றிக் கேட்டபோது, 'என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? ஆளும் கட்சிக்காரர் சொல்கிறார். நான் என்ன செய்ய முடியும்?' என்று சொல்லுகிறார். இதற்கெல்லாம் காரணம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் இல்லாததுதான். ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இருப்பதால்தான், இந்த நிலைமைகள் உருவாகின்றன. ஆளும் கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்களோ அதைச் செய்கிற நிலையில் தனி அதிகாரிகள் இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் ஒருவேளை ஆளும் கட்சியில் இருப்பவர்கள் தேர்தலையே தள்ளிப் போடுகிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட ஐயம்தான் இன்றைக்குப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

பேராவூரணியில் ஒரு நிகழ்ச்சி! பட்டுக்கோட்டை கோட்ட வளர்ச்சி அதிகாரி துவக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போடுவதில்கூட அங்கே இருக்கிற ஆளும்கட்சி எம்.எல்.ஏ. சொல்படிதான் போடுகிறார். நான் போய்க் கேட்டால், "நான் என்ன செய்யட்டும், ஆளும் கட்சி எம்.எல்.ஏ. சொல்லுகிறார், போட வேண்டியிருக்கிறது, நீங்களும் ஆளும் கட்சியின் எம்.எல்.ஏ.-ஆக வாருங்கள்; வேறு வழியில்லை" என்று சொல்லுகிறார். நானோ "எனக்குக் கட்சி ஏதும் இல்லை, நான் ஆசிரியர்களுக்காக வாதாடுகிறேன்" என்று சொன்னால், "என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? ஆளும் கட்சி எம்.எல்.ஏ., சொல்படி செய்யவில்லை என்றால் எங்களுக்கு ஆபத்தாயிற்றே" என்று சொல்லுகிறார்.

இதைப் போலவே திருத்தணியில் ஒரு எம்.எல்.ஏ. இருக்கிறார். ஆளும் கட்சியைச் சார்ந்தவர். அவர்தான் அந்த ஒன்றியத்தின் பெருந்தலைவராக இருக்கிறார். அவர் சொல்படிதான் அங்கேயிருக்கிற ஒன்றிய ஆணையர் ஆசிரியர்களுக்கு மாறுதல் அளிக்கிறார் என்று கேள்விப்பட்டதால், அவரிடம் சண்டை வேண்டாம், நேரில் போய்க் கேட்கலாம் என்று அவரிடம் நேரில் போனேன். காரணம் நான் ஏற்கனவே பல குற்றச்சாட்டுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்து, பல பகுதிகளிலும் ஆளும் கட்சிக்காரர்களால்தான் ஆசிரியர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள், இது ஆட்சிக்கு





அவப் பெயரைக் கொண்டுவரும் என்று முறையிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி அவைகளைப் பரிசீலனை செய்யச் சொன்னார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அவைகளைப் பரிசீலனை செய்து மிகவும் உயர்ந்த நோக்கத்தோடு என்னிடத்தில் சொன்னார்கள். "சில பகுதிகளில் இவ்வாறு தவறுகள் நடந்திருக்கின்றன என்பது உண்மைதான். இவைகளைப் பெரிது படுத்தாதீர்கள். விட்டுவிடுங்கள்" என்று அப்போது அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

ஆகவே நான் திருத்தணி எம்.எல்.ஏ.-வை நேரில் போய்ப் பார்த்தேன். குறிப்பாக ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் வளர வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த ஆட்சி செயல்படுகிறதோ என்று சந்தேகிக்கும் அளவுக்கு இல்லாமல், ஆட்சியில் இருப்பவர்கள் யாரிடத்தும் பாரபட்சம் காட்டாமல் நடுநிலையில் இருந்து செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதையெல்லாம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கிற அமைப்பைச் சார்ந்த ஆசிரியர்களை மட்டும் அந்த ஒன்றியத்திலே மிகவும் பாதகமான முறையில் மாற்றியிருக்கிறார்கள். எனவே அவரிடம் போய் "என்னண்ணே, இப்படி எங்கள் ஆசிரியர்களை மாற்றிவிட்டீர்களே, நீங்கள் சொல்லித்தான் மாற்றியதாக அந்த ஊராட்சி ஒன்றிய ஆணையர் சொல்லுகிறாரே, இதனால் அந்த ஆசிரியர்களுக்கு எவ்வளவு சௌகரியக் குறைவு ஏற்படுகிறது, ஆகவே அவர்களை மீண்டும் இருந்த இடத்திற்கே மாற்றிக் கொடுங்கள்" என்று கேட்டேன். நான்கு நாட்களுக்கு முன்னாலே அவரை இங்கே சென்னையில் பார்த்துக்கேட்டேன். அதற்கு ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-வான அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? "திருத்தணி ஒன்றிய கமிஷனரையும் அந்த செக்ஷன் கிளார்க்கையும் அந்த பைலை எடுத்துக் கொண்டு இன்றிரவே இங்கே சென்னைக்கு வரச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் வந்துவிடுவார்கள். உத்தரவை மாற்றிப்போடச் சொல்லுகிறேன். பத்து நாளில் உத்தரவை அனுப்பி வைக்கச் சொல்லுகிறேன்" என்று அவர் சொன்னார். கமிஷனரையும், செக்ஷன் கிளார்க்கையும் எம்.எல்.ஏ., சென்னையில் இருக்கிற எம்.எல்.ஏ., ஹாஸ்டலுக்கு வரச்சொல்லுகிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஊராட்சி ஒன்றியங்களிலே யார் ஆட்சியை நடத்துகிறார்கள் என்பது தெரிகிறதல்லவா? இந்த அளவுக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாலே இன்றையதினம் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது.

[1979 நவம்பர் 15

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேரவை உறுப்பினரைப்பற்றி இங்கே குற்றஞ்சாட்டுகிறார்கள். அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** நான் பேரவை உறுப்பினரின் பெயரைச் சொல்லவில்லை. அந்தப் பகுதியில் இருக்கிற எம்.எல்.ஏ. இதைச் செய்கிறா என்றுதான் சொன்னேன்—இதைக்கூட குற்றமாகச் சொல்லவில்லை— ஏற்கெனவே இதைச் சொல்லி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே இது குறித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும் இந்த நிலை என்பதற்காகத்தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒரு அவையில் இருக்கிற உறுப்பினர் அந்த அவையில் இந்த முறையில் தவறாக நடந்துகொண்டார் என்று குறிப்பிட்டால், அது குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஆனால் பேரவை உறுப்பினரோ, மேலவை உறுப்பினரோ இந்த முறையில் வெளியே ஒரு இடத்தில் நடந்து கொண்டார் என்று சொல்வதைத் தடுக்க முடியாது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** உறுப்பினரின் பெயரைச் சொல்லவில்லை என்றாலும், திருத்தணி எம்.எல்.ஏ. என்று சொல்லியிருக்கிறார். திருத்தணிக்கு ஒரே ஒரு எம்.எல்.ஏ. தான் இருக்கிறார். எனவே அது அவரைத்தான் குறிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. மீனாட் சுந்தரம், ஒரு தொகுதியின் உறுப்பினர் இந்தமாதிரிச் செய்தார் என் குறிப்பிடும்போது, அதைக் குறிப்பிலிருந்து நீக்க முடியாது. பேரவையி இப்படி நடந்து கொண்டார் என்றால், அதைக் குறிப்பிலிருந்து நீக்கலாம் ஆனால் பொதுவாக இம்மாதிரிப் பேசுவது நல்லதல்ல. காரணம் மேலவை உறுப்பினர் பேரவை உறுப்பினரைப்பற்றிக் குறிப்பிட்டால், நாளையதின பேரவை உறுப்பினர் மேலவை உறுப்பினர் இப்படிச் செய்தார் என்று சொல் வேண்டி வரலாம். ஆகவே பொதுவாக பிரச்சினைகளுக்கு இடம்தரா அவையில் உறுப்பினர் அதை விட்டுவிடலாம். இந்தப் பிரச்சினையை விட் விட்டு அடுத்த பிரச்சினைக்குப் போகலாம். அதோடு உறுப்பினர் விரைவி பேச்சை முடித்துக்கொள்ள வேண்டு.



1979 நவம்பர் 15]

**(நண்பகல் 12-00)**

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, யாரையும் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கத்திலே சொல்லவில்லை. அவர்கள் அந்த அளவிற்கு அப்பட்டமான நிலைமையை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே தேவையான விஷயங்களைச் சொல்லிவிட்டீர்கள். ஆகவே அடுத்த விஷயத்திற்குப் போங்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஊராட்சி ஒன்றியங்களிலே தனி அலுவலர்களாக இருப்பவர்கள் எந்தத் தவறுகளைச் செய்தாலும், கேட்க யாரும் இல்லை. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆளும் கட்சிப் பிரமுகர்களைச் சரி செய்துகொண்டால் போதுமென்ற வகையிலே செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தேயாக வேண்டும். அரசு ஆணைகளைப் பிறப்பித்தாலும், பெரும்பாலான இடங்களில் அரசு ஆணைகள் அமுல்படுத்தப்படுவதில்லை. இதைக் கேட்டால், "உங்களால் இயன்றதைப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம், மேல் மட்டத்திலே இருப்பவர்கள் அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள் என்பதுதான்.

அந்த வகையிலே நெமிலி, வேலூர் ஊராட்சி ஒன்றியங்களிலே ஆசிரியர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, முகவை மாவட்டத்திலே உள்ள ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கியதைப் போல, 'அடா' வழங்கவில்லை என்பதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபோது, நானும் அந்த உண்ணாவிரதத்தில் கலந்து இந்த அவைக்கு வந்து அது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், "உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ளுங்கள், விரைவிலே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன்" என்று பெருநோக்கோடு சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னார்கள். இந்தக் கூட்டத் தொடரும் முடியப் போகிறது. ஆனால் இன்று வரையிலும் அந்த 'அடா' தொகை அந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை இங்கே சொல்லிக்கொள்ள

ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் உறுதிமொழியைத் தந்த பின்னாலே கூட, அதிகாரிகள் அதற்கான சரியான நடவடிக்கையை எடுக்கவில்லையென்றால், அதிகாரிகள் அமைச்சர்களை மதிக்கிறார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தனி அதிகாரிகளுடைய நியமனத்திற்கு நீட்டிப்புத் தருவதென்பது ஜனநாயகத்தைப் படுகுழிக்குத் தள்ளுவதாக இருக்கிறது. ஊராட்சி மன்றங்களில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லை, நகராட்சிகளில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லை, கோவில்களில் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்கள் இல்லை, கூட்டுறவுச் சங்கங்களில் ஜனநாயகம் இல்லை, ஜனநாயகம் ஒழிக்கப்பட்டுவிட்டது. ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் ஆசிரியர்கள் முறையீடுகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அதுவும் கலைக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ளது சட்டமன்றம் ஒன்றுதான். எதிர்க் கட்சிகள் மட்டும் இருந்திருந்தால், அதையும் கலைத்திருப்பார்கள். சட்ட மன்றம் கலைக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், சட்டத்திலே ஆளும் கட்சிக்காரர்களை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிக்காரர்களை மட்டும் கலைத்துவிடலாம் என்ற வகையில் இடம் இல்லையென்ற காரணத்தால்தான். ஆகவே ஜனநாயகத்தைக் காப்பாற்ற உடனே உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டு அமைகிறேன்.

திரு. சி இராமலிங்கம் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றுக்கான திருத்தச் சட்டமுன்வடிவை வரவேற்று சில கருத்துக் களைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் பெருந்தலைவராக இருந்தவர்களுடைய பதவிகளைக் கலைத்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். பல பஞ்சாயத்து யூனியன்களில் இதற்கு முன்னாலே இருந்த தலைவர்கள் தவறுகளைச் செய்திருக்கிறார்கள். பம்மல் பேரூராட்சியில் இருந்த தலைவர் தவறுகளைச் செய்திருக்கிறார். ஒன்றிரண்டு தலைவர்கள் நல்லமுறையிலே நடந்திருக்கிறார்கள் என்றாலும், பல தலைவர்கள் செய்த தவறுகளைப்பற்றி மக்கள் அரசுக்கு மனுக்களை அனுப்பிய பிறகு, அதை வைத்துக்கொண்டு ஊராட்சிகளைக் கலைத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் கூட பத்தாண்டுக் காலமாக தலைவனாக இருக்கிறேன், எனக்கே அலுத்துப் போய்விட்டது என்று நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.



ஊராட்சி நிறுவனங்களில் இருக்கக்கூடிய அதிகாரிகள்—டி.டி.ஓ.-க்கள், பி.டி.ஓ.-க்கள்—அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியால் நியமிக்கப்பட்டவர்கள் என்று பேசினார்கள். நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தலைவர் பொறுப்பேற்று பின்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருக்கிறேன். அங்கே தலைவராக இருப்பவர்கள் எல்லாம், முன்னாலே ஆளும் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல், நான் பட்டியலே வைத்திருக்கிறேன். எந்த பி.டி.ஓ. திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார், எந்த பி.டி.ஓ. காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறார் என்பதை என்னால் சொல்ல முடியும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிற பி.டி.ஓ.-க்கள், காங்கிரசை ஆதரிக்கும் பி.டி.ஓ.-க்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியொரு பட்டியல் இருந்தால், அதை வைத்து அரசாங்கத் துறைச் செயலாளரின் மூலமாக நடவடிக்கை எடுப்பதுதானே! தி.மு.க. பி.டி.ஓ., காங்கிரஸ் பி.டி.ஓ. என்று இருக்கிறார்கள் என்றால், அண்ணா தி.மு.க. பி.டி.ஓ.-க்கள் என்றும் இருக்கிறார்களா ?

திரு. க. இராமமூர்த்தி : ஊராட்சி மன்றங்களில் உள்ள நிலைகளைப் பார்த்தால், ஊராட்சி மன்றத்தின் ஆட்சிக்கு பி.டி.ஓ. இல்லை ; கட்சிக்குத் தான் பி.டி.ஓ. என்று தெரிகிறது.

It is a reflection on the Minister and the administration.

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member belongs to the ruling party. So, if his speech is in any way affecting them, they will look after it.

திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் திருத்தணித் தொகுதி எம்.எல்.ஏ.-வைப்பற்றிச் சொன்னார். அவர் அந்தத் ஃபைலை வரவழைத்துப் பார்த்தார் என்று சொன்னார். பி.டி.ஓ.-வும் தொகுதி எம்.எல்.ஏ. சட்டமன்றம் சென்னையில் கூடுகிறது. அந்த ஊருக்குப் சென்னையில் இருக்கிறார். "டிரான்ஸ்பர் செய்தால் அது யார் காலத்திலே போவதில்லை, பயணப்படி வாங்குகிறார்" என்றால், பயணப்படி வாங்குவது இருந்து வந்ததா? ஊரை விட்டு மாற்றும்போது, யார் காலத்திலே வழங்கப்பட்டது?

[1979 நவம்பர் 1

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஃபைலை வரவழைத்துப் பார்த்தது நியாயம் என்று சொல்கிறார். அப்படியானால் என்னுடைய தொகுதியிலிருந்து ஃபைலை இங்கே வரவழைத்துப் பார்க்கிற வாய்ப்பு அளிக்கப்படுமா?

**திரு. சி. இராமலிங்கம்:** திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் சென்னையில் குடியிருப்பவர். பி.டி.ஓ.-வும் சென்னையிலே குடியிருப்பவர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஃபைலை எம்.எல்.ஏ. பார்க்க வேண்டுமென்று எந்தச் சட்டத்திலே இருக்கிறது? அப்படிப்பட்ட வாய்ப்பு எல்லோருக்கும் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் ஒரு புகாரைச் சொல்கிறார்கள். அதற்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. இந்த அவையிலே நிரூபிக்கப்படவில்லை. பேச்சு போகிற போக்கைப் பார்த்தால், திருத்தணித் தொகுதி எம்.எல்.ஏ. 'கூப்பிட்டார்' 'சொன்னார்' என்பது நிரூபிக்கப்பட்டதைப் போல் போகிறது. ஆதாரமில்லை, நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, வெறும் புகாராகக் குறிப்பிடப்படுகிறது.

**திரு. சி. இராமலிங்கம்:** ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் குழுக்களைப் போட்டிருக்கிறார்கள். மக்கள் குழுவினுடைய தீர்மானங்களை பி.டி.ஓ.-க்கள் நிறைவேற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டை நானும் மற்ற உறுப்பினர்களோடு சேர்ந்து சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற பி.டி.ஓ.-க்கள் எல்லாம் ஏற்கெனவே ஆளும் கட்சியாக இருந்தவர்களுக்கு அனுசரணையாக இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் கூட சட்டமன்றப் பேரவையிலே பேசினார்கள். நாங்கள் தவறு செய்கிற அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஆட்சியை நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு உள்ளாட்சித் துறையில் உள்ள அதிகாரிகள் நடந்துகொள்ளுகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்துவிட்டு, பிறகு ஊராட்சிகளைக் கலைத்துவிட்டு, குழுக்களை நியமித்திருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களை மேற்பார்வையிடும் வேலைகளை கிராமசேவக்குகளிடம் விட்டுவிட வேண்டாம் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 15]

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர்:** துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்கள் வருமானத்தைக் கருதி இருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன். ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டவில்லை.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசினார் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். கிராமசேவக்குகளிடம் ஊராட்சிகளை மேற்பார்வையிடும் பொறுப்பை ஒப்படைப்பது வழக்கமாக இருந்தது. அந்த முறையை மாற்ற வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று எண்ணுகிறேன். அப்படியானால், எத்தனையோ படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள், எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ. போன்ற படிப்புகளைப் படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம். ஐந்து பஞ்சாயத்துக்களுக்கு ஒருவர் என்று நியமித்து, அவர் ஒவ்வொரு ஊருக்கும் சென்று ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் அங்குள்ள பொதுமக்களுடைய குறைகளைக் கேட்க வேண்டும் என்று வைக்கலாம். ஆனால் இந்தப் பணிகளையெல்லாம் கிராமசேவக்குகளிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற கட்சி உறுப்பினர்கள் சொன்னதைப் போல, அவர்கள் ஏற்கெனவே பக்குவம் அடைந்தவர்கள், பல நிலைகளை வளர்த்துக் கொண்டவர்கள். அவர்களால்தான் இப்போது கெட்ட பெயர் வந்திருக்கிறதென்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார விளக்குகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஊராட்சிகளிடம் ஒப்படைத்தும் அவர்கள் சரியாக அதைப் பராமரிப்பதில்லை, அதனால் விளக்குகள் சரியாக எரிவதில்லை. தெரு விளக்குகளுக்கு பல்பு வாங்க வேண்டுமென்றால், ஒரு குறிப்பிட்ட இடத்திலேயிருந்துதான் வாங்க வேண்டுமென்று அதிகாரிகள் சொல்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே முன்பே சொன்னேன். ஒரு பல்பை சூப்பர் மார்க்கெட்டில் வாங்கினால், ரூ. 3.60 ஆகிறது, ஆனால் வெளியே வாங்கினால் இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கிறது. மின்சார ஒயர்கள் சூப்பர் மார்க்கெட்டில் 95 ரூபாய், வெளி மார்க்கெட்டில் 65 ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆகவே இந்தக் குழப்பங்கள் எல்லாம் இல்லாமல் இருக்க, தெருவிளக்குகளைப் பராமரிக்கக் கூடிய பொறுப்பை மின்சாரத் துறை

யினிடத்திலேயே ஒப்படைக்கலாம் என்று எங்களுடைய பகுதியிலே உள் பொதுமக்கள் சொல்கிறார்கள். உள்ளாட்சியிலே பி.டி.ஓ.-க்கள் நிர்வா அதிகாரியாக இருந்தாலும், மின்சார விளக்குகள் எரியவில்லையென்றா அவற்றைப் பராமரிப்பதற்காக பி.டி.ஓ.-வும், ஈ.ஓ.-வும், கிராமசேவக்கு கம்பங்களின் மேல் ஏற முடியாது. ஆகவே இந்தப் பொறுப்பை மின்சார துறையிடமே ஒப்படைக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்காக மீட்டர்களைப் போடச் சொல்லியிருந்தோம். மின் விளக்குகளுக்காகச் செலவழிக்கின்ற மின்சாரத்தை மீட்டர் மூலமாகக் கணக்கிட்டு அந்தப் பணத்தை பஞ்சாயத்து கட்ட வேண்டுமென்ற பழைய ஏற்பாட்டைச் செய்தால், நலமாக இருக்கும். பி.டி.ஓ.-க்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள் என்று பார்த்து ஒதுக்க வேண்டும். மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப கொடுத்து வேண்டும். பி.டி.ஓ.-க்களுக்கு 20 கிராமங்கள், 20 கிராமங்கள் என்று ஒதுக்கலாம். நாம் இப்போது ஊராட்சிகளுக்கு ஒரு குழுவை அமைப்பதாலோ, பொதுமக்கள் சார்பில் அரசியல் சார்பற்ற குழுவை அமைப்பதாலோ கூட நல்ல பெயர் வாங்க முடியாது. ஏனென்றால் அவர்கள் பழக்கப்பட்டிருக்கிறார்கள். ஊறிப்போன நிர்வாகத்தில் இருந்தவர்கள். அவர்கள் தமக்கு எதிலே எப்படி நடந்தால் லாபம் கிடைக்கும் என்ற கணக்கிலேதான் இருக்கிறார்கள். அந்தமாதிரி நிர்வாகத்தில் முடியாத காரியம். அவர்களை மாற்றுவது என்பது வேண்டுமானால் கணக்குக் கேட்கலாம். அவர்களிடத்திலே சாவியைக் கொடுத்துவிட்டு பிறகு நடந்தால், நாம் சொல்வதை, குழு சொல்வதை தவறு என்று அங்கே ஏதாவது சொன்னால், அவர்கள் அந்தக் குழுவின் மீதுதான் பழியைப் போடுவார்கள். அந்த உறுப்பினர் சொன்னார், செய்தேன். இந்த உறுப்பினர் சொன்னார், செய்தேன் என்று சொல்லிவிடுவார்கள். அது அமைச்சராக இருந்தாலும், கூடவாக இருந்தாலும் பழி வந்துவிடும். ஆகவே தவறுகளைக் களைய வேண்டுமென்றால், அந்த 4 பஞ்சாயத்துக்களுக்குப் பொதுவாக ஒரு படித்த இளைஞரை நியமித்து, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, ஒரு நாளைக்கு 2 மணி நேரம் என்று வந்து, ஒரு வாரத்திற்கு ஒரு நாளைக்கு அந்த பி.டி.ஓ. தனி அதிகாரியாக இருந்தாலும், அது யாராக இருந்தாலும், அங்கு வந்து தனியாக வகுப்புகள் நடத்தினால், அவர்கள் படிப்படியாக வேலைகளைக்



கற்றுக்கொள்வார்கள். தேர்தல் வந்தால், அதாவது பஞ்சாயத்துத் தேர்தல் வந்தால், அந்த நேரத்திலேகூட மாணவர்களைப் பயன்படுத்துகின்றார்கள். வீட்டு வரியை கிராம அதிகாரி, கர்ணத்திடம் வசூலிக்கச் சொல்கிறோம். ஆனால் அவர்கள் சரியாக வசூல் செய்வதில்லை. ஏதோ அதிக வருமானம் வருகின்றவர்களிடமிருந்து ஒரு 50 அல்லது 60 ரூபாய் வசூல் செய்வார்கள். வரக்கூடிய இடத்திலேமட்டும் தான் வசூலிக்கிறார்கள். அதையெல்லாம் நம் பகுதியிலே வசூலிக்க வேண்டும். ஆகவே இந்த 4 கிராமங்களுக்கு என்று ஒரு ஆளை நியமித்துவிட்டால், அந்த இளைஞர், உள்ளாட்சித் துறை நிர்வாகங்கள் வந்த பிறகு, அந்த 4 கிராமங்களில் வீட்டு வரியை வசூல் செய்துகொண்டு தேவையான பராமரிப்பைப் பார்த்துக்கொள்வார். அவைகளைச் செய்யும்படி அவர்களுக்கு நாம் ஆணையிடலாம் என்ற என் அனுபவரீதியான கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய செங்கைப் பகுதியில், சைதாப்பேட்டை தாலுகாவில் கிட்டத்தட்ட 10, 12 கிராமங்களைச் சென்னையிலே இணைத்திருக்கிறார்கள். அதனுடைய தொடர்பு ரெவின்யூ சம்பந்தமான விஷயங்கள் எல்லாம் இன்றைக்கும் சைதாப்பேட்டையில்தான், அந்த தாலுக்காவிலேதான் இருக்கிறது. அங்கே ஒரு சர்டிபிகேட், நற்சான்று வாங்கிச் சென்றால், அதை கார்ப்பரேஷன் அதிகாரிகள் ஒத்துக்கொள்வதில்லை. தாலுக்காவிலே வாங்கி வந்தால், அதையே ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த முறை ஏற்கெனவே சட்டமுன்வடிவில் வந்திருக்கிறது. அங்கேயெல்லாம், விளக்கு பழுதடைவது, தண்ணீர் கிடைக்காதது அல்லது வேறு எந்தக் காரியம் செய்யவேண்டியது என்று இருந்தாலும் சரி, அங்கே இருக்கக் கூடிய பஞ்சாயத்துக்களிலே, வலப்பாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி போன்று பஞ்சாயத்து ஊர்களிலேயிருந்து நிர்வாகிகள் போய் மாநகராட்சியிலே எடுத்துச் சொன்னால், அங்கே அவர்களை மதிப்பதே இல்லை. எங்கே வந்தாய் என்றுகூட கேட்பதில்லை. பியூன்களைப் போல நடத்துகிறார்கள். ஈ.ஓ.-க்கள் எல்லாம் முறையீடு செய்கின்றார்கள். அந்த நிலைமைகளைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்து அதையும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** உறுப்பினர் அவர்களே குறைகளைச் சொல்கிறார்கள்.

திரு. சி. இராமலிங்கம்: நானும் ஆலோசனைதான் சொல்கிறேன். அதே
போலவே குடிநீர் வழங்குவது. பம்ப்செட் இருக்கக்கூடிய கிராமங்களிலே
குடிநீர் வழங்குவது என்பது ஒரு திட்டம். அந்தத் திட்டம் நமது குடிநீர்
வாரியத்தின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச்
சொல்கிறேன். வீராபுரம் என்ற கிராமத்திற்கு நான் போன வாரம்
போயிருந்தேன். அங்கே பம்புசெட்டு கெட்டுவிட்டது. அந்த ஊருக்கு இன்னும்
குடிநீர் வரவில்லை. ஏனென்று கேட்கிறபோது, குடிநீர் வாரியத்தின்
இன்ஜினியர் திருவள்ளூரில் இருக்கிறார் என்று சொன்னார்கள். அதனால்
தொலைபேசி மூலம் அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு வாரமாகியும்
வந்து பழுது பார்க்கவில்லை. அங்கே தண்ணீர் கிடைக்கவில்லை. இந்த
நிர்வாகத்தையும் முன்னால் இருந்தது போலவே, ஊராட்சியிடத்திலே
ஒப்படைக்க வேண்டும். நகரப் பஞ்சாயத்துக்களுக்கு எல்.ஐ.சி.-யிலே லோன்
வாங்கி நாம் தேவையான காரியங்களைச் செய்கிறோம். அதற்கு அதிகாரிகள்
ஊரிலேயே இருக்கிறார்கள். இந்தக் கிராமங்களிலே இருக்கின்ற பிரச்சினை
களை எல்லாம் தீர்க்க, ஊராட்சி ஒன்றியத்திலேயே நுழைந்து அவர்களை
வேலை வாங்க வேண்டும். அதாவது முன்பு இருந்ததுபோல இருக்க வேண்டும்
குடிநீர் வாரியம் ஏற்றுக்கொள்வது வரவேற்கத்தக்கதுதான். ஆனால்
அந்தந்த இடத்திலே ஏற்படுகின்ற குறைகளை அப்போதைக்கப்போது தீர்க்க
முடியவில்லை. இதை கிராமத்திலே உள்ளவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
ஆகவே இந்த திருத்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவந்திருக்கும் மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் சொன்ன கருத்துக்கள்
இந்தச் சட்டமுன்வடிவிலே உள்ள கருத்துக்கு மாறாமல்தான் உள்ளன என்று
கூறிக்கொண்டு, இந்த அவையில் என்னைப் பேச அனுமதித்த தலைவரவர்
களுக்கும் என் நன்றியைக் கூறி அமைகிறேன். வணக்கம்

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் 8 உறுப்பினர்கள்
பேச இருக்கிறார்கள். ஒருவர் 10 நிமிடங்கள் என்று பேசினாலும், அவர்கள்
பேசி முடிக்க ஒன்றரை மணிக்கும் மேலாகும். எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களும் பேச வேண்டும். அதன்பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பதில் சொல்ல வேண்டும். ஆக 2 மணி வரை ஆகும். ஆகவே எல்லா
உறுப்பினர்களும் விரைவாகப் பேசி முடிக்க வேண்டும். அப்போதுதான்
நம்முடைய நிகழ்ச்சிகளைக் காலையிலேயே முடித்து விடலாம் என்று
சொல்லிக்கொள்கிறேன். அதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பை நல்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





* **திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆறு
மசோதாக்களையும் ஒன்றாக முன்வைத்து, மேலும் ஒரு வருடத்திற்கு ஸ்தல
ஸ்தாபனங்களுக்கான தேர்தலை, ஒத்திப் போடுவதற்கான இந்த அவசரச்
சட்டங்களை சட்டங்களாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி
கோரியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே சட்ட மன்றம் தவிர, அநேகமாக
மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளே இல்லை என்ற நிலைமை
உருவாகியிருக்கின்றது. பஞ்சாயத்து போர்டுகள் காலி, பஞ்சாயத்து
யூனியன்கள் காலி, முனிசிபாலிட்டிகள் காலி, மதுரை கார்ப்பரேஷனைத்
தவிர மற்ற கார்ப்பரேஷன்கள் காலி. கோவாப்பரேடிவ் ஸ்டோர்களிலே
தேர்தெடுக்கப்பட்ட ஆள் யாரும் இல்லை. சொசைட்டிகளிலே தேர்தெடுக்கப்
பட்ட ஆள் யாரும் கிடையாது. அப்புறம் கோயில்களிலேயும் தர்மகர்த்தாக்கள்
இல்லை. சட்டமன்றத்திலே மட்டும்தான் அந்த நிலைமை இல்லை. சட்ட
மன்றம் தவிர வேறு எதிலுமே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தற்போது இல்லை.
இந்த நிலைமையை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பதற்கு அமைச்சர் அவர்கள்
அனுமதி கேட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்து குற்றச்
சாட்டுக்கள், அங்கே எல்லாம் ஒழுங்கீனங்கள் இருக்கின்றன என்று
கூறுகிறோம். அந்த ஒழுங்கீனங்கள் எல்லாவற்றையும் அந்த அதிகாரி மட்டும்
களைய முடியுமா? ஒரு சமுதாயத்திலே இருக்கின்ற அதிகாரிகள்
அனைவரையும் நாணயம் உள்ளவர்களாகக் கருத முடியாது, அதே
சமுதாயத்திலே இருக்கின்ற மக்களனைவரையும் நாணயமற்றவர்களாகவும்
கருத முடியாது. ஒரு துணியிலே இருக்கின்ற நூலைப்போல, அவர்கள்
எல்லாம் ஒரே தரமாகத்தான் இருப்பார்கள். தற்செயலாக அவர்கள்
அதிகாரிகள் ஆகிவிட்டார்கள். மற்றவர்கள் அதிகாரப் பொறுப்பில்லாதவர்
களாக இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இரண்டு பேர்களும் ஊரோடுதான்
வாழ்கின்றார்கள். தமிழ் நாடு பூராவும் ஒரேதன்மை வாய்ந்ததாகத்தான்
இருக்கிறது. தமிழகம் பூராவும் இருக்கும் மக்கள் ஒரே சமுதாயத்தைச்
சேர்ந்தவர்கள்தான். அப்படி இருக்கும்போது, அதிகாரிகளுக்கும் மற்றவர்
களுக்குமிடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? இப்போது இந்த
அமைப்புகளுக்கு குறிப்பாக பஞ்சாயத்து யூனியன்களுக்கும் முனிசிபாலிட்டி
களுக்கும் சேர்மன்களை மக்கள் நேரடியாக ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுப்பது
என்ற ஒரு கொள்கையை சட்டமாக்கி வைத்திருக்கிறார்கள். அதை
நடைமுறைப்படுத்த வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. இந்த ஆட்சியிலே

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

2½ ஆண்டு காலமாகத் தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக்கொண்டிருக்
கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி.-க்கள் தேர்ந்தெடுக்கப்படுவது போல,
பஞ்சாயத்து யூனியன்கள் பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிடிகள் ஆகியவற்றின்
தலைவர்களையும் நேரடித் தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்படவேண்டிய
திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டு, அதையும் அமுல்படுத்த முடியாமல்
இருக்கிறார்கள். கொண்டுவந்த திருத்தத்தையே நிறைவேற்றாமல்
இருக்கிறார்கள். லோகல் அட்மினிஸ்ட்ரேஷன், லோகல் அட்டானமி என்ற
சமாசாரமே இல்லாமல் ஆகிவிட்டது. அது மட்டுமல்ல, நம் மேலவையிலே
எப்படி இருக்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ள அமைப்பு
எப்படி இருக்கிறது? மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கப்பாண்டியன்
சொன்னதுபோல, ஒன்றரை ஆண்டுக் காலமாக மூன்றில் இரண்டு பங்கு
உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். அறுபது பேர்கள் சொச்சம்
இருக்க வேண்டிய மேலவையிலே 40 பேர்கள் சொச்சம்தான் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

என்ன வேடிக்கை என்றால், இந்த மேல்சபையேதான் டிரான்கேட்டட்டாக
இருப்பதற்கு 6 மாதத்திற்கு ஒரு முறை வோட்டுப் போட்டுக்கொண்டிருக்
கிறது. மேலவை முழுமையாக இருந்துகொண்டு வோட்டுப் போட முடிய
வில்லை. டிரான்கேட்டட்டாக இருந்துகொண்டு, அரைகுறையாக இருந்து
கொண்டு, மூன்றில் ஒரு பங்கு இல்லாமலேயே, இந்த அவையை நடத்து
கிறோம்; இங்கே அரசு கொண்டு வரும் மசோதாக்களை நிறைவேற்றுகிறோ
மென்ற நிலைமைதான் இருக்கின்றது. அந்த நிலைமையில் கவுன்சிலையே
வைத்திருக்கிறோம். மேலும் சொல்லப் போனால், டிரன்கேட்டட் என்பது
மாத்திரமல்லாமல், ஸ்தல ஸ்தாபனங்களிலிருந்து கிடைக்கும் அனுபவங்கள்
கிடைக்க வழியில்லை. சட்ட மன்றத்திலேயே, ஒரு அவையை மூன்றில்
பங்கு உறுப்பினர்கள் இல்லாமல், டிரன்கேட்டட்டாக தொடர்ந்து நடத்
தொண்டு போகிறோம்.

இதற்கு முன்னாலே பஞ்சாயத்துத் தலைவர்களாவது இருந்தார்க
இப்போது பஞ்சாயத்துக்களும் கலைக்கப்பட்டுவிட்டன. என்ன காரண
திற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

"There is public criticism that ill feelings and mal-admini
tration are prevalent to a great extent due to caste differences i
most of the panchayats".





'சாதி வித்தியாசங்கள் இருப்பதன் காரணமாக' என்று சொல்லியிருக்கி
றார்கள். அப்படி இருப்பதாக விமர்சனம் வந்திருக்கிறதென்று சொல்லு
கிறார்கள். இப்போது பஞ்சாயத்துக்களையும் கலைத்து விட்டார்கள்.
லைத்த பிறகு அங்கே தனி அதிகாரிகள் வருகிறார்கள். அவர்களிடம்
தி வித்தியாசங்கள் இல்லையா? அதிகாரிகளெல்லாம் 'கேஸ்ட்
ரன்சு'-க்கு அப்பாற்பட்ட தேவதைகளா? பின்னால் எலக்ஷன் வரப்
ாகிறது, நடத்தப்போகிறார்கள். அப்போது முனிசிபாலிடி, பஞ்சாயத்து
லாம் செயல்படப் போகிறது. அப்போது மட்டும் அவை எல்லாம் 'கேஸ்ட்
ரன்சு'-க்கு அப்பாற்பட்டதாக இருக்குமா? ஒவ்வொரு தடவையும்
வாறு தேர்தல்களை ஒத்திப் போடுவதற்கு அமைச்சரவர்கள் ஒரு
ணத்தைச் சொல்லுகிறார்கள். ஒரு தடவை மழை என்கிறார், மற்றொரு
வை மழையில்லை என்கிறார். ஒரு தடவை வெள்ளப் பெருக்கு என்கிறார்.
னொரு தடவை வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட உடைப்புக்களை
டக்கவில்லை என்று சொல்லுகிறார். இப்படி காரணங்களை மாற்றி,
றிச் சொல்லுகிறார். இப்போது அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்ட
சமாகவோ பார்லிமென்ட் தேர்தல் என்ற காரணம் கிடைத்திருக்கிறது.
'கேஸ்ட் டிபரன்ஸ்' என்று சொல்லுகிறார். அது உடனே போய்விடுமா?
இன்றைக்கு கிராமப்புற வாழ்க்கை சீர்படுத்தப்படவில்லை. அங்கே தொழில்
வளர்ச்சி ஏற்படவில்லை. கிராமப்புற மக்கள், தொழிலில் ஈடுபடும்போதுதான்,
இப்படிப்பட்ட 'கேஸ்ட் டிபரன்ஸ்' போக முடியும்.

(மாற்றுத் தலைவர் திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி தலைமை)

'கேஸ்ட்
பஞ்சாயத்துக்கள் 6 மாதங்கள் கழித்து வரும்போது மட்டும்
டிபரன்ஸ்' போய்விடுமா? எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.
நான் திரும்பவும் சொல்கிறேன், அதிகாரிகள் கேஸ்ட் டிபரன்சுக்கு அப்பாற்
பட்டவர்களல்ல. அப்படி அவர்கள் ஆகிவிட முடியாது. ஆறு மாதங்கள் கழித்து
அமைக்கப்படுகிற பஞ்சாயத்து போர்டில் 'கேஸ்ட் டிபரன்ஸ்' இருக்காதா
என்றால், இருக்கும். தேர்தலிலே, அந்த வட்டாரத்திலே எந்த ஜாதிக்காரர்கள்
அதிகமாக இருக்கிறார்களோ, அந்த ஜாதிக்காரரைத்தான் கேண்டிடேட்டாகப்
போடும் பழக்கம் தான் இருந்து வருகிறதே! எனவே 'கேஸ்ட் டிபரன்ஸ்'
இல்லாத நிலைமை என்று சொல்லுவது எப்படிப் பொருத்தமாக இருக்க
முடியுமென்று கேட்க விரும்புகிறேன். இந்த மாதிரிக் காரணங்களைச்
சொல்லிக்கொண்டு போவது நல்லதல்ல. நடைமுறையில், லோகல் அட்மினிஸ்

டிரேஷனைப் பொறுத்த மட்டில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே இல்லாமல் நிர்வாகம் நடத்தும் நிலைமைகளைத்தான் இது ஏற்படுத்தப் போகிறது.

தேர்தல் நடந்தால், அங்கே பஞ்சாயத்துத் தலைவர்கள் இருப்பார்கள், மெம்பர்கள் இருப்பார்கள். அவர்கள் பல தவறுகளைப் பண்ணும் வாய்ப்புக் களும் இருக்கின்றன. அப்படித் தவறுகள் செய்துயிருக்கிறார்கள். இருந்தாலும் நல்லவர்களும் அதில் இருக்கிறார்கள். அவர்கள் தவறுகளைச் செய்தாலும் கூட, மக்கள் மத்தியிலே இருப்பதால், ஜனங்களுக்கு சில காரியங்களைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது, அதைச் செய்வார்கள். ஆனால் அதிகாரிகளைப் போடும்போது, அவர்கள் தாலுக்கா ஆபீசில் இருப்பார்கள். அவர்கள் 10, 15 கிராமங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்கள். அந்த நிலைமையில் எந்தக் கிராமத்தைத் தேடிக்கொண்டு போக முடியும்? ஊரிலேயே உள்ள பஞ்சாயத்துத் தலைவரையோ, மெம்பரையோ வைத்துக்கொண்டே காரியங்களைச் செய்துமுடிக்க சிரமப்படுவார்கள். அப்படியிருக்க அவர்கள் அதிகாரிகளைத் தேடிக்கொண்டு போக முடியுமா? சாத்தியப்படுமா? 'எபிஷியன்ட் அட்மினிஸ்டிரேஷன்' என்று சொல்லு கிறார்கள். கிராமங்களிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலுள்ள அதிகாரிக எப்படி எபிஷியன்ட்டாக இருக்க முடியும்? அது நடைமுறைக்குச் சாத்திய என்பதையும் பார்க்க வேண்டும். எனவே அமைச்சரவர்கள் கலைத்ததற்கு சொன்ன காரணம், பொருத்தமாக இல்லை.

அடுத்து, பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுபோல, செக்கி கையெழுத்துப் போடும் அதிகாரத்தை பி.டி.ஓ. விற்குக் கொடுத்திருக் ார்கள். ஆனால் அதைத் தணிக்கை பண்ணும் அதிகாரி ஈ.ஓ. (பி). அவர் பி.டி.ஓ.விற்குக் கீழே உள்ள அதிகாரி. பஞ்சாயத்துத் தலைவர்களையெ லாம் நீக்கிவிட்ட காரணத்தால், செக்கில் கையெழுத்துப் போடும் அதிகா ரத்தை பி.டி.ஓ.விற்குக் கொடுத்துவிட்டார்கள். அதை எப்படி ஈ.ஓ. (பி) தணிக்கை செய்ய முடியும்? இப்படியெல்லாம் அவசரக் கோலத்தில் செய் திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதை டி.டி.ஓ. கவனித்துக் கொள் வார்.

**திரு. ஆ. நல்லசிவன் :** சமீபத்தில் அப்படி ஆர்டர் போட்டிருக்கிறா களோ என்னவோ தெரியாது. ஈ.ஓ. (பி)தான் அதைத் தணிக்கை செய்வ தாக நான் கேள்விப்பட்டேன். இப்போதுதான் டி.டி.ஓ. என்று தெரிகிறது



பேரவையிலே இதைப்பற்றிக் கேட்டபோது கூட, இதற்குப் பதில் தரப்பட வில்லை. இந்த மாதிரி 'அனாமலீஸ்' ஏற்பட்டு, நிறைய சிக்கல்கள் இருக கின்றன. போன தடவை பேசும்போதே, அமைச்சரவர்களிடம் சொன் னேன், "6 மாதங்கள் என்று இப்போது கமிட் செய்யாதீர்கள், இன்னொரு தடவை, 6 மாதம் கேட்கப் போகிறீர்கள்" என்று. அப்போது 'இல்லை" என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நாடாளுமன்றம் கலைக்கப்படுவது உறுப்பினரவர்களுக்குத் தெரியுமோ, என்னவோ, எனக்குத் தெரியாது.

**திரு. ஆ. நல்லசிவன் :** 1978 செப்டம்பரில் 6 மாதம் கேட்டார்கள். 1979 ம மாதத்தில் மீண்டும் 6 மாதம் கேட்டார்கள். நான் செப்டம்பரில் சான்னேன். அப்போது நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய தகவல் இல்லை. னவே அமைச்சரவர்கள் சொன்னபடி ஏன் தேர்தலை நடத்தவில்லை? நான் சான்னது 1978 செப்டம்பரில். "திரும்பவும் 6 மாதம் என்று கமிட் சய்யாதீர்கள்" என்று அப்போது சொன்னேன். இப்போது மீண்டும் வருஷம் கேட்கிறார்கள். பேரவையில் பேசும்போது முதலமைச்சரவர்கள் ரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் முடிந்த றகு, பட்ஜெட் செஷன் வந்துவிடும். பட்ஜெட் செஷனுக்குப் பிறகு, இரண்டு ாதங்களில் தேர்தலை நடத்துகிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். பட்ஜெட் காடர் ஏப்ரல் 30 ஆம் தேதிவரையில் இந்த ஆண்டு போயிருக்கிறது. அதே பான்று அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம்வரை பட்ஜெட் தொடர் போனாலும், 80 ஜூலைக்குள் தேர்தல்களை நடத்திவிடலாம். எனவே 14 மாதங்களுக்கு அமதி வாங்கிக்கொள்ளலாம், முதலமைச்சர் வாக்குப்படி என்று கேட்டுக் ாள்ள விரும்புகிறேன். அதற்கு நாங்கள் வோட்டுப் போடுகிறோம். ண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் உடனே செய்ய வண்டுமென்று சொன்னார்கள். அது சாத்தியமில்லை. முதலமைச்சரின் ாக்குறுதியையாவது நிறைவேற்ற வேண்டும். ஏப்ரல் 30 ஆம் தேதியன்று ட்ஜெட் கூட்டம் முடிவடையுமென்று வைத்துக்கொண்டாலும், அதற்குப் றகு இரண்டு மாதங்களைச் சேர்த்து ஜூன் கடைசிவரை என்று வைத்துக் ாண்டால், 13 மாதங்களாகும். அதை 14 மாதங்களாகவே வைத்துக் ாள்ளுங்கள். அப்படியில்லாமல் திரும்பவும் பட்ஜெட் செஷனின்போது மாதம் கேட்கவேண்டாம். ஜூலை 1980-க்கு மேல் போகாமல், Firm ட்மென்ட்டாகக் கொடுங்கள். அப்படியில்லாமல் மீண்டும் பட்ஜெட் ஷனின்போது 6 மாதங்கள் கேட்கலாம், அதிகாரிகளை வைத்துக்கொண்டே

ஆளலாமென்ற கருத்தை மாற்றுகிற முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு உள்ளாட்சி மன்றங்களை நிர்வகிக்க வேண்டும். திரும்பவும் இதற்கு அவகாசம் கேட்க மாட்டோமென்பதை சத்தியப் பிரமாணம் சொல்லுங்கள். முதலமைச்சரவர்களுடைய வாக்குறுதிப்படி செய்ய வேண்டுமென்று சொல்லி, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Mr. Vice-Chairman, I strongl oppose the postponement of the elections to local bodies. It ha been a practice to postpone them and our State has not witnessed local body elections for a very long time. However efficient the Special Officers may be, their administration of the villages is not conductive to democracy. The particulars person may be good but he has to depend upon his subordinates for the administration of villages. In many cases, even for very small and elementary needs of the people, there is corruption and corruption is rampant in every walk of life. We find in many villages, roads are not in proper condition; especially after rains, they are in a very deplorable condition. Leave alone vehicles, even pedestrians can not use those roads which are water-logged. The lights are not burning. Even in places where there are lamp posts, there are no bulbs burning. If we make a representation to the concerned authorities, there is a delay in attending to it. The bulbs replace become fused within 4 or 5 days. The reason for this is that th bulbs purchased from the contractors who had given the lowe quotation are poor in quality. The bulbs bought in the mark are better and dependable. Therefore, the Government shou make some arrangements so that quality goods are supplied local bodies. Under the present arrangement we cannot expe quality bulbs supplied to local bodies. There are perman vacancies in local bodies and they are not filled up. In every walk of life, there is retardation. There no active work done in Municipalities. Therefore, unless an until local administration is entrusted to the people's representa tives we cannot export any efficiency in administration. One ho Member mentioned that there was no elected body in the Stat except the Legislature. Even the Council is truncated because w have not got the members elected from the Local Authoriti Constituencies and those seats are vacant. We cannot say th our Council has its full complement of members. I, therefo request the Government to expedite the holding of elections local bodies and see that people's representatives are given th



(பிற்பகல் 12-30)

rightful place in the administration of the local bodies. They may say that the people's committees have now been constituted. I will give an example for the working of the people's committees. A few others and I have been included in the committee for Pallavapuram Municipality. Only one meeting has been held and after that, no further meeting has been held. We do not know what is happening there. The officer there seems to be a good person but he is not capable of doing anything. Some roads there are in a very deplorable condition and water is logging every-where. Adequate drinking water facility is also not available. If this is the position in a very big Municipality like Pallavapuram, we can imagine what the position will be in every small places and in hamlets where there are no facilities. In the Pallavapuram Municipality, there has been appreciable tax-collection and lakhs of rupees have been collected. Still, no proper drinking water facility has been provided. Of course, the Water Board is there and several schemes also are there. But, if we look at the practical side, still we have to depend only on well-water for our drinking water requirements. Especially in places like Chromepet where tanneries are functioning, well-water is not potable. There are only a few wells from which potable drinking-water could be taken and people have to go long distances for bringing drinking water from such wells. It is a very difficult task, especially for poor people to go such long distances for bringing drinking-water.

I, therefore, request the Government to expedite the elections to local bodies. Unless the elections are held as early as possible, it will lead to one man's rule. It may be said that we have got the Legislature here. But, unless democracy is established at the ss-root level, that is, the Paachayat level, we cannot expect mocracy to function properly. Therefore, I request the Gov-ment definitely to hold the elections to local bodies as early possible and to restore popular rule. Thank you.

திரு. சோ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு ள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவையின் முன் வைத்துள்ள சட்ட ன்வடிவுகள் மீது எங்களுடைய கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் பேசியதை நானும் வலியுறுத்தி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [1979 நவம்பர் 1

சென்னை மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி மன்ற இவை எல்லாம் கலைக்கப்பட்டு இன்றையதினம் தனி அலுவலர்களுடை தயவில் ஆட்சிப்பொறுப்பை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய நிலை தமிழகத்தி ஏற்பட்டிருப்பது வேதனைக்குரிய செயல் என்பதை நான் இங்கே தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இளமைத் துடிப்போடு இந்தத் துறையில் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், சீரிய முறையில் செயல்படுத்துவார் என்கிற நம்பிக்கை எதிர்க் கட்சியிலே நாங்கள் இருந்தாலும் எங்களுக்கு நிரம்ப உண்டு. ஆனால் அதே நேரத்தில் இந்தத் துறையிலே அவர்கள் சீரிய முறையிலே தன்னுடைய கடமையை நிறைவேற்றி மக்கள் மகிழ்ச்சிகொள்ளத் தக்க அளவுக்கு காரியங்களைச் செய்யவில்லை. காரணம் இந்தத் துறையிலே இன்றையதினம் அதற்கு வழியில்லாமல் தனி அலுவலர்களை வைத்துக்கொண்டு மக்கள் பிரதிநிதிகள் இடம் பெறாமல் காரியங்களில் ஈடுபடுவதினாலே இப்படிப்பட்ட ஒரு வாலிபர் உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகும் கூட, இவ்வளவு மோசமாகப் போய்விட்டதே என்கிற அவப் பெயரை அவர் தேடிக்கொள்ளக் கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டதற்காக நான் உள்ளபடியே வருந்துகிறேன்.

சென்னை மாநகராட்சித் தேர்தலைப் பொறுத்தவரை, ஒத்தி வைத்தத கான காரணத்தைக் கேட்டபோது, மஸ்டர் ரோல் வழக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், சூரா ஏரியாவை எல்லாம் சேர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே அவைகள் எல்லாம் பூர்த்தியான பிறகு தான், தேர்தல்கள் நடைபெற முடியும் என்று சொன்னார்கள். இப்பொழுது மஸ்டர் ரோல் வழக்கு முடிவு பெற்ற பிறகும் இந்தத் தேர்தல் ஒத்தி வைக்கப்படுகிறது. அதேபோல கோவை மாநகராட்சி மன்றத் தேர்தலையும் தள்ளி வைப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஏற்றுக்கொள்ள இயலாது. நகராட்சி மன்றத்தினுடைய தேர்தல்களையும் தள்ளி வைக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள், தமிழகத்திலே மொத்தம் 374 இருக்கின்றன. அந் 374 ஊராட்சி ஒன்றியங்களும் இன்றைக்குக் கலைக்கப்பட்டு, அங்கு தனி அலுவலர்களை நியமித்த பிறகு அந்தத் தனி அதிகாரிகளின் தவறான போக்கால் மக்களுடைய பணமும் வீணாக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து அண்ணா திராவி முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு, 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் தமிழகத்திலே இருக்- -

மக்கள் பிரதிநிதிகளை



1979 நவம்பர் 15] [திரு. சோ. ஆறுமுகம்]

தலைவர்களாகக் கொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தவற்றை, கலைத்துவிட்டு அவற்றிலும் தனி அலுவலர்களை நியமிக்கின்ற பொறுப்பில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதிலே எனக்கு ஒரு சந்தேகம். ஊராட்சி ஒன்றியங்களை, ஊராட்சிக் குழுக்களைக் கலைத்ததும் அங்கு ஆணையராக இருந்தவர்களிடத்திலே தனி அதிகாரி, ஸ்பெஷல் ஆபிஸர் என்கிற முறையில் அனைத்து அதிகாரங்களையும் அவர்களிடம் வழங்கினார்கள். சாதாரணமாக ஒரு ஊராட்சி ஒன்றியம் என்றால், 30 அல்லது 40 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்துக்களையும் இப்பொழுது கலைத்துவிட்டு அந்தப் பஞ்சாயத்துக்களுடைய பொறுப்புகளையும் தனி அதிகாரியாகவும் கமிஷனராகவும் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபிஸரிடம் ஒப்படைத்து உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஒரே ஆணையர் ஒரு ஊராட்சி ஒன்றியக் குழுவினுடைய நிர்வாகப் பொறுப்புக்களையும், அந்த ஒன்றியத்திலுள்ள 38 அல்லது 40 ஊராட்சி மன்றங்களுடைய நிர்வாகப் பொறுப்புகளையும் எப்படி கவனிக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஒன்றிய அளவிலே இருக்கிற ஊராட்சி மன்றஙகளுக்கெல்லாம் தனியாக தனி அலுவலர்களை நியமிக்கப் போகிறார்களா, அல்லது இதே ஆணையரை வைத்துத் தான் நிர்வாகம் நடத்தப் போகிறார்களா என்பதை அருள்கூர்ந்து தெளிவுபடுத்த வேண்டும். இந்த ஆணையர் ஒருவரே இருந்து அனைத்துப் பொறுப்புகளையும் கவனிப்பாரேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், இப்பொழு கிராமங்களிலுள்ள ரோடுகள், பாதைகள் எல்லாம் செப்பனிடப்படாம சீர்குலைந்து போய் போக்குவரத்துக்கு வழி இல்லாத நிலை ஏற்படும். குடி வசதி செய்து தரப்படாமல் மக்கள் பாதிக்கப்படுவார்கள். சுகாதார வ பாதிக்கப்படும். தெரு விளக்குகள் பொருத்தப்படாமல் இருண்ட ஒரு சூழ்நி எதிர்காலத்திலே நிச்சயம் உருவாகிவிடும். இதற்கு என்ன மாற் ஏற்பாட்டைச் செய்யப் போகிறார்கள் என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ஊராட்சி மன்றங்களுடைய பொறுப்புக்களையும் ஆணையரே பார்ப்பது அவ்வளவு பொருத்தமாக இராது. அதே நேரத்தில் 1960-61 ஆம் ஆண்டுக்கு முன்பு "குரூப் கிளார்க்" என்கிற பெயரில் நாம் எழுத்தர்களை 4 அல்லது 5 பஞ்சாயத்துக்கு ஒருவர் விதம் நியமித்துக்கொண்டிருந்தோம். அந்த முறையே ஒத்து வரவில்லை, சரிப்படவில்லை என்று நாம் எடுத்துவிட்டோம். அதன் பிறகு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஊராட்சி மன்றமே எழுத்தர்களை நியமித்துக்கொள்ளலாம், பொறுப்புகளை நிறைவேற்றலாம் என்று ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரம்

[திரு. சோ. ஆறுமுகம்]    [1979 நவம்பர் 15

வழங்கினோம். அதுபோல் தேர்தல் நடக்கின்ற வரையாவது 5 அல்லது 10 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு தனி அலுவலர் என்ற அளவில் தனி அலுவலர்களை நியமிக்கின்ற பொறுப்பினை அரசு ஏற்றுக்கொண்டால்தான், கிராம மக்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு ஊராட்சி

(பிற்பகல் 12-40)

ஒன்றியங்களில் இருக்கின்ற ஆணையாளர்கள் மிகத் தவறாக நடக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லும்போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த ஆணையாளர்களை நிர்ப்பந்தப்படுத்தி அவர்கள் சொல்வதைத்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தி வருவதைத்தான் நாம் பார்க்கிறோம். ஒரு பாதை அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கான எஸ்டிமேட் 3,000 ரூபாய்க்கு மேலே போனால், டெண்டர் மூலமாகத்தான் வேலையை ஒப்படைக்க வேண்டும். 1,000 ரூபாய், 500 ரூபாய் என்று சொன்னால், ஆபீசர் முறையிலே கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றையதினம் ஆளும்கட்சிக்காரர்களுடைய தலையீட்டின் பேரில் 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் வரை, பாதை அல்லது கல்வெர்ட் அமைக்க வேண்டுமென்றால், அந்த எஸ்டிமேட்டை எல்லாம் நான்காக, ஐந்தாகப் பிரித்து அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யச் சொல்லி, அந்த ஆணையாளரே 'ஆபீசர்' முறையிலே டெண்டர் கொடுக்கக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு பினாமியாக உள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு அந்த வேலைகள் கொடுக்கப்பட்டு இன்றைக்கு மக்களுடைய பணம் பாழாக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை நான் சுமத்துகிறேன். ஊராட்சி மன்றங்களிலே இருக்கிற தெருவிளக்குகளைப் பராமரிப்பதற்கான பொறுப்பை ஊராட்சி ஒன்றியத்திற்கே கொடுத்திருக்கிறார்கள். அதுபோல நகராட்சிக்கும் கொடுத்திருக்கின்றார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் பழுதுபட்ட பல்பை மாற்றுகின்ற பொறுப்பு அல்லது அதை மாற்றுவதற்கு அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் கொடுக்காததால், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் பல்புகளை வாங்கி வைத்துக்கொண்டு மின்சாரத் துறையிலே இருக்கும் சூப்பர்வைசருக்கு கணக்கு எழுதி, அவர்கள் வந்தால்தான், பொருத்த முடியும் என்ற நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து நகராட்சிக்கு அதற்காக தனியாக ஒரு சூப்பர்வைசரை நியமனம் செய்து அவர்களே பல்புகளைப் பொருத்தி



1979 நவம்பர் 15]    [திரு. சோ. ஆறுமுகம்]

கொள்ளலாம் என்று உத்தரவுகளை வழங்கினால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்யாததால் இன்றைக்கு பெரும்பாலான நகரங்களிலும், கிராமங்களிலும் 100-க்கு 75 லைட்கள் பொருத்தப்படாமல் அந்தப் பகுதிகள் இருண்ட சூழ்நிலையிலேயே இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 110 நகராட்சிகள் இருக்கின்றன என்று கருதுகிறேன். இதிலே 60-க்கு மேற்பட்ட நகராட்சி மன்றங்கள் மிகக் குறைந்த வருவாயை வைத்துக் கொண்டிருப்பவை. குறைந்த வருமானம் உள்ளவைகளை, ஸ்பெஷல் கிரேட், செலக்ஷன் கிரேட், தேர்ட் கிரேட் என்று மூன்றாகப் பிரித்திருக்கிறோம். இவைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து போதிய அளவுக்கு மானியம் ஒதுக்கப்படுகிறதா என்றால் இல்லை. திருச்சி, சேலம் போன்ற செலக்ஷன் கிரேடு நகராட்சிகளுக்கு வேண்டுமானால் மானியங்கள் கொடுக்கிறோமே தவிர முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு நாம் பணம் ஒதுக்காததால், நாம் அதிகமாக உதவியளிக்காததால், அங்கே இன்றைக்குப் பாதை வசதிகள் இல்லை, தண்ணீர் வசதிகள் இல்லை, சுகாதார வசதிகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, ஏதோ ஒரு சாதாரண குக்கிராமம் போல—நகராட்சிகள் என்ற நிலையில் இருக்கக்கூடியவைகள் கூட—இன்றைக்கு இருப்பது வேதனைக்குரிய ஒன்று. இதற்கெல்லாம் என்ன நிவாரணம் செய்யப்போகிறார்கள் என்று புரியவில்லை. தேர்தல் நடத்த மூன்று முறை வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. 1977, 1978 ஆம் ஆண்டுகளிலே வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இதற்கென்று 5 கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்து, பட்டியல் தயார் செய்து, தேர்தல் இந்த மாதம் என்று அறிவித்து, அதற்காக அதிகாரிகளையெல்லாம் அந்தப் பணியிலே ஈடுபடுத்தியிருக்கும்போது, தேர்தலைத் தள்ளி வைத்ததன் மூலம் 5 கோடி ரூபாய்க்கு மேல் நகராட்சிக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஊராட்சி மன்றங்களுக்குச் செலவு ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் அரசு முன்கூட்டியே திட்டமிடாததுதான். சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் உறுதியாகச் சொன்னார்கள். யாரும் இங்கே சந்தேகப்படத் தேவையில்லை, நிச்சயமாகத் தேர்தல் உண்டு என்று சொன்னார்கள். அவர்களுடைய வாக்கிலே எங்களுக்கு நம்பிக்கை இருந்தாலும், அவர்கள் வாக்குறுதி கொடுத்து, அது நிறைவேற்றப்பட்டால் அவர் நல்லபெயர் நாட்டிக்கொண்டு போவதை அமைச்சரவையிலே இருக்கும் மற்ற அமைச்சர்கள் விரும்பாமல் தேர்தல்களை தள்ளி வைக்கிறார்களோ என்று அச்சப்படுகிறேன். அதுபோல இப்போதும் கூட ஓராண்டுக் காலம் நீடிப்புக் கேட்கிறார்கள். நிச்சயமாக ஓராண்டு காலத்திற்குள்ளாகத் தேர்தலை நடத்தப்போவதில்லை. நாடாளுமன்றத்

[திரு. சோ. ஆறுமுகம்] 1979 நவம்பர் 15]

தேர்தல் முடிந்ததும், அதற்குப் பின்னாலே தமிழகத்தினுடைய தேர்தலைச்
சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். எதிர்க் கட்சியாக இருந்து ஆட்சிப்
பொறுப்புக்கு வந்ததும் உடனடியாகத் தேர்தல் நடத்தியிருக்கலாம். நாட்கள்
போகப்போக ஆளும்கட்சிக்கு பலஹீனம் ஏற்பட்டிருக்கிறது என்பதை
உணர்ந்திருப்பதால் தான் தேர்தலைத் தள்ளி வைக்கிறார்கள். இப்போது
பெண்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கப் போகிறோம் என்று
சொல்கிறார்கள். அது முன்னாலே இருந்ததுதான். தேர்தலிலே போட்டியிட்டு
வெற்றிபெற்று வரவில்லை என்றால், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு
பெண் உறுப்பினரை, மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மூன்று பெண்
உறுப்பினர்களை நியமிக்கலாம் என்ற முறையின் மூலம் அவர்களுக்கு உரிமை
கொடுத்தோம். ஊராட்சி மன்றங்களில் பெண் உறுப்பினர்களுக்கு முன்னர்
உரிமை கொடுக்கப்பட்டது. ஆகவே, இந்தச் சலுகை ஏற்கெனவே கொடுக்கப்
பட்டதுதானே தவிர, புதிதாக ஏற்பட்டதல்ல. ஏற்கெனவே 1958 ஆம் ஆண்டு
பஞ்சாயத்துச் சட்டத்திலே இது இருந்தது. ஆனால் அப்போது அது சரியாக
இல்லை. அதற்குப் பின்னாலே கழக ஆட்சிக் காலத்திலேதான் நாங்கள்
மாறுதல்களைக் கொண்டு வந்தோம். இப்போது தேர்தல் முறை என்று
சொல்லி, இந்தத் தேர்தலைத் தள்ளி வைக்கத்தான் இந்த வழிகள் எல்லாம்
ஆளும் கட்சியிலே இருப்பவர்களுக்குத் தெரியும். நாடாளுமன்றத்திற்குத்
தயாரிக்கப்பட்டிருக்கின்ற வாக்காளர் பட்டியலை வைத்து தேர்தல் நடத்த
முடியாது. ஊராட்சி மன்றத் தேர்தலுக்குத் தனியாகத் தயாரிக்க வேண்டும்.
இன்னும் $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திலே பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டி
யிருக்கும். நிச்சயமாக இந்த ஊராட்சி மன்றத் தேர்தலை அதற்குள்ளாக
நடத்தப்போவதில்லை. வீண் வாய்ப்பந்தலைப் போட்டுக் கொண்டு காலத்தைக்
கடத்துகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளுக்கு இங்கே இடமில்லை. ஜனநாயகத்
திற்குப் படுகுழி வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் மீது
நம்பிக்கை இல்லை, ஆனால் அதிகாரிகள் மீது நம்பிக்கை இருக்கிறது என்று
சொல்கிறார்கள். அப்படியானால் உள்ளாட்சித் துறை இலாக்காவோ
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு காபந்து அரசு போல இருந்து
சட்டங்களை இயற்றலாம். காபந்து சர்க்காராகக்கூட இருந்து ஆட்சி
நடத்தலாம். எங்களுக்குக் கவலையில்லை. ஆனால், ஊராட்சி மன்றங்களில்
நிர்வாகத்திலே ஜனநாயகத்திற்கு இடமில்லாமல் அரசு செய்துவிட்டது என்ற
குற்றச்சாட்டை நான் சுமத்தி, இத்தகைய குற்றச்சாட்டுகளிலிருந்து அரசு
விடுபடும் வகையில் உடனடியாக ஊராட்சிகளுக்குத் தேர்தலை நடத்த
வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 15]

(பிற்பகல் 12-50)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம்
6 சட்ட முன்வடிவுகளின்மீது உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்
நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த 6 சட்ட முன்வடிவுகளின் மீதும்
தனித்தனியாகப் பேசி அவைகளை நிறைவேற்றுவதாக இருந்தால், அந்தந்தச்
சட்ட முன்வடிவின்மீதும் தனித்தனிப் பிரச்சினைகளைப்பற்றி உறுப்பினர்கள்
பேசியிருக்க முடியும். ஆனால் இப்போது 6 மசோதாக்களின் மீதும் ஒன்றாகக்
கலந்து பேசுவதால், கொஞ்சம் குழப்பமான நிலைதான் வரும் என்ற ஐயப்
பாடு எனக்கு இருக்கிறது. இந்தக் கலப்படத்தைப் பார்க்கிறபோது,
எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. இரண்டு சைவ சாப்பாட்டுக்
காரர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் பேசுவதை நான்
அருகில் இருந்து கேட்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. "நாம் அவியல்
என்றும், பொரியல் என்றும் எல்லாவற்றையும் தனித்தனியாகத் தயார்
செய்து சாப்பிடுகிறோம். ஆனால் இந்த சாயபுகள் அத்தனையையும்
ஒன்றாகச் சேர்த்து பிரியாணி என்று குழப்பிக்கொண்டு எப்படித்தான்
சாப்பிடுகிறார்களோ?" என்று பேசிக்கொண்டார்கள். இப்போது 6 மசோதாக்
களையும் ஒன்றாகக் கலந்து பிரியாணிபோல் நாம் பேச வேண்டியிருக்கிறது
என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

டாக்டர் இரா. சனார்த்தனம் : பிரியாணி சாப்பிடுவதற்கு நன்றாக இருக்
கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பசி நேரத்தில் மாண்புமிகு உறுப்பி
னர் அவர்கள் சாப்பாட்டை உதாரணமாகச் சொல்ல வேண்டாம் என்று கூறிக்
கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : பிரியாணி ருசி தெரியாத காரணத்தால்,
அப்படிப் பேசுகிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்
கள். இங்கே இருக்கக்கூடியவர்கள் அனைவரும் பிரியாணி சாப்பிடக் கூடிய
வர்கள் இல்லை, சைவ சாப்பாடு சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள் என்
பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: சைவ பிரியாணியும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: ஆக இந்த முறையில் 6 சட்ட முன்வடிவுகளையும் கலந்து கொடுத்திருக்கிறார்கள் என்ற கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த 6 மசோதாக்களிலும் பல விஷயங்கள் இருந்தாலும், மிகவும் ஆணிவேர் போன்று அமைந்திருக்கும் கருத்து என்னவென்றால் உள்ளாட்சி மன்றங்களுக்கு நடத்தப்பட வேண்டிய தேர்தல்களை ஓராண்டுக் காலத்திற்கு ஒத்தி வைக்க வேண்டும் என்பதுதான். நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்கிற மசோதா 6 அல்லது 7-வது முறையாக அவைமுன் வருகிறது. பஞ்சாயத்துத் தேர்தல்களை ஒத்தி வைப்பது பற்றிய மசோதா எத்தனையாவது முறையாக இங்கே வருகிறது என்று எனக்குச் சரியாக நினைவில்லை.

இந்தத் தேர்தல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் அவசரச் சட்டம் கொண்டு வருகிறபோது, லோக் சபைக்கான தேர்தல்கள் வருகின்றன. ஆகவே இவைகளை ஒத்தி வைக்கலாம் என்று கேட்டார்கள். அது நியாயமான ஒரு ஒத்தி வைப்பாகத்தான் தோன்றியது. ஆனால் ஆழமாகப் பார்த்தால், இது நியாயமான ஒத்தி வைப்பாக இல்லை என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் லோக் சபைத் தேர்தல்களோடு இந்தத் தேர்தல்களையும் ஏன் இணைத்து நடத்தக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். லோக் சபைத் தேர்தலுக்கு எவ்வளவு செலவு ஆகிறது? அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவு? வேட்பாளர்களுக்கு எவ்வளவு செலவு? இந்த இரண்டு தேர்தல்களையும் இணைத்தால் எவ்வளவு செலவு மிச்சப்படும் என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். லோக் சபைத் தேர்தலுக்கு ஒரு உறுப்பினர் ரூபாய் 35,000 செலவு செய்யலாம் என்ற வரம்பினை உயர்த்தி தற்போது ரூபாய் 1 லட்சமாக மாற்ற இருக்கிறார்கள். இந்த ஒரு லட்ச ரூபாயோகூட போதாது என்றுதான் கருதுகிறேன். லோக் சபைத் தேர்தலின் போது ஒரு தொகுதிக்குக் குறைந்தபட்சம் 1,000 பூத்துக்கள் உண்டு. தேர்தல் நடக்கும் அன்று மட்டும் ஒரு பூத்துக்கு ரூபாய் 100 செலவு செய்வதாக வைத்துக் கொண்டால்கூட, தேர்தல் அன்றுமட்டுமே சுமார் 1 லட்சம் ரூபாய் செலவாகும். மற்றச் செலவு சுமார் 2, 3 லட்சம் அளவுக்கு வந்துவிடும். லோக்



சபைத் தேர்தலில் நின்று வெற்றி பெற வேண்டுமென்றால், குறைந்தது 2 அல்லது 3 லட்சம் ரூபாயை ஒருவர் ஒதுக்க வேண்டும். தோற்பதாக இருந்தால் ரூபாய் 500 மட்டும் இருந்தால்போதும். எனவே இரண்டு தேர்தல்களையும் இணைத்துவிட்டால், எவ்வளவோ செலவு மிச்சப்படும். முன்பெல்லாம் 2 தேர்தல்களுக்காக இரண்டு பெட்டிகளை வைத்துத் தேர்தல்கள் நடத்தியதைப் பார்த்திருக்கிறோம். இப்படி எல்லாத் தேர்தல்களையும் ஒன்றாக இணைத்து நடத்தினால், 4-ல் ஒரு பங்கு அரசாங்கத்தின் செலவும் குறையும். வேட்பாளர்களின் செலவும் அந்த அளவுக்குக் குறையும். எனவே இப்போது உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்தி வைப்பதை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொள்வதோடு, இந்தத் தேர்தல்களையும் இணைத்து நடத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒத்தி வைப்பு, ஒத்தி வைப்பு, என்று அடிக்கடி தேர்தல்களை ஒத்தி வைப்பது என்பது ஒரு கேலிக்கூத்தாகப் போய் விட்டது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வருஷத்திற்கு முன்பு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் "இன்ன மாதத்தில் உள்ளாட்சித் மன்றத்திற்கான தேர்தல்கள் நடைபெறும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள்" இந்த அவையிலும் தெரிவித்தார்கள், பேரவையிலும் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நானும் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் ஒரு 'டீ ப்ரோகிராம்' போடுவதுபற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். டீ போவதை முனிசிபல் தேர்தல்கள் வரும்போது போட்டால், 'ஒலாஸ்' ஆகுமே என்று அவர் அப்போது ஒரு கருத்துத் தெரிவித்தார். அப்போது அவருக்கு நான் பதில் சொல்லும் வகையில் "முனிசிபல் தேர்தல்கள் நடக்காது" என்று சொன்னேன். "என்ன நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள், உள்ளாட்சித்துறை அமைச்சர் இந்த மாதத்தில் திட்டவட்டமாகத் தேர்தல்கள் நடக்கும் என்று சொல்லியிருக்கிறாரே" என்று திரு. லத்தீப் அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். "அமைச்சர் சொன்னால், அது கணக்கில் இல்லை. முதலமைச்சர் சொன்னால்தான், அது நடக்கும்" என்று நான் சொன்னேன். போன வருஷம் நடந்தது இது. "அமைச்சர்கள் சொன்னால் நடக்காது. அவர்களுடைய வாக்குறுதிகள் எல்லாம் தண்ணீரில் எழுத வேண்டிய வாக்குறுதிகள். முதலமைச்சர் தருகிற வாக்குறுதி என்றால், அது சரியான வாக்குறுதி, நம்பக்கூடிய வாக்குறுதி" என்று அப்போது நான் அவரிடத்தில் சொன்னேன். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே 'நடக்கும்' என்று அறிவித்திருக்கிறார்கள். எனவே

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1979 ந

நடக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இருந்தாலும் நான் விரும்பும் கருத்து, இந்தத் தேர்தல்களையும் லோக் சபைக்கான களோடு நடத்தினால், அது நன்றாக இருக்கும் என்பதுதான்.

அடுத்து, தேர்தல்கள் முடிந்து, வெற்றி பெற்றவர்களின் பட்டியலைப் பார்க்கிறபோது, இந்த நாட்டில் முஸ்லீம்கள் மிகவும் குறைவான பிரதிநிதித் துவம் பெறுகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய ஜனத்தொகை விகிதாச்சாரத்தோடு கணக்குப் பார்க்கும்போது 4-ல் ஒன்று அல்லது 8-ல் ஒன்று என்ற அளவுக்குத்தான் பிரதிநிதித்துவம் பெறு கிறார்கள். எவ்வாறு 'ஷெட்டியூல்டு கேஸ்ட்ஸ்'' மற்றும் பெண்களுக்கு இல வாவு சீட்டுகள் என்று நாம் ரிசர்வ் செய்கிறோமோ அப்படியே முஸ்லீம் களுக்கும் தனியான ரிசர்வேஷன் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைப்பதற்கு நான் விரும்புகிறேன். சென்னையைப் பொறுத்த வரையில், மேயர் தேர்தலில் 'கம்யூனல் ரொட்டேஷன்' என்ற முறை இருந் திறது. அதைப் போலவே முஸ்லீம்கள் கணிசமான அளவுக்கு இருக்கிற இடங் களுக்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், திருச்சி நகரில் 4-ல் ஒரு பகுதி முஸ்லீம்களாக இருக்கிறார்கள். ஆனால் திருச்சி நகரில் ஒரு முஸ்லீம், நகர மன்றத் தலைவராக வந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. கடந்த 40 ஆண்டு களில் அந்த அளவுக்குத் தகுதியுள்ள முஸ்லீம் கிடைக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை. எனவே ஒரு 'ரொட்டேஷன்' முறையை ஏற் படுத்தினால், முஸ்லீம்களுக்கும் ஒரு 'சான்ஸ்' கிடைக்கும் என்பதால், அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை லோக் சபைத் தேர்தல் களோடு இணைத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த ஒத்தி வைப்பு மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். துவரங்குறிச்சி என்னும் ஊரைப் பிரிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் நீண்டநாட்களாக அரசாங்கத்தில் இருக்கிறது. அதை வெகு சீக்கிரத்தில் பிரிக்க வேண்டுமென்று வலியுறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 6 சட்ட முன்வடிவுகளில் 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் மீது முதலில் என் னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய, முஸ்லீம் லீக் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். "நான் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடக்காது என்று அப்போதே சொன்னேன். காரணம் பேரவை உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிமொழியை நம்பி தேர்தல்கள் நடக்கும் என்று சொன்னார்" என்று குறிப்பிட்டார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் நிகழ்ச்சி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** "அமைச்சர்களுடைய உறுதிமொழிகள் என்பவை தண்ணீரில் எழுதப்பட வேண்டியவை. முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்தால் அதை நம்பலாம்" என்ற கருத்தையும் அவர் இங்கே தெரிவித்தார். என்னைப் பொறுத்த வரையில், உள்ளாட்சித் துறை

(பிற்பகல் 1-00)

அமைச்சருடைய வாக்குறுதிகள் குளத்துத் தண்ணீரில் எழுதப்படுகிற தென்றால், முதலமைச்சருடைய வாக்குறுதிகள் கடல் நீரில் எழுதப்படுவதாகத் தான் கருதுகிறேன். முதலமைச்சருடைய வாக்குறுதிகளும் இந்த நாட்டிலே நிறைவேற்றப்படுவதில்லை. அதற்குப் பல உதாரணங்களை என்னாலே எடுத்துக் காட்ட முடியும்.

அடுத்து, ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கம் உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்தப் போவதேயில்லை. இப்போது ஓராண்டுக்குப் பதவி நீட்டிப்புக் கேட்கிறார்கள். வேண்டுமானால் இப்போதே அமைச்சர் அவர்கள் "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கிற காலம் வரையில் இந்தப் பதவி நீட்டிப்பைக் கொடுக்கலாம்" என்று சொல்லலாம். அப்படி ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருப்பார்களே யானால் நாங்களும் ஆதரித்து, போனால் போகிறது 'ஒன் மேன் ஷோ' என்று விட்டுவிடலாம். ஆனால் இந்த நாட்டு மக்களை ஏமாற்றுகிற அளவிற்கு ஒரு

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர் 1[illegible]

அரசாங்கம் சட்டமுன்வடிவைக் கொண்டு வரும்போது, அதை எங்களால் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. அடுத்த ஆண்டும் தேர்தல் நடக்காது என்பதற்கான சில காரணங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன் முதலமைச்சர் அவர்கள், "18 வயது ஆனவர்களுக்கு ஓட்டுரிமையைக் கொடுக்கப் போகிறோம். உள்ளாட்சித் தேர்தல்களில் 20 சதவித இடத்தைப் பெண்களுக்காக ஒதுக்கப் போகிறோம். 18 சதவிதத் தொகுதிகள் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப் போகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வாக்குறுதிகளை முதலமைச்சர் அவர்கள் அளித்ததற்குப் பிறகு, இதற்கான சட்ட முன்வடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் வந்திருக்கிறதா என்றால், இல்லை. இதற்கு மேல் எப்போது சட்டமுன்வடிவைக் கொண்டு வரப் போகிறார்கள்? சட்ட சபை கூடினால் தானே. அடுத்த கூட்டம் 6 மாதங்கள் கழித்துத்தானே கூட்டப் போகிறார்கள். ஆகவே இந்த ஆட்சிக்குக் குறைந்த பட்சம் 6 மாதங்களாவது ஆகும். இதற்கிடையில் சட்டசபையைக் கூட்டமாட்டார்கள். சட்டசபையைக் கூட்டுவது என்றாலே, இவர்களுக்குத் தலைவலிப் பிரச்சினை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கட்டாயம் கூட்ட வேண்டுமென்ற முறை இருப்பதால்தான் கூட்டுகிறார்களே தவிர, இல்லையென்றால் கூட்டுவார்களா என்பது சந்தேகம்தான். 6 மாதங்களுக்குள்ளாக சபை கூட்டப்படுவதில்லை. அதற்குப் பிறகு ஆளுநரின் ஒப்புதல் பெற்று, அதற்குப் பின்னால் 18 வயது அடைந்த வாக்காளர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்கு புதுத் திருத்தங்களைக் கொண்டு வந்து அப்போது "இப்படிப்பட்ட புரட்சிகரமான காரியத்தைச் செய்திருக்கிற காரணத்தால், இன்னும் ஓராண்டுக் காலத்திற்கு பதவி நீட்டிப்புத் தேவை" என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லத்தான் போகிறார்கள்.

ஏனென்றால், சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், "120 வட்டங்களாக இருந்ததை 150 வட்டங்களாக ஆக்கினோம். அதனால் வாக்காளர்களைப் பட்டியலில் சேர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே காலதாமதம் ஆகிறது," என்ற காரணத்தைக் கடந்த மூன்று ஆண்டுகளாகச் சொல்லுகிறார்களே தவிர, வேறு என்ன புதிய காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள்? எனவே தேர்தலை நடத்தப் போவதில்லை, இது உறுதி, உறுதி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்



1979 நவம்பர் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இன்றைய தினம் இவர்கள் தனி அதிகாரிகளை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்திற்கு பல முறை சுட்டிக்காட்டிவிட்டேன். அந்த அதிகாரிகள் உள்ளபடியே நல்ல முறையில் நிர்வாகம் செய்கிறார்கள், மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கிறார்கள் என்ற நிலை இருக்குமானால், தேர்தல் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று ஒத்துக்கொள்ள முடியும். சென்னை நகரை ஒரு முறை சுற்றி வர வேண்டும். சாலைகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன, எத்தனை சாலைகளில் விளக்குகள் இல்லை என்பதைக் கண்டறிய வேண்டும். இராமநாதபுரத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்களுக்குக் கூட சென்னை அண்ணா நகரில் உள்ள அவல நிலை தெரிந்திருக்கிறது. என்னைப் போன்று அடிக்கடி சுற்றி வரக்கூடிய வாய்ப்புப் பெற்றவர்கள் உள்ளபடியே பார்க்கும் போது, குடிசைப் பகுதிகள், ஏழை எளியவர்கள் வாழக்கூடிய காலனிகள் எந்த அளவுக்கு மோசமாக இருக்கின்றன என்பதை அறிய முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்ந்து பார்க்க வேண்டும். யாரிடத்திலே அந்தக் குறைகளை மக்கள் சொல்லுவார்கள். தனி அதிகாரிகள் இருப்பதால், அத்தனை பேரும் தனி அதிகாரிகளைப் பார்க்க முடியுமா? மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், இந்த அளவுக்குக் குறைபாடுகள் இருக்கின்றன. இவ்வளவு குறைபாடுகள் உள்ள சென்னை நகரில் தனி அதிகாரிகள் ஒழுங்காகச் செயல்படவில்லை. சரியாகச் சாலைகள் இல்லை. பின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. அதிகாரிகள் தாங்கள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். அவர்கள் நினைத்தால் நிர்வாகம் வேகமாக இயங்கும், இல்லாவிட்டால் இயங்காமலே இருக்கும். இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்திலே ஒரு பகுதியில் திடீரென்று ஒரு நகர் உருவாகியிருக்கிறது. பெரிய மனிதர்கள் சேர்ந்து அதை உருவாக்கியிருக்கிறார்கள். வால்மீகி நகர் என்று அதற்குப் பெயர். அந்த நகருக்குச் சில வசதிகள் தேவை. வசதிகளைச் செய்து தருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அங்கே இருக்கிற பெரியவர்கள், அதிகாரிகளுக்கு வேண்டியவர்கள், அரசாங்கத்திற்கு வேண்டியவர்கள் ஒரு விண்ணப்பம் கொடுத்தவுடனே சென்னை மாநகராட்சி எவ்வளவு வேகமாகச் செயல்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு ஆதாரத்தை, வேண்டுமானால் கோப்புகளையே கூட காட்டத் தயாராக இருக்கிறேன். ஆதாரத்தோடு சொன்னால்தான், அமைச்சர் அவர்கள் நம்புவார்கள். இந்த ஆதாரத்தைக் காட்ட உங்கள் அனுமதி பெற்றிருப்பதால், அதைப்

படிக்க விரும்புகிறேன். அந்த வால்மீகி நகருக்குச் சில வசதிகளைச் செய்து கொடுப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கோபதாபம் இல்லை விதிகளுக்கு மாறாக அந்தப் பகுதிகளுக்குத் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்கு என் கையில் இருக்கக்கூடிய நகல்கள் ஆதாரமாக இருக்கின்றன. அதைப் படித்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

Note for Commissioner—

*Subject* : Re-allotment of funds under capital works—Administrative sanction of estimate of Rs. 98,880 for provision of new street lights in Valmigi Nagar in E.W. Thiruvanmiyur Panchayat—Regarding.

A provision of Rs. one lakh has been provided under Expr-Capital B lighting, (2) Other loans, (3) Improvement to street lighting for interlinking proposal of Perambur High Road Sub-station in the Budget Estimate 1979-80. Now it is proposed to re-allocate this amount for providing 43 new street lights in Valmiki Nagar, Seaward Streets I to IV of E.W. Thiruvanmiyur Panchayat from where we are receiving numerous requests for provision of street lights.

பெரம்பூர் பகுதிக்காக, ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைச் செலவு செய்யாமல், அதை எடுத்து இந்த வால்மீகி நகருக்கு ஒதுக்கலாம் என்று 'நோட்' போகிறது. பெரம்பூர் பகுதி கேட்பாரற்ற அனாதையாக இருக்கலாம், இப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் வாழக்கூடிய பகுதியாக இல்லாமல் இருக்கலாம், தனியார் பகுதியாக இருக்கலாம். அந்தப் பகுதித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தை எடுத்து வால்மீகி நகருக்கு ஒதுக்கலாம் என்று 'நோட்' போகிறது. இந்த 'நோட்' போனவுடனே நம்முடைய மாநகராட்சி எந்த அளவுக்கு வேகமாகச் செயல்படுகிறது தெரியுமா? ஒரு புதிய நகரை உருவாக்குகிற நேரத்தில் அந்த நகருக்குத் தேவையான தெரு விளக்குகள், சாலைகள், சாக்கடை வசதிகள் செய்ய வேண்டுமென்றால், அதற்காக அந்த நகரை உருவாக்கக் கூடியவர்கள் பணம் கட்ட வேண்டும். இந்த விதிமுறையிலிருந்து அந்த நகருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு உத்தரவைப் போடுகிறார்கள்

Note for Commissioner—

*Subject* : Improvements to Private Streets—Regarding.

The Corporation is following a policy of collecting 50 per cent 'Improvement charges' in advane before taking action under Section 218 of M.C.M.C. Act for provision of amenities in Private



Streets, viz., street lights, sewers, storm water drain and Asphalt Road. This policy of collection of 50 per cent improvement charges was originally being enforced for all the four items together. Now in order to help abutting owners we have relaxed this principle by collecting 50 per cent of the estimated cost of each amenity separately and collect 50 per cent of the next amenity after one item is over.

இப்படி வழக்கமாகவே இருக்கின்ற விதிமுறைகளில் இருந்து விதிவிலக்கு அளித்து ஓர் உத்தரவு அனுப்பப்பட்டது எப்போது தெரியுமா? 22—9—1979 அன்றே அன்று எலக்ட்ரிக்கல் என்ஜினியர் கையெழுத்துப் போடுகிறார். அன்றே சூப்பரிண்டெண்டும் கையெழுத்துப் போடுகிறார். 22—9—1979 அன்றே சிட்டி என்ஜினியரும் கையெழுத்துப் போடுகிறார். எவ்வளவு வேகமாகக் காரியங்கள் நடக்கின்றன. தனக்கு வேண்டியவர்களுக்கு உதவ வேண்டுமென்றால், ஒரு பைல் எவ்வளவு வேகமாக நகர்கிறது! மூன்று அலுவலகங்களில் உள்ள மூன்று அதிகாரிகள் ஒரே நாளில் சாங்ஷன் செய்கிறார்கள். இடையிலே 23 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை. 24 ஆம் தேதி கமிஷனருக்கு பைல் போகிறது. கமிஷனர் 24 ஆம் தேதி கையெழுத்துப் போட்டிருக்கிறார். நம்முடைய நாட்டிலே கோப்புகள் நகர்வதில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தோம். ஆனால் கோப்புகள் எப்படி வேகமாக நகர்கின்றன என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை.

இவ்வளவு அவசரமாக சட்டதிட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளித்து பணத்தை அலோகேட் செய்திருக்கிறார்கள். இதிலே விசித்திரமான, சிரிக்கக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. இந்த வேலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகள் 'ஓரல் ஆர்டர்' போடுகிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஈ.ஈ. எழுதுகிறார்.

'For Electrical Engineer—S. E. Corporation of Madras.

*Subject*: Valmeekinagar—1 to 4 seaward roads—Clarification required by Divisional Engineer Construction I—Regarding.

*Reference* : Phone Message from Divisional Engineer Construction I.

The 1 to 4 seaward roads in the sanctioned layout of Valmeekt Nagar which falls within the jurisdiction of E.W. Thiruvanmiyur Town Panchayat were not handed over to the Town Panchayat and in the circumstances the abovesaid roads could not be declared as public roads.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர் 15

தொலைபேசியிலே காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. தொலைபேசியில் போன செய்திக்கு ஈ.ஈ. பதில் கடிதம் எழுதியிருக்கிறார். கடைசியில் பார்த்தால் கார்ப்பரேஷன் எல்லைக்குள்ளே வரவில்லை. திருவான்மியூரை மாநகராட்சியில் சேர்த்துவிட்டோம். ஆனால் வால்மீகி நகரில் இருக்கக்கூடிய ரோடுகளை அவர்கள் மாநகராட்சியிடம் ஒப்படைத்தார்களா என்றால் இல்லை. ஆகவே, மாநகராட்சியின் எல்லைக்குள்ளே வரவில்லை. எத்தனையோ பகுதிகளில் இதைவிட மோசமாக சாலைகள் இருக்கின்றன; வீதி விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது, வால்மீகி நகருக்கு மட்டும் வேகவேகமாகச் செய்திருக்கிறார்கள். ஆகவே, தனி அதிகாரிகளை நம்பலாமா, இதர அதிகாரிகளை நம்பலாமா என்று அரசுக்குச் சொல்லிக்கொள்கிறேன். எப்படி நிர்வாகம் நடக்கிறது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். பொதுமக்களுடைய பிரதிநிதிகள்

(பிற்பகல் 1-10)

இருந்தால், இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால், விட்டுவிடுவார்களா? ஆனால் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை நம்புகிறார்கள். எக்ஸ்டென்ஷன் கேட்கிறார்கள். ஓராண்டு நீடிப்பு, நீடிப்பு என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கலாமா? நான் உண்மையிலேயே வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால்கூட, இந்த அளவுக்குக் காரியங்கள் வேகமாக நடக்குமா என்பது சந்தேகம். ஆனால் அதிகாரிகள் நினைத்தால், இந்த அளவுக்குக் காரியங்கள் வேகமாக நடப்பதற்கு முடிகிறது. இப்படிப்பட்ட அதிகாரிகள்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்குத்தான் அரசில் பதவி உயர்வு, நீடிப்பு என்று கேட்கிறது.

இன்னொரு செய்தியைப் பத்திரிகையிலே பார்த்தேன். நாட்டிலே மக்கள் தொகை பெருகுகிறது, மக்கள் தொகை பெருகுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் வாக்காளர்கள் எண்ணிக்கை குறைகிறது. இந்தச் செய்தியைப் பார்த்தவுடனே அதிர்ச்சிதான் வருகிறது. ஏன் சொல்கிறேன் என்றால், மதுரை மாநகராட்சித் தேர்தலில் நடந்த தில்லுமுல்லுகள், அன்றைய தினம் மக்களாலே எடுத்துச் சொல்லப்பட்டு, சட்டமன்றத்திலே மேலவையிலே எடுத்துச் சொல்லப்பட்டது. ஒரு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் என்று இருந்த பழனிவேல் ராஜன் அவர்களுடைய குடும்பத்தினருடைய பெயர்களே நீக்கப்பட்டு இருந்தன. இன்றையதினம் 6 லட்சம் வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், என்ன பொருள்? நான் ஒரு



79 நவம்பர் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

யங்கரமான குற்றச்சாட்டை இந்த அரசின் மீது சுமத்துகிறேன். தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, மற்ற கட்சிக்காரர்களுடைய வோட்டுக்களையும், எதிர்க்கட்சிக்காரர்களுடைய வோட்டுக்களையும்தான் நீக்கியிருக்கிறார்கள் என்ற பயங்கரமான குற்றச்சாட்டை நான் இந்த அரசின் மீது சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் எதுவும் சுமத்தப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அரசாங்கத்தார் 'நாங்கள் வீடுவீடாகச் சென்று வோட்டர் லிஸ்ட் எடுத்தோம்' என்று சொல்கின்றார்கள். அட்டைகள் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். 'அப்படிக் கொடுத்த அட்டைகளை வைத்துக்கொண்டுதான் இந்த வாக்காளர் பட்டியலைத் தயாரித்திருக்கிறோம். எனவே தவறு இருப்பதற்கு நியாயம் இல்லை. ஆனால் முன் இருந்த வாக்காளர் பட்டியலிலே இருந்தவர்கள் செத்துப்போயிருப்பார்கள். அவர்கள் பெயர்களையெல்லாம் நீக்கிவிட்டோம்' என்று சொல்கின்றார்கள். நான் கேட்கிறேன், 30 லட்சம் வாக்காளர்கள்; அதில் 6 லட்சம் பேர்கள் செத்துவிட்டார்களா அல்லது 6 லட்சம் பேர்கள் ஊரை விட்டு ஓடிவிட்டார்களா? மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது என்று கணக்குக் கிடைக்கின்ற நேரத்திலே, இங்கே வாக்காளர் பட்டியல் குறைகின்றது என்று புள்ளிவிவரம் வருகின்றது. இன்னும் தமிழ் நாட்டிலே எத்தனை லட்சம் வாக்காளர்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனரோ தெரியாது. அந்தப் புள்ளி விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்தால், நன்றாக இருக்கும். நான் ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொல்கின்றேன். அந்தக் குற்றச்சாட்டிற்கு ஒரு ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொல்கிறேன். என்னுடைய கையிலேயே வாக்காளர் பட்டியல் இருக்கிறது. 1979 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் இருக்கிறது. 10—ஆயிரம்விளக்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதி, ...வார்பேட்டை தெற்கு பாகம் 84. இந்தப் பகுதியில் மட்டும் சொல்கிறேன், ...ல் 800 வீடுகளுக்கு மேல் இருக்கின்றன. 300 வீடுகள் வரையில் இடம் ...றுள்ளன. 300 லிருந்து 501 வரை முழுவதுமாக 204 குடும்பங்களைச் ...ர்ந்த வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. என்ன காரணம்? ...ரு. சாதிக் பாட்சா அவர்களைக் கூப்பிட்டு, அங்கே கூட்டம் போடுகிறார்கள், ...ங்கே பாராட்டுவிழா நடத்துகிறார்கள் என்பதால், அங்கே இருப்பவர்கள் ...ற்றுக்கட்சிக்காரர்கள் என்பதுதான் காரணம். அறிவிப்புக் கொடுக்கிறார்கள், அந்த அடிப்படையிலே தங்களுடைய பெயர் இருக்கிறதா என்று பார்க்கிற ஆர்வம் படைத்த வாக்காளர்கள் தமிழ் நாட்டிலே எத்தனை பேர் இருக்கிறார்கள்? 6 லட்சம் பேர்களை நீக்கிவிட்டிருக்கிறார்களே? என்னிடம் 204 அட்டைகள் இருக்கின்றன.

[1979 நவம்பர் 15

MR. DEPUTY CHAIRMAN : Exhibits are not allowed to be
produced in the House.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : உங்களிடம் சொல்லிவிட்டுத்தான் சொல்
கிறேன். அப்போது அந்த ரூலிங் கொடுக்கவில்லையே.

MR. DEPUTY CHAIRMAN : Then also I said that exhibits
should not be shown. Now, I am in the Chair.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: No, no. ஒவ்வொருவருக்கும் ஒரு ரூலிங்
இருக்க முடியாது. தங்கச் சங்கிலியை கொண்டு வந்து காண்பித்திருக்கின்
றார்கள்.

MR. DEPUTY CHAIRMAN . Exhibits should not be shown
here. There is a ruling. I want the parliamentary procedure to
be followed.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்போது அந்த ரூலிங் கொடுக்க
வில்லையே என்றுதான் சொல்கின்றேன்.

MR. DEPUTY CHAIRMAN : Then I was not sitting in the
Chair.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அப்போது ரூலிங் கொடுக்கவில்லை. ஒவ்
வொருவருக்கும் ஒரு மாதிரியான ரூலிங் நிச்சயமாக இருக்க முடியாது.
ரூலிங் என்றால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்குமே தவிர,
வேறல்ல.

MR. DEPUTY CHAIRMAN : No, No. Exhibits should not be
hown here.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ரூலிங் என்றால் ஒன்றாகத்தான் இருக்க
வண்டுமே தவிர, சேர்மன் கொடுப்பது ஒரு ரூலிங், டெபுடி சேர்மன் கொடு
து ஒரு ரூலிங், வைஸ் சேர்மன் என்று வருபவர்கள் ஒரு ரூலிங் கொடுப்பதா

MR. DEPUTY CHAIRMAN : Now I am sitting here. Exhibit
ould not be shown here. That is not parliamentary procedure
றுப்பினர் அவர்கள் என்னிடம் என்ன சொன்னார்கள் ? 'என்னிடம் கார்டு
ருக்கிறது' என்று சொல்லலாம்.



1979 நவம்பர் 15]

திரு. ஆற்காடு நா. வீராசாமி : இந்த மாதிரி ரூலிங் கொடுத்தால், அப்புறம் நீங்கள் எதிர்க் கட்சியே வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். எங்களையெல்லாம் இங்கேயிருந்து அனுப்பிவிடுங்கள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 'என்னிடத்திலே இத்தனை கார்டுகள் இருக்கின்றன' என்று சொல்லலாம்.

The hon. Member need not exhibit them; he can say that he has got so many cards with him.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தங்களுடைய அனுமதி பெற்று சில குறிப்புகளைக் கொடுக்கிறார்கள். 'என்னிடத்திலே கார்டுகள் இருக்கின்றன' என்று சொன்னாலே அதை நாங்கள் நம்புகிறோம். ஏதோ நம்பாத விஷயம் வரும்போதுதான் அதைத் தூக்கிக் காண்பிக்க வேண்டும். அந்தச் சூழ்நிலை அப்போதுதான் வரும். அது தேவை. அது சரியான முன்மாதிரியாக இருக்காது. உறுப்பினர் தங்களிடம் இருக்கிறது என்று சொல்கின்றார்கள். அதுவும் தலைவர் அவர்களிடம் அனுமதி பெற்றிருப்பதாகச் சொல்கின்றார்கள். அதுவே போதுமானது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : எனவேதான் வீடு வீடாகப் போய் பதிவு செய்தார்கள் என்பதை நான் நம்புகிறேன். அதை நான் மறுக்கவில்லை. அப்படிப் பதிவு செய்கின்ற நேரத்திலே சில பேர்களுடைய பெயர்கள் விடப்பட்டிருக்கின்றன. அதற்கு உதாரணம் வேண்டுமென்றால் 40 ஆயிரம் மனுக்கள் புதிதாக வந்திருக்கின்றன என்று ஆணையாளர் அவர்கள், மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 40 ஆயிரம் பேர் எங்கேயிருந்து வந்தார்கள் ? முதலிலே வீடு வீடாகப் போய் பதிவு செய்தார்கள். ஒருவரையும் விடாமல் பதிவு செய்தது உண்மையாக இருக்குமானால், இடைக் காலத்திலே 40 ஆயிரம் பேர்கள் எப்படி வந்துவிட்டிருப்பார்கள் ? இந்த இடைக் காலத்திலேயே 40 ஆயிரம் பேர்கள் வந்திருக்கிறார்கள் என்றால், இந்த ஓராண்டுக் காலத்திலே எத்தனை பேர்கள் வந்திருக்க முடியும் ? ஏன் அவர்கள் பெயர்கள் எல்லாம் முன்பு இடம்பெறவில்லை ? ஆகவே திட்டமிட்டு எதிர்க் கட்சிக்காரர்கள் எந்த எந்தப் பகுதியிலே இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அவர்கள் பெயர்களை நீக்குகிறார்கள். என்றுமே இதையே தொழிலாகக் கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம், வேண்டுமென்றே மாற்றுக் கட்சிக்காரர்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1979 நவம்பர் 15

களுடைய, எதிர்க்கட்சிக்காரர்களுடைய வாக்குகளை நீக்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இந்த அரசாங்கத்தின் மீது சுமத்துகிறேன். இன்னொன்றையும் சொல்கின்றேன். இல்லை இல்லை, இந்த குற்றச்சாட்டு இல்லை, இது விடப்பட்டிருக்கிறது, இந்த சீர்திருத்திவிடுகிறோம் என்று சொல்வார்களேயானால், அந்த அவகாசத்தை நீட்டுங்கள். 10 ஆம் தேதிக்குள் இந்த விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. 10 ஆம் தேதி முடிந்துவிட்டது. சென்னை நகரத்திலே எத்தனை பேர்களுக்கு இந்த 10 ஆம் தேதிக்குள் தங்கள் பெயர் இருக்கிறதா இல்லையா என்று பார்த்து வாக்காளர்கள் பட்டியலைச் சீர்திருத்த வேண்டும் என்று தெரியும்? இன்றையதினம் தான் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அப்படிப் பார்க்கின்றவர்களுக்கு தங்கள் பெயர்களைச் சேர்க்க வேண்டுமென்ற ஆர்வம் வரலாம். 6 லட்சம் பேர்கள் என்பது சாதாரணமான விஷயம் அல்ல. 25 சதம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள்! அதன் உண்மையான காரணத்தைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருப்பார்கள் என்றால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவும் இல்லையென்றால், அப்படி விடப்பட்டிருப்பவர்களுக்கு மீண்டும் தங்களுடைய பெயர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு இன்னும் ஒரு 15 நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடிய அளவுக்கு ஒரு மாநகராட்சி இருக்கிறது. அதற்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசர், ஒரு கமிஷனர் இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி நீட்டிப்பு உடனடியாக வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. தேர்தலை ஒத்திவைத்திருக்கிறார்கள். ஆனால் தேர்தல் நடத்தப் போவதில்லை. இருந்தாலும் இதற்கெல்லாம் காலம் பதில் சொல்லும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி: ... இந்தச் சட்ட முன்வடிவுகளின் மீது மிகத் தெளிவாக எனக்கு முன்னாலே அத்தனை உறுப்பினர்களும் பேசிய நிலையிலே அதற்கு அதிகமாக நான் வேறு ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை என்றாலும், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையிலும், நிலைமைகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பதை இங்கே இந்த அவையிலே



1979 நவம்பர் 15] [திரு. க. இராமமூர்த்தி]

இருக்கின்ற அத்தனை பேர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஒரு சாதாரண மழை பெய்தால், பல பெரிய ரோடுகளிலேகூட கார்கள் போகமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. இரவிலே விளக்கு இல்லாத நிலையிலே யாரும் நடமாட முடியாது என்ற நிலை இருக்கிறது. பல வீதிகளிலே இன்றைக்கு சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன. நடமாட முடியாத நிலைகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் இந்த மாநகராட்சி மன்றத்தினுடைய நிர்வாகத்தை மட்டும் நான் குறை சொல்லத் தயாராக இல்லை. ஒரு தேர்தல் நடக்காத நேரத்திலே, யாருடைய பொறுப்பிலும் இல்லாத நேரத்திலே, பிக்சட் ரெஸ்பான்சிபிலிட்டி (fixed responsibility) யாருக்கும் இல்லாத காரணத்தினாலே, எப்படி வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் நடக்கும் என்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனது நண்பர் மாண்புமிகு உறுப்பினர்

(பிற்பகல் 1-20)

திரு. வீராசாமி அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். எது வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் நடக்குமென்பது மட்டுமல்ல, சில பேருக்குக் கூடுதலாக எப்படி நடைபெற முடியுமென்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இதனால் பொதுவாக யார் சங்கடப்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக அதிகாரிகளிடம் செல்ல வாய்ப்பு இல்லாமல் இருக்கிறவர்கள், மேலே இருக்கிற அதிகாரிகளிடம் தங்கள் குறைகளைச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் இருக்கிறவர்கள்தான் சங்கடங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி மன்றத்தில் நிர்வாகச் சீர்கேடு என்பது மிகப் பெரிய அளவிலே, இந்த மாநிலத்தின் நிர்வாகத்தையே சீர்குலைக்கின்ற வகையிலே இருக்கிறது. மற்ற மாநிலங்களிலிருந்து பலர் வந்து வந்து போய்க்கொண்டிருக்கின்ற நகரத்திலே குறிப்பாக மழைக்காலம் வந்து விட்டால், இது ஒரு நகரமா அல்லது நரகமா என்று சொல்லக்கூடிய அளவில் நிலைமைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் முன்பே இருந்தன என்பது இதற்குப் பதிலாக இருக்க முடியாது. நாளுக்கு நாள் இந்த நிலைமைகள் குறைந்திருக்க வேண்டும். ஆனால் ஆண்டுக்காண்டு, மாதத்திற்கு மாதம் நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருக்கின்றன என்பது மட்டுமல்ல, மழைக்கு மழை அதிகமாகத் தண்ணீர் தேங்குகின்ற நிலை இருக்கிறது. (Drainage) சாக்கடை வடிகால் முறை சரியாக இல்லை. நல்ல குடி தண்ணீர் இல்லை. குடி தண்ணீர் வாயிலாகப் பரவாத வியாதிகளே சென்னையில் எதுவுமில்லை என்பது தெரிந்த விஷயம். வீதிகளிலே நடக்க

முடியாத நிலை. அந்த அளவிற்குச் சுகாதாரக் கேடுகள் இருக்கின்றன. சைக்கிள் அல்லது கார்களில் போகின்றவர்கள் விபத்திலிருந்து தப்ப முடியாது. மழைக் காலத்தில் அவசரமாகப் போக வேண்டுமென்றால் . . .

MR. DEPUTY CHAIRMAN : The hon. Member is requested to address the Chair.

THIRU K. RAMAMOORTHY: I am only addressing you, Sir.

MR. DEPUTY CHAIRMAN : Addressing the Chair means looking at the Chair.

THIRU K. RAMAMOORTHY: My problem is that whenever I look at you, I am reminded of the time.

தலைவரவர்களே, இந்த நிலைமைகள் மாநகராட்சி மன்றத்திலே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால்தான் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட குறைகள் முன்பு இல்லையா, அவர்கள் இருந்தபோது இல்லையா என்பது வேறு. நாம் ஒரு ஜனநாயக அமைப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இப்படிப்பட்ட குறைகளை நீக்க வழி செய்தாக வேண்டும். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வயதிலே இளையவர் என்பது மட்டுமல்ல, அவர் எவ்வளவுதான் வேகமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறுதி சொன்னாலும், இந்த அவையிலே யாருடைய வார்த்தையை அதிகமாக நம்ப முடியாமல் இருக்கிறதென்றால், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுடைய வார்த்தையைத் தான் நம்ப முடியாமல் இருக்கிறது. எதைச் சொன்னாலும் சரி, பஞ்சாயத்தைப் பற்றிச் சொன்னாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பற்றிச் சொன்னாலும் சரி, நகராட்சி மன்றங்களைப்பற்றிச் சொன்னாலும் சரி, மாநகராட்சியைப்பற்றிச் சொன்னாலும் சரி, தேர்தல்களை நடத்திக் காட்டுகிறேன் என்று உறுதியாகச் சொல்கிறார். ஒவ்வொரு முறையும், இந்தப் பக்கத்திலிருந்து, உங்களால் முடியாது என்று உறுதியாகச் சொல்லுகிறோம். கடைசியில் அதுபோலவே முடியாதென்ற நிலைக்குத்தான் வருகிறார். இதை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தாக வேண்டும். ஆண்டு முழுமையிலும் எதாவது ஒரு தேர்தல் நடந்துகொண்டுதான் இருக்கும். அடுத்த மாதத்திலே தேர்தல்களை வைக்கிறோமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு நடக்க இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலிலே, நிலையான ஒரு ஆட்சி அமைந்து விடுமென்று எதிர்பார்க்கிறோம். அப்படி முடியாமற்போனால், என்ன செய்யப் போகிறார்கள்? முடியுமென்று ஆட்சியாளர்களால் சொல்ல முடியுமா? எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாம் எவ்வளவுதான் சொன்னாலும்



நிலைமைகள் எப்படி மாறுமென்று சொல்ல முடியாது. மழையைக் காரணம் காட்டி, தேர்தலைக் காரணம் காட்டி, மற்றவைகளைக் காரணம் காட்டி, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களைத் தள்ளிப்போடுவதால், மக்களின் அடிப்படைத் தேவைகளை, வசதிகளைச் செய்வதை மறுக்கின்ற நிலைமை ஏற்பட்டால், நிர்வாக இயந்திரத்தைப் பொறுத்த வரையில், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், மோசமான விளைவுகள் ஏற்படும். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், எல்லோரும் ஒட்டுமொத்தமாகத் தவறு செய்வார்கள் என்பதல்ல, அதிகாரிகள் தவறு செய்யாதவர்கள் என்பது அல்ல. Checks and balances என்று சொல்வதுபோல, அந்த இயந்திரமும், இந்த இயந்திரமும் ஒன்றுகூடி வேலை செய்யும்போது, மிகக் குறைந்த இடங்களில்தான் தவறுகள் ஏற்படும். மற்ற இடங்களில் ஒருவருக்கொருவர் துணையாக நின்று, நிர்வாகம் சீராக இயங்க வழி வகுக்கும். ஆனால் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அங்கே எவ்வளவு மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை, முழுக்க முழுக்க எல்லா இடங்களிலிருந்தும் குறிப்புகள் கொண்டு வந்து என்னால் சொல்ல முடியாதென்றாலும், என்னுடைய பகுதியில் நடைபெறுவதைச் சொல்ல முடியும். நகராட்சி மன்றங்கள் இன்றைக்கு எந்த அளவிற்குச் சென்று கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்ல முடியும். அங்கே நடக்கின்றவைகளைப் பற்றி இந்த அவையிலே பேசிப் பார்த்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை. கடைசியாக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், சேராதவர்கள் அனைவரும் ஊர்வலமாகச் சென்று, ஆர்ப்பாட்டம் நடத்தி, கொடும்பாவி எரித்தால்தான் கவனிப்பார்களென்ற நிலைமைகள் இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள நகராட்சி மன்றங்களை, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், டி.டி.ஓ., பி.டி.ஓ. (D.D.O., B.D.O.) முனிசிபல் கமிஷனர் என்று இருக்கிற அதிகாரிகள் ரொம்ப செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்தச் செல்வாக்கு அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. அவர்கள் நிலையாக ஊரில் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் அவர்கள், தங்களுடைய காரியங்களைச் செய்வதில்லை. அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து மாற்ற முடியாத அளவிற்கு, காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் தேர்தல் இல்லாத நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாத நிலையில், யார் செல்வாக்கு உள்ளவர்களோ அவர்களைச் சரிப்படுத்திக் கொண்டால் போதுமென்று செயல்படுகிறார்கள். அக்கப்பால் அரசியல்வாதிகள், சட்டப் பேரவை, மேலவை, நாடாளுமன்ற

முடியாத நிலை. அந்த அளவிற்குச் சுகாதாரக் கேடுகள் இருக்கின்
சக்கிள் அல்லது கார்களில் போகின்றவர்கள் விபத்திலிருந்து
முடியாது. மழைக் காலத்தில் அவசரமாகப் போக வேண்டுமென்றால் . . .

MR. DEPUTY CHAIRMAN: The hon. Member is request
address the Chair.

THIRU K. RAMAMOORTHY: I am only addressing you, Si

MR. DEPUTY CHAIRMAN: Addressing the Chair mea
looking at the Chair.

THIRU K. RAMAMOORTHY: My problem is that whenev
look at you, I am reminded of the time.

தலைவரவர்களே, இந்த நிலைமைகள் மாநகராட்சி மன்றத்திலே
ருடைய பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால்தான் ஏற்படுகின்றன.
படிப்பட்ட குறைகள் முன்பு இல்லையா, அவர்கள் இருந்தபோது இல்லை
என்பது வேறு. நாம் ஒரு ஜனநாயக அமைப்பை ஏற்றுக்கொண்ட பிற
இப்படிப்பட்ட குறைகளை நீக்க வழி செய்தாக வேண்டும். உள்ளாட்
துறை அமைச்சரவர்கள் வயதிலே இளையவர் என்பது மட்டுமல்ல,
எவ்வளவுதான் வேகமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று உறு
சொன்னாலும், இந்த அவையிலே யாருடைய வார்த்தையை அதிகமாக நம்
முடியாமல் இருக்கிறதென்றால், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுடை
வார்த்தையைத் தான் நம்ப முடியாமல் இருக்கிறது. எதைச் சொன்னாலும் ச
பஞ்சாயத்தைப் பற்றிச் சொன்னாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியங்களை
பற்றிச் சொன்னாலும் சரி, நகராட்சி மன்றங்களைப்பற்றிச் சொன்னாலும் ச
மாநகராட்சியைப்பற்றிச் சொன்னாலும் சரி, தேர்தல்களை நடத்திக் காட்
கிறேன் என்று உறுதியாகச் சொல்கிறார். ஒவ்வொரு முறையும், இந்த
பக்கத்திலிருந்து, உங்களால் முடியாது என்று உறுதியாகச் சொல்லுகிறோம்
கடைசியில் அதுபோலவே முடியாதென்ற நிலைக்குத்தான் வருகிறார். இ
ஒரு முடிவிற்குக் கொண்டு வந்தாக வேண்டும். ஆண்டு முழுமையிலும் ஏதா
ஒரு தேர்தல் நடந்துகொண்டுதான் இருக்கும். ஒரு மாதத்தி
தேர்தல்களை வைக்கிறோமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு நட
இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலிலே, நிலையான ஒரு ஆட்சி அமை
விடுமென்று எதிர்பார்க்கிறோம். அப்படி முடியாமற்போனால், என்ன செய்
போகிறார்கள்? முடியுமென்று ஆட்சியாளர்களால் சொல்ல முடியும
எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாம் எவ்வளவுதான் சொன்னாலு



நிலைமைகள் எப்படி மாறுமென்று சொல்ல முடியாது. மழையைக் காரணம்
காட்டி, தேர்தலைக் காரணம் காட்டி, மற்றவைகளைக் காரணம் காட்டி,
உள்ளாட்சி மன்றத் தேர்தல்களைத் தள்ளிப்போடுவதால், மக்களின்
அடிப்படைத் தேவைகளை, வசதிகளைச் செய்வதை மறுக்கின்ற
நிலைமை ஏற்பட்டால், நிர்வாக இயந்திரத்தைப் பொறுத்த
வரையில், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், மோச
மான விளைவுகள் ஏற்படும். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில்,
மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், எல்லோரும் ஒட்டுமொத்தமாகத்
தவறு செய்வார்கள் என்பதல்ல, அதிகாரிகள் தவறு செய்யாதவர்கள் என்பது
அல்ல. Checks and balancc: என்று சொல்வதுபோல, அந்த இயந்திரமும்,
இந்த இயந்திரமும் ஒன்றுகூடி வேலை செய்யும்போது, மிகக் குறைந்த
இடங்களில்தான் தவறுகள் ஏற்படும். மற்ற இடங்களில் ஒருவருக்கொருவர்
துணையாக நின்று, நிர்வாகம் சீராக இயங்க வழி வகுக்கும். ஆனால்
இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அங்கே எவ்வளவு
மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்பதை, முழுக்க முழுக்க எல்லா
இடங்களிலிருந்தும் குறிப்புகள் கொண்டு வந்து என்னால் சொல்ல முடியா
தென்றாலும், என்னுடைய பகுதியில் நடைபெறுவதைச் சொல்ல முடியும்.
நகராட்சி மன்றங்கள் இன்றைக்கு எந்த அளவிற்குச் சென்று கொண்டிருக்
கின்றன என்பதைச் சொல்ல முடியும். அங்கே நடக்கின்றவைகளைப் பற்றி
இந்த அவையிலே பேசிப் பார்த்தும் ஒரு பலனும் ஏற்படவில்லை. கடைசியாக
அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், சேராதவர்கள் அனைவரும்
ஊர்வலமாகச் சென்று, ஆர்ப்பாட்டம் நடத்தி, கொடும்பாவி எரித்தால்தான்
கவனிப்பார்களென்ற நிலைமைகள் இருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள
நகராட்சி மன்றங்களை, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையி
டி.டி.ஓ., பி.டி.ஓ. (D.D.O., B.D.O.) முனிசிபல் கமிஷனர் என்று இருக்
அதிகாரிகள் ரொம்ப செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அந்
செல்வாக்கு அவர்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்
அவர்கள் நிலையாக ஊரில் இருப்பதில்லை. அப்படி இருந்தாலும் அவர்க
தங்களுடைய காரியங்களைச் செய்வதில்லை. அவர்கள் தங்களை
பாதுகாத்துக் கொள்வதற்கான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்க
அங்கிருந்து மாற்ற முடியாத அளவிற்கு, காரியங்களைச் செய்து வருகிறார்கள்.
அவர்களைப் பொறுத்தவரையில் தேர்தல் இல்லாத நிலையில், தேர்ந்தெடுக்கப்
பட்ட அமைப்பு இல்லாத நிலையில், யார் செல்வாக்கு உள்ளவர்களோ
அவர்களைச் சரிப்படுத்திக் கொண்டால் போதுமென்று செயல்படுகிறார்கள்.
அதற்கப்பால் அரசியல்வாதிகள், சட்டப் பேரவை, மேலவை, நாடாளுமன்ற

உறுப்பினர்களையும் தாண்டி வந்தால், அதிகாரிகளைக் கைப்பற்றிப் பிடித்து
கொண்டால், யாரும் ஒன்றும் செய்ய முடியாதென்ற அளவில் தவறுகளை
செய்கிறார்களென்பதை என் சொந்த அனுபவத்தில் வலியுறுத்திச் சொல்
முடியும்.

திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், நகராட்சியைப் பொறுத்தவரையி
பல வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, கடைசியாக கொஞ்சம் குறை வைக்கிறார்கள்
அந்த வீடுகளுக்குப் பூச்சு வேலை நடக்கவில்லை, அல்லது ஓர் அறையி
கதவு போடவில்லை என்ற குறையோடு வைத்துக்கொண்டு, அதன் அடி
படையிலே அந்த வீடுகளை வரி விதிப்புக்குக் (Taxation) கொண்
வருவதில்லை. ஆனால் அப்படிப்பட்ட வீடுகளுக்கு மின்சார இணைப்
கொடுக்கலாமென்று நகரமன்றம் பல நேரங்களிலே சிபாரிசு செய்திருக்கிறத
பெரிய வீடுகளைக் கட்டிவிட்டு, நகரமன்றத்திற்கு வரி செலுத்தாம
ஏமாற்றிக்கொண்டு நகரமன்றத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் பட்டியலி
அதைக் கொண்டுவராமல், விளக்கு உட்பட பல வசதிகளை நகர்மன்றத்தி
சிபாரிசில் அனுபவிக்க முடிகிறதென்றால், அங்கே இடையிலே ஏற்பட்டுள்
லஞ்சம் எந்த அளவில் இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டு
இடையிலே ஊழல் இல்லாமல் இருந்தது என்று அமைச்சரவர்கள் சொல்
முடியுமா? இந்த அளவிற்கு அங்கே துணிந்து செய்ய முடிகிறது. அந்த நக
மன்றங்களில் பொழுது விடிந்தால், பொழுது போனால் நடக்கும் சண்ட
களுக்கு அளவே கிடையாது, யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்பதில்தா
அடிதடி, சண்டை கமிஷனர் வரையில் நடந்து கொண்டிருக்கிறது. இ
எல்லோருக்கும் தெரிந்த ஒன்று நிர்வாகத்தில் அவர்களுக்குள்ள செல்வாக்
மாற்ற முடியவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை இல்லை. அப்படியே
அவர்களை மாற்றினாலும், சென்னையைச் சுற்றி 100 மைல்களுக்குள்தா
இருப்பார்கள். இந்த நிலைமைகள் இருக்கின்றன.

அதோடு மட்டுமல்ல. இன்னொரு புதிய நிலையும் இருக்கிறது. ஓே
இருக்கும் அதிகாரிகள் அவர்களுக்கு இடையூறாக இருக்கிறார்கள் என்றா
அவர்கள்மீது 'இம்பெர்டினன்ஸ்' சார்ஜ் போடுகிறார்கள். அதனால் வே
யாரும் அவர்களுக்குச் சிபாரிசு செய்ய முடியாது. 'எதைச் செய்தா
நமக்குப் பாதுகாப்பு, எதைச் செய்தால் பழி வாங்கலா'-மென்று செயல்படு
ஸ்பெஷல் ஆபீசர்களை, கமிஷனர்களை, டி.டி.ஓ.-வினரை வைத்துக் கொண்
டிருக்கும் நிலை என்று சொல்ல மாட்டேன், அப்படிப்பட்ட மனப்போக்
வளர்கிற அளவிற்கு நிலைமைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்
சொல்ல விரும்புகிறேன்.





பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், என்னுடைய திண்டி
வனம் வட்டாரத்தில், மரக்காணம் பகுதியில், எண்டியூர் கிராமத்தில், அந்தக்
கிராம மக்களின் குடி தண்ணீர் தேவைக்கென பம்ப்செட் ஒன்றை எமர்ஜன்சி
காலத்தில் கொடுத்தார்கள். அந்தக் கிராமத்திற்கு அது தனிச் சலுகையாகக்
கொடுக்கப்பட்டது. இன்று வரையிலும் அங்கே குடி தண்ணீர் தருவதற்கான
நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அந்தப் பம்ப்செட்
இருக்கிறதா, இல்லையா என்பது யாருக்கும் தெரியாது. அங்கே கமிஷனர்
இருக்கிறார். அவருக்குத் தந்தி கொடுத்து ஒரு பங்ஷனை திறந்த வேகம்
இருந்ததே தவிர, இதற்கு என்ன நடவடிக்கை என்று அவருக்குத் தெரிய
வில்லை. டி.டி.ஓ. இருக்கிறார். அவர் சர்வ வல்லமை படைத்த
டி.டி.ஓ. அவருக்கு இதற்கெல்லாம் நேரமே கிடையாது. எந்த அதிகாரி
மீது நடவடிக்கை எடுப்பது, யார் யாரை வீட்டிலே போய்ப் பார்த்தால் நாம்
பாதுகாப்பாக இருக்க முடியுமென்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.
அப்படி ஒரு பம்ப்செட் இருக்கிறதா என்பதே தெரியாது, பஞ்சாயத்து

(பிற்பகல் 1-30)

யூனியன் கமிஷனருக்கும், டி.டி.ஓ. அவர்களுக்கும். அதோடு மட்டுமல்ல.
பஞ்சாயத்துக்களைக் கலைப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு
மயிலம் பஞ்சாயத்து ஒன்றியத்திலே தழுதாளி என்ற கிராமத்தில் ஒரு நிகழ்ச்சி
நடைபெற்றது. பள்ளிக்கூடத் திறப்பு விழாவும், குடிநீர்த் தொட்டித் திறப்பு
விழாவும் நடைபெற்றன. விழாவுக்கு ஏற்பட்ட செலவு அனைத்தையும்
முழுக்க முழுக்க அந்தப் பஞ்சாயத்து செய்கிறது. 400 ரூபாய் அந்தப்
பஞ்சாயத்து ஒன்றியத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அனைவருக்கும்
அதுபற்றித் தெரிகிறது. அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் ஒருவர் கூட
பாக்கியில்லாமல், அனைவருக்கும் தெரிகிறது. ஆசிரியர்களுக்கும் தெரிகிறது.
வேண்டுமென்றே அவசர அவசரமாக எடுத்திருக்கிறார்கள் என்பதும்
தெரிகிறது. அதற்குப் பிறகும் அங்கே நிர்வாகம் எப்படி நல்லமுறையில்
இயங்கும்? இத்தனை பேர்களுக்கும் இது தெரிய வருகிறது. ஆனால்
பஞ்சாயத்துக்களைக் கலைத்ததற்குக் காரணம் "மால்-அட்மினிஸ்டிரேஷன்"
என்றும் சொல்கிறார்கள். நிர்வாகச் சீர்கேட்டைப் போக்க இப்படிச்
செய்கிறோம் என்றும் சொல்லுகிறார்கள். அதிகாரிகள் உடந்தையாக
இல்லாவிட்டால், எப்படி நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெற முடியும்?
அதிகாரிகள் உடந்தையாக இருந்தால், நிர்வாகச் சீர்கேட்டைப் போக்க
முடியுமா? எந்தப் பஞ்சாயத்துத் தலைவராவது, அதிகாரி உடந்தையாக
இல்லாவிட்டால், பணத்தை எடுத்து தவறான காரியங்களுக்குச் செலவு செய்ய

யுமா ? பஞ்சாயத்துத் தலைவர்கள் தவறாக பணத்தை எடுக்க முடியாமல் வருப்பதற்குத்தான் பஞ்சாயத்துக்களைக் கலைத்தோம் என்று சொல்லுவது பொருத்தமில்லாமல் இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் தவறு செய்கிறார்கள், அதனால் தான் பஞ்சாயத்துக்களைக் கலைத்தோம் என்று காரணம் சொல்லுவார்களேயானால், அது சரியான காரணம் அல்ல. அதுமட்டுமல்லாமல், மயிலம் பஞ்சாயத்து ஒன்றியத்தில் நடைபெற்றது போல் இன்னும் பல பஞ்சாயத்துக்களில் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. 17 ஆயிரம் ரூபாய், 18 ஆயிரம் ரூபாய் என்று சில மாதங்களில் எடுத்திருக்கிறார்கள். அவ்வளவு பெரிய தொகை எடுத்ததற்கு என்ன வேலை அங்கே செய்திருக்கிறார்கள் ? யாராவது பார்த்திருக்கிறார்களா ? அதைப் பார்க்க வேண்டிய அதிகாரி யார் ? இப்படி பல பஞ்சாயத்துக்களில் செல்வாக்கு உள்ளவர்கள் பணத்தை எடுக்கிறார்கள் என்று நான் சொல்வேன். இதற்கு துணையாக பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். இப்படிப் பணத்தை எடுத்த விட்ட பிறகு எப்படிச் சமாளிப்பது ? யார் செல்வாக்கு உள்ளவர்களோ அவர்களை வைத்து விழா நடத்தி விடலாம், கூட்டம் போட்டு விடலாம் என்று நினைத்து காரியங்களைச் செய்கிறார்கள்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அளித்த உறுதிமொழி என்ன ஆயிற்று ? மேலவை உறுப்பினர்கள், பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் அரசு விழாக்களிலே இடம் பெறுவார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதே அவையில் உறுதிமொழி அளித்தார்கள். அவர்களுடைய எண்ணம், ஆர்வம் சரியான முறையில் செயல்படுகிறதா ? இன்றையதினம் நல்லமுறையில் அது செயல்படவில்லை. அங்கே திண்டிவனத்தில் இருக்கின்ற டி.டி.ஓ. எம்.எல்.ஏ.-வை மட்டும் கூப்பிடு என்று சொல்லுகிறார். எம்.எல்.சி.-யாக அங்கே நான் மட்டுமா இருக்கிறேன் ? அண்ணா திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.சி. கூட இருக்கிறார்.

சில இடங்களிலே உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்று அழைக்கிறார்கள். அதே போல ஒப்புதலைப் பெற்று பெயரையும் அழைப்பிதழில் போடுகிறார்கள். மற்ற இடங்களில் எல்லாம் ஒரு வார்த்தை சொல்லி கூப்பிடுவதற்குப் பதிலாக, ஏதோ அழைத்தோம் என்ற கடமைக்காக, வந்தாலும் வராவிட்டாலும் பரவாயில்லை என்கிற வகையில் பெயரை மட்டும் அழைப்பிதழில் போட்டுவிடுகிறார்கள். அமைச்சரவர்கள் இந்த அவையில் கொடுக்கின்ற வாக்குறுதிகளைக் கூட செயல்படுத்த முடியாத நிலையில், நிறைவு செய்ய முடியா...

அதே நேரத்தில் ...

... பற்றவர்களை



மட்டும் நிறைவு செய்ய முடியும் என்கிற நிலையில், செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இரண்டு மணிக்குள் அவை நடவடிக்கைகளை முடித்துவிடலாம் என்று கருதியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சருக்கு பதில் சொல்வதற்கு ஒரு 15 நிமிடமாவது தேவைப்படும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு 10 நிமிடமாவது தேவைப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்தி எவ்வளவு சுருக்கமாகப் பேச முடியுமோ அவ்வளவு சுருக்கமாகப் பேசி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இன்னொன்று. நம்முடைய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள் மிக அழகாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். மக்கள் குழு தேவையற்றது, அது சரியாகச் செயல்படவில்லை. அவசியமற்றது என்று சொன்னார்கள். மேலும் பி.டி.ஓ.-க்களை அதிகமாக்குங்கள் என்றும் சொன்னார்கள். இப்பொழுது நிர்வாகம் சரியாக இயங்கவில்லை என்றும் சொன்னார்கள். எப்படி இருந்தாலும் எல்லாவற்றையும் தாண்டி, இன்றையதினம் உள்ள ஆட்சியில் நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது என்பதை அவர்களாலேயே மறுக்க முடியவில்லை என்பது தெளிவாகிக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக Bifurcation of Panchayats பஞ்சாயத்துக்களைப் பிரிப்பது பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்துக்களுக்கான தேர்தலை நடத்த இருக்கிறோம். ஆகவே தேர்தல் தேதிகள் நிர்ணயிக்கப்படுகின்ற நிலையில் இனிமேல் பஞ்சாயத்துக்களைப் பிரிக்கக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எவ்வளவு தான் நியாயமான காரணங்களாக இருந்தாலும், பஞ்சாயத்துக்களைப் பிரிக்க மாட்டோம் என்று இதற்கான ஒரு உத்தரவை இரண்டாண்டுகளுக்கு முன்னால் போட்டார்கள். ஆனால் அதன் விளைவு என்ன ஆயிற்று ? பஞ்சாயத்துக்கள் கூட இன்றைக்குப் பிரிக்கப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. இப்படி ஓர் உத்தரவு மூலம் இப்படிப்பட்ட நிலைமைகளை வளர்க்க முடிகிறது. ஆனால் இதுபற்றி இந்த அவையில் பல முறை உறுப்பினர்களால் எடுத்துச் சொல்லப்பட்டும் இதை உங்களால் செய்ய முடியவில்லை. காரணம், இன்றைக்கு எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்க வேண்டிய அமைப்புகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கலைக்கப்

பட்டு விட்டன. என்னைப் பொறுத்தவரை, உரிமையோடு சொல்கிறே
'தேர்தலை உடனடியாக நடத்துங்கள்' என்றோ, 'கொடுத்துள்ள கால
கெடுவுக்குள் நடத்துங்கள்' என்றோ நான் கேட்கவில்லை. இன்றையதின
நம்முடைய அமைச்சரிடம் அத்தகைய ஒரு அதிகாரம் இல்லை. ஐந்
ஆண்டுக் காலம் ஆட்சியில் இருப்பார்கள் என்றும் நான் சொல்லவில்லை
ஐந்து ஆண்டு முடிவதற்குள் தேர்தலை நடத்தவேண்டும். இல்லாவிட்டா
மீண்டும் சட்டமன்றத் தேர்தலை நடத்தும்போதாவது இதையும் அவசியம்
சேர்த்து நடத்தும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்தால் 'இப்பொழு
தானே சட்டமன்றத் தேர்தல் வந்திருக்கிறது, அல்லது சட்டமன்ற
தேர்தல் முடிந்து 6 மாதம் தானே ஆகிறது' என்றெல்லாம் பின்னா
சொல்லுவதற்கான வாய்ப்பு இருக்காது. நியாயமாக இன்றையதினம்
பிரிக்கப்பட வேண்டிய பஞ்சாயத்துக்களைக் கூட பிரிக்காமல் தடை செய்
கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களைப் பிரிக்க முடியாத நிலைமை
ஒரே ஒரு உத்தரவு மூலம் போட்டு தடை செய்திருக்கிறார்கள். நாட்
மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு "பிராக்டிக்கல்" ஆக உணர்ந்
அவற்றைச் செயல்படுத்துங்கள் என்று சொல்லி என் உரையை முடித்
அமைகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே
அவையின் முன்னால் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களா
கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்திருத்தங்களை திராவி
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், ஜனநாயகத்தின் பேரிலும் நா
வன்மையாக எதிர்க்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பி
என்று நான் சொல்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி
பொறுப்பில் இருக்கிறபோது, இந்த நாட்டில் பஞ்சாயத்துத் தேர்தலை
அல்லது யூனியன் தேர்தலை ஒரு தடவை ஒத்தி வைக்கிறபோது, அன்
எதிர்க் கட்சியாக இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை
சார்ந்த இன்றைய அமைச்சர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்
என்னென்ன பேசினார்கள் என்பதை அவர்கள் தயவுகூர்ந்து ஒரு முறை
அந்தக் குறிப்பேடுகளை வாங்கிப் படிக்க வேண்டுமென்று நான் மிக
அன்போடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது அவர்
செயல்படுகிற முறையைப் பார்த்தால், ஒன்றில் அவர்கள் அன்றையதினம்
பேசியது உண்மைக்கு மாறான பேச்சாக இருக்க வேண்டும், அல்ல
இப்பொழுது அவர்கள் செயல்படுகிற முறை சரியாக இல்லாத முறையா
இருக்க வேண்டும் என்
ஒத்துக்கொள்ள வேண்டும் ரெண்





ஒன்றை அவர்கள் மறுக்க முடியாத நிலை இருக்க முடியாது என்பதை நா
பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஜனநாயகத்தின் ஆணிவே
ஜனநாயகத்தின் நாற்றங்கால் பிடுங்கி எறியப்பட்டது என்கிற அவப்பெய
அவர்களுக்கு என்றென்றைக்கும் ஜனநாயகத்தில் கிடைக்கும்.

ஆட்சிக்கு வந்த உடனேயே நகர மன்றங்கள் கலைக்கப்பட்டு விட்டன
ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டு விட்டன. 'நாங்கள் அதற்கு
பொறுப்பு அல்ல' என்று சொன்னார்கள். அது மாத்திரமல்ல. தனி அதிகா
களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக சட்ட முன்வடிவை இந்
மன்றத்திலே கொண்டு வருகிற நேரத்தில் விரைவில் தேர்தல் நடத்த வேண்
மென்று நாங்கள் சொன்னபோது, அதை ஒரு காரணமாகச் சுட்டிக்காட்டவு
செய்தார்கள். "கலைத்தவர்கள் நாங்கள் அல்ல. கலைத்தது தவறுதான

(பிற்பகல் 1-40)

நாங்கள் மீண்டும் தேர்தல் கொண்டுவர முனைந்திருக்கிறோம்" என்றெல்லாப்
2½ ஆண்டுக்காலமாகச் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு இவைகள்
எல்லாவற்றுக்கும் மூலமாக, அஸ்திவாரமாக, ஆணிவேராக இருக்கக்கூடிய
12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலைத்த பெருமை
தமிழகத்தில் மாத்திரமல்ல, அகில இந்தியாவிலேயே இந்த அரசுக்கு மட்டும்
தான் கிடைத்திருக்கும் என்று நான் எண்ணுகிறேன். அந்தப் பெயரும் புகழும்
இந்த அரசுக்குக் கிடைத்திருப்பது சரிதானா என்று சீர்தூக்கிப் பார்க்க
வேண்டும். இங்கு பேசியவர்கள் எல்லாம் பல்வேறு கோணங்களிலிருந்து
இந்தப் பிரச்சினையில் இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை எடுத்துக்
காட்டினார்கள். நான் கூட இந்த அவையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள்—இது நான்காவது முறை என்று நினைக்கிறேன்—
இப்படி காலநீட்டிப்பு வேண்டுமென்று கோரக்கூடிய தீர்மானங்கள் மீது
பேசுகின்றபோது, ஒவ்வொரு தடவையும் ஜனநாயகத்திலே அவர்களுக்கு
இருக்கக்கூடிய ஆழமான நம்பிக்கையை வெளிப்படுத்தி, விரைவிலேயே
தேர்தல் நடத்துவதில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை அவ்வப்போது
வெளிப்படுத்தியிருப்பதை எண்ணிப்பார்த்து, இந்தச் செய்தியைக் கேட்டவுடன்
அவர்கள் ராஜிநாமா செய்திருப்பார்கள் என்று கூட எதிர்பார்த்தேன்.
இவ்வளவையும் தாங்கிக்கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த இலாக்காவிலே
இருப்பார்களா என்று நினைத்தேன். ஒருவேளை இலாக்காவை மாற்றி
யிருப்பார்களோ என்று கூட நினைத்தேன். ஆனால் இன்னும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் அந்த இலாக்காவிலே இருந்துகொண்டு இந்தக் கால

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 15

'ட்டிப்புக்கு ஏதோ சொல்லி நியாயம் கற்பித்துப் பேசியிருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது, இந்த இயக்கத்திற்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இல்லை என்ற ஒரு முடிவுக்குத்தான் நான் என்னைக் கொண்டு நிறுத்தவேண்டி யிருக்கிறதே தவிர, வேறு வழியில்லை. பஞ்சாயத்துக்களைக் கலைப்பதற்கு அவர்கள் சொன்ன காரணம் அங்கே இருக்கக்கூடிய பஞ்சாயத்து உறுப்பினர்கள், தலைவர்கள் எல்லாம் ஜாதி அடிப்படையிலேயே நடக்க ஆரம்பித்து, தவறுகளைச் செய்கிறார்கள் என்பது. மாண்புமிகு உறுப்பினர் அவையாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களில் பெரும்பகுதியினர் தி.மு.க.-வினர் என்றும் இந்திரா காங்கிரஸ்காரர்கள் என்றும் சொன்னதிலிருந்து கலைத்தது சரிதான் என்று தெரிகிறது. ஆளும்கட்சியினர் பேசியதைக் கேட்ட பிறகு, தனி அலுவலர்களின் காலத்தை எப்படியாவது நீட்டிக்க வேண்டும் என்று தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. அவர்களை உடனடியாகக் கலைத்துவிடுங்கள் என்று பேசுகிறார்கள். ஆகவே எதை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்த விரும்புகிறார்கள்? தனி அலுவலர்கள் தவறு செய்கிறார்கள். அது நாங்கள் மட்டும் சொல்லவில்லை, அவர்களும் கூடத்தான் சொல்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை, அல்லது இப்போதுள்ள ஆட்சியாளர்கள் போன்றவர்கள் ஆட்சி செய்தால் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது மக்களைச் சந்திக்க வேண்டிய ஒரு நிலை வருகின்றபோது அஞ்சி, தேர்தலுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பாவது தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்வார்கள். ஆனால், மக்களைச் சந்திக்கத் தேவையில்லாத இந்த தனி அதிகாரிகள், தங்களுக்கு வேண்டிய மேலதிகாரிகளை மாத்திரம் கையில் போட்டுக்கொண்டு தமிழகத்தின் வளர்ச்சியைக் கெடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தங்கப்பாண்டியன், திரு. நல்லசிவன், திரு. தியாகராஜன் ஊராட்சி மன்ற, ஒன்றிய, நகரியங்களுடைய தேர்தல் நடத்தப்படாதது எந்த அளவுக்கு இந்த அவை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டி இந்தத் தேர்தல்களை மாற்றி வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்ற கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியென்றால், இந்த அரசு இந்த அவைக்கு அநீதி இழைக்கிறது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இங்கிலாந்து நாட்டிலே ஸ்டூவர்ட் டைனாஸ்டிக்கு முன்பு இருந்த ட்யூடார்ஸ் பாரம்பரியில் வந்த டெஸ்பாட்கள் காலத்திலே அங்கே 'ரம்ப்' ட்ரங்கேட்டட் பார்லிமெண்ட்' இருந்தது. அப்போது தான் ஜேம்ஸ் முதலாமவரின் தலை வெட்டப்பட்டது. அப்படி ட்ரங்கேட்டட் லெஜிஸ்லேச்சரை வைத்துக்கொண்டு — பெருமை இன்றைக்கு இந்த



1979 நவம்பர் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

அரசுக்கும் கிடைத்திருக்கிறது. இதுவும் வரலாற்றிலே பெருமை தானே! எதிர்க்கட்சியிலே இருக்கும் நாங்கள் கடமையுணர்ச்சியினால் இப்படிப் பேசியிருக்கிறோம். என்றாலும், இன்றையதினம் ஆளும்கட்சியிலே இருப்பவர்கள் கூட இந்தத் தனி அதிகாரிகளைப் பற்றி எதிர்த்தே பேசியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, இறுதியிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை வாபஸ் பெற்றுக்கொள்வார்கள் என்று கூட நான் நம்புகிறேன். நாங்களெல்லாம் எடுத்துச்சொன்ன பிறகு, இப்படி மக்கள் உணர்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொண்ட பிறகு, அமைச்சராக 2½ வருட காலம் இருந்த பிறகு, மக்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பிறகு, அங்கே நிலவும் அவலநிலைகளை பல மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். உதாரணமாக சேலம் நகரத்திலே நகரத்தைச் சுற்றிச்செல்கின்ற லாரிகள் 20 இருந்தன. அவற்றில் இப்போது 2 லாரிகள் தான் ஓடிக்கொண்டிருக்கின்றன. மற்றவைகள் ஒதுக்கி விடப்பட்டிருக்கின்றன. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு என்ன வருவாய் இருந்ததோ அதுபோல இரண்டு மடங்கு வருவாய் நகராட்சிகளில் பெருகி யிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் இன்னும் நீட்டித்துக் கொண்டு செல்லவேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் இப்போது பஞ்சாயத்துக்களின் பொறுப்பாளராக ஆக்கப்பட்டிருக்கிறார் என்றால், அவர் 37, 40 பஞ்சாயத்துக்களை நிர்வகிக்கிறார். அது போதாது, இன்னும் மூன்று, நான்கு ஆணையாளர்களை நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் அந்தக் கருத்தை ஆதரிக்கவில்லை. அந்த ஆணையர்களின் பதவிக் காலத்தையே நீட்டிக்கக்கூடாது. உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்லும்போது, இன்னும் இரண்டு ஆணையரை மூன்று ஆணையரைப் போடுங்கள் என்று ஆலோசனை சொல்லக்கூடிய சூழ்நிலையில் நாங்கள் இல்லை. நாங்கள் சொல்லும் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால்தான், ஆலோசனைகள் சொல்ல முடியும். ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலைமை வரும்போது, இந்தக் ஆலோசனைகள் சொல்லத் தேவையில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், 150 டிவிஷன்களாக இருக்கின்றன. வாக்காளர் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லப் படுகிறது. ஒரு காரணத்தைச் சொல்லும்போதாவது, அந்தக் காரணத்தை ஊர் நம்பும்படியாகச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதிலிருந்து, எங்களுக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், இந்த அரசு தேர்தலைச் சந்திக்க மறுக்கிறது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1979 நவம்பர் 15

இப்போது பாராளுமன்றத் தேர்தல் வரப்போகிறது என்று சொன்னால் இந்தப் பாராளுமன்றத் தேர்தல் அவர்கள் விரும்பியதல்ல. இந்தியாவின் அரசியல் வட்டாரத்திலே ஏற்பட்ட ஒரு மாற்றத்தால், ஒரு சூழ்நிலையின் காரணத்தால்—விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்—தேர்தல் கமிஷனால் தேர்தல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதைச் சந்தித்துத்தான் தீரவேண்டும். ஆனால் அவர்களாக விரும்பி வைக்கவேண்டிய தேர்தல்களை வைத்திருக்கிறார்களா? ஆகவே இந்த அரசு தேர்தலைச் சந்திக்க மறுக்கிறது. நகராட்சி, யூனியன் அவற்றையெல்லாம் தாங்கள் கலைக்கவில்லை என்று சொல்லிவிட்டு, 12 ஆயிரம் பஞ்சாயத்துக்களைக் கலைத்தபின், ஜனநாயகமற்ற முறையிலே அதிகாரிகளை வைத்துக்கொண்டு அங்கே இருக்கக்கூடிய பணத்தையெல்லாம் தவறான வழிகளிலே செலவழிக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற மழையின் அளவையும் பாருங்கள், இப்போது பெய்திருக்கும் மழையின் அளவையும் பாருங்கள். இப்போது பெய்திருக்கும் மழை பெரிய நஷ்டத்தை உண்டாக்கும் அளவுக்கு இல்லை. 1978 ஆம் ஆண்டு பெய்த மழையிலே உடைக்கப்பட்ட எல்லா ஏரிகளும் ஒழுங்காக அடைக்கப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சம் மூன்றுக்கு அணையைப் போட்டார்களே தவிர, உண்மையிலேயே வேலைகள் சரியாக நடைபெறவில்லை. திருநெல்வேலியிலே இப்போது 13, 14 குளங்கள் உடைந்திருக்கின்றன என்று சொன்னால், அந்தக் குளங்கள் அத்தனையும் 1978 ஆம் ஆண்டு மழையிலும் உடைந்தன. அப்போது அந்தக் குளங்களையெல்லாம் சரியாக அடைக்கவில்லை என்று இதே மன்றத்தில் நான் பேசியிருக்கிறேன். இந்த நிலைமைகளையெல்லாம் அந்தந்தப் பஞ்சாயத்துக்களுடைய தலைவர்கள் வந்து வளர்ச்சி மன்றத்திலே பேசுவதற்குரிய வாய்ப்பு இல்லை. வளர்ச்சி மன்றம், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலாகத்தான் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களே தவிர ஒவ்வொரு யூனியனின் தலைவரும் இருந்து அந்தந்த யூனியன்களுடைய குறைகளைச் சொல்லும் வாய்ப்பு இப்போது இல்லை. அந்த வாய்ப்பை இழந்து இப்போது நான்கு ஆண்டுகள் ஆகின்றன. மாவட்டந்தோறும் வளர்ச்சிக்கு இல்லை. மாவட்டந்தோறும் எல்லாத் திட்டங்களும் தடைப்பட்டிருக்கும் இந்த நிலையில் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே உடனடியாக உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு நாள் குறிப்பிடப்பட வேண்டும்.

(பிற்பகல் 1-50)

பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடந்து முடிந்தவுடன்



1979 நவம்பர் 15] [திரு. ம. சங்கரலிங்கம்]

ஒரு நாளை இப்போதே அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, ஆட்சியில் இருப்பவர்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையே நடத்த மாட்டார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு இன்னும் 14 மாதங்கள் கழித்துத் தேர்தலை நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது, 5 வருஷத்திற்குத் தள்ளி வைத்துவிடுங்கள் என்றார்கள். இப்படி ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆலோசனை சொல்ல வேண்டியவர்கள் எல்லாம் கோபமாக "நீங்கள் எப்படியாவது போங்கள்" என்று சொல்லுகிறார்கள் என்றால், அந்த அளவுக்கு அவர்களெல்லாம் இன்றையதினம் 'டெஸ்பரேட்' ஆகிவிட்டிருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம். இன்றைக்கு தேர்தலை நடத்துங்கள் என்று சொல்ல வேண்டியவர்கள் ஆட்சியாளர்களைப் பார்த்து '5 வருஷம் கழித்துத் தேர்தலை நடத்துங்கள்' என்று சொல்லுகிறார்கள் என்றால், அந்த அளவுக்கு ஆட்சியாளர்கள் அவர்களைக் கொண்டு வந்துவிட்டார்கள் என்றுதான் அர்த்தம். எனவே இந்தச் சட்டமுன்வடிவுகளைப் பின்வலித்துக் கொண்டு, பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்த உடனே இன்ன தேதியில் ஊராட்சி மன்றத் தேர்தல்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்று குறிப்பிடும் சட்டமுன்வடிவுகளைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் ஜனவரி 3 ஆம் தேதி நடைபெறும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. எனவே ஜனவரி 28 ஆம் தேதியே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடைபெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் 6 சட்டமுன்வடிவுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பன்னிருவர் தங்கள் எண்ணங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய பேச்சிலும் இழையோடுகிற மையக் கருத்து, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்பதுதான். நான் இங்கே முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம், ஏதோ தேர்தல்களைத் தள்ளி வைப்பதன் மூலம் அரசுக்கு ஒரு திருப்தி இருப்பதைப் போலவும், ஒரு மகிழ்ச்சி இருப்பதைப்போலவும், மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து கருதிக் கொள்ளத் தேவையில்லை.

[திரு. கா. காளிமுத்து] [1979 நவம்பர் 15

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை விரைவாக நடத்த வேண்டு மென்பதில் மிக ஆர்வத்தோடும் அக்கறையோடும் இருக்கிற இந்த அரசு, சூழ் நிலைகளின் இடர்ப்பாட்டின் காரணமாகத்தான் அத்தேர்தல்களைத் தள்ளி தள்ளி வைக்கும்போது, எந்த அளவுக்கு வேதனைப்படுகிறது என்பதையும் அப்படித் தேர்தல்களைத் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் களைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே சட்ட மன்றத்தில் அறிவித்த அறிவிப்பு நினைவில் இருக்கும் என்று நான் கருது கிறேன். நாடாளுமன்றத் தேர்தல்கள் முடிவுற்று இரண்டு மாத காலத்திற்குப் பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்ற கருத்தினை அவர்கள் மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, தேர்தல்களை நடத்தவே மாட்டோம், இதோடு தேர்தலைப்பற்றிய பிரச் சினைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டோம் என்று கருதி வேதனைப்பட்டு, விரக்தியின் விளிம்பிற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போன்றவர்கள் செல்ல வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அருமைச் சகோதரர், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுவதற்குத் தொடங்கும்போதே "தேர்தல்களை நிச்சயமாக நீங்கள் நடத்தப் போவதில்லை, இது உறுதி, இது உறுதி" என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அவருடைய பேச்சின் பிற்பகுதியில் அதற்கு நேர் மாறான, ஒரு முரண்பட்ட குற்றச்சாட்டையும் இங்கே தெரிவித்தார்கள். "வாக்காளர் பட்டியலில் ஏன் பல பெயர்கள் விடப்பட்டிருக்கின்றன தெரியுமா? தேர்தலில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வாக்களித்துவிடக் கூடாது என்று திட்டமிட்டு நீங்கள் வேலை செய்து அவர்களின் பெயர்களைச் சேர்க்க விடாமல் செய்திருக்கிறீர்கள்" என்று குற்றஞ்சாட்டினார்கள். "நீங்கள் தேர்தலை நடத்தப் போவதில்லை, அது உறுதி உறுதி" என்று அவ ருடைய உதடுகள் உச்சரித்துக்கொண்டிருந்தாலும், அவருடைய உள்மனம் "தேர்தல்கள் மிக விரைவில் வரத்தான் இருக்கின்றன, ஆகவே நாமும் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்" என்ற கருத்துத்தான் அவருடைய பேச்சில் தொனிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: இப்போது வாக்காளர் பட்டியலைத் தயா ரித்திருப்பது நாடாளுமன்றத் தேர்தல்களுக்காக. நகராட்சி மற்றும் ஊராட்சி மன்றத் தேர்தல்களைப் பொறுத்தவரையில், 18 வயதுக்குட்பட்டவர் களின் பெயர்களையும் சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு சட்டம் கொண்டுவர இருப்பதாகச் சொன்னார்கள். சட்டமன்



1979 நவம்பர் 15] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

றத்திலேகூட அதைத்தான் அறிவித்தார்கள். எனவேதான் நான் பேசும் போது 'நீங்கள் இந்த வாக்காளர் பட்டியலை வைத்துக்கொண்டு தேர்தல் களை நடத்தப் போவதில்லை' என்று சொன்னேன், தேர்தல் வராது என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலையே அடிப்படையாக வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு 18 வயது ஆனவர்களையும் சேர்த்து உள்ளாட்சி மன்ற அமைப்புத் தேர்தல்களுக்குத் தேவையான வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கலாம் என்ற கருத்தைக்கூட அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், ஏனென் றால் அது வேறு, இது வேறு என்ற நிலைமை வருகிறபோது சில சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதையும் எண்ணிப் பார்த்து, அந்த வாக்காளர் பட்டி யலையேகூட அடிப்படையாக வைத்துத் தேர்தல்களை நடத்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை விரைவில் நடத்துவதற்குத் தான் அரசு தீவிரம் காட்டுகிறதே தவிர, தேர்தல்களை நிரந்தரமாக ஒத்தி வைக்க வேண்டும் என்று இந்த அரசு கருதவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களைப் போன்றவர்கள் "சட்டசபைத் தேர்தல்களை நடத்தும்போதாவது, இந்த உள்ளாட்சிமன்றத் தேர்தல்களையும் சேர்த்து நடத்துங்கள்" என்று சொல்லுகிற அளவுக்கு நிலைமை நிச்சயமாக வராது என்பதையும் உடனடியாகத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுள்ள இந்த அரசை அவ்வளவு தூரத்திற்கு தேர்தல்களைத் தள்ளிப் போட வேண்டும் என்று சொல்வது முறையல்ல என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஊராட்சி மன்றங்களையும் இந்த ஆட்சி கலைத்துவிட்டது. ஆகவே அது ஜனநாயகத்தின் அடித்தளத்தையே தகர்த்துவிட்டதாகிவிட்டது, ஜன நாயக நாற்றங்காலையே சீர் குலைத்துவிட்டது" என்றெல்லாம்கூட எடுத்துச் சொல்லப்பட்டது. ஊராட்சிமன்ற அமைப்புகளைக் கலைத்த உடனே உள் ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதவியை விட்டு விலகுவார் என்று எதிர்பார்த்தேன் என்றுகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமாக இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஊராட்சிமன்றத் தலைவர்களைப் பொறுத்தவரையில், அவர்களை மக்கள் தேர்ந்தெடுத்து எவ்வளவு காலம் ஊராட்சி மன்றங்களில் பதவி வகிக்க வேண்டும் என்று காலம் நிர்ணயம் செய்து கொடுத்திருந்தார்

[திரு. கா. காளிமுத்து] [1979 நவம்பர் 15

களை அந்தக் காலத்திற்குள்ளாக அரசு அவர்களுடைய 'பதவியை' நீக்கா யிருந்தால், அது ஜனநாயகப் படுகொலையாகும், மக்களுடைய எண்ணத்திற்கு மாறான செயலாகும், மக்களுடைய எண்ணத்திற்கு முரண்பட்ட செயலாகும். ஊராட்சி மன்றங்களின் தலைவர்களின் பதவிக் காலத்தைப் பொறுத்த வரையில், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஆண்டு காலத்திற்குப் பிறகும், ஆட்சியாளர்களின் தயவால் அவர்களுக்குப் பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அரசு தனது திட்டங்களை நிறைவேற்ற அந்த அமைப்புகள் பயன்படும் என்று கருதி, பதவி நீட்டிப்பு அவர்களுக்கு வழங்கி வந்தி ருக்கிறது. ஆனால் அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கிற புகார்களைப் பார்க்கிறபோது, ஊராட்சி அமைப்புகளில் இருக்கிற சூழ்நிலைகளைப் பார்க் கிறபோது, இனியும் அவர்களுடைய பதவியை நீட்டிப்பது சரியல்ல என்ற கருத்திற்கு அரசாங்கம் வர வேண்டியதாயிற்று. பல ஊராட்சி மன்றங்களில் உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்குமிடையே தகராறு. பல ஊராட்சி மன்றங்களில் பல்வேறு வகையான முறைகேடுகள் என்ற புகார்கள். இவைகள் ஆயிரக்கணக்கில் வந்ததற்குப் பிறகுதான், இந்த அரசு இத்தகைய நடவ டிக்கையை மேற்கொள்ள நேரிட்டது. பல இடங்களில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் பதவியை விட்டு விலகி தலைவர் மட்டும் பதவியில் இருக்கிற நிலைமைகள், பல இடங்களில் உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க வேண்டிய நிலைமை என்று ஏற்பட்ட பிறகு, இவைகளுக்கெல்லாம் பரிகாரம் காண மாவட்ட ஆட்சித் தலைவர் தனது நேரத்தைச் செலவிடவும் அரசு தனது ஆற்றலை விரயம் செய்யவும் வேண்டியது அவசியம்தானா என்ற முறையில், அவர் களுடைய பதவி நீக்கம் செய்யப்பட்டதே தவிர, ஊராட்சி மன்ற அமைப்புகள் கலைக்கப்பட்டனவே தவிர, ஜனநாயகத்தின் அடித்தளத்தைத் தகர்த்துவிட வேண்டும் என்ற முறையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவில்லை. முறைகேடுகள் என்பவை வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு முறைகளில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது, அரசாங்கத்திலிருந்து போடப்பட்ட உத்தரவில் இருக்கிற வாசகங்களை வைத்துக்கொண்டு இங்கே கருத்துக்களைத் தெரிவித் தார்கள். ஆனால் 12,000 ஊராட்சி மன்றங்களிலும் இருக்கிற முறைகேடுகளை எடுத்துச் சொல்லி ஓர் உத்தரவு போட முடியாது என்ற காரணத்தால், பொது வான ஊராட்சி மன்றங்களில் காணப்படும் குறைபாடுகளைக் கூறி அந்த வாசகம் பயன்படுத்தப்பட்டதே தவிர, வேறொன்றும் இல்லை. ஒரு இடத்தில் ஊராட்சி மன்றத்திற்கு உரிய நிலங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக்கூட தெரிவிக்கப்படாமல், அவருடைய அனுமதியில்லாமல் வழங்கப்பட்டிரு



1979 நவம்பர் 15] [திரு. கா. காளிமுத்து]

க்கின்றன. இப்படிப்பட்ட வெவ்வேறு விதமான குற்றச்சாட்டுகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்த பிறகுதான், அரசு தனது திட்டங்களை நிறைவேற்ற, அடித்தளத்தில் இருக்கிற இந்த அமைப்புகள் உதவிகரமாக இருக்காது, அவைகள் பகைமை வளர்த்துவிட்ட சூழ்நிலையில் அவைகளைக் கலைப்ப தைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தது.

கிராமங்கள் என்பவை சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளாலும் ஊர் முழுவதும் பாதி பெரிதுபடுத்தப்படும் சூழ்நிலையில் இருப்பவை. ஆகவே அங்கே இருக்கிற ஊராட்சி மன்றங்கள் என்பவை இருக்கிற நிலைமைகளை இன்னும் சீர்குலைக்குமானால், அவைகளைக் கலைக்க வேண்டும் என்பது பொறுப்புள்ள அரசின் கடமை என்ற முறையில் அந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் வாக்குறுதியை நம்ப முடியவில்லை. அது குளத்தில் எழுதப்பட்டது என் றால் முதலமைச்சருடைய வாக்குறுதி கடலில் எழுதப்பட்டது" என்று குறிப் பிட்டார்கள். நான் அவருக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். கல்லில் எழுதப்படுவதுபோல மாத்திரம் வாக்குறுதிகள் என்பவை நிரந்தரமாக இருக்கும் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. நிலைமைகளைப் பொறுத்துத்தான் அவைகள் நிற்குமா நிற்காதா என்று சொல்ல முடியும். சூரியன் உள்ளவரை, சந்திரன் உள்ளவரை என்று எழுதப்பட்ட கல்வெட்டுச் சாசனங்கள் எல்லாம் கூட ஓடைக் கரையிலே துணி துவைக்கும் கற்களாக மாறியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கொடுக்கப்படுகிற வாக்குறுதிகள் இருக்கிற நிலைமைகளில் அரசால் மாற்றிச் சொல்லப்படுகின்றனவா அல்லது முரண்பட்டுச் சொல்லப் படுகின்றனவா என்று எண்ணிப் பார்க்க வேண்டுமே தவிர, கொடுக்கப்படும் வாக்குறுதிகளை இப்போதே "நிற்காது, நடக்காது" என்று நினைப்பது சரியல்ல. அப்படிப்பட்ட நிலைமை நிச்சயமாக வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் களை ஒத்தி வைப்பதற்காக இதற்கு முன்னாலேகூட காரணங்கள் சொல்லப் பட்டன. அவைகளெல்லாம் தோன்றாக் காரணங்களா? அல்லது இல்லாத காரணங்களா? வெள்ளத்தின் காரணமாக தேர்தல்கள் தள்ளி வைக்கப்படும் என்று நான் குறிப்பிட்டேன். வெள்ளம் வராமல் தள்ளி வைக்கப்பட்டனவா? சென்னை நகரை 150 வட்டங்களாகப் பிரிக்கப் போகிறோம், அதற்காக தேர்தல்களைத் தள்ளி வைக்கிறோம் என்று சொன்னோம். 150 வட்ட

களாகச் சென்னை நகரம் பிரிக்கப்படவில்லையா? பண்டர் சோல் வழக்கு களில் சம்பந்தப்பட்டவர்கள் தேர்தலுக்கு மீண்டும் நிற்கக்கூடிய சூழ்நிலை வந்துவிடக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். எந்தக் குற்றஞ் சாட்டப்பட்டு மாநகராட்சி கலைக்கப்பட் டதோ அதே குற்றங்கள் அத்தகைய பிரதிநிதிகளால் மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது, அத்தகைய நிலையை உருவாக்கிவிடக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்போது நாடாளு

(பிற்பகல் 2-00)

மன்றத் தேர்தல்கள் நிச்சயமாக இல்லையென்றால் நம்முடைய உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கும். நாடாளு மன்றத் தேர்தல்தான் நந்தியாக இருந்து இந்தத் தேர்தலை நடத்தத் தடை யாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். நாடாளு மன்றத் தேர்தல் நடக்கவிருக்கிறது. ஆகவே நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிச்சயமாகத் தேர்தல் களை இந்த அரசு நடத்தும் என்று நம்பலாம்.

உதிரிப்பூக்களாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் வருத்தப்படத் தேவையில்லை. உதிரிப் பூக்கள் மாலையாகக் கட்டுவதற்காகத்தான் சேர்த்து வைக்கப்படுகின்றன. மாலைக்கு முதல் பொருளே மலர். மாலையாக, மலர் இல்லாமல் வெறும் நாரைக் கட்டக்கூடாது என்பதற்காகத்தான் நல்ல பூக்களை, அருமையான பூக்களை இந்த அரசு சேர்த்து வைக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட் டிருக்கிறேன். (சிரிப்பு).

அதைப்போலவே பேரூராட்சிகளுடைய நிலைமைகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். குடி நீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கூட அது இயலாத நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்தார்கள். மத்திய அரசினுடைய துணை யோடு பல பெரிய குடிநீர்த் திட்டங்களைக்கூட பேரூராட்சிகளில் நிறை வேற்றுவதற்கு உலக வங்கியினுடைய உதவியைப் பெறலாம் என்ற அளவுக்கு அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்லமந்தா அவர்கள் பேசுகிறபோது, மாநகராட்சியிடமிருந்து குடிநீர் துறை பிரிக்கப்பட்டதற்குப் பிறகு குறை பாடுகள் வந்துவிட்டன என்று குறிப்பிட்டார்கள். நிச்சயமாகக் குறை



பாடுகள் இல்லை. அதற்குப் பிறகு அதிகத் தீவிரமாக அந்த வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரைப் பொறுத்தவரையில், நகரிலே ஏதாவது சின்ன குறைபாடு என்றாலும்கூட மாநகராட்சிக் கவுன்சிலரைப் போல அங்கே சென்று பார்வையிடுகிறார்கள். திரு. எல்லமந்தா அவர்கள், எங்காவது ஒரு பகுதியில் நிலைமைகள் சீர்கெட்டிருந்தால், அதை அவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்தச் சீர்கேட்டைப் போக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அனகாபுத்தூர் திரு. இராமலிங்கம் அவர்கள் சில நல்ல யோசனைகளை அரசுக்குத் தெரிவித்தார்கள். மின் வாரியத்திடமே மீண்டும் ஊராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளைப் பராமரிக்கிற பொறுப்பை விட்டுவிடலாம் என்று தெரிவித்தார்கள். மின் வாரியத்தினுடைய அலுவலர் ஒருவரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கட்டுப்பாட்டிலே வைக்கலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அவர் தெரிவித்ததைப் போல, ஊராட்சிப் பொறுப்பிலே இருந்தால் பி.டி.ஓ.-க்கள் மின்சாரக் கம்பங்களிலே ஏற வேண்டுமென்ற அவசியமில்லை. மின் வாரிய அலுவலர் ஊராட்சி நிர்வாகத்திற்கு வந்துவிட்டால், நிச்சயமாக அந்தச் சூழ்நிலைகள் மாறுமென்று உறுதியாக அரசு கருதுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பல புகார்களை இங்கே தெரிவித்தார்கள். தேவகோட்டை ஆணையாளரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் அமைச்சருக்கு உறவினர் என்று சொல்கிறார் என்று தெரிவித்தார். அப்படியொரு உறவினர் இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சித் துறையைப் பொறுத்த வரையில், சில புகார்களைக் குறிப்பிட்டால் விசாரித்து என்ன நிலைமை என்பதை உடனடியாகச் சொல்ல முடியும் என்பதை அவர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். திண்டிவனம் நகராட்சியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே தலைஞாயிறு ஒன்றியத்தைப் பற்றியும், பட்டுக்கோட்டை, போரூரணியைப் பற்றியும் அவர் குறிப்பிட்டதற்குப் பதில் சொல்ல இயலாவிட்டாலும், அவர் சுட்டிக்காட்டியிருக்கிற குறைபாடுகளைக் களைவதற்கு நிச்சயமாக முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் பேசும்போது, மிகுந்த வேதனையோடு, "அமைச்சர் எங்கள் வீட்டுப் பிள்ளை... யாக இருந்தாலும், சொன்னால் மானம் போகிறது; சொல்லாவிட்டால்

பிரா[illegible] சொன்னார்கள். இரண்டுமே போகாமல் அமைச்சர் [illegible] பார்த்துக்கொள்வார் என்ற உறுதியை அவருக்கு இந்த நேர[illegible] கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் [illegible] நல்ல யோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible]. அவைகளையெல்லாம் நிச்சயமாக இந்தத் துறையிலே [illegible] முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை நான் [illegible]. இப்போது தனி அலுவலராக பி.டி.ஓ. இருக்கிறார், [illegible] பார்க்க முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. [illegible] தெரிவித்தார்கள். பி.டி.ஓ. ஊராட்சி நிர்வாகத்தைக் [illegible] அலுவலர்களைப் பயன்படுத்தி [illegible] என்பதை [illegible] தெரிவித்துக்கொள்ளுகிறேன். [illegible] அந்தப் பணிக்கு, தேர்தல் வருகிற வரையில், [illegible] இளைஞர்களை கருதவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி [illegible] குறிப்பிடும்போது மைலம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணம் எடு[illegible] என்று குறிப்பிட்டார்கள். அப்படி பணம் தவறாக எடுக்க[illegible], அ[illegible] தணிக்கைக் குழுவின் பார்வைக்குத் தப்பாது என்ப[illegible] கொள்கிறேன். அரசும் அதை விசாரிக்கும் என்பதை இ[illegible] தெரிவித்துக்கொள்கிறேன். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, இரண் மாதங்களுக்குப் பிறகு, தேர்தல் நடக்குமென்ற உறுதியை மாண்புமி உறுப்பினர்கள் ஏற்று இந்த சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித் தர வேண் மென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள் பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண் சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (ச மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979) ஆய்விற்கு எடுத் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவே[illegible] பட்டன





பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1979) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## (2) தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1979).

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு, ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1979) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 1079-1081 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 நவம்பர் 1

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள் பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1979 ஆ ஆண்டு, ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடி (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1979) ஆய்விற்கு எடுத்த கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 4.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவ அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"(1) In clause 4, sub-clause (1) (*b*) "*for the words*" on or more panchayats" *substitute* the words "not more than fiv panchayats""

"(2) In clause 4, sub-clause (3) (a), for the words "o year" *substitute* the words "three months".

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலை அவர்களே, இந்தத் திருத்தங்களை நான் வழிமொழிகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்க நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தில், மூன்று மாதங்களுக்குள் தேர்தல்க நடத்த வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறேன். இங்கே மாண்பு அமைச்சர் அவர்கள் அது பற்றிய திட்டவட்டமான கருத்தைச் சொ வில்லை. வழக்கம் போல் அவருக்கு இருக்கிற பேச்சு அற்புதத்தால், இள ஊஞ்சல் ஆடுவதன் மூலமாக ஆனந்த பைரவிகளையும் அற்புத இரா களையும் உருவாக்க முடியுமே தவிர, சுட்டிக்காட்டப்பட்ட தட் தாளங்களுக்குப் பரிகாரம் காண முடியவில்லை. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்காக பட்டாக் பொறாளர்களாக மாற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)



1979 நவம்பர் 15]

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஆகவே மூன்று மாதங்களுக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற இந்தத் திருத்தத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ண்புமிகு அமைச்சர் அவர்கள், "மூன்று மாதங்களுக்குள் தேர்தலை த்த வேண்டும்" என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்வதில் பெரிய கஷ்டம் பர்களுக்கு இருக்காது. ஏனென்றால், தேர்தலை நடத்தப் போகிறோம் ன்று அவர்களும் சொன்னார்கள். தனி அலுவலர்களுடைய காலத்தை டிக்கும் இந்தச் சட்டமுன்வடிவுகளை நாங்கள் எதிர்க்கவில்லை. திருத்தம் ான் கொடுத்திருக்கிறோம். ஆகவே, திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டு மன்று கேட்டுக்கொள்கிறேன். "காரணம் இல்லாமலா நாங்கள் தேர்தலை ள்ளிக் கொண்டு வந்தோம்? ஒவ்வொரு காரணமும் நியாயமான காரணம் ானே" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காரணம் ஆயிரம் இருக்கலாம்; அந்தக் காரணங்களுக்காக ஒரு மன்னிப்பு கூட கிடையாது. னவே இந்தக் குறைந்த அளவு கோரிக்கையையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வதுதான் முறை.

திரு. ம. சங்கரலிங்கம்: "இன்ன மாதம்" தேர்தல் என்று அறிவித்தால் நம்பிக்கையூட்டுவதாக இருக்கும். அந்த நம்பிக்கை அறிவிப்பை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக் கிறார்கள். இரண்டு மாதங்கள் என்றால் 60 நாட்களுக்குப் பிறகு.

திரு. ம. சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத் தேர்தல் சனவரி 3 ஆம் தேதியன்று முடியும். ஆகவே மார்ச் மாதம் தேர்தல் நடத்தப்படுமென்ற உறுதியை அளிப்பார்கள் என்றால், அது மகிழ்ச்சியை அளிக்கும். ஆகவே ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதிக்கு மேல் 30 ஆம் தேதிக்குள் நடத்தப்படுமென்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக ஏப்ரல் 1 ஆம் தேதியன்று இடையாது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடர் வருகிறது. அப்போது விரிவாகப் பேசுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அப்போது நிச்சயமாகத் தேர்தலை உறுதிப்படுத்தலாம்.

